உன்னை வேணுமா? 1

“மே ஐ கம் இன்?” - வேண்டுமென்றே குரலை மாற்றிக் கேட்டாள் சுகன்யா.

ஸ்ரீராமின் அகன்ற முதுகில் அவள் பார்வை பதிந்தது. கண்ணை உறுத்தாத மிருதுவான நீல நிற ஷர்ட். காலரின் மேல் நுனியை இலேசாகத் தலைமுடி மூடியிருந்தது. சலூனுக்குப் போவது முதலான சராசரி சொந்தக் காரியங்களை கவனித்துக் கொள்ள இந்தக் கம்பெனி வேலை அனுமதிப்பதில்லை. ஞாயிற்றுக்கிழமைகளில்கூட கீ போர்டின் முன் உட்கார்ந்து வானத்தை வில்லாக வளைக்கிற திட்டங்கள் தீட்ட வேண்டும்!

அந்த மாதிரி நேரங்களில் இப்படிக் குரல் மாற்றிப் பேசும் விளையாட்டெல்லாம் எடுபடுவதில்லை.


சுகன்யா மீண்டும் குரல் மாற்றிக் கேட்டாள். “நான் உள்ளே வரலாமா?”

“வா... வா... சுகி...” கம்ப்யூட்டர் திரையிலிருந்து கண்ணை எடுக்காமலே இடது கையை மட்டும் உயர்த்தி அழைத்தான் ஸ்ரீராம்.

‘எனவே எங்கள் திட்டத்தை ஏற்று உலகின் நம்பர் ஒன் நிறுவனமாக உயரும் சிறந்த முடிவினை எடுப்பீர்கள் என நம்புகிறோம்...’

இப்படிக்கு.....

கடைசி வரிகளை முடித்து ‘save’ செய்தான் ஸ்ரீராம். ‘saving file’ செய்தியைத் திரையில் உறுதிப் படுத்திக் கொண்டு சுழல் நாற்காலியைத் திருப்பி, நாற்பத்



தைந்து டிகிரி கோணத்தில் சுகன்யாவைப் பார்த்தான்.

"எப்படித் தெரியும் நான்தான்னு....?" அவள் குழந்தைபோல் கேட்டாள்.


"சுகி! நீ கம்யூனிகேஷன்ஸ் எக்ஸ்பர்ட்டாய் இருக்கலாம். ஆனா சில கடுகான விஷயங்களில் கோட்டை விட்டுடறே... ஞாயிற்றுக் கிழமைல உன்னையும் என்னையும் தவிர வேற யார் இந்த ஆபீசுக்கு வருவாங்க? மேலும்...."

ஸ்ரீராம் நிறுத்தினான்.

"மேலும்....?"

கேட்பவளின் குரலில் சின்ன நடுக்கம். அதை ஸ்ரீராம் கவனித்துப் பதிவு செய்து கொண்ட கணத்தில் டெலிபோன் ஒலித்தது.

சுகன்யா மின்னல் வேகத்தில் கார்ட்லெஸ் செட்டின் ரிசீவரை எடுத்து அவனிடம் நீட்டினாள்.



சுஜாதா ?

"குட் மார்னிங் ஸர்...."

"................................"

"ரிப்போர்ட்டை முடிச்சுட்டேன். ஆமாம். சுகி வந்திருக்கா ஸர். ஷி வில் டச் இட் அப். அஞ்சு மணிக்குள்ளே உங்க வீட்லே கொண்டு வந்து கொடுத்துடுவோம்!"

"................................"

"இல்ல ஸர். நான் சுகன்யாவை டிராப் பண்ணிடுவேன். தெரியும். ஹாஸ்டல் ரூல்ஸ் படி அவ ஏழு மணிக்குள்ள திரும்பியாகணும். கவலைப்படாதீங்க. நான் பார்த்துக்கறேன்...."

மறு முனையில் ராஜூ பேசுவதைப் புரிந்து கொண்டாள் சுகன்யா. கம்பெனி எம்.டி. சில

'டேய் ஸ்ரீராமா! உங்கப்பா ரொம்ப ஆர்தடாக்ஸ் ஆசாமியாச்சே. இந்தப் பொண்ணை உங்க குடும்பத்துல எப்பிடி ஏத்துக்குவாங்க?

கணங்கள் மௌனமாக ரிசீவரைக் காதில் வைத்திருந்த ஸ்ரீராம், குப்பென்று முகம் சிவப்பதைப் பார்த்தாள். அவன் காது நுனி வரை அந்தச் சிவப்பு படர்ந்து அடங்குவதை ரசித்தாள்.

"தேங்க்யூ ஸர்... " ஸ்ரீராம் போனை ஆஃப் செய்தான்.

"என்ன சொல்றார் எம்.டி? ரிசீவரை வாங்கியபடி கேட்டாள்.

"ஹூம். சொல்றார் சுரைக்காய்க்கு உப்பில லைன்னு...."

"சுரைக்காய்? அப்பிடின்னா என்ன ஸ்ரீராம்?"

"அப்பிடின்னா

26 வாரங்கள் நீடிக்கவுள்ள இத்தொடர், ஒவ்வொரு வாரமும் ஒவ்வொருவர் பெயரில் வெளியாகும். உண்மையில் எழுதுபவர் யார்? கண்டுபிடியுங்கள்! தங்க நகைப் பரிசு! மேலும் விவரங்கள் அடுத்த வாரம்.

என்னன்னு எம்.டி. வீட்டுக்கு நீலாங்கரை வரை யாத்திரை போகும்போது சொல்றேன். இப்ப நீ வேலையை ஆரம்பி...." என்று எழுந்தான்.

"யெஸ் பாஸ்!" - அவன் விட்டெழுந்த நாற்காலியில் உட்கார்ந்தாள். அதில் மிச்சமிருந்த அவன் உடல் சூடு இதமாகக் கனிந்தது. சுதாரித்துக்கொண்டு கம்ப்யூட்டரில் அவன் தயாரித்து வைத்திருந்த அறிக்கையை 'அழைத்தாள்.'

திரையில் ஓடிய வார்த்தைகளைக் கண்கள் படித்தன. உறுத்தலான இலக்கணத்தையும் நெருடலான மொழியாட்சியையும் புருவங்கள் நெரித்துக் திருத்திக் கொண்டே வந்தாள்.

ஸ்ரீராம் மரியாதையான தூரத்தில் நின்று கைகட்டிப் பார்த்தான்.

கீ போர்டில் பறந்த சுகியின் விரல்கள், நகப்பூச்சு இன்றியே பளபளத்தன. நீண்டு எழுந்த கரங்கள் தோள்களின் வெள்ளை ஸ்லீவ்லெஸ் ரவிக்கையில் போய் முடிந்தன. விரித்துவிட்ட தலைமுடி முதுகை மூடியிருந்தது. வெள்ளையும் சிவப்பும் இழையோடிய கைத்தறிப்புடைவை. டிரேட் மார்க் போல் சற்று பெரிய சைஸில் நெற்றிப் பொட்டு. நேர்மையான கண்கள், போலியாய்ப் படபடக்காத இமைகள், அழகான மூக்கின் கீழ் அளவான உதடுகள்...

'இது ஆபீஸ்... இது ஆபீஸ்....' என்று எச்சரித்த அவன் அறிவை உணர்வு மிஞ்சிக் கொண்டிருந்தது. ஸ்ரீராம் அகன்று போய்த் தன் மேஜையருகே அமர்ந்தான். சுகி முதன் முதலில் வேலைக்குச் சேர்ந்த நாள் ஞாபகம் வந்தது. ராஜுதான் அறிமுகப்படுத்தினார்.

"ஸ்ரீராம்! மீட் சுகன்யா...."

"ஹாய்! கால் மீ சுகி." என்று கை நீட்டினாள். தன் மிரட்சியை மறைத்துக் கொண்டு முதல் முறையாக ஓர் அன்னியப் பெண்ணிடம் கை குலுக்கினான். சலனமின்றிப் பற்றி, அழுத்திக் குலுக்கினாள் அவள்.

"சுகன்யா நம்ம ஆபீசுக்கு இனி கம்யூனிகேஷன்ஸ் மானேஜர். கல்கத்தாவிலே முகர்ஜி சொன்ன பொண்ணு... ரிப்போர்ட் தயாரிக்கிறப்போ நீயும் நானும் சேர்ந்து பண்ற ஸ்பெல்லிங் பாவங்களையும் இலக்கணப் பாதகங்களையும் திருத்தி நல்ல 'பாகேஜிங்' கொடுத்து நம்மளைக் கரையேத்தப் போறவ... குவாலிட்டி நம்ம ஸாஃப்ட்வேரில் மட்டும் இருந்தாப் போறாதே! நம்ம அறிக்கைகள், கடிதங்கள் எல்லாத்துலயும் வேணும். அதுக்காகத்தான் சுகன்யா."

"ரொம்ப மகிழ்ச்சி ஸர்...." ஸ்ரீராம் நிஜமான சந்தோஷத்துடன் சொன்னான். அப்படியொரு ஆள் தேவையாகத்தான் இருந்தது.

> ## அருள்வாக்கு
>
> நடைமுறையில் செய்துகாட்டி நல்லதை விளைவிக்கும் ஒழுங்குமுறைதான் தர்மம் என்பது. இந்த நடைமுறைக்கு ஆதார தத்வமாக ஒரு அடிப்படை இருக்க வேண்டும். ஒரு ஒழுங்கு என்றால் அது அப்படிப்பட்ட ஒழுங்கிலே இருக்கிறது என்பதை உணர்த்துவதாக ஒரு அடிப்படை உண்மை இருக்க வேண்டும். தீபாலங்காரம் செய்யும்போது வட்டமாக, சதுரமாக, கோணமாகப் பல வரிசைகளில் தீபங்களை வைத்தால் அந்த ஒழுங்கிலே மனஸுக்கு ஒரு நிறைவு தெரிகிறது. ஏதோ ஒரு ஒழுங்கிலே வளைத்தும் நீட்டியும் கோலம் போட்டிருந்தால் அதைப்

சுகன்யா வெகு இயல்பாக அலுவலகப் பணிகளில் பொருந்திக் கொண்டாள். ஸ்ரீராம் தவிர மற்ற இரண்டு சீனியர் மானேஜர்களுடனும் அதே போல் கைகுலுக்கி பயமுறுத்தினாள். கமா, ஃபுல்ஸ்டாப் வரை அவர்களது அறிக்கைகளைச் சீர் செய்து பொலிவேற்றி அசத்தினாள். அவை ஏற்கப்பட்டு ஆர்டர்களை வென்று தந்ததும் மீண்டும் கை குலுக்கி ஆரவாரம் பண்ணினாள்.

'தங்கள் இருவருக்குமே சலனம் ஆரம்பித்தது எந்தக் கை குலுக்கலின்போது?' யோசித்துப் பார்த்தான் ஸ்ரீராம். புலப்படவில்லை. சிந்தனைகளைத் துடைத்தெறிந்து விட்டுக் கண் மூடி அமைதியை அனுபவித்தான்.

"ராம்." சுகன்யா அழைத்தபோது அரை மணி நேரம் கடந்துவிட்டிருந்தது.


'ப்ரிண்ட்' கொடுத்துவிட்டதற்கறிகுறியாக லேஸர் ஜெட் விளக்கு கண்சிமிட்டிக் கொண்டிருந்தது.

"முடிச்சுட்டேன்." மென்மையாகச் சிரித்தபடி சொன்னாள்.

அலுவலக வளாகத்தைக் கடப்பதற்காகவே காத்திருந்தவன்போல் அவசரமாக சுகன்யாவின் கையைப் பற்றிக் கொண்டான் ஸ்ரீராம். ஒரு கையால் ஸ்டீயரிங் பிடித்து ஞாயிற்றுக்கிழமை போக்குவரத்தைச் சுலபமாகச் சமாளிக்க முடிந்தது.

"மே ஐ ஹோல்ட் யுவர் ஹாண்ட்...?" சுகன்யா அவனைப்போல் குரல் மாற்றிப் பேசிக் கேலி செய்தாள்.

"கை பிடிக்கவே அனுமதி கேட்ட முதல் ஆள் நீயாகத்தான் இருக்கும் ஸ்ரீராம்!"



பார்க்கிறபோது ஒரு ஸந்தோஷம். எதுவோ ஒன்று ரொம்ப ஸரியாயிருக்கிறது என்ற ரஸிப்பு உண்டாகிறது. வட்டமோ, சதுரமோ வளைவோ, கோணமோ கொஞ்சம் கோணலாக இருந்தால் மனஸுக்கு என்னமோபோல் இருக்கிறது. ஏதனாலென்றால் இந்த வெளி ஒழுங்குகளுக்கு ஆதாரமாக ஏதோ ஒரு உள்ளத்துக்குள்ளே அந்த தத்வத்தைப் பற்றி நமக்குத் தெரியாமலே ஒரு ஞானம் இருக்கிறது. எனவே அதற்கு இது– வெளியிலே ஒழுங்கு செய்திருப்பது– ஒத்துப் போகிறபோது மனஸில் நிறைவு உண்டாகிறது.

இதே மாதிரி சுத்தமான அந்தகரணமுள்ள ரிஷிகள் முதலான மஹான்களுக்கு உள்ளுக்குள்ளே ஸ்வச்சமாகத் தெரிந்த ஒரு அடிப்படைக்கு ஒத்துப் போவதாக வெளியிலே பின்பற்ற வேண்டிய அநேக ஒழுங்குகளைத் தான் ஒழுக்கம் என்று வைத்து தர்ம வாழ்க்கையை அமைத்திருக்கிறது.

இதற்கு அடிப்படையாய் உள்ளே ஒரு தத்வம் இருக்கிறது என்றேனே, அது என்னவென்றால், அதுதான் 'ஸத்யம்' என்பது. நம்முடைய வெளி அறிவுக்கும் புரிகிறமாதிரி இந்த ஸத்யத்தை எடுத்துச் சொல்பவையே வேத, உபநிஷத, சாஸ்த்ரங்கள்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

"தாங்க்யூ சுகி..."

"எதுக்கு?"

''அன்னிக்கு முதன்முதலா நான் கேட்டப்போ அனுமதி கொடுத்ததுக்கு....'' ஆமாம்! நீ மட்டும் என்ன....? 'மே ஐ கம் இன்? உள்ளே வரலாமா....?' ரொம்ப மரியாதையாய்க் கேட்டியே..."

"ஐயோ அது சும்மா... குரல் மாத்தினா நீ கண்டுபிடிக்கறியான்னு பார்க்க... அது சரி... எப்படிக் கண்டுபிடிச்சே...? நீ ஏதோ சொல்ல ஆரம்பிச்சப்போ எம்.டி. போன் பண்ணிட்டார்."

"அது சுலபம். நீ வரும்போதே காத்துல ஒரு கூடுதல் வாசனை சேர்ந்து வந்து காட்டிக் குடுத்துடும்."

"போருமே?"

ஸ்ரீராமின் கைப்பிடி இறுகியது.

''இப்படி என் கையை நொறுக்கினா நாளைக்கு லீவு போட வேண்டியதுதான்!''

"ஐயோ வேண்டாம்மா! ஏற்கனவே எம்.டி. என்னை 'ஜாக்கிரதை..... ஜாக்கிரதை'ன்னு எச்சரிக்கை பண்ணியிருக்கார். உன்னை நேரத்தோட ஹாஸ்டல்ல கொண்டு விடணும்னு உத்தரவு வேற..."

"அப்புறம் என்ன சொன்னார் போன்ல? ஏன் உன் மூஞ்சி அப்படிக் குங்குமத்தைக் கொட்டினாப்பல ஆச்சு?"

"சொல்லியாகணுமா?"

"ஆமாம்..."

"சொல்லாட்டா?"

''இப்ப என் கையை விட்டுடணும்.'' கையை விடுவித்துக் கொள்வது போல் இழுத்தாள்.

"இரு இரு. சொல்லிடறேன். சொல்லிடறேன்....'டேய் ஸ்ரீராமா! உங்கப்பா ரொம்ப ஆர்தடாக்ஸ் ஆசாமியாச்சே. இந்தப் பொண்ணை உங்க குடும்பத்துல எப்பிடி ஏத்துக்குவாங்க? உனக்குச் சுலபமா எல்லாம் நடக்க வாழ்த்துக்கள்; என் பிரார்த்தனைகள்'னாரு...."

''என் பெங்காலி அம்மா என்னை மீனூட்டி வளர்த்திருந்தாலும் உங்களுக்காக நான் சைவத்துக்கு மாறிட்டேன்னு சொல்றது தானே அவர்கிட்டே?''

"சுகன்யா, விஷயம் அவ்வளவு எளிமையா முடிஞ்சுடாது. அதனாலதான் அப்பாகிட்டே பேசறதுக்கு முன்னாடி வசந்தி கல்யாணம் ஆகட்டும்னு காத்திருக்கேன்."

"அப்போ வசந்தியோட கல்யாணத்துக்கு நான் வரமுடியாது இல்லை....?"

அவள் குரலில் ஒலித்த மெய்யான ஏமாற்றம் ஸ்ரீராமை நெகிழ்த்தியது.


"வரலாம். விருந்தாளியா...."

"இல்லை... நான் வருங்கால அண்ணியாத் தான் வருவேன். அப்பிடி என்ன பயம், நம்ம விஷயத்தைச் சொல்றதுக்கு?"

''பயமில்லை சுகி. இது வேற... நேரம் கனிஞ்சு வரணும். வசந்தியோட கல்யாணம் முடிஞ்சுட்டா பேசறதும் கன்வின்ஸ் பண்றதும் கொஞ்சம் சுலபமாகும்."

சுகன்யா பெருமூச்சு விட்டாள். "எனக்கு ஹாஸ்டல் வாழ்க்கை அலுத்துப் போச்சு ஸ்ரீராம். பதிமூணு வயசுலேந்து பத்து வருஷ காலம் அப்பா, அம்மா இல்லாம சொந்தக்காரங்க இடம் இடமாய்ப் பந்தாடினாங்க. அதுக்கப்புறமா இப்ப ஹாஸ்டல். அரைமணி நேரம் லேட் ஆனா யார் கூடவோ படுத்துக்கிட்டு வந்தா மாதிரி பார்க்கறாங்க..."

ஸ்ரீராம் தன் இடக்கரத்தை விடுவித்து அவள் வாயைப் பொத்தினான். "இந்த மாதிரி



"ராத்திரி எங்க வீட்டுக்கு வர்றதா திருடன் ஃபோன் பண்ணி சொல்லியிருக்கான்!"

"எங்களுக்குத் தெரியாம எப்படி...? இதில ஏதோ திருட்டுத்தனம் நடக்குதுன்னு நினைக்கிறேன்!"

- தேனி எஸ். மாரியப்பன்



"ஒரு ஜட்ஜைக் காதலிச்சது தப்பாப் போச்சு."

"ஏன்?"

"கல்யாணத் தேதியை இதுவரை ஏழு முறை தள்ளிப் போட்டுட்டார்!"

- வெ. ராஜாராமன்

ஓவர்-ரியாக்ட் பண்ணாதே! ஐ பிராமிஸ்- இன்னும் ஒரு வருஷத்தில் நம்ம கல்யாணம்- வசந்திக்குக் கல்யாணம் ஆனாலும் ஆகாவிட்டாலும்."

நீலாங்கரையில் எம்.டி.வீட்டு கேட்டை எட்டியிருந்தார்கள். ரிப்போர்ட் அடங்கிய பிரவுன் கவரை எடுத்துக் கொண்டு சுகன்யா உள்ளே போனாள். ஸ்ரீராம் காரைத் திருப்பித் தயாராய் நிறுத்திக் கொண்டான்.

ராஜூ வெளியே வந்து "be good" என்று எச்சரித்து வழியனுப்பினார். அவர் வீட்டு கேட்டைக் கடந்ததும் ஸ்ரீராம் எரிச்சலுடன் ஆக்ஸிலேட்டரை மிதித்தான்.

"நம்பிக்கை அடிப்படையில் எந்த உறவும் அமையறதில்லை பார்த்தியா...? உன் ஹாஸ்டல்காரங்க மாதிரி தான் இவரும் பேசறார்..."

"அவர் தமாஷுக்குச் சொன்னதுக்கே உனக்கு இவ்வளவு கோபம் வருதே... எங்க ஹாஸ்டல்லே நிஜமாகவே சந்தேகப்படறாங்க ஸ்ரீராம்..."

"நல்ல காலம் சுகி... நம்ம உறவு நம்பிக்கை அடிப்படையில் ஆரம்பிச்சு அப்படியே தொடர்ந்து கிட்டிருக்கு..." திரும்பவும் அவள் கையைப் பிடித்துக் கொண்டான்.

அவள் மெள்ள அதை விடுவித்துக் கொண்டு ஸ்டீரியோவுக்குள் ஒரு காஸெட்டை நுழைத்தாள். ஆன் செய்தாள்.

"என்னவளே அடி என்னவளே' - உன்னி கிருஷ்ணனின் சர்க்கரைக் கரைசல் குரல் மிதமான வால்யூமில் வெளிப்பட்டது.

"இந்தப் பாட்டுல வார்த்தையைக் கவனிச்சியா? 'கழுத்துவரை காதல் வந்து இரு கண் விழி பிதுங்கி நின்றேன்...' ரொம்ப ரம்யமான ட்யூன்ல இப்படிக் குரூரமான வர்ணனை..."

"விடு! சினிமாப் பாட்டுல கலீல் கிப்ரான் மாதிரி 'Let there be spaces in your togetherness'ன்னு உபதேசமா பண்ணுவாங்க....?"

"அதென்னவோ எனக்குத் தெரியாது. இப்போ நமக்குள்ளே இவ்வளவு இடைவெளி இருக்கணுமா?" சுகன்யாவின் குரலில் அந்தப் பழைய சின்ன நடுக்கம்.

ஸ்ரீராம் ஒரு கணம் அவளைத் திரும்பிப் பார்த்தான். இமைகள் தாழ்த்தியிருந்தாள். இடது கரத்தால் அவள் தோளை வளைத்து இழுத்து நெருக்கமாய் அமர்த்திக் கொண்டான்.

அவன் தோளில் தலை சாய்த்துக் கண்களை இறுக்கி மூடிக்கொண்டாள் சுகன்யா.

"முக்கியமான விஷயத்துக்கு நீ இன்னும் விளக்கம் தரலை ஸ்ரீராம்...." காதுக்கு வெகு அருகே பேசினாள்.

"என்ன?"

"அதான். அந்த உப்பில்லாத காய்... அது என்ன... சூரைக்காயா? சுரக்..."

"அதெல்லாம் இப்ப வேண்டாம்."

"பின்ன எது வேணும்?"

ஸ்ரீராம் பதில் சொல்லவில்லை. பின்னால் வழி கேட்டு ஒரு டூரிஸ்ட் பஸ் உயிரெடுத்தது. சாலையின் இடப்புறமாக ஒதுங்கி வேகம் தணித்தான்.

"ஹோ"வென்று அவர்களைக் கேலி செய்தபடி கடந்தனர் கல்லூரி மாணவிகள். அவர்களிடையே அமைதியாய் அமர்ந்து வந்த வசந்தியின் கண்கள் மட்டும் அகலமாய் விரிந்தன. அவளது பவ்யமான நெஞ்சம் படபடவென்று அடித்துக் கொண்டது. தொண்டையில் துக்கம் வந்து பந்து பந்தாக அடைத்தது.

(தொடரும்)



புதிய பகுதி
பெனிட்டோ குமார்
படம் : சசி
கடலோரக் கொலைகள்
உவரி– நீலக்கடலின் கரையில் நீண்டு கிடக்கும் கிராமம். திருச்செந்தூரிலிருந்து முக்கால்மணி நேர பஸ் பயணம்.
ஊரின் முக்கியத்துவம் சுயம்புலிங்கசுவாமி கோயில். திருவிழா சமயம் ஜேஜே!
அக்ரஹாரத்தில் பண்ணையார் வாசுதேவன்.
சரசு! நேத்து ஒரு கடுதாசு வந்துதே, நந்து கிட்டே குடுத்தியா?
கல்லூரிக்குக் கிளம்பிய நந்தகோபால்...
அடேடே! பென் ஃபிரெண்ட் தேவைன்னு பத்திரிகைல விலாசம் கொடுத்திருந்தேன்...
நாகர்கோயில் ஹிந்து கல்லூரியில் நான் விரிவுரையாளன். ஐந்தாம்தேதி காலை பத்து மணிக்கு உங்க ஊருக்கு வருகிறேன். முக்கிய வேலை. என்னுடன் இரு பிரபலங்கள் வருகிறார்கள்.
– நாகராஜன்



ஹைய்யா! இன்னிக்குத்தானே ஐந்தாம்தேதி! காலேஜுக்கு மட்டம்தான்!
எதுக்குடா தேன் குடிச்ச நரியாட்டம்...
இது ஒரு வகைக் காதல் அம்மா! என்னை அவருக்குத் தெரியாது. அவரை எனக்குத் தெரியாது. ஆனாலும் ஒரு துண்டு காகிதத்தின் மூலம் நண்பர்களாகிட்டோம்!
தங்கை சீதா...
என்னண்ணா?
பென் ஃபிரெண்ட் நேரிலேயே வராரு. அதுவும் ரெண்டு பிரபலங்களோட...
நான்போய் அவங்களை ஊர் எல்லையிலேயே சந்திச்சு அழைச்சிட்டு வரேன். வீட்டை சுத்தப் படுத்தி அலங்காரமா வை!
ஊர் எல்லையில்...
பஸ்ல வருவாங்களா? இல்ல டாக்ஸியா? அதோ ஒரு அம்பாஸிடர்... ஒரு வேளை....



டாக்ஸி நெருங்கி....
மிஸ்டர் நந்தகோபால் வீடு தெரியுமா?
நான் தான். நீங்க... நாகராஜனா?
முதல் லெட்டர்லயே ரொம்ப நெருங்கி வந்துட்டோம்.
சந்தோஷம், ஏகப்பட்ட சந்தோஷம்...!
வா, என் ஃபிரெண்ட்ஸை மீட் பண்ணு...
பிரபலங்கள்னு எழுதியிருந்தீங்க...
இவர் பிரதீப் பேட்கர். பெரிய எழுத்தாளர்; ஆராய்ச்சியாளர்... இவங்க அவரோட மனைவி ஆஷா பேட்கர்...
ஹௌ டு யு டு?
ஹேப்பி! ரொம்ப ஹேப்பி... ஹி...ஹி...
(தொடரும்)



"நல்ல காலம்! கருத்துக் கணிப் புல சொன்னபடியே நாம் தோத்துட் டோம்... இல்லைன்னா வாக்குறுதியை யெல்லாம் காப்பாத்த முயற்சி பண்ண ணுமே...."



"புது முதலமைச்சர் சிக்கனத் தைக் கடைப்பிடிக்கணும்னு உத்தரவு போட்டிருக்கார். அதனால, இனிமே இந்த ஆபீஸ்ல உபயோகிக்கிற குண்டூசி, கிளிப்புக்கெல்லாம் விவரமா கணக்கு எழுதணும்...."

— இந்தியன் எக்ஸ்பிரஸ் கிண்டி கேட்

குள்ளே சொன்னால் போதாதா? மனசுக் குள்ளே சொன்னால் பலன் நமக்கு மட்டும். பெரிசா சொன்னா அக்கம்பக்கத்திலே இருப் போரும் அதைக் கேட்டபடி எழுந்திருப் பார்கள். பரோபகரமாகவும் இருக்கும்.

வெளியிலே கிளம்பிப் போகும்போது 'கேசவா' என்று உச்சரிக்கணும்.

திருவனந்தபுரத்து அனந்த பத்மநாபசுவாமி குறித்து நம்மாழ்வார் பாடுகிறார்:

'கெடும் இடராயவெல்லாம் கேசவா
என்ன...'

'கேசவா' என்று சொன்னால் இடர்களெல் லாம் கெடுமாம். அதனால்தான் ஒரு காரிய மாகப் புறப்படும் போது 'கேசவா' என்று அழைப்பது.

ஆண்டாள் இந்த அனுஷ்டானத்தைக் கடைப்பிடித்திருக்கிறார்.

'கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத் தியோ தேசமுடையாய் திறவேலோர் எம்பா வாய்...'

என்கிறது திருப்பாவை. 'கேசவா கேசவா' என்று பாடிக் கொண்டு புறப்பட்டுவிட்டோம்; நீ அதைக் கேட்டும் கிடந்துறங்குகிறாயே...' என்று துயிலெழுப்புகிறார்.

அடுத்தது: உணவு கொள்வதற்கு முன்னால் கோவிந்தா என்று சொல்லிவிட்டுச் சாப்பிட வேண்டும். கோவர்த்தன கிரியைக் குடையாய்ப் பிடித்த வனை இப்படி அழைப்பதன் மூலம் நித்ய அன்னம் கிடைக்க உத்தரவாதம் செய்து கொள் கிறோம்.

சிரமம் இல்லை, கஷ்டமான நியமமில்லை. ஹரீ, கேசவா, கோவிந்தா, மாதவா என்று எளிய நாமங்களை நாம் தினமும் செய்கிற காரியங் களோடு சேர்த்து விட்டிருக்கறதாலே எந்தவித கூடுதல் முயற்சியுமில்லாமலே நாம சங்கீர்த் தனம் நடைபெற்று விடுகிறது.

ஆனால் சொல்கிற அந்த நேரத்திலே மனசு அளவு கடந்த பக்தியிலே நிரம்பியிருக்கணும். 'சொல்லிப் பார்ப்போமே, பலனிருக்கிறதா யென்று...' அப்படின்னு பரீட்சார்த்தமாகச் சொல்லக்கூடாது.

காரணம், அவனது நாமங்கள் சர்வ உத்தம மானவை: 'சர்வோத்தமஸ்ய கிருபையா...' சர்வ உத்தமமான அவனுடைய நாமங்களை நம்மை உச்சரிக்க வைப்பதும் அவனுடைய கிருபை தான்– கருணைதான்!

முதலிலே இந்த நித்ய காரியங்களுடனான நாம உச்சாடனத்தைப் பழகிக் கொண்டு விட் டால் மனசு மேலும் மேலும் அந்த சத் அனுபவத்தைக் கேட்கும். அந்த மனசுக்கு தெய்வானுபவம் தரக்கூடியதாய் அமையப் பெற்றது விஷ்ணு சஹஸ்ரநாமம்.

(தொடரும்)

கொடூரக் கனவுகள்

திடீரென்று விழிப்புத் தட்டியது. என்ன கொடூரமான கனவு? கனவுதானா அது? சுற்றிலும் பார்த்துக் கொண்டான். திரைச்சீலைகள் அசைந்து கொண்டிருந்தன. இரவின் நிசப்தமும், அடர்த்தியும் ஜன்னலுக்கு வெளியே விரவிக் கிடந்தது. எழுந்து விளக்கைப் போட்டான். பரண்களிலும், ஷெல்புகளிலும் அடுக்கி வைக்கப்பட்ட தன் புத்தகங்களை ஸ்நேகத்துடன் பார்த்துப் பெருமூச்சு விட்டான். நல்ல வேளை கனவுதான். ஆனால் உலுக்கி எடுத்த கனவு!

காலிங்பெல் சத்தம் கேட்டு அவன் கதவைத் திறக்கிறான். முகமூடி போட்ட சிலர் உருட்டுக் கட்டைகளுடன் திபுதிபுவென்று உள்ளே நுழைகிறார்கள். அவன் கூக்குரலை அவர்கள் பொருட்படுத்தவில்லை. அலமாரிகளும் டிராயர்களிலும் தேடுகிறார்கள். அவனுக்கு சிரிப்பு வருகிறது. சரஸ்வதி கொலுவிருக்கும் வீட்டில் லட்சுமியைத் தேடுகிறார்கள். தரித்திரம் பீடித்த தமிழ் எழுத்தாளனின் அறையில் புத்தகங்களைத் தவிர ஏதுமில்லை. புத்தகங்கள் என்றால் எப்பேர்ப்பட்ட புத்தகங்கள்! இலக்கியம், ஆன்மீகம், மன இயல், தத்துவம்... எதுவும் கிடைக்காத ஆத்திரத்தில் அவர்கள் அந்த புத்தகங்களுக்குத் தீ வைத்துக் கொளுத்துகிறார்கள். அவனை நாற்காலியுடன் கட்டிப் போட்டு ஓடி விடுகிறார்கள். தீ சுற்றிலும் பரவுகிறது. நெருப்பின் சூடு தாளாமல் விழிப்புத் தட்டிவிட்டது. நல்ல வேளை எல்லாம் கனவுதான். இப்போதெல்லாம் இப்படிப்பட்ட பயங்கரக் கனவுகள் அடிக்கடி வருகின்றன. சிறுவயது முதலே புத்தகங்களை நேசித்து சேகரிப்பவன் அவன். வீட்டை விட்டு விலகி வந்து இந்தத் தனியறையில் தானும் தன் புத்தகங்களுமாய் வாழ்கிறான்.

அவனை எல்லோரும் ஒரு மாதிரியாகவே பார்க்கிறார்கள்.





சரியான மனநிலையுடன் அவன் இல்லை என்பதே அக்கம் பக்கம் கிசுகிசுப்பு. ஆனாலும் தன்னுள் ஒளிர்கிற ஞானத்தைக் காணும் பக்குவம் பிறருக்கு இல்லையே என்பதுதான் அவனின் ஆதங்கம். ஏதேதோ சிந்தனைகளுடன் தூங்கிப் போனான் மனோகரன்.

காலையில் பல்துலக்கும் போது வந்த வீட்டுக்காரர், தம் மகனின் திருமணப் பத்திரிகையைத் தந்துவிட்டு, விரைவில் அறையை காலி செய்து தர வேண்டும் என்றும் சொல்லிவிட்டார். இத்தனை பெரிய நகரில் மூவாயிரம் புத்தகங்களுடன் ஒரு பாச்சிலருக்கு யார் அறை தருவார்கள்? அதுவும் முந்நூறு ரூபாயில்? பிரமிப்பாக இருந்தது அவனுக்கு.

புது வீட்டிற்குப் புத்தகங்களைக் கொண்டு வந்தது ஒரு பெரும் பிரயாசை என்றால் அடுக்குவது அதிலும் பெரிய இம்சை. ஆனால் அப்போதுதான் அவனுக்கு ரஞ்சிதா அறிமுகமானாள். தன் தாயுடன் வாழ்கிற அவள் வீட்டின் ஒரு பகுதியில்தான் அவன் குடியேறினான். இத்தனை புத்தகங்களா என்று விழிகள் விரிய அவள் பார்த்த ஆச்சர்யப் பார்வை அவனை ஈர்த்தது. பட்டாம்பூச்சிகள் போல அவள் அழகிய கணகள் படபடத்தன.

"ஏன் சார்.... ரொம்பப் படிச்சா மூளை கெட்டுப் போயிடும்னு சொல்றாங்களே...?"

"தவறான கருத்து இது. நிறையப் படிக்கிறவங்க ரொம்பவும் 'சென்சிடிவ்' ஆக மாறுவாங்க. ரொம்பவும் நுட்பமான விஷயங்களையும் உணர்வாங்க. அன்னிக்குப் புத்தகங்களை அடுக்கும் போது கூலிக்காக அதை சுமந்து வந்தவங்க, அதை வெறும் காகிதக் கட்டாகத் தூக்கி வீசிவிட்டுப் போனாங்க. நான் அவுங்களைப் பார்த்து சத்தம் போட்டுத் திட்டினேன்! அவுங்க வெளியே போய் என்ன சொல்வாங்க?

செந்தூரம் ஜெகதீஷ்

'படிச்சு படிச்சு அந்த ஆளுக்கு மூளை கெட்டுப் போச்சுன்'னு சொல்வாங்க. இல்லையா? இதுவே ஒரு பணக்காரன் தன் வேலையாட்களை விரட்டினால் அப்படி சொல்வாங்களா? பணம் அவுங்க ஜீவனம்! புத்தகம்? Who cares?"

"நீங்க ரொம்ப வித்தியாமா இருக்கீங்க சார். வசதியிருந்தும் பணக்கார குடும்பத்தை உதறி, நிறைய படிச்சு, நல்லா பேசறீங்க!"

"ஆமாம். நான் வித்தியாசமானவன்தான். ஆனால் யாரும் என்னை சகிச்சுக்க மாட்டாங்க. உலகம் கணிதமாகிப் போச்சு. என்னுடைய உலகம் கவிதை மயமானது."

அவள் ஆபீசுக்குப் போன பிறகு மனோகரன் அவளைப் பற்றி யோசிக்கலானான். ஆர்வமான பெண். புத்தகங்களை அடுக்கி வைக்க உதவினாள் அவள். குழந்தைகளைப் போல அதை அடுக்கி வைத்ததும், பிரவுன் பேப்பர் கொண்டு வந்து சிலவற்றுக்கு அட்டை

போட்டுத் தந்ததும் ஒரு கலையாத சித்திரமாக மனத்தில் படிந்துவிட்டன. அவள் அழகிலும் தேவதைதான். வீட்டு வாடகையும் அவள் வருமானமும்தான். துணை வயதான அம்மா, திருமண கனவுகள்... பேசாமல் தானே அவளை மணந்து கொண்டால் என்ன? மார்க்சுக்கு ஒரு ஜென்னி போல் அவள் இருப்பாளா? புத்தகங்களை நேசிக்கக் கூடிய ஒரு ஆத்மா் துணையாக அமைந்தால் அதுதான் எத்தனை சுகமானது! ஒரு பெண்ணின் நளினம்மிக்க விரல்களால் பதமாகக் கையாளப்படும் புத்தகம் தன்னுடையது என்ற நினைவோடு அந்த விரல்களும் தனக்கே சொந்தமானால் என்ன சந்தோஷம் அது! அப்பா! ரொம்பவும் யோசிப்பதுகூட சரியல்ல என்றெண்ணி, சட்டென்று அவன் முடிவுக்கு வந்துவிட்டான். ரஞ்சிதா ஆபீசிலிருந்து திரும்பியதும் இன்று அவளிடம் பேசிவிட வேண்டும்.

"சொல்லுங்க மனோ, என்ன விஷயம்?" மனோகரன் அவளை நிமிர்ந்து பார்த்தான். ஆபீசில் வேலை செய்த அலுப்பிருந்தாலும் குறையாத அழகுடன் இருந்தாள். பேச வேண்டும் என்று சொன்னதும் முகம் கழுவி அவன் அறைக்கு வந்து விட்டாள். உரிமையுடன் நாற்காலியை இழுத்து அமர்ந்தாள். அவன் நேரிடையாக விஷயத்துக்கு வந்து விட்டான். ஆழமான கண்களால் ஒரு கணம் ஊடுருவி அவனைப் பார்த்து விட்டு அவள் சொன்னாள். "ஸாரி மனோ சார். என்னால் சம்மதிக்க முடியது. நீங்க பெரிய எழுத்தாளர். நிறையப் படிச்சவர். உங்கள் உலகம் கவிதைமயமான உலகம். எனக்குப் புரியுது. ஆனால்... என்னுடைய உலகம் கணிதமானதுதான் சார்.

"எனக்கு ஒரு கணவர் தேவைதான். ஆனால் அவருக்கு என்னைத் தவிர வேறு உலகம் தெரியக் கூடாது. உங்களுக்கு ஏற்கெனவே விசாலமான ஒரு உலகம் வாய்த்திருக்கு. என் கணவர் எனக்குக் கவிதை படிச்சு விவாதிக்கக் கூடியவரா இல்லைன்னா பரவாயில்லை. ஆனால் புதுசா வந்த சினிமாவுக்குக் கூட்டிட்டுப் போறவராவும் புதுசு புதுசா புடைவை எடுத்துத் தர்றவராகவும் இருக்கணும். என் குழந்தைகளைப் படிக்க வைக்கக் கூடியவரா, என் வருங்காலம் பற்றி யோசிப்பவராக இருக்கணும்– ஸார் நான் உங்க மேல் ரொம்ப மரியாதை வச்சிருக்கேன். ஆனால் நிச்சயமா நீங்களும் நானும் கல்யாணம் செஞ்சுக்க முடியாது."

"ரஞ்சிதா..."

"ஸாரி சார். என் கற்பனைகளிலும் கவிதை இருக்கு சார். ஆனால் ஊரோடு ஒத்து வாழ்ற வாழ்க்கைதான் சார் என்னுடையது. நீங்க என் மேல் ஆசைப்பட்டதே எனக்கு ரொம்பவும் பெருமையான விஷயம்... ஆனால்..."

நாற்காலியை விட்டு எழுந்த அவள், "ஸாரி சார்" என்றபடி மல்லிகை மணம், மேனி வாடை, புடைவை சலசலப்பு, கொலுசுச் சத்தம் யாவும் மறைய மறைய அவசரமாகப் படியிறங்கிப் போய்விட்டாள். குபுக்கென்று கண்களில் பொங்கி வழிந்தது. நிற்க முடியாமல் சரிந்து கட்டிலில் விழுந்தான். தூங்கினால் மறுபடியும் பயங்கரக் கனவுகள் வருமோ என்ற கலக்கத்துடன் அவன் விழித்துக் கொண்டே சப்தமின்றி அழுதான்.



"நம்ம மாலா ஏக குஷியா போறாளே... என்னடி விசேஷம்?"

"அவ மாமியாரு வோட்டு போட்ட வேட்பாளரு மண்ணைக் கவ்விட்டாராம்!"

— பி.ஜி.பி. இசக்கி

"தலைமைச் செயலகத்தின் முன் கோஷ்டியா, யாரோ உண்ணாவிரதம் இருக்காங்களே, எதுக்காக?"

"அவங்க கட்–அவுட் செய்து ஐந்து வருஷமா பிழைப்பு நடத்தினவங்களாம்... அவங்களுக்கு பென்ஷன் கொடுக்கணும்னு புது அரசிடம் கோரிக்கை வைக்கறாங்க!"

— து. பூவராகன்



ரமே ராமே மனோரமே
சஹஸ்ரநாம தத்துல்யம்
ராம நாம வரானனே....

'வரானனே' - 'அழகான திருமுக மண்டலம் கொண்டவளே' என்று பார்வதியைக் கொண்டாடுகிறார் பரமசிவன்.

"ராமா, ராமா, ராமா! என்று மூன்று தடவை சொன்னால், சஹஸ்ரநாமத்துக்கு அது துல்ய மானது" என்கிறார்.

அதற்காக நித்யமே நாம் 'ஸ்ரீ ராம ராம ராம' என்று சொல்லிடலாம்னு வைத்துக் கொள்ளக்கூடாது. நித்யம் சஹஸ்ரநாம பாராயணம் பண்ணணும். அது அபூர்வமாக முடியாமல் போகிற தினத்தில் 'மூன்று முறை ராம நாமா சொன்னால் போதும்' என்று ஈசுவரனே பேசுகிறார்.

மூன்று முறை சொல்வது நூறு நாமங்களுக்கு எப்படி ஈடாகும்...?

திருமழிசையாழ்வார் திருச்சந்த விருத்தத்திலே, எண்ணில் அடங்கியுள்ள தத்துவத்தை எடுத்துச் சொல்கிறார்.

வேத சமக மந்திரமும் எண்ணிக்கையைக் கொண்டாடுகிறது.

'ராம' என்ற சொல்லை எடுத்துக் கொண்டோமானால், 'ர' வர்க்கத்திலே 'ரா' என்பது இரண்டாவது எழுத்து. ம என்பது ஐந்தாவது எழுத்து (வடமொழியின் ப ப ப ப ம வரிசை). இரண்டை ஐந்தால் பெருக்கினால் கிடைப்பது பத்து.

ஆக 'ராம' என்ற ஒரு சொல்லுக்குரிய எண் 10. ராம, ராம, ராம என்று மும்முறைகள் சொன்னால், அதற்குரிய எண் 10 X 10 X 10 அதாவது ஆயிரம்!

ஆக, ராம, ராம, ராம என்று மும்முறை சொல்வது ஆயிரம் திருநாமங்களுக்கு துல்ய மானதுதானே....!

ராமநாமத்தின் மகிமையை கம்பன் வாலி வதைப் படலத்திலே சொல்கிறான். ராமனின் அம்பில் அவன் நாமத்தை வாலி கண்டதை விவரிக்கிறான். :

மும்மைசால் உலகுக்கெல்லாம்
மூலமந்திரத்தை, முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும்
தனிப் பெரும் பதத்தை, தானே
இம்மையே, எழுமை நோய்க்கும்
மருந்தினை இராமன் என்னும்
செம்மைசேர் நாமம் தன்னை
கண்களில் தெரியக் கண்டான்

இதனினும் உயர்வு ஒரு நாமத் துக்கு என்ன இருக்க முடியும், சொல்லுங்கள்...?

(தொடரும்)

கட் பண்ணி ஓட்ட சில வோட்டு விவரம்!

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் 167 உறுப்பினர்களைக் கொண்ட தி.மு.கழகத்தில் அதிக வாக்கு வித்தியாசத்தில் வென்றவர், தாம்பரம் வைத்தியலிங்கம். வாக்குவித்தியாசம் - 1,13,942. குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வென்றவர் விளாத்திகுளம் ரவிசங்கர். வாக்கு வித்தியாசம் - 634.

●○ 39 உறுப்பினர்களைக் கொண்ட த.மா. காங்கிரஸில் அதிக வாக்கு வித்தியாசத்தில் வென்றவர், வில்லிவாக்கம் ஆரூண். வாக்கு வித்தியாசம் - 1, 47,747. (96 சட்டமன்ற தேர்தலில் அதிக வாக்கு வித்தியாசத்தில் வென்றவர் இவர்தான்.) குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வென்றவர், வாசுதேவநல்லூர் ஈஸ்வரன். வாக்கு வித்தியாசம் - 616.

●○ நான்கு உறுப்பினர்களைக் கொண்ட அ.தி.மு.கவில், அதிக வாக்கு வித்தியாசத்தில் வென்றவர் அறந்தாங்கி திருநாவுக்கரசு. வாக்கு வித்தியாசம் - 14,237. குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வென்றவர் ராசிபுரம் பி.ஆர். சுந்தரம். வாக்கு வித்தியாசம் - 454.

●○ நான்கு உறுப்பினர்களைக் கொண்ட பா.ம.க.வில் அதிக வாக்கு வித்தியாசத்தில் வென்றவர், தாராமங்கலம் கோவிந்தன். வாக்கு வித்தியாசம் - 24,707. குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வென்றவர், பெண்ணாகரம் மணி. வாக்கு வித்தியாசம் - 406 (96 சட்டமன்றத் தேர்தலில் மிக குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வென்றவர் இவர்தாம்.)

●○ எட்டு உறுப்பினர்களைக் கொண்ட வ.கம்யூனிஸ்ட் கட்சியில் அதிக வாக்கு வித்தியாசத்தில் வென்றவர், திருத்துறைப்பூண்டி பழனிச்சாமி. வாக்கு வித்தியாசம் - 53,688. குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வென்றவர், நாங்குநேரி கிருஷ்ணன். வாக்கு வித்தியாசம் - 3,149.

— எம்.எஸ். குமார்.

டேக் ஓவர்

இரா. முருகன்

மிசிஸ். பொன்சேகா கிளம்பிப் போய்ப் பத்து நிமிடம் கழித்து டெலிபோன் கூப்பிட்டது.

'ஆட்டோ- ஆன்சரிங்'கை இணைக்க மறந்திருக்கிறாள். "இது சாய்வாலா கம்பெனி- எங்கள் வைஸ் பிரசிடெண்ட் ரங்கா தற்போது இங்கே இல்லை. நாளைக் காலையில் அவர் காரியதரிசியைச் சந்தியுங்கள். சிரமத்துக்கு மன்னிக்கவும்"- பொன்சேகா குரலில் பதிவு செய்து வைத்ததைக் கிரமமாகச் சொல்லும் இயந்திரம் அது.

ரங்கா, அறைக்கு வெளியே வந்து ரிசீவரை எடுத்தார்.

"ஹலோ நான் எகனாமிக்ஸ் நியூஸ் பத்திரிகையின் உதவி ஆசிரியர் ராகவ்ஷெட்டி-"

"சொல்லுங்கள்."

"குட் ஈவினிங் சார்.. உங்கள் கம்பெனி பாரத் ஆர்ச்சர் நிறுவனத்தோடு இணையப் போவதாகப் பரபரப்பான செய்திகள்... இந்த மெகா இணைப்பு பற்றி..."

ரங்கா இடை மறித்தார்.

"இல்லை... எனக்குப் பேச நேரம் இல்லை."

"செய்தி உண்மையா என்று மட்டும்."

"பாரத் ஆர்ச்சர் காரர்களையே கேட்டுப் பார்க்க வேண்டியதுதானே..."

ஓங்கி அறைவதுபோல ரிசீவரை வைத்தார்.

பொன்சேகாவின் பர்சனல் கமப்யூட்டர் திரை இன்னும் ஒளிர்ந்து கொண்டு தான் இருந்தது. அவள் போகும்போது ரெக்சின் கவர் போர்த்தி, கீ போர்டைப் பூட்டி விட்டுப் போகிற பழக்கம்.

மறதியில்லை. இந்த வேலை இனியும் நிலைக்குமா என்ற சஞ்சலம்., அதனால் வரும் அசிரத்தை. எல்லோரையும் போலவே.

பக்கத்து அலமாரியில் ரெக்சின் உறையைத் தேடி எடுத்தபோது, அடுத்தடுத்துத் தனக்கு வாய்த்த காரியதரிசிகளை நினைத்துக் கொண்டார் ரங்கா.

பெண்கள். கீழ்ப்படிதல் உள்ளவர்கள். குறிப்பறிந்து செயல்படுபவர்கள்.

புள்ளி விவரங்களை விரல் நுனியில் வைத்திருந்த ஆஷா மேனேன். அவள் இப்போது புனே சிஞ்ச்வாட் யூனிட்டில் அக்கவுண்ட் மானேஜர். முணுமுணுப்பாக உதடு அசைவதைக் கூடக் கவனித்துப் பிழையே இல்லாமல் சுருக்கெழுத்தில் வார்த்து அடித்து வந்து நீட்டுகிற அருணா காமத்... கார் விபத்தில் இறந்து போனாள். அழகான உச்சரிப்போடு ஆங்கிலம் பேசும், தெலுங்கில் கவிதை எழுதுகிற மாலினி சாஸ்திரி, டெலிவிஷன் அறிவிப்பாளராகி விட்டாள். எல்லோருக்கும் முன்னால் வந்த கல்யாணி.. ரங்கா முன்னால் உட்காரக் கூடப் பயப்படுவாள். எள் என்பதற்கு முன் எண்ணெய்யாக, எல்லாம் பார்த்துப் பார்த்துச் செய்தவள் கல்யாணத்துக்கு அப்புறம் வேலையை விட்டு விட்டாள் கல்யாணி.

ரங்காதான் அவளைக் கல்யாணம் செய்து கொண்டது.

கல்யாணத்துக்கு அப்புறமும் அவள் ரங்காவுக்கு 'உங்கள் கீழ்ப்படிதலுள்ள கல்யாணி'தான்.

"வீட்டுலே அடைஞ்சு கிடந்தா சோம்பேறியாயிடுவே... ஈவினிங் காலேஜில் எம்.ஏ.படி". படித்தாள். "பெண் குழந்தை தானா... பரவாயில்லே... இது ஒண்ணே போதும்.. நீயே ஆபரேஷன் செஞ்சுக்க." செய்து கொண்டாள். "சுதாக்குட்டி பள்ளிக்கூடம் போனப்புறம் சும்மாப் பகல்லே தூங்கிட்டுக் கெடக்கியே... எம்.ஏ. பர்ஸட் கிளாஸ் சர்ட்டிபிகேட் ஊறுகாய் போடவா வாங்கி வச்சே... பேப்பர்லே பார்த்து அப்ளை பண்ணி..." வேலைக்குப் போனாள். "புரமோஷன்லாம் சரிதான். ஆனா சாயந்திரம் ஆறு மணிக்கு அப்புறம் உக்கார வேண்டாம்." அடித்துப் பிடித்து ஆறு மணிக்கு வந்தாள். "சமையலுக்கு எதுக்கு ஆள் போடணும்?" போடவில்லை. ரங்கா வீட்டுக்குப் போகும் போது சுடச் சுட ரசமும் பொரியலும் சுக்கா ரொட்டியும் தயாராக இருக்கும்.

பசிக்க ஆரம்பித்தது. எம்.டி. லண்டனிலிருந்து கூப்பிடுவதாக சொல்லியிருக்கா

விட்டால் கிளம்பிப் போயிருக்கலாம். ரங்கா தான் வேண்டுமாம். கம்பெனிக்காக வரிசையாக புது உற்பத்திப் பொருள்கள் அறிமுகப்படுத்திய கைதான், கம்பெனியை பாரத்-ஆர்ச்சரில் மெகா இணைப்பு செய்ய முன்கை எடுக்க வேண்டுமாம்... விதி...

"சுநில்"

இன்டர்காமில் அக்கவுண்ட்ஸ் மானேஜரைக் கூப்பிட்டார்.

"பிராபிட் ஏர்னிங் கப்பாசிட்டி வேல்யு கம்ப்யூட் பண்ணியாச்சா சுநில்?"

"இல்லே ரங்கா...நாளைக்கு நான்தான் பண்ணனும். பசங்க வரிசையா கால்கடுதாசி நீட்டிட்டாங்க. உனக்குத்தான் தெரியுமே.. கப்பல் முழுகிட்டு இருக்கு.. கிழட்டு மாலுமி நீயும் நானும் நம்ப வயசுக்காரங்களும்தான். பாரத் ஆர்ச்சர்லே நம்மை எப்படி மதிப்பாங்களோ..."

ஏர் கண்டிஷனரின் சில்லிப்பு அதிகமாக இருந்தது. மணி நேரத்துக்கு ஒரு முறை சுற்றி வந்து சரிபார்க்கும் ஆப்பரேட்டரை இண்டர்காமில் கூப்பிடப் பதிலே இல்லை.

ஏ.சி.யைக் குறைக்கச் சொல்ல வேண்டும். ரங்கா வெளியே வந்து லிப்ட்டிற்குக் காத்திராமல் மாடிப்படி இறங்கினார். ஏசி ரூம் கீழ்த் தளத்தில்.

மாடிப்படியை ஒட்டி வளைந்து போகும் கைப்பிடி ரெய்லிங்களில் படிந்த தூசி கண்ணை உறுத்தியது. துடைத்துத் துடைத்துப் பாலீஷ் போட்டதுபோல வைக்கப்படும்



கட்டடம் இது.

நூறு வருடம் பாரம்பரியம் உள்ள கம்பெனி. டீத்துள் விற்றுக் கட்டிய பிரம்மாண்டமான தலைமை அலுவலகம். நூறு வருடமாக அதே பேக்கிங்கில் வரும் கேத்தி டீ இன்னும் நாடு முழுவதும் விற்பனையில் நம்பர் ஒன் தான். டீத்தூள் தவிர இன்ஸ்டெண்ட் காப்பி, மில்க் சாக்லெட், சமையல் எண்ணெய் என்று நூற்றுக் கணக்கில் உற்பத்திப் பொருள்கள்.

"இருபத்தேழு சதவிகிதம் மொத்த விற்பனை அதிகரிப்பு. வருடாந்திர வளர்ச்சி பதினெட்டு சதவிகிதம். ஏகப்பட்ட லாபம். வேறு தொழில்களில் முதலீடு செய்யலாம். லெட் அஸ் டைவர்ஸிபை.. தய்வானிலிருந்து டி.வி. பிக்சர் டியூப்களை சோர்ஸ் செய்வதில் ஆரம்பிக்கலாம். அப்புறம் செயற்கை இழை... எரிசாராயம்..."

எந்த தேவதை கொடுத்த சாபமோ... அப்புறம் கம்பெனி இறங்கு முகம்தான், கடந்து போன ஐந்து வருடமாக.

முதல் மாடியில் போர்ட்ரூம் கதவு விரியத் திறந்து கிடந்தது. கூட்டம் நடக்காத நாட்களில் பூட்டி வைத்திருக்கும் இடம் இது.

ரங்கா உள்ளே நுழைந்து ஒவ்வொரு விளக்காகப் போட, நீளவட்ட மேஜையும், குஷன் நாற்காலிகளும், எல்.சி.டி. புரஜக்டரும், எதிரே சுவரில் கரும்பலகையும் வெள்ளைத் திரையுமாக விரியும் போர்ட்ரூம்.

புதியதாக விற்பனைக்கு வரப்போகும் எத்தனை பண்டங்களுக்கு இங்கே பிராடக்ட் பிரசென்டேஷன் கொடுத்திருக்கிறார் ரங்கா. ஏலக்காய் வாடை தேயிலை, ஸ்வீடிஷ் ஸ்பான்ச் கேக், பாலாடைக் கட்டி என்று எத்தனை பரபரப்பான அறிமுகச் சடங்குகள்.

விற்பனைக்கு வரும் பண்டத்தின் நிறம், வடிவம், சுவையிலிருந்து அது சுற்றி வரும் காகிதம், மேலே வண்ணங்கள், எழுத்து, விற்பனையுத்தி, விளம்பரம் என்று சகலமானதையும் அணுஅணுவாகத் திட்டமிட்டுச் செய்கிற பிராடக்ட் லான்ச் ஒவ்வொன்றும் ஒரு வருடம் முதல் இரண்டு வருடம் வரை நீளும்.

போர்ட்ரூம் சுவரில் 'வாட்-கம்'மின் வண்ண போஸ்டர் கண்ணைச் சிமிட்டியது. சாய்வாலா கம்பெனியின் வெற்றிகரமான பிராடக்டுகளில் அதுவும் ஒன்று. சுதா கல்லூரியில் சேர்ந்த வருடம் தான் விற்பனைக்கு வந்தது. சுதா கொடுத்த ஐடியா...

"டாடி, காலேஜ் தோழிகள் எல்லாம் ஊட்டி, கொடைக்கானல்னு லீவுக்குப் போறாங்க..."

"நீ என்னோட டெல்லிக்கு வா... மூணு நாள் பிளானிங் கான்பரன்ஸ்... முடிஞ்சு ஊர் சுத்திக் காட்டறேன்..."

"இந்த வெய்யில்லே டெல்லிக்கு உங்களோட வர்றதை விட, நெட்டூர் கிராமத்துலே பாட்டியோட உக்காந்து மொட்டை மாடியிலே வடாம் பிழிவேன்..."

டென்னிஸ் ராக்கெட்டோடு சுதா கிளம்பியபோது ரங்கா மனம் முழுதும் ஜவ்வரசி வடகம் ஆக்கிரமித்துக் கொண்டது.

அதற்கு மூன்று மாதம் முன்னால்தான் லக்னோ பிரிவில் படு உற்சாகமாக சோயா-சேமியாவை அறிமுகப்படுத்தினார்கள். சேமியாவுக்கான மார்க்கெட் ஏற்கெனவே நிறைந்து வழிகிற சூழ்நிலையில், இது வேண்டவே வேண்டாம் என்று ரங்கா படித்துப் படித்துச் சொல்லியும் பலன் இல்லை. லக்னோ நாராயணதத் எம்.டி.யின் தங்கை மகன்.

லட்சக் கணக்கில் பணம் செலவு செய்து, இயந்திரம் வாங்கி, கலர் கலராகச் சாயம் தோய்த்து– "குழந்தைகளுக்குப் பிடிக்கும்"– இந்தி சினிமா காமெடியனை வாழைப் பழத் தோலில் வழுக்கி விழ வைத்து, மகா காமெடி விளம்பரப்படம் எடுத்து, வியாபாரத்துக்குக் கொண்டு போனபோது படுதோல்வி.

சோயா மொச்சை வாடை பிடிக்காதவர்களிடம் புரதச் சத்து, ஊட்டச் சத்து, விட்டமின் கணக்கையும், குறைந்த விலையையும் காட்டிப் புண்ணியமில்லை என்று கம்பெனிக்கு உறைப்பதற்குள் பெட்டி பெட்டியாகத் திரும்பி வந்த சோயா-சேமியா...

சோயா சேமியாவை மறு அறிமுகம் செய்கிற காரியம் ரங்கா தலையில்தான் விழுந்தது. ஏழு லட்ச ரூபாய் செலவில் திட்டமிட்ட ரீலான்ச் அது. வழிவகை யோசித்துக் கொண்டிருந்த போதுதான் சுதா சொன்ன வடகம்.

குவிந்து கிடக்கும் சோயா சேமியாவைக் கொட்டிக் கலந்து தோதாக வேறு சரக்கும் சேர்த்து உப்பு உறைப்பாக யந்திரத்தில் வடகம் செய்து விற்றால்... மறுநாளே 'வாட்-கம்' பெயர் பிறந்தது... வைத்தது சுதாதான். ஆறே மாதத்தில் மார்க்கெட்டுக்கு வந்த வாட்-கம் விற்பனை சூடு பிடித்தபோதுதான் ரங்கா வைஸ்-பிரசிடெண்ட் ஆனது.


எம்.சி.ஏ. முடித்து நியூரல் நெட் ஒர்க்கிங்கில் பிஎச்.டிக்காகச் சுதா கலிபோர்னியா போனதும் வாட்-கம் அங்கேயும் சூப்பர் மார்க்கெட்டுக்களில் தலைகாட்டியிருப்பதாக எழுதியிருந்தாள்.

"பாக்கேஜில் மட்டும் ஏழெட்டு வர்ணத்தில் அடிக்கிறதுபோல இல்லாமல் சாப்ட்டாக இருந்தால் அமெரிக்கர்களும் வாங்கலாம்" என்று யோசனை வேறு சொல்லியிருந்தாள்.

பிளாஸ்டிக் டப்பாவிலும், கண்ணாடி பாட்டிலிலும் கூட அழகாக பிரிண்ட் செய்யும் 'தெர் இமேஜ்' இயந்திரம் வாங்கிய போதுதான் சுதாவின் காஷுவலான கடிதம்.

அவள் வேலை பார்க்க ஆரம்பித்திருந்த நேரம் அது. கூட வேலை செய்யும் அமெரிக்கக் கறுப்பனான ராபர்ட்டைக் கல்யாணம் செய்து கொள்ள அப்பா அம்மா சம்மதம்

ஆஹ்..ஹா...



"நானும் அதையேதான் முன்மொழியலாம்னு நினைச்சேன். ஆனால், பி.ஜே.பியில அதை முன்மொழிஞ்சுட்டதாலே இப்ப அதை எதிர்க்கப் போறேன்..."



"இந்த கம்ப்யூட்டர் எதுவும் செய்யாது. ஆனா, தவறுகள் நடக்கறப்போ பழியைப் போடறதுக்கு வசதியா ஏதாவது வேணுமில்லையா...?"

தேவையாம்...

ரங்கா போன் செய்யவில்லை. பதிலும் போடவில்லை. கல்யாணிக்கும் உடனடி தடை உத்தரவு.

"மகளைச் செல்லம் கொடுத்து வளர்த்துட்டீங்க... என்னை மாதிரி நில்லுன்னா நிக்கணும் உட்காருன்னா உக்காரணும்னு எதிர்பார்க்க முடியுமா?"

யார் ஆசியும் இல்லாமல் சுதா கல்யாணம் முடிந்து இரண்டு வருடம் ஓடிவிட்டது.

நேற்றையும், முந்தாநாளையும் முந்தின நாட்களையும் அசைபோட்டுக் கொண்டு ரங்கா படி இறங்கிவர, ஏ.சி. அறை வாசலில் ஆப்பரேட்டரும் இன்னும் இரண்டு கடைநிலை சிப்பந்திகளும் உரக்கப் பேசிக் கொண்டிருந்தது காதில் அறைந்தது.

"ஆர்ச்சர் கம்பெனியிலே சேர்ந்த பிறகு இந்தக் கட்டடத்தை வித்துடுவாங்களாம். பி.எப்., கிராஜுவிட்டி, மேலே ரெண்டு மாச சம்பளம் போட்டுக் கொடுத்து நம்மளை மாதிரி ஆசாமிங்களை எல்லாம் வீட்டுக்கு அனுப்பிட்டு, முக்கியமானவங்களை மட்டும் அங்கே சேர்த்துப்பாங்களாம். நம்ப வைஸ் பிரசிடெண்ட் ரங்கா சார்... பாண்டே மாதிரி... அவங்களும் அங்கே அதிகாரம் பண்ண முடியாது... டையைக் கட்டிக்கிட்டு, கையைக் கட்டிக்கிட்டு நிக்கணும்... காலம்டா சாமி..."

திரும்ப மாடிப்படி ஏறும்போது ரங்காவுக்கு வியர்த்திருந்தது.

வயதாகி விட்டது. வேறு எங்கேயும் வேலைக்குப் போக முடியாது. பல்லைக் கடித்துக் கொண்டு இன்னும் இரண்டு வருடம் தள்ளி விட்டால் ரிடையராகி விடலாம். அதுவரைக்கும் எந்தப் பேர்வழிக்கு சலாம் போட்டு "எஸ் சார்" சொல்ல வேண்டும் என்று தலையில் எழுதியிருக்கிறதோ...

ரங்கா அறையில் டெலிபோன் தொடர்ந்து அலறிக் கொண்டிருந்தது.

எம்.டி.தான்.

"எங்கேப்பா போனே... அப்போலேருந்து கூப்பிடறேனே.. நீ அனுப்பின பேக்ஸ் வந்தது... ஸ்வாட் அனைலசிஸ்லே நம்ம பிராடக்ட்களோட டோமாவை ஸ்ட்ரெங்த்தாகக் காட்டணும். நெட் அசட் வேல்யு ரீடு பண்ணலாம்... பம்பாய் எக்சேஞ்ச் ஷேர் வேல்யுதான் எடுத்துக்கணும் மார்க்கெட் மதிப்பு கணக்குப்போட... எல்லாம் சரி பண்ணி நாளைக்கு நீ ஆர்ச்சர் லோக்கல் ஆபீஸிலே போய் டிஸ்கஸ் செய்யணும். ஷேர் எக்ஸ்சேஞ்ச் வேல்யு கம்ப்யூட் ஆகி ஏத்துக்கிட்டாத்தான் மெர்ஜர் வேலை ஆரம்பிக்கும். நாளைக்கு மத்தியானம் ஆர்ச்சர்லே போய்ப் பேசிடு... சரியா... என்ன செய்ய.. நாம்



''அடிதடியில்லை, சித்திரவதையில்லை, கொலை கிடையாது, கற்பழிப்பு கிடையாது... இந்த வேலையை விட்டுட்டு சாமியாரா ஆயிடலாம்னு பார்க்கறேன்...''



"அவ்வளவு சுலபமா விட்டுடுவேனா....? சட்ட சபைத் தேர்தல், மாநகராட்சித் தேர்தல், பஞ்சா யத்துத் தேர்தல், கூட்டுறவுத் தேர்தல்னு எல் லாத்துலயும் நின்னு ஏதாவது ஒண்ணுலயா வது ஜெயிச்சுட மாட்டேன்...?''

— இந்தியன் ஃபீச்சர்ஸ் சிண்டிகேட்

பணிஞ்சு போற காலம் இது...''

பேசிக் கொண்டே போகிற எம்.டி... ரங்கா கை கட்டி நிற்க வேளை நெருங்கிக் கொண் டிருக்கிறது.

ஆயாசத்தோடு எல்லாக் காகிதங்களையும் பெட்டியில் திணித்துக் கொண்டு கிளம்பும் போது திரும்பவும் தொலைபேசி.

இந்த சனியனிலிருந்து எப்போதுதான் விடுதலை...

"கிளம்பலியா இன்னும்?"

கல்யாணிதான்.

"எங்கே தொலையப்போறேன். வந்துட்டுத் தானே இருக்கேன். என்ன விஷயம் சொல்லு..." எரிச்சல் எட்டிப் பார்க்கும் குரல்.

''வந்து... இப்பதான் சுதா. போன் பண்ணினா..''

கோபம் மெல்ல ஏறிக் கொண்டிருந்தது ரங்காவுக்கு.

''அவ உண்டாயிருக்காளாம்...'' தயங்கித் தயங்கி கல்யாணி சொன்னாள்.

"போ... போய்ப் பிரசவம் பாத்துட்டு வா... மாப்பிள்ளைக் கருப்பனுக்கும் சேர்த்து சிசுருஷை பண்ணி பைஜாமா தோய்ச்சுப் போடு போ... என்ன எழவுக்கு என்னைக் கேட்கணும்... என் கிட்டேச் சொல்லித் தொலைக்கணும்...''

கோபம்... மெகா மெர்ஜர் மீது. சாய்வாலா கம்பெனி மீது. எடுத்துக் கொள்ளும பாரத ஆர்ச்சர் மீது. ஐந்து வருஷமாக நஷ்டக் கணக் குக்கு வாய்க்கால் வெட்டிய எல்லாப் பயல் கள் மீதும்... நாளைக்கு யார் முன்னாலோ கை கட்டி நிற்க வேண்டிய தலையெழுத்தின் மீது... அந்த முகம் தெரியாத அற்பப் பிறவி மீது... கல்யாணியின் பேச்சின் மீது...

''சரி... உங்களுக்குப் பிடிக்கலைன்னா பேசலை...''

"பிடிச்சதாப் பேசு..." உறுமல் தொடர்ந்தது.


"உங்களுக்குப் பிடிச்ச சுண்ட வத்தக் குழம் பும், வெள்ளரிப் பச்சடியும் செஞ்சு வச்சிருக் கேன். எனக்குப் பசிக்கலை.. தலைவலி உசிரு போறது..''

"நாளைக்கு லீவு போட்டு ரெஸ்ட் எடு... சரியாயிடும்..." இறுக்கம் குறையாத குரலில் சொன்னார் ரங்கா.

"எங்கே லீவு போட... நாளைக்கு உங்க கம்பெனியிலேருந்து யாரோ மெர்ஜர் பத்திப் பேச வராங்களாம்... இனிமே அது சம்பந்தப் பட்ட சகலமானதையும் என்னைத் தான் பார்த்துக்கச் சொல்லியிருக்காங்க.... ஐயாம் ஸோ டயர்ட்... கொஞ்சம் சீக்கிரமா வந் துடறீங்களா?''


''எஸ் மேடம்...''

ரங்கா ரிசீவரை ஜாக்கிரதையாக வைத் தார்.



* ஷர்மிலா

அட்மிஷனா? ஈஸியா? யார் சொன்னது?



* கணேசன்



* வினோதினி

19.5.96 இதழில் அந்தக் கால அட்மிஷன் பற்றிச் சில 'பெரியவர்கள்' பகிர்ந்து கொண்டாலும் கொண்டார்கள்.... இந்தக் கால இளைஞர்கள் நம்மைப் பிலு பிலுவெனப் பிடித்து உலுக்கி விட்டார்கள். "ஏன் சார், இன்று சாத்தியமில்லாத விஷயங்களைச் சொல்லி வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்கிறீர்கள்? எம்.எல்.ஏ சீட் கூட வாங்கி விடலாம்... காலேஜ் அட்மிஷன் குதிரைக் கொம்பு தெரியுமா?" என்று புலம்பித் தீர்த்து விட்டார்கள், கடிதங்களில்.

என்னவாம் கஷ்டம்? சிலரை விசாரித்தோம்:

வினோதினி ராமசந்திரன்:

1983ல் நான் இரண்டாம் வகுப்பில் சேர்வதற்கே (டி.ஏ.வி) இன்டர்வியூ இருந்தது. அஃப் கோர்ஸ் அந்த வயசுக்குக் கேள்விகள் சுலபம்தான் என்றாலும் அட்மிஷன்களுக்கான யுத்தம் அப்போதே தொடங்கி விட்டது.

இஞ்சினியரிங் படிக்க ஆசைப்பட்டு, பிளஸ் டூவில் முதல் குரூப் எடுத்தேன். என்ட்ரன்ஸ் எழுத ஸ்பெஷல் கோச்சிங் எல்லாம் போனேன். ஆனாலும் கணக்கு பேப்பர் ரொம்பக் கஷ்டமாக இருந்தது. உதறல்தான்! அண்ணா, பி.எஸ்.ஜி, கிரஸண்ட் என்று எதிலாவது நுழைய இப்போது தவித்துக் கொண்டிருக்கிறேன். எதுவும் கிடைக்காவிட்டால் எத்திராஜ், எஸ்.ஐ.ஈ.டி, ஸ்டெல்லா என்று அலைய வேண்டும்.

சென்னையில் மட்டும் தனியார் உட்பட முப்பத்தைந்து இஞ்சினியரிங் கல்லூரிகள் உள்ளன. என்ட்ரன்ஸ் எழுதின எல்லோருக்கும் சீட் கிடைத்துவிடும்தான்- கையில் காசு இருந்தால்!

டாக்டர் ஏ.எஸ்.கணேசன்:

வருஷத்துக்கு 1400 பேர் மெடிகல் படிச்சுட்டு, வெளியே வராங்க. ஆனா இதுக்கு முட்டி மோதற வங்க ஐம்பதாயிரத்துக்கும் மேலே!

பத்து வருஷம் முன்பு எம்.பி.பி.எஸ் முடிச்சா, யு.எஸ்.ஸுக்கு பிளேன் ஏறிடலாம். இப்ப டூரிஸ்ட் விசாகூடக் கிடைக்காது.


இன்னிக்கு எம்.பி.பி.எஸ். போறவே போறாது. எம்.எஸ்.முடிக் கணும். தவிர மேல மேல படிச்சிட்டே இருக்கணும். எம்.எஸ். மொத்தம் 300 சீட் தான். 1400 பேர்ல 300 சீட்டுக்குப் போட்டி! இதில் பாதி சர்விஸ் கோட்டா. நான் எம்.பி.பி.எஸ் முடிச்சிட்டு எம்.எஸ்.சீட்டுக்காக நாலு வருஷம் காத்திருந்தேன்!

சுயநிதிக் கல்லூரிகளில் படிக்கறது வேஸ்ட். உபயோகமில்லை. செலவுதான் மிச்சம். யோசிச்சுப் பார்த்தா இப்ப டாக்டருக்குப் படிக்கறதுனால பெரிய லாபம் ஒண்ணு மில்லை. சீட் கிடைக்காட்டா குடி முழுகிப் போகாதுன்னுதான் சொல்லுவேன்.


பேபி ஷர்மிலா ப்ரியா:
(பாப்பாவின் சார்பில் அப்பா);

நல்ல ஸ்கூலில் சேர்க்க வேண்டுமென்றால் இப்போதெல்லாம் குழந்தை பிறந்ததுமே ஸ்கூலில் ரிஜஸ்தர் பண்ணி விட வேண்டும். ஜூன் '94ல் எங்கள் ஷர்மிலா பிறந்தாள். அக்டோபர் மாதம் நூறு ரூபாய் கட்டி 'சிஷ்யா'வில் பதிவு செய்துவிட்டேன். அவளுக்கு மூன்று வயதாகும்போது 'சிஷ்யா' விலிருந்து இண்டர்வியூக்குக் கூப்பிடுவார்கள். அவளுக்கு மட்டுமல்ல... பெற்றோருக்கும் தான்!

-அசோக்



* வாலி!



* கறார்!



* புகார்!

அமைத்ததை வரவேற்கும் வீரமணி, மூதறிஞர் ராஜாஜி பெயரில் மாவட்டம் அமைத்தால் கொச்சைப்படுத்திப் பேசுகிறாரே...?'

! வீரமணியைத் தெரியாதா..? பாவம்! விட்டு விடுங்கள்! முதல்வரின் பதிலைப் படித்து சந்தோஷப்படுங்கள்.

● **செ. அன்புமதி கோபிநாத்,**
கொப்பம்பட்டி □

? நடந்த ஊழலுக்கு மூல காரணமானவரை விட்டு விட்டு மற்றவரை மட்டும் கைது செய்ததன் மர்மம் என்னவாக இருக்கும்?

! உங்களுக்கு செஸ் தெரியுமா...? சிப்பாய்கள், யானை, குதிரை, ராணி எல்லாவற்றையும் வெட்டிய பிறகு ராஜாவை மடக்கி 'செக்' வைப்பதுதான் புத்திசாலித்தனம்.

● **பி. ராஜன், தாராபுரம்.**

? ஐக்கிய முன்னணி அரசின் சாவி ராவ் கையில் உள்ளது என்று தங்கபாலு சொல்கிறாரே..?

! கௌடா சமர்த்தாக இருந்தால், டூப்ளிகேட்டை பத்திரமாக வைத்துக் கொள்வார்.


● **ஆர். சுப்பாராவ், திருக்கோவலூர்.**

? வாழப்பாடியார் மீண்டும் ஜெயாவுக்கு லாலி பாடுவாரா...?

! செருமி, சுருதி சேர்த்துக் கொண்டிருக்கிறார்!


● **ஈ.டி. விஜயகுமார், ஈரோடு:**

? பொது சிவில் சட்டம் உண்மையில் தேவைதானே...?



* சாவி....

! 'பொய்யாகத் தேவை' என்று யாராவது சொல்வார்களா?! 'தேவைதானே' என்றால் போதாதோ... அது என்ன 'உண்மையில் தேவைதானே...'!



*.... இருக்கிறதா?

● **இ. ராதாகிருஷ்ணன்,**
பட்டுக் கோட்டை.

? 'சசிகலா குடும்பத்தின் மதிப்பைக் கெடுப்பதற்காகவும் 'ஜெ' விடமிருந்து சசியைப் பிரிப்பதற்காகவும்தான், கருணாநிதியும் ப. சிதம்பரமும் சதி செய்கிறார்கள். அதன் விளைவே கைது நடவடிக்கை...' என நடராஜன் கூறியுள்ளாரே?

! "என்னிடமிருந்து என் மனைவியைப் பிரிக்க ஜெ சதி செய்கிறார்!" என்று ஒரு காலத்தில் இந்த நடராஜனே சொல்லியிருக்கிறார். இப்போதோ, சசிகலாவை எக்காரணம் கொண்டும் விலக்கி வைக்க முடியாது என்று கூறும் ஜெயலிதா, அ.தி.மு.க. தொண்டர்கள் யாரும் நடராஜனை சிறையில் போய்ப் பார்க்கக் கூடாது என்று உத்தரவிடுகிறார்! இந்தப் பின்னணியில் பார்க்கும் போது நடராஜனின் பழைய குற்றச் சாட்டுதான் உறுதியாகிறது.

● **இரா. வளையாபதி,**
தோட்டக்குறிச்சி.

? அ.தி.மு.க.வின் எதிர்காலம்.....?

! நல்லதொரு முதல்வராக விளங்கத் தாம் தகுதியற்றவர் என்பதை ஏற்கெனவே நிரூபித்து விட்டார். ஜெ. தற்போது, நல்லதொரு எதிர்க்கட்சித் தலைவராக விளங்கக் கூட தகுதியில்லை தமக்கு என்பதைத்தான் உணர்த்திக் கொண்டிருக்கிறார். அவருடைய அறிக்கைகளும் பேட்டிகளும் இதையே நிரூபிக்கின்றன. சசிகலா மாயையிலிருந்து ஜெயலலிதா விடுபட வேண்டும்; ஆட்சியில் அமர்வது தாமும் தம் சுற்றமும் சுலபமாகப் பணம் பண்ணுவதற்காக அல்ல என்பதை அவர் உணர வேண்டும்; அப்படிச் செய்வாரானால் அ.தி.மு.க.வின் எதிர்காலமும் ஏற்றம் பெறும். ஆனால், ஜெயலலிதாவோ தமது குற்றங் குறைகளை மூடி மறைப்பதற்காக, கருணாநிதி ஆட்சி பேரில் அபத்தமான, அபாண்டமான குற்றச் சாட்டுகளை அள்ளி வீசிக் கொண்டிருக்கிறார்! இப்படியே போனால் அ.தி.மு.க.வின் எதிர்காலம் அதல பாதாளம் நோக்கிச் சரியத்தான் செய்யும்.

□ ரூ. 25 பரிசு பெறுபவர்: செ. அன்புமதி கோபிநாத், 'அன்பு இல்லம்' கொப்பம்பட்டி அஞ்சல், திருவள்ளுவர் மாவட்டம் 621 012.

கல்யாண அழைப்பும்

காலைப் பத்திரிகையில் முகத்தைப் புதைத்துக் கொண்டிருந்த வரது, வெளிவாசலில் ஏதோ சப்தம் கேட்டு, தலையை வெளியே கொண்டு வந்து, "ஆழு" என்றார்.

"நான்தான் அண்ணா, ராஜபாண்டி..." என்றான், அவர் பக்கவாட்டில் நின்றவன்.

வரது, பேப்பரைக் கடாசிவிட்டு எழுந்தார். தெரு நடைக்கு, தன் பாரிய சரீரத்தைத் தூக்கிக் கொண்டு போய், வெற்றிலைச் சாற்றை உமிழ்ந்தார். 'நாராயணா' என்றார். சொல்லி வைத்தாற்போல, நாராயணன் எனப்பட்டவன் தோன்றி, பித்தளைக் குவளையை நீட்டினான். வரது, அதை வாங்கி வாய் கொப்பளித்துக் கொண்டார். தோள் துண்டால், வாயைத் துடைத்துக் கொண்டார்.

"ராஜபாண்டியா! ஆள் அடிக்கடி மறந்துடுது. பேர், ஊர் எல்லா இழவும் மறந்துடுது பாரேன். எல்லாம் வயசு பண்ணற கொனஷ்டை."

வரது, ஊஞ்சலைக் காட்டி, "உட்காரேன்" என்றார். அவன் அதை மறுத்து விட்டு, அவருக்கு நேர் எதிரே, தூணில் சாய்ந்தபடி தரையில் அமர்ந்ததை வரது, திருப்தியுடன் ஏற்றுக் கொண்டதைக் காண முடிந்தது. முறம் மாதிரி அகன்று இருந்த பாதத்தின் கட்டை விரலைத் தரையில் ஊன்றி, ஊஞ்சலைச் சற்றே விந்தி விட்டார். ஊஞ்சல், யானையின் காது மாதிரி அசையத் தொடங்கியது.

"என்ன சௌக்யமா இருக்கியா, ராஜ பாண்டி?" என்று கேட்டார் வரது.

"ஏதோ இருக்கேன்" என்று ஹீனஸ்வரத்தில் அவன் பதில் சொன்னான். காற்று, குப்பென்று வீசியது. தெற்குப் பார்த்த வீடு. வாசலில், வாசல் படப்பு வரை நீண்டிருந்தது, கோடைப் பந்தல். ரொம்ப தோரணையுடன் கட்டப்பட்ட வீடு. பெரிய பெரிய தூண்கள் வீட்டு உத்தரத்தைத் தாங்கிக் கொண்டிருந்தன. வரது அமர்ந்திருந்த ஊஞ்சல் பலகையே பார்த்தவர்களைப் பிரமிப்பு கொள்ளச் செய்யும் தன்மையது. என்ன பலகை? கன்னங்கரேலென்று, யானையைக் குளிப்பாட்டியது போல, எண்ணெய் சாத்திய பிள்ளையார் உடம்பு மாதிரி என்ன மினுமினுப்பு? முழு விசையில், ஊஞ்சல் ஆடினாலும், சுவர் இடிக்காத, அகலம் நீளமான மேல் வாசல். மேல் வாசலுக்கும், தெரு இரும்பு அடைப்புக்கும் நாற்பது அடியாவது இருக்கும். இரண்டு பக்கமும் கொய்யா, வேம்பு, துளசி என்று மரம், செடிகள். காற்றை வடிகட்டி அனுப்பிக் கொண்டிருந்தது கீற்றுப் பந்தல்.

"ஊம். என்ன பண்ணிட்டிருக்கே?" என்றார் வரது.

"சும்மாத்தான். ஒன்றும் சரிப்படலை. வர்றதை பிறந்துதான் ஏதானும் குதிரும்னு சோசியர் சொல்றார்."


"ஊம்" என்றபடி, தலையசைத்தார் வரது.



அந்தத் தலையசைப்பு, எதிரில் இருந்தவனின் சகல சோகங்களையும் அழித்து நீக்கி விடுகிற தினுசில் இருந்தது. எதிரில் தரையில் அமர்ந் திருந்தவன், வரதுவின், மெய்ப்பாடுகளையே கூர்மையாக அவதானித்துக் கொண்டிருந்தான்.

சௌகர்யமாக இருப்பவர்களுக்கு அப்படி அவர்கள் இருக்கிறவர்கள் என்பதைப் பௌதிகமாக விளங்கும்படியாகவே, அவர்கள் கடவுளால் படைக்கப்படுகிறார்களோ என்பதாக நினைத்துக் கொண்டான் ராஜ பாண்டி. ரெட்டை நாடிதான் வரதுவுக்கு என்றாலும் ஊளைச் சதை இல்லாதபடிக்கு, ஆரோக்கியமாகவே காணப்பட்டார் வரது. வயசு எப்படியும் எழுபதைத் தாண்டி இருக்குமே. தீட்சண்யமான கண்ணும், சுத்தமாக சவரம் பண்ணின முகமும், வெள்ளை வெளேரென்று கைவைத்த, பனியனுக்கும் சட்டைக்கும் இடைப்பட்ட தரத் தில் 'பாடி' மேலேயும், நல்ல தரத்திலான கதர் வேஷ்டியுமாக அவர் இருந்தார். செய்து, ஒட்ட

கால் பவுன் காசும்



வைத்தது போல மொழுக் மொழுக் விரலும், அதில் முடிச்சு முடிச்சாக முடியும் என்று எல்லாம் கனஜோராக இருந்தது, அவர் பிர சன்னம்.

வரது, தலையை அசைத்தபடி இருந்தார். வரலாற்றின் பக்கங்களைப் புரட்டுவது போல இருந்தது, அந்த அசைவு.

"ம்... எப்படிப்பட்டவர் உன் தகப்பனார்... இன்னொருத்தர் அவர் மாதிரி இருக்க முடியுமோ? ஜனிக்கத்தான் முடியுமோர்? அந்தக் குரல் என்ன? ஜிலுஜிலுப்பு என்ன? பந்தா என்ன? பிர்க்கா என்ன? இன்னொருத்தன் பிறந்து வரணும்டா ராஜபாண்டி..."

வரது கண்களை மூடிக் கொண்டார். மனோலயமாக, அந்தக் காலத்துக்கே பிரயாணம் ஆவது மாதிரி தோற்றம் கொண்டிருந்தார் அவர்.

"தஞ்சாவூர்ல, இப்போ கிருஷ்ணா பேலஸ் இருக்கோல்லியோ, அதுக்குப் பக்கத்துல. அந்தக் காலத்துல 'டெண்ட்' கொட்டாய் போடுவான். அங்கேதான் ஸ்பெஷல் நாடகம் போடுவான். பத்து நாள். பதினைஞ்சு நாள்கள், தொடர்ந்து நடக்கும். உங்கொப்பா, ராஜபார்ட். சந்தான லட்சுமி ஸ்திரீ பார்ட். மன்னார்குடி சோமு, நாரதர். செங்கோட்டை பால்சாமி ஹார் மோனியம். என்னங்கிறே. காஞ்சிபுரம் நைனா பிள்ளை, ராட்சசன்டா அவன், மகாவித்வான். முன்னாடி உக்காந்துட்டு, "கண்ணப்பா... சாமி சத்யபாமா பாரு, 'கோபியர் கொஞ்சும் ரமணா' பாடுன்னு கேட்டு, 'ஒன்ஸ்மோர்' கேட்டு, கைதட்டறது என்ன, பேஷ் பேஷ்ங்கறது என்ன, அடடா. நாடகமாவா இருந்துது? பெரிய சதஸ் மாதிரி இருக்குண்டா... அது ஒரு வார்ப்பு. அது ஒரு

பிரபஞ்சன்

ஜென்மம்...''

ராஜபாண்டி, தன் அப்பாவைப் பற்றித் தான் வரது பேசுகிறார் என்கிற பிரக்ஞை இன்றி, புருவம் உயர, வாய் பிளந்தபடி கேட்டுக் கொண்டிருந்தான். வாசல் படப்பு மேல் ஒரு காக்கை வந்து அமர்ந்து, சாவதானமாக தன் இறக்கையை நீவி விட்டுக் கொண்டிருந்தது.

வரது, 'நாராயணா' என்றார். நாராயணன் வந்து நின்றான்.

''காலை ஒன்பது மணி ஆகலை. அதுக்குள்ளே வெயிலைப் பார்... பட்டாணி வறுக்கிறது மாதிரி வறுக்கிறது பார்... நீ என்ன பண்றே? ரெண்டு லாடு, கொஞ்சம் பாதம்கீர், நிறைய ஐஸ் போட்டுக் கொண்டா'' என்றார் வரது.

நாராயணன், ராஜபாண்டியைப் பார்த்தான். 'இவனுக்குமா' என்பது போல் இருந்தது அவன் பார்வை.

ராஜபாண்டி, காக்கையையே இன்னும் பார்த்துக் கொண்டிருந்தான்.

''அவனுக்கும் குடிக்கக் கொடு.''

வரது, சம்மணம் போட்டு உட்கார்ந்து கொண்டார்.

''இந்த வெயிலுக்கு நுங்கு இருக்கில்லையா, நுங்கு, அதைப் பாலில் போட்டு, நல்லா ஊறவைக்கணும். கொஞ்சம் வெள்ளரிப் பழத் துண்டு, இம்மாம் போல போட்டு, நல்லா பிசைஞ்சு, நன்னாரி கொஞ்சம் விட்டு, ஐஸ் போட்டு, பிரிட்ஜ்ல வச்சு, சரியா, பத்து மணிக்கு ஒரு வாட்டி, பன்னெண்டு மணிக்கு ஒரு வாட்டி சாப்பிடணும். உடம்பு, ஊட்டியில இருக்கிற மாதிரி இருக்கும்டா.''

ராஜபாண்டிக்கு, வரது சொல்லுகிற விஷயம் எல்லாம், அதி ஆச்சர்யமான விஷயமாக இருந்தது. தன் புருவத்தை உயர்த்தி அவரை ரசித்தான். ரசிப்பது மாதிரி இருந்தான் என்பதே உண்மை.

வரது, ஒரு காலை மடக்கி, மறு காலைத் தொங்க விட்டுக் கொண்டு உட்கார்ந்தார். லாடும் பாதாம்கீரும் வந்தது. வரதுவுக்குப் பாதாம்கீரும், ராஜபாண்டிக்கு பானகம் போன்ற ஏதோ ஒன்றும். திரவமாகவே இருந்தது அது. சாப்பிடும் போது பேசக் கூடாது என்கிற கொள்கை உடையவர் போல, வரது உண்டு, குடித்து முடித்தார். சமையல்கார 'நாயின்' ஒர வஞ்சனையை மனசுக்குள் நொந்து கொண்டு ராஜபாண்டியும் குடித்து முடித்தான்.

''நான் என்ன சொல்றேன்னா, உடம்பை நல்லா வச்சுக்கிடணும். உங்க அப்பா, கடைசி வரைக்கும் எப்படி இருந்தார்? பித்தாளையில செஞ்சது மாதிரி அல்லவா உடம்பு. பீச்சாங் கையால ஐம்பது கர்லாவும், சோத்துக் கையால ஐம்பது கர்லாவும். தெனம் சுத்துவார். நூறு

அருள்வாக்கு

***அ**ஸம்சயம் மஹாபாஹோ மநோ துர்நிக்ரஹம் சலம்!*

''சலம்'' என்றால் சஞ்சலம்தான். சஞ்சலித்துக் கொண்டேயிருக்கும் மனஸை அடக்க முடியாதுதான். ''துர் நிக்ரஹம்'' - நிக்ரஹம் செய்வதற்கு முடியாது. ''அஸம்சயம்'' - இதிலே ஸந்தேஹமில்லை. ''அர்ஜுனா! (அர்ஜுனனை 'மஹாபாஹு' என்கிறார் மஹா வீரனாதலால் அவனுடைய தோள் வலியைக் குறிக்க 'மஹாபாஹு' என்று கூப்பிடுகிறார். வெளியுத்தத்தில் போலவே உள் யுத்தத்திலும் அவன் மஹா வீரன் ஆகணும் என்று தாத்பர்யம்.) ஸந்தேஹமில்லாமல் நீ

தண்டால் எடுக்காமே, பல்லில காப்பியைக் காட்டுவாரோ? இந்தக் கண்ணாலே நானே பார்த்து இருக்கேனே, பாய்ஸ் கம்பெனியில இருக்கிறச்சே! என்ன சுந்தரமான மனுஷன்? சும்மாவா, மானேஜர் சுப்பா நாயுடு உன் அப்பனையே சுத்திச் சுத்தி வந்தார். ஆம்பிளையையே மயக்குற தேகம் அல்லவா அவர் தேகம்? ஊம். அது ஒரு வாகு!''

வரது, வெற்றிலைச் செல்லத்தை அருகில் நகர்த்திக் கொண்டார். வெற்றிலைகளில் பத்தை எடுத்துக் கொண்டு, அவைகளில் ஒவ்வொன்றையும் துடையின் மேல் போட்ட துண்டின் மேல் துடைத்து, சிட்டைத் துண்டிலிருந்து நூலைப் பிரிப்பது மாதிரி, நரம்பைக் கிழித்து எறிந்து, சுண்ணாம்பை ஆள் காட்டி விரலில் தொட்டுக் கொண்டு அதை வெற்றிலையின் முதுகில் சுரண்டுவது போலத் தடவி, வாயில் இட்டு மென்று, முதல் சாற்றைத் துப்பி... என்கிற சம்பிரதாயங்களை நிரப்பிக் கொண்டிருந்தார் வரது. ராஜபாண்டி, வாது தன் அப்பாவைப் பற்றி ஏதானும் அசிங்கமாகப் பேசுகிறாரோ என்பதாக நினைத்துக் கொண்டு அமர்ந்திருந்தான். வரது, அவன் அப்பாவைப் பற்றி, நூற்றி ஒன்றாவது தடவையாகப் பேசிக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு முறையும், மேற்படி விஷயங்களையே சற்று ரசம் ஏற்றி, சற்று கிட்ட நெருங்கிப் போட்டோ பிடிக்கிறார்போல் சொல்கிறார், அவன் அவைகளை மீண்டும் மீண்டும் கேட்கிற நிர்ப்பந்தத்துக்கு ஆளாகிறான்.

''என்னடா சொன்னேன், ராஜபாண்டி! ஆள் மன்மதன்டா, மன்மதன். அதனாலதான் ரதி மாதிரி சரோஜா வந்து சேர்ந்தாள். உங்க அம்மாவைத்தான் சொல்றேன். அந்தக் காலத்

சொன்ன மாதிரிதான் மனஸ் சஞ்சலித்துக் கொண்டேயிருக் கிறது. அதை நிக்ஹரம் பண்ணு வது லேசில்லை தான்'' என்று, அவன் சொனனதற்கு ஆமாம் போட்டுவிட்டு, அதற்குப் பரிஹாரமும் சொல்கிறார்.



ரொம்பவும் முக்யமான விஷயத்தைச் சொல்கிறார்: "அப்யாஸம், வைராக்யம் என்ற இரண்டில் தீவிரமாயிருந்தாயானால் மனோ நிக்ரஹம் பண்ணிவிடலாம்'' என்கிறார்.

"எத்தனை திமிறினாலும், உன்னை திசை தப்பி எத்தனை தரம் இழுத்துக் கொண்டு போனாலும் ஸரி, அதற்காக மனஸைக் கட்டுப்படுத்த ப்ரயாஸை எடுக்காமல் விட்டு விடாதே. வெளியிலே ஓடுகிற அதை ஒவ்வொரு தரமும் மறுபடி உன் வழிக்கு இழுத்துக் கொண்டு வரப் பார். இப்படி விடா முயற்சியுடன் எதிர்த்துப் போராடிக் கொண்டேயிருந்தால், அது ஒரு நாள் அடங்கிப் பணிந்து போக ஆரம்பித்துவிடும். எதிடமும் ஆசைவைக்கப்படாது என்ற வைராக்ய சிந்தை, எத்தனை வழுக்கி விட்டாலும் ஊன்றி நிற்க அப்யாஸம் செய்து கொண்டே இருப்பது - ஆகிய இந்த இரண்டால் முடிவிலே ஒரு நாள் ஜயித்து விடலாம்'' - இப்படி பகவான் ஆறுதலாக பதில் சொல்கிறார்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

துல உங்க அப்பன் சினிமாவுக்கு வந்தப்புறம் தான் சரோஜாவைச் சந்திச்சார். என்னையும், உங்க அப்பா, "என்னத்துக்கடா டிராமா கம்பெனியில வடிச்சுக் கொட்டி வீணாப் போறே... என்னோட வந்துடு. ஜுபிடர் முதலாளிகிட்டே சொல்லி வேலை போட்டுத் தர்றேன்னு சொல்லி அழைச்சுப் போயி, வேலை பண்ணி வச்சாரோ, நான் பிழைச் சேனோ... புரடக்ஷன் பாய்னு தொடங்கி, அசிஸ்டெண்ட், மானேஜர்னு வளர்ந்து, வீடு, வாசல்னு, ஐவேஜி வந்து நானும் மனுஷனா யிட்டேன். என்ன சொன்னேன்? உங்க அம்மா அப்போ 'மாயாவதாரத்துல' ஆக்ட் கொடுத் துக்கிட்டு இருந்துச்சி. சுத்தமான வெண்கல சாரீரம். சுண்டினா ரத்தம் தெறிக்கிற நிறம். பவிசுக்குக் கேட்பானேன்... நிறைய முதலாளிக நான் நீன்னு போட்டி போட்டுக்கிட்டு வந்த நேரம். கண்ணா பிக்சர்ஸ் 'லெனா' கூட உங்க அம்மா மேல ஒரு கண் வச்சிருக்கார்னு தெரிஞ்சது. உங்க அம்மா சம்மதிக்கலை. அதைவிட உன் பாட்டி ஒத்துக்கலைன்னுதான் சொல்லணும்... எப்படியோ உங்க அம்மாவுக்கு, உங்கப்பா கண்ணப்பா மேல கண் விழுந் துடுச்சி. உங்க அம்மாவுக்கும் அப்பாவுக்கும் நான்தான் தூது. புறா. புரியலையா? நான்தான் கடுதாசி கொண்டு போயி குடுக்கறது, வாங் கறது. உங்க அப்பா ஒரு வாட்டிக்குக் கடுதாசி யும் கொடுத்து கால் ரூபாயும் கொடுப்பார். கால் ரூபாயனா, இப்போ மதிப்புக்கு ஏழு எட்டு ரூபாய். அந்தக் கால் ரூபாயிலே, போண்டா சாம்பார், ரெண்டு இட்லி, நுரைக்க நுரைக்க, டிகாக்ஷனைத் தூக்கலாக விட்ட காப்பி இத்தனையும் சாப்பிடலாம்னா பார்த் துக்கோயேன். கடுதாசிப் பொட்டலத்துக் குள்ளே மின்சாரத்தை வைத்துக் கட்டி என்னண்டைக் கொடுத்த மாதிரி, நான் மின்சாரக் கடத்தி மாதிரி. அதைக் கொண்டு போயி சரோஜாவண்டை கொடுத்தா, அந்த அம்மா மூஞ்சி குப்புன்னு விளக்குப் போட்ட மாதிரி எரியும் பார்த்துக்கோ... ஜெமினி, ஜுபிடர், மசியநாயகம் பிலிம்ஸ் எல்லாம் சேர்ந்து பிரமாதமா கல்யாணத்தைப் பண்ணி வச்சா... என்னா கல்யாணம்? சினிமான்னா முகத்தைத் திருப்பிக்கிற ராஜகோபாலாச்சாரி யார் வந்தார்னா பாரேன். என்னெஸ்கிருஷ் ணன் என்ன, காளிரத்னம் என்ன, வசந்த கோகிலம் என்ன, பாகவதர் என்ன, நட்சத்தி ரங்கள் எல்லாம் ஒரு கூரைக்குள்ளே வந்தாச்சு. சமையல், நம்ம வெங்கு பையன். ராஜாக்கள் வீட்டுக் கல்யாணத்துக்குச் சமையல் பண்ற கை. சாப்பாடு எப்படிங்கறே, அமிர்தம். என் னத்தைச் சொல்றது?''

வரது, நெற்றிக்குக் கீழே, இரு புருவச் சந்திப்புக்கும் கீழே இறங்கி, பம்மென்று பருத்து, முட்டை வடிவில் சதையால் பண்ணி வைத்தது போன்ற மூக்கை, விகாரமாகத் துடைத்துக் கொண்டு, அதிதமாக சிவந்து போகும்படியாகச் செய்து கொண்டு சொன்னார்.

"ஏன், உன் கல்யாணம் மட்டும் எப்படி? ஒவ்வொரு கல்யாணப் பத்திரிகையோடயும், கால் பவுன் காசு கொடுத்து கல்யாணம் அழைச் சது யார்? உங்க அப்பா! அடடா. என்ன உதார குணம்? நான் பார்த்தேனே! இந்த இரண்டு கண் ணாலும் பார்த்தேன். அழைப்பு வாங்கிட்டவர் கள் கை, பலருக்கும் இப்படி நடுங்கியதை நான் கண்டேனே. தெருவில் போகிறவரை கை தட்டிக் கூப்பிட்டு, இந்தா பிடி கால் பவுன்

என்றால் எப்படி இருக்கும், அது மாதிரிதான்.. பல்லி முட்டை மிட்டாய்னு குழந்தைகள் சொல்லுமே... அது மாதிரி கால் பவுன் காசுகள், உங்க வீட்டுலே குவிஞ்சிருந்ததை நான் கண்டேனே... உன் தோப்பனாரை விடவும் பணக்காரர்கள் நிறைய பேர் இருக்காங்கதான். ஆனா, எத்தனை பேருக்குக் கொடுக்கணும்னு தோணும். அதுதான் விஷயம்."

வாசல் படப்பைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தாள், ஒரு கூடைக்காரி. வரது, 'நாராயணா' என்றார். க்ஷணத்தில் கையில் பிளாஸ்டிக் கூடையுடன் ஆஜர் ஆனான் அவன். என்ன 'சுருக்கு சுருக்காக'க் காரியம் நடக்கிறது என்று வியந்து கொண்டான், ராஜபாண்டி.

வரது எட்டிக் கூடையைப் பார்த்தார். வாழைத் தண்டும், மீதி பாகலும்.

"வாழைத்தண்டை, நல்லா சன்னமா நறுக்கி, தேங்காப்பூ போட்டு கூட்டு பண்ணிடு நாராயணா! பாகலை, பொன்வறுவலா வறுத்துடு. பாகலோடு, நாட்டு நெல்லிக்காய் இருந்தா,



நீதிபதி: நீங்க அவரை ஆள் வச்சு அடிச்சீங்களாமே, ஏன்?

குற்றவாளி: எனக்கோ வயசாயிடுச்சு. முடியலீங்க. அதனாலேதான்!

- சிரிசிரிமுரளி

அதையும் நாலு போட்டு வறுத்துடு. ரொம்ப நல்லா இருக்கும். என்ன குழம்பு?"

"மொச்சைக் குழம்புங்க ஐயா."

"பேஷ். பண்ணு. ராஜபாண்டி, இந்த வாழைத் தண்டுக்கு என்ன குணம் தெரியுமோ? மூத்திரப் பையில இருக்கிற கல்லையே கரைச்சுடும்! ரொம்ப வீரியமான வஸ்து. வாரத்துக்கு ஒரு வாட்டி, வாழைத்தண்டு, வாழைப்பூ சாப்பாட்டுல சேர்த்துக்கோ. ஒன்னுக்கிருந்தா, ரொம்ப சுகமா இருக்கும்."

கூடைக்காரி, வெட்கத்துடன் சிரித்தாள்.

"என்ன சிரிப்பு, நான் சொல்றது என்ன பொய்யா?"

நாராயணன் வந்து, கூடைக்காரியிடம் நூறு ரூபாய் நோட்டை நீட்டினான்.

"ஐயோ.. காலங்கார்த்தாலே நூறு ரூபாய் நோட்டுக்கு என்கிட்டே ஏது சாமி சில்லறை?"

"சில்லறையா கொடுடா."

"சில்லறையே இல்லீங்க, ஐயா."

"பரவாயில்லை. நான் நாளைக்கு வாங்கிக்கறேன்" என்றாள் கூடைக்காரி.

"சரி. நாளைக்கு வரச்சே, தூதுவளைக் கீரை இருந்தா கொண்டா, பெண்ணே."

"ஆவட்டும். சாமி."

கூடைக்காரி புறப்பட்டாள்.

"ரொம்ப ரொம்ப பிரமாதமா சமைக்கும் உங்க அம்மா. நான் ஆயிரம் முறை அண்ணி கையால சாப்பிட்டிருக்கேனே.. கல்யாணத்துக்கு அப்புறம், சினிமாவை விட்டாச்சு. வீட்டுல என்ன வேலை? புதுசு புதுசா உடுத்தறது, பவிசு பவிசா சமைக்கிறது பொம்மனாட்டிக்கு அது போதும்னுட்டார் உங்க அப்பா..." என்றவர், "நாராயணா" என்று சப்தம் போட்டுக் கூப்பிட்டார். அவன் வந்து நின்றான்.

"இன்னிக்கு என்ன கீரை?"

"தண்டுக் கீரைங்க"

"ரெண்டு பல் பூண்டு போட்டு நல்லா ஒட்டுகிறா மாதிரி கடைஞ்சுடு. ஒரு முட்டை எண்ணெய் விட்டு, நாலு உளுத்தம் பருப்பு, கடுகு போட்டு தாளிச்சுடு. என்ன விதரணை, உங்க அப்பாவுக்குத்தான். திருவல்லிக்கேணியில மட்டும், இருபத்தி நாலு வீடு இருந்துச் சுன்னா பார்த்துக்கோ... அல்லாத்தையும், ஒரு படம் எடுத்துத் தொலைச்சுத் தலை முழுகினார்... எல்லாம் விதி. பதிபக்தின்னு ஒரு படம். நான் தான், அந்தப் படத்தோட புரடெக்ஷன் மானேஜர். நல்லா, எட்டு கண்ணும் விட்டு எறிகிற மாதிரி இருந்தவரை, 'படம் எடு படம் எடுன்'னு குழி வெட்டிக் குப்புறத் தள்ளினான், மானா வெட்டி. ஒன்னாம் நம்பர் கேப்மாரி. முடிச்சவிழ்க்கி. குட்டிகளை வச்சுக்கிட்டு டாபர் மாமா வேலை பண்ணிட்டு இருந்த கசட்டு பேமானி. அவன்ட்ட மாட்டினார், உங்க அப்பா. நான் சொல்ல முடியுமோ. நானோ எடுபிடி. சும்மா இருடா நாயின்னு சொல்லுவாரோ, மாட்டாரோ?"

"................"

"வாயுத் தொல்லை தாங்கலை."

- எழுந்து உள்ளே போனார், வரது.

வேலித் தடுப்பில், ஒரு ஓணான், சிவந்த தலையுடன் வந்து நின்றது. 'ஓகோ' என்று மேலும் கீழுமாகத் தலையை அசைத்தது.

ராஜபாண்டி, அதையே வெறித்துப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான். அதையும் தாண்டி அவன் பார்வை வெறித்தது. வெயில், வெள்ளையாக சுருள் சுருளாக, தோசைப் பொட்டலம் மாதிரி சுருங்குவது மாதிரி தோன்றியது. மண், மின்னியது. கறிவேப்பிலைக் கிளையில் அமர்ந்திருந்த சிட்டு, 'கிச்கிச்' என்றது.

வரது திரும்பி வந்தார். கால், நனைந்து இருந்தது. இரண்டு பாதங்களையும் சேர்த்துத் தட்டி, மண்ணை உதிர்த்து விட்டு, சம்மணம் போட்டு உட்கார்ந்து கொண்டார்.

"வீடுகள் போச்சு... நகைகள் போச்சு... பணம் போச்சு... போகாதது மானம் மாத்திரம்

தான். ஒரு நாய்க்கு, ஒத்தைப் பைசா பாக்கின்னு ஒரு கழுதைப் பயலும் சொல்ல முடியுமோ? எனக்கே, வீடு தேடி வந்து 'இந்தாடா உன் சம்பளம்'னார். 'அண்ணே, இந்தக் கஷ்டத்துல எனக்கென்ன அவசரம்?'னேன். 'தொழில் சுத்தம் வேண்டும்டா'ன்னார். போகையிலே, வாடகைக் கார்லே போனார். எத்தனை கார் வச்சிருந்தார். படகு மாதிரி, நடிகர்கள்லே முதல் முறையா 'பிளைமவுத்' வாங்கியவர்டா உங்க அப்பா... எல்லாருக்கும் நியாயம் பண்ணவர், உனக்கு மட்டும் நியாயம் பண்ணலை.''

நிமிர்ந்து அவரைப் பார்த்தான் ராஜ பாண்டி.

''புரியலையா? நாலு எழுத்து படிக்க வைச்சிருக்கலாம். உன்னை ரெண்டாம் க்ளாஸ்லேயே படிப்பை நிறுத்தி, தன்னோட வச்சுக்கிட்டாரே, அதைத்தான் சொல்றேன். படிச்சு என்ன ஆகப் போகுதுன்னார். இருக்கிற சொத்தைக் கவனிச்சுக்கிட்டா போதும்னார். இருக்கிறதை அவரே அழிச்சார். பொண்டாட்டியைச் சோத்துக்கு அலைய விட்டுட்டு, ஒரே பிள்ளைக்கும், ஒன்றும் பண்ணாமே போய்ச் சேர்ந்தார்... எல்லாம் விதி.. நேற்று, ரேடியோவில 'சாகசம்' பாட்டு வச்சான். கண்ணுல ஜலம் வந்துடுச்சு... யாரை நோகறது சொல்லு...''

வரது, தரையைப் பார்த்தபடி இருந்தார். தரையைக் கண்ணாலேயே தோண்டி, கண்ணப்பாவின் புதைந்து போன வாழ்க்கையைக் கையில் எடுக்கிறது போல இருந்தார்.

வீட்டுக்குள்ளே இருந்து தாளிக்கும் மணம் ராஜ பாண்டி நாசிக்கு வந்து சேர்ந்தது. அவன் பசியை மேலும் உக்ரமூட்டியது. வரது சொன்னது எல்லாம் அவனுக்கும் தெரிந்த கதைதான். பழைய படத்தை இரண்டாம் முறையாகப் பார்க்கிறது மாதிரி தான், வரது சொன்னது. என்ன பண்ண, கேட்க வேண்டி இருக்கிறதே...

''கடைசியா உங்க அம்மாவை 'மானா' வீட்டுல வச்சி பார்த்தேன். சமையல்காரப் பெண்ணா. என் மனசு உடைஞ்சு போச்சுடா ராஜபாண்டி.''

அவர் அமைதியாக இருந்து விட்டுச் சொன்னார்.

"எல்லாம் விதிடாப்பா விதி. நதி, எந்தத் தடத்துல ஓடணும்னு விதிச்சாச்சு... அதுல தான் ஓடும்... கேவலம் மனுஷ ஜென்மம் என்ன பண்ண முடியும்..."

விடை கண்டுபிடிக்க முடியாத சர்வ கேள்விகளுக்கும் கண்டுபிடிக்கப்பட்ட ஒரே பதிலைச் சொல்லி சமாதானம் செய்து கொள்ள முயன்றார், வரது.

''போகட்டும்... நீ எப்படி இருக்கே?''

உயிர் வந்தவன் போல ராஜபாண்டியன் சொன்னான்.

''வீட்டுக்காரிக்கு நாலு நாளா உடம்புக்குச் சுகம் இல்லை, அண்ணா. அது விஷயமாத்தான் வந்தேன். ஒரு அம்பது ரூபா அவசரமா வேணும்...''

எசகு பிசகாக நாராயணன் தோன்றி, "இலை போட்டாச்சு" என்றான்.

அவனைக் கொன்றால் தப்பு இல்லை என்று நினைத்துக் கொண்டான் ராஜபாண்டி.

''எங்கேடா...? காலைலே இருந்து சில்லறைக்கு அல்லாடறோமே, தெரியல்லை? இன்னொரு நாளைக்குப் பார்ப்போம்...''

வரது, மரத்துப் போன கால்களை உதறிக் கொண்டார். பிறகு, சாவகாசமாக உள்ளே போனார். நாராயணன், இவனைப் பார்த்து விட்டு, உள்ளே சென்று கதவைச் சாத்திக் கொண்டான்.

ராஜபாண்டியன், தெருவுக்கு வந்தான். வேலித் தடுப்பில், இன்னும் அந்த ஓணான் இருந்தது. இவனைப் பார்த்துத் தலையை அசைத்தது.



''பி.ஜே.பி.யை வலுவிழக்கச் செய்ய அந்த காங்கிரஸ்காரரிடம் ஐடியா கேட்டேன்...''

''என்ன ஐடியா சொல்றார்?''

''நரசிம்மராவை பி.ஜே.பி. தலைவரா போடச் சொல்றாரு!''

பாஸு



''நம்ம தலைவர் எப்பவும் முன் எச்சரிக்கை உணர்வா செயல்படுவார்ங்கறது ரொம்ப சரியாப்போச்சுங்க...''

''எப்படிச் சொல்றீங்க...?''

''இப்பவே கட்டம்போட்ட டவுசரும், அரைக்கை சட்டையும்; தொப்பியும் போட்டுக்கிட்டு, 'களி' சாப்பிட ஆரம்பிச்சிட்டாரே...''

– ஆர்.பி.செல்வம்

உழல் ஒலிம்பிக்ஸில் இத்தாலி

ஊழல் நிர்வாகத்தில் உலகின் எந்த நாடும் இத்தாலியிடம் பிச்சை வாங்க வேண்டும். அப்படி ஒரு 'நல்ல பேர்' எப்போதும் இத்தாலிக்கு உண்டு.

முதியோர் இல்லங்களைச் சுத்தப்படுத்த ஒரு காண்ட்ராக்ட். இதில் ஓர் ஆளுங்கட்சி (சோஷலிஸ்ட் கட்சி) உறுப்பினர் பெரிய தொகையைச் சுருட்டிக் கொண்டதாகப் பிடிபட்டார். அப்போது வெளிவர ஆரம்பித்தது இத்தாலி நாட்டின் ஊழல் மகாத்மியம். இது நடந்தது 1992 பிப்ரவரியில்! இன்னும் தொடர்கிறது.

சும்மா சொல்லக் கூடாது, பதவிப் பேதமின்றி அமைச்சர்கள், எம்.பி.க்கள், பிரதமர்கள்- ஏன் நீதிபதிகள்கூட அங்கே 'மிஸ்டர் க்ளீன்' என்ற பட்டத்தை விரும்புவதில்லை.

ரோம், நேபிள்ஸ் போன்ற நகரங்களில் 'தாதா'க்களுக்குச் சில நீதிபதிகளே கருணை காட்டுவதாகவும் செய்திகள் வெளியாயின. அந்த நாட்டு சுப்ரீம் கோர்ட் எட்டு நீதிபதி மீது விசாரணைகூட மேற்கொண்டது!

புகழ் பெற்ற செனட்டர் அன்ட்ரியோட்டி (74 வயது), ஏழு தடவை பிரதமராக இருந்த பெட்டினோ கிராக்ஸி ஆகியோரும் ஊழல் புரிவதில் 'டாக்டர்' பட்டம் வாங்கியவர்களே!

அரசியல்வாதிகள், வர்த்தகப் பெரும்புள்ளிகள், தொழிலதிபர்கள், அரசு உயர் அதிகாரிகள் அனைவரையும் உள்ளடக்கிய 2500 பேர் மீது சந்தேகம். அவர்களில் 1356 பேர் கைது. 1116 பேருக்கு வர்ரண்டு அனுப்பப்பட்டிருக்கிறது. மொத்தம் மூன்று லட்சத்துப் பதினையாயிரம் கோடி ரூபாய் ஊழல் பணமாக அங்குமிங்கும் உதைபட்டுக் கொண்டிருக்கிறது. இது இத்தாலியைப் பற்றிய 'பெருமை'க்குரிய புள்ளி விவரம்.

இன்னொரு விஷயத்திலும் இத்தாலிக்குத்தான் முதற்பரிசு. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னால் இதுவரை ஐம்பத்து நான்கு அரசாங்கங்கள் அங்கு வந்து போய்விட்டன! ஓர் அரசின் ஆயுட்காலம் சராசரியாக பதினொரு மாதங்கள்தான். இவ்வளவு இருந்தும் இத்தாலி ஐரோப்பிய நாடுகளில் மிகவும் செல்வந்த நாடுகளோடு ஒப்பிடும் வகையிலேயே வளர்ச்சி கண்டு வருகிறது.

தற்சமயம் இந்த ஊழலை எல்லாம் ஒடுக்கவும் ஒழிக்கவும் பூனைக்கு யாராவது மணி கட்டியே தீர வேண்டும் என்ற எண்ணம் நாடு முழுவதும் மக்களிடையே பூதாகரமாக வளர்ந்திருக்கிறது.

ரோமனோ புரோடி இப்போதைய பிரதமர். 56 வயது. கட்சிகள் விவஸ்தையின்றி ஒன்றோடொன்று கூட்டுச் சேர்வது என்பது இத்தாலியில் சர்வ சாதாரணம்!

புரோடி கொஞ்சம் நம்பிக்கை அளிப்பவராகத் தென்படுகிறார். அவரால் மட்டும் என்ன பெரிதாகச் செய்து விட முடியும் என்ற கேள்வியும் கூடவே.

அங்கேயும் வடக்கு வாழ்கிறது - தெற்கு தேய்கிறது கதைதான்.

நார்தர்ன் லீக் என்பது ஒரு பிரிவினைவாதக் கட்சி. செல்வ வளம் மிகுந்த வடஇத்தாலி தனியாகப் போய்விட வேண்டும். நோஞ்சான் தெற்கு எப்படியாவது பிழைத்துக் கொள்ளட்டும் என்பது அந்த லீக் தலைவர் லம்பார்டோ போஸின் வாதம்.

இதையெல்லாம் புரோடி சமாளிக்க வேண்டும். ஐரோப்பாவிலேயே அதிக வரி விகிதம் இருப்பது இத்தாலியில் தான். இதையும் மாற்றி அமைக்க வேண்டும். இத்தாலியின் தேசிய பொழுதுபோக்கு என்னவாம் தெரியுமா? வரி ஏய்ப்பது!

புரோடியின் முன்னால் பல சவால்கள். உடனடியாகச் சிலர் கோதாவில் இறங்கியாக வேண்டும். இல்லாவிட்டால் இருக்கவே இருக்கிறது, 56-வது அரசாங்கம்...!

— ராணி மைந்தன்



அந்தப் புல்வெளித் தளத்தின் புல்லரிக்கும் வெற்றி இவருக்கு எட்டாக் கனியாகவே இருந்தது. தொடக்க சுற்றுகளில் இம்முறை இவர் மேக்கேல் ஸ்டிச்சை தோற்கடித்தபோதுதான் விமர்சகர்கள் 'அட!' என்று கவனிக்க ஆரம்பித்தார்கள்.

அதற்கு முன் இவர் கவனத்தைக் கவர்ந்தது வேறு காரணத்துக்காக! டென்னிஸ் வீராங்கனைகளை இவர், ''சோம்பேறி குண்டு பன்றிகள்!'' என்று அழைத்து வாங்கிக் கட்டிக் கொண்டார்!

சில வருடங்களுக்கு முன் நடந்த இச்சம்பவத்தை மறக்காததாலோ என்னவோ விம்பிள்டன் இறுதிப் போட்டியின்போது பார்வையாளர்களின் ஒட்டு மொத்த ஆதரவும் அமெரிக்கரான மாலிவாய் வாஷிங்டனுக்கே கிடைத்தது.

ஆனால் இதெல்லாம் கிராஜிஸெக்கை பாதிக்கவில்லை. புல்டோஸர் மாதிரி ஆடி ஜெயித்து விட்டார். ''வெற்றி பெற்ற கணத்தில் எனக்கு சந்தேகம் வந்தது. 'ஐயோ! இப்படி குதூகலிக்கிறேனே, நிஜமாகவே ஜெயித்து விட்டேனா அல்லது முட்டாள் மாதிரி கற்பனை செய்து கொண்டிருக்கிறேனோ..?' என்று...'' நம்ப முடியாமல் இன்ப அதிர்ச்சியில் பேசினார் கிராஜிஸெக்.

— ஜி.எஸ்.எஸ்.

சஹஸ்ர நாமங்களுக்கு என்ன ஒரு விசேஷமென்றால் அவை அனைத்துமே வேதத்திலே மந்திரங்களாக அமைந்திருக்கின்றன.

மந்திரம் என்று எடுத்துக் கொண்டோமேயானால், பல வகையான நிர்ப்பந்தங்கள். 'இப்படியிப்படித்தான் சொல்ல வேண்டும்' என்று நியமமுண்டு. சுவரம் மாற்றிச் சொன்னோமேயானால் அனர்த்தங்கள் ஏற்படும். எந்த சப்தத்தை அபஸ்வரமாகச் சொல்கிறோமோ அந்த சப்தமே வஜ்ராயுதமாக மாறி, சொன்னவரை அடிக்கிறது; கேட்டவரை ஹிம்சை பண்ணுகிறது!

ஒரு மந்திரத்தை சுவரம் மாற்றி உச்சரிப்பது பொய்யான வார்த்தை சொன்னதற்குச் சமமாகும்!

துவஷ்டா என்று ஒருவன் இருந்தான். குழந்தை வேண்டி, புத்ர காமேஷ்டி யாகம் பண்ண நினைத்தான். அமராவதி பட்டணத்திலேயே வைத்து இந்திரனை ஜெயிக்கக்கூடிய புதல்வன் வேண்டும் என்று அவன் விரும்பினான். அதற்குரிய யாகத்தை நடத்தித் தரச் சொல்லி புரோகிதரிடத்திலே கேட்டான்.

''மனத்திலே இந்த மாதிரி கோரிக்கையுடன் பண்ணக்கூடிய யக்ஞத்துக்கு, கர்த்தாவான நீயேதான் மந்திரத்தைச் சொல்லணும். புரோகிதனான நான் சொல்ல, நீ கேட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தால் பிரயோஜனமில்லை. முதலில் அந்த மந்திரத்தை அத்யயனம் பண்ணிவிடு....'' என்றார் புரோகிதர்.

''இப்போது நான் எப்படி மந்திரம் கற்றுக் கொள்வது. நீங்கள் யக்ஞத்தை ஆரம்பித்து விடுங்கள். அவ்வப்போது தேவையானதைக் கற்றுக் கொண்டு சொல்கிறேன்...'' என்றான் அவன்.

அவன் ரொம்பவும் நிர்பந்தித்ததால், வேறு வழியில்லாமல் புரோகிதர் யாகத்தை ஆரம்பித்தார். துவஷ்டா, சரியாக அத்யயனம் பண்ணாமல், சுவரம் மாற்றி மந்திரத்தை உச்சாரணம் செய்தான்.

சுவரம் மாறிப் போனதினாலே, 'இந்திரனை வீழ்த்தக்கூடிய பிள்ளை' என்பது, 'இந்திரனால் வீழ்த்தப்படக்கூடிய பிள்ளை' என்று பொருள் மாறி ஒலித்தது.

அந்த யக்ஞத்தின் முடிவிலே விருத்திராசுரன் என்ற அசுரன் உண்டாகினான். அந்த விருத்திராசுரனை இந்திரன் தன் வஜ்ராயுதத்தினாலே கண்ட துண்டமாய் வெட்டி வீழ்த்தினான்!

அக்ஷரங்களைப் போலே சுவரங்களுக்குக் கூட அர்த்தம் உண்டு என்பதற்காக இக்கதையைச் சொன்னேன். தினம் தினம் ஒருவர் ஒரு கிரஹத்துக்குப் போகிறார். 'வாங்கோ!' என்று அவரை அழைக்கும் தொனியிலேயே அது 'வாங்கோ' வா, 'போங்கோ'வா என்று அர்த்தமாகிறதில்லையா–'' அது போல்தான்! லௌகிகத்தில் அர்த்தம் மாறுகிற மாதிரி வேதத்திலேயும் மாறுகிறது.

இவ்வளவு கடினமான வேதத்தை எல்லாரும் தரிக்க முடியுமா..? முடியாது என்பதால்தான் வேத வான்மயமான சஹஸ்ரநாமத்தைச் செய்திருக்கிறது. வேதம் போல, இவ்வளவு சுவர அமைப்போடு அதைச் சொல்லணுமா? என்றால், சொல்ல வேண்டியதில்லை.

பீஷ்மர் வாக்கிலே வந்த சஹஸ்ரநாமம் சுலபமாய் உச்சாரணம் பண்ணக்கூடியது.

(தொடரும்)

நான் மிருகமல்ல...

''நான் மிருகமல்ல... ஏனென்றால் எனக்கு காக்கை போல் பகிர்ந்துண்ணத் தெரியாது... ஏனென்றால் எனக்கு எறும்பு போல் சேமிக்கத் தெரியாது. ஏனென்றால் எனக்கு நாய் போல் நன்றி கொள்ளத் தெரியாது... ஏனென்றால் எனக்கு காளை போல் உடல் வருத்தி உழைக்கத் தெரியாது. ஏனென்றால் எனக்கு புலியைப் போல் பசிக்காக மட்டும் புலாலுண்ணத் தெரியாது. ஏனென்றால் எனக்கு மற்றவை போல் வம்ச விருத்திக்காக மட்டுமே உறவு கொள்ளத் தெரியாது.

இரண்டு கால்களிலும் பெரிய கட்டு போடப் பட்,டு இன்று எட்டாவது நாளாய் படுத்த நிலையில் இருக்கிறேன். ஆடுசதை இரண்டும் கிழிந்து தொங்கியதால் அளப்பரிய ரத்தம் வெளியேறியிருந்தது. தொடையிலிருந்து சிறிது சதையைப் பிய்த்து ஆடுசதையில் வைத்துத் தைத்திருந்தார்கள்.

தனியார் நிறுவனமொன்றில் ஷியரிங் மிஷின் ஆபரேட்டராக வேலை பார்க்கும் நான், ஒருநாள் மூன்று எம்.எம். ஷீட்டை ஷியரிங் மிஷினில் வைத்து அறுத்துக் கொண்டிருந்த போது எனது இடது கைப்பிடி லேசாய் ஷீட்டைத் தவற விட.. அந்த இரும்பினாலான தட்டி அழகாய் என் ஆடுசதையைக் கிழித்துக் கொண்டு தரையிறங்கியது.

அபரிமிதமான ரத்தம் வெளியேறியதையும்... நாபிக் குழியிலிருந்து ஓங்கிக் குரலெழுப்பிய நான், அந்த நொடியிலேயே மூர்ச்சையானதையும்... அதன் பின் நடந்த மருத்துவ சிகிச்சை

நந்தன்

யையும், நேற்று நினைவு திரும்பிய போதுதான் தெரிந்து கொண்டேன்.

யாரோ கதவு திறக்கும் அரவம் கேட்டு வேகமாய்த் திரும்பியதில் தொங்கிக் கொண்டிருந்த கால்கள் ஒன்றோடொன்று உரசி, வலி உச்சி மண்டையைத் தாக்கியது. வலியின் வீர்யத்தை விழுங்கத் திராணியின்றி இமைகளின் இடுக்கிலிருந்து ஆறாய் நீர் வழிய, சோகமான முனகலுடன் திரும்பவும் மல்லாந்து கொண்டேன்.

கட்டிலின் அருகில் வந்து என் நெஞ்சில் பூவாய் வருடி இதம் தந்தான் என் நண்பன் ராமலிங்கன். என் பரிதாப நிலைக்கு இரங்கியவன் சிறிது நேரம் அளவளாவி விட்டு என் கையில் ஒரு புத்தகத்தைக் கொடுத்தான். புத்தகத்தை மேலோட்டமாய்ப் புரட்டிய போது அதன் வரிகள் என்னை வெட்கம் கொள்ளச் செய்தன.

புத்தகத்தின் வரிகள் என் பழைய நினைவுகளை வருடின.

சென்ற மாதம் புளியஞ்சோலைக்கு டூர் சென்றிருந்தோம். இரண்டு நாட்கள் முன்பு அறுத்துப் போட்ட பாக்டீரியாக்கள் மொய்த்த ஆட்டுச் சதை கொரிப்பதை விடுத்து, ஒரு குட்டி ஆட்டையே கொண்டு போய்... கறி சமைத்துத் தின்னலாம் என்ற முடிவோடு சென்றிருந்தோம்.

கால்கள் கட்டுண்ட ஆட்டுக்குட்டி விழிகள் வெளிப் பிதுங்கிய நிலையில் யமஹாவின் பின் சீட்டில் பயணித்து, புளியஞ்சோலை வந்தபின், இயற்கை வளங்களையும் அங்கு பெண் குட்டிகளாய் முகிழ்த்திருந்த செயற்கை வளங்களையும் ரசித்து விட்டு ஆட்டுக் குட்டியை அறுக்க உட்கார்ந்தோம்.


கத்தியின் கூர்முனை பட்டதும் தன் நான்கு கால்களை பரப்பித் தாவி ஓட யத்தனித்தது ஆட்டுக்குட்டி. கோபாலனின் கோரப் பிடியின் அழுத்தம் கால்களின் இயக்கத்தைத் தடை செய்தமையால் அதன் இயலாமை ஓலமாய் வெளி வந்தது.

குட்டி தலையைக் கீழே சாய்த்த போது என் நண்பன் ராமலிங்கனின் முகம் வெளிறிப் போயிருந்தது.

''என்ன மச்சி... ஆச்சி ஒரு மாதிரி ஆயிடுச்சி...?'' என்றான் கோபாலன்.

இப்படித்தான் நாங்கள் ராமலிங்கனை அழைப்போம். அடிக்கடி ஏதாவது பேத்திக் கொண்டிருப்பான். காரைக் காலம்மையாரையும் பரவை நாச்சியாரையும் பற்றிப் பேசி வறுத்தெடுப்பான். அதனால் அவனுக்கு செல்லமாய் நாங்கள் சூட்டிய பெயர் ராமலிங்க ஆச்சியார். எங்கள் குழுவில் அடிக்கடி வாய் கொடுத்து மாட்டிக் கொள்ளும் அவனை காய்ச்சி வடித்து விடுவோம்.

“டேய் சுந்தா... இன்னொரு ஜீவனைக் கொல் றதுக்கு உனக்கு உரிமையிருக்குன்னு நெனைக் கிறியாடா...?'' என்றான் ஆச்சி.



அவ்வளவுதான். எல்லோரும் அவனைப் பிலுபிலுவென்று பிடித் துக் கொண்டோம். அவன் வாயைக் கிளறி வேடிக்கை பார்ப்பதே தனி சுகம்.

"டேய் மாத்யூ... ஆச்சிக்கு மூடு வந்திடுச்சிடா. இப்ப ஒரு வில்லி பாரதத் தொடர் சொற்பொழிவு நிகழ்த்தும் பாரேன்," என்றான் கோபாலன்.

"ஏய்... மைக்கை இப்படிக் கொண்டா... ஆச்சி அடிகளாரிடம் காமி... கைக்கு அணைவா ஒரு டேபிளைப் போடு... நமப் பார்வதீ பதயே...!"

"ஹர ஹர மஹாதேவா..." என்று ஓலமிட்டது கும்பல். கோரஸாய் குரலெழும்பியவுடன் இடிச் சிரிப்பு எங்களுள் புரண்டது.

"மச்சி... பாகவதர் நா இப்ப அறிமுகப்படுத் திடறேன். சிங்கப்பூர், மலேஷியா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு சொற்பொழிவாற்றச் சென்று, பிறகு அதிகமான வயிற்றுக் கடுப்பால் சொற்பொழிவைத் தொடர முடியாமல் பாதி யிலேயே இந்தியா திரும் பிய ராமலிங்க ஆச்சியார் இப்போது பேசுவார்..." - இது ரகு.

கெக்கலிச் சிரிப்பு விண்ணை முட்டியது.

ராமலிங்கனுக்கு எதுவுமே காதில் விழவில்லை. ஆட்டுக்குட்டியின் சாவு அவனை ரொம்பவும் விசனப் படுத்தி விட்டது போலும். ஏதோ தனக்குள்ளே முணு முணுத்தான்.

"டேய் கூமுட்டை... என்னடா ஏதோ நீயே முணு முணுத்துக்கறே. சத்தமா சொல்லுடா. நாங்களும் அருள்பெற வேண்டாமா...?"

"ஓய் என்னப்பா நீ, ஆச்சியாரைப் போய் கூமுட்டை அது இதுன்ற! ஒரு மருவாதி வேணாம்...?"

"யப்பா கூமுட்டைன்னா என்னன்னு தெரியுமா... உள்ளாற மஞ்சக்கரு இல் லாத முட்டைய கூமுட் டைன்னுவாங்க. அதா வது உள்ளாற ஒண் ணுமேயில்லாத ஆளு... அதாவது

மூளையில்லாத ஆளு கூமுட்டை, புரியுதா...''


“அப்...ப நீ, நம்ப ஆச்சியாருக்கு உள்ளாற ஒண்ணுமில்லங்குறியா...?''

“ச்ச... ச்ச... நம்ம ஆச்சியாரைப் போய் அப் படிச் சொல்லுவேனா...? நம்ப ஆச்சி கூமுட்டை கெடையாதுப்பா... ஏன்னா, அவ ருக்கு உள்ளாறயும் ஒண்ணுங் கெடயாது, வெளியயும்...'' மூர்த்தி முடிக்குமுன் சிரிப்பு வெடிகள் சடசடத்தன.

“தன்னூண் பெருக்கத்தான் பிறிது ஊனுண் பான் எங்கனம் ஆளும் அருள்?'' என்று சத்த மாகவே முணுமுணுத்தான் ராம லிங்கன்.

“ஐயா... நீங்க உருது மொழில பேசினாக்க இந்தப் பாமரனுக்கு எப்புடிங்க புரியும்... கொஞ்சம் தமிழ்லயே சொல்லுங்க புலவரே.''

ராமலிங்கன் அமைதியாகவே



“மூப்பனார் தேசத்து ராஜா!”

தஞ்சைக்கு வரும் வட நாட்டு சாதுக்கள்– பிரமுகர்களை, மூப்பனார் குடும்பம், அன்போடு வரவேற்று உபசரித்துப் பேரும் புகழும் ஈட்டியி ருந்தது. இந் நிலையில் சரபோஜி மகாராஜா, தமது பரிவாரங்களுடன் காசியாத்திரை செய் தார். போகும் வழியெல்லாம் மக்கள், என்ன பேசிக் கொண்டார்கள் தெரியுமா? ‘‘இதோ இவர்தான் மூப்பனார் தேசத்து ராஜா!'' என்று சரபோஜியை சுட்டிக் காட்டி பேசிக் கொண்டார்களாம். தமது குடி மகனுக்கு இருக்கும் புகழ் தமக்கு இல் லையே என்று வெட்கிய சரபோஜி, தஞ்சை திரும்பியதும் நிறைய அறப் பணியில் ஈடுபட்டார்.!

ஆதாரம் : உ.வே. சாமிநாதய்யர் எழுதிய ‘‘நினைவு மஞ்சரி''

தகவல் : ஆர்.எஸ்.ராவ்

சொன்னான். “ஸீ... மனுஷன், நெறய மிஷின்... பஸ்... கார்... எல்லாம் கண்டுபிடிச்சிருக்கான். எல்லாத்துலயும் அவன் சிரமப்பட்டு கொண் டுட்டு வர்ற விஷயம் என்ன தெரியுமா...? அவன் எதை அச்சீவ் பண்ண விழி பிதுங்கி நிக்கறான் தெரியுமா...? மூவ்மெண்ட். ஆமா. தானியங்கி. ஒவ்வொண்ணும் தானா இயங் கணும். ஃபேன் தானா சுத்தணும். ஆக்ஸி லேட்டரை அமுக்கினா பஸ் தானா ஓடணும். பெரிய பெரிய அணைகள்ல தண்ணிய தேக்கி வெச்சு அதனோட பொட்டன்ஷியல் எனர் ஜிய டர்பைனை சுத்தறதுக்கு உபயோகப் படுத் தறான். ஏன் தெர்மல் எனர்ஜியோ, எலக்ட்ரி கலோ... இல்ல நியூக்ளியரோ, இதனோட அவுட் புட்லேர்ந்து அவன் பிழிந்தெடுப்பது மூவ்மென்ட்.

“இந்த மூவ்மென்ட்டுக்கு வேண்டிய மூல எனர்ஜி... அந்த ஆட்டுக் குட்டிக்குள்... நீ இப்ப கொன்னியே, அந்த ஆட்டுக்குட்டிக்குள் இருந்தது. ஏதோ ஒண்ணு, இயற்கை... அந்த மூல எனர்ஜியை அந்த ஆட்டினுள் சிருஷ் டித்து வைத்திருந்தது. அதை அழிக்க நீ யார்...? எவ்விதமான பட்டா உண்டு உனக்கு, அதை அழிக்க...? எப்படி... எப்படி... எனக்குப் புரிய வில்லை.

“அந்த ஆட்டுக்குட்டியின், நாலு கால் பாய்ச்சி துள்ளி ஓடும் ஓட் டத்தை நிறுத்திய உன்னால் அதை மீண்டும் குதித்தோட வைக்க முடியுமா...? ஆக்கத் தெரியாத கோழைக்கு அதை அழிக்க மட்டும் எப்படி உரிமை உண்டு...? நீ செய்தது உரிமை மீறல். தவறு. கூடாத செயல்...'' ராமலிங்கன் உணர்ச்சிப் பிழம்பாயிருந்தான்.

அவனது பேச்சு எங்களுக்கு சலிப் புத்தட்ட ஆரம்பித்தது.

“ஏய் என்னப்பா, இதுக்குத்தான் ஆச்சியக் கௌறி விடாதேன்னேன். இப்பப் பார் டூர் மூடையே கெடுத்து ருவான் போலிருக்கு...'' என்றேன்.

அவனை அனைவரும் மறுதலித்து, சமையலில் இறங்கி விட்டோம். துண் டாய் நறுக்கிய சதையை நன்றாய் வேக வைத்து.. உப்பு புளி காரம் சேர்த்து, மசாலா அரைத்து விட்டு... லவங்கப் பட்டையை மணம் சேர்க்கக் கிளறி, கொதி வந்து இறக்கியதில் அதன் வாசம் அனைவரையும் சுண்டியிழுத்தது.

இவ்வளவு நல்ல சுவையை உணராத ஆச்சியை நினைத்துப் பரிதாபம் கொண் டேன்.

“டேய்... ஒரு உண்மை தெரிஞ்சவன் கறி சாப்புட மாட்டான்றாருடா வள்ளுவர்,'' என்றான் ராமலிங்கன்.

மீண்டும் சீண்ட எண்ணி அவனை நிமிர்ந்து பார்த்தபோது...

“நீ சாப்புடுறியே அது இன்னொரு உயி ரோட புண்ணுடா புண்ணு. நா சொல்லல, வள்ளுவர் சொல்றாருடா...'' என்று அக்ஷர சுத்தமாய் அழுத்திச் சொன்னான் ராமலிங் கன்.

அடுத்த பாகத்தை வாயில் வைத்து சுவைக் கப் போன எனக்கு அவனது வார்த்தை சுரீ ரென்று உச்சி மண்டையைத் தாக்கியது அருவருப்பு தோன்றியது.

அடுத்த க்ஷணத்தில் தொப்புள் குழிக்குள் முகிழ்த்த சீற்றம் உச்சி மண்டைக்குள் "சரக்" கென்று பாய்ந்து, கைகளிரண்டையும் பரபர வெனப் பற்றியது. ரத்த நாளங்களில் சூடாய்ப் பாய்ந்த ரத்தத்தில் அழுத்தம் அதிகமாக... அத னால் விழி ஓரங்கள் தணலாய் எரிய, ராம லிங்கனின் சட்டையைக் கொத்தாய்ப் பற்றி னேன். சட்டைப் பித்தான்கள் நாலாபுறமும் சிதற... உடம்பின் சூடு தணியும் வரை அவனை துவம்சம் செய்தேன். என் எதிர்பாராத தாக்குதலால் நிலைகுலைந்தான் ராமலிங்கன். மீண்டும் நான் முஷ்டி மடக்கிக் குத்தியதில் உதடுகள் கிழிந்து, ஓரத்தில் ரத்தம் வெள்ளமாய் வெளிப் பெருக, மூர்ச்சையாகி, மல்லாக்கச் சரிந்தான் ராமலிங்கன்.

அன்று என் சீறலுக்கு ஆட்பட்டு சின்னாபின்னமான ராமலிங்கனின் பஞ்சு போன்ற கைவிரல்கள் இன்று என் நெஞ்சில் மெலிதாய் வருடி இதம் தருகிறது.

"ராமு... என் ஆடுசதையிலிருந்து ரத்தம் வெள்ளமாய்ப் பொங்கின போது மரண ஓலம் போட்ருக்கேன்டா..." என்றேன்.

ராமலிங்கன் மௌனமாய் நின்றிருந்தான். அன்று புளியஞ்சோலையில் ஆட்டுக்குட்டி யின் தொண்டைச் சதை கிழிபட்ட போது, அது எழுப்பிய ஓலம் பற்றி அவன் ஏதும் கேட்கவில்லை.

"டேய்.. நா அடிபட்டுத் துடிச்ச போது என் னைத் தூக்க வந்த ஒருத்தரைப் பந்து போல் சுழற்றி எறிஞ்சிருக்கேண்டா..." என்ற போது,

நாங்கள் ஆட்டை அறுத்த சமயம் அது திமிற முடியாவண்ணம் அதன் நான்கு கால் களையும் கோபாலன் அழுத்திப் பிடித்தது பற்றி அவன் ஏதும் வாய் திறக்கவில்லை.

"சிகிச்சை முடிந்து ரெண்டு நாளாகியும் பிணம் போல் இருக்கேன்டா..." என்றேன்.

ராமலிங்கனின் விழிகள் மௌனமாய் என்னை நோக்கின. அந்தப் பார்வையின் ஜ்வாலையை எதிர்கொள்ளத் திராணியின்றித் தலைகவிழ்த்தேன்.

"ராமு... நா முடிவு செஞ்சுட்டேன்டா. இனிமே நா கறி சாப்புடப் போறதில்ல... நிச்ச யமா. ஓர் உயிரக் கொல்றதுக்கு, அதன் இயக் கத்தை நிறுத்தறதுக்கு எனக்கு உரிமை உண்டா... கிடயாதான்னல்லாம் எனக்குத் தெரியலை. அது பத்தி உன்னோட வியாக் யானமெல்லாம் எனக்குப் புரியல. ஆக்கத் தெரியாத நான் அழிக்கலாமான்றதெல்லாம் என் புத்திக்கு எட்டல. ஆனா என்னால ஒரு ஜீவன் துன்பப்படக் கூடாது.

"இன்னொரு ஜீவன் கழுத்து அறுபட்டுத் துடிப்பதை என்னால இனி பார்த்துக் கொண் டிருக்க முடியாது. அதுக்கு நா மறைமுகமாக் கூட காரணமாகப்படாது. எனக்கு என் சதை கிழிந்து தொங்கிய போதுதான் இன்னொரு ஜீவனின் வலி புரிந்தது. என் ரத்தம் வெளிப் பொங்கிய போதுதான் ரத்தம் கசிவதன் துயரம் புரிந்து கொண்டேன். மாட்டேன்... மாட் டேன்..." ராமலிங்கனிடம் மௌனமாய்க் கதறி னேன்.

விஞ்ஞானத்தின் வளர்ச்சியா அல்லது என்னுள் எழுந்த கிளர்ச்சியா தெரியவில்லை. மூன்றே மாதத்தில் யமஹாவில் அறுபது நொடி களில் தொண்ணூறு கிலோ மீட்டர் வேகத்துக் குப் பழகி விட்டேன். ஆடுசதை 'கிண்' ணென்று இருக்கிறது. கைகள் பரபரவென்றும் புஜங்கள் தினவு கொண்டும் திரிகின்றன.

எங்கள் நண்பர் குழு முக்கொம்பு விரைந்து கொண்டிருக்கிறது. ஆர்ப்பாட்டமாக நாங்கள் ஆச்சியைக் காய்ச்சிக் கொண்டே செல் கிறோம். என் வண்டியின் பின்சீட்டில் ஒரு வெள்ளாட்டுக் குட்டி கயிறுகளால் கட்டப் பட்டு விழிகள் வெளிவிழும் நிலையில் ம்... மே.. ம்...மே... என்ற அலறலுடன் பயணம் செய் கிறது.

நானும் இரண்டு வாரம் முயன்று பார்த் தேன். முடியவில்லை. ராமலிங்கனிடம் கதறிய கதறல் காற்றோடு போயிற்று. துக்கம் பீடிக்கும் போது தெளிவு கொள்ளும் மனிதன் இன்பம் சூழும் சமயம் கலங்கிய குட்டையாகி விடு கிறான். ஒன்று மட்டும் சர்வநிச்சயமாய்த் தோன்றியது.

நான் மிருகமல்ல.. அதனிலும் கீழான மனிதன்.



"நீங்க உங்க் மனைவிக்கு கணக்கு சொல்லணும்ங்கிறது உண்மையா இருக்கலாம்; அதுக்காக லஞ்சத்துக்கு ரசீதெல்லாம் தர முடியாது சார்!"

- சீர்காழி வி. ரேவதி


● *ரமேஷ் ராமன், செங்குன்றம்.*
? மத்திய அரசு டீசல் விலையை மட்டும் குறைத்திருப்பது பற்றி...?
! ஒட்டகத்தின் முதுகில் ஏகச் சுமையை ஏற்றினால் அது சண்டி பண்ணும். ஒரே ஒரு மூட்டையை மட்டும் அதன் கண்ணெதிரே இறக்கிப் போடுவார்கள். உடனே அது எழுந்து ஓடுமாம்! அந்தக் கதைதான் இந்த விலை குறைப்பும்! உண்மையில் டீசல் விலையை அரசு குறைக்கவில்லை. பதினைந்து சதம் உயர்த்தியிருக்கிறது! அதற்கேற்ப எல்லா விலைவாசிகளும் உயர்ந்து கொண்டே இருக்கின்றன.

போணியாகாதே! அரசியலிலும் வியாபாரத்திலும் வேறு வேறு நியாயங்கள்.

● *வி. சத்தியப்ரியன்; சென்னை – 15.*
? 'அ.தி.மு.க. சிதறு தேங்காய் போன்று சிதறிப் போய்விட்டது. இனி அதை ஒட்ட வைக்க முடியாது..' என்று பண்ருட்டி ராமச்சந்திரன் கூறியுள்ளது பற்றி...?
! கட்சியைக் கலைத்தே விடலாம். அவ்வாறு செய்ய முடியாமல் இருப்பதற்கான காரணம் கட்சிக்கு முறைகேடாகத் திரட்டப்பட்டுள்ள ஏராள சொத்துக்கள். சிதறுண்ட துண்டங்கள் ஒவ்வொன்றுக்கும் அந்தச் சொத்துக்கள் மீது ஒரு கண்!

● *உ. ஜஹ்பர் மதினா பேகம், அரியநாயகிபுரம்.*
? சமையல் எரிவாயுவுக்கு ஒரேயடியாக முப்பது சதவிகிதம் விலை ஏற்றிவிட்டார்களே? தாய்க்குலத்தின் முணுமுணுப்பு உங்கள் காதில் விழுகிறதா...?
!தாய்க்குலத்தின் முணுமுணுப்பு மட்டுந்தானா? தந்தைக் குலத்தின் வயிற்றெரிச்சலுடன் கூடிய வசை மொழிகளும் சேர்ந்து அல்லவா கேட்கிறது.

● *ஆர்.சி.முத்துக்கண்ணு, திருத்தியமலை.*
? ஜெயிலில் சசிகலா பகவத்கீதை படிக்கிறாராமே...?
! சைத்தான் வேதம் ஓதுகிறது!


* உயர்வார்!


* 'பகவத் கீதை'

சசிகலா கீதை படிக்கிறாரே?


● *குப்பு சு.ஆ. பொன்னுசாமி, சென்னை - 10.*
? எக்மோர் நீதிமன்றத்தில் சமீபத்தில் நடைபெற்ற வன்முறைச் செயல் எதைக் காட்டுகிறது..?
! ரௌடி கும்பல்களிடையே விரோத வன்மம், பழிவாங்கல் மிதமிஞ்சிப் போயிருப்பதை. நீதிமன்ற வளாகங்களின் பாதுகாப்புக்கு மாண்பமை நீதிபதிகள் செய்துள்ள சிபாரிசுகளை மாநில அரசு உடனடியாக அமுல்படுத்த வேண்டும் என்பதை.

● *ஜெ. கண்ணன், சென்னை - 101.*
? எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று சொல்பவர்கள் சன் டீ.வி.யின் பெயரை சூரியன் தொலைக்காட்சி என்று மாற்றுவார்களா...?
! சூரியன் என்பது சம்ஸ்கிருதம். 'பரிதி' தொலைக்காட்சி என்பதே சரி. ஆனால்

● *ஆர்.கே. மதியழகன், கரடிப்பட்டி.*
? தமிழகத்துக்கு ஆறு மத்திய அமைச்சர்கள் கிடைத்திருப்பது எதனால்...?
! தேவே கௌடாவுக்கு முட்டுக் கொடுப்பதற்குத்தான்; மேலும் அதிக எம்.பி.க்களைத் தேர்வு செய்து அனுப்பி, கூட்டணியில் இடம் பெறும் இரு முக்கிய கட்சிகள் தமிழகத்துக் கட்சிகள்தானே.

● *ஜி. கருணாகரன், கடலூர்.*
? தீவிரமான தொண்டர்கள் உள்ள ஒரு கட்சி எளிதாக மக்கள் செல்வாக்கைப் பெறுமா?
! மக்கள் செல்வாக்கு, தொண்டர்களால் வருவதல்ல, செய்யும் தொண்டுகளால் வருவது!

● *வீ. முத்தையா, திருநெல்வேலி.*
? செக்ஸ் கல்வி, நமது கலாசாரத்துக்கு



* 'கன்னித் தீவுக்கே...'



* கட்டளை!

அவசியம்தானா...?

! என்னைப் பொறுத்தவரை இதெல்லாம் உருப்படாமல் போவதற்கான வழி. இருக்கிற உப்பு சப்பில்லாத பாடங்களை விலக்கி, தொழிற்கல்விக்கு அதிக முக்கியத்துவம் தந்தால், அது நிஜமான அக்கறையின் வெளிப்பாடு.

● *எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.*

? ஜெயலலிதாவின் கட்டளையை ஏற்றுச் செயல்பட வேண்டும் என்கிறாரே கே.ஏ.கே? உங்கள் கருத்து...?

! கே. ஏ. கே.யின் கட்டளையை ஏற்க வேண்டாம், என்பதே!

● *மு.இரவிச்சந்திரன், சேலம்–9.*

? ஜெ. கன்னித் தீவு சென்றாலும் சி.பி.ஐ. அவரை விடாது என்கிறாரே எஸ்.ஆர்.பி.?


! கன்னித் தீவு போல் கேஸும் முடிவின்றி இழுத்துக் கொண்டு போகாமல் இருந்தால் சரி.



...டைந்த தேங்காய்!"

● *சி. கொ.தி.முருகேசன், கோபி.*

? நபிகள் நாயகம் பிறந்த நாளின் போது மீலாது ஊர்வலம் வேண்டாம் என்று ஆற்காடு இளவரசர் அறிக்கை விடுத்துள்ளது பற்றி...?



* பா.ஜ.க.வில்...

! இளவரசரிடமிருந்து சமீப காலமாக வரவேற்கத்தக்க யோசனைகள் வருகின்றன. பாபர் மசூதி இருந்த இடத்தில் பொது மருத்துவமனை கட்டலாம் என்றார். இப்போது மீலாது ஊர்வலம் வேண்டாம் என்கிறார். ஹிந்து முன்னணியினரோ ஊர்வலத்தில் எத்தனை ஆயிரம் பிள்ளையார்கள் என்று கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

● *ஆ. திருவாசகமணி, கருமத்தம்பட்டி.*

? சசிகலாவின் கணவர் நடராஜன் பா.ஜ.க.வில் சேரப்போவதாக அறிவித்துள்ளாரே?

! ஐயோ! பாவம், பா.ஜ.க.!

● *ச. உலகப்பன், கொத்தமங்கலம்.*

? பாடலாசிரியர் பழனிபாரதி கவனத்தைக் கவருகிறாரே...?

! கொஞ்சம் வைரமுத்து சாயல் அடிப்பதைத் தவிர்த்துக் கொண்டால் எங்கேயோ போய் விடுவார்!

● *வடவள்ளி ராமசுப்ரமணியன், கோவை-14.*

? சாடிலைட் டீ.வி.களில் வரும் 'நீங்கள் விரும்பிய பாடல்' நிகழ்ச்சிகளில், பாடல்கள் காண்பிக்கும் முன் ரம்பம் மாதிரி விளக்கம் அளிக்கிறார்களே...? அது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

! விளக்கம் மட்டுமா ரம்பம்? 'ஐ டோன்ட் நோ டாமில்' என்று பெருமையாய்ச் சொல்லிக் கொள்ளக்கூடிய பெண்களை நிகழ்ச்சி ஒருங்கிணைப்புக்கு அழைத்து வந்து, அவர்கள் உச்சரிப்பையும் கேட்க வைக்கிறார்களே...! டபுள் ரம்பம் போங்க!

● *அ. ஷண்முகசுந்தரம், சென்னை - 64.*

? காயத்தை ஆற்ற மஞ்சளைப் பயன்படுத்துவதற்கான வணிக உரிமையை ஓர் அமெரிக்க ஸ்தாபனம் பெற்றுள்ளதே.

! நூறு ஆண்டுகளுக்கு முன்பே மஞ்சள் மகிமை நமக்குத் தெரிந்திருந்தும் விஞ்ஞான ரீதியில் அந்த மருத்துவ குணத்தைப் பிரித்தெடுத்துப் பக்குவப்படுத்தும் முயற்சியை நாம் மேற்கொள்ளவில்லை. அமெரிக்கர்கள் முந்திக் கொண்டு விட்டார்கள்!

● *ஜோ. ஜெயக்குமார், நாட்டரன் கோட்டை.*

? 'கற்பழிப்பு புகார் கூறப்பட்டுள்ள மத்திய உள்துறை ராஜாங்க மந்திரி தஸ்லிமுதீனை டிஸ்மிஸ் செய்ய வேண்டும்' என்று காங்கிரஸ் கட்சி வற்புறுத்தியுள்ளது பற்றி...?

! அதற்கு அவசியமின்றி அவரே ராஜினாமா செய்து விட்டார். ஒருத்தரை அமைச்சராக நியமிக்கும் முன், அவர் தொடர்பான ரகசிய அறிக்கைகளை சி.பி.ஐ. மற்றும் போலீஸ் உதவியுடன் பெற்று ஆராய வேண்டியது பிரதமரின் கடமை. மாறாக லல்லு பிரசாத் யாதவ் கட்டாயப்படுத்தினார் என்பதற்காக தஸ்லிமுதீனுக்கு அமைச்சர் பொறுப்புத் தந்தது மாபெரும் தவறு. லல்லு பேரிலேயே கூடை கூடையாகக் குற்றச்சாட்டுகள் உள்ளனவே!

☐ ரூ. 25 பரிசு பெறுபவர்:
ஜெ. கண்ணன்,
246, பதினோராவது தெரு,
அண்ணா நகர், (மேற்கு)
சென்னை - 600 101.

காகித வாசனையில் சுபா விழித்துக் கொண்டாள்.

தலைமாட்டில் அடுக்கி வைத்த பத்திரிகைகள். மேலேயிருந்த 'பம்பாய் டைம்ஸில்' புதிய பிரதமரின் ஜாக்கிரதையான சிரிப்பு. எடுத்துப் புரட்டினாள்.

குளிராக இருந்தது.

எழுந்துபோய் ஏர்கண்டிஷனரை நிறுத்திவிட்டு வந்தபோது, நடை ஒரு பக்கமாகச் சாய்ந்து இருந்தது.

நல்லவேளை... அம்மா உயிரோடு இல்லை, இதைப் பார்க்க. சின்ன வயதிலேயே நாட்டியம் சொல்லிக் கொடுத்த அம்மா... நடக்கச் சொல்லிக் கொடுத்த அம்மா....

''சுபா.... உன்னோட நடையிலே உன்னோட பெர்சனாலிடியே தெரியணும்... நேரா.... நளினமா... சாயாம.... கால் கோணாம... தினம் தலையிலே புத்தகத்தை `வச்சுக்கிட்டு அது கீழே விழாம நடந்து பழகு....''

சாரி அம்மா... நீ கற்றுக் கொடுத்த அழகான நடையைத் தொலைத்துக் கொண்டு இருக்கிறேன்... நடையை மட்டும்தானா....

படுக்கையில் விரிந்து கிடந்த பத்திரிகைப் பக்கத்தில், அரிவாளும் கையுமாக உருட்டி விழிக்கும் சுபாவின் புகைப்படம். துர்க்காதேவியாக நடிக்கும் சுபா.

கட்டிய புருஷனையும், அவன்கூடப் பிறந்தவர்களையும் தூங்கிக் கொண்டிருக்கும் போதே துடிக்கத் துடிக்க அரிவாளால் வெட்டிக் கொன்று ஜெயிலுக்குப் போன கிராமத்துப் பெண் துர்க்காதேவி.

"ரங்னேகர் ஓஹோன்னு எழுதியிருக்கார் அண்ணி, உங்க 'சிறைப்பறவை' நாடகத்தோட நூறாவது பெர்பார்மென்ஸ் பத்தி..."


ஷியாமளி தேநீர்க் கோப்பைகளோடு உள்ளே வந்தாள்.

"சுபா மேடையில் துர்க்காதேவியாகவே சுவாசிக்கிறார்... அந்த கிராமத்துப் பேச்சும், தெறித்து விழும் வசவுகளும் சாய்ந்த நடையும்... ஆயுசுக்கும் சுபாவின் பெயர் சொல்ல இந்த நாடகம் ஒன்றே போதும்..."

''எகனாமிக் வோர்ல்ட்லே தான் நம்பியார் கடிச்சுத் துப்பியிருக்கிறார்...''

ஷியாமளி சொல்லியபடி தேநீர்க் கோப்பையை நீட்ட, சுபாவின் வாயிலிருந்து மராத்தி வசவொன்று விழுந்தது.

"சாரி ஷியாமளி... துர்க்கா மாதிரி மேடையிலே நடந்து பழகிப் பழகி, என்னோட வழக்கமான நடையே மாறிப்போச்சு... இப்ப பேச்சும்... மேடைக்கு வெளியே கூட நான்



கூட்டுக் கிளி

இரா. முருகன்

துர்க்கா தேவியா மாறிடுவேனோன்னு பயமா இருக்கு... லீவ் இட்.... நம்பியார்... நாடகத்தைப் பற்றி என்ன தெரியும் நம்பியாருக்கு?"

சுபா கண்ணை மூடியபடி தேநீரை உறிஞ்சினாள்.

நம்பியார்... ரத்தனின் உயிர் நண்பர்... சுபாவை அவனுக்கு அறிமுகப்படுத்தியவர்...

"மீட் மிஸ் சுபா.... ரத்தன்... நீ எப்படி கட்டடக்கலையிலே பெரிய கொம்பனோ, அதே போல சுபா கட்டட அழகுக்கலையிலே எக்ஸ்பர்ட்.... கூடவே பரதநாட்டியம் டான்சர்... தூர்தர்ஷன்லே வயசான மாமிகளோட ஒரு ஓரமா நின்னு ராத்திரி நியூஸுக்குப் பிற்பாடு ஆடியிருக்கா..."

பற்றிக் குலுக்கிய ரத்தனின் கை விலகிப் போய்விட்டது. பரதநாட்டியம் மறந்து கொண்டு வருகிறது. துர்க்காதேவிதான் காரணம்.

சுபா டைம்ஸை மடித்து டீப்பாயில் வைக்கும் போது, கடைசிப் பக்கத்தில் பெண்ணுரிமை இயக்கங்களின் கூட்டு மாநாட்டில் துர்காதேவி உரை நிகழ்த்தும் படம். அசல் துர்க்காதேவி.

ஷியாமளி பத்திரிகையைப் பிடுங்கிப் பார்த்தாள்.

"அசப்பிலே உங்க மாதிரியே இருக்கா அண்ணி இந்த துர்க்காதேவி. இல்லே நீங்கதான் அவ மாதிரி இருக்கீங்களா... அந்த முகத்தைப் பார்த்தா கொலை செஞ்சுட்டு, ஏழு வருடம் ஜெயில்லே இருந்த மாதிரியா தெரியுது?"

சிறைத்தண்டனை விலகி விடுதலையாகி பம்பாய் வந்திருக்கிறாள் துர்க்காதேவி. பொது மன்னிப்பு.

"நாளைக்கு உங்க நாடகம் பார்க்க வரப் போறா இல்லே துர்க்காதேவி... மேடையிலே உங்க நடிப்பைப் பார்த்தா தன்னையே கண்ணாடியிலே பார்த்துக்கிட்ட மாதிரி இருக்கும்... அவ ரியாக்ஷனைப் பார்க்கணும்...."

ஷியாமளி காலிக்கோப்பைகளை டிரேயில் வைத்தாள்.

"சாயந்திரம் துர்க்காதேவியைப் பார்த்து சம்பிரதாயமா அழைக்கப் போகப் போறேன்.... முதல்தடவையா நேர்லே பார்க்கப் போறேன்... தன்னோட வாழ்க்கையை நாடகமாக்க அனுமதி கூட ரங்னேகர் மூலமாகத்தான் ஜெயில்லே இருந்து கொடுத்தா - நீயும் என்னோட வாயேன் ஷியாமளி..."

கோப்பைகளை எடுத்துக் கொண்டு திரும்பிய ஷியாமளி நின்றாள். "இல்லே அண்ணி... சாயந்திரம் அண்ணாவைப் பார்க்கப் போறேன்... நாளைக்கு அவன் பிறந்தநாள் ஆச்சே... போன வருடம் பர்த்டேக்கு எல்லோரும் சேர்ந்து இருந்தோம்.... இப்போ...." வார்த்தையை முடிக்காமல் நடக்கும் ஷியாமளி...

சுபா டிரஸ்ஸிங் டேபிள் மேல் கல்யாணப் புகைப் படத்தில் சிரிக்கும் ரத்தனையே பார்த்தபடி இருந்தாள்.

எல்லாமே கனவு போல இருக்கிறது....

"கொலாபாவிலே வரப் போற பலமாடிக் கட்டடத்தோட வரைபடம் இது.... நான்தான் ஆர்க்கிடெக்ட்... ஒவ்வொரு மாடியிலேயும் விமானக் கம்பெனி அலுவலகம், ஏற்றுமதி நிறுவனம், கம்ப்யூட்டர் சென்டர்னு இடம் பிடிச்சிருக்காங்க... ஒவ்வொருத்தருக்கும் ஒருமாதிரி இண்டீரியர் டெகரேஷன் செய்யணும்... அல்டிமேட் சாலஞ்ச் பார் யுவர் எக்ஸ்பர்டீஸ்.... எடுத்துக்கறீங்களா சுபா?"

தொழில்முறையில் ஐந்து வருடம் முன்



னால் உருவான கூட்டணி அது.

"ரத்தன்... நீங்க மராத்தியிலே நாடக ஆசிரியர்னு கேள்விப்பட்டேன்... நடிகர் கூடவாம்... நாடகக் குழு ஆரம்பிச்சிருக்கிறதா நம்பியார் சொன்னார்..."

ஒரு பகல் நேரத்தில், கொலாபாவிலிருந்து காரில் திரும்பும்போது சுபா கேட்டாள்.

"மராத்தி இல்லே சுபா... கொங்கணி... ஸ்கிரிப்டை இந்தியிலே எழுதுவேன்.... நடிகர்களை இங்கிலீஷ்லே டைரக்ட் செய்வேன்... பார்க்க வர நாலு பேரும் மதராஸி விமர்சகரா இருப்பாங்க..."

"அம்மா! நானும் பலபேரைப் பாத்துட்டேன். ஒரு நிமிஷத்துல புடைவை செலக்ட் செஞ்ச ஒரே ஆள் நீங்கதாம்மா!"

"சும்மாயிருப்பா! இது எனக்கில்ல, எங்க மாமியாருக்கு!"

— அ. குருசங்கர்

சிரிப்பிலும், அப்புறம் அவன் வாழ்க்கையிலும் இணை சேர்ந்த சுபா....

ஏ.சி. கிரில்லுக்கு நேர் மேலே சுவரில் அழகாக விரிந்த பல்லக்கின் வண்ணப் படத்தில் சுபாவின் பார்வை படிந்தது. ரத்தன் தியேட்டர்ஸ், கிரிஷ் கர்னாடின் 'ஹயவதனா' வைக் கொங்கணியில் மேடையேற்றியபோது, மேடை அலங்காரத்தை சுபா எடுத்துக் கொண்டதன் முதல் வெளிப்பாடு....

"சாதாரண புரோசீனியம் மேடை அமைப்பிலும் ஒரு மாந்திரீகம் கலந்த சூழலை, பல்லக்கை மட்டும் வைத்து சுபா எழுப்பியிருக்கிறார்....."

நினைவில் நிற்கும் பத்திரிகை விமர்சன வரிகள்.

பல்லக்கின் இடதுஓரமாக சுபாவின் பார்வை நகர்ந்தது. வென்னீர் போட வேம்பாவும். மெழுகிய தரையும். தரையில் சாப்பாட்டுத் தட்டுக்களுமாக ஒரு புராதன கிராம வீடு. ஓரமாகக் கயிற்றுக் கட்டிலில், வயதான பெண்மணியாக, எங்கோ வெறித்தபடி.... சுபாதான் அது.... அழகான செப்பியாடோன் புகைப்படம்.

மகேஷ் எல்குஞ்ச்வரின் 'வாதே சிராபந்தி' நாடகம் அது. மராத்திய கிராம வீட்டைக் கண்முன் கொண்டு நிறுத்துவதோடு மட்டும் சுபாவின் பங்கு முடியவில்லை... காலபோதம் இல்லாமல், சூழ்நிலை குழம்பிப்போய், கட்டிலிலேயே உட்கார்ந்து அரற்றும் வயதான பெண்ணை மேடையில் அவள் தத்ரூபமாகச் சித்திரித்தைப் பிரபல நாடக ஆசிரியர் விஜய் டெண்டுல்கர் பாராட்டிப் போன இனிமையான நினைவுகள்....

"அண்ணி... நான் காலேஜுக்குக் கிளம்பறேன்...."

ஷியாமளியின் குரல் சுபாவை மெல்ல உலுக்கி அசைத்தது.

"உங்களுக்குக்காக பிரட் ஆம்லட் ஹாட்பாக்கிலே முடி வச்சிருக்கேன்.... பிளாஸ்க்கிலே டீ இருக்கு... வரட்டுமா?....."

தோளில் ஆதரவாகத் தட்டிப் போகும் ஷியாமளி....

எந்தக் கோர்ட்டும் ரத்து செய்ய முடியாத உறவு இது.....

நாரிமன்டவர் பதினேழாவது மாடியில் 'சுபா டெகார்' அலுவலகத்துக்குள் நுழைந்தபோது ஊழியர்கள் அவள் கேபினையே பார்த்தபடி வணக்கம் சொன்னார்கள்.

உள்ளே யார்? பஹ்ரினில் ஐந்து நட்சத்திர ஓட்டலில் இண்டீரியர் டெகரேஷன் செய்வது பற்றிப் பேச வருவதாகச் சொன்ன அரபிகளா? நாளைக்குத்தானே?

"குட்மார்னிங் மேடம்..."

ரத்தன்.

சந்தோஷமும், துக்கமும் மாறி மாறிப் பொங்கிவர சுபா கையை நீட்டினாள்.

"ரொம்ப நேரமாக் காத்துக்கிட்டிருக்கீங்களா?"


"சுபா டெகார் எம்.டிக்காக, என் பிரிய மனைவி.... ஐமின் மாஜி மனைவிக்காக ஒரு சின்னக் காத்திருப்பு...."

மாஜி மனைவி. சுபா உதடுவரை வந்த வசவைக் கஷ்டப்பட்டு விழுங்கினாள். "துர்க்கா நாடகத்துக்கு நல்ல வரவேற்பாமே... ரத்தன் தியேட்டரின் பெயரைக் காப்பாற்றி விட்டார்கள் என்று அல்கானி ஃபோன் செய்து சொன்னார்...."

ரத்தன் சிரித்தபடி புகைக்குழாயைப் பற்ற வைத்தான்.

"உங்கள் பெயரை மிக கவனமாகவே உபயோகிப்பேன்..."

சுபா தலை முடியை இரண்டு கைவிரலா



லும் ஆழமாகக் கோதியபடி பேசினாள். துர்க்காதேவியின் மேனரிஸம் இது.

''பிசினஸ் பேசலாமா?''

ரத்தன் சுபாவைத் தீர்க்கமாகப் பார்த்தான்.

"சொல்லுங்க...."

"பேக் பே ஏரியாவிலே மோத்தி டவர் அசைன்மெண்ட்... சுபா டெகார்தான் இன்டீரியர் டெகரேஷன் செய்யணும்னு பில்டிங் புரமோட்டர்கள் விருப்பப் படறாங்க... என்னோட விருப்பமும் அதே... சப் காண்ட்ராக்டாக வேணா, இல்லே..."

''நான் தனியாகவே வேலை பார்க்க விரும்பறேன்....''

சுபா உறுதியாகச் சொன்னாள்.

"அந்த ஆபீஸ்ல லஞ்சப் புழக்கம் அதிகமா இருக்குன்னு எப்படி சொல்றீங்க?"

"புதுசா வந்த மானேஜரை வரவேற்க நோட்டு மாலை போடுறாங்களே!"

— பிரசன்ன குமார்

''யுவர் விஷ் மேடம்... தனியாத்தான் நிப்பேன்னு நீங்க முடிவு செய்தா குறுக்கே நிற்க நான் யார்?''

நிற்கவில்லைதான். பிணங்கிப் போய் ஒரே கூரைக்குக் கீழே இருப்பதைவிட, பிரிந்து போய்ப் பரஸ்பர மரியாதையோடு சுவாசிப்பது மேலானது என்று சுபா சொன்ன போதும் அவன் இதையேதான் சொன்னான்... அது ஒரு வருடம் முன்பு....

ரத்தன் கிளம்பத் தயாராக எழுந்து நின்றான். "எப்படி இருக்கா என் குட்டித் தங்கை? அண்ணாவைவிட அண்ணிதானே உசிரு?"

ரத்தன் கண்ணைச் சிமிட்டினான்.

"நாளைக்கு உங்க பிறந்தநாள் ஆச்சே... பரிசோடு சாயந்திரம் பார்க்க வருவாள்...."

போன வருடம் பிறந்தநாள் நினைவில் இரண்டு பேரும் மவுனமானார்கள்.

ஷியாமளி மங்களூரிலிருந்து வந்த அந்த நாள் அது. பிறந்தநாள் பரிசாக சுபா ஷேக்ஸ்பியர் நாடகங்களின் மல்ட்டி-மீடியா சீடியைக் கொடுத்தாள். அப்போது,

"நானும் உனக்கு ஒரு பதில் பரிசு தர்றேன்..."

ரத்தன் கொடுத்த அந்த மறுபரிசு... அதில் தான் எல்லாம் ஆரம்பமானது....

'சிறைப்பறவை' என்ற பெயரில், மராத்திய கிராமப் பெண் ஒருத்தியின் நிஜ வாழ்க்கையை மையமாக வைத்து எழுதப்பட்ட புத்தகம் அது.

"இந்த துர்க்காதேவி ரொம்ப இன்டரெஸ்டிங் கேரக்டர்... கட்டின புருஷனும், அவனோட கூடப் பிறந்த அண்ணனும், தம்பியுமே, அவளை ரெட்லைட் ஏரியா புரோக்கருக்கு வித்திருக்காங்க... எத்தனையோ கஷ்டப்பட்டு, எப்படியோ தப்பிச்சு கிராமத்துக்குத் திரும்பி; அத்தனை பேரையும் வெட்டி சாய்ச்சிட்டு ஜெயிலுக்குப் போயிருக்கா.... ஆறு வருஷமா உள்ளேதான் இருக்கா... ஜெயில்லே வச்சே பேட்டி கண்டு எழுதி இருக்காங்க... படிப்பறிவு இல்லே... முரடுதான்..... ஆனா அவளோட புத்தி தீட்சண்யமும், தீர்க்கமான பார்வையும்.... படிச்சுப் பாரு.... யூ வில் லைக் ஹர்.....''

அசிரத்தையோடு படிக்க ஆரம்பித்து, புத்தகத்திலே அமிழ்ந்துபோன சுபா....

"போற போக்கிலே நீயே துர்க்காதேவியா அரிவாளோட நிக்கப் போறே...''

ரத்தன் கிண்டல் செய்தான்.

மாறினால் என்ன? மேடையில்.

"பயித்தியமா உனக்கு? துர்க்காதேவி என்ன நாடகத்துக்கான சப்ஜெக்ட்டா? நாம ஸ்டைலைசேஷன், எக்ஸ்பெரிமெண்டல் தியேட்டர் அது இதுன்னு மெனக்கெடற போது திடீர்னு இப்படி ஸ்யூடோ ரியலிஸ்டிக்கா... அரிவாளும் கையுமா... சகிக்காது...."

ரத்தன் தடுக்கத் தடுக்க, சுபா துர்க்காவை நாடகமாக்கினாள். ரங்கனேகரோடு அவள் கிராமத்துக்கே நேரே போய் யார் யாரையோ சந்தித்து, துர்க்காவின் நடை, உடை, பாவனைகளை மனதில் இருத்தினாள். சாய்ந்து நடந்துகொண்டு, சரமாரியாக வசவுகளை உதிர்த்துக்கொண்டு... எல்லாம் நாடகத்தில் கொண்டுவர வேண்டிய விஷயங்கள்.

"ஸ்டாப் திஸ் நான்சென்ஸ்... நிறுத்த முடியலேன்னா நான் இறங்கிப் போறேன். இந்தக் கூத்தடிப்பிலே நான் சேர முடியாது..."

கூப்பாடும் வசவும் கவிந்த ஒத்திகை நடந்த இரவில் வெளியேறிப் போன ரத்தன்... விவாகரத்தில் முடிந்த அந்த வெளியேற்றம்...

"ஓ கே... நான் கிளம்பறேன்...."

ரத்தனோடுகூட அறை வாசல் வரை நடந்தாள் சுபா.

"புதுசா ஏதாவது நாடகம் எழுதியிருக்

ரீங்களா ரத்தன்?

"எஸ்... சீக்கிரமே மேடையேற்றணும்... பத்து வருஷம் முன்னாலே அழகுப் போட்டியிலே வெற்றி பெற்ற ஒரு பெண் இன்ஜினீயரோட ஐடண்டிடி கிரைசிஸ் பத்தி...."

லிப்ட் கதவு திறந்தது.

கடல் காற்று வீசிக் கொண்டு இருந்த இதமான சாயந்திரப் பொழுது,

"துர்க்காதேவி இன்னும் எத்தனை நாள் இங்கே இருக்கப் போறாளாம்?"

சுபா காரை ஓட்டிக் கொண்டே ரங்னேகரைக் கேட்டாள்.

"போற மாதிரித் தெரியலே... இனிமே இங்கேயேதான் இருப்பு போல...."


ரங்னேகர் சிரித்தபடி சட்டைக் கையை மடித்து விட்டுக் கொண்டார்.

"ஹோட்டல்லேயேவா?"

"மகளிர் இயக்கங்கள் துர்க்காவை வரவழைத்த போது ஒரு வாரம் ரூம் புக் செய்து இருக்காங்க.... அது முடிந்து தங்க இடம் தேடறா... புத்தகத்தோட அயல்நாட்டு பதிப்புக்குக் கணிசமா ராயல்டி வந்ததாக் கேள்வி... உன்கிட்டே நாடக அனுமதிக்கு என்னமோ பணம் வாங்கலேதான்... நாளைக்கே இது சினிமாவானா நிச்சயமா கேப்பா...."

"ராயல்டியை மட்டும் வச்சு பம்பாயிலே காலம் தள்ள முடியுமா?"

சுபா காரை ஓட்டலுக்குள் திருப்பியபடி கேட்டாள். "யார் கண்டது? மாடலிங் செய்வாளோ என்னமோ... அவளோட அன்விஷுவலான இமேஜுக்காகவே மாடலிங் சான்ஸ் தேடிட்டு வரும்....



"இப்பல்லாம் என் மனைவி என்னைக் கண்டு ரொம்பவும் பயப்படுறா?"

"ஆச்சரியமா இருக்கே. அவங்க பயப்படுற அளவுக்கு, அப்படி என்ன செஞ்சீங்க?"

"ஒரு வாரமா.. தனியா உட்கார்ந்து சிரிச்சுக்கிட்டிருந்தேன்..."

— பி. ராஜேஷ்



"சொல்லாமல் கொள்ளாமல் லீவு போட்டுட்டு கேட்டால் 'சௌகர்ய குறைச்சல்'ன்னு சொல்றே. நேத்து உனக்கு சௌகர்ய குறைச்சல்ங்கிறதை எப்படிய்யா நம்பறது?"

"நீங்க இப்படிக் கேப்பிங்கன்னுதான் நேத்தைய என்னோட ராசிபலன் பேப்பர் கட்டிங்கை கையோடு கொண்டு வந்துருக்கேன் சார்....!"

— கே.ஜி.எஸ். கோவிந்தன்

அதோட.. ரியல் வில்லேஜ் பியூட்டி..... முப்பத்து நாலு வயசுலேயும் நல்ல லட்சணமாகத்தான் இருக்கா.... அவளை விக்க எப்படித்தான் அந்தக் கிராதகங்களுக்கு மனசு வந்ததோ...."

சுபா படியேறியபோது ஒரு பக்கமாகச் சாய்ந்த நடையை ஒரு நிமிடம் நிதானித்து, சரி செய்து கொண்டாள்.

துர்க்காவைப் பார்க்க வேண்டும். எல்லாம் சொல்ல வேண்டும். ஒரு கதாபாத்திரம், ஏற்று நடித்தவளையே மாற்றியது பற்றி, உறவைப் போக்கடித்தது பற்றி, வண்டி வண்டியாகப் புகழைச் சம்பாதித்துக் கொடுத்தது பற்றி... எல்லாம்

"ரூம் நம்பர் டூ ஒன் பைவ்...."

ரிசப்ஷனில் சொன்னார்கள்.

அறைவாசல்.

"அப்படித்தான்... நோ... நோ.... தலை நிமிர்த்தியே இருக்கணும்... புத்தகம் விழுந்திடக் கூடாது. இன்னும் ஒரு வாரம் நடைப் பயிற்சிதான்... அப்புறம் வசன ஒத்திகை... மெத்தப் படிச்ச பெண் இன்ஜினியர் பாத்திரம்... அழகிப் போட்டியிலே ஜெயிச்சவ... மென்மையான பேச்சு..... அழகான உச்சரிப்பு..... எல்லாம் சொல்லித்தரேன்... முதல்லே இந்த நளினமான நடை..... நேரா... சாயக்கூடாது... புத்தகம் விழாம...."

ஒருக்களித்த கதவு வழியே கேட்டது சுபாவுக்குப் பழக்கமான குரல்.

தலையில் புத்தகத்தோடு அறைக்கோடியிலிருந்து அடியெடுத்து வந்து கொண்டிருந்தாள் துர்க்கா தேவி.

●● திருச்சியில் முப்பது வருடங்கள் வசித்த பிறகு சென்னை திரும்பியிருக்கிறேன். திருச்சியில் அரசு பஸ்களும் தனியார் பஸ்களும் போட்டா போட்டியில் இருப்பதால் மிகவும் திறமையுடன் இயக்கப்படுகின்றன. சேவை மனப்பான்மையில் ஒன்றையொன்று முந்துகின்றன. சென்னையிலும் இந்த நிலைமை உருவாவது நல்லது.

சென்னை – 28, எஸ். வேதாசலம்.

●● எங்கள் கிராமத்தில் பக்திசிரத்தையுடன் நடைபெற்று வந்த தேர்த் திருவிழாவில் இந்த ஆண்டு சில இளைஞர்கள் எல்லோர் மீதும் வண்ணப் பொடி தூவி விளையாடினார்கள். ஹோலி பண்டிகையின்போது வடநாட்டில்தான் இது வழக்கம். குஜராத்தில் சில தயாரிப்பாளர்கள் மட்டரகமான பொடிகளைத் தயாரிக்க, உடல் புண் ஏற்பட்டது. ஒரு கல்லூரி மாணவி பார்வை இழந்தார். இந்த ஆபத்தான கலாசாரம் தமிழ்நாட்டுக்கு வேண் டாமே!

சிட்லபாக்கம், அ. ஷண்முகசுந்தரம்.

ஆபத்தான கலாசாரம்!

●● பாரதிராஜாவின் "அந்திமந்தாரை" திரைப்படம் சென்னை 'சூரியன்' அரங்கில் காணச் சென்றேன். படம் ஆரம்பித்து, தியாகிகள் பற்றி வசனங்கள் வரும்போதெல்லாம் சிலர் ஊளைக் கூச்சலிட்டதுடன் தியாகத்தைப் பற்றி மட்டரகமாகவும் உரக்கப் பேசினார்கள். தியாகம், தேசபக்தி என்பதெல்லாம் பரிகாசத்துக்குரிய விஷயமாகிடும் அளவுக்கு நமது அரசியல்வாதிகள் நாட்டையும் மக்களையும் கெடுத்திருக்கிறார்கள் என்பதைக் காண மனம் நொந்து போனேன்.

சென்னை – 33. வி. எஸ். வாசன்.

●● மருத்துவர்களுக்கு சேவை மனப்பான்மை குறைந்து வருகிறது. பலருக்குப் பணம் பண்ணுவதே குறிக்கோளாக இருக்கிறது. டாக்டரிடம் போனாலே உடனே பல டெஸ்டுகளை எழுதித் தருகிறார். முன்பு நோயாளியை வீடு தேடி வந்து டாக்டர் பார்ப்பார். இப்போது வீடு தேடிச் செல்வது கௌரவக் குறைவாகி விட்டது. 'முடிந்தால் வா; இல்லாவிட்டால் நர்ஸிங்ஹோமில் போய்ப் படு' என்ற கதையாகி விட்டது. கடமையைச் செய்வதிலும் கவனக் குறைவு புகுந்து கொண்டது. மருத்துவக் கல்லூரி களில் மருத்துவத்துடன் மனிதநேயமும் போதிக் கப்பட வேண்டியது அவசியம்.

பெருந்துறை, ந. சிவாயமூர்த்தி.

●● இப்போது ரூ. 5, ரூ. 2, ரூ. 1 நோட்டுக்கள், நாணயங்கள் புழக்கம் மிகவும் குறைந்து விட்டது. பொது மக்களுக்கு இதனால் ரொம்பக் கஷ்டம். மின் கட்டணம் செலுத்த, பால் கார்டு வாங்கச் சென்றால் சரியான சில்லறை இல்லை என்றால் அதோ கதிதான்! வங்கிகளில் கேட்டால், "ரிசர்வ் வங்கியே தருவதில்லை" என்கிறார்கள். அதிகாரிகள் கவனிப்பார்களா?

சென்னை – 24, வி. ஆனந்தராஜ்.

●● என் கணவர் பள்ளி ஆசிரியர். உடன்பணி செய்யும் ஒருவருக்கு ரூ. 8000 கடன் கொடுத்தார். உரிய நேரத்தில் திருப்பப்படவில்லை. பத்து ஆண்டுகள் சென்று தற்போது கோர்ட்டில் கேஸ் கொடுத்தார். பணம் வாங்கியவருக்கு (தி.மு.க.) ஒன்றியச் செயலாளர் (தி.மு.க.) நெருங்கிய நண்பர். விளைவு : திருப்பனந்தாள் பிளாக் டெவலப்மெண்ட் ஆஃபீஸில் கடந்த ஓராண்டு காலமாகப் பணிபுரிந்த என் மகன் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளான். (என் கணவரும் மகனும் கூட தி.மு.க.தான் என்பது வேறு விஷயம்.) "கேஸை வாபஸ் வாங்கா விட்டால் வேலை போய்விடும்" என்று என் மகனிடம் அந்த ஒன்றியச் செயலாளரே கூறியிருக்கிறார். தமது ஆட்சியில் எந்த இடுக்கிலும் மயிரிழை தவறும் நடக்கக் கூடாது என்று விரும்புகிறார் கலைஞர். ஆனால் அவரைப் போல் எல்லா தி.மு.க.வினரும் அதிகாரிகளும் அரசு ஊழியர்களும் எண்ண வேண்டுமே?

திருப்பனந்தாள், ஜி. மதுரபாஷிணி.

●● வடபழனி கோயிலில் நடந்த அவலங்களை நேரில் பார்த்து நடவடிக்கை எடுத்ததற்காக அமைச்சருக்கு நன்றி. ஆனால் காண்டிராக்டர் மீது நடவடிக்கை எடுத்து என்ன பயன்? அவர்களுக்கு உடந்தையாக இருந்து ஒப்புதல் அளித்த அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கை? அறநிலையத்துறை அமைச்சரும் அதிகாரிகளும் கேரளாவுக்குப் போய், கோயில் பராமரிப்பு எப்படி நடக்கிறது என்று பார்த்து வரட்டும். நிற்க, கோயில் பிரசாதம் என்பது மடப்பள்ளியில் தயாரித்து அன்றாடம் சுவாமிக்கு நைவேத்தியமானதை விநியோகிப்பதுதானேயன்றி, பல வகை பலகாரங்களை காண்டிராக்டர்கள் செய்து வந்து விற்பது அலல.

திருச்சி, [illegible]



செய்திகள், வாசிப்பது செம்பியன்...

ஜெயலலிதா மறுபடி நாவல் எழுத ஆரம்பித்திருக்கிறார்! லயோலா கல்லூரி வாசலில் நடந்த துப்பாக்கி சூடுக்கு ஒரு பின்னணியை சிருஷ்டித்து அவர் விடுத்துள்ள அறிக்கை அதை நிரூபிக்கிறது. ஆனால், ஒரு நாவலாசிரியை என்ற முறையில் கூட அவர் நல்ல பெயர் எடுக்கப் போவதில்லை என்பதுதான் பரிதாபம்!

“குண்டர்கள் ராஜ்யத்துக்கு இடம்தர மாட்டோம்; துப்பாக்கி பேசும்” என்று கூறியிருக்கிறார் முதல்வர். போலீஸார் நடத்தியும் காட்டியிருக்கிறார்கள். கொலை, கடத்தல், பிளாக்மெயில் வழக்குகளில் தேடப்பட்டு வந்தவர்களை லயோலா கல்லூரி வாசலில் தந்திரமாக மடக்கி, சுட்டு வீழ்த்தி இருக்கிறார்கள். ஓரிரு குண்டர்கள் தப்பி ஓடியும் விட்டார்கள். போலீஸ் தரப்பிலும் காயம்பட்டவர் உண்டு. வீரத்தை வாழ்த்த வேண்டும்தான். ஆனால் இதிலே ஓரளவு அதிர்ஷ்டமும் வேண்டும். யுத்தத்தினிடையில் எதிர்பாராத விதமாக அடிபட்டு சிகிச்சை பெற்று வரும் கல்லூரி மாணவருக்கு நடக்கக் கூடாதது ஏதும் நடந்திருந்தால் இதற்குள் எதிர்ப்புக் குரல்களும் ஒலித்திருக்கும். ‘போலீஸ் அலட்சியம், அராஜகம்’ என்று குற்றச்சாட்டுகளும் பிறந்திருக்கும். மிகுந்த எச்சரிக்கை தேவை. இன்னும் ஒன்று : கமிஷ்னர் சார், மாருதி ஒரு சுட்ட அப்பளாம் மாடல். அம்பாஸிடரை மோதி மடக்க மகேந்திரா ஜீப்பைப் பயன்படுத்துங்க, ப்ளீஸ்!

வாதங்களில் சிறப்பானவையும் உண்டு; படுமோசமானவையும் இருக்கு. மேல்சபை அமைய வேண்டியது அவசியம் என்பதற்காக சட்டமன்றத்தில் ஒலித்த வாதங்களில் த.மா.கா. சொக்கர் சொன்னது சத்தானது. ‘சட்டமன்ற விவாதத்துக்குப் பிறகு மேல்சபை தலையிட்டது, பதினாலு தருணங்களில்; அவற்றில் பன்னிரண்டு தடவைகளில் மேல் சபையின் யோசனைகளை சட்டமன்றம் ஏற்றுள்ளது’ என்றார். வலிமை சேர்க்கும் புள்ளி விவரம்.

இனி சொத்தை வாதம் : ‘இந்திரகுமாரி ஒரு பெண் என்பதால் நீதிபதி அவரை ஜாமீனில் விடுவிக்க முன்வரலாம்’ என்ற வழக்குரைஞரின் கருத்து. ஒரு பெண் என்பதால் இ.குமாரி அரசியலில் புகாமலிருந்தாரா? கட்சி தாவாமலிருந்தாரா? காக்காய் பிடித்து பதவியில் அமராமலிருந்தாரா? ஊழல் பண்ணாமலிருந்தாரா? அல்லது கைதாகாமல்தான் இருந்தாரா? ஜாமீனில் விட மட்டும் பெண் என்ற வாதம் எதற்கு? நல்லவேளை, நீதிபதி இந்த அபத்த வாதத்தை ஏற்கவில்லை. ஜாமீனில் விடுவிக்கவும் இல்லை!

நாடக பாணியில் அறிவிப்பு செய்வதில் கலைஞர் கெட்டிக்காரர். ‘தமிழகத்தில் உள்ள பல்வேறு மருத்துவமனைகளில் 500 ஆம்புலன்ஸ்களும் பழசாகி, பழுதாகி நிற்கின்றன; புதுசு வாங்க 18 கோடி செலவாகும்’ என்று ஆர்க்காடு வீராசாமி ஒரு குரல் அழ, ‘டாம்பீகத்துக்காக ஜெ. வாங்கிய சொகுசு விமானத்தை விற்றால் 20 கோடி கிடைக்கும்; எடுத்துக் கொள்ளுங்கள்’ என்று ஆரவார வரவேற்பினிடையே சட்டமன்றத்தில் அறிவித்தார் முதல்வர். மேல்நாடுகளில் இப்போதெல்லாம் ஹெலிகாப்டர்களே ஆம்புலன்ஸ்களாக இயங்குகின்றன. எமெர்ஜென்ஸி ஆபரேஷன் நடத்தக்கூடிய அளவில் சகல வசதிகளுடன் விமான ஆஸ்பத்திரிகள் செயல்படுகின்றன. இங்கே நாம் விமானம் விற்று ஆம்புலன்ஸ் வாங்கப் போகிறோம். ஹூம், விரலுக்குத் தக்க வீக்கம்!

சென்ற வாரம்....

சுகி என்கிற சுகன்யா –

ஒரு தனியார் நிறுவனத்தின் கல்கத்தா கிளையிலிருந்து சென்னைக்கு மாற்றலாகி வந்து, தன்னோடு பணியாற்றும் ஸ்ரீராமைக் காதலிக்கிறாள். அவர்கள் திருமணத்துக்கு முக்கியத் தடை – ஸ்ரீராமின் தங்கை வசந்தி. கல்லூரியில் படிக்கிற அவளுக்குத் திருமணமானபின்தான் தன் காதல் விஷயத்தை வீட்டில் பேசமுடியும் என்கிறான் ஸ்ரீராம். ஒரு ஞாயிற்றுக்கிழமை, இருவரும் தம் முதலாளி ராஜூவின் நீலாங்கரை வீட்டுக்குப் போகிறார்கள், அலுவலக விஷயமாக. இருவரும் காரில் திரும்பி வருகையில் ஒரு டூரிஸ்ட் பஸ் அவர்களைக் கடந்து போகிறது. இவர்களின் 'நெருக்க'த்தைப் பார்த்துக் கிண்டலடித்துக் கொண்டு போகிற அந்த இளம் கல்லூரிப் பெண்களின் முகங்களில் ஒரு முகம் மட்டும் அந்தக் காட்சியைக் கண்டு அதிர்ச்சி அடைகிறது.

அது –

ஸ்ரீராமின் தங்கை வசந்தியின் முகம்.

இனி.....

2

பளபளக்கும் புது மாருதி தவுஸண்ட், அழுது வடிந்த இரும்பு கேட்டின் முன் நின்றது. அந்த முரண்பாடு ஸ்ரீராமிடம் வழக்கமான புன்னகையை வரவழைத்தது. மொத்த வீடுமே பெயிண்ட் உதிர்ந்து பரிதாபமாய்த் தெரிந்தது. இரண்டு வருஷங்களாகச் சொல்லிப் பார்த்தாயிற்று...

“வசந்தி கல்யாணத்தப்போ பார்த்துக்கலாம். இப்போ செலவு வைக்காதே... சுவரும், கேட்டுமா முக்கியம்...?” கவலையான பதில் தான் வரும்.

விட்டிருந்தால் பதினாறு வயதிலேயே வசந்தியை மணமகளாக்கியிருப்பார்கள். 'படிக்கட்டும்' என்று அழுத்தமாய்ச் சொல்லி கடிவாளம் போட்டவன் இவன்தான். மூர்க்கமாய் மறுக்காமல் அப்பாவும், அம்மாவும் ஒப்புக் கொண்டார்கள் என்றால், அதற்கு அவன் வாங்கிய பத்தாயிரத்து சொச்சம் ஆரம்பச் சம்பளமும் ஒரு காரணம்.

காரை நிறுத்திவிட்டு இறங்குவதற்கு முன் அம்மா புடைவைத் தலைப்பைச் செருகியபடி ஓடி வந்தாள்.

“ஸ்ரீராமா, அப்படியே போய் வசந்தியை காலேஜ்லேயிருந்து அழைச்சுண்டு வந்துடு... மகாபலிபுரம் பிக்னிக் போய்ட்டு வந்து காத்திருப்பா குழந்தை. குமாரைப் போகச் சொல்லியிருந்தேன் – இப்பத்தான் அவன் போன் பண்றான் – அவசரமா 'ஓ' பாஸிடிவ் யாருக்கோ வேணுமாம் – அப்போலோ போக வேண்டியிருக்குன்னு... உங்கப்பாகிட்டே சொன்னா...”

“கத்துவார்! சரி சரி, போறேன்.” ரிவர்ஸ் கியர் மாற்றி, வெளியேறி, கோடம்பாக்கம் நோக்கிப் போய், பத்தாவது நிமிடம் கல்லூரிக்குள் நுழைந்தான்.

அனேகமாய் எல்லாப் பெண்களும் போய் விட்டிருந்தனர். மிச்சமிருந்த மூவருக்குத் துணையாக ஒரு பேராசிரியை மட்டும் முன் மேல் நிற்கும் தவிப்புடன் காவலிருந்தார்.

இவன் காரைப் பார்த்துவிட்டு விடைபெற்று வந்த வசந்தியின் நடையே வித்தியாசமாய்த் தெரிந்தது.



றைந்து வைத்த முன் பக்கத்தில் ஏறாமல் பின்னால் உட்கார்ந்து கதவை அறைந்து மூடினாள்.

"என்னாச்சு உனக்கு...?"

"போகலாம்..."

கல்லூரியை விட்டு கார் வெளியேறியதுமே பின் சீட்டில் விசும்பல் நிறைந்தது.

''வசந்தி, என்னம்மா...? ஏன் அழறே...?'' – விசும்பல் கேவலாயிற்று.

ரியர் வியூ மிர்ரர் வழியே தங்கையை கவனிக்க முயன்

றான், ஸ்ரீராம். பொழுது சாய்ந்து இருட்டிப் போயிருந்தது.

இது என்ன சங்கடம்! சொல்லிவிட்டு அழுது தொலைக்கக் கூடாதோ...? மனத்துக்குள் சலிப்பு வந்தது – இந்த சலிப்புக் கூட சமீபத்திய குணம்தான். சுகியுடன் நெருக்கமான பிறகு, அவளின் வலுவையும் தன்னம்பிக்கையையும் புரிந்து கொண்ட பிறகு, வீட்டுப் பெண்ணின் பலவீனமும் பதறலும் எரிச்சலூட்டுகின்றன.

தப்பு! தப்பு! என்று மானசீகமாய்க் கன்னத்தில் போட்டுக் கொண்டு, "வசந்தி, அழாதேம்மா... எதுவானாலும் வீட்டுக்குப் போய் பேசிக்கலாம்..." என்றான்.


"யாரு அவ...? சினிமா மாதிரி தொள்ல சாஞ்சுண்டு...? அழுகையுடன் கலந்து வார்த்தைகள் வந்தன.

ஒருகணம் திகைத்தான்.

ஈஞ்சம்பாக்கத்திலிருந்து திரும்பும்போது ஓவர்டேக் செய்த டூரிஸ்ட் பஸ், அதிலிருந்து வெளிப்பட்ட மாணவக் கூக்குரல்கள்....

"சொல்றேன்..."

?



தங்க நகைப் பரிசு!

இன்னும் 24 வாரங்கள் வெளிவரப் போகிற இந்த தொடர்கதை, வாராவாரம் ஓர் எழுத்தாளரின் பெயரில் வெளியாகும். ஆனால் முழுக்கதையையும் எழுதுபவர் ஒரே எழுத்தாளர்தான்! யார் அவர்?

வாரா வாரம் படித்து, யூகித்துக் கொண்டே இருங்கள். கடைசி வார அத்தியாயத்துடன் வெளியாகப் போகிற கூப்பனில், 'தொடரை எழுதியவர் யார்?' என்கிற உங்கள் யூகத்தை எழுதி அனுப்புங்கள்.

உங்கள் யூகம் சரியானதாக இருந்தால் உங்களுக்குத்தான் மின்னும் தங்க நகைப் பரிசு!

பலர் சரியான விடை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் ஓர் அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

"எல்லாவற்றையும் சொல்லி விட வேண்டியதுதான்."

வீட்டை நெருங்கியிருந்தார்கள். கேட்டைத் திறந்து விறுவிறுவென்று வாசற்படி ஏறிய வசந்தி, நின்றாள். கதவு பூட்டியிருந்தது. ஸ்ரீராம் மாற்றுச் சாவி எடுத்துத் திறக்க,

நாதாங்கியில் துண்டுக் காகிதம். 'அப்பாவும் நானும் திருவல்லிக்கேணி கோவிலுக்குப் போகிறோம். வர ஒன்பதாயிடும். ஸ்ரீராமுக்குச் சூடாக தோசை வார்த்துக் கொடு.'

– அம்மாவின் கையெழுத்தில் அன்றைய மாலைக்கான ஆணைகள்.

'அப்பாடி! வசந்தியைச் சரிக்கட்ட முழுசாக இரண்டு மணி நேரம் – அந்தப் பார்த்த சாரதி பெருமான் அருளால் கிடைத்திருக்கிறது...'

முன் அறை சோபாவில் முழங்கால்களை மடக்கி, தலையைப் புதைத்துக், குலுங்கிக் கொண்டிருந்தாள்.

மெள்ள தலையை வருடிச் சொன்னான்.

"போய் முகம், கை–கால் அலம்பிண்டு வா. எல்லாத்தையும் சொல்றேன்."

எழுந்து போனாள்.

எப்படி ஆரம்பிப்பது? என்னத்தைச் சொல்வது...? ஆரம்பத்திலிருந்தே ஆரம்பிப்பது என்று முடிவு செய்தான்.

"சுகன்யா அவ பேரு... சுகின்னு கூப்பிடுவோம். எங்க ஆபீஸ்ல கம்யூனிகேஷன்ஸ் மானேஜரா இருக்கா. அப்பா, அம்மா, கூடப் பிறந்தவங்க கிடையாது..."

"அதான் இப்படி வெட்கங்கெட்டு ஒட்டிண்டு உட்கார்ந்திருந்தாளா... அப்பா, அம்மா இருந்தா ஒழுங்கா வளர்ந்திருப்பா!"

"வசந்தி ப்ளீஸ்! வார்த்தையால கொட்டித் தீர்க்கறியே..."

"அவளைச் சொன்னா உனக்கு ஏன் கோபம் வருது...?"

"அப்படித்தான் வரும்! ஏன்னா நீ எதைத் தப்பு, கேவலம்னு நினைக்கறியோ, அதை நானும் சேர்ந்துதான் செஞ்சிருக்கிறேன். எனக்கு அப்பா, அம்மா இல்லையா? நீ இல்லையா? குமார் இல்லையா...?"

"அதானே! இவ்வளவு பேர் இருந்தும் நாங்க யாரும் உனக்கு முக்கியமாத் தோணலை... எல்லாரையும் ஏமாத்தியிருக்கே..."

"ஐயோ, வசந்தி! ஏமாத்தணும்னு நான் நினைக்கலை! சத்தியமா சுகியும் நினைக்கலை... அவ அப்பா தமிழர்; அம்மா பெங்காலி... அது தெரிஞ்சா நம்ம அப்பாவும் அம்மாவும் எப்படி ரியாக்ட் பண்ணுவாங்கன்னு உனக்குத் தெரியாதா?"

"உனக்கு மட்டும் தெரியாதா...? அப்புறம் ஏன் இப்படி...? கார்ல... சீ சொல்லவே வெட்கமாயிருக்கு..."

"இந்த மாதிரி ஃபீலிங்கெல்லாம் குலம் கோத்திரத்தை விசாரிச்சுத் தெரிஞ்சுண்டு வராது... ஆனால் வந்துடுத்துனா கூடவே..."

"கூடவே...?"

"ஒண்ணுமில்லை..."

'காதல் வந்தால் கூடவே களிப்பு வரும்; அது கைப்பற்றுதலுக்கும் தோள் சாய்தலுக்கும் தடம் அமைக்கும். அடுத்த கட்டம் என்ன வென்று அறியாமல் திட்டமிடாமல் நிகழும்' என்றெல்லாம் பத்து வயது இளைய தங்கைக்குப் பாடம் நடத்த முடியுமா...

ஸ்ரீராம் அவள் அறிவுக்கு மனு போட்டுப் பார்த்தான்.

"இதோ பாரு வசந்தி, காதல்ங்கிறது அசிங்கமான விஷயம் கிடையாது. ரொம்ப இயல்பான நிகழ்ச்சி! யாருக்கு வேண்டுமானாலும் ஏற்படலாம். ஏன்...? நாளைக்கு உனக்கே கூட..."

"மூடு வாயை...!"

"**ஸ்**தம்பிச்சுப் போயிட்டேன் சுகி... சில நிமிஷங்களுக்கு என்னால நிஜமாகவே பேச முடியலை. இவ்வளவு வருஷத்துல நான் வசந்திகிட்ட இப்படியொரு சொல் கேட்டது கிடையாது."

"எனக்கு அது ஆச்சரியமாவே தோணலை ராம்..." டீயை உறிஞ்சிக் குடித்தபடி சொன்னாள்.

புதிர் போல் அவள் முகத்தைப் பார்த்தான்.

"சுயமா யோசிக்க விடாம, இதிது சரி, இதிது தப்புன்னு உயரமா சுவர் எழுப்பி,

அதைத் தாண்டவிடாம பண்ணியிருக்கீங்க. இயற்கையிலேயே பயந்த சுபாவம். அதனால சுவத்துல ஓட்டை போட்டு, 'தப்பு' பக்கம் எட்டிப் பார்க்கற இயல்பான, வயசுக்குரிய குறுகுறுப்பு கூட இல்லை. கோழிக் குஞ்சைப் போல பதுக்கிப் பதுக்கி வளர்த்தா இப்படித் தான்..."

சுகன்யாவின் கண்களில் மின்னலடித்த கோபத்தை ரசித்தான்.

''சரி நாங்கதான் சரியா வளர்க்கலை, பட்டிக்காடு... நமக்குப் பொறக்கற குழந்தை களையாவது நீ...'' சொல்ல ஆரம்பித்தவன் திடீரென்று கூச்சத்தில் மௌனமாகிப் போய் தலைகுனிந்து காலிக் கோப்பையை ஆராய்ந் தான்.

"பார்த்தியா! இப்ப நீயே வெட்கப்படறே. சரி, நாம எவ்வளவு குழந்தைங்க பெத்துக் கலாம்? மூணு? நாலு? அஞ்சு...?"

அவன் விரல்களைப் பிரித்து, குதூகலமாய் எண்ண ஆரம்பித்தாள்.

"ஷ்! காலியா இருந்தாலும் இது பொது இடம்..."

'சாட்ஸ் அண்ட் சாய்' என்ற ரெஸ்டா ரண்டில் இருந்தார்கள். 'கல்கத்தா மாதிரி வராது' என்றபடியே சுகன்யா பானி பூரியும் பாப்டி சாட்டும் விரும்பிச் சாப்பிடும் இடம். டீயைக் கொதிக்க கொதிக்க அவனும், ஊதி ஊதி ஆறவைத்து அவளும் ருசிக்கும் மிதமான விலைப்பட்டியல் கொண்ட உணவு விடுதி.

"இதைச் சாக்கா வைச்சு நீ எல்லாத்தையும் திறந்து அப்பா, அம்மாகிட்டே சொல்லி யிருக்கணும் ஸ்ரீராம்! ஒரு நல்ல சந்தர்ப்பத்தைத் தவற விட்டுட்டே..."

"இல்லை சுகி! இந்த விஷயம் தெரிஞ்சா அப்பா எப்படி ரியாக்ட் பண்ணுவார்னே சொல்ல முடியாது. இதுனால வசந்தி கல்யாணம் பாதிக்காம இருக்கணுமேன்றது தான் என் முக்கியமான கவலை. அதனாலே தான் அவகிட்டே வாக்குறுதி வாங்கிண்டேன். இது விஷயமா ஒண்ணும் பேசக்கூடாதுன்னு..."

"எப்படி ஒத்துக்கிட்டா...?"

''ராமரும் சீதையும் நேசிக்கலையா? கண்ணனும் ராதையும் காதலிக்கலையா? வள்ளி திருமணம் கதையைக் கேட்டு எவ்வளவு ரசிச்சிருக்கே...? அப்படின்னு புராணங்கள்ல தஞ்சமாயிட்டேன்..."

"அடக் கடவுளே!"

"கடைசியில கடவுள்தான் காப்பாத்தினார். அவளுக்கு தெய்வபக்தி ஜாஸ்தி. இதையெல் லாம் சொன்னதும், யோசிக்க ஆரம்பிச்சா..."

"நீயொரு ஃப்ராடு ஸ்ரீராம்! காதலிக்க ஆரம் பிச்சப்போ ராமனையும் கிருஷ்ணனையும் நினைச்சு உன்னை நியாயப்படுத்திக்கிட்டியா...? இல்லை,' முருகன் வள்ளி கையைப் புடிச்ச



''ஒரு எல்லை வரைக்கும்தான் கவர்ச்சியா நடிப்பேன்னு சொல்றீங்களே, எது வரைக்கும் கவர்ச்சியா நடிப்பீங்க?''

''இந்திய எல்லை வரைக்கும்தான்!''

– ரமேஷ்ராமன்

மாதிரி திடீர்னு என் கையைப் புடிச்சியா... உன் சௌகரியத்துக்குப் புராணங்களை யெல்லாம் இழுத்து வளைச்சு இப்ப வசந்தியை ஏமாத்தியிருக்கே!"

''சும்மா விதண்டாவாதமா பேசாதே. அவளுக்குப் புரியற லெவல்லதானே நான் விளக்க முடியும்? உன்னை மாதிரி கிப்ளானை யும் ஷெல்லியையும் ஷேக்ஸ்பியரையும் படிச்சு வளர்ந்தவ இல்லையே அவ...? அது சரி, உனக்கு எப்படி வள்ளி திருமணம் கதை தெரியும்...?"

''அப்பாதான் சொல்லியிருக்கார். நீ சொல்ற மாதிரி எனக்கு ஷெல்லியும் ஷேக்ஸ் பியரும் படிச்சு காதல்ல ருசி வரலை. அதுக்கு முன்னாடியே, ஏழு வயசுல அப்பா சொன்ன கதைகளைக் கேட்டே என் ராஜகுமாரனைத் தேட ஆரம்பிச்சுட்டேன். யூ நோ... ஒரு கட்டத் துல அப்படி ஒருத்தன் கிடைக்கவே மாட் டான்னு எனக்கு அவநம்பிக்கையே வந்து டுத்து..."

"அப்புறம்...?"

"அப்புறம் விழுப்புரம்!"

– சுகன்யா தன்னைப் போலவே கிண்ட லாய் பதில் சொன்னதும் சிரித்தான்.

"கடைசில நான்தான் ஜெயிச்சிருக்கேன். ஸ்ரீராம்..." என்றாள்.

"என்ன சொல்றே...?"

"வசந்தி கல்யாணத்துக்கு நான் வருங்கால அண்ணியாத்தான் வரப் போறேன். உங்க அப்பா, அம்மாக்கெல்லாம் தெரியாட்டாலும் அவ வரைக்குமாவது தெரியுமில்லையா...?"

''மன்னி...'' ரகசியமாக உச்சரித்துப் பார்த்துக் கொண்டாள் வசந்தி. அவள் மனத் திலிருந்த கற்பனை பிம்பத்துக்கும் காரில் பார்த்த தலைவிரி கோலப் பெண்ணுக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது.



''இண்டர்வியூல இவ்வளவு ஈஸியா கேள்வி கேட்பீங்கன்னு எதிர்பார்க்கலே சார்...''

''எப்படியும் உங்களுக்கு வேலை கொடுக்கப் போறது இல்லே. இண்டர் வியூலயாவது சந்தோஷத்தைக் கொடுக் கலாமேன்னுதான்!''

– எஸ்.எஸ். பூங்கதிர்

'எப்படி மனசு வந்தது அண்ணாவுக்கு? அம்மாவை மீறவும் அப்பாவை எதிர்க்கவும் எங்கேயிருந்து துணிவு வந்தது? எவ்வளவு கஷ்டப்பட்டு வளர்த்திருக்கிறார்கள்? அண் ணாவுக்குப் பரீட்சையென்றால் அப்பாவும் கூடவே கண் முழிப்பார். அம்மா நூற்றியெட்டு முறை ஆஞ்சநேயர் சுலோகத்தைச் சொல்லி, துளசி கொடுத்து அனுப்புவாள்... பணம் கட்ட, புத்தகம் வாங்க என்று அவனுக்காகப் பணம் ஒதுக்கி, தங்கள் சௌகரியங்களைக் குறைத்துக் கொண்ட சம்பவங்கள் ஏராளம். அவர்கள் விருப்பப்படி கல்யாணம் நடக்க அவன் அனு மதித்திருந்தால் குறைந்தபட்ச நன்றிக்கடன் செலுத்தியவனாகியிருப்பான்... இப்படிக் கையில்லாத ரவிக்கையோடு ஒரு மன்னி...

''ஏண்டி தட்டை சும்மா அளையறே? அடுத்த வேளைச் சாப்பாட்டிற்கே நேரம் வந்துடும். நீ எழுந்துக்கறதுக்குள்ளே...'' அம்மா சலித்துக் கொண்டாள்.

''நானும் பார்க்கறேன், நாலு நாளா ஏதோ கப்பல் மூழ்கின மாதிரி மூஞ்சியைத் தூக்கி வைச்சிண்டிருக்காம்மா...'' குமார் ஒத்துப் பாடினான்.

''என்ன வசந்தி? ஏதாவது காதல் சமா சாரமா...? யாரையாவது லவ் கிவ் பண்றியா...? சொல்லு, அப்பா, அம்மாகிட்டே சிபாரிசு பண்றேன்.''

விளையாட்டாய்த்தான் சொன்னான் குமார். அதற்குப் போய் அவள் இப்படி அழுவாள் என்று எதிர்பார்க்கவில்லை. தட்டை வைத்துவிட்டு எழுந்து ஓடினாள். திரண்டு வந்த துக்கத்தில், சாப்பிட்டது அத்தனையும் வெளியேறிவிட்டது.

ஒரே நிமிடத்தில் வீடு வியட்நாம் வீடானது.

''ஏண்டா அவளைச் சீண்டி அழ விடறே...?'' ஆற்றாமையுடன் கையோங்கினாள் சரஸ்வதி.

''சச்சு; என்ன ரகளை; ஏன் அவனை அடிக்கிறே...?'' என்றபடி வந்த ராமநாதன், கிழிந்த நாராய் வசந்தி நின்ற கோலத்தைப் பார்த்து அதிர்ந்தார்.

''குழந்தைகிட்டே போய்ச் சீண்டறான். லவ் பண்றியா, அது இதுன்னு... அசிங்கமா...''

ஒரு வாரமாக உள்ளே போட்டு வைத் திருந்த பயங்கர ரகசியம் வெடித்துக் கொண்டு வெளியே வரத்துடிப்பதை உணர்ந்தாள் வசந்தி.

'பிராமிஸ் பண்ணு... வேற யாருகிட்டேயும் இதைப் பத்தி இப்போதைக்குப் பேச வேண் டாம்...'

அண்ணாவின் கையடித்துச் சத்தியம் பண்ணியபோது, அவன் கண்கள் பனித்துப் போனது நினைவுக்கு வர, வசந்தி தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

''ஆனாலும் இவ்வளவு அழுமூஞ்சியா நீ இருக்க வேண்டாம் வசந்தி...''

'அண்ணாவுக்கு வாக்கு கொடுத்ததுக்காக அப்பா, அம்மாவிடம் உண்மையை மறைக்க லாமா...?'

''சும்மா விளையாட்டுக்குத்தானே பேசி னான் குமார்...''

'உண்மையை மறைக்கறதே பொய் சொல் றதுக்குச் சமம்தானே...'

''அவனும் ஸ்ரீராம் மாதிரி உன் அண்ணா தானே? என்ன, கொஞ்சம் சீண்டற சுபாவம். அதை நீதான் புரிஞ்சுண்டு தள்ளிண்டு போகணும்!''

'அப்பா – அம்மாகிட்டேயே உண்மையை மறைக்கலாமா... அதுவும் இவ்வளவு சீரியஸான ஒரு விஷயத்தை...'

பெற்றோர் மாறி மாறி சமாதானம் செய் தது மனத்தில் பதியாமல், வசந்தி தனியொரு சிந்தனை உலகில் சுற்றி வந்தாள்.

''நாளைக்குக் கல்யாணமாகி குடித்தனம் பண்றச்சே இப்படியெல்லாம் மூக்கைச் சிந்திண்டு அழுதுண்டு இருந்தா கட்டுப்படி யாகுமா...?''

திரும்பவும் எழுந்த கல்யாணப் பேச்சில் அறுபட்ட தந்தியாக உண்மை அவளிடமிருந்து வெளிப்பட்டுச் சிதறியது.

''அப்பா, அண்ணா ஒரு பொண்ணை லவ் பண்றாம்பா. அவளைத்தான் கல்யாணம் பண்ணிப்பேங்கறான்...''

உதடு துடிக்க அப்பாவைப் பார்த்தாள்.

''யாரு... ஸ்ரீராமனா...?''

''ஊம்...''

ஒருகணம், ஒரே ஒரு கணம்தான் – அவர் விழிகள் தோல்வியால் துவண்டதை உணர்த் தின. மறுகணமே கோபத்தில் இறுகிக் கொண் டன.

(தொடரும்)

"நான் காட்டப் போவதில்லை. நீயே உன் செயலாலே தெரிந்து கொள்வாய்..."

மறுநாள் 'குருவின் காதிலே ஓர் ஓணான் புகுந்து விட்டது; அதனால் அவர் மாண்டு விட்டார்....' என்று ஒரு வாக்கியத்தைப் பத்னிக்குச் சொல்லிக் கொடுத்து, அதை மூன்று மாணவர்களிடத்திலும் சொல்லச் சொன்னார்.

வியாகர்ணம் படிக்கிறவன் வந்தான். அவனிடம் குரு பத்னி இதைச் சொன்னபோது, அவள் சொன்ன வாக்கியத்தின் இலக்கணத்திலே அவனுக்குச் சந்தேகம் வந்துவிட்டது... உடனே அதைச் சரி பார்க்க நூல்களைத் தேடிப் போனான்.

ஜோதிஷம் படிக்கிறவனிடமும் அதையே சொன்னார். அவனோ 'சனி தசையானால் நீங்கள் சொல்வது போல் நடக்கக் கூடும். குரு தசையிலே நடக்காதே....' என்று குருவினுடைய ஜாதகத்தைத் தேடிப் பார்க்கப் போய்விட்டான்.

இத்தனையும் கேட்டபடி, குரு சமையலறையிலே, மறைவிலே இருந்து சிரித்துக் கொண்டிருக்கிறார்.

மூன்றாவதாக, தர்க்கம் படிப்பவன் வந்தான். அதே விஷயத்தை குரு பத்னி அவனிடம் சொன்னதுதான், தாமதம் ''அசம்பவம்!'' என்றான் அவன். "நீங்கள் சொன்னது நடந்திருக்க முடியாது...!''

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?"

''குருவினுடைய காது துளை சிறியது. ஓணான் அவர் காதுக்குள்ளே எப்படி நுழையும்? நீங்கள் சொல்வது மாதிரி ஒரு வேளை ஓணான் நுழைந்து குரு மாண்டு போய் விட்டார் என்றே வைத்துக் கொள்வோம், இப்படி நீங்கள் சிரித்தபடி என்னிடம் பேசுவீர்களா? நித்தியம் கணவன் - மனைவி சண்டை நடக்கும் ஒரு கிரஹத்திலே கூட பர்த்தா மாண்டு போனால் பத்னி அழுவாள். நீங்களோ அழாமல் சிரித்தபடி இருக்கிறீர்கள்.... ஆசார்யரே என்னைப் பரீட்சை பண்ண வேண்டாம்; வெளியே வாருங்கள்!" என்றான் தர்க்க சாஸ்திர மாணவன்.

''சத்சிஷ்யனே!'' என்று ஓடி வந்து அவனைக் கட்டிக் கொண்டார் குரு. "இப்போ புரிகிறதா தர்க்க சாஸ்திர மகிமை...." என்று பத்னியைப் பார்த்துக் கேட்டார்.

இடம் பொருள் ஏவல் அறிந்து பேசும்படியான புத்தி கூர்மை தர்க்க சாஸ்திரத்தைப் படிப்பவருக்கு அமைகிறது. இப்படிப்பட்ட தர்க்க சாஸ்திரம் சொல்வதுதான் தொன்னைக்கு நெய் ஆதாரம் என்கிற உண்மை.

ஆலிலைக்கு பகவான் ஆதாரமா? பகவானுக்கு அது ஆதாரமா? என்றால் பகவானே விச்வமாக இருக்கிறபோது அதில் ஒரு துளி தானே ஆலிலை.... அதையும் சேர்த்து அல்லவா தாங்குகிறான் என்று ஆகிறது! இப்படி தர்க்க வாதத்திலே முடிவு கிடைக்கிறது. ஆனால் அந்த தர்க்கத்தையும் தாண்டி நிற்கக் கூடிய விச்வபதி அவன். ஆலிலை அவனைத் தாங்குவதாகத் தோன்றுகிறது. ஆனால் ஆலிலையோடு, விச்வத்தையும் அதிலுள்ள வேதங்களையும் சேர்த்து அல்லவா பகவான் தாங்கிக் கொண்டிருக்கிறான்?

எனவேதான் வேதங்களைக் காப்பாற்ற அவன் எடுத்த மத்ஸ்யாவதாரம் விச்வம் என்கிற சப்தத்தினால் அறியப்படுகிறது.

(தொடரும்)

ஸ்ரீ கள் செய்வார்களா?



தமிழக அரசு ஸ்ரீரங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர், ஸ்ரீவைகுண்டம் ஆகியவற்றின் பெயர்களை திருவரங்கம், திருவில்லிபுத்தூர், திருவைகுண்டம் என்று மாற்றவிருக்கின்றது.

ஸ்ரீ என்று ஆரம்பிக்கும் சில பிரபலங்களின் பெயர்களைத் திருவென்று ஆரம்பித்தால் எப்படி இருக்கும்.

ஸ்ரீதர் - திருதர்; ஸ்ரீதேவி - திருதேவி; ஸ்ரீபால் - திருபால்; ஸ்ரீப்ரியா - திருப்ரியா; ஸ்ரீநிவாஸன் - திருநிவாஸன்; ஸ்ரீவித்யா - திருவித்யா; ஸ்ரீகாந்த் - திருகாந்த்; ஸ்ரீலேகா - திருலேகா; ஸ்ரீநிதி - திருநிதி.

உடனடியாக இவர்கள் தங்கள் தமிழ்ப் பற்றைக் காண்பிப்பார்களா?

— வி. சிந்தாரவி

வாழ்க்கை

அந்த மரணத்தில் சோகத்தைவிட அதிர்ச்சிதான் இருந்தது. மரணம் இல்லை... மரணங்கள்... அவளும், அவளது இரண்டு குழந்தைகளும். போலீஸ் என்கொயரி, போஸ்ட் மார்ட்டம் எல்லாம் முடிந்து வரிசையாகக் கிடத்தப்பட்டிருந்தார்கள். வெள்ளிக்கிழமை இரவு, மூவரும் தற்கொலை செய்து கொண்டார்கள். மூன்று தற்கொலை என்பதை விட இரண்டு கொலை, ஒரு தற்கொலை என்றுதான் சொல்ல வேண்டும். எட்டு வயது, ஐந்து வயது பிள்ளைகளுக்குத் தற்கொலை பற்றி என்ன தெரியும்? அம்மாதான் இருவருக்கும் விஷத்தைக் குடிக்கக் கொடுத்து, தானும் குடித்து இறந்து விட்டாள்.

எப்படித்தான் மனசு வந்ததோ. செக்கச் செவேலென்று கொழுத்த கன்னத்துடன், சற்றே நீலம் படர்ந்த முகத்துடன் அமைதியாகப் படுத்திருந்த அந்தக் குழந்தைகளைப் பார்த்து மனம் தாங்க முடியாமல் தவித்தது.

அப்படி என்னதான் கஷ்டம்?

பணக்கார வீட்டில் பிறந்து, பட்டு மெத்தையில் வளர்ந்து, வாழ்க்கைப்பட்டதும் வசதியான இடத்தில்தான். பிஸினஸில் கொடி கட்டிப் பறந்தான் அவள் கணவன்.

திருமணமான பத்து ஆண்டுகளில் அவளும் அவனும் வாழ்ந்த வாழ்க்கையின் முழுமையைக் கண்டு பொறாமைப்பட்டவர்கள் அதிகம். இராப் பகல் உழைத்து பணம் சம்பாதிக்கவும், அதை அனுபவிக்கவும் தெரிந்தது அவனுக்கு. ஒவ்வொரு சனிக்கிழமை இரவும், ஞாயிற்றுக் கிழமை பகலும் வெளியில் சுற்றுவதும், பலவிதமாக உடுத்திக் கொண்டு, அலுக்காமல் புதுப்புது நகைகளைப் போட்டுக் கொண்டு முகமெல்லாம் சிரிப்பாக... முக்கியமாக அவள் வெள்ளை முகத்தில் இருந்த பூரிப்பு, சிரிப்பு... இப்படி உலர்ந்து உறைந்து போனதின் காரணம்?

அன்பைக் கொட்டிய காதல் கணவன், தன்னந்தனியாக விட்டு விட்டுச் சென்று விட்டானே என்ற ஆதங்கமா? இரண்டு நாள் சுரத்தில் எமன் வாயில் விழுந்துவிட்டது தாங்க முடியாத துக்கம்தான். எதிர்பாராத இழப்புதான். ஆனால் நடந்து மூன்று மாதங்களாகியுமா இன்னும் இவள் மனதை தேற்றிக் கொள்ளவில்லை? பிள்ளையை இழந்த இவள் மாமியாரும் சரி, மச்சினர், நாத்தனாரும் சரி... இவள் கூட இருந்து எவ்வளவோ தைரியம் கூறியும் அதற்குப் பலனில்லாமல் போய்விட்டதே. அன்பான குடும்பம் அவர்களுடையது. எனக்குப் பல வருடங்களாகப் பழக்கம். நிச்சயம் இவளைக் கை விடமாட்டார்கள். பண உதவி இவளுக்குத் தேவைப்படாது. பத்துத் தலைமுறை குந்தித் தின்றாலும் குறையாத சொத்து கூட. அதில் வரும் வட்டியில் மூன்று என்ன, முப்பது பேர் கூடச் சாப்பிடலாம். வாழ்க்கைத் தரத்தில் கொஞ்சம் கூட மாறுதல் இல்லாமல் வாழலாம்.

ஆனால் அவன் இல்லாமல் வாழ அவளுக்குச் சம்மதமில்லையோ... அதெப்படி? நிஜமான அன்பு இருந்திருந்தால் அவன் விட்டுச் சென்ற அவன் வாரிசுகளை வளர்த்து மனிதர்களாக, அவன் நினைவுச் சின்னங்களாக உருவாக்கிப் பெருமை கொண்டிருக்க வேண்டுமில்லையா? கணவனின் அன்பு வேண்டும், அவன் பணம் தந்த வசதி வேண்டும். ஆனால் விட்டுச் சென்ற பொறுப்புகள் மட்டும் சுமையாகிவிடுமா?

இதோ... இருபத்தி ஆறாவது வயதில் கணவன் இறந்த பின் இரு மகன்களையும் ஒரு மகளையும் தானே வளர்த்து ஆளாக்கிய அந்தத் தாய்... அவள் மாமியார்... இத்தனைக்கும் அவள் படிக்காதவள். அவளுக்கு இருந்த மனோதிடம் இவளுக்கு இல்லாமல் போனதேன்?

இதோ இரு குழந்தைகளின் சவத்திற்கு நடுவில் அமர்ந்து கொண்டு தலைவிரி கோலத்தில்... நடுத் தெருவில் உட்கார்ந்து அரற்றும் இந்தப் பாட்டியின் சோகம்தான் சத்தியம். குழந்தைகளின் கன்னத்தைத் தடவிப் பார்த்து... அதில் சூடு இருக்கா... என்றா....? என்ன வயிற்றெரிச்சல். அவள் செய்த தியாகம், உழைப்பு எல்லாம் வீண் வியர்த்தம்.

பணக்காரக் கும்பல்... பலர் உறவினர்கள், சிலர் நண்பர்கள்... தெருவாசிகள்.. வேடிக்கை பார்க்க வந்தவர்கள். இதில் சம்பந்தப்படாத ஒரு சிறு பெண்... ஓரமாக நின்று கொண்டிருந்தாள். முகத்தில் அலாதி வருத்தம். சின்னப் பெண். பன்னிரெண்டு வயது இருக்கும். யார் இது? ஆ! ஞாபகம் வந்தது. இவர்கள் வீட்டு வேலைக்காரக் குட்டி. இரண்டாவது குழந்தை பிறந்ததும், "இடுக்கிக் கொள்ள" ஏற்பாடு செய்யப்பட்ட பெண். இவர்கள் வீட்டுக்குச் செல்லும் போதெல்லாம் குழந்தையைத் தூக்கிக் கொண்டு சிறு சிறு வேலைகளைச் செய்யும் பட்டாம் பூச்சி. இன்று அமைதியாக ஓர் ஓரத்தில் நின்று கொண்டிருந்தாள். நடப்பதில் கலந்து கொள்ள உரிமையில்லை. அந்நிய துக



கம் என்று வில கவும் முடியவில்லை.

மற்ற விதிகள் நடந்து கொண்டிருக்கையில் அவளிடம் மெதுவாகப் பேச்சுக் கொடுத்தேன்.

"உம் பேர் என்னம்மா?"

"விஜயா."

"அஞ்சு வருஷமாச்சா நீ இங்க வேலைக்கு வந்து?"

"ம். சின்னப் பையன் பிறந்து ஒரு வாரத்துக் கெல்லாம் வந்தேன். அது எங்கிட்டதான் எப்ப வும் இருக்கும்."

"என்ன சம்பளம் உனக்கு இங்க?"

"சாப்பாடு துணிமணியோட மாசம் இரு நூறு ரூபா...."

"சேத்து வச்சிருக்கியா?"

"இல்லீங்க. பணத்தை எங்கம்மா வாங்கிக் கிடும். எங்கப்பாரு செத்துப் போனப்ப இங்க கொண்டு விட்டாங்க. அம்மாவும் நாலு வீட் டுல வேலை செய்யுது. அதில ஒரு ஐந்நூறு வருது. அதிலதான் அம்மா, என் தம்பிங்க இரண்டு பேர் சாப்பாடு, வாடகை கட்டி, ஸ்கூல் பீஸ் அடைச்சு.... என்னையும் படிக்க வைக்க ஆசை. ஆனா முடியாது."

"இப்ப நீ என்ன பண்ணுவே?"

"வேற வேலைக்குப் பார்க்கணும். ஏறத்தாழ இருந்தாலும் சம்பளம் வேணுமே. நானும் அம்மாவும் சம்பாரிச்சாதான் குடும் பம் நடக்கும்."

"உங்கப்பா ஒண்ணும் விட்டுப் போகலியா?"

"பெரிசா ஒண்ணுமில்லீங்க. அவர் வாட்ச்மேனா வேலை பார்த்தாரு. நல்ல சம்பளம்தான். அவர் உயிரோட இருந்த வரைக்கும் அம்மா வீட்டோடதான் இருக் கும். நானும் பள்ளிக்கூடம் போயிட்டு இருந் தேன். சந்தோஷமாக இருந்தோம். ஆனா பெரிசா சேமிக்க எல்லாம் முடியலே. அப்பா லாரி மோதி செத்தப்ப, எங்கம்மா ஒடிஞ்சு போயிட்டாங்க. அப்புறம் மெதுவா தேத்திக் கிட்டு ஒரு மாதிரி தைரியமாயிட்டாங்க. இப்ப எப்படியாவது எங்களை பெரிசாக்கிடணும்னு உழைக்கிறாங்க. நானும் வேலை செஞ்சா சமா ளிக்கலாம்." என்று அவள் கூறக் கூற, ஓர் உண்மை பளிச்சென்று புரிந்தது.


வாழ்க்கையை வாழ்வதற்கு பெரிய படிப்போ, வசதியோ, பணமோ தேவையில்லை. மனோ தைரியமும் கஷ்டங்களைச் சந்திக்கத் துணிவும் இருந்தால் போதும்.

பிணங்களைத் தூக்க ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. வந்திருந்த பலர் புடைவை புதுத் துணிகளுடன் காத்திருந்தார்கள், சுற்றி வந்து காலடியில் வைத்து மரியாதை செய்ய. எங்களில் இந்த வழக்கம் உண்டு. நான் தூரத் தில் நின்று பார்த்துக் கொண்டிருந்தேன்.

கடைசி யாத்திரை புறப்பட்ட பின்னும் என் கையில் கொண்டு வந்த புடைவைத் துணி அப்படியே. ஏதோ ஓர் உத்வேகத்தில் அந்தப் பார்சலை வேலைக்காரப் பெண் கையில் தந்து விட்டு... நீ கட்டிக்கோ... என்று கூறிவிட்டு திரும் பிப் பாராமல் வெளியே நடந்தேன்.

பானுகுமார்

ரிசர்வ் வங்கியின் ஓர வஞ்சனை!



அவசரத்துக்குக் கடன் வேண்டுமென்றால் அடகுக் கடைக்காரரிடம் போய் சிக்கிக் கொள்ளாமல், சுலபமாக மிதமான வட்டிக்குக் கடன் தந்து உதவி வருகின்றன நிதி கம்பெனிகள். இந்த நிதி கம்பெனிகள் மற்றும் பெனிஃபிட் ஃபண்டுகளின் சரித்திரம் ஒரு நூற்றாண்டுக்கும் மேற்பட்டது. இவை தமிழ் நாட்டில் மட்டுமே இயங்கி வருகின்றன என்பதும் குறிப்பிடப்பட வேண்டிய விஷயம். திருவல்லிக்கேணி பெனிஃபிட் ஃபண்ட், ஆழ்வார்பேட்டை பெனிஃபிட் ஃபண்ட், மைலாப்பூர், புரசைவாக்கம், பார்க் டவுன் பெனிஃபிட் ஃபண்டுகள் என்று அந்தந்த குடியிருப்புப் பகுதி மக்களுக்கும் குறிப்பாக சிறு வியாபாரிகளுக்கும் உதவிகரமாய் இருப்பதற்கென்றே ஆரம்பிக்கப்பட்டவை இவை.

பெறுகின்ற டெபாஸிட்களுக்கு, வங்கிகளைக் காட்டிலும் நான்கைந்து சதவிகிதம் கூடுதலாக வட்டி கொடுப்பதுடன் உறுப்பினர்களுக்கு சுலபத் தவணைகளில் திருப்பக் கூடிய கடன்களையும் தந்து வந்த இவற்றுக்குச் சமீபத்தில் ஒரு பலத்த அடி விழுந்திருக்கிறது. சாட்டையைச் சொடுக்கியிருப்பது ரிசர்வ் வங்கி! இந் நிறுவனங்கள் 15 சதவிகிதத்துக்கு மேல் வட்டி கொடுக்கக் கூடாது என்பது ரிசர்வ் வங்கியின் ஆணை. 'அந்தந்த வட்டார மக்களுக்காக நடத்தப்படுவதால் அவர்கள் தாமாகவே முன்வந்து இந்த நிறுவனங்களில் உறுப்பினர்களாவார்கள்; எனவே இந்த நிதி கம்பெனிகள் டெபாஸிட் கோரி விளம்பரமும் செய்யக்கூடாது' என்பது ரிசர்வ் வங்கியின் இன்னொரு ஆணை! பங்குதாரர்களின் (உறுப்பினர்கள்) டெபாஸிட்களை மட்டுமே ஏற்றால் போதும்; புதிய டெபாஸிட்களை வெளி வட்டாரத்தவர்களிடமிருந்து பெற வேண்டிய அவசியமில்லை என்பது ரிசர்வ் வங்கியின் வாதம்.

ஆனால் இந்த வாதம் சரியானது அல்ல. நிதி கம்பெனிகளின் அங்கத்தினர்கள் ஏராளமாக இருப்பதால், ஒவ்வொருவரையும் தனித் தனியே அணுகுவதற்குப் பதில், விளம்பரங்கள் மூலம் அணுகி, அதிக டெபாஸிட் பெறுவதில் என்ன தவறு? மேலும் தங்கள் செயல்பாடு சிறப்பாக இருப்பதாக இந்த விளம்பரங்கள் மூலம் அங்கத்தினர்களுக்கு நிதி கம்பெனிகள் அறிவுறுத்துகின்றன. ரிசர்வ் வங்கியே, பல்வேறு தனியார் நிறுவனங்களும் பங்குதாரர்களின் நலன் கருதி தங்கள் நிதி நிலைமை குறித்து



"இது மூப்பனாரை பாதிக்கிற பட்ஜெட்!"

சென்னையில் நடந்த பட்ஜெட் விளக்கக் கூட்டத்தில் மூன்று புதுமைகள்.

1. பட்ஜெட் போட்ட நிதி அமைச்சரே அதை விளக்கிப் (ஒருவித தன்னிலை விளக்கம் தான் என்றாலும்!) பேசியது.

2. டெக்னிகலாகவெல்லாம் பேசி, குழம்பியவர்களை மேலும் குழப்பாமல், பாமர ரஞ்சகமாக – ஆங்காங்கே நகைச்சுவை சொட்டப் பேசியது.

3. பொது மக்களைக் கேள்வி கேட்க விட்டு (எழுதித் தரச் சொல்லி) அதற்கும் பொறுமையாக பதில் சொன்னது.

தமிழ் மாநில காங்கிரஸ் ஏற்பாடு செய்திருந்த இந்தக் கூட்டத்தில் காமராஜ் அரங்கம் நிரம்பி வழிந்தது. ஒரு நாட்டின் நிதியமைச்சர் பேச்சிலும் பழகுதலிலும் இத்தனை எளிமையாக இருக்கிறாரே என்று வந்திருந்த சுமார் இரண்டாயிரம் பேரும் (முன்னூறு முன்னூற்றைம்பது புடைவைகள், இருபது சுடிதார்கள் உட்பட) வாயடைத்துப் போய் விட்டார்கள்!

ஒரு மேல்நிலைப் பள்ளிப் பொருளாதார வாத்தியார் மாதிரிதான் ஆரம்பித்தார் சிதம்பரம். கேஷுவலாகத் தொடங்கியது பெரிசில்லை. அதே நகைச்சுவையுணர்வை கடைசி வரை கடைப்பிடித்ததுதான் அதிசயம்!

ஓர் உதாரணம் : மாநில நிதி அமைச்சருக்கும் மத்திய நிதி அமைச்சருக்கும் என்ன வித்தியாசம்? இரண்டு பேரும் பட்ஜெட் போடுகிறார்கள். இரண்டு பேரும் அறிக்கை சமர்ப்பித்து, வாங்கிக் கட்டிக் கொள்கிறார்கள். இரண்டு பேரும் பற்றாக்குறை பற்றிப் பக்கம் பக்கமாகப் புலம்புகிறார்கள்.

என்ன பெரிய வித்தியாசம்?

"மாநில நிதி அமைச்சரால் அதிகபட்சம், புலம்பத்தான் முடியும். மத்திய நிதி அமைச்சரோ, புலம்பி விட்டு, நாசிக்குக்கு ஒரு போன் அடித்து, கூடுதலாக நோட்டு அடிக்கச் சொல்லி விடலாம்!"

– சிதம்பரம் இதைச் சொன்னபோது நிறைய பேர் சிரித்தார்கள், பின்னால் இருக்கிற சிரமங்கள் புரியாமல். அடிக்கிற நோட்டுக்குச் சமமாகத் தங்கம் வைத்தாக வேண்டும். முழி பிதுங்குகிற கேள்விகளுக்கு ரிசர்வ் வங்கி பதில் சொல்லியாக வேண்டும்.

பெட்ரோல் – டீசல் – சமையல் வாயு விலையேற்றம் பற்றி மக்கள் சரமாரியாகக் கேள்விக்கணைகள் தொடுத்தார்கள். சிதம்பரத்தின் பதில் :

"பட்ஜெட்டுக்கும் அதற்கும் சம்பந்தமில்லை. பட்ஜெட்டுக்கு முன்பே விலை ஏறி விட்டதே? பெட்ரோலியப் பொருள்களின் கொள்முதல் விலைக்கும் விற்பனை விலைக்கும் உள்ள இடைவெளி குறைந்து விட்டதால் தான் விலையேற்றம்."

இப்படியொரு வாழைப்பழ பதிலைக் கேட்டு மக்கள் எப்படி அன்று அமைதியாக இருந்தார்கள் என்பதுதான் புதிர்.

விலைவாசி பற்றி என்ன சொன்னார்?

மூச்! மிகத் திறமை வாய்ந்த மேடைப் பேச்சாளர்களைக் காட்டிலும் சாமர்த்தியமாக அந்த சப்ஜெக்டுக்கே போகாமல், கேட்பவர்களுக்கும் அந்த ஞாபகமே வரவிடாமல் எங்கெங்கோ ஊர்கோலம் கூட்டிப் போய் விட்டார்!

அன்றைய கூட்டத்தின் ஹை-லைட், 'சிகரெட் மீது மட்டும் ஏன் வரி போட்டேன்?' என்பதற்கு சிதம்பரம் சொன்ன காரணம்தான்.

"சுதந்தர இந்தியாவின் ஐம்பதாவது பட்ஜெட்டைப் போடுகிற பெருமை, எங்கள் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் அமைச்சராகியிருக்கும் எனக்குக் கிடைத்திருக்கிறது. இந்த பட்ஜெட், எந்த வகையிலாவது எங்கள் தலைவர் மூப்பனாரை பாதிக்க வேண்டாமா? அதனால்தான் சிகரெட் மீது மட்டும் வரி அதிகப்படுத்தினேன்!"

— ஔரங்கசீப்

வண்ணப்படம் : சாய்வர்ஷா

நாற்பத்து மூன்றாவது

சத்தியப்பிரியன்

சில்வியா மீண்டும் அந்த வலியை உணர ஆரம்பித்தாள். அதன் தன்மை, வீச்சு, நிலை கொண்ட இடம் எதுவுமே சரியாகப் புரிபடாமல் போனாலும் அந்த வலி தோன்றிய மறுகணம் ஏற்படும் மூச்சுத் திணறல் இம்முறையும் எழுந்தது. கண்ணுக்குப் புலப்படாத ஒரு முரட்டுக் கரம் அவளது நுரையீரல் பைகளை இறுக்கிப் பிழிவது போல் இருந்தது.

மேனி முழுவதும் வேர்த்திட, கட்டிலுக்கு அருகாமையில் இருந்த விடிவெள்ளி விளக்கின் ஸ்விட்சை போட்டாள். வெளிச்சம் என்றுமே வலிகளை வலுவிழக்க வைக்கும். மணி இரண்டைத் தாண்டியிருந்தது.

மெத்தையின் மீது சில்வியா நன்றாக சம்மணமிட்டு அமர்ந்தாள். ஐம்பது வயது நெருங்குவதை சுருக் என வலிக்கும் முட்டிகள் நினைவுபடுத்தின. மூச்சை சீராக உள்வாங்கி, சிறிது நேரம் சஞ்சரிக்கவிட்டு, நிதானமாக மூச்சை வெளியேற்றினாள். ஆரம்பத்தில் கடினமாக இருந்தது. ஸ்வாசம் கட்டுப்பட மறுத்தது. நெஞ்சு பிராணவாயுவுக்காக அடித்துக் கொண்டது. உள்ளே ஒரு குரல், இவளுக்கு வலி வரும் பொழுதெல்லாம் தோன்றுமே அதே குரல், அவளை பொறுத்துக் கொள்ளச் சொன்னது. இருபத்தியேழு வருடங்களாக ஒலித்துக் கொண்டிருக்கும் குரல். வலிக்குக் கட்டுப்படுகிறாளா, குரலுக்குக் கட்டுப்படுகிறாளா எனத் தெரியாது. இந்த இருபத்தியேழு வருடங்களிலும் இரண்டுமே ஒன்றாக அவளுடன் தங்கிவிட்டன.

வலியைப் பற்றிய ஆரம்ப பயம் தெளிவடைய, மீண்டும் அவளுக்கு தைரியமூட்டிய அதே குரல் கேட்டது. சில்வியா! உன் தனிமையில் யாரை ஏமாற்றுகிறாய்?

சுவரின் மீது தேவமைந்தன் நல்லிடையனாய் ஈச்சை மர நிழலில் அமர்ந்திருக்க, கண் பார்வையில் செம்மறி ஆடுகள் மேய்ந்தபடி இருக்கும், படத்தின் கீழே காணப்பட்ட வாசகம், 'நானே சத்தியமும், ஜீவனும், வழியுமாக இருக்கிறேன்.'

'நானே வலியும், வேதனையுமாக இருக்கிறேன்' என தேவமைந்தன் கூறியிருக்கலாம். ஜீவன் என்பது என்ன? ஏன் இந்த இருபத்தியேழு வருடமும் இது பதுங்கிப் பதுங்கி ஒரு கள்வனைப் போல, ஒரு திருட்டுப் பூனையைப் போல அரவம் அடங்கிய பின் வெளிப்பட வேண்டும்? இது அடங்கவே அடங்காதா?

கர்த்தரின் படத்தின் மேல் லேசாகப் படிந்திருந்த புழுதிப் படலத்தைத் துடைத்தாள். வினோலியாவின் கல்யாண அமளியில் போன நாற்பது நாட்களாக விருந்து, சீராட்டு எனக் கழிந்ததில் வீட்டைத் துப்புரவு செய்து கொண்டிருக்கும் தனது அன்றாட அலுவல் கூட மாறிப் போயிருக்கிறது.

வெளியே பனி பெய்து கொண்டிருந்தது. வானம் கரு நீலமாக விரிந்திருந்தது. விடிவதற்கு அதிக நேரமில்லை. இனிமேல் தூக்கம் வருவது கடினந்தான். வலியின் இன்னொரு விளைவு தூக்கமின்மை.

முதன் முதலில் இப்படி ஒரு தூக்கமின்மையை உணர நேர்ந்தது, இன்னும் நினைவில் துல்லியமாக உள்ளது. ஞாபகத் திசுக்களின் அடர்த்தியும் கூட, இந்த வலிக்கு ஒரு காரணமாக இருக்கலாம். அந்த நாட்களில் அவளுக்கு வேலை கிடைத்து விட்டிருந்தது. மெர்வின் சிற்றப்பாவின் நெருங்கிய சிநேகிதர் அரசுடமை வங்கி ஒன்றில் ஏஜென்டாக இருந்ததால், இப்பொழுது கையாளப்படும் எழுத்தர் தேர்வு எதுவுமில்லாமல், இவளது பி.எஸ்ஸி பட்டப்படிப்புக்கு சுலபமாக வேலை கிடைத்தது. அவன் இருந்த ஊருக்கு மாற்றல் கிடைக்காமல் சிற்றப்பாவின் வீட்டில் தங்கியிருந்த நாட்கள் அவை. சிற்றப்பாவுக்கு சில்வியாவிடம் தனி பிரியம் உண்டு. அவர் இப்பொழுது இல்லை என்றாலும் அந்தப் பிரியத்தின் தொடர்ச்சியைப் போல அவரது இரண்டு பிள்ளைகளான ராஜாவும், சுதாகரும்தான் வினோலியாவின் கல்யாணத்தை அடி வரை நடத்தினார்கள்.

அந்த நாட்களில்தான் அவனது முதல் கடிதத்தை சித்தி படித்துப் பார்த்தாள். அவனா? அவரா? இருபத்தியேழு வருடங்கள் அவனும் கூட இருந்திருந்தால் அவர் என நினைக்கவும், விளிக்கவும் பட்டிருக்கலாம்.

"புதுப் பொண்ணே! வீட்டுக்காரர் லெட்டரில் என்ன எழுதியிருக்கார்?"

"ரெண்டு வாரமா மூச்சுத் திணறல் ஜாஸ்தியாயிடுச்சாம். ரெண்டு, மூணு டயாலிசிஸ் பண்ணிக்கிட்டா சரியாயிடும்னு எழுதியிருக்கார்."

இளமைக்கு உள்ள முக்கிய குணங்களில் ஒன்று மரண சிந்தனையின்மை. சில்வியாவுக்கு சுத்தமாக மரண பயம் இல்லாமல் இருந்ததோடு, சிறுநீரகப் பழுதின் முழு வீச்சும் தெரியாமல் இருந்தது.

"லெட்டரைக் கொண்டா சில்வி." சித்தி அவன் கடிதத்தைப் பிடுங்கிப் படித்தாள். படித்து முடித்து விட்டு, "அடிப்பாவி! மோசம் பண்ணிட்டாங்கடி உனக்கு" என்று அலறினாள்.

அந்த நாளில்தான் க்ரேஸ் சித்தி சிறுநீரகப் பழுது பற்றியும், ரத்த சுத்திகரிப்பு பற்றியும், மாற்று சிறுநீரக சிகிச்சை பற்றியும் சொன்னாள். நம்புவது கடினமாக இருந்தது. சடார் என்று காலடியில் பூமி நழுவியது போல பயமாக இருந்தது. அந்த இரவில்தான் வலியின் ஆரம்ப அறிகுறியைப் போல தூக்கமின்மை நேரிட்டது. அப்பாவும், அம்மாவும் ஊரெல்லாம் அலசிப் பார்த்து நிச்சயித்த மாப்பிள்ளையின் தீவிர சிறுநீரகப் பழுதை ஏன் விசாரிக்காமல் விட்டார்கள்? விதி என்பதா? சத்தியமும், ஜீவனும், வழியும் காட்டும் தேவமைந்தன் ஏன் என் பாதையை முற்றிலும் முட்களால் மறைத்து வைத்தான்?

நாள்!



"சில்வியா."

குரல் கேட்டு திரும்பினாள்.

அறை வாசலில் அம்மா நின்று கொண்டிருந்தாள். கோரங்களில் கலந்து கொள்வதிலும், நற்செய்திக் கூட்டங்களின் செயற்குழு உறுப்பினராகச் செயலாற்றுவதிலும் இந்த எழுபது வயதிலும் அவளால் எப்படி முடிகிறது? தான் சரிந்து, உதிர்ந்த நாளிலிருந்து தாங்கிப் பிடித்த தூண் என்பதாலா?

"தூங்கலியா சில்வியா?"

ஜன்னலிலிருந்து விலகி அம்மாவைப் பார்த்து, "இல்லை" என்றாள்.

"மூச்சு முட்டுதா?"

"லேசா."

"மாத்திரை சாப்பிட்டியா?"

"வலி ஏன் வருதுன்னு எனக்கும் நல்லாத் தெரியும், உனக்கும் நல்லாத் தெரியும். அப்புறம் எதுக்கு மாத்திரை, மருந்துன்னு?"

"நாளைக்கு... இல்லயில்ல.. இன்னிக்கு வினுவும், மாப்பிள்ளையும் தேனிலவு முடிச்சிட்டு வர்றாங்க தெரியுமில்ல?

(தொடர்ச்சி 50-ஆம் பக்கம்......)



கண் பராமரிப்புங்கறது ரொம்ப ஈஸி. தினசரி மூணு நிமிஷம் அதுக்காகச் செலவு செய்தால் போதும். பதினஞ்சு, இருபது நாளில் நம் கண் ரொம்ப ஃபிரெஷ்ஷா இருக்கறதை நாமே உணர்வதோடு, மத்தவங்களும் நம்ம கண்ணுல ஒளி தெரியறதைப் (!) பார்த்து, என்ன விஷயம்னு கேப்பாங்க. நாமும் இஷ்டத்துக்குப் பீலா விடலாம். ஒரு தமாஷுக்குச் சொல்றேன்.

அஞ்சு விஷயம் தினசரி உங்களால செய்ய முடியாதா? மொத்தமா அஞ்சு நிமிஷம் கூட ஆகாது இதுக்கு. ட்ரை பண்ணிப் பாருங்க!

1. சூரிய நமஸ்காரம் பத்தி, புராண காலத்திலிருந்தே சொல்லிட்டு வராங்க. அதுல அப்படி என்ன பெரிய லாபம் இருக்கு? தொடர்ந்து ஒரு ரெண்டு நிமிஷம் காலைல ஒரு சின்ன துவாரம் மூலமா (கை விரல்கள் மூலமாகவே ஏற்படுத்திக்கலாம்!) இளம் சூரியனைப் பாருங்க.... அந்த - அதிகம் கூசாத ஒளிக்கு நூறு வைட்டமின் மாத்திரைகளை விட அதிக பவர் இருக்கு. கண்ணுக்கு அது பவர் தர்றது ஒரு பக்கம் இருக்கட்டும்... கண்ணுக்கே தெரியாம, கண்ணுக்குள்ள ஒளிஞ்சிட்டிருக்கற கிருமிங்களெல்லாம் அதனால டாட்டா சொல்லிட்டுப் போயிடும்!

2. அந்தக் காலத்து அசோகன் படங்களெல்லாம் பார்த்திருக்கீங்க இல்லை? ஒரு அரை வட்ட ஷேப்புல கண்ணை உருட்டி உருட்டி விழிப்பாரே? அது ஒரு எக்ஸலென்ட் எக்ஸர்ஸைஸுங்க! சும்மா ஒரு பத்துப் பத்து தடவை -டயம் கிடைக்கற போதெல்லாம் கண்களை கிளாக் வைஸிலும் ஆன்ட்டி-கிளாக் வைஸிலும் சுழற்றிச் சுழற்றிப் . பாருங்க. ஆரம்பத்துல கொஞ்சம் வலிக்கும்தான். போகப் போக, கிரீஸ் போட்ட சைக்கிள் செயின் மாதிரி ரொம்ப ஸ்மூத்தா அதுவே சுழல

கண்ணீர் விட்டு

ஆரம்பிச்சுடும். இதனால என்ன லாபம்னா தொடர்ந்து கண்ணுக்கு ஸ்ட்ரெயின் குடுத்துட்டே இருந்தாலும் வலிக்காது; கண்ணுல தண்ணி வராது.

3. சில மேற்கத்திய நாடுகளிளெல்லாம் கண்டிப்பா மத்தியான வேளையில ஒன்-அவர், ரெண்டு அவர் எப்படிப்பட்ட வேலையில இருந்தாலும், ஆஃபீஸ் டயத்துல கூடக் கண்டிப்பா தூங்கிடுவாங்களாம்! தொடர்ந்து வேலை பார்க்கிறவங்களுக்கு அந்த ரெஸ்ட் ரொம்ப உபயோகம்ங்கறது ஒரு பக்கம் இருக்கட்டும்... நம்ம ஊர்ல அதெல்லாம் சாத்தியமில்லையே? என்ன பண்ணலாம்? சிம்பிள். அஞ்சு நிமிஷம் - இல்லாட்டா பத்து நிமிஷம் கண்ணை மூடிட்டு, லன்ச்-அவர்ல பேசாம இருக்கறது! அப்ப கண்ணுக்குள்ள ஒரு மாதிரி ஆரஞ்சு இல்லாட்டா பிரௌன் கலர்ல தூசு பறக்கறாப்பல இருக்கும். அதை உத்துப் பார்த்துட்டே இருங்க. மறுபடியும் வேலை தொடங்கறப்போ ரொம்ப ஃப்ரெஷ்ஷா இருக்கும்!

4. எப்படி ரொம்ப நேரம் கண் விழிக்கறது தப்போ, அதே மாதிரி ரொம்ப நேரம் தூங்கறதும் தப்புத்தான். ஒரு நாளைக்கு ஆறுலேருந்து ஏழு மணி நேரத்துக்கு மேல தூங்கறது நல்லதில்லை. (இது குழந்தைகளுக்குப் பொருந்தாது)

5. வாழ்க்கைல அப்பப்போ கண்ணீர் விட்டு அழணும். 'என்னடா இது பேத்தலா இருக்கே'ன்னு தோணுதா? எனக்குத் தெரிஞ்ச எங்க ப்ரொபசர் சொல்லிக் குடுத்ததைச் சொல்றேன். ஏன்னா, கண்ணுலேருந்து வடியற தண்ணி இருக்கு பாருங்க... அது பாவத்தை நீக்கற கங்கை நீர் மாதிரி! வருஷக்கணக்கா மன்னார்குடிக்காரங்க சேத்து வெச்ச சொத்து மாதிரி, கண்ணுல சேர்ந்திருக்கிற அழுக்கு, கிருமிங்களெல்லாம் வெளியில வரவழைச்சுடும். கண் ரொம்ப ஃப்ரெஷ்ஷாயிடும்! பொதுவா இப்படிச் சொன்னா யாரும் நம்ப மாட்டாங்க. ஆனா இதான் ஃபேக்ட்!

ஹலோ சுகமா?

இதெல்லாம் தவிர, ஆரோக்கியமான கண்களுக்கு இன்னும் முக்கியமா நாம செய்ய வேண்டிய காரியம் பொடுகு இல்லாத தலைமுடி வைச்சுக்கறது! குழப்பறேனா? ரிலாக்ஸ்....!

நம்ம தலையிலே பொடுகு இருந்ததுன்னா அது காத்துல பறந்து வந்து கண் இரப்பைகளிலே குடித்தனம் புகுந்துடும். அது மெள்ள, மெள்ள கண்ணுக்குள்ள போக ஆரம்பிச்சுதுன்னா, கண்ணு செவந்துடும்.

சில ஆண்கள் ரொம்ப உத்தமர்களாவே இருப்பாங்க. ஆனா கண்ணு மட்டும் எப்பவும் சிவந்திருக்கறதைப் பார்த்துட்டு, "என்ன மாமு, தண்ணி போட்டியா?" அப்படின்னு பிரெண்ட்ஸ் கேலி செய்ய ஆரம்பிச்சுடுவாங்க.

விஷயம் இதுதான். தலைப் பொடுகு கண்ணுல சேரச் சேர, கண் சிவக்கறது ஒரு பக்கம் இருக்கட்டும், அடிக்கடி கண்ணுல தண்ணி, பார்க்கிற பொருளெல்லாம் கலங்கலாத் தெரியறது, கண் எரிச்சல், ஏன் தலைவலி கூட வரும்!

ஸோ, பொடுகு இல்லாமப் பார்த்துக்குங்க!

இந்த வாரம் இது போதும். நெக்ஸ்ட் வீக், மூக்கு முட்டப் பேசலாம். ஓகே! பை!

— சுமி

ஆறுமாதங்களுக்கு ஒருமுறை விளம்பரப்படுத்த வேண்டும் என்று விதித்திருக்கிறது என்னும்போது, அதே அளவு கோலை நிதி கம்பெனிகளுக்கு மட்டும் ஏன் மறுக்க வேண்டும்?

நிதி கம்பெனிகள் விஷயத்தில் கடிவாளத்தை இழுத்துப் பிடிக்கும் ரிசர்வ் வங்கி, அந்த கம்பெனிகள் மிக அதிகமான வட்டித் தொகை தருவதாக விளம்பரம் செய்கின்றன என்ற ஆட்சேபணையைக் காரணமாகக் காட்டியிருக்கிறது. ஆனால், எல்லா நிதி கம்பெனிகளும் அவ்வாறு அதீத வட்டித் தொகை தருவதாக வாக்களிப்பதில்லை. புதிதாகக் கிளம்பியுள்ள ஒரு சிலவே அவ்வாறு ஆசை காட்டுகின்றன. நியாயமாகச் செயல்பட்டு, மக்களுக்கு கஷ்ட காலத்தில் ஊன்றுகோல் போல் உதவி வரும் நிறுவனங்களையும் உள்ளடக்கி ஆணை பிறப்பிக்கப்படும் போது மக்களும் அவதிக்குள்ளாகிறார்கள்.

இதே வேளையில் ஜாக்கிரதை உணர்வோடு செயல்படுவதாக அங்கீகாரம் பெற்றுள்ள (Rating) பல தனியார் நிறுவனங்கள் (வங்கிகள் அல்லாத நிதி நிறுவனங்கள்) ஓராண்டுக்கு மேற்பட்ட டெபாஸிட்களுக்கு எவ்வளவு வட்டி வேணுமானாலும் வழங்கலாம் என்று விதிகள் தளர்த்தப்பட்டுள்ளன. அவ்வாறு இருக்க, பாதுகாப்பு உணர்வோடு செயல்படும் நிதி கம்பெனிகளுக்கு மட்டும் 15 சதவீத வட்டிதான் தரலாம் என உச்சவரம்பு விதிக்க அவசியம் என்ன? இது ஓரவஞ்சனை ஆகாதா? பாதுகாப்பு விதிமுறைகளை வேண்டுமானால் வகுத்துத் தரலாமேயொழிய, ஒரு கண்ணுக்கு வெண்ணெய், இன்னொரு கண்ணுக்குச் சுண்ணாம்பு என்று நடந்து கொள்வது முறையல்ல.

தனியார் நிறுவனங்களின் செயல்பாட்டில் தலையிட ரிசர்வ் வங்கிக்கு என்ன உரிமை இருக்கிறது என்ற சந்தேகம் நமக்கு எழக்கூடும்.


நாட்டின் பொருளாதாரம், ஃபிஸ்கல் பாலிஸி, (வரி விதிப்பு போன்றவற்றை உள்ளடக்கிய கொள்கைகள்); மானிடரி பாலிஸி (பணப் புழக்கக் கட்டுப்பாடு கொள்கைகள்) என்ற இரு விரிவான பிரிவுகளின் கீழ் அடங்கும். இவற்றுள் ஃபிஸ்கல் பாலிஸியை நிதியமைச்சகமும் மானிடரி பாலிஸியை ரிசர்வ் வங்கியும் வகுக்க வேண்டும்.

மன்மோகன் சிங் காலம் வரை ரிசர்வ் வங்கியே அரசின் கைப்பாவையாகத்தான் செயல்பட்டு வந்தது. எலக்ஷன் கமிஷனுக்கு சேஷன் புத்துயிர் தந்தது போல், ரிசர்வ் வங்கிக்குச் சுதந்திரமாக இயங்கும் ஊக்கத்தை மன்மோகன் சிங் அளித்தார். அந்த சுதந்திரத்தின் மிதமிஞ்சிய பிரயோகமே நிதி கம்பெனிகளின் பேரில் விதிக்கப்பட்டுள்ள இந்த புதிய கட்டுப்பாடு எனலாம்.

எல்லா நிதி கம்பெனிகளையும் ஒட்டு மொத்தமாகக் கட்டுப்படுத்தி, அழிவை நோக்கித் திருப்பிவிடும் இந்தக் கொள்கை முடிவை, ரிசர்வ் வங்கி மறுபரிசீலனை செய்ய வேண்டும். அத்தகைய நிறுவனங்கள் பொதுமக்களை ஏமாற்றாத வகையில் பாதுகாப்பு விதிகளை உள்ளடக்கிய புதிய செயல்முறையை ரிசர்வ் வங்கியே வகுத்துத் தரலாம்.

இவ்வாறு செய்யாவிட்டால், நடுத்தர வர்க்கத்தினர் பலரும் சிறு வியாபாரிகளும் அவசரத்துக்கு வட்டிக்கடைகளை நாடிப் போய் அவஸ்தைக்கு உள்ளாக வேண்டி வரும்.

— வி. கோபாலன்



கம்ப்யூட்டர் குளறுபடி!

ஒரே நாளில் 826 கோடீசுவரர்களை உருவாக்கியது, சிக்காகோ தேசிய வங்கி! எல்லாம் கம்ப்யூட்டர் குளறுபடியால் தான். 763.9 பில்லியன் அமெரிக்க டாலர்கள் பல்வேறு வாடிக்கையாளர்களின் கணக்குகளில் தவறுதலாகச் சேர்க்கப்பட்டது. பரிதாபம் என்னவெனில் 826 பேரும் தாங்கள் கோடீசுவரர்கள் ஆனதை உணருமுன்பே, திரும்பவும் சராசரியாகி விட்டார்கள். இரண்டே நாட்களில் கம்ப்யூட்டர் தவறு கண்டு பிடித்துத் திருத்தப்பட்டு விட்டது! — சிவபெருமான்

ஆதாரம் : Journal of Banking Studies

❒ அட்லான்டாவில், பத்திரிகையாளர்கள் தங்குவதற்கு, போதிய அளவு வசதிகள் இல்லை. இதை கிண்டலடித்து, பத்திரிகையாளர்கள் தங்குமிடத்தில் ஒருவர் எழுதிவைத்த கிண்டல் வாசகம், "பார்சிலோனா! வி மிஸ் யூ!"

❒ வடக்கு பாங்காக்கில், யோகி என்ற பெயர் கொண்ட யானை, ஓர் ஆளைத் தூக்கி எறிந்து கொன்று விட்டது. காரணம் அந்த மனிதன், யானையை செமையாய் வெறுப்பேற்றியதுதான். வாழைப் பழத்தை நீட்ட வேண்டியது. வாங்கிக் கொள்வதற்கு யானை கிட்டே வரும் போது, பழத்தை இழுத்து, மறைத்துவிடுவது. இதே போல மறுபடி மறுபடி செய்யவே கோபம் கொண்ட யானை, ஏமாற்றிய ஆசாமியைப் பழி வாங்கி விட்டது!

❒ சார்லஸ் - டயானா விவாகரத்து பற்றி எழுதி சலித்துப்போன பிரிட்டிஷ் பத்திரி கைகளுக்குக் கிடைத்திருக்கும் அவல் என்ன? இளவரசர் சார்லஸ், தம் காதலிக்குக் கொடுப்பதற்காக வாங்கியுள்ள பதினைந்து லட்ச ரூபாய் மதிப்புள்ள மோதிரம்!

— கௌதம்

கதை : பெனிட்டோ குமார்; படம் : சசி





கேட்கவே த்ரில்லா இருக்கே.
அது அவரோட மன வளர்ச்சியைக் காட்டறது. 'தென்னிந்தியப் பெண்கள்' என்ற தலைப்பிலே ஒரு பெரிய திட்டம்!
ஏராள கிராமங்கள்ல பலரகப் பெண்களை சந்திச்சு, நேற்று-இன்று-நாளைன்னு அவங்களோட முன்னேற்றத்தை அளக்கப் போறார்!
முதல் கிராமம் உவரி!
கொஞ்ச நாள் இங்க தங்கும்படி இருக்கும். வாடகைக்கு ஒரு வீடு கிடைக்குமா?
மூர்த்தியோட கோழிப் பண்ணை வீடு சும்மாத் தானே இருக்கு; சாவி வாங்கிட்டு வரேன்.
பண்ணை வீட்டில்...
டேக் ரெஸ்ட். நான் நாளைக்கு வரேன்.
நந்து... உதவிக்கு ஒரு ஆள்வேணுமே... சம்பளம் கொடுத்திடலாம்...
உடனே ஏற்பாடு பண்றேன், ஆஷா.
நந்து போனதும்...
பிரதீப்! அந்த 'மேப்'பைப் பிரிங்க பார்ப்போம்.
இதுல வெற்றி கிடைச்சால் ஒரு கோடி கிடைக்கும்!
சரியான ஜொள்ளு பார்ட்டி

(தொடரும்)

(35 -ஆம் பக்கத் தொடர்ச்சி.....)

தூக்கமில்லாத சோர்வான முகத்துடன் அவர்களை வரவேற்பது நல்லா இருக்குமா சில்வியா? வலியின் காரணம் தெரிஞ்சாலும் பொய்ச் சமாதானமா ஏதோ ஒரு நோவினால்தான் வருதுன்னு மாத்தி ரையை சாப்பிடக் கூடாதா?''

''வலியின் காரணம் தெரிஞ்சாலும்னு சொன்னியே அது தப்பு. நான் இருபத்தியேழு வருஷமா காரணம் தேடிட்டு இருக்கேன். புறக் காரணங்கள் நூறு சொல்லலாம். ஆனா அதெல்லாம் ஏற்புடையவை இல்லை.''

சில்வியா விழித்துக் கொண்டிருந்தாலும் அவளிடம் இத்தனை காலமாக உறைந்து, உறங்கிக் கிடக்கும் எதையும் எழுப்பிட விரும்பாத அவளது தாயார் மேலும் மகளை வற்புறுத்தாமல் போய்விட்டாள்.

நாற்பத்து இரண்டு நாட்கள், அவனுடன் அவள் மொத்தமாக வாழ்ந்தவை நாற்பத்திரண்டே நாட்கள். அதிலும் அவன் இருக்கும் ஊருக்கு மாற்றல் கிடைக்கக் காத்திருந்த பத்து நாட்களும், அவனது தீவிர சிறுநீரகப் பழுதினால் மருத்துவமனையில் கிடந்த ஐந்து நாட்களையும் கழித்தால் மொத்தமே இருபத்தியேழு நாட்கள்தான் அவனுடன் வாழ்ந்த நாட்கள். அவனது வியாதியை மறைத்துத் திருமணம் செய்து கொடுத்துவிட்டார்களே என்ற வேதனையை யாரிடம் சொல்லி அழுவது?


வினோலியாவும் அப்பொழுது வயிற்றில் உதித்து விட்டாள்.

வினோலியாவை பிரசவித்த ஏழாவது நாள்தான் அவளுக்கு மீண்டும் அந்த வலி ஏற்பட்டது. சுவாசப் பாதை சீர்கெட, நினைவுகள் எல்லாம் சுருண்டு கல் போன்று மாறுவதைப் போன்று வர, தூக்கம் கெட்டு எழுந்து கொள்வாள். தாய்மையின் ஆரம்பச் சீர்கேடுகள் என வைத்தியம் பார்த்தார்கள். அந்த வலி வேறு கால நிலைகளில் தொடர்ந்தது. எந்த மருந்துக்கும் கட்டுப்பட மறுக்கும் அதன் மீது மற்றவர்களுக்குச் சந்தேகமே ஏற்பட ஆரம்பித்தது. தூரத்து உறவினர்கள் சில்வியாவுக்கு சித்த சுவாதீனமாகக் கூட இருக்கலாம் என மறைமுகமாகப் பேசிக் கொள்ள ஆரம்பித்தார்கள். அப்பா அதையே கொஞ்சம் நாகரீகமாக அவளது இழந்த வாழ்க்கை ஒரு அப்ஸஸஷனாக மாறி, வலி என்பது அவளது நிராசையின் உருவகமாக இருக்கலாம் என்றார்.

சுய அலசலாக ஒருமுறை இவளுடன் வேலை பார்த்த, இன்னொரு ஊரில் ஒன்றாக வீடெடுத்துத் தங்க நேர்ந்த மீனாட்சி என்பவளிடம் - அவள் சில்வியாவை விட மிகவும் வயது குறைந்தவள் என்றாலும், ஏதோ ஓர் ஈர்ப்பில், இதுவரை தான் சொல்லி சுயபச்சாதாபம் பெற்றுக் கொள்ளாத விஷயங்களைச் சொல்லி தன்னைத் தேடிக் கொண்டாள்.

''அந்த நாற்பத்திரண்டு நாட்கள்தான் விடாம என்னைத் துரத்துதுன்னு நினைக்கறேன் மீனாட்சி. சில சமயம் பாரேன் இப்படி அநியாயமா நம்மை மோசம் பண்ணிட்டாங்களேன்னு வரும். என் மாமியார் வீட்டுக்காரங்களை மட்டும் சொல்லலை. என் பெற்றோர், சார்புடைய பெண்ணை நொண்டவைக்கும் சமுதாயம், எந்த எதிர்பார்ப்புமில்லாத என் எளிமையான வாழ்வை நிர்மூலமாக்கின ஆண்டவன், எல்லார் பேரிலும் ஆத்திரம் வரும். முன்ன, பின்ன பார்க்கப் போறதில்லைங்கற தைரியத்தில் கடவுளை திட்டலாம். பெற்றோரை என்ன செய்வது? ஆரம்ப நாட்களில் பாலியல் ஏக்கங்கள் ரொம்பக் கஷ்டப் படுத்தும். வலி அதனாலதானோன்னு நானே நம்புமளவுக்குப் பாடா பட்டிருக்கேன். நன்மைக்கும், தீமைக்கும், வினைகளுக்கும், விதிக்கும் உடல் ஒரு களமே அன்றி அது செயல் இல்லைன்னு புரிய வயசும், அனுபவமும் வேண்டியிருந்தது. வினு பிறந்த சமயங்களிலும், அவள் பள்ளியில் சேர்ந்து, நல்ல முறையில் படித்து, பெரிய பெண்ணாகி அவளுடைய ஒவ்வொரு பருவத்திலும் எனக்கு இந்த வலி வரும்... ஃபார்டி டு என்னும் நம்பரே எனக்கு அப்ஸஸஷனாயிடுமோன்னு பயந்திருக்கேன். ஒரு தடவை ரீஜனல் ஆபீஸில் என் கணக்கில் விடுப்பு நாட்கள் எத்தனைன்னு கேட்டப்போ நாற்பத்தியிரண்டு நாட்கள் என கேட்டு விட்டு அரை மணி நேரத்தில் அந்த வலி வந்து பாடு பட்டுட்டேன்.''

''சில்விக்கா. அது ஒங்களோட அப்ஸஸஷனாவே இருக்கட்டும். அதை மீறி வந்திருக்கீங்க இல்லியா? அலுவலக ரீதியாவோ, இல்லை ஒரு தாய் என்னும் ஸ்தானத்திலிருந்தோ நீங்க நழுவவில்லை என்பதற்கு உங்களது ஆபீஸர் போஸ்ட்டும், ஸ்கூல் ஃபர்ஸ்ட் வந்திருக்கும் வினோலியாவும் சாட்சி இல்லியா? வாழ்க்கை ஒரே ஒரு சம்பவத்தினால் அமைந்ததில்லை.''



மனிதர்கள் சில சமயம் உண்மை மீது இடறி விழுவதுண்டு. ஆனால் பெரும்பாலோர் எழுந்து நின்று ஏதும் நடவாதது போல் அவசரமாகப் போய்விடுகிறார்கள்.

— சர்ச்சில்

தகவல் : வயலூர் ஆர். பார்த்திபன்

மிக அழகாக விளக்கம் சொன்னாள் அந்தப் பெண். அவள் சொன்னதையும் மறுக்க முடியாதுதான். வேலை என்றால் அது சில்வியாவிடம் சொல்லி வாங்க வேண்டும் என வேலை பார்த்த கிளைகளில் எல்லாம் ஃப்ரேம் போடாத பாராட்டு பத்திரம் உண்டு. வினோலியாவை நல்லவிதமாகப் படிக்க வைத்தது, சொந்த ஊரில் பார்த்துப் பார்த்து 1200 சதுரடியில் கட்டிக் கொண்ட வீடு, இதோ போன மாதம் வினோலியாவை நல்ல டாக்டர் வரனாகப் பார்த்து சீர், செனத்தியோடு கட்டி கொடுத்தது வரை எந்தக் குறையுமில்லை. அவளைப் பொறுத்தவரை ஒரே ஒரு சம்பவத்தின் மேல்தான் முழு வாழ்க்கையும் கட்டப்பட்டுள்ளது.

ஆனால் இந்த வலி அல்லது வலி என்ற மன உளைச்சல் குறைந்து, சுத்தமாக ஒருநாள் மறைந்து போகாதா? ஏன் எனில் அவளது எல்லா வெளிப்பாடுகளும் அந்த மன உளைச்சலை மூடுவதற்காக, இழுத்துப் போர்த்தி விடுவதற்காக அமைந்தது போலாகி விட்டது.

காலை ஆறு மணியிலிருந்தே தேனிலவுத் தம்பதியரை வரவேற்கும் முகாந்திரம் ஆரம்பமானது. சில்வியா தனது தூக்கமின்மையால் ஏற்பட்ட சோர்வை குளியலறையில் நீருடன் ஓட விட்டு வந்தாள். விருந்துக்கு முழுமூச்சுடன் செயலில் இறங்கினாள்.

சரியாக பதினொரு மணிக்கு டாக்ஸியில் பெண்ணும், மாப்பிள்ளையும் வந்து இறங்கினார்கள். வினோலியா முகத்தில் அசாத்தியமான அலட்சியமும், கூடுதலான பொலிவும் தெரிந்தது. மாப்பிள்ளை அகஸ்டஸ் லொங்கு, லொங்கென்று பெரிய தோல் பெட்டி, ஹோல்ட்-ஆல் என தூக்கிக் கொண்டு வந்தார்.

பிரயாணம், பார்த்த இடங்கள், கேளிக்கை நிகழ்ச்சிகள், வாங்கிய பொருட்கள் என பேச்சு அரைமணி நேரம் நீடித்தது.

மாப்பிள்ளையைத் தவிர்த்து, தனிமைப்பட்ட நேரத்தில் சில்வியா மகளை நிறுத்திக் கேட்டாள்.

"நாள் தள்ளிப் போச்சா வினு?"

"அதை ஏன் கேட்கற? பெங்களூரின் சூப்பர் க்ளைமேட்டுக்கு மூணுநாள் சுத்த அப்ஸட்."

"நெஜமாவா?" வருத்தத்துடன் கேட்டாள்.

"இதில் என்ன வருத்தப்பட இருக்கு? கல்யாணம் ஆகி நேத்தியோட சரியா நாற்பத்து மூணு நாள்தான் ஆவுது. அதுக்குள்ள வயித்தத் தள்ளிட்டு நிக்கச் சொல்றியா?"

"கல்யாணமாகி எவ்வளவு நாளாச்சுன்ன?"

"ஜூன் ஏழு கல்யாணம். இன்னிக்கு ஜூலை இருபது. சரியா இன்னிக்கு நாற்பத்து நாலாவது நாள்."

"சரி! சரி! நீயும், மாப்பிள்ளையும் போய் ரெஸ்ட் எடுங்க."



முல்லா நீதிபதியான போது ஒரு வாதி தன் கட்சியைச் சொன்னவுடன், ''நீ கூறுவது சரி என்று நம்புகிறேன்'' என்றார் முல்லா. பின்னர் பிரதிவாதி தன் கட்சியை விளக்கமாகக் கூற, ''நீ கூறுவது சரி என்று நம்புகிறேன்!'' என்றார். குழப்பமுற்ற நீதி மன்ற அலுவலர், ''முல்லா இவர்கள் இரண்டு பேர் கூறுவதும் சரியாக இருக்க முடியாதே'' என்று தம் அபிப்ராயத்தைத் தெரிவித்தார். உடனே முல்லா, ''நீ கூறுவதும் சரி என்று நம்புகிறேன்!'' என்று சற்றும் தயங்காமல் சொன்னார்.

ஆதாரம் : முல்லாவின் வேடிக்கைக் கதைகள்

தகவல் : ஆர். பிரகாசம்

சில்வியாவின் தாயார் தனக்கும், தன் கணவருக்கும் வேண்டிய உணவை உண்டு விட்டு பாத்திரங்களைத் தொட்டியில் போட்டு விட்டு வந்தாள். உணவு மேசையை சுத்தம் செய்தாள். சில்லறை அடுப்படி வேலைகளை முடிக்கும் வரையில் கூட சில்வியா கண்ணில் தட்டுப்படவில்லை. சந்தேகம் எழ சில்வியாவின் படுக்கையறைக்கு சென்றாள்.

நல்லவேளை மகள் படுக்கையில் விழுந்து கிடக்கவில்லை. பளீரெனத் தெரியும் ரோஜாப் பதியனை எப்பொழுதும் நின்று பார்க்கும் அகல ஜன்னல் முன்பு நின்று கொண்டிருந்தாள்.

"சில்வியா! சாப்பிட்டியா?"

சில்வியா திரும்பினாள்.

அவள் கண்களில் நீர் வழிந்து கொண்டிருந்தது.

"ஏம்மா அழுவுற?"

பதிலில்லை.

"வலிக்குதா பழையபடியும்?"

சில்வியா முகத்தைத் துடைத்தபடி, "இனிமே வலிக்காதும்மா" என்றாள்.

"எப்படி?" என்றாள் தாயார்.

"உள்ளேயிருந்து ஏதோ சொல்லுது. நானும், உன் மாப்பிள்ளையும் சரியா நாற்பத்திரண்டு நாள் வாழ்ந்தோம். ஆனா என் பொண்ணு அந்தக் கால அளவைத் தாண்டிட்டா. பல கோடி ஆண்டு அவ தன் புருஷனோட சந்தோஷமா வாழப் போறது உறுதி. ஆனா எனக்குள், என்னை சித்திரவதை பண்ணிக்கிட்டிருந்த நாற்பத்திரண்டு நாளைத் தாண்டி கூடுதலா ஒரு நாள் தன் புருஷனோட வாழ்ந்து விட்டாள் என்பது என் வலியை நசுக்கி அழிச்சிடுச்சும்மா" என்றாள்.

சில்வியாவின் தாயார் அவளை இழுத்து அணைத்துக் கொண்டாள்.

அறிமுக ஆட்டத்திலேயே அதிரடி!



நவ்ஜோத்சிங் சித்து முறைத்துக் கொண்டு டீமிலிருந்து வெளியே வந்தாலும் வந்தார், சஞ்சய் மஞ்ச்ரேகர் விரலை முறித்துக் கொண்டு நின்றாலும் நின்றார் -

அடித்தது சான்ஸ் சவுரவ் கங்கூலிக்கு.

'ஐயோ, சவுரவ் கங்கூலியா!' என்று அப்போது கிண்டலடிக் காத ஸ்போர்ட்ஸ் எழுத்தாளர்களே இல்லை. காரணம், நாலு வருடங்களுக்கு முன்னால் ஆஸ்திரேலியாவுக்குப் போய்விட்டு ஒரு டெஸ்ட் கூட ஆட முடியாமல், ஒருநாள் பந்தயத்தில் மட்டும் ஆடி, அதிலும் மூன்றே மூன்று ரன்கள் எடுத்துவிட்டு வந்தார் சவுரவ் கங்கூலி. அந்தத் தொடர் முழுக்க அவரைக் கண்டு கொள் ளவே இல்லை என்று அசாருதீன் அன்கோ மீது கங்கூலிக்கு ஏகக் கடுப்பு. பன்னிரண்டாவது மனிதராகப் போட்டு, சக ஆட்டக்காரர்களுக்கு டிரிங்க்ஸ் இடைவேளையின் போது குளிர்பானம் வழங்கச் சொன்னபோது, முறைத்துக் கொண்ட கோபக்கார இளைஞர் சவுரவ்.

சவுரவ் கங்கூலியின் குடும்பமே கிரிக்கெட் குடும்பம். தாய்வழித் தாத்தா ஸ்போர்ட்ஸ் கிளப் நடத்தியவர். சவுரவ் வின் அப்பா சண்டி கங்கூலியும் அந்நாள் கிரிகெட் வீரர் தான்.

சவுரவ்வின் அண்ணன் ஸ்நேஹஷிஷ் கங்கூலி கிரிக் கெட்டில் வெளுத்துக் கட்டிக் கொண்டிருந்த போது, சவுரவ் கால் பந்து ஆட்டத்தில்தான் அதிக அக்கறை காண்பித்தார். பிறகு பதினோரு வயதில், 'எதற்கு ஃபுட் பால் ஆட வேண் டும்? அண்ணன் மாதிரி கிரிக்கெட் ஆடினால் என்ன?' என்று கிரிக்கெட்டில் தீவிரமாய்ப் புகுந்தார்.


இந்திய கிரிக்கெட் கன்ட்ரோல் போர்டு இந்தோரில் பயிற்சி முகாம் நடத் தியபோது, இளம் கங்கூலி அதில் பங் கெடுத்துக் கொண்டார். அங்கே 'குரு' வாசு பராஞ்சபேயிடம் கிரிக்கெட்டின் அடிப் படை நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டது தான் இன்று அவருக்குக் கைகொடுத்ததாம். பிறகு சென்னைக்கு வந்து, எம்.ஆர்.எஃப் பேஸ் பவுண்டே ஷனில் சேர்ந்து, டெனிஸ் லிலியிடம் போலிங் பயிற்சி பெற்றார். 89-90ல் சவுரவ் ரஞ்சி டிராஃபியில் பெங்கால் அணிக்கு ஆடிய தில், 51 வருடங்களுக்குப் பிறகு அந்த அணி சாம்பியன் ஷிப் கப்பைத் தட்டிச் செல்ல உதவியிருக்கிறார்.

இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் இரண்டாவது டெஸ்ட் நடந்த லார்ட்ஸ் மைதானத்தில் 131 ரன்களும், மூன்றாவது டெஸ்ட் நடந்த ட்ரென்ட் பிரிட்ஜ் மைதானத்தில் 136 ரன் களும் விளாசியபோது, கல்கத்தா ரசிகர்கள் கரகாட்டமே ஆடி னார்கள்! அதிலும் 'மேன் ஆஃப் த சீரீஸ்' பரிசு வேறு சவுரவ்வுக் குக் கிடைத்து விட்டதில் தலைகால் புரியவில்லை அவர்களுக்கு!

முதல் டெஸ்ட் ஆட்டத்திலேயே சதம் அடித்த கிரிக்கெட் வீரர்கள் மிகக் குறைவு. இந்தியாவைப் பொறுத்தவரை சவுரவ் கங்கூலி அந்த விஷயத்தில் பத்தாவது நபர்!

- சித்தார்த்

சுஜாதா பக்கம்



நிதியமைச்சர் ப. சிதம்பரம் பட்ஜெட் பேச்சின் போது வள்ளுவரின் 'இறைமாட்சி' அதிகாரத்திலிருந்து குறளை மேற்கோள் காட்டியது நிறைவாக இருந்தது. ('வல்லது அரசு' என்பதை வல்லத்து அரசு என்று உச்சரித்த பிழையைப் பொறுத்துக்கொள்வோம்). பட்ஜெட் பேச்சில், முக்கியமாக இந்தியாவின் ஏழைமை நீக்கத்துக்காகத் தற்போது செயல்படும் திட்டங்களுக்கு ஊக்கமளித்து, மாநிலங்கள் மூலம் அவைகளை செயல்படுத்தப் போவதை நிதி அமைச்சர் கூறினார். எல்லோரும் ஏழைமை பற்றிப் பேசுகிறோம். ஏழைமை என்பது என்ன, அதை எப்படி அரசாங்கம் மதிப்பிடுகிறது அல்லது கணக்கிடுகிறது? "இனி ஒரு விதிசெய்வோம்" என்று பாரதி தனிமனிதனுக்கு உணவை முக்கியமாகக் கருதினார். உணவு, நிழல், உடை இல்லாமை ஏழைமை என்பதில் சந்தேகமில்லை. அடுத்த வேளைச் சோறு இருக்கலாம். ஆனால் உடம்புக்கு வந்தால் மருத்துவச் செலவுக்குக் காசில்லாமை கூட ஒரு வகைப்பட்ட ஏழைமைதான்.

ஒரு நாட்டின் ஏழைமையை அளப்பதற்குக் கருவியாக, குடிமகனின் சராசரி ஆண்டு வருமானத்தைப் பயன்படுத்துவது சம்பிரதாயம். ஆனால் ஐக்கிய நாட்டு நிறுவனத்தின் யு.என்.டி.பி. ரிப்போர்ட், ஒரு நாட்டின் ஏழைமையை அளக்க புதிய அளவுகோலைப் பயன்படுத்துகிறது. ஸி.பி.எம்.: கேபபிலிட்டி பாவர்ட்டி மெஷர். திறமை - ஏழைமை அளவு என்கிறார்கள். இந்த அளவுகோலின் ஆதார சிந்தனை, உலகில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் திறமை அல்லது ஆற்றல் நிச்சயம் உள்ளது. அது வெளிப்பட வேண்டும், அதற்கு அந்த குழந்தைக்கு வாய்ப்புக்கள் தேவை. அந்த வாய்ப்புக்கள் கிடைக்க நல்ல போஷாக்கான உணவு பெற வேண்டும். அதற்கு முதலில் பிறக்க வேண்டும்! குழந்தைப் பருவத்தில் மருத்துவ வசதியின்றி இறந்து போகாமல் இருக்க வேண்டும். நீண்ட நாள் வாழ வேண்டும். இவை அனைத்தும் இருந்தால் உலகில் பிறந்த ஒவ்வொரு குழந்தைக்கும் உண்மை ஆற்றல் வெளிப்படும்.

இந்த சிந்தனையின் அடிப்படையில் ஒரு நாட்டின் ஸிபிஎம் எண்ணிக்கையைக் கணக்கிடுகிறார்கள். ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளில் எத்தனை பேர் சராசரி எடைக்குக் குறைவாக இருக்கிறார்கள் என்று கணக்கிடுகிறார்கள். இந்த எண்ணிக்கை மறைமுகமாக குழந்தையின் போஷாக்கு குறைவை காட்டும்.

அடுத்தது எத்தனை குழந்தைகள் மருத்துவப் பயிற்சி பெற்ற தாதிகளின் உதவியின்றிப் பிறக்கின்றன என்று கணக்கிடுகிறார்கள். இந்த எண்ணிக்கை மறைமுகமாக ஆரோக்கியமான பிள்ளை பெறுவதற்கான தடைகளைக் குறிக்கும். மூன்றாவதாக, பதினைந்து வயதுக்கு மேற்பட்ட பெண்களில் எத்தனை பேர் படிப்பறிவில்லாமல் இருக்கிறார்கள் என்கிற கணக்கு. இது கல்வி இன்மையின் அடையாளம்.

இந்த மூன்று எண்ணிக்கைகளை வைத்துக் கொண்டு ஒரு நாட்டின் ஸிபிஎம் எண்ணிக்கையைக் கணக்கிட்டிருக்கிறார்கள், ஒன்றிலிருந்து நூறு வரை. இதில் குறைந்த மதிப்பெண்தான் நிறைந்தது. ஒரு நாட்டின் மதிப்பெண் ஒன்று என்றால், நூறில் ஒருவருக்குத்தான் இந்த மூன்று அடிப்படை வசதிகள் கிடைக்கவில்லை என்று பொருள். நூறு மார்க் என்றால் நாட்டில் அனைவருக்குமே இம் மூன்று வசதிகளும் கிடைக்கவில்லை என்று அர்த்தம், முழு மோசம்!

இவ்வகையில் ஐ.நா அறிக்கை முன்னேறும் நாடுகளின் ஏழைமையை வகைப்படுத்திப் பட்டியலிட்டிருக்கிறது. சிலி 2.82 பெற்று முதலிடம் பெறுகிறது. அதன் பின் க்யுபா 7.8, தென்கொரியா 8.6 இப்படி.

இந்தியாவுக்கு எத்தனை மார்க்? 61.5! அதாவது இந்தியாவில் பிறக்கும் நூறு குழந்தைகளில் அறுபத்திரண்டு குழந்தைகள் ஐந்து பவுண்டுக்கு கம்மியான சோனிக் குழந்தைகள். இவை மருத்துவ வசதியுடன் பிறப்பதில்லை. பெண் குழந்தைகள் பதினைந்து வயசாகியும் படிப்பறிவு பெறுவதில்லை. சராசரி வருமானத்தைப் பார்த்தால் வியட்நாமும் இந்தியாவும் ஒன்று. ஆனால் ஸிபிஎம் எண்ணிக்கையில் வியட்நாம் இருபது. நாம் அறுபது!


எப்போது இந்த எண்ணிக்கை ஒற்றை இலக்கமாகும், மிஸ்டர் சிதம்பரம்?

(மீண்டும் அடுத்த வாரம்)


3
கடலோரக் கொலைகள்
வரை படத்தை ஆராய்ந்தார்கள்...
பிரதீப்! பயங்கர மூளைடா உனக்கு!
எனக்கு இதுல ஒண்ணுமே புரியலே.
கிழக்கே பெரிய கோயில்; அதை யொட்டி கடல்; பின்புறம் மணல்காடு; கோயில்லேர்ந்து தென்மேற்கே 150 மீட்டர்ல ஒரு கல்லறை. அங்கிருந்து 70 மீட்டர் நடந்தா ஒற்றைத் தென்னைமரம். அதான் அடையாளம்.
பத்து வருஷத்துக்கு முன் நீ வரைஞ்ச பிளான். எதுவும் மாறாம இருக்குமா?
ஐயோ, நந்து திரும்பி வரான்!
பிளானை சுருட்டி மறைத்தார்கள்
எடுபிடி வேலைக்கு ஆள் கேட்டீங்களே, இவன் தான். பரமகுரு. இது என் தங்கை, சீதா.
ஸ்வீட் கேர்ல்!
இந்தா ஸெண்ட் ஸ்பிரே!
தாங்க்ஸ்!
சாயங்காலம் வரோம்; கடற்கரைக்குப் போகலாம்.


மாலையில் பீச் நோக்கி நடக்க... வழியில்...
இவர் இந்த ஏரியா இன்ஸ்பெக்டர் கோபால கிருஷ்ணன். இந்த ஊர்லதான் ஜாகை. இவர் பிரதீப். ஆராய்ச்சி மேதை...
ஐ ஸீ!
கடற்கரையில்...
உங்களை மாதிரி மாடர்னா இருக்கணும்னு எனக்கு ஆசை!
இரேன்!
வீட்ல உதை விழும்.
ஜாகைக்குத் திரும்பி, இரவு சாப்பாடு முடித்து பரமகுருவும் விடைபெற...
டேய்! ஆஷா குட்டி! இங்க வா!
கொஞ்சினது போதும்; இந்த வீட்டுக் கொல்லைப்புறத்திலேயே ஒரு மண்வெட்டி இருக்கு; வேலையை ஆரம்பிக்கலாம்.
நாளைக்குப் பொன் ஆராய்ச்சி; இன்னிக்குப் பெண் ஆராய்ச்சி!
ஹூம்!

(தொடரும்)



என்றும் ஏ.வி.எம்.!

தமது எழுத்தை மட்டுமே நம்பி வாழ்ந்த ஓர் எழுத்தாளர் இறந்து போனார். அவரது குடும்பம் நிராதரவானது. கி.வா.ஜ. அவர்களும் நானும் ஒரு குழு அமைத்து, அந்தக் குடும்பத்துக்கு நிதி திரட்டி அளிக்க முற்பட்டோம். நான் ஏவி.எம். அவர்களுக்கு நன்கொடை கோரி ஒரு கடிதம் எழுதினேன். சில நாள் சென்று பதில் இல்லாது போகவே, ஃபோன் செய்து நேரம் குறித்துக் கொண்டு நேரில் சந்தித்தேன். விஷயத்தைக் கேட்டறிந்த அவர், கணிசமான தொகைக்கு ஒரு காசோலை தந்தார். நன்றி கூறி பெற்றுக் கொண்டு வீடு திரும்பி வந்து பார்த்தால், அன்றைய தபாலில் ஏவி.எம். அவர்களிடமிருந்து இன்னொரு 'செக்' வந்திருந்தது. அதே தொகைக்கு! எனக்கு தூக்கிவாரிப் போட்டது. 'என் கடிதத்தைப் பார்த்துவிட்டு அனுப்பியிருக்கிறார். பின்னர் நேரில் சந்தித்தபோது மறதியாக இன்னொரு 'செக்' தந்திருக்கிறார்!' உடனே ஃபோன் செய்து, தகவல் தெரிவித்து இரண்டில் ஒரு 'செக்'கைத் திருப்பி அனுப்புவதாகவும் கூறினேன்.


''வேண்டாம், வேண்டாம்!'' என்று மறுத்தார் ஏவி.எம். ''உங்கள் கடிதம் பார்த்து அனுப்பியதை நான் மறக்கவில்லை; நேரில் வந்தபோது வெறும் கையுடன் திருப்பி அனுப்பவும் விரும்பவில்லை; அதான்! இரண்டு செக்குகளையுமே நிதியில் சேர்த்துக் கொள்ளுங்கள்'' என்றார்!

வள்ளல் ஏவி.எம். இவ்வாறு ஓசைப்படாமல் கொடுத்தது எவ்வளவோ. பகிரங்கமாகக் கொடுத்ததும் உண்டு. அறிஞர் அண்ணா முதல்வர் ஆன பிறகு, தமக்கு வழங்கப்பட்ட ஒரு பேழையை அதே கூட்டத்தில் கருணா நிதியைக் கொண்டு ஏலம்விடச் செய்தார். மிக அதிக தொகை கொடுத்து அதை வாங்கி முதல்வர் நிவாரண நிதியைத் தொடங்கி வைத்தவர் ஏவி.எம். தொழிலாளர் நலனுக்கும் பொதுமக்கள் நலனுக்கும் மருத்துவமனை, பள்ளிக்கூடம், கல்யாண மண்டபம் என்று ஏராளம்.

தேசபக்தர். அதனால்தான் பாரதி பாடல்களின் உரிமையை விலை கொடுத்து வாங்கி தமது படங்களில் பயன்படுத்தினார். அதே தேசபக்தி காரணமாக பாரதி பாடல்களை அரசுடைமையாக்கவும் செய்தார்.

தோல்வி கண்டு துவளாதவர். முதல் இரு படங்களும் தோல்வி அடைந்தன. 'டெக்னிகல்' பிழைகளைப் புரிந்து கொண்டு அந்தத் தோல்விகளையே வெற்றிப் படிகளாக்கினார். முயற்சி திருவினையாக்கும் என்று நிரூபித்தார்.

அடுத்தடுத்து வெற்றிப் படங்களைத் தயாரித்தவர். ஆபாசம் எட்டிப் பாராத, வன்முறைக்கு இடம் தராத வெற்றிப் படங்கள்! அது எப்படி சாத்தியமாகக் கூடும் என்று இன்றைய இளைய தலைமுறை அதிசயிக்




* முரட்டுக்காளை

கலாம். முதல் காரணம், கதைக்குத் தரப்பட்ட முக்கியத்துவம். அடுத்தது, ஆபாசக் கலப்பற்ற ஆரோக்கியமான நகைச்சுவை. வெற்றிப் பட வரிசையின் தலைப்புக்களைப் பார்த்தாலே இது புரிந்து போகும். சபாபதி, ஸ்ரீவள்ளி, நாம் இருவர், வாழ்க்கை, பெண், பராசக்தி, ஓர் இரவு..


ஏவி.மெய்யப்பன் அவர்களுடைய 90வது பிறந்தநாள் ஆண்டு இது. அவர் உருவாக்கிய ஏவி.எம். ஸ்டூடியோவுக்கு பொன்விழா ஆண்டு.

முன்னதை நினைவூட்டும் விதமாக திருமதி ராஜேஸ்வரி மெய்யப்பன், "ஏவி.எம் என் கணவர்" என்ற அருமையான புத்தகம் எழுத, முதல்வர் கருணாநிதி தலைமையில் வெளியீட்டு விழா பிரமாதமாக நடந்தது. பின்னதைக் கொண்டாடும் வகையில் எஸ்.பி.முத்துராமன் டைரக்ஷனில் "என்றும் சினிமா" என்ற தலைப்பில் டீ.வி. தொடர் தயாராகி அது தூர்தர்ஷன் சானல்-1, மற்றும் 5ல் சனி, ஞாயிறு கிழமைகளில் ஒளி பரப்பாகிறது.

தமது அனுபவ ஆற்றலைப் பயன்படுத்தி இன்றைய சினிமா ரசிகர்களையும் மனத்தில் கொண்டு, பழைசையும் புதுசையும் பலவிதமாகவும் இணைத்து, அலுப்புத் தட்டாமல் கொண்டு போகிறார் எஸ்.பி.எம். ஒட்டுப் போட்ட மாதிரி தோன்றாமலிருக்க சாமர்த்தியமாக, ஒரு பழம் பெரும் நடிகரை இன்றைய ஒரு முன்னணி நட்சத்திரம் சந்தித்து பேட்டி காணச் செய்கிறார். அதையொட்டி பழைய, சமீபத்திய சினிமா காட்சிகள். கமல், குழந்தை நட்சத்திரமாக நடித்த களத்தூர் கண்ணம்மாவின் ஒரு காட்சியைத் தொடர்ந்து சகல கலா வல்லவனுக்கு ஒரு தாவுத் தாவி விட, வாண வேடிக்கையின் வண்ணச் சிதறல்கள்தான்!



• ஹரிச்சந்திரா



• நாம் இருவர்

ஒவ்வொரு பகுதியின் முடிவிலும் ஏவி.மெய்யப்பனின் ஒரு செயல் திறன் பளிச்சிடச் செய்து, வாழ்க்கையின் வெற்றிப்படிகள் எவை என்பதையும் உணர்த்துகிறார்.

பார்த்து ரசிக்கலாம்; பின்பற்றிப் பயனும் அடையலாம்.

- கி. ராஜேந்திரன்.



அத்வானியிடம் எஸ்.வி.சேகர் கொடுத்த மனு!

அண்மையில் பாரதீய ஜனதா கட்சித் தலைவர் அத்வானி சென்னை வந்திருந்தபோது, எஸ்.வி. சேகர் அவரைச் சந்தித்தார். அதுவும் அதிகாலை ஐந்து மணிக்கு. கடந்த தேர்தலின் போது, மைலாப்பூர் தொகுதி பா.ஜ.க. வேட்பாளர், வேட்புமனு தாக்கல் செய்யப் போனபோது, உடன் சென்றிருந்தவர் சேகர். இந்த நிலையில் அத்வானியை சேகர் சந்தித்ததற்கு என்ன பின்னணி? அவர் பா.ஜ.க.வில் சேரப் போகிறாரா? சேகரிடமே விசாரித்தபோது...

"அத்தனை அதிகாலையில் போய்ச் சந்தித்ததற்கு, என்ன காரணம்? யாருக்கும் தெரியக் கூடாது என்பதற்காகவா?"

"நான் அத்வானியைச் சந்திக்க விருப்பம் தெரிவித்த போது, ஆறு மணிக்கு அவர் டெல்லி புறப்படுவதால், அதிகாலை வந்தால் அவரை சந்திக்கலாம் என்று கட்சி நிர்வாகிகள் தெரிவித்தனர். எனவேதான் நான் அதிகாலையில் போய் அத்வானியைச் சந்தித்தேன். அதில் வேறு ரகசியம் ஏதும் இல்லை."

"என்ன பேசினீர்கள்?"

"தமிழ் நாடகத் துறையைச் சேர்ந்தவன் என்ற முறையில்தான் நான் அவரைச் சந்தித்தேன். அண்மையில் டெல்லியில் கிருஷ்ணர் கோவில் கட்டுவதற்கு நிதி சேகரிக்க, என் நாடகங்களுக்கு ஏற்பாடாகி இருந்தது. என் நாடகங்களை நன்கொடை கொடுத்துப் பார்த்தவர்கள் சந்தோஷமாய்ச் சிரித்தார்கள்; என்றாலும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்களுக்கு ஒரு வருத்தம். காரணம், அங்கே நாடகங்களுக்கு கேளிக்கை வரி விதிக்கப்படுகிறது. இதை கோவில் கமிட்டியினர் என்னிடம் சொன்னபோது, அதிர்ச்சியாக இருந்தது. காரணம் தமிழ்நாட்டிலும் சரி, வேறு பல மாநிலங்களிலும் சரி, நாடகங்களுக்கு, கேளிக்கை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதைச் சுட்டிக்காட்டி, டெல்லியில் பா.ஜ.க. ஆளும்கட்சியாக இருப்பதால், அங்கே நாடகங்களுக்கு கேளிக்கை வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று கோரி ஒரு மனுவைக் கொடுத்தேன். அவரும் இதுகுறித்து, டெல்லி முதலமைச்சருடன் பேசி, நல்லதொரு முடிவு எடுக்கப்படும் என்று கூறினார்."

"உங்களுக்குப் பா.ஜ.க.வில் சேரும் எண்ணம் உள்ளதா?"

"நீங்களாகவே ஏதாவது கற்பனை செய்து கொண்டு, அதை நான் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்த்தால் எப்படி?"

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345626; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா உள்நாடு : ரூ. 78/-. வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

! 95 கோடியையும் தங்கமாகக் கருதி அவற்றில் சிலவற்றையேனும் பாரதத்தாய் அணியக்கூடிய ஆபரணமாக உருமாற்றும் முயற்சி சிறிதும் இல்லையே!

● வி. முத்தையா, திருநெல்வேலி.
? பள்ளி திறந்து இரண்டு மாதங்களாகியும் இன்னும் சில பாடப் புத்தகங்கள் கடையில் கிடைப்பதில்லையே?

! கடந்த் ஆட்சியின் மீது பழிசுமத்தி இந்த வருஷம் தப்பலாம்; அடுத்த ஆண்டு தாமதமானால் சால்ஜாப்பு கூற முடியாது. அன்பழகனார் இப்போதே சுறுசுறுப்புக் காட்டட்டும்.

● ப. வடிவேலு, சென்னை – 116.
? 'அறுபது லட்சம் ரூபாயில் கார் வாங்கியது உப்பு பெறாத விஷயம்' என்று நடராஜன் பேட்டி ஒன்றில் கூறியுள்ளாரே?

! நியாயம்தான்! கோடிகளில் திளைப்பவர்களுக்கு லட்சம் எந்த மூலைக்கு! ஆனால் நேர்மையாகச் சம்பாதிக்காத செல்வம் ஒட்டாது.

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
டி. கலைவாணி,
A/4, வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு,
தாந்தோன்றிமலை, கரூர் - 639 005.

● டி. கலைவாணி, கரூர். ❑
? கிரிமினல்களுக்கும் கு.க.வைக் கடைப்பிடிக்காதவர்களுக்கும் தேர்தலில் வேட்பாளராக நிற்கத் தகுதியில்லை என்று தேர்தல் சீர்திருத்த மசோதாவில் குறிப்பிடாமல் விட்டு விட்டார்களே?

! குறைந்தபட்ச செயல் திட்டம் வகுத்து, அதன்படி 'அனுசரித்து'ப் போகும் ஆட்சியில் இதெல்லாம் எப்படிங்க நடக்கும்...!

● என். சுப்பிரமணியம், குடந்தை.
? சட்டவிரோத ஆக்கிரமிப்பாளர்களுக்கு மாற்று இடம் தரப்படும் என்று தஞ்சை கலெக்டர் அறிவித்துள்ளது சரியா? ஏழைகள் என்பதால் குற்றத்தை மன்னித்து விடுவதா?


! சட்டவிரோதமான ஆக்கிரமிப்பு தவறுதான். ஆனால் பல ஏழைகள் இவ்வாறு ஆக்கிரமிப்புச் செய்து குடிசை போடுவதை மனிதாபிமானக் கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும். அதிகார பலத்தால் வசதியுள்ளவர்கள் கூட ஆக்கிரமிப்புச் செய்கிறார்கள். அதைத் தண்டிக்கும் கண்ணோட்டத்துடன் தான் அணுக வேண்டும். ஏழைகள் பிழைப்புத் தேடி நகரங்களுக்கு வந்து சேர்கிறார்கள். தங்க இடமின்றித் தவித்து, குடிசை போடுகிறார்கள். இவற்றை அகற்றி, வேறு மாற்றிடத்துக்குக் குடியேற வசதி செய்து தருவது மனிதாபிமானம். பிழைப்புத் தேடி இங்கு வ்ர அவசியமின்றி கிராமப் புறங்களிலேயே ஆண்டு முழுதும் வேலை வாய்ப்பும் நல்ல ஊதியமும் கிடைக்க ஏற்பாடு செய்வது நிரந்தரத் தீர்வு.

● மல்லிகை மன்னன்,
மதுரை – 14.
? 'மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்ட இந்தக் கருணாநிதியே மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும் போது, நாங்களும் ஆட்சியைப் பிடிக்க முடியாதா?' என்று வாதாடுகிறாரே காளிமுத்து?


! ராஜீவ் மரணத்தையொட்டி தி.மு.க. மீது அபாண்ட பழி சுமத்தப்பட்டது என்பதை மக்கள் புரிஞ்சுக்கிட்டாங்க. அ.தி.மு.க. கேஸ் அப்படியில்லையே... கம்பி எண்ணுகிற கேஸாக அல்லவா இருக்கு!

● பாலாஜி, குடந்தை - 1.
? நூறு சினிமாவில் நடித்தவர்களுக்குக் கிடைக்கிற பெருமையும் அங்கீகாரமும் நூறு இலக்கியங்களைப் படைத்த எழுத்தாளர்களுக்குக் கிடைப்பதில்லை என்கிறாரே மூப்பனார்?

! சினிமாவிலும் சரி, எழுத்திலும் சரி, 'நூறு' என்பதே சாதனையாகிவிடாது! எண்ணிக்கையை விட தரமே முக்கியம். தரம் இருந்தும் பலர் கவனிக்கப்படவில்லை என்பதுதான் மூப்பனாரின் வருத்தம்.





• நியாயத் தீர்ப்பு • தட்டியவரைத் தட்டி...! • பகல் கனவா! • அந்த நூறும், இந்த நூறும் • உடைந்த சஸ்பென்ஸ் • மீண்டும் முடியும்!

வழக்கில் பரபரப்பு இல்லையே?

உன்னை வேணாமா?

ஸ்ரீராம் பர்ஸைத் திறந்தான்.

"இரு இரு.... இந்த முறை நான் குடுக்கணும்....." அவனைத் தடுத்து, ஹேண்ட் பேகிலிருந்து ஐம்பது ரூபாய் நோட்டை உருவி வைத்தாள் சுகன்யா.

"கல்யாணம் ஆனப்புறம் இப்படி இருப்பியா சுகி...? 'இந்த முறை நான் அடுத்த முறை நீ'ன்னு பிரிச்சுப் பிரிச்சு பேசி..."

"இல்லை! இப்படியே இருக்க முடியாது. ஏன்னா, கல்யாணத்துக்கப்புறம் வேலையை விட்டுடப் போறேனே... அப்ப ஸ்டிக்கர் பொட்டு லேருந்து ரீடர்ஸ் டைஜஸ்ட் சந்தா வரைக்கும் எல்லாத்துக்கும் நீதான் பணம் தரணும்!"

"நீ இப்படி முடிவு பண்ணியிருக்கேன்னு தெரிஞ்சா, ராஜு என் சீட்டைக் கிழித்தாலும் கிழிச்சிடுவார்.... அவருக்கு நீ இல்லாம ஒருநாள்கூட சரிப்படறதில்லை."

"பயப்படாதே! அவரை நான் ஏற்கெனவே எச்சரிக்கை பண்ணி வைச்சிருக்கேன்..."

-சில்லறையை எடுத்துக் கொண்டு எழுந்தாள்.

"எப்படி ஒத்துண்டார் உன்னை விடறதுக்கு?"

"ஹி இஸ் எ நைஸ் மேன்...எனக்குன்னு ஒரு வீடு, குடும்பம், அதுல இருக்கற சச்சரவு, சிரிப்பு, ஒட்டுதல், உரசல்கள் எல்லாத்துக்கும் ஒட்டு மொத்தமா நான் ஏங்கிக்கிட்டிருக்கேன்றது அவருக்குப் புரிஞ்சு போச்சு. நான் வந்து சேர்ந்த இந்த



இரண்டு வருஷத்திலே நம்ம கம்பெனியும், I improve, we solicit, for your kind consideration, at an early late ன்னு எழுதிண்டிருந்த பிரிட்டிஷ் கால ஆங்கிலத்தையெல்லாம் தூக்கி எறிஞ்சுட்டு, ந்வீனமா மாறிக்கிட்டிருக்கு...இன்னும் ஆறு மாசமானா என்னை மாதிரி ஒரு ஆளுக்கு அவசியமே இல்லாமப் போனாலும் போகலாம்....''

"அதனாலென்ன சுகி... நீயும் ப்ரோகிராமிங் கத்துக்கோ... தொடர்ந்து வேலை பார்க்கலாமே..."

"வேண்டவே வேண்டாம்! இப்ப நான் பொறியலும், அவியலும் செய்யக் கத்துக்கற 'மூட்'ல இருக்கேன். டு ஹெல் வித் ஸாஃப்ட்வேர்! அதுதானே இன்னைக்கு உன் பொன்னான மாலை நேரத்தைச் சாப்பிடப் போறது.... அப்புறம் பாதி ராத்திரியையும் விழுங்கி ஏப்பம் விடப் போறது...!"

"ஆமாம்! ஃபேர்லண்ட்ஸ் வேலையை இன்னைக்கு எப்படியும் முடிச்சாகணும். சிவராத்திரிதான்..."

"நாளைக்கு இடுங்கின கண்ணோட சைனாக்காரன் மாதிரி வந்து சேருவே..."

"ஏன் உனக்கு சைனாக்காரங்களைப் பிடிக்காதா...?"

"ஓ! ரொம்பப் பிடிக்கும். அதைவிட சைனீஸ் ஃபுட் - அடுத்தமுறை நீ என்னை ஷாஸ் ரிலா கூட்டிட்டுப் போறே.... சரியா...?"

"டன்! இப்ப நீ போய்ச் சேரு. வார்டன் அம்மா உனக்காக ஆசையா வாசல்லேயே காத்திருப்பாங்க..."

பெரிதாகச் சிரித்தாள்.

"இந்த நகைச்சுவை உணர்வு மட்டும் இல்லைன்னா நாம என்ன பண்ணுவோம்...!"

"அதுக்குன்னு தனியா ஸாஃப்ட் வேர் தயாரிக்க முடியுமான்னு பார்ப்போம். அப்புறம் அதை வியாபாரமாக்கி உலகம் பூரா விக்கற முயற்சியில திரு.ஸ்ரீராம் ராமநாதன் இரவு பகலா ஈடுபடுவார்..."

இப்போ அவன் சிரித்தான், பெரிதாக.

ஆட்டோ பிடித்துத் தந்து, அவள் மஞ்சள் புடைவை பளிச்சென்று மறைந்ததும் ஸ்ரீராம் மீண்டும் அலுவலகத் திசையில் போனான்.



"நீ போய்த் தூங்கேன் வசந்தி. நாளைக்கு காலேஜ் போக வேண்டாமா...?"

பெண்டுலம் வைத்த கடிகாரம் பதினோரு மணி அடிக்கக் கேட்டுச் சொன்னார் ராமநாதன்.

வசந்தி மனமில்லாமல் எழுந்தபோது, ஹால் மூலையில் வளைந்து கண்ணயர்ந்திருந்த அம்மா அசைந்து கொடுத்தாள்.

"வசந்திம்மா, சமையல் மேடையைத் துடைச்சுட்டியா...? ரொம்ப அசதியாயிருக்கு..."

அசதி, உடல் அயர்வினால் மட்டுமில்லை, பிற்பகல் உடைந்த உண்மையை, முன்னிரவு வரை மனத்துக்குள்ளேயே போட்டுத் தனித் தனியே குமைந்து கொண்டிருக்கிறது வீடு.

தேவிபாலா ?

அதன் அழுக்குச் சுவர்களும் பூப்போட்ட பிளாஸ்டிக் திரைச் சீலைகளும் கூட களைத்துச் சோர்ந்ததுபோல் தோன்றியது அவளுக்கு.

சமையல் மேடையில் பொட்டுப் பொட்டாக தோசை மாவு சிதறிக் காய்ந்திருந்தது. அம்மாவின் இன்றைய மனநிலைக்கு இன்னொரு அடையாளம்... அடுப்பு சூட்டுக்கருகே விழுந்த புள்ளிகள் அழுத்தித் துடைத்தாலும் வெளிவர மறுத்தன.

"என்னவொரு பிடிவாதம்...! அண்ணாவைப் போல...! வசந்தி ஸ்பாஞ்சைத் தண்ணீரில் முக்கி ஒவ்வொரு காய்ந்த மாவுப் புள்ளி மீதும் பிழிந்து ஊற வைத்தாள்.

வழக்கமாக மூன்று நிமிடங்களில் முடியும் வேலை முழுசாகப் பதினைந்து நிமிடங்கள் எடுத்துக் கொண்டது.

மேடையில் அரிசி மாவால் கோல இழைகள் இழுத்து, நடுவே நட்சத்திரம் போட்டு மாவு டப்பியை மூடியபோது வாசல் கேட் திறக்கும் ஒலி... அண்ணாவின் கார்தான்..

வசந்தி அவசரமாக பூஜையறைக்குள் போய் கை கூப்பிக் கண் மூடினாள். 'அம்பிகே! இன்னைக்கு எது நடந்தாலும் தாங்கற சக்தியைக் கொடு... எனக்கு, அம்மாவுக்கு, அப்பாவுக்கு... அப்புறம் அண்ணாவுக்கு...'

வழக்கத்துக்கு மாறாய் வீடே விழித்திருந்து 'வரவேற்றதும்' ஸ்ரீராமுக்குப் புரிந்து போயிற்று. வசந்தி அவனை நேருக்கு நேர் பார்க்க மறுத்து, கண்களைத் தாழ்த்தி, ஓரமாய் நின்றாள். சுவரில் சாய்ந்து துக்கமே உருவாக அம்மா. அப்பா மட்டும் எப்போதும் உட்காரும் சாய்வு நாற்காலியில் வசதியாய்...

"போய் சாப்பிட்டுட்டு வா ஸ்ரீராம்! கொஞ்சம் பேசணும்...." பனிப்பாறை போல் இறுகின. குரலில் உணர்ச்சிகள் உறைந்து போய் ஒலித்தன.

சின்ன படுக்கையறையில் குமார் தூங்கிப் போயிருந்தான். ப்ரீஃப்கேஸை வைத்துவிட்டு, முகம் கழுவி, உடை மாற்றி வழக்கம்போல் பூஜையறையில் கண் மூடி ஸ்ரீராம் நின்றபோது, மனம் ஒரு நிலைப்பட மறுத்தது. இரண்டு நிமிடங்கள் முயன்று தோற்று, திருநீறை மட்டும் அணிந்து சாப்பாட்டு மேஜைக்கு வந்தான்.

விழித்திருந்தால் தவறாமல் பரிமாற வரும் அம்மா, இன்று அசையவில்லை. வசந்தி மட்டும் தம்ளரில் தண்ணீரை நிரப்பவிட்டு அகன்று கொண்டாள்.

அத்தனை இறுக்கத்திலும் அம்மாவின் கைப்பக்குவம், சுவை நரம்புகளைக் கடந்து மனத்தை வருடியது. தோசைகளின் ஓரம் வரை கவனமாகத் தடவி வைத்திருந்த மிளகாய்ப் பொடி, கத்திரிக்காய், முருங்கைக் காய் என்று கொத்தாக உள்ளடக்கிய ஒரு கிண்ணம் சாம்பார், தனியாகத் தோய்த்து வைத்த தயிர்.

சாப்பிடும் வரை ஒருவர் ஒரு வார்த்தை பேசப் போவதில்லை என்பது புரிய, அந்த ஏழு நிமிடங்களில் அப்பாவுடன் உரையாட மனத்துக்குள் ஒத்திகை நடத்தினான் ஸ்ரீராம்.

'நீங்க என்ன கேக்கப் போறேள்னு தெரியும் அப்பா...'

'என்ன தெரியும்?'

'வசந்தி சொல்லியிருப்பான்னு நினைக்கறேன்....'

'ஆமாம்! சொன்னா. இப்படி ஒரு காரியம் பண்ணுவேன்னு நான் துளியும் நினைக்கலை ஸ்ரீராம்! அது முதல் தப்புன்னா வசந்தி கிட்டே சத்தியம் வாங்கிண்டு உண்மையை மறைக்கப் பார்த்தது அதைவிட தப்பு!'

'அப்பா! நான் எதையும் வேணும்னு மறைக்க நினைக்கலை. உங்களுக்கே தெரியும், நான் டிகிரி படிச்சறச்சே அந்த பித்துக்குளி ரோகிணி அச்சுபிச்சுன்னு 'லவ் லெட்டர் எழுதினாளே... உங்ககிட்டேதானே முதல்ல சொல்லி அட்வைஸ் கேட்டேன்?'

'அப்ப கேட்கத் தோணின மாதிரி, இப்ப தோணியிருக்க வேண்டாமா...? இறக்கை முளைச்சுப் போச்சு இல்லியா...?'

'கேக்கத் தோணலைன்னு இல்லப்பா... கேக்கறத்துக்கு அவகாசமோ, அனுமதியோ தராம காரியங்கள் தானா நடந்து போச்சு. அவ லவ் லெட்டரும் குடுக்கலை, நாங்க தனியா

தங்க நகைப் பரிசு!

இன்னும் 23 வாரங்கள் வெளிவரப் போகிற இந்தத் தொடர் கதை, வாராவாரம் ஓர் எழுத்தாளரின் பெயரில் வெளியாகும். ஆனால் முழுக்கதையையும் எழுதுபவர் ஒரே எழுத்தாளர்தான்! யார் அவர்?

வாரா வாரம் படித்து, யூகித்துக் கொண்டே இருங்கள். கடைசி வார அத்தியாயத்துடன் வெளியாகப் போகிற கூப்பனில், 'தொடரை எழுதியவர் யார்?' என்கிற உங்கள் யூகத்தை எழுதி அனுப்புங்கள். உங்கள் யூகம் சரியானதாக இருந்தால் உங்களுக்குத்தான் மின்னும் தங்க நகைப் பரிசு!

பலர் சரியான விடை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் ஓர் அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

பேசணும்னு எந்த முயற்சியும் பண்ணவும் இல்ல...'

'இப்ப என்னங்கறே! அந்த மாதிரியெல்லாம் நடக்கலையேன்னு வேற குறையா இருக்கா...?

-கேட்கும்போது அப்பாவின் குரலில் எகத்தாளம் கத்திமுனையாக மின்னும்...

-நினைத்துக் கொண்ட ஸ்ரீராமுக்குப் புரையேறியது.... அவசரமாக இரண்டு மிடறு தண்ணீரைக் குடித்தான்.

'அந்தப் பொண்தான். நினைச்சுக்கறாளா இருக்கும்...' ராமநாதனின் எண்ணம் ஓடியது....

'என்ன சொல்லுவான்... மறைச்சது தப்புதான்பா... வசந்தி கல்யாணத்தை உத்தேசித்து இப்ப அதைப் பத்திப் பேச வேண்டாம்னு இருந்தேன் என்பான்.'

'வசந்தி கல்யாணத்தைப் பத்தி அவ்வளவு அக்கறை இருந்தா இப்படி மனசை அலைய விட்டிருப்பியா?... அந்தப் பொண்ணு இந்த வீட்டிலே மருமகளா எபபடிப் பொருந்துவானு நினைக்கிறே...?

'அப்பா! அவ நல்ல பொண்ணு...'

'என்ன நல்ல பொண்ணு? கல்யாணத்துக்கு முன்னாடி திருட்டுத்தனமா ஒரு ஆம்பிளையோட... வசந்தி சொன்னா, கார்ல பார்த்ததை. அதுக்கெல்லாம் தய்ரா இருக்கறவ நல்ல பொண்ணா எப்படி இருக்க முடியும்? நீ மட்டும் என்ன, பேருக்கேத்த ஸ்ரீராமனாவா நடந்துண்டே...?'

-இருந்த நிலையிலிருந்தே மகனை நோட்டம் விட்டார் ராமநாதன். 'நான் எப்படி அவனை வாய்விட்டுக் கூப்பிடுவேன்? உங்க பேர்ல பாதியை வைக்கச் சொல்றேளே, என்று மனைவி ஆட்சேபித்ததையும் மீறி 'ஸ்ரீராம்' என்று பிடிவாதமாகப் பெயர் வைத்திருந்தார். ஆதர்ச புருஷன் ஸ்ரீராமன்! என் மூத்த மகன் அவனைப் போல் வலிமையாய், தாமரை இலைத் தண்ணீராய் பக்குவப்பட்டு, ஆன்ம பலத்துடன் வளர வேண்டும்.

அவனுக்காக அவர் கண்ட கனவுகள் எல்லாமே நிறைவேறிக் கொண்டுதான் வந்தன. இன்றைய செய்தி வெள்ளம் வந்து அத்தனையையும் அழித்துப் போட்டு விட்டதே!

அப்பாவின் பார்வை தன் மீது பதிவதை உணர்ந்து, அவர் இருந்த திசையை நோக்கினான் ஸ்ரீராம்.

சட்டென்று பார்வையைத் திருப்பிக் கொண்டார் அவர்.

'இப்படி எகத்தாளமா பேசாதீங்கோ அப்பா...' - ஸ்ரீராம் ஒத்திகை விவாதத்தை உச்சத்துக்கு வளர்த்துக் கொண்டு போனான்.

'சுகன்யாவும் நானும் ரொம்ப விரும்பறோம். ஆனால் உங்க ஆசிகளோட கல்யாணம் பண்ணிக்க எத்தனை நாள் வேணும்னாலும் காத்திருக்கத் தயார்'னு நான் பொய் சொல்லப் போறதில்லே... அதுக்கு முக்கியமான காரணம் அவளோட தனிமை, ஏக்கம்... அது தெரிஞ்சும் அவளைத் தொடர்ந்து தவிக்க வைச்சா அது நான் செய்யற பெரிய தப்பு...'

'நாளைக்கே போய் ரிஜிஸ்தர் மாரேஜ் பண்ணிக்கோங்க... நானா குறுக்கே விழுந்து தடுக்க முடியும்...?'

'இல்லைப்பா. ஒரு வருஷம் அவகாசம் கேட்டிருக்கேன். அதுக்குள்ளே வசந்திக்கு மாப்பிள்ளை பார்த்து முடிச்சு வைக்கறது என்



"அந்த போலீஸ்கார ரோட காலுக்கு அடியில உட்கார்ந்து தப்பிச்சிட்டேன்."

"எப்படிண்ணே?"

"குனிந்து பார்த்தால் கூட அவருக்குத் தொந்தி மறைச்சிருமேப்பா!"

– சீர்காழி வி.ரேவதி

பொறுப்பு. பாம்பே, ஹைதராபாத்துனு போகும்போது சந்திக்கிற நல்ல பையன்களை மனசுல வைச்சுண்டு தான் சொல்றேன்...'

'உன்னையும் நல்ல பையன்னுதான் நினைச்சேன் ஸ்ரீராம். நீ நல்ல பையன்கள்னு சர்டிபிகேட் குடுக்கறவங்க உன்னை மாதிரி திருட்டுத்தனம் பண்ணமாட்டாங்கன்னு என்ன நிச்சயம்...?'

'அப்பா, தயவு செஞ்சு எனக்குத் திருட்டுப் பட்டம் கட்டாதீங்க. நான் உங்ககிட்டேருந்து கொஞ்ச காலமா உண்மையை மறைச்சது தப்புதான். ஆனா நிச்சயமா ஏமாத்தணும்ங்கறதுக்காக இல்லை... நம்ம வீடு சுகியை ஒத்துக்க ரொம்ப கஷ்டப்படும்னு எனக்குத் தெரியும். அந்தக் கஷ்டத்தைக் குடுக்கறதுக்கு முன்னாடி நாம ரொம்ப முக்கியமா

நினைக்கற வசந்தி கல்யாணம்...'

'வீடு கஷ்டப்படும்னு தெரிஞ்சும் ஏன் மனசை அவிழ்த்து விட்டே...? அதுதான் எனக்குப் புரியலை ஸ்ரீராமா...'

'கரையில கட்டி வைச்ச படகை அவிழ்த்து விடற மாதிரி நான் மனசைத் தளர்த்தி விடலைப்பா.. எனக்கே தெரியாம ஒரு புயல் வந்து அதை அழச்சுண்டு போயிடுத்து... ஆனா அது போய்ச் சேர்ந்திருக்கிற இடம் அப்பழுக்கில்லாத பளிங்குப் பாறை. நீங்களே யோசிச்சுப் பாருங்கோ... இவ்வளவு வருஷமாக எத்தனையோ பெண்களைப் பார்த்தேன், பேசினேன், தொழில் ரீதியா பழகவும் வேண்டியிருந்தது. அப்போதெல்லாம் நடக்காதது இப்போ மட்டும், சுகன்யா விஷயத்துல மட்டும் ஏன் நடக்கணும்?'

'அது என் தலையெழுத்து! உங்கம்மாவும் நானும் செய்த கர்மா!'

'உங்க தலையெழுத்தை நல்லபடியாகத் தான்பா ஆண்டவன் எழுதியிருக்கான். கல்யாணமாகி சுகன்யா இந்த வீட்டுக்கு வந்தப்புறம் நீங்க அதைப் புரிஞ்சுப்பேள். இப்பவே அவ முடிவு பண்ணிட்டா... கல்யாணமான கையோட வேலையை விட்டுடப் போறாளாம். நம்ம குடும்பத்தோட முழுசா கலந்து பழகணுமாம்.'

'எப்படா கல்யாணம்? அதையும் அவளையே முடிவு பண்ணச் சொல்லிடேன்...'

'பார்த்தேளா... திரும்பவும் எகத்தாளமாகப் பேசறேளே... முதல்ல வசந்தி கல்யாணத்தை முடிச்சுடுவோம். அவ ஓபன் யூனிவர்சிடியில கூடத் தொடர்ந்து படிக்கலாம். அடுத்த வாரமே நான் ஹைதராபாத் போய் பாலகிருஷ்ணனோட அப்பாவைப் பார்க்கறேன். பாலு ரொம்ப நல்ல பையன்...'

மானசீகமாய் ஹைதராபாத் எக்ஸ்பிரஸில் ஏறிவிட்டதை உணர்ந்து ஸ்ரீராம் தலையை உலுக்கிக் கொண்டான். சாப்பிட்ட தட்டை அலம்பி வைத்து, வாய் கொப்பளித்த போது, அவன் மன ஓட்ட விவாதத்தில் அப்பா மெள்ள அடங்கி வழிக்கு வந்து கொண்டிருந்தார். ஹைதராபாத்திலிருந்து தமிழ் மாப்பிள்ளையையும், வங்க-தமிழ் காம்பினேஷன் மாட்டுப் பெண்ணையும் அடுத்தடுத்து ஏற்கத் தயாராகியிருந்தார்.

வசந்தி கல்யாணத்தில் சுகன்யா சுழன்று வேலை செய்வதைப் பார்த்து அம்மா கூடப் பூரித்துக் கொண்டிருந்தாள்.

'மன்னி' என்று அவளை வாய் நிறையக் கூப்பிட்டுவிட்டு, வசந்தி அவளை ஓரக்கண்ணால் குறும்புப் பார்வை பார்த்தாள்...


ஆனால்... கை துடைத்துக் கொண்டு "சொல்லுங்கோ..." என்று அவன் அப்பாவிடம் வந்து அமர்ந்தபோது கற்பனைக்கும் நிஜத்துக்கும் இடையேயான பிரும்மாண்ட இடைவெளியின் பயங்கரத்தை உணர்ந்தான்.

அப்பா பேசியபோது, அந்த இடைவெளிகளை இட்டு நிரப்ப சூப்பர் கம்ப்யூட்டர்களால்கூட முடியாது என்பது ஊர்ஜிதமானது.

(தொடரும்)

"தலைவா! மொதல்ல நிறுத்துங்க! ஊர்ல அவனவன் தேர்தல்ல தோத்துப் போன துக்கத்துல தலைவர் தண்ணி அடிக்கிறார்னு கிண்டலாப் பேசறான்..."

– பார்கவி






"பளு தூக்கும் போட்டியில் நம்ம போர்ட்டர் கலந்துக்கிட்டு தன் தொழில் புத்தியைக் காட்டிட்டான்."

"..எப்படி?"

"பரிசு வாங்கும் போது 'இவ்வளவு வெயிட் தூக்கியிருக்கேன், கொஞ்சம் பார்த்துப் போட்டுக் கொடுங்க'ன்னு சொல்லிட்டான்.

– வெ. ராஜாராமன்

சுஜாதா பக்கம்



தபால் மூலம் இப்போது ஹோமியோபதி, கம்ப்யூட்டர், எம்.சி.ஏ., எம்.பி.ஏ., இதழியல், தமிழ் இலக்கியம் போன்ற பல படிப்புகள் கற்க முடிகிறது. சிறுவயதில் தாத்தா இறந்தது போன்ற பல்வேறு காரணங்களுக்காக படிப்பைப் பாதியில் நிறுத்தியவர்கள் தம் ஆர்வங்களைத் தொடர்ந்து படிக்க வாய்ப்பு கிடைக்கிறது.

ஆனால் நவீன உலகத்தில் பிழைத்திருக்க, எத்தனையோ புதிய தந்திரங்கள் கற்க இந்த சம்பிரதாய கலாசாலைப் படிப்புக்கள் உதவுமா என்று சந்தேகமாக உள்ளது. அதனால் பல்கலைக்கழகங்களுக்கு கீழ்வரும் புதிய பாடத்திட்டங்களைப் பரிந்துரைக்க விரும்புகிறேன்.

இவைகளில் இளங்கலையோ டிப்ளமாவோ, அனுப்பும் சில்லரைப்படி வழங்கலாம்.

*1. **கர்நாடக இசை இளங்கலை :** டேப் ரிக்கார்டரை எப்படி இயக்குவது, அதன் பல பாகங்கள், விசைகள், சிக்கிக் கொண்ட டேப்பை பொறுமையிழக்காமல் எப்படி விடுவிப்பது, சில கர்நாடக சங்கீத காஸட்கள் (தலா ரூபாய் 37/- கலால் வரி தனி) அனுப்பப்பட்டு அவைகளை கேட்டு முடித்தவுடன் புன்னாக வராளி ஆடு பாம்பே ராகத்தைக் கண்டு பிடிக்கவும், சபா கச்சேரியில் காலை ஆட்டாமல் தலையை மட்டும் ஆட்டப் பழகவும் கற்ற உடன் டிப்ளமா வழங்கப்படும். (வி.பி. செலவு தனி.)*

*2. **வேதாந்தம் :** பகவத் கீதை மலிவுப் பதிப்பு ஒன்று சம்ஸ்க்ருதத்தில் அனுப்பப்படும் (படிக்கத் தேவையில்லை) வாழ்க்கை நிலையானதா, அடுத்த ஜென்மத்தில் ஸ்விட்ஸர்லாந்தில் பிறப்பது எப்படி, பெண்கள் ஏன் கிராப்பு வைத்துக் கொள்கிறார்கள்? இந்தியா உலகக் கோப்பையை ஜெயிக்குமா போன்ற கேள்விகளுக்கு விடை தரப்படும். தாடி வளர்ப்பது பற்றி குறிப்புக்கள் தரப்படும் (முதல் நூறு மாணவர்களுக்கு மட்டுமே இந்த சலுகை).*

*3. **டி.டி.எஸ் ஏ. - டிப்ளமா இன் டமில் சினிமா அப்ரிசியேஷன் :** தமிழ் சினிமாவில் எப்போது எழுந்து ஒன்றுக்குப் போகலாம், எப்போது வீட்டுக்குப் போகலாம், எந்த சினிமாவுக்கு ப்ளாக் டிக்கெட் வாங்கலாம். அவைகளை உடனுக்குடன் விற்பது எப்படி, டூயட் பாடல்களின்போது வரும் பெண்களை எண்ணுவது எப்படி போன்ற விவரமான பாடங்கள் கொண்டது. இந்த டிப்ளமா பெற்ற பின் எம்.கே.எஸ். - மாஸ்டர் ஆஃப் கவுண்டமணி-செந்தில் படிப்புக்குத் தயாராகலாம்.*

*4. **புதுக்கவிதை திறனாய்வு :** இளங்கலை, முதுகலை. பு.க. என்பது என்ன என்பது குழப்பப்படும். உரைநடையை எந்த எந்த இடத்தில் உடைக்க வேண்டும், மனைவியின் எந்த எந்த நகைகளை எந்த இடத்தில் விற்று எப்படி புதுக்கவிதை தொகுப்பு கொண்டு வருவது, சிறு பத்திரிகைகளின் விலாசங்கள் (மாசா மாசம் புதுப்பிக்க வேண்டிய பட்டியல்) கொடுக்கப்படும். பயிற்சி இறுதியில் நீங்கள் எழுதிய புதுக்கவிதை ஒன்று காட்டாங்குளத்தூர் ஆசிரமத்தில் வாசிக்கப்படும். இதன் தொடர்ச்சியாக சினிமாப் பாடல்கள் எழுதுவது எப்படி என்கிற முதுகலை படிப்பில ராக மோகம், மணிக்குயில், தங்க மயில், எசப்பாட்டு, சுகராகம், ராகசுகம் போன்ற தமிழ் சினிமாவில் பயன்படுத்தப்படும் அறுபத்து ஒன்பது வார்த்தைகளும் பட்டியலாகத் தரப்படும். அதனுடன் அம்மம்மமா, அட போன்ற அசைகளின் லிஸ்ட் தரப்படும். பானிப்பூரி, ஜிலமா ராணி போன்ற அன்னிய மொழிச் சொற்களைப் பயன்படுத்துவதன் இலக்கண விதிகள் கற்பிக்கப்படும். இந்தப் பாடல்கள் எழுதுவதற்கு உண்டான ஸனம், கஸம், ஜுல்ப் திவானா, மஸ்தானா போன்ற உருது வார்த்தைகளும் கற்பிக்கப்படும். பான்பராக் போடுவது எப்படி, குட்காவின் நன்மைகள், ஜிப்பா பைஜாமா எப்போது போட வேண்டும், தமிழை எப்படிக் காப்பாற்றுவது போன்ற சுவையான விஷயங்களும் பாடத் திட்டத்தில் உள்ளன (குறிப்பு இந்தப் பாடத்திற்கு இந்த வருஷம் இடம் இல்லை).*

*5. **மனோதத்துவம், இன்றைய சித்தாந்தங்கள்:** ஏன் சிலரை மட்டும் நமக்குப் பிடிக்கிறது? சிலரை மென்னியை நெரித்து கூவத்தில் தள்ள விரும்புகிறோம்? வெறுப்பு என்பது என்ன என்ன? ஜாதி, வகுப்பு, சமய வெறுப்பு, சும்மா வெறும் வெறுப்பு என மூன்று பகுதிகளாக போதிக்கப்படும். முதுகலை வகுப்பில் கொலை செய்துவிட்டு எப்படி சரியாக வளர்க்கப்படாத காரணத்தைச் சொல்லி பொது மன்னிப்பு கேட்டு தண்டனையிலிருந்து தப்பிப்பது என்பது போதிக்கப்படும். முதல் முன்னூறு மாணவர்களுக்கு இலவசமாக, பிராண் டப்பாய் அனுப்பப்படும்.*

*6. **வானவியல் :** சூரியனை எப்படி கண்டு கொள்வது? சூரியன் திடீர் என்று காணாமற் போய்விட்டால் செய்ய வேண்டிய முதல் உதவிகள். சப்தரிஷிகள் யார் யார், அவர்கள் பத்தினிகளின் பெயர் என்ன, பத்திரிகைகளுக்கு வாரபலன் எப்படி எழுதுவது, ஆயிரம் பலன்கள் எழுதி அவைகளை எப்படி மாற்றிப் போடுவது என்பது விளக்கப்படும்.*

பி.கு. இவை அனைத்தும் தபால் மூலமே பெற வேண்டிய பாடங்கள். நேரில் சந்திக்கவோ கடிதப் போக்குவரத்தோ கூடாது.

(மீண்டும் அடுத்த வாரம்)

உள்ளே வரலாமா!

4

இரண்டு வருடங்களாய்ப் பேசிப் பழகிய பெண்ணாகத் தெரியவில்லை... புதுசாக ஒரு பொம்மையைப் பொட்டலம் கட்டிக் கையில் கொடுத்தது போலிருந்தது. ஒருக்களித்து கட்டிலின் ஓர் ஓரத்தில் தூங்கிக் கொண்டிருந்தாள் சுகன்யா. அவள் இடுப்பு வளைவு ஏற்படுத்திய சொற்ப இடத்தில், கட்டில் விளிம்பில் உட்கார்ந்தபடி பார்த்தான் ஸ்ரீராம்.

ஒப்பனையில்லாத முகம். ஆழ்ந்த தூக்கத்தில் அமைதி தவழ்ந்தது. சுற்றமும் நட்பும் இட்டுவிட்ட பிரசாதங்கள் நெற்றியை நிறைத்திருந்தன. வகிட்டில் ஒரு இஞ்ச் நீளத்திற்குக் குங்குமம். நாளெல்லாம் இறுக்கிக் கட்டி வைத்து, 'அப்பாடா' என்று அவிழ்த்து வைத்த கூந்தல் சுதந்தரமாய்த் தலையணையில் விரிந்து கிடந்தது. சற்றுமுன் சிரித்த சிரிப்பில் கண்ணீர் வழிந்தோடி, கண் மையைக் கரைத்துக் கன்னத்தில் பரப்பியிருந்தது. அதைத் துடைக்க நீண்ட கரத்தை, பின்னுக்கு இழுத்துக் கொண்டான் ஸ்ரீராம்.

சுகன்யாவின் சிரிப்புக்குக் காரணமாயமைந்த பூத்தோரணங்களை அண்ணாந்து பார்த்தான். இலேசாக வாட்டமுற ஆரம்பித்திருந்தான்.

"பட், ஸ்ரீராம், திஸ் இஸ் அப்ஸர்ட்" முதலிரவு அறையில் மனைவி பேசக் கேட்ட முதல் வார்த்தைகள் - சொல்லிவிட்டு ஒருகணம் அவனைப் பார்த்தாள். அப்படியும் அடக்கமாட்டாமல் சிரித்துக் குலுங்கினாள்.

அறை அலங்காரத்தின் அபத்தமான சினிமாத்தனம் அவனுக்கும் சிரிப்பூட்டியதென்றாலும் "உஷ்... மெல்ல சுகி.. வெளியில கேட்கும்..." என்றான்.

பக்கத்து மேஜையிலிருந்து பழங்களைப் பார்த்தவள், இன்னொரு சுற்று சிரிப்புக்குத் தயாரானாள்.

"ப்ளீஸ் சுகன்யா, சத்தமா சிரிக்காதே..."

"ஸ்ரீராம் என்னால இதை நம்ப முடியலை. இன்னும் இரண்டு நிமிஷம் ஆனா, ஏதாவது டூயட் பாட்டு அமானுஷ்யமா கேட்கும் போலேயிருக்கு..."

ஸ்ரீராம், "பெரியத்தையைக் கதவு கிட்டே நின்னு பாடச் சொல்றேன். உனக்குத் தெரியுமா...? நிஜமாவே அப்படி ஒரு சம்பிரதாயம் இருக்கு... பெரியத்தை பையன் சுரேஷ் கல்யாணத்தன்னைக்கு ராத்திரி, அவன் பெட்ரூம் வாசல்ல நின்னு அரை டஜன் லேடீஸ் பாடித் தீர்த்தாங்க..."

"எதுக்கு...?"

"எல்லாம் ஒரு சிருங்கார ரஸானுபவத்துக்கு செட்டிங் போடத்தான்..."

"எல்லா சம்பிரதாயமும் பிடிக்கலைன்னாலும், புரியறது ஸ்ரீராம். ஆனா ஒண்ணே ஒண்ணுதான் பிடிக்கவுமில்லை, புரியவுமில்லை..."

"என்னது...?"

"வாசல்ல அவ்வளவு அழகா கோலம் போட்டு வைச்சிருந்தது... வசந்திக்கு அதைப் போட நிச்சயமா ஒரு மணி நேரமாவது ஆகியிருக்கும். நம்மளை நிக்க வைச்சு, சிவப்புத் தண்ணி சுத்தி அந்த கோலத்துமேலேயே கொட்டிட்டாங்களே! எப்படி மனசு வந்தது...?"

"அதுக்கு வசந்தி ஏதாவது வாயைத் திறந்தாளா பார்த்தியா...?"

"ஆமாம், எனக்கு ஆச்சரியமாயிருந்தது. பழைய பழக்கங்கள் எதையுமே எதிர்க்காம, கேள்வி கேட்காம ஒத்துக்கறதுதான் இந்த வீட்டோட தத்துவம்னு நினைக்கிறேன்."

"அது மட்டுமில்லே சுகி... கோலம்ங்கறது எப்படியிருந்தாலும் இன்னிக்கில்லைன்னா நாளைக்கு அழிஞ்சுதான் போகும். இன்னொரு சுவாரஸ்யமான விஷயம், வைச்ச பொருளை எடுக்கவும் போட்டக் கோலத்தைக் கலைக்கவும் வீட்டுல ஒரு குழந்தை வேணும்னு வசனம் கூட சொல்றதுண்டு..."

? ரா.கி. ரங்கராஜன்

சொல்லிவிட்டு, ஸ்ரீராம் அவள் கைகளைப் பற்றி, கட்டிலின் மேல்

அவளை அமர்த்தினான். அவனும் பக்கத்தில் உட்கார்ந்த போது சடாரென்று தோளில் முகம் புதைத்துக் கொண்டாள்.

''எனக்கு வெட்கமாயிருக்கு...'' என்று மெலிதாய் அவள் குரல் மட்டும் வெளிப்பட்டது.

"ஏய், எதுக்கு இப்ப வெட்கமெல்லாம்...?" கூச்சத்தில் அவன் குரலும் கரகரத்துப் போனது.

விடுபட்ட ஸ்ப்ரிங் போல தலையை உயர்த்தினாள். "நம்பிட்டியா? ஓ, ஸ்ரீராம்! நீ ரொம்ப ரொம்ப சிம்பிள்! நான் நிஜமாவே வெட்கப்படறேன்னு நினைச்சியா?'' திரும்பவும் சிரிக்க ஆரம்பித்தாள்.



தங்க நகைப் பரிசு!

இன்னும் 22 வாரங்கள் வெளிவரப் போகிற இந்தத் தொடர்கதை, வாராவாரம் ஓர் எழுத்தாளரின் பெயரில் வெளியாகும். ஆனால் முழுக்கதையையும் எழுதுபவர் ஒரே எழுத்தாளர்தான்! யார் அவர்?

வாரா வாரம் படித்து, யூகித்துக் கொண்டே இருங்கள். கடைசி வார அத்தியாயத்துடன் வெளியாகப் போகிற கூப்பனில், 'தொடரை எழுதியவர் யார்?' என்கிற உங்கள் யூகத்தை எழுதி அனுப்புங்கள்.

உங்கள் யூகம் சரியானதாக இருந்தால் உங்களுக்குத்தான் மின்னும் தங்க நகைப் பரிசு!

பலர் சரியான விடை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் ஓர் அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

அவள் காதைப் பிடித்துத் திருகி, முகத்தை நெருக்கமாய் இழுத்து உச்சி முகர்ந்தான்.

"முதல்ல லைட்டை அணைக்கணும்."

"ஒய்...?"

"பின்னே, நான் டிரெஸ் மாத்த வேண்டாமா? இங்க அட்டாச்ட் பாத்ரூம் கிடையாது. வெளியில இப்பப் போனா பெரிய ரகளையானாலும் ஆயிடும். உன் எதிரே எப்படி மாத்தறது...?" கேட்டபடி எழுந்து பேர்ய் கேஸிலிருந்து சிவப்பு கவுன் ஒன்றை எடுத்தாள். லைட் சுவிட்சை சுவர்களில் தேடினாள்.

"நான் அணைக்கிறேன்..." அறையின் மறுகோடிக்குப் போய் சுவிட்சை அணைத்தான் ஸ்ரீராம்.

சற்று முன் அவள் சொன்ன வார்த்தைகள்... 'நான் நிஜமாவே வெட்கப்படறேன்னு நினைச்சியா...' எது நிஜம்...? அவள் வெட்கமா? அவள் நடிப்பா...? யோசனை வந்தது அவனுக்கு.

சுகன்யா பட்டுப் புடைவையைக் களையும் ஓசையும் அசைவுகளும் புலனாக, அவள் திக்கிலிருந்து பார்வையை விலக்கி நின்றான்.

லைட்டை மீண்டும் போட்டபோது சிவப்பு ஸ்லீவ்லெஸ் நைட்டி அணிந்திருந்தாள் அவள். புடைவையும் ரவிக்கையும் கட்டில் மீது கிடந்தன. அவற்றை அள்ளி கோட் ஸ்டாண்டில் போட்டுவிட்டு, கண்ணாடி வளையல்களைக் கழற்றி வைத்தாள்.

"நீ டிரெஸ் மாத்தலையா ஸ்ரீராம்?" அவன் இன்னும் லைட் சுவிட்சின் அருகிலேயே இருந்தான்.

"மாத்திக்கறேன்..." மீண்டும் லைட்டை அணைத்தான்.

"இப்போ ஏன் லைட்டை அணைக்கறே...?"

"நான் டிரெஸ் மாத்தறதுக்குத்தான்..."

க்ளுக்கென்று இருட்டில் சிரித்தாள்.

"உனக்கும் வெட்கமா ஸ்ரீராம்?"

"தெரியலை..."

பட்டு வேட்டி சட்டையிலிருந்து, லுங்கி குர்தாவுக்கு மாறி, லைட்டை மீண்டும் போட்டபின் என்ன செய்வதென்று புரியாமல் தவித்தான்.

"படுக்கலை...?"

"ஊம்... லைட்டை ஆஃப் பண்ணிடவா...?"

"வேண்டாம், வா."

கட்டிலில் சம்மணமிட்டு உட்கார்ந்து அவளைப் பார்த்தான். மெதுவாகத் தலையை அவன் மடியில் வைத்தாள்.

"நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன் ஸ்ரீராம்."

"அதானே வேணும்?"

"ஆனா நீ அப்படி இல்லைன்னு நினைக்கிறேன்..."

"அடடா, நோ சுகி..."

"உங்க அப்பாவோட முரட்டுப் பிடிவாதத்துனால இப்படி அவசரமா கல்யாணம் நடந்திருக்கேன்னு வருத்தம்தானே? வசந்தி கல்யாணத்தை நினைச்ச மாதிரி முடிக்கலையேன்னு வருத்தம், இல்லை?"

"அந்த வருத்தமெல்லாம் உண்மைதான் சுகி... ஆனா அதுக்காக இந்த சந்தோஷம் குறைஞ்சுடுமா?"

"எந்த சந்தோஷம்?"

"சுகன்யா இனிமே எப்பவும் என் பக்கத்துலே இருப்பாங்கற சந்தோஷம்..."

மடியில் புதைந்து கிடந்த தலையைத் திருப்பி அவனைப் பார்த்தாள். "தாங்க்யூ" என்று திருப்தியாக விழிகளை மூடிக் கொண்டாள்.

அவ்வளவு சீக்கிரத்தில் அவள் தூங்கிப் போவாள் எனறு ஸ்ரீராம் எதிர்பார்க்கவில்லை. மடியிலிருந்து அவள் தலையை மெதுவாகத் தலையணையில் இறக்கி வைத்தபோது இலேசாக அசைந்து 'குட் நைட்' சொன்னதோடு சரி.

சற்று நேரம் உலாத்திவிட்டு, அவள் ஒருக்களித்துக் கிடந்த பக்கமாய் வந்து உட்கார்ந்து, இப்போது முகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

இந்த முகத்தைப் பார்த்த பிறகும், இதன் துடைத்து வைத்த வெகுளித்தனத்தைப் பார்த்த பிறகும் அப்பா, அம்மா இளகவில்லையே?

"ஒரு பொண்ணுக்கு மனசுல இடங் கொடுத்துட்டே! அவ மனசுல ஒரு நம்பிக்கையை வேற வளர்த்து விட்டுட்டே. இனிமேல் எதுக்காகவும் காத்திருக்கிறதோ தள்ளிப்

தோசை மாவு புளித்து விட்டால், சிறிது தண்ணீரை ஊற்றுங்கள். சிறிது நேரம் கழித்து, மேலாகத் தேங்கியிருக்கும் தண்ணீரைக் கொட்டி விட்டால் மாவில் உள்ள புளிப்பு நீங்கி விடும்.

– வயலூர் ஆர். பார்த்திபன்.

போடறதோ தப்பு ஸ்ரீராம்...''

வசந்தி மூலம் செய்தி உடைந்த அன்று அப்பா ரொம்ப தீர்மானமாய்ச் சொல்லி விட்டார்.

“அப்பா, வசந்தி கல்யாணம்...”

''இனிமே அந்தக் கவலையை நாங்க பட்டுக்கறோம்...''

புதுக் கத்தரிக்கோலாக வெட்டினார்.

''ஜாதகம் இருக்கா, அந்தப் பொண்ணுக்கு...?''

“அப்பா, அவ அம்மா பெங்காலி, அப்பா தமிழர்...”

''எல்லாம் தெரியும். அவளுக்குன்னு மனுஷா யாராவது இருந்தா தந்தி அடிச்சு வரவழைச்சுடு...''

கல்கத்தாவிலிருந்து முகர்ஜி வந்தபோது கௌரவமாய் வரவேற்று கலகலப்பாய்ப் பேசி, மறு மாதத்திலேயே முகூர்த்தம் குறித்து விட்டார் அப்பா.

அத்தனை கல்யாண காரியங்களையும் வசந்தியும் அம்மாவும்தான் செய்தார்கள்.

ரொம்ப ரொம்ப சிரத்தையாய், முனைப் போடு பருப்புத் தேங்காய் முதல் பட்டுப் புடைவை வரை வரிசைப்படுத்தி வாங்கினார்கள். ஐம்பதாயிரத்துக்கு குறையாமல் செலவாகியிருக்கும்... அப்பா அவனிடம் ஒரு பைசா கூட வாங்க மறுத்தார்.

“அவளுக்கு பிளவுஸுக்கு எவ்வளவுடா துணி எடுக்கணும்...?”

''எழுபத்தஞ்சு பத்திரிகை அவகிட்டே கொடுத்தா போதுமோல்லியோ?''

''கல்யாணத்தன்னிக்குத் தலையை பின்னிக்கணும்னு சொல்லிடு அவகிட்டே...”

“அண்ணா, அவா பக்கத்துக் கல்யாணங்கள் மாதிரி கல்கத்தா சுவீட் போடலாமா கேட்டுக்கோ அவங்ககிட்டே...”

குமார் கூட சுகன்யாவைப் பெயர் சொல்லியோ, மன்னி என்றோ குறிப்பிடவில்லை. அம்மா ‘அவள்’ என்று அரூபமாய்ச் சொன்னாள். அப்பாவோ ‘அந்தப் பொண்ணு’ என்ற அநாமதேய விளியைக் கடந்து வரவேயில்லை. வசந்தி...? அவளையறியாமல் ‘மன்னி’ என்று சொல்ல வாய் வந்தால் கூட மாற்றிக் கொண்டாள்.

கல்யாண வேலைகள் வேகமாகவும் கச்சிதமாகவும் நடந்தாலும் அத்தனையிலும் ‘மனமொப்பாமை’ என்ற மேல் பூச்சு கண்ணாடிக் காகிதம் சுற்றியதுபோல் ஒட்டிக் கிடந்தது.

“அதை எப்போது கிழித்தெறிவார்கள்? எப்போது சுகன்யா ‘நம்மாத்துக் குழந்தை’ ஆவாள்...? கவலையுடன் தூங்காமல் யோசித்தான் ஸ்ரீராம்.

சுகன்யாவின் நம்பிக்கை அவன் கவலையை அதிகரித்தது – தன்னால் இந்த வீட்டில் ஒன்றி விட முடியும் என்ற நம்பிக்கை. அந்த ஆழ்ந்த நம்பிக்கையின் வலிமை, அப்பா – அம்மாவினுடைய பிடிவாதத்துக்கும் இருக்கிறதே!

விலகி நின்று பார்க்க, ஒரு சுவாரஸ்யமான போட்டியாகப்பட்டது அவனுக்கு. ஆனால் சுகன்யாவின் முகத்தைப் பார்த்தபோது, அந்த சுவாரஸ்யம் அடிபட்டு, சங்கடமாய் வயிற்றைப் பிசைந்தது.


ஆதுரத்துடன் அவள் தலையைத் தடவிவிட்டு, மறு பக்கமாய் வந்து படுத்துக் கொண்டான். நீண்ட நேரம் கழித்துத் தூங்கிப் போனான்.

சுகன்யா அவனைத் தட்டி எழுப்பிய போது, பிரஷர் குக்கர் ஓசை வீரியமாய்க் கேட்டது. சோர்வில், கண்கள் மீண்டும் சொருகிக் கொண்டன.

“ஸ்ரீராம், எழுந்திறேன் ப்ளீஸ்... உங்கம்மா அழறாங்க... என்னன்னே புரியலை. பலமா அழறாங்க...''

வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தான்.

(தொடரும்)



''புது மானேஜர் மொடாக்குடியரா யிருப்பார் போல இருக்கு..''

''எத வச்சி சொல்றே?''

''ஒரு மரியாதைக்கு காப்பி சாப்பிடலாமான்னு கேட்டதுக்கு, ''சோடா ஊத்தியா, கலர் ஊத்தியான்னாரே!''

– டீ.எஸ். திருமலைராயன்

ஆன்லைன் இருக்க கவலை எதற்கு ?

ஆண்டாளின் பாசுரத்தை முணுமுணுத்தபடி . பார்த்தசாரதி கோவிலின் பிரகாரத்தை வலம் வந்த சம்பூர்ணம் மாமி மூலவரை சேவித்த பின்பு அருகிலுள்ள மண்டபத்தில் வந்து அமர்ந்தாள்.

சற்றே இருட்டத்தொடங்கியதும் வீட்டிற்கு கிளம்பலாம் என்றெண்ணி மாமி எழுந்தபோது "சம்பூர்ணம் மாமி" என குரல் கேட்டு திரும்பினாள்.

"என்ன மாமி, ஆத்துக்கு கிளம்பிட்டேளா?" என்று கேட்டாள் அடுத்த வீட்டு புவனா.

" ஆமாண்டிம்மா, ஆமா, உன் ஆத்துக்காரனுக்கு சிங்கப்பூர்ல ஏதோ எலக்ட்ரானிக்ஸ் கம்பெனியில் வேலை கிடைச்சு போயிருக்கானாமே. கேள்விப்பட்டேண்டி" என்றாள் சம்பூர்ணம்.

" நானே உங்ககிட்ட சொல்லனும்னு இருந்தேன் மாமி. அவர் சிங்கப்பூர் போயி கிட்டத்தட்ட 4 மாசமாயிடுத்து. இங்க அவர் வேலை செஞ்ச கம்பெனி திடீர்னு மூடிட்ட உடனே நேக்கு கையும் ஓடலை. காலும் ஓடலை. ரெண்டு குழந்தைகளை வைச்சுண்டு எப்படி காலம் தள்ளுவோம் பகவானே ஒரு நல்ல இடத்துல நல்லபடியா வேலைகிடைக்கனும்னு, இதோ... இதே பெருமாள்கிட்டத்தான் வேண்டிண்டேன். பெருமாளோட அனுக்கிரஹம் தான் அவருக்கு அடுத்த பத்தாவது நாளே சிங்கப்பூர் கம்பெனி வேலை கிடைச்சது. இப்போ அவருக்கு அங்க நம்ம ஊர் கணக்குப்படி பார்த்தா 18,000 ரூபாய் சம்பளம் மாமி. பகவான் எங்களை சோதிச்சாலும் கைவிடலை மாமி ! " என்று உணர்ச்சி வசப்பட்டு கண்கலங்கினாள் புவனா.

" ஏண்டி புவனா, உன் ஆத்துக்காரன் நன்னா சம்பாதிக்க ஆரம்பிச்சுட்டான். இனி நோக்கு ஒரு குறையும் வராதுடி. எதுக்கு போயி கண்கலங்கறே?" என்றபடி பரிவுடன் புவனாவை தேற்றினாள் சம்பூர்ணம்.

" ஆமா, உன் ஆத்துக்காரன் அனுப்புற பணத்தை சேமிக்கறியா, இல்லையா? நல்லபடியா சேமிச்சு உன் குழந்தைகள் பேர்லேயும் உன் பேர்லேயும் டெபாசிட் பண்ணிட்டு அக்காடான்னு இருடி புவனா."என்றாள் சம்பு மாமி.

"அது விஷயமாத்தான் உங்களைக் கேட்டு முடிவு பண்ணலாம்னு இருந்தேன் மாமி. அடுத்தவீட்டு விசாலம் மாமி கூட ஏதோ முன்ன பின்ன தெரியாத ஃபைனான்ஸ் கம்பெனியில் போட்டுட்டு இப்போ திண்டாடிண்டு இருக்கா. அந்த நிலைமை எனக்கும் வந்துடுமோன்னு நேக்கு பயமாயிருக்கு மாமி." என்றாள் புவனா.

" பயப்படாத புவனா. நான் சொல்ற ஃபைனான்ஸ் கம்பெனியில் டெபாசிட் பண்ணு."

"என்ன கம்பெனி மாமி?" கண்களில் ஒரு தெம்புடன் கேட்டாள் புவனா.

" Online Finance Company. அவங்களோட தனிப்பட்ட முறையில் செய்யற சேவை, நேர்த்தியான தொழில்முறை டெபாசிட் பண்றவாளுக்கு நிச்சயம் பிடிக்கும். மேலும் ஆன்லைனோட CARE 'A'(FD) Rating உன்னோட பணத்துக்கு முழுப்பாதுகாப்பளிக்குது.

" வட்டி எவ்வளவு மாமி தருவாங்க?"

"ஆன்லைனோட வட்டிவிகிதம் RBI- யோட சட்டதிட்டங்களுக்கு உட்பட்டதால் நியாயமான வட்டி 'டாண்'னு உன்னோட வீடு தேடி வரும். என் தங்கையும் அவளோட ஆத்துக்காரரும் சிங்கப்பூர்ல தான் செட்டிலாயிருக்கா. அவா கூட Online Finance Company-ல தான் டெபாசிட் பண்ணியிருக்கா. இவ்வளவு ஏன் புவனா, எங்க ஆத்துக்காரரோட Pension, Gratuity பணம் கூட Online-ல தான் டெபாசிட் பண்ணியிருக்கோம். உள்ளூர்காரா மட்டுமில்லாம வெளிநாட்டில் இருக்கிற நம்ம ஊர்காராளும் ஆன்லைன்ல டெபாசிட் பண்றாங்கன்னா எந்த அளவுக்கு அவங்களுக்கு ஆன்லைன் மேல நம்பிக்கையிருக்குன்னு தெரியுதோ!"

" சரி மாமி, அந்த கம்பெனி பத்தின விவரங்கள் எப்படி கிடைக்கும்?

பேச்சுவாக்கில் இருவரும் சம்பூர்ணம் மாமியின் வீட்டு வாசலை நெருங்கி விட்டிருந்தனர். புவனாவை வீட்டுக்குள் அழைத்துச் சென்ற சம்பு மாமி ஷெல்பிலிருந்த ஆன்லைன் கார்டை எடுத்து, "புவனா, நீ 8276768/8265301/8234072-ன்ற டெலிபோன் நம்பர்ல இல்லேன்னா 8267008-ன்ற ஃபேக்ஸ் நம்பர்ல ஆன்லைனை தொடர்பு கொண்டா உனக்கு தேவையான விவரங்கள் உன்னோட ஆத்துக்கே வந்து சேரும். ஆனா ஒண்ணு மட்டும் நிச்சயம். ஆன்லைனோட தனிப்பட்ட சேவையை உணர்ந்துட்டின்னா, நீயே மத்தவங்களுக்கு சொல்லுவே ஆன்லைனைப் பத்தி" என்றாள் சம்பு மாமி.

" சரி மாமி, நாழியாயிடுத்து. ஆத்துல பசங்க ரெண்டும் லூட்டி அடிச்சிண்டிருப்பா. நான் கிளம்பறேன்." என்றபடி நகர்ந்தாள் புவனா.

" இருடி புவனா. வெள்ளிக்கிழமை அதுவுமா வந்திருக்கே. இந்தா குங்குமம் இட்டுண்டு போ" என்றபடி குங்குமச்சிமிழை நீட்டினாள் சம்பூர்ணம்.

குங்குமத்தை இட்டுக்கொண்ட புவனா, "மாமி, நாளைக்கு உங்காத்திலிருந்து ஒரு போன் பண்ணிக்கணும்" என்றாள்.

"என்னடி ! திடீர்னு ஆத்துக்காரர் ஞாபகமா?" என்று நமுட்டுச் சிரிப்புடன் சம்பூர்ணம் மாமி கேட்க ... சற்றே நாணத்துடன் புவனா, " இல்லை மாமி ! ஆன்லைனுக்கு." என்றபடி தெளிவாக புன்னகைத்தாள்.

CARE 'A' RATING



ஆன்லைன் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்

248, இராயப்பேட்டை நெடுஞ்சாலை
சென்னை-600 014
தொ பே.: 8276768–8265301–8234072
ஃபேக்ஸ்: 8267008



மாத்திரம். இது எப்படி சாத்தியம்? இப்படியிருந்தும் 'ட்ரக் கண்ட்ரோல் போர்டு' எப்படிக் கண்டு கொள்ளாமல் இருக்கிறது என்பதெல்லாம் புரியாத புதிர்!

எனவே, சாம்பிளுக்குக் கொஞ்சம் 'மால்ட்' டையும் ஒரு டோஸ் ஆக்ஸிடோசின் ஊசி மருந்தையும் வாங்கிக் கொண்டு SPCA வுக்குச் சென்றோம். விஷயத்தை விளக்கினோம்.

"இதெல்லாம் ஒரு 'நெட்வொர்க்'காகவே நடந்து கொண்டிருப்பதால் எங்களால் ஒன்றும் செய்ய இயலவில்லை. ஆக்ஸிடோசின் ஊசி மருந்தைப் பொறுத்தவரை ட்ரக் கண்ட்ரோல் போர்டுதான் நடவடிக்கை எடுக்க வேண்டும்!" என்றார் உதவி மானேஜர் எஸ். இராமலிங்கம்.

"மால்ட் சாப்பிடுவதாலும் தினசரி இரண்டு முறை ஊசி போடப்படுவதாலும் மாடுகளுக்குக் கெடுதல் ஏற்படாதா?" - SPCA வின் டாக்டர் பி.எஸ்.வி. இராஜேந்திரனிடம் கேட்டோம்.

"மால்ட் என்று சொல்லப்படுகிற இந்தக் கழிவுப் பொருளில் நிச்சயம் சத்துப் பொருட்கள் இருக்கத்தான் செய்யும். அதனால்தான் இதைச் சாப்பிடும் மாடுகள் அதிகப் பால் கொடுக்கின்றன என்று நினைக்கிறேன். அதோடு அதில் நச்சுத்தன்மை ஏதேனும் இருந்தால் அது பாலிலும் கலந்து வரவே வாய்ப்புகள் உண்டு. ஆக்ஸிடோசின் ஊசி மருந்தில் உள்ள நச்சுத் தன்மையும் பாலில் கலக்கத்தான் செய்யும். அதுவும் இத்தனை மலிவான மருந்து என்றால் அதில் வேறு என்னென்ன கலப்படமோ தெரியவில்லை. நிச்சயம் மாடுகளுக்குக் கெடுதல் தான் என்றாலும் அது எந்த அளவுக்குக் கெடுதல் என்பதைப் பரிசோதித்துப் பார்க்காமல் சொல்ல முடியாது. எனக்கு ஒருவாரம் அவகாசம் கொடுங்கள். நான் விலங்கியல் கல்லூரியிலோ அல்லது வேறு எங்காவதுள்ள பரிசோதனைக்கூடத்திலோ கொடுத்து, இவை இரண்டையும் பரிசோதனை செய்து விளக்கமாகச் சொல்கிறேன்" என்று வாங்கி பத்திரப்படுத்திக் கொண்டார் டாக்டர் இராஜேந்திரன்.

பரிசோதனை முடிவுகளுக்காக நாம் வேண்டுமானால் ஒரு வார காலம் காத்திருக்கலாமே தவிர, அரசாங்கம் காத்திருக்கக் கூடாது. உடனடியாக ட்ரக் கண்ட்ரோல் போர்டை முடுக்கிவிட்டு இந்த ஆக்ஸிடோசின் ஊசி மருந்துகளையெல்லாம் கைப்பற்ற வேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஏனென்றால் இது மாடுகளுக்குச் செய்யப்படுகிற மிகப் பெரிய சித்ரவதை மட்டுமல்ல; இப்படிப் பட்ட மாடுகளிலிருந்து கறக்கப்படும் பாலைக் குடிக்கும் குழந்தைகளுக்கும் மற்றவர்களுக்கும் கண்ணுக்குத் தெரியாமல் எத்தனை கெடுதல்களை உண்டாக்கப் போகிறதோ யார் கண்டது?"

— இளங்கோவன்

ஒரே ஒரு படம்தான். அமிதாபின் கம்பெனி தயாரிக்கும், சிறைச்சாலை புகழ் பிரியதர்ஷன்தான் டைரக்ஷன். ஒரே ஒரு படத்தில் தான் ஒரு பிரபல நட்சத்திரம் நடிக்கிறார் என்பதைக் காட்டிலும் அதை அவர் வெளிப்படையாய் ஒப்புக் கொண்டிருக்கிறார் என்பதுதான் அதிசயம்!

● ராமகிருஷ்ண ஹெக்டே, பழசையெல்லாம் மறந்து, புதிய கட்சியை ஸ்திரப் படுத்துவதில் மும்முரமாய் இருக்கிறார். ஆனால், அவரை வெளியேற்றிய ஜனதா தளக்கட்சியின் தலைவரான லல்லுபிரசாத் யாதவ், இன்னும் அவரை விலக்கியது பற்றிப் பேசுவதை நிறுத்தக் காணோம். அவரது சமீபத்திய கமெண்ட்: "ஹெக்டே எப்போதுமே கட்சியின் அறிவு ஜீவிகளின் குழுவில் இருந்தவர். எனக்கு அறிவு ஜீவிகளைக் கண்டால் பிடிக்காது."



• ஹெக்டே

● சென்னை நகர கூடுதல் போலீஸ் கமிஷனரான ரவி ஆறுமுகம், இஞ்சினியரிங் பட்டதாரி மட்டுமல்ல, சட்டமும் படித்தவர். தற்போது மதுரை பல்கலைக் கழகத்தில் தீண்டாமை குறித்து டாக்டர் பட்டத்துக்காக ஆராய்ச்சி செய்து வருகிறார்.

தொகுப்பு : கௌதம்

பாரதிபாஸ்கர்

தீக்குத் தெரியாத காட்டில்...

பெரியவர் நடேசன் காந்தி மண்டபத்தில் நுழையும்போதே அவர்கள் இருவரையும் பார்த்து விட்டார். நாலைந்து நாட்களாகவே தினமும் பார்த்து வருகிறார். அவனுக்கு இருபது வயதுக்கு மேல் இருக்காது. பருக்கள் நிரம்பிய முகம், சிகரெட் பிடித்துக் கறுத்துப் போன உதடுகள், கட்டம் போட்ட கர்சீப்பை எடுத்து அடிக்கடி வியர்வையைத் துடைத்துக் கொண்டிருந்தான். அனாவசியமாக அவள் மேல் கை போட்டுக் கொண்டிருந்தான் - அவள் மேல் அவனுக்கிருந்த உரிமையை நாலு பேர் பார்க்கட்டுமே என்பது போல். அவள் சின்னப் பூப்போல இருந்தாள். ரோஸ் தாவணியும், வெள்ளைச் சட்டையும் செங்கல் நிற பள்ளிச் சீருடையுமாக. அழகான மருண்ட கண்கள். ஏராள மான முடி. கோவிலில் வைத்து 'பாலா' என்று சொல்லி பிரதிஷ்டை செய்யலாம் போல்.

இதுபோன்ற ஜோடிகளைப் பார்ப்பது ஒன்றும் நடேசனுக்குப் புதிதில்லை. முதன்முதலில் இங்கே வர ஆரம்பித்தபோது இதைப் பார்த்துக் கொஞ்சம் அதிர்ந்துதான் போனார்.

காந்தி மண்டபத்தில் புதர் தவறாமல் உட்கார்ந்திருந்த ஜோடிகள் எல்லாம் சின்னஞ்சிறு பெண்களும் விடலைப் பையன்களும். இதுகள் முத்தம் பரிமாறிக் கொள்வதும் தொட்டுக் கொள்வதும் இளையும் உள்ளே புதர் மண்டிய இடங்களுக்குப் போய் மறைவாக இருக்க நோட்டுக்கள் கைமாறுவதும், மண்டபத்தின் உள்ளேயே வந்து, 'நல்ல வசதி சார். டீசென்ட் ப்ளேஸ். ரெய்ட் தொந்தரவே கிடையாது. வீடு மாதிரி சார்' என்று விற்கும் லாட்ஜ் தரகர்களும்... எல்லாம் அவருக்குப் பழகி விட்டது. இந்த நாட்டுக்கே சாபக்கேடு என்று அவர் நினைப்பார். கண்டும் காணாததுமாய் போகும் கலையை அவரும் இப்போதெல்லாம் பயின்று விட்ட போதிலும் இந்தப் பெண்ணைப் பார்த்தவுடன் அவர் மனசெல்லாம் பதறுகிறது. வீட்டில் இருக்கும் பேத்தி சாருவின் நினைவு வருகிறது.

அவளை விட இதற்கு மூன்று அல்லது நாலு வயசு அதிகமாயிருக்கலாம். பள்ளிக்குப் போகாமல் - ஆனால் வீட்டில் பள்ளிக்குப் போவதாய்ச் சொல்லிவிட்டு வந்திருக்கிறாள். நினைக்க நினைக்க அவருக்குக் கோபம் தலைக்கேறி விடுவிடென்று அவர்கள் பக்கத்தில் போனார்.

"என்னப்பா இது? பப்ளிக் பிளேசில விரசம்? ஏய் பொண்ணு, ஸ்கூலுக்குப் போகாம இங்க என்ன பண்ணறே?" என்றார் அதட்டலாக. கேட்டவுடன் இருவரும் கூசித் தவிப்பார்கள். நல்லபடியாக புத்தி சொல்லி அனுப்ப வேண்டும் என்று திட்டம் தீட்டியிருந்த அவரின் எண்ணத்தில் மண் விழுவது போல் அந்தப் பையன் ஆக்ரோஷமாக எழுந்து, "ஏய் பெரிசு, வீட்ல சொல்லிட்டு வந்திட்டியா? உன் வேலையைப் பார்த்துகிட்டு போகலைன்னா வாய் வெத்தலை பாக்கு போட்டுக்கும்!" என்றான்.

குரலில் நூறு சதம் அவமரியாதை, அலட்சியம், வெறுப்பு, யாருக்கும் அஞ்சாத தடித்தனம் தெரிந்தது. பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த இரண்டு மூன்று ஜோடிகள் சிரிக்க, அவமானத்தால் மனம் நொந்து திரும்பினார் நடேசன்.

"நாம பொண்ணுங்க கூட இருந்தா, நம்ப வயசுப் பசங்களை விட இந்தக் கிழங்களுக்குத்தான்யா ரொம்பப் பொறாமை" என்று பின்னால் குரல் கேட்டது. கனத்த மனத்துடன் வீடு பார்க்க நடந்தார்.

அவருக்கு திடீரென்று தன் பேத்தியை சினிமாவுக்கு அழைத்துச் சென்ற சம்பவம் நினைவுக்கு வந்தது. பிரபல நட்சத்திரம் நடித்த படம். சாரு முதல் நாளே போய்த்தீர வேண்டும் என்றாள்.

மகன் அரவிந்தனின் ஆடிட்டர், சினிமா நட்சத்திரத்திற்கும் ஆடிட்டராய் இருந்ததால் எளிதில் டிக்கெட் கிடைத்தது. துணைக்கு யாருமில்லை என்பதால் அவரே புறப்பட்டார். கூட்டம் நெரியும் என்று அவர் எதிர்பார்த்திருந்தாலும், முதல் காட்சியில் நட்சத்திரம் தோன்றியவுடன் கையில் கற்பூரத்துடன் ஆரத்தி காட்டிய வெறிக் கூட்டத்தைப் பார்த்து மலைத்துப் போய் விட்டார். இன்டெர்வெல்லில் தலைவலி என்று காப்பி சாப்பிட பேத்தியோடு வெளியே வந்தபோதுதான் அது நடந்தது. இவர் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே படத்தின் ஹீரோ, கதாநாயகியை அடிக்கடி செய்வது போல, சாருவின் பின்பக்கத்தில் தட்டினான், டிக்கெட் வாங்கும் முயற்சியில் சட்டை கிழிந்திருந்த ஒரு இளைஞன். தாத்தாவிடம் சொல்லக் கூட கூசியபடி அவமானத்தினாலும்




கோபத்தினாலும் முகம் சிவக்க, கண்ணில் வழியும் நீரை அடக்கப் போராடினாள் பேத்தி. ரவுடித்தனத்தை அகலத் திரையில் பயிற்றுவிக்கிற ஹீரோக்கள்... அவர் நெஞ்சு எரிந்தது.

அன்று போலவே இப்போதும் அவருக்கு நெஞ்சு எரிகிறது. அவர்கள் இருவரின் கிட்டத்தில் சில வினாடிகள் நின்று பேசிய போது, அந்தப் பெண்ணின் நோட்டைப் பார்த்தாரே, அதை ஞாபகப்படுத்திக் கொண்டார். வி.வனிதா, பதினோராம் வகுப்பு, புஷ்பம் பள்ளி..

நகரின் இன்னொரு கோடியில் புறநகர்ப் பகுதியில் இருந்தது அந்தப் பள்ளி. அதனால்தானே இத்தனை தூரம் தாண்டி இங்கே தள்ளிக் கொண்டு வந்திருக்கிறான், அந்தப் பையன்? பள்ளியில் அதே சீருடையில் இருந்த ஒரு பெண்கள் கூட்டத்தை அணுகி, "வி. வனிதா, பதினோராம் வகுப்பு, சிகப்பா, ஒல்லியா இருப்பாளே, அந்தப் பொண்ணு வீடு யாருக்காவது தெரியுமாம்மா? நான் உறவு. விலாசம் தொலைச்சிட்டேன்" என்றார்.

அவர்கள் ஏழெட்டுப் பேரை கலந்து பேசி, வீட்டு அடையாளம் சொன்னார்கள். போய்க் கதவைத் தட்டும் போது கூட நடேசனுக்கு



ரொம்ப பயமாக இருந்தது. ஏதாவது அவமானப்பட்டு வீட்டுக்கு விஷயம் தெரிந்தால்... அரவிந்த் எப்படிக் கத்துவான்? மருமகள் இளக்காரமாகச் சிரித்து 'இப்படிக் கூட செய்வார்களா? எங்க ஃபேமிலியில் இப்படி எல்லாம் நடக்காதுப்பா' என்பாளே – என்றெல்லாம் யோசித்தார். எதற்கு இந்த விலாசத்தைத் தேடிப் பிடித்தார்? என்ன செய்யப் போகிறார்? வனிதாவை அடித்து கூடித்து, ரசாபாசம் ஆகிவிட்டால்... யோசனை முடிவதற்குள் கதவு திறந்தது.

திறந்தது ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி. தோற்றத்தில் வறுமையும் முகத்தில் அனுபவமும் தெரிந்தது. கூப்பிய கைகளுடன் நடேசன் பேசினார்.

"இந்த வீட்டுப் பொண்ணு வனிதா...."

"ஆமா என் பொண்ணுதான், ஏதாவது ஆக்ஸிடென்டா?" அவள் பதறினாள்.

"இல்லேம்மா. இல்லை. உங்க பொண்ணைப் பத்தி நான் கொஞ்சம் பேசணும்..."

கதவைத் திறக்கலாமா, வேண்டாமா என்ற தயக்கம் அந்தப் பெண்ணின் முகத்தில் தெரிந்தது.

"அடையாறு பக்கத்தில இருந்து ஒண்ணரை மணி நேரம் பயணம் பண்ணி கஷ்டப்பட்டு வந்திருக்கேன். என்னை நீங்க நம்பலாம்" என்றார்.

"அதெல்லாம் இல்லை. உள்ளே வாங்க" என்று கதவைத் திறந்தாள். வீட்டில் மாட்டியிருந்த புகைப்படத்தைப் பார்த்து உறுதிப்படுத்திக் கொண்டு ஒரு தம்ளர் நீர் அருந்திவிட்டு எல்லாம் சொன்னார்.

"மனசு கேக்கலம்மா எனக்கு. கிட்டத்தட்ட என் பேத்தி வயசுதான் நம்ப பொண்ணுக்கு! அந்தப் பையன் முகமே சரியில்லைம்மா. வெறும் பொறுக்கி. வனிதாவுக்கு ரெண்டுங்கெட்டான் வயசு. இப்ப வர்ற பாட்டும் சினிமாவும் நல்லாவா இருக்கு? பொம்பளங்களை கலாட்டா செய்யற பொறுக்கிதான் பாதி படத்தில ஹீரோவா வரான். நம்ப பொண்ணு இந்த வயசிலே சென்சிடிவ்வா இருப்பா. அவன் ரெண்டு வார்த்தை சொன்னவுடனேயே சொக்கிப் போயிருப்பா. நாமதா மெள்ளப் பேசி அவ மனசை மாத்தணும்."

"அடிப்பாவி, பணம்தான் இல்லை. மானமாச்சும் மிஞ்சிச்சுன்னு நினைச்சேனே" என்று அலறத் தொடங்கிய வனிதாவின் தாயை 'உஷ்' என்று அடக்கினார் நடேசன்.

"இதப் பாருங்கம்மா, இங்க வந்து செய்தியைச் சொல்றதுக்கே நான் ரொம்ப யோசிச்சேன். வீட்ல மொரட்டு ஆண் பிள்ளைகள் இருந்து, கலாட்டா செய்து விஷயத்தைப் பெரிசாக்கி, நாலு பேருக்குத் தெரிஞ்சு பெரிய ரசாபாசம் ஆயிடுமோன்னு.

உலகிலே மிகப் பெரிய மசூதி இஸ்லாமாபாத்திலுள்ள ஷா பைஸல் மசூதிதான். சுமார் 18 ஹெக்டேர் பரப்பில் அமைந்துள்ள இந்த மசூதியில் ஒரே சமயத்தில் ஒரு லட்சம் பேர் தொழுகை நடத்த முடியும். மேலும் இரண்டு லட்சம் பேர் மசூதியைச் சுற்றியுள்ள தாழ்வாரங்களில் தொழுகை நடத்தும் வசதியுண்டாம்.


ஆதாரம் : விஸ்டம்
தகவல் : நெ. இராமன்



நல்லவளை நீங்க இருக்கீங்க. பொறுப்பா செய்யுங்க."

வனிதாவின் தாய் கொஞ்சம் யோசித்தாள்.

"வெளியிலே தெரிஞ்சா வனிதாவுக்கு ஸ்கூல்ல டீ.சி. கொடுத்திடுவாங்க. எல்லாமே கெட்டுரும். போன வருஷம் இவர் திடீர்னு இறந்திட்டாருங்க. வனிதாவுக்கு மேலே ஒரு அக்கா. கீழே இரண்டு தம்பிங்க. பெரிய பொண்ணை ஒரு எக்ஸ்போர்ட் கம்பெனிக்கு அனுப்பறேன். மாமனார் கொஞ்சம் பணஉதவி செய்யறார். பத்தாம, வீட்ல மெஷின் போட்டிருக்கேன். ராணி மாதிரி இருந்தோமே, நம்ம நிலைமை இப்படி ஆயிடுச்சேன்னு நான் புலம்பிக்கிட்டு இருந்ததிலே, வனிதா பார்தை மாறிப்



போறதை கவனிக்கலைங்க. இப்ப நீங்க சொன்னதும் கவனம் வருது. இரண்டு மாசமாவே ரொம்ப அலங்காரம். புதுத் துணி வேணும்னு நச்சரிப்பு. நேரம் கழிச்சு வீட்டுக்கு வரது எல்லாம் நடக்குது. ஆனா வனிதா, வீட்டுக் கஷ்டம் தெரிஞ்ச பொண்ணு. நான் அழுது பேசி சரிசெய்யறேன். சொல்லாம கொள்ளாம வீட்டை மாத்தறேன். வனிதாவோ அப்பா வேலை செஞ்ச நிர்வாகமே தாம்பரத்திலே ஒரு ஸ்கூல் நடத்தறாங்க. இந்த வருஷம் இப்பத்தான் தொடங்கியிருக்கு. அவங்க கால்ல விழுந்தாவது பிள்ளைங்களை அங்க சேத்திடறேன்."

"வரேம்மா" என்று கிளம்பியவர், வனிதாவின் தாய் கால்களில் விழவும், பதறிப் போனார். 'என்னம்மா இது? விடும்மா' என்றார்.

"எனக்கென்னான்னு நீங்க பாட்டுக்குப் போயிருந்தா ஆண்துணை இல்லாத குடும்பமே நசிஞ்சு போயிருக்கும். ரொம்ப நன்றிங்க."

அந்தப் பையன் தொடர்ந்து நாலைந்து நாள் தினமும் காந்தி மண்டபம் வந்து காத்திருந்து ஏமாற்றத்துடன் திரும்புவது நடந்தது. வனிதாவின் தாய் ஃபோன் செய்தாள். சுருக்கமாய், "எல்லாம் நல்லபடியாய் முடிஞ்சுது ஐயா. முள்ளில விழுந்த எங்க வீட்டு சேலையை சேதமில்லாமல் எடுத்தாச்சு" என்றாள். தாம்பரம் வீட்டின் முகவரி கொடுத்தாள்.

அன்று அவர் காந்தி மண்டபத்திலிருந்து வீட்டைப் பார்க்க நடக்க ஆரம்பிக்கையில் பின்னால் குரல்கள் கேட்டன.

"இதே பார்ட்டிதாண்டா சேகர்! இதுவா உங்களாண்டை வந்து ரப்சர் பண்ணிச்சுன்னு சொல்றே? இதேதான் அன்னிக்கு வனிதா வீட்லேர்ந்து வெளியே வந்திச்சு. நான் பார்த்தேனே. இதுதான் ஏதோ சில்மிஷம் செஞ்சு அவங்களோட அம்மாவை உஷார் பண்ணியிருக்கு. இப்ப அவங்க எங்க போனாங்கன்னே தெரியலை."

"நல்லா மசிஞ்சு வந்தாடா. கெடுத்தான் கிழவன். விடக்கூடாது."

'டேய்' என்ற சேகரின் வெறிக் கூச்சலைக் கேட்டபடியே நடேசன் ஓடத்துவங்கியும், வெகு சீக்கிரம் மாட்டிக் கொண்டார்.

கீழே விழுந்தபோது மண்டை மோதிய சத்தம் அவருக்கே கேட்டது. ஆளரவமற்ற பாதையில் அரை மயக்கத்தில் கிடந்தார்.

விழித்தபோது இன்னும் தெருவில் கிடப்பதை உணர்ந்தார். பின்மண்டை பயங்கரமாக வலித்தது. எத்தனை வெறி? எத்தனை ஆக்ரோஷம்? எத்தனை வன்மம்? இந்தத் தலை முறைக்கு ஏன் சரியான வழிகாட்டும் நபர்கள் அமையாமல் போய் விட்டார்கள்?

சேகரின் செயலில் அவருக்கு வருத்த மில்லை. இப்படியொரு பொறுக்கியாக அவன் மாற யார் அல்லது எது காரணம்? யோசிக்க ஆரம்பித்தார்.

நடேசனுக்கு சேகர் மற்றும் தியேட்டரில் அவர் பேத்தியின் மேல் இடித்தவன் போன் றோர்களின் மீது ரொம்பப் பரிதாபமாக இருந்தது. அடி வாங்கினபோது கூட வராத கண்ணீர் இப்போது வர, மெதுவாக எழுந்து நடக்க ஆரம்பித்தார்.

* டாக்டர் வெங்கடசுப்ரமணியன்



ஒருமுறை வைத்தீஸ்வரன் கோவிலுக்கு அவரும் சோனியாவும் செல்ல, கூடவே சென்ற நான் அவர்களுக்கு பல்வேறு சந்நிதிகளையும், அவற்றின் சிறப்புக்களையும் விளக்கினேன். ஆவலுடன் கேட்டுக் கொண்டார்கள். அந்தக் கோவிலின் தலவிருட்சத்தைப் பற்றி நான் குறிப்பிட்டபோது, ராஜீவ்காந்தி கூறிய பதில் இன்னமும் என் காதுகளில் ஒலிக்கிறது.

“மனிதர்கள் மரங்களை மதிக்கவேண்டும் என்பதற்காகத்தான் இப்படியெல்லாம் நம் முன்னோர்கள் செயல்பட்டிருக்க வேண்டும். சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பது என்ற கருத்து நம் நாட்டில் கோயில்கள் நிறுவப்பட்ட காலத்திலேயே இருந்திருக்கிறது!”

ராஜீவ்காந்தியிடமிருந்து! இரண்டு கடிதங்கள்...



ராஜீவ் காந்தி அவர்களுடன் நெருங்கிப் பழகும் பெரும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவரது தென்னக விஜயங்களில் பலமுறை நானும் அவருடன் கலந்து கொண்டிருக்கிறேன். கல்பாக்கம் அணுசக்தி ஆராய்ச்சி நிலையத்தைத் துவக்க வருகை தந்திருந்த அவர், அது முடிந்து டெல்லிக்கு சென்றவுடன் இந்தக் கடிதத்தை எனக்கு எழுதினார்.

அணுவின் பிரயோகம் பற்றி உலக நாடுகள் ஜெனிவாவில் கூடி கூடிப் பேசிவரும் இந்தக் காலக்கட்டத்தில், ராஜீவின் இந்தக் கடிதம் மேலும் அர்த்தம் பொதிந்ததாகிறது.

எப்போதுமே சுற்றுப்புறச் சூழல் பற்றி ராஜீவ் காந்திக்கு விழிப்புணர்வு உண்டு.



கடலோரக் கொலைகள்
4
கல்லூரிக்குப் போகும் வழியில் நந்தகோபால் பண்ணை வீடு சென்று....
பிரதீப்! நீங்க ஆராய்ச்சியை ஆரம்பிக்கலாம். வீடு வீடா போய் பெண்களை பேட்டி காணலாம். பரமகுரு அழைச்சிட்டுப் போவான்.
பரமகுரு! எடுபிடி வேலை செய்யறே; சமையலும் பண்ணறே; இப்ப கைடு!
இது அமல்ராஜ் வீடு. ரிடயர்ட் ஹெட்மாஸ்டர். மருமக பேரு திலகா.
பேட்டி தொடங்க... நாகராஜ் மொழி பெயர்க்க, ஆஷா டேப் செய்தாள்.
உங்க கணவர்....
தூத்துக்குடி ஸ்பிக்ல வேலை.
உங்களை அடிச்சிருக்காரா?
ஓ!
நீங்க தட்டிக் கேட்க வேண்டாமா?
வேண்டாம்.
ஏன்?
கேட்டுக்கிட்டு இருக்க மாட்டேன்; திருப்பி அடிச்சுடு வேன்!
வேறு ஒரு வீட்டில்....
வெண்ணிலா! நீங்க காதல் பண்ணினதுண்டா?
மாரியாத்தா! இந்தக் கடன்காரன் என்னென்னவோ கேட்கானே! ஓடியாங்க! காப்பாத் துங்க!


இந்த ரேட்ல போனீங்கன்னா உடம்பெல்லாம் வீங்கிக்கும்!
ஆராய்ச்சி நோக்குல பார்க்கணும் பரமு!
மாலையில் நந்தகோபால்...
தங்கச்சிக்குத் தெரியாம ஸ்நோ பூசி, பவுடர் போட்டு, ஸெண்ட் ஸ்பிரே பண்ணி... ஆஷா! ஹியர் ஐ கம்!
ஆஷா பாட்டுக் கேட்டாள்....
நந்து! டூயட் கேளுங்க.... காதல், கடவுளுக்குச் சமம்னு கருதறேன்.
நிச்சயமா!
பாட்டு முடிந்ததும்....
நந்து நீங்க கடவுளை சந்தித் திருக்கீங்களா? அதாவது காதலை....?
இதுவரை இல்லை; இப்பத்தான் சந்திக்க ஆரம்பிச்சிருக்கேன்!
அன்றிரவு முழுதும் தூக்கம் வராமல் தவித்தான். காலையில்... தாயார் சரஸ்வதி....
நந்து! இந்த அநியாயத்தைக் கேட்டியா? பரமகுருவை யாரோ கொன்னு போட்டாங்களாம்!
(தொடரும்)



வித்தகர்: டாக்டர் மோகன்தாஸ்

"புது ஆவடி சாலையில், ஸ்கூட்டரில் போய்க் கொண்டிருந்தேன். நாற்பத்தைந்து கிலோமீட்டர் வேகம். எதிர்பாராத விதமாக ஒரு பையன் சைக்கிளில் குறுக்கே வந்துவிட, விபத்தைத் தடுக்க, வேகமாக பிரேக் பிடித்தேன். என் ஸ்கூட்டர் இடப் பக்கம் சாய, பாலன்ஸ் தவறி, கால் இடற, முட்டி பெயர்ந்து விட்டது! பலமான எலும்பு முறிவு!

"நானே ஒரு டாக்டர். டி.வி.எஸ். நிறுவனங்களில் ஒன்றில் மருத்துவ அதிகாரியாகப் பணியாற்றுகிறவன். என்னை அடையாளம் கண்டுகொண்டவர்கள், என் அலுவலகத்துக்குத் தகவல் சொல்லிவிட்டு, என்னைத் தூக்கிக் கொண்டு டாக்டர் மோகன்தாஸிடம் ஓடினார்கள்.

"நான் போய்ச் சேருவதற்குள்ளாக தொலைபேசி மூலம் தகவல் பெற்று, அறுவை சிகிச்சைக்கான அத்தனை ஏற்பாடுகளையும் முடித்துவிட்டு, வாசலிலேயே காத்திருந்தார் டாக்டர் மோகன்தாஸ்!

"நான் அவருக்குத் தெரிந்தவன் என்பதால் அல்ல... எந்த ஒரு பேஷன்ட்டுக்கும் மோகன்தாஸின் அணுகுமுறை இதுதான்! இப்படித்தான் அவரால் செயலாற்ற முடியும்!

"எக்ஸ்ரே எடுப்பது, ஆப்பரேஷன், சிறிய உடற்பயிற்சிகள் என்று ஒவ்வொரு கட்டமாக என் கூடவே இருந்து கவனித்து, சாதாரணமாக இதுபோன்ற எலும்பு முறிவு சிகிச்சைகளுக்குக் குறைந்த பட்சம் இரண்டுமாத ட்ரீட்மென்ட் ஆகுமென்றால், என்னை மூன்றே வாரங்களில் எழுந்து நடமாட வைத்தார் டாக்டர் மோகன்தாஸ்!"

சொன்னவர், சுந்தரம் ஃபாஸனர்ஸில் பணியாற்றும் டாக்டர் பார்த்தசாரதி.

டாக்டர் மோகன்தாஸின் நவீன மருத்துவ உத்திகள், கைராசி பற்றித் தெரியாத மருத்துவத் துறைஞர்கள் அநேகமாக நம் மாநிலத்தில் கிடையாது. மோகன்தாஸ், வெளிநாடுகளிலும் பிரபலம் என்பது வேறு விஷயம்.

வடபழனியிலுள்ள விஜயா ஹெல்த் சென்டரில், தற்காலிகமாக இயங்கும் எலும்பு முறிவு விபத்துக்களுக்கான சிகிச்சைப் பிரிவு 'MIOT' (Madras Institute of orthopaedics and Trumatology) டாக்டர் மோகன்தாஸின் தலைமையில் தான் செயல்பட்டு வருகிறது.

பாளையங்கோட்டைக்காரர். தந்தை ஓர் அரசாங்க ஊழியர். ஆனால் தாத்தா ஒரு எல்.எம்.பி. மருத்துவர். அதனால் மருத்துவத் துறையில் இளமையிலேயே ஈடுபாடு வந்து விட்டது இவருக்கு. மிகச்சிறிய வயதிலேயே தவளையின் இதயம், மூளை, ஈரல் பற்றியெல்லாம் தாத்தா விளையாட்டாக பாடம் சொல்ல, மருத்துவ ஆர்வம் வந்து விட்டது மோகன்தாஸுக்கு.

'படிப்பு ஒன்றே நமக்கு செல்வம்' என்று வழிவழியாக போதிக்கப்பட்டு வளர்த்த குடும்பத்தில் வந்தவர் மோகன்தாஸ். ஆகவே படித்தார். விருப்பப்படி மருத்துவரானார்.

இன்றைக்குத் தம் அறுபத்தோறாம் வயதிலும் காலில் சக்கரம் கட்டாத குறையாக ஓடி உழைத்துக் கொண்டிருக்கும் இந்த இளைஞர், தம் ஆரோக்கியத்துக்காக உட்கொள்ளும் உணவு என்ன தெரியுமா?

வெறும் வாழைப்பழம்! காலை ஐந்து மணிக்கு ஒரு காப்பி. அதன்பின் இரவு ஏழு மணிக்குத் தான் சாப்பாடு. இடைப்பட்ட நேரத்தில் வெறும் வாழைப்பழம்!

"முதலில் சிக்கனம் கருதி ஏற்பட்ட இப்பழக்கம், பின்பு லண்டனில் பணியாற்றிய போதும் தொடர, இப்போதும் அதுவே!" என்கிறார் மோகன்தாஸ்.

"இன்னும் சுமார் இருபது ஆண்டுகள் என்னால் இதே மாதிரி ஓடியாடி உற்சாகமாக இயங்கமுடியும், இதனால்!" என்று காஷுவலாகச் சொல்கிறார் இவர்.

தாஸ் எந்த வேலைகளையும் அடுத்தவர் வந்து செய்வதற்காகக் காத்திருப்பதில்லை. தானே இறங்கி விடுகிறார்!

"இது மனிதாபிமான நோக்கம் மட்டுமல்ல... தலைமை மருத்துவரே செய்கிறாரே என்று மற்றவர்களும் உற்சாகமாகப் பணியாற்றுவார்களில்லையா?" என்கிறார் வெளிப்படையாக.

மோகன்தாஸ் ஜெர்மனியில் சிறிது காலம் பணியாற்றியபோது, அங்கு பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் உருவானது தான் இந்த 'மியோட்' மருத்துவமனை. பேராசிரியர் ஸீஜ் ஃபிரட்வெல்லர் போன்றோரின் உதவியோடு, 'இந்திய-ஜெர்மானிய ஆர்த்தோ பவுண்டேஷன்' அமைப்பினை உருவாக்கி, அதன் துணைத் தலைவராகவும் இருக்கிறார் மோகன்தாஸ். இந்திய சர்ஜன்கள் பலர் இதன் மூலம் ஜாதி-இன வேறுபாடுகள்/ஒதுக்கீடுகள் ஏதுமின்றி, ஜெர்மனி சென்று 'ஆர்த்தோ' பிரிவில் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

எதிலும் நூறு சதம்!"

'மியோட்' (MIOT)சர்வதேசத் தரத்தில் இயங்குகிற ஓர் 'ஆர்த்தோ' மருத்துவமனை. விலை உயர்ந்த, தரமான கருவிகள், தரமான மருத்துவர்கள். தலைவர் மோகன்தாஸோ, விடிவதற்கு முன்னாலேயே மருத்துவமனைக்கு வந்து விடுபவர். அதனால் மற்றவர்களும் அடுத்த அரை மணியில் வந்துவிடுகிறார்கள்.

"என்னைச் சுற்றி, சோம்பல் உணர்வுடன் யாரும் இருக்க நான் அனுமதிப்பதில்லை. கடுமையாக, மிகக் கடுமையாக உழைக்க வேண்டும். உழைத்துக் கொண்டே இருக்க வேண்டும். எதிலும் நூறு சதம் சீரான ரிஸல்ட் எனக்குக் கிடைக்க வேண்டும்!" என்பது மோகன்தாஸின் தாரகமந்திரம்.

சென்னை மருத்துவக் கல்லூரியில் அனாடமி பேராசிரியராகவும் மூன்றாண்டுகள் இருந்திருக்கிறார். உடலைக் கோவிலாகப் பார்க்கிறவர். அதனால்தான், நோயாளியின் உடலைத் தொட்டு சுத்தம் செய்யவும் தயங்காதவர். அதெல்லாம் ஒரு மருத்துவரே செய்ய வேண்டும் என்பதல்ல... மருத்துவ மனையில், நோயாளியின் உடலை சுத்தம் செய்வதற்கென்றே நபர்கள் உண்டு! ஆனால் மோகன்

எத்தனை மோசமான எலும்பு முறிவு என்றாலும் 'மியோட்'டில் அதற்கு முழுமையான சிகிச்சை பெறலாம். டாக்டர் மோகன்தாஸிடம் சிகிச்சை பெறாத வி.ஐ.பி.க்கள் குறைவு!

வால்டர் தேவாரம் முதல் ரஜினிகாந்த் வரை, பலருக்கும் பல சமயங்களில் சிகிச்சை அளித்தவர் இவர்.

எம்.ஜி.ஆர். காலமானபோது, 'தொண்டர்கள்' இவரை மருத்துவமனைக்குச் செல்ல விடாமல் காரைச் சூழ்ந்து கொண்டு தாக்க, காரை விட்டுவிட்டு, சைக்கிளில் மருத்துவ மனைக்குக் குறித்த நேரத்தில் சென்ற 'பணி விரும்பி'.

பத்மஸ்ரீ விருது கிடைத்திருக்கிறது. பலப்பலர் பாராட்டுக்கள் கிடைத்திருக்கின்றன. இவரது இப்போதைய லட்சியம் மணப்பாக்கத்தில் ஐந்நூறு படுக்கைகள் வசதியோடு 'மியோட்' மருத்துவமனையைத் துரிதமாக உருவாக்குவது தான்!

- சுப்ரபாலன்

படம்: யோகா



பூவரசன்

யார் பூவரசன்? பண்ணையார் வீட்டில் வேலை செய்கிறவர். காவேரியைக் (ரக்ஷனா) காதலிக்கிறவர். பண்ணையாரின் பெண்ணின் காதலுக்கும் அவ்வப்போது உதவுகிறவர். அதனால் சில பல அவமானங்களுக்கும் 'பூமி பூஜை' என்கிற நூதன கிராம தண்டனைக்கும் ஆளாகிறவர். ரத்தம் சிந்தி உயிர் விடும் தருணத்தில், தான் பண்ணையார் வீட்டு வேலைக்காரன் அல்ல; அன்னாரின் சொந்த மகனே எனக் கண்டு கொள்கிறவர்.

கிராமத்துப் படங்களுக்கென்றே பிரத்யேகமாகத் தைக்கப்பட்ட கதைச் சட்டையில் விஜயகுமாரும் கார்த்திக்கும் அனாயாசமாகப் பொருந்தி விடுகிறார்கள்.

இந்தப் படத்தில் ஒரு சுத்தியல் அளவுக்கு மீசை வைத்துக் கொண்டு அமர்த்தலாக வசனம் பேசிக் கொண்டு வரும் விஜயகுமார், கண்களில் நிற்கிறார். ஆக்ரோஷமும் அன்பும் கனிவும் சீறலும் மாறி, மாறி வெளிப்படுகிற முகம்.

அனுமாருக்குக் காகித மாலை சாற்றுகிற சாக்கில் காதல் பரிமாறும் மகளைக் கண்டு கொண்டதும் ஒரு துள்ளு துள்ளுகிறாரே, அது, கிளாஸ்! அனுமாரைத் தபாலா பீஸ் ஆக்குகிற அந்த ஐடியா கொஞ்சம் ஓவர்!

ஸ்ரீராமஜெயம் எழுதுவது போல காதல் கடுதாசி எழுதி, மாலையாக்கி, அம்மணி ஆஞ்சநேயருக்குப் போட்டுவிட ஆளிடம் கொடுத்து அனுப்பி விடுவாராம்! அங்கே காதலர் காத்திருந்து மாலையைக் கழற்றிப் போய் விடுவார். ராம, ராம!

ஹீரோயின் பற்றி ஒரு பேரா சொல்ல வேண்டும். அதற்கு முன்னால் இளையராஜா. இசையில், இன்னும் குறையாத இளமை + இனிமை. இரண்டு பாடல்களில் கிறுகிறுக்க வைக்கிறார் - after சிறைச்சாலை.

கதாநாயகி ரக்ஷணா, மிஸ் கல்கத்தாவாம். ஒல்லியாக, ஈர்க்குச்சி மாதிரி இருக்கிறார். கழுங் மழுங் என்று பார்த்தே பழகிய கண்களுக்கு இது வித்தியாசம். யாரோ 'டப்பி' இருக்கிறார்கள் தான் என்றாலும் ஒரு தடுமாற்றமில்லாத உதட்டசைவு காட்டி இருக்கிறார். பெரிய விஷயம். நடிப்பு? அழகாக இருக்கிறார், விடுங்கள்!

நியாயமாகப் பார்த்தால் படத்தில் ஹீரோ கார்த்திக் அல்ல; கவுண்டமணி. முதல் காட்சியிலிருந்து முற்றும் போடுகிற வரை அவரே வருவதால் மட்டுமல்ல... அந்தத் தொய்வில்லாத நகைச்சுவையும் தடாலடியும் கிண்டலும் தான் நம்மை ஸீட்டை விட்டு அசைய விடாமல் செய்கின்றன.

போதிய அளவு காதல், வேண்டிய மட்டும் சென்ட்டிமென்ட், கூடியமட்டும் சண்டை, கொஞ்சம் போல் சோகம், ஏராள நகைச்சுவை என்று கலவை விகிதமெல்லாம் சரிதான். கலந்த பாத்திரம்தான் மியூசியத்தில் எடுக்கப்பட்டது.

-ஆர்.பி.ஆர்

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக
வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன். ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

சுஜாதா பக்கம்



தமிழ்ப் பத்திரிகைகளிடையே பொதுவாக ஏதாவது உண்டென்றால் கேள்வி - பதில் பகுதி தான். பத்திரிகை ஆரம்பித்து ஒரு வாரத்தில் இப் பகுதியைத் துவங்கவில்லையெனில் உடனே வாசகர் கடிதத்தில் கடிந்து கொள்வார்கள். எனவே ஜூனியர் பதில், சீனியர் பதில், ஜீனியஸ் பதில், பட்டப்பா பதில், கிட்டப்பா பதில், தமிழன் பதில், கிறுக்கன் பதில், அரசு பதில், சரசு பதில், இப்படிப் பலவற்றைப் பார்க்கிறோம். இவைகளை எம்ஃபில் ஆராச்சிக்கு ஒருவர் எடுத்துக் கொண்டிருக்கிறார்.

இந்தப் பகுதிகளில் வரும் கேள்விகளைப் பொதுவாக நால்வகைப்படுத்தலாம் என்று ஒரு முறை நான் 'கணையாழியில்' எழுதியிருந்தேன். (கேள்வி கேட்பவர்களும் சுமார் நாற்பது பேர்தான் என்பது வேறு விஷயம்)

'ஒப்பிடுக' வகை. (சோவின் மொட்டையையும் ரஜனிகாந்த் மொட்டையையும் ஒப்பிடுக).

'உண்டா' வகை (ஆட்டோ ரிக்ஷாக்காரருடன் சண்டை போட்டதுண்டா?)

'பற்றி' வகை : (இந்தியன் பற்றி, பட்ஜெட் பற்றி, கூவம் நதி நாற்றம் பற்றி)

அண்மையில் நீங்கள் பார்த்த புத்தகம், உங்கள் மனம் கவர்ந்த - நெகிழந்த சம்பவம் இப்படி உங்களுக்குத்தான் தெரியுமே - இது அண்மை வகை.

இந்த கேள்வி பதில்களில் என் குறை, சில கேள்விகளை யாருமே கேட்கமாட்டேன் என்கிறார்கள் என்பதே. எனவே நான் பரிந்துரைக்கும் கேள்விகள் சில :

1. டீ.வி. அறிவிப்பாளர்கள் ஏன் வார்த்தைக்கு வார்த்தை தலையாட்டுகிறார்கள்?

2. அமெரிக்க கான்ஸல் அருகில் காலை மூன்று மணிக்குச் சென்றிருக்கிறீர்களா?

3. மேடைப் பேச்சில் அவர்களே அவர்களே என்று மேடையில் அனைவரையும் பட்டியலிட்ட உடன் இத்துடன் என் சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன் என்று சொல்லலாமா?

4. பால்பாயிண்ட் பேனா எப்போதாவது கட்டி தட்டாமல் இருந்திருக்கிறதா?

5. தமிழ் நாடு ஊரும் பேரும் என்கிற ஏ.கே. செட்டியாரின் புத்தகம் எங்கு கிடைக்கும்?

6. டி. என். சேஷனும் சோம்நாத் சாட்டர்ஜியும் ஒரே மாதிரி பேசுகிறார்களே, கவனித்தீர்களா?

7. பாஷன் டிசைன் படிக்கும் ஆண்கள் ஒரு காதில் கடுக்கன் அணிய வேண்டியது அவசியமா?

8. எனக்கு ஒரு சிறு பத்திரிகை தொடர்ந்து இலவசமாக அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அதை எப்படி நிறுத்து வது?

9. டில்லி தொலைக்காட்சியில் மிலேஸுர் மேரா துமாரா என்கிற பாடலை ஒளிபரப்புவதை இந்த நூற்றாண்டுக்குள் நிறுத்திவிடுவார்களா?

10. புதுசாக வாங்கின டூத் பேஸ்ட் அட்டைப் பெட்டியை எந்தப்பக்கம் திறந்தாலும் உள்ளே உள்ள டியூப் தலைகீழாகத்தான் வருகிறதே, ஏன்?

11. பட்ஜெட் படிக்கும் நிதிமந்திரிகள் மீர்ஜா காலிப் கவிதை மேற்கோள் காட்ட வேண்டியது அவசியமா?

12. டில்லி உயர் அதிகாரிகள் தத்தம் மேசை மேல் உரை போட்டு வைத்திருக்கும் கணிப் பொறிகளை எப்போது பயன்படுத்துவார்கள்?

13. சியக்காய் ஷாம்புவுக்கு இலவச இணைப்பாக எப்போது உங்கள் பத்திரிகையைக் கொடுக்கப் போகிறீர்கள்?

14.அமெரிக்காவில் நான் வாங்கி வந்த 110 வோல்ட் மின் சாதனம் ஒன்று நம் ஊர் 220 வோல்ட் ப்ளக்கில் செருகினால் சரியாக வேலை செய்கிறதே அது எப்படி? ஆபத்தில்லையா?

15. இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் என் ஜாதகத்தைப் பார்த்து எத்தனை தினம் பஸ் ஸ்டாண்டில் 23ஏ நிற்கும் என்று சொல்லவும்.

16. இரண்டாவது, ஜாதகர் உயிருடன் இருக்கிறாரா சொல்லவும்?

17. குண்டு பெண்கள் ஜீன்ஸ் அணியக் கூடாது என்று சட்டம் கொண்டு வந்தால் எதிர்ப்பார்களா?

18. சாட்டிலைட் டீ.வியில் அந்தப் பெண் ஏன் கையை கத்திக் கப்பல் பண்ணி குழந்தை போல் கொஞ்சிக் கொஞ்சிப் பேசுகிறாள்? அவளை யாராவது கன்னம் கன்னமா இழைக்க மாட்டார்களோ?

19. தமிழில் ல, ள, ழ, மூன்று எழுத்துக்களும் ஒரே உச்சரிப்புக்கு வந்து விட்டது என்கிறேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

20. கல்கியில் சுஜாதா, கேள்வி பதில் பற்றி எழுதியிருந்ததை வாசித்தீர்களா?

(மீண்டும் அடுத்த வாரம்)


கடலோரக் கொலைகள்
கதை : பெனிட்டோ குமார்
படம் : சசி
"தென்னிந்தியப் பெண்கள்" என்ற தலைப்பில் ஆராய்ச்சி நடத்துவதாகக் கூறிக் கொண்டு பிரதீப், மனைவி ஆஷாவுடனும் நண்பன் நாகராஜுடனும் உவரி கிராமத்துக்கு வர, அவர்களுக்கு உதவ முன் வந்த நந்தகோபால், எடுபிடி வேலைக்கு பரமகுருவை ஏற்பாடு செய்கிறான். ஒருநாள் காலை, பரமகுரு கொல்லப்பட்டதாகச் செய்தி...
5
கடலோரம் ஒற்றைக் கல்லறை பக்கம்...
ஐயோ, என் புருஷன்!
அப்பா! அப்பா!
இன்ஸ்பெக்டர் கோபி வந்ததும்...
அடிச்சே கொன்னுட்டாங்க ஸார்! ஊமைக் காயம்தான். ரத்தமே சிந்தலே!
மார்ச்சுவரி வேனுக்கு ஃபோன் பண்ணு...
போஸ்ட் மார்ட்டம் நடக்கணும்... ஃபோட்டோகிராஃபரையும் வரச் சொல்லு!
யெஸ் ஸார்!
உன் புருஷன் மேல் யாருக்கு விரோதம்? என்ன நடந்தது?
ராத்திரி பன்னிரண்டு மணிக்கு வழக்கம் போல் குடிச்சுட்டு வந்தார்...


...வீட்டிலே அரிசி, பருப்பு ஒண்ணும் இல்லே. சண்டை போட்டேன். கோவிச்சுக்கிட்டு 'மண்டபத்துக்குப் போய் காற்றாட தூங்கறேன்'னு கிளம்பினாரு... எந்தப் பாவியோ கொன்னுட்டானே...!
பிரதீப், நாகராஜை விசாரித்தார் கோபி.
இரவு ஒன்பது மணிக்கு பரமகுரு வீட்டுக்குக் கிளம்பிப் போனான். அதான் தெரியும்.
நீங்க போகலாம். ஆனா என் உத்தரவு இல்லாம கிராமத்தை விட்டுப் புறப்படாதீங்க!
ஹாகைக்குத் திரும்பியதும்...
ஆஷா, கவலைப்படாதீங்க. வேற ஆள் ஏற்பாடு செய்யறேன். ரெண்டு நாளில் பிரதீப் மறுபடி ஆராய்ச்சி தொடங்கலாம்.
அது சரி, நீங்க எப்பவும் இவ்வளவு 'டிரிம்'மா எப்படி இருக்கீங்க?
ஹி...ஹி...
நந்து போனதும்...
ஆஷா, அவன்கிட்ட ரொம்பப் பேசறே! நம்ம திட்டத்தை உளறிடப் போறே!
அவன்கிட்டே ஒரு 'இது' மாதிரி நடிக்கிறா, அவன் நம்பிக்கையைப் பெற. அப்படித்தானே ஆஷா!
ம்...
(தொடரும்)

"'தோதல்ல தோற்றதுக்கு தோழி காரணமில்லே, தொண்டர்களின் அலட்சியப் போக்கும் சிலரது துரோகமும்தான் காரணம்'னு முன்னே சொன்னாங்க. இப்ப, 'தொண்டர் தரிசனம்'ன்றாங்க'' என்றான் சொக்கையா, ஆத்திரமாக.

அப்படீன்னு!"

"உளவுத் துறையும் ஏமாத்திட்டதாலே கைக்கூலிப் பத்திரிகைகள் பத்தி பத்தியா எழுதிட்டுத்தானே இருந்தாங்க?"

"பத்திரிகைகள் ஏதோ ஆத்திரத்துல அவதூறுகளை அடுக்கறதாக நானா எடை போட்டுட்டேன்; அதற்காக வருத்தப்படறேன்;



தொண்டர் தரிசனம்

''கம்முனு வா'' என்றான் சூரப்பன்.

"கைநீட்டி துட்டு வாங்கினல்ல; பொறகு என்ன?"

''பிசாத்து ஆயிரம் ரூபா. நான் வாங்கிட்டு பஸ்லேறி வரதுக்கே காரணம், தலைவியை சந்திச்சு நேருக்கு நேர் கேட்டுடணும்ங்கிறதுக்காகத் தான்!"

"அதான் விவரமா சொல்லிட்டாங்களே, பேப்பர்ல பார்க்கலை? 'நான் எந்த ஒரு குடும்பத்துக்காகவும் இல்லை; எந்த தனி மனிதருக்காகவும் இல்லை; கட்சிக்காகவும் தொண்டர்களுக்காகவும்தான் வாழ்ந்துக்கிட்டிருக்கேன்'னு அறிக்கை விட்டிருக்காங்களே!"

"ஆட்சியில இருந்தப்ப நடந்த அக்கிரமங்களையெல்லாம் பார்த்துக்கிட்டுத்தானே இருந்தாங்க!"

"அதையும் விளக்கியிருக்காங்களே! 'சில தனி நபர்களும் சில நண்பர்களும் சில அமைச்சர்களும் தப்பா நடந்துக்கிட்டிருக்காங்க. ஆனா, அவங்களைப் பற்றிய உண்மைகளை எனக்குத் தெரிவிக்காமல் வேண்டுமென்றே உளவுத் துறை மறைத்து விட்டது'

வேதனைப்படறேன்'னு ஒப்புக்கிட்டாங்களே! எவ்வளவு பெருந்தன்மை!"

''இதென்ன, யாரை ஏமாத்தப் பார்க்குறாங்க? முதல்வருக்கே தெரியாமல், அவருக்கு நெருங்கினவங்களும் அமைச்சர்களும் கூட்டுக் கொள்ளை அடிக்க முடியுமா? முடியுமனா இவங்க என்ன 'முதல்வர்'? அந்தப் பதவியை வகிக்க இவங்களுக்கு என்ன தகுதி?"

"நீ ரொம்ப யோசிக்கிறே. தொண்டனுக்கு இது உதவாது" என்றான் சூரப்பன்.

"அப்ப இவங்க பணம் பண்ணவேயில்லையாமா? கேட்காம விடப் போறதில்லே"

"வீண் வம்புல நீ மாட்டிக்காம இருக்கப் போறதில்லே"

ஜெயந்தி

"என் நகத்தின் சதை போன்றவர்களே! என் உடலின் உயிர் போன்றவர்களே..."

தொண்டர் தரிசனம் தொடங்கியது.

"இன்று நாம் துரோகிகளையெல்லாம் வெளியேற்றி கட்சியைத் தூய்மைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். நடந்தன கனவாக மறையட்டும்; இனி நடப்பன நல்லனவாக இருக்கட்டும்!"

சொக்கையாவுக்கு ஆவேசமாக வந்தது. "ஒரு சந்தேகம்!" என்று குரல் கொடுத்தான்.

'என்ன?' என்பது போல் தலைவி ஆச்சர்யமாகத் திரும்பினார் அந்தப் பக்கமாக.

அதற்குள் தொண்டர்களிடையே தொண்டராகப் புகுந்திருந்த அடியாட்களுள் ஒருவன் சொக்கையாவை நெருங்க, அவன் முதுகில் கூர்மையாக ஏதோ உறுத்தியது. இலேசாக ஒரு எரிச்சல் கண்டது. "பேட்டா கீசுடுவேன், கீசு! தலைவி பேச்சிலே உனக்கு சந்தேகமாடா! பேமானி!" என்று மிரட்டினான் மாரி.

"இன்றைய ஆட்சியை வீழ்த்தி விட்டு எங்கள் தலைவி மீண்டும் பதவிக்கு வருவது, ஐந்து வருஷங்களுக்கு அப்புறமா, அல்லது அதற்கு முன்னதாகவேயா?" என்றான் சொக்கையா.

தலைவி அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள். "ஐந்தாண்டுகளுக்குப் பின் நிச்சயம்; அதற்கு முன்னதாக சாத்தியம்; இன்றே உங்கள் நெஞ்சங்களை நான் ஆள்வது சத்தியம்!"

கரவொலி, விசில் சத்தம், 'டால்பி ஸ்டீரியோ சவுண்ட் சிஸ்டம்' இன்றியே காதைக் கிழித்தது!

"அந்த ஆளை அழைச்சு வா" என்று உத்தரவு போட்டுவிட்டு, பங்களாவுக்குள் மறைந்தார் தலைவி.

சற்று நேரத்தில் தலைவி முன்நின்றான். "சமயோசிதமா நடந்துக்கிட்டு பிரமாதப்படுத்திட்டே! வாங்கிக்க" என்று சோபா சுந்தரி ஜாடை காட்ட, கனமான கவர் தரப்பட்டது. "பத்தாயிரம் இருக்கு. ஸ்பெஷல் போனஸ்!"

ஏமாற்றமா, சந்தோஷமா என்று புரியாமல் பெற்றுக் கொண்டு திரும்பினான்.

"மாரி மாதிரி ஆளுங்க எங்கிட்ட சாரி சாரியா இருக்காங்க. எல்லார்கிட்டேயும் ஸ்பிரிங் கத்தியும் இருக்கு" என்று சொல்லி அனுப்பினாள்.

சொக்கையா அமைதி அடைந்தான். 'தன்னைப் போல்தானே மற்றவர்களும்?' என்று எண்ணி எல்லோரையும் மன்னித்து விட்டான். ஒருத்தியைத் தவிர!

ரெய்டு பார்ட்டி

ஒரு பத்திரிகையாளனுக்கு நிறைய நண்பர்கள் இருக்க வேண்டும். முக்கியமாக பல்வேறு உளவுத் துறைகளில். அப்போதுதான், "நடந்தது இதுதான்; என் பேரைப் போட்டுடாதே" என்ற முன்னுரை, பின்னுரையுடன் நிறைய தகவல்கள் கிடைக்கும்!

எனவே, ரக்ஷானந்தா ஜலீலின் நட்பை நான் வளர்த்துக் கொண்டேன். பெயர் கற்பனை என்று கூறத் தேவையில்லை. அவனுடன் பேசுவதற்காக கொஞ்சம் ஹிந்தி பழகிக் கொண்டேன். அவன் ஆங்கிலமும் ஹிந்தியும் கலந்தடிப்பான். கதை தமிழில் மட்டுமே தொடரும், ஒருசில வார்த்தைகள் தவிர. த.கு.ம. மன்னிப்பாராக!

"ஏம்பா, ரெய்டு போயிட்டு வெறுங்கையோடு திரும்பினதே கிடையாதா?" என்று ஒருநாள் தூண்டில் போட்டேன். ரஞ்சித் ஹோட்டலின் கூரைத் தோட்டத்தில் பஞ்சாபி நானை கிழித்து மென்று முழுங்கிக் கொண்டிருந்தான். தாடை வலிக்காதோ? தோசைக்கு ஈடாகுமோ!

"சில சமயம் ஏமாற்றத்தோடு திரும்பினதுண்டு. ஏதாவது துப்பு கிடைத்தால்தான் ரெய்டு பண்ணுவோம். ஆனா ரெய்டு வரப் போறாங்கன்னு அந்தாளுக்கும் துப்பு கிடைச்சுடும்! அவசர அவசரமா வேற இடத்துக்கு சூட்கேஸ்களைக் கொண்டு போய் பதுக்கிடுவான்; உளவு பார்க்கிறதுக்கு நாங்க இருக்கோம்னா, எங்களை உளவு பார்க்க தொழிலதிபருங்களும் அரசியல்வாதிங்களும் ஆட்களை வைச்சிருக்காங்க!"

"சில சமயம் நீங்களே கட்டுக்கட்டா நோட்டுங்களைக் கொண்டு போய் வைச்சுட்டு அரெஸ்ட் பண்ணுவீங்களாமே?"

"எமெர்ஜென்ஸி டயத்துல

நடந்திருக்கு. அதிகாரத்துல இருக்கிறவங்க, தங்களுக்குப் பிடிக்காதவங்களை சுலபமா உள்ளே தள்ள இந்த வழியைக் கையாண்டு பழிசுமத்தினதுண்டு. இன்னிக்கு சாத்தியமில்லே. ஒரு கெட்டிக்கார வக்கீல் ரெண்டு நிமிஷத்திலே எங்க கேஸை தவிடுபொடியாக்கிடுவான்.''

''எங்களைப் பொறுத்தமட்டில் மனுஷன் நாயைக் கடிச்சாத்தான் நியூஸ்'' என்றேன்.

''அப்படியும் நடந்திருக்கு. நான் இன்கம்டாக்ஸ்ல இருந்தப்ப ஒரு சமயம் ஒரு டாக்டர் வீட்டில் ரெய்ட் நடத்தினோம். ஆறு பெட் ரூம்; டபுள் ஃப்ளாட். ஒரு இழவும் அகப்படலை. அதிகபட்சம் ஐயாயிரமோ என்னமோதான் இருந்தது. நகைகளும் தோடு, மூக்குத்தி, வளையல், சங்கிலின்னு அளவாகத்தான் இருந்தது. யாரையும் உள்ளே வரவோ, வெளியே போகவோ அனுமதிக்காமல் குடையோ குடையோன்னு குடைஞ்சுக்கிட்டிருந்தோம். ஒரே வாசல்தான். அங்கே காவல் போட்டிருந்தோம்.

''அலுத்துப் போய் 'கிளம்பலாம்'னு முடிவு செய்த நேரத்தில், பாட்டி, அதாவது டாக்டருடைய மாமியார், ''ஐயய்யோ! என் தோடு! என் தோடு!''ன்னு அலறினாங்க. எங்களுக்கு ஒண்ணும் புரியலே.

''கெட்டிக்காரக் கிழவி ஒரே தாவாகத் தாவி வாசல் கதவை அடைச்சு நின்னுக்கிட்டா.

'' 'நான் செத்தாலும் சரி; தோடு கிடைக்கிற வரை இந்த இடத்தை விட்டு நகர மாட்டேன்'னுட்டா. ஒரு கிழவியை பலவந்தமா நகர்த்திவிட்டு வெளியேற முடியுமா? ரெய்டு நடத்த வந்த எங்க மீதே அவ குற்றம் சுமத்தறான்னு புரிஞ்சுது. நல்லா மடக்கிட்டா.''

''அப்புறம்?''

''அப்புறமென்ன; பத்துப் பதினைந்து நிமிஷம் பதட்ட நிலை. பிறகு அந்தப் பொல்லாத தோடு, ஜதையாகக் கட்டிலுக்கடியில் கிட்ந்து கிடைச்சுது!''

''அதெப்படி?''


''புரியலையா? எங்களில் ஒருத்தன்தான், குடைந்து குடைந்து தேடும்போது, ஆசைப்பட்டு அதை லவுட்டியிருக்கணும். 'பாட்டிகிட்ட மாட்டிக்கிட்டோம்; இனி தப்ப முடியாது'ன்ற நிலைல லாகவமா கீழே போட்டு, யாரும் பார்க்காத சமயம் காலால கட்டிலுக்கடியில் உதைச்சுத் தள்ளியிருக்கணும். உளவுத் துறையிலே எல்லாருமே புத்தர்னு சொல்ல முடியாது.''

''அடப்பாவிங்களா!'' என்றேன்.

''ஆனாலும் எனக்கு ஒரு சந்தேகம்'' என்றான் ரக்ஷானந்தா.

''என்ன?''

''அந்தப் பாட்டி வேணும்னே தோட்டைக் கழற்றி காலுக்கடியில் தள்ளிட்டு எங்களைப்



பழிவாங்கிட்டான்னு! அந்தப் பதினைந்து நிமிஷம் நாங்க பட்ட மன அவஸ்தையை எந்த ரெய்டின்போதும் எந்த நிஜ குற்றவாளியும் அனுபவிச்சிருக்க மாட்டான்! யாரோ பொறாமை பிடிச்சவன் தந்த பொய்யான தகவலின் பேரில் தப்பான ரெய்டு நடத்தினதுக்கு பாட்டி எங்களை சரியானபடி தண்டிச்சுட்டா!''

ரக்ஷானந்தா என் செலவில் முழுங்கிய ஐம்பது ரூபாய் டிபனுக்கு நல்ல குட்டிக் கதை கிடைச்சதா நான் நினைக்கிறேன். நீங்க?

? இந்திரா பார்த்தசாரதி

சிவப்பு ஸ்லீவ்லெஸ் நைட்டியின் மேல் பட்டன் அவிழ்ந்து கிடந்தது. தலைமுடி, தளர்ந்த முடிச்சாகக் கழுத்தருகே விளையாட, சுகன்யா பதறிக் கொண்டிருந்தாள்.

மஞ்சள் மினுக்கிய முகத்தைக் கைகளால் மூடிக் கொண்டு, ஐந்து வயதுக் குழந்தையைப் போல் பொங்கி அழுதாள் அம்மா.

"என்னாச்சும்மா...? சொல்லுங்க..." - சுகன்யா கேட்கக் கேட்க, அம்மாவின் அழுகை அதிகமாகிக் கொண்டிருந்தது.

"அம்மா...!"

ஸ்ரீராமின் குரலைக் கேட்டதும் சற்று அடங்கினாள்.

"என்னம்மா இது...? அவ ரொம்ப பயப்படறா பாரு... என்னாச்சு...?"

"கழுத்துல திருமாங்கல்யத்தைக் காணுமேடா!"

அப்போதுதான் ஸ்ரீராம் கவனித்தான். முதல் நாள் கட்டிய மஞ்சள் கயிறும் பொன் சரடுமின்றி சுகன்யாவின் கழுத்து வெறுமையுடன் மினுமினுத்தது.

"ராத்திரி இரண்டு மணி இருக்கும்... தூக்கத்திலே ரொ॥மப குத்திச்சும்மா... அதான் அவிழ்த்து, தலைகாணிக்கடியிலே வைச்சிருக்கேன். இதோ, இப்ப போய்க் குளிச்சுட்டு, டிரெஸ் பண்ணிக்கிட்டு எடுத்துப் போட்டுக்குவேன்..."

விருட்டென்று படுக்கையறை உள்ளே போன ஸ்ரீராம், கையில் மாங்கல்யத்துடன் திரும்பினான்.

சுகன்யாவின் கழுத்தில் அவற்றை மீண்டும் மாட்ட முயன்றவனை அவசரமாகத் தடுத்தாள் அம்மா.

"இருடா... கிழக்கைப் பார்த்து நின்னு போடு..." அழுகை முழுவதுமாய் அடங்காத குரலில் சொன்னாள்.


"நான் வேணா நாதஸ்வர டேப் போடட்டுமா?"- குமாரின் வேளை தப்பிய நக்கல் எடுபடவில்லை.

"சுகி... இதை எப்பவும், எதுக்காகவும் கழட்டாதே... புரிஞ்சுதா?"

ஸ்ரீராமின் ஆணையிடுகிற தொனி சுகன்யாவுக்குப் புதிதாக இருந்தது. "இதை நீ முன்னாடியே சொல்லியிருக்கலாமே ஸ்ரீராம்!"- அவள் கேட்டபோது ஆதங்கத்துடன் கோபம் கூட குரலில் எட்டிப் பார்த்தது.

ஸ்ரீராம் இதற்குப் பதில் சொல்வதற்குள் அம்மா தலையிலடித்துக் கொண்டு அழ ஆரம்பித்தாள்.







“இப்படி மண்டையிலே அடிச்ச மாதிரி பேரைச் சொல்றாளேடா... அதுவும் நாலு பெரியவா முன்னாலே...”

“பேரைச் சொல்லக் கூடாதா...? அப்படின்னா நான் உன்னை எப்படிக் கூப்பிடறது?” - சுகன்யா ஏக வசனத்தில் ஸ்ரீராமைக் கேட்க, வீடே ஸ்தம்பித்தது.

அனாவசியமாய்த் தலையிட்டு விஷயத்தைக் கிளற வேண்டாமென்று பேப்பர் படிப்பதாகப் பாசாங்கு செய்த ராமநாதன், ராணுவ உத்தரவைக் கேட்டது போல் எழுந்தார்.

பூஜையறையைச் சுத்தம் செய்து கொண்டிருந்த வசந்தி, தூக்கிச் செருகிய புடைவையுடன் உறைந்து போய் நின்றாள். சமையலறையில் காய்கறி நறுக்கிக் கொண்டிருந்த சித்தியும் அத்தையும் பார்வை பரிமாறிக் கொண்டனர்.

தாலியின் புனிதத்துவம் பற்றி மன்னிக்கு ஒரு மினி லெக்சர் கொடுக்கலாம் என்று உற்சாகமாய்த் தயாரான குமார், வாயடைத்துப் போனான்.

தான் செய்த தவறை உணர்வதற்கு சுகன்யாவுக்கு ஒரு முழு நிமிடம் ஆயிற்று.

“ஓ காட்! ஐ ஆம் சாரி... அம்மா, நிஜமாகவே ரொம்ப சாரி...” மிக இயல்பாக அவள் கை சரஸ்வதியை நோக்கி நீண்டது.

அவசரமாக இரண்டடிகள் பின்னுக்கு

எடுத்து வைத்தாள் அவள்.

"சுகன்யா, நீ முதல்ல போய்க் குளிச்சுடேன்... ஸ்ரீராம் அவள் தோளைத் தொட்டு நிறுத்தி, திசை திருப்பி அனுப்பினான்.

சோப்புப் பெட்டியையும் துணிகளையும் அலமாரியில் வைத்த சுகன்யா, ஆர்வக் குறுகுறுப்புடன் அந்தக் குளியலறையை ஆராய்ந்தாள். மாற்றுத் துணிகளை மாட்ட ஸ்டாண்ட் கிடையாது. சிமெண்ட் தரை வழுக்காமல் மொறமொறப்பாக இருந்தது. குழாயின் அடியில் பக்கெட்டுக்கு பதிலாகப் பெரிய பித்தளைப் பாத்திரம் இருந்தது. அதன் அருகே இன்னொரு சிறிய பித்தளைப் பாத்திரம். ஓரத்தில் ஒரு மரப்பலகை சாய்த்து வைக்கப்பட்டிருந்தது. அதன் பக்கத்தில், தரையில் புதைத்த கருங்கல். அதன் மீது உருண்டு கிடந்த மஞ்சள் கிழங்குகள். மஞ்சள் உரைத்து உரைத்து நடுக் குழிந்து போய்க் கிடந்தது அந்தக் கல்.

'ஸ்ரீராமின் அம்மாவும் பாட்டியும் கொள்ளுப் பாட்டியும் கூட அந்தக் கல்லில் மஞ்சள் உரைத்துக் குளித்திருக்கக்கூடும். அவர்களுடைய திருமண வாழ்க்கை எப்படித் துவங்கியிருக்கும்...? நிச்சயமாகத் தன்னுடையதைப் போல் ஒரு சூறாவளியாகச் சுழன்று புறப்பட்டிருக்காது.'

'பதவிசாக, புதுப் பெண்களாக வளைய வந்திருப்பார்கள். மாமியாருக்கு முன்னதாக எழுந்து, குளித்து முழுகி, தமிழ் சினிமா மனைவிகள் போல் தழையப் பின்னி, பூச்சூடி, கொஞ்சமாகப் புன்னகை பூத்திருப்பார்களோ...'

'தனக்கு மட்டும் ஏன் அந்தப் பதவிசு வரவில்லை...? அது ஓர் உயர்க்குணமாகத் தனக்குப் புகட்டப்படவில்லை என்பதை உணர்ந்தாள். இந்த வீட்டில் ஒருத்தியாக வேண்டுமானால் அதைப் பழகிக் கொள்ள வேண்டும். எப்போதும் உல்லாசமாய்ச் சிறகடிக்கும் மனசை இழுத்துப் பிடித்து, காதைத் திருகி அடக்க வேண்டும். இந்த வீட்டின் வழிக்குக் கொண்டு வர வேண்டும்.'

'கொஞ்சம் போலித்தனமாய் இருக்காதோ?... கொஞ்சம் என்ன...! நிரம்ப போலித்தனம்...!' – சுகன்யாவை அறிவு எச்சரித்தது. ஆனால் இத்தனை பேரின் அன்பை, ஆதரவைப் பெற அது சின்ன விலைதான்...! – சுவரில் சரித்து வைத்திருந்த பலகையைப் போட்டு அமர்ந்து கொண்டு மறுநாள் காலையைத் திட்டமிட ஆரம்பித்தாள் சுகன்யா. விடியும் முன்பு எழுந்து குளித்து ஸ்ரீராமுக்குக் காப்பி கொடுத்து எழுப்பி...

சற்று முன் ஸ்ரீராமை எழுப்பிய அவசரம் நினைவுக்கு வர, அவள் சிந்தனை முந்தைய இரவை நோக்கிப் போனது. அவன் மடியில் முகம் புதைத்து அப்படியே தூங்கிப் போனது என்ன நியாயம்? அவனுடைய எதிர்பார்ப்புகள் என்னவாய் இருந்திருக்கும்? அவன் இழுத்து உச்சிமுகர்ந்தபோது ஏற்பட்ட கிளர்ச்சியைக் கேலியால் மறைத்து, அவனைத் திகைப்பிலாழ்த்தி...

நட்பும் அலுவலகப் பணியாலும் கலந்து பின்னிய ஒரு மெல்லிய திரை இன்னமும் ஸ்ரீராமுக்கும் தனக்குமிடையே தொங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்தாள். அதை மூர்க்கமாய்க் கிழித்தெறியுமளவுக்கு அவன் கண்ணியக் குறைவானவன் அல்ல. ஆனால்... அவனுடைய பொறுமையை ரொம்பவும் சோதித்து விட்டோமோ...?

'உடனே போய் அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு இந்தக் கேள்விகளால் திணறடித்தால் என்ன....?'

புன்னகையில் இதழ்க்கடை விரித்து கன்னங்களில் கூட செம்மை படர்ந்ததை உணர்ந்து தன்னையே வியந்துகொண்டாள் சுகன்யா.

குளியலறைக் கதவு தடதடவென்று தட்டப்படும் ஓசை அவள் மோனத்தைக் கலைத்தது.

"யாரு...?"

ஜாலி போட்டி - 2

முடிவு

1. குறைந்த வரி, குறைந்தகப்பம்
2. ரொம்பப் பிடிக்கும்
3. நல்வழியில் கொண்டு போகிறார்
4. மகிழ்ந்த மக்கள்
5. மந்திரியின் எதிர்ப்புத்தானே
6. எண்ணி மகிழ்ந்தார்
7. சந்தோஷப்பட்டார்
8. லஞ்சம் வாங்காத போதெல்லாம்
9. எண்ணிப் பார்த்துச் செய்யாதீர்கள்
10. வெட்கி மகிழ்ந்தார்

– அந்த அரசர் கதையில் நாம் செய்திருந்த இந்தப் பத்து தவறுகளைப் பல ஆயிரம் பேர்கள் சரியாகக் கண்டுபிடித்து எழுதி விட்டார்கள்.

ஆகவே குலுக்கலில் ரூ. 5000/- பரிசு பெறுகிறார், பா. ஜெயக்குமார், (42, புதுத் தெரு, வந்தவாசி - 604 408) கங்கிராட்ஸ்!

– ஆர்.

"நான்தான் வசந்தி... கதவைத் திறங்கோ..."

பாத்ரூமுக்குள் நுழைந்து தாளிட்டுக் கொண்டு ஐந்து நிமிடங்களாகி இருக்கும். இன்னமும் உடைகளைக் கூட கழற்றவில்லை. வசந்தி என்ன நினைத்துக் கொள்வாள்...?

கதவைத் திறந்தபோது வசந்தி எதுவும் கேட்கவில்லை.

"தலைக்கு ஸ்நானம் பண்ணச் சொன்னா அம்மா. இந்தாங்கோ... மஞ்சள் உரைக்கத் தெரியுமோ, தெரியாதோ... இதை கொடுக்கச் சொன்னா..."

ஒரு தாளில் சின்னக் குவியலாக மஞ்சள் தூள்! அதைக் கவனமாய் விரல் படாமல் சுகன்யாவிடம் கொடுத்துவிட்டுப் போய் விட்டாள்.

பாத்ரூம் கதவை மீண்டும் சாத்திக் கொண்டவளுக்கு மஞ்சள் தூளை என்ன செய்வதென்றே புரியவில்லை. ஒருகணம் யோசித்தாள். பிறகு குழாயைத் திறந்து பித்தளை அண்டாவில் நீர் நிரப்பி அதில் மஞ்சள் தூளைப் போட்டுக் கலக்கினாள். செம்பினால் மொண்டு மொண்டு உச்சந்தலையில் ஊற்றிக் குளித்தபோது பழைய உற்சாகம் பீறிட்டுத் திரும்ப, ஆனந்தமாகப் பாட ஆரம்பித்தாள்.

உடலைத் துடைத்துக் கொண்டு பவுடர் டின்னைக் குலுக்கியபோது பெரியத்தையின் குரல் தெளிவாகக் காதில் விழுந்தது.

"டேய் ஸ்ரீராமா! உன் ஆம்படையாகிட்டே சொல்லி வை... இந்த மாதிரி கையில்லாத கவுனையெல்லாம் போட்டுக்கிண்டு வளைய வரப்படாது! வசந்திக்கே உங்கம்மா மாக்ஸி வாங்கித் தர்றதில்லே... போற இடத்துல எப்படி இருக்குமோ... புடைவையைக் கட்டிண்டே தூங்கிப் பழகட்டும்ங்கறா... உன் பெண்டாட்டி யென்னடான்னா கையில்லாத கவுனு, உள் பாவாடை வேற தெரியறது..."

"அத்தை, கொஞ்சம் நாளானா எல்லாம் பழகிக்குவா, நீங்கதான் ஒரு மாசம் இருந்து சுகன்யாவுக்கு எல்லாம் சொல்லிக் கொடுங்களேன்..."

"ஐயோ! எனக்கேண்டா வம்பு? உனக்காச்சு, உங்கம்மாக்காச்சு... உம் பொண்டாட்டிக்காச்சு... நாளைக்கே நான் கிளம்பிடுவேன்..."

"ஆமாமா! எல்லாரும் அவாவா ஆச்சா போச்சான்னு கிளம்பிப் போய்டுவேள். நாள் முழுக்க நான்தான் அவதிப்படணும் அவளோட..." சரஸ்வதி சொன்னதைக் குளியலறையில் தெளிவாகக் கேட்ட சுகன்யாவுக்குச் சந்தேகம் வந்தது.

'தன் காதில் விழாது என்ற தைரியத்தில் பேசுகிறாரா? விழட்டுமே என்ற குரூரத்துடன் பேசுகிறாரா?...'

"ஏன்மா இப்படிச் சொல்றே? அவளும் மனுஷிதானே? அவ காதுல விழுந்தா எத்தனை வருத்தப்படுவா? எல்லாரும் கொஞ்சம் பொறுமையா இருந்தா, தானா எல்லாம் இசைஞ்சு வரும். அப்புறம் நீயே சுகன்யா மாதிரி இன்னொரு பொண்ணு இல்லைன்னுவே..."

தெளிவாகக் கேட்டுக் கொண்டிருந்த சுகன்யாவுக்கு இப்போது துக்கத்துடன் பெருமை சேர்ந்து தொண்டையை அடைத்தது.

"ஆமாண்டா... அவ..." என்று மீண்டும் மாமியார் ஆரம்பித்ததைக் கேட்க விரும்பாமல், காலி பித்தளை அண்டாவில் குழாயைப் பெரிதாகத் திறந்துவிட்டு தடதடவென்று தண்ணீரை நிரப்ப ஆரம்பித்தாள்.

வேண்டாம்! ஆதங்கத்தில் பேசப்படும் அவச்சொல்லைக் கேட்டு மனசைப் புண்படுத்திக் கொள்ள வேண்டாம். என் காதலைப் போல் அவர்களின் ஆதங்கமும் மெய்யானது தானே...? ஸ்ரீராமை எனக்கு முன் அவர்கள் அறிவார்கள். அவனுக்கும் சேர்த்துக் கனவுகளைச் சுமந்தார்கள். அந்தக் கனவுகளில் என்னைப் போன்ற ஒருத்திக்கு இடமிருந்ததேயில்லை... ஸ்ரீராம் என் கனவின் மெய்ப்பாடு என்றால், நான் அவர்களுடைய கனவின் தோல்வி! அந்த வருத்தம் வடுவாக மாறாமல் காப்பாற்றியாக வேண்டும்.

வெறித்தனமான உறுதியுடன் மீண்டும் தண்ணீரை மொண்டு மொண்டு தலையில் ஊற்றிக் கொண்டாள் சுகன்யா.

புதிதாகப் போட்டுக் கொண்ட வாசனைப் பவுடர் கரைந்து ஓடியது.

(தொடரும்)

தங்க நகைப் பரிசு!

இன்னும் 21 வாரங்கள் வெளிவரப் போகிற இந்தத் தொடர்கதை, வாரா வாரம் ஓர் எழுத்தாளரின் பெயரில் வெளியாகும். ஆனால் முழுக்கதையையும் எழுதுபவர் ஒரே எழுத்தாளர்தான்! யார் அவர்?

வாரா வாரம் படித்து, யூகித்துக் கொண்டே இருங்கள். கடைசி வார அத்தியாயத்துடன் வெளியாகப் போகிற கூப்பனில், 'தொடரை எழுதியவர் யார்?' என்கிற உங்கள் யூகத்தை எழுதி அனுப்புங்கள்.

உங்கள் யூகம் சரியானதாக இருந்தால் உங்களுக்குத்தான் மின்னும் தங்க நகைப் பரிசு!

பலர் சரியான விடை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் ஓர் அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

● நாராயண பாலகிருஷ்ணன்,

கும்பகோணம். ❒

? கும்பகோணம் சாரங்கபாணி கோயிலில் ஜெ. ஆட்சியில் திருடு போன நகைகள் மீட்கப்படுமா?

! ஒண்ணா, இரண்டா? எத்தனை கோயில் திருட்டுகள்! சிலைகள், நகைகளெல்லாம் இந்நேரம் உருக்கப்பட்டிருக்கும் அல்லது 'அரும் பொருள்' சேகரிப்பவர்களால் வாங்கப்பட்டிருக்கும். இப்படிப்பட்ட திருட்டுகள் ஒருபக்கமென்றால், மூன்று வருட குத்தகைக்கு எடுத்த கோயில் கட்டடத்தை இடித்து, பல மாடிக் கட்டடம் கட்டும் அக்கிரமம் போன்ற பகல் கொள்ளைகள் வேறு நடந்துள்ளன... வேதனை!

● மணிப்புறா, திருச்சி – 8.

? ரோஜா, ரம்பா, நக்மா, மனீஷா இவர்களில் யாருக்கு நீச்சல் உடை மிகவும் அழகாக இருக்கும்...?

! ஆக மொத்தம், நீச்சல் உடையின் அழகைத்தான் பார்க்கிறீர்கள்... இவர்கள் அழகை அல்ல...! அப்படித்தானே?

● ஷோபனாதாசன், நாட்டரசன்கோட்டை.

? தி.மு.க. அரசு, லஞ்சத்துக்கு எதிரான போர் நடத்தவில்லை. அ.தி.மு.க.வுக்கு எதிரான போர்தான் நடத்துகிறது... என்று பி.ஜே.பி. செயலர் இல. கணேசன் சொல்லியிருக்கிறாரே...?

! அ.தி.மு.கவுக்கு எதிரான போருக்கும் லஞ்ச ஊழலுக்கு எதிரான போருக்கும் இடையே பெரிய வித்தியாசம்... ஒன்றுமில்லையே...?

● என். ராஜி, மேலப்பாதி.

? காம்ப்ளியை மீண்டும் அணியில் சேர்த்திருப்பது பலமா? பலவீனமா?

! நடந்தவற்றுக்கு வருத்தம் தெரிவித்து, இனி நடக்கப்போவது நல்லதாயிருக்கும் என்ற நம்பிக்கையோடு வருகிறார்... வாழ்த்துங்களேன்!

● எம். கதீஜா ஹனீபா, திருச்சி – 6.

? ஜெயலலிதா, நரசிம்மராவ் – இவர்களுக்கு எதிர்காலம் உண்டா...?

! உண்டு – கம்பிகளுக்குப் பின்னாலா, முன்னாலா என்பதுதான் கேள்வி.

● என். சங்கர்தாஸ், ஸ்ரீவில்லிபுத்தூர்.

? எங்களூர் என்றால் தங்களுக்கு ஞாபகம் வருவது கோபுரமா? ஆண்டாள் கோவிலா? பால்கோவாவா...?

! இவை மட்டும்தானா...! தாமரைக்கனியை விட்டுவிட்டீர்களே!

● சிவராம சுப்பிரமணியன், தூத்துக்குடி.

? பிரதமரின் ஹிந்தி உரை எப்படி....?

! ஹிந்திக்காரர்களின் இங்கிலீஷ் போல!

● இர. ரூபன், கோபாலசமுத்திரம்.

? தேர்தல் வாக்குறுதிகளை மூன்று ஆண்டுக்குள் நிறைவேற்றுவோம் என ப. சிதம்பரம் கூறியுள்ளாரே...?



* அழகை அல்ல!

சம்ஹிதைக்குப் பெயர். (தித்திரா - என்கிற புறாவின் பெயரிலிருந்து வந்தது 'தைத்ரீய')

வேதமிழந்த யாக்ஞவல்க்யர் சமுத்திரக் கரையிலே போய் நின்று கொண்டார். சூரியனைப் பார்த்து தியானம் பண்ணினார்.

ஆச்சர்யம் பாருங்கள்...! சூரியன் அவருக்குப் பிரத்யட்சமானான். எப்படி...? ஒரு குதிரை வடிவிலே தோன்றினான்!

(அதனால்தான் இப்போதும் முறைப்படி முத்திரையிட்டு சூரியனைப் பார்த்துவிட்டு, கண்ணை மூடினோமானால், குதிரை ரூபம் கண்ணுக்குள்ளே தெரியும்.)

யாக்ஞவல்க்யரின் முன் தோன்றிய சூரியன் 'உனக்கு என்ன வேணும்?' என்று கேட்டான்.

"என் ஆசார்யர் வைசம்பாயனர் என்னை அனுப்பி விட்டார். அவருக்குத் தெரியாத வேதம் முழுதும் எனக்கு வேண்டும்..." என்றார் அவர்!

உடனே சூரியன், குருவுக்கு என்ன தெரியாதோ, அதை சிஷ்யருக்கு உபதேசம் பண்ணினார். அப்படி சூரியன் உபதேசம் பண்ணியதுதான் சுக்ல யஜுர்வேதம்.

இந்த வரலாறு எதை உணர்த்துகிறது என்றால், சூரியன் ஆரோக்கியத்தை மாத்திரம் கொடுப்பவன் அல்ல.... சிறந்த ஞானத்தையும் கொடுப்பவன். வேதத்தையே கொடுக்கக்கூடியவன்.

ஐச்வர்யத்தையும் கொடுக்கக் கூடியவன் சூரியன். சத்யபாமாவினுடைய தந்தை சத்ராஜித். சூரியனை அவன் உபாஸனை பண்ணினான். அப்போது சூரியன் அவனெதிரே பிரத்யக்ஷமானான். 'உனக்கு என்ன வேண்டும்?' என்று கேட்டான்.

சூரியனின் கழுத்திலே அழகான ஒரு மணி இருந்தது. அந்த மணியைத் தர வேண்டும் என்று கேட்டான் சத்ரஜித்.

ச்யமந்தக மணி என்று அதற்குப் பெயர். சூரியனும், அதைக் கேட்டவுடனே கழற்றிக் கொடுத்துவிட்டான். அதை வைத்திருப்பவருக்கு ஒரு நாளைக்கு எட்டு பாரம் தங்கம் கிடைக்குமாம்! அப்படிப்பட்ட ஐச்வர்யம் வாய்த்தது சத்ரஜித்துக்கு...

அதனாலேதான் அவன் மகள் சத்யபாமாவுக்கு அவ்வளவு கர்வம்! ஒருவேளை பூண்ட நகைகளை அடுத்தவேளை பூண மாட்டாளாம்!

எனவே, அப்பேர்ப்பட்ட ஐச்வர்யம் தரக் கூடியவன் சூரியன்.

அன்னத்தைக் கொடுக்கக்கூடியவன் சூரியன்.

பாண்டவர்கள் வனவாசம் பண்ணுகிறார்கள்... அந்த நேரத்திலே, அவர்களுக்கு உணவு கிடைக்க வேண்டுமே. குறிப்பாக பீமசேனனுக்கு வயிறு நிரம்ப வேண்டுமே என்று கவலை வந்தது வியாஸ பகவானுக்கு! உடனே பஞ்சபாண்டவர்களுக்கு சூரியன் பேரிலே ஒரு சுலோகத்தை உபதேசம் பண்ணுகிறார், வியாஸ பகவான். அத்தனை பேரும் அதைச் சொல்ல, சூரியன் எதிரே பிரத்யட்சமானான். ஒரு யந்திரத்தை அவர்களுக்குக் கொடுத்தான். அக்ஷய பாத்திரம் என்பது அதன் பெயர். எவ்வளவு அன்னம் வேண்டுமானாலும் அது கொடுக்கும்! சகல பதார்த்தங்களையும் கொடுக்கும். அன்றைய பொழுதுக்கு அலம்பிக் கவிழ்த்து வைக்கிறவரை கொடுத்துக் கொண்டேயிருக்கும்...!

அந்த அக்ஷய பாத்திரத்தைக் கொண்டு தாங்களும் நன்றாகச் சாப்பிட்டு, வனவாசத்தில் தங்களைத் தேடி வந்தவர்களையும் உபசரித்தார்கள் பஞ்சபாண்டவர்கள்.

இப்படி, ஐச்வர்யமா? ஆரோக்யமா? ஞானமா...? அன்னமா...? எது வேண்டுமானாலும் கொடுக்கும் சக்தி சூரியனுக்கு இருக்கிறது. அது சர்வேச்வரனான பகவானால் கொடுக்கப்பட்ட சக்தி.

அப்படிப்பட்ட சூரியன், நரசிம்ஹனின் வலது திருநேத்திரமாய் இருக்கிறான் என்றால்... பகவான் அந்த திருநேத்திரத்தினால் நம்மை கடாக்ஷிக்கும்போது ஞானமும் ஐச்வர்யமும் ஆரோக்யமும் அன்னமும் நமக்கு சங்கல்பிக்கின்றன.

எனவேதான் நரசிம்ஹ தியானத்துள்ளே சூரியனும் அடங்கிவிடுகிறான்.

(தொடரும்)

வாசகர்கள் கவனத்திற்கு....

'குறையொன்றுமில்லை' தொடரில், 25.8.96 இதழில் இடம்பெறவேண்டிய 15-வது அத்தியாயம் 1.9.96 இதழிலும், 16-வது அத்தியாயம் 25.8.96 இதழிலுமாக மாற்றி அச்சாகி விட்டன. எதிர்பாராமல் ஏற்பட்டு விட்ட இத்தவறுக்கு மிகவும் வருந்துகிறோம். அத்தியாயங்களைச்சேர்த்து வைக்கும் அன்பர்கள் இதைக் கவனத்தில் கொள்ள வேண்டுகிறோம்.

- ஆர்.

யாரோ தன்னை கவனிப்ப தாய் உணர்ந்தாள் தீபா.

கல்யாண மண்டப அமளியில் யார் தன்னை உறுத்துப் பார்க்கப் போகிறார்கள்?

கேள்விக்குறியுடன் சுற்றுமுற் றும் நோக்கினாள்.

அவனைக் கண்டதும் திகைத் தாள்.

பாலாஜி!

கையிலிருந்த குங்குமச் சிமிழ் தடுமாறிக் கீழே விழுந்தது. தரையெங்கும் குங்குமம் சிதறியது.

"குங்குமம் கொட்டினா கல்யாணம்பாங்க. சரியாப் போச்சு பார்த்தீங்களா?"

யாரோ 'கடி'த்தார்கள். அதற்குச் சிலர் சிரித்தார்கள்.

மீண்டும் ஒருமுறை தீபாவின் பார்வை அவனிடம் சென்று மீண்டது.

மனசுக்குள் ஏதோ ஒரு அடைப்பு திறந்து கொண்டு, அவளைச் சுழலில் அமிழ்த்தியது.

"இந்தா, இந்த குங்குமச் சிமிழ் மூலம் எல்லோருக்கும் கொடு."

மதுரை அத்தை நீட்ட வாங்கிக் கொண்டாள்.

சித்தி பெண் கல்யாணம். வந்த இடத்தில் பாலாஜியின் சந்திப்பு.

ஓரக் கண்ணால் மீண்டும் பார்த்தாள்.

அவன் இன்னும் தன்னையே கவனித்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

சங்கடமாயிருந்தது அவன் பார்வை. இன்னும் ஏழெட்டுப் பெண்களுக்குக் குங்குமம் கொடுத்தாள்.

நாதஸ்வரம் 'குறையொன்றுமில்லை, மறை மூர்த்தி கண்ணா'வில் இழைந்து கொண்டிருந்தது.

மூன்று வருடம் இருக்குமா அவனை கடைசி யாய்ப் பார்த்து?

ஆள் கொஞ்சம் சதை போட்டிருக்கிறான். கட்டை மீசை அவன் முகத்துக்கு எடுப்பாய் இருக்கிறதே.

சேச்சே! என்ன நினைப்பு இது? கூடாது! அவன் எப்படியிருந்தால்



கிருஷ்ணா

என்ன?

கமல்ஹாசனையோ, அஜீத்தையோ டீ.வியில் பார்த்தால் கமெண்ட் அடிப்பதில்லையா, அது போலத்தான் இதுவும்.

மனசு, இரண்டாய்ப் பிரிந்து பட்டிமன்றம் நடத்தியது.

அஜீத் வேறு, இவன் வேறு! இவன் உன் முன்னாள் காதலன்!

காதலன்! மனசுக்குள் அந்த வார்த்தை தோன்றியதும் திடுக்கிட்டுப் போனாள்.

காதல்! பாலாஜிக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை என்று யாரோ சொன்னார்களே?

மனசு குறுகுறுத்தது.

"மனைவின்னா நீதான். வேறு யாரையும் நான் ஏத்துக்க மாட்டேன்."

இன்னமும் தன்னை நினைத்தே ஏங்கி, திருமணத்தை மறுக்கிறானோ?

பாலாஜி இருக்கும் பக்கம் இயல்பாய் பார்வையைச் சுழற்றினாள்.

அவன் கொஞ்சம் இடம்



அதிர்வு

பெயர்ந்து தன்னை கவனிப்பதற்கு வசதியாய் நிற்பது தெரிந்தது.

அவன் மேல் கோபம் வந்தது. எதற்கு இப்படிப் பார்க்கிறான்? என்ன எதிர்பார்க்கிறான் தன்னிடம்? போய்ப் பேசலாமா?

சேச்சே, வேண்டாம்! தங்கள் காதல் அரசல், புரசலாய் இங்குள்ள பலருக்குத் தெரியும்.

வேறு வினையே வேண்டாம்! ஊர்.வாய் பொல்லாதது.

"என்ன தீபா பிசியா? தங்கை கல்யாணமாச்சே? உன் வீட்டுக்காரர் வந்திருக்காரா?"

தூரத்து சொந்தம். மாமி முறை வேண்டும்.

"அவரும் வந்திருக்கார். இங்கேதானே இருந்தார்?"

கணவனைத் தேடினாள். காணோம். சிகரெட் பிடிக்க வெளியே சென்றிருப்பாரோ?

"சிகரெட்!"

பாலாஜியின் முகத்தில் அவள் பார்வை நிலைத்தது.

இவன் தனக்காக சிகரெட் பிடிப்பதை விட்டானே! இப்போதும் அது நீடிக்கிறதா? இல்லை, காதல் தோல்வியில் மறுபடியும் ஆரம்பித்து விட்டானா?

ஆளைப் பார்த்தால் 'பம்' மென்றுதான் இருக்கிறான். இந்த மூன்று வருடத்தில் சகஜ நிலைக்கு வந்திருப்பான்.

ச்சே! என்ன இது, எங்கு சுற்றியும் ரங்கனை சேவி என்பது போல பாலாஜியை சுற்றியே நினைப்பு ஓடுகிறது.

இது தப்பு! இப்போது நான் திருமதி தீபா பிரசாத். அன்னிய ஆடவன் நினைப்பு கூடாது.

அவள் குடியிருந்த அதே தெருவில்தான் பாலாஜியின் குடும்பமும் வசித்தது. சுற்றி வளைத்த சொந்தம்.

"காதலுக்கு பணம் தேவையில்லாம இருக்கலாம். திருமண வாழ்க்கைக்குக் காசுதான் ஆதாரம். சரியான வேலையிலே இல்லாத பயலுக்கு உன்னைக் கொடுக்க மாட்டேன்."

அப்பாவின் தீர்மானமான

முடிவுக்கு வீட்டில் அப்பீல் கிடையாது. இவளின் உண்ணாவிரதம், அழுகையெல்லாம் வியர்த்தமாகிப் போனது, அப்பாவின் முன்னே.

''இப்ப என்னிடம் காசு இல்லே. நீ இருக்கே. ஆனால் பின்னாடி என்னிடமும் பணம் இருக்கும். ஆனால், ஆனால்...''

பாலாஜி முகம் கலங்கி, உடல் தளர்ந்து, குரல் கமறச் சொன்ன காட்சி, 'ரீப்ளே' ஆனது உள்ளே.

உண்மைதான்! அவன் சொன்னது போல ஆகிவிட்டான்! பிசினசில் கொழிக்கிறானாம். இப்போது அவனிடம் பணமிருக்கிறது. ஆனால் அவன் காதலித்த பெண் கைமாறிப் போய் விட்டாள்.

அவன் மேல் பிறந்த பச்சாதாப உணர்வை நிறுத்த வழியின்றித் தவித்தாள், திகைத்தாள் தீபா.

"கூந்தலை வெட்டினுட்டியா? நீ காலேஜ்ல படிக்கறச்சே எவ்வளவு நீளம் தொங்கும்?"

மாமா பெண் சுமதி அருகில் வந்து தோளில் கைவைத்தாள். கூந்தலைக் கையிலெடுத்து நுனியால், தீபாவின் முகத்தில் செல்லமாய்த் தட்டினாள்.

அனிச்சையாய் தீபாவின் பார்வை பாலாஜியிடம் சென்று மீண்டது.

அவன் பார்வை இப்போது தன் கூந்தலிலேயே பதிந்திருப்பது கண்டாள்.

'இணைந்த கைகள்' சினிமா பார்த்தது மனசில் ஓடியது.

இவள் முன் சீட். சரியாய் நேர்பின்னால் பாலாஜி.

இவளின் பெரிய கூந்தலை படம் முடியும் வரை தன் கைகளுக்குள் அவன் பொத்தி வைத்திருந்தது அப்புறம்தான் தெரிந்தது.

படம் முடிந்து எழும்போது, தலை பின்னுக்கு இழுபட, சடாரென சீட்டில் சாய்ந்தாள்.

"முடி மாட்டிக்கிட்டது சேரில்"

இவளுக்கு மட்டும் தெரியும்படி கண்ணடித்தபடி, முடியை எடுத்து விட்டான்.

"உங்களுக்கு தைரியம் ஜாஸ்திதான். அப்பா பக்கத்திலேயிருக்கும்போதே குறும்பு பண்றீங்களே" என்றாள் அடுத்தநாள் சந்திப்பில்.

''உன் கூந்தலை கைக்குள்ள பொத்தி வைச்சிருந்தப்ப, உன்னையே கையிலே மூடி வைச்சுக்கிட்ட சிலிர்ப்பு எனக்குள்ளே, தெரியுமா?''

''உங்க கைக்குள்ளே அடங்குற சின்ன பாப்பாவா நான்?'' என்றாள் குறும்பு மின்னும் கண்களுடன்.

"எனக்குள்ள அடங்கறியோ, என்னவோ, ஆனால் என் மனசுக்குள்ளே நிறைஞ்சிருக்கற பெரிய பாப்பா நீ மட்டும்தான்."

அவன் குரலில் வழிந்த காதலில், உருகிப் போய் நின்றாள் தீபா.

"கெட்டி மேளம், கெட்டி மேளம்!"

டம,டமவென்ற மேளச் சத்தத்தில் திடுக்கிட்டு நினைவு கலைந்தாள்.

ம்ஹூம்! இங்கிருக்கக் கூடாது. திமிரும் குதிரையாய், மனசை திசை திருப்ப முயன்றாலும், தோற்றுப் போய், மீண்டும், மீண்டும் பாலாஜியை நோக்கியே ஓடுகிறது.

மனசளவில் செய்தாலும், இது துரோகம்! கூடாது, பழையன கழிந்து, புதியன புகுந்து விட்டது. பழைய குப்பைகள் எதற்கு இனியும்?

குப்பையா உன் காதல்? எட்டாவது வகுப்புப் புத்தகம், பத்தாவது வகுப்புக்குப் போன பிறகு பயன்படாத பொருள்தானே? என்ன இது குப்பை, எட்டாவது, பத்தாவது என்று?

"என்ன தீபா, தனக்குத்தானே பேசிக்கறே?"

கேட்டபடியே அருகில் வந்த கணவனைக் கண்டதும், வெளிறிப் போனாள்.

குற்ற உணர்வா, உறுத்தலா என்று புரியாத உணர்வில் அவன் கையை கெட்டியாய் பிடித்துக் கொண்டாள். ஆறுதலாயிருந்தது.

''நாம சாப்பிட்டுட்டுக் கிளம்பலாமா? கல்யாணம்தான் முடிஞ்சு போச்சே."

வியப்புடன் அவளை நோக்கினான் பிரசாத்.

"நானும் கூட சீக்கிரம் போகலாமான்னு கேட்க நினைச்சேன். 'மேட் ஃபார் ஈச் அதர்' நாமதான்."

தீபாவுக்கு சுருக்கென்றது.

முக்கிய அவசர வேலை இருப்பதாய் சொல்லி, தாம்பூலப் பை வாங்கிக் கொண்டு கிளம்பினர்.

பேருந்தும் உடனே கிடைத்தது. ஒரு மணி நேரப் பிரயாணம். வசதியான இருக்கை.

"என்னங்க" என்றாள் பத்து நிமிட பயணத்தில்.

"என்னடா?"



கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை — அமரர் கல்கி பிறந்த தின விழா



அமரர் கல்கி அவர்களின் எழுத்தாற்றலைப் போலவே அவரது தேச பக்தியும் கலையார்வமும் உலகறிந்த விஷயங்களே.

எனவேதான் அவர் நினைவாக, இளம் இசைக் கலைஞர் ஒருவருக்கு கல்கி விருது வழங்கி கௌரவிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதனை இவ்வாண்டு பெறுபவர் இளம் பாடகர் திரு. என். விஜய் சிவா.

விருது வழங்கி சிறப்புரை நிகழ்ச்சி ஆசி வழங்குகிறார்:

திரு. செம்மங்குடி சீனிவாச அய்யர்.

விருதளிப்பைத் தொடர்ந்து, தேச பக்தி பாடல்களை முழுநேர இசை நிகழ்ச்சியாகத் தொகுத்து வழங்குவார் திரு. விஜய் சிவா.

இந்திய சுதந்திரத்தின் ஐம்பதாவது ஆண்டையும் அமரர் கல்கி அவர்களின் 97வது பிறந்த நாளையும் ஒரு சேரக் கொண்டாடும் இந்நிகழ்ச்சிக்கு அனைவரும் வருக!

நிகழ்ச்சி நிரல்:

நாள் : செப்டம்பர் 9, 1996.
இடம் : ஸ்ரீநிவாஸ சாஸ்திரி அரங்கம், லஸ், மயிலாப்பூர்.
நேரம் : மாலை ஆறு மணி.

6.30 மணிக்கு இசை நிகழ்ச்சி

திரு. என். விஜய் சிவா– பாட்டு
குமாரி. பி. காயத்ரி– வயலின்
திரு. ஜே. வைத்யநாதன் – மிருதங்கம்
திரு.பி.எஸ். புருஷோத்தம்– கஞ்சிரா

– நிர்வாக அறங்காவலர்

ஒருவர் அறியாத ரகசியம் மற்றவரிடம் கிடையாது இருவருக்குள்ளும். எந்தத் தரமாக இருந்தாலும் வெளிப்படையாய்ப் பகிர்ந்து கொள்ளும் பக்குவம்.

"நான்... இவ்வளவு அவசரமாய் கிளம்பி வந்ததை ஏன்னு கேட்கலியே..."

அவன் சிரித்தபடி நோக்கினான்.

"என்னாலே அங்கே இருக்க முடியாதபடி சங்கடம்."

குரல் தழைந்து போய் ஒலித்தது தீபாவுக்கு.

"பாலாஜி வந்திருந்தார்."

அவன் சற்று திரும்பி அமர்ந்து அவள் முகத்தைப் பார்த்தான்.

"மனசுல பழைய நினைவாகவே ஓடிச்சு. அதை ஏத்துக்கவும் முடியலே. தடுக்கவும் முடியலே. கட்டுப்பாடு இழந்த வண்டி மாதிரி நினைவுகள் ஓட ஆரம்பிச்சுடுச்சு."

அவள் விசும்பினாள்.

"உங்களுக்குத் துரோகம் பண்ற மாதிரி உறுத்தல். இன்னமும் அவனை மறக்கலியா இந்த் மனசுன்னு வியப்பும், கோபமும். என் மேலேயே எனக்கு... எனக்கு ஆத்திரம். ஆதர்ச தம்பதியா நாம வாழறதாய் பெருமைப் பட்டுக்கிட்டு இருக்கேனே, அது பொய்யோன்னு குமுறல். மண்டபத்தை விட்டு வெளியே வந்தப்புறம்தான் தப்பிச்சுட்ட நிம்மதி. நான் ஏன் அப்படி நடந்துக்கிட்டேன்?"

குற்ற உணர்வோடு தழுதழுத்தவளின் விரல்களைப் பிரித்து கோத்துக் கொண்டான் பிரசாத்.

"அசடு. கண்ணைத் துடை" என்றான் பிரியமாய்.

"நான் தப்பு செஞ்சுட்டேன்."

"நீ எந்தத் தவறும் செய்யலே தீபா."

"அப்ப ஏன் என் மனசுல பாலாஜியைப் பற்றிய நினைவுகள், நிகழ்வுகள் ஓடணும்?"

பிரசாத் அவளை உற்றுப் பார்த்தபடி சொன்னான்.

"காவிரி பாலத்துல நீ நடந்திருக்கேதானே?"

"ரொம்ப பிடிச்ச விஷயமாச்சே, அப்படி நடக்கறது. ஏன்?"

"நாம பாலத்துல நடந்து போறப்ப, பஸ்ஸோ, லாரியோ நம்மை கடந்து போறப்ப என்ன நடக்கும்?"

"பாலம் அதிரும். நான் கூட உங்களை இது பற்றிக் கேட்டிருக்கேனே. பாலத்தோட அமைப்பு அப்படி. அதனாலே பாலம், பல வீனமானதுன்னு அர்த்தமில்லேன்னு சொன் னீங்களே?"

"கரெக்ட்! அதே மாதிரியான அதிர்வுகள் தான் உன் மனசுல உண்டாகியிருக்கு. மன சோட அமைப்பு, இயல்பு அப்படி. அது இயற்கையானதும் கூட. பஸ் கடந்து போன பின்னாடி அதிர்வு இல்லாத மாதிரி, இப்ப உன் மனசும் தெளிஞ்சிருக்குமே?"

தீபா கண்மூடி யோசித்தாள். தலையசைத்தாள். கண் திறந்து வியப்புடன் கணவனைப் பார்த்தாள்.

"எப்படி, எப்படி இவ்வளவு அழகாய், சரியாய் இதை புரிஞ்சுக்கிட்டீங்க?"

"கல்யாண மண்டபத்திலே நான் வந்தனாவைப் பார்த்தேன்" என்றான் பிரசாத்.

வந்தனா, அவன் காதலித்த அத்தை பெண்!



• சிஷ்யைகளுடன் கீதா பென்னெட்

வீடு முழுவதும் வீணையின் இசை கமழும் சூழல். தந்தை டாக்டர் ராமனாதனிடம் இசை பயில வருவோரின் பயிற்சி. எல்லாம் சேர்ந்து சிறு வயதிலேயே வீணை வாசிப்பில் ஆர்வத்தைத் தூண்டிவிட்டு விட்டது. அதற்குத் தகுந்த மாதிரி நான்கைந்து வயதிலேயே, குழந்தை கீதாவுக்கு ஏற்ற மாதிரி சிறிய வீணை ஒன்றை வாங்கிக் கொடுத்தார் அப்பா. வீணை ராமனாதனாக அவர் கச்சேரிகள் நிகழ்த்தியபோது, கூட வாசிக்க ஆரம்பித்தார் எட்டு வயது கீதா.

அமெரிக்கப் பல்கலைக் கழகம் ஒன்றில் டாக்டர் ராமனாதன் பணியாற்றப் போனபோது, கூடவே சென்றவர் கீதா. ஒரு கட்டத்தில் அவருக்கு வலப்புறத்தோள் பகுதியில் ஒரு கோளாறு ஏற்பட்டதால் வீணையை மீட்ட முடியாமல் போனது. அதனால் அவர் பாட ஆரம்பித்தார். "அப்பா பாடும் போது பக்கவாத்தியமாக வயலினுக்குப் பதிலாக வீணை வாசித்தேன்! மேலை நாடுகளில் சாக்ஸபோனுக்கும் பியோனோவுக்கும் தனித்தனியான இசை ஒழுங்குகள் உண்டு. ஓர் இசை ஒழுங்கு, இன்னொரு கருவிக்கு ஏற்காது. ஆனால் நம்முடைய கர்நாடக சங்கீதத்தில் பாடல் எதுவானாலும் அதை எல்லாக் கருவிகளிலும் ஒரே சீராக இசைக்க முடியும்!" என்கிறார் கீதா பென்னெட்.

"பாட்டுப் பாடுகிறவர்கள் எல்லோருமே வீணையும் கற்றுக் கொள்ள வேண்டும்" என்பாராம் டாக்டர் ராமனாதன். எனவே, இவர் வீணை நிகழ்ச்சிகளிலும் ஒன்றிரண்டு பாடல்களையும் பாடிக் கொண்டே வாசிப்பது வழக்கம். வீணை, வாய்ப்பாட்டு இரண்டிலும் நல்ல தேர்ச்சியைப் பெற அமெரிக்க நாட்கள் உதவியிருக்கின்றன.

கீதாவுக்கு மதுரையில் திருமணம். தந்தை ராமனாதனிடம் வீணை பயில வந்த டாக்டர் ஃபிராங்க் பென்னெட்டையே காதலித்துத் திருமணம் செய்து கொண்டார். ஹாலிவுட் திரைப்படங்களுக்கும் டீ.விக்கும் இசை 'arrange' செய்து வருகிறார் இவர். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்காக இருமுறை 'எம்மி' விருது பெற்றவர் பென்னெட். மிருதங்கமும் வாசிப்பார். டி.என். கிருஷ்ணன், கே.வி. நாராயணசாமி போன்றவர்கள் அமெரிக்கா வந்தபோது அவர்களுக்கு வாசித்திருக்கிறார்!

திருமணமான மறுநாளே தம்பதிகளாக வீணைக் கச்சேரி செய்ய வேண்டும் என்று மதுரை அங்கயற்கண்ணி சபா ஏற்பாடு செய்ததை நினைவு கூர்கிறார் கீதா.

"அடுத்த தலைமுறைக்கு நாம் என்ன செய்திருக்கிறோம் என்பதுதான் முக்கியம்" என்பாராம் ராமனாதன். வீணை மிகவும் அரிதாகத்தான் இருக்கிறது. இதை இலவசமா

வீணைக்காக வேலையை விட்டவர்!

அதிக அளவில் பரப்புவதுதான் தந்தையின் நினைவுக்கு ஆற்றுகிற நன்றி எனக் கருது கிறார் கீதா பென்னெட். அதனால் தந்தை மறைந்த பிறகு, தாம் பார்த்து வந்த 'கம்ப்யூட்டர் அனலிஸ்ட்' வேலையை விட்டு விட்டு முழு நேரமும் தம்மை இசைக் கலையிலேயே ஈடுபடுத்திக் கொண்டிருக் கிறார். லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் 'சங்கீதா ஏஷியன் மியூசிக் சொஸைட்டி' என்கிற பெயரில் ஓர் அமைப்பை உருவாக்கி, மிகவும் ஈடுபாடுள்ள முப்பது மாணவர்களுக்கு வீணை கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் முன்னூறுக்கும் மேற்பட்ட வீணை இசை நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கிறார். கர்நாடக இசைக்கு அறிமுகமில்லாத ரசிகர்கள் என்பதால் பகல்நேரங்களில் இசைக் கருவி களைப் பற்றியும், ராக, தாளங்கள் பற்றியும் பாடல்களைப் பற்றியும் விளக்கம் தருகிறார்.

"இந்திய இசை என்று மேலை நாடுகளில் பரவியிருப்பது 'ஹிந்துஸ்தானி இசைதான். நமது கர்நாடக சங்கீதம், அங்கு வாழும் நம்மவர்கள் இடையேதான் பரிமளிக்கிறது. அபூர்வமாக ஒன்றிரண்டு வெளிநாட்டார் வருவார்கள், அவ்வளவு தான்! அங்கு 'ஃப்யூஷன்' என்று ஓர் இசைக் கலவை முறை பிரபலமாக இருக் கிறது. 'த்ரிலோக் குர்த்து' என்பவர் இளைஞர்கள் மத்தியில் மிகவும் பிரபலமான ட்ரம்ஸ் இசைக் கலைஞர். 'மகாவிஷ்ணு ஜான் மெக்லாப்ஸின்' என்பவர் ஒரு பிரபலமான கிடார் கலைஞர். இவர்களோடு வீணை, பாட்டு இரண்டையும் கர்நாடக இசையில் இணைத்து 'ஃப்யூஷன்' நிகழ்ச்சிகளைச் செய்கிறேன். ஜெர்மனியிலும் ஐரோப்பாவிலும் இந்த நிகழ்ச்சிகளுக்காக ஆறுவாரம் சுற்றுப் பயணம் செய்ய இருக்கி றேன். அந்த நிகழ்ச்சியின் 'ஆல்பம்' வெளி யானதும், பங்கு கொண்ட கலைஞர் என்கிற முறையில் எனக்கும் ஒரு நல்ல அறிமுகம் - வரவேற்பு கிடைக்கும் என்பதால், அதை முதலீடாக வைத்து, சுத்தமான கர்நாடக இசை நிகழ்ச்சிகளை நடத்த முடியும் என நம்புகிறேன்!" என்று கூறும் கீதா பென்னெட், ஆண்டுக்கு இரண்டு முறை சென்னைக்கு வருகிறார். வரும்போது சின்னக் குக்கிராமத்திலிருந்து அழைப்பு வந்தாலும் போய் வீணைக் கச்சேரி செய்து விட்டு வருகிறார். "பணம் ஒரு பொருட்டே இல்லை. பட்டிதொட்டிகளிலும் வீணை நன்கு பரவ வேண்டும் என்கிற ஆசையிலேயே இதைச் செய்கிறேன்!" என்கிறார்.

முற்றிலும் பண்பாட்டு அடிப்படையில் மாறுபாடுள்ளவர்கள் கீதாவும் பென் னெட்டும். ஆயினும் "எங்களுக்கிடையே உணவு முறை, சங்கீதம் இரண்டிலும் ஒரே மாதிரியான ரசனை. வீணை கற்றுக் கொள்ளத் தொடங்கிய உடனேயே சைவ உணவுக்கு மாறிவிட்டார் பென்னெட்!" என்கிறார் கீதா.

கணவர், மகன் இருவருமே ஆங்கிலம் மட்டுமே பேசுகிற குடும்பச் சூழல். ஒரு வடிகாலாக எழுத்தை அறிமுகப்படுத்திக் கொண்டவர் கீதா பென்னெட். முன்னூறு சிறுகதைகளும் மூன்று நாவல்களும் எழுதி யுள்ள இவருக்கு முக்கியமான களம், வாழ் கின்ற அமெரிக்க வட்டாரச் சூழல்தான். இந்தியா வந்து திரும்புகிறபோது மட்டும் இந்த மண்ணைப் பற்றிய கதைகளை எழுத முடிகிறதாம்.

"சங்கீதம், இலக்கியம் இரண்டு துறைகளிலும், அதுவும் அந்நிய மண்ணில் இருந்து கொண்டு சாதனை புரிவது என்பது மிகப் பெரிய விஷயம், என்று எனது கணவர் பென்னெட்டின் பாராட்டும் உண்டு" என்று கூறும் கீதா பென்னெட், இதுவரை ஹாங் காங்கில் யாருமே வீணைக் கச்சேரி செய்த தில்லை என்கிற நிலையில் அங்கே செய்யும் முதல் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்.

கீதா பென்னெட்டின் ஒரே மகன் ஆனந்த் ராமச்சந்திரன் பென்னெட், தம் முடைய டீன் ஏஜ் நிலையிலேயே மேற் கத்திய 'ஜாஸ் ஃப்யூஷன்' முறையில் வயலின் 'சி.டி' ஒன்றை இயற்றி வெளியிட்டிருக்கிறார். டோக்கியோவில் வெளியாகியுள்ள இந்த இசை நிகழ்ச்சியில் பக்கவாத்தியமாக ஜாகிர் ஹுசைன் தபலா அமைந்திருக்கிறது!

— சுப்ர.பாலன்

வண்ணப்படம் : யோகா



"இன்றைய விலைவாசி ஏற்றத்தில் யூடிஐ-ன் எம்ஐபி
எனது வரவு செலவை மீட்ட உதவுகிறது

... இப்போது எனக்கென்ன கவலை!"

யூடிஐ
மன்த்லி
இன்கம்
பிளான் '96 III

இப்போது குறைந்தபட்ச
இலக்கான ஆண்டிற்கு
15% ஆதாயத்தை
கொண்டது.
(வருடாந்தரமாக்கப்பட்ட
ஆதாயம் 16.08%)

மாதாந்தர வருவாய் தேர்வு ◆ க்யூமுலேடிவ் தேர்வு

சிறப்பம்சங்கள்

- 2 தேர்வுகளைக் கொண்ட 5 வருட காலவரையைக் கொண்ட திட்டம்.
- **மாதாந்தர வருவாய் தேர்வு :** குறைந்தபட்ச இலக்கான ஆண்டிற்கு 15 சதவீதம் என்றவாறு டிவிடெண்ட் மாதாந்தரமாக முதல் ஆண்டில் வழங்கப்படும். முந்திய வருடம் முடிவுறும் முன் அடுத்துவரும் வருடங்களுக்கான டிவிடெண்ட் அறிவிக்கப்பட்டு முன்னதாகவே அனுப்பப்படும்.
- **க்யூமுலேடிவ் தேர்வு :** வருவாய் தொடர்ந்து சேர்த்துக் கொள்ளப்பட்டு முதிர்வுறும் சமயத்தில் மூலதன வளர்ச்சியாக விநியோகிக்கப்படும்.
- 3 வருடங்கள் கழித்து இரண்டு தேர்வுகளின் கீழ் என்ஏவி விலை அடிப்படையில் மறு கொள்முதல் செய்யும் வசதி.
- தேசிய ஸ்டாக் எக்ஸ்சேஞ்சில் பட்டியிலடப்படும்.
- குறைந்தபட்ச முதலீடு ரூ. 2000/- அதிகபட்ச வரம்பு கிடையாது.
- வருமான வரிச்சட்டம் 1961 பிரிவு 48 மற்றும் 80L ன் கீழ் வரிச்சலுகைகள்.
- வருமான வரிச்சட்டம் 1961 - ன் படி முலாதார வரிக்கழிப்பு செயயப்படும்.
- மாதத்தின் 15 ஆம் தேதிவரை ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கு அந்த மாதத்திற்கான முழு டிவிடெண்ட் வழங்கப்படும் மற்றும் மாதத்தின் 15 ஆம் தேதிக்கு பின் வந்து சேர்ந்த விண்ணப்பங்களுக்கு அரைமாத டிவிடெண்ட் வழங்கப்படும்.

5 ஆகஸ்ட் முதல் 18 செப்டம்பர் '96 வரை
திட்டம் நடப்பிலிருக்கும்

UNIT TRUST OF INDIA

யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா
உங்கள் வளமான நாளைக்கு

இழப்பு நிலைமைகள் ம்யூச்சுவல் ஃபண்ட மற்றும் செக்யூரிடிகளில் செய்யப்படும் அனைத்து முதலீடுகள் மார்கெட் ஏற்றத் தாழ்விற்கு உட்பட்டவை. திட்டங்களின் என்ஏவி செக்யூரிடீஸ் மார்க்கெட்களை பாதிக்கும் காரணங்களால் ஏறவும் அல்லது இறங்கவும் செய்யலாம். கடந்தகால செயலாற்றல் எதிர்கால விளைவுகளைக் குறிப்பிடுவதாகக் கருதலாகாது. மந்தலி இன்கம் பிளான் '96 - III என்பது திட்டத்தின் பெயரே தவிர, திட்டத்தின் தரத்தையோ, அதன் எதிர்கால வாய்ப்பையோ அல்லது ஆதாயங்களையோ ஒரு வகையிலும் குறிப்பிடுவதாகக் கருதலாகாது. திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படும் என்று உத்தரவாதம் அளிக்கப்பட மாட்டாது குறைந்தபட்ச இலக்கான ஆண்டிற்கு 15% ஆதாயத்தை வழங்க போதுமான வருவாய் இல்லாவிடில் யூனிட் தாரர்கள் அந்த தொகை வரை யூனிட் மூலதனத்தில் இழப்பை ஏற்றுக் கொள்ள நேரிடும். முதலீடு செய்யும் முன் வழங்கு பத்திரத்தை தயவு செய்து படிக்கவும்.

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் : யூடிஐ அலுவலகங்கள் **சென்னை** போன் 517101, 517190, மதுரை போன் 38186, திருச்சி போன் 760060, **கோவை** போன் 214973. அல்லது முக்கிய பிரதிநிதிகள் ஏஜெண்டுகளை

CWPL/UTI/TAM/1030-96

உள்ளே வரலாமா?

6

? ம.வே. சிவகுமார்

"இந்தப் பாலும் டிகாக்ஷனும் ஒண்ணுக்காக ஒண்ணு பிறந்த மாதிரி என்ன ருசி..."

வசந்தி கொடுத்த காப்பியைத் துளித் துளியாக ருசித்துக் கொண்டிருந்தாள் சுகன்யா. சூடான காப்பி தம்ளர் அவள் உதட்டில் அழுந்தியபோது, அது மேலும் சிவந்து போனது.

பார்த்துக் கொண்டிருந்த வசந்தி, பொங்கி வந்த சிடுசிடுப்பை அடக்க எந்த முயற்சியும் செய்யவில்லை.

"இதப் பாருங்க... இப்படி உதட்லே படற மாதிரி எச்சில் பண்ணிக் குடிச்சா அம்மாவுக்குப் பிடிக்காது..."

"ஓ! ஸாரி வசந்தி... நீ அதை முன்னாடியே சொல்லியிருக்கலாமே..."

"ஏண்டி! உனக்கெங்க போச்சு புத்தி...? பீங்கான் கப்புல விட்டுக் கொடுக்க வேண்டியதுதானே..." - சரஸ்வதி சமையலறையிலிருந்தபடியே கத்தினாள்.

"இல்லைம்மா... நானே கழுவி வைச்சுடறேன்" என்று சுகன்யா தம்ளருடன் சமையலறை குழாயடிக்கு விரைந்த போது -

"ஐயய்யோ!" என்று வசந்தியும் சரஸ்வதியும் ஏக காலத்தில் எழுப்பிய கூச்சல் அவளை ஸ்தம்பித்து நிற்கச் செய்தது.

"இதப்பாரு....! எச்சில் பாத்திரத்தையெல்லாம் இங்க சமையல்கட்டுல அலம்பக் கூடாது. வெளிக் குழாயில அலம்பிக் கொண்டு வரணும்...."

"ஆங்..."

"ஏய் வசந்தி! அவ கை பாத்திரத்தை வாங்கி அலம்பேண்டி..."

வெடுக்கென்று தம்ளர் கை கையிலிருந்து பிடுங்கப்பட்டது. விறுவிறுவென்று கொல்லைப் புறத்துக்குப் போன வசந்தி, கொல்லைப் புறத்திலிருந்த குழாயடியில் அதைக் கழுவி எடுத்து வந்தாள். சமையலறைக் குழாயடியில் மீண்டும் ஒருமுறை கழுவித் துடைத்த பிறகே, அந்த தம்ளர் அதனிடத்தில் வைக்கப்பட்டதைக் கவனித்து, மனத்தில் குறித்துக் கொண்டாள் சுகன்யா.

"நான் ஏதாவது உதவி செய்யட்டுமா?" மாமியாரை அணுகிக் கேட்டபோது இயல்புக்கு மாறான தயக்கமும் தடுமாற்றமும் விலகிட்டன.

"எல்லாம் முடிஞ்சு போச்சு... சுவாமி நமஸ்காரம் பண்ற வழக்கமுண்டா?"

பிரமித்தாள் சுகன்யா. கடந்த இரண்டு வருட ஹாஸ்டல் வாழ்க்கையில் பூஜையறை என்பதாக ஒன்றைப் பார்க்கவேயில்லை. அவ... அலுவலகக் கடமைகளும் ஹாஸ்டல் கட்டுப்பாடுகளும் தான் கடவுள். அவற்றைச் சமாளிக்கும் முனைப்பில், அப்பா வீட்டிலிருந்த கொஞ்சநஞ்சம் பக்தியும் முடங்கி ஓரங்கட்டப்பட்டுக் கிடந்தது. அம்மாவுக்கோ கடவுள் நம்பிக்கை அறவே கிடையாது... 'இந்த நிஜங்களைச் சொன்னால் இந்த வீடு தாங்குமா...?'

அவள் குழப்பிப்போய் யோசிக்கையிலேயே கணகணவென்று மணி அடித்தது. எதோ ராணுவ உத்தரவுக்குக் கட்டுப்பட்டது போல் வீட்டின் அத்தனை பேரும் பூஜையறை நோக்கிப் போனார்கள்.

'தானும் போக வேண்டுமோ....?'

அப்போது தான் குளியலறையிலிருந்து வெளிப்பட்ட ஸ்ரீராம் இன்னமும் ஈரம் உலராத கையினால் அவள் தோளைத் தொட்டு அழைத்தான்.

"வா...."

விஸ்தாரமான அறைதான் என்றாலும் பெரியத்தையையும் சித்தியையும் சேர்த்து எட்டுப் பேர் நின்ற போது நிரம்பிப் போனது. ஸ்ரீராமின் அருகே ஒடுங்கி நின்று பார்த்தாள் சுகன்யா. சுவர் நிறைத்துப் படங்கள். அவற்றில் ஒரே அளவாய்க் கத்திரித்து வைத்த மூன்று இன்ச் மல்லிகைச்சரம். சுவரையொட்டி தரையில், மையத்தில் மிகப் பெரிய தஞ்சாவூர் ஓவியம், ராமர் பட்டாபிஷேகக் காட்சி. அதனருகே சிறியதும் பெரியதுமாய்ப் பலபலக்க விக்கிரகங்கள்.



ராமநாதன் கற்பூர ஜோதியைப் படங்களுக்குக் காட்டி பாடியபடியே மணியடித்துக் கொண்டிருந்தார்.

குடும்பமே கண்மூடி நின்று பிரார்த்திப்பதைப் பார்த்த சுகன்யா, தானும் கண்களை மூடிக் கொண்டாள்.

மணியோசை நின்று கண் திறந்த போது, பிரம்புக் கூடையிலிருந்த உதிரிப் பூக்களை ராமநாதன் எல்லோருக்கும் நீட்டிக் கொண்டிருந்தார்.

சுகன்யாவின் அருகே வந்தவர், சற்றே தயங்கி விட்டு, சட்டென்று ஸ்ரீராமிடம் தட்டை நீட்ட, அவன் விரல் குவித்துப் புஷ்பங்களை மிருது வாக எடுத்து சுகன்யாவின் கையில் தந்துவிட்டு, தனக்கென்று சில பூக்களை மீண்டும் எடுத்துக் கொண்டான்.

ஒவ்வொருவராய் பூக்களைத் தூவி நமஸ்கரித்துவிட்டுப் போக, ஸ்ரீராமும் சுகன்யாவும் அந்த அறையில் தனித்து நின்றார்கள். கண்களை மூடி நின்ற சுகன்யாவின் முகத்தைப் பார்த்தான். அதில் தெரிந்த ஆழ்ந்த நம்பிக்கை பாவமும் [illegible] அழுத்தமான ஈசியுடன் அவை [illegible] தரையில் நெளிந்த [illegible]

மாக்கோலங்களும் ராமர் படத்தின் பழைமை பொருத்தமாக சாந்நித்யம் பெற்ற அந்த பூஜை அறையின் மையத்தில் அவளைப் பார்க்கப் பார்க்க மனம் நிறைந்தது.

கண் திறந்தவன், கையிலிருந்த பூக்களை ஒரு நாட்டிய நளினத்துடன் ராமர் படத்தின் மேல் தூவினான். அவனைப் பின்பற்றித் தானும் தூவிவிட்டு இணைந்து நமஸ்கரித்து எழுந்தாள்.

"அப்பா." இன்னமும் அங்கிருந்து அகலாமலே அழைத்தான் ஸ்ரீராம்.

"என்ன...?" என்பது போல வெளியிலிருந்தபடியே பார்த்தார் ராமநாதன்.

"அம்மாவோட வந்து நில்லுங்கோ. நமஸ்காரம் பண்றோம்..."

தங்க நகை பரிசு!

இன்னும் 20 வாரங்கள் வெளிவரப் போகிற இந்தத் தொடர் கதை, வாராவாரம் ஓர் எழுத்தாளரின் பெயரில் வெளியாகும். ஆனால் முழுக் கதையையும் எழுதுபவர் ஒரே எழுத்தாளர்தான்! யார் அவர்?

வாரா வாரம் படித்து, யூகித்துக் கொண்டே இருங்கள். கடைசி வார அத்தியாயத்துடன் வெளியாகப் போகிற கூப்பனில், 'தொடரை எழுதியவர் யார்?' என்கிற உங்கள் யூகத்தை எழுதி அனுப்புங்கள்.

உங்கள் யூகம் சரியானதாக இருந்தால் உங்களுக்குத்தான் மின்னும் தங்க நகைப் பரிசு!

பலர் சரியான விடை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் ஓர் அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.


சுவாமி படங்களருகே அவர்கள் வந்து நிற்க, சுகன்யாவும் ஸ்ரீராமும் நமஸ்கரித்து எழுந்த போது, பிள்ளையின் கன்னத்தை வழித்து திருஷ்டி கழித்தாள் சரஸ்வதி. ராமநாதனின் கண்கள் கலங்கிவிட்டன. மகனின் தோள்களில் கை வைத்து ஓர் அழுத்து அழுத்தி உணர்ச்சிகளை விழுங்கிக் கொண்டார்.

அந்தச் சில அன்னியோன்ய கணங்களே, தன்னை மட்டும் அன்னியப்படுத்தி விலக்குவதை உணர்ந்தாள் சுகன்யா.

தரையில் கால் மடித்து உட்காருவதே கஷ்ட மாயிருந்தது. வாழை இலையில் ஊற்றிய ரசம், வரம்புகட்டிய சாதத்தைத் தாண்டி தரை நோக்கி ஓட,

''சாரி சார்! பகவத் கீதை, இராமாயணம் புத்தகமெல்லாம் அவுட் ஆப் ஸ்டாக்! ஜெயில்லே இருக்கிறவங்களுக்கே சப்ளை பண்ணி மாளலே!

— மல்லிகைமன்னன்



இடது கையில் இலை முனையைத் தூக்கிப் பிடித்துச் சாப்பிட முயன்றாள் சுகன்யா.

"ஏண்டி சச்சு! இப்படி இடக்கையும் வலக்கையுமா கஷ்டப்படறாளே மாட்டுப் பொண்ணு... பேசாம மேஜையிலேயே உட்கார வைச்சுப் பொண்ணு மாப்பிள்ளைக்குச் சாதம் போட்டிருக்கலாமோல்லியோ....?"

பெரியத்தையின் பேச்சைக் கேட்டு சுகன்யா இடக்கரத்தை இலையிலிருந்து எடுக்க, ரசம் புதுப்புடைவையை நோக்கி வேகமாக வந்து இலேசாக நனைத்தது.

"நானும் இப்படிச் சாப்பிடக் கத்துக்கணும் தானே...?" என்றாள் சுகன்யா.

"நன்னா கத்துக்கோடியம்மா... சச்சு தினமும் கீழேயே உட்கார வைச்சு, இலையிலேயே சாதம் போடுடி...."

"இது இடக்கான பேச்சா இல்லையா...?" என்று சுகன்யா யோசித்துக் கொண்டிருந்த போதே மற்றவர்கள் சாப்பிட்டு முடித்து எழத் தயாராகிவிட்டார்கள்.

அவசரமாய் உண்டு முடித்து, கை அலம்பித் திரும்புவதற்குள், சாப்பிட்ட இலைகளை வசந்தி அகற்றிவிட்டிருந்தாள்.

ஏதேனும் உதவி செய்ய வேண்டும் என்ற வேகத்துடன் கூடத்தைக் கடந்து சமையலறை நோக்கி விரைந்தாள், சுகன்யா.

"ஐயய்ய....! நில்லு நில்லு! எச்சில்" என்று சரஸ்வதி அலறிய அலறல், அடித்த சிலையாக அவளை நிறுத்தியது.

"எங்கே எச்சில்? கீழே சுத்தமாகத்தானே இருக்கு...?"

"சுத்தமாயிருந்தா என்ன...? சாப்பிட்ட இடம்னா எச்சில்தான். அதைத் துடைச்சு முடிக்கற வரைக்கும் மிதிக்கக் கூடாது...? போ, கொல்லையில போய்க் கால அலம்பு...."

சுத்தமான கால்களை ஏன் அலம்ப வேண்டும் என்று புரியாமல் சுகன்யா கொல்லைப் புறக் குழாயடிக்குப் போக, அங்கும் சரஸ்வதியின் குரல் நன்றாகவே கேட்டது.

"ஈச்வரா! இவளுக்கு என்னத்தைச் சொல்லிக் கொடுத்து நான் எப்ப கரையேறப் போறேன்....!"

வார்த்தைகள் சரியாகப் புரியா விட்டாலும் தொனியின் வேதனை புரிந்தது சுகன்யாவுக்கு.

"சுகி... அப்பாவுக்கு பிராட்வே வரைக்கும் போகணுமாம் அழைச்சுட்டுப் போய்ட்டு வரேன்..." என்று ஸ்ரீராம் விடைபெற்ற போது கொஞ்சம் பயமாகக் கூட இருந்தது.

"சீக்கிரம் வந்துடுவீங்க இல்லை..."

இதோசான் மருமகியுடன் கோட்டவளைக் கவிஞுடன் பார்த்துச் சொன்னான்."

"பயப்படாதே. பூ வில பி ஆகைரட..."

"ஓகே...."

"ஏம்மா, கல்யாணமாயிருந்தா சித்த நேரம் படுத்துத் தூங்கு" என்று அனுமதி உத்தரவாகப் பிறப்பிக்கப்பட, சுகன்யா 'அப்பாடி' என்று படுக்கையில் போய் விழுந்தாள். புடவை உடுத்திய தூக்கமாவது ஒரு உபத்திரவமாய் இருந்தது. உடை மாற்றினால் எழக்கூடிய விபரீதங்களைப் பயந்து அப்படியே கசங்கலில் தூங்கினாள்.

எழுந்தபோது மணி மூன்றை நெருங்கிக் கொண்டிருந்தது. ஸ்ரீராம் இன்னமும் வந்திருக்கவில்லை.

கூடத்துத் தரையில் வசந்தி நிதானமாய் அரும்புகளைத் தொடுத்துக் கொண்டிருந்தாள். லாகவத்துடன் பறந்த அவள் விரல்களைச் சற்று நேரம் பார்த்தாள் சுகன்யா. ஏற்கெனவே தொடுத்து முடித்த இரண்டு முழச் சரம், வசந்தியின் இடது கையிலிருந்து தொங்கியது. அதைத் தொட்டுப் பார்க்கக் கை நீட்ட......

"தொடாதீங்க!"

அடிப்பட்டவளாய் நிமிர்ந்தாள் சுகன்யா.

"சுவாமிக்குப் போடணும் இந்தப் பூவை."

"சுவாமிக்குப் போடணும்னா நான் தொடக் கூடாதா?"

இடறலான மௌன இடைவெளிக்குப் பின், வசந்தி சங்கடமாய்க் குரல் தாழ்த்திப் பதில் சொன்னாள்.

"பெட்லே படுத்துத் தூங்கியிருக்கீங்க இல்ல.... அதனால் உங்களுக்கு மடி போதாது."

"பெட்லே படுத்துக்கக் கூடாதா?"

"படுத்தா குளிக்கணும். குளிச்சுட்டுத்தான் சுவாமி காரியம் பண்ணணும். அதனாலதான் அம்மா பகல்லே படுக்கைக் கட்டையைத் தலைக்கு வச்சுண்டு தூங்குவா"

"ஓ.. ஏன்? படுக்கையில படுத்தா என்ன தப்பு... ஏன் குளிக....?"

கேள்வியை முடிப்பதற்கு முன் வசந்தி முகம் சிவப்பதைப் பார்த்து, பதிலைப் புரிந்து கொண்ட சுகன்யா பேச்சை மாற்றினாள்.

"வசந்தி... எனக்குப் பூ கட்ட சொல்லித் தர்றியா?"

"ம... முதல்ல காக்கப் பூ கட்டிப் பழகிக் கிட்டேன் நானே... அந்த மாதிரி நீங்களும் பழகிக் குங்க..."

"அப்புறம் வசந்தி... இந்த விட்டுல அதாவது நம்ம விட்டுலே நிறைய ரூல்செல்லாம் இருக்குது இல்லை..."

"ஊம்..."

"எனக்கு ஒண்ணுமே புரியலை. எதுவும் தெரியலை.... அதனால..."

"ஊம்..."

"அதனாலே, நீ எனக்கு ஒரு உதவி பண்ணணும் ஒரு நோட்புக் தறேன். அதுல Do's and dont'sன்னு பிரிச்சு எல்லாத்தையும் எழுதிக் குடுத்துடறியா?"



"அ.இ.அ.தி.மு.க. பிளவுபட்டால் ஜெயலலிதாவை எப்படிப் பாராட்டுவார்கள்?"

"மீதி பராசக்தி!"

— அ. ஷண்முகசுந்தரம்

வசந்தி, கையால் வாயைப் பொத்திக் கொண்டு சிரிக்க ஆரம்பித்தாள். அவள் சிரிப்புச் சப்தத்தைக் கேட்டு வந்த சரஸ்வதிக்குக் கோபம் வெடித்தது.

"ஏண்டி! சுவாமி பூ தொடுக் கறச்சே வாய்கிட்ட கை போறது... போய்க் கையை அலம்பு..."

"ஐயோ! நான் எச்சில் பண்ணலம்மா.. இந்த மன்னி... மன்னி வந்து நம்ம ஆத்து ரூல் லெல்லாம் ஒரு நோட்டுல எழுதித் தரணும்னு கேட்கறாம்மா?"

"அதெல்லாம் நோட்டுல எழுதி வைச்சு நெட்டுரு பண்ணி வராதுன்னு சொல்லு உங்க மன்னிகிட்டே. உடம்போட பிறந்து வளர ணும..."

முகத்திலறைந்த பதில்தான். அதிலும் ஒரு சின்ன ஒளிக்கிறதைக் கண்டுபிடித்து மகிழ்ந்தாள் சுகன்யா. கல்யாணமாகி வந்த இந்த இருபத்துநாலு மணி நேரத்தில், வசந்தி தன்னை முதல் முறையாக மன்னி என்று கூப்பிட்டிருக்கிறாள்; வசந்தியின் அம்மாவும் அந்த உறவை அங்கீகரித்திருக்கிறாள்


(தொடரும்)


கதை : பெனிட்டோ குமார்
படம் : சசி
கடலோரக் கொலைகள்
6
வேறொரு ஆளை வேலைக்கு அழைத்து வந்தான் நந்து...
ஆஷா! இவன் ராஜதுரை. நல்லா சமைப்பான். எந்த வேலை கொடுத்தாலும் செய்வான்.
உங்களுக்கு எப்படி நன்றி சொல்றது?
நாங்க கிளம்பறதுக்கு முன் உங்களுக்கு ஏதாவது பரிசு தரணும். என்ன வேணுமோ கேளுங்க!
ஹி... ஹி... அப்புறமா கேட்கிறேன். வரட்டுமா?
ஹும்... 'உன்னையே தா'ன்னு கேட்க எனக்குத் தைரியம் வரலையே...
இரவு. இன்ஸபெக்டர் கோபியை சந்திக்க வந்தார் சப்-இன்ஸ்பெக்டர் மதிவாணன்
என்ன மதி! ஆள் கிடைச்சானா?
ஓ! கசாப்புக் கடைல மட்டன் வெட்டிட்டிருந்தான். இப்ப வருவான்.
அந்த, வடநாட்டு ஆசாமிகளையும் விசாரிச்சா நல்லதுன்னு நினைக்கிறேன்.
துன்புறுத்தற மாதிரி இல்லாம, நாசூக்கா நடந்துக்குங்க. அந்தாளு பெரிய எழுத்தாளராம்...!


கஜேந்திரன் உள்ளே வந்து...
ஐயா! எனக்கு எதுவும் தெரியாதுங்க! நான் ஒண்ணும் பண்ணலீங்க!
டேய்! உன் அப்பா சொத்து முழுசும் உன் அண்ணன் பரமகுருவுக்கே எழுதி வைச்சார்தானே!
அது நெசந்தாங்க. அதுக்காகக் கோவிச்சுட்டுப் போனவன், இப்பத்தாங்க மறுபடியும் இந்த கிராமத்துக்குள்ளே வரேன்.
தொண்டி குப்பத்துல தான வசிக்கிறே? ஊரை விட்டு ஓடப் பார்க்காதே! உன் பேர்ல சந்தேகம் வலுப்படும்!
விசாரணை நடத்த பண்ணை வீட்டுக்கு வந்தார் மதிவாணன்.
இந்தாளு பிரதீப்கிட்ட இங்கிலீஷ்ல வேற பேசி சமாளிக்கணும்; பேஜாரு!
ராத்திரி எத்தனை மணிக்குப் படுத்தீங்க?
நானும் ஆஷாவும் பேட்டி எடுத்ததையெல்லாம் விவரமா எழுதி, பதிவு செய்தோம். தூங்கறப்ப மணி ரெண்டு இருக்கும்.
பதினோரு மணிக்கு
வித்தியாசமா ஏதாவது சத்தம் கேட்டுதா?
ஆமா!
சொல்லிவிட்டு நாக்கைக் கடித்துக் கொண்டான் பிரதீப்.

(தொடரும்)

வி.ஐ.பி.க்கு வந்த கடிதங்கள்



"கண்ணீரை வரவழைத்த கடிதம்...!"

— வழக்கறிஞர் காந்தி

பூனா நகரில் தங்கி சட்டம் படித்துக் கொண்டிருந்த சமயம். சுமார் 21 வயதிருக்கும். அப்போது அருகிலுள்ள ஒரு தமிழ்க் குடும்பத்துடன் நட்பு ஏற்பட்டது. மிகவும் அன்போடு பழகினார்கள், அந்தக் குடும்பத்தினர். தங்கள் வீட்டில் எந்த சிறப்பு உணவு என்றாலும் அன்று என்னைக் கட்டாயம் அங்கு சாப்பிடச் செய்து விடுவார் அந்தக் குடும்பத் தலைவி. அது ஒரு பிராமணக் குடும்பம் என்றாலும் என்னிடம் அவர்கள் எந்த வித்தியாசமும் பாராட்டவில்லை. அவர்கள் குடும்பத்து மகள்தான் உமா. அப்போது சின்னப் பெண். பள்ளிக்கூடத்துக்குச் செல்லத் தொடங்கியிருந்தாள். 'மெட்ராஸைப் பற்றி ஏதாவது நியூஸ் சொல்லுங்க காந்தி மாமா, ஏதாவது கதை சொல்லுங்க காந்தி மாமா' என்றெல்லாம் என்னிடம் எதையாவது கேட்டுக் கொண்டிருப்பாள்....

காலப்போக்கில் உமா கல்யாணமாகி லண்டனில் செட்டிலாகி விட்டாள். அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்தின் இருநூறாவது ஆண்டுவிழாக் கொண்டாட்டம் தொடர்பான கருத்தரங்கில் கலந்து கொள்ள அமெரிக்கா சென்றிருந்த நான், அப்படியே லண்டனுக்கும் சென்றேன். அப்போது உமாவின் வீட்டுக்கும் சென்றிருந்தேன்.

பிறகு சென்னை வந்த கொஞ்ச காலத்தில் உமா எழுதிய 25 நவம்பர் 1991 தேதியிட்ட கடிதம் ஒன்று கிடைத்தது. சீரான எழுத்துக்களோடு அமைந்திருந்தது அந்தக் கடிதம். கூடவே இன்னொரு கடிதம், எனக்குக் கடிதம் எழுதிய அன்றே மாரடைப்பு ஏற்பட்டு அவள் இறந்துவிட்டதாக. இதைப் படித்ததும் அதிர்ந்து விட்டேன். கண்களிலிருந்து கரகரவென்று தானாகக் கொட்டியது- உமா தன் உயிர் பிரிவதற்கு முன் எழுதிய கடைசிக் கடிதம் எனக்குத்தான் என்பதையும், தான் இறப்பிற்கு வெகு சமீபத்தில் இருப்பதை அவள் கொஞ்சம் கூட அறியாமல் கடைசி நாள் வரையில் இருந்ததையும் எண்ணி.

25.11.91
லண்டன்.

அன்புள்ள காந்தி மாமா,

உங்கள் எல்லோருக்கும் என் புத்தாண்டு வாழ்த்துக்கள். கூடவே ஒரு சின்ன வேண்டுகோள்.

என் மகள் சோன்யா தென்னிந்தியாவுக்கு வந்து, அங்குள்ள அனாதை இல்லங்கள் மற்றும் கிறித்துவ சேவை மருத்துவமனைகள் எப்படி இயங்குகின்றன என்பதைக் கண்டறிய இருக்கிறாள். இது அவளது கல்வி தொடர்பான டூர். அங்கு அவ்வை இல்லத்தில் ஓரிரு வாரங்கள் தங்குவதாக இருக்கிறாள். முதலில் மதர் தெரசாவிடம் இரண்டு மாதங்கள் வாலன்டியராக இருக்கவும் எண்ணுகிறாள். உங்களுக்கு உள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி வேலூர் மருத்துவமனைக்கும் சிட்டத்தூர் கிராமத்துக்கும் விஜயம் செய்ய அவளுக்கு அனுமதி வாங்கித் தர முடியுமா?

ஏற்கெனவே அவள் இங்குள்ள எல்லா மருத்துவக் கல்விக்கூடங்களுக்கும் விண்ணப்பித்து, அத்தனையிலும் அவளுக்கு சீட் கிடைத்திருக்கிறது. எதைத் தேர்வு செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறாள்.

இந்த நாட்டில் கிட்டத்தட்ட எல்லோருமே பல்கலைக்கழகத்தில் சேருவதற்கு முன் ஒரு வருடம் விடுமுறை எடுத்துக் கொள்வது வழக்கம். அந்த விதத்தில் சோன்யா இந்தியா-தாய்லாந்து-சிங்கப்பூர்- பாலி-நியூசிலாந்து-ஆஸ்திரேலியா-லாஸ் ஏஞ்ஜெல்ஸ்-நியூயார்க் என்று டூர் அடித்து விட்டு லண்டன் திரும்ப இருக்கிறாள். சென்னைக்கு வரும்போது அவள் உங்களைச் சந்திப்பாள்.

மற்றபடி இங்கு எல்லோரும் நலம். உங்களிடமிருந்து பதிலை எதிர்பார்க்கிறேன்.

உங்கள் அன்புள்ள,
உமா

●●●●●●●●●●●

உடல் நலம்கெட்ட அன்று காலை இந்தக் கடிதத்தை உமா உங்களுக்கு எழுதியிருக்கிறாள்: அவள் 26 நவம்பர் 1991 அன்று இரவு இறந்து விட்டாள் என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கிறோம்.

தன் எண்ணங்களையும், உணர்வுகளையும் இந்தக் கடிதத்தில் எழுதி உங்களுக்கு அனுப்புவதற்காகத் தயாராக வைத்திருந்தாள் அவள். இந்தக் கடிதம் உங்களை அடைய வேண்டுமென்ற அவளது எண்ணம் நிறைவேற வேண்டும் என்பதுதான் எங்கள் உள்ளப்பூர்வமான ஆசை.

அன்புடன்,
பாபு, சோன்யா, கன்யா

ஓவியம்: அருண் சரண்யா

வாரம் ஒரு போட்டி - 3 முடிவு!

இரண்டு படங்களுக்கு இடையிலான 12 வித்தியாசங்கள்:

1.காவல் நிலைய எண்;
2. ஜீப்பின் ஹெட் லைட்;
3: போலீஸ்காரரின் தொப்பி;
4. தலைவரின் துண்டு;
5: கீழே கிடப்பவரின் பேண்ட்;
6. உதைப்பவரின் செருப்பு;
7. வேன் ஜன்னல்;
8. போலீஸ்காரரின் பாக்கெட்;
9. கறுப்புச் சட்டைக்காரரின் மூக்கு;
10. மரக்கிளை;
11. கேமரா வாரின் நீளம்;
12. போலீஸ் ஸ்டேஷனின் ஜன்னல்.

இந்தப் பன்னிரண்டு வித்தியாசங்களையும் ஏறத்தாழ 96 சதவிகித வாசகர்கள் சரியாக எழுதியிருந்ததால் வேறு வழியின்றிக் குலுக்கல் முறையில்தான் தேர்ந்தெடுக்க வேண்டியதானது. அதில் தேர்ந்தெடுக்கப்பட்டு 5000 ரூபாய் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி: மு. பாலகிருஷ்ணன், 4/1, ராஜாகோரி லேன், ஆற்காடு.(வ.ஆ.அ.மா.)



"இப்படிப்பட்ட ஆட்களுக்கா பிரசாரம் செய்தோம்?"

"குறிப்பிட்ட சில பத்திரிகைகள் என்னைக் குறிவைத்துத் தாக்குவதிலும் கிண்டல் செய்வதிலும் கடந்த சில மாதங்களாக ஈடுபட்டு வருகின்றன. என் மனதைப் பாதிக்கும் இந்த விஷயத்தை கல்கி போன்ற கண்ணியமான பத்திரிகையொன்றிடம் சொல்லி, ஆதங்கத்தைக் கொட்ட வேண்டும் என்றுதான் காத்திருந்தேன்!" என்று ஆரம்பித்தார் ஆச்சி மனோரமா.

"அ.தி.மு.க.வுக்கு பிரசாரம் செய்ததற்காக நான் நிறைய கோடிகள் வாங்கியதாகவும் என் மகன் மீதுள்ள சில குற்றங்களை அரசின் துணையோடு மறைத்து விட்டதாகவும் சில பத்திரிகைகளில் எழுதியிருந்தார்கள். என் மகன் எந்த கிரிமினல் வழக்கிலும் இணைத்துப் பேசப்பட்டவன் அல்ல. ஜெயலலிதா ஆண்ட ஐந்து வருட காலத்தில் எந்த சிபாரிசுக்காகவும் நான் அவரைச் சந்தித்ததில்லை. பொது மேடைகளில் பார்ப்பதோடு சரி.

"நான் என்ன பெரிய குற்றம் செய்து விட்டேன்? பெண் முதலமைச்சர் என்று மட்டுமல்ல; பல வருட காலமாக நட்பு பாராட்டி வருபவர் என்ற முறையில் ஜெயலலிதா அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அ.தி.மு.க.வுக்கு பிரசாரம் செய்தேன். மேடையில் பேசும் போது உணர்ச்சி வேகத்தில் ரஜினி பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் அதிகமாகப் பேசியிருக்கலாம். இத்தனைக்கும் இந்தியன் எக்ஸ்பிரஸில் வந்த விஷயம்தான் அது. பின்னர் இது குறித்து ரஜினியிடம் விளக்கிய போது, அவர் மிகவும் பெருந்தன்மையாக 'நான் ஒண்ணும் தப்பாகவே எடுத்துக்கல; கலைஞர்கள் உணர்ச்சிவசப்படுவார்கள் என்பது எனக்குத் தெரியாதா! அதனால்தான் நானே மேடையில் பேச பலமுறை யோசிக்கிறேன்!' என்றார்.

"ஆனால் பத்திரிகைகளோ, இதன் காரணமாகப் படத்தயாரிப்பாளர்கள் என்னைக் கண்டு ஓடுவதாகவும் சினிமா உலகில் நான் அனாதையாகி விட்டது போலவும் எழுதி மகிழ்கின்றன. இன்றும் நான் ஆறேழு படங்களில் நடித்து வருகிறேன். இதைவிட எப்படி பிஸியாக இருக்க முடியும்? விஜயகாந்த், தமது படத்தில் இருந்து என்னை நீக்கி விட்டார் என்று எழுதியிருந்தார்கள். உண்மை என்னவென்றால் விஜயகாந்த் படமே எடுக்கவில்லை என்பதுதான். இப்படி ஏதேதோ உண்மையற்ற விஷயங்களை எழுதுகிறார்கள். அவர்களுக்கு மனசாட்சி – மனிதாபிமானம் கிடையாதா?

"மிகவும் கஷ்டப்பட்டு வாழ்க்கையில் முன்னேறியவள் நான். கடந்த 38 வருடங்களாக ஃபீல்டில் இருக்கிறேன். நடிப்பதைத் தவிர வேறு சிந்தனை எதுவும் எனக்கு இருந்தது கிடையாது. தொழிலுண்டு; நானுண்டு என்று இருந்து விடுவேன். இப்படிப்பட்ட எனக்கு நேரம் சரியில்லை... கடந்த ஆண்டு என் மகன் பூபதிக்கு ஹார்ட் அட்டாக் வந்ததிலிருந்து மனதைத் துயரப்படுத்தும் நிகழ்ச்சிகள் நடந்தவாறே இருந்தன. தேர்தல் பிரசாரத்தின்போதே நானும் என் மகனும் விபத்தில் சிக்கினோம். அ.தி.மு.க. ஆட்சி பற்றியும் மந்திரிகளின் சுருட்டல்கள் பற்றியும் செய்திகள் வருவதைப் பார்க்கும்போது, 'இப்படிப்பட்ட ஆட்களுக்குப் பிரசாரம் செய்து விட்டோமே!' என்ற வேதனைதான் என் மனத்தை வாட்டுகிறது.

"கலைஞரும் எனக்கு நன்கு தெரிந்தவர்தான். தொடக்க காலத்தில் அவர் வசனமெழுதிய 'மணிமகுடம்' போன்ற தி.மு.க. பிரசார நாடகங்களில் பலமுறை நடித்திருக்கிறேன். இப்போது நான்காவது முறையாக முதல்வராக வந்திருக்கும் அவரைச் சந்தித்து வாழ்த்த விரும்பினாலும், மனதில் ஒரு குற்ற மனப்பான்மை குறுகுறுக்கிறதே!" என்றார் மனோரமா.

சந்திப்பு : ப்ரியன்
வண்ணப்படம் : யோகா

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன். ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

வளர்ந்தவன் ஸ்டாலின். இன்னமும், வளரு வான். அரசியலில் அவனுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது. எனக்குக் கூட அப்பா நல்ல பாதையைக் காட்ட நினைத்தார். ஆனால் நேரம் சரியில்லை. வாய்ப்புகளை நான் சரியா கப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. ஒருவரை மற்றொருவர் எப்போதும் 'புஷ்' செய்து கொண் டிருக்க முடியாது. சொந்தத் திறமை, நேரம் ஆனால் அப்பா, வை.கோ. உட்பட நிறைய பேரை அரசியலில் வளர்த்து விட்டிருக்கிறார். அவர்களில் பலர் முதுகில் குத்திவிட்டுப் போயிருக்கிறார்கள். அவர்களில் சிலரை, பெருந்தன்மையாக மன்னித்து ஏற்றுக் கொண்டிருக்கிறார். அப்படிப்பட்ட பண்பாளரான அப்பா, என் தவறுகளை மன்னித்து என்னை ஏன் ஏற்றுக் கொள்ளக் கூடாது?

அப்பா என் தவறுகளை மன்னிக்கக் கூடாதா?

"பல மேடைகளில் அப்பா வைத் திட்டினேன். மற்றவர்கள் திட்டும் போது கேட்கக்கூடிய நிலையில் வைக்கப்பட்டேன். அதை யெல்லாம் நினைத்துப் பார்க் கும்போது 'எப்படிப்பட்ட தவறுகள் செய்து விட்டோ மென்று' எண்ணத் தோன்றுகிறது. அதன் காரணமாக இப்போது குற்ற உணர்வோடு தடுமாறிப் போகிறேன்."

எல்லாம் ஒத்துவர வேண்டும் அந்த வகையில் ஸ்டாலினின் வளர்ச்சி சுயமான முயற்சி என்று சொல்லலாம்."

"இந்த முறை ஆட்சிக்கு வந்ததும் அப்பாவைப் பார்த்தீர்களா?"

"அவரைப் பார்த்து ஆறு வருடங்கள் ஆகிவிட்டன. எனது பாட்டி (கலைஞரின் தாயார்) என்னிடம் மிக அன்பாக இருந்தவர். அடுத்து பேரறிஞர் அண்ணா அவர்கள் 'தாயில்லா பிள்ளையாயிற்றே' என்று பாசத்துடன் உச்சிமுகர்ந்தவர். காஞ்சிபுரத்திலிருந்து கார் அனுப்பி கூட்டி வரச் சொல்லுவார். அடுத்து எம்.ஜி.ஆரிடம் பாசப் பிணைப்பு உண்டு. இப்போது வாரிசு அரசியல், குடும்ப அரசியல் என்றெல்லாம் சொல்லுகிறார்கள்.

சமீபத்தில் பங்காரு அடிகளாரைச் சந்தித்தேன். பார்த்தவுடன் அவர் சொன்னார் : 'நீயும் உன் அப்பாவும் விரைவில் ஒன்று சேர்வீர்கள்.'

குடும்பம் ஒன்று பட்டு இருக்க வேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாக எங்களைச் சேர்த்து வைக்க நல்லவர்கள் சிலர் முயற்சி செய்கிறார்கள். ஆனால் ஜெ.யிடம் வாங்கிய ஐந்து லட்சம் ரூபாயைத் திருப்பிக் கொடுக்கச் சொல்லுங்கள் என்கிறாராம். நான் எங்கே போவேன்? வரும் வாட கையை வைத்துத்தான் நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். அப்பா தான் அந்த ஐந்து லட்சத்தை எனக்குக் கொடுக்க வேண்டும்."

சந்திப்பு : **ஸ்ரீநிவாசன்**

போட்டிக்கதை - 4

பாராட்டு விழா

தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கும் முயற்சியில் லண்டன் சென்றிருந்த என் மைத்துனர், அங்கிருந்து எனக்கொரு கடிதம் எழுதியிருந்தார்.

மதுரையிலுள்ள கல்லூரியொன்றில் பொருளாதாரப் பேராசிரியராகப் பணியாற்றி, ஓய்வு பெற்றுள்ள டாக்டர் ராம் சென்னுக்கு, அவர் ஆங்கில மொழியில் எழுதியுள்ள "உலகில் பசியை ஒழிப்போம்" என்ற நூலின் சிறப்பைப் பாராட்டி ஆக்ஸ்போர்டு யுனிவர்சிட்டியின் பொருளாதாரப் பேராசிரியர்கள் பெரிதும் புகழ்வதாகவும், விரைவில் அவரை அங்கு அழைத்துப் பாராட்டு விழா நடத்தவிருப்பதாகவும் தெரிவித்திருந்தார். இந்தச் செய்தி இந்தியாவில் யாருக்கும் இதுவரை தெரியாதெனவும் குறிப்பிட்டிருந்தார்.

கடிதத்தைப் படித்து முடிக்கும்போது, என் நண்பர் மணி வந்து சேர்ந்தார். அவரிடம் டாக்டர் ராம்சென் பற்றிய விவரத்தைத் தெரிவித்துக் கடிதத்தையும் காட்டினேன். "ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் பாராட்டுவதற்குள், நாம் நம் ஊரிலிருக்கும் டாக்டரை, நமது எழுத்தாளர் சங்க ஆண்டு விழாவில் பாராட்டிப் பரிசளிக்கலாமே!" என்று என் மனத்திலிருந்ததைப் பிடித்தாற்போலக் கேட்டார் மணி.

அவர் பணியாற்றிய கல்லூரிக்குக் கிளம்பினோம்.

அங்கிருந்த பணியாளிடம், "டாக்டர் ராம்சென் இங்கதானே பணியாற்றினார்...? அவரை நாங்க பார்க்கணும். அவர் இப்போ எங்கே இருக்கார்? தெரியுமா?"

"ஓ!... புரபஸர் ராமச்சந்திரனையா...? அவர் பணி ஓய்வுபெற்று ரொம்ப காலமாச்சு. இப்ப அவர் என்ன பண்றார்? எங்கிருக்கார்னு சரியாத் தெரியலை. தெற்கு மாசி வீதி-கீழ மாசி வீதிச் சந்திப்புக்குப் பக்கத்துல, ஒரு பிள்ளையார் கோவில் இருக்கு. அதுக்குப் பக்கத்திலுள்ள சந்துல ஒரு வீட்லதான் இருந்தார். அங்க போயிக் கேட்டாச் சொல்லுவாங்க" என்றார்.

"அவரைப் பற்றிய விவரங்கள் சில தெரியணும். வேற யாரிடம் கேட்டாத் தெரியும்?" இப்ப இருக்கிற புரபசரிடம் கேட்டாத் தெரியுமா?"

"இப்ப... இங்க... சாரங்கபாணின்னு ஒருத்தர், எக்கனாமிக்ஸ் புரொபசராயிருக்கார். இவர் ராம்சென்ட்ட ஜூனியரா இருந்தவர். கேட்டாத் தெரியும்'' என்று கூறி, அவர் இருக்கும் அறையை நோக்கிக் கைகாட்டினர்ர்.

அவர் பெயர் ராமச்சந்திரன் என்பதும், அதுதான் 'ராம்சென்'னாகச் சுருங்கியிருக்கிறதென்றும் தெரிந்து கொண்டோம்.

பொருளாதாரப் பேராசிரியரின் திறந்திருந்த அறைக்குள் தயங்கியபடி நுழைந்தோம். சுமார் நாற்பத்தைந்து வயது மதிக்கத்தக்க - வாட்டசாட்டமான ஒருவர் சூட், கோட்டணிந்து, கம்பீரமாக அமர்ந்திருந்தார். எதையோ படித்துக் கொண்டிருந்த அவர், எங்கள் வருகையை அறிந்து. "யாரது?... என்ன வேணும்?" என்றார்.

''உங்களுக்கு முன் இங்க பேராசிரியராயிருந்த மிஸ்டர் ராமச்சந்திரன் சாரைப் பற்றித் தெரிஞ்சுக்கலாம்னு வந்தோம்!" என்றேன்.

"ஓ! என்னோட சீனியரைப் பத்திக் கேக்கறீங்களா? - எதுக்காக அவரைப் பத்திக் கேக்கறீங்க? என்ன விசேஷம்?"

"அடுத்த மாசம், எழுத்தாளர் சங்க ஆண்டு விழா, நகரில் நடத்தவிருக்கோம்! அதுல கலந்துக்கும்படி டாக்டர் சாரைக் கேட்கலாமின்னு நெனைக்கிறோம். அதற்காகவே வந்தோம்!" என்றார் மணி.

"அப்படியா? அதுல நான் வந்து என்ன செய்யப் போறேன்? கூட்டங்கள்ல கலந்துக்கிறதோ, பேசறதோ எனக்குப் பழக்கமில்லை!'' என்று, நாங்கள் அவரையே அழைக்க வந்ததாக நினைத்துப் பேசினார்.

''நாங்க உங்க கிட்ட வந்தது, டாக்டர் ராமச்சந்திரன் சாரைப் பத்திய சில விவரம் தெரிஞ்சுக்கலாம்னுதான். அவர் பல நூல்கள் எழுதியிருக்கிறதாகவும் அவருடைய கட்டுரைகள் பல மேல்நாட்டு ஜர்னல்களில் வெளியாகிப் பேரும் புகழும் அடைந்திருப்பதாகவும் கேள்விப்பட்டோம். எனவேதான் அவரைப் பற்றிச் சில விவரங்களை அவரது புத்தகங்களையும் வெளியான கட்டுரைகளைப் பற்றியும் உங்களிடம் கேட்டுத் தெரிஞ்சுக்கலாம்னுதான் வந்தோம்" என்று உடைத்துப் பேசினார் மணி

எஸ். சங்கரநாராயணன்

தன்னையே அழைக்க வந்திருப்பதாக நினைத்துப் பெருமைப்பட்டுக் காலரை இழுத்து விட்டுக் கொண்ட புரபசரைத் தலையில் குட்டியது போல இருந்தது மணியின் பேச்சு.

அதன் பிறகே தன்னிலையடைந்தார் புரபசர். "அவரை அழைச்சு... என்ன செய்யப் போறீங்க? அவர் இங்கே எனக்கு முன்னால் பேராசிரியராக இருந்த வர்தான். அவரைப் பத்திப் பெருமையாச் சொல்றதுக்கு ஒண்ணுமில்லை! கட்டுரைகள் இங்கிலீஷ் ஜர்னல்கள்லே வந்ததும் சில புக்ஸ் வெளிவந்திருப்பதும் உண்மைதான். ஆனா, அதெல்லாம் அவருடையதில்லைங்கிறதை நீங்க தெரிஞ்சுக்கணும். அவருடைய ஜூனியராயிருந்த நான்தான் அதெல்லாம் எழுதிக் கொடுத்து, அவர் பேர்ல வெளியாகியிருக்கு... ஏதோ படிச்சுப் பாஸ் பண்ணிப் பட்டமெல்லாம் வாங்கியிருக்காரே தவிர... விஷயம் ஒண்ணுமில்லை. அவர் ஒரு மாதிரியான ஆளு. 'லூஸ் டைப்'பான ஆசாமி. அப்படிப்பட்டவரைத் தேடி நீங்க வந்ததாச் சொல்றது ஆச்சரியமா இருக்கு!"



தனது சீனியராக இருந்த ஒரு பேராசிரியரைப் பற்றித் தரக்குறைவாகப் பேசியதும், அவரிடம் திறமை, சாமார்த்தியம் எதுவுமில்லை என்று பேசியதுமல்லாமல் அவரையே ஒரு "லூஸ் டைப்" எனப் பழித்துச் சொன்னதும் மணிக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. எனவே, நைசாக அங்கிருந்து நழுவி வெளியே வந்தோம்.

நகரப் பேருந்தில் ஏறி விளக்குத் தூண் நிறுத்தத்தில் இறங்கி பிள்ளையார் கோவிலை நோக்கி நடந்தோம். அங்கிருந்த வெற்றிலை-பாக்குக் கடைக்காரரை அணுகி, டாக்டர் ராமச்சந்திரன் வீடு எங்கிருக்கிறதென விசாரித்தோம்.

"நீங்க யாரு? என்ன ஜோலியா அவரைப் பார்க்க வந்திருக்கீங்க?"

என்னைவிட, மணிக்குத்தான் அதிகக் கோபம் வந்துவிட்டது. "நாங்க எங்கிருந்து வந்தா என்ன? எதுக்குக் கேட்டால் உமக்கென்ன? தெரிஞ்சாச் சொல்லும்! விருப்பமில்லேன்னா விட்டுடறோம்" என்று வெடுக்கெனக் கூறினார்.

சுக்கிறீங்க! எதுக்குக் கேக்குறேன்னா... அந்த ஆளு ஒரு மாதிரி 'லூஸ் டைப்'புங்க. அவரைத் தேடி யாரும் வர்றதில்லீங்க. யாரோடவும் பேச மாட்டாருங்க! எங்கேயாச்சும் போவாரு... வருவாரு... அவ்வளவுதான்! பெரும்பாலும் வீட்ல தான் இருப்பாருங்க! அதோ தெரியுது பாருங்க, ஒரு சந்து... அதுல நுழைஞ்சு போனா வலது பக்கமா நீலவர்ணம் பூசின ரெண்டு மாடி வீடு ஒண்ணு இருக்கும். அதுக்கு அடுத்த வீடுதான் அவரோட வீடு."

"அப்படியா? ரொம்ப நன்றி!" என்று கூறிக் கடைக்காரரிடமிருந்து விடுபட்டு, குறுகலான சந்து வழியே நடந்தோம். அழகிய மதுரை மாநகரின், திருமிகுந்த தெற்கு மாசி வீதிக்கே



''ரகசியம் சொல்றேன்னு சொல்லி எல்லார் காதையும் கடிச்சிடறீங்களாமே ஏன்?''
''அது ஒரு ரகசியம் டாக்டர். உங்க கிட்டே மட்டும் சொல்றேன். கிட்டே வாங்க!''
— ஆரணி யுவராஜ்

அந்தச் சந்து ஒரு திருஷ்டி பரிகாரம் போல இருந்தது. வீட்டோரங்களில் சாக்கடை நீர், சரியில்லாத வாய்க்கால்களில் வழிந்தோடி நடக்கவே சங்கடமாக இருந்தது. அதோடு, சிறுவர் சிறுமியர் வேறு காலைக் கடன்களை, அங்கேயே கழித்து, அசுத்தப்படுத்தியிருந்தனர். இரண்டொரு தினங்களுக்கு முன் பெய்த மழைநீர் வேறு, குண்டுங்குழியுமான இடங்களில் தேங்கி, கொசுக்கள் மொய்த்தபடி இருந்தன. வெகு ஜாக்கிரதையுடன் வேட்டியைத் தூக்கிப் பிடித்தபடியே நடந்தோம்.

கூடகோபுரத்தை அடுத்திருக்கும் குச்சு வீடு போல, நீலவர்ணம் பூசிய அழகிய மாடி வீட்டின் அருகே பழங்காலக் குகை போலிருந்த அவர் வீட்டைக் கண்டுபிடித்தோம். உலகெலாம் புகழ் ஒளி பரவிப் பிரகாசிக்கும் பொருளாதார மேதையான அவர், காற்றுக் கூட நுழைய முடியாத குகை போன்ற இந்த வீட்டிலா வசிக்கிறார்? நினைத்துப் பார்க்க சங்கடமாக இருந்தது எனக்கு.

பூட்டியிருந்த வீட்டினுள் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தோம். இருண்டு கிடந்ததே தவிர, யாரும் உள்ளே இருப்பது போலத் தெரியவில்லை. என்ன செய்வது? யாரிடம் கேட்கலாம்? என்று அக்கம் பக்கம் திரும்பிப் பார்த்துக்கொண்டிருக்கும்போது, நீலவர்ணமிட்ட வீட்டிலிருந்து கதவைத் திறந்து ஒருவர் எட்டிப் பார்த்தார். நாங்கள் நிற்பதைக் கண்டு திகைத்தவர், உள்ளே சென்று கதவை மூடிக் கொள்வாரோ எனப் பயந்து “சார்!” என்று அழைத்தபடியே அவரிடம் அணுகினோம்:

“டாக்டர் ராமச்சந்திரன் வீடு இதுதானே...? பூட்டி இருக்குதே! எங்கே போயிருப்பார்?” என்று விசாரித்தேன்.

“இது அவர் வீடுதான்! எங்க போயிருப்பார்னு தெரியாது!”

“அவரோட வேற யாருமில்லையா?”

“அவர் மட்டுந்தான் தனியா இருக்கார். கூட யாருமில்லை. அவர் சம்சாரம் காலமாகி ரெண்டு வருசமாச்சு; மக ஒருத்தி திருமணமாகித் திருமங்கலத்தில், கணவரோட இருக்கா.”

“மக வீட்டுக்குப் போயிருப்பாரோ...? உங்க கிட்ட எதுவும் சொல்றதில்லையா...?”

“இவரு, ஒரு மாதிரியான ஆளுங்க; ‘லூஸ் டைப்’. யாரோடயும் அதிகம் பேச மாட்டார். எங்களிடம் கூட எதுவும் பேசவோ, பழகவோ மாட்டார். மக வீட்டுக்கெல்லாம் போக மாட்டார். ரிட்டயரானப்புறம்... கிடைக்கிற பென்சனை வச்சுக்கிட்டு கஷ்ட ஜீவனம் பண்றாரே தவிர, மகளிடம் போறதில்லை. இந்த வீட்டை யாருக்காவது விலைக்குக் கொடுத்துட்டு, மக வீட்ல போயி மகராசனா இருக்கலாம். அவர் மக கூட அப்படி நெனச்சு, என்ன வீட்ட வாங்கிக்கச் சொன்னா. ஆனா, இந்த ஆளு அதுக்கெல்லாம் ஒத்து வரலை. இங்கேயே கெடந்து அல்லல் படறாரு.”


டாக்டர் வீட்டை வாங்க இவர் எண்ணியது நடக்கவில்லை போலும். அந்த ஏமாற்றம் கோபமாக அவர் குரலில் எதிரொலித்தது.

“தனியா இங்க இருந்தா... சாப்பிட எங்க போவார்... வருவார்?”

“கீழ மாசி வீதியில... நாடார்மேன்ஷனுக்கு எதிர்லே ‘நடராச விலாஸ் ஹோட்டல்’னு இருக்கு. அங்கதான் போயிச் சாப்பிட்டு வருவார்.”

ஹோட்டலைக் கண்டுபிடிக்க அதிகச் சிரமம் ஏற்படவில்லை. கல்லாப் பெட்டியருகே திடகாத்திரமான ஒருவர், சட்டை போடாமல், நெற்றியிலும், தோள்பட்டை, வயிறு, முதுகுப்புறம் போன்ற இடங்களில் மூன்று விரல் பட்டையாகத் திருநீறு பூசிக் களிப்புடன் அமர்ந்திருந்தார். அவர்தான் கடை உரிமையாளராக இருக்கும் என்றெண்ணி, அவரிடம் பேசத் தொடங்கினோம்.

“வருமானவரி அதிகாரிகள் ஏன் கோபித்துக் கொண்டு போகிறார்கள்?”
“வானம் பொழிகிறது, பூமி விளைகிறது, உனக்கு ஏன் வரி என்று டயலாக் பேசினேன்!”
— என். மோகன்





"ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு கல்யாணத்தை நடத்தலாம்ங்கறதுக்காக இப்படி ஒரு பொய் சொல்லக் கூடாது அவுரு..."

"அப்படி என்ன சொன்னாரு?"

"மாப்பிள்ளை ப்ளேன்ல கண்டக்டரா இருக்காருங்கறாரு!"

— டீ.எஸ். திருமலைராயன்

"டாக்டர் ராமச்சந்திரன், ரிட்டையரான கல்லூரிப் பேராசிரியர் தினமும் இங்கேதான் வந்து சாப்பிடுவார்னு கேள்விப்பட்டோம். அவரைப் பார்க்கலாம்னு வீட்டுக்குப் போய் வந்தோம். வீட்ல இல்லை. பூட்டியிருக்கு. இங்கே சாப்பிட வந்திருக்கலாம்னு நெனைச்சு வந் தோம்!" என்றார் மணி அமைதியாக.

"அவர் சம்சாரம் காலமான பெறகு இங்க தான் ரொம்ப நாளாச். சாப்பிட்டு வந்தாரு. இப்பச் சில நாளா இங்க வரலை."

"மக வீட்டுக்குப் போயிட்டாரா? இங்க சாப் பிடலேன்னா, வேற எங்க போவார்?" என் றேன்.

"மக வீட்டுக்கெல்லாம் போயி நிக்க மாட் டாருங்க. கொஞ்ச நாளா உடம்பு சரியில்லாம... இங்க சாப்பிட வரவே கஷ்டப்பட்டாருங்க! நேத்துலருந்து இங்க வரலீங்க. வீட்லதான் படுத்திருக்காரோ, ஒருவேளை மக வந்து கூட் டிட்டுப் போயிருப்பாரோ தெரியலீங்க! வீட்டுக் கதவு வெளியில பூட்டு எதுவுந் தெரியுதா...? இல்லேன்னா, வீட்டுக்குள்ளாறவே இருக்கலா முங்க" என்றார்.

எங்களுக்கும் அது சரியெனத் தோன்றியது. எனவே, போகுமுன் மீண்டும் ஒருமுறை அவரது வீடு சென்று பார்க்கலாம் என்று புறப் பட்டோம்.

மறுபடியும் அவர் வீட்டைச் சமீபிக்கும் போது மணி நாலரை ஆகியிருந்தது. அந்த வீட் டுக்கு முன்பு ஆட்கள் பலர் கூடியிருப்பதும் தெரிந்தது. காக்கி உடையணிந்த காவலர்கள் இருவரும் அவர்களுடன் அங்கு நிற்பது கண்டு திகைத்துப் போனோம்.

அருகில் சென்று விசாரித்தபோது, டாக்டர் ராமச்சந்திரன் வீட்டு மாடியிலேயே இறந்து கிடப்பதாகவும், சற்று முன்புதான் பக்கத்து வீட்டுக்காரர் மாடியிலிருந்து துர்நாற்றம் அடிப் பதைக் கண்டு, காவல் நிலையத்திற்குத் தகவல் கொடுத்ததாகவும், காவலர் வந்து வீட்டுக் கதவை உடைத்து, உள்ளே நுழைந்து பார்த் ததில் அவர் இறந்து கிடப்பது தெரிய வந்த தாகவும் கூறினார்.

டாக்டர் ராமச்சந்திரன் இறந்து கிடப்பதாக அறிந்ததும் திகைத்துப் போனோம். உடல் நல மில்லாதிருந்த அவர், நடந்து வந்து சாப்பிட முடியாமலும், கவனிக்க ஆளில்லாமலும் பட்டினி கிடந்து வாடி வதங்கிச் செத்திருக் கிறார் என்பது தெளிவாகப் புரிந்தது.

உலகத்தின் வறுமைப் பிணியைப் போக்க வழிமுறைகளை ஆராய்ந்து, புத்தகமாக எழுதிய பொருளாதார மேதை, தன் வயிற்றுப் பசி தீர்க்கும் வழிவகை செய்து கொள்ள இயலாமல் பட்டினி கிடந்து, பரிதாபமாகச் செத்துக் கிடந் தார்.


ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகப் பேராசிரி யர்களால் பாராட்டிப் பரிசு பெறவிருந்தவர், உடன் பணியாற்றியவர்களால் உதாசீனம் செய் யப்பட்டு, அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்களால் "லூஸ்" என்ற பட்டம் சூட்டப்பட்டு, இன்று நாதியற்ற பிணமாகக் கிடக்கிறார்! இது அவர் தலைஎழுத்தா? அல்லது நம் நாட்டில் பிறந்த தால் ஏற்பட்ட சாபமா? – புரியவில்லை.

அவரைக் கண்டு பேசி, நடைபெறவிருக்கும் எழுத்தாளர் சங்க ஆண்டு விழாவில் அவரைக் கலந்து கொள்ளச் செய்து பாராட்டிப் பரி சளிக்க விரும்பிய நானும் நண்பர் மணியும் பெருமுயற்சி செய்து, திருமங்கலத்திலிருந்த அவர் மகளுக்குத் தகவல் தந்து, வரவழைத்து, இறுதிக் கடமைகளை உடன் இருந்து முடித் தோம். பாராட்டு விழாவுக்கு அவரை அழைக்க வந்த நாங்கள், அவரது இறுதி ஊர்வலத்தில் தான் கலந்து கொண்டோம்.

"அந்த கிராமவாசி, மானேஜரையே உத்து பார்த்துக்கிட்டு உட்கார்ந்திருக்காரே, ஏன்?"

"மானேஜரை கவனிச்சாத்தான் காரியம் நடக்கும்னு பியூன் சொன்னதை தப்பா புரிஞ்சுக்கிட்டாராம்!"

— சீர்காழி வி. ரேவதி





நரசிம்ஹ அனுஷ்டுப் மந்திரம் என்று ஒன்று உண்டு. அதிலே முப்பத்திரண்டு அக்ஷரங்கள். ஒவ்வொரு அக்ஷரமும் ஒரு பிரும்ம வித்தையை நமக்கு உபதேசம் பண்ணக்கூடியது. ஆகவே 32 பிரும்ம வித்தைகளாலும் ஆராதிக்கப்படுகிறவர் நரசிம்ஹர் என்று கொள்ளலாம்.

'ஏதாவது ஒரு பிரும்ம வித்தையை நம்மால் கற்றுக் கொண்டு அனுஷ்டிக்க முடியுமா?' என்றால் அது ரொம்பவும் சிரமம். ஒன்றைக்கூட நம்மால் அனுஷ்டிக்க முடியாது.

ஆனால் நரசிம்ஹனைப் பார்த்து, ஸ்ரீ நரசிம்ஹாய நம: என்று ஒரு புஷ்பத்தைப் போட்டு அர்ச்சனை செய்ய முடியும்! அந்த நரசிம்ஹனை தியானம் பண்ண முடியும். அப்படி தியானம் பண்ணிவிட்டால் எல்லா பிரும்ம வித்தையும் கிடைத்த பலன் நமக்கு உண்டாகும். அத்தனை பிரும்ம வித்தைகளின் நிலைக்களன் அந்தப் பரமாத்மாதான்.

பூர்வ காலத்திலே தியான சுருதி என்றொருவன் இருந்தான். வாரி வாரி வழங்கும் வள்ளன்மை மிக்கவன். எல்லாருக்கும் வாரி வாரிக் கொடுப்பான். தானம், தைரியம் போன்ற குணங்கள் இயல்பாக அமையணும். அவனுக்கு அது அமைந்திருந்தது.

ஏழு அடுக்கு உப்பரிகையிலே தியான சுருதி படுத்துக்கொண்டிருந்தான். இரவு நேரம்... இரண்டு பரதேசிகள் அவனுக்கு உபதேசிக்க எண்ணினார்கள்.

குறையொன்றுமில்லை...

அவசர அவசரமாகப் போட்டுக் கொண்ட வேஷமாம்! யோசித்து எடுத்த ராமாவதாரம் போலன்றி, தேவதைகளின் பிரார்த்தனைகளுக் கிறங்கித் தோன்றிய கிருஷ்ணாவதாரம் போலன்றி, நினைத்த மாத்திரத்தில் எடுத்த அவ தாரம் நரசிம்ஹ அவதாரம்!

அவசரத் திருக்கோலம் என்றாலும் அது தான் மிகவும் அழகான அவதாரமாக அமைந் திருக்கிறது!

மிக ஏற்பாடாக விருந்து சமைக்கும் போதெல்லாம் பிரமாதமாக அமைவதில்லை. ஆனால் ஊரிலிருந்து வரும் திடீர் விருந் தினருக்கு அவசரமாய்த் தயாரிக்கப்படும் எளிய உணவு அற்புதமாக அமைகிறது!

நரசிம்ஹ அவதாரம் இந்த அவசர உப சரணை மாதிரி... அதன் அழகைச் சொல்லி முடியாது!

பிரஹலாதனின் வாக்கை மட்டுமின்றி பிரும்மாவின் வாக்கைக் காப்பதற்காகவும் எடுக்கப்பட்டது நரசிம்ஹாவதாரம்.

ஹிரண்யகசிபுவுக்கு எசகுபிசகான நிபந்தனைகளடங்கிய வரத்தைக் கொடுத்தவர் அவர்தானே... 'இரவிலும் பகலிலும், மனித ராலும் மிருகத்தாலும் எனக்கு அழிவு வரக் கூடாது' என்றெல்லாம் கேட்டான் அல்லவா.

பிரும்மா கொடுத்த அத்தனை வாக்கையும் காப்பாற்றிக் கொடுத்து அதே சமயத்தில் ஹிரண்யகசிபுவை சம்ஹாரமும் பண்ண பரி வுடன் எடுத்த அவதாரம் நரசிம்ஹ அவதாரம்.

'பிரும்மா வாக்குக் கொடுத்துவிட்டால் என்ன?' என்று அதை மீறும் வல்லமையும் உரி மையும் பகவானுக்கு இல்லையா என்ன...? ஆனால் அவன் பிரும்மாவின் வாக்கைக் காப் பாற்றிக் கொடுக்க பிரயத்தனத்துடன் அவதரித் தான். ஏன்....

அந்த வாக்கு மீறப்பட்டால், பிரும்மாவின் வரம் செல்லாது என்று ஆகிவிடும்! அப்புறம் யாராவது பிரும்மாவை ஸ்தோத்திரம் பண்ணு வார்களா? ஏற்கெனவே அவருக்கு ஸ்தோத்திர மும் கோயிலும் குறைவு... அவர் தொடர்பான மந்திரங்களை தொனி குறைத்துத்தான் சொல்ல வேண்டும் என்று வாக்கு தேவதையின் சாபம் வேறு இருக்கிறது....

ஒரு ஊரில் உபன்யாசகர் ராமாயண உபந் யாசம் 48 நாள் முடித்து, வீட்டுக்குக் கிளம்பு கிறார். உபன்யாசத்தை ஏற்பாடு செய்தவருக்குச் சந்தேகம்.

"சுவாமி! இந்த நாற்பத்தெட்டு நாட்களும் 'ராமன் ராமன்' என்றும் 'ராவணன் ராவணன்' என்றும் 'ராக்ஷஸன், ராக்ஷஸன்' என்றும் சொல்லிக் கொண்டேயிருந்தீர். இதிலே ராக்ஷ ஸன் யார்? ராமனா? ராவணனா?" என்று கேட்டாராம்!

எறும்பார் கடிக்கிறார்!

நடிகர் சங்கத்தின் ஒரு கோடி ரூபாய்க் கடனைத் தமிழக அரசு செலுத்தும்!

– முதல்வர் மு. கருணாநிதி



உபந்யாசகர் தமது மூட்டைகளைக் கட்டு வதை நிறுத்திவிட்டார்!

சந்தேகப் பேர்வழி தொடர்ந்து கேட்டார்.

"இப்ப கேட்ட சந்தேகம் இந்த நாற்பத் தெட்டு நாட்களா உண்டானதுதான். அதற்கும் மேல, ரொம்ப நாளா ஒரு சந்தேகம். பிரும்மா வுக்கு ஏன் நம் தேசத்தில் கோயில்களே இல்லை...?"

உபந்யாசகர் சொன்னாராம்:

"உம்மையும் படைச்சு, எம்மையும் படைச்சு, உம்மெதிரே எம்மை நாற்பத்தெட்டு நாள் உபந்யாசம் பண்ண வைத்தாரே அந்த பிரும்மா! அதனால்தான் அவருக்குக் கோயிலே இல்லை போலும்...."

ஆக, பிரும்மாவுக்கு ஏற்கெனவே ஸ்தோத் திரமும் கோயில்களும் குறைவு. இந்த நிலை யிலே பகவான் அவரை மதிக்கலைன்னா.... வேறு யார் மதிப்பார்கள்? அதனால்தான் பிரும் மாவின் வாக்கைக் காப்பாற்ற நரசிம்ஹ அவ தாரம் எடுத்தான்.

நாராயணனின் நாபியிலிருந்து உருவா னவன் நான்முகன். அவன் நாபிக் கமலத்தில் தான் அமர்ந்திருப்பதை உணர்வதற்கே அவ னுக்கு ரொம்ப நாட்களாயிற்றாம்! ஆயிரம் கோடி யுகங்கள் தவம் பண்ணி, நாராயணனே தமக்கு மூலம் என்று உணர்ந்தான் பிரும்மா! அந்த தேவதைக்கு ஒரு அகௌரவம் வரக் கூடாது என்கிற பரிவினால் அவன் கொடுத்த வரத்துக்கு எந்த வித பங்கமுமில்லாமல், அகடிதகடனா சாமர்த்தியத்தோடு அவதரித் தான் பகவான். அவனுக்கு எத்தனை காருண் யம் பாருங்கள்!

(தொடரும்)



இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் பூரணியைப் பார்த்ததுமே அடையாளம் தெரிந்துவிட்டது. நீலப் பட்டுச் சேலையும் மூக்குக் கண்ணாடியுமாய் யாருடனோ பேசிக் கொண்டிருந்தாள்.

முப்பது ஆண்டுகளில் இளமை மூப்புறுவது இயற்கை. பூரணிக்கும் கொஞ்சம் சுருக்கம், கொஞ்சம் நரை எல்லாம் இருந்தது. மூக்குக் கண்ணாடி வேறு. மெலிந்திருந்தாள். வயதானால் மனிதர்கள் ஒன்று, சதை போட்டு விடுகிறார்கள்; அல்லது சதையைத் தொலைத்து விடுகிறார்கள். உடலில் மாற்றம் இல்லாமலே பயணத்தை முடிக்கிறவர்கள் அரிது என்று தோன்றியது. இந்த மாறுதல்களை மீறி, ஐம்பத்திரண்டு வயதிலும் 'நான் பூரணிதான்' என்று அந்த முகம் சொல்லியது. மின்னும் நிறமும் நட்பான புன்னகையும் மனசின் ஆழங்களுள் புகுந்து துளைக்கின்ற (இப்போது கண்ணாடிக்குப் பின்னிருக்கும்) கண்களும் நான் பூரணி, நான் பூரணி என்று அவர் நெஞ்சுக்குப் பறைசாற்றின.

கல்யாண வீட்டின் ஒலிகள், வாசனைகள், பட்டுப் பளபளப்புகள். அனைத்துக்கும் பின்புலமாய் நாதசுரத்தின் மங்கள இசை. இது எதிலும் மனம் பதியாமல், நண்பன் வீட்டுத் திருமணத்துக்கு மனைவி, மகன், மருமகனோடு வந்திருந்து முகூர்த்தம் முடிந்து விடைபெறத் தயாராயிருந்த நாராயணன், அருகில் மனைவி இருக்க, விருந்தினர் கூட்டத்தில் தற்செயலாய்த் தெரிந்த மாஜி காதலியைப் பார்த்துக் கொண்டிருந்தார். கல்யாண வீட்டிலிருந்து மனம் ஓடிவிட்டது. இளம் நாணா இளம் பூரணியுடன் சென்னை நகரின் ஓட்டல்களிலும் திரைப்பட அரங்குகளிலும் மெரீனா கடற்கரையிலும் பொழுதைக் கழிக்கப் போய் விட்டான். ஒவ்வொரு கணமும் ஓர் இனிய கனவாய்த் திகழ்ந்த நாட்கள் அவை.

"இப்படிப் பொது இடத்தில் என் கையைப் பிடிச்சுக்காதீங்க நாணா! எல்லாரும் பார்க்கறாங்க."

"நாளைக்கு ஊரறிய உன் கையை நான்

பரிசு

ஆர். சூடாமணி

பிடிக்கிறபோதும் இப்படித்தான் சொல்லுவியா?''

கடற்கரையில் ஒரு பெண்ணும் ஆணும் கைகோத்துக் கொள்வதே அதிசயமாய் இருந்த காலம் அது. பூரணி வெட்கப்படுவாள். ஆனால் முகத்தின் பூரிப்பு அவள் பேச்சையும் கைவிலக்கலையும் பொய்யாக்கி விடும்.

"நீ இப்போ எத்தனை அழகாயிருக்கே தெரியுமா பூரணி?''

"தெரியுமே!''

''எப்படி? இங்க கண்ணாடி எதுவும் இல்லையே?''

"உங்க கண்கள் இருக்கே!''

இப்படியெல்லாம் தன்னால் பேச முடிவது அவளுக்கே வியப்பாக இருக்கும். இதயமே சொற்களை உருவாக்கிவிடும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

''நம்ம கல்யாணம் நடக்குமா நாணா?''

அந்தஸ்து குறுக்கிடும் என்று அவள் பயந்தாள். அவன் பிரபல வழக்கறிஞர் சேஷாசாரியின் ஒரே வாரிசு. தானும் ஒரு கட்டடக் கம்பெனியில் உதவி என்ஜீனியர். அந்தக் கம்பெனி உருவாக்கும் கட்டடங்கள் போல் உயரப் போகிறது அவன் வருங்காலம். அவள் அந்தப் பிரபல வழக்கறிஞரின் குமாஸ்தா முத்தையாவின் மகள். பி.எட். செய்து கொண்டிருந்தாள். அவள் சம்பாதிக்க வேண்டியது குடும்பத்துக்கு அவசியம். கீழே ஒரு தங்கையும் தம்பியும் இருந்தார்கள்.

"கட்டாயம் நடக்கும்.''

"எனக்கென்னமோ பயமாயிருக்கு.''

''எந்தத் தெய்வத்தின் மேல் சத்தியம் பண்ணி நான் சொல்லணும் சொல்லு.''

அவனுடைய அந்தப் பதிலே அவளுக்கு ஆயிரம் சத்தியங்களுக்கு சமமாய் இருந்தது.

கடைசியில் குறுக்கே நின்றது அந்தஸ்து இல்லை. ஜாதி. வேற்று ஜாதியில் அவன் மணம் செய்து கொள்வதற்கு அவன் தகப்பனார் திட்டவட்டமாய் மறுத்துவிட்டார்.

''நீங்க எதிர்த்து நிக்கலையா நாணா?'' அவள் பதறினாள்.

"நின்னேன். என்ன பிரயோஜனம்? ஒரு அளவுக்கு மேல நான் அவரை எப்படி எதிர்க்க முடியும் சொல்லு? நான் அவருக்கு ஒரே பிள்ளை. என்னை வளர்த்து ஆளாக்கினவர் அவர்...''

''ரொம்ப அதிசயந்தான், பெத்த பிள்ளையை வளர்த்து ஆளாக்கறது.''

''உனக்கு வாய் வெடுக்கு ஆனாலும் ஜாஸ்தி பூரணி.''

"அது இப்பத்தான் தெரியுதாக்கும்?''

"நாம் சண்டையில பிரிய வேணாம்.''

"அப்படின்னா பிரிவுதானா?''

"வேறென்ன? அப்பாகிட்ட எத்தனையோ சொல்லிப் பார்த்தேன், கெஞ்சினேன். அம்மா ஒத்துண்டப்புறம் கூட அப்பா துளிக்கூட விட்டுக் கொடுக்கலே. எனக்கு வேற வழி இல்லை பூரணி. மன்னிச்சுக்கோ.''

''எவ்வளவு சுலபமா சொல்லிட்டீங்க! கடைசில நமக்குள் நிக்கறது 'மன்னிச்சுக்கோ'ன்னு இந்த ஒரு வார்த்தைதானா?''

அவன் மணலிலிருந்து எழுந்து பான்ட்டைத் தட்டிக் கொண்டான்.

"நாணா! நாணா, ப்ளீஸ், நம்ம ஆசைகள் இப்படி முடிய வேணாம்...'' தவிப்புடன் அவன் கையைப் பற்றினாள்.

"கைய விடு பூரணி. எல்லாரும் பார்க்கறா.''

நாராயணன் நண்பனை அணுகினார்.

"அப்போ நாங்க கிளம்பறோம் சண்முகம்.''

''சரி. தாம்பூலப்பை வாங்கிக்கிட்டியா?''

"ஆச்சு. பை த வே...''

"என்ன?''

''அதோ அங்கே ஜன்னல் பக்கமாய் நின்னுண்டு ரெண்டு பசங்க கூட பேசிண்டிருக்காங்களே ஒரு அம்மா, நீலப் புடைவை கட்டிண்டு... உங்க யாருக்கானும் உறவா? நான் எப்பவானும் இங்கே வந்திருந்த சமயத்தில் அந்தம்மாவைப்

பார்த்திருக்கேனா? தெரிஞ்ச முகமாட்டம் இருக்கேன்னு கேக்கறேன்."

"உறவெல்லாம் இல்லை. இன்னிக்குத்தான் எனக்கே என் மனைவி தன் மாதர் மன்ற சிநேகிதிகள்ல ஒருத்தின்னு சொல்லி அறிமுகப் படுத்தினாள். ஸ்கூல் இன்ஸ்பெக்ட்ரஸாம். அன்னபூரணி முத்தையான்னு பேரு."

சுரீரென்று அடிவயிற்றில் கத்தி பாய்ந்தது. அன்னபூரணி முத்தையா! முத்தையா என்பது அவள் தகப்பனாரின் பெயர் என்று நினைவிருந்தது. அப்படியானால்... அவள் திருமணமே செய்து கொள்ளவில்லையா? தன்னாலா? தான் மறுத்ததாலா?

ஐந்து நிமிட நேரத்துக்கு ஒரு பெரும் அதிர்வு அவர் உள் உலகத்தைப் புரட்டி எடுத்தது. கடந்த முப்பது ஆண்டுகளை வாழ்வின் மகத்தான தவறு என்று முத்திரை குத்தியது.

"என்ன, என்னமோ மாதிரி இருக்கேள்? தலை சுத்தறதா என்ன? முகமெல்லாம் வேர்த்திருக்கே?"

மனைவியின் கவலையான குரல் காதருகில் ஒலித்தபோதுதான் சிறிது நேரம் தானே தன்னிலிருந்து வேறாகிப் போயிருந்ததை அவர் உணர்ந்தார்.

"ஒண்ணுமில்லே அமிர்தா. இன்னிக்குக் கல்யாணத்துக்கு வரணுமேன்னு சீக்கிரம் எழுந்துட்டேனில்லையா? அதான் ஒரு நிமிஷம் நின்னுண்டே தூங்கிட்டேன் போலிருக்கு."

"தலைசுத்தல் இல்லையே?" என்றாள் அமிர்தவல்லி மறுபடியும். "உங்க பி.பி. தொந்தரவை நினைச்சுத்தான் எனக்குக் கவலை. வேறென்ன!"

"அதெல்லாம் ஒண்ணுமில்லே."

எனக்காக ஒரு பெண் ஆயுளெல்லாம் தனி வாழ்வு வாழ்ந்திருக்கிறாள்!

முதலில் அதிர்ச்சியாய் உறைத்திருந்த அந்த எண்ணம் இப்போது லேசாய் ஒரு பெருமிதமளித்தது. பூரணியின் திசையில் ஜாடையாய்ப் பார்த்தார். அவளுடன் பேசிக் கொண்டிருந்த சிறுவர்கள் "டாட்டா ஆன்ட்டி!" என்று விடைபெற்று வேறு பக்கம் செல்வது தெரிந்தது. பூரணி அவர்களுடன் பேசியதை மிகவும் ரசித்திருக்க வேண்டும். அவள் முகத்தில் ஒரு கனிந்த புன்னகை தேங்கியிருந்தது. பள்ளியாசிரியையாய் இருந்தவள். இளம் உயிர்களை நேசித்தவள்.

இப்போது பூரணி கூட்டத்திலிருந்து சிறிது விலகித் தனியாய்த் தெரிந்தாள். பரிச்சயமானவர்கள் யாரும் அருகில் இல்லை போல் தோன்றியது.

நாராயணன் மெள்ள அவள் பக்கமாய் நகர்ந்தார். முதலில் அவள் கவனிக்கவில்லை. பிறகு எதேச்சையாய்த் திரும்பியவளின் முன்னே அவர் முகம் நின்றது.

முப்பது ஆண்டுகளுக்குப் பின் அந்தத் துளைக்கும் விழிகளை நேருக்கு நேர் எதிர்கொண்டபோது நாராயணனுக்குப் பாதாதிகேசம் ஒருகணம் நடுக்கம் ஓடியது. காலம் இருவர் மீதிருந்தும் கழன்று விழுந்து விட்டது போல் உணர்ந்தார். இளம் நாராணா, இளம் பூரணி. பார்த்துப் பார்த்து நேசித்து நெக்குருகச் செய்திருந்த அவள் வடிவம். தன் அழகை அவன் கண்களில் கண்டிருந்த அந்த முகம்.

அவளுக்கு அடையாளம் தெரிகிறதா? ஒரு பதற்றத்துடன் நாராயணன் தமது இப்போதைய உருவத்தை நினைவுபடுத்திக் கொண்டார். நெற்றிக்கு மேல் இன்னொரு நெற்றியை அமைத்துவிட்ட வழுக்கை. தோள் நெகிழ்ந்து இடுப்பு பருத்து விட்ட கோலம். ரத்த அழுத்தத்தால் எந்த நிமிஷம் நாலு பேர் முன் தலைசுற்றல் வந்து விடுமோ என்ற இடைவிடாத ஜாக்கிரதை உணர்வால் இறுகியிருக்கும் முகம். மூக்கின் மேல் வழிந்து விரலால் தூக்கித் தூக்கி விட்டுக் கொள்ளும் கண்ணாடி.

முப்பது ஆண்டுகளுக்கு முன் பரவசமாய் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடி இருந்த இரு ஜோடிக் கண்களும் இப்போதும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தன, இரு வெள்ளெழுத்துக் கண்ணாடிகளுக்குப் பின்னிருந்து.

அருள் வாக்கு



நம் மதத்தில் மட்டும் ஏன் யக்ஞம் இருக்கிறது? என்று ஆலோசிக்கிறபோது, இவ்வுலகில் மனிதர்களாகிய நம்முடைய ஜீவனரீதியைக் கவனிப்போம். ஓர் ஊரில் ஒரு ஸாமான் அதிகமாக விளைந்தால் அதை அந்த ஸாமான் விளையாத ஊருக்கு அனுப்பி, நம் ஊரில் விளையாததும் அந்த ஊரில் விளைவதுமான மற்றொரு ஸாமானை வாங்கிக் கொள்கிறோம். தச்சன், கொல்லன் முதலியவர்கள் நமக்காகச் சில காரியங்களைச் செய்கிறார்கள்; நாம் அவர்களுடைய காலக்ஷேபத்திற்கு வேண்டியவைகளைக் கொடுக்கிறோம். பசுக்களுக்குப் புல் போடுகிறோம்; அவை நமக்குப் பால் கொடுக்கின்றன. நாம் ராஜாங்கத்திற்கு வரி கொடுக்கிறோம். அவர்கள் நமக்குத் தீங்கு வராமல் காவல் கட்டுச் செய்கிறார்கள். இப்படி உலகம் முழுவதுமே பரிவர்த்தனை க்ரமத்தில் (Exchange) நடந்து வருகிறது. இப்படியே நாம்

"என்னை... ஞாபகம் இருக்கா?"

"மறக்க முடியுமா?"

அவள் குரல் மிக மெல்லியதாய் வந்தது. ஆனால் அதன் இனிமையும் இளமையும் மாற வில்லை.

என்ன எண்ணங்கள் ஓடுகின்றன அவள் மனத்தில்? உதடுகள் லேசாய் நடுங்குவது தெரிந் தது. இந்தச் சந்திப்பு அவளுக்கும் ஓர் உலுக்கல் தானே?

"எப்படி இருக்கே பூரணி?" அந்தப் பெயர் நாவில் ஓர் அதிர்ச்சியாய், பிறகு ஒரு வியப் பாய், கடைசியில் ஓர் இன்பமாய், படிந்தது.

"நல்லாயிருக்கேன். நீங்க?"

"நானும்."

அவள் உமிழ்நீரோடு தன் உணர்ச்சிகளைச் சேர்த்து விழுங்குவது தெரிந்தது. முதல் விநா டிக்குப் பிறகு குரல் இயல்பாகி விட்டது. நெற்றியில் குங்கும வட்டத்தின் ஓரம் வேர்வை ஈரத்தில் லேசாய்க் கறுத்துக் காட்டியது.

இல்லையே?"

"இத்தனை வருஷத்துக்கப்புறம் இந்தக் கேள்விக்கு என்ன அர்த்தம்? கோபம் இருக் குன்னு சொன்னால் என்ன செய்யப் போறீங்க?"

அவர் திகைத்து விட்டார்.

"நான் எந்த மாதிரி வெள்ளத்தில் மூழ்கி மூச்சுத் திணறி செத்துச் செத்துப் பிழைச்சுக் கடைசில ஒருவாறு கரை சேர்ந்தேன்னு உங் களுக்குத் தெரியுமா? அதைப் பத்தி எப்பவா னும் யோசிச்சதாவது உண்டா? 'மன்னிச் சுக்கோ'ன்னு ஒரு வார்த்தை சொல்லிட்டு அன்னிக்குப் போயிட்டீங்க. 'கோப மில்லை'ன்னு ஒரு வார்த்தை நான் இன்னிக் குச் சொல்லிட்டா உங்க மனசாட்சி நிம்மதியா யிடும். அப்படித்தானே நாணா?"

குரலின் இனிமை மட்டுமென்ன, நாக்கின் கூர்மையும் மூப்புறவில்லை.

"அப்படியெல்லாம் இல்லை பூரணி...

லோகாந்தரங்களுடன் சில பரிவர்த்தனை செய்து கொண்டிருக்கிறோம். இஞ்ஜினீயர் முதலியவர்கள், பெய்த மழை நீரை ஒழுங்காகப் பிரித்து ஆறு முதலியவைகளில் பாயும்படி விடுவார்களேயொழிய, மழை பெய்யும்படி செய்ய அவர்களால் முடியாது. மழை பெய்யவேண்டுமானால், நாம் சில ஸாமான் களைத் தேவலோகத்திற்கு அனுப்ப வேண்டும். இந்த பரஸ்பர பரிவர்த்தனையே கீதையில் சொல்லியிருக் கிறது.

தேவான் பாவயதானேன தே தேவா பாவயந்து வ:

பரஸ்பரம் பாவயந்த ச்ரேய: பரம் அவாப்ஸ்யத

இதன் அர்த்தம்: "யாகத்தைக் கொண்டு நீங்கள் தேவர்களைத் திருப்தி செய்து வையுங்கள். அந்த தேவர்கள் மழை முதலியவற்றால் உங்களுக்கு க்ஷேமத்தைச் செய்யட்டும்; இப்படியே நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டு, மேலான க்ஷேமத்தை அடையுங்கள்."

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

வெள்ளையும் கறுப்பும் இழைந்த கூந்தலில் மல்லிகைப் பூ சூட்டியிருந்தாள். கழுத்தைப் பார்த்தார். உள்ளங்கழுத்தோடு அணிந்திருந்த மெல்லிய தங்க செயின் அந்தப் பொன் வண் ணச் சருமத்துடன் கலந்து போய் இருக்குமிடம் தெரியாமல் கிடந்தது.

தாலி இல்லை.

மீண்டும் உள்ளே ஒரு பெருமிதம்.

"நீங்க இங்கே..."

"கல்யாணப் பெண்ணின் அப்பாவுக்கு ஃப்ரெண்ட்" சற்று நிறுத்தினார். "உனக்கு என் மேல கோபம் இல்லையே?" என்றார், இருக் காது என்ற நிச்சயத்துடன்.

"கோபமா?" ஒருகணம் அவரை மௌன மாய் ஏறிட்டு நோக்கினாள். "நீங்க என்னை நிராகரிச்சதுக்கா?"

"மெதுவா, மெதுவா!" சுற்றுமுற்றும் அவசர மாய்ப் பார்த்தார். "யார் காதுலயாவது விழப் போறது!"

"இன்னும் அதே பழைய நாணா!" அவள் சிரித்தாலும் குரலைத் தாழ்த்தியிருந்தாள்.

"சொல்லு பூரணி. என்மேல கோபம்

அன்னிக்கு நான் இருந்த நிலையை நீ யோசிச் சுப் பார்க்கணும்..."

"உங்க மனைவி நல்லாயிருக்காங்களா? சுய ஜாதிப் பெண்ணைக் கட்டியிருப்பீங்களே! எத் தனை குழந்தைங்க?" அவள் இரக்கம் காட்டத் தயாராயில்லை.

ஏன் இப்படி வேர்த்துக் கொட்டுகிறது? கூட்ட நெரிசலா? படபடப்பாய் வருகிறதே... ஹார்ட் அட்டாக் ஏதானும் ஆரம்பிக்கிறதா என்ன? அமிர்தாவைக் கூப்பிடலாமா...? குனிந்து, சட்டை நுனியால் முகத்தையும் கழுத்தையும் துடைத்துக் கொண்டார்.

அவள் குரல் சட்டென்று இளகியது.

"என்ன நாணா? உடம்பு சரியில்லையா?"

அவர் நெகிழ்ந்து போனார். என்ன கோபித் தாலும் இப்போதும் அவரிடம் அவளுக்கு எத்தனை அக்கறை! அவர் நினைவிலேயே வாழ்ந்து திருமணத்தைக் கூட ஒதுக்கி விட் டவள். இந்த அன்புக்கு ஏதேனும் ஒரு வகையில் பரிசளிக்க வேண்டாமா?

"உடம்புக்கு ஒண்ணுமில்லை பூரணி... உன் கோவம் எனக்குப் புரியறது. ஆனா நீ



"அந்த ஜோடியின் காதல் ஆழமானதுன்னு எப்படிச் சொல்றே?"

"சுண்டல் யார் வாங்குறதுன்னு ஒரு மணி நேரமா ஒருத்தரை ஒருத்தர் ஆழம் பார்த்துக் கிட்டிருக்காங்களேடா!"

– ஆலத்தம்பாடிராஜகோபால்.

நினைக்கிற மாதிரி நான் முழுக்க முழுக்கக் கேவலமானவன் இல்லை. நான் பிள்ளையாய் இருக்கும்போது என் அப்பாவை எதிர்க்க முடியலே. ஆனா நான் அப்பாவானபோது என் பிள்ளையின் ஆசையை நிறைவேத்த முடிஞ்சுது."

"எப்படி?" என்றாள் பூரணி ஆவலுடன்.

"அதோ அங்கே மண்டப வாசல் தோரணத்துக்குக் கீழே ரெண்டு பேர் நிக்கறாளே, அவா என் பிள்ளையும் மாட்டுப் பெண்ணும்" என்று நாராயணன் உண்மையைச் சொன்னார். கும்பகோணம் திருவேங்கடாசாரியின் சீமந்த புத்திரியாகிய கோமளா என்ற தம் மருமகளைச் சுட்டிக்காட்டி "அந்தப் பெண் உன் ஜாதி. என் பிள்ளை ஆசைப்பட்டான்னு அவளையே அவனுக்குக் கல்யாணம் பண்ணி வச்சேன்" என்று பொய் சொன்னார்.

அவள் முகம் நொடியில் மலர்ந்தது.

"அப்படியா நாணா? ரொம்ப சந்தோஷம். நான் கோபப்பட்டதை மறந்துடுங்க. எவ்வளவு நல்ல காரியம் செய்திருக்கீங்க! எத்தனையோ பேர் தப்பு செய்யறாங்கதான்! ஆனா அதை உணர்ந்து, சந்தர்ப்பம் வரப்ப அதுக்குப் பரிகாரம் செய்யற பெரிய குணம் எல்லாருக்குமே வராது. யு ஆர் க்ரேட். எனக்கு ரொம்ப மகிழ்ச்சியாயிருக்கு."

அவளுக்கு அந்த மகிழ்ச்சியைப் பரிசாகத் தந்ததில் அவர் மனம் நிறைந்தது.

"இந்த ஒரு பையன்தானா உங்களுக்கு?"

"ஆமாம்."

"உங்க மனைவி இங்க வந்திருக்காங்களா?"

"அதோ... அவள்தான்." அமிர்தவல்லியைச் சுட்டிக்காட்டினார்.

"ரொம்ப அழகாயிருக்காங்க. சந்தோஷம் நாணா. நீங்க இப்ப என்ன பண்றீங்க? என்னவாய் இருக்கீங்க?"

"கம்பெனி டைரக்டர். அம்பத்தெட்டு வயசு ஆகறதில்லையா? அடுத்த மாசம் ரிடையர் ஆறேன்."

"காலம் ரொம்ப வேகமாய்த்தான் ஓடிப் போயிடிச்சு."

சில கணங்கள் மௌனமாய் இருந்தார்கள்.

"நான் உங்களைப் பத்தி விசாரிச்சேனே! நீங்க என்னைப் பத்தி எதுவும் விசாரிக்க மாட்டீங்களா நாணா?" அவள் சிரித்தாள். "நான் வந்து..."

"இன்ஸ்பெக்ட்ரஸ் அஃப் ஸ்கூல்ஸ். இன்னும் அன்னபூரணி முத்தையாவாத்தான் இருக்கே. எனக்கு எல்லாம் தெரியும்."

அவள் வியப்புடன் அவரைப் பார்த்தாள்.

"எனக்காக ஆயுசெல்லாம் கன்னியாவே இருந்திருக்கியே! இதுக்கு நான் எப்படி நன்றி சொல்றது பூரணி?"

அவள் சிறிது நேரம் அவரையே உன்னிப் பாய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு புன்னகை செய்தாள்.

"எனக்கு நேரமாகுது நாணா. காலையில் சீக்கிரமே வந்துட்டேன். நான் கிளம்பணும்."

"நானும் கிளம்பிண்டுதான் இருந்தேன் உன்னைப் பார்த்தபோது. வரட்டுமா பூரணி?"

"நானும் போய் வரேன்."

ஒருவரையொருவர் இவ்வளவு காலத்துக்குப் பிறகு சந்தித்தது பற்றி மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டார்கள். ஒருவரையொருவர் முகவரி கேட்கவில்லை.

நாராயணன் தம் குடும்பத்தினருடன் காரில் ஏறிச் சென்றார். பூரணி தன் சிநேகிதியிடம் விடைபெற்று, ஓர் ஆட்டோ பிடித்து வீட்டுக்குப் பயணமானாள்.

இவன் சமூகப் பழக்கத்துக்கும் தகப்பனாரின் அதிகாரத்துக்கும் அடிபணிந்து தன்னையும் தன் காதலையும் நிர்தாட்சண்யமாய்ப் புறக்கணித்துச் சென்ற பின்னும் தான் இவனையே நினைத்துக் கொண்டு ஆயுளெல்லாம் கன்னியாக வாழ்ந்து வருவதாக எண்ணிவிட்டான்? என்ன ஒரு ஈகோ! எத்தகைய உயர்வு மனப்பான்மை!

ஆனால், 'நான் காதல் தோல்வியிலிருந்து ஒருவாறு மீண்டு முப்பதாம் வயதில் ஒரு சக ஆசிரியரைப் பதிவுத் திருமணம் செய்து கொண்டேன். பத்தொன்பது வயதில் எங்களுக்கு ஒரு மகள் பி.ஏ. இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருக்கிறாள்' என்று அவனிடம் சொல்ல வந்தவளுக்கு, அவளைப் பற்றிய அவனுடைய பிரமையை அறிந்ததும் சொல்ல மனம் வரவில்லை. என்ன இருந்தாலும் அவன் மனவிரிவு வரப் பெற்றவனாய்த் தன் மகனுக்கு கலப்புத் திருமணம் செய்திருக்கிறான். அப்படியிருக்க, அவள் அவனுக்காகக் கன்னி வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறாள் என்ற நினைப்பில் அவனுக்கு ஒரு திருப்தி இருக்கிறதென்றால் அதை ஏன் அவனுக்கு மறுக்க வேண்டும்? அவன் மனமாற்றத்தோடு செய்த செயலுக்கு அந்தத் திருப்தி ஒரு பரிசாக இருக்கட்டுமே!

நல்லவேளையாக, ஒரு பெண்ணின் தகப்பனாருக்கும் கணவனுக்கும் ஒரே பெயர் அமையக்கூடும் என்று அவனுக்குத் தோன்றியிருக்கவில்லை.

7

உள்ளே வரலாமா?

ஒரு நேர்கோடு வரைவதற்குள் நான்கு றை மாவை அள்ளிவிட்டாள் சுகன்யா. கால மாவு மொத்தமாகச் சேர்ந்து கொண்டு, ரு கம்பளி நூலைப்போல் கோணலும் ாணலுமாய் இருந்தது.

"ஒரு துளி மாவை எடுத்து, கட்டை விரலுக் ம் ஆள்காட்டி விரலுக்கும் 'மத்தியில் பக்கு மா இடைவெளிவிட்டு, இதோ - இப்படிக் காடு இழுக்கணும்...' வசந்தி சொன்னபோது லபமாய்த்தான் தோன்றியது. அவள் நான்கு ிழைகளைப் பிசிர் இல்லாமல் இழுப்பதைப் ார்க்க அதைவிட சுலபமாய் இருந்தது. ூனால், மாவை எடுத்து முயற்சி பண்ண, அது னம் சொன்னபடி கேட்டால்தானே!

"இதெல்லாம் இலேசா வந்துடுமா மன்னி... ணு நாள் சாப்பிடாம தலைகீழா நிக்கணும், தெரியுமா...?" - பக்கத்தில் குந்தி உட்கார்ந்திருந்த வசந்தி, முகத்தை சீரிய லாக்கிச் சொன்ன பாது, அவள் கண் ள் மட்டும் குறும் ாக மின்னின.

ஒரு கணம் கைத்து, அந்த ண்களைப் பார்த் தும் கலகலவென்று சிரித்தாள் கன்யா.

"சிரிச்சுண்டே வாசல்ல உட் ார்ந்துடாதீங்கோ? இரண்டு பேரும்... மணி ஞ்சாச்சு... உள்ளே வந்து விளக்கேத்த வேண் ாமா?"

சுகன்யாவிடமிருந்து கோலமாவை வாங்கி, வள் இழுத்திருந்த மொத்தைக் கோட்டைச் ற்றியே அழகாக ஒரு புதிய வடிவத்தை உரு ாக்கி விட்டாள் வசந்தி.

சுகி அதை வியந்து முடிப்பதற்குள் உள்ளே டலிபோன் ஒலித்தது.

"ஸ்ரீராமாக இருக்குமோ?" நினைத்தபடியே சந்தி பின் தொடர எழுந்து உள்ளே பானாள் சுகன்யா.

மாமியார் போன் எடுத்துப் பேசிக் கொண்டிருந்தார்.

"சரி... பார்த்து, ஜாக்கிரதையா வா..." போனை வைக்கப்பட்டது.

"ஸ்ரீராம்தான் பேசினான். வர நாழியாகுமாம்.... காத்திருக்க வேண்டாம்னான்... அவங்கிட்டே மாத்துச் சாவி இருக்கு...."

- பொது அறிவிப்பாகச் சொல்லிவிட்டுப் போய் விட்டாள் சரஸ்வதி.

சுகன்யாவுக்கு ஏமாற்றத்துடன் இலேசான கோபம் வந்தது.

'ஸ்ரீராமுக்குத் தன்னைக் கூப்பிட்டுப் பேசத் தோன்றவில்லையே.... ஆபீஸுக்கு மீண்டும் போன் செய்யலாமா? வேண்டாம்; வரட்டும்... நேரில் பேசிக் கொள்ளலாம்.'

கல்யாணமாகி ஒரு வாரம் ஓடிவிட்டது. இரண்டாம் நாளே வேலையில் சேர்ந்து விட்டான் ஸ்ரீராம். முக்கியமான கன்ட்ராக்ட்களை முடிக்க வேண்டிய நெருக்கடியான காலகட்டம் அவனுக்கு என்பது சுகன்யாவுக்குத் தெரியும்.

'இருந்தாலும் 'சுகி' என்று ஒரு வார்த்தை போனில் அவன் பேசியிருக்கலாம். அவனுக்குத்தான் தோன்றவில்லையென்றால் அவன் அம்மாவுக்காவது தோன்றாதோ... அவரிடத்தில் நான் இருந்தால், 'இரு உன் பெண்டாட்டியிடம் பேசு' என்று பேரனைக் கொடுத்திருப்பேனே... பெண் மனசு இன்னொரு பெண்ணுக்குப் புரியாதோ...'

- சிந்தனை ஓட ஓட... சுகன்யாவைத் தனிமையுணர்வு வந்து சூழ்ந்து கொண்டது.. முகம் அலம்பி அதைத் துடைத்துப் போட முயன்று, வெற்றி பெறாமலே தன் துணிகளைப் பிரித்துப் போடலானாள் சுகன்யா.

"மன்னி.... இந்தாங்கோ பூ...." வசந்தியின் புன்னகையும் நித்தியமல்லியின் நறுமணமும் சேர்ந்து ஆறுதல் தந்தன.

"என்ன பண்ணிட்டிருக்கீங்க..." குவியலுக்கு மத்தியிலிருந்தவளை வசந்தி கேட்டாள்.

இந்திரா சௌந்தர்ராஜன் ?



"என்ன செய்யறதுன்னே புரியலை... எங்கிட்டே இருக்கிற முக்கால்வாசி பிளவுஸ் ஸ்லீவ்லெஸ்ஸா இருக்கு... நைட் டிரெஸ்ஸும் அப்படியே... தனியா துணியை வாங்கி ஒட்டுப் போட்டுக்கலாமான்னு பார்க்கறேன்..."

வசந்தி சிரித்துவிட்டுக் கேட்டாள். "ஏன் மன்னி? உங்களுக்கு இப்படி கையில்லாம பிளவுஸ் போட்டுக்கலாமனா கூச்சமாயிருக்காது...?"

"இல்லையே... கொஞ்சம்கூட கூச்சமா யில்லை... என்ன கூச்சமாம்...?"

வசந்தி ஆச்சர்யப் பார்வை பார்த்தாள்.

"அப்படின்னா இப்பவும் நீங்க இந்த ஸ்லீ
லெஸ்ஸையெல்லாம் போட்டுக்கத் தயார்
சொல்லுங்க..." - சுகன்யாவின் ரவிக்கை ஒன்
ஜாக்கிரதையாக நுனிவிரலால் எடுத்
கேட்டாள்.

"நோ, இந்த வீட்டுக்கு வந்தப்புறம் இனிமே
இதெல்லாம் போட்டுக்கறதில்லைன்னு முட
பண்ணிட்டேன்."

"அப்பா, அம்மாவுக்குப் பயந்துதானே
அண்ணா ஒண்ணும் சொல்லமாட்டான்

தங்க நகை பரிசு!

இன்னும் 19 வாரங்கள் வெளிவரப் போகிற இந்தத் தொடர்கதை, வாராவாரம் ஓர் எழுத்தாளரின் பெயரில் வெளியாகும். ஆனால் முழுக் கதையையும் எழுதுபவர் ஒரே எழுத்தாளர்தான்! யார் அவர்?

வாரா வாரம் படித்து, யூகித்துக் கொண்டே இருங்கள். கடைசி வார அத்தியாயத்துடன் வெளியாகப் போகிற கூப்பனில், 'தொடரை எழுதியவர் யார்?' என்கிற உங்கள் யூகத்தை எழுதி அனுப்புங்கள்.

உங்கள் யூகம் சரியானதாக இருந்தால் உங்களுக்குத்தான் மின்னும் தங்க நகை பரிசு!

பலர் சரியான விடை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் ஓர் அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

தெரியும்..."

"பயமில்லை வசந்தி இது... இங்க எனக்கு 'அக்ஸப்டன்ஸ்' கிடைக்குமான்னு தேடற முயற்சி..."

- வசந்திக்கு இது முழுவதுமாகப் புரிந்ததோ இல்லையோ... சற்று மௌனமானாள்.

"உனக்குக் கல்யாணமாகிற சமயத்துல நான் சொல்றது புரியும்."

வசந்தி அப்படியே முகம் சிவந்து போனாள்.

"என்னது இது; இப்பவே மணவறையிலே நிக்க வைச்ச மாதிரி வெட்கப்படறே?"

"சும்மாயிருங்கோ மன்னி, நீங்க இன்னும் பூவே வைச்சுக்கலையே நான் வைச்சு விடட்டுமா?"

"ப்ளீஸ்..." என்று சுகி அவளுக்குப் பின்னந் தலையைக் காட்ட, "இப்படி கிழக்கு முகமா நில்லுங்கோ..." என்று சுகன்யாவைத் திருப்பி நிறுத்தி, மல்லிச் சரத்தை அழகாக மடித்துச் சூட்டினாள் வசந்தி.

"வலிக்கலையே...?" என்று கேட்டபடியே தலை முடியில் அவள் பூவைச் செருகிய பரிவு சுகன்யாவைத் தாக்கியது.

"இல்லை... வலிக்கலை...?" என்றாள் அடங்கிய குரலில்.

"கல்யாணத்துக்கு வந்த ரவிக்கைத் துணியெல்லாம் இருக்குமே மன்னி... அதோட ஒரே ஒரு அளவு ரவிக்கை - கை வைச்சது - குடுங்கோ. பக்கத்துத் தெருவிலே சுபத்ரா தைச்சுத் தருவா..."

"ஆகட்டும் எடுத்து வைக்கிறேன்."

ஸ்ரீராமின் கார் சப்தம் கேட்டு விழிப்புத் தட்டியது. கலைந்திருந்த புடைவைத் தலைப்பை அள்ளிப் போட்டுக் கொண்டு போய்க் கதவைத் திறந்தாள் சுகன்யா. வீடு தூங்கிக் கொண்டிருந்தது.

"ஏன் எங்கிட்டே பேசலை...?"

ப்ரீஃப் கேஸை உள்ளே பெட்ரூமில் வைக்கச் சென்றவனைப் பின் தொடர்ந்தபடியே கேட்டாள்:

"ஒரே வேலை... விஷயத்தை அம்மாகிட்டே சொல்லிட்டமேன்னு வைச்சுட்டேன்...."

"எங்கிட்டே பேசணும்னு உனக்குத் தோணலை இல்லை....?"

- குரல் நடுங்கிய சுகன்யா ஸ்ரீராமுக்குப் புதுசாய்த் தெரிந்தாள்.

"என்ன ஆச்சு? ஆர் யூ ஓ.கே...?" என்று - தோளில் கை வைத்துக் கேட்டான்.

"போய்க் குளிச்சுட்டு சாப்பிட வா...." தோளிலிருந்து அவன் கை விலக்கிச் சொன்னாள்.

"அஞ்சு நிமிஷத்துல வரேன்...."

ஆறாவது நிமிடம் சாப்பாட்டு மேஜையருகே உட்கார்ந்தான். பக்கத்தில் உட்கார்ந்தபடி பரிமாற ஆயத்தம் செய்தாள் சுகன்யா.

சாதத்தைப் பிசைந்தபடி இடது கரத்தை நீட்டினான். "கை குடு... நாளைக்கு சண்டே ஆபீஸ் போகாம இருக்கணுமேன்னு இன்னிக்கு எல்லாத்தையும் முடிச்சுட்டு வரேன். நாளைக்கு முழுக்க உன்னோடதான்."

அவளும் இடது கை நீட்ட, அதைப் பற்றி, பொத்திக் கொண்டே சாப்பிட்டான்.

"எப்படியெல்லாம் சின்ன குழந்தை மாதிரி என்னைச் சமாதானம் பண்ண வேண்டியிருக்கு இல்ல?" நிதானத்துக்கு வந்து கேட்டாள்.



"அவுங்க உறவு முறிந்ததுல உங்களுக்கு என்ன சந்தோஷம்?"
"ஒரு ஜோக் எழுத்தாளரைப் பார்த்து கேட்கிற கேள்வியா இது? ஒரு பத்து ஜோக்காவது இதை வச்சு எழுதிட மாட்டேனா...?"
– சீர்காழி வி. ரேவதி

''இதானே ஆரம்பம்... இன்னும் என்னவெல்லாம் பாக்கியிருக்கோ...?''

"சொல்லட்டுமா?"

"வேண்டாம்! Don't spoil the surprises..." சாப்பிட்ட தட்டை அவள் அலம்ப கொல்லைப் புறம் போனபோது கூடச் சென்றான். மேஜையைத் துடைத்து சுத்தம் செய்ய உதவி, "கொஞ்சம் டீவி. பார்க்கலாமா?" என்றபோது, "வேண்டாம்! பேசணும்..." என்றாள்.

பார்வையில் கேள்விக்குறி தேக்கி படுக்கையறைக்கு அவளைப் பின் தொடர்ந்தான். கதவைச் சாத்தித் தாழிட்டு விட்டு கட்டிலில் உட்கார்ந்தாள்.

"சொல்லு..." தலையணையில் சாய்ந்தபடி கேட்டான்.

''எனக்கு ஒண்ணுமே புரியலை இந்த வீட்டுலே... தட்டு கழுவறதிலேருந்து தேங்காய் துருவறது வரை எல்லாத்துக்கும் ஒரு சாஸ்திரமோ, சட்டமோ இருக்கு... கேட்காம செஞ்சா தப்பாயிடுது. கேட்டுச் செய்யலாம்னா இது கூடத் தெரியலையான்ற மாதிரி ஒரு பார்வை வருது... ஒரு 'ரூல் புக்' மாதிரி எல்லாத்தையும் எழுதிக் கொடுத்துடுன்னு கூட வசந்திகிட்டே சொல்லிப் பார்த்தேன்... நடக்கலை...''

''ம்...''

''நீயாவது எனக்கு எல்லாத்தையும் சொல்லிக் கொடு ஸ்ரீராம்...''

''சரி சொல்றேன். ரூல் நம்பர் ஒன். அஞ்சரை மணிக்கே காலைல எழுந்துடணும். அப்புறம் பல்தேய்க்காமல் கிச்சனுக்குள்ளே போகக் கூடாது. குளிக்கறதுக்கு முந்தி பூஜையறைப் பக்கம் போகக் கூடாது. குளிச்சால்தான் சமையல் செய்யலாம். சமையலை ஆரம்பிக்கறதுக்கு முந்தி வாசலில் கோலம் போடணும். சமையலறையிலயும் அன்னன்னைக்குச் சமைக்கற பண்டங்களை, நாள்பட வைக்கக்கூடிய பண்டங்களோட சேர்க்கக் கூடாது. 'பத்து, பத்து'ங்கறது இதுதான்! நல்ல பண்டங்கள் கெட்டுப் போயிடக் கூடாதேங்கற ஜாக்கிறதை உணர்வுனால் ஏற்பட்ட விதி... ஃப்ரிட்ஜ் இல்லாத நாட்களில் ஏற்படுத்தினது...''

"ஆனா, இப்போதான் ஃப்ரிட்ஜ் இருக்கே... நாம அதையும் வேற வசதிகளையும் வைச்சுக்கிட்டு இல்ல இவ்வளவு ரூல்ஸோட கஷ்டப்பட றோம்!"

"ரொம்ப முக்கியமான ஒரு ரூல் சொல்றேன்... ஆனா அது உனக்குப் பிடிக்காம கூட இருக்கும்..."

"என்ன?"

"உன்னை மாதிரி பெண்கள், அதுவும் புது மருமகப் பெண்கள், இந்த மாதிரி தர்க்க ரீதியாவெல்லாம் யோசிக்கக் கூடாது. யோசிச்சா விடை கிடைக்காது. கஷ்டம்தான் அதிகமாகும்...."

"அதுக்காக மூளையையும் சிந்தனையையும் கழட்டி வைச்சுடவா முடியும்... அது பாட்டுக்கு யோசனை ஓடத்தான் செய்யும்... ஆனா ஆதாரமான விஷயம் புரியுது... தர்க்க ரீதியில் ஒரு காலத்துல ஏற்பட்ட விதிகள் இப்ப உணர்வு ரீதியா வாழ்க்கைல கலந்து போயிடுத்து... அதனால அந்த உணர்வுகளை மதிச்சாகணும்."

"இப்ப குரு யாரு, சிஷ்யர் யாருன்னே புரியலையே..."

"இந்த வீட்ல இருக்கிற வரைக்கும் நீதான் குரு மிஸ்டர் ஸ்ரீராம்!"

''அப்படியானால், மிஸஸ் சுகன்யா... இதோ இன்னும் சில விதிகளைச் சொல்கிறேன்...''

உபதேசம் கேட்கும் போலி பாவனையில் அவள் தலையைத் தாழ்த்தி, மடக்கிய இடக்கை மேல் வலக்கை பிடித்து வாய் பொத்தினாள்.

தலையணையிலிருந்து நிமிர்ந்து முன்னுக்கு வந்தான் ஸ்ரீராம்.

"இந்தத் தலையிலே எப்போதும் பூ இருக்கணும்'' - அவன் வலக்கரம் அவள் பின் தலையை வருடியது.

"இந்த நெற்றியிலே எப்போதும் குங்குமம் இருக்கணும்'' - அவன் இடதுகை அவள் முகத்தை நிமிர்த்த, இதழ்கள் புருவங்களுக்கிடையே பதிந்தன.

"இந்தக் கழுத்தில் எப்போதும் தாலிச் சரடு இருக்கணும்''. அவன் இரு விரல்கள் மட்டும் அவள் வெண் கழுத்தை வருடின.

''இந்த நெஞ்சு எப்பவும் சந்தோஷத்தையே சுமக்கணும்....''

இறங்கத் தயங்கி நின்ற அவன் கரங்களைப் பற்றி வழிகாட்டலானாள் சுகன்யா.

(தொடரும்)



கல்லூரி மாணவிகள் நடித்த படம்; ஜனாதிபதி பாராட்டிய படம்!

"ஹா‌ய்யோ! இட் வாஸ் ஸோ எக்ஸைட்டிங்!" என்றார் ரீனா.

"அந்த ஷூட்டிங் அனுபவத்தை ஆயுசு முழுக்க மறக்க முடியாது!" என்றார் தீபாலட்சுமி.

"ரெண்டு நாள்... வந்ததும் தெரியலை. போனதும் தெரியலை. கனவு மாதிரி இருக்கு!" என்றார் ருசிதா சிங்.

வாய் ஓயவில்லை. கார்த்திகாயினி, மல்லிகா மேனன், பூஜா, நித்யா என்று ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரியின் ஹிந்தித் துறைப் பெண்கள் அத்தனை பேரும் புல்லரித்துப் போயிருக்கிறார்கள்.

என்ன விஷயம்?

அவர்கள் ஈடுபட்ட ஒரு செயல் பற்றி, ஜனாதிபதி சங்கர்தயாள் சர்மா, தில்லிக்குக் கூப்பிட்டுப் பாராட்டியிருக்கிறார்.

செயல் - பொது இடங்களில் தடவாமல் இந்தி பேசுவது எப்படி என்கிற ஒன்றரை மணி நேர வீடியோ கேஸட் தயாரித்திருப்பது. செலவு - சுமார் இரண்டுலட்ச ரூபாய்!

ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரியின் ஹிந்தி துறைத் தலைவர் மதுதாவன் ஒரு பஞ்சாபி. சென்னைக்கு வந்த புதிதில் தமிழுக்கு ரொம்பவே தடவியிருக்கிறார். (இப்போ கொஞ்சம் கொஞ்சம் பேஸ்றா்.) தம்மைப் போல்தானே, வடநாடு செல்லும் தென்னிந்தியர்கள் மொழி புரியாமல் தவிப்பார்கள்! இதற்கு ஏதாவது செய்யவேண்டும் என்று யோசித்திருக்கிறார்.

விளைவு?

• மாணவிகள் மல்லிகா மேனன், தீபா லட்சுமி, ருசிதா சிங், ரீனா குமாரி, நித்யா, பூஜா...



டாக்டர் குச்ரு, டாக்டர் ஜெயலட்சுமி விஸ்வநாதன் (இவர் மகளிர் வைணவக் கல்லூரியின் இந்தித் துறைக்காரர்), கமலா விஸ்வநாதன் தவிர தம்மையும் சேர்த்து ஒரு குழு ஏற்படுத்தி, ஒரு ஸ்கிரிப்ட் தயாரிக்கத் தொடங்கியிருக்கிறார்.

ரயில்வே ஸ்டேஷன், பஸ் ஸ்டாண்ட், போஸ்ட் ஆபீஸ், ரேஷன் கடை, ஓட்டல், பி.ஸி.ஓ., மருத்துவமனை, பேங்க் இதுமாதிரி நாம் அதிகம் புழங்குகிற பொது இடங்களைப் பட்டியலிட்டு, தேர்வு செய்து, அங்கே என்னென்ன பேச வேண்டியிருக்கும், எப்படியெல்லாம் கேள்விகள், சந்தேகங்கள் வரக்கூடும் என்பதையும் பட்டியலிட்டு, அவற்றை எளிய ஹிந்தியில் எப்படிக் கேட்பது, பதில் சொல்வதை எப்படிப் புரிந்து கொள்வது என்று பாலபாடமாகச் சொல்கிறது அந்த ஸ்கிரிப்ட்.

இதை அடிப்படையாக வைத்து, ஒவ்வொரு இடத்திலும் நடைபெறுகிற சிறு சிறு சம்பவங்களைக் - கதை போலவே காட்சிகள் அமைத்து, கல்லூரி மாணவிகளையே நடிக்க வைத்துப் பாடமாக்கியிருக்கிறார்கள்.

முதல் வரியில் மாணவிகள் உணர்ச்சிவசப்பட்டிருப்பது இது பற்றித்தான்.

'நமக்குப் பிடிக்கிறதோ, இல்லையோ, வெளிமாநிலங்களுக்குப் போனால் ஹிந்தி இல்லாமல் பிழைக்க முடியாது என்கிற நிலை உருவாகி விட்டது. இலக்கண சுத்தமாக அ, ஆ விலிருந்து ஆரம்பித்துப் படிக்கிற பொறுமையெல்லாம் இப்போது யாருக்கு இருக்கிறது? இது மாதிரி ஸ்போக்கன் ஹிந்தி கேஸட்டுகள்தான் இனி ஒரே புகலிடம்" என்றார் பேராசிரியர் ஜெயலட்சுமி.

இந்த பிராஜக்டில் இந்தி - ஆங்கில - தமிழ் மொழித் தொடர்பாளராக இவர் ஆற்றியிருக்கிற பணி அதிகம்.

"நாங்கள் எங்கள் ஷூட்டிங்கைப் பொது இடங்களில் வைத்திருந்தோம். ரயில்வே ஸ்டேஷனில் நடக்கிற சம்பவமா - சென்ட்ரலுக்குப் போனோம். போஸ்ட் ஆபீஸா - ஒரு போஸ்ட் ஆபீஸில் பேசி அனுமதி பெற்று அங்கே ஒ காட்சி வைத்தோம். பாங்க் என்றால் பாங் பஸ் ஸ்டாண்ட் என்றால் நிஜமாகவே பஸ் ஸ்டாண்டுகளுக்குப் போய் படப்பிடிப்பு நடத்தினோம்! இதனால் ஆர்வமுடன் கூடி விடுகிற பொதுமக்களைச் சமாளிப்பதே ஒ அனுபவமாக இருந்தது" என்கிறார் இவர்.



• சர்மாஜியிடம் பாராட்டுப் பெறுகிறார்கள், டைரக்டரும் மற்ற ஆசிரியைகளும்....

மதுதாவன் ஒரு ரசமான சம்பவம் சொன்னார். ரயில்வே ஸ்டேஷனில் கூலிக அதிக பணம் கேட்டு பேரம் செய்தால் எப்படி சமாளித்து வழிக்குக் கொண்டு வருவது என்றொரு காட்சி, படத்தில். இதைப் படமாக்கிக் கொண்டிருந்த போது சில நிஜ ரயில்வே கூலிகள் சண்டைக்கு வந்து விட்டார்களாம்! 'எங்களைப் பற்றி



''என் கணவருக்கு ரொம்ப பொல்லாத நேரம்.''

''எப்படிச் சொல்ற...?''

''கட்–அவுட் தயாரிக்கிற பிசினஸ் ஆரம்பிக்க இப்ப பேங்க் லோன் சாங்ஷன் ஆகியிருக்கு!''

– தேனி எஸ். மாரியப்பா

இப்படியெல்லாம் சொல்கிறீர்களே' என்று அழாத குறையாக அவர்கள் புலம்ப, சமாளிக்க வெகு சிரமப்பட்டிருக்கிறார்கள்.

மதுதாவன் சொன்ன மற்றொரு விஷயம் – "சும்மா ஷூட்டிங் பார்த்துக் கொண்டிருந்தவர்களே, முடிந்ததும் ஓரிரு ஹிந்தி வார்த்தைகள் பேச ஆரம்பித்து விட்டார்கள்!"

ஜனாதிபதி சங்கர்தயாள் சர்மாவுக்கு ஒரு சாம்பிள் கேஸட் அனுப்பிவிட்டு இவர்கள் அந்த விஷயத்தையே மறந்து விட்டிருந்த நிலையில் அவரிடமிருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது. "உங்கள் கேஸட் பார்த்தேன். உங்களை நேரில் சந்திக்க விரும்புகிறேன்!" என்று. ஒதுக்கப்பட்டிருந்த அரைமணி நேரத்தில் ஜனாதிபதியைச் சந்தித்து வந்த அனுபவம் பற்றி உணர்ச்சிபொங்கக் குறிப்பிடுகிறார்கள், இப் பேராசிரியர்கள். (சர்மா ரூமில் ஒரு பாரதியார் படமும் முப்பது கோடி முகமுடையாள் வரிகளும் பிரும்மாண்ட சைஸில் இருக்கின்றனவாம்.)

"உங்கள் கேஸட் பார்த்தேன். மிக அற்புதமாக வந்திருக்கிறது. நீங்கள் ஏன் பிற மொழிகளிலும் இதைச் செய்யக் கூடாது?" என்று உற்சாகமூட்டிக் கேட்டிருக்கிறார் சர்மாஜி.

இந்த கேஸட், இந்தி – ஆங்கிலம் வாயிலாக. இப்போது தமிழ் வாயிலாக இந்திக்கான இதே கேஸட்டின் டப்பிங் பணி நடந்து கொண்டிருக்கிறது.

எல்லாம் சரி. யார் இத்தனை அக்கறையாக இந்தி கற்க வீடியோ கேஸட் வாங்கிப் பார்க்கப் போகிறார்கள் என்று கேட்டால், "இப்போதே பள்ளி, கல்லூரிகள், வங்கிகளிலிருப்போரிடமிருந்தெல்லாம் ஆர்டர்கள் வரத் தொடங்கி விட்டன!" என்றார் பேராசிரியர் மதுதாவன். தவிர வியாபார ரீதியில் யூ.ஜி.சி.யின் உதவியையும் நாடியிருக்கிறார்கள்.

"தயாரிப்புச் செலவுதான் மிக அதிகமாக இருக்கிறது. சேவையாக நாங்கள் செய்யும் இத்தகைய காரியங்களுக்கு அரசாங்கம் உதவினால் நன்றாக இருக்கும்" என்கிறார்கள்.

"நீங்கள் சர்மாவிடமே ஒரு வேண்டுகோள் வைத்திருக்கலாமே?"

வைத்திருக்கிறார்கள்.

"அரசுத் தரப்பிலிருந்து ஏதாவது உதவி கிடைக்க நிச்சயம் வழிசெய்கிறேன்" என்று உறுதியளித்திருக்கிறாராம் சர்மாஜி.

- ஔரங்கசீப்

வண்ணப் படங்கள் : **சாய்வர்ஷா**

ஜாலி போட்டி - 4 முடிவு

'தலைவர்களைத் தெரிகிறதா?' என்று கேட்டு, பத்து தலைவர்களின் முகங்களைக் கார்ட்டூனில் தந்திருந்தோம். பலர் சரியாகக் கண்டுபிடித்து விட்டார்கள். எனவே குலுக்கல் முறையில் ஒருவரைத் தேர்வு செய்தோம்.

ரூ. 5000/- பரிசு பெறும் அந்த அதிர்ஷ்டசாலி:

வி. ஜெயலட்சுமி,
25, விவேகானந்தபுரம் முதல் தெரு,
மேற்குமாம்பலம், சென்னை - 600 033.

வாழ்த்துக்கள்!

<u>சரியான விடைகள்:</u>

1. லல்லுபிரசாத் யாதவ்,
2. கருணாகரன்,
3. கன்ஷிராம்,
4. ஹெக்டே,
5. வாழப்பாடி ராமமூர்த்தி,
6. வாஜ்பாயி,
7. மாயாவதி,
8. ஷரத்பவார்,
9. நெடுஞ்செழியன்,
10. பி.ஏ. சங்மா.


‘ஆமாம்’ என்று சொல்லிவிட்டு உடனே பிரதீப் நாக்கைக் கடித்துக் கொண்டதை சப்–இன்ஸ்பெக்டர் மதிவாணன் கவனித்து...
கடலோரக் கொலைகள்
கதை:
பெனிட்டோ குமார்
படம் :
சசி
7
என்ன சத்தம்? இரவு எத்தனை மணிக்கு? எத்தனைபேர்?
ராத்திரி ஒண்ணே முக்கால் இருக்கும். ரெண்டு பேர் பேச்சுக்குரல். தூக்கம் கண்ணைச் சுழற்றிய சமயம். யாருன்னு பார்க்கலை.
மதிவாணனை வழி அனுப்பி வைத்துவிட்டுத் திரும்பி வந்த நாகராஜன்...
ராத்திரி ஒரு சத்தமும் கேட்கலையே... எதுக்குப் பொய் சொன்னே?
நம்மை காப்பாத்திக்கத்தான்!
யோசி! பல வருஷங்களா இந்த ஊர் அமைதிப் பூங்கா. நாம வரோம், கொலை விழுது! அதுவும் நம்ம வீட்டிலே வேலைக்கு அமர்த்திய ஆள். ஊராருக்கு நம்ம பேர்லதானே சந்தேகம் வரும். அதனால இது கவனம் திருப்பும் முயற்சி.
மறுநாள்...
இன்னிக்கு பேட்டிக்குப் போக வேண்டாம். பிரதீப்! பயமா இருக்கு!
பயந்தால் ஒரு காரியமும் நடக்காது. நாம இன்னும் நாலைந்து நாள்ல கிராமத்தைக் காலி பண்ணியாகணும்.


மாலையில்.... மதி, தாம் நடத்திய விசாரணை பற்றி இன்ஸ்பெக்டர் கோபியிடம் கூற...
பரமகுரு உயிர் பிரிந்தது மூணு மணிக்கு... போஸ்ட் மார்ட்டம் கூறுது. ஒண்ணே முக்காலுக்கு ஆளரவம்னா பொருந்துது...
ஆனா அவங்க யாருன்னு தெரியலையே... அது சரி, இன்னிக்கிக் கூட பேட்டி எடுத்தாங்களாமே...?
விசாரிச்சேன், அதிலேயெல்லாம் தப்பா ஒண்ணும் தோணலை.
தொண்டிகுப்பத்துல இன்னும் சாராயம் வடிக்கிறாங்களா? அதுக்கும் இந்த குடிகாரன் பரமகுருவோட கொலைக்கும் ஏதாவது சம்பந்தம்...?
செக் பண்றேன், சார்!
அன்றிரவு, பண்ணை வீட்டின் சொந்தக்காரர் கிருஷ்ணமூர்த்தி வந்து...
நந்து! நீ இங்கதான் இருக்கியா? பின்கட்டிலே ஒரு மண்வெட்டி வைச்சிருந்தேன். அவசரமா தேவைப்படுது.. எடுத்துப் போறேன்.
ஓ!
கொல்லைப்புறம்...
அது சரி, இங்கதானே மண்வெட்டி வைச்சிருந்தேன் எங்க காணும்?
இவர் பிரதீப்; இவர் நாகராஜ்
இருவரும் விழிக்க, நந்துவுக்குக் குழப்பம்.
(தொடரும்)

பாலம்



●● சைவ உணவின் மகத்துவம் பற்றி சென்னை, மகாவீர் சங்கத்தின் இலவச வெளியீடு இருக்குமானால் அனுப்பித் தரவும். அஞ்சல் செலவை ஏற்கிறேன்.

-எஸ். வேலுச்சாமி,
48, நேதாஜி ரோடு,
பொள்ளாச்சி - 642 001.

●● சாக்ஸஃபோன் கற்றுக் கொள்ள ரொம்ப ஆசை. யார் கற்றுத் தருவார்கள்? விவரம் தந்து உதவும்படி வேண்டுகிறேன்.

-என். ராதாகிருஷ்ணன்,
13/3. சீனிவாச ரெட்டி தெரு,
தி.நகர், சென்னை - 17.

●● சித்தர் பாடல்கள், மருத்துவம், ஆன்மீகம் பற்றிய பழைய ஓலைச்சுவடிகள் தேவை. தக்க விலை கொடுத்து வாங்கிக் கொள்கிறேன்.

-டாக்டர் முரளி,
T-55/A, எலியட்ஸ் பீச் ரோடு,
பெசன்ட் நகர்,
சென்னை-90.

●● எங்கள் ஊர் தேர் புதுப்பிக்கப்பட வேண்டும். இதற்கு ஆகம விதிகள் மற்றும் மரச் சிற்ப வேலைப்பாடுகள் தெரிந்த விஸ்வகர்மாக்களை எங்கு, எப்படி தொடர்பு கொள்ளலாம்?

- ஜி.எஸ். நடராஜன்,
14, கிருஷ்ணன் வீதி,
கோபி செட்டிப்பாளையம் 638 452

●● "பீதாம்பரம் அய்யர் ஜாலத் திரட்டு" என்ற புத்தகம் தேவை. நாற்பது ஆண்டுகளுக்கும் முற்பட்டது. விலை கொடுத்துப் பெறத் தயார்.

-எஸ். மேனகா,
26A/1. மோதிலால் தெரு,
கும்பகோணம் 612 001.

●● பத்தாம் வகுப்பு வரை படித்த பெண்கள், டெய்லரிங் கற்றுக்கொள்ள ஆசை இருந்தால் அணுகவும். ஏழைப் பெண்களுக்கு பண உதவியும் செய்து தொழிலும் கற்றுத் தரு

காஷ்மீரின் முன்னாள் முதல்வர் ஃபரூக் அப்துல்லாவின் வாழ்க்கை வரலாறு, "Farooq Abdullah — Kashmir's Prodigal Son" என்ற புத்தகமாய் வெளியாகியுள்ளது. (UBS பப்ளிஷர்ஸ், விலை ரூ. 250/-) அதிலிருந்து சில பகுதிகள் :

காதல், மோதல், கல்யாணம்!

சிறுவன் ஃபரூக்கிற்கு, பள்ளிக் கூடம் போவதைவிட, தால் ஏரிக்குப் போய், ஜாலியாய்ப் படகோட்டிக்கொண்டிருப்பது ரொம்பப் பிடிக்கும். ஆனால், ஃபரூக்கின் நடவடிக்கைகளைக் கண்கொத்திப் பாம்பாய் கவனிக்கிற வீட்டு வேலைக்காரரான அகமது கனியிடம் எப்போதாவது ஃபரூக் மாட்டிக் கொண்டு விடுவான்! அப்படியே குண்டுக் கட்டாய், ஃபரூக்கையும், அவன் நண்பர்களையும் பள்ளிக் கூடத்தில் கொண்டு தள்ளி விடுவார் கனி. பள்ளிக் கூடத்தில் படிக்கும் போது, அவனுக்குப் பிடித்த விஷயம், மலைப் பகுதிகளில் உறைந்து கிடக்கும் பனிக்கட்டிகளை எடுத்துத் தின்பது! அப்புறம், தொண்டை கட்டிக் கொண்டு திணற, அப்பா ஷேக் அப்துல்லாவிடம் அடிவாங்க வேண்டியது. இன்னொரு விஷயம் வீட்டுக்குத் தெரியாமல் சிகரெட் பிடிப்பது. ஒரு நாள், மகன் சிகரெட் பிடிப்பதை, அப்பா பார்த்துவிட, அன்று வீட்டில் மண்டகப்படிதான்! பள்ளிக் கூடப் பையன் சிகரெட் பிடிக்கலாமா என்று மகனைக் கண்டித்த அப்பா ஷேக் அப்துல்லாவே புகைக் கூண்டு போல, ஏப்போதுமே புகைத்துக் கொண்டிருக்கிறவர்தான்!

ஃபரூக், மெட்ரிகுலேஷன் படிப்புக்காக ஸ்ரீநகரில் ஒரு கிறிஸ்தவ மிஷனரி பள்ளியில் சேர்க்கப்பட்டபோது, பள்ளி வாழ்க்கை அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. காரணம், அங்கே படிப்பை விட, விளையாட்டுகளுக்கும், நீச்சல், மலையேற்றம், படகோட்டுதல் போன்றவற்றுக்கும்தான் அதிக முக்கியத்துவம் தரப்பட்டது. ஒருவாரம், இரண்டு வாரம் என்று அவ்வப்போது, மலையேற்ற முகாம்கள் நடக்கும். ஃபரூக் உற்சாகத்துடன் பங்கேற்பான். அந்த முகாம்களில், எந்த பிரச்னையானாலும், சுயமாகவே சமாளிக்க வேண்டும். அடுத்தவர் உதவியை நாடக்கூடாது. அந்த மலையேற்றப் பயிற்சி முகாம்கள், ஃபரூக் பின்னாளில் பெரும் பொறுப்புகளைத் துணிச்சலுடன் ஏற்கும் திறமைக்கு வித்திட்டன எனலாம்.

ஃபரூக்கின் மிக நெருக்கமான பள்ளித் தோழன் கிருஷன் பாகியா ஒரு காஷ்மீர் பண்டிட்டின் மகன். இரண்டு பேரும் லீவு நாட்களில், தால் ஏரிக்குப் போய் இந்தக் கரையிலிருந்து புறப்பட்டு, யார் முதலில் அக்கரைக்குப் போகிறார்கள் என்று பந்தயம் கட்டி நீந்துவார்கள். பிற்காலத்தில் ஃபரூக் அரசியலுக்கு வர, கிருஷன், ராணுவத்தில் சேர்ந்து, காஷ்மீருக்கே 1990ல் தீவிரவாதத்தை ஒடுக்க அனுப்பப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது! பள்ளி நாள் தோழர்களில் நெருக்கமான இன்னொருவர் ஷேக் ஜாவீத். இவர்களது நட்பின் ஆழம், பின்னாளில், ஷேக் ஜாவீத் இறந்த பிறகு, அவரது மனைவியையும், ஃபரூக்கையும் இணைத்து, அவரது அரசியல் எதிரிகள் திரித்துப் பேசும் அளவுக்குப் போனது. (ஃபரூக் இது பற்றி ரொம்ப அலட்டிக் கொள்ளவில்லை.)

பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு, பிரபலமான ஸ்ரீபிரதாப் கல்லூரியில் சேர விண்ணப்பித்துவிட்டு, ரிசல்ட்டுக்காகக் காத்திருந்தார் ஃபரூக். ரிசல்ட், அன்றைய தினம் காஷ்மீர் ரேடியோவில் மாலை 5 மணிக்கு அறிவிக்கப்படுவதாய் இருந்தது. ஃபரூக்கும் அவருடைய பெரியப்பா பையனும் டென்ஷனுடன் காத்திருந்தார்கள்.

மதியம் ஷேக் அப்துல்லா சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வந்தார். அவர் கையில் ஒரு சீல் இடப்பட்ட கவர். அதில் கல்லூரித் தேர்வுப் பட்டியல் இருந்தது. (பல்கலைக்கழக இணை வேந்தர் என்ற முறையில் ஷேக் அப்துல்லாவுக்கு அட்மிஷன் பட்டியல் ஒரு பிரதி தரப் பட்டிருந்தது)

ஆவலுடன் மாணவர் ஃபரூக் அந்த கவரை எடுக்கப் போனபோது, பளீர் என்று ஒரு அடி கொடுத்தார் ஷேக் அப்துல்லா!

"கவர் மீது என்ன எழுதியிருக்கிறது?"

"மாலை 5 மணிக்கு முன் திறக்கக் கூடாது"

"அப்புறம் ஏன் இப்போது திறக்கிறாய்?"


தாம் முன்னதாகவே தெரிந்து கொண்டு விட்டதாய்ப் பெருமைபட்டுக் கொள்ளலாம் என்ற எண்ணம் நிறைவேறாமல் போனதில் ஃபரூக்கிற்கு ஏக வருத்தம்.

மணி ஐந்தாயிற்று.

"வா! கவரைப் பிரித்து ரிசல்ட் பார்க்கலாம்" என்று அப்பா அழைக்க, கோபம் தணி

யாத ஃபரூக், "நான் வரலை போ! ரேடியோவி லேயே கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று கூறி, அப்பாவுக்கு பதிலடி கொடுத்துவிட்ட சந்தோஷத்தில், ரேடியோவை நோக்கி எழுந்து சென்றான். அப்புறம் அடுத்த சில விநாடி களில், மகனைச் சமாதானம் செய்துவிட்டு, ரிசல்ட் கவரைப் பிரிக்க, ஃபரூக் தேர்வாகி யிருந்ததற்காகத் தன் பாராட்டுக்களைத் தெரி வித்தார், ஷேக் அப்துல்லா.

* ஃபரூக் அப்துல்லா



டாக்டர் படிப்பை முடித்தபின், இங்கிலாந்து சென்று, அங்கேயே பிராக்டிஸ் செய்து செட்டிலாக விரும்பிய ஃபரூக்கின் ஆசைக்கு, ஷேக் அப் துல்லா தடை போடவில்லை. நார்ஃபோக்கில் ஒரு ஆஸ்பத்திரியில் ஃபரூக் அப்துல்லாவுக்கு வேலை கிடைத்து. அதே மருத்துவமனையில் நர்ஸ் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த பெண்களில், மோளி பிரிட்சரும் ஒருவர். நடுத்தரக் குடும்பத்துப் பெண். அவரைப் பார்த்தவுடன், ஃபரூக்கிற்கு ஓர் இனம் புரியாத உணர்வு. மோளி சிகரெட் பிடிக்காத, மது அருந்தாத ஒரு பிரிட்டிஷ் பெண் என்று அறிந்ததும், மோளி மீது ஃபரூக்கிற்குக் காதல் பிறந்தது. முதலில் மோளி, ஃபரூக்கைக் கண்டு கொள்ளவே இல்லை. மணந்தால், மோளி யைத்தான் மணப்பது என்று தீர்மானித்து விட்ட ஃபரூக், மெள்ள மோளியுடன் பழக ஆரம்பித்து, சீக்கிரமே நெருக்கமாகி விட்டார்.

குடும்பத்துடன் பிக்னிக் போன சமயம், தம் காதலைப் பற்றி தம் பெற்றோரிடம் சொன் னார் மோளி. அதைத் தொடர்ந்து ஃபரூக் மோளியின் பெற்றோரைச் சந்தித்துப் பேசி னார். அவர்கள் திருமணத்துக்குச் சம் மதிக்க வில்லை.

தலாக் சொல்லி, விவாகரத்து செய்ய மாட்டேன் என் றெல்லாம் வாக்குக் கொடுத்து சம்மதம் பெற வேண்டியிருந்தது.

மோளியின் வீட்டில் சம்மதம் பெற்று விட் டாலும், ஃபரூக் பக்கத்தி லும் ஒப்புதல் வேண்டுமே! அது அத்தனை சுலப மில்லை. காரணம், இங்கி லாந்து புறப்படுமுன்பே, உறவுக்காரப் பெண் ஒருத் தியை ஃபரூக்கிற்கு முடிவு செய்து, நிச்சயதார்த்தமும் முடிந்து விட்டது!

ஃபரூக், தம் அப்பாவுக்கு டெலிபோனில் விஷயத்தைச் சொன்னவுடன், கோபத்தின் உச்சிக்குப் போய்விட்டார் ஷேக் அப்துல்லா.

"நீயே உன் மாமாவுக்கும் போன் செய்து, நிச்சயித்தபடி அவர் பெண்ணை மணக்கப் போவ தில்லை என்று சொல்லிவிடு. நான் இதில் தலையிட மாட்டேன்" என் றார் கடுமையாக.

ஃபரூக்கிற்கோ அந்தக் குடும்பத் தாரிடம் பேச தைரியம் வரவில்லை. சில நாட்கள் கழித்து, விஷயம் கேள்விப்பட்டு, நிச்சயித்த பெண்ணின் அண்ணனே, ஃபரூக்கிற்கு போன் செய்து விசாரிக்க, இவர் ஏதோ சொல்லிச் சமாளிக்க, முடிவில் இரண்டு குடும்பத்தாரிடையே மனக்கசப்பு ஏற்பட்டது.

ஒரு வழியாய், இருதரப்பு ஒப்புதலும் கிடைக்க, ஃபரூக்கும் மோளியும் 1969 செப்டம்பர் பதினாலாம் தேதி இந்தியா வந்தனர். ஸ்ரீநகரில் நிக்கா நடந்தது!

தொகுப்பு : **எஸ். சந்திரமௌலி**

பதிவுத் தபாலில் எனக்கு வந்திருந்த அந்தக் கடிதத்தைப் பார்த்து சிறிது அதிசயப்பட்டேன். பின்பக்கம் திருப்பிப் பார்த்து முகவரி முழுமையாய் இல்லாதது கண்டு ஆச்சரியப் பட்டேன். உள்ளே பிரித்துப் பார்த்தபோது மதுரையிலிருந்து வந்த கடிதம் என்றறிந்தவுடன் சிறிது அவசரப்பட்டேன். கடிதத்தை அனுப்பியவர் பெயர் முஸ்தபா என்று தெரிந்தவுடன் திடுக்கிட்டேன். கடிதத்தை முழுவதுமாய் படித்து முடித்தபோது மூர்ச்சையாகிப் போனேன்.

"ஐயா'' என்று ஆரம்பித்து, தான் பிரபு என்பவனுடைய நண்பனென்றும், அந்தப் பிரபு, ப்ரியா என்ற பெண்ணை உயிருக்குயிராய் காதலிப்பதாயும், அவர்கள் காதலை இருவர் வீட்டிலும் எதிர்ப்பதாயும், அதற்குக் காரணம் ஜாதி வித்தியாசம் மட்டுமே என்பதாயும், அந்த ப்ரியா என்ற பெண்ணைத் தான், நான் எனது தம்பிக்காகப் பெண் பார்க்கச் சென்றதாயும், ஒரு வாரத்தில் தகவல் சொல்கிறேன் என்று சொன்ன நான் தயவுபண்ணி எதிர்மறைத் தகவல் தர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு மூன்று பக்கக் கடிதத்தை முடித்திருந்தான் முஸ்தபா.



ப்ரியா கொள்ளை அழகு. பத்தொன்பது வயதே நிரம்பிய பதுமை. விஜய்பூரில் கேஸ் அத்தாரிட்டியில் வேலை பார்க்கும் என் தம்பிக்கு அவளைப் பெண் பார்க்கச் சென்றிருந்தோம். பெண் வீட்டார் நன்றாகவே உபசரித்து

நளினமாய்ப் பழகினார்கள். என் மனைவிக்கு இருபது பவுன் போட்டதால், சின்னவனுக்கும் அதற்குக் குறையாமல் செய்வதோடு ஒரு வைரத்தோடும் போட வேண்டும் என்று என் அம்மா கேட்டதற்கு முனகாமல் ஒப்புக் கொண்டார்கள். கையில் ரொக்கமாக அதிகம் வேண்டாமென்றும் டிரெஸ்ஸுக்குப் பதினைந்து மட்டும் போதும் என்று நான் சொன்னபோது எச்சில் விழுங்கி விழிகள் வெளிப் பிதுங்க தலையசைத்தார்கள், ஒப்புதலாய். எல்லாம் சுமுகமாக முடிந்தபின் கல்யாணத் தேதியை விரைவில் வைக்கச் சொல்லிவிட்டு ப்ரியாவுடன் டூயட் பாடிக் கொண்டே விஜய்பூருக்குப் பறந்து சென்றான் என் தம்பி.

பெண் பார்க்கச் சென்ற தினத்தில் ப்ரியாவின் முகத்தில் அப்பியிருந்த சோகக்கீற்று லேசான சந்தேகத்தைத் தந்தாலும் அயலாரைக் காணும் புதுப் பெண்ணின் பயம் என்று சும்மாயிருந்து விட்டேன். ஆனாலும், பத்தொன்பதே வயது நிரம்பிய தங்களது ஒரே பெண்ணை மத்தியப்பிரதேசத்துக்கு அனுப்ப அவர்கள் எப்படி உடனே சம்மதித்தார்கள் என்று என் மாமா என்னைக் கிளறி விட, அதன் நிமித்தம் என் மதுரை நண்பர் சேதுவிடம் அவர்கள் குடும்பம் பற்றி விசாரிக்கச் சொல்லிக் கடிதம் எழுதிவிட்டு, வீட்டில் முடங்கிக் கிடந்தபோதுதான் மதுரை முஸ்தபாவிடமிருந்து இந்தக் கடிதம் வந்தது.

மூன்று பக்கக் கடிதத்தை முழுவதுமாய்ப் படித்து முடித்தபின் முகம் முச்சூடும் "குப்" பென்று வியர்த்தது. கழுத்துப் பட்டை முதல் கணுக்கால் வரை லேசாக ஜுர வாடை வீச ஆரம்பித்தது. மனது பாறாங்கல்லை ஏற்றி வைத்தாற்போல் கனத்தது. அதே சமயம் பஞ்சு மிட்டாய் போல் லேசாகவும் இருந்தது. மண்டைக்குள் அழுத்தம் அதிகரித்தாற்போலிருந்த அதே வேளையில் நெஞ்சுக்குழி வெற்றிடமாயும் ஆகிவிட்டிருந்தது.

படிக்கும் புத்தகங்கள் முதல் பார்க்கும் டீவி., சினிமா வரை எல்லாமே காதல் என்ற சொல்லையும் செயலையும் நியாயப்படுத்தியே பேசுகின்றன. ஆனால் தனக்கும் தன் சுற்றத்துக்கும் என்று வரும்போது அது ஏனோ அநியாயமாய்ப்படுகிறது. அந்த ப்ரியா அந்தப் பையனைக் காதலிப்பதை மனசு வெறுக்கிறது. அந்தக் குடும்பத்தின் மீதே அருவருப்பு கொள்ள வைக்கிறது. அந்தப் பெண் பிள்ளையின் தாய் தந்தையரை துஷ்டர்களாய் மனது நினைக்கிறது. "நல்லவேளை தப்பித்தேன்" என்று குதூகலம் கொள்ள வைக்கிறது.

பலவித எண்ணச் சூறாவளியினூடே ப்ரியாவின் அப்பாவுக்குக் கடிதம் எழுதினேன். என் தம்பிக்கு முன்பே பார்த்த வேறு ஒரு இடத்தை நிச்சயம் செய்து விட்டபடியால்... என்ற என்து கடித வாசகங்களைக் கண்ட சுந்தரராமன் துடிதுடித்திருப்பார். வெண்ணெய் திரண்டபோது தாழி உடைந்ததாய் பரிதவித்திருப்பார்.

சுந்தரராமன் துடித்திருப்பார்... தவித்திருப்பார்... என்று எதிர்பார்த்த நான், இரண்டு நாளில் ஓடி வந்து என் வீட்டுக் கதவைத் தட்டுவார் என்று எதிர்பார்க்கவில்லை. எதிர்பாராதவை நடப்பதுதானே வாழ்வின் சூட்சுமம்?

சிவந்து கிடந்த விழிகளுடனும், எண்ணெய்ப் பசை காய்ந்து போய் காதருகில் சிறிது நரைத்த கேசத்துடனும் என் வீட்டு காலிங்பெல்லை அழுத்தினார் சுந்தரராமன். என்ன வாயிருந்தாலும் வராண்டாவோடு பேசி அனுப்பிடு என்ற என் அம்மாவின் பேச்சை லேசாய் மறுதலித்து, அவரை ஹாலுக்கழைத்து சேரில் அமர்த்தினேன்.

அவரை விட இருபது வருடம் சின்னவனான என்னை ரொம்பவும் மரியாதை கொடுத்தே விளித்தார். நிஜமாலுமே வேறு இடம் நிச்சயிக்கப்பட்டு விட்டதா என்று அறிந்து போக வந்தாராம். உடனே பதில் சொல்லத் தயங்கி, இரண்டு முறை நான் எச்சிலை விழுங்கியவுடன் அவர் உண்மையை யூகித்து விட்டார்.

சிறு குழந்தைகளின் விடலை வயது எண்ணங்களை தயவு செய்து புறக்கணிக்குமாறு வேண்டினார். தன் பெண்ணுக்கு வேண்டிய மட்டும் புத்தி சொல்லி திருத்தி வைத்திருப்பதாய் அழுதார். வேற்று

நந்தன்

ஜாதியில் பெண்ணைக் கொடுத்தால் நாளை முதல் ஊருக்குள் தலைநிமிர்ந்து நடக்க முடியாதென்று உருகினார்.

எனது சராசரி மனது எதற்கும் மசிய வில்லை. வேறொரு ஜாதிப் பையன்... அவன் மீது இவர் பெண்ணுக்குக் காதல்... அவள் திருந்தி விட்டாளாம்... அவளைப் போய் என் தம்பிக்கு... நினைக்கவே குமட்டிக் கொண்டு வந்தது.

அந்தப் பெண் வேறொரு ஆணை மனதால் வரித்த பின்பு எப்படி இன்னொரு ஆண் பிள் ளையை... என்ற காரணம் யாருக்கும் தோன்ற வில்லை. தான் தலைநிமிர்ந்து நடக்க வேண்டி, தன் பெண்ணைக் கட்டாயப்படுத்தி இன் னொருவனுக்கு மணமுடிக்க வேண்டுமென்கிற நிலையில் சுந்தரராமன்... வேறு பையனுடன் பழகிய பெண்ணைத் தரங்கெட்டவளாய் நினைக்கும் நான்...

ஊரிலிருந்து வந்திருந்த மனுஷனின் காதுபட, “என்னடா... காலங்காத்தால உருப்படி யான வேலை ஏதும் பாக்காம... வெட்டிப் பேச்சு பேசிண்டு...” என்று என் அம்மா சத்த மாய்க் கத்த ஆரம்பிக்க, வந்த நோக்கம் தோற் றதாய், தொங்கிய தலையுடன் வெளியேறினார் சுந்தரராமன்.

இதன் பிறகு, என் தம்பிக்கு வரன் பார்ப்பதில் படுபிஸியாகிப் போனேன். பாப னாசத்துக்கும், தாம்பரத்துக்கும் கோயமுத் தூருக்குமாகப் பல்வேறு திசைகளில் பல மாத மாகப் பயணம் செய்து சொஜ்ஜியும் பஜ்ஜியும் ருசிகண்டோமே தவிர வரனொன்றும் சரி யாய்த் தகையவில்லை.

இதற்கிடையில் என் மதுரை நண்பர் சேது – நான் ஏற்பாடு செய்திருந்த டிடெக்டிவ் – ஃபயர் சர்வீஸ் வேகத்தில் ஒரு கடிதம் எழுதி யிருந்தார்.

அந்த ப்ரியா என்ற பெண்ணைப் பற்றி அக்கம்பக்கத்தில் தவறாகப் பேசிக் கொள்கிறார் களாம். அவள் ஜீன்ஸ் பேன்ட்டும் பனியனும் போட்டுக்கொண்டு அலைவதை தானே நேரில் பார்த்ததாகவும், அதுவே அந்தப் பெண்ணின் ஊதாரித்தனத்துக்கு முதல் எடுத்துக்காட்டென் றும் எழுதியிருந்தார். அவள் பல பையன்களு டன் சகஜமாய்ப் பேசுவாளென்றும் அதுவே அவள் பெரிய பஜாரியென்பதை ஊர்ஜிதம் செய்யுமெனவும் எழுதியிருந்தார். அவள் காலையிலே ஷாட்ஸ் போட்டுக் கொண்டு ஸ்டேடியத்தில் ஜாகிங் செய்வதாயும் அதனால் அவள் குடும்பப்பாங்கானவள் அல்ல என்றும் எழுதியிருந்தார்.

இதெல்லாம் படிக்கப் படிக்க எனக்கு ஒரு மாதிரியாகவே இருந்தது. வீராவேசமாய் உள்ள புதுமைப்பெண்ணையெல்லாம் சினிமாவில் பார்த்தால் மட்டுமே ரசிக்க முடியுமென்று தோன்றுகிறது. எனக்கோ... என் தம்பிக்கோ... ஏன், என் குடும்பத்தார் யாருக்குமே இதெல் லாம் வேண்டாமென்று தோன்றுகிறது. காலை ஐந்து மணிக்கு எனக்கு முன்னால் எழுந்து.. எனக்கு பெட் காப்பி கொடுத்து... குளித்து முடித்து என்னை நமஸ்கரித்து... நான் சாப் பிட்ட எச்சில் இலையில் சாப்பிட்டு... என் துணிமணி தோய்த்து... நான் ஆபீஸ் செல்லும் போது எனக்கு ஷூ மாட்டிவிட்டு... என் அனு மதியின்றி படியிறங்காத... என் நண்பர்கள் வீட்டுக்கு வந்தால் சமையலறையை விட்டு வெளியே மூக்கு கூட நீட்டாத பத்தினிப் பெண்தான் எனக்கும், என் தம்பிக்கும், என் சுற்றம் அனைத்துக்குமே வேண்டுமென்று தோன்றுகிறது.

ஏற்கெனவே அந்தப் பெண்ணை நாங்கள் தலைமுழுகிய விஷயத்தை சேதுவுக்கு நாலு வரி யில் எழுதி அனுப்பினேன்.

இதற்கிடையில் மதுரையில் மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் கோயில் கும்பாபிஷேகம் நடந் தது. கும்பாபிஷேகத்தைப் பார்ப்பதுவே பல கோடி புண்ணியம் என்று யாரோ சொல்ல, பல கோடி புண்ணியம் பெற மதுரைக்குப் பயணமானேன்.

எள்ளையெறிந்தால் அது மண்ணைத் தொடாத அளவுக்கு மதுரை பிதுங்கி வழிந்தது.

எல்லா ஜனங்களும் ஏதோ முணுமுணுத்துக் கொண்டு எதையோ எதிர்பார்த்து சிரத்தையா யிருந்தது ஆச்சரியம் தந்தது. அபிஷேகம் முடிந்து பனிரெண்டு நதிகளின் நீரும் தெளிக் கப்பட, அதைப் பெற வேண்டி, கூட்டம் எக்கி எக்கிப் பறந்தது.

நானும் சளைக்காமல் ஒரு சொட்டு ஜலத்தை முண்டியடித்து வாங்கி தலையில் புரோக்ஷித்துக் கொண்டு திரும்புகையில், தழை யப் புரண்ட வேஷ்டியுடன் கண்களில் நீர் மல்க கைகளிரண்டையும் மேலே தூக்கி அம்மா

''அந்த தலைவர் மாதிரி எச்சரிக்கை உணர்வு உள்ள அரசியல்வாதியை நீங்க பார்த்திருக்கவே முடியாது.''

''எப்படிச் சொல்றீங்க?''

''தன்னை மூந்நாள் அமைச்சர்னு சொல்லிக் காமல், 'வெகுமூந்நாள்' அமைச்சர்னு சொல்லிக் கிறாரே!''

– சீர்காழி. வி. ரேவதி



ளின் அருள்வேண்டி நின்றிருந்தார் சுந்தர ராமன்.

அருகில் சென்று நலம் விசாரித்தேன். கண் விழித்த சுந்தரராமன் என்னைப் பார்த்தவுடன் 'பொலபொல'வென்று கண்ணீர் உகுத்தார். ஒரு பெரியவர் குழந்தையாய்க் குமுறியது வேதனை யளித்தது. அதைவிட, அவர் சொன்ன செய்தி மனதைப் பிழிந்தது.

என்னைப் பார்த்துவிட்டு ஊர் திரும்பியவு டன் சுந்தரராமன் ப்ரியாவை பெல்ட்டு கொண்டு விளாசியிருக்கிறார். கண்டவன் காலில் விழ வைச்சுட்டியேடி பாவி என்று கத் தியபடி அவளைக் கதற வைத்திருக்கிறார். பத் தொன்பது வயதுக் குழந்தை பதிமூன்று நாட் கள் குப்புறப்படுத்த நிலையிலேயே இருந்ததாம். எங்களை ஊர்ல நிமிந்து நடமாட முடியாம பண்ணிப்பிட்டு அவங்கூட போகணும்கிறியே, அப்படி என்னடி அவங்கிட்ட இருக்கு என்று சுந்தரராமன் இரைந்ததற்கு ப்ரியா சொன்ன பதில் அவரை குரூர ஸ்வரூபியாக மாற்றியிருக் கிறது.

தனக்கும் தன் அப்பா – அம்மாவின் மீது அபரிமிதமான அன்பு உண்டென்று கூறியிருக் கிறாள். அது என்றும் மாறாது என்று கதறியிருக் கிறாள். ஆனால், தான் ப்ரபுவை மறந்து விடத் தகுந்த காரணம் கூறினால் உடனே விட்டு விடத் தயாரென்று பகர்ந்திருக்கிறாள். ஒரு பையனைப் பார்க்கும்போது, அவன் நல் லவனா... நல்ல பழக்கங்கள் உள்ளனவா... ஒரு பெண்ணை வைத்துக் காப்பாற்றும் தகுதி உள் ளவனா... என்பவை மட்டுமே கண்டறிய வேண்டிய விஷயங்களென்று உரக்கக் கூறி யிருக்கிறாள். வேறு யாரும் தவறாய்க் கேட்பார் களென்று பயப்பட வேண்டாமென்றும், அப் படிக் கேட்பவர்களிடம், "என் பெண் விரும் பினாள்... பையனும் என் பெண்ணை வைத் துக் காப்பாற்றும் தகுதி பெற்றவன்... படித்த வன்... வேறு என்ன வேண்டும்...?" என்று கேட் கச் சொல்லியிருக்கிறாள். அவ்வாறு கேட்கத் துணிந்தால் நாளை எவனும் நாக்கில் நஞ்சு வைத்து குசும்பு பேசமாட்டானென்று விளம்பி யிருக்கிறாள்.

மகளின் சாதுர்யமான பேச்சு சுந்தரராம னைக் கிளறியிருக்கிறது. தண்ணீர் கண்ட சுண் ணாம்புக் காளவாயாய் உஷ்ணம் உக்கிரமடைந் திருக்கிறது. அருகில் வாகாய் நின்றிருந்த ப்ரியா வின் கழுத்தருகில் கை வைத்து தாவாங் கொட்டையை வசதியாய் கைக்குள் இடுக்கி ஒரு தள்ளு தள்ளியிருக்கிறார். சரசரத்த பாவா டையில் கால் தடுக்கி அருகிலிருந்த அம்மிக் கல்லில் நெற்றிப் பொட்டு மோத, அந்தக் கணத் திலேயே... ரத்த நுரை வெளிப் பொங்கி வழிய, ப்ரியா உயிரை விட்டிருக்கிறாள்.

தன் மகளின் ரத்தத் துளிகளை கண் முன்னே கண்டதும் பீதியில் உறைந்து போயி ருக்கிறார் சுந்தரராமன். கண்கள் நிலைகுத்தி, சரிந்து கிடந்த ப்ரியாவைப் பார்த்த அவரது அம்மாவும் மனைவியும் பதைபதைத்துப் போயிருக்கின்றனர்.

"அவ அப்படி என்னத்த செஞ்சுட்டா? லவ்வுதான... ஒரு வயசு வந்தவனைத்தானே... அதுவும் தனக்குத் தகுதின்னு நெனச்சவனத் தானே... அவ என்ன வேசித் தொழில் பண் றேன்னு போனாளா... இல்ல, அடுத்தவ புரு ஷனை இழுத்துண்டு ஓடினாளா... அவளப் போயி கொன்னுட்டியேடா பாவி..." என்று அம்மாவும் மனைவியும் ஏக வசனத்தில் ஏச, சுந்தரராமன் தன் நிலை உணர்ந்திருக்கிறார்.

'யாரோ என்னவோ பேசுவான்றதுனால நாமளா இப்படி செஞ்சுண்டுட்டோமோ.. புறம் பேசறவா வாயை ப்ரியா சொன்னா மாதிரி 'நறுக்'குன்னு பேசி அடக்கிப் பாக்க, அப்புறம் ஒரு பய வாயத் தெறக்க மாட்டானோ... அவமானம், வெட்கம், தலைகுனிவு எல்லாம் நாமளா நெனச்சுக்கறதுதானோ... நாம விரைச்சு நின்னாக்க யாரால நம்ம முதுகை வளைக்க முடியும்...? தலையை கவுக்க முடியும்...? அடுத் தவா கேலி பண்றதா நாம நெனச்சுக்கறது எல் லாம் நம்ம மனசு பொறுத்த விஷயம்தானோ...!'

சுந்தரராமனுக்கு கொஞ்சம் கொஞ்சமாய் ஏதோ புரிய ஆரம்பித்திருந்தது.

அவர் சொல்லச் சொல்ல எனக்கும் என் னைப் பற்றி வெட்கம் பிடுங்கித் தின்றது. ப்ரியா வின் சாவுக்கு நானும் ஒருவிதத்தில் காரணமா யிருந்திருக்கிறேன். அன்று சுந்தரராமன் என் இல்லம் தேடி வந்திருந்தபோது, அவரை நான் அலட்சியப்படுத்தாமலிருந்திருந்தால்... ப்ரியா வின் காதல் விஷயம் என்க்குத் குமட்டாமலிருந் திருந்தால்... முஸ்தபாவின் கடிதம் எனக்கு அரு வருப்பாய்த் தோன்றாமலிருந்திருந்தால்...

சில உயிர்களைக் காவு கொண்ட பின்னரே சில மாற்றங்கள் முகிழ்க்கின்றன.



''என்னய்யா நிர்வாகம் நடக்கின்றது? கட்அவுட் உண்டா? ஆடம்பர விழாக்கள் உண்டா...? மலர்ப் பாதை உண்டா? கார்களின் அணிவகுப்பு உண்டா? இதெல்லாம் வேண்டாம். அட அமைச்சர்களாவது முதலமைச்சர் காலில் விழுகின்றார்களா...? எனவே உள்ளாட்சித் தேர்தல்களிலாவது பொது மக்கள் சிந்தித்து வாக்களிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்!''
– சுந்தர் அழகேசன்

நரசிம்ஹ அவதாரத்துக்குத் தனியான ஏற்றம் தருவது அவருடைய அத்யத்புத ரூபம்.

'ஸ்தம்பே ந த்ருஷ்யதே...?' என்று (ஸ்தம்பத்திலே - தூணிலே - தெரியலையே...?) என்று ஹிரண்ய கசிபு கேட்டபோது

'ஸ்தம்பேந த்ருஷ்யதே' (ஸ்தம்பத்திலேதான் தெரிகிறான்) என்று பதில் சொல்கிறான் குழந்தை பிரஹலாதன்.

"எனக்குத் தெரியாமல் உனக்குத் தெரிகிறானா...? இரு! இதோ உன் தலை வேறு, உடம்பு வேறுன்னு துண்டிக்கறேன்... அது பிரிஞ்சு போய்த் துடிக்கறச்சே அவன் வந்து தைப்பானா? பார்ப்போம்!'' என்கிறான் அரக்கன்.

"அந்தக் காரியம் அவன் பண்ண மாட்டான்!" என்கிறான் பிரஹலாதன்.

"அவன் பண்ணமாட்டான் என்றால் நீ ஏன் அவனை ஆச்ரயிக்கிறாய்...?''

"அங்கே ஸ்தம்பத்திலே இருக்கிறவன் என்ன அவ்வளவு கடினாத்மாவா... நீ கத்தி எடுத்து வெட்டறேன்னு சொல்றியே... அந்தக் கத்தியைக் கழுத்தருகே கொண்டு வர முடியுமா உன்னாலே! அதுவரை அவன் பார்த்துக் கொண்டிருப்பானா...!'' என்கிறான் பிரஹலாதன்.

அவ்வளவு விச்வாசம் பகவானிடத்திலே!

அந்த மாதிரி பூரண விச்வாசம் வைத்தால்தான் 'என்னை ரக்ஷிக்க வேண்டிய பொறுப்பு உன்னுடையது!' என்று பகவானிடத்திலே உரிமை கொண்டாடலாம்.

விச்வாசம் பண்ணுவதற்கு முன்னே சரணாகதி பண்ணினால் எடுபடுமா...?

யாகம் பண்ண ஒருவர் திரவிய உதவி செய்கிறார். நம்பிக்கை இல்லாமலேதான் செய்கிறார். ஆனால் யாகம் செய்து மழை பெய்த பிறகு அவருக்கு நம்பிக்கை வருகிறது! சரணாகதி விஷயம் அப்படி இல்லை...

20 முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

விச்வாசம் இல்லாமல் சரணாகதி பண்ணினால் பலிக்காது.

எம்பார் அவர்கள் காலட்சேப கோஷ்டியிலே இருந்த தமது சிஷ்யர்களுக்குச் சொல்லுவார் : "கர்ம, ஞான, பக்தி யோகமெல்லாம் பண்ணுவது கஷ்டம். அதெல்லாம் பண்ணி அவஸ்தைப்படாமல் சரணாகதியை சுலபமாகப் பண்ணிவிடலாம் என்று எண்ணிக் கொள்ளக்கூடாது. ஏனென்றால் சரணாகதிக்கு முன்னாடி மஹாவிச்வாசம் என்று ஒன்று இருக்கே.... அது சுலபத்திலே வருவதில்லை... அக்கம்பக்கத்திலே உள்ளவர்களிடம் ஏற்படும் விச்வாசம் கூட நமக்கு பகவானிடத்திலே வருவதில்லை. கல எள்ளுக்கட்டு கல எண்ணெய் ஆன கதைதான்..." என்பார்.

சொல்லிவிட்டு கதையையும் விளக்குவார் :

பூர்வ காலத்திலே ஓர் எண்ணெய் வியாபாரி இருந்தான். நித்யம் எண்ணெய் வியாபாரம் செய்து வந்தான் அவன். செக்கு ஆடி, எண்ணெய் பிழிந்து, வியாபாரம் செய்ய வேண்டும்.

ஒருநாள் அவன் செக்கு இரண்டாக உடைந்து போயிற்று! இன்னொரு செக்கு செய்வதற்கு மரத்தைத் தேடிப் போனான். ஒரு பிரும்மாண்ட மரம் - செக்குக்கு ஏற்றது என்று நான்கு ஆட்களைக் கூப்பிட்டு மரத்தை வெட்டச் சொன்னான். நாலு ஆட்களும் தலைப்பாகையைக் கட்டிக் கொண்டு கோடரியை எடுத்து ஓங்கிய நேரத்திலே...

அந்த மரத்திலிருந்து 'பொத்'தென்று ஒன்று குதித்தது! குதித்து, எண்ணெய் வியாபாரியின் திருவடியை கெட்டியாகப் பிடித்துக்கொண்டது.

"இந்த மரத்தை வெட்டாதே! இதில் ரொம்ப நாட்களாக நான் இருக்கிறேன். இதை வெட்டினாயானால் எனக்கு வாசம் செய்ய வேறு இடம் இல்லாமல் போய்விடும்...." என்றது.

எண்ணெய் வியாபாரி யோசித்தான்... அவன் யோசிப்பதைப் பார்த்து அது மேலும் சொன்னது :

இடம்கொடுப்பாயா?" என்றது.

"அந்தக் காரியத்தை நீ பண்ணினால் நீயும் நானும் சௌக்கியமாக இருக்கலாம்..."

'சரிதான்' என்று கிளம்பிய புதுப் பிசாசு நேராக எண்ணெய் வியாபாரி வீட்டின் புழக் கடைக்குப் போயிற்று. அங்கே இரண்டு மாட் டுக் கொட்டகைகள் இருந்தன. ஒன்றில் இருபது மாடுகள் இருந்தன. இன்னொன்றில் ஒரே ஒரு மாடு. தனித்து இருந்தது. அந்த இரண் டாவது கொட்டகையிலே போய் உயரத்திலே உட்கார்ந்துகொண்டது புதுப் பிசாசு. விடியற் காலை எண்ணெய் வியாபாரி கொட்டகைப் பக்கம் வந்தால் அவனை அமுக்கிக் கொன்று விடலாம் என்று காத்துக் கொண்டிருந்தது.

ஆனால் விடிந்து நேரமாகியும் எண்ணெய் வியாபாரி மாட்டுக் கொட்டகைக்கு வரவே யில்லை. ஓர் அரசமரத்தடியிலே உட்கார்ந்து கொண்டு மாடுகளுக்கு லாடம் அடிக்கும் வேலையை மேற்பார்வை பார்த்துக் கொண் டிருந்தான். ஒவ்வொரு மாடாகப் பிடித்து அழைத்து வரும்படி பணியாட்களுக்குக் கட்டளையிட்டுக் கொண்டிருந்தான்.

"அதோ அந்தக் கொட்டகையிலே இருக்கிற புதுப் பிசாசைப் பிடித்துக் கொண்டு வா!" என்று ஒரு கட்டளை அவனிடமிருந்து வரவும் நடுநடுங்கிப் போய் விட்டது புதுப் பிசாசு!

எண்ணெய் வியாபாரி குறிப்பிட்டது தனியே கட்டியிருந்த மாட்டை! அது சந்தை யிலே பிடித்த புது மாடு. முரண்டு பண்ணி மற்ற மாடுகளை இடித்ததால் தனியே கட்டி வைத்திருந்தார்கள்.

நிஜ பிசாசோ, தன்னைத்தான் எண்ணெய் வியாபாரி பிடித்து லாடம் அடித்துவிடுவான் என்று பயந்தது! ஓடிப் போய் அவன் திருவடி களில் விழுந்து 'என்னை ஒன்றும் பண்ணி விடாதே!' என்று கெஞ்சியது!

"நீ யாரு?" என்று கேட்டான் அவன்!

"நான்தான் புதுப் பிசாசு..."

"புதுப் பிசாசா?"

"என்னை ஒன்றும் செய்யாமல் விட்டா யானால் அந்தப் பழைய பிசாசைக் காட்டிலும் உனக்குச் சகாயமாய் இருப்பேன். அது ஒரு கலம் எள்ளு ஆகும்படியான எள்ளுக் கட்டை தினமும் உனக்குக் கொண்டு போட்டது. நான் ஒரு கலம் எண்ணெயே பிழிந்தெடுக்கும் அளவுக்கான எள்ளுக்கட்டை தினமும் கொண்டு போடறேன்..."

"கட்டாயம் போடுவாயா...?"

"கட்டாயம் போடுவேன்..."

"அப்படியானால் போ!" என்றான் எண் ணெய் வியாபாரி.

தலையைச் சொரிந்தபடி போய் பழைய பிசாசைப் பார்த்தது புதுப் பிசாசு!

எறும்பார் கடிக்கிறார்!

பதினைந்து கோடி ரூபாய் அளவுக்கு என் பெயரிலும் சில பினாமிகள் பெயரிலும் நான் சொத்துக்களை வைத்திருப்பதாகக் கூறுவது முழுக்க முழுக்க பொய் என்பது மட்டுமல்ல... அடிப்படையற்ற குற்றச்சாட்டு.

– ஜெயலலிதா



"என்ன, போன காரியம் முடிந்ததா?" என்று அது கேட்க, இது நடந்த கதையைச் சொல்ல... "நான் ஒப்புக் கொண்டதைக் காட்டிலும் அதிகமாக அல்லவா நீ ஒப்புக் கொண்டிருக் கிறாய்... உனக்கெங்கே இந்த மரத்துக்கு வர நேரமிருக்கப் போகிறது!" என்றது அது!

கலம் எள்ளு கலம் எண்ணெய் ஆன கதை இதுதான்.

கர்ம யோகமும் ஞான யோகமும் கடின மானவை. அதனால் சரணாகதியைச் சுலப மாகப் பண்ணிவிடலாம் என்று நாம் எண்ணி னால் இந்தக் கலம் எண்ணெய் போல் ஒரு விஷயம் குறுக்கே வருகிறது. அந்த விஷயம் தான் மகாவிச்வாசம்! கலம் எண்ணெய்க்கான எள்ளுக்கட்டை தினமும் அடைவது எவ் வளவு கஷ்டமோ அவ்வளவு கஷ்டம் சரணா கதிக்கான மஹா விச்வாசத்தை நம் மனத்திலே எய்துவது.

பகவான் எதிரே இருக்கிறான் என்ற பாவனையில் தூபம், தீபம், நைவேத்தியம் என்று சமர்ப்பிக்கிறோம். அவன் வாஸ்தவத் தில் அங்கே உட்கார்ந்திருக்கிறான், நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்கிற எண் ணம் நமக்கு வர வேண்டாமா? பூரணமான விச்வாசம் வர வேண்டாமா...? அது வருவது ரொம்ப சிரமம்.

அந்த விச்வாசம் பிரஹலாதனுக்கு இருந்தது. அதனால்தான் இந்த அத்தியாயத்தின் ஆரம் பத்திலே சொன்னதுபோல் உறுதியுடன் அவ னால் பேச முடிந்தது!

(தொடரும்)

தாடி வைத்திருந்தார். 'எள்ளும் அரிசியும் கலந்த மாதிரி' என்று பாட்டி சொல்கிற மாதிரி தாடி. பறங்கிப்பழ உடம்பு. ஜிப்பா. கருப்புக் கலரில் பேண்ட். மூக்குக் கண்ணாடி.

"அம்பது வயசும்மா..." என்றபோது குரலில் கணீர்.

முன்கூட்டியே தகவல் அறிவித்து இன்றைய ஞாயிறின் பிற்பகலில்...

'ரெண்டு மணிக்கு மேல வரட்டுமா... வசதிப்படுமா...' என்று கேட்டு நிச்சயித்த சந்திப்பு.



வந்தபோது மணி இரண்டரை. காலிங்பெல் சப்தம் அவருக்குப் பிடித்திருக்கிற தாம்.

"சில பேர் வீட்டுல, வந்தவன் திரும்பிப் போனப்புறமும் டிங்டிங்னு அடிச்சுகிட்டிருக்கும்'' என்றார் தொற்றிக் கொள்ளும் சிரிப்புடன்.

மணிமேகலை புடைவைக்கு மாறியிருந்தாள். நாற்பத்தி இரண்டு வயசுக்கு விடுமுறை நாட்களில் 'நைட்டி'யே பழகி விட்டது.

வரப் போகிற சுந்தரமூர்த்தி 'இன்னாரென்று' புலப்படாததால் சம்பிரதாய அனுசரணை.

"சில பேர் ஸண்டே மத்தியானம் தூங்குவா. நான் மியூசிக் கேட்பேன். கர்னாடிக்... வெஸ்டர்ன்... எதுவும் விதிவிலக்கில்லை. முந்தாநாள் புஷ்பவனம் கேட்டேன்..."

ரொம்ப நாள் பழக்கம் போல சுவாதீனமாய் அமர்ந்திருந்தார்.

"நான் புக்ஸ் படிப்பேன்..." என்றாள்.

''தெரியறது... ஷெல்ஃப்ல பார்த்தா... எப்படி டேஸ்ட்... பார்க்கலாமா?''

பதிலுக்குக் காத்திராமல் விருட்டென்று எழுந்தார். ஆன வயசுக்கு கொஞ்சம் கூடவே துறுதுறுப்பு. பாட்டி இருந்தால்... 'புள்ளை இல்லாத வீட்டுல...' ப்ச்... என்னது... எப்ப பார் பாட்டி ஞாபகம்.

மணிமேகலை சுதாரிப்பதற்குள் சு. மூர்த்தி கையில் புத்தகங்கள். வரிசையிலிருந்து உருவியிருந்தார்.

''முன்னே மாதிரி படிக்க முடியலே. லேசா தலையை வலிக்க ஆரம்பிச்சுருது. பட்... மியூசிக் கேட்டா நோ ப்ராப்ளம்.''

வந்து அமர்ந்து கொண்டார்.

"டீ ஆர் காப்பி?"



"டீ..."

ஒரு ட்ரேயில் பிஸ்கட்டும் இரண்டு கப்புகளில் டீயுமாகத் திரும்பினாள்.

"இது நீ போட்டதா...." என்றார் முதன் முறையாய் நேரடியாய் ஒருமையில் விளித்து.

"இல்லே... வாங்கினது..."

சமையலறையை எட்டிப் பார்த்தார்.

"நீட்டா இருக்கு..."

பெட்ரூம் வாசலில் அவர் சற்று முன் தொட்ட மணிக் கொத்து இன்னமும் காற்றில் ஆடிக் கொண்டிருந்தது.

டீயை உறிஞ்சினார்.

"ஏன் திடீர்னு அப்படி ஒரு விளம்பரம் கொடுத்தேன்னு தெரிஞ்சுக்கலாமா?"

மணிமேகலை தன் விளம்பர வரிகளை நினைவில் கொண்டு வந்தாள்.

"....அரசு அலுவலகம் ஒன்றில் வேலை பார்க்கும் 42 வயது மாநிற, சராசரி உயர, அதிக பருமன் இல்லாத பெண்ணுக்கு வரன் தேவை. போஸ்ட் பாக்ஸ் நெ.."

"ரொம்ப சுருக்கம். அப்புறம் உன்னோட லெட்டர்ல விரிவா எழுதினே. ஒரு தம்பி... ஒரு தங்கை செட்டில்டு. அப்பா அம்மா இல்லை. சொந்த ஃப்ளாட். சரியா..."

மணிமேகலை தலையசைத்தாள்.

"இன்ஃபாக்ட்... நான் ஒரு விடோயர். கல்யாணம் ஆகி ஒரே வருஷம்... போயிட்டா. முதல் டெலிவரி... தாயும் குழந்தையும்... ஆண் குழந்தை... மூன்றரைக் கிலோ இருந்துதாம்..."

சு.மூர்த்தி கண்ணாடியைக் கழற்றியது இயல்பாக இருந்தது. கண்களைத் துடைக்கவில்லை.

"அப்புறம் வேற கல்யாணம் செஞ்சுக்கப் பிடிக்கலை. அப்படியே இருந்துட்டேன். தம்பி, தங்கை எனக்கும். அவங்களும் செட்டில்டு... ப்ச்... எனக்குத்தான் எங்கேயும் ஒட்டலே..."

"டிபன் ஏதாவது செய்யவா..." என்றாள்.

"ம்... என்ன செய்யலாம்..."

"ரெடி மிக்ஸ் இருக்கு..."

"வேணாம்... அலுத்துப் போச்சு."

"ஓ... சமையல் நீங்கதானா?"

சிரித்தார். பற்களின் பளீர்.

"ஆளை வேலைக்கு வச்சா... அவ இஷ்டத்துக்கு நான் மாறணும்... ஏன் வம்பு?"


"பஜ்ஜி... போண்டா... ஒத்துக்குமா?"

கேட்டபிறகு அப்படிக் கேட்டிருக்க வேண்டாமோ என்று தோன்றியது. 'வயசானவர்' என் பதைச் சுட்டுகிற மாதிரி.

"ஓக்கே... உனக்குப்

ஏன்?

அருள்வாக்கு



வித்வான்கள் வித்யையை ஈச்வரோபாஸனையாக, அதாவது வேறு ப்ரதிப்ரயோஜனம் எதிர்பாராமல், பேணி வளர்த்துக் கொள்ள ப்ரயத்தனம் பட்டால் எப்படியாவது அவை உயிரைப் பிடித்துக் கொண்டு வ்ருத்தியாகிவிடும்; அவர்களும் உயிரைப் பிடித்துக் கொண்டு காலம் தள்ள ஈச்வரன் கைகாட்டாமல் போகமாட்டான்.

இப்படிப் பலர் இருந்துமிருக்கிறார்கள். பரமபக்தரான த்யாகையர்வாள் போன்றவர்கள்தான் ராஜ ஸம்பாவனை, பேர், புகழ் முதலியன வேண்டாம் என்று ஒதுக்கி, ஒதுங்கி அவர்கள் பாட்டுக்கு இருந்தார்களென்றில்லை. மஹாவித்வான்களிலுங் கூடப் பணவசதி, பாராட்டு, ப்ராபல்யம் வேண்டாம் என்றே இருந்தவர்களுண்டு.

வித்வானாக இருக்கிறவர் பணத்தைத் தள்ளுவதை விடப் பாராட்டைத் தள்ளுவது ச்ரமம். தனக்கு நல்ல புத்தி இருக்கிறது, நிறையத் தெரிந்து கொண்டிருக்கிறோம், ஆராய்ச்சி செய்து பெரிசாக எழுதியிருக்கிறோமென்றால் உடனே இதை லோகம் 'ரெகக்னைஸ்' செய்யவேண்டும், தம்மைப் புகழ வேண்டும், மரியாதை பண்ண வேண்டும் என்ற எண்ணங்களும் ஏற்பட்டு விடுகின்றன. ஒரேயடியாக வித்யா கர்வம் ஏறி, இந்த உலகத்துக்கு நம்மைப் புரிந்து கொள்ளச் சக்தி உண்டா, நம்மைப் பாராட்ட அதற்கு யோக்யதை உண்டா என்று நினைக்கிற அளவுக்கும் சில வித்வான்கள் போய் விடுகிறார்கள். ஆதலால் அவர்கள் வித்வத்துக்காகப் பாடுபடுகிறது போலவே, அல்லது அதை விடவும், அதோடு கூட விநய ஸம்பன்னர்களாவதற்கும் பாடுபட வேண்டும்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

பிடிச்சது எதுவானாலும்...''

''உனக்குப் பிடித்தது...' என்ற வரி அவளுக்குப் பிடித்தது. சற்று அதீத உணர்ச்சிதான். ஆனாலும் இத்தனை வருஷங்களில் கேள்விப்பட்டிராத பிரயோகம்.

''தேங்காய் சட்னி அரைச்சிடறேன். மார்னிங் சாம்பார் கூட இருக்கு...''

எழுந்தாள்.

''நான் வேணா... ஹெல்ப்...''

''பரவாயில்லே... லைட் டிபன்தானே...''

டேப் ரிகார்டரை எதிரில் வைத்தாள்.

''எப்பவோ வாங்கின நாலஞ்சு கேசட்தான் இருக்கு...'' என்றாள் சங்கடமாய்.

அரைமணியில் டிபன் ரெடி. இடையிடையே பேச்சு. இப்போது வார்த்தைகள் இன்னமும் இலகுவாய் எல்லை ஏதுமற்று இயல்பாய்ச் சுழன்றன.

''புடைவை உனக்குக் கஷ்டமா இருக்கு...'' என்றார் அவள் படும் சிரமம் பார்த்து.

''அதெல்லாம் ஒண்ணுமில்லே...''

''நோ ரெஸ்ட்ரிக்ஷன்... நீ, நீயாகவே இரு...''

கேட்டு வாங்கிச் சாப்பிட்டார்.

''உன்னோட தம்பி... தங்கை... என்ன சொல்லுவாங்க?''

''உங்க தம்பி... தங்கை?''

''ம்...'' தோளைக் குலுக்கினார்.

''மறுக்க மாட்டாங்கன்னு தோணுது. என் விருப்பம்தானே... ஆனா... இப்ப உன்னை நேர்ல பார்த்தப்புறம்...''

''பார்த்தப்புறம்...?''

''ரொம்ப சின்னப் பொண்ணா இருக்கியே. ஐயாம் பிஃப்டி இயர்ஸ் ஓல்டு...''

லேசாய்ச் சிரித்தார்.

மணிமேகலை மௌனமாய் இருந்தாள்.

பதினாறு வருஷங்களுக்கு முன்.. ஒரு பெண் பார்த்தல் படலம். 'அம்மா, அப்பா இல்லாதவா... சரி.. தம்பி, தங்கையை கரையேத்தணும். சரி, ஆனா பொண்ணைப் பார்த்தா... வயசானவா மாதிரி இருக்காளே.'

''என்ன... யோசனை...''


''ஒண்ணுமில்லே...'' என்றாள்.

''சொல்லு. என் கேள்விக்கு நீ இன்னமும் பதிலே சொல்லலே... திடீர்னு இப்ப எதனால அந்த விளம்பரம்? அதுவும் என்னைப் போய் சூஸ் பண்ணி பதில்... இப்ப கூட விருந்தோம்பல்... என்னம்மா...''

இதே புரிந்து கொள்ளுதல், அனுசரித்தல், விட்டுக் கொடுத்தல். சக மனிதநேயம் எல்லாம் அந்த வயசுக் காலத்தில் அமையாமல் போனதுதான் என்று எதை எதையோ யோசித்து... சொன்னாள்.

''தனிமை... தனிமைதான் என்னால தாங்க முடியலே...'' – லேசாய்க் கண் கலங்கியிருந்தது.

சுஜாதா பக்கம்



தொலைக்காட்சியில் மேனகா காந்தியின் 'தலைகளும் வால்களும்' (Heads and Tails) வாராந்திர நிகழ்ச்சியைப் பார்க்கிறீர்களோ? மிருகங்களின் மேல் அன்பு கொள்ள வேண்டும்; அவைகளைத் துன்புறுத்தக்கூடாது எனும் உயர்ந்த நோக்கத்துடன் அவர்கள் காட்டும் சில காட்சிகள் நடுங்க வைக்கின்றன. ஆடுகளை வெட்டுவதும், மாடுகளை மந்தை மந்தையாக லாரியில் அடைப்பதும், கோழி தலையில்லாமல் துடிப்பதும் - இதெல்லாம் காட்டித்தான் ஆக வேண்டுமா என்று கேட்கத் தோன்றுகிறது. இதைப் பார்த்து பூசாரிகளும் கசாப்புக் கடைக்காரர்களும் திருந்துவார்கள் என்று தோன்றவில்லை. அவர்கள் தினம் தினம் ரத்தப் பிரவாகம் பார்த்துப் பழகினவர்கள்.

மிருகங்களைக் கொல்வது இரண்டு வகை. உணவுக்காக, பக்திக்காக. முதல் வகையைத் தடுக்க மனித சமுதாயத்தின் உணவுப் பழக்கமே மாற வேண்டும். இரண்டாம் வகையைக் குறைப்பதற்கு எஸ்.பி.சி.ஏ சட்டங்கள் நிறைய இருந்தாலும் எளிய மக்களின் ஆதார நம்பிக்கைகளுடன் அவை குறுக்கிடும்போது, நம்பிக்கைகளே வெல்கின்றன. பலி, உலகின் எல்லா மதங்களிலும் இருந்திருக்கிறது. பலப் பல வகைகளில். பொதுவாக ஆட்டுக்கடா, எருது, எருமை போன்றவைகளை பலி கொடுத்துவிட்டு, கடவுளை சந்தோஷப்படுத்தி, அவற்றின் வலிமையையும் ஆண்மையையும் தாம் பெற்றுக் கொள்ளும் எளிய குறிக்கோளில்தான் புராதன பலிகள் இருந்திருக்கின்றன. நரபலி கூட, முதல் வேளாண் மக்களிடம் இருந்தது. கிரேக்க, ரோமானியர், யூதர்கள், சைனா, ஜப்பான் தேசத்தவர் எல்லாரும் ஆரம்பத்தில் நரபலி பழகியிருக்கிறார்கள். வேதகாலத்தில் 'புருஷமேதம்' சொல்லப்பட்டிருக்கிறது.

பலி கொடுக்கப்படும் அப்பாவியை மிக அருமையான உடைகளால் அலங்கரித்தார்கள். அவர்கள் அழகுக்காகவும் இளமைக்காகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். கடவுளுக்கு எல்லாமே சிறந்ததாக இருக்க வேண்டுமல்லவா? அவர்களை நீரில் முக்க வைத்தோ, உயிருடன் புதைத்தோ அல்லது கழுத்தில் வெட்டி ரத்தம் சிந்த வைத்தோ கொன்றார்கள். உதிரம் நிலத்திலோ, பலி பீடத்திலோ விழ வேண்டும். அப்போதுதான் கடவுளுக்கும் சந்தோஷம் என்று நம்பினார்கள்.

பலி கொடுத்ததைப் பொதுவாக, முழுவதும் கடவுளுக்கே அர்ப்பணித்தார்கள். அல்லது ரத்தம் சிந்தியதும் மிஞ்சியதை எல்லோரும் கூடிச் சாப்பிட்டார்கள் அல்லது நெருப்பில் எரித்தார்கள். (புகை மேலே போய் கடவுளுக்கு சந்தோஷம் தர) ஹோமரின் ஈலியாட் காவியத்தில் பல இடங்களில் எருதுகளும் காளைகளும் பலியாகின்றன. ஓடிசியஸ் கீழுலகத்துக்குச் செல்ல, இரவில் குகையில் நிறைய பலி கொடுக்க வேண்டியிருக்கிறது.

பைபிளின் பழைய ஏற்பாட்டில் (ஜெனிசிஸ் 22 வது அத்தியாயம்) கடவுள் அப்ரஹாமைத் தன் மகன் ஐசாக்கை பலி கொடுக்கும்படிக் கேட்கிறார். அப்ரஹாம் தயங்காமல் கடவுள் சொன்ன இடத்திற்குத் தன் மகனைக் கூட்டிச் சென்று அவனை வெட்டக் கத்தியெடுக்கும்போது, தேவன் அப்ரஹாமை அழைத்து, அவன் விசுவாசத்தை சிலாகித்து, 'உன்னைப் பரிசோதிக்கவே இந்த ஆணை தந்தேன். அவனைக் கொல்லாதே' என்று பணிக்கிறார். அப்ரஹாம் புதரில் மாட்டிக் கொண்ட ஓர் ஆட்டை பலி கொடுத்துவிட்டுத் திரும்புகிறார். (நம் புராணங்களிலும் இம்மாதிரிக் கதைகள் சில இருக்கின்றன - சிறுத் தொண்டர்)

பைபிளின் அந்தக் கால கட்டத்திற்குப் பின் உலகின் எந்த மதத்திலும் நரபலி இல்லை. யூதர்கள்தான் நரபலி தப்பு என்பதை முதலில் தீர்மானித்தார்கள் என்று நம்புகிறார்கள். கிறித்தவர்கள், நரபலி பழகவே இல்லை. அவர்கள் கொடுத்த ஒரே ஒரு பலி, மற்றவர்கள் வாழ்வதற்காகக் கொடுத்த மகத் தான பலி; தேவமகன்தான்.

ரோமன் கத்தோலிக்கர்கள் ஒயினையும் (ரத்தம்) ரொட்டியையும் (சதை) ஒவ்வொரு பிரார்த்தனையிலும் அர்ப்பணிப்பது இந்த மகா தியாகத்தின் குறியீடாகவே.

பௌத்தமும் இஸ்லாமும் ஆரம்பத்திலிருந்தே நரபலியை நிராகரித்தன.

இந்த நிராகரிப்பின் ஆரம்பங்கள் அப்ரஹாமின் கதைதான் என்று அறிஞர்கள் சொல்கிறார்கள்.

நரபலி அழிந்து போய் மிருகங்களுக்கு வந்து ஆடு, மாடு, கோழி, பூசணி, இளநீர், எலுமிச்சம்பழம் அளவுக்கு வந்து, அதன் பல்வேறு பிரிவுகளில் அறுகிக் கொண்டிருக்கிறது, நாகரிகத்தின் அடையாளங்கள்தாம். எல்லாமே நரபலி ஆரம்பங்களின் இறுதி வடிவங்கள்தாம்.

(மீண்டும் அடுத்த வாரம்)

8

முட்டைக்கோஸை செதுக்கித் தள்ளுகையில் மனம் முந்தைய இரவின் நிகழ்வுகளில் தோய்ந்து, லயித்தது. தானே வேறாகிப் போனது போல அதிசய உணர்வு கவிந்தது. செதுக்கிய கோஸ் இதழ்களின் குவியல் பார்வைக்குப் புலப்படாமல் குழம்பிக் குழம்பிப் போய்க் கொண்டிருந்தது.

"மன்னி...!" திடுமென்று குமாரின் குரல் சமையல்கட்டின் நுழைவாயிலில் கேட்கவும், முகம் வியந்து போனாள் சுகன்யா.

''என்னாச்சு?'' அவள் வெட்கத்தைப் பார்த்துக் கேட்டான்.

"ஒண்ணுமில்லை..."

"காப்பி வேணுமே..."

சரஸ்வதியும் ராமநாதனும் அதிகாலையிலேயே கிளம்பி ஒரு கல்யாணத்துக்குப் போய் விட்டிருந்தார்கள். வசந்தி குளியலறையிலிருந்தாள். ஸ்ரீராம் இன்னும் எழுந்திருக்கவில்லை.

குமாருக்கு காப்பி தயாரிக்க பாலை அடுப்பில் வைத்துவிட்டு சுகன்யா கேட்டாள் :

"ரொம்ப சூடா வேணுமா...? மீடியமா இருந்தாப் போதுமா...?"

"சூடா வேணும்..."

"சர்க்கரை...?"

"இரண்டு ஸ்பூன். எனக்கு இரண்டு ஸ்பூன்; வசந்தின்னா ஒண்ணரை; ஸ்ரீராம், அம்மா இரண்டு பேரும் ஒரு ஸ்பூன்தான். அப்பாவுக்கு நோ ஷுகர். இதையெல்லாமும் நோட்டிலே எழுதிக் கொடுத்துடவா...?"

விளையாட்டாகப் பேசுகிறானா...? வலிக்கட்டும் என்று சொல்லால் அடிக்கிறானா...? புரிவதற்குள் பால் பொங்கியது. டிகாக்ஷன் சேர்த்து, சர்க்கரை கலக்கித் தந்தாள்.

"குமார்...!" – காப்பி தம்ளருடன் வாசல் பக்கம் போனவனைக் கூப்பிட்டாள்.

''இன்னைக்கு நான்தான் சமைக்கப் போறேன்... கத்தரிக்காய் குழம்பு, கோஸ் பொறியல்... உனக்குப் பிடிக்குமில்லையா...?"

"ஓ.கே! ஆனா அது பொறியல் இல்லை... கறி! நாங்க அப்படித்தான் சொல்லுவோம்..."

"கறி! கோஸ் கறி..." திருத்திக் கொண்டாள்.

"எதுக்கும் வசந்தியைக் கேட்டுக்கோங்க... எப்படிச் செய்யறதுன்னு... நீங்க பாட்டுக்கு வெங்காயத்தையும் தக்காளியையும் சேர்த்து வதக்கி வைச்சுடப் போறீங்க..." சொல்லிவிட்டுப் போய் விட்டான்.

முளைவிட்ட அலுப்பை விரட்ட முயன்றாள் சுகன்யா. கோஸ் பொறியல் என்ற அல்ப விஷயத்தைக் கூட முன் நிர்ணயித்த முறையில் தான் செய்ய வேண்டுமா? புதிய சுவைகளை முயன்று பார்க்கும் ரசனை இவர்களுக்கு வராதா...? புதிதாக எதையும் அணுகும் முன்னரே மறுப்பதற்குத் தயாராகி விடுகிறார்கள். புது மருமகள் உள்பட...! ஸ்ரீராம் எப்படி இந்தக் குடும்பத்தில் தப்பிப் பிறந்தான்...?

வசந்தி உதவியுடன், அவள் விளக்கிய முறையில் சமையலைச் செய்து முடித்தபோது ஸ்ரீராம் எழுந்து வந்தான்.

"சுகி..." சமையலறை வாசலில் நின்றபடி கூப்பிட்டவனைப் பார்த்ததும் கிளர்ந்தெழுந்த உணர்ச்சிகளை விழுங்கிக் கொண்டாள். காப்பியைப் பெற்றுக் கொண்டு "தாங்க்யூ" என்றான்.

''இன்னும் என்னென்னத்துக்கெல்லாம், எத்தனை முறை தாங்ஸ் சொல்லப் போறே...?" அடிக்குரலில் அவன் காதில் மட்டும் விழும்படிக் கேட்டாள்.

"எல்லாத்துக்கும் சேர்த்து அங்கே சொல்லிடறேன்'' என்றான் பூஜை அறை இருந்த திக்கைக் காட்டி.

அப்போதுதான் காதலை உணர்ந்தவர்கள் போல் புதிதாக ஒரு சந்தோஷ ஊற்றுச் சுரந்தது இருவர் உள்ளத்திலும்.

ஆறு மாதங்கள் கடந்த பிறகும் அந்த ஊற்று அன்றாடம் புதுப் புனலாய்ச் சுரந்து கொண்டிருந்தது. திருமணமாகி முதல் முறையாக அலுவலகப் பணியில் ஸ்ரீராம் வெளியூர் போனபோது, மனசடைத்து துக்கம் சூழ்ந்தது.

''கல்யாணத்துக்கு வாங்கின கூறைப் புடைவையைக் கட்டிக்கணும்..." சரஸ்வதி சொல்லிவிட்டுப் பூஜையறைக்குள் போய் விட்டாள்.

அரக்குச் சிவப்பிலிருந்த பட்டைப் பிரித்து யோசித்தாள் சுகன்யா... முகூர்த்த சமயத்தில் பெரியத்தை, சித்தி என்று இரண்டு பேர் சேர்ந்து கொசுவியும் மடித்தும் நீவியும் இழுத்தும் இந்த ஒன்பது கஜத்தை இடுப்பில் ஏற்றி

?	சிவசங்கரி



விட்டார்கள். எப்படி ஆரம்பித்தார்கள்...? யோசிக்க, யோசிக்க, புரிபடவில்லை. வசந்தியைக் கூப்பிட்டுக் கேட்கலாமா...?

"ஐயோ! மன்னி... எனக்குத் தெரியாது. கல்யாணமானவா தானே மடிசார் உடுத்திக்கலாம்... இருங்கோ, அம்மாவை அனுப்பறேன்..."

சரஸ்வதி வந்து புடைவை உடுத்தக் கற்றுத் தந்த போது தான் சுகன்யாவுக்கு அது உறைத்தது.

கல்யாணமாகி வந்த இந்த ஆறு மாதங்களில் இப்போதுதான் மாமியார் இவ்வளவு அண்மையில் வந்திருக்கிறார். தவறியும் இதுவரை தன்னை அவர் தொட்டதில்லை. ஒருநாள் தலைவலி மிக அதிகமானபோது கூட, வசந்திதான் 'ஜுரம் அடிக்கிறதோ...?' என்று தொட்டுப் பார்த்தாள்.

இப்போது, வேகமாக அவர் கை செயல்படு



கையில், உழைத்து உரமேறிப் போன அவர் விரல்களின் சொறசொறப்பு பல கதைகளைச் சொல்வது போல் இருந்தது.

அந்தக் கைகளைப் பிடித்துக் கொண்டு எல்லா கதைகளையும் கேட்டால் என்ன...?

"ஊம்... இதை இடுப்புல செருகிக்கோ..." சுகன்யாவின் வலது தோளில் தலைப்பைப் போட்டு விட்டு, அதன் ஒரு முனையை எடுத்து அழகாக மடித்து நீட்டினாள் சரஸ்வதி!

"தேங்க்யூ அம்மா..."

ஒரு புன்னகையைக் கூட பதிலாக்காமல் "சீக்கிரம் வா... மாசம் பொறக்கற நேரமாச்சு" என்று போய் விட்டார் மாமியார்.

ஸ்ரீராம் பெங்களூர் போயிருப்பதால், மெல்லிய மஞ்சள் சரடை மாமியாரே கழுத்தில் கட்டிவிட, காரடையான் நோன்பு... முடிந்ததும் நினைவாக மாமியார், மாமனாரை நிற்க வைத்து நமஸ்கரித்தாள் சுகன்யா.

வெற்றிலைப் பாக்கில் ஐம்பது ரூபாய் நோட்டு வைத்து நீட்டினார்கள்.

"இதெல்லாம் எதுக்கு...?"

"தலைநோன்பு இல்லையா...? எங்கள் ஆசிகள்..." சம்பிரதாயம் தவறிவிடக் கூடாது என்கிற அக்கறையைத் தவிர வேறெதையும் அந்த 'ஆசிகள்' உணர்த்தியதாகத் தோன்றவில்லை.

'ஸ்ரீராம் இருந்தாலாவது ஒரு பாட்டம் புலம்பித் தீர்க்கலாம். இன்னும் இருபத்திநாலு மணி நேரம் காத்திருக்க வேண்டும்...' சுகன்யாவின் ஏக்கம் பசியை விரட்டி விட்டது.

உணவு மறுத்தபோது, "சாஸ்திரம்...! இந்த அடையைச் சாப்பிட்டாகணும்... இலையில்

தங்க நகை பரிசு!

இன்னும் 18 வாரங்கள் வெளிவரப் போகிற இந்தத் தொடர்கதை, வாராவாரம் ஓர் எழுத்தாளரின் பெயரில் வெளியாகும். ஆனால் முழுக் கதையையும் எழுதுபவர் ஒரே எழுத்தாளர்தான்! யார் அவர்?

வாரா வாரம் படித்து, யூகித்துக் கொண்டே இருங்கள். கடைசி வார அத்தியாயத்துடன் வெளியாகப் போகிற கூப்பனில், 'தொடரை எழுதியவர் யார்?' என்கிற உங்கள் யூகத்தை எழுதி அனுப்புங்கள்.

உங்கள் யூகம் சரியானதாக இருந்தால் உங்களுக்குத்தான் மின்னும் தங்க நகை பரிசு!


பலர் சரியான விடை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் ஓர் அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

"அந்தாளுகிட்ட போய் 'குடை' கேட்டது தப்பா போச்சு!"

"ஏன் கொடுக்கலையா?"

"ம்கூம், கொடுத்து 'மழையில நனைச்சுடாம கொண்டு வாங்க'ன்னு சொல்றாரு!"

- க. பாலசுப்பிரமணியன்



உட்காரு" என்று வற்புறுத்தலாக வார்த்தைகள் வெளிப்பட்டன.

ஓரத்தில் வெண்ணெய், வெல்லமும் ஏலமும் மணக்கும் அடை... ஒரு விள்ளல் எடுத்துச் சாப்பிடும் சமயம் பார்த்து குமார் வந்தான்.

"மன்னி! இது சாவித்திரி பண்ணின நோன்பு... சத்யவான் உயிரை மீட்டுண்டு வர்றதுக்காகப் பண்ணினாளாம்... அந்த மாதிரி இப்போ எல்லா லேடீஸும் அவாவா கணவனோட தீர்க்க ஆயுள் வேண்டிப் பண்றது... கதை தெரியுமா உங்களுக்கு...?"

"தெரியும்..." கதை பேசும் உற்சாகத்துடன் தொடர்ந்தாள் சுகன்யா... "குமார்... ஒண்ணு கவனிச்சியா... நம்ம நாட்டுல ஒரு விரதமோ, பூஜையோ கூட பெண்டாட்டிக்காகப் புருஷன் பண்ற மாதிரி இருக்காது... எல்லாம்..."

"ஷ்...! அப்படியெல்லாம் பேசப்படாது...!" குமார் வாய் மேல் விரல் வைத்து, கண்களை உருட்டிச் சிரித்தான்.

"என்னடா...?" என்று கேட்டபடி சரஸ்வதி வந்தபோது டெலிபோன் ஒலித்து, சுகன்யாவைக் காப்பாற்றியது.

"மன்னி! உங்களுக்குத்தான் போன். அண்ணா ஆபீஸிலேருந்து ராஜு பேசறார்..."

அவசரமாய் எழுந்து போய் இடக்கரத்தால் ரிசீவரை வாங்கிப் பேசினாள்.

"சொல்லுங்க சர்... ஹவ் ஆர் யூ?"

"சௌக்யமா இருக்கேன்மா. ஸாரி! உன்னைக் கொஞ்சம் தொந்தரவு பண்ண வேண்டியிருக்கு... நீ நாளைக்கு ஆபீஸ் வந்துட்டுப் போகணுமே..."



''செக்குல கையெழுத்து சரியா இல்லையே... மேடம்...?''

''புடைவை வாங்கறதுக்காக என் கணவர் கொடுத்ததுதான் சார்... பெரிய செலவுன்னாலே எப்பவும் அவருக்குக் கை நடுங்கும்!''

– சீர்காழி வி. ரேவதி

''உங்க தொகுதி எம்.எல்.ஏ. வந்து என்ன கேட்டாரு...?''

''அவருடைய குறைகளை எல்லாம் சொல்லி ஆறுதல் கேட்டாரு!''

– பொன். குமார்



"என்ன விஷயம் சார்...?"

"புதுசா குவாலிடி கண்ட்ரோல் ஸாப்ட்வேர் ஸீரீஸ் பிளான் பண்ணியிருக்கோம்... அதுக்கு நல்ல அறிமுகம் எழுதணும்... உன் உதவி வேணுமே..."

"வரேன் சர்..."

போனை வைத்துவிட்டு அறிவித்தாள் : "நாளைக்கு ஆபீஸ் போகணும்..."

"ஸ்ரீராம் இல்லையே... அவனைக் கேட்க வேண்டாமா...?" மாமியார் கவலையுடன் பார்த்தார்.

"வந்த பிறகு சொல்லிக்கலாம் அம்மா..."

"நாளை ஒரு நாள்தானே...?"

"அப்படித்தான் நினைக்கிறேன். போனால் தெரியும்!"

''போயிட்டு வரட்டும் சச்சு... ஸ்ரீராம் ஒண்ணும் சொல்ல மாட்டான்...'' என்ற மாமனாரைப் பார்த்து "தாங்க் யூ அப்பா..." என்றாள்.

ராஜு இரண்டு கைகளையும் நீட்டி, "சுகி! How good to see you!" என்று வரவேற்றார்.

சுகன்யா அவர் கையைப்பற்றினாள். பழைய உற்சாகம் தணிந்து விட்டது, ராஜுவுக்கு நொடியில் புரிய, ஆழமாகப் பார்த்தார்...

"என்ன சுகி! ஏதாவது பிரச்னையா...?"

"நத்திங் சர்! ஒண்ணுமில்லை..."

"சரி வா... வேலையை முதல்ல முடிப்போம். அப்புறம் பேசலாம்..."

மதியம் மூன்று மணிக்குள் இரு தரப்பினருக்கும் திருப்தி தரக்கூடிய அறிமுகம் தயாராகி விட்டது. புதிய சாஃப்ட்வேர் உதவியுடன் எப்படியெல்லாம் தரக்கட்டுப்பாட்டைச் சொடக்குப் போட்டு வசப்படுத்திக் கொள்ளலாம் என்று பிரமிப்பூட்டும் ஓர் அறிக்கை எழுதி முடித்திருந்தாள் சுகன்யா.

''ஸாரி சுகி! ஸ்ரீராம் இருந்திருந்தா உன்னைத் தொந்தரவு பண்ணியிருக்க மாட்டேன். அவனே இதை முடிச்சுருப்பான்..."

"பரவாயில்லை சர்... என்க்கும் ஒரு நல்ல மாறுதல்..."

"நீ வேலையை விட்டிருக்க வேண்டாம் சுகி..."

"இல்ல சர்... தொடர்ந்து வேலை பார்த்திருந்தால் ரொம்பக் கஷ்டமா போயிருக்கும்.. இருபத்து நாலு மணி நேரமும் கூடவே இருக்கறதுனாலதான் என் குடும்பத்தைப் பத்தின சின்னச் சின்ன விஷயங்களையெல்லாம் தெரிஞ்சிக்க முடியறது... அந்தச் சின்ன விஷயங்கள் ரொம்ப முக்கியமாவும் இருக்கு..."

''கங்கிராட்ஸ் சுகி! எங்க குடும்பம்னு சொன்னே பார்த்தியா... அந்த வார்த்தையே உன்னோட வெற்றிக்கு அடையாளம்தான்..."

"இன்னும் நான் முழுசா வெற்றி அடையல சர்... ஐம்பது பர்சன்ட் ஜெயிச்சிருக்கேன். அனேகமா எங்க முதல் வெட்டிங் ஆனி வர்ஸரிக்கு அது நூறு பர்சன்ட் ஆயிடும்..."

சந்தோஷத்துடன் அனுப்பி வைத்தார் ராஜு. அறிவார்த்தமாக சற்று இயங்கிய திருப்தியில் அதைவிட சந்தோஷமாக இருந்தாள் சுகன்யா. ஆட்டோவிலிருந்து இறங்கி, திரும்பவும் வீட்டுக்குள் நுழையும் வரை.

(தொடரும்)




கடலோரக் கொலைகள்
8
படம் : சசி
கதை : பெனிட்டோகுமார்
நாகராஜனும் பிரதீப்பும் ஒருவரை ஒருவர் பார்த்து விழிக்க, வீட்டு சொந்தக்காரர் கிருஷ்ண மூர்த்தி...
மண்வெட்டியைத் திருடினவன் இன்னும் என்ன வெல்லாம் சுருட்டினானோ? உங்க சாமான்களை பத்திரமா காப்பாத்திக்குங்க.
நந்தகோபால் குழப்பமடைய, நாகராஜ்....
டேய் ராஜதுரை! இந்தா நூறு ரூபா. ரெண்டு மண்வெட்டி உடனே வாங் கிட்டுவா. ஒண்ணுக்கு ரெண்டா கிருஷ்ணமூர்த்திக்கு திருப்பிடலாம்.
பிரதீப் முன் கட்டுக்கு வந்து...
ஆஷா! காற்றாட கடற் கரைக்குப் போகணும்னியே. நந்து வந்திருக்கார். அழைச்சிட்டுப் போவார்!
ரெடி!
அவர்கள் போன பிறகு...
மூணுபேருமே மண்வெட்டியை மறந்து திரும்பிட்டோம். யார் கண்ணுல யாவது பட்டுத் தொலைச்சால் ஆபத்து.
ஒண்ணும் நேராது. ஒசில மண்வெட்டி கிடைச்சுதுன்னு அமுக்கிடுவான். யாரிடமும் மூச்சு விட மாட்டான்!
உன் மேப்புலதான் ஏதோ கோளாறு. தோண்ட றோம், தோண்டறோம் ஒண்ணும் கிடைக்கலே...
கட்டாயம் கிடைக்கும்... கவலைப் படாதே!



மண்டபத்தில் அடிக்கடி படுப்பவர் பட்டியல் தயாரித்தார் மதிவாணன்...
விசாலம்! பரமகுரு செத்த அன்னிக்கு நீயும் மாணிக்கமும் அங்க படுத்திருந்தீங்கல்ல! உண்மையைச் சொன்னா எலும்பு நொறுங்காது!
மாணிக்கம்தான் பரமகுரு கிட்ட பேசிட்டிருந்தான். நான் தூங்கிட்டேன்.
...பரமகுரு ஒருமணி சுமாருக்கு மண்டபத்துக்கு வந்தான். குடிச்சிருந்தான்; ஆனா போதை ஏறல. தூங்காம பெண்டாட்டியை திட்டிக்கிட்டிருந்தான். இன்னும் சரக்கு போடக் கடன் கேட்டான். என்கிட்ட பைசா இல்லே....
என்னை ஒண்ணும் பண்ணாதீங்க. நடந்ததை சொல்லிடறேன்...
....இரண்டு மணி இருக்கும். சரக்கு ஞாபகமாவே இருந்தவன், பண்ணை வீடு போய் பணம் வாங்கிட்டு வரேன்னு நடந்தான்.
இன்ஸ்பெக்டர் கோபியிடம் மதிவாணன்...
ரெண்டுமணிக்கு படுத்துட்டதா பிரதீப் சொன்னாரு. அதே நேரம் பண்ணை வீடு கதவைத் தட்ட பரமகுரு போனதா மாணிக்கம் சொல்றான். யாரை நம்புறது?
அப்படியா, சரி. விசாரணை முடியற வரை லாக்—அப்ல இருங்க.
நாளைக்கு தட்டிக் கேட்போம்.
(தொடரும்)


"என் வீட்ல இருக்கற எந்தப் பொருளுமே என்னோடது இல்லீங்க...."
"எதிர் அணிக்காரங்க ஏற்பாடுன்னு நினைக்கறேன் சார்... உட்கார்ந்துகிட் டிருக்கறவங்க எல்லாம் எதிர்ப்பு கோஷம் போடறாங்க; தள்ளி நிக்கறவங்க ஆதரவு கோஷம் போடறாங்க!"
"உங்களுக்கு போன் கனெக்ஷன் தர்றதுக்கு முந்தியே பில் அனுப்பினது எங்க திட்டமிட்ட செயல்தான்... தப்பு பில் கட்ற தகுதி உங்களுக்கு இருக்கான்னு பரிசோதனை பண்ணிப் பார்க்கத் தான் அப்படி செஞ்சோம்...."
"எங்க பிரச்னைகளெல்லாம் தீர்ந்த வுடனேயே முதல் காரியமா நாட்டுக்கு முழு மூச்சோட சேவை செய்வோம்!"
இந்தியன் ஃபீச்சர்ஸ் சிண்டிகேட்
தொலைபேசித் துறை
BILL



* புட்ரோஸ் புட்ரோஸ் காலி

ஐ.நாவின் எதிர்காலம் ஒரு ?

நாட்டுப்புற சண்டைகளுக்கு ஆலமரத்தடியில் பஞ்சாயத்து. நாடுகளின் சண்டைகளுக்கு ஐ.நாவின் பஞ்சாயத்து. பல நாடுகளில் ரத்தம் ஓடிக் கொண்டிருக்கும் இன்றைய நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் (UNO) அவசியம் குறித்து இரண்டு கருத்துக்கள் இல்லைதான். என்றாலும் சண்டை நடக்கும் நாடுகளில் நிலவும் வறுமையை விட ஐ.நாவில் இப்போது நிலவும் வறுமை அதிகம்.

ஐ.நாவுக்கு இரண்டு வகையான செலவுகள். ஒன்று தன் அலுவலக நிர்வாகத்துக்கான செலவு. இன்னொன்று பல நாடுகளில் தான் மேற்கொண்டிருக்கும் அமைதிப் பணிகளுக்கான செலவு. இரண்டுக்கும் சேர்த்து வருட பட்ஜெட் எவ்வளவு இருக்கும் என்று நினைக்கிறீர்கள்? அதிகமில்லை. 11,550 கோடி ரூபாய்தான்!

பல உறுப்பினர் நாடுகள் ஐ.நாவுக்குச் செலுத்த வேண்டிய உறுப்பினர் தொகையை ஒழுங்காகச் செலுத்துவதில்லை. அதிலும், அமெரிக்காவின் அட்டகாசம் கொஞ்சநஞ்சமல்ல. அது செலுத்த வேண்டிய தொகை மட்டும் 9200 கோடி ரூபாய். ஊருக்கெல்லாம் புத்தி சொல்லும் நாடு தன் முதுகை மட்டும் பார்க்கத் தவறிக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் ஐ.நா. கிட்டத்தட்ட திவாலாகிவிடும் போல இருக்கிறது. ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்கக் கூட சிரமப்படுகிறது. ஏராளமான சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார் ஐ.நாவின் பொதுக் காரியதரிசி புட்ரோஸ் புட்ரோஸ் காலி. (அச்சுப் பிழை அல்ல, அவர் பெயரில் புட்ரோஸ் என்று இரண்டு தரம் எழுத வேண்டும்) ஆயிரம் ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பியாயிற்று. தலை போகும் அவசரம் என்றால் தவிர இனிமேல் எந்தச் சண்டை நாட்டுக்கும் அமைதிப்படையை அனுப்புவதில்லை என்று முடிவெடுத்தாயிற்று. ஏற்கெனவே சோமாலியா, ருவாண்டா ஆகிய நாடுகளிலிருந்து அமைதிப்படைகளை வாபஸ் பெற்றுக் கொண்டாயிற்று. (கட்டுப்படி ஆகவில்லை). மின்சாரச் செலவை மிச்சம் பிடிக்க ராத்திரி வேளைகளில் லிஃப்ட் இயங்குவதைக் கூட தன் அலுவலகத்தில் நிறுத்திவிட்டார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

ஐ.நா.வின் எதிர்காலம் மட்டுமல்ல, புட்ரோஸ் புட்ரோஸ் காலியின் எதிர்காலமும் கேள்விக்குறிதான். 1991-ம் வருடம் பொதுச் செயலாளர் ஆனார். இந்த டிசம்பருடன் பதவிக் காலம் முடிகிறது. மீண்டும் போட்டியிடுகிறார்.

'ம்ஹூம்... நீ வேண்டாம் போ' என்கிறது அமெரிக்கா. 'நாங்கள் மீண்டும் பதவிக்கு வந்தால் கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகையைக் கொடுத்து விடுகிறோம்' என்கிறார் கிளின்டன். ஆனால் மீண்டும் காலியை இன்னொரு ஐந்தாண்டுக்கு ஆதரிக்கத் தயாரில்லை என்றும் சொல்கிறார். இது ஒரு எலெக்ஷன் ஸ்டன்ட்! கிளின்டனை எதிர்த்துப் போட்டியிடும் குடியரசுக் கட்சி வேட்பாளர் பாப் டோல் 'கிளின்டன், காலிக்கு ரொம்பவும்தான் அடங்கிப் போகிறார்' என்று குற்றம்சாட்டிக் கொண்டிருக்கிறார். கிளின்டன் பார்த்தார். 'நாமே முந்திக் கொள்வோம்' என்று 'இன்னொரு ஐந்தாண்டு உனக்கில்லை' என்று அறிவித்துவிட்டார்.

ஆனால் அது அவ்வளவு சுலபம் அல்ல.

ஐ.நாவின் விதிகளின்படி பாதுகாப்பு கவுன்ஸில் சிபாரிசு செய்பவரை பொதுச்சபை முறைப்படி நியமிக்கும். ஆகவே பாதுகாப்புச் சபையை 'கவர்' பண்ணுவதில்தான் பொதுச் செயலாளர் பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளர்கள் முனைவார்கள். இப்போதைக்கு களத்தில் புட்ரோஸ் மட்டுமே இருக்கிறார். அமெரிக்க தேர்தல் நவம்பர் 5-ல் முடிந்தவுடன் ஐ.நா. தேர்தல். அப்போது அமெரிக்கா வேறு ஆளை நிறுத்தலாம். எனினும் சென்ற முறை காலி அவர்களுக்கு பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆதரவு அளித்தன. எப்போதும் அவருக்கு ஆப்பிரிக்க நாடுகள் 'செம' ஆதரவு கொடுக்கும். அது அப்படியே மங்காமல் இருக்கிறது.

அமெரிக்காவின் ஆதரவு இன்றியே மீண்டும் அவர் தேர்வு பெற முடியும். அப்படி வெற்றி பெற்று விட்டால் அமெரிக்கா என்ன செய்யும்? 'என் வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர் வெற்றியை நிராகரிப்பேன்' என்கிறது அமெரிக்கா.

ஆதரவு இல்லாமல் காலி அவர்கள் தோற்றுப் போனால் எப்படியும் இன்னொருவர். ஆனால் நிதி இல்லாமல் ஐ.நாவே காலியாகி விட்டால்? கேள்விக்குறிதான்.

- ராணிமைந்தன்



"என்ன செய்யப் போகிறாய்?" என்றான் அருள்மணி என்னைப் பார்த்து. பின்னணிப் பாடகன் அவன். எனக்கும், அவனுக்கும் ஏழு வருஷப் பழக்கம். கோடம்பாக்கத்தில் கிட்டத்தட்ட எல்லா ஸ்டூடியோக்களிலும் ஏறி இறங்கியிருக்கிறோம். திருவல்லிக் கேணியில் உள்ள புறாக்கூண்டு லாட்ஜ் அறை இன்னமும் காலி செய்யப்படாமல் எங்கள் பெயரில்தான் உள்ளது.

"அம்பாசமுத்திரத்துக்கு திரும்பிப் போயிடப் போறேன்."

"போயி என்ன செய்வ? அப்பா கடையில் பலசரக்கு மடிப்பியா?"

"ஆமாம்."

"அதுக்குத்தான் எம்.ஏ. தமிழ் படிச்சியா?"

"எம்.ஏ. தமிழ் படிச்சா பலசரக்கு மடிக்கக் கூடாதுன்னு விதியா?"

"ப்ச். நான் அப்படிச் சொல்லலை. அப்புறம் நீ ஏன் மெட்ராஸ் வரணும். நாயை விடக் கேவலமா ஒவ்வொரு ப்ரொட்யூசர் காலையும் பிடிச்சு சான்ஸ் கேட்கணும்?"

"என்ன பிரயோஜனம்? ஏழு வருஷமா எனக்கும், என் தமிழுக்கும் அவமானத்தைத் தவிர என்ன கிடைத்தது? ஒரே ஒரு பாட்டு அருள். ஒரே ஒரு பாட்டு. ஊத்திக் கொண்ட ஒரு படத்தில் பாட்டு எழுத ஒரு சான்ஸ் கிடைச்சதைத் தவிர, வேறு என்னால் என்ன சாதிக்க முடிந்தது?" என்றேன்.

என்னைப் பற்றி ஓரளவு உங்களுக்குத் தெரிந்திருந்தாலும் முழுவதும் சொல்லி விடுகிறேன். தமிழ் எனது மூச்சு என்றால் மிகையாகப்படும். பி.எஸ்ஸி., படிக்கும் பொழுது இரண்டாவது மொழியான தமிழில் பல்கலைக் கழகத்தில் முதலாவதாக வந்தேன். மேற்கொண்டு பௌதிகத்தில் பட்டமேற்படிப்பு படிக்க வலிய வந்த சந்தர்ப்பத்தை உதறி விட்டு எம்.ஏ. தமிழில் சேர்ந்தேன். எனக்குள் சரம், சரமாக இசையின் அரூபங்களும், அதை உருவகப்படுத்தும் தமிழ் வரிகளும் ஓடிக் கொண்டே இருப்பதை என்னால் நிறுத்தவே முடியாது. இவ்வளவும் எதற்குச் சொல்ல வருகிறேன் என்றால் என் புலமை, எனக்குள் இழையும் இசைத் தமிழ் காரணமாக என்னால் சிறப்பாக வந்திருக்க முடியும். எத்தனை ஹார்மோனிய லல்லல்லாக்கள் முன், என் கவிதைப் பூக்கள் உதிர்ந்து வாடி விட்டன. ஏன் என்பது இந்த ஏழு வருடங்களாகப் புரியவில்லை.

எங்கள் மௌனத்தை கலைப்பதைப் போல

சத்தியப்பிரியன்



வாசலில் செருப்பு சப்தம் கேட்டது. பத்து வயது மதிப்புள்ள சிறுவன், "அருள் சார்! ஃபோன் வந்திருக்கு உங்களுக்கு" என்றான். கீழே போனான். நான் அன்றைய தேதி தினத்தாளை கையில் எடுத்துக் கொண்டேன்.



மீண்டும் மாடியேறி அருள் மணி வந்தபொழுது அவனது முகம் அதிகமாக மலர்ந்திருந்தது. சிகரததைத் தொட்டவன் போலிருந்தான்.

"என்ன?" என்றேன்.

ஒரு மூன்றெழுத்துப் பட நிறுவன முதலாளி, ஃபோன் செய்து அவரது அடுத்த படத்தில் மொத்தம் ஏழு பாடல்களையும் நான்கு டூயட், மூன்று மோனோ - இவனே பாட வேண்டும்; ஒப்பந்தம் போட இரவு ஏழு மணிக்கு வரச் சொன்னதைக் கூறியபொழுது அவன் முகம் மின்னி ஜ்வலித்தது.

பச்சையாகச் சொல்லப் போனால் நான் பொறாமையால் செத்துக் கொண்டிருந்தேன்.

"இன்னிக்கு ஒலியும் - ஒளியும் நிகழ்ச்சியில் சென்னை தொலைக்காட்சி நிலையம் சிறகுகள் விரியும் படத்திலிருந்து பாட்டு ஒளிபரப்பப் போகுது" என்றேன்.

"நீ எழுதின பாட்டா?" ஆவலாக அருள்மணி கேட்டான்.

"தெரியலை. என்ன பாட்டுன்னு போட மாட்டாங்க" என்றேன்.

சிறிது நேரம் அருள்மணி பேசவில்லை.

"நான் ஒண்ணு நினைச்சு வச்சிருக்கேன் வேலு! அது மட்டும் சரியா வொர்க்-அவுட் ஆனா நீ ஓஹோன்னு வருவ..." என்றான்.

அருள்மணி தனது ஜோல்னா பையில் ஒரு டைரி, ஒரு ஆல்பம் இரண்டையும் எடுத்து வைத்துக் கொண்டான். குளிக்கும்பொழுது மட்டும் என்னைப் பிரிந்திருக்கும் எனது கவிதைகள் அடங்கிய இரண்டு குயர் தடிமனான நோட்டு புத்தகத்தை வாங்கி அவனது பையில் போட்டுக் கொண்டான். என்னையும் அழைத்துக் கொண்டு கீழிறங்கினான்.

டெலிஃபோன் பூத்தில், வரிசையில் காத்திருந்தான். கடையில் ஓடிக் கொண்டிருந்த ஹிந்தி ட்யூனுக்கு பாடல் எழுதச் சொன்னான். நான் பொத்தானைத் தட்டினால் இயங்கும் எந்திரம் போல, ட்யூன் மாறாமல் பாட்டு எழுதி அவன் கையில் கொடுத்தேன். என் முதுகில் உற்சாகமாகத் தட்டி விட்டு ஃபோன் பண்ணினான்.

"மகாலிங்கத்துக்கு கனெக்ஷன் கொடுக்க முடியுமா? அருள்மணின்னு சொல்லுங்க." ரிஸீவரை மூடிக் கொண்டு அவன் சிரித்த அந்தக் கணத்தில் அவன் மனத்தில் என்ன இருந்தது என எனக்குத் தெரியாது.

"யாரு மாலியா? நான் அருள்டா. மாலி! ஒரு சின்ன தகவல் வேணும். இன்னிக்கு ஒலியும் - ஒளியும் நிகழ்ச்சியில் சிறகுகள் விரியும் படத்தில் என்ன பாட்டு ஒளிபரப்பப் போறீங்கன்னு சொல்ல முடியுமா? ஒரு நிமிஷமா? ஓகே ஐ'ல் வெய்ட்.... என்னது, 'தென்றல் சுமந்து வரும் நினைவில்' என்ற பாடலா? தேங்க்யூ. சும்மாத்தான். ஆண்டவன் புண்ணியத்தில் நல்லா போயிட்டிருக்குப்பா. இன்னிக்குக் கூட செட்டியார் கம்பெனிக்கு அக்ரிமெண்ட் போடத்தான் போறேன். ஓகே. வெச்சிடட்டுமா?"

டெலிஃபோனை வைத்துவிட்டு என் தோள்களை உலுக்கி வெரி ஃபைன். உனது தென்றல் சுமந்து வரும் நினைவில், திங்கள் தேயுதடி இரவில்'ங்கற பாடலைத்தான் ஒளிபரப்பப் போறாங்க."

"ஸோ வாட்?"

"சில சின்னச் சின்ன மூடநம்பிக்கைகள்... பலிக்குதோ இல்லையோ யாராலும் நினைக்காமல் இருக்க முடிவதில்லை. செட்டியாரிடம் நான் ஒப்பந்தம் போட்டு முடிச்சப்புறம் உன்னைப் பற்றி முழுமையா சொல்லப் போறேன். உன் பாடலை பைன்ட் நோட்டு புத்தகத்தில் வாசித்துக் காட்டுவதை விட விஷுவலா சொன்னா இன்னும் எஃபக்டிவா இருக்கும் இல்லியா? பேசிக்கிட்டே இருக்கும்போது இன்னிக்கு உன் பாட்டு டீ.வி.யில் டெலிகாஸ்ட் ஆகுதுன்னு சொல்லி செட்டியார் அதைக் கேட்டா உனது அலைச்சலுக்கு பலன் கிடைக்கும்னு நம்பறேன்" என்றான்.

அவன் கைகளைப் பற்றிக் கொண்டேன். என் கைகள் நடுங்கிக் கொண்டிருந்தன.

"சொல்லுங்க தம்பி" என்றார் செட்டியார். சில மனிதர்கள் நினைப்பதை விட எளிமையாக இருக்கிறார்கள்.

"என்ன பெயரில் பாட்டு எழுதறீங்க?"

"தமிழ்வேல் என்ற பெயரில்"

"சினிமாவில் பாட்டு என்பது சாதாரணமாப் பார்த்தா தேவைப்படாத விஷயமா படும். ஆனா மக்களின் பாலியல் வக்ரங்களின் வடிகால் இந்தப் பாடல் காட்சிகள். சர்வதேசத் திரைப்படங்களில் வரும் படுக்கையறைக் காட்சிகளைப் போலவே இவை. ஆயிரக்கணக்கில் பாடல் எழுதிய கண்ணதாசனின் பாடல்களில் எழுபத்தைந்து சதவீதம் காதல் பாடல்கள்தான். ஆனால் அதையும் மீறி கவிதை அமைவதுதான் ஒரு கவிஞனின் வெற்றி. எது வரைக்கும் படிச்சிருக்கீங்க?"

"எம்.ஏ. ஃபர்ஸ்ட் க்ளாஸ்" என்றான் அருள்மணி.

செட்டியார் கையெடுத்துக் கும்பிட்டார்.

"வேணாம் தம்பி. சினிமாப் பொழப்பு சூதாட்டத்தை விட மோசமான தொழில். பாம்பாட்டி பாம்பாலதான் சாவான் என்பது மாதிரி சினிமாக்காரன் சினிமாவாலதான் சாவான். நூறு படத்துக்கு மேல படம் எடுத்தவன் பேசற பேச்சா இதுன்னு உங்களுக்குத் தோணும். சினிமா தவிர அல்லைட் பிஸினஸ் நெறைய பண்றதுனாலதான் எங்க நிறுவனம் பிழைக்குது. இப்போ வேணாம் சினிமான்னு சொல்லுங்க. எங்க ட்ரஸ்டியில மூணு பள்ளிக்கூடம் சென்னையில் நடக்குது. வாத்தியாரா சேர்த்து விட்டுடறேன்" என்றார்.

எனக்குள் பதிந்து போய் விட்ட வெறி தடத்தை எளிதில் அழிக்க முடியாது. சில்லறை வேலையாக இந்த ஏழு வருடத்தில் நான்கு நிறுவனங்களிலாவது வேலை பார்த்திருப்பேன். எல்லா வேலைகளையும் பாதியில் ராஜினாமா செய்த காரணம் புதுப்படத்திற்கு பூஜை. பிரபல இசையமைப்பாளர் ட்யூனுக்கு பாட்டெழுத

வேண்டும் என தகவல் வரும். ஓடி விடுவேன். இதே அறிவுரையை, பாட்டெழுதும் - ஓரளவு புகழ்பெற்ற பாடலாசிரியர்களிடம் எத்தனை முறை கேட்டிருப்பேன். நானும், அருள்மணியும் இப்பொழுது மிகப் பிரபலமாய் இருக்கும் இசையமைப்பாளருடன் கிராமம், கிராமமாக அரசின் பிரசாரப் பாடல்களை போய்ப் பாடி இருக்கிறோம். செங்கை மாவட்டத்தில் எங்கள் சைக்கிள் சுற்றாத கிராமமே இல்லை எனலாம். இசையமைப்பாளர் ரெடி மசாலா பொடி மாதிரி ட்யூன் போடுவார். நான் சூடாக பாட்டெழுதுவேன். அருள்மணி பாடுவான். எல்லாம் எதற்காக? பள்ளிக்கூடத்தில் வெண்பா இலக்கணம் நடத்தவா?

"எவ்வளவு பாட்டு இதுவரைக்கும் எழுதி இருக்கீங்க?"

நான் எனது நோட்டு புத்தகத்தை எடுத்து நீட்டினேன்.

அவர் பார்த்து முடிக்கும்வரை தவித்துக் கொண்டிருந்தேன்.

"உவமைகள் எல்லாம் நல்லா வந்திருக்கு. புதுசாவும் இருக்கு. விஷுவலா உங்க பாடல் வரிகள் எப்படி அமையுதுன்னு தெரிஞ்சா இன்னும் நல்லா இருக்கும்" என்றார் செட்டியார்.

காத்துக் கொண்டிருந்தவன் போல அருள்மணி அன்றைய தினம் சென்னைத் தொலைக்காட்சி நிலையம் ஒளிபரப்பப் போகும் எனது பாடல் காட்சியைச் சொன்னான். செட்டியார் ஆர்வமாக தொலைக்காட்சிப் பெட்டியை உயிர்ப்பித்தார்.

மணி ஏழு ஐம்பது.

நான் காத்திருந்த பொன்னான கணம் தொடங்கியது.

தென்றல் சுமந்து வரும் நினைவில்
திங்கள் தேயுதடி இரவில்
கண்கள் சுமந்து வரும் கனவில்
நெஞ்சம் ஓயுதடி விரைவில்

என்ற எனது பாடலை புதுமுகம் அஜீத்குமார் ஊட்டி மலைப் பின்னணியில் பாடி வருவதான காட்சி.

இதற்குக் கூட அருள்மணிதான் சந்தர்ப்பம் வாங்கித் தந்தான். தொலைதூரத்தில் இருக்கும் காதலியின் கடிதம் கண்டதும் கதாநாயகன் பாடுவதாக காட்சி அமைப்பு. முழுவதும் ஊட்டியில் எடுக்கப்பட்ட பாடல்.

இதில் இன்னொரு சிறப்பு அம்சம். கதாநாயகன் வர்ணிக்க, வர்ணிக்க பாடல் முழுவதும் ஒரு மலைஜாதிப் பெண் கேட்டுக் கொண்டு தொடர்ந்து வருவாள். இரண்டு க்ளோசப் கூட அவளுக்கு வரும். க்ரூப் டான்ஸர் சுமதியைத்தான் அந்த க்ளோசப்புகளுக்கு பயன்படுத்தியிருந்தார்கள். பாடல் காட்சியும், பாடல் வரிகளும் கோடம்பாக்கம் வட்டாரத்தில் பிரமாதமாகப் பேசப்பட்டும் என் அதிர்ஷ்டமின்மை காரணமாகவோ, என்னவோ படம் சரியாகப் போகவில்லை.

அந்தப் பாடல் காட்சி முடிந்ததும் செட்டியார் தொலைக்காட்சிப் பெட்டியை அணைத்து விட்டார். பாடல் எப்படி இருந்தது என கேட்கத் தயக்கமாக இருந்தது. யோசனை செய்தவண்ணம் குறுக்கும், நெடுக்குமாக நடந்தார். "அருள்! நாளைக்கு நம்ம ஃப்ளோருக்கு பாட வர்றப்போ தம்பிக்கு நல்ல முடிவு சொல்றேன்" என்றார்.

மறுநாள் அருள்மணி வீட்டிற்குப் போனேன்.

"கங்கிராஜுலேஷன்ஸ்" என்றபடி அருள்மணி என் கைகளைப் பிடித்துக் குலுக்கினான்.

ஒரு நிமிடம் பரவசமாகி, "செட்டியார் என்ன சொன்னார்?"

"அவங்க நிறுவனம் நடத்தும் வாரப் பத்திரிகையில் உன்னை உதவி ஆசிரியரா சேரச் சொல்லிட்டார். மாசம் ரெண்டாயிரம் சம்பளம்."

வெறுப்பாகி "போடா" என்றேன்.

"சினிமா பாட்டைப் பத்தி கன்னா, பின்



அமைச்சர்: குடம் குடமாய்த் தண்ணீரை ஊற்றலாம் அரசே!

அரசன்: சே! கஜானா நிரம்பி வழிய என்ன செய்யலாம்னு உம்மிடம் போய் யோசனை கேட்டேன் பாரும்!

—உ. ராஜாஜி

னான்னு திட்டறாரப்பா செட்டியார். குறிப்பா இப்பொ வர்ற பாட்டில் பட்லர் இங்கிலீஷ்தான் இருக்கு. ஒருத்தன் கூடத் தமிழ்க் கவிஞன்னு சொல்லிக்க லாயக்கில்லைன்னு சொல்றார். இன்னொரு விஷயம்! செட்டியார் தமது நிறுவனத்தோட நூத்தி இருபத்தைந்தாவது படத்துக்கு பூஜை போட்டுட்டார். கதாநாயகி யார் தெரியுமா?" என்றான்.

"யார் கரீஷ்மா கபூரா?" என்றேன் கடுப்புடன்.

"இல்லை சுமதி. எந்த சுமதின்னு கேள். உன் பாடல் வரிக் காட்சியில் மலைஜாதிப் பெண்ணாக ஒரு துணை நடிகை வருமே. அதுதான் கதாநாயகி. க்ளோசப் காட்சிகளில் ஒப்பனையற்ற அவள் முகத்தில் தெரிந்த அப்பாவித்தனம்தான் காரணம்னு செட்டியார் சொன்னார்!"

நான் அதிர்ந்து போய் நின்றேன்.

மனசில இருந்தது கொட்டிட்டேன்:



காலை வாரக் காத்துக் கொண்டிருப்பார்கள்!

— வாழப்பாடி ராமமூர்த்தி

சென்னை சட்டக்கல்லூரியில் நான் படிக்கும்போது 'தேசிய மாணவர் தமிழ் வளர்ச்சிக் குழு' என்ற ஓர் அமைப்பை ஸ்தாபன காங்கிரஸ் மாணவர்களான நாங்கள் நடத்திக் கொண்டிருந்தோம். காங்கிரஸ்காரர்களுக்குத் தமிழ் உணர்வும், மொழிப்பற்றும் கிடையாது என்பது போன்ற ஒரு தோற்றத்தை தி.மு.க. உருவாக்கியிருந்தது. அதை உடைக்கவே நாங்கள் இந்த அமைப்பைத் துவக்கினோம். அந்த அமைப்பின் மாநில பொருளாளராக நான் இருந்தேன். சென்னை உட்பட மாவட்டத் தலைநகர்களில், தமிழ் வளர்ச்சிக் குழுவின் சார்பாக நிறைய பொதுக்கூட்டங்கள் நடத்தினோம். இதன் காரணமாக, தலைவர் காமராஜ் அவர்களை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

சட்டப் படிப்பு முடிந்து ஊருக்குத் திரும்பும் போது, பெரியவர் (காமராஜ்) அவர்களைச் சந்தித்துச் சொல்லிவிட்டுப் போகலாம் என்று சென்றேன். 'ஊருக்குப் போய் என்ன செய்யப் போகிறாய்' என்று கேட்டார். 'கட்சி வேலைதான் செய்யணும்' என்றேன். "உன்னை சேலம் மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவர் பதவியில்

பிரத்யேகமாய் அதைக் காட்டிக் கேட்டானாம் ஹிரண்யன். தானே அருகிலிருந்து கட்டுவித்த தூணில் நாராயணன் இருக்க முடியாது என்கிற தீர்மானம் அவனுக்கு!

'ஏன் இருக்க முடியாது?' என்று கேட்டது குழந்தை. உடனே அந்த இடத்திலிருந்து ஆவிர்பவித்தான் பரமாத்மா. சிம்ஹமாய் - நரம் கலந்த சிம்ஹமாய்த் தோன்றினான்.

'ஏன் சிம்ஹமாகத் தோன்ற வேண்டும்? புலியாக வரக்கூடாதா?' என்றால்... நாம் நினைக்கிற, விரும்புகிற, ரூபத்தில் தோன்றுகிறவன் அவன்.

குழந்தை பிரஹலாதனை மடியில் உட்கார்த்திக் கொண்டு இரணியன் கேட்கிறான் :

"உலகிலேயே மிகவும் சாது யார்,...?" என்று

அப்போது பிரஹலாதன் 'இதைத்தான் சாது என்று நினைக்கிறேன்...' என நரசிம்ஹனைச் சொன்னானாம். எனவேதான் அந்தக் குழந்தை விரும்பிய ரூபத்திலே எம்பெருமான் தோன்றினார்.

'இசை பாடிப் பாடி கண்ணீர் மல்கி எங்கும் நாடி நாடி நரசிங்கா என்று வாடி வாடும் இவ்வாறுதலே...' என்று நம்மாழ்வார் பாடுகிறார். இவரது ஆசையைப் பாருங்கள்! வைகுண்டத்திலே போனால் பரவாசுதேவனாக, ஆதிசேஷன் கர்ப்பத்தில் - ஒரு கால் மடித்து, ஒரு காலை ஒயிலாகத் தொங்கவிட்ட நிலையில் நாராயணனைப் பார்க்கலாம். ஆனால் ஆழ்வாரோ அங்கேயும் நரசிம்ஹனையே பார்க்க வேண்டும் என்கிறார்!


சொட்டை நம்பி என்று ஒருவர் ஸ்ரீரங்கத்திலே இருந்தார். அவருடைய அந்திம காலம் நெருங்கியபோது, சிஷ்யர்களெல்லாம் சூழ்ந்திருந்து கேட்டார்கள் : "இப்போது உங்கள் மனத்திலே என்ன நினைப்பு ஓடுகிறது...? நினைப்பதைச் சொல்லுங்கள்" என்றார்கள்.

அதற்கு அவர் சொன்னார், "எனக்கு நல்ல ஆசார்ய சம்பந்தம்; மோக்ஷத்தைக் கட்டாயம் அடைந்து விடுவேன். திரும்பி வருதல் இல்லாத சாசுவத நிலையை அடைவேன். வைகுண்டம் கட்டாயம் போவேன். ஆனால்... வைகுண்டத்துக்குப் போய்ப் பார்ப்பேன்... அங்கிருக்கும்படியான பரமாத்மா, நம் க்ஷேத்திர ரங்கநாதரைப் போல இல்லாவிட்டால் முறித்துக் கொண்டு வந்துவிடுவேன்...!"

சொட்டை நம்பி வைகுண்டத்திலேயும் ரங்கநாதரையே சேவிக்க விரும்பிய மாதிரி, ஆழ்வார் மோஹத்திலும் நரசிம்ஹ மூர்த்தியையே சேவிக்க விரும்புகிறார்.

அந்த மூர்த்தியை சேவித்தவருக்கு வேறு மூர்த்தியை சேவிக்கப் பிடிக்குமோ!

(தொடரும்)



மகாத்மாவின் படம் அப்படியேதான் இருக்கிறது!

கல்கி 8.9.96 இதழில் 'தில்லி நியூஸ்' என்ற தலைப்பின் கீழ் "தமது அறையிலிருந்த மகாத்மா காந்தியின் படத்தைக் கழற்றி வெளியேற்றி விட்டார், முரசொலி மாறன்" - என்று பிரசுரித்திருந்தது உண்மைக்குப் புறம்பானது. மகாத்மா காந்தியின் உருவப்படம் என்றும் போல் இன்றும் மான்புமிகு தொழில்துறை அமைச்சரின் அறையை அலங்கரித்துக் கொண்டுதானிருக்கிறது.

புதுதில்லி - 11 ஜெ. வைத்தியனாதன்,
கூடுதல் தனிச் செயலாளர்.

(மேற்படி செய்தி கல்கியில் மட்டுமின்றி டைம்ஸ் ஆஃப் இந்தியா போன்ற தேசிய நாளிதழ்களிலும் இடம் பெற்றுள்ளது. அதையொட்டி ஆசிரியருக்குக் கடிதங்கள் பகுதியிலும் வாசகர்கள் எழுதியுள்ளனர். எவ்வாறாயினும் அண்ணலின் படம் அமைச்சரின் அறையிலிருந்து அகற்றப்படவில்லை என்பதை அறிந்து ஆனந்தமடைகிறோம்! — ஆர்.)

தமிழ்க்கை

சு. கிருஷ்ணமூர்த்தி

"த்ரயம்பகஸ்ய அட்டஹால" – சிவ பிரானின் அட்டகாசச் சிரிப்பு.

மேகதூதத்தில் இடம் பெறும் காளிதாசனின் வர்ணனை.

இமயமலையின் வெள்ளிச் சிகரங்களை இவ்வாறுதான் வருணிக்கிறான் காளிதாசன்.

பூரிக் கடற்கரையில் என் முன்னால் குதித்து விளையாடும் வெள்ளை யலைகளும் இமயமலைச் சிகரங்களை, பரமசிவனின் அட்டகாசச் சிரிப்பை நினைவூட்டின.

என் கண்களை யாரோ பொத்தினார்கள். கூடவே 'பாபா' என்றொரு குழந்தைக் குரல் கேட்டது.

கண்களை மறைத்த கைகளை விலக்கிப் பார்த்தேன்.

ஒரு பெண் குழந்தை. சுமார் இரண்டு வயதிருக்கும். அதன் கண்களில் திகைப்பு; வேற்று மனிதர் யாரிடமோ வந்து விட்டோமே என்ற பயம். அது மிரள மிரள விழித்தது எனக்கு வேடிக்கையாக இருந்தது.

"நான் இங்கேன்னா இருக்கேன் சுக்கி" என்று சொல்லிக் கொண்டே அங்கு ஓடி வந்தான் ஓர் இளைஞன். "சாரி, சார்! கொழந்தை உங்களைத் தொந்தரவு பண்ணிடுச்சு..." அவனது ஆங்கில உச்சரிப்பில் வங்காளித்தனம்.

"பரவாயில்லே... சின்னக் கொழந்தைதானே!" நான் வங்காளியில் பேசினேன்.

என் உச்சரிப்பில் தமிழ் ஒலித்ததை அவன் கவனித்து விட்டான். "நீங்க மதராசியாயிருந்துக்கிட்டு இவ்வளவு நல்லா வங்காளி பேசறீங்களே! எங்கேயிருந்து வந்திருக்கீங்க?"

"நான் தமிழன்தான். ஆனா கல்கத்தாவாசி, முப்பது வருஷமா..."

இவ்வாறு பேச்சு வளர்ந்தது.

இளைஞன் சொன்னான் – "நானும் கல்கத்தாவிலேதான் இருக்கேன். என் பேரு ரமேன் தத்தா. அங்கே இண்டஸ்ட்ரியல் கெமிக்கல் கம்பெனியிலே வேலை பார்க்கறேன். என் கூட ஒரு மதராசி வேலை செய்யறார். அவர் பேரு சந்திரன்..."

"சந்திரனா?... அவரை எனக்கும் தெரியுமே!" என்று சொன்னேன்.

"அப்படியா? நாம ரொம்ப நெருங்கி வந்துட்டோம்... நான் 'புலின் புரி' ஓட்டல்லே தங்கியிருக்கேன்... சுபா, இங்கே வா. இவதான் என்னோட ஒய்ஃப்... சார் நம்ம சந்திரனோட சிநேகிதராம். இவர் பேரு..."

"சதாசிவம்..."

"சதாசிவமா?... சதாசிவம்னு ஒருத்தர் வங்காளி கத்துக்கிட்டு வங்காளிப் பத்திரிகைகளிலே எழுதறாரே, வங்காளி நாவல்களைத் தமிழிலே மொழிபெயர்க்கறாரே அவர்..."

"நான்தான்" என்றேன். சற்றும் அறிமுகமில்லாத ஒருவருக்கு என் பெயர் தெரிந்திருக்கிறதே என்ற பெருமித உணர்வு எனக்கு.

"சந்திரன் உங்களைப் பத்தி நிறையச் சொல்லியிருக்கார். நீங்க எங்க மொழியைக் கத்துக்கிட்டு அதிலே எழுதறது பத்தி எனக்கு மட்டுமில்லே, எல்லா வங்காளிகளுக்கும்



ரொம்ப மகிழ்ச்சி, பெருமை... ஆனா எங்களுக்குத்தான் பிற மொழிகளைக் கத்துக் கறதிலே ஆர்வம் இல்லே..."

இவ்வாறு எங்கள் உரையாடல் தொடர்ந்தது. இதற்குள் என் மனைவி உமாவும் அங்கே வந்து விட்டாள். அவளை ரமேன் தம்பதிக்கு அறிமுகப்படுத்தி வைத்தேன்.

இதன் பிறகு மூன்று நான்கு நாட்கள் நாங்கள் ரமேன் குடும்பத்தினரைப் பலமுறை, பல இடங்களில் - கொனார்க்கில், ஜகந்நாதர் கோவில் வாசலில், புவனேஸ்வர் கோவிலில் - சந்தித்து உரையாடினோம்.

ஒருநாள் காலையில் ரமேன் என் ஓட்டல் அறைக்கு வந்தான். அவன் சற்று படபடப்பாகக் காணப்பட்டான்,

"என்ன விஷயம்?" என்று கேட்டேன்.

"சதாசிவம் சார், நான் ஒரு இக்கட்டிலே மாட்டிக்கிட்டிருக்கேன். நீங்கதான் என்னைக் காப்பாத்தணும்!"

"என்ன நேர்ந்தது, சொல்லுங்க!"

"நேத்திக்கு நாங்க கோவிலுக்குப் போயிருந்தபோது யாரோ என் பர்சைத் திருடிட்டான். சுளையா எழுநூறு ரூபா போயிடுச்சு. இன்னிக்கு நான் ஊர் திரும்பணும். ஓட்டல் பில்லுக்குப் பணம் கொடுத்தாத்தான் கிளம்ப முடியும். என்கிட்டே ஐநூறு ரூபா குறையுது. நீங்க தயவுசெஞ்சு அந்தப் பணத்தைக் கொடுத்தீங்கன்னா, நீங்க கல்கத்தா திரும்பி வந்ததும் உங்களுக்குத் திருப்பித் தந்திடுவேன்..."

அவனைப் பார்க்கப் பாவமாயிருந்தது எனக்கு. வேற்றூரில் குடும்பத்துடன் இக்கட்டில் சிக்கியிருக்கிறான். நான் அவனுக்கு உதவாவிட்டால் துன்பத்துக்கும் அவமானத்துக்கும் உள்ளாவான்.

நல்லவேளையாக என்னிடம் உபரியாகப் பணம் இருந்தது. அவனுக்கு 500 ரூபாய் கொடுத்து என் கல்கத்தா விலாசத்தையும் எழுதித் தந்தேன்.

"நீங்க கடவுள் மாதிரி வந்து என்னைக் காப்பாத்தியிருக்கீங்க. ஓங்க உதவியை நான் ஒரு நாளும் மறக்க மாட்டேன். நீங்க கல்கத்தா வந்ததும் நான் ஓங்களை வந்து பார்க்கறேன்..." என்று சொல்லி விட்டுப் போனான்.

அவன் போன பிறகு உமா சொன்னாள், "முன்பின் தெரியாத ஒரு வேத்து மனுசனுக்கு இப்படிப் பணத்தை எடுத்துக் கொடுத்தீங்களே, அவன் பணத்தைத் திருப்பித் தருவான்னு என்ன நிச்சயம்?"

எனக்கு அவள் மேல் கோபம் வந்தது. அவளுக்கு எப்போதும் எல்லார் மேலேயும் சந்தேகந்தான்.

"அவன் மோசம் பண்ணுவான்னு நீயா ஏன் நினைச்சுக்கறே? உலகத்திலே எல்லாரும் அயோக்கியனாத்தான் இருக்கணுமா? மனுசன் மேல நம்பிக்கை வைக்கணும். நம்பிக்கைதான் வாழ்க்கைக்கே ஆதாரம். அது மட்டும் இல்லேன்னா வாழ்க்கை பாலைவனமாயிடும்."

"நீங்க ஒண்ணும் பெரிசா லெக்சர் பண்ண வேண்டாம். இவன் பணத்தைத் திருப்பிக் கொடுக்கறானா இல்லையான்னு நான்

பார்க்கத்தானே போறேன்" என்று சொல்லி விட்டு அங்கிருந்து போனாள் உமா.

நான் கல்கத்தா திரும்பிப் பல வாரங்கள், மாதங்கள் கழிந்து விட்டன. ரமேனைக் காணோம். அவனிடமிருந்து கடிதங் கூட இல்லை. இப்போது எனக்கு அவன் மேல் சந்தேகம் ஏற்படத் தொடங்கி விட்டது. உமா சொன்னது போல் அவன் ஒரு மோசடிப் பேர்வழியோ? இல்லாவிட்டால் ஏனிப்படி நடந்து கொள்கிறான்?

அவனைப் பற்றிய என் சந்தேகத்தை வெளிக்காட்டவும் கூச்சமாயிருந்தது. வெளிக் காட்டினால் உமா என்னை ஏளனம் செய் வாள். "பார்த்தீங்களா, நான் சொன்னது சரி யாயிடுச்சு. நீங்கதான் வெளுத்ததெல்லாம் பாலுன்னு நினைச்சு ஏமாந்து போயிட்டீங்க?" என்று சொல்லுவாள். "இனிமேலாவது இந்த மாதிரி அசட்டுத்தனம் செய்யாதீங்க, கண்ட பேர்வழிகளை நம்பி ஏமாறாதீங்க!" என்று அறிவுரை கூறுவாள்.

ஆகையால் நான் அந்த நிகழ்ச்சியையே மறந்து விட்டாற்போல நடித்தேன்.

நான் நடித்து என்ன பிரயோஜனம்! உமா மறக்கவில்லையே! அவள் அடிக்கடி கேட் பாள், "என்னங்க, அந்த ரமேன் இன்னும் பணங் கொடுக்கல்லியே!"

நான் அலட்சியமாகப் பதில் சொல்வேன், "இல்லே, ஆனா கொடுக்காம இருக்க மாட் டான். அவனுக்கு இப்போ என்ன அசௌ கரியமோ! எப்படியும் கொடுத்துடுவான்..."

"அது சரிதான், அசௌகரியமாயிருந்தா நேரே வந்து சொல்லியிருக்கலாமே, 'இப்போ அசௌகரியம், அப்புறம் கொடுக்கறேன்'னு!... ஒரு லெட்டராவது போட்டிருக்கலாமே!"

"சொன்னபடி பணத்தைத் திருப்பித் தர முடியல்லியேன்னு அவனுக்கு லஜ்ஜையா யிருக்கலாம். அதனாலேதான்..." என்று நான் சப்பைக் கட்டு கட்டுவேன்.

"ஆமாமா, இவங்களுக்கெல்லாம் லஜ்ஜை, கூச்சம் எல்லாம் இருக்காக்கும்!... அவன் ஒங்களுக்கு நல்லா நாமம் போட்டுட்டான்!"

நாளாக நாளாக எனக்கும் தோன்றிவிட் டது, நான் ஏமாற்றப்பட்டு விட்டேனென்று. பணநஷ்டங் கூடப் பெரிதில்லை எனக்கு. நான் என்னை ஒரு மகாபுத்திசாலியாக நினைத்துக் கொண்டிருக்க, ஒரு சராசரி இளைஞன் என்னை இவ்வளவு சுலபமாக முட்டாளாக்கி விட்டானே என்பதுதான் எனக்கு மிகவும் வருத்தமளித்தது. என்னை விட வயதிலும் படிப்பிலும் அனுபவத்திலும் குறைந்த உமாவின் கணிப்பு சரியாகி விட்டதே என்ற உணர்வு எனக்கு உறுத்தலாயிருந்தது.

இனியும் நான் சும்மா இருக்கக் கூடாது என்று முடிவு செய்தேன். ரமேனைத் தேடிக் கண்டுபிடித்து அவனிடமிருந்து பணத்தை வசூல் செய்ய வேண்டும். வசூலிக்க முடியா விட்டாலும் அவன் உண்மையில் எப்படிப் பட்டவன் என்பதையாவது தெரிந்து கொள்ள வேண்டும்.

பூரியில் என் விலாசத்தை வாங்கிக் கொண்டவன் ஏன் அவனுடைய கல்கத்தா விலாசத்தை எனக்குக் கொடுக்கவில்லை? இந்த ஒரு காரணத்துக்காகவே நான் அவனைச் சந்தேகித்திருக்க வேண்டுமோ?

இல்லையில்லை, இதற்காக அவனை சந்தேகிப்பது உசிதமில்லை. அவன், தானே பணத்தை என்னிடம் கொண்டுவந்து கொடுப் பதாக இருந்ததால் எனக்கு அவனது விலாசம் அவசியமில்லை என்று நினைத்திருக்கலாம்...

ஒருநாள் சந்திரனின் அலுவலகத்துக்குப் போனேன். வெகு நேரம் அவனுடன் ஏதேதோ பேசிக் கொண்டிருந்துவிட்டு பிறகு கேட்டேன், "ரமேன் தத்தான்னு ஒரு இளைஞன் இங்கே வேலை பார்க்கறானா?"

"பார்த்துக்கிட்டிருந்தான், இப்போ இல்லே. நீ ஏன் அவனைப் பத்திக் கேக்கறே? அவனைத் தெரியுமா ஒனக்கு?"

"நாலைஞ்சு மாசம் முன்னாலே அவனைப் பூரியிலே சந்திச்சேன். இப்போ வேலையை விட்டுட்டானா?"

"அவனா விடல்லே... விடும்படி நேர்ந்துடுச்சு..."

"ஏன்?"

"ரமேன் நல்லவன்தான், ஆனா ஊதாரி. தாம்தூம்னு ஆடம்பரச் செலவு செய்வான். அவன் கடன் வாங்காத ஆளே ஆபீசிலே இல்லே. வாங்கின கடனைத் திருப்பிக் கொடுக்

ஜாலி போட்டி - 7 முடிவு

1. என் கேள்விக்கு என்ன பதில்
2. உழைப்பாளி
3. வீரா
4. முரட்டுக்காளை
5. எங்கேயோ கேட்ட குரல்
6. நாட்டுக்கு ஒரு நல்லவன்

மேற்கண்ட ரஜினியின் ஆறு படங்களின் ஸ்டில்களைத்தான் 7வது போட்டிக்குத் தந்திருந்தோம்.

சரியாகக் கண்டு பிடித்தவர்களுள் குலுக்கல் முறையில் தேர்வாகி ரூ.5000/- பரிசு பெறுபவர்:

ஜி. கமலக்கண்ணன்,
1/100 ஏ. நேரு தெரு,
முடிச்சூர்,
(வண்டலூர் அஞ்சல்)
சென்னை - 600 048.

கற வழக்கமே கிடையாது அவனுக்கு. இப்படிப்பட்டவனுக்கு ஆபீஸ் கேஷ் பொறுப்பைக் கொடுத்தா என்ன ஆகும்? ஆபீஸ் பணத்தைக் கையாடி ஆம்பிட்டுக்கிட்டான். ஜெயில்லே கம்பி எண்ண வேண்டிய நிலை. ஆனா எங்க மானேஜர் இரக்க சுபாவம். போலீசுக்கு ரிப்போர்ட் பண்ணாமே வேலையை விட்டு நீக்கிட்டார்..."

எனக்கு அதிர்ச்சியாயிருந்தது. என் பணம் இனி திரும்பக் கிடைக்காது என்று புரிந்து விட்டது. இருந்தாலும் முயற்சியைக் கைவிட மனமில்லாமல், "அவனோட விலாசம் தெரியுமா?" என்று கேட்டேன்.

என்னை உற்றுப் பார்த்தான் சந்திரன். "அவன் வீட்டு விலாசம் ஒனக்கு எதுக்கு? நீ அவனுக்குப் பணம் கொடுத்திருக்கியா?"

"ஆமா..." என்று ஒரு அசட்டுச் சிரிப்பு சிரித்துவிட்டு முழுக் கதையையும் சொன்னேன்.

ஹோஹோவென்று சிரித்தான் சந்திரன். "சரிதான், நீயும் அவன்கிட்டே மாட்டிக்கிட்டியா? ஒன் பணம் யானை வாயிலே போன கரும்புதான்... வேலை போனப்பறம் ரமேன் இங்கே வர்றதேயில்லே. வாடகை வீட்டையும் காலி பண்ணிட்டுப் பெண்டாட்டியை அவளோட பொறந்த வீட்டில் கொண்டு போய் விட்டுட்டதாக் கேள்வி. எதுக்கும் நீ போய் அந்த விலாசத்திலே விசாரிச்சுப் பாரு... நான் ஒரு வருசம் முன்னாலே அந்த வீட்டுக்குப் போயிருக்கேன். ஷாம்பஜார்லே கோவிந்த முகர்ஜி தெரு, வீட்டு நம்பர் மறந்து போச்சு... வீட்டுக்காரர் பேரு சுப்ரதசென்னுன்னு ஞாபகம்..."

நான் வசிப்பது தெற்குக் கல்கத்தாவில் பாலிகஞ்சுப் பகுதியில். ஷாம்பஜார் வடக்குக் கோடி. என் வீட்டிலிருந்து பத்து மைல் தொலைவு.

ஒருநாள் ஷாம்பஜார் போனேன். கோவிந்தமுகர்ஜி தெருவில் 'சுப்ரதசென்' என்ற பெயர் பதித்த வீட்டைக் கண்டுபிடித்துக் கதவைத் தட்டினேன்.

கதவைத் திறந்த முதியவருக்கு வயது எழுபது இருக்கும்.

"ஒங்களுக்கு யாரைப் பார்க்கணும்?"

"இங்கே ரமேன் தத்தான்னு ஒருத்தர் இருக்காரா?"

"ரமேனா...? அவன் மூணு மாசம் முன்னாலேயே வீட்டைக் காலி பண்ணிட்டுப் போயிட்டானே! நீங்க..."

"நான் ரமேன்கிட்டே ஒரு காரியமா வந்தேன்..."

"உள்ளே வாங்களேன்..."

உள்ளே போய்ப் பெஞ்சியில் உட்கார்ந்தேன். முதியவரின் மனைவி தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தார். தண்ணீரைக் குடித்துச் சற்று இளைப்பாறிவிட்டு, "இப்போ ரமேன் எங்கேயிருக்கார்னு சொல்ல முடியுமா?" என்று கேட்டேன்.

"ரமேனுக்கு அவனோட வேலை பிடிக்கல்லியாம். வேலையை விட்டுட்டான். வேறே வேலை கிடைக்கறவரைக்கும் வீட்டு வாடகை கொடுக்க வேண்டாம்னு வீட்டைக் காலி பண்ணிட்டுப் பெண்டாட்டியைப் பர்த்துவான்லே அவளோட பொறந்த வீட்டிலே கொண்டு போய் விட்டுட்டான். இங்கே யாரோ சிநேகிதனோட தங்கிக்கிட்டு வேலை தேடப் போறானாம். அந்த விலாசம் எனக்குத் தெரியாது... ஆமா, நீங்க என்ன காரியமா அவனைத் தேடிக்கிட்டு வந்திருக்கீங்க...? நான் தெரிஞ்சுக்கலாம்னா சொல்லுங்க..."

சற்றுத் தயங்கிவிட்டுச் சொன்னேன், "நாலைஞ்சு மாசத்துக்கு முன்னாலே அவரைப் பூரியிலே சந்திச்சபோது, அவருக்கு ஐநூறு ரூபா கைமாத்தாக் கொடுத்தேன்... அதைத் திரும்ப வாங்கிக்கிட்டுப் போகத்தான்..."

"அப்படியா? ஒங்க பேரு...?"

"சதாசிவம்..."

"நீங்கதானா மிஸ்டர் சதாசிவம்? ரொம்ப நல்லதாப் போச்சு? ரமேன் வீட்டைக் காலி பண்ணிட்டுப் போறப்ப என்கிட்டே ஐநூறு ரூபா கொடுத்திட்டுப் போயிருக்கான். 'சதாசிவம்னு ஒருத்தர் வந்தா அவர்கிட்டே கொடுத்திடுங்க. நான் அப்புறம் வந்து அவரைச் சந்திக்கறேன்'னு சொல்லியிருக்கான்... கொஞ்சம் இருங்க..." என்று சொல்லிவிட்டு உள்ளே போன சுப்ரதசென் ஐநூறு ரூபாய் கொண்டு வந்து என்னிடம் கொடுத்தார்.

பணம் போனது போனதுதான் என்று நினைத்திருந்த எனக்கு ஓர் இன்ப அதிர்ச்சி. சுப்ரதசென்னுக்கு நன்றி தெரிவித்துவிட்டு வெளியே வந்தேன்.

தெருமுனையை அடைந்தபிறகு முகத்தைத் துடைத்துக் கொள்ளக் கைக்குட்டைக்காக சட்டைப் பையில் கைவிட்ட போதுதான் தெரிந்தது – கைக்குட்டையை சுப்ரத



''தொப்புள் காட்டி நடிக்கிறதுல அந்த நடிகை ரொம்ப பேமஸ்...''

''அதுக்காக 'தொப்புள் திலகம்'னு பட்டம் கொடுக்கணுமா?''

– ஜி. செல்லத்துரை

சென்னின் வீட்டில் விட்டு விட்டு வந்திருக்கிறேனென்று. அந்த வீட்டுக்குத் திரும்பிப் போனேன்.

வீட்டுக் கதவைத் தட்டப் போனவன் உள்ளே தம்பதியரின் உரையாடலில் ரமேனின் பெயர் அடிபடுவதைக் கேட்டுச் சற்றுத் தயங்கி நின்றேன்.

“அந்த ரமேன் நமக்கு ஒரு வருச வாடகை கொடுக்காமே போயிட்டான். அந்த நஷ்டம் போதாதுன்னு அவன் யாருக்கோ பட்ட கடனை நீங்க தீர்க்கணுமா?” - வீட்டுக்கார அம்மாளின் குரல்.

"நான ரமேனுக்காகப் பணம் கொடுக்கல்லேமமா...” சுப்ரதசென் சொன்னார். "“இந்த நல்ல மனுசர் அவனை நம்பிப் பணம் கடன் கொடுத்திருக்கார். பணம் திரும்பக் கிடைக்கல்லேன்னா, எல்லா மனுசங்களும் அயோக்கியங்கன்னு நினைச்சுக்குவார். சகமனுசர்கள் மேலே அவருக்கு நம்பிக்கை போயிடும். பின்னாலே நிசமாவே ஆபத்திலே இருக்கற யாராவது உதவி கேட்டாலும் உதவத் தோணாது இவருக்கு. ஒரு மனுசன் சக மனுசங்க மேலே நம்பிக்கையிழக்கறதைப் போல கொடுமை வேற இல்லே. அந்தக் கொடுமையைத் தவிர்க்க ஐநூறு ரூபா செலவு செஞ்சா நமக்கு என்ன குறைஞ்சா போயிடும்...!”

நான் வந்த சுவடு தெரியாமல் அங்கிருந்து திரும்பி விட்டேன்...

செலுத்தி வந்தார். சிறகு முளைத்துக் குஞ்சுகள் பறந்து விட்ட பிறகு, தாய்ப்பறவைக்குத் (தந்தைப் பறவைக்கும்தான்!) தன் அன்பை வெளிக்காட்ட வேறொரு ஜீவன் தேவைப்படுகிறது. அவர் இப்போது இங்கே வந்திருப்பது கூட அந்த 'தந்தைப் பாசத்தினால்தான்.'

"மஞ்சு! நான் ரொம்பக் கொடுமைகள் அனுபவித்து விட்டேன். இந்தக் கொடுமைகள் வேறு யாருக்கும் நிகழக் கூடாது. குறிப்பாக நான் மகன் போல் நினைத்து அன்பு செலுத்தும் உனக்கு நிகழக் கூடாது."

"சார்...."

"எனக்குத் தெரியும் மஞ்சு. ரகசியங்கள் திருட்டுப் போனது உண்மை. இந்த அலுவலகத்தில் யாரோ ஒருவர் அதற்கு உடந்தை என்பதும் உண்மை. என்னை ஏன் போலீஸ் சந்தேகப்பட்டது என்பது எனக்குத் தெரியாது. ஒருவேளை உண்மையான குற்றவாளியைக் காப்பாற்ற சதிகாரர்கள் சந்தேக அலையை என் பக்கம் திருப்பிவிட்டிருக்கலாம். உன் வாக்குமூலம் கூட அதன் ஒரு பகுதியாக இருக்கலாம்."

"சார்...."

"எனக்கு உண்மை தெரியாது மஞ்சு. எல்லாம் என் யூகம்தான். நான் மாட்டிக் கொள்வதால், நீ உன் 'வேலை'யைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கலாம். யாருக்கும் சந்தேகம் வந்திருக்காது. அதனாலேயே ரஸியாவும் எனக்கெதிராகச் சாட்சி சொல்லும்படி அறிவுறுத்தப்பட்டிருக்கலாம். எப்படியோ ஒரு அப்பாவியின் வாழ்வைச் சிதைத்து விட்டீர்கள்...."

"சார்.... நான் சொல்வதை...."

"நான் எதையும் கேட்க விரும்பவில்லை. எனது யூகம் எல்லாம் தவறாகவே இருக்கலாம். ஆனால் நான் சொல்ல வந்ததைச் சொல்லியே ஆக வேண்டும். ரகசியங்கள் விற்பதை, இன்னமும் நீ தொடர்ந்து செய்து வந்தால், தயவு செய்து அதை உடனே நிறுத்தி விடு. தவறு செய்பவன் ஒருநாள் பிடிபடுவான். தவறு செய்யாத எனக்கே இவ்வளவு கொடுமைகள் நிகழ்ந்த பிறகு, தவறு செய்த உனக்கு, அத்தகைய அனுபவங்கள் ஏற்படாது என்று சொல்ல முடியாது. என் அன்புக்குரிய உனக்கு அத்தகைய கொடுமைகள் நிகழ்வதை என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. எனவே தயவு செய்து நிறுத்தி விடு. இப்போதே... உடனேயே! இதை உன்னிடம் சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன். மற்றபடி தொடர்ந்து வேலை செய்வதில் எனக்கு எந்த ஆர்வமும் இல்லை."

அவன் பதிலை எதிர்பாராமல் அவர் கிளம்பினார். அவரது ராஜினாமாக் கடிதத்தை அன்று காலையிலேயே அவரது மேலதிகாரிக்கு அனுப்பி விட்டார்.



''கதாநாயகியைப் பாம்பு கடிக்கிறமாதிரி இருக்கிற காட்சியை மாற்றி, நாய் கடிக்கிற மாதிரி வச்சிருங்க...''

''எதுக்காக இப்படி சொல்றீங்க?''

''அப்பதானே... தொப்புளைச் சுற்றி ஊசி போடற மாதிரி... செக்ஸியா படம் பிடிக்கலாம், அதுதான்''

-திருத்துறைப்பூண்டி எஸ்.கந்தசாமி



வந்தவர்: ஒரு கேஸ்கூட வராமல் இன்னிக்கு பூரா சும்மாதான் இருந்தீங்களா, டாக்டர்!

டாக்டர்: ஆமாம். எப்படி கண்டு பிடிச்சீங்க?

வந்தவர்: ஸ்டெதஸ்கோப்பில் பாதியை கடிச்சுக் குதறியிருக்கீங்களே, அதை வச்சித்தான்!

-ஆலத்தம்பாடி ராஜகோபால்



''தேக்கு மரப் பண்ணைத் திட்டம் மாதிரி இப்ப ஒரு புது திட்டம் வந்திருக்காம்...''

''என்ன திட்டம்?''

''பத்தாயிரம் ரூபா முதலீடு செய்தால், 5 வருஷத்தில் 5 கோடி வருமானம் தர்ற பெட்ரோல் மூலிகைப் பண்ணைத் திட்டமாம்...!

-ச.சாந்தி

குறையொன்றுமில்லை

22

மட்டபள்ளி க்ஷேத்திரத்தில் குகைக்குள்ளே வாசம் பண்ணு கிறான் நரசிம்ஹன். யாரேனும் ஒருத்தர் தீவட்டி எடுத்துப்போய் வழிகாட்டி னால்தான் உள்ளே போகலாம். அந்த மாதிரி குகை. வேதாந்த குகைக்குள்ளே தத்துவமாய் அடங்கியிருப்பவனை ஓர் ஆசார்யரின் வழி காட்டலில்தான் சேவிக்க முடியும் என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறான். அப்படி ஒருத்தர் வழிகாட்ட உள்ளே போய் விட்டோமானால், இன்றைக்கெல்லாம் சேவிக்கலாம். எம்பெரு மான் வடிவழகைக் கண்டு ஸ்தோத்திரம் பண்ண எல்லா துன்பமும் போய்விடும் என் கிறது வேதம்.

எப்பொழுதும் பகவானின் பெருமையையே பேசணும் என்று வேதம் காட்டும் வழியைத் தான் ஆசார்யர்களும் காட்டுகிறார்கள். 'எம் பெருமானை உபாஸனை புண்ணு - அப்படி பண்ண முடியாவிட்டால் அவனை இந்த விஷ்ணு சஹஸ்ரநாமத்திலே வரும் 'விச்வம்' என்கிற சப்தத்தைச் சொல்லி அவன் பெரு மையை நினை.'

கடினமான கனத்தை (வேதம்) அத்யயனம் பண்ணி மஹரிஷிகளைப் போல் சிரமப்பட்டு, சரீரத்தை வருத்தி, ஊன் வாட வாட உண்ணா திருந்து அவனை வேண்டிய காலம் மாறி விட்டது.

இப்போது சிரமமில்லாமல் காரியம் செய்ய வழிகள் ஏற்பட்டிருக்கிறது. அடியேன் பண்ணு கிற இந்த உபன்யாஸத்தையே எடுத்துக் கொள் வோம். இதிலே என்ன சிரமம். உடம்பு சிரமப் படாமலிருக்க, மின் விசிறி சுற்றுகிறது. குரல் எல்லாருக்கும் கேட்கும்படியா ஒலிபெருக்கி இருக்கிறது....

ஆனால் ஆதி காலத்திலே முனிவர்கள் பஞ் சாக்கினியின் மத்தியில் நின்று பகவானை உபா ஸித்திருக்கிறார்கள். நான்கு பக்கமும் நான்கு அக்னி தகிக்கும்; தலைக்கு மேலே சூரியன்; கடும் வெயில் காலம் - சித்திரை வைகாசியிலே இது நடக்கும். குளிர் காலத்திலே தனுர் மாசத் திலே - கழுத்தளவு ஜலத்திலே நின்று கொண்டு உபாஸனை பண்ண வேண்டும்! நமது இந்த்ரி யங்கள் மிகவும் பலம் வாய்ந்தவையானதாலே அவற்றை நிக்ரஹம் பண்ணி, ஊன் வாட வாட உண்ணாதிருந்து உயிருக்குக் காவலிட்டு மஹ ரிஷிகளெல்லாம் பகவானைக் கண்டார்கள்.

இப்போது அந்த சக்தியெல்லாம் நமக் கில்லை என்பது ரொம்ப ஸ்பஷ்டமாகத் தெரி கிறது. கால வெள்ளோட்டத்தில் வேக வேக மாகப் போய்க் கொண்டிருக்கிறோம்....

'அப்படியானால் வேத அத்யயனமே நடப் பதில்லையா?' என்று கேட்டால், நடந்து கொண்டுதானிருக்கிறது. மகான்கள் பலர் அதைப் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், 'நம்மால் பண்ண முடியாது' என்கிற வர்கள் சுலபமாய் அவனை இந்த விச்வ சப்தத் தினாலே ஆராதித்தால், ஒரு புஷ்பத்தை எடுத் துப் போட்டால்... அந்த வேத உபாஸனையின் பயனைச் சுலபமாய் அடையலாம்.

விச்வ யோனி : - விச்வத்துக்கெல்லாம் காரணமானவன் என்று அறியப்படுகிற அந்த நரசிம்ஹனை - ஆராதித்தவர்கள் வேறு நினைப்பே மனத்தில் கொள்ளமாட்டார்கள்.

விச்வ சப்தத்தினாலே மறைத்துச் சொல் லப்படுகிறவன் நரசிம்ஹன் என்று பார்த்தோம். அந்த விச்வமாகிய பரபிரும்மம் ஒரு முறை அசுவமேத யாகத்துக்குப் போயிற்று! எங்கே...?

நர்மதா நதி தீரத்திலே நடந்தது அந்த அசுவ மேத யாகம்.

ஒவ்வொரு நதிக்கும் ஒரு பெருமை உண்டு. நர்மதா நதியின் பெருமை கூர்ம புராணத்திலே பேசப்பட்டிருக்கிறது. சந்தியாவந்தனத்திலே இந்த நதி குறித்த தியானம் வருகிறது. நர்மதா நதியை தியானம் பண்ணினால் நம் பக்கத்திலே விஷ ஜந்துக்களே வராது.

சரி, அந்த நதிக்கரையில் யாகம் செய் தவன் யார்....?

பிரஹலாதனின் பிள்ளை விரோ சினன். இந்த விரோசினனின் மகன் வைரோசினன். இவனுடைய பிள்ளை மகாபலி. அவன் நர்மதா நதிக்கரை யிலே அசுவமேத யாகம் பண்ணி னான்.

அசுவமேத மஹா மந்திரம் என்று ஒன்று அந்த யாகத்தின்போது ஜபிக் கப்படும். அந்த மஹா மந்திரத்தைக் கேட்டாலே மஹா புண்ணியம்.

நியூஸ் சொல்லவா?"

"தபார்! நேரடி நியூஸா சொல்றதா இருந்தா சொல்லு. இல்லாங்காட்டி நான் அம்பேல்."

"கோவிச்சுக்காதே. சொல்றேன். பாலு தெரியுமில்லை? 'காதல் கோட்டை' என்னோட படத்தோட காப்பின்னு அறிக்கை விட்டாரே?"

"ஆமா?"

"அவர் இப்ப ஒரு படம் பண்றார்."

"இது ஒரு நியூஸா? ப்பூ!"

"முழுக்கக் கேளு. படத்தை எடுக்கறது யார் தெரியுமா? 'காதல் கோட்டை' எடுத்த அதே சிவசக்தி பாண்டியன்!"

"அட, மெய்யாவா?"

"ஆமா! தன்னோட எந்தக் கதையைப் பார்த்து காதல் கோட்டை காப்பி அடிக்கப் பட்டதா சொன்னாரோ, அதே கதையில சில மாற்றங்கள் செஞ்சு 'காலமெல்லாம் காதல் வாழ்க'ன்னு டைட்டில் வெச்சி, அகத்தியனோட அடுத்தப் பட ரிலீஸ் சமயம் இதையும் ரிலீஸுக்கு உடறதா யோசனைல இருக்காங்க."

"பழைய 'சிகரம்' சமாசாரம் ஞாபகம் வருதுப்பா. போகட்டும். இதுல யார் நடிக்கறாங்க?"

"முடிவாகலை. முச்சூடும் புதுமுகங்களைப் போட்டு எடுக்கறதா பிளான் பண்ணியிருக்காங்களாம்!"

"புதுசா ஒரு தகவல் சொல்லியிருக்கே. வாழ்க."

"தெரியுமா உனக்கு? ரகுமான்கிட்ட மியூசிக் கம்போஸ் பண்ணி வாங்க அவவன் தவியா தவிச்சிட்டிருக்கறப்ப, ஷங்கர் அதுக்குப் புதுசா ஒரு வழி கண்டுபிடிச்சி, ஜெயிச்சிருக்கார்."

"அதென்ன?"

"இங்க கம்போஸிங் உட்கார்ந்தா, யாராவது வந்து தொந்தரவு பண்ணிட்டே இருக்காங்க. தவிர ரகுமானுக்கு 'மூட்' வர இன்ன நேரம் தான்னு இல்லை. திடீர்னு வரும், போகும். அவருக்கு மூட் வரும்போது எட்டும் கூடி வரணும். பார்த்தார் ஷங்கர். பேசாம, 'ஒரு ஜாலி ட்ரிப் அமெரிக்கா போயிட்டு வரலாம் வாங்க'ன்னு கூட்டிட்டுப் போயி, அடுத்தப் படம் 'ஜீன்ஸ்'க்கு அத்தனை பாட்டுங்களையும் கம்போஸ் பண்ணி எடுத்துட்டு வந்துட்டார், ஓசைப்படாம."

"த பார்றா! இப்படி ஒரு அணுகுமுறையா? அது சரி. வசதி இருந்தா அமெரிக்கா என்ன, ஆம்ஸ்ட்ராங் போன இடத்துக்குக் கூடக் கூட்டிட்டுப் போய் வரலாம்தான்."

"வசதி இருந்து என்ன கிஷ்டா? எல்லாம் வகையா அமையணுமில்லை? நம்ம ருஞ்சுமோனையே எடுத்துக்கோ. கோடி கோடியா கொட்டி 'காதல் தேசம்' எடுத்தார். படம் சுமாராத்தான் போவுது. மனுஷன் பயங்கர டென்ஷன் ஆயிட்டாரு. அடுத்ததா எடுத்துட்டிருக்கற 'சக்தி' படத்துல இப்ப முழு கவனம்! படம் ஏறக்குறைய முடிஞ்சே போன நிலையில இப்ப நிறைய காட்சிகளை மாத்தி, மறுபடி ரீ-ஷூட் பண்ணிட்டிருக்கார் தெரியுமா?"

"அய்யய்யோ! ஹீரோயின் யுவராணி நடிப்புக்கு டாட்டா சொல்லிட்டு ஃபாரின் போய் செட்டில் ஆயிட்டதா சொன்னாங்களே? டூப் போட்டு எடுப்பாங்களாமா அப்ப?"

"அது தெரியலை. 'தீபாவளிக்கு ரிலீஸ் பண்ணி, அடுத்த தீபாவளி வரைக்கும் ஓட்டப் போறேன் பார்'னு சபதம் பண்ணி எடுத்துட்டிருக்காராம்."

"ஓடறது வேற, ஓட்டறது வேற இல்லை?"

"உரக்கச் சொல்லாதே. உன்னைப் புடிச்சி பாயா போட்டுருவாங்க."

- கிச்சா

ஜாலி போட்டி - 6 முடிவு

அரசியல் தலைவர்களுக்கேற்ற காய்கறி, பழ, எண்ணெய் வித்து வகைகளைச் சரியாகக் கண்டு பிடிப்பதில் வாசகர்கள் கொஞ்சம் சிரமப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஒருவரே பல முகங்களுடன் இருப்பதாலோ என்னவோ!

எனிவே, சரியான விடைகள் எழுதியவர்களுள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, ரூ.5000/- பரிசு பெறுபவர்:

மு. கார்த்திகேயன்,
த/பெ. து. முருகானந்தம்,
முருகன் கிளாத் ஸ்டோர்,
55டி. மெயின் ரோடு,
திருப்பாச்சேத்தி - 630 610.
பசும்பொன் மாவட்டம்.

வாழ்த்துக்கள்!

சரியான விடைகள்:

மூப்பனார் - வெண்டைக்காய்
தேவேகௌடா – தர்பூசணி
ஜெயலலிதா – பூசணிக்காய்
லட்சுமி பார்வதி – வெங்காயம்
ஹெக்டே – கருவேப்பிலை
நரசிம்மராவ் – ஆமணக்கு (விளக்கெண்ணெய்)
கருணாநிதி – இளநீர்


அலைகள் பாதங்களைத் தழுவ...
கதை: பெனிட்டோகுமார்
9
படம் : சசி
நந்து! இங்க வந்த வேலை அநேகமாக முடிஞ்சுடுச்சு. ரெண்டு மூணு நாள்ல, ஆராய்ச்சி தொடர வேற ஊருக்குப் போயிடுவோம்.
அப்புறம் என்னை மறந்துடுவீங்க...
என்னால் மறக்க முடியாது நந்து! உங்களை, இந்த கிராமத்தை, இந்த மக்களை...
நானும் உங்க நினைவாகவே இருப்பேன்.
இந்தாங்க உங்களுக்கு ஒரு பரிசு! நானே செய்தது...
அழகான டாப்பெஸ்ட்ரி... பொக்கிஷமாகப் பாதுகாப்பேன், ஆஷா!
மறுநாள்...
என்ன எழுதறீங்க பிரதீப்?... 'என் குறிக்கோள் தங்கம்'... அப்படீன்னா?
அப்படீன்னா நீ ஒரு முந்திரிக் கொட்டைன்னு அர்த்தம்!
இன்னொருத்தர் எழுதறதை எட்டிப் பார்த்துப் படிக்கிற அயோக்கியன்!
பிரதீப்! பிளீஸ்!... நந்து! வருத்தப்படாதீங்க. அவர் இப்படித்தான். சிந்தனை ஓட்ட தடைப்பட்டா சீறுவார்.



மதியும் வந்து....
நந்து! உன் பேனா நண்பரை ஒழுங்கா அறிமுகம் செய்து வை!
ஷியூர்! இவர் நாகர்கோயில் இந்து கல்லூரியில் லெக்சரர், நாகராஜன்.
யூனிவர்ஸிடி ஆதரவோடதான் பிரதீப் ஆராய்ச்சி நடத்தறார். அவருக்கு உதவ நாகராஜனை துணைவேந்தரே அனுப்பி யிருக்கார்.
ஐ ஸீ!
அன்னிக்கு ராத்திரி இரண்டு மணிக்கு பரமகுரு, உங்ககிட்ட பணம் வாங்கிட்டு வரதா சொல்லித்தான் புறப்பட்டான்னு தகவல்...
இங்க வரலையே. நானும் இரண்டு மணிக்குத்தானே படுக்கப் போனேன்!
அப்ப இடிக்குதே! ஒருவேளை கள்ளச்சாராயம் வடிக்கிறவங்ககிட்ட கடன் கேட்டு, தகராறு முற்றி, தீர்த்துக்கட்டிட்டாங்களோ?
எங்களுக்கு எப்படி தெரியும்? விசாரியுங்க.
இரவு முழுவதும் நந்து தூங்காமல் புரண்டான். காலையில்....
ஒரே தலைவலி! டாக்டர் ஜகந்நாதன்கிட்டே போயிட்டு வரேம்ப்பா.
பிரயோஜனமில்லேடா! அவரை யாரோ பரலோகம் அனுப்பிட்டாங்களாம்! இப்பத்தான் ராஜதுரை வந்து சொல்லிட்டுப்போறான்!
(தொடரும்)



எர்பகான

துருக்கியில் ஒரு சஸ்பென்ஸ்!

இந்தியாவின் சைஸில் கால் பங்கு துருக்கி. ஐந்தரை கோடிக்கும் கொஞ்சம் அதிகமான மக்கள். முஸ்லீம் மக்கள் பெரும்பான்மை என்றாலும், கிறிஸ்துவ ஐரோப்பாவுக்கும், மேற்கு மற்றும் மத்திய ஆசிய இஸ்லாத்துக்கும் ஒரு பாலமாகத் தன்னை அடையாளம் காட்டிக் கொள்ளும் மதச்சார்பற்ற நாடு.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் துருக்கியை ஆண்ட அடாடர்க் என்பவருக்கு சலாம் வைக்க வேண்டும். மதச்சார்பற்ற நந்தவனமாக துருக்கியை அவர்தான் உருவாக்கினார். பெண்களின் 'பர்தா' வழக்கத்தை மாற்றினார். ஆண்கள் குல்லா அணிய வேண்டாம் என்றார்.

இன்று நிலைமை தலைகீழ்! துருக்கி மீண்டும் இஸ்லாமிய தீவிரவாதப் பிடியில் சிக்கிக் கொள்ளுமோ என்ற அச்சம்.

குறிப்பிடும்படியாக மூன்று கட்சிகள். வெல்ஃபேர் பார்ட்டி. இது இஸ்லாமிய தீவிரவாதக் கட்சி. ட்ருபாத் (True Path) கட்சி. மதர்லாண்ட் கட்சி. இந்த இரண்டும் தீவிரவாதம் கூடாது என்பவை. அதே சமயம் பதவி, போட்டி என்று வரும்போது பூனையும் எலியும்.

அடாடர்க் மறைவுக்குப் பிறகு அவரது கனவுகளை ஓஸல் என்ற பிரதம மந்திரி கச்சிதமாக நிறைவேற்றிக் கொண்டே வந்தார். 1993 ஆகஸ்ட் எட்டாம் தேதி அவர் இறந்தார். கூடவே மதச்சார்பின்மை மீது அவர் காட்டிய தீவிரமும் இறந்தது என்றால் தப்பில்லை.

தொடர்ந்து டான்ஸி சில்லர் பிரதமரானார். துருக்கி கண்ட முதல் பெண் பிரதமர். ஹார்வர்டு பட்டதாரி. முன்னாள் பொருளாதாரப் பேராசிரியை. ட்ருபாத் கட்சியின் தலைவி. கவர்ச்சியான பெண்மணி.

ரொம்பவும் எதிர்பார்ப்புகளை மக்களிடையே அவரது ஆட்சி ஏற்படுத்தியது. தீவிரவாத முஸ்லீம்கள் கையில் ஆட்சி போய் விடக்கூடாது என்பதில் அவர் தீவிரம் காட்டினார். எல்லாம் சரிதான். ஆனால் 'கோடி கோடியாக சில்லரும் அவர் கணவரும் சேர்ந்து சொத்து சேர்க்கிறார்கள்' என்ற குற்றச்சாட்டிலிருந்து அவர் தப்ப முடியவில்லை.

பொதுத் தேர்தல் வந்தது. எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை இல்லை. 550 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் தீவிரவாதக் கட்சிக்கு 158 இடங்கள். சில்லரின் ட்ருபாத் கட்சிக்கு 135. மதர்லாண்ட்டுக்கு 131. மீதி சில்லறை கட்சிகளுக்கு.

ஆக எதற்கும் செயல்படத் தேவையான பெரும்பான்மை இல்லை.

தீவிரவாதக் கட்சியின் தலைவர் எர்பகான் தேர்தலுக்கு முன் அனல்பறக்கப் பிரசாரம் செய்தார். 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஆஹா... பார்... நேட்டோ (NATO) அமைப்போடு துருக்கியின் உறவை வெட்டி, இஸ்லாமிய நேட்டோ அமைப்போம். இஸ்லாமிய நாடுகளோடு கட்டித் தழுவுவோம்' என்றெல்லாம் தீவிரவாத உணர்வுகளுக்குச் சூடேற்றினார்.

ஆனால் தேர்தல் முடிவுகளுக்குப் பின், அதிகமான இடங்களைப் பெற்ற தனிக் கட்சியாக இருந்தாலும் ஆட்சி நடத்த, மதச் சார்பின்மை கட்சிகளின் தயவு வேண்டிய நிலையில் எர்பகானின் சுருதி இறங்கியது.

ட்ருபாத் கட்சியின் ஆதரவைப் பெற்று பாராளுமன்றத்தில் நம்பிக்கைத் தீர்மானத்திலும் வெற்றி பெற்று விட்டார் எர்பகான்.

"இஸ்லாமிய தீவிரவாதமெல்லாம் கூடாது. மதச்சார்பின்மை தான் அவசியம். இந்தப் பிரச்னையா இப்போது முக்கியம்? விலைவாசி, பணவீக்கம் ஏறிக் கொண்டிருக்கிறது. உலக முதலீடுக்கு நாட்டைத் திறந்து விட வேண்டும். அதுதானே முக்கியம்?" என்று எர்பகான் இன்று தலைகீழ்ப் பாடம் படிக்கிறார்.

பதவியேற்றவுடன் மறக்காமல் அடாடர்க் நினைவிடத்துக்குப் போய் அஞ்சலி செய்து விட்டும் வந்தார்.

ஒரு மதத் தீவிரவாதியின் தலைமையில் மதச் சார்பின்மை வெற்றி பெறுமா? இது பதவிக்காக நடைபெறும் கண் துடைப்பு நாடகமா? இல்லை, உண்மையிலேயே ஒரு மனமாற்றமா?

துருக்கி மக்கள் சஸ்பென்ஸில் தவிக்கிறார்கள்.

— ராணிமைந்தன்.

கன்யாவைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறினான் ஸ்ரீராம். ஒரு கட்டத்தில், அழுது ஓயட்டும் என்று அப்படியே விட்டு விட்டான்.

விசும்பல் மெல்ல அடங்கிய போது 'அப்பாடி!' என்று இருந்தது.

"அதுக்குத்தான் நா ஆரம்பத்துலேயே சொ னேன் – நாம தனியா குடித்தனம் வைச்சுக் கலாம்னு..."


"நானும் காரணத்தோடதானே அது வேண்டாம்னு சொன்னேன்? எனக்கு இந்தக் குடும்பத்தைத் தெரிஞ்சுக்கணும், புரிஞ்சிக்கணும்ன்ற தாகம் இருந்தது. அதான் உனக்குத் தெரியுமே ஸ்ரீராம்... அது கஷ்டமா இருக்கும்ங்கறதையும் எதிர் பார்த்தேன்; ஆனா இப்பத்தான் புரியுது... நான் என்னை எவ்வளவு மாத்திக்கிட்டாலும் இந்த



வீட்டிலே ஒரு அன்னிய மனுஷியாத் தான் இருப்பேன்... நீங்க எல்லாம் ஊடு – பாவா கலந்து பழகறீங்க... நான் மட்டும் உன் ஆபீஸ் ரூம் வாசல்ல நின்னு கேட்ட மாதிரி 'உள்ளே வர லாமா?' ன்னு கேட்டுக்

உள்ளே வரலாமா?

9 மஞ்சுளா ரமேஷ் ?



கிட்டேதான் இருக்கணும்...."

"சுகன்யா ப்ளீஸ்..."

"இரு ஸ்ரீராம்! நான் இன்னும் பேசி முடிக் கலை... எத்தனை விஷயங்கள்ல நான் என்னை முழுக்க மாத்திக்கிட்டிருக்கேன்...? யோசிச்சிப் பாரு... இரண்டே வாரத்துல இந்த வீட்டுச் சமையலைக் கத்துக்கிட்டேன்; கொஞ் சம் கோணலா போனாலும் கோலம் போடப் போட வருது; அப்பா, அம்மா, குமார், வசந்தின்னு அவ் வளவு பேரோட வேலைகளையும் இழுத்துப் போட்டுக்கிட்டுச் செய்ய றேன்... அதையெல்லாம் விடு, மஞ்சள் உரைச்சுக் குளிக்கவும் மாசத்துல மூணு நாள் பாயைப் போட்டுக்கிட்டு ஒதுங்கிப் படுக்கவும் கூடப் பழகிக் கிட்டேன்... இருபத்தி ஐந்து வருஷமா நான் வாழ்ந்த விசாலமான வாழ்க் கையை சாஸ்திரம் – சம்பிரதாயம்ங் கற சட்டத்துக்குள்ள அடக்கிப் போட முடிஞ்சுருக்கு... அறிவு எல் லாத்தையும் கேள்வி கேட்டாலும் மனசுக்குக் கட்டுப்பட்டுப் போய்க் கிட்டிருக்கேன்... I think I've done a fairly

தங்க நகை பரிசு!

இன்னும் 17 வாரங்கள் வெளிவரப் போகிற இந்தத் தொடர்கதை, வாராவாரம் ஓர் எழுத்தாளரின் பெயரில் வெளியாகும். ஆனால் முழுக் கதையையும் எழுதுபவர் ஒரே எழுத்தாளர்தான்! யார் அவர்?

வாரா வாரம் படித்து, யூகித்துக் கொண்டே இருங்கள். கடைசி வார அத்தியாயத்துடன் வெளியாகப் போகிற கூப்பனில், 'தொடரை எழுதியவர் யார்?' என்கிற உங்கள் யூகத்தை எழுதி அனுப்புங்கள்.

உங்கள் யூகம் சரியானதாக இருந்தால் உங்களுக்குத்தான் மின்னும் தங்க நகை பரிசு!

பலர் சரியான விடை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் ஓர் அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

good job... ஆனா.. இங்க யாருக்குமே என் செய்கைகளோட மதிப்பு புரியலை... சரி, மதிப்பு வேண்டாம்... ஆறு மாசமாக வீட்டுல வளைய வர்ற ஒரு ஜீவன் பேர்ல தரக்கூடிய இயல்பான அன்புகூட..."

சுகன்யாவின் கண்கள் மீண்டும் குபுக் கென்று நிரம்பிக் குளமாகின.

"வசந்தி மட்டும் இல்லைன்னா என்னால இங்க சமாளிச்சே இருக்க முடியாதுன்னு நினைக்கிறேன்... ஆனா அவளும் ரொம்பக் கட்டுப்பட்டுத்தான் இருக்கா... ஓரளவுக்கு மேல என்கூட ஒட்ட மாட்டா. அப்பா - அம்மா மனசுதான் அவளுக்கு முக்கியம். குமார்...! அவனை ஏதோ விளையாட்டுப் பிள்ளைன்னு நினைச்சேன். He let me down so badly!"

சுகன்யாவுக்கு அந்தச் சம்பவத்தை நினைக்க, மீண்டும் அதிர்ச்சியில் உடல் உறைந் தது.

ராஜுவுக்கு அவசர வேலை முடித்துக் கொடுத்து வீடு திரும்பியபோது வாசல் கதவு மூடியிருந்தது. திறந்த ஜன்னல் வழியே சரஸ் வதியின் குரல் கேட்டது.

"ஸ்ரீராம்தான் இப்படிப் போய் இரண்டுங் கெட்டானா ஒரு கல்யாணத்தைப் பண்ணிண் டுட்டான்... நீயும் அது மாதிரி ஏதாவது பண்ணித் தொலைச்சுடாதேடா, குமார்!"

சுகன்யா பலமாக அடிபட்டவளாக நின் றாள்.

"என்னம்மா இது...!" குமார் சமாதானப் படுத்தும் குரலில் சொன்னான்.

"இப்ப போன் பண்ணினாளே, குஜராத்திப் பொண்ணு..."

"யாரு? சோனாலியைச் சொல்றியா?"

"ம்... நாளைக்கு அவளைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்னு வந்து நிப்பியோ...?"


"ஐயோ, அம்மா! அவ என் கூட படிக்கற பொண்ணு! ஏதோ புத்தகம் வேணும்னு போன் பண்ணினா. அவ்வளவுதான்..."

"அப்படித்தானே எல்லாமே ஆரம்பிக் கிறது..."

"இதோ பாரு... ஒண்ணும் ஆரம்பிக்கலை... என்னைப் பொருத்தவரைக்கும் ஆரம்பிக்கவும் ஆரம்பிக்காது. அண்ணா மாதிரி நான் எதுவும் செய்ய மாட்டேன்... பிராமிஸ்! போதுமா...?"

"ஒரு மாட்டுப் பொண்ணாவது எனக்குத் தோதா நம்ம குடும்பத்துக்கு ஏத்தவளா வரட் டும்டா..."

அப்படியே வாசல்படியில் சுருண்டு உட்கார்ந்தாள் சுகன்யா. ஆறு மாதங்களாய் அவள் செய்த முயற்சிகள், காட்டிய நிஜமான ப்ரியம், பேசிய அன்பான சொற்கள் என்று அத்தனையையும் கசக்கிச் சுருட்டி குப்பைத் தொட்டியில் கடாசிவிட்டது அந்தக் கடைசி



வாக்கியம்.

சரஸ்வதிக்குத்தான் தன்னை ஏற்க மன மில்லை என்றால், இந்தத் தலைமுறையைச் சேர்ந்த குமார் கூடவா இப்படிப் பேசுவான்! 'ஏன்மா? மன்னிகிட்டே என்ன குறையைக் கண்டே.... இங்க வந்து எவ்வளவு தூரம் தன்னை மாத்திண்டிருக்கா...' என்று ஒரு வாக் கியம் ஏன் அவனிடமிருந்து வெளிப்பட வில்லை...?

சுகன்யா சமாளித்துக் கொண்டு எழுந்தாள். 'உள்ளே வரலாமா?' என்று இவர்களிடம் கேட்டுப் பயனில்லை... வாசல் கதவை மட்டும் தான் திறப்பார்கள்....

"தனியா போயிடலாம் ஸ்ரீராம்..." அழுத்த மாக சுகன்யா சொன்னபோது அவள் உறுதி பயமுறுத்தியது.

"இப்போ இந்தக் கட்டத்துல அதைப் பத்திப் பேசறது கொஞ்சம் சங்கடமாயிருக்குமே சுகி..."

"ஏன்... நீயும் பயப்படறயா? அப்பா, அம்மா வைக் கண்டு பயம்தானே...?"

சட்டென்று கோபம் வந்தாலும் சுகன்யா விரக்தியில் பேசுகிறாள் என்பது புரிய, தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு பதில் சொன்னான் ஸ்ரீராம்.

"இவ்வளவு நாள் கழிச்சு தனிக்குடித்தனம் போறோம்னு சொன்னா, இங்க இருக்கப் பிடிக் காமதான் போறோம்ங்கறதை எழுதிக் கொடுத்த மாதிரி ஆயிடுமே... முதல்லயே போயிருந்தா அது வேற விதமாக இருந்திருக் கும்..."

"பரவாயில்லை ஸ்ரீராம். நீ சொல்ற மாதிரி அவங்க ஆரம்பத்தில கொஞ்சம் வருத்தப்பட் டாலும், கொஞ்ச நாள்ல எல்லாத்தையும் மறந்துடுவாங்க. இப்படியே தொடர்ந்து இருக் கிறது எனக்கு ரொம்பக் கஷ்டம். போலித் தனமா போயிடும். இத்தனை நாளா ஏற்படுத் திக்கிட்ட நல்லுணர்வெல்லாம் நொறுங்கிப் போயிடுத்து... வெளியே போய் அங்கே ஒரு பாதுகாப்பான தூரத்திலே இருந்துக்கிட்டே பழகறேன்... அதுதான் நம்ம எல்லாருக்கும்

"இன்னைக்கு புதுப் படம் எதாவது ரிலீஸ் ஆகுதா?"

"எதுக்குடி கேட்கற?..."

"நம்ம பையன் சீக்கிரமா எழுந்து பொறுப்பா ஸ்கூலுக்குக் கிளம்பறானே!"

— எஸ்.எஸ். பூங்கதிர்

நல்லது."

"நல்லா யோசிச்சு சொல்லு சுகி... போயிட்டா திரும்பவும் வர முடியாது..."

"யோசிச்சுட்டேன் ஸ்ரீராம். நான் சொல்ற முடிவு சரியாத்தான் இருக்கும். நீ நாளைக்கே அப்பா – அம்மாகிட்டே விஷயத்தைச் சொல்லு. வீடு பார்க்க ஆரம்பிக்கலாம். இதோ பார், உனக்காகக் காத்திருந்த நேரத்துல நான் ஹிந்து ரென்டல்ஸ்ல பார்த்துக் குறிச்சு வைச்சிருக்கேன். நாளைக்கே நாம அப்பா அம்மா கிட்டே சொல்லிடலாம். நீ ஆபீஸ் போனப்புறம் நான் இந்த இடத்துக்கெல்லாம் போன் பண்ணி விசாரிக்கறேன். அவசியமானதுக்கு மட்டும் நேர்ல போய், நானே பார்த்து ஏதாவதொரு நல்ல இடம் பிக்ஸ் பண்ணிடறேன். உனக்கு அதிகப்படியான வேலை வராது ஸ்ரீராம்..."

"நீ எல்லாத்தையும் அழகா மானேஜ் பண்ணிடுவேனு எனக்குத் தெரியாதா... என் கவலை அதுவேயில்லை..."

தலையணைகளை அடுக்கி, அவளை மெல்லச் சாய்த்து உட்கார வைத்தபடி பேசினான்.

"நாளைக்கு நீ எழுந்திருக்கும்போதே என்னையும் எழுப்பி விட்டுடு. நீ குளிக்கற சமயத்துல அப்பா அம்மாவைத் தனியா கூப்பிட்டுப் பேசிடறேன்..."

"நானும் கூட இருக்கறதுதானே நியாயம்...?"

"வேண்டாம் சுகி... அவங்க ஏதாவது சுருக்குனு சொல்லிட்டா அந்தக் கஷ்டம் என்னோட போயிடட்டும்... அதையும் வேற உங்கிட்டே சொல்லி, உன் வேதனையை அதிகமாக்க மாட்டேன்..."

– இப்போது அவள் மடியில் முகம் கவிழ்த்து அவன் படுத்திருந்தான். குரல் தெளிவில்லாமல் ஒலிக்க, அவன் பிடரியைப் பிடித்து உலுக்கிக் கேட்டாள்.

"என்ன சொன்னே...?"

மீண்டும் விஷயத்தைச் சொன்னபோது அவன் தலைமுடியைக் கோதிய அவள் விரல்கள் கண நேரம் இறுகி ஒரு கற்றை முடியைப் பற்றின.

"ஆ...! வலிக்கறது..." என்றபடி அவள் கையைத் தலையிலிருந்து விலக்கி விட்டான்.

சுகன்யா ஐந்தரைக்கு எழுப்பிவிட்ட போது அப்பா வாசல் வராண்டாவில் பேப்பருடன் உட்கார்ந்திருந்தார். அம்மா பிரம்புக் கூடையில் செம்பருத்திப் பூ பறித்துப் போட்டுக் கொண்டிருந்தாள்.

வாசலில் சுகன்யா கைவண்ணத்தில் சிறிய கோலம். அப்பா பக்கத்தில் போய் உட்கார்ந்த ஸ்ரீராம், கோலத்தைக் கூர்ந்து பார்த்தான். சதுரங்கள், செவ்வகங்கள் இல்லாமல் நளினமாய் வளைந்த கோடுகளைக் கொண்டு ஒரு சித்திரம் போல் வரைந்திருந்தாள். மைய வடிவத்தைச் சுற்றிப் புள்ளிகளால் அலங்காரம் செய்திருந்தாள்.

புள்ளிகளை முதலில் வைத்து, அவற்றை இணைத்துக் கோலம் போடுவதைத்தான் அவன் பார்த்ததுண்டு. சுகன்யாவின் கோலம் வித்தியாசமான புத்தழகுடன் இருந்தது. புள்ளிக் கோலம் என்பது நிர்ணயித்த விதிப்படி வடிவமைக்க வேண்டும். இது அப்படியில்லை... கற்பனைப்படி கை, வேலை செய்திருக்கிறது. புள்ளிகளை அப்புறம்தான் – சும்மா துணைக்கு அழைத்திருக்கிறாள். சுகன்யாவின் வாழ்க்கைத் தத்துவத்துக்கே அந்தக் கோலம் ஒரு வடிவம் தருவதைப் போல் உணர்ந்தான். அவளுடைய தனித்தன்மை, அதைக் கூச்சமின்றி வெளிப்படுத்தும் துணிவு, அந்த வெளிப்பாட்டில் இழையோடும் அழகு, சுதந்தர உணர்ச்சி... என்று அத்தனையையும் உள்ளடக்கியிருந்தது. பார்க்கப் பார்க்க, முத்துப் பதித்த ஒரு நெற்றிச் சுட்டியைப் போல் அது ஒளிர்வதாகப்பட்டது அவனுக்கு.

சுகன்யா வருவதற்குள் பேசி முடிக்க வேண்டும் என்பது நினைவுக்கு வர, தோட்டத்தில் பூப்பறித்துக் கொண்டிருந்த அம்மாவை, "அம்மா, இங்க வாயேன்..." என்று அழைத்தான்.

கேள்விக்குறியுடன் வந்தவளை, 'உட்காரு' என்று சைகை செய்ய, திண்ணையில் உட்கார்ந்தாள்.

முகத்துக்கு நேராக அவர்களைப் பார்த்துச் சொன்னான். "சுகன்யாவும் நானும் தனியா குடித்தனம் வைச்சுடலாம்னு முடிவு பண்ணியிருக்கோம்..."

சொல்லிவிட்டானேயொழிய, பெற்ற மனங்களுக்கு வலி ஏற்படுத்துகிறோமே என்ற குற்ற உணர்வு அடுத்த கணமே அவனை ஆட்கொண்டது.

ஒருகணம் பார்வை பரிமாறிக் கொண்ட சரஸ்வதியும் ராமநாதனும் தொடர்ந்து பேசிய போது அவனால் தன் காதுகளை நம்ப முடியவில்லை!

(தொடரும்)

வித்தகர் :

மனநல மருத்துவர் மாத்ருபூதம்

இதில் கிடைக்கும் மகிழ்ச்சி வேறெதில் கிடைக்கும்?



'படிப்பு ஒன்றுதான் செல்வம்' என்று சொல்லிச் சொல்லித் தம் தாய் தன்னை வளர்த்ததாகச் சொல்லும் டாக்டர் மாத்ருபூதம், ஐந்து வயதில் தந்தையை இழந்தவர். முழுக்க முழுக்கத் தாயின் கவனிப்பில் வளர்ந்தவர்.

"பத்து ரூபாய் சம்பாதிச்சா ஒரு ரூபாய் தர்மம் பண்ணு என்று சின்ன வயதிலேயே என் தாய் சொல்வார். இருநூறு ரூபாய் சம்பாதித்த போதிலிருந்து அந்தப் பழக்கத்தைக் கடைப்பிடிக்கிறேன். இன்று ஆயிரக்கணக்கில் சம்பாதிக்கும் போதும் அதே பழக்கம் தொடர்கிறது. அதனால் தான் சந்தோஷமும் இன்னும் கூடவே இருக்கிறது!" என்கிறார்.

அவர் ஒரு கவிஞர். நாடக ஆசிரியர். பதிமூன்று நாடகங்கள் எழுதியிருக்கிறார். முறைப்படி கர்நாடக சங்கீதம் பயின்றவர். இனிமையாகப் பாடுவார். ஒரு ஹிந்தி பண்டிட்டும் கூட. ஆனால் அவர் நாடு முழுக்க அறிமுகமாகியிருப்பது புகழ்பெற்ற மனநல மருத்துவராக.

டாக்டர் மாத்ருபூதத்தின் தொழில் அது தான். ஆனால் அவரோடு பேசிக்கொண்டிருந்தால் அவர் உதிர்க்கிற நகைச்சுவை முத்துக்களைக் கேட்டால், 'நாளெல்லாம் மன நோயாளிகளுடன் பழகுகிறவர் எப்படி இத்தனை ஜாலியான மனிதராக இருக்கிறார்' என்று வியக்கத் தோன்றும்.

ஆனால் இந்தத் துறை மருத்துவராக இருப்பதற்கு இப்படி எப்போதும் உற்சாகமாகவே இருக்க வேண்டியது அவசியம் என்கிறார் மாத்ருபூதம்.

"மற்ற வேலைகள் மாதிரி இல்லை இது. மனசுக்குப் பிடிக்காமல் மனநலத் துறையில் ஒருவன் பணியாற்ற வந்தால், அவன் மட்டுமின்றி, நோயாளியும் குட்டிச்சுவர்தான்!" என்கிறார்.

'சிசோப்ரேனியா' (SCHIZOPHRENIA) என்ற மனச் சிதைவு நோய்க்கான மருத்துவம் அளிப்பதில் சாதனை புரிந்திருப்பவர் மாத்ரு பூதம்.

இந்த நோய்க்கு உள்ளானவர்கள், தொடர்பில்லாமல் பேசிக் கொண்டே போவார்கள். தன்னம்பிக்கையின்மை, தேவையின்றி ஆத்திரப்படுவது, சந்தேகப்படுவது என்று அறிவை மழுங்கடிக்கும் நோய் இது. கிட்டத்தட்ட பைத்தியமாக்கிவிடும்!

மாத்ருபூதம் இந்நோய்க்கு வழங்கும் ஒருவித நூதன மருத்துவத்தின் வெற்றியைக் கேள்விப்பட்டு அரபு நாடுகள், இலங்கையிலிருந்தெல்லாம் நோயாளிகள் இதற்கான சிகிச்சை பெற இவரிடம் வருகிறார்கள்.

"போயும் போயும் இந்தத் துறைக்கா வந்தாய்" என்று என் நண்பர்கள் கேட்பார்கள். ஆனால் இந்த வகை மருத்துவம் பெற வரும் நோயாளிகளுக்குச் சிகிச்சையளித்து, வெற்றி பெறும்போது கிடைக்கிற மகிழ்ச்சியும் ஆத்ம திருப்தியும்

வேறெதிலும் கிடைக்காது!" என்று பெருமிதத்துடன் சொல்கிறார்.

மனநல மருத்துவரான தன் மனதையே பாதித்த ஓர் அனுபவம் சமீபத்தில் நடந்ததாகக் குறிப்பிட்டார் மாத்ருபூதம்.

என்ன அது?

இவரிடம் மனநல சிகிச்சைக்காக கபூர் என்ற நோயாளி ஒருவர் வந்திருக்கிறார். அவருக்கு மருத்துவம் பார்த்து, குணப்படுத்தி, வீட்டுக்கு அனுப்பியபின், வீட்டிலிருப்போர் அவரைத் தொடர்ந்து சரியாக நடத்தாததால் அவர் மனமுடைந்து போய்விட்டார்.

சமீபத்தில் அவர் காலமாகி விட, "மிகவும் வருத்தமாகி விட்டது" என்றார் டாக்டர்.

"தீபாவளி, ரம்ஜான் போன்ற பண்டிகைகளின்போது இனிப்பெல்லாம் வாங்கி வந்து தருவார் அவர். இத்தனை சீக்கிரம் இறந்திருக்க வேண்டாம்!" என்று உருகுகிறார்.

காஞ்சி முனிவருடன் டாக்டரின் தந்தைக்குத் தொடர்பு இருந்திருக்கிறது. ஐம்பது வருடங்களுக்கு மேலாகத் தம் அன்னதானப் பணியால் 'அன்னதான ராமசாமி' என்றே பரமாச்சாரியாரால் பாராட்டப்பட்டவர் அவர்.

அந்த மகானுடனான தொடர்பு இவருக்கும் தொடர்ந்ததைப் பெரும் பாக்கியமாகக் கருதுகிறார்.

"உன் அப்பா நிறைய புண்ணியம் பண்ணியிருக்கார். நீ நன்னா இருப்பே" என்று பெரியவர் சொல்வாராம்.

கலவையிலும் காளஹஸ்தியிலும் உள்ள முதியோர் இல்லங்களுக்குச் சென்று மருத்துவ உதவிகள் செய்து வருவார் மாத்ருபூதம். 'கலவை டாக்டர்' என்றுதான் பரமாச்சாரியார் கூப்பிடுவாராம்!

பொதுமக்கள் வசதிக்காக, ஒரு கோடி ரூபாய் செலவில் ஆராய்ச்சி வசதிகள், காப்பகம், மறுவாழ்வு இல்லம் என்று ஒரே குடையின் கீழ் அமைப்பதற்கான முயற்சியில் டி.டி. வாசுவின் தலைமையில் 'இன்டராக்ஷன் டிரஸ்ட்' என்று ஓர் அமைப்பை நிறுவியிருக்கிறார் மாத்ருபூதம்.

"இது அமோகமா வரும்" என்று ஆசீர்வதித்து, பத்தாயிரம் முதல் நன்கொடையாகத் தந்திருக்கிறார் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்!

அரசாங்கம் தன் பங்குக்கு இதற்கான நிலம் தந்து உதவ, பணிகள் வேகமாக நடைபெற்று வருவதாகக் குறிப்பிட்டார் டாக்டர் மாத்ருபூதம்.

பாரம்பரியப் பெருமைகளிலும் மதிப்பீடுகளிலும் மிகுந்த நம்பிக்கையுடைய இவரது தாரக மந்திரம் :

"நகைச்சுவை உணர்வு ஒன்றுதான் மனிதனை வாழவைக்கிறது!"

– சுப்ரபாலன்

எப்படியும் வியாபாரம்!

சில மாதங்களுக்கு முன்பு பெங்களூர் கன்டோன்மெண்ட் பகுதியில் பிரபலமாக விளங்கும் கமர்ஷியல் ஸ்ட்ரீட்டில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக கார்கள் நிறுத்துவதைத் தடை செய்து விட்டார்கள். அந்தத் தெருவில் கார்கள் போகலாமே தவிர, நிறுத்தி வைக்கக் கூடாது. வாடிக்கையாளர்கள் தங்கள் கார்களை அருகில் உள்ள காமராஜர் சாலையிலோ, டிக்கன்சன் சாலையிலோ நிறுத்திவிட்டு கமர்ஷியல் ஸ்ட்ரீட்டிற்குள் நுழைய வேண்டும். இதனால் கடைக்காரர்களின் வியாபாரம் டல்லடித்து விட்டது.

இதை எதிர்த்து, பழையபடி கார்களை நிறுத்த அனுமதிக்க வேண்டுமென்று போலீசாரிடம் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

அனுமதி கிடைக்கும்வரை சும்மா இருக்க முடியுமா? பெங்களூர் கமர்ஷியல் அசோசியேஷன் மூலமாக வாடிக்கையாளர்களை கமர்ஷியல் ஸ்ட்ரீட்டிற்கு அழைத்து வருவதற்காக இரண்டு மினி பஸ்களை ஏற்பாடு



* காத்திருக்கும் மினி பஸ்கள்...

செய்திருக்கிறார்கள்!


அழைத்து வரும் வாடிக்கையாளர்களை விரும்புகின்ற கடைகளின் வாசலருகே இறக்கிவிட்டு, ஏற்கனவே வியாபாரத்தை முடித்துக் கொண்டு குறிப்பிட்ட இடத்தில் காத்துக் கொண்டிருப்பவர்களை மீண்டும் அழைத்துச் சென்று அவர்கள் தங்கள் கார்களை நிறுத்தி வைத்திருக்கும் இடங்களில் இறக்கி விடுவார்கள்.

இது போன்ற ஏற்பாடு ஏற்கனவே தில்லி, பம்பாய் போன்ற நகரங்களில் இருக்கிறதாம். தென்னிந்தியாவில் முதன்முறையாக பெங்களூரில் இந்தத் திட்டம் அறிமுகமாகியிருக்கிறது. இந்த மினி பஸ்களை 'வேர் அவுஸ்' மற்றும் 'வீக் எண்டர் கிட்ஸ்' நிறுவனங்கள் ஸ்பான்சர் செய்துள்ளன!

– அ.குமார்

'தமிழ்நாட்டிலும் பாரத தேசத்திலும் எத்தனையோ புகழ்பெற்ற ஆலயங்கள் இருக்கின்றன. அவையெல்லாம் அந்தந்த ஆலயத்தில் சாந்நித்யம் பெற்று விளங்கும் சுவாமிகளின் பெயராலேயே விளங்குகின்றன. ... ஆனால் 'மதுரைக் கோயில் மட்டும் மீனாக்ஷி அம்மன் கோயில்'தான். ... எனவே பெண்ணுரிமை இயக்கம், பெண் விடுதலை இயக்கம், பெண் சமத்துவ இயக்கம் ஆகிய இயக்கங்களுக்கெல்லாம் வெகு காலத்துக்கு முன்பே அஸ்திவாரம் அமைத்து வழிகாட்டி,

* வெளியிடுகிறார் செம்மங்குடி



வெற்றியும் பெற்ற பெருமையும் மகிமையும் மதுரை மீனாக்ஷி அம்மனையே சேர்ந்ததாகும்.'

– அமரர் கல்கி 1947 ஆம் ஆண்டு எழுதிய தலையங்கத்தின் ஒரு பகுதி இது! தமக்கேயுரிய நகைச்சுவை மிளிர இவ்வாறு ஆரம்பித்தவர், மதுரை மீனாக்ஷி அம்மன் ஆலயத்தில்தான் முதன் முதலாக ஹரிஜன ஆலயப் பிரவேசம் நடந்தது என்பதை நினைவூட்டி, அந்தக் கோயிலுக்கு மகாத்மா காந்தி வரவிருந்ததைத் தெரிவிக்கிறார் :

சக்திவாய்ந்த மீனாக்ஷி அம்மனுக்கு அடுத்த வாரத்தில் மற்றொரு பெரிய மகிமை ஏற்படப் போகிறது. மதுரை மீனாக்ஷி அம்மன் ஆலயத்துக்குள் மகாத்மா காந்தி சென்று அம்மனையும் சுவாமியையும் தரிசிக்கப் போகிறார்.

இந்தப் பழைய பெருமைகளுடன் மதுரை மீனாக்ஷியம்மன் கோயிலுக்குச் சமீபத்தில் ஒரு புதிய பெருமையும் சேர்ந்திருக்கிறது :

எம்.எஸ்.ஸின் தெய்வீகக் குரலில் மீனாக்ஷி சுப்ரபாதம் ஒலிப்பதிவாகி எச்.எம்.வி. நிறுவனத்தினரால் வெளியிடப்பட்டிருக்கின்றது.

செப்டம்பர் பன்னிரண்டாம் தேதி அன்று நடைபெற்ற இந்த காசெட் வெளியீட்டு விழாவில் செம்மங்குடி சீனிவாச அய்யர், ராதா பர்னியர், சுரேஷ் கிருஷ்ணா போன்றோர் எம்.எஸ். – சதாசிவம் தம்பதியை வாழ்த்தியும் போற்றியும் பேசினார்கள். கேட்டு மகிழ்ந்த ரசிகர்களுக்கு எல்லாவற்றையும் விட அதிக மகிழ்ச்சியை அளித்தது நிகழ்ச்சியின் இறுதியில் ஒலிபரப்பப்பட்ட மீனாக்ஷி சுப்ரபாத காசெட்டின் இசைத் துளிகள்தான் என்று சொல்லத் தேவையில்லை.

எம்.எஸ். பாடக் கேட்பது ஓர் அலாதியான அனுபவம் எனில், அவர் பாட்டை பிறர் ரசிக்கக் காண்பதும் கேட்பதும் அதற்கீடான ரசானுபவம்தான்!

'மீனாக்ஷி சுப்ரபாதம்' வெளியீட்டு விழாவில் அதன் சில பகுதிகள் ஒலிபரப்பான போதும் சரி, ரமண மஹரிஷி நூற்றாண்டையொட்டி ஞானானந்தா அரங்கில் நடந்த அவரது கச்சேரியிலும் சரி... பெரியோரும் சிறியோரும் தங்களை மறந்து இசையுடன் ஒன்றிக் கரைவதைப் பார்க்க முடிந்தது.

நமது கர்நாடக இசையை பக்தி பாவத்துடன் கையாளும்போது, சராசரி மனிதர்கள்கூட மிக உயரிய நிலைக்கு உயர்த்தப்படுகிறார்கள் என்பதை அந்த அனுபவங்கள் மீண்டும் உணர்த்தின.

இன்று விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக, இந்த உயர்ந்த அனுபவங்கள் மேலும் பரவலாக்கப்பட்டு வருவது போற்ற வேண்டிய விஷயம். இந்தத்

கேட்டுப் பார்த்து சொக்கிப் போனோம்!



துறையில் கொடிநாட்டி யிருக்கும் எச்.எம்.வி. நிறுவனம் எம்.எஸ்.ஸின் குரலில் மட்டும் இதுவரை 47 காசெட்டுகளை வெளி யிட்டிருக்கிறது. மீனாக்ஷி சுப்ரபாதம் 48வது காசெட்!

இசையிலும் சமஸ்கிருத மொழியிலும் புலமை வாய்ந்தவராய், சென்னை, மியூசிக் அகாட மியின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்தவர் வி. ராகவன். காஞ்சி பரமாசார் யார் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளின் பக்தர். சுவாமிகள் ஆசி பெற்று அவர் இயற்றியது தான் மீனாக்ஷி சுப்ரபாதம். மீனாக்ஷி அன்னையின் எழிலுருவையும் காஞ்சி காமாக்ஷி, காசி விசாலாக்ஷி, மதுரை மீனாக்ஷி என்று மூன்று முக்கிய ஸ்தலங்களில் அவள் அருள் சொரிவதை யும், சக்தியின் வடிவாய் அவள் திகழ்வதையும் போற்றித் துயிலெழுப்புகிறது மீனாக்ஷி சுப்ரபாதம். ஆழமான தத்துவார்த்தங் களும் அதில் அடங்கியிருக் கின்றன.

எம்.எஸ்.ஸின் குரலில் இந்த மீனாக்ஷி சுப்ரபாதம் ஒலிக்கும்போது பால மீனா க்ஷியைத் துயிலெழுப்பும் அன்னையின் குரலாகவே அது நமக்குத் தோன்றுகிறது.

தொடர்ந்து வரும் மாமவ மீனாக்ஷி கீர்த்தனை யும் ஆதி சங்கரரின் மீனாக்ஷி பஞ்சரத்னமும் ஒரு பக்தையின் சரணாகதியை உணர்த்துகின்றனவெனில், அம்புஜம் கிருஷ்ணா இயற்றிய 'என் தாய் நீயன்றோ' கிருதியைப் பாடும்போது எம்.எஸ்.ஸின் குரல் ஒரு குழந்தையின் நிலைக்கு மாறிவிடும் விந்தையை என்னவென்று சொல்வது!

காசெட்டின் பிற்



ராஜாஜி இயற்றி, எம்.எஸ். இசைத்திருக்கும் 'குறையொன்று மில்லை' என்ற பாடல் இன்று ரசிகர் களிடையே மிகவும் பிரபலமாகியிருக் கிறது. இப்பாடலுக்கும் எம்.எஸ் இசைத்துவரும் வேறு பல பாடல் களுக்கும் மெட்டு அமைத்துக் கொடுத்திருப்பவர் கடையநல்லூர் வெங்கட்ராமன். இவர் கடந்த இரு பது ஆண்டுகளாக எம்.எஸ்.ஸுக்கு இந்தப் பணியைப் பிரத்யேகமாகச் செய்து வருகிறார்.

குறிப்பாக, அன்னமாச்சார்யா கீர்த்தனைகளை மேடை தோறும் முழங்கச் செய்ததில் இவருக்கு முக்கியப் பங்கு உண்டு. 'ராரா சின் னன்னா' என்ற அன்னமய்யா கிருதிக்கு இவர் அமைத்த மெட்டைக் கேட்டு மனமுருகிப் பாராட்டிக் கடிதம் எழுதியிருக்கிறார் வித்வான் நேதனூரி கிருஷ்ணமூர்த்தி.

செம்பையிடம் சிறிது காலம் குருகுல வாசம், பின்னர் திருவாங்கூர் சமஸ்தான இசைக் கல்லூரியில் – செம்மங்குடி தலைமையில் முறை யான இசை வகுப்புகள், அது முடிந்து திருவாங்கூர் வானொலியில் பணி, பின்னர் சென்னை வானொ லிக்கு மாற்றம் என்று இவரது வாழ்க் கைக் குறிப்பு இசை சார்ந்து விரிகிறது.

வெங்கட்ராமனுக்கு மெட்டமைக் கும் ஆற்றல் இருப்பதை உணர்ந்து, வாய்ப்பளித்து வளர்த்தவர் 'சின்னம்பி' என்று அறியப்பட்ட சேதுராமன். வானொலிப் பணியில் இருந்தவர்.

எம்.எஸ்.ஸின் பக்தி பாவமும் ஆற்றலும் முழுமையாக வெளிப் படும் வகையில், சங்கதிகளை நேர்த் தியாக உள்ளடக்கிய மெட்டுகள் வெங்கட்ராமன் அமைத்திருப்பவை...

"திட்டமிட்டு அவ்வாறு அமைக் கிறீர்களா?" என்பது போன்ற ஆராய்ச்சி சார்ந்த கேள்விகளுக்கு வெங்கட்ராமனிடம் பதில் இல்லை.

"எனக்குத் தோன்றுகிற மெட் டைப் போடுகிறேன். அவர் உயிர் கொடுத்துப் பாடுகிறார். அதில் என் பங்கு இருபத்தைந்து சதவிகிதம் தான்..." என்கிறார் மிக மிக எளிமை யாக.

'சரியாகப் படிப்பு வரவில்லை' என்பதால் வெங்கட்ராமனை பாட்டு கற்றுக் கொள்ள அனுப்பினார்களாம்...

அப்படிப் படிப்பு வராமல் போனதே நல்லதாகப் போயிற்று என்றல்லவா இன்று மகிழ்ச்சி ஏற்படுகிறது!

பகுதியில் அருமை யான, அரிய தமிழ்ப் பாடல்களைச் சேர்த் திருப்பதை எவ்வளவு பாராட்டினாலும் தகும். பிள்ளைத் தமிழும் மதுராம்பிகை பதிகமும் தேவாரமும் ஒலிக்கும்போது தமிழ்ச் சுவையும் இசை ரஞ்சகமும் சேர்ந்து மனம் குவியச் செய்கின்றன.

இந்த காசெட்டுக்கு அரு மையாக இசையமைத்துக் கொடுத்திருப்பவர் கடைய நல்லூர் வெங்கட்ராமன் (காண்க பெட்டிச் செய்தி). ராகங்களின் தேர்விலும் சங்கதிகளின் வடிவமைப்பி லும் அவரது தனியான முத்திரை பளிச்சிடுகிறது.

ஸ்ரீராம் குமாரின் வயலினில் அழுத்தமும் அடக்கமும் ஒருசேர தொனித்து மெருகு சேர்க்க, வசந்தா கிருஷ்ணமூர்த்தியின் வீணை இருந்தும் இல்லாதது போன்ற நயத்துடன் பக்க பலம் தருகிறது. கே.வி. பிர சாத் சிறப்பாக மிருதங்கம் வாசித்து நிறைவூட்ட உதவியிருக்கிறார்.

எம்.எஸ்.எஸ் என்ற மந்திர எழுத்துக்களின் விரிவாக்கம் மதுரை சண்முக வடிவு சுப்புலக்ஷ்மி என்பது அனைவருக்கும் தெரிந்தது தான். எனவே மதுரை மீனாக்ஷியம்மன் சுப்ரபா தத்தை அவர் பாடியிருக்கும் பொருத்தம் நமக்கு மிகுந்த மனநிறை வைத் தருகிறது. இந்த விஷயத்தில் நம் மனநிறை வைக் காட்டிலும் எம்.எஸ். அவர்களின் மன நிறைவு பல மடங்கு அதிகமாகயிருக் கும் என்பதையும் உணர்கி றோம். அது என்றென்றும் நிலைத்து நீடிக்க மதுரை மீனாக்ஷியம்மனை வணங்குகிறோம்.



மாணிக்கம்



பெண்டாட்டி விஷயத்தில் தசரதன் மாதிரி இருக்கிற ஓர் அப்பனுக்கு ராமன் மாதிரி ஒரு மகன். இந்த ராமன், தேடி வருகிற சீதையைக் கூடக் கல்யாணம் பண்ணிக் கொள்ள மறுக்கிறார். காரணம் ஒரு எக்ஸ்போர்ட் கம்பெனி மாதிரி வீட்டில் நிறைந்து இருக்கும் தங்கைகள். (அவர்களுக்கெல்லாம் கல்யாணம் ஆக வேண்டாமா?)

ஒருவழியாக ஏழோ, எட்டோ தங்கைகளுக்குத் திருமணம் முடித்து, வருஷக்கணக்காகப் பூட்டியிருக்கும் ஊர்க்கோவில் கதவைத் திறந்து, (சமீபகாலமாக இது நம் சினிமாவில் அதிகரித்திருக்கிறது.) ஓர் உக்கிரமான கிளைமாக்ஸுக்குப் பிறகு ராஜ்கிரண் காவல் தெய்வ சிலையாக மாறுவதுடன் படம் முடிகிறது.

ஊர்க்காவலர் ராஜ்கிரண், தங்கை, தம்பிகளின் அண்ணன் ராஜ்கிரண் என்று ஒரே படத்தில் இரு குதிரைச் சவாரி.

அண்ணன் பாசத்தையெல்லாம் சிவாஜியிலிருந்து ராஜேந்தர் வரை ஒட்டப் பிழிந்து விட்ட பிறகு, புதிதாக ஏதாவது செய்ய மிக மெனக்கெட்டிருக்கிறார். அந்தக் கீழ்க்குரல் அன்பும் விழிகளில் தெரிகிற பாசமும் ராஜ்கிரணின் பலம். பெரும்பாலும் ரசிக்க முடிகிறது. ஆனால் திருமணமாகிப் போன முதல் தங்கை, பிறந்த வீட்டுக்கு வருகிறபோது உக்கிரமாக எரிந்து விழுகிறார். என்னவாம் காரணம்? ஒரு குட்டிக் கதைக்கான திடுக்கிடும் முடிவாக நினைத்துக் கொண்டு செய்திருப்பதை சுலபமாக ஊகித்து விட முடிகிறது. இயக்குனர் இன்னும் சற்று யோசித்திருக்கலாம்.

எட்டு மனைவிகளை வைத்துக் கொண்டு, ஒற்றுமையாக(!) ஒரே வீட்டில் குடித்தனம் நடத்தும் வினுச் சக்கரவர்த்தி, படத்தில் ஒரு முக்கியமான விவாதப் பொருள். நடைமுறை சாத்தியமற்றது, கம்பி எண்ண வேண்டியது என்பது ஒருபுறமிருக்க, அவர் தம் மூத்த மகளைப் பெண் பார்க்க வரும்போது, அடுத்ததாக ஒருத்தியை மணந்து கொண்டு வருவதை வீட்டிலுள்ள இதரர் மிகச் சாதாரணமாகவே (குறைந்தபட்ச வருத்தத்துடன்) எடுத்துக் கொள்வதாகக் காட்டியிருப்பது அபத்தம்.

கடைசியில் காரணமே இல்லாமல் அவர் ராஜ்கிரண் காலில் வந்து விழுந்து மன்னிப்பு கோருவது உச்சக்கட்ட நகைச்சுவை. படத்தின் ஆதார விஷயமாக குடும்ப சென்ட்டிமென்ட்டை நோக்கிப் போகும் திரைக்கதை பலவீனமாவது இதனால்தான்.

இன்னொரு காரணம், முன்பே குறிப்பிட்ட இரு குதிரைச் சவாரி. திடீரென்று ஒரு கோவில் பிரச்னை, வெட்டு, குத்து என்று தடம் மாறுவதால் ராஜ்கிரணின் தங்கைப் பாச டிராக் அடிவாங்குகிறது. ஐயோ பாவமாக வனிதா விஜயகுமார் வேறு சாக நேரிடுகிறது. (ராஜ்கிரணுக்குப் பேத்தி போல இருக்கிறார். ஜோடியா? கடவுளே!)

பொதுவாக ராஜ்கிரண் படங்களில் பாடல்கள் இனிமை கூடி இருக்கும். இதில் ராஜா இல்லை; அன்னாரின் இளவல். முயற்சி, திருவினையாக்கவில்லை. ஆனால் ஆர்.ஆரில் பிய்த்து உதறியிருக்கிறார். குறிப்பாக சண்டைக் காட்சிகளில் இரைச்சலாக தமுக்கு, வயலின் கோஷம் காட்டாமல் வெறும் சிறப்பு சப்தத்துடன் நிறுத்திக் கொண்டிருப்பது சிறப்பு. பெண்களுக்குப் பிடிக்கும்விதமாக மனைவிக்கான இலக்கணம், சகோதரப் பாசம், பலதார மணத்தைக் கடிதல், அம்மன் அருள்வாக்கு எனப்பல அம்சங்கள் படத்தில் இருக்கின்றன.

அந்த கிளைமாக்ஸ் பாடலில் தியேட்டரில் சாமியாடப் போகிறார்கள். ராஜ்கிரண் எதிர்பார்ப்பது அதைத்தான் என்றால் நிச்சய வெற்றி.

- ஆர்.பி.ஆர்.

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : வி. ராஜேந்திரன். ஆசிரியர் : சீதா ரவி.

முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.

ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-

ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-

'அமுதசுரபி' வெளியீட்டாளர்கள்
ஸ்ரீராம் டிரஸ்டும் வெல்வெட் இண்டர்நேஷனல்
மெமரி பிளஸ் நிறுவனத்தாரும் இணைந்து வழங்கும்

அமரர் சின்னிகிருஷ்ணன் நினைவுச் சிறுகதைப் போட்டி 1996

மொத்தப் பரிசு ரூ. 14,000/-

முதற் பரிசு	ரூ. 5000/-
இரண்டாம் பரிசு	ரூ. 3000/-
மூன்றாம் பரிசு	ரூ. 2000/-

தேர்ந்தெடுக்கப்படும் 8 சிறுகதைகளுக்கு ரூ. 500 வீதம் சிறப்புப் பரிசு ரூ. 4000/-

நிபந்தனைகள்

1. இந்தச் சிறுகதைப் போட்டியில் அனைவரும் கலந்து கொள்ளலாம். ஒருவரே எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
2. கதை 'அமுதசுரபி'யில் ஐந்து பக்ககங்களுக்கு மேற்படாதவாறு இருத்தல் வேண்டும். (முழு வெள்ளைத் தாளில் பத்து பக்கங்களுக்கு மேற்படாமல்) சரித்திரம், சமூகம், நகைச்சுவை என எந்த வகைக் கதையையும் எழுதலாம்.
3. எழுதுபவரின் சொந்தக் கற்பனையாக இருக்க வேண்டும். மொழி பெயர்ப்பாகவோ, தழுவலாகவோ, மற்றவர்களின் சொந்த வாழ்க்கையைப் பிரதிபலிப்பனவாகவோ இருக்கலாகாது.
4. கதைகளைச் சுருக்கவும், கதைத் தலைப்புகளை மாற்றி அமைக்கவும் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு.
5. பரிசு பெற்ற கதைகளின் பூரண காபிரைட் உரிமை 'அமுதசுரபி' வெளியீட்டாளர்களைச் சாரும்.
6. முழு வெள்ளைத் தாளில் தெளிவான கையெழுத்தில், ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதி அனுப்ப வேண்டும். பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் கதையைத் திரும்பப் பெற, கதையுடன் போதிய தபால் தலை இணைக்க வேண்டும்.
7. போட்டிக்கான சிறுகதைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி : 31.10.96 முடிவு தேதி எக்காரணம் கொண்டும் மாற்றப்பட மாட்டாது.
8. போட்டி சம்பந்தமாக எந்தவிதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ள இயலாது.
9. ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.

'அமரர் சின்னிகிருஷ்ணன் நினைவுச் சிறுகதைப் போட்டி 1996' என்று மேல் உறையின் மீது குறிப்பிடவும்.

சிறுகதைப் போட்டி - 1996	
மொத்தப் பரிசு	ரூ. 14,000/-
முடிவு தேதி	: 31.10.96

சிறுகதைகள் அனுப்ப வேண்டிய முகவரி :

'அமுதசுரபி'

த.பை. எண் . 5043
145 லிங்கச் செட்டி தெரு, சென்னை - 600 001.

உறவின் பட்டு இழைகள்

தலையைக் கோதிவிடும் ஸ்பரிசத்திலோ உதடுகளில் மென் முத்தம் பதிவதிலோ விழிப்பதாயிருக்கும். சில நேரம் இது தவறிப்போய் 'காப்பி ரெடியா?' எனக் குரல் எழுப்பினால் சுவர்கள் குரலைத் திருப்பி அனுப்பி முகத்தில் மோத வைக்கும். ஒருவழியாக அன்றாடக் காலை நிகழ்வுகள் முடிந்து, டிபன் பாக்ஸை தோல் பையில் உள்ளடக்கி செருப்பணியும் போது கூட வழியனுப்பும் முக மலர்ச்சிக்காகக் கண்கள் உள்ளறையைத் தேடும்.

மாலையில் திரும்பின பிறகும் இதே அவஸ்தை. பகல் இரவென்று என் நாட்கள் சுழன்று, மீண்டும் மீண்டும் வெறுமையைக் காட்டின.

எனக்காவது பரவாயில்லை. சீக்கிரத்தில் பழகி விட்டது. அப்பாவைத்தான் வெகு நாளைக்கு சரிப்படுத்த முடியாமல் போயிற்று. எதைச் சரிப்படுத்த? எல்லாம் சரியாகத்தானே இருந்தது. ஒன்றரை வருடத்தில் ஏதாவது தவறியதுண்டா? அப்பாவுக்கு ஸ்வீட்னர் கலந்தும், எனக்கு சர்க்கரை கலந்தும் பெட் காப்பியில் துவங்கி, அவருக்கு மாத்திரைகளும் எனக்கு ஒரு தம்ளர் பாலுமாய் இரவு முடிகிற வரையில்.

அப்பாவால் இதைத் தாங்கிக் கொள்ள முடிந்தது என்பது கூட ஆச்சரியம்தான். இழப்பைத் தாங்க முடியாமல் போகிற பந்தத்துக்கு ஆயுசு பரியந்தம் தேவையா என்ன? அடுக்களைக்குள் பதுங்கிப் பதுங்கிப் போய் தீப்பெட்டியோ, டப்பாக்களில் வைத்திருக்கிற நொறுக்குத் தீனிகளில் சிறு இனிப்புத் துண்டையோ எடுத்துவிட்டு, வெளியே வந்து முழிக்கிறாரே இப்பவும்? அப்பாவுக்கு சர்க்கரை வியாதி உண்டு. புகைக்க வேண்டாம் என்றும் டாக்டர் சொல்லியிருக்கிறார். அவரைத் தடுக்க ஜோதி இல்லை.

அதிகாலை ஐந்தரை மணிக்கெல்லாம் எழுந்து, ஆறு மணிக்கு வாக்கிங் போகிறவர் அப்பா. முனிசிபல் ரோடு தாண்டி சிலபோது வடக்கே ரயில்வே ஸ்டேஷன் வரையிலோ, தெற்கே எம்.ஆர்.எஸ். தியேட்டர் வரையிலோ நடந்து திரும்புவார். வழியிலேயே ஒரு சிகரெட் பிடித்து விடுவார். வரும்போது ஒன்றிரண்டு அவரது ஜிப்பாப் பாக்கெட்டில் தூள்களை உதிர்த்தபடி கிடக்கும். பாத்ரூமில் திருட்டு தம் அடிப்பார். அவரது சுய சம்பாத்தியத்தில் அறுபத்து ஏழில் கட்டிய வீடு. பாத்ரூம், லெட்ரீன் எல்லாம் கொல்லைப்புறத்தில். சமையலறையின் குழம்பு வேகிற மணத்தையும் மீறி, அத்தனை தூரத்தில் இருந்து வரும் சிகரெட் புகையை ஜோதி நுகர்ந்து விடுவாள்.

"அப்பா... இன்னைக்கு ரெண்டு கொடம் தண்ணி..."

அவள் குரல் இங்கிருந்து போகும்.

"அய்யோ... இல்லம்மா. இது வேற. நான் இல்ல. நம்ம பஞ்சாட்சரம் ஸார்தான் அவர் வீட்டுத் தோட்டத்திலிருந்து ஸ்மோக் பண்றார்" பாத்ரூம் பதில் சொல்லும்.

"சிகரெட் வாசத்துக்கும் சுருட்டு வாசத்துக்கும் வித்தியாசம் தெரியாதா என்ன? நீங்க குளிச்சிட்டு வாங்க சொல்றேன். டிபன் சாப்பிடறதுக்கு முன்னாடியே தண்ணி சொமக்க வெக்கறேன்."

அப்படியொரு தண்டனையை விதித்திருந்தாள் ஜோதி. சிகரெட் பிடித்தால் தெருமுனை குழாயடியிலிருந்து இரண்டு குடம் தண்ணீர் சுமந்து வர வேண்டும். எனக்குத் தெரிந்து இந்தத் தண்டனை நிறைவேறியதோ, அப்பா சிகரெட்டை வீட்டுக்குள்ளாவது தவிர்த்ததோ இல்லை. ஆனால் இந்த சம்பாஷணைகள் தொடர்ந்து கொண்டுதான் இருந்தன.

"நீ எதுக்கும்மா ஜோதி. இங்கேயே இரு. என்னென்ன வேணுமோ லிஸ்ட் போட்டுக் குடு. நான் வாங்கிட்டு வந்துர்றேன்."

"இல்லப்பா, நானும் வர்றேன்."

"உனக்கெதுக்கும்மா சிரமம்?" என்றாலும் விட மாட்டாள். அப்பாவும் அவளுமாக மார்க்கெட்டுக்கு நடந்து போய், மளிகை சாமான்களையும் காய்கறிகளையும் சுமக்க மாட்டாமல் சுமந்து வருவார்கள். கனம் கூட இருந்தால் ஆட்டோவில்.

ஷாராஜ்

வெளியே போய்விட்டு களைப்பாக வந்து அமர்ந்ததுமே அவர், "ஜோதி... ஒரு சொம்பு தண்ணி எடுத்துட்டு வாம்மா" என்பது இப்போதும் ஏதாவது சில நாட்களில் கேட்கிறது. நான் எடுத்துப் போனால் நிமிர்ந்து பார்த்து வாங்கிவிட்டு, குடிக்காமல் தரையை வெறித்துக் கொண்டு இருப்பார் சற்று நேரமாவது.

அவரது காரியங்கள் பலவும் ஜோதியின்றி சரிவர நடந்ததில்லை. அப்பா போயி குளிங்க, அப்பா சாப்பிட வாங்கப்பா, மாத்திரை சாப்பிட்டீங்களாப்பா, ஏன்ப்பா இன்னும் ஷேவ் பண்ணாம இருக்கீங்க என்று ஒவ்வொன்றையும் ஞாபகப்படுத்துகிறவள் அவள்.

அது என்னவோ ஜோதி தனது மாமனாரை அப்பா என்றே கூப்பிட்டாள். என்னைத்தான் மாமா என்பாள்.

இதோ இந்த ஜன்னல் கம்பிகளைப் பற்றியபடி, சாய்ந்திறங்கும் கோடை மழைத் தூறலில் கிளம்பின மண் வாசனையை அவள் முகர்ந்து ரசித்தது இன்னும் நினைவிருக்கிறது. ரசிப்பதோடு நிற்காமல் வலது காலை விந்தியபடியே வெளியே போய் துளிகள் விழுந்த மண்ணை எடுத்துக் கொஞ்சம் போல வாயில் போட்டுக் கொள்ளவும் செய்தாள். உதட்டைப் பிதுக்கிச் சுவைத்து மண்ணை சப்புக் கொட்டியபடியே வந்தவளை நிலைப் படியில் வைத்துப் பிடித்துக் கொண்டேன்.

"ஏய்... என்ன இது, சின்னப் புள்ளையாட்டம். துப்பு..."

தலையசைத்து மறுத்தாள். பிடித்து இழுத்து கன்னத்தில் மெல்ல அடித்து, உதட்டைச் சுண்டி துப்ப வைக்க வேண்டியதாயிற்று. இத்தனையும் செய்த பிறகு, "ச்சே. ரொம்ப மோசம்ப்பா நீங்க" என்று சொல்லி கண்ணைக் கசக்கினாள். விளையாட்டாகத்தான்.

கல்யாணம் முடிந்து வருகிறபோது ஆரத்தி எடுத்த உறவுக்காரப் பெண் ஒருத்தி, "வலது காலை..." எனத் துவங்கித் தயங்கினபோது ஜோதியின் கண்களில் ஒரு வலியைப் பார்க்க முடிந்தது. என் சமாதானங்களை மீறி, "என்னோட திருப்திக்காக" என முதலிரவறையில் அவள் அழுத கண்ணீரின் வெம்மை இன்னும் என்னுள் தணிந்திருக்கவில்லை.

என் மனசறிய அதன் பிறகு அவள் அழும்படியாக எதுவும் நேரவில்லை இந்த வீட்டில். எங்கள் பக்கத்து ஆபீஸில் வேலை



பார்த்த அவளை சில மாதப் பழக்கத்திலேயே பிடித்துப் போய், என் விருப்பத்தைச் சொல்லி, இரண்டு வீட்டினரின் சம்மதத்துடன் திரு மணம் செய்து... எல்லாம் நல்லபடியாகத்தான் முடிந்தது. அதற்குப் பிறகும் கூட எல்லாம் நல்ல படியாகத்தானே இருந்தது?

"நாலு கொழந்தைகளாவது பெத்துக்கணும் மாமா. நம்ம வீடே நெறைஞ்சு... கலகலப்பா இருக்கணும். எந்நேரமும் குழந்தைகளோட அழுகைச் சத்தமும் குறும்புத்தனமுமா நெறைஞ்சு இருக்கணும்."

முடியவில்லை. ஒன்று பிறந்தது. அதன் முதல் அழுகையைக் கேட்டபடியே என் ஜோதி போய் விட்டாள். இப்போது அந்தக் குழந்தையின் அழுகைகள் அதன் தாய் வழிப் பாட்டியின் வீட்டைத்தான் நிறைத்துக் கொண் டிருக்கிறது. பச்சைக் குழந்தையை கவனித்துக் கொள்ளும்படி இங்கே வேறு யார் இருக்கிறார் கள்? பிறந்தது முதலே அதற்கு பாட்டிதான் என்றாகிவிட்டது.



● வாழப்பாடியார் வீட்டில், மாடியில் உள்ள பார்வையாளர் களைச் சந்திக்கும் அறையில் வாசலை மாற்றி வைத்திருக் கிறார்கள். "நான் வெளிநாடு சென்றபோது, எனது தொழிலதி பர் நண்பர் ஒருவர் என் கவனத்துக்குக் கொண்டு வராமல் வாஸ்து சாஸ்த்திர அடிப்படையில் வாசலை மாற்றி வைக்க ஏற்பாடு செய்து விட்டார்" என்கிறார் வாழப்பாடியார்.

— கௌசல்யா

இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவையாவது போய்ப் பார்த்துவிட்டு வருவேன். அப்பா எப் போதாவது வருவார். அவருக்குப் பேரன் மேல் ஏதாவது மனத்தாங்கல் இருக்குமோ என்று சந் தேகம். எத்தனை படித்தாலும் தர்க்கம், தத்து வம் என்று தெரிந்தாலும் சில நம்பிக்கைகள் அல்லது மூடத்தனங்களை விட்டொழிக்க முடியவில்லை. தாயைத் தின்ற குழந்தை என என் மகனை அவரும் நினைக்கிறாரோ?

நான் கேட்டதில்லை. அது நல்லது என்றே படுகிறது. மனதுக்குள் மறைந்து கிடக்கிற விஷ யத்தை வெளிக்காட்டுவது அவருக்கும், தெரிந்து கொள்வது எனக்கும் மிகுந்த வேதனையை உண்டாக்கி விடக்கூடும்.

மாமனாரின் ஊருக்குப் போய் வந்தால் 'எப்படி இருக்குது கொழந்தே?' என்று கேட் பார். ஏதோ கேட்கணுமே என்று. சொல்கிற பதிலை சிரத்தையாகக் கேட்கிறாரோ இல் லையோ, கடமைக்குச் சொல்லி விடுவது.

இது மாதிரி சமயங்களில்தான் ஜோதியின் மரணம் எத்தனை தூரம் எங்களை பாதிக்கிறது என்று புரிகிறது. அம்மாவை என் இருபத் தோராவது வயதில் இழந்த பிறகு எனக்கும் அப்பாவுக்குமான உறவில் நெருக்கம் கூடியிருந் தது. எனக்கு அவரும் அவருக்கு நானும் மட்டு மாக இருந்ததில் அந்தப் பிணைப்பு வலுவடைந் தது. எனக்கு வேண்டியதைச் செய்து கொடுப் பதும் என் விருப்பங்களை நிறைவேற்றுவதும் தான் அவரது முக்கிய காரியங்களாக இருந்தன.

பென்ஷன் காலத்தில் ஒற்றை உயிராக இந்த வீட்டுக்குள் அவர் கழித்த பகல் நேரங்களின் ரணங்கள் இப்போது மீண்டும் துவங்கியிருக் கின்றன. இந்த ஐந்து மாத காலமாக.

வழக்கம் போலக் குழந்தையைப் பார்த்து வர இந்த ஞாயிறிலும் புறப்பட்டேன். பழங் களும், குழந்தைக்கு லேக்டோஜென்னும் வாங் கிக் கொண்டு. சுருண்ட தலைமுடியும் விரல் சப்பும் வாயுமான குழந்தையை மடியில் கிடத்தியிருக்கும்போது மாமனார் வந்து பக்கத் தில் அமர்ந்து கொண்டார். கையில் ஏதோ கவர் இருந்தது.

"விசாலியும் மாப்பிள்ளையும் போன செவ்வாக்கிழமை வந்திருந்தாங்க மாப்ளே..."

"கொழந்தைங்க வல்லியா?"

"இல்ல. இவங்க மட்டும்தான் வந்தாங்க."

அவர்களின் நலம் விசாரித்த பிறகு குழந் தையை வேடிக்கை காட்டிச் சிரிப்பூட்ட முயன்று கொண்டிருந்தேன். இவர்கள் இருவருக்கும் இந்தக் குழந்தையால் எத் தனை கஷ்டம்? பச்சைக் குழந்தையை தாய்ப்பால் இல்லாமல் வளர்ப்பதே பாடு தான். தாயே இல்லாமல் வளர்ப்பது என் றால்? அதுவும் இதைப் பார்க்கும் போதெல்லாம் ஜோதியின் நினைவு வந்து விடுமே. அவள் ஜாடையை அப்படியே கொண்டல்லவா பிறந்திருக்கிறது இது?

எனக்கும் குழந்தையைப் பார்த்துவிட்டுப் போனால் இரண்டு மூன்று நாட்களுக்கு எதி லும் பிடிப்பற்றுப் போகிறது. இதற்கு பயந்தே தான் வாராவாரம் வருவதைத் தவிர்ப்பது. இன் னும் ஒரு வாரம் கூடும்போது துயரம் கொஞ்சம் குறையுமே?

விசாலி ஏதாவது காரியமாக வந்தாளா என்று தெரியவில்லை. அவளும் கணவனுமாக வந்திருக்கிறார்கள், அதுவும் குழந்தைகள் இல் லாமல் என்றால் ஏதாவது காரியமாகத்தான் இருக்கும். அவரே சொல்லட்டும் என்று விட்டு விட்டேன்.

ஜோதிக்கு இளையவளானாலும் விசாலிக் குத்தான் முதலில் திருமணம் ஆனது. எங்களின் திருமணத்துக்கு மூன்று வருடங்கள் முன்ன மேயே. அழகாக இருந்தாலும் ஜோதிக்கு குறை யும் வேறு உண்டல்லவா. அதனால் வாதட்

சணை அதிகம் எதிர்பார்த்தார்கள். அல்லது பையனுக்கும் ஏதோ குறை இருந்தது. போதாக் குறைக்கு அவள் வேறு, எனக்குக் கல்யாணமே வேண்டாம் என்று வெறுத்திருந்தாளாம். இதெல்லாம் பிற்பாடு ஜோதி சொல்லித் தெரிந்தது எனக்கு.

“இதக் கொஞ்சம் பாருங்க...” கவரிலிருந்து உருவின போஸ்ட் கார்ட் சைஸ் ஃபோட்டோ ஒன்றை நீட்டினார் மாமனார்.

வாங்கிப் பார்த்தேன். இளம்பெண்தான். முகத்தில் இருந்தது வயதுக்கு மீறின முதிர்ச்சி போலத் தெரிந்தது.

“சின்ன மாப்பிள்ளை வகைல சொந்தம் இந்தப் பொண்ணு. அவருக்கு அத்தை மக மொறை ஆகுது. ஜாதகமும் கையோட குறிச்சுக் கொடுத்திருக்கறாங்க. குடுத்துட்டு விவரமும் சொல்லிட்டுப் போகலாம்னுதான் நேர்ல வந்தாங்களாம்.”

“நாந்தான் மொதல்லயே சொல்லிட்டனே மாமா, இன்னொரு கல்யாணம்ங்கற பேச்சுக்கே எடமில்லைன்னு?” என்றபடி ஃபோட்டோவைத் திருப்பிக் கொடுத்தேன்.

“இந்தக் கொழந்தய நெனச்சுப் பாருங்க மாப்ள. எங்களுக்கு தெடம் இருக்கற வரைக்கும் நாங்க பாத்துக்குவம். அதுக்குப் பிறகு...? உங்களுக்குத்தான் இப்ப என்ன. கல்யாணமாயி ரெண்டு வருசம் கூட முடியல. அதுக்குள்ள போயிச் சேந்துட்டா மகராசி. அவளுக்குக் கொடுப்பினை இல்ல. இப்படி ஒரு மனுசரோட ஆயுசு முழுக்க வாழறதுக்கு எத்தனையோ புண்ணியம் செஞ்சிருக்கணும். அவ செஞ்ச புண்ணியம் அவ்வளவுதான். ப்ச்... போனவளைப் பத்தி பேசி இனி என்ன பிரயோஜனம். நடக்கறதைப் பார்ப்போம். இது உங்கப்பா பாத்து செய்ய வேண்டிய காரியம். பாவம், அவரு உங்களுக்கு மேல ஜோதின்னா உயிரா இருந்தாரு. சரி, அதனால என்ன? யாரு செஞ்சாலும் ஒண்ணுதான்.”

நான் பேசாமல் இருந்தேன். மாமியாரும் உள்ளிருந்து வந்து எங்களுக்குச் சற்றுத் தள்ளி தரையில் அமர்ந்து கொண்டார்.

“உங்களுக்கு எத, எப்படி சொல்லிப் புரிய வெக்கறதுன்னே தெரியலை மாமா. என் வாழ்க்கைல ஜோதி ஒருத்திக்குத்தான் எடம். அவ இப்ப உயிரோட இல்லங்கறதுனால அந்த எடம் காலியாயிருச்சுன்னு ஆயிருமா. இல்ல... ஜோதியோட எடத்துல இன்னொருத்தியத்தான் வெச்சுட முடியுமா?”

“அதுக்காக, காலம் பூரா இப்படியே இருக்கணும்ங்கறீங்களா? ஒருத்தர் போயிட்டா அதுக்காக மத்தவங்களும் கூடப் போயிடறமா. இல்ல, சோறு தண்ணி எதுவும் வேண்டாம்னு கெடந்துர்றமா. இப்ப நாங்க நிக்கலையா, மகளப் பறி கொடுத்துட்டு.”

“அவ போனது கூடப் பெரிசாத் தெரியல. இப்ப இவரு இருக்கற கோலத்தைப் பார்த்தா...”



✱ தி.மு.க. ஆட்சிக்கு வந்து நான்கு மாதங்களுக்கு மேலாகியும், அறநிலையத் துறை அமைச்சர் செங்குட்டுவன் உட்பட நான்கு அமைச்சர்களுக்கு குடியிருக்க வீடுகள் இன்னமும் ஒதுக்கப்படவில்லை. ஆதலால் அவர்கள் கெஸ்ட் அவுஸில்தான் தொடர்ந்து இருக்கிறார்கள். அமைச்சர்களுக்காகக் கட்டப்பட்ட வீடுகள் நீதிபதிகளுக்கு ஒதுக்கப்பட்டதால்தான், இந்தத் தட்டுப்பாடு. இப்போது இருக்கும் சூழ்நிலையில் நீதிபதிகளை காலி பண்ணச் சொல்லும் தைரியம் எந்த அரசுக்கும் வராது! 'தனியார் வீடுகளைப் பார்த்துக் கொள்ளுங்கள்; நாங்கள் வாடகை தருகிறோம்' என்று வீடு கொடுக்கப்படாத அமைச்சர்களுக்கு அரசு சொல்லியிருக்கிறது. ஆனால் பிரச்னை என்னவென்றால், 'அரசியல்வாதிகள், அமைச்சர்கள்' என்றாலே வீட்டை வாடகைக்கு விடப் பலர் தயங்குகிறார்களாம்!

★ செங்குட்டுவன்

— சென்னையார்

என்று மாமியார் எங்கோ பார்த்துச் சொன்னார். குறைந்தபட்சம் ஒரு மாத தாடியை ஷேவ் செய்து விட்டாவது வந்திருக்கணும் என்று தோன்றியது.

“இவ உங்களைப் பத்திப் பேசாத நாளில்ல மாப்பிள. சின்ன மாப்ளகிட்ட நான் பேசறதுக்கு முன்னாடியே இவளும் விசாலிகிட்ட சொல்லி வெச்சுட்டா. அதுக்கப்புறம்தான் அவங்க பாத்துட்டு வந்தது.”

எனக்கும் அவர்களுக்குமான விவாதம் நீண்டுகொண்டே போனது. இடையில் குழந்தை அழவே, மாமியார் வந்து எடுத்துப் போனார். குழந்தையின் அழுகையைச் சமாதானப்படுத்தி நிறுத்திவிட்டு, மாமியார் சொன்னார்:

“தாயோ புள்ளையோ, ஒரு உசுருதான் பொழைக்கும்னு டாக்டர் சொன்னாரு. அதுக்கு முன்னாடியே ஜோதி சொல்லிட்டா. வலியால துடிச்சுட்டே, 'நான் பொழைப்பேன்னு எனக்கு நம்பிக்கை இல்லம்மா. பொறக்கப் போற கொழந்த எங்க வீட்டுல மூணாவது கொழந்தைதான். இன்னும் இரண்டு பெரிய கொழந்தைங்க இருக்குது. அவங்களுக்கும் ஒரு நல்ல வழிய ஏற்பாடு செய்யுங்க'ன்னு.”

திரும்பிப் பார்த்தபோது சேலைத் தலைப்பால் வாயைப் பொத்தியபடி மாமியார் அழுது கொண்டிருப்பது தெரிந்தது. மௌனமாகத் தலை கவிழ்ந்து உட்கார்ந்திருந்தேன். மாமனார் நெருங்கி வந்து அமர்ந்து என் கைகளைப் பற்றிக் கொண்டார். இரைஞ்சுவது போல. அதுவே எனக்கு ஆறுதல் சொல்வதாகவும் இருந்தது.

நிமிர்ந்து அவரது முகத்தைப் பார்த்தேன். சொல்ல வந்ததைச் சொல்ல முடியாமல் தொண்டையை அடைத்தது.

மாமனார் தலையை ஆட்டிக் கொண்டார். என் கைகளில் லேசாகத் தட்டிக் கொடுத்தார். அது, நான் சொல்ல வந்ததைப் புரிந்து கொண்டது போல இருந்தது.

டி.வி.யால் சீரழிவா?

— ஒரு காரசார விவாதம்

தொலைக்காட்சியின் ஆதிக்கம் தவிர்க்க முடியாததாகி விட்டது. தூர்தர்ஷன் ஒருபுறமிருக்க, செயற்கைக்கோள் மூலம் ஒளிபரப்பும் தனியார் சானல்களும் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. 'நம் கலாசார சீரழிவிற்கும், ஒழுக்கக் குறை விற்கும் இவை முக்கியக் காரணங்களாக விளங்குகின்றன' என்ற குரல்கள் அவ்வப் போது எழுந்து கொண்டிருக்கின்றன. இது எந்த அளவு சத்துள்ள கருத்து? எஸ்.வி. சேகரும், பட்டிமன்றப் பேச்சாளர் பாரதி பாஸ்கரும் இங்கே விவாதிக்கிறார்கள் :



சேகர் : அதிகரித்து வரும் தனியார் சானல்கள் என்பது தவிர்க்க முடியாத விஷயம். சிங்கப்பூரில் கூட 'தெருவில் எச்சில் துப்பினால் அபராதம்' என்பதைச் சட்டம் ஆக்கினப்போ, அதற்கும் தொடக்கத்தில் எதிர்ப்பு இருக்கத்தான் செய்தது. இப்போ அவங்களே 'ஊரே அழகாயிருக்கு. தேவையான சட்டம்தான்னு மனசை மாத்திக்கிட்டாங்க. மாறுதல்களை நாம ஏத்துக்கப் பழகணும். கலாசார சீரழிவுன்ற பொய் வார்த்தைகளையெல்லாம் பயன்படுத்தி சத்தம் போடுவது அநாவசியம்.

பாரதி : நீங்க தொழில்நுட்ப முன்னேற்றம்ன்ற கோணத்திலே மட்டும் சொல்றீங்கன்னு நினைக்கிறேன்.

சேகர் : அது மட்டுமில்லே. மேலைநாட்டு நாகரிகம் இங்கு புகுவதும், இங்குள்ள பழக்க வழக்கங்கள் அங்கே அறிமுகமாவதும் சகஜம்னு சொல்றேன். cultural clash என்பது தவிர்க்க முடியாதது.

பாரதி : ஆனால் தொலைக்காட்சிகள் சுவையான தகவல்களைத் தரும், புத்திசாலித்தனத்தை வளர்க்க உதவும் சாதனமாக இருக்க வேண்டாமா? குறைந்தபட்ச சமூகப் பொறுப்பு

கேள்வி வரும்.

என்னிடம் அப்படி யாரும் கேட்கவில்லை என்றாலும் சொல்ல வேண்டியது என் கர்த்தவ்ய. (அதாங்க கடமை.)

பிரசாத் ஸ்டூடியோவில் உல்லாசம் படத்தில் வரும் ஒரு பாட்டுக்காக தோட்டாதரணி ஒரு செட் போட்டிருக்கிறார். இருங்கள், முடிந்த வரை வர்ணிக்கிறேன்.

பழங்கால அரசர் மாளிகை மாதிரி என்ட்ரன்ஸ். நுழைந்ததும் பிரும்மாண்டமான சவுக்கு, வேப்பமரங்கள். (வேரோடு, கிளையோடு) இடது பக்கம் ஒரு செல்லரித்த இரும்புத் தூண். அதில் குட்டிக் குட்டியாக நூறு சிற்பங்கள். அங்கே ஒரு குன்று. இங்கே ஒரு புதர். நடுவில் ஹோவென்று புல்வெளி, புல்வெளி.

ஒருகணம் பிரசாத்திலிருந்து டைம் மெஷின் மூலம் காங்கோ காடுகளுக்குப் போய் விட்டது மாதிரி பிரமை. அத்தனை தத்ரூபம்.

"எப்படி சார் முடிஞ்சது?" என்று டைரக்டரிடம் கேட்டேன்.

"பதிமூணு நாள் தரணி, பசி தூக்கமில்லாம உழைச்சிருக்கார், சும்மாவா?" என்றனர் ஜேடியும் ஜெர்ரியும்.

"என்ன செலவாயிற்று?" என்று கேட்டதற்கு நோ ரிப்ளை. மகேஸ்வரியைப் பிடித்துக் கொண்டு விக்ரம் பிஜிஎம்முக்கு ஆட ஆரம்பிக்க, அதில் மூழ்கியே போய் விட்டார்கள்.

இந்த செட்டின் ஸ்டில் கிடைக்குமா என்று கேட்டதற்கு, பாட்டு முழுக்க எடுத்து முடிந்ததும் தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இரண்டு வாரம் கழித்து ஞாபகப்படுத்துங்கள். கேட்டு வாங்கிப் போடுகிறேன்.

ஊர் உலகையெல்லாம் சுற்றி விட்டு நான் தண்டபாணியைப் பார்க்கப் போன போது மணி பிற்பகல் இரண்டு.

"மூடுக்கு வந்துட்டியா தண்டபாணி? எதாவது சமாசாரம் உண்டா?" என்றேன்.

"ஒரே ஒரு நியூஸ்தான். மிச்சமெல்லாம் அடுத்த வாரம். பிரபுதேவாவுக்கு, அடுத்து வர்ற 'மிஸ்டர் ரோமியோ'தான் அவர் வருங்காலத்தைத் தீர்மானிக்கப் போற படம். உயிரைக் குடுத்து நடிச்சிட்டிருக்கார். முன்ன மாதிரி கதை விவகாரங்கள்ல மூக்கு நுழைக்கறதெல்லாம் இல்லையாம். தன் வேலையை மட்டும் கரெக்டா முடிச்சிக் குடுத்துடறார்னு கேள்வி. தீபாவளிக்கு ரிலீஸாகிற இந்தப் படம் ஜனவரி எண்டு வரைக்கும் ஹவுஸ்ஃபுல்லா ஓடினாத்தான் மேற்கொண்டு படவாய்ப்புகள் வரும்னு விநியோகஸ்தர்கள் பக்கத்துல பேச்சு."

"படம் ஆனவரைக்கும் எப்படி வந்திருக்காம். உனக்கு ஏதாவது நியூஸ் வந்திருக்குமே?"

"கேள்விப்பட்டேன். காதலன் அளவுக்கு சிறப்புன்னு சொல்ல முடியாது. லவ்பேர்ட்ஸ் அளவுக்கு மோசம்னும் சொல்ல முடியாது. சுமாரா இருக்குன்னு யூனிட் ஆள் ஒருத்தன் சொன்னான்."

"ரெண்டுங்கெட்டான்ங்கற பதத்தோட அருஞ்சொற்பொருள் இதான்னு நினைக்கறேன். சரி, வரவா? நெக்ஸ்ட் விக் நீ நல்ல மூட்ல இருக்க ஆண்டவனை வேண்டிக்கறேன்!"

– கிச்சா




''என்னைப் பார்த்தாலே இன்ஸ்பெக்டரய்யாவுக்குப் பொறாமை!''

"ஏன்?"

"அவர் தொப்பையை விட என் தொப்பை பெரிசா இருக்கே!"

– எஸ். இராஜேந்திரன்



சீடன் : எல்லாம் அநித்யம் கறீங்களே! நிரந்தரமானதுன்னு எதுவும் இல்லையா குருவே?

குரு : ஏன் இல்லை? செருப்புத் திருடற ஜோக்கும் மாவட்டற ஜோக்கும் என்றும் சிரஞ்சீவியானவை!''

– உ. ராஜாஜி



''காசில்லாத போது எனனையும் எதுக்குப்பா டிபன் சாப்பிடக் கூப்பிட்டே?''

''மாவாட்டும் போது சும்மா, ஒரு பேச்சுத் துணையா இருக்குமேன்னுதான்...!''

– ஆர். வசந்தகுமார்

உன்னை வேணாமா?

10

வாசலில் பன்னீர் மரம் இருந்தது. இதமான மணத்தைப் பரப்பிய அதன் வெள்ளைப் பூக்கள், ஓரிரண்டு குரோட்டன்ஸ் செடிகள், பழைய துளசி மாடம், சாம்பல் வண்ணத்தில் பெயிண்ட் அடித்த கதவு, ஜன்னல்கள்...

பளபளத்த புதிய ஃபிளாட்டுகள் அரை டஜனுக்கு மேல் பார்த்திருந்தபோதும் சுகன்யாவுக்கு இந்த வீடுதான் பிடித்திருந்தது. பெருங்காய டப்பி போல் அடக்கத்துடன் மூன்று அறைகள், ஒரு சமையல் கட்டு, கொல்லைப்புறத்தில் துவைக்கும் கல், தென்னை மரங்கள், அவற்றில் வீறிட்ட அணில்கள் என்று ஒவ்வொன்றையும் ரசித்து மனத்தில் வாங்கிக் கொண்டாள்.

மேல் தளத்து மொட்டை மாடிக்குப் போக வெளியே, தனியாகப் படிக்கட்டு இருந்தது. "பௌர்ணமி நாட்களில் இங்கேயே படுத்துத் தூங்கலாம்... இல்ல ஸ்ரீராம்...?"

"படுத்துக்கலாம்... ஆனா தூங்க முடியுமான்றது சந்தேகம்தான்..."

கண்களில் குறும்புடன் பதில் சொன்னான் ஸ்ரீராம்.

சுகன்யா சிரித்தாள். நீண்ட நாட்களுக்குப் பிறகு மனம் மிக இலேசாக இருந்தது. பன்னீர்ப் பூக்களின் வாசனையை நெஞ்சு நிரம்ப சுவாசித்துக் கொண்டாள்.

பெற்றோரிடம் தனிக்குடித்தன திட்டத்தை வெளியிட்ட ஸ்ரீராம், தயக்கமின்றி வந்த அவர்களின் ஆசிகளைக் கேட்டு அசந்து போனான்.

"நானே உங்கிட்ட சொல்லலாமான்னு இருந்தேண்டா ஸ்ரீராமா..." என்று அப்பாவும், "நன்னா போயிட்டு வாங்கோ. வீட்டைப் பார்த்துட்டுச் சொல்லு, நாள் குறிச்சுத் தர்றேன்" என்று அம்மாவும் சொன்னதை சுகன்யாவிடம் தெரிவித்து ஆச்சர்யப்பட்டான்.

"எனக்கு இது ஆச்சரியமாகவே தெரியலை ஸ்ரீராம்..."

"என்ன சொல்றே...?"

"அவங்களைப் பொறுத்தவரைக்கும் ஒரு பெரிய இடைஞ்சலை வழியை விட்டு நீக்கியாச்சு..."

"நோ! நோ! அப்படியெல்லாம் நினைக்காதே..."

"இல்லை ஸ்ரீராம்! உண்மையைச் சந்திப்போமே... அவங்க கெட்டவங்கன்னு நான் சொல்லலை. ஆனா, என்னை அவங்களால ஏத்துக்க முடியலைங்கறது மறுக்க முடியாத உண்மை. உங்க அப்பா ரொம்ப நேர்மையானவர். அவ்வளவு தூரம் நாம பழகின பிறகு பிரிக்கறது நியாயமில்லைன்னு நினைச்சிருக்கார். அதனால்தான் நம்ம கல்யாணத்தை அப்படி அவசரமா நடத்தி வைச்சிருக்கார். அம்மாவும் அவர் பேச்சைத் தட்ட முடியாம சம்மதிச்சிருக்காங்க. ஆனா மனசளவிலே அவங்களால என்னோட நெருங்க முடியலை... நீ தனிக் குடித்தனப் பேச்சை எடுத்ததும் கும்பிடப் போன தெய்வம் குறுக்க வந்த மாதிரி சந்தோஷப்பட்டிருக்காங்க... இந்தக் காரியம் சுலபமா முடிந்தது அவங்க பெருந்தன்மையினாலேன்னு, நம்மளை நாமே ஏன் ஏமாத்திக்கணும்....?"

"சில சமயம் நீ ரொம்ப அதிகமா யோசிக்கறியோன்னு படறது சுகி... வேண்டாமே இப்படி ஏன் மூளையையும் மனசையும் போட்டு வருத்திக்கறே...? நடக்கிற விஷயங்களை அப்படியே, சாதாரணமா ஏத்துக்கக் கூடாதா...?"

"என்னால அது முடியாது ஸ்ரீராம். அப்பா - அம்மா சீக்கிரமா போய்ட்டதாலே, சின்ன வயசுலேர்ந்தே முக்கியமான முடிவுகளையெல்லாம் நானேதான் எடுக்க வேண்டி வந்துருக்கு. அந்த மாதிரி சமயங்கள்ல இப்படிக் காரண காரியங்களை யோசிச்சு எனக்குள்ளே ஒரு தெளிவு ஏற்படுத்திக்கப் பழகிண்டுட்டேன்..."

ஸ்ரீராம் அவள் நெற்றிப் பொட்டுகளில் விரலால் அழுத்தி நீவினான்.

"ரிலாக்ஸ்..."

"ஊம்..." என்று கண்களை மூடிக் கொண்டாள். "நாளைக்கே வீடு வேட்டையை ஆரம்பிச்சுடுவேன்..."

சொன்னவள், செயலிலும் இறங்கி இதோ - ஒரு வார இறுதியில் இந்த ஷூ பெட்டி வீட்டைப் பிடித்திருக்கிறான்.

? பட்டுக்கோட்டை பிரபாகர்

'ஷோ பெட்டி' என்ற ஸ்ரீராமின் கிண்டல் அவளுக்குப் பிடித்திருந்தது.

"அதோட வசதி வேறெதுலயாவது வருமா...? கோணல் - மாணல் இல்லாத, சந்து பொந்து இல்லாத, அனாவசிய அலங்காரங்கள் இல்லாத உன்னை மாதிரி!"

"சமையலறை ரொம்ப பழங்காலத்துக் கட்டுமானமா இருக்கே...?"

"அதனாலென்ன? எனக்குப் பிடிச்சிருக்கு... கொஞ்சம் ப்ளீச்சிங் பவுடர். ஆசிட், இரண்டு துடைப்பம், பிரஷ்... இது இருந்தாலே இந்த வீட்டை அடையாளம் தெரியாம ஆக்கிடுவேன்."

அவள் தேய்க்க, அவன் கழுவினான்.

"ரொம்ப நெடி... ஆனாலும்..." என்று ப்ளீச்சிங் பவுடரைப் போட்டுக் குழைத்த போது கர்சீப்பால் அவள் மூக்கையும் வாயையும் மூடி, கட்டி விட்டான். வியர்க்க, வியர்க்க இருவரும் உழைத்ததில் வீடு சுத்தமானது.

கூல்டிரிங் வாங்கி வந்தவன், வாஷ்பேஸின் கழுவிக் கொண்டிருந்தவளை இழுத்து வந்து ஃபேன் அடியில் உட்கார வைத்தான். இரண்டு கைகளிலும் சோப்பு



தங்க நகை பரிசு!

இந்த இருபத்தாறு வாரத் தொடர் ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு கதாசிரியர் பெயரில் வெளியாகி வருகிறது. ஆனால் அவர்களுள் ஒரே ஒரு நபர்தான் இதை எழுதி வருகிறார். தொடரை எழுதியவர் யார் என்பதைக் கண்டுபிடிப்பது உங்கள் சாமர்த்தியம். கடைசி வாரம் வரை காத்திருந்து, அந்த இதழில் வெளியாகும் கூப்பனில் விடை எழுதி அனுப்புங்கள். சரியான விடைக்குத் தங்க நகை பரிசு! பலர் சரியாக எழுதினால் குலுக்கலில் ஒருவரே பரிசு பெறுவார். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

நுரைத்திருக்க, மூக்கைச் சுற்றி அவன் கட்டிய துணிக்கு மேலே அவள் கண்கள் சிரித்தன.

கர்சீப்பைத் தூக்கிப் பிடித்து ஸ்ட்ரா அடங்கிய பாட்டிலை அவள் வாயருகே கொண்டு போனான்.

புறங்கையால் பாட்டிலைத் தள்ளிவிட்டவள், "ஊஹூம்... முதல்ல..." – உதடுகளைக் குவித்து அவனுக்கு அழைப்பு விடுக்க, கூல் ட்ரிங்க் பாட்டிலைக் கீழே வைத்துவிட்டு, ஆனந்தமாய் அதை ஏற்றுக் கொண்டான் ஸ்ரீராம்.

பால் காய்ச்சி குடித்தனம் வைக்க அப்பாவே நாள் பார்த்துச் சொல்லியிருந்தார்.

அம்மா, ஒரு ஸெட் புது ஸ்டீல் அடுக்குகளும், பரண் மேலிருந்து சில பெரிய பாத்திரங்களும் கொடுத்தாள்.

"இவ்வளவு பெரிய பாத்திரம் எங்க இரண்டு பேருக்கு எதுக்கும்மா....?" அந்தச் சிறிய வீட்டில் அதைக் கட்டிக் காப்பது குறித்த கவலையுடன் சுகன்யா கேட்டாள்.

"ஸ்ரீராமனுக்குச் சேர வேண்டியதுதான் இதெல்லாம்... வசந்தி, குமாரோடதுன்னு வேற தனியா பிரிச்சு வைச்சிருக்கேன்."

புத்தகங்களுக்கு மட்டுமேயான இரு மரப் பெட்டிகள் போக, நான்கு சூட்கேஸ்களில் சுகன்யா – ஸ்ரீராம் இருவரின் மொத்த உடைமைகளும் அடங்கிவிட்டன. பித்தளை தவலையும், வெண்கல குண்டானும் மட்டும் எதிலும் அடங்காமல் துருத்திக் கொண்டு நின்றன.

இரவு சாப்பிட்டபோது மாமியார் பரிமாற, 'இந்த வீட்டில் உண்ணும் கடைசி வேளை உணவு இது' என்பது சுகன்யாவுக்கு உறைத்தது.

'அவர் இதுவரை வெளிப்படுத்தி அறியாத ஆதுரம் இப்போதாவது தென்படுகிறதா...?'

"தட்டில் மோர் பரிமாறியவரிடம், "போதும்மா...!" என்று சொல்லி, அவர் கண்களை நிமிர்ந்து பார்த்தாள் சுகன்யா.

சரஸ்வதியின் கைகள் இவள் இலைக்குப் பரிமாறினாலும் கண்கள் ஸ்ரீராமின் பேரில் தான் இருந்தன. அந்தக் கண்களின் ஓரத்தில் இரு நீர்த் துளிகள் மினுமினுப்பதையும் பார்த்தாள். அவற்றின் பின்னேயிருந்த வேதனை தாக்க, சுகன்யாவின் கண்களிலும் இரு நீர் முத்துக்கள் திரண்டு கொண்டன. ஸ்ரீராம் கூட கஷ்டப்பட்டே சோற்றை விழுங்குவதாகத் தெரிந்தது அவளுக்கு.

மற்றபடி, வீடு எப்போதும்போல் ஒன்பதரைக்கு விளக்கணைத்து உறங்கத் தயாரானது.

வசந்தி மட்டும் அவர்களுடைய படுக்கையறை வாசலுக்கு வந்து நின்றாள். அறை

"டேய் ராகவா, ராமர் பிள்ளை தண்ணீர்ல மூலிகையைக் கலந்து பெட்ரோல் கண்டு பிடிச்சிருக்காராம்!"

"இதென்னடா பிரமாதம். என் மனைவி தண்ணீர்ல சர்க்கரையையும் காபிப் பொடியையும் கலந்தான்னா மண்ணெண்ணெய் மாதிரி இருக்கும். ஆனா அதை நாங்க வெளியில பிரபலப்படுத்திக் கலை. அவ்வளவுதான்!"

– ஔவை யோகானந்தம்





"பினாமிகளோட மதிப்பு வெகுவா உயர்ந்து போச்சு, போங்க."

"எப்படிச் சொல்றீங்க?"

ஒருலட்ச ரூபாய்க்கு பினாமியா இருக்கீங்களான்னு ஒரு ஆசாமியைக் கேட்டதுக்கு, 'கோடின்னா பேசுங்க...'ன்னு கறாரா சொல்லி அனுப்பிட்டானே!"

– சீர்காழி வி. ரேவதி

காலியானதில், பெரிதாகத் தெரிந்தது.

''இப்பவே வெறிச்சோடியிருக்கு.... நாளைக்கு நீங்க போனப்புறம் எப்படியிருக்குமோ...?''

''பழகிப் போயிடும் வசந்தி... வருத்தப் படாதே'' – சுகன்யா சொல்லிக் கொண்டிருந்த போதே ஸ்ரீராம், தங்கையின் தோள்களை அணைத்து, பக்கத்தில் தரையில் உட்கார வைத்துக் கொண்டான்.

"வசந்தி... நீ வந்து எங்க கூட இருக்கலாம்... அப்புறம் உன் கல்யாணம் நிச்சியமானா நாங்க ஓடி வந்துடமாட்டோமா...? இப்படிக் கலங்கக் கூடாது..."

"நான் ஏன் கலங்கறேன்...?" என்ற வசந்தி, அண்ணாவின் தோள்களில் சரிந்து விசும்ப ஆரம்பித்த நேரம் போன் அடித்தது.

ஓடிப்போய் எடுத்த சுகன்யா, "It's for you from office" என்று ஸ்ரீராமை அழைக்க, அவன் வசந்தியை மெள்ள விடுத்து எழுந்து போனான்.

''தைரியமா இரு வசந்தி... படிக்கற பொண்ணு... இப்படிக் கலங்கக் கூடாது... உன்னைப் பிரியணும்ங்கறதுக்காக இப்போ நாங்க போகலை... இந்த ஏற்பாடுதான் எல்லாருக்கும் சௌகரியமான, சந்தோஷமான ஏற்பாடா இருக்கும்னு முடிவானதுனால போறோம்...''

வசந்தி ஒரு குழந்தையைப் போல் 'ஊம்' கொட்டினாள்.

"நாளைக்கு உனக்கே கல்யாணமாகும்... அப்ப நீ போகற இடத்துல உன்னை எப்படி ஏத்துப்பாங்கறதைப் பத்தி ரொம்ப பெரிய எதிர்பார்ப்பு வைச்சுக்காம இருக்கறதே நல்லது... திறந்த மனசோட போனா, எப்படிப்பட்ட மனுஷங்களையும் ஏத்துக்கலாம்... அப்படிப்பட்ட சூழ்நிலைக்கு பழகிக்கலாம்..."

மெய்யாகவே நட்புணர்வு மேலிடத்தான் பேசினாள் சுகன்யா.

பதிலுக்கு வசந்தியின் கண்களில் மின்னல் வெட்டாகக் கோபம் பளிச்சிட்டது.

"சும்மாயிருங்க மன்னி... உங்களை மாதிரி 'லவ் மேரேஜ்' ஆனாத்தானே அந்தக் கவலையெல்லாம் படணும்... எனக்கு அப்படியெல்லாம் ஒரு பிரச்னையும் வராது. ஏன்னா அப்பா – அம்மா என்னை ஏத்துக்கக்கூடிய ஒரு குடும்பமா பார்த்துத்தான் எனக்குக் கல்யாணம் பண்ணி வைப்பாங்க..."

'விட்டேற்றியாக விழுந்த சொல்லடி பலமானதுதான்' என்று நினைத்துக் கொண்டாள்.

(தொடரும்)



ஒதுக்கீட்டில் படும்பாடு!

பெண்களுக்கு 33சதம் கட்டாய ஒதுக்கீடு பல விசித்திரமான பிரச்னைகளை ஏற்படுத்தி இருக்கிறது. கர்னாடகத்தில் ஒரு கிராமத் தலைவி பதவி தலித் பெண்ணுக்கென ஒதுக்கப்பட்டது. ஒருவரும் முன்வரவில்லை. கங்கவ்வா என்ற பிச்சைக்காரியைக் கட்டாயப்படுத்தித் தேர்ந்தெடுத்து விட்டனர். பதவியின் கௌரவத்தைக் காப்பாற்ற இனி அவர் பிச்சையும் எடுக்கக் கூடாதென்கிறார்கள். மூன்று குழந்தைகளுடன் அவர் பட்டினி கிடக்கும் நிலை. ஹொன்னாலியில் ரத்னம்மா என்பவர் ஜெயித்த பிறகுதான் எந்தக் கட்சியின் சார்பாக அவர் நிறுத்தப்பட்டார் என்ற விவரமே அவருக்குத் தெரிவிக்கப்பட்டது. செல்லகரெ தாலுகாமன்றத் தலைவியாக சகுந்தலம்மா தேர்ந்தெடுக்கப்பட்டதும் அவர் பத்திரிகையாளர்களிடம் தம்மைப்படம் பிடிக்க வேண்டாமென்றும் தம் கணவரின் படத்தையே பத்திரிகைகளில் போடும்படியும் வேண்டிக் கொண்டார்.

-ஜெயந்தி நடராஜன் எம்.பி. ''ஹிந்து''- கட்டுரை.


தகவல் : அ.ஷண்முகசுந்தரம்

''அப்பா! அடிக்கடி எதிர்த்த வீட்டு குரு என்னை கிண்டல் பண்றாம்பா...''

''என்னன்னு?''

''சீக்கிரம் வா, குடும்ப அரசியல் நடத்தலாம்ங்கிறான்!''

– பழங்கூர் மீரா–முருகன்



குமுறல்

●● தில்லி தொலைக்காட்சி, செய்திகளின் இறுதியில், பெரு நகரங்களின் வெப்ப அளவைக் குறிக்கும்போது, 'மும்பை' என்று எழுதுகிறது. ஆனால் 'சென்னை' என்பதை ஏற்காமல், 'மெட்ராஸ்' என்றே குறிப்பிடுகிறது. ஏன் இந்த ஓரவஞ்சனை?
கும்பகோணம், சித்ரா கிருஷ்ணமூர்த்தி.

●● தனியார் பள்ளிகளுடன் ஒப்பிட, அரசுப் பள்ளிகள் கல்வி கற்பிப்பதில் மிகவும் பின்தங்கியுள்ளன. செலவு அதிகமானாலும் பெற்றோர் தங்கள் குழந்தைகளைத் தனியார் பள்ளியில் சேர்ப்பதையே விரும்புகின்றனர். இந்நிலை மாற, அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஒவ்வொரு ஆசிரியரும் இதைத் தன்மானப் பிரச்னையாகக் கருத வேண்டும். பெற்றோரும் வாரம் ஒருமுறையாவது தங்கள் பையன் எப்படிப் படிக்கிறான் என்று ஆசிரியரிடம் கேட்டு வர வேண்டும். அப்போதுதான் ஏழை மாணவர்கள் ஏற்றம் பெற முடியும்.
கோபாலசமுத்திரம், இர. ரூபன்.

●● என் உறவினர் ஒருவர் வீட்டில் தொலைபேசி வசதி செய்து கொண்டார். ஆகஸ்டு 96-ல் முதன் முறையாக தொலைபேசி பில் வந்து உரிய காலத்தில் கட்டி ரசீதும் பெற்றாகி விட்டது. ஆயினும் திடீரென்று ஒரு நாள் 'கட்டணம் செலுத்தவில்லை' என்று போன் தொடர்பு துண்டிக்கப்பட்டது. இந்தச் சமயத்தில் குடும்பத் தலைவரான எனது அந்த உறவினர் இறந்து விட்டார். தொலை தூரத்தில் ஃபோன் வசதியுடன் இருந்த அவரது பெண், பிள்ளைகளுடன் அவரது மனைவியால் தொடர்பு கொள்ள முடியவில்லை. உடன் தகவல் தெரிவிக்கவோ ஆறுதல் பெறவோ இயலவில்லை. அரசு ஊழியர்கள் கடமை உணர்வுடன் நேர்த்தியாகச் செயல்படாததால் எவ்வளவு துன்பம்!
வேலூர், ஜி. சீனிவாசமூர்த்தி.

●● மருத்துவமனையில் போதுமான குடிநீர் வசதி கூட இல்லை. நோயாளிகள் குடிநீருக்காக அலையும் சூழ்நிலைதான் உள்ளது. அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?
விசலூர், ஜி. ஜி. கிருஷ்ணன்.

குடிநீர் இல்லாத மருத்துவமனை!

●● தஞ்சை மாவட்டத்தில் ஒருகால பூஜைக்குக் கூட வழியில்லாமல் ஆயிரக்கணக்கான ஆலயங்கள் அழிந்து கொண்டிருக்கின்றன. குத்தகைக்காரர் பாதுகாப்புச் சட்டம் வந்ததிலிருந்து ஆலயங்களுக்குக் கால் படி நெல் கூட கிடைப்பதில்லை. என் பாட்டனார் சிவன் கோயிலுக்குச் சென்றால், "விபூதி பிரசாதத்தைக் கூட பொட்டலம் கட்டி வீட்டுக்குக் கொண்டு வரக்கூடாது; அது சிவன் சொத்து" என்று கூறுவார். இன்றோ, கோயிலையே பெயர்த்தெடுத்து விற்று விடுவார்கள் போலிருக்கிறது.
திரிபுவனம், கே.ஆர். குமரேஷ்.

●● சன் டீ.வி. நேருக்கு நேர் நிகழ்ச்சியில் தி.க. தலைவர் ஆனூர் ஜெகதீசனுடன் பேட்டி. அப்போது பேட்டி கண்டவரும் காணப்பட்டவரும் ஜெயலலிதாவை "பாப்பாத்தி" என்றே பலமுறை குறிப்பிட்டனர். இது போல் முற்பட்ட வகுப்பினர் ஜாதி குறிப்பிட்டுப் பேசினால் இவர்களால் பொறுக்க முடியுமா?
ஸ்ரீரங்கம், சத்யா சீனிவாசன்.

●● பா.ம.க. மாவட்ட செயலாளர் கைது செய்யப்பட்டார் என்பதற்காக, பா.ம.க.வினர் சேத்தியா தோப்பில் சாலை மறியல் செய்ய, இந்த வழி செல்ல வேண்டிய பஸ்கள், சிதம்பரம் வழியாகச் சென்றதில் ஏகப்பட்ட காலதாமதம் ஆயிற்று. போலீஸார் அவரைக் கைது செய்தது சரியோ தப்போ, அதை அரசியல்ரீதியாகவும் நீதிமன்றம் மூலமாகவும்தான் தீர்த்துக் கொள்ளவேண்டுமே தவிர, பொதுமக்களை இவ்வாறு கஷ்டத்துக்கு உள்ளாக்குவது என்ன நியாயம்?
குடந்தை,

"சபாஷ்! வெரிகுட், வெரிகுட்!"

✉ கலைஞரின் மகன் என்பதற்காக மு.க. ஸ்டாலின் மேயராவது குடும்ப அரசியல் அல்ல. ஆனால் கலைஞருக்குப் பிறகு மு.க. ஸ்டாலின் தி.மு.க.வின் தலைவராகவும், தமிழக முதல்வராகவும் வர நேர்ந்தால் அப்போது அது நிச்சயம் 'குடும்ப அரசியல்'தான். அதற்கான வித்துக்கள் இப்போதே இடப்படுகின்றன என்பதுதான் வை.கோ. தரப்பினரின் வாதம். நாஞ்சிலார் விலக்கப்பட்டதும், மறுபடி சேர்த்துக் கொள்ளப்பட்டதும் எதற்கோ நடந்த 'ஒத்திகை' போலத்தான் தோன்றுகிறது.

கோவை, கே. கண்ணன்.

ரூ. 25 பரிசு பெறும் கடிதம்

✉ ஸ்டாலின் நிறுத்தப்பட்டிருப்பதைக் குறைகூறும் எதிர்க்கட்சிகள் தாங்கள் நிறுத்தி இருக்கும் வேட்பாளர்கள் மேயர் பதவிக்குத் தகுதியானவர் தானா...? என்பதை ஏனோ சீர்தூக்கிப் பார்ப்பது இல்லை. வை.கோ. கட்சி சார்பில் நிறுத்தி இருக்கும் எஸ்.எஸ். சந்திரன் அரசியலையே 'பார்ட் டைமாக' கொண்டவர். அவரை வேட்பாளராக நிறுத்தி மேயர் பதவியையே கேலிக்கூத்தாக்கி உள்ளார் வை.கோ. பொது வேட்பாளராக நிறுத்தப்பட்டிருக்கும் சந்திரலேகா, நிர்வாகத் திறமையால் மேயர் பதவிக்குத் தகுதியானவர் என்று ஒப்புக் கொண்டாலும் நேர்மையான மேயராகத் திகழ்வாரா என்ற சந்தேகத்தை சமீபத்திய அரசியல் மாற்றம் மூலம் ஏற்படுத்தி விட்டார். ஜெ. தாமாகவே ஆதரிக்க முன்வந்தாலும், 'ஆஸிட் அரசியலை' மறந்து இவர் ஏன் ஏற்றுக் கொள்ள வேண்டும். 'தேவையில்லை' என்று சொல்வதுதானே? மேலும் மேயரை இம்முறை மக்கள்தான் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் போகிறார்கள் என்பதால் குடும்ப அரசியலை கலைஞர் வளர்க்கிறார் என்பது அபத்தமானது.

பவித்திரமாணிக்கம், ஆர். பாஸ்கரன்.

✉ "நேருவும் இந்திராகாந்தியும் உயிரோடு இருந்த வரை தங்கள் வாரிசுகளுக்கு எந்தப் பதவியும் அளிக்கவில்லை" என்று குமரிஅனந்தன் சொல்லியிருப்பது தவறாகும். நேரு உயிரோடு இருந்தபோதே இந்திரா, காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்தார். அரசு விவகாரங்களில் தலையிடவும் செய்தார். அதே போல சஞ்சய் இறந்ததும் விமான ஓட்டியாக இருந்த ராஜீவை வேலையை ராஜினாமா செய்ய வைத்து, அவரைக் காங்கிரஸ் கட்சித் தலைவராக ஆக்கியது இந்திராதான். அவர் பிரதமரின் பிம்பமாகவே செயல்பட்டார்.

சென்னை - 14, பொ. வஜ்ரவேலு.

✉ மு.க. முத்து பேட்டியில், தாம் மனம் திருந்தி விட்டதாகவும், அப்பா தன்னை ஏற்றுக் கொள்ள மாட்டாரா? என்றும் கேட்டு உள்ளார். ஒருவேளை அப்பா ஆட்சிக்கு வராமலிருந்தால் இதுபோல் மனம் திருந்தியிருப்பாரா? பங்காரு அடிகளுக்கே வெளிச்சம்!

பாம்பன், செ. சல்மான்.

✉ மீண்டும் தமிழக முதல்வராகி, 5 கோடி தமிழக மக்களின் வாழ்வில் மகிழ்ச்சியைக் கொண்டுவந்த கலைஞர் கருணாநிதி, மனம் திருந்தி துயரத்தில் வாடும் தன் மகனின் வாழ்விலும் மகிழ்ச்சி நிலவச் செய்வதுதானே நியாயம்?

கமுதி, ஜே.வி.ஆர்.

✉ 'சபாஷ்... வெரிகுட், வெரிகுட்...' என சொல்ல வைத்து 22.9.96 இதழில் வெளியான ஒவ்வொரு ஜோக்கும். மொத்தம் 23 ஜோக்குகளை போட்டு ஒரு 'ஜோக் ஸ்பெஷல்' இதழையே வெளியிட்டு விட்டீரே... தாங்க்ஸ் சார்!

மோகனூர், சக்தி. சரவணன்.

✉ கனடாவில் போய் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் ராமதாஸ் இந்திய மக்களை (தமிழ்நாடு மக்களை) தரக்குறைவாக எண்ணிப் பேசியுள்ளார். இவர் ஓட்டு வேட்டையாடவும் வந்து விடுகிறார். இந்த மாதிரி தலைவர்களிடம் மக்கள்தான் கவனமாக இருக்க வேணும்.

சென்னை - 101, நா. பாலசுப்பிரமணியன்.

✉ உலகத் தமிழ் பண்பாட்டு மாநாடு பற்றிய கட்டுரையும் படங்களும் எங்களை கனடாவுக்கே அழைத்துச் சென்றது போல் இருந்தது. அன்றைய நிகழ்ச்சியில் இராமதாஸ் அநாகரிகமாகப் பேசினார் எனக் குறிப்பிட்டு இருந்தீர்கள். அவர் பேசியது அனைத்தும் நடக்கும் உண்மைச் செய்திகள்தான். மாநாட்டில் இதை அவர் பேசியது சாலபொருத்தம்.

கரடி கொல்லப்பட்டி, கே. எம். சுவீட் முருகன்.

✉ 'முரசொலி மாறன் கவனத்துக்கு!' - நாட்டின் மீது அக்கறை கொண்டு எழுதப்பட்ட அழகான, அருமையான தலையங்கம். பாராட்டுக்கள்.

தூத்துக்குடி, எஸ். ராமசுப்பிரமணியன்.

✉ இலட்சிய மனிதர் ஷீஹான் ஹுசைனின் நேர்முகம் இதழுக்கே மகுடம் போன்று அமைந்துள்ளது. அந்த நேர்முகத்தின் கடைசி இரண்டு பதில்களில் வெளியான அவரது வருத்தமும், மனஉறுதியும் பெரிதும் ஈர்க்கின்றன.

வில்லியனூர், இரா. நாகசுந்தரம்.


கடலோரக் கொலைகள்
10
கதை : பெனிட்டோகுமார்
படம் : சசி
டாக்டர் ஜகந்நாதன் தூங்குகிறவர் போல் மணல் பரப்பில் கிடந்தார்
எட்டப் போ!
பாவம்! கடைசியா பாளையங்கோட்டை அரசு ஆஸ்பத்திரியில் பணியாற்றி ஓய்வு பெற்றார்...
...சொந்த ஊர் உவரிக்குத் திரும்பி, கடைசி காலத்தை நிம்மதியா கழிக்கலாம்னு நினைச்சவருக்கு இப்படியாயிருச்சே!
அப்பா! ஐயோ! அப்பா!
மகன் புலேந்திரன் புலம்பினான்...
திசையன் விளைல நான் பாத்திரக் கடை வைச்சிருக்கிறது வசதியா போச்சுன்னு சொன்னியே! பக்கத்து கிராமம் உவரில செட்டில் ஆயிடறேன் னியே...
ஸாரிப்பா... தைரியமா இரு...
இன்ஸ்பெக்டர் வந்து...
கத்தியில்லே... ரத்தமில்லே... துப்பாக்கி இல்லே... குண்டு இல்லே... ம்.... ஏம்பா புலேந்திரன், அப்பா வீட்டை விட்டு எப்போ கிளம்பினார்?
தினம் காலைல நாலு மணிக்குக் கடற்கரைக்கு வந்துடுவார், ஸார்! யோகாசனம் பழகி, தியானத்துல ஆழ்ந்து போவார்... ஐயோ! அவருக்கு எதிரியே கிடையாதே! எல்லாருக்கும் இலவச வைத்தியம் பண்ணுவாரே!



நந்து பண்ணை வீடு சென்றபோது...
அட, உன்னைப் பார்க்கத்தான் புறப்பட்டேன்... என்னமோ மறுபடி கொலை யாமே? பேசிக்கிறாங்க?
ஆமா, பரமகுரு செத்த அதே இடத்துல. டாக்டர்... தங்கமானவர்
ஹும்... இங்க வேலை முடிஞ்சுது; வேற கிராமத்துக்குப் போய் ஆராய்ச்சியைத் தொடரலாம்னு பார்த்தா...
ஊர்ல சவம் விழுந்திருக்கிறப்ப வேணாம் ஸார். ரெண்டு நாள் கழிச்சுப் போங்க.
இதற்கிடையில்...
ஆட்டோப்ஸி ரிப்போர்ட் வந்துருச்சா, ஸார்?
ம்... கழுத்துல சின்னதா துணி போட்டு இறுக்கி, மூச்சு முட்ட வைத்துக் கொன்னுருக்காங்க...
ரெண்டு கொலைங் களுக்கும் தொடர்பு இருக்கணும் ஸார். ரெண்டும் ராத்திரில.... ஒரே இடத்துல... செத்துப் போன ரெண்டு பேருக்கும் எதிரின்னு யாருமே இல்லே...
போன் ஒலிக்க...
மதிவாணன் ஹியர்...
நாகர்கோயில் எஸ்.ஐ. விக்டர் தேவராஜ் பேசறேன். ஹிந்து காலேஜ்ல விசாரிச்சேன். நாகராஜ் என்ற பேரிலே லெக்சரர், புரொபசர் யாரும் கிடையாது!


(தொடரும்)



''சாகப் போற காலத்துல ஏன் தாத்தா பஞ்சாயத்துத் தேர்தல்ல போட்டியிடுறீங்க...?''

''இளவட்டமா இருக்குறப்பவே பஞ்சாயத்துத் தேர்தல்ல போட்டியிடணும்னு ஆசைப் பட்டேன். என்ன பண்றது, என் போதாத நேரம் நான் கிழவனா போனதுக்கப்புறம் இந்தத் தேர்தல் வந்திருக்குது!''

– ஜி. செல்லத்துரை



'' 'இரவில் விபச்சாரி'ன்னு நம்ம படத்துக்கு பேர் வச்சதை சென்சார் ஒத்துக்கலை!''

''அப்புறம்?''

'' 'பகலெல்லாம் பத்தினி'ன்னு மாத்தி வைச்சேன்... ஓ.கே.ன்னுட்டாங்க!''

– எஸ். பொன்னுசாமி



''ஏம்பா, ராப்பிச்சை உன் கையில இருக்கிற பாத்திரம் எவர்சில்வரா? அலுமினியமா?''

''ஏன் கேட்கிறீங்க?''

''எப்போதும் பாத்திரம் அறிந்துதான் பிச்சை போடுவேன்!''

– பொறையாறு கானா. கணேசன்

வித்தகர் :

பி.எஸ். ரங்கநாதன் (கடுகு

''கட்டுரைகள் எழுதும்போதே அங்கங்கே நகைச்சுவை தலைகாட்டுகிறது... நகைச்சுவையாகவே எழுதுங்களேன்'' என்று ஸ்ரீவேணுகோபாலன் தூண்ட, மற்றவர் மனம் புண்படாமலும், அதே சமயம் சம்பந்தப் பட்டவரே ரசித்து மகிழும்படியும் 'தாளிக்க'த் தொடங்கினார் 'கடுகு'.

'கடுகு' தவிர 'அகஸ்தியன்', '141' என்று தொடங்கி, ஒரு டஜன் பெயர்களில் எழுத்தைக் காதலிக்கிறார் பி.எஸ். ரங்கநாதன். இந்த செங்கல்பட்டுக்காரரின் கொடி இப்போது டெல்லியில் பறக்கிறது.

ஹிந்துஸ்தான் தாம்ஸன் விளம்பர நிறுவனத்தில் 'க்ரியேட்டிவ்' துறையில் அடியெடுத்து வைத்தபோது வயது ஐம்பது. அங்கே 'ஹோம் ஜர்னல்' ஒன்றில் புகுந்து கொண்டு தலைமுதல் வால் வரை எல்லோருடைய 'வயிற்றெரிச்சலை'யும் கொட்டிக் கொண்ட பெருமை உண்டு.

''அங்கே வேலை பார்த்த அவ்வளவு பேருமே நல்ல காரெக்டர்கள்' என்கிறார் 'கடுகு.'

1969 ஆம் ஆண்டு மாடல் கார் ஒன்றைப் போட்டு, ஒரு வேடிக்கை விளம்பரம். 'மிகவும் பிரமாதமான அசையாச் சொத்து' என்கிற வாசகத்தைத் தவிர, பிழைதிருத்தம் என்கிற மாதிரி '1869' என்று படிக்கவும் என்கிற குறிப்பு வேறே. 'நான் லட்சாதிபதியாகப் பணம் சம்பாதிக்க இந்தக் கார்தான் உதவியது' என்று கொசுறுச் செய்தியாக மெக்கானிக் விளம்பரம் பக்கத்திலேயே. இப்படியெல்லாம் இவர் ஹோம் ஜர்னலில் விளையாடியபோது, 'என்னை எழுதப் போகிறாயா?' என்று மிரட்டுவார்களாம். அதன் பொருள் 'என்னைப் பற்றியும் எழுதேன்' என்பதுதான்.

'அகஸ்தியன்' என்பது அமரர் கல்கியின் புனைபெயர்களுள் ஒன்று. அதையே தாமும் சூட்டிக் கொண்டு கமலா, அங்கச்சி, தொச்சு என்று பாத்திரங்களைப் படைத்து, நகைச்சுவை சொட்டச் சொட்ட எழுபது சிறுகதைகளுக்கு மேல் எழுதியுள்ளார்!

''இந்த மாதிரி எழுதுவதற்கு முன்னோடியாக அமைந்தவர் அமரர் தேவன்தான்'' என்கிறார் பி.எஸ்.ஆர்.

சின்னச் சின்னத் தகவல் துணுக்குகளாய் எழுதியபோது சூட்டிக் கொண்ட பெயர் கடுகு

"உங்க அப்பாவுக்கு ரொம்ப திமிர்!"
"ஏங்க?"
"எனக்கு ரெட்டை மண்டையாம்... அவசியம் 'தலைகள் தீபாவளிக்கு வாங்க'ன்னு லெட்டர் போட்டிருக்காரு!"
— ஜெ. கீதா



நாற்பது ஸம்ஸ்காரத்திலே மிக உயர்ந்த ஸம்ஸ்காரம் உபநயனம்தான். அந்த உபநயன மந்திரத்திலே என்ன போதிக்கப் படுகிறது.

"கர்மாவைப் பண்ணு..."

"பண்ணுகிறேன்..." என்று பதில் சொல்ல வேண்டும், உபநயனம் செய்து கொள்ளும் சிறுவன்.

"ஆசார்யரிடம் அபிமானமாக இருக் கணும்..."

"இருக்கிறேன்..."

"ஆசார்யருக்குக் குடை பிடிக்கணும்..."

"பிடிக்கிறேன்..."

"ஆசார்யர் உயர்ந்த ஸ்தானத்திலே உட் கார்ந்தால் நீ கீழே உட்காரணும்... அவர் உட்காரு என்று சொன்னால்தான் உட்கார ணும்..."

"செய்கிறேன்."

"ஆசார்யருக்கு ஆசார்யர் பக்கத்திலே இருந்தால் அவரையும் வந்தனம் பண்ண ணும்."

"பண்ணுகிறேன்..."

இவ்வாறு வாழ்க்கை முறையை உபதேசிப் பதுதான் உபநயனம். அந்த சமயத்தில் அணிவிக்கப்படும் பூணூலும் பவித்ரமானது.

பூர்வ காலத்திலே ஒரு மகான் பூணூல் திரிப்பதையே தொழிலாகச் செய்து வந்தார். அதைத் தவிர வேறெதுவும் அவருக்குத் தெரி யாது.

மந்திரம் சொல்லித் திரித்து, அதை பக வான் திருவடியிலே வைத்து எடுக்க வேண் டும். அப்புறம் ஓலைப் பெட்டியிலே பரம பவித்ரமாக அதை வைக்க வேண்டும். வெகு சிரத்தையாய் இதைப் பண்ணி வந்தார் அந்த மகான். யாராவது வந்து கேட்டால் அந்த யக்ஞோபவீதத்தை எடுத்துக் கொடுத்து அனுக்கிரஹம் பண்ணுவார்.

ஒரு நாள் அந்த மகானின் பத்னி அவரை வந்து சேவித்தாள். "நீங்கள் எப்போது பார்த் தாலும் இப்படிப் பூணுலைத் திரித்துக் கொண் டிருக்கிறீர்களே! நம் குழந்தைக்குக் கல்யாணம் பண்ண வேண்டாமா?" என்று நினைவூட் டினாள்.

"பக்கத்து தேசத்திலே ஒரு ராஜா, விசேஷ மாய் எழுந்தருளியிருக்கிறார். அவரைப் போய் உதவி கேட்டால் கட்டாயம் வாரி வாரிக் கொடுப்பார். ஒரு தடவை போய்ப் பார்க்கக் கூடாதா?" என்று யோசனையையும் சொன்னாள்.

மனைவியிடம் அவர் உறுதியாக ஒன்றும் பதில் சொல்ல வில்லை. போய்த்தான் பார்ப்போமே என்று அரசனிடம் போனார். அவரி டமிருந்து பிரும்ம தேஜஸ் கொட்டுவதைப் பார்த்ததும் அந்த ராஜாவே எழுந்து நின்று விட்டார். முதலில் அவரை உட்கார வைத் தார்.

துரியோதனன் சபையிலே, பகவான் கிருஷ்ணன் நுழையும் போது யாரும் நின்று மரியாதை செய்யக்கூடாது என்று சகுனி உத்தரவு போட்டிருந்தானாம். ஆனால் பக வான் நுழைந்ததும் துரியோதனன் தன்னை யறியாமலேயே தானே எழுந்து நின்றானாம்! அவன் பின்னோடேயே துச்சாதனனும் கர்ணனும் அந்தச் சகுனியும் கூட எழுந்து நின்றார்களாம்! அப்படிப்பட்ட தேஜஸ் பகவானுடையது.

அந்த மாதிரி, ராஜாவும் அந்த மகானின் தேஜஸுக்குக் கட்டுப்பட்டு எழுந்தார். அவரை அமர்த்தி, "சுவாமி உங்களுக்கு என்ன வேண் டும்? இவ்வளவு பிரும்ம தேஜஸோடு இருக் கிறீர்களே! உங்களுக்கு என்ன வேண்டு மானாலும் கேளுங்கள்; தருகிறேன்..." என்றார்.

கேட்டு அறியாதவர் அந்த ஏழை. எப்படிக் கேட்க வேண்டும் என்பது கூட தெரிய வில்லை. யோசித்து விட்டுச் சொன்னார்:

"நான் ஒரு யக்ஞோபவீதம் (பூணூல்) கொண்டு வந்திருக்கிறேன். அதன் எடைக்கு நிகராகத் தங்கம் கொடுத்தால் போதும்..." அதைக் கொண்டு என் பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணிவிடுவேன்..."

"அது போதுமா? அதற்கு மேலே வேண் டாமா?"

"போதும்."

தராசைக் கொண்டு வரச் சொன்னான் ராஜா.

(தொடரும்)

போட்டிக் கதை - 10

தீக்கும் தமிழென்று பேர்

பாறையின் நிழலில் நான் படுத்துக் கிடந்த நிலம் மட்டுமல்ல... எனது உள்ளமும் வறண்டு கிடந்தது. இன்று காலை அப்பா சொன்ன வார்த்தைகள் உள்ளத்து ஈரத்தை உறிஞ்சி விட்டிருந்தன.

'வேலை வெட்டியில்லாம தண்டச் சோறு தின்னுக்கிட்டு, பூமிக்குப் பாரமா இருக்கிறதைத் தவிர வேறென்னத்தை சாதிச்சிருக்கே?'

இருபது வயதில் தமிழ் இலக்கியம் முடித்தேன். இப்பொழுது வயது இருபத்தாறாகிறது. தமது மகன் ஆறு வருடமாக வேலையின்றி வெற்றுமனேயிருப்பது எந்தத் தந்தைக்குமே சலிப்பைத்தான் ஏற்படுத்தும். அந்தச் சலிப்பில் அவ்வப்பொழுது வார்த்தைகள் நெருப்பாய் வந்து விழும். இன்றைக்கு நெருப்பின் அனல் சற்று அதிகமாகவே சுட்டு விட்டது.

சுயநலமில்லாத பாசம் என்பதெல்லாம் ஒரு கால கட்டம் வரைதானா? அதன்பின் அது நிறம் மாறி விடுமா?

தந்தை தாய் தமர் தார மகவென்னும்
இவையெலாம்
சந்தையிற் கூட்டம் இதிலோ
சந்தேகமில்லை.

கல்லூரியில் படித்த தாயுமானவரின் வரிகள் நினைவில் மோதியது. உண்மையிலேயே உறவுகளுக்குள் நிலவுவது கொடுத்து வாங்கும் வியாபார பாசம்தானோ. தாயின் அன்பில்கூட பாதுகாப்பு சார்ந்த எதிர்பார்ப்பு நிறைந்திருக்கிறதோ...

இரண்டு நாட்களுக்கு முன் அம்மா உடுத்தியிருந்த கிழிந்த சேலையை கவனித்து விட்டு 'ஏம்மா... கிழிஞ்சதைக் கட்டியிருக்கே... வேற இல்லையா?' என்று கேட்டதற்கு 'ஆமா... நீ சம்பாதிச்சி வாங்கிட்டு வந்து தந்ததை பிரோவில அடுக்கி வைச்சிருக்கேன். தினத்துக்கு ஒண்ணா புதுசா கட்டிக்கிறேன். உள்ளதெல்லாம் கிழிஞ்சி கிடக்கு' என்றாளே...

நான் வெறுமனேயிருப்பது தாயிடம்கூட ஆற்றாமையைத் தோற்றுவித்து விட்டது.

நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்தி
முலைதந்து
வளர்த்து எடுத்து தாழாமே - அந்திபகல்
கையிலே
கொண்டு என்னைக் காப்பாற்றும் தாய்.

பட்டினத்தார் பாடிய தாயின் அரவணைப்பு இப்பொழுது எனக்குக் கிடைக்காதா?

நான் பிடிவாதமாகத் தமிழ் இலக்கியத்தில் சேர்ந்ததில் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் விருப்பமில்லை. படிக்கப் படிக்க மூன்று வருடம் தேனாய்த்தான் இனித்தது. முடித்து விட்டு வெளியே வந்ததும்தான் யதார்த்தம் புரிந்தது.

'பாலிமர் சயின்ஸ்' படித்திருக்கிறாயா... 'கம்ப்யூட்டர்' தெரியுமா என்றுதான் தேடுகிறார்களே தவிர, தமிழ் யாருக்கும் தேவைப்படவில்லை.

'வேற பாடம் எடுத்துப் படின்னு அப்பவே நான் சொன்னேனே... கேட்டியாடா?'

'எனக்கு தமிழ்லதான் ஆர்வமிருந்தது!'

'அந்த ஆர்வந்தான் இப்ப வயித்தை நிரப்பப் போவுதா?'

பசுமாடுகளின் கழுத்து மணியோசை கேட்டது. அவற்றை மேய்த்துவிட்டு சோமன் திரும்பிக் கொண்டிருந்தான். கிராமத்திலிருக்கும் அனைத்து வீட்டு மாடுகளையும் சேர்த்து ஓட்டிக் கொண்டு போய் விட்டு விடுவான். தினத்திற்கு ஒரு வீட்டில் சாப்பாடு.

"காலையில நான் மாடுகளை ஓட்டிட்டு போறப்பவே படுத்திருந்தீக, அப்பவேயிருந்து இங்கயேதா இருந்தீகளா?'' என்றான்.

"ஆமா"

'மதிய சோறுகூட சாப்பிடலையா?'

அப்பொழுதுதான் எனக்கே உறைத்தது. பசியும் உணர்வுகளோடு மறத்து விட்டது போலும்.

மணியோசை தேய்ந்ததும் எழுந்து பொடி நடையாய் வீட்டையடைந்தேன். அம்மா வாசலிலேயே நின்றிருந்தாள்.

"எங்க போய்ட்டே?"

"கரட்டாம்பாறைக்கு."

"உன்னோட வழக்கமான குட்டிச்சுவருக்குப் போயிருந்தியோ?" அப்பா உள்ளேயிருந்து கேட்டார்.

"அங்க போய் வீணா படுத்துக்கிடந்ததுக்கு நம்ம வயல்ல போய் கரும்புத் தோட்டத்துக்குக் காவல் காத்திருக்கலாமில்ல?"

நான் ஏதும் பேசவில்லை.

அம்மா தட்டை எடுத்து வைத்தாள். சாப்பிட விருப்பமில்லை. வெறுமனே கை அளைந்துவிட்டு கை கழுவி எழுந்தேன்.

"நாளைக்குக் காலையில நீ சீக்கிரமே

"கோபத்துக்கு ஒண்ணும் குறைச்சலில்ல. என்னைக்காவது ஒருநாள் செய்யச் சொன்னா அப்படித்தான் இருக்கும். தினம் போட்டு வாட்டினா சரிப்படும்."

"அதான் பேச்சிலேயே போட்டு வாட்டறீங்களே... இது பத்தாதா?"

கொல்லைப்புறத்தை அடைந்தேன். மனம் படபடத்தது. துவைக்கும் கல்லில் அமர்ந்தேன். வேப்பமரக் காற்று சில்லென்று வீசியது. வெள்ளி நிறப் பூக்கள் மணத்துடன் சிதறிக் கிடந்தன. உள்ளுக்குள் நன்றாக மூச்சை இழுத்துவிட்டுக் கண்மூடி புருவ நடுவே நிலைத்தேன்.



எழுந்து வயலுக்குப் போய் தண்ணி பாய்ச்சிட்டு வரணும்."

"ம்...." என்றேன் பிடிக்காத தன்மையுடன்.

"என்ன ஐயா சலிப்போட சொல்றீக? படிச்ச படிப்புக்கு மண்வெட்டியைப் பிடிக்கறது கௌரவ குறைச்சலா நினைக்கறீகளா?"

"நான்தான் சரின்னு சொல்லிட்டேன்ல? அப்புறம் எதுக்கு இந்த வியாக்கியானம்?"

உதாதிபன்

சஞ்சலப்பட்ட மனம் மெல்ல ஒருநிலை பெற்று அமைதியானது.

மறுநாள் விடியற்காலை ஐந்து மணிக்கே எழுந்து மார்கழி குளிருக்கு இதமாகப் போர்வையைப் போர்த்திக் கொண்டேன். அப்பாவும் குளித்து உடுத்தி முதல் பஸ்ஸுக்கே தயாரானார். வேதாரண்யம் வெல்ல மண்டிக்கு போகிறார்.

"நீ பாட்டுக்கு ஏதோ நினைப்பிலே இருந்துடாதே. ஒரு பாத்தி நிறைஞ்சதும் அடுத்ததுக்குத் திருப்பி விடு...."

"சரி..."

"பம்பு எடுக்கலேன்னா ரெண்டு வாளி தண்ணி கொண்டு பைப்ல முதல்ல ஊத்து."

"எனக்குத் தெரியாதா இதெல்லாம்..."

"ஆமாமா... படிச்சவங்க, தெரியாம இருக்குமா?"

அப்பாவின் குரலில் குத்தல் தொனித்தது. அந்நேரத்தில் விவாதம் வேண்டாம் என மௌனமாய் இருந்தேன்.

அப்பா முதலில் கிளம்பிப் போய் விட்டார். நானும் செருப்பணிந்து புறப்பட்டேன்.

"சாப்பாட்டுக்கு நேரத்தோட வந்துடு. எங் கயாவது படுத்துக் கிடக்காத..." அம்மா சொன்னாள்.

"சரி..."

நடந்தேன். ஊர்க்கோடியிலிருந்த விநாயகர் கோவிலைக் கடக்கையில் அரசமர நிழலில் யாரோ ஒரு அன்னியன் தென்பட்டான்.

கை தட்டினேன். அவன் என்னை நோக்கி வந்தான். கிட்டத்தட்ட என் வயது மதிக்கலாம். மெலிந்த தேகம். கையில் பெட்டி. முற்றிலும் விலகாத இருளிலும் அவனது கண்ணில் சோகம் தெரிந்தது.

"யாரு நீ?"

"நான் சிலோனுங்க, அங்கேயிருந்து நேத்தைக்கு கோடிக்கரைக்கு வந்தேன். ஏற்கெனவே அங்க நெறைய அகதிகள் இருக்காங்க. அதனால கால்போன போக்கில் இந்த ஊருக்கு வந்து சேர்ந்தேன். ராத்திரியிலே அப்படியே படுத்துத் தூங்கிட்டேன்."

"சிலோனை விட்டுட்டு தமிழ்நாட்டுக்கு எதுக்கு வந்தே?"

அவனது கண்கள் அனிச்சையாகக் கலங்கின.'

"எங்கப்பாம்மா செத்துப் போய் பல வருஷமாச்சிங்க. சமீபமா எனக்குக் கல்யாணமாச்சு. போனமாசம் ஒருநாள் மிருகவெறி பிடிச்ச ஒரு கும்பல் எங்க கிராமத்துக்குள்ள நுழைஞ்சி, ஊரையே கொள்ளையடிச்சாங்க. அந்த பாவிங்க, கர்ப்பமாயிருந்த என் மனைவியையும் சிதைச்சி சூறையாடி... நான் வேலைக்குப் போய்ட்டு திரும்பி வந்து பார்த்தப்ப அவ தூக்கில தொங்கிக்கிட்டிருந்தா. அதுக்குப் பிறகு அங்க இருக்க பிடிக்கல. கள்ளத்தோணி ஏறி வந்துட்டேன். இங்கயே ஏதாவது வேலை தேடி பிழைச்சுக்கலாம்னு..."

"உங்களுக்கெல்லாம் அடைக்கலம் தர தமிழ்நாடு என்ன தர்மசத்திரமா? நாங்களே இங்க வேலை கிடைக்காம அவதிப் படறோம்..."

"எங்களுக்கு தமிழ்நாட்டைத் தவிர வேற போக்கிடம் ஏது? நீங்களெல்லாம் எங்களோட சகோதரர்கள் இல்லையா?"

"தமிழ் பேசினா உடனே ஒண்ணாகிவிட முடியுமா... நீங்க யாரோ நாங்க யாரோ!"

"தனதன்னை ஈன்றவர்களை
சகோதரர்களேன்போம்
ஏனெனில் அவளது புதல்வர்களின்மூலம்
ஒன்றாம்
தமிழன்னை ஈன்றவர்களை
அன்னியனென்போம்
ஏனெனில் அவளது புதல்வர்களின்மூலம்
வெவ்வேறாம்
தனதன்னையின் கற்பு பரிசுத்தம்
என்கிறாய்... ஐயகோ
தமிழன்னையின் கற்புக்கோ களங்கம்
சேர்க்கிறாய்!"

எனக்குச் சுளீரென்றது.

"இது?"

"என்னோட கவிதைதான். அதுவும் இப்ப யோசிச்சி சொன்னது"

அவனிடமிருந்து கவித்திறனை சற்றும் எதிர்பார்த்திராத நான் அதிர்ந்தேன். கவிதையில் பொதிந்திருந்த காட்டமும், சாட்டையும் என்னைத் தாக்கின.

"உங்களுக்குக் கவிதை எழுதத் தெரியுமா?" என்னிடம் தானாகவே மரியாதை தட்டிக் கொண்டது.

"ம்... எம்.ஏ தமிழ் இலக்கியம் படிச்சிருக்கேன்."

"அங்க என்ன வேலை செய்துக்கிட்டிருந்தீங்க?"

"எஸ்டேட்ல தேயிலை பறிச்சிக்கிட்டிருந்தேன்."

"இவ்வளவு படிச்சிட்டு..."

"தமிழை நான் வேலைக்கான நோக்கத்தில வாசிக்கல. சம்பாதிக்கவும், வயிறை நிரப்பிக்கவும் மூலதனமா உபயோகப்படுத்தி அதனோட தரத்தையும், மதிப்பையும் குலைக்க எனக்கு விருப்பமில்லை! ஆத்ம பசிக்குத் தமிழ். வயிற்றுப் பசிக்குக் கூலி வேலை."

என் உடல் சிலிர்த்தது. கண் மூடினேன். அவனது கவிதை வரிகளும், வெளிப்பட்ட வார்த்தைகளும் தீயாய் என்னுள் பாய்ந்து உருக்கிப் புடம் போட்டது. கசடுகள் வழிந்து மனம் சுத்தமாகி, கண்ணீர் சுரக்க இமை திறந்தேன். அதற்குள் அவன் என்னிடமிருந்து விலகி நீண்டதூரம் சென்று விட்டான்.

யாரவன்?

என்னைத் தீயிலிட்டுப் புடம் போட்டு ஞானம் கற்பித்து, நான் புதுமனிதனாய்ப் பிறப்பெடுக்க உதவ வந்தவனோ!

அவனது பெயரைக்கூட கேட்கவில்லையே... சிறிதுநேரம் திக்பிரமையுடன் நின்றிருந்துவிட்டு வயல்காட்டை நோக்கி நடந்தேன். இப்பொழுது எனது நடையில் உற்சாகமும் தீர்க்கமான நம்பிக்கையும் மிளிர்ந்தது.'

கையிலிருந்த மண்வெட்டி அமுத சுரபியாய்த் தோன்றியது.

கடலோரக் கொலைகள்

கதை: பெனிட்டோ குமார்

11


படம் : சசி




ஆமா சார், பொருள்கள் வைச்ச இடத்துல இருக்காது. மண்வெட்டியை ஒரு இடத்துல வைச்சா, காலைல வேற இடத்துல இருக்கும். கேட்டை ஒயர் போட்டு கட்டிட்டுப் போவேன். காலைல அவிழ்ந்து கிடக்கும்...
சரி, நீங்க போகலாம். வழக்கம் போல நடந்துக்குங்க. நாங்க விசாரிச்சதா காட்டிக்க வேணாம்.
சரி, சார்.
அவர்கள் சென்றதும்...
மதிவாணன், ரெண்டு கான்ஸ்டபிள்களை மஃப்டியில் பண்ணை வீட்டைக் கண்காணிக்கச் சொல்லுங்க.
அன்று மாலை...
என்ன ஒரு மாதிரி இருக்கீங்க, நந்து?
ஒண்ணுமில்லியே!
ஆஷா! நீ கூடவா ஏமாத்திட்டே! என்னால் தாங்கிக்க முடியலியே!
இரவு...
கம்பு, கூடை, மேப், மண்வெட்டி, பாட்டரி லைட் எல்லாம் இருக்கா? சரி, நடங்க.
ஹலோ, ஹலோ! எஸ்.ஐ. ஸார்! புறப்படறாங்க... யெஸ், ஸார்!

(தொடரும்)

அக்டோபர் 5-ஆம் தேதிக்குப் பிறகு நரசிம்மராவுக்கு நல்ல காலம் பிறந்துவிடும் என்று அவரது ஜோதிடர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் குற்றப் பத்திரிகையில் அவர் பெயர் சேர்க்கப்பட்டதிலிருந்து, பெரிய ஆன்மீகவாதி மூடில் இருக்கிறார் நரசிம்மராவ். அரெஸ்ட் வாரன்ட் பிறப்பிக்கப்படும் பட்சத்தில், கைது செய்து கொண்டு போய் எங்கே தங்க வைப்பார்கள், தமக்கு எப்படிப்பட்ட பாதுகாப்பு இருக்கும் என்றெல்லாம் கூட சிந்திக்கத் தொடங்கியிருக்கிறார் ராவ். ஆந்திர எம்.பி.க்கள் உபேந்திரா, ஜி. வெங்கடசாமி,' மல்லிகார்ஜுன் தவிர, அவருக்கு முழு ஆதரவு தரும் வட மாநில எம்.பி.க்கள் வெகு குறைவு. திங்கள் கிழமை காலை சுப்ரீம் கோர்ட் அறிவிப்பு வரும் வரை, விசிட்டர்கள் யாரையுமே ராவ் சந்திக்க விரும்பவில்லையாம்.



ப.சிதம்பரம் பிரதமராவாராம்!

● ராவுக்கு மத்திய அமைச்சகத்தில் பிரதமர் தேவேகௌடாவைத் தவிர, சி.பி.ஐ இயக்குநர் ஜோகிந்தர் சிங், சட்ட அமைச்சர் ரமாகாந்த் கலாப், தில்லி போலீஸ் கமிஷ்னர் நிகில் குமார் என்று ஒரு நால்வர் படை வெகுவாக உதவி வருகிறது. 'ஜாமீனில் விடக் கோரி ராவ் தரப்பில் மனுச் செய்யப்பட்டால் எதிர்க்க வேண்டாம்' என்று தேவேகௌடா ஜோகிந்தர் சிங்கிடம் தெரிவிக்க, சிங் அதை சி.பி.ஐ. வக்கீல் கோபால் சுப்ரமணியத்திடம் சொல்ல, அவர் கோப சுப்பிரமணியமாகி, வழக்கிலிருந்தே விலகிக் கொண்டு விட்டார்! போலீஸ் கமிஷ்னர் நிகில் குமாரோ, 24, அக்பர் ரோடு சாலை காங்கிரஸ் அலுவலகத்தில் தலைவர்கள் விவாதிக்கும்போது, தமது ஆலோசனைகளைத் தாராளமாக வழங்குகிறார்.

● ஜார்கண்ட் முக்திமோர்ச்சா எம்.பி.க்களுக்குக் கோடிக்கணக்கில் ரூபாய் கொடுத்து, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது அவர்களது வோட்டுக்களைப் பெற்ற வழக்கை விசாரித்து வரும் ஏ.கே. சின்ஹாவைத் தூக்கி சில்சார் என்கிற இடத்துக்கு மாற்றி விட்டது தேவேகௌடா அரசு. காரணம், ராவுக்கு எதிராக இந்த வழக்கில் நிறைய சாட்சியங்களை இவர் வைத்திருக்கிறாராம்! தமது அரசு கவிழ்க்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதை யதார்த்தமாக உணர்ந்திருக்கிறார் தேவேகௌடா!

● அரசாங்க அலுவல்கள் காரணமாக தில்லிக்கு வரும் கர்நாடக அதிகாரிகள், ஏதோ இந்திய அரசே தங்களுக்குச் சொந்தமானது மாதிரி நடந்து கொள்ளுகிறார்களாம். திட்ட கமிஷனுடன் தமது மாநில சார்பில் பேச்சு


இப்போது!
போனது பொடுகுத் தொல்லை. வந்தது அழகிய தலை முடி.
...இரண்டே வாரங்களிலே.
அறிமுகம் புதிய க்ளினிக் ஆல் க்ளியர். இரட்டை செயல் முறை உள்ள முதன் முதலான பொடுகு அகற்றும் ஷாம்ப்பூ.
1. இதிலே விசேஷமாக உருவாக்கப்பட்ட நியூ ஃபாஸ்டர் ஆக்டிங் ஃபார்முலா உள்ளது. இது. பொடுகை உருவாக்கும் மைக்ரோப்பை எதிர்த்துப் போராடும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. புதிய க்ளினிக் ஆல் க்ளியர், மைக்ரோப்பை மிகத் தீவிரமான ஆற்றலுடன் கட்டுப்படுத்துகிறது. எனவே, உங்கள் தலைமுடி, இரண்டே வாரங்களில் பொடுகற்ற. சுத்தமான தலைமுடி ஆகிறது.
2. மிகச் சமீபகாலத்தில் வளமையூட்டப்பட்ட கண்டிஷனர்கள், உங்கள் தலைமுடியை மென்மையாக, பட்டு போல, அழகான தலைமுடியாக்குகிறது.
தொடர்ந்து புதிய க்ளினிக் ஆல் க்ளியர் பயன் படுத்துங்கள். பொடுகுத்தொல்லையை மறந்துவிடுவீர்கள். அழகான தலைமுடியை பெற்றிடுவீர்கள்.
மைக்ரோப்ஸ்
Clinic
ALL CLEAR
விசேஷ
சலுகை
அழகான தலைமுடிக்கு டாண்ட்ரஃப் கண்ட்ரோல் எக்ஸ்பர்ட்
Lintas Cl CAC 2 2013 Tm
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

பாம்பே சாணக்யா

நாடகம் நாடகம் நாடகம்தான்!

"ஓ.... பாம்பே சாணக்யா! நானே உங்களைச் சந்திக்க வேண்டும் என்று விரும்பினேன்" என்று கே. பாலசந்தர் சொன்னபோது மகிழ்ச்சியால் அதிர்ந்து போனார். அதுதான் சாணக்யாவுக்கு அவருடன் ஏற்பட்ட முதல் சந்திப்பு.

'இரண்டாம் சாணக்கியன்' என்ற இவரின் மேடை நாடகத்தைப் பார்த்த நண்பர் வி.ஆர். எஸ். -- சோவின் குழுவில் இருந்தவர். 'இந்த நாடகத்தை பாலசந்தர் பார்த்தாரா?' என்று கேட்டார். இல்லை என்று தெரிந்ததும் அவரே கே.பியிடம் அழைத்துப் போனார். அப்போது தான் பாலசந்தர் இப்படிச் சொன்னாராம். பாம்பே சாணக்யாவின் நாடகங்களைப் பற்றிய விமர்சனங்களைப் படித்து, அவரைக் கவனித்திருக்கிறார் கே.பி.

சாணக்யா அழைத்ததன் பேரில் நாடகம் பார்க்க வந்தார் கே.பி. அடுத்த நாடகத்தை அவரே செய்தித்தாளில் நிகழ்ச்சி விவரம் படித்து, தம் மனைவியோடு வந்து பார்த்தார். இப்படி நாற்பது நாட்களுக்குள் சாணக்கியாவின் ஐந்து நாடகங்களைப் பார்க்க நேரம் ஒதுக்கிக் கொண்டார் கே.பி.!

அதே போல் சோவும் இரண்டு நாடகங்களைப் பார்த்து, ஊக்கமளித்ததுடன் ஒரு பத்திரிகைப் பேட்டியிலும் இவரைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். இப்போது லேட்டஸ்ட்டாக, சுஜாதா பக்கத்தில் இவரைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பது!

அன்றாட நிகழ்வுகளை வித்தியாசமான கோணத்தில் கதையாக்கி, நாடகங்கள் எழுதி இயக்குகிறவர், தஞ்சாவூர்க்காரரான பாம்பே சாணக்யா என்னும் ஜே. ரகுநாத். பிறந்தது, வளர்ந்தது, படித்தது, வேலை பார்த்தது எல்லாம் மும்பையில்தான்! பள்ளி கல்லூரி நாட்களில் முளைவிட்ட நடிப்பு ஆர்வம். நாடக ஆசிரியர் தயாரிப்பாளராக உயர உதவியது பெற்றோர் மட்டுமில்லை, அவர்களுக்குச் சமமாக இவர் மதிக்கும் பள்ளியாசிரியை ராஜம்-விஸ்வநாதன் தம்பதியினரும்தான்.


திருமதி ராஜம் மும்பையில் இவர் நாடகங்கள் நடத்தியபோது இவருக்குத் தாயாராக நடித்தவர்! அந்தத் தொடர்பு இவர் 'அம்மா' என்றே அழைத்து மகிழும் அளவுக்கு நெருக்கமானது.

மும்பையில் 'கலைவாணி' என்ற அமைப்பின் மூலம் 'புதை மணல்' என்ற தம்முடைய முதல் நாடகத்தை எழுதி இயக்கினார் சாணக்கியா. அதற்கு முன்பே வேறொரு நண்பருக்காகத் தயாரித்த நாடகம் ஒன்று உண்டு.

"நான்கைந்து நாடகங்களிலேயே, எப்படியும் சென்னைக்கு வந்து 'கொடி நாட்ட வேண்டும்' என்கிற எண்ணம் ஒரு வெறியாகப் பரிணமித்தது'' என்கிறார். சென்னையிலிருந்து மும்பை வந்த நாடகக் குழுக்கள் நடத்திய நாடகங்களை, மராட்டி, ஹிந்தி நாடகங்களோடு ஒப்பு நோக்கிப் பார்த்ததால் இந்த உணர்வு மேலும் வலுப்பட்டதாம்.

"திருப்பித் திருப்பி மாமியார், மருமகள் பிரச்னை, காதல் விவகாரம் என்றே வைத்து ஏன் எழுத வேண்டும்? துணிச்சலான மையக் கருவை வைத்து ஏன் யாரும் எழுத முன் வருவதில்லை?" என்றெல்லாம் யோசித்ததன் விளைவே இவருடைய நாடகங்கள். 'நெருடும் உறவுகள்' நாடகம், விலைமகள் ஒருத்தியின் மகளாகப் பிறந்த ஒரு பெண், திருமணச் சூழலில் ஏற்கப்படாமலிருந்தது பற்றியது. 'அக்னி வார்ப்புகள்', 'மேரா பாரத் கஹாங்' (தலைப்பு மட்டும் தான் ஹிந்தி.), 'சூர்ய வம்சம்' என்று வித்தியாசமான நாடகங்கள் அரங்கேற்றினார். கதையில் மட்டுமின்றி மேடை, காட்சி அமைப்பு போன்றவற்றிலும் புது முயற்சிகள் இவை.

சென்னைக்கு வருவதற்கு முன் சில ஆண்டுகள் வளைகுடா நாடுகளில் வேலை பார்க்க வாய்ப்புக் கிடைத்தது. இருந்தும் நாடக



ஆவல் இல்லை அங்கு தொடர்ந்து வேலை பார்க்க இடந்தரவில்லை. அந்த நாட்டில் இவரால் தமிழ் நாடகங்கள் நடத்த அனுமதி கிடைக்கவில்லை என்ற போதிலும், நாடகங்கள் எழுதுவதில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். ஒரு கட்டத்தில், அங்கு சம்பாதித்தது போதும் என்கிற நிறைவோடு நாடகத் துறை பணி களைத் தொடர்வதற்காகச் சென்னை வந்து சேர்ந்தார்.

முதலில் மெரீனா நாடகக் குழுவில் சேர்ந் தார். பணி, ஒரு நிதி நிறுவனத்தில். முழு நேர மாக நாடகத்துறையில் ஈடுபட விரும்பிய போது, மெரீனா சொன்னது: ''நன்றாக யோசித்து விட்டுப் பார்க்கிற வேலையை விட்டு விலகு. நாடகத்திலேயே சாதனை பண்ண முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டால் செய்...''

விலகினார். ஆத்மதிருப்தி தருவது இந்தத் துறைதான் என்ற முடிவு. இதன் மீது இளம் வயது முதலே ஏற்பட்ட வெறித்தனமான பிடிப்பு. எல்லாம் சாணக்யாவை வளர்த்தன. ஆனாலும், ''எதையும் நான் செய்தேன் என்று மார்தட்டிக் கொள்ள விரும்பவில்லை. எல்லாம் நடக்க வேண்டும் என்கிற நியதியின்படியே நடைபெறுகின்றன. 'எல்லாம் அவன் செயல்' என்பதில் எனக்கு அழுத்தமான நம்பிக்கை உண்டு'' என்கிறார் சாணக்யா.

சென்னை வந்த புதிதில் 'கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸ்' நடத்திய நாடக விமர்சனப் போட்டிக்கு விமர்சனங்கள் எழுதிய போது புனைந்து கொண்ட பெயர் சாணக்யா. அதுவே பின்னால் 'பாம்பே சாணக்யா' ஆயிற்று. அந்த வரலாற்று நாயகனின், அறிவாற்றல் மீதிருந்த பற்று அவன் பெயரையே சூடிக் கொள்ள வைத்தது.

மேற்கத்திய, ஹிந்துஸ்தானி இசை பிடிக்கும் என்றாலும் தம்முடைய நாடகங்களில் கர்நாடக சங்கீதத்தையே பயன்படுத்துவது என்று வைத்திருக்கிறார்.


நாடகங்களுக்கான கருப் பொருளை எப்படித் தேர்வு செய்வது, எப்படி மேடையில் தருவது என்கிற நுட்பங்களை பாலசந்தர் கை யாளும் முறை இவரை அதிகம் பாதித்திருக் கிறது. அவருடைய 'புன்னகை', 'அரங்கேற்றம்' போன்ற படைப்புகளின் அழுத்தம், அவர் மீது ஒருவிதமான பிரேமையை ஏற்படுத்தியிருக்கிறது.

அதே கே.பி.யிடமே இணைந்து பணியாற்ற வாய்ப்புக் கிடைத்திருப்பதில் இவருக்கு நியாய மான பெருமிதம் உண்டு. 'கல்கி' படத்தின் உதவி இயக்குநராக அறிமுகமாகிறார். முன்பே தொலைக் காட்சித் தொடராக ''காதல் பகடை''யை எழுதியிருக்கிறார். கே.பி.யின் கை யளவு மனசு தயாரான நாட்களில் ''சும்மா வெறுமனே வந்து பார்த்துக் கொண்டிருங்கள்'', என்று அழைத்தாராம் கே.பி.

மராட்டி, ஹிந்தி, சமஸ்கிருதம், ஓரளவு அரபி மொழி தெரியுமாம் சாணக்யாவுக்கு. மிகவும் ஆசாரமான குடும்பச் சூழலில் பிறந்து வளர்ந்தவர். அப்பா ஜயராமனின் சம்ஸ்கிருத ஞானம், வேதங்களின் பால் ஈடுபாட்டை ஏற் படுத்தியது. 'மாக்ஸ்முல்லர்' மொழிபெயர்த்த நூல்கள் பலவற்றைப் படித்து அறிவைப் பரவ லாக்கிக் கொண்டுள்ள பாம்பே சாணக்யா, அடுத்து மேடையேற்றப் போகிற நாடகம் 'மீண் டும் அவர்கள்'. நவம்பர் கடைசியில் மேடை யேறும்.

நாடகங்கள் என்றால் பொழுது போக்கும் 'துணுக்குத் தோரணங்கள்'தாம் என்கிற கமர்ஷி யல் நிலையை விட்டு முற்றிலுமாக விலகி, 'கலை கலைக்காகவே' என்கிற நோக்கில் நாட கங்கள் தயாரிக்கும் மும்பை சாணக்யா (பம் பாய் 'மும்பை' என்று பெயர் மாற்றம் பெற்று விட்டதால் இவரும் மாற்றிக் கொள்ள வேண்டாமோ!) தமது சிந்தனையும் ''நாடகம்... நாடகம்... நாடகம்தான்!'' என்கிறார்.

— சுப்ர. பாலன்



11

தரையில் புதைத்த பெரிய கல்லுரலின் குழி மேல் பித்தளைத் தவலையை இறுத்தியிருந்தாள் சுகன்யா. அதன் மேல், கொலுப் படி செட்டியார் பொம்மையை உட்கார்த்தியது போல் குட்டையாய் குண்டாக ஒரு வெண்கல கூஜா. அதன் மூடியைக் கழற்றிவிட்டு, தண்ணீர் நிரப்பி, மணி பிளான்ட் கிளைகளைப் போட்டு வைத்திருந்தாள். அவை இந்த மூன்று மாத காலத்தில் நீண்டு வளர்ந்து, தவலை மேலிறங்கி கல்லுரலைத் தொட முயன்று கொண்டிருந்தன. ஜன்னல் வழியே வந்த வெயில் வெளிச்சம் இந்த நூதன பூரண கும்பத்தில் பட்டு, பளபளத்தது. கல்லுரலின் கருமையும், தவலையின் பொன் நிறமும், கொடிகளின் பசுமையும் போட்டி போடுவதை ரசித்தபடி மதிய டீயை உறிஞ்சிக் கொண்டிருந்தாள் சுகன்யா.

தனிக்குடித்தனம் வந்த பிறகும் வேலைக்குப் போவதில்லை என்ற முடிவு தொடர்ந்தது.

"அலுப்பாயிருக்கு ஸ்ரீராம்... அவசியமா தோணலை... வீட்டிலேயே இருக்கேன். நிறைய படிக்கலாம், அப்புறம் புதுசா ஏதாவது கத்துக்கலாம்..."

"இனிமே நீ கத்துக்கக் கூட ஏதாவது பாக்கியிருக்கா...?"

"இருக்கே. நிறைய இருக்கு, பாட்டு கிளாஸ் போவேன்... அப்புறம்... மூச்சைப் பிடிச்சுக்கோ! டான்ஸ் கூட கத்துப்பேன்!"

"ஐயோ!" மயக்கம் வருவது போல் அவன் நடிக்க, அப்படியே நாட்டிய போஸில் தாங்கிக் கொண்டதை எண்ணி, இப்போதும் சுகன்யாவுக்குச் சிரிப்பு வந்தது.

நாட்டிய வகுப்புக்குப் போகத் துணிவு வரவில்லை. ஆனால், பக்கத்துத் தெருவில் நடந்த பஜன் கிளாஸில் சேர்ந்து விட்டாள். அங்கே வகுப்பு நடத்திய மாமிக்கு ஒரு பெங்காலி பாட்டும் கற்றுக் கொடுத்தாகிவிட்டது!

இப்போது டீ குடித்து முடிந்ததும் அங்குதான் போக வேண்டும்...

கடைசி மிடறை உறிஞ்சிவிட்டு தம்ளரைக் கழுவியபோது, பக்கத்து வீட்டிலிருந்து பானுவின் குரல் கேட்டது.

"சுகி! சுகன்யா... உனக்கு போன் வந்திருக்கு..."

முன் கதவைப் பூட்டிக் கொண்டு அவசரமாகப் பக்கத்து வீட்டுக்குப் போகையிலேயே கொஞ்சம் கவலை வந்தது.

ஸ்ரீராம் அலுவலகத்தில் சாங்ஷன் கொடுத்தும் இன்னும் போன் இணைப்பு வரவில்லை. அவசரமானால் கூப்பிடலாம் என்று பக்கத்து வீட்டு நம்பர் ஸ்ரீராமுக்கும் அவன் பெற்றோருக்கும் மட்டுமே தரப் பட்டிருக்கிறது.


?
பிரபஞ்சன்

இருவரில் யார்...? எதற்குக் கூப்பிடுகிறார்கள்...? ஒருவேளை ஸ்ரீராம் அவசரமாக டூர் போக வேண்டியிருக்கிறதோ...? இல்லை அப்பா... அம்மா...! ஏதாவது உடம்பு சரியில்லாமல்...? அப்படியானால் ஸ்ரீராமுக்குத்தானே போன் செய்வார்கள்...?

ஓடிப்போய் ரிசீவரை எடுத்துப் பேசிய போது மூச்சிரைத்தது. மறுமுனையில் மாமனார் குரல் கேட்டது.

"நான் ராமநாதன் பேசறேன்..."

"சொல்லுங்க அப்பா... நான் சுகன்யா..."

"ஸ்ரீராம் ஆபீஸுக்கு போன் பண்ணி, பண்ணிப் பார்த்தேன்மா. அங்க என்ன பிரச்னைன்னு தெரியலே... லைனே கிடைக்கலை. விஷயம் இதுதான்; வசந்திக்குக் கல்யாணம் நிச்சயமாயிருக்கு. நாளைக்கு நிச்சயதார்த்தம். மாப்பிள்ளை வீட்லே... ஸ்ரீராம்கிட்டே சொல்லிடு இரண்டு பேரும் வந்துருங்கோம்மா...."

கடந்த ஞாயிறு போயிருந்த போது கூட கல்யாணம் பற்றி எந்தப் பேச்சும் இல்லை. இப்போது திடீரென்று... தொடர்ச்சியாக எழுந்த கேள்விகளை ஒதுக்கிவிட்டு, சுகன்யா கேட்டாள். "மாப்பிள்ளை யாருப்பா...?"

"மாப்பிள்ளை பேரு சந்திரசேகர், சேகர்னு கூப்பிடறது. சேகர் அசோஸியேட்ஸ்னு விளம்பர ஏஜென்ஸி நடத்தறார். நாளைக்கு மூணு மணிக்கு ஃபங்ஷன். நீங்க இரண்டு பேரும் இங்கேயே வந்துட்டீங்கன்னா சேர்ந்து போயிடலாம்..."

"வசந்தியைக் கூப்பிடுங்கப்பா... நான் ஒரு நிமிஷம் பேசறேன்..."

சுகன்யா இதைச் சொல்வதற்குள் லைன் துண்டிக்கப்பட்டு விட்டது.

பானுவிடம் அனுமதி கேட்டு, ஸ்ரீராம் அலுவலக நம்பரை முயன்று பார்த்தபோது லைன் உணர்வற்றுக் கிடந்தது. ஒருகணம் யோசித்து, மீண்டும் வீட்டுக்கு ஓடிப் போய், ராஜூவின் பேஜர் நம்பரைக் குறித்து வந்து, அந்த எண்ணில் தகவல் கொடுத்தாள்.

"ஸ்ரீராமை உடனே தொடர்பு கொள்ளச் சொல்லவும் – நன்றி – சுகன்யா."

பானுவின் நம்பருக்கு ஸ்ரீராம் போன் செய்வான் என்று பத்து நிமிடம் காத்திருக்க முடிவு செய்தாள். பதினைந்து நிமிடம் கூட ஆகி விட்டது. எதிர்பார்த்த போன் வரவில்லை...

'மீண்டும் பேஜரில் தகவல் சொல்லலாமா?' என்று யோசிக்கையிலேயே ஸ்ரீராமுடைய கார் ஹார்ன் சப்தம் கேட்டது.

பானுவுக்கு தாங்க்ஸ் சொல்லிவிட்டு ஓட, ஸ்ரீராம் இலேசாக அரண்டு போன முகத்துடன் நின்றிருந்தான்.

"என்னாச்சு... சுகி?" வீட்டைத் திறந்தபடியே சென்னாள். "நல்ல செய்திதான் ஸ்ரீராம். வசந்திக்கு கல்யாணம் நிச்சயமாகியிருக்கு..."

"ஓ...!"

"என்ன ஓ...! எவ்வளவு சந்தோஷமான செய்தி சொல்றேன். மீன் குஞ்சு மாதிரி 'ஓ'ங்கறியே!"

"என் பதற்றம் உனக்கெங்க புரியப்போறது? இந்த மாதிரி சமயத்துல உன்னைத் தனியா வீட்ல விட்டுட்டுப் போறமேன்னு ஏற்கெனவே குற்றஉணர்வு எனக்கு... இதுல நீ பேஜர் மெசேஜ் வேற குடுக்கறே..."

"இந்த மாதிரி'ன்னா எந்த மாதிரி சமயத்துல?"

"அதான் இந்த மாதிரி..." அந்த சின்ன ஹாலில் இருந்த ஒரே இரட்டை சோபாவில் உட்கார்ந்து, சுகன்யாவையும் பக்கத்தில் இருத்தி, அவள் வயிற்றில் கைவைத்தபடி சொன்னான்...

"ரொம்ப அவசரப்படறியே ஸ்ரீராம். இன்னும் பத்து நாள் போகட்டும். டாக்டர்கிட்டே போய் உறுதிப்படுத்திண்டு அப்புறம் சந்தோஷப்படலாம்."

"இந்த டாக்டருக்கு உறுதியா தெரியறதே...!" தன் நெஞ்சைத் தொட்டுக் காட்டிச் சொன்னவன், அவளை இறுக்கி அணைத்துக் கொள்ள...

"விடு! மூச்சுத் திணறுது! வசந்திக்குக் கல்யாணம்னு சொல்லிட்டிருக்கேன், நீ வேற டிராக்குல போய்க்கிட்டிருக்கியே...!"

"என்னைக் கேட்டா கல்யாணம் நிச்சயம் பண்ணாங்க? போன வாரம் போயிருந்தோமே, ஒரு வார்த்தை இதப் பத்திப் பேசலை! இப்போ மட்டும் எதுக்கு போன் பண்ணணும்?"

தங்க நகை பரிசு

இந்த இருபத்தாறு வாரத் தொடர், ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு கதாசிரியர் பெயரில் வெளியாகி வருகிறது. ஆனால் அவர்களுள் ஒரே ஒரு நபர்தான் இதை எழுதி வருகிறார். தொடரை எழுதியவர் யார் என்பதைக் கண்டுபிடிப்பது உங்கள் சாமர்த்தியம். கடைசி வாரம் வரை காத்திருந்து, அந்த இதழில் வெளியாகும் கூப்பனில் விடை எழுதி அனுப்புங்கள். சரியான விடைக்கு, தங்க நகை பரிசு! பலர் சரியாக எழுதினால் குலுக்கலில் ஒருவரே பரிசு பெறுவார். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

"பார்த்தியா? திருவாளர் ஸ்ரீராமின் ஆண் ஆணவம். பரிபூரணமா வெளிப்பட்டுருச்சு. நீ மட்டும் அவங்களைக் கேட்டா என்னைக் காதலிச்சே...?"

"அது வேற விஷயம். வசந்தி கல்யாணம்ங் கறது எனக்கும் எங்கப்பாவுக்குமான கூட்டுப் பொறுப்புன்றது எங்களுக்குள்ள எழுதப்படாத உடன்படிக்கை. அவர் உடன்படிக்கையை மீறிட்டார்..."

"நீ அவர் எதிர்பார்ப்பையெல்லாம் தவிடு பொடியாக்கிட்டே. அதனால் அவரும் உடன் படிக்கையை மீறிட்டார்... விடு! ஏன் பழைய கணக்கையே பார்த்துக்கிட்டிருக்கணும்?"

"உனக்குத் தெரியாது! நீ சும்மா இரு..."

திருமணமான இத்தனை நாட்களில் ஸ்ரீராம் இவ்வளவு கோபமாகப் பேசிக் கேட்ட தில்லை.

"வசந்தி பொறந்தப்போ எனக்குப் பத்து வயசு. அவளைத் தூக்கி வளர்த்ததுல எனக் குப் பெரிய பங்கு இருந்தது. என் முதல் குழந்தை மாதிரி அவ... இதெல்லாம் அப்பா -அம்மாவுக்கும் தெரியும்... அப்படியிருந்தும் ஒரு வார்த்தை எங்கிட்டே சொல்லலை. இன்ன பையனைப் பார்க்கிறதா இருக்கோம்... ஜாதகம் பொருந்தியிருக்கு. பெண் பார்க்க வரப் போறாங்க... ஏதாவது சொன்னாங்களா...?"

"ஒருவேளை அதெல்லாம் திடீர்னு நிச்சய மாச்சோ என்னவோ...?"

"இம்பாஸிபில்! எங்கப்பாவை எனக்குத் தெரியாதா...?"

"உனக்குத் தெரியாதுங்கறதுதான் உண்மை ஸ்ரீராம். உன் தேர்வு சரியில்லைன்னு அவர் முடிவு செய்தாச்சு. அப்புறம் உன் தங்கைக்கு மாப்பிள்ளைத் தேர்வு செய்ய உங்கப்பா உன்னை ஆலோசனை கேட்பார்னு நினைச் சுக்கிட்டிருக்கியே... இப்படிக் குழந்தைத்தன மான எதிர்பார்ப்பெல்லாம் வைச்சுக்காதே..."


அவன் மனத்தைத் திடப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் உண்மையைத் தோலுரித்துப் பேசி விட்டாள் சுகன்யா.

வெறுப்புடன் அவளை விலக்கி விட்டு, கண் களை மூடிக் கொண்டு மௌனமானான் ஸ்ரீராம்.

ஆளுக்கொரு மூலையாக அமர்ந்து, இறுக்க மான மௌனத்தில் அரைமணிப் பொழுதை ஓட்டினார்கள்.

சுகன்யா டீ தயாரித்து வந்து கொடுத்த போது, "அங்க வை..." என்றான்.

"ஹூம்! இதை நீ கைல வாங்கு இப்போ... பொதுவா மத்தவங்க பேர்ல இருக்கற கோபத் தைப் பெண்டாட்டி மேல காட்டற ஆளு இல்லை நீ. ஆனா இன்னிக்குக் கோபம் ரொம்ப 'ஸ்பெஷல்'. அதனால் பொறுத்துக் கறேன். இப்போ டீயைக் குடி..."



"ஒட்டப்பந்தயத்துல உங்களால எப்படி 'பர்ஸ்ட்'டா வர முடிஞ்சது?"
"பைனான்ஸ் கம்பெனி நடத் தின அனுபவம்தான் கை கொடுத் தது!"
-மு.முத்துவேங்கிட ஆனந்தன்

அவன் கையில் கப்பைத் திணித்துச் சொன்னாள்.

"கொஞ்சம் பிராக்டிகலா யோசனை பண்ணு ஸ்ரீராம். உன் நியாயங்கள் அடிப் படையில பார்த்தா, உங்கப்பா உன்னை ரொம்ப உதாசீனப்படுத்திட்டார்னுதான் தோணும். அதுக்காக நாமும் கோபப்பட்டு விட்டேத்தியாயிருந்தா உறவுகளெல்லாம் இன் னும் ரொம்ப சிக்கலாகிப் போய்ச் சங்கடம் அதிகரிக்கும். அவங்க எப்படி இருந்தாலும் நாம எப்பவும் போல இருப்போம்... நம்ப வசந்தி கல்யாணம் இது."

"உனக்கொண்ணு தெரியுமா சுகி...?"

"என்ன...?"

"என் வாழ்க்கையிலேயே நான் செஞ் ரொம்ப உருப்படியான காரியம் உன்னைக் கல் யாணம் பண்ணிண்டதுதான்..."

"அப்பாடி! அதுல உங்க அப்பாவுக்கு ஒ பங்கு இருக்குன்றதை மறுக்க மாட்டே இல்ல. அதுக்காகவாவது இப்ப கிளம்பு... நாம போ வசந்தி நிச்சயதார்த்தத்துக்கு என்ன ஏற்பா செய்யணும்னு கேட்டு வேலையை ஆர பிக்கலாம்..."

ஸ்ரீராம் எழுந்து புறப்பட்டான். சாக்லே டும் புதுப் புடைவையும் வாங்கிக் கொண் போய்ச் சேர்ந்தபோது, இவர்களுக்கு எ வேலையும் மிச்சமிருக்கவில்லை!

(தொடரு



போட்டிக் கதை - 7

விஜயசாரதி

பிரபல ஆங்கிலப் பத்திரிகையின் ஒன்பதாம் பக்கத்திலே அந்தச் செய்தி வெளியாகியிருந்தது.

"ராணுவ ஆராய்ச்சி ரகசியத்தை பாகிஸ்தானுக்கு விற்கச் சதி செய்ததாக நடந்த வழக்கில், பிரபல விஞ்ஞானி பரமேஸ்வரன் மீது சாட்டப் பட்ட குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இல்லை என்று கூறி சுப்ரீம் கோர்ட் இன்று தீர்ப்பளித்தது."

பரமேஸ்வரன் செய்தித்தாளை மூடி வைத்தார். இரண்டு ஆண்டுகளாக அவரது வாழ்க்கையில் வீசிய கடும் புயல் இப்போது ஓய்ந்து விட்டது. ஆனால் அது விளைவித்த சேதங்கள்...

பரமேஸ்வரன் மெல்ல எழுந்தார். ஐம்பது வயதிலும், இருபது வயது இளைஞனைப் போன்று அவரைச் செயல்பட வைத்த உற்சாகமும், உடல் வலிவும், இந்த இரண்டாண்டு அனுபவங்களால் பறி போய் விட்டது.

எழுந்திருக்கும் போதே இடுப்பின் கீழ்ப்புறம் 'சுருக்'கென்று வலி. இனி ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் பாதங்களிலிருந்து, கால்களை மேல் உடலில் இணைக்கும் மூட்டுகள் வரை பல இடங்களிலிருந்தும் குரல் கொடுக்கப் போகும் உடல் வேதனைகளுக்கு இது ஒரு முன்னுரை! வெளி உடல் உறுப்புகள் தவிர, ஜீரண உறுப்புகள், இதயம், நுரையீரல் என்று உடலுக்குள்ளும் பாதிப்புகள்.

போலீஸ் விசாரணை மற்றும் சிறை வாழ்க்கையின் தழும்புகள் இவை!

தம் மீது குற்றம் இல்லை என்று நிரூபிக்கபட்டு விட்டதால், இந்தத் 'தழும்புகள்' மறைந்து விடுமா அல்லது தாம் அனுபவித்த உடல் வேதனையும், மன வேதனையும்தான் அகன்று விடுமா என்று அவர் நினைத்துப் பார்த்தார்.

பௌதீகத்தில் 'மீள முடியாத மாற்றம்' என்று படித்தது இவர் நினைவுக்கு வந்தது. 'ஒரு ரப்பர் வளையத்தை இழுத்து விட்டால் அது பழைய நிலைக்கு வந்து விடும். ஆனால் ஒரு இரும்புக் கம்பியை வளைத்து நிமிர்த்தினால், அது நிச்சயம் பழைய நிலைக்கு வராது' என்று கல்லூரியில் பேராசிரியராக இருந்தபோது மாணவர்களுக்கு

'எலாஸ்டிஸிடி' பற்றி எளிமையாக விளக்கியிருக்கிறார். அப்போதெல்லாம் கடினமான விஷயங்களையும் எளிமையாக விளக்கும் அவரது திறமைக்கு மாணவர்களிடம், பெரும் வரவேற்பும், ஆச்சர்யமும், பாராட்டும் கிடைக்கும்.

ஆனால் அவரது எந்த விளக்கத்தாலும், போலீசாரால் தாம் குற்றமற்றவர் என்று அவரால் நிரூபிக்க முடியவில்லை. கல்வித் துறையிலிருந்து, ராணுவ ஆராய்ச்சித் துறைக்கு வந்ததில் தாம் எவ்வளவு இழந்து விட்டோம் என்று நினைத்துக் கொண்டார். அரசு இயந்திரத்தின் சிவப்பு நாடாக்களையும் மீறி தேசப் பாதுகாப்புக்காக உழைக்கிறோம் என்ற பெருமிதத்துடனும், உற்சாகத்துடனும் செயல்பட்டு, கடந்த 25 வருடங்களில் அவர் தம் ஆராய்ச்சியின் மூலம் உருவாக்கிய முன்னேற்றங்கள் பல. ராணுவத் தலைவரிடமிருந்து இவருக்குப் பாராட்டுக் கடிதம் கூட வந்திருக்கிறது. ஏன், குடியரசுத் தலைவரிடமிருந்து 'பத்ம பூஷன்' விருது கூட வாங்கியிருக்கிறார்.

எல்லாம், இரண்டு வருடங்களுக்கு முந்தைய அந்த மே மாதத்தில் மாறி விட்டது. இன்று இவர் விடுதலையை 9-ஆம் பக்கத்தில் கடமைக்காகப் பிரசுரித்திருக்கும் இதே பத்திரிகை, அன்று முதல் பக்கத்தில், 'பிரபல விஞ்ஞானி கைது - ராணுவ ரகசியக் கடத்தலில் உடந்தை' என்று இவர் கைதான செய்தியை கம்பீரமாகப் பிரசுரித்திருந்தது.

அப்போது ஒரு திருமணத்துக்காக அவர் விடுமுறையில் சென்னைக்கு வந்திருந்தார். அவரது ஆராய்ச்சி நிறுவனம் இருந்தது பெங்களூரில். சென்னையில், தி. நகரில் தமது தங்கையின் வீட்டில் தங்கித் திருமணத்தில் கலந்து கொண்டு விட்டு, அன்று இரவே சென்னையிலிருந்து கிளம்பி பெங்களூர் வந்து விட்டார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, சில முக்கியமான ராணுவ ரகசியங்கள் ஒரு ராணுவ ஆராய்ச்சி நிலையத்திலிருந்து ஒற்றர் மூலம் பாகிஸ்தானுக்கு அனுப்பப்பட இருந்ததாகவும், பாகிஸ்தானின் பெண் ஒற்றரைக் கைது செய்ததன் மூலம் கர்நாடக போலீஸ் இந்தச் சதியை முறியடித்து விட்டதாகவும் பத்திரிகையில் வந்த செய்தியைப் படித்து பரமேஸ்வரன் திடுக்கிட்டார்.

எந்த ராணுவ ஆராய்ச்சி நிலையம் என்று செய்தியில் குறிப்பிடப்படா விட்டாலும், அது இவரது தலைமையில் இயங்கும் ஆராய்ச்சி நிலையம்தான் என்பதில் சந்தேகம் இல்லை. தமது தலைமையில் இயங்கும் ஒரு அமைப்பில், தமக்குத் தெரியாமல் இப்படி ஒரு சதியா? அதுவும் பத்திரிகைச் செய்தி வந்த பிறகும் தமக்குத் தெரியவில்லையென்றால்....?


அவர் குழம்பினார்.

ஆனால் அவர் அதிக நேரம் குழம்ப வேண்டியிருக்கவில்லை. அவர் தமது அலுவலகத்துக்குச் சென்ற சற்று நேரத்துக்கெல்லாம் அவரைத் தேடிப் போலீஸ் அதிகாரிகள் வந்தார்கள். அவர் புரிந்து கொள்ள முடியாத பல கேள்விகளைக் கேட்டார்கள். ஒரு பாகிஸ்தானியப் பெண்ணின் படத்தைக் காட்டி 'தெரியுமா?' என்றார்கள். ரகசியங்களை விற்றதற்காகக் கிடைத்த பணத்தை என்ன செய்திருக்கிறார் என்று வினவினார்கள். அவரது சென்னைப் பயணத்தைப் பற்றித் திரும்பத் திரும்பக் கேட்டார்கள். 'ஒரு திருமணத்தில் கலந்து கொள்ள' என்று அவர் சொன்னதைப் புறக்கணித்துப் பயண நோக்கம் பற்றிப் பலமுறை கேட்டார்கள்.

அவர் சென்னையில் கழித்த 16 மணி நேரத்துக்கும் கணக்குக் கேட்டார்கள். திருமணத்துக்குச் சென்று வந்த பிறகு, உறவினர் வீட்டில் படுத்துத் தூங்கியதாக அவர் சொன்னதைக் கேட்டுச் சிரித்தார்கள். கடைசியாக, "ஓட்டலில் ரஸியாவைப் பார்த்து ரகசிய தஸ்தாவேஜுகளின் நகல்களைக் கொடுத்து விட்டு உடனே வர வேண்டியதுதானே? ரொம்ப நேரம் தங்கியது அவளுடன் சல்லாபம் செய்யவா அல்லது

பலி

ஒற்றுமையே வாழ்வின் சாராம்சம்



தாயும் மகளும்

மென்மை, அன்பு, பரஸ்பரம், புரிந்து கொள்ளுதல் இவை நிறையப் பெற்று எக்காலத்திலும் இணை பிரியாத ஒரு உறவு அது. காலம் செல்லச் செல்ல கனிவுறும் இவ்வுறவு, இருவரையுமே திறமை மற்றும் சக்திமிக்கவர்களாக ஆக்குகிறது.

தொடர்ந்து சதி வேலைகளுக்கான திட்டம் தீட்டவா?" என்று அவர்கள் கேட்டபோது அவர் முதல் முறையாக அதிர்ந்து போனார். "என்னையா சந்தேகப்படுகிறீர்கள்?" என்று அவர் நம்ப முடியாமல் கேட்டபோது, சினிமாவில் சொல்வது போல், "யூ ஆர் அண்டர் அரெஸ்ட்!" என்றார்கள். அவர் கண்ணியமாக நடத்தப் பட்டது அதுதான் கடைசிமுறை.

போலீஸ் ஸ்டேஷனை அடைந்ததுமே, விசாரணை முறை மாறிற்று. அதுவரை 'சார்' என்று மரியாதையாக அழைத்து வந்தவர்கள், அதற்குப் பிறகு அவரை விசாரிக்கப் பயன் படுத்திய வார்த்தைகளிலேயே மிகவும் மரியாதையான வார்த்தை, 'ஏண்டா' என்பது தான். கன்னடத்திலும், தமிழிலும் அவர் கேட்டிருந்த, மற்றும் கேட்டே அறியாத அனைத்து வசவுச் சொற்களும் அவரை விசாரிக்கப் பயன்படுத்தப்பட்டன.

மரியாதைக் குறைவாக நடத்தப் படுகிறோமே என்ற வருத்தம் சிறிது நேரமே நீடித்தது. பழகி விட்டது என்பதால், அல்ல. அதை விடக் கொடூரமான விஷயங்களை அவர் அனுபவிக்கத் தொடங்கி விட்டதுதான்.

காவல் நிலையங்களில், சித்திரவதை முறைகள் பயன்படுத்தப்படுவதைப் பற்றி அவர் கேள்விப்பட்டிருக்கிறார். ஆனால் அவை இவ்வளவு கொடூரமாக, நம்ப முடியாத அளவுக்கு மோசமாக, தாங்க முடியாத அளவுக்கு வேதனையளிப்பதாக இருக்கும் என்று அவர் கற்பனை செய்து பார்க்கவில்லை.

பொதுவாக அவருக்கு வலிதாங்காது, அவரது குழந்தைகள் விளையாட்டாக முதுகில் அடித்தால் கூட வலி தாங்காமல் அவர்களைத் திட்டுவார். 'குழந்தை அடிப்பதைக் கூடப் பொறுத்துக் கொள்ள முடியவில்லையே உங்களால்!' என்று அவர் மனைவி கூட அங்கலாய்த்துக் கொள்வாள். அப்படிப்பட்டவர், உடல் வேதனையின் உச்ச கட்டங்களுக்குச் சென்று மீண்டு வந்தார்.



தினமும் இரவில் தொடர்ந்த சித்திரவதைகளில், பொழுது சாயும் போதே உடலில் ஒரு கிலி பரவத் தொடங்கியது. இன்று விடுதலையாகி வீட்டில் இருக்கும்போது கூட மாலை வந்தாலே, தன்னையறியாமல் உடலில் ஒருவித நடுக்கமும், பயமும் பரவுகிறது.

அவர் குற்றவாளி என்பதில் போலீசாருக்குச் சந்தேகமில்லை. அவர்கள் தெரிந்து

கொள்ள விரும்பியதெல்லாம், அவருக்கு எவ்வளவு பணம் கிடைத்தது, அதை என்ன செய்தார், எங்கே வைத்திருக்கிறார், சுவிஸ் வங்கி எதிலாவது அவர் பேரில் பணம் போடப்பட்டிருக்கிறதா என்பதுதான்.

சில மாதங்களில் வழக்கு நீதிமன்றத்துக்கு வந்தது. அவருக்கு எதிராகச் சொல்லப்பட்ட சாட்சிகள் அவரை மலைக்க வைத்தன. அலுவலக ஜெராக்ஸ் அறைக்கு, அவர் அடிக்கடி சென்றதாகவும், சில ஜெராக்ஸ் காப்பிகளைக் கைப்பையில் போட்டு அவ்வப்போது வீட்டுக்கு எடுத்துச் செல்வதைத் தான் பார்த்தாகவும், அவருக்குக் கீழே பணி புரிந்த இளம் விஞ்ஞானி மஞ்சுநாத் சாட்சி சொன்னான்.

குறிப்பிட்ட தேதியில் 'அவரைப் போல் தோற்றம் கொண்ட' ஒருவரை குறிப்பிட்ட ஓட்டலில் பார்த்ததாக ஓரிரு சாட்சிகள் கூறினர்.

பரமேஸ்வரனை யாரும் நம்பியதாகத் தெரியவில்லை.' ஒரு தேசத்துரோகியின் மகளைக் கல்யாணம் செய்து கொண்டேனே!' என்று அவரது மாப்பிள்ளை அவரது மகளிடம் அங்கலாய்த்துக் கொண்டானாம்.


சிறையில் வந்து அவரைப் பார்த்த அவரது ஒரே மகன், "பணம் வேண்டுமானால் என்னிடம் கேட்டிருக்கலாம்" என்று ஒரே வரியில் சொல்லிவிட்டுப் போனான்.

அவரது மனைவி கூட, "நாம் இரண்டு பேர் தானே இருக்கிறோம்? இந்த வயதில் ஏன் இப்படிச் செய்து மாட்டிக் கொண்டீர்கள்?" என்று அழுதாள். "ஏன் இப்படிச் செய்தீர்கள்?" என்று கேட்கிறாளா, "ஏன் மாட்டிக் கொண்டீர்கள்?" என்று கேட்கிறாளா என்று அவருக்குப் புரியவில்லை.

ஒரு வக்கீல் அமர்த்த முயன்றார். அவர் கேட்ட ஃபீஸ் இவருக்குக் கட்டுப்படியாகவில்லை. "என்ன செய்வது? மாட்டிக் கொண்டு விட்டால், 'சம்பாதித்த' பணத்தில் கொஞ்சம் செலவு செய்துதான் மீண்டு வர வேண்டும்" என்று நியாயம் பேசினார் வக்கீல்.

பரமேஸ்வரன் வக்கீல் இல்லாமல் தாமே வாதாடிக் கொள்வது என்று முடிவு செய்தார். அவருக்கு ஒரு நம்பிக்கை இருந்தது. அவர் குற்றம் செய்திருந்தால், பணம் சம்பாதித்திருக்க வேண்டும். ஆனால் போலீசார் அவரது வீட்டைச் சோதனை செய்தபோது, அவருடைய





''நீங்க ஹாஸ்பிடலுக்கு வந்தா ஐம்பது ரூபா ஃபீஸ் தரணும். நான் உங்க வீட்டுக்கு வந்து செக்-ஆப் செய்தா நூறு ரூபா தரணும். உங்க வசதி எப்படி?

''டாக்டர்! இரண்டு பேரும் பொதுவா நடுவுலே எங்கேயாவது மீட் பண்ணுவோமே!''

-என்.உஷாதேவி

பொருளாதார நிலை சராசரி அளவில்தான் இருந்ததை உணர்ந்திருப்பார்கள். இந்த ஒரு உண்மையே தமக்குச் சாதகமாக இருக்கும் என்று அவர் நினைத்தார்.

ஆனால் ரஸியாவின் சாட்சியம் அவரது நம்பிக்கையை உலுக்கி விட்டது. அவர் ஒரு முறை கூடப் பார்த்திராத அந்தப் பாகிஸ்தானியப் பெண், அவர் தன்னை ஓட்டலில் சந்தித்து ரகசிய தஸ்தாவேஜுகளின் நகல்களைக் கொடுத்ததாக ஒப்புக் கொண்டாள். அவளைக் கைது செய்தபோது அவளிடமிருந்து அந்த நகல்கள் கைப்பற்றப்பட்டன. அந்த நகல்கள், பரமேஸ்வரன் பெயருக்கு வந்திருந்த ஒரு கவருக்குள் வைக்கப்பட்டிருந்ததால், இவர்தான் அந்த நகல்களைத் தம்மிடமிருந்த ஒரு காலிக் கவரில் போட்டு அவளிடம் கொடுத்திருப்பார் என்று சந்தேகிக்க ஏதுவாயிற்று. அவருக்குக் கொடுக்க வேண்டிய பணம் தனக்கு வந்து சேராததால், அவருக்கு இன்னும் தான் பணம் கொடுக்கவில்லை என்று அவள் சொன்னது, இவருக்குச் சாதகமாக இருந்த ஒரே விஷயத்துக்கும் உலை வைத்து விட்டது.

பரமேஸ்வரன் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டு, ஐந்தாண்டுச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இவர் வக்கீல் வைத்தும் ஹைகோர்ட், கீழ்க் கோர்ட்டின் தீர்ப்பை உறுதி செய்தது. பின்பு மிகுந்த பிரயாசையுடன், வேறொரு வக்கீலை வைத்து இவர் சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்தார். இடையில் பாகிஸ்தானியப் பெண் சிறையில் இறந்து போனாள். அது தற்கொலையா இல்லையா என்ற சர்ச்சை துவங்கியது.

சுப்ரீம் கோர்ட் இவரை நிரபராதி என்று இப்போது தீர்ப்பளித்துள்ளது. போலீசுக்குக் கடுமையான கண்டனமும், நாட்டில் ஒரு சிறந்த விஞ்ஞானிக்கு இத்தகைய கதி நேர்ந்தது பற்றிய வருத்தத்தையும் சுப்ரீம் கோர்ட் தனது தீர்ப்பில் தெரிவித்திருந்தது.

இப்போது இவர் வேலை பார்த்த அரசு நிறுவனம் இவரை மீண்டும் வேலைக்கு அழைத்திருக்கிறது. இரண்டாண்டுகளுக்கான சம்பளம், உயர்வு மற்றும் இவருக்குச் சேர வேண்டிய அனைத்தையும் வழங்கவும் இசைந்திருக்கிறது.

மீண்டும் வேலையில் சேர்வதா என்பது பற்றிய சிறிது குழப்பத்துக்குப் பின், பரமேஸ்வரன் வேலையில் சேர முடிவு செய்தார். அவர் முடிக்க வேண்டிய முக்கியமாக பணி ஒன்று இருந்தது.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அவர் மீண்டும் தமது அலுவலக அறையில் நுழைந்தார். அவர் இடத்தை அரசாங்கம் இன்னும் நிரப்பாமல் வைத்திருந்ததால், இடையில் வேறு யாரும் அவர் நாற்காலியில் உட்கார வாய்ப்பு வரவில்லை. அவரைக் கைது செய்தபின் அவரது அறை சோதனை போடப்பட்டதை அவர் அறிந்திருந்தார். சோதனைக்குப்பின் ஒழுங்கு படுத்தப்படாமல் பூட்டியே வைக்கப்பட்டிருந்த அவரது அறை, அவர் மீண்டும் பணியில் சேருகிறார் என்று தெரிந்த பிறகு, அவசரமாக ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது.

ஊழியர்கள் ஒவ்வொருவராக வந்து அவரை வாழ்த்தி, வணக்கத்தையும், தங்கள் மகிழ்ச்சியையும் தெரிவித்து விட்டுச் சென்றார்கள். அவருக்கு எதிராகச் சாட்சி சொன்ன மஞ்சு நாத்தும் வந்தான். அவனுடைய தயக்கத்தையும், சங்கடத்தையும் அவனால் மறைக்க முடிய வில்லை. "சார்! உங்களிடம் தனியாகப் பேச வேண்டும்'' என்றான்.

"உணவு இடைவேளையின் போது வா'' என்றார் பரமேஸ்வரன்.

இடைவேளை வந்தது. மஞ்சுநாத்தும் வந்தான். சற்று நேரம் தலைகுனிந்து உட்கார்ந்திருந்தவன், "சார்! என்னை மன்னித்து விடுங்கள். போலீசாரின் நிர்ப்பந்தத்தால்தான் அப்படிச் சாட்சி சொன்னேன். நீங்கள் என்னை ஒரு மகன் போல் நடத்தினீர்கள். உங்களுக்குத் துரோகம் செய்து விட்டேன்'' என்றான் மெலிதான குரலில்.

பரமேஸ்வரன் அவனை உற்றுப் பார்த்தார் அவன் சொன்னது சரிதான். அவர் அவனைத் தம் மகன் போல் பாவித்துத்தான் அன்பு

தாலே மார்பைப் போர்த்திக் கொண்டு வருகிறார். மார்பை ஏன் மறைத்துக் கொள்கிறார் என்றால், அந்த பிரும்மச்சாரி கோலத்திலும் மஹாலக்ஷ்மி தாயார் விடாமல் அவன் திருமார்பிலே வாசம் பண்றாளாம். அவள் பார்வை மஹாபலியின் பக்கம் படக்கூடாது என்பதற்காக மார்பை மறைத்துக் கொண்டானாம் பரமாத்மா. லக்ஷ்மி கடாக்ஷம் பட்டு விட்டால் மஹாபலிக்குக் கொள்ளக் குறையா செல்வமல்லவா ஏற்படும்! அப்புறம் அவதார பூர்த்தி ஆகாது அல்லவா!

எனவே கிருஷ்ணாஜனம் போர்த்தி வருகிறார் பகவான். மஹாபலியின் மனைவி தீர்த்தத்தை அவர் கையிலே விடும்போது அதை வாங்கிக் கொள்வது போல, தம் கையில் இருக்கும் தர்ப்பத்தைக் கொண்டு சுக்ராச்சார்யாரின் கண்ணைக் குத்தி விடுகிறார். அவருக்கு ஒரு கண்ணே போய் விட்டது!

தர்ப்பத்தால் குத்தினால் கண் போய் விடுமா? என்று கேட்டால், பகவான் சுதர்ஸன சக்ரத்தை அல்லவா பவித்ரமாகப் (விரலில் மோதிரம் போல் அணியப்படும் தர்ப்பை) போட்டுக் கொண்டிருக்கிறான்? அதனால் அத்தனை சக்தி, தர்ப்பத்தைக் கொண்டு செய்த அந்த பவித்ரத்துக்கு!

கிண்டியிலிருந்து ஜலம் பகவான் கையிலே விழுகிறது. அந்த நேரத்திலே அவன் திருவடி எங்கே போச்சு.... என்று கேட்டால்.... நீண்டு கொண்டே போகிறது! பூலோக மேலோகங்களெல்லாம் தாண்டி, பிரும்மாவின் உறைவிடமான சத்யலோகம் வழியே போகிறது அந்தத் திருவடி. சத்யலோகத்தையும் தாண்டிப் போய் ஆவரண ஜலத்தைக் கிழிக்கிறது!

ஆவரண ஜலம் என்றால் ஒவ்வொரு அண்டத்தையும் சுற்றிக் காணப்படும் ஜலம். கருவிலே சிசுவைச் சுற்றி ஜலம் இருப்பது போலே ஒவ்வொரு அண்டத்தைச் சுற்றியும் இப்படி ஆவரண ஜலம் இருக்கும். பகவானின் திருவடி இந்த ஆவரண ஜலத்தைக் கிழித்து விடுகிறது.

பிரும்ம லோகத்தைத் தாண்டி ஆவரண ஜலத்தை நோக்கிப் போன அந்தத் திருவடியை பிரும்மா பார்த்தார். நான்கு வேதங்களும் தேடிக் காண முடியாமல் தோற்ற திருவடி! மனசும் வாக்கும் அலைந்து தேடியும் கண்டறியாத திருவடி!

மனமும் வாக்கும் அந்தத் திருவடியைத் தேடி அலைந்த கதையொன்று உபநிஷத்தில் உண்டு... அதை அடுத்த வாரம் சொல்றேனே....

(தொடரும்)

குழந்தை, நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிற அப்பாவின் சைக்கிளைப் பார்த்து விட்ட மாதிரி என்ன பாதுகாப்பு தரு கிறது!

இந்த முறை ஆர்மி போஸ்டிங் லே லடாக்கில். பதட்டம் கூடுதல். விளைவு? விடுமுறை கிடைப்பது பிந்தி விட்டது.

மனசு ரொம்ப அலைந்து விட்டது. ஜங்ஷனுக்காக. மேம்பாலத்துக்காக.

மேம்பாலத்தில் ஹரிபாவாவின் ஒட்டை ஹார்மோனிய சங்கீதம் கேட்டு பதினான்கு மாதங்கள் ஆகி விட்டன. அப்புறம்.... அப்புறம்...' சாரு மதியோடு பேசிக் கொண்டே ஏறி வந்த படிகள்.

கிழக்கும் மேற்குமாக நீண்ட மேம்பாலத்தின் நடுவில் நின்று இரும்பு கர்டர்களைப் பிடித்த படி கீழே ஓடும் தண்டவாளச் சிற்றாறுகளைப் பார்த்தவாறே அவளோடு செலவழித்த சிற்சில நிமிடங்கள்.



செய்தி

அந்த நிமிடங்களுக்கு அதைப் போன்ற யாராருடையவோ எந் தெந்த நிமிடங்களுக்கோ, ஒரு யுகாந்திர சாட்சியம் போல் கம்பீரமாக நிற்கும் ஏலகிரி மலை.

தொலைந்து போகிறோம். கண்டுபிடிக் கிறோம். மீண்டும் தொலைதல். மறுபடியும் கண்டுபிடிப்பு.

ஜங்ஷனில் ரயில் நுழையும் முன்பே மேம்பாலம் தெரிந்தது. ஜன்னல் வழியே எட்டிப் பார்த்த தர்மராஜுக்கு மனசு ஜிவ் வென்று தூக்கிற்று. கையில் இருந்து ஊச்சென்று ஆகாயத்திற்கு வீசி விட்ட புறாப் போல. சிக்னல் விழாததால் அவுட்டரில் நின்றது.

ரயில் வந்த வழியில் எத்தனையோ மேம் பாலங்கள். ஜங்ஷன்கள்.

ஆனால் இந்த ஜங்ஷன். இந்த மேம்பாலம். ஆள் கூட்டத்திலே தொலைந்து போன

லே லடாக்கில் உறைபனியும் உதிர் பனியும் கைகோக்கும் குளிரில் வலது பக்கத்துக் கட்டிலில் பாஸ்கரன் நாயர் சொன்னான்.

"நீ ஒரு ரொமாண்டிக் நோயாளி"

இடதுபக்கக் கட்டிலில் சுரீந்தர் சிங்குக்கு பதிலடி கொடுக்கத் தோன்றியது.

"யார்தான் இல்லை? நீ, நான்.... எல்லா மனுஷனும் என்னிக்கோ ஒருநாளாவது ரொமாண்டிக் நோயாளிதான்! இல்லேன்னு

சொல்லாத சங்கீதம்

வையவன்

எவன் சொன்னாலும் அது பொய்.''

இந்த முறை இருவருமே டில்லி வரை உடன் வந்தார்கள். ஆக்ராவுக்கும்.

தாஜ்மஹால் சற்று கறுத்து விட்டிருந்தது.

பாஸ்கரன் நாயர் என்ற சினிக்குக்குக் கூட அது வருத்தம்.

சுரீந்தர் சிங் தர்மராஜின் தோளை உள்ளங்கை அழுந்த வலுவாகப் பிடித்தான். அது ஒரு செய்தி. வாய் விட்டுச் சொல்லாத செய்தி. தாஜ்மஹாலின் சலவைக்கல் சங்கீதம் போல.

இருவருமே நல்ல நண்பர்கள்தாம். சுரீந்தர் சிங் ரொம்ப சென்ஸிடிவ். அவன் தாய் ஒரு வங்காளி.

தாஜ்மஹாலின் அர்த்தம் சுரீந்தருக்கு உரிய விதத்தில் புரிந்திருந்தது. தர்மராஜையும் கூட.

சாருமதி ஏன் அவனை நிராகரித்தாள் என்று சுரீந்தர் கேட்கவே இல்லை.

ஒருவிதத்தில் ஹரிபாவாவும் அவனும் ஒன்றுதான்.

ஹரிபாவா பார்த்தார்.

சுரீந்தர் கேட்டுக் கொண்டான்.

இரண்டிற்கும் பெரிய வித்தியாசம்.

கண்ணால் ஒன்றை மௌனமாகக் காண்பதற்கும் காதால் ஒன்றை ஒருதலையாகக் கேட்பதற்கும் உரிய வித்தியாசம்.

ஒன்று சாட்சி. மற்றொன்று வாக்குமூலம்.

''நிராகரிக்கப்படுவதோ அங்கீகரிக்கப்படுவதோ அல்ல விஷயம். யுவர் கபாஸிடி ஆஃப் லவ், டு லவ்... அதுதான். அது முக்கியம்.''

எதையோ யோசித்துவிட்டு ஒருநாள் சுரீந்தர் சொன்னான்.

கல்லூரி விடுமுறையில் கிராமத்து பாங்கில் மானேஜராய் இருந்த அண்ணன் வீட்டிற்கு வந்த சாருமதிக்குப் பேசிப் பழகக் கிடைத்த ஒரே நபர் தர்மராஜ்தான்.

துஷ்பிரயோகம் செய்து கொள்ள வசதியாக எத்தனையோ சந்தர்ப்பங்கள். சுதந்திரங்கள்.

எப்படியோ பாங்க் மானேஜருக்கும், சாருமதிக்கும் அவற்றை தர்மராஜ் ஒருக்காலும் பயன்படுத்திக் கொள்ள மாட்டான் என்று புரிந்திருக்கிறது.

...என்ன ஒரு நம்பிக்கை அது!

ஆற்றங்கரை சிவன் கோவிலுக்கு அன்றாடம் மாலையில் நடந்து செல்வது.

கவிதை. கம்ப்யூட்டர். க்ரையோஜெனிக்ஸ். காம்பஸ் வாழ்க்கையின் தறிகெட்ட போக்கு. செக்ஷுவல் பெர்வர்ஷன்கள். அச்சுறுத்திக் கொண்டிருக்கும் உலகின் எதிர்காலம்.

எதைத்தான் விட்டு வைத்தார்கள்?

ஆனால் என்ன பேசினாலும் சாருமதியிடம் ஒரு தேவதையின் மேன்மை, லகுவான, இயல்பான ஒரு பெருமிதம்.

புன்மையான விஷயங்களைப் பேச நேரும் போது நேரடியாகச் சொல்ல மாட்டாள். வருத்தமாகச் சிரிப்பாள். புன்மைகளுக்குக் கூட சிறிது அனுதாபம் தேவை போல.

உலகம் அவளது ஆசீர்வாதத்திற்கும் கருணைக்கும் பாத்தியப்பட்டிருப்பது போல் தர்மராஜ் நினைத்தான்.

அது ஆராதனையோ என்று அவனுக்குள்ளேயே கேள்வி எழும்.

சாருமதியின் கண் தெளிவும், புன்னகைத் தூய்மையும் ஆராதனையில் எழும் தற்கூச்சத்தை அகற்றின. இருந்தாலென்ன?

வெகுகாலம், ஏன் பல பிறவிகளாகப் பழகிய நண்பர்கள் போல்தான் இருவரும் நடந்து கொண்டனர்.

ஆராதனையிலும் அசல்நட்பிலும் பேதமில்லை. ஆணுக்கும் பெண்ணுக்குமான உறவில் உதிக்கும் பேதமோ, ஸ்வரபேதமோ இல்லாத பரிச்சயம் அது.

ஒன்றாக நடந்தார்கள். சிரித்தார்கள். சாப்பிட்டார்கள். சீட்டாடினார்கள். சங்கீதம் கேட்டார்கள். சினிமா பார்த்தார்கள்.

''யூ ஃபூல்... எப்படியெல்லாம் சான்ஸை மிஸ் பண்ணியிருக்கே'' என்று பாஸ்கரன் நாயர் கை உதறியிருப்பான்.

பருந்திற்கு இறைச்சிதான் தெரியும்.

அவனிடம் சொன்னதில்லை

''உன்னை ரொம்ப [illegible] பொழுது

போக்க கம்பானியனா பயன்படுத்தியிருக்கா. நீ ஒரு பூச்சி" என்று மேலே போயிருப்பான்.

பெருச்சாளிகள் வளை தோண்டும்.

சட்டென்று சிக்னல் விழுந்து ரயில் ஜங்ஷனில் நுழைந்தது.

தர்மராஜ் இறங்கினான். கூட்டம் வடியும் வரை காத்திருந்தான். பின்பு படியேறி மேம்பாலத்தை மிதித்தான்.

முதலடி வைத்ததுமே வருஷா வருஷம் வந்தாலும் சிலிர்த்தது. அவளோடு சேர்ந்து முதல் முதல் வந்த அந்த முன்னிரவு. ஊரெல்லாம் விளக்கு வைத்த தீபம் மாதிரி மனசு திண்டாடிய அந்தப் பரவசம்.

தர்மராஜ் சூட்கேஸை நெடுக்கு வாட்டில் கர்டர் ஓரம் நகர்த்தி அதன் மீது உட்கார்ந்தான்.

தொடுவானில் தொலைந்து போன அந்த முன்னிரவு ஒரு தூரத்து நட்சத்திரமாகச் சிரித்தது.

"அப்பப்பா... காத்து என்னமா பிச்சுகிட்டுப் போகுது?" என்று இடைவெளி விட்டு ஆட்டோவில் அமர்ந்திருந்த சாருமதி கேட்டாள்.

காற்றின் வேகம் அவள் புடைவைத் தலைப்பை சரித்து அவன் முகத்தின் மீது தொட்டுத் தொட்டுப் படர வைத்தது. என்ன மணம்.

"யாரைப் பார்க்கப் போறோம்?" என்று கேட்டான் தர்மராஜ்.

"பார்க்கப் போறதில்லே. வழியனுப்பப் போறோம்" அவள் சிரித்து விட்டுச் சொன்னாள்.

"யாரை?" மீண்டும் துளைத்தான் தர்மராஜ்.

"பாக்கத்தானே போறே?"

"சொல்ல மாட்டியா?"

லேசாகக் கண்களைச் சிமிட்டி விட்டு சாருமதி சிரித்தாள். அடுத்து "சஸ்பென்ஸ்" என்றாள்.

"உன் சஸ்பென்ஸை எல்லாம் காட்டறதுக்கு கை சொடுக்கியதும் ஓடி வர்ற நாய்க் குட்டி மாதிரி நானும் கிளம்பிட்டேன்."

"தோ பார்ப்பா... நீயே ஏன் ஒன்னை இன்ஸல்ட் பண்ணிக்கறே? நீ ஏன் வந்தே?"

"ஏதோ ஒங்கண்ணா உள்ளூர் பாங்க் மானேஜர் ஆச்சே. ஏதாவது லோன் சாங்ஷன் பண்ணுவாரே... அதுக்கு நீ ரெகமெண்ட் பண்ண மாட்டியான்னு வந்தேன்!"

ஜங்ஷன் மேம்பாலம் வந்து விடவே அவள் ஆட்டோவிலிருந்து முதலில் இறங்கினாள். ஆட்டோக்காரரிடம் காசைக் கொடுத்துவிட்டு அவன் அடுத்து இறங்கினான்.

"நெஜம்மா சொல்லு... நீ அதுக்காக மட்டும்தான் நான் கூப்பிட்டதும் வந்தியா?"

தர்மராஜ் அவளது விரிந்த விழிகளை உற்றுப் பார்த்தான்.

அருள் வாக்கு



ஜலத்துக்கு நிறைவு சமுத்திரம். டம்ளரில், செம்பில், குடத்தில், அண்டாவில், கிணற்றில், குளத்தில், நதியில் என்று ஒன்றைவிட ஒன்று ஜாஸ்தியாக இருக்கிற ஜலம் கடைசியில் சமுத்திரம் என்று முடிகிறது. இப்படியே ஞானத்துக்கும், கிருபைக்கும் நிறைவான சமுத்திரம் பராசக்தி. நமக்குக் கொஞ்சம் அறிவு, கொஞ்சம் அன்பு இருக்கிறது. பிராணிகளுக்கு நம்மைவிடக் குறைவு. நம்மைவிட ஜாஸ்தி அறிவுள்ள, ஜாஸ்தி கிருபா சக்தி உள்ள தேவ ஜாதிகள் இருக்கின்றன. நம்மிலேயே மஹான்களானவர்கள் மகா ஞானிகளாக, பரம காருண்யத்தோடு இருக்கிறார்கள். இந்த ஞானம், கிருபை பூரணமாக நிறைந்த இடத்தைத் தான் ஸ்வாமி, பரமாத்மா, பராசக்தி என்று சொல்வது.

எல்லாவற்றையும் அறிகிற ஞானம் அது; அறிகிறது மட்டுமில்லை, அறியப்படுகிற எல்லாமுமே அதுதான். அதற்கு வேறாக இன்னொன்று இருந்து, அதை இது அறிகிறது என்றில்லை. அப்படி இன்னொன்று இருப்பதற்கு இடம் இருந்து விட்டால், இது எங்கும் நிறைந்த பூரணம் ஆகாது. இன்னொன்று

அவற்றில் எந்த உட்பொருளும் இல்லை. காரணமற்ற உல்லாசம் தவிர.

மழை துரத்துவது போல் பாய்ந்து வந்த பெருங்காற்று சட்டென்று நின்று விட்டது. இடிமுழக்கம் இடம் மாறிவிட்டது.

ஆட்டோக்காரர் போய் விட்டார்.

இருவரும் இடம் பொருள் மறந்து மேம்பாலம் ஏறாமல் நின்றனர். ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு.

ஜங்ஷனில் அது எந்த ரயிலும் வராத நேரம். போக்கு வரவு இல்லை. ஒரு தெரு நாய் முதல் படிக்கட்டில் சுருண்டு படுத்திருந்தது.

"ஏன் என்னை அப்படிப் பார்க்கிறே?" என்று சாருமதி கேட்கக்கூடியவள்தான். ஆனால் கேட்கவில்லை.

வழியெல்லாம் வயல்கள். காற்றில் குதூகலித்த பயிர்கள். சலசலத்த மரங்கள். உற்சவ வெடிகள் போல் கேட்ட, ஆங்காங்கே அறைந்து மூடிய கதவு ஜன்னல்கள்.

எல்லாமே அவனை எதையோ சமர்ப்பிக்கச் சித்தமாக்கியது போல் ஒரு மனோநிலை.

அவளை அவன் வெகு சுலபமாகத் தொட்டிருக்க முடியும். இடையில் கைகோத்து அருகே இணைத்து மோவாயில் கை வைத்து நிமிர்த்திக் கண்ணுக்குக் கண்ணான நேர்பார்வையில் பார்த்துக் கொண்டே அந்தச் செய்தி

துளித்துளி இருந்துவிட்டால் கூடச் சரி, இதற்குக் குறைதான்– இது அந்தத் துளியில் இல்லாததால் இது பூரணமில்லை, நிறைந்த ஒரே நிறைவில்லை என்று தானே அர்த்தம்? இதனால் என்ன முடிவாகிறது என்றால், பரமாத்மாவைத் தவிர அறியப்படுகிற வஸ்து என்று இரண்டாவது பதார்த்தமே கிடையாது என்பது தான்.

அப்படியானால் இத்தனை ஜீவாத்மாக்கள் வேறு வேறாக இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறோமே இது என்ன? இது ஒரு பெரிய வேஷம்தான், மாயா நாடகம்தான். வேஷம் கலைந்து விட்டால், நிறைந்த நிறைவான ஒன்றே ஒன்றுதான், அதுவே அறிவாக நிற்கும். 'சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே' என்று தாயுமான ஸ்வாமிகள் சொல்கிற அறிவு! அது பூரணமானதால், அதனால் அறியப்பட வேண்டிய வஸ்து என்று வேறு எதுவுமே இல்லை. தன்னையே அறிந்து கொண்டிருக்கிற அறிவு அது.

இப்படி இரண்டாவதாக வேறே இல்லாமல் ஜீவாத்மாவை அந்தப் பரமாத்ம சமுத்திரத்தில் கொண்டுபோய்க் கரைப்பதுதான் வாஸ்தவமான நிறைவு.

-ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

யைச் சொல்லி இருக்க முடியும்.

சூழ்நிலையும், முன்னிரவும் ஆட்டோப் பயணமும் வழங்கிய அந்த சுதந்தரத்தை அவள் அனுமதித்திருப்பாள். மறுத்திருக்க மாட்டாள். அறிவான்.

ஆனால் அவன் விலகியே நின்றான்.

அந்த இடைவெளி கௌரவமானது. தொழுகைக்கு உரியது என்று அவன் நினைத்தான்.

"சாரு..."

''ம்ம்ம்'' மேலே முன்னேறிச் சொல்ல வந்ததைச் சொல்லு என்பது போல், நிஷ்களங்கமாகக் கண்ணைச் சிமிட்டிக் கொண்டு அவள் சிரித்தாள்.

நிரம்பி வழிந்து மோதித் ததும்புகிற மேட்டூர் அணையின் மதகு திறக்கிற பொறுப்பு இருப்பது போல் அவனுக்கு மேல் மூச்சு வாங்கியது.

"ஒண்ணும் சொல்லாதே! பேச வேண்டாம்" தர்மராஜ் திணறினான்.

சாருமதி அவனுடைய திண்டாட்டத்தை கண்டு ரசிப்பது போல் வாய்விட்டு ஆனந்தமாகச் சிரித்தாள்.

இவள் தன்னைப் பரிகசிக்கிறாளோ? ஏதோ விளையாட்டுப் பொருள் என்று நினைக்கிறாளோ? இல்லை, இது முற்றிலும் குழந்தைத்தனமா?

தேவையில்லாத சந்தேகம் குறுக்கிட்டது. எதுவாய் இருந்தாலென்ன என்று ஓர் ஆவேசத்தில் அது ஓடி மறைந்தது.

"நீ என்னை வேணாம்னு கூடச் சொல்லிடு. மறுத்திடு. திட்டு. கோவிச்சுக்கோ."

சாருமதியின் ஆனந்தம் தடைப்படவில்லை. அந்த சிவந்த உதடுகளிலும் கறுத்த கண்களிலும் ஒரு துல்லியமான மகிழ்ச்சியில் திளைக்கிற நிறைவு தெரிந்தது.

"நான்.... நான் உன்னை எவ்வளவு எவ்வளவுண்ணே சொல்ல முடியாத அளவு நேசிக்கிறேன்."

காட்டுத் தீ அனல் ஜ்வாலையாக உயர்ந்து நிற்கும்போது அதைக் கண்டு பயமில்லாமல் ரசிக்கிற குழந்தை போல் அவனைப் பார்த்து சாரு சப்தமின்றிச் சிரித்தாள்.

இப்போது எல்லாமே சுலபம். விரல் மீட்டிய வீணையின் கம்பிகள் நெகிழ்ந்திருக்கின்றன. விரும்பிய ராகத்தை வாசித்து விடலாம்.

ஆனால் இந்தத் தருணம்?

இச்சைகளின் சாம்பல் மீது நின்று ஆடும் இந்தச் சுடரின் ஒளி?

"முடிஞ்சாச்சு" என்று சகஜமாகக் கேட்டு அவனை மீட்டு விட்டாள் சாருமதி.

அவள் முகத்தில் வருத்தம் கலந்த ஒரு மகிழ்ச்சிப் பிரவாகம். ஏதோ பெரிய வெகுமதி பெற்று இதற்கு நான் தகுதியா என்கிற ஆச்சரியம்.

முதல் ஏற்றத்தில் ஹரி பாவா உட்கார்ந்திருந்தார். தலையில் வட்டத் தொப்பி. பாதி மார்பு வரை படர்ந்து மூடிய வெள்ளைத் தாடி.

இருவரையும் பார்த்தார். தம்பதிகளாக வந்திருக்கிற பேரக் குழந்தைகளைப் பார்த்துக் களிக்கிற முகபாவம்.

ஹார்மோனியப் பெட்டி அசைகிறது. விறுவிறுவென்று விரல்கள் ஓடி விளையாடுகின்றன.

'அபுதேரசிவா கௌன்ஹமாரா கிருஷ்ண கன்னையா' பழைய ஹிந்திப் பாட்டு. புது ஜீவன் பெற்றது போல் ஒரு நயம்.

இருவரும் நின்றனர்.

"இன்னொரு பாட்டு" சாருமதி கேட்டாள்.

"சொப்பன வாழ்வில் மகிழ்ந்து"

ஹரி பாவா பாடவில்லை. ஹார்மோனியம் ஒலித்தது.

மெய்ம்மறந்து இருவரும் கேட்டனர்.

"எல்லாம் பழைய பாட்டுத்தானா?" சாருவே கேட்டாள்.

ஹரிபாவா வெள்ளைப் பல் தெரியச் சிரித்தார். தலையசைத்தார்.

"வேற ஒரு பாட்டு? காதல் பாட்டு?"

"வள்ளிக்கணவன் பேரை வழிப்போக்கர் சொன்னாலும் உள்ளம் குளிருதடி" விரல்கள் தேர்ந்த கலைஞர்தான் என்று அடித்துப் பேசின.

சாருமதி ஐந்து ரூபாய் நோட்டை நீட்டினாள்.

ஹரிபாவா புன்முறுவலும் வினயமும் மின்ன மறுத்துத் தலையசைத்தார்.

"அதிகமா வேணுமா?" தர்மராஜ் கேட்டான்.

"அம்பது பைசா போதும். ஒரு டீ"

அப்போது ஜங்ஷனுக்கு வெளியே டீக் கடைகளில் அதுதான் டீயின் விலை.

"இதிலே பத்து டீ வருமே?"

"இப்ப ஒரு டீ போதும்"

ஐம்பது பைசாவைத்தான் ஹரிபாவா வாங்கிக் கொண்டார்.

"விநோதமான ஆள்" என்று மேம்பாலத்தில் நடக்கும்போது சாருமதி சொன்னாள்.

தர்மராஜ் மௌனமாய் நடந்தான்.

அன்று அவர்கள் வழியனுப்ப வந்தது ஓடிப்போகும் ஒரு காதல் ஜோடியை. பெண், சாருமதியின் கல்லூரித் தோழி. ஜாதி அந்தஸ்து என்று பெற்றோர்களிடையே பெரிய முரண்பாடு. சாருமதியை ஜங்ஷனுக்கு வரச் சொல்லியிருந்தாள் தோழி. வாழ்த்துக் கூறி பரிசு கொடுத்தாள் சாருமதி.

'நீயும் என் கேஸா?' என்பது போல் அந்த ஆண் தர்மராஜைப் பார்த்தான்.

வேதனையும் இரக்கமும் தொனிக்கிற ஒரு சிரிப்பை உதட்டுக்குள் நிறுத்திக் கொண்டான் தர்மராஜ்.

அவர்கள் ஏறிய ரயில் போய் பதினைந்து நிமிஷங்கள் சாருவும் தர்மராஜும் ஜங்ஷனின் மர பெஞ்சில் உட்கார்ந்திருந்தனர்.

பேசவில்லை.

பேச்சு அவசியமில்லாதது போல் ஒருவரை ஒருவர் புன்னகையோடு பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தனர்.

"போவோமா?" என்று சாருமதி எழுந்தாள்.

"போவோம்" அவன் தொடர்ந்தான்.

கல்லூரி விடுமுறை முடிந்து சாருமதி கல்லூரிக்குத் திரும்பிப் போனாள்.

காத்திருந்தான்.

பாங்க் மானேஜருக்கு மாறுதல் உத்தரவு- தெற்கே வெகு தொலைவில். வழியனுப்பி வைத்தான்.

பிறகும் தர்மராஜ் காத்திருந்தான்.

சாருமதியிடமிருந்து ஒன்பது மாதம் வரை ஒரு தகவலும் இல்லை.

எனினும் ஒரு நம்பிக்கை. காத்திருந்தான்.

திடீரென்று ஒருநாள் ஒரு திருமணப் பத்திரிகை. எவனோ ஒரு மெரைன் எஞ்சினீயருக்கும் சாருமதிக்கும் அடுத்த வாரம் திருமணம்

"சர்வர் காபியில இரண்டு ஈ இருக்கு...."

"COFFEE- ல இரண்டு ஈதான் சார் இருக்கணும். இல்லைனா அது ஸ்பெல்லிங் மிஸ்டேக்காயிடும்!"

- பா. ஜெயக்குமார்

என்ற பளபளப்பான அட்டையில் வந்த அழைப்பிதழ். வெகு நேரம் அதை வெறித்துப் பார்த்தான்.

அன்று அவன் ஜங்ஷனுக்கு வந்தான். ஹரிபாவா ஹார்மோனியம் வாசித்தார். வெகு நேரம்.

அவன் முகத்தில் என்னமோ அவருக்குப் புரிந்திருக்க வேண்டும். பரிவும் பிரியமும் கலந்த ஒரு சிகிச்சை செய்கிற புன்னகையோடு வாசித்தார்.

அன்றும் அவன் ஐந்து ரூபாய் நோட்டை நீட்டினான். மறுத்தார்.

"ஐம்பது பைசா"

"ஏன் அதிகமா வாங்கிக்க மாட்டேங்கிறீங்க?"

"அதிகமா வாங்கினா எதிர்பார்ப்பு அதிகமாயிடும். ஆசை வரும். சந்தோஷம் போகும்."

ஹரிபாவா சுருக்கமாகச் சொன்னார். சட்டென்று நாகேஸ்வரராவ் நடித்த தேவதாஸிலிருந்து 'துணிந்தபின் மனமே நீ துயரம் கொள்ளாதே' பாட்டை ஹார்மோனியத்தில் வாசித்தார்.

பின்பு சிரித்தார். பெயர் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

"ஹரிபாவா... நீங்க காதலிச்சிருக்கீங்களா?"

அவர் அதற்கு ஹார்மோனியத்திலேயே பதில் சொன்னார்.

"காதலே... தெய்வீகக் காதலே" - பாதாள் பைரவிப் பாட்டு.

ஐம்பது பைசாவைக் கொடுத்தபின் எழுந்து தர்மராஜ் மேம்பாலத்தின் மேலும் கீழும் இரண்டு முறை நடந்தான்.

இழந்தது போன்ற உணர்வு மாறிவிட்டது.

சாருமதியின் மீது கோபம் வரவில்லை. ஏமாற்றமில்லை.

ஒரு பெண்ணிடம் இப்படித் தன்னை நூறு சதவீதம் சமர்ப்பித்தது குறித்து வெட்கமோ வருத்தமோ இல்லை.

எவ்வளவு உயர்வாகத் தன்னை ஒருத்திக்கு வழங்க முடிந்தது? அது விளையாட்டல்ல. பொழுதுபோக்கல்ல. உணர்ச்சி வேகமல்ல.

தர்மராஜ் திருப்தியுற்றான்.

அந்த வருஷம் பட்டாளத்துக்கு ஆள் எடுக்கும்போது தர்மராஜ் போனான்.

அதில் தன்னிரக்கம் இல்லை. ஒரு தோல்வியைக் கொண்டாடும் பேதைமை இல்லை.



தோன்றியது. போனான். தேர்ந்தெடுக்கப்பட்டான்.

ஒவ்வொரு லீவிலும் மேம்பாலம் கடந்துதான் ஊர் வர வேண்டும். அங்கே ஹரிபாவா. அவர் சங்கீதம்.

இதேபோன்று மேம்பாலத்து இரும்பு கர்டரைப் பிடித்துக் கொண்டு தொடுவானம் பார்ப்பது ஒரு சுகானுபவம்.

அவன் வழக்கமான தர்மராஜ் அல்ல என்று சிலர் சொன்னார்கள். அவன் சிரித்துக் கொண்டே மறுத்தான்.

அது உண்மை. அவன் மாறியிருந்தான். கனிந்திருந்தான். எல்லாருக்கும் அது தெரிய வேண்டிய அவசியம்?

தர்மராஜ் சூட்கேஸைத் தூக்கிக் கொண்டு மேம்பாலத்தில் நடந்தான்.

முதல் இறக்கம். ஹரிபாவா முழங்கையால் முகம் மறைத்துப் படுத்திருந்தார்.

"பாவா... பாவா" எழுப்பினான்.

"அடடே, தர்மராஜ்" துள்ளிச் சிரித்துக் கொண்டே எழுந்து உட்கார்ந்தார். "எப்ப வந்தாப்பிலே?"

"இதோ இப்பத்தான்" என்று சொல்லிக் கொண்டே மாட்டியிருந்த தோள் பையிலிருந்து சாந்தினி சௌத்தில் வாங்கிய வட்டத் தொப்பியை எடுத்து அவரிடம் நீட்டினான்.

அதைக் கையில் வாங்கியவர் திருப்பி அவன் தலையில் மாட்டி விட்டு, ஹரிபாவா ஹார்மோனியத்தின் கொக்கியை நீக்கினார்.

"எந்தரோ மஹானுபாவுலு அந்தரிகி வந்தனம்" சரசரவென்று சுருதி சுத்தமாக கிருதி வந்து விழுந்தது.

அவர் எதிரில் சப்பணம் கட்டி உட்கார்ந்தான்.

அவன் கண்மூடித் திளைத்தான். நேரம் மறந்து, மறந்து நிலை மறந்து.

"சார் கொஞ்சம் நகர்ந்து உட்காரக் கூடாதா?" என்று யாரோ சொன்னது கேட்டதும் நடைவழியில் உட்கார்ந்திருக்கிற ஞாபகம் வந்தது.

ஒதுங்கியவாறே நிமிர்ந்து பார்த்தான்.

தலையில் சுமையோடு ஒரு போர்ட்டர். கூட? சாரு. அவனுடைய சாருமதி.

பக்கத்தில் நிற்பவன்தான் அந்த மெரைன் எஞ்சினியரோ?

முதலில் சாருமதிதான் கைகூப்பினாள்.

முகத்தில் அதே மலர்ச்சி. அதே புன்னகைத் தூய்மை. கண் தெளிவு.

அருகில் நின்ற கணவனை அறிமுகம் செய்தாள்.

"இதுதான் என் ஹஸ்பெண்ட் கிரீஷ். தாய் மாமாவும் கூட."

இரண்டாவது வாக்கியத்தில் ஏதோ ஓர் அழுத்தம். மீண்டும் ஒரு புன்னகை. கண் நிறைய மலர்ந்த மல்லிகை போல் அதில் என்ன ஒரு வெண்மை.

கிரீஷ் கைகுலுக்கினான்.

மிகவும் மரியாதை காட்டினான்.

தர்மராஜுக்கு அவன் கண்ணைப் பார்த்த போது கிரிஷுக்கு ஏதோ தெரிந்திருப்பது போல் தோன்றியது. ஒருவேளை அது கற்பனையோ?

"மங்களூர் போய்ட்டிருக்கோம்" சாருமதி சொன்னாள்.

"ஐ ஸீ"

"நீங்க ஊர்ல இருந்து வர்றாப்பிலேயா?"

"ஆமாம். லே லடாக்."

"ரொம்பக் குளிரும் இல்லே" குழந்தை போலக் கேட்டான் கிரீஷ்.

"போர்ட்டர் ரொம்ப தூரம் போய்ட்டாரு" என்று ஞாபகமூட்டினாள் சாருமதி.

"ரெண்டாவது பிளாட்பாரம்தானே. நானும் வர்றேன்" என்று தர்மராஜ் ஸூட் கேஸை ஹரிபாவாவிடம் வைத்துவிட்டு உடன் நடந்தான்.

சாருமதி போர்ட்டரின் பின்னே நடந்தாள். பின்தொடர்ந்து கிரீஷும், தர்மராஜும். ஏதாவது பேச வேண்டுமே!

ரயில் பயணம். வட இந்தியர்கள். எல்லைப் பாதுகாப்பு. கப்பல் பயணங்கள்.

படியிறங்கி பிளாட்பாரம் வருவதற்குள் ஒரு மாதிரி கிரீஷும் தர்மராஜும் நெருங்கியிருந்தார்கள்.

முதல் வகுப்பு வெய்ட்டிங் ரூமில் பெட்டிகளை வைத்துவிட்டு போர்ட்டர் போனான்.

சாருமதி டாய்லட் போனாள்.

இருவரும் வெளியே வந்தனர்.

"தர்மராஜ் யூ ஆர் கிரேட்!" என்று திடீரென்று கிரீஷ் அவன் கையைப் பிடித்தான்.

பளிச்சென்று தர்மராஜுக்குப் புரிந்து விட்டது. சாருமதி எல்லாவற்றையும் இவனிடம் சொல்லியிருக்கிறாள்.

"உங்களை நேருக்கு நேராப் பார்க்கிற வரையில் எனக்கு நம்பிக்கையில்லே... யூ ஸீ... நானும் சாருமதியும் பிறந்தவுடனே நிச்சயிக்கப் பட்டவங்க."

அவன் கைகுலுக்கினான்.

அது அவன் ஆண்மைக்கோ, அதனிலும் மேலான ஒரு மேன்மைக்கோ தந்த வெகுமதி போல் தர்மராஜுக்குத் தோன்றிற்று.

சாருமதி சாதித்திருந்த மௌனத்தில் சொல்லில் வராத ஒரு சோகம் இப்போது அவனுக்குப் புலப்பட்டது.



இவை கதைகள் அல்ல; கட்டுரைகள் அல்ல; சிந்தனைச் செதுக்கல் என்று சொல்வதைவிட, நெருடும் நிகழ்வுகளை முன்னிறுத்திய சுட்டிக்காட்டல்கள்!

பெரும்பாலும் நடுத்தர வர்க்கத்தின் அவலங்களை, பெண்ணின் மனநிலையில் வருடிய பார்வை; எனினும் நடுநிலையான நியாய உணர்வுடன் அலசிய பான்மை!

பிச்சையெடுக்கும் பெண்ணை அதற்குத் தூண்டுவது யார் என்பதில் தொடங்கி, நம்மை ஆட்டி வைக்கும் சினிமா மாயை, தனியார் பள்ளி மோகம், பெண்களைக் கிண்டல் செய்யும் அநாகரிகம், திருமணமான ஆண்களை, சில இள மங்கையர் வளைத்துப்போடும் சாகசம், கானாப்பாட்டு ஆபாசம், வதந்திகளின் வக்கிரங்கள், குழந்தைகளை அடிக்கும் கொடுமை, குழு நடனக் கேவல அசைவுகள், வளரும் வன்முறை, தொலைக்காட்சி அபத்தங்கள், திருமணத் தோல்விகள் என்று பல சமுதாய உறுத்தல்களை- ஏற்கனவே நமக்குத் தெரிந்தவைதான் என்றாலும்- பட்டவர்த்தனப் படுத்தி, வகுத்துப் பகுத்துத் தொகுத்துத் தந்திருக்கிறார், சுமதி.

பிரச்னைகளின் அகராதியோ என்றும் எண்ணத் தோன்றுகிறது! நம்மைப் பாதித்தவை எழுத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. வருணனை இல்லாமல், கிளுகிளுப்புகள் இல்லாமல், சொகுசு இல்லாமல், ஆனால் "இதுதான் உண்மை" என்னும் தெம்போடு, துணிச்சலோடு எழுதி இருப்பதால் சுமதி பாராட்டுக்குரியவர்!

"கோபப்படுவதற்கும் ஒரு பயிற்சி வேண்டும்!" என்கிறார். உண்மைதான்! 'ஏன் புயல்?' என்று வானிலை மீது நம்மால் சினங் கொள்ள முடியாதே! 'மீசை முளைத்து விட்டது என்று ஒரு இளைஞனுக்கு சடங்கு செய்வீர்களா?' என்று கேட்பது முதல், "பிறரிடம் கண்ணீர் சிந்துவதிலும் பெண்கள் கவனமாக இருக்க

பார்வைக்கு வந்தவை

● ஜோதி வழியில் வள்ளலார் /Sakithya Shodh Sansthan, 8A/141, W.E.A. Karol Bagh, New Delhi - 110 005/ ரூ.360/-

தொழிலதிபர் நா.மகாலிங்கம் தேர்ந்தெடுத்த 250 திருவருட்பாக்கள் தமிழிலும் ஹிந்தியில் அதன் ஒலி வடிவிலும் மொழி பெயர்ப்பிலும் இடம் பெற்றுள்ளன. மொழி பெயர்ப்பாளர் டாக்டர் ஆர்.கே.சேத், ஏற்கனவே பல பண்டைத் தமிழ் இலக்கியங்களை ஹிந்திக்கு அறிமுகப்படுத்தியவர்.

● விலங்குகள் பேசினால் /கி.சுந்தர்ராஜ்/ SUNRAYS PROMOTIONS, No.145-A, Jalan Sultan Abdul Samad, 50470, Kualalumpur, Malaysia / $. 10.00

சிறுவர்களுக்கான நூல். அச்சு அமைப்பும் இடம் பெற்றுள்ள வண்ணப்படங்களும் கண்ணைக் கவர்கின்றன.

● வாழும் நெறி / டாக்டர் ஆர்.எ.சுப்பிரமணியன்/ ஸ்ரீசெந்தில் பதிப்பகம், 78-A, காங்கிரஸ் ஹவுஸ் ரோடு, புதுப்பேட்டை, குடியாத்தம்- 632 602/ரூ.37.00.

பழந்தமிழ் இலக்கிய உதாரணங்களுடன் நெறியோடு இயைந்த வாழ்க்கைக்கான அவசியம், வழிமுறைகளைக் கூறும் நூல்.

● சட்டமன்றம் ஓர் அறிமுகம் /க.பழனித்துரை/ நியூ எட் பதிப்பகம், த.பெ. எண்.8, 124, என்.ஜி.ஒ காலனி, திண்டுக்கல் - 624 009/ ரூ.30.00

சட்டசபைச் செயல்பாடுகள், எம்.எல். ஏக்களின் கடமை, நடைமுறை பிரச்னைகள், ஜனநாயகம் என்று பல விஷயங்கள் பற்றிப்

வேண்டும்'' என்று சொல்வதுவரை எல்லாமே பயனுள்ள கருத்துக்கள்தாம்!

காதல் என்னும் பெயரில் ஏற்படும் பலவீனங்களைச் சாடியிருப்பது 'ஒரு தொண்டு' என்றே போற்றப்பட வேண்டும்! சோதிடப் பிதற்றல்களைக் கண்டிக்கிறார். முதியோர் பிரச்னைகளைத் தொட்டிருக்கிறார். 'தற்கொலை'களைப் பரிசீலனை செய்வதோடு தடுக்கும் முறைகளை முன் வைக்கிறார்.

இந்த நூலின் முன்னுரை சுமதியை 'எழுத்தில் வழக்கறிஞர்' என்கிறது. நான் அப்படி நினைக்கவில்லை! (வாதங்கள் ஒருதலைப்பட்சமாக இல்லாததால்.)

நோய் நாடி, நோய் முதல் நாடும் சமுதாய மருத்துவர்களின் வரிசையில் இந்த நூல் சேர்க்கப்படலாம். நடுத்தர வகுப்பு 'ஸ்பெஷலிஸ்ட்' என்றும் சொல்லலாம்! மருந்து கொடுத்தார் என்று முழுமையாய்ச் சொல்ல முடியாது எனினும், பத்தியங்களைப் பரிந்துரைக்கிறார். காரணங்களைக் கண்டு பிடிப்பதில் ஒரு டாக்டர் வல்லவராயிருப்பதும் தேவைதானே! அவ்வகையில் தேறிய சுமதி, சில யோசனைகள், சில ஆதங்கங்கள், சில எதிர்பார்ப்புகள், சில அறிவுரைகள் என்று தன்னையே கரைத்து, தன் உணர்வுகளை இழையோட விட்டிருப்பதை நாம் கவனிக்காமலிருக்க முடியாது.

வாசகர்களுக்கு இந்த நூல் ஒரு கண்ணாடியைத் தரும்; முகம் பார்த்துக் கொள்ள! ஒரு அடையாள அட்டையை வழங்கும்; சமுதாய ரேஷனில் நல்ல ஒழுக்கத்தைப் பெற்றுக் கொள்ள!

மீசை முளைத்ததற்கு சடங்கு செய்வீர்களா?

- நிர்மலா சுரேஷ்

ரௌத்திரம் பழகு/ 'துக்ளக்' சுமதி/ அல்லயன்ஸ் கம்பெனி, 244, ஆர்.கே.மடம் சாலை, மயிலாப்பூர், சென்னை - 4. / ரூ.56.00

பேசும் நூல் (மைக் எறிதல், வேட்டி உருவுதல் பற்றி ஏதும் இல்லை.)

● மோகவில்/ ஏ.நடராசன்/ வானதி பதிப்பகம், சென்னை - 17/ ரூ.65.00

''அவர் கதைகள் அமெரிக்காவில் தான் நடக்கும். நிச்சயம் இரு கதாநாயகிகள் இருப்பார்கள். காதல் மோதல் - சுபம். கதையைப் பற்றிக் கவலைப்படாமல் நடை அழகுக்காகவே படித்துக் கொண்டு போகலாம்'' என்கிறார் அ.மா.சாமி, முன்னுரையில். சரியான விமர்சனம்!

● ஒரு வித்தகனும், ஆயிரம் வீணைகளும்/ கவித்தா சபாபதி/ திருமகள் நிலையம், 55. வெங்கட் நாராயணா ரோடு, சென்னை-17/ ரூ.15

நதிகள் அழகானவை
எனில்
நதிகளை நான்
பாடவில்லை.
நதிக்கரைகளைப் பாடுகிறேன்.

சில இடங்கள் சிலாகிக்கும்படி உள்ள புதுக்கவிதைகள்.

● பொய்த்திரை/ கா.சு.வேலாயுதன்/ குமரிப் பதிப்பகம், 8. நீலா தெற்கு வீதி, நாகப்பட்டினம்-611 001/ரூ.25.00

சமுதாயப் பார்வையுடன் எழுதப்பட்ட தரமான சிறுகதைகள்.

● வைரமுத்துவின் திரைப்பாடல்களில் கற்பனை வளம் / தங்க செந்தில் குமார்/ செழியன் பதிப்பகம், 110. நிர்மலா நகர், புதுக்கோட்டை சாலை, தஞ்சாவூர்- 613 007/ ரூ.20.00

ஆய்வுக் கட்டுரைகள்.

சில முரண்பாடுகள்

போட்டிக்கதை-12

"ஏம்மா! எல்லாரும் கௌண்டரை மூடி விட்டு வாங்கம்மா!"- யூனியன் லீடர் கர்ஜித்து விட்டுச் சென்றார்.

"எதுக்குப்பா? இன்னும் ஒரு மணி நேரம் இருக்கே! இப்பவே க்யூ பெரிசா இருக்கு. எப்படி அப்ட்ரப்டா விட்டுட்டுப் போவது?"

ஒருவருக்கொருவர் கசமுசத்துக் கொண்டிருந்தபோதே, யூனியனின் வால் ஒன்று வந்து, "கௌண்டர் க்ளோஸ்டு" போர்டுகளை வைத்தபடி இருந்தது.

நாங்களும் வேறு வழியின்றி பணத்தைப் பூட்டிவிட்டு, எங்களைக் கேள்விக் குறியுடன் பார்க்கும் பப்ளிக்கின் கண்களைத் தவிர்த்துவிட்டு, சீஃப் ரூமிற்குச் சென்றோம்.

சீஃப் சேமபர் அருகே அமர்ந்தோம். முதல் வாரம் ஆதலால் வாடிக்கையாளர் கூட்டம் அதிகமாக இருந்தது. எங்களுக்குத்தான் மிகவும் பதைபதைப்பாக இருந்தது. எந்த வாடிக்கையாளர் புகார் புத்தகத்தில் எழுதப் போகிறானோ என்று.

"எதற்காக இந்த அமைதிப் போராட்டம்பா?" நான் திவ்யாவைக் கேட்டேன்.

"ஓ! தெரியாதா! நம்ப ஆபீஸ்ல தற்காலிகமா வேலை செய்துண்டிருந்தாங்களே, அவர்களை நிரந்தரமாக்குவதற்காக ட்ரெயினிங் போய்விட்டு வந்தார்களில்லையா? அவர்களுக்கு வேற சிட்டி டிவிஷனில் அப்பாயிண்ட்மெண்ட் போட்டிருக்கு. நம்ப ஆபீஸ்லேயே போஸ்டிங் கிடைக்கலியாம். அதான் காரணம்."

"என்னது! அதற்கா இந்தப் போராட்டம்? என்னப்பா இது! வேலைக்கு வரும் போது இந்தியாவிற்குள் எந்த இடத்திலும் வேலை செய்வோம்னு அன்டர்டேக்கிங் குடுத்து விட்டு, இப்படி செஞ்சா நல்லாவா இருக்கு? அதுவும் இதே சிட்டிக்குள்ள தானே? அங்க நிக்கற பப்ளிக்கோட போராட்டத்தைப் புரிஞ்சுக்க மாட்டேங்குறாங்களே?"

"ஸ்ஸ்ஸ்.... மெல்ல! சும்மா இருக்க மாட்டே?" திவ்யா என்னை அதட்டினாள்.

அப்படி இப்படி ஒரு மணி நேரம் போயிற்று. ஒவ்வொருவராகச் சேம்பரை விட்டு வரத் தொடங்கினர்.

"என்ன சார் ஆச்சு?"

"சர்க்கிள் ஆபீஸுக்குத் தொலைபேசியில் பேசினாராம் சீஃப். பதில் இன்னும் சில நாட்களில் தெரியும் என்றார்கள்."

நாங்கள் கௌண்ட்டருக்கு வந்தோம். அதிகாரி எங்களைப் பணத்தைச் சரி பார்த்து, அன்றைய கணக்கை டேலி செய்து சீக்கிரம் முடித்துத் தருமாறு பணித்தார். வாடிக்கையாளர்களின் அதிருப்தியை ஒருவராக இருந்து சமாளித்ததால் வந்த எரிச்சல் அவர் குரலில் ஒலித்தது.

சில நாட்களில்....

அனைவருக்கும் மெமோ வந்தது. ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் போவதாகவும், உங்கள் விளக்கத்தை மூன்று நாட்களுக்குள் தரும்படியும் அதில் போட்டிருந்தது.

யூனியனே அனைவருக்குமான பதிலை எழுதி டைப் செய்யப்பட்ட காப்பியை எல்லாருக்கும் கொடுத்தது. அதில் கையெழுத்துப் போட முனைந்த எனக்கு, அந்த விளக்கம் வியப்பாக இருந்தது. அதில் எழுதியிருந்த வாசகம் இதுதான்.

அந்த சமயத்தில் நான் காபிடீ சாப்பிட மட்டுமே வெளியே சென்றதாகவும், அதனால் என்மேல் எடுக்கப் போகும் ஒழுங்கு நடவடிக்கையை கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுவதாகவும் எழுதியிருந்தது!

"என்னப்பா இது! முழு பூசணிக்காயை சோத்தில் மறைக்கறான்"

"என்ன பண்ணா என்ன? கையெழுத்துப் போட்டுக்குடு!"

நான் மெதுவாக அந்த விளக்கத்தை கிழிக்க ஆரம்பித்தேன்

"ஏய்! என்ன பண்ற?" திவ்யா படபடத்தாள்.

"இதப்பாரு திவ்யா! போராட்டமா [illegible] இருக்கக்கூடாது [illegible]

செய்த காரியத்தை நியாப்படுத்தவும் இல்லை; பண்ணவே இல்லன்னு வேற சாதிச்சா...? நான் தனியா மன்னிப்பு கேட்டு எழுதப் போறேன்."

"ஏண்டி, எல்லாருடனும் ஒத்துப் போக மாட்டேங்கறே?" திவ்யா, ஆதங்கத்துடன் கேட்டாள்.

"லுக் திவ்யா! போராட்டத்துல கலந்துக்கலன்னாதான் யூனியன் என்னைத் திட்டும். இந்த ஆபீஸ்ல யாரும் ஏன் கேள்வியே கேட்க மாட்டேங்கறான்னு தெரியல! நாளைக்கு நம்மை ஏதானும் தண்ணியில்லா காட்டுக்கு அனுப்பிச்சா என்ன பண்றது? யூனியன் மூலமாதானே காரியத்தை சாதிச்சுக்கணுங்கற பயமா? ஒண்ணு போல இந்த ஆபீஸ்ல



இருக்கற அத்தனை பேருக்கும் இதே பயமா? இல்லை யூனியன்தானே செய்யத் தூண்டியது; அது குடுக்கற பதிலே போதும்கற மெத்தனமா? எனக்குப் புரியலை."

"பாவம்னு தெரிஞ்சுண்டே ஏன் இந்த முறை மட்டும் கலந்துண்டே?"- திவ்யா நக்கலாகக் கேட்டாள். இந்தமுறை மட்டும்- என்பதை சிறிது அழுத்தமாகச் சொன்னாள்.

ஆம். நான் இருமுறை யூனியன் செய்வது சரியில்லை என்று என் மனதுக்குப் பட்டபோது, போராட்டத்தில் கலந்து கொள்ளாமலும் இருந்திருக்கிறேன்! அதற்காக மறைமுகமாக மிரட்டப் பட்டுமிருக்கிறேன்.

"இதப்பாருப்பா! நானும் மனுஷிதானே! ஒவ்வொரு முறையும் ஆட் ஃபிகரா வித்தியாசமா இருக்கிறது கஷ்டமாக இருக்கு. செஞ்சது தப்புதான். செஞ்ச தப்புக்கான தண்டனையை ஏத்துக்க நான் தயார்ங்கறதைத் தடுக்க யாருக்கும் உரிமை யில்லை."

மடமடவென்று மன்னிப்புக் கடிதம் எழுதி அதிகாரியிடம் கொடுத்துவிட்டு வந்தேன்.

ஒரு வாரத்தில் அனைவருக்கும் பதில் வந்தது. கொடுக்கப் பட்ட விளக்கம் திருப்தியாக இல்லாததால், ஒரு மணிநேரம் செய்யாத வேலைக்காக ஒரு நாள் சம்பளத்தை கட் பண்ணுவதாக!

எனக்கும் வந்தது. செய்த தவறை ஒத்துக் கொண்டதால் இம்முறை எச்சரிக்கையுடன் விடப்படுகிறாய் என்று.

மானஸா
(அறிமுக எழுத்தாளர்)

சசி வாங்கிய சமுத்திரம்! வெளிவரும் திடுக்கிடும் தகவல்!!



ஜெயலலிதாவுக்கு ஜாக்கெட் துணி விற்ற ஒரு வியாபாரிக்கு மைலாப்பூரில் ஒரு பங்களா, ஒரு கோடி ரூபாய் சொத்து இருப்பதாக லஞ்ச ஒழிப்புத் துறையினர் லேட்டஸ்டாகக் கண்டுபிடித்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் மெதுவாக ஒவ்வொரு விஷயமாக வெளிப்படுத்தட்டும். நமது கற்பனையில் ஓர் அதிரடி அவசர ரெய்டு நடத்தியதில் கிடைத்த திடுக்கிடும் இரண்டு விவரங்கள் கீழே:



சென்னை, நவம்பர் 14

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, அவரது முன்னாள் உடன்பிறவா சகோதரி சசிகலாவின் சொத்து விவரங்கள் லஞ்ச ஒழிப்புத் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டு தினம் ஒன்றாகத் தவணை முறையில் வெளியிடப்படுவது தெரிந்ததே. தற்சமயம், அவர்களுக்குச் சேவை செய்த வகையில் கோடீஸ்வரர்களான சிலரைப் பற்றிய திடுக்கிடும் செய்திகள் கிடைத்துள்ளன. விவரமாவது:-

காஜா கன்னியப்பன்

சென்னை, சூளைமேடு பகுதியில் வசிப்பவர் கன்னியப்பன். ஒரு டெய்லர் கடையில் சட்டைகளுக்கு காஜா எடுக்கிற வேலை பார்த்து வந்தார். ஐந்தாண்டுகள் முன்பு சீரணி அரங்கில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் பேச வந்த அன்றைய முதல்வர் ஜெயலலிதாவுடன் தற்செயலாக அறிமுகமானார் இவர்.

எடுக்கவோ? கோர்க்கவோ?

அரங்கில் ஏற வந்த ஜெயலலிதாவின் பூப்போட்ட மேல் கோட்டை, அவர் அருகே வந்து கொண்டிருந்த பாதுகாப்பு அதிகாரி, தன் துப்பாக்கி முனையால் தெரியாமல் இடித்துவிட, காலர்

பட்டன் அறுந்து விட்டது. அப்போது கையில் ஊசி, நூலுடன் தயாராக இருந்த காஜா கன்னியப்பன், விரைந்து சென்று "எடுக்கவோ? கோர்க்கவோ?" என்று "கர்ணன் படத்து துரியோதனன் பாணியில்" கேட்டு, ஜெயலலிதாவின் உத்தரவு கிடைத்ததும், நொடிப்பொழுதில் அந்த ஓவர் கோட்டைத் தைத்துத் தந்ததாகச் சொல்லப்படுகிறது.

பரிசு

இதற்குப் பரிசாக காஜா கன்னியப்பனுக்கு சென்னை வளசரவாக்கத்தில் ஒரு பெரிய குளுகுளு சொகுசு பங்களாவும் இருநூறு தையல் மிஷின்களும் ஒரு பட்டன் பேக்டரியும் ஜெயலலிதா வைத்துத் தந்திருப்பது தற்சமயம் தெரிய வந்துள்ளது. போலீசார் காஜா கன்னியப்பனிடம் புலன் விசாரணை செய்து வருகிறார்கள்.

மன்னார்குடி மன்னார்சாமி

மன்னார்குடியில் உப்பு மண்டி வைத்திருக்கும் மன்னார்சாமி என்பவருக்கு சசிகலா உதவியால் நாகைப்பட்டினம் கடல் பகுதியில் "இருநூறு ஏக்கர் கடல்" பட்டா செய்யப்பட்டு, தரப்பட்டுள்ள அதிர்ச்சித் தகவல் வெளிவந்துள்ளது.

உப்புக்குள் வைரம்!

சசிகலா தமது சொந்த ஊரான மன்னார்குடிக்கு வரும்போதெல்லாம் அவரைக் கண்டு, வணங்கி, ஆசி பெற்றுச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார் மன்னார்சாமி.

கடந்த 1992, அக்டோபர் 28-ஆம் தேதி 'சசிகலா மன்னார்குடி வந்திருந்தபோது, வழக்கம்போல் அவரைக் காணச் சென்ற மன்னார்சாமி, ஒரு மூட்டை உப்பை அவருக்கு அன்பளிப்பாகத் தந்துள்ளார். "உப்பை அன்பளிப்பாகத் தருவதா?" என்று வெகுண்டெழுந்த சசிகலா, அந்த மூட்டையைக் காலால் எட்டி உதைத்ததாகக் கூறப்படுகிறது. மூட்டை பிரிந்து, சிதறியபோது, உப்புக்குள், அவர் ஒரு வைர மாலையை ஒளித்து வைத்துப் பரிசளித்தது தெரிய வந்தது.

300 கேரட்

வைரமாலையைக் கண்ட சசிகலாவின் உள்ளம் துள்ளியது. "ஆ, இது எனக்கா?" என்று மன்னார்சாமியிடம் கேட்க, "ஆமாம். ஏழையின் எளிய பரிசு" என்று அவர் பணிந்து, "முகலாய மன்னர் முன் காவலர் போல" குனிந்து சலாமிட்டு வணங்கி, ஏற்றுக் கொள்ளக் கோரியதாகத் தெரிய வருகிறது.

சசிகலா "பெரிய மனம் கொண்டு" ஏற்றுக் கொண்ட அந்த வைரமாலையைத் தற்போது போலீசார் கைப்பற்றியுள்ளனர். சென்னை நகரின் பெரிய நகை மாளிகை அதிபர்களால் நேற்று பார்வையிடப்பட்ட அந்த வைர மாலை, அவர்களை வியப்படையச் செய்தது. "இது சாதாரண வைரம் அல்ல; "300 கேரட்" மதிப்புள்ள ஏழுலக அதிசயம்!" என்று அவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

200 ஏக்கர் கடல்

இதற்கிடையில் தனக்கு வைர மாலை பரிசளித்த மன்னார்சாமிக்கு, சசிகலா 200 ஏக்கர் கடலைப் பட்டா செய்து தந்த விவரம் வெளியாகியுள்ளது.

நாகையில்

நாகை-காயிதே மாவட்டத்தில் உள்ளது, நாகப்பட்டினம். இங்கே வங்கக் கடலும் உள்ளது. இந்தக் கடலில் 200 ஏக்கர் பரப்புள்ள நீர்ப்பரப்பை சசிகலா, மன்னார்சாமிக்கு "அன்பளிப்பாக"க் கொடுத்துள்ளதாகத் தெரிகிறது.

"சசிகலா கடலையும் முன்னதாகவே வாங்கி விட்டாரா?" என்று நிருபர்கள் காவல் துறையினரிடம் கேட்டபோது, அது பற்றி விசாரித்தபோது, கடலைத் தாம் வாங்க வேண்டிய அவசியமில்லையென்றும் ஏற்கனவே அது தம் குடும்ப சொத்தாக முன்பு தஞ்சையை ஆண்ட "சரபோஜி" மன்னரால் சாசனம் செய்து தரப்பட்ட ஒன்றுதான் என்று சசிகலா தரப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக காவல்துறையினர் சொன்னார்கள்.


கற்பனைச் செய்தியாளர்:

—விடாக்கண்டன்

"அந்த ஆளை ஏன் அடிக்கறாங்க?"

"வீட்டுக்கு ஒரு மரம் வளர்க்கணும்னு சொன்னா, 'அப்ப சின்ன வீட்டுக்கு செடி போதுமா'ன்னு கேட்டாராம்!"

– ஜக்கு



வட்டமேஜை

♦ தேங்கும் தபால்; குவியும் நஷ்டம் தலையங்கம், ஏங்கும் பொது மக்களுக்கு ஒரு ஆறுதலாக அமைந்தது. தலையங்கம் வெளி வந்த அன்றே ஸ்ட்ரைக்கும் வாபசாகி விட்டது. அரசின் பிடிவாதம் தளர்ந்து விட்டது. அத்யாவசியத் துறைப் பணியாளர்கள் பொது மக்களுக்கிழைத்த ஒருவார தீங்கிற்குப் பிறகாவது பொறுப்புணர்ந்து கடமையாற்றுவார்களா?

ஸ்ரீரங்கம், அ. சம்பத்

♦ 25-ம் தேதி பதவியேற்பு... 30-ம் தேதி கல்கியைப் பார்த்தால், களமிறங்கியிருக்கும் மேயர்! மேயரைப் பாராட்டுவதா... கல்கியைப் பாராட்டுவதா?

விராலிமலை, ச. நாகராஜன்.

♦ சுயநலம் மிகுந்துள்ள இந்தக் காலத்திலும் நாராயணன் மாதிரி ஒரு வீர இளைஞர்! இம்மாதிரி ஊருக்கு ஒரு நாராயணன் இருந்தால் நாடு சுபிட்சப் பாதையில் செல்லும். சுயநலமிக்க அரசியல்வாதிகள் அட்டகாசமும் குறையும்!

வேதாரண்யம், இரா. ஜானகிராமன்.

♦ 'மூன்று மாத காலத்திற்குள் மத்திய ஆட்சி காங்கிரசின் கைக்கு வரும்; அல்லது பொதுத் தேர்தல் வரும்' என்று கூறும் குமரி அனந்தன், அழிவின் விளிம்பில் நின்று கொண்டிருக்கும் காங்கிரசை அரியணை ஏற்ற அப்படி என்ன அசுர பலம் கொண்ட ஆயுர்வேத டானிக் வைத்திருக்கிறாராம்?

நெல்லையப்பபுரம், டி. செல்வன்.

♦ நிறைய 'டெக்னிக்கல்' விஷயங்களோடு வெளியிடப்பட்டிருக்கும் புதிய நூறு ரூபாய் நோட்டின் 'வாட்டர் மார்க்' பகுதியில் அரசியல் காரணங்களில் சிக்காத ''தாடிப் பிரபலம்'' யாரும் கிடைக்காத காரணத்தால் தேசப்பிதா காந்தியையே போடும்படி ஆகி விட்டது என்று ரிசர்வ் வங்கியின் மூத்த அதிகாரி அங்கலாய்த்தது ஆச்சர்யம் அளித்தது. தேசியக் கவி ரவீந்திரநாத் தாகூரை எப்படி இவ்வளவு எளிதில் மறந்து போனார்கள்?

மதுரை - 14, எஸ். வைத்தியநாதன்.

பரிசு பெறும் கடிதம்

♦ 3.11.96 இதழில், புதிய நோட்டு பற்றி வெளியான தகவல்களில் ஒன்று விடுபட்டுவிட்டது. புதிய நூறு ரூபாய்த் தாளின் இடது பக்கத்தில் கறுப்பு வண்ணத்தில் வழவழப்பான ஒரு முக்கோணம் அச்சிடப்பட்டுள்ளது. இதைத் தடவிப் பார்த்து, பார்வையற்றவர்களும் 'இது 100 ரூ. நோட்டு' என அடையாளம் காணலாம்!

கோயமுத்தூர், நளினி ராமசந்திரன்

தாகூரை எப்படி மறந்தார்கள்?

♦ அயன்புரம் பொது நலச் சங்கத்தினர் கோரிக்கையின்படி, தமிழக அரசு வனத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் ''நகர அழகு மேம்பாட்டு (வடக்கு) சரகத்தினர்'' முதல் தவணையாக அயன்புரம் கொன்னூர் நெடுஞ்சாலைப் பகுதியில் கடந்த 2.11.96 அன்று தகுந்த பாதுகாப்புடன் 100 மரக்கன்றுகளை நட்டு முடித்துள்ளனர். 'அயன்புரம் பொது நலச் சங்கம்' மேற்கொண்ட முயற்சியோடு 'களத்தில் கல்கி' (1.9.96) கட்டுரை மிகவும் உறுதுணையாக விளங்கி வெற்றி கிட்டியதில் பெரு மகிழ்ச்சி. வனத்துறையினருக்கும் மனமார்ந்த நன்றி.

சென்னை - 23, கே. ராமதாஸ்
செயலாளர், அயன்புரம் பொதுநலச் சங்கம்.

♦ 'படித்ததில் பிடித்ததாக' சாவி அவர்கள் தம் ரசிப்பினை ருசிகரமான வார்த்தைகளால் வர்ணித்த பாங்கு, மனித தெய்வம் காந்தி காதை 5500 பாடல்களையும் இப்போதே படிக்க வேண்டுமென்ற நல்லுணர்வை நல்குகிறது!

இனாம் மணியாச்சி, ச.ஆ. கேசவன்.

♦ இன்டர் நெட்டில் இரா. முருகன் பிடித்தவற்றை வாசித்தேன். கம்ப்யூட்டர் அரிச்சுவடி தெரியாத என் போன்ற பலருக்கும், எளிய காதல் பாஷை போன்று உணர முடிகிற விஷயமாய்ப் பிடிபடுகிறது. ஒரேயடியாய் கம்ப்யூட்டர் குறியீடுகளை இட்டு நிரப்பாமல் எளியனவாயும், அதே நேரம் நகைச்சுவை கலந்தும் தந்திருப்பது வரவேற்கக்கூடியது.

தஞ்சாவூர் - 2, புத்தகன்.

♦ தராசு பதில்களில், ...அது 'டிங்கி' அல்ல; 'டிங்கு' என்று கூறுகிறார். அந்தச் சொல்லின் ஆங்கில உச்சரிப்பு 'டெங்கி'. அதன் மூல மொழி, ஆப்பிரிக்க மொழிகளில் ஒன்றான 'ஸ்வஹீலி'.

சென்னை - 85, ஆர். சுவாமிநாதன்.

♦ ''இந்திர தனுசு'' வர்ண ஜாலங்களைக் காட்டி ஏக்கத்தை ஏற்படுத்தி விட்டு, மறைந்து விட்டது. அன்றைய தமிழக மன்னர்கள் காட்டிய ஒற்றுமை உணர்வை இந்திய முதல்வர்கள் கடைப்பிடித்தால் பாரதம் பாருக்குள் முதன்மை பெறுவது உறுதி! யுவானும், யாங்சினும் கரையில் இருந்தவர்களின் நெஞ்சங்களை விட்டு மட்டுமல்ல, கதை படித்தவர்களின் உள்ளங்களை விட்டும் அகலவே மாட்டார்கள்.

திருவண்ணாதபுரம், தி.சு. பாலசுப்பிரமணியன்.

♦ விஷ்வக்சேனனின் இந்திர தனுசுவில் சோழ மன்னர் துறவியாராக வேடம் பூண்டு கடைசி அத்தியாயத்தில் தனது வேடத்தைக் கலைப்பது கல்கியின் பார்த்திபன் கனவில் சிவனடியாராக வேடம் பூண்டு கடைசிக் காட்சியில் வேடத்தைக் கலைக்கும் பல்லவச் சக்கரவர்த்தி மாமல்லரை நினைவூட்டுகிறது.

சென்னை - 86, கே.எஸ். நாராயணன்.

♦ விஷ்வக்சேனனின் 'இந்திர தனுசு' நாற்பத்தி நான்கு வாரங்கள் சென்றதே தெரியவில்லை. அவ்வளவு விறுவிறுப்பாகவும், சரித்திரச் சுவையுடனும் இருந்தது. ஓவியர் ஸ்யாமின் தூரிகை வண்ணங்கள் தொடருக்கு மேலும் மெருகூட்டின.

ஜலகண்டபுரம், ஆர். ரவிச்சந்திரன்.

இரா. முருகன்

உள்ளே வரலாமா?

12

அப்பா மர ஸ்டூலின் மேல் ஏறி வாசல்களில் மாவிலைகள் கட்டிக் கொண்டிருந்தார்.

''இன்னைக்கே கட்ட வேண்டாம், வாடிப்போயிடும்னு சொன்னா கேட்கவே மாட்டேங்கறேளே....''

உள்ளேயிருந்து குரல் அப்பாவை நோக்கி இவ்வளவு சுருதி உயர்ந்த ஒலித்ததை ஸ்ரீராம் இதுவரை கேட்டதில்லை.

'எல்லாம் கல்யாண டென்ஷன்' என்று நினைத்து புன்னகைத்தபடியே, வழியை அடைத்து ஸ்டூல் போட்டு நின்ற அப்பாவைக் கூப்பிட்டான்.

"அப்பா..."

அவன் குரலைக் கேட்டவர் சின்னப் பையனின் உற்சாகத்துடன் ஸ்டூலிலிருந்து குதித்தார்.

"பார்த்து பார்த்து....'' சுகன்யா நீட்டிய கையைப் பிடிக்காமல் ஸ்ரீராமின் தோள்களைப் பற்றி நிலைப்படுத்திக் கொண்டார்.

''வசந்தி, சச்சு... இங்க பாரு யார் வந்திருக்கான்னு...''

சமையலையிலிருந்து தூக்கிச் செருகிய புடைவையுடன் கோலமாவும் கையுமாக வெளிப்பட்ட வசந்தி "அண்ணா..." என்று ஓடி வர, ஸ்ரீராம் அவளைத் தன் விரிந்த கரங்களுக்குள் அணைத்துக் கொண்டான். அவன் முதுகுப் பக்கம் நீண்ட அவளுடைய இடது கையிலிருந்த மாவுக் கிண்ணம் சாய்ந்து, அவன் கருநீலச் சட்டையை வெள்ளைத் திட்டாக நனைத்தது.

வசந்தியின் கையிலிருந்த மாவுக் கிண்ணத்தையும் கந்தல் துணியையும் சுகன்யா மெள்ள விடுவிக்க, அவள் வளைக் கரங்களின் பிடி அண்ணாவின் முதுகைச் சுற்றி இறுக்கியது.

ஏற்கெனவே பிரிந்து விட்ட ஏக்கத்துடன் புதிதாக நிகழப்போகும் பிரிவின் அச்சுறுத்தலும் அதன் கீழ் இழையோடிய இனம் புரியாத மகிழ்வுமாக முரண் பட்ட உணர்ச்சிகளின் வினோதக் கவலையை வசந்தியின் அந்த அணைப்பு ஸ்ரீராமுக்கு உணர்த்தியது. சுடச்சுட இரண்டு சொட்டுகள் கண்ணீர் அவன் அகன்ற பெரிய விழிகளிலிருந்து வெளிப்பட்டு அவளது உச்சந்தலையில் உதிர்ந்தது. நிமிர்ந்து பார்த்தவளின் உதடுகள் துடித்தன. விசும்பலும் கேவலுமாக அழுகை வெடித்தது.

பார்த்துக் கொண்டேயிருந்த சுகன்யா சற்று அதிர்ந்து போனாள். என்னதான் உணர்ச்சி வசப்பட்டாலும் இவ்வளவு கேவிக் கேவி அழுமளவுக்கு என்ன நடந்துவிட்டது...?

"ஏண்டி! நல்ல நாளும் அதுவுமா இப்படி அழுதுண்டு, மூக்கைச் சிந்திண்டு... அழப்படாது, வசந்தி!" சரஸ்வதி கடிந்து கொள்ள, ராமநாதன் கொஞ்சம் திகைத்துப் போய் நின்றார்.

"வசந்தி! வா... முகத்தை அலம்பிக்கலாம்..." மென்மையாகவும் உறுதியாகவும் அவளை அப்புறப்படுத்தி பின் பக்கம் அழைத்துப் போனாள் சுகன்யா. குழாயடியில் முகம் அலம்பச் செய்தாள். கொல்லைப் படியில் பறித்து வைத்த நித்ய மல்லி அரும்புகளின் அருகே செம்புத் தண்ணீரில் வாழை நார் ஊறிக் கொண்டிருந்தது. படிக்கட்டில் உட்கார்ந்து, தாலிச் சரட்டிலிருந்து பின் எடுத்து லாகவமாய் நாரைக் கிழித்தாள் சுகன்யா. இரண்டு நீள நார்த் துண்டுகளை முடிச்சுப் போட்டு அரும்புகளை



இரண்டிரண்டாக அடுக்கித் தொடுக்க ஆரம்பித்தாள்.

கண்களை அலம்பி வந்த வசந்தி, "ஹை! மன்னி, தொடுக்க கத்துண்டுட்டேளா....?'' என்று கேட்டபோதுதான் சுகன்யாவுக்கு நிம் மதி வந்தது. 'அதெல்லாம் இருக்கட்டும்... நீ ஏன் அப்படி அழுதே...?' என்று கேட்க நினைத்தவள், அந்த எண்ணத்தைக் கைவிட் டுப் பேச்சை மாற்றினாள்.

''மத்தியானத்திலே சும்மாதானே இருக்கேன்... நீ சொன்ன மாதிரி பேப்பரைக் கத்தரிச்சு நூலை கட்டிப் பழகிக்கிட்டேன். அப்புறம் அங்க ஜவஹர்புரத்திலே சாயந்திரம் நாலு மணிக்கு மல்லி அரும்பு விற்பான் ஒருத்தன். அதை வாங்கி தினமும் கட்டுவேன். திடீர்னு ஒருநாள் தானாகவே சரியா கட்ட வர ஆரம் பிச்சிட்டுது...."

"இன்னிக்கு நீங்க கட்டித்தர பூவைத்தான் நான் வைச்சுக்கப் போறேன்..."

சுகன்யா பளிச்சென்று சிரித்தாள். "சரி நீ சொல்லு! எப்ப பொண்ணு பார்க்க வந் தாங்க... பார்த்தவுடனேயே உனக்கு அவனைப் பிடிச்சுடுத்தா....?''

மேற்கே அஸ்தமித்துக் கொண்டிருந்த சூரியனுடன் போட்டி போட்டுக் கொண்டு வசந்தியின் முகம் சிவந்தது.

''ஊம்..." என்றாள் அடங்கிய குரலில்.

"என்ன ஊம்....? பார்த்தவுடனே பிடிச்சுப் போச்சு இல்லே... ஆமாம் வசந்தி, அன் னைக்கு எனக்கு ஒரு போன் பண்ணியிருந்தா நானும் அண் ணாவும் வந்திருப்



தங்க நகை பரிசு

இந்த இருபத்தாறு வாரத் தொடர், ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு கதாசிரியர் பெயரில் வெளியாகி வருகிறது. ஆனால் அவர்களுள் ஒரே ஒரு நபர்தான் இதை எழுதி வருகிறார். தொடரை எழுதியவர் யார் என்பதைக் கண்டுபிடிப்பது உங்கள் சாமர்த்தியம். கடைசி வாரம் வரை காத்திருந்து, அந்த இதழில் வெளியாகும் கூப்பனில் விடை எழுதி அனுப்புங்கள். சரியான விடைக்கு, தங்க நகை பரிசு! பலர் சரியாக எழுதினால் குலுக்கலில் ஒருவரே பரிசு பெறுவார். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

போமில்லையா...? என்னை விடு, அண்ணாவுக்கு எவ்வளவு ஏமாற்றமா இருந்திருக்கும்....?''

''எதுக்குமே நேரமில்லை மன்னி.... மத்தியானம் இரண்டு மணிக்குத்தான் அப்பா சொன்னார். நாலு மணிக்கு அவாத்துலேருந்து எல்லாரும் வருவான்னு... அம்மாவும் நானும் டிபனெல்லாம் தயார் பண்ணினோம். நான் போய் புடைவை மாற்றிக்கிட்டேயிருக்கும் போதே வந்துட்டா எல்லாரும். அம்மா அப்படியே கசங்கின புடைவையோட போய், 'வாங்கோ'ன்னு சொல்லி உட்கார வைச்சா. எனக்கானா புடைவையைக் கொசுவ முடியாம கை உதற ஆரம்பிச்சுருத்து. எப்படியோ சமாளிச்சு ரெடியாகி வந்தேன்.''

''உன்னைப் பாடச் சொன்னாங்களா வசந்தி?...''

''ஐயோ! அதெல்லாம் ஒண்ணுமேயில்லை. அப்பா நமஸ்காரம் பண்ணச் சொன்னார். அதைக்கூட அவா வேண்டாம்னுட்டா...''

''சேகர்கிட்டே பேசினியா...? நீங்க தனியா பேசிக்கிறதுக்கு வாய்ப்புக் கிடைச்சுதா....?''

அதிர்ந்து போய் தலையசைத்து மறுத்தாள் வசந்தி. ''நல்ல காலம் மன்னி.... அப்படியெல்லாம் எதுவும் அவா கேக்கலை. கேட்டிருந்தா நான் ரொம்ப நடுங்கிப் போயிருப்பேன். என்னத்தைப் பேசறது...! வந்தவாளே எல்லாரும் ஒருத்தருக்கொருத்தர் பொதுவான விஷயமா பேசிண்டா. 'எந்த காலேஜ், என்ன சப்ஜெக்ட்'னு, அவ்வளவுதான்... முந்தாநேத்திக்குத்தான் இது நடந்தது. நேத்திக்கு போன் பண்ணி எங்க பையன் சரின்னுட்டான். உங்க பொண்ணு என்ன சொல்றா...ன்னு அப்பா கிட்டே கேட்டிருக்கா. அவரும் சரின்னுட்டார், அப்படியே நிச்சய தாம்பூலத்துக்கும் தேதி வைச்சிட்டா...''

''உனக்கு அவனைப் பிடிச்சிருக்கா... வசந்தி?''

''போங்க மன்னி!'' என்று வெட்கப் பட்டவளைப் பார்த்து சுகன்யாவுக்கு வியப்பு வந்தது. அரை மணி நேர சந்திப்பில் ஒரு திருமணம் நிச்சயமாக முடியுமா? எந்த நம்பிக்கையில் எப்படி நிச்சயமாகிறது?

யோசனையில் சற்று மௌனமானவளை வசந்தி அழைத்தாள்.

''மன்னி...!''

''என்ன...?''

''வந்து... நாளைக்கு நான் வரக்கூடாதாம் நிச்சயதாம்பூலத்துக்கு. கல்யாணம் ஆன பிறகுதான் அவா வீட்டுக்குப் போகலாமாம்...''

''இது என்ன அக்கிரமமா இருக்கு...?''

''இல்லை! சாஸ்திரம் அப்படித்தான்... அதனால நீங்க தான் எப்படியாவது அவரை நாளைக்கு இங்கே அழைச்சுண்டு வரணும்...'' வெட்கத்தில் தலையைக் குனிந்து கொண்டு பேசினாள் வசந்தி.

''எவரை...?''

''என்ன மன்னி இப்படிக் கேட்கறேள்...?''

''பேரைச் சொல்லமாட்டியா வசந்தி?''

''ம்ஹூம்...''

''என்ன இங்கே தனியா லேடீஸ் கான்ஃபரன்ஸ்?'' குமார் வந்து சுகன்யாவுக்கு அடுத்த படியில் உட்கார்ந்து கொண்டான்.

''அவரை நாளைக்கு வரச் சொல்லணுமாம்... வசந்தி ரிக்வெஸ்ட்''

''எவரை....? ஓஹோ! மாப்பிள்ளை சாரையா...? ஆமாம்! அவரை நான் எப்படிக் கூப்பிடறதாம்...? அக்கா ஆத்துக்காரர்னா அத்திம்பேர்னு கூப்பிடலாம். தங்கை ஹஸ்பெண்ட்னா... இரு, நான் அம்மாவைக் கேட்டுண்டு வரேன்.''

''வேண்டாம்! வேண்டாம் நீ போய் இப்ப அம்மாகிட்டே எதையும் சொல்லி வைக்காதே...'' வசந்தி அலற அலற, குமார் எழுந்து உள்ளே ஓடினான்.

சற்றைக்கெல்லாம் திரும்பி ''அம்மா உங்க இரண்டு பேரையும் உள்ளே வந்து கதவைச் சாத்தச் சொல்றா...'' என்றான்.

உள்ளே சரஸ்வதி காப்பி தயாரித்து வைத்திருந்தாள். ஸ்ரீராம் பூஜையறையில் தரையில் உட்கார்ந்து கொண்டிருப்பது தெரிந்தது.

''நாளைக்கு விசேஷத்துக்கு ஏதாவது உதவி வேணும்னா சொல்லுங்கம்மா...''

''எல்லாம் முடிஞ்சு போச்சு. கோலம் போடறதையும் மாவிலை கட்டறதையும் மட்டும் நாளைக்குப் பண்ணலாம்னு சொன்னேன்... அதையும் அப்பாவும் பொண்ணும் விட்டு வைக்காம இன்னிக்கே முடிச்சிட்டா... குமார் போய் வெற்றிலை பாக்கு பழமெல்லாம் வாங்கிண்டு வந்துட்டான்... பட்

சாமானெல்லாம் போன்லயே நேத்து ஆர்டர் பண்ணி இன்னிக்கே போய் எடுத்துண்டு வந்தாச்சு. நாளை வரைக்கும் காத்திருந்து, ஒருவேளை நேரம் தவறிப் போனா கஷ்டமில்லையா... எல்லாம் அங்கே உள்ளே இருக்கு... போய்ப் பாரு...."

பூஜையறை பக்கமாகக் கை காட்டினார் மாமியார். காப்பி தம்ளரைக் கழுவி வைத்து விட்டு சுகன்யா பூஜையறையில் ஸ்ரீராமின் அருகே போய்த் தரையில் உட்கார்ந்து கொண்டாள்.

ஒவ்வொரு சாத்துக்குடி பழமாக எடுத்து அழகு பார்த்துக் கொண்டிருந்தவனின் முகத்தில் கூடைகூடையாக ஏமாற்றம். அதைக் கஷ்டப்பட்டு மறைத்துக் கொண்டு, "சுகி, ஒன்னிரண்டு பழம் அழுகினாப்பல தெரியறது... பார்த்துத் தனியா எடுத்து வைச்சுடு..." என்றான்.

வெற்றிலையை வேறு விதமாக மாற்றி அடுக்கினான். பிரிக்காமல் வைத்திருந்த பாக்கு, மஞ்சள் பொட்டலங்களைப் பிரித்து தட்டுகளில் பரப்பி வைத்தான்.

'சேது பந்தனத்து அணில் மாதிரி உன் பங்குக்கு உதவி பண்றியா ஸ்ரீராம்...?' வார்த்தைகள் நாக்கின் நுனி வரை வந்துவிட, மாமனார் வருவதைப் பார்த்து அவற்றை அவசரமாக விழுங்கிக் கொண்டாள்.

"என்னடா, ஸ்ரீராமா! எல்லாம் சரியா இருக்கா...?" என்றபடி அவனுக்கு மறுபக்கத்தில் உட்கார்ந்தார் ராமநாதன்.

"நீங்களும் அம்மாவும் பார்த்துப் பார்த்துப் பண்ணினால் சரியாயில்லாம போகுமா...?"

"எல்லாமே சடார் சடார்னு நடந்து போச்சுடா! மூணு மாசத்துக்கு முன்னாடி வந்த ஜாதகம் இது. பெரியத்தையோட சம்பந்தி மூலமா வந்தது. பொருந்தியிருக்குன்னு நாம சொல்லி ரொம்ப நாளைக்கு அவா பக்கத்துலேருந்து ஒண்ணும் பதிலேயில்லை. அப்புறம் திடீர்னு முந்தா நாள் பொண் பார்க்க வரேங்கறா... நல்ல காலமா நான் ஏற்கெனவே பையனைப் பத்தி விசாரிச்சு தெரிஞ்சு வைச்சுண்டிருந்தேன்..."

"ஏன்பா! எங்கிட்டே ஒரு வார்த்தை அவா வரான்னு சொல்லியிருக்கலாமில்லையா...?"

குப்பைக் காகிதங்களையும் பழம் சுற்றிய வைக்கோல் துண்டங்களையும் சேர்த்து எடுத்து, அவற்றை அப்புறப்படுத்தும் சாக்கில் சுகன்யா நாசூக்காக அந்த அறையை விட்டு வெளியேறினாள்.

அவள் அகன்றதை உறுதிப்படுத்திக் கொண்டு பேசினார் ராமநாதன். "எனக்கும் கொஞ்சம் பயமாயிருந்தது ஸ்ரீராமா... சுகன்யாவை இங்கே பார்த்தா, அவங்க என்ன கேப்பாளோன்னு யோசனையா இருந்தது. அந்தக் காரணத்துனாலே இந்தக் கல்யாணம் நடக்காம போயிடக்கூடாது இல்லையா...."

சற்றே அதிர்ந்தவன், அப்பாவின் விழி-களை நேருக்கு நேராகச் சந்தித்துக் கேட்டான். "எங்க கல்யாணத்தைப் பற்றின உண்மையை மறைச்சா வசந்தி கல்யாணத்தை நிச்சய-பண்ணியிருக்கேள்...?"

"சே! சே..." அவசரமாக மறுத்தார் ராம-நாதன். "அவா வந்தன்னைக்கு சம்பந்தியை தனியா கூப்பிட்டுச் சொல்லிட்டேன். அவ-ருக்கு ஏற்கெனவே விஷயம் தெரிஞ்சிருக்கு ஜாதகம் குடுக்கறச்சே பெரியத்தை சம்பந்-சொல்லித்தான் குடுத்திருக்கார்... 'எனக்கு தெரியும் மிஸ்டர் ராமநாதன். இதுல நீங்க சா-கடப்படறதுக்கே ஏதுமில்லை... இன்னைக்கு உங்க மூத்த பிள்ளை-மாட்டுப் பெண்ணை காணலியேன்னு தான் எனக்கு ஆச்சரியம இருக்கு'ன்னார். நல்ல மனுஷர். வசந்-ரொம்ப கொடுத்து வச்சவ ஸ்ரீராமா..."

"ஆமாம்பா!" என்றான் ஸ்ரீராம், பெ-மூச்சை அடக்கி.

"ஒரேயொரு பயம்தான்... அவா ரொம்-மாடர்ன் குடும்பமா தெரியறா... வசந்-அதுக்கு ஏத்த மாதிரி மாற வேண்டி வரும்..

ஸ்ரீராம் சிரித்தான்.

"என்ன சிரிக்கறே....?"

"இல்ல; கதை இங்க ரிவர்ஸ்ல போறது போகட்டும். கல்யாணத்துக்குப் பணம் எப்-வேணும்னு சொல்லுங்கோ. உடனே ஏற்பா-பண்ணித் தரேன்."

"வேண்டாம், வேண்டாம், இப்போ தனியா வேற இருக்கே! உனக்கு செல-நிறைய இருக்கும். நான் பார்த்துக்கறேன்..."

"அப்பா! வசந்தி கல்யாணத்துக்-அம்பதாயிரம் உன்கிட்டே எதிர்பார்-கறேன்னு இரண்டு வருஷம் முன்னா-சொன்னேளே... மறந்துருத்தா...?"

"அது அப்போ! இப்போ கதை வே-யர்ச்சே... வேண்டாம் ஸ்ரீராமா!" என்றார்.

வெளியே நிற்க வைத்து கதவை சாத்தியதைப் போல் உணர்ந்தான் ஸ்ரீராம்.

(தொடரு

"என்னது?... பக்திப் படத்து கொஞ்சம் அரசியல் நெடியை சேர்த் தயாரிக்கப் போறீங்களா? படத்தோ பேரு?"

"அம்மனுக்கு சம்மன்!"

-பி.ஆர்.மஹேந்திரநாத்ரா



கல்லூரி ஹீரோக்களே, ஹீரோயின்களே!



கல்லூரி மாணவ, மாணவியரே, உங்களுக்கு ஓர் அருமையான வாய்ப்பு.

உங்களுக்கு மட்டுமே தெரிந்த உங்கள் கல்லூரி ஹீரோ அல்லது ஹீரோயினை வெளியுலகத்தினரும் தெரிந்து கொள்ள வேண்டுமென்று ஆசைப்படுகிறீர்களா?

இதோ, கல்கி உங்களுக்குக் கைகொடுக்கக் காத்திருக்கிறது!

குறிப்பிட்ட அந்த மாணவரோ அல்லது மாணவியோ உங்கள் கல்லூரியில் பிரபலமானவராக இருக்க வேண்டும். படிப்பில், விளையாட்டில், சமூக சேவையில், பேச்சாற்றலில், கவிதை எழுதுவதில் அல்லது ஆடல்... பாடலில்... என்று ஏதாவதொரு வகையில் அவர் உங்கள் கல்லூரியில் பிரபலமாயிருக்க வேண்டும்.

அப்படிப்பட்ட உங்கள் கல்லூரி ஹீரோ அல்லது ஹீரோயின் பற்றிய முழு விவரங்களையும்— அவரை எதனால் நீங்கள் ஹீரோ அல்லது ஹீரோயினாகக் கருதுகிறீர்கள் என்கிற முழு விவரங்களையும் எங்களுக்கு எழுதியனுப்புங்கள்.

கூடவே, அவர்களை ஹீரோ அல்லது ஹீரோயினாகக் காட்டும் கலர் போட்டோ (பாஸ்போர்ட் சைஸ் வேண்டாமே!) ஒன்றையும் அனுப்பி வையுங்கள்.

ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு ஹீரோ அல்லது ஹீரோயின் பற்றித் தொடர்ந்து பிரசுரமாகும்.

ஒரு கல்லூரியிலிருந்து ஒரு ஹீரோ அல்லது ஹீரோயின் பற்றி மட்டும்தான் வெளியிடுவோம் என்பதால், உங்களுடைய தேர்வு கவனமாக இருக்கட்டும்!

உங்கள் கல்லூரி ஹீரோ அல்லது ஹீரோயின் பற்றிய விவரங்களையும் கலர் போட்டோவையும் அனுப்புவதற்கு முன்பு, அவற்றை உங்கள் கல்லூரி சேர்மனோ அல்லது முதல்வரோ பரிந்துரை செய்து சான்றுக் கைெயழுத்திட்டிருக்க வேண்டியது மிக மிக அவசியம்.

தீபாவளி சிறப்பிதழி லிருந்தே கல்லூரி ஹீரோ அல்லது ஹீரோயினின் அறி முகம் ஆரம்பிக்க வேண்டு என்பதால் அனைவரும் உடன டியாகச் செயலில் இறங்கு கள்.

பிரசுரமாகும் ஒவ்வொ கட்டுரையும் ரூ.100/- சன் மானம் பெறும். வெளியாகி அத்தனை கட்டுரைகளிலு சிறந்தது என்று ஆசிரிய தேர்ந்தெடுக்கிற ஒன்றுக் ரூ.1000/- சிறப்புப் பரி காத்திருக்கிறது.

உறையின் மேல் 'கல்லூ ஹீரோ/ஹீரோயின்' என் குறிப்பிட்டு அனுப்புங்கள்.

சாஸ்திரம்.

ஆகாசத்தில் பிரகாசிக்கிறானே சூரியன்... அவன் கிரணங்கள் பட்டதுமே தாமரை புஷ்பமானது விகசிக்கிறது. எப்படி விகசிக்கிறது என்று யோசிக்க வேண்டும்.

ஒரு பெரிய தடாகத்திலே, தீர்த்தம் நிறைய இருந்தால், சூர்ய ரச்மி பட்டவுடனேயே தாமரை விகசிக்கிறது. ஆனால், தடாகத்திலே தீர்த்தமே இல்லையென்று வைத்துக் கொள்ளுங்கள், சூர்ய ரச்மி வந்து பட்டால்...? அந்தத் தாமரையானது வாடி வதங்கித்தான் போகுமேயொழிய விகசித்து மலராது!

அப்போ, தாமரை மலர்வதற்கு முக்கியமான பொருள் தீர்த்தம். தீர்த்தத்தில் இருக்கிற தாமரையை மலரச் செய்பவன் சூரியன். அதுபோல, ஆசார்ய சம்பந்தத்தைப் பெற்ற ஜீவனை பரமாத்மா அனுகிரஹித்து விகசிக்கச் செய்வான். தாமரை – ஜீவன். தீர்த்தம் – ஆசார்யன். சூர்யன் – பரமாத்மா. தீர்த்த சம்பந்தம் போலே எப்போதும் ஆசா சம்பந்தம் வேண்டும். மோக்ஷம் பெறுவத இந்த சம்பந்தம் கட்டாயம் வேண்டும்.

யோகத்திலே கெட்டிக்காரரான ஆசார்யர் இருந்தார். சமாதி நிலையிலே அ அமர்ந்தாரானால் எம்பெருமானை நேரு நேரே பார்க்கக்கூடியவர்! ஒருநாள் அப் அவர் யோகத்திலே இருந்தார். பகவா நேருக்கு நேராகப் பார்த்துக் கொண்டே இ தார். ஆனால், வழக்கமாக இவர் பார்வை நேருக்கு நேராக சந்தித்த பகவானின் நோ அன்று மட்டும் வேறு திசையில் திரும்பிய தது.

அந்த யோகிக்கு இந்த மாற்றத்தைக் குறி வியப்பும் விசாரமும் உண்டாயிற்று.

பகவானின் பார்வை மாறியதற் காரணம் என்ன...? அடுத்த வா சொல்கிறேனே...

(தொட


கடலோரக் கொலைகள்
கதை : பெனிட்டோகுமார்
படம் : சசி
12
வயர்லெஸ் செய்தி மதிவாணனை எட்டவும்...
இருட்டுல பதுங்கி, இடைவெளி விட்டு, பின்தொடர்ந்து போங்க, நாங்களும் வ்ரோம்.
கடற்கரையில், ஆஷா பேட்டரி லைட் அடிக்க, குழிக்குள் நாகராஜன்...
எவ்வளவு நேரம் நானே தோண்டறது? பிரதீப்! நீ இறங்கி வா; நான் மேல ஏறி ரெஸ்ட் எடுக்கறேன்.
மணல்மேட்டின் மறைவில்...
ஸார்! பாயலாமா?
வேண்டாம்... இன்னும் ரெண்டு நாள் காத்திருக்கணும்னாலும் சரி; அவங்க காரியம் முடியட்டும்.
சற்று நேரத்தில்... குழிக்குள்ளிருந்து பிரதீப்...
கிடைச்சுடுச்சு! கிடைச்சுடுச்சு! பணக்காரங்களாயிட்டோம்!
அதே சமயம் ஆஷா கையில் இருந்த பாட்டரி லைட் ஒரு கல்லால் தாக்கப்பட...
ஆ! ஐயோ!



நாகராஜனின் அலறல் கேட்டு இன்ஸ்பெக்டர் கோபி...
மதிவாணன்! என்னமோ நடக்குது! தப்பிடப் போறாங்க! சீக்கிரம்!
ஜீப் ஒளி சிந்தி, குழியை நெருங்க, எதிர் திசையிலிருந்தும் டார்ச் லைட்டுகளுடன் போலீஸ் ஓடி வர...
நாகராஜ்! துப்பாக்கியைக் கீழே போடு. இல்லே, சாகத் தயாராகு!
பிரதீப்! நாலாபுறமும் போலீஸ் சூழ்ந்திருக்கு!
சரண்டர் ஆகறோம் ஸார்
குழிக்குள்ளிருந்து ஒரு ஸூட்கேஸ் வெளியே வர...
பூட்டை உடைங்கடா!
வேண்டாம் மதி! ஸ்டேஷனுக்குப் போய் பார்த்துக்கலாம்!
என்னைக் குழில தள்ளிட்டு தப்பி ஓடிட்டா!
ஸ்பாட்ல மாட்டினவங்க நீங்கதான். நடங்க, ஸ்டேஷனுக்குப் போவோம்!
நாகராஜ்! ஆஷா என்ன ஆனா?

(தொடரும்

டி.வி. சங்கரநாராயணன் சட்டம் படித்தவர்! வழக்கறிஞராகப் பதிவும் செய்து கொண்டவர். சென்னை சட்டக் கல்லூரியில் இவரது சக மாணவர் இன்றைய மத்திய அமைச்சர் ப. சிதம்பரம்!

"மாமா சொன்னார். சங்கீதத்திலே கவனம் செலுத்து. அது போறும், அப்படின்னு. அதனாலே சட்டத்தை விட்டுட்டு சங்கீதம்தான்னு வந்துட்டேன்..." என்கிறார் டி.வி.எஸ்.

மாமா?

மதுரை மணி அய்யர்! டி.வி.எஸ்ஸின் அப்பா வேம்புஐயர், முப்பது ஆண்டுகள் மணி அய்யரோடு இணைபிரியாமல் உடன்பாடியவர்!

"எனக்கு குரு, தெய்வம் எல்லாமே மாமாதான்..." என்று வார்த்தைக்கு வார்த்தை மாமாவின் புகழ்பாடும் டி.வி.எஸ். மாமாவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, விட்டது வக்கீல் தொழிலை மட்டுமல்ல- அவருக்கு மிகவும் விருப்பமான கிரிக்கெட்டையும் கூட!

"வெயிலில் விளையாடினால் தொண்டை கெட்டுடும். வேண்டாம்.. பாடறவனுக்கு வேறே ஜோலியே ஒதவாது. ஆத்திலே ஒரு கால், சேத்திலே ஒரு கால் எல்லாம் கூடாது. பாட்டுலே மெனக்கெடணும்..." என்பாராம் மணி அய்யர்.

"மாமா மஹான். யாரையும் கடிந்து ஒரு வார்த்தையும் சொல்ல மாட்டார். அவர் போட்ட அஸ்திவாரத்தில் தொடங்கினேன். அவரை 'இமிடேட்' பண்ணக்கூடாது என்பதற்காக, என்னுடைய குரலுக்கு ஏற்ற மாதிரி ஒரு தனிப்பட்ட பாணியை ஏற்படுத்திக் கொண்டேன். 'டி.வி.எஸ். ஸ்டைல்' என்று ஒன்றை நிறுவிய திருப்தி இருக்கிறது..." என்கிறார்.

"சரளி வரிசை முதல் மாமாவிடம் பாடம்... அவ்வளவும் பெரிய உருப்படி கற்றுக் கொள்கிற அதே நேர்த்தியில் கற்றுத் தருவார். தினசரி காலையில் மாமா எப்போது கூப்பிடுவார் என்று காத்திருப்பேன். ஏழு - ஏழரைக்குத் தொடங்கினால் கல்லூரிக்குப் போகிற வரை பாடம் இருக்கும்... அபூர்வ ராகங்களை - மானவஸ்ரீ, ரஞ்சனி, உமா பரணம், ஜயந்த சேனா, விஜய நாகரி என்று நிறைய மேடைக்குக் கொண்டு வந்தவர் அவர்தான். தமிழிசை இயக்கம் தொடங்கியபோது அதற்கு ஆதரவாகப் பெரிய உருப்படிகளைத் தமிழில் நிறையப் பாடினார்!"

சங்கரநாராயணனின் குடும்பத்தில் மூன்று தலைமுறைகளாக நூறு ஆண்டுகளுக்கும் மேலாக சங்கீத தேவதை அருள்பாலித்துக் கொண்டிருப்பது தனிச்சிறப்பு. மதுரை புஷ்பவனம், அவருடைய சகோதரர் மகன் மதுரை மணி அய்யர், அவருடைய மருமான் டி.வி.எஸ்.

அடுத்த தலைமுறைக்குக் கூட இது தொடர்கிறது.

* ஜனாதிபதியிடம் பரிசு பெறுகிறார்...



மகள் அம்ருதா, பாட்டிலும் மகன் சங்கரமகாதேவன் மிருதங்கத்திலும் ஆர்வம் காட்டுகிறார்கள்.

சங்கர நாராயணன் தனியாகக் கச்சேரி செய்வதற்குத் தூண்டுகோலாய் அமைந்தவர் டி.என். கிருஷ்ணன்தான்.

"எத்தனை நாளைக்கு ராமன் (டிவிஎஸ்ஸின் வீட்டுப் பெயர்) உங்க கூடவே பாடிண்டு இருக்கறது? அவனையும் கச்சேரி பண்ணச் சொல்லுங்கோ" என்றார் டி.என்.கே. வீட்டின் முன் அறையில் முதல் கச்சேரி, மாமா முன்னால் நடந்தது டி.என்.கே. வேலூர் ராமபத்ரன், ஆலங்குடி

ஐயா

சுப்ரமணியன் ரவிச்சந்திரன்

"மணி எவ்ளோப்பா ஆச்சு? ஒரு ஏழரை இருக்குமா... சரி... நான் பொறப்பட்றேன். இன்னிய சபை கலையலாம்..." கண்ணைச் சிமிட்டியது அந்த அரையிருட்டிலும் தெரிந்தது.

தூரத்தில் ஊஞ்சலாடும் குழந்தைகளும், அவர்களை எச்சரிக்கும் தாய்மார்களின் குரல்களும் இரைச்சலாய்க் கேட்டது...

அவர் எழுந்து நின்று தடியில் ஒரு நிமிடம் தன்னை நிறுத்தினார்... கால்களின் மரத்த தன்மை போக நேரம் பிடிக்கும்... தடி அப்படியும் இப்படியுமாய் ஆடியது.

கனகசபையும் எழுந்திருக்கும்படி ஆனது. அவனுக்கு மனசில்லைதான்... நான் சைக்கிள்ல விட்டுட்டுப் போறேன்..."

"தேங்க்யூ ஜென்டில்மேன்... பையனும் மருமகளும் ஆபீஸ் போறவங்க. நான் லேட்டா போனா அவங்க வேலைங்க வரிசையா தள்ளிப் போகும்... யாரும் சுணங்காம போகணும்" கால்களை உதறினார். செருப்பில் கால்களை நுழைத்தார்.

தலையசைத்தார்... கைத்தடி பெண்டுலம் போல ஆட, நடையை எட்டி வைத்தார்.

கனகசபை அவர் போவதையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு ஒரு சிகரெட்டைக் கொளுத்திக் கொண்டான். அவருக்கு இவன் புகைப்பிடிப்பது தெரியுமோ தெரியாதோ... ஆயினும் அவர் ஆட்சேபிக்காவிட்டாலும் அவர் முன் புகைக்க அவன் விரும்பவில்லை...

புகை வளையங்கள் போல அவனது மனது நினைவுகளைச் சுழல விட்டன... இவனும் அவரும் எவ்வாறு அறிமுகம் ஆனார்கள் என்பது தெளிவில்லை. அவருடைய பெயர் கூட அவனுக்குத் தெரியாது. ஆறு மாதமாய் தினமும் பூங்காவில் சந்திப்பு நிகழ்கிறது... பெரும்பாலும் சீக்கிரம் வருவது அவர்தான். போவதும் அப்படியே...

ரொம்பவும் சாதாரணமாகப் பேச்சு ஆரம்பிக்கும். காதலர்கள் மொழியில் ஸ்வீட் நத்திங் என்பார்கள். இருவருக்கும் மாலை நேரத்தைக் கடத்த வேண்டியது அவசியமாயிற்று... சீட்டாடும் இருவரைப் போன்றே அவர்கள் தத்தம கையிலிருந்து இறக்கி, எதிராளி இறக்குவதைப் பொறுக்கி ஜோடி சேர்ப்பது போல அவரவர் அனுபவங்களைப் பரிமாறிக் கொண்டனர்...

கனகசபையின் வயது அவருடன் உரையாடும் பொறுமையான வயதல்ல. அவன் வயதுக்காரர்கள் வாகனங்களில் மனைவியுடன் பறந்து கொண்டும், இன்ன பிற அலுவல்களுக்காக கடிகாரத்துடன் ஓடிக் கொண்டுமிருந்தனர். அல்லது சாட்டிலைட்டில் தங்களை நிறுத்தி வைத்தனர்... இவனுக்கு அது பிடிப்பதில்லை...

ஆரம்பத்தில் அவருடன் உரையாடுவது அவ்வளவு சுலபமாக இல்லை. அவரது ரசனையும் செயல்பாடுகளும் இவனுக்குத் தோதாக இல்லை. பழக்கத்தில், அவ்வாறான வித்தியாசங்களே சுவாரஸ்யப்பட்டுப் போயின... ஒன்ற முடிந்தது.

அவர் அவனுக்குச் சொன்ன ஆலோசனைகள் வெகுவாகப் பயன்பட்டன. அதற்காக அவரை குரு என்று உயர்த்தி, அன்னியப் பட்டுப் போகவும் இருவரும் தயாராக இல்லாமல் நண்பர்களாகவே தொடர்ந்தனர்.

சிகரெட் சுட்டது... அவரிடம் ஒருநாள் இது பற்றிப் பேச வேண்டும்... இது மரியாதைக் குறைவா, ஆரோக்கியக் கேடா... அவர் எப்படி நினைக்கிறார்...

"சார்... இன்னிக்கு நீங்க லேட்டா வந்ததே பிசகு... அதைவிடப் பெரிய தப்பு கப்னு இருக்கிறது. இதுக்கா வர்றோம்."

அவர் சிரிக்க முயன்றதே அவர் இயல்பாக இல்லையென்றும் எதனாலோ பாதிக்கப் பட்டிருக்கிறார் என்பதையும் தெரிவித்தது.

கனகசபை பொறுத்தான்.

"ம்... அப்புறம்? இ[illegible] [illegible] வந்துச்சா... [illegible] [illegible] [illegible] செலவு [illegible] [illegible]..."

உண்மைதான். கனகசபையும் அவ[illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]...

"[illegible] [illegible] [illegible] [illegible] இருக்கீங்க..."

"வயசு என்னாச்சு.. ஒடம்பு [illegible]

காமிக்குது... ஓடின மிஷின். ஸ்பேர் பார்ட்ஸ் போடணும், நடக்கற காரியமா...'' தன்னுடைய ஹாஸ்யத்திற்குத் தானே சிரித்துக் கொண்டார். இதுகூட இயற்கையாய் இல்லை...

"சார் ஒங்களுக்கு உடம்புன்னு சொல்றது அவ்ளோவா நம்ப முடியலே... எதையோ பொதைச்சு வச்சுட்டு யாரும் பாத்துட்டா என்ன ஆகும்னு விழிக்கற மாதிரி இருக்கு...''

அவன் இவ்வாறு கூறுவதற்குத் தான் காத்திருந்தார் போலும். பொல பொலவென்று கண்ணீருடன் அவரும் கொட்டலானார்.

"எம் பையன். மருமவப் பொண்ணுப்பா.. என்னால தாங்கவே முடியலே... ஒருநாளா. ரெண்டு நாளா, ஆறுமாசம்.... அமுக்கி வச்சிருக்கேன்... இனியும் அழுத்தினா வெடிச்சுத்தான் போகும்... முடியலே... என்னால முடியலே... கனகு... தப்பா நெனைக்கலேன்னா ஒரு சிகரெட் வாங்கிட்டு வாயேன்... ப்ளீஸ்...''

கனகசபை பூங்காவிற்கு வெளியே போடப்படும் பஜ்ஜியுடன் வந்தான். சூட்டில் உள்ளங்கை எண்ணெய்ப் பிசுபிசுப்புடன் சிவந்து போனது. தொப்பென்று பெஞ்சில் போட்டான். சிகரெட்டை நீட்டினான்.

"தேங்க்ஸ்... எப்பவும் இல்ல.. எப்பவாச்சும் தான்.'' முணுமுணுத்தபடி பற்ற வைத்து தோற்றுப் போனார்... காற்று...



கனகசபை கரம் குவித்து உதவி செய்ததில் அவர் பற்ற வைத்ததோடு அவனையும் அனுமதித்தார்... கனகசபை போலியான தயக்கம் இன்றி, பற்ற வைத்துக் கொண்டான்.

"நான் கவர்மெண்ட் சர்வீஸ்ல இருந்தேன். செவன்டி நைன்ல ரிடையர்மெண்ட்... ஆபீஸ்ல டீ பார்ட்டியெல்லாம் குடுத்து சால்வை போர்த்தினாங்க. என்னை விடறதுக்கு அவங்களுக்கும் அவங்கள விட எனக்கும் மனசில்ல... சட்டம்...

"பென்ஷன், ரிடையர்மென்ட் பெனிஃபிட்னு ரொம்ப பிரமாதமான ஆரம்பம்பா.... ரிலே ரேஸ் மாதிரி நான் வீட்டுக்கு வந்ததும் எம்மவன் வேலைக்குப் போனான். ஒரே பையன். கல்யாணத்தையும் காலா காலத்துல பண்ணி வச்சேன்... யாரையோ, பாத்துப் பழகினேன்னு சொன்னான்.. சரிதான்னு முடிச்சு வச்சுட்டேன். அவன் இஷ்டம்தானே முக்கியம்... மருமவளும் விசுவாசமாதான்பா இருந்தா...

"வீடு கட்டணும்னான்பா... எனக்கும் அவசியமாத்தான் பட்டது. என் சர்வீஸ்ல என்னால முடியாதது. இவனாச்சும் பண்ணட்டுமேன்னு பேங்க்ல போட்ட டெபாசிட்டை பூராவும் வழிச்சுக் குடுத்தேன்.. சந்தோசமாகத்தான்.


"பையன் எனக்கு ஒரு நோட்டு எழுதிக் குடுத்தான். ஒரு ரெஸ்பான்ஸிபிலிட்டி வருமாம். எப்பிடியும் அவனுக்குத்தான்... என் பொண்டாட்டிகூட இல்லை...

"நீட்டி வளக்க எனக்கு இஷ்டமில்ல. நோட்டை வாங்கி வச்சுக்கிட்டேன். கடன் வாங்காம யாராச்சும் இந்த காலத்துல வீடு கட்ட முடியுமா... ரெண்டு பேரும் வேலைக்குப் போறாங்க. சுமாரா ஓட்ட முடியுது... வீடும் ஒரு வழியா முடியாம முடிஞ்சுது...

"ஹம்.. எல்லாமே மாறிப் போச்சுப்பா... ரெண்டு ரூம் போட்டான். சர்தான் ஒண்ணு அவனுக்கு, ஒண்ணு எனக்குன்னு நெனைச்சேன்..." சிகரெட்டை காலில் போட்டு நசுக்கினார்...

"எனக்கு வாசல்ல ஒரு கேம்ப் காட், கொசு வலைன்னு குடுத்து என் எடத்தை அங்க வச்சுட்டான்... அந்த இன்னொரு ரூம் கெஸ்டுக்காம்.... ஐடியா யாருதுன்னு தெரியலே... நானும் பெரிசு படுத்தலே. கொஞ்சம் அசௌகரியம்தான். நானு, என் பாக்கெட் ரேடியோ, பேப்பர்னு ஒரு மாதிரியா செட்டிலும் ஆயிட்டேன்...

"ஒட்டகம் கூடாரத்துக்குள்ள நுழையற மாதிரி கொஞ்சம் கொஞ்சமா ஆரம்பிச்சுட்டான்...ராத்திரி எட்டரைக்கு மேல லைட் எரியப்படாது... பாதி ராத்திரில கச்சேரி கேட்டா எல்லார் தூக்கமும் போவுது... செலவு அதிகமா



இருக்கறதால, பேப்பர் கட்டுப்படியாவாது...

"சீஸன் மாறிப் போச்சு... வீட்டைச் சுத்தி வயல்வேறயா.. ஜில்னு எலும்பைக் குத்தற குளிரு. ரெண்டு பொட்டும் தெறிக்குது...ஒரு கம்பிளி வாங்கலாம்னு கேட்டேன். காதுல வாங்காத மாதிரி போறான். பென்ஷன்ல நானே வாங்கிக்கலாம்... இருந்தாலும் அவன் கையால வாங்கினா ஒரு சுகம்... பென்ஷனையும் குடுத்துர்றது...

"அன்னிக்கு அவசரத்துல அவன் சட்டையப் போட்டுட்டு வந்துட்டேன். டீஸன்ஸி இல்லேன்னு மருமவப் பொண்ணு காதுல விழற மாதிரி முணுமுணுக்கறா..."

"ச்... பொதுவாவே ஒங்க தலைமுறையை விட எங்களது பொறுமையில்லாதது. நீங்க எதையும் நாசூக்கா சொல்வீங்க. எங்ககிட்டே கம்மிதான். காலம் அப்பிடி... டக்டக்னு போவணும்..." கனகசபை நிதானமான குரலில் சொன்னான்... இது அவருக்குத் தெரிந்து ஒன்றாகக் கூட இருக்கலாம்..

"அதுக்காக அஞ்சு மூணும் ஒம்பதாயிடுமா.. அப்பா மவன்கறது நாளாக ஆக மாமன் மச்சான்னுதான் ஆயிடுமா... திமிரு... ரத்தத் திமிரு... சுண்டிப் போனா எல்லாம் சரியாயிடும்... எங்க போயிடுவான். அஞ்சு அம்பதாகும்... பாக்கத்தான போறேன்..." அவர் நெஞ்சு படபடத்தது. சத்தம் வராமல் உதடு மட்டும் சொற்களைத் துப்பியது. திட்டுகிறாரே.. யாரை?

"நன்றி இல்லாதவங்க.. எங்கியாச்சும் ஓடிப் போவலாம்னு இருக்கேன். இவன் சகவாசமே வேணாம்... த்தூ..."

கனகசபை அவரைப் பார்த்தான். இடைவெளி விட்டு அவர் பேசுவார் என இருந்தான்... அவர் அங்குமிங்கும் பராக்கு பார்த்துவிட்டு இவன் பக்கம் திரும்பினார். என்ன என்பது போலத் தலையை ஆட்டி வினவினார்.

கனகசபை அவருக்கு ஒரு சிகரெட்டை நீட்டிவிட்டு தான் ஒன்றைக் கொளுத்திக் கொண்டான். இந்த இடைவெளியில் இது

விருந்தாளிகளை மிகவும் மகிழ்விப்பது இரண்டே வார்த்தைகள்தான் என்கிறார், மேடம் நிகேமியர் என்ற பிரெஞ்சு சீமாட்டி!

1) அவர்கள் வரும்போது "வாங்கோ! வாங்கோ!"

2) கிளம்பும்போது: "அதற்குள் ளேயா?"

-மஞ்சுதேவன்

வரை கேட்காத வெளிச்சப்தங்கள் காதில விழுந்தன.

"சார்... எனக்குன்னு சில யோசனைகள் தோணுது. ஆனா அதை அடுத்தவங்க குடும்பத்துக்குள்ள செயல்படுத்திக் குழப்பம் உண்டாக்கவோ, தெளிவு ஏற்படுத்தவோ முடியாம நாகரிகம் தடுக்குது...."

"கனகு... எப்ப உங்கிட்ட விவாதிச்சுட்டேனோ அப்பவே உன் கருத்தையும் கேக்கத் தயாராயிட்டேன்னுதான் அர்த்தம். நான் குழப்பமாவே இருக்கறதுக்குப் பதிலா ஒரு முடிவு எடுத்தாகணும்... கமான்..."

"மொதல்லே நீங்க... ஒங்க நிலை... நீங்க தேவையில்லாம வாழலே... உழைக்கற வரைக்கும் உழைச்சாச்சு. இது ஓய்வுக்காலம். உங்க உடல்நிலைக்கு ஓய்வும் நல்ல மனநிலையும் அவசியம். நல்ல மன நிலைன்னா தொந்தரவுக்கு ஆளாகாத மனநிலை...

"உங்களுக்குன்னு உரிமை இருக்கு.... அதைக் கேக்கறதுல தப்பில்லே. பஸ்ல போறோம். முன்னாடி இருக்கறவன் நகராம நசுக்கினா நாம நகரச் சொல்றதில்லையா. பஸ் எல்லாருக்கும் உண்டானதுதான். நான் சொல்றது புரியுதா..."

அவர் தலையை வாஸ்தவம் என்று அசைத்தார்.

"முதல்லே உங்க சன்கிட்ட சாதாரணமா எடுத்துச் சொல்லுங்க... கேக்கலாம்..." இல்லன்னா...

"ஒரு நாடகம்தான் வாழ்க்கையே... நீங்களும் நாடகம் ஆடிடுங்க சின்னதா... நான் குடுத்த பணத்தைக் குடு... இல்லாட்டி கேஸ் போடுவேன், நோட்டு எங்கிட்ட... இப்டி... அநேகமா பணம் இருக்காது... குடுக்கணும்னு கோபம் வந்தாலும் மிடில் க்ளாஸ் யதார்த்தம் சமாதானத்துக்கு வழி காட்டும்..."

கனகசபை நிறுத்தினான்.

"எக்சாக்ட்லி.. என்னமா சொல்லிட்டே... அவனவிட அவ ரொம்ப ஆடிப் போவா. வர்றேம்பா வர்றேன். கொட்டுனாதான் ஒப்புத் துப்பேர் புள்ளப்பூச்சி... இல்லே?" அவர் காற்றில் சாடினார்.

"தேங்க்யூ..." சட்டென்று எழுந்து கொண்டார். உடனே நடக்க ஆரம்பித்தார். அவருக்குத் திடீரென்று இளமை கிட்டியதைப் போல நடையில் வேகம் தெரிந்தது.

கனகசபைக்கு ஏனோ லேசாக ஆனது. அவனுக்கு பெற்றோர் இல்லை. இருந்திருந்தால் அவனுடைய அப்பாவுக்கான தீர்வை இவரிடம் கேட்டிருப்பான்.

அடுத்தநாளை எதிர்பார்த்து எழுந்தான்.

இன்றோடு ஒரு வாரம் ஆகப் போகிறது. அவரைக் காணோம். உடம்பு சரியில்லையா.. வீடும் தெரியாதே. பையன் விரட்டி விட்டானோ. அல்லது வீட்டுக்குள்ளே வைத்துப் பூட்டி விட்டானோ...

சிந்தனையுடன் போனவன் கண்ணில் அவர் பட்டார். சைக்கிளை அவருக்கு முன் நிறுத்தினான். அவர் நின்றார்... மெல்ல சிரித்தார்.

"மறந்துட்டீங்களா சார்."

"அதெல்லாம் இல்ல. கொஞ்ச வேலை" நடந்தார். கனகசபை உடன் நடந்தான்.

"என்ன சார். ஒங்க பையன் எங்கியும் போவப் படாதுன்னு சொல்லிட்டாரா..."

"அவன் எதுக்குச் சொல்றான்... அதெல்லாம் ஒண்ணுமில்ல... நானாதான் வரலே."

"ஏன் சார்..."

"ஏனா... நீ சொன்னியேன்னு சாதாரணமா மொதல்ல பேசினேன்... படார்னு பதில் வந்துச்சு... ஆபீஸ் புடுங்கல் போல"

"சரி. அதுக்கு நீங்க என்ன பண்ணுவீங்க..."

"போப்பா... எனக்குக் கடுப்பு தாங்கலே.. ஒழுங்கா இரு. இல்லாட்டி ரூவாய எண்ணி வையுண்ணேன்." தலையைக் குனிந்து கொண்டார்.

"என்ன சொன்னார்?" கனகசபை ரொம்ப ஆவலாகக் கேட்டான்.

"தடால்னு கால்ல விழுந்துட்டாங்கப்பா ஆமடையான் பொண்டாட்டி ரெண்டு பேரும்... அன்னிலேந்து தனி ரூமுதான்; ஹிண்டு பேப்பர்தான். பாதி ராத்திரி வரைக்கும் டி.வி.தான்... நிமிஷத்துக்கு ஒருதரம் அப்பா, அப்பான்னு எட்டிப் பாக்கறான்"

"வெரிகுட்... வேற என்ன சார் வேணும்?"

"வெரிகுட்டா... மண்ணாங்கட்டி... எனக்கு என் புள்ளதான் வேணும். அப்பா புள்ளயா நடந்துக்காம கடன் குடுத்தவனுக்கு வாங்கினவன் தர்ற மரியாதை வேணாம்... இதுக்குப் பழசே தேவலாம்பா... ஒம் பேச்சக் கேட்டேன் பாரு. சின்னப்புள்ள சகவாசம்கறது சரியா இருக்கு... ஒத்துப்பா" அலுப்புடன் விலக்கிக் கொண்டு போனவரைக் குழப்பமாய்ப் பார்த்தான் கனகசபை...



உன்னை 13

கி. ராஜேந்திரன்

?

சேகர் நல்ல உயரம். மணையில் உட்கார்ந்த நிலையிலேயே ஆறடித் தோற்றத்தின் ஆகிருதி தெரிந்தது. சுகன்யா கற்பனையில் அவன் அருகில் வசந்தியை அமர்த்திப் பார்த்தாள்.

மையிட்ட அவள் மருண்ட கண்கள், படிய வாரிப் பின்னிய கருங்கூந்தல், செதுக்கியது போன்ற மூக்கில் மின்னும் மூக்குத்தி, காதுகளில் தொங்கும் பொன் ஜிமிக்கி... அந்த ஜிமிக்கிகள் கூட ஆடாமல் அவளைப் போல் அமரிக்கையாய் அடங்கியிருக்கும்...! சேலையை உடுத்தும் முறையிலும் ரவிக்கையின் 'கட்டிங்'கிலும் காலத்தோடு ஒன்ற மறுக்கும் பிடிவாதம்.


சுகன்யாவின் பார்வை, சந்திரசேகர் பக்கம் திரும்பியது. அவன் அணிந்திருந்த கதர் குர்த்தா அவனை மேலும் உயரமாகக் காட்டியது. தன்னம்பிக்கையைத் தேக்கிய கண்கள்... கனமான மீசை, முறம் போன்ற அகன்ற கைகள்...

இவர்கள் வந்திறங்கியபோதே பெற்றோருடன் வாசலில் காத்திருந்து வரவேற்றவன், ஸ்ரீராமைப் பார்த்ததுமே... "யூ மஸ்ட் பி ஸ்ரீராம்" என்று கைநீட்டி விட்டான். இவள் பக்கம் திரும்பி "நீங்க மிஸஸ் ஸ்ரீராம்...?" என்று மீண்டும் அவன் கைகுலுக்கத் தயாராக, சுகன்யா ஞாபகமாகக் கரம் குவித்து, "என் பெயர் சுகன்யா..." என்றாள் சிரிப்புடன்.

"ரொம்ப மகிழ்ச்சி. உள்ளே வாங்க..."

மாப்பிள்ளை, சம்பந்தி என்கிற பந்தாவெல்லாம் இல்லாமல் வெகு இயல்பாக வரவேற்று வருங்கால மாமனார் – மாமியாரைக் கவனித்துக் கொண்டான் சேகர்.

இப்போது பாக்கு – வெற்றிலை மாற்றுவதற்காக மணையில் உட்கார வைத்திருந்தார்கள். அந்த அரைமணி நேரத்



துக்குள் அவனுக்கு இருமுறை போன் வந்து, பிறகு பேசுவதாகச் சொல்லியனுப்பியதைக் கவனித்தாள் சுகன்யா.

ஸ்ரீராம், சேகரைப் பார்த்துப் பார்த்து பூரித்துக் கொண்டிருந்தான். அவன் பெற்றோர் 'இதெல்லாம் நிஜமாக நடக்கிறதா?' என்கிற இலேசான அவநம்பிக்கையுடன் அமர்ந்திருப்பது போல் தோன்றியது.

நிச்சயதாம்பூலம் முடிந்து, அதே கூடத்தை அவசரமாக ஒழுங்குபடுத்தி, டிபன் பரிமாற ஏற்பாடு செய்தார்கள். மிகவும் வற்புறுத்தி சரஸ்வதியையும் சுகன்யாவையும் கூட முதல் பந்தியில் உட்கார வைத்து விட்டார் சேகரின் அம்மா ராஜேஸ்வரி. ராஜேஸ்வரி – வைத்திய நாதன் தம்பதி மேற்பார்வையிட, சமையற்காரர்கள் தயாரித்துத் தந்த டிபனை சேகரும் அவன் இரு சகோதரிகளுமாகப் பாய்ந்து பாய்ந்து பரிமாறினார்கள்.

"மிஸஸ் ஸ்ரீராம்... உங்களுக்கு இன்னொரு மைசூர்பாகு...?" ஆறடி உடம்பை வளைத்துக் குனிந்து உபசரித்தவனைப் பார்த்து "வேண்டாம்..." என்றாள்.

"இப்படி எல்லாமே வேண்டாம் வேண்டாம்னா எப்படி...?"

"இதெல்லாம் வேண்டாம் சேகர்... வேறொரு உதவி வேணும்..."

"என்ன சொல்லுங்க... ப்ளீஸ்..."

"முதல் உதவி... என்னை மிஸஸ் ஸ்ரீராம்னு கூப்பிடாதீங்க... சுகன்யானே சொல்லலாம்..."

"அப்புறம்...?"

"இரண்டாவது உதவி..." பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஸ்ரீராமை ஒருசில கணங்கள் பார்த்துவிட்டுச் சொன்னாள். "வசந்தியை நீங்க இன்னிக்குப் பார்க்க வேண்டாமா...? அவ நீங்க வரணும்னு ரொம்ப ஆசைப்படறா..."

"கட்டாயம் வருவேன் சுகன்யா... இங்கேயே அவளையும் அழைச்சுட்டு வந்திருக்கலாம். அவ அப்பா அம்மா அதை விரும்பலைன்னு தெரியுது..."

"ஆமாம்... அது வழக்கமில்லைன்னுதான் இன்னிக்குக் கூட்டிட்டு வரலை. நீங்க எப்ப வர்றீங்க...?"

"நீங்கள்ளாம் கிளம்பிப் போனாத்தானே நானும் வரமுடியும்...? இல்லை, இப்பவே

வேணாமா?

தங்க நகை பரிசு

இந்த இருபத்தாறு வாரத் தொடர், ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு கதாசிரியர் பெயரில் வெளியாகி வருகிறது. ஆனால் அவர்களுள் ஒரே ஒரு நபர்தான் இதை எழுதி வருகிறார். தொடரை எழுதியவர் யார்

போயிடுறது ரொம்ப மேலான யோசனைங் கறீங்களா...?" அவன் கண்களில் குறும்பு பளிச்சிட, ஸ்ரீராமையும் அவளையும் பார்த்துக் கேட்டான்.

"இப்ப நீங்க போனாலும் அங்க அவளுக்குத் துணையா பெரியத்தை இருப்பாங்க... நாங்க வந்து சேர்ற வரைக்கும் நீங்க அத்தையோட தாராளமா பேசிக்கிட்டிருக்கலாம்..."

"நீங்க வர்ற வரைக்கும் வசந்தியைக் கண்ணுல கூட காட்ட மாட்டாங்களா...?"

"உங்க அதிர்ஷ்டம் எப்படியோ... முயற்சி பண்ணிப் பாருங்களேன்..." என்றான் ஸ்ரீராம்.

"அடேய்! சேகரா! அடுத்த இலையையும் கொஞ்சம் கவனி. அவா ஏதோ 'வசந்தி'ன்னு பேசினவுடனேயே அங்கேயே நங்கூரம் பாச்சினாப்பல நின்னுட்டேயே..." – வைத்தியநாதன் போட்ட கூச்சல் கேட்டு ஐம்பது விருந்தினரும் கொல்லென்று சிரிக்க, கல்யாண மாப்பிள்ளைகளுக்கே உரிய அசட்டுக் களையுடன் நகர்ந்தான் சந்திரசேகர்.

வீடு திரும்பி, நடந்தவற்றை வசந்திக்கு விவரித்து முடிக்கும் முன்பே ஆஜராகி விட்டான் சேகர். கையிலிருந்து புடைவைக் கவரில் வயலட் நிறம் பளிச்சிட்டது. பளபளவென்ற தாளில் பொட்டலம் கட்டி, ரிப்பன் அலங்காரத்துடன், இன்னொரு கையில் சதுரமாய் ஒரு பரிசு...

"வசந்தி! வசந்தி!" வீடே வெவ்வேறு சுருதிகளில் அவளை அழைத்து அல்லோலகல்லோலப்பட்டது.

உள்ளறையிலிருந்து வெளிப்பட்டவள், ஏற்றிவைத்த குத்துவிளக்கைப் போல் ஜொலிப்பதைப் பார்த்து அசந்து போனாள் சுகன்யா.

சந்திரசேகர் கையில் பொட்டலங்களும் கண்ணில் தவிப்புமாய் செய்வதறியாது நின்று கொண்டிருந்தான். வசந்தி அவன் எதிரே மௌனமாகத் தலைகுனிந்து நின்றாள். சரஸ்வதியும் உள்ளே போய்விட, ராமநாதன் நாற்காலியில் இல்லாத தூசியைத் தட்டி, "உட்காருங்கோ மாப்பிள்ளை" என்று உபசரித்தார். ஸ்ரீராம் சிரிப்பை அடக்கிக் கொண்டு உள்ளறையிலிருந்து இரண்டு மடக்கு நாற்காலிகளை எடுத்து வந்து போட்டான்.

"டிஃப்பனெல்லாம் ரொம்பப் பிரமாதமா இருந்தது..." என்று உபசார வார்த்தைகளால் மேலும் சங்கடமூட்டிக்கொண்டிருந்தார் ராமநாதன்.

ஸ்ரீராம் போட்ட நாற்காலிகளை பெரியத்தையும் குமாரும் ஆக்கிரமித்துக் கொள்ள, வசந்தி தொடர்ந்து நின்று கொண்டிருந்தாள்.

"வசந்தி, மாப்பிள்ளை உனக்குத்தான் ஏதோ கொண்டு வந்திருக்கார்... நமஸ்காரம் பண்ணிட்டு வாங்கிக்கோ..." – பெரியத்தை சொன்னதைக் கேட்டு வசந்தி முன்வர, சேகர் அவசரமாக எழுந்து கொண்டான்.

"நமஸ்காரமெல்லாம் வேண்டாம். ப்ளீஸ்...!" பொட்டலங்களை அவளிடம் நீட்டினான். வாங்கிக்கொண்ட வசந்தி தொடர்ந்து மௌனமாய் நிற்பதைப் பார்த்தாள் சுகன்யா.

"அப்பா, நாம வேணா அப்படி வாசல் வராண்டாவில் உட்காருவோமா...?" வசந்தியும் சேகரும் தனிமையில் பேசிக் கொள்ளட்டும் என்பதற்காக நாசூக்காய் மற்றவர்களை அழைத்தாள் சுகன்யா.

"வாசல்லாம் ஒரே புழுக்கம்! இங்கேயே இருப்போம்..." பெரியத்தை அவள் திட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டாள்.

ஜில்லென்று மோர் கொண்டு வந்து கொடுத்தான் ஸ்ரீராம்.

"ஏதாவது சாப்பிடு சுகி... இந்த மாதிரி சமயத்துல ராத்திரி பட்டினியிருக்கக் கூடாதுன்னு அம்மா சொல்லிக் கேட்டிருக்கேன்."

"நான் எங்க பட்டினியிருக்கேன்... அதான் சேகர் வீட்லே மூக்கைப் பிடிக்கத் தின்னாச்சே..."

"அது நாலு மணிக்கு... இப்ப மணி ஒன்பதரை..."

"வேண்டாம் ராம்! ரொம்ப திணறுது... இது போதும்... பாவம், சேகர்தான் ஏகப்பட்ட எதிர்பார்ப்போட வசந்தியைப் பார்க்க வந்துட்டு ஏமாத்தத்தோட திரும்பிப் போக வேண்டியதாயிடுத்து..."

"அவனையும் வசந்தியையும் தனியா பேச விடலைங்கறையா...? ரொம்ப அவசரப்படாதே! அதெல்லாம் தானா இயல்பா நடக்கும்.... அவன் போகும்போது என்கிட்டே என்ன சொல்லிட்டுப் போனான் தெரியுமா...?"

"என்ன...?"

"நாளைக்கு பாம்பே போறானாம். வர்ற நாலு நாள் ஆயிடும். வசந்திகிட்டே சொல்லிடுங்க.. ஞாயிற்றுக்கிழமை அன்னைக்கு அவளை வெளியே லஞ்சுக்குக் கூட்டிட்டுப் போகப் போறேன்... தயவுசெய்து உங்கப்பாகிட்டே சொல்லித் தயார்ப்படுத்தி வையுங்கன்னான்..."

"சரியான [illegible]

என்பதைக் கண்டுபிடிப்பது உங்கள் சாமர்த்தியம். கடைசி வாரம் வரை காத்திருந்து, அந்த இதழில் வெளியாகும் கூப்பனில் விடை எழுதி அனுப்புங்கள். சரியான விடைக்கு, தங்க நகை பரிசு! பலர் சரியாக எழுதினால் குலுக்கலில் ஒருவரே பரிசு பெறுவார். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

கிட்டே கேட்க வேண்டியதுதானே..."

"யாரு அவனைக் கேட்க விட்டாங்க... ஏதோ எக்ஸிபிஷன் பொம்மை மாதிரி அவனைச் சுத்தி மொச்சுத்தள்ளி..."

"ஸ்ரீராம்... ஒரு யோசனை சொல்லட்டுமா...?"

"என்ன யோசனை...? யோசிக்கிற மூடெல்லாம் இப்ப எனக்கு இல்லை..." அவள் கையிலிருந்த மோர் தம்ளரை வாங்கித் தரையில் வைத்துவிட்டு, கட்டி அணைத்துக் கொண்டான்.

அவன் அணைப்பில் ஒடுங்கியபடி சொன்னாள் : "அவங்க இரண்டு பேரும் எப்ப வேணும்னாலும் இங்க – நம்ம வீட்ல சந்திக்கலாமே..."

"ஐயோ! தப்பித் தவறிக் கூட அப்படியொரு யோசனையை வெளிப்படுத்திடாதே..."

"ஏன்...?"

"அப்புறம் நீயும் நானும் நினைச்ச நேரத்தில் இந்த மாதிரி இருக்க முடியுமா..."

"சே! நான் சீரியஸா சொல்றேன். நீ என்னமோ விளையாட்டா பேசிக்கிட்டிருக்கே..."

"நானும் சீரியஸா சொல்றேன். அது மட்டும் வேண்டாம். அப்பாவோ, அம்மாவோ அவங்களாவே அப்படி யோசனை சொன்னா ஓ.கே. ஆனா நம்ம யோசனையா அதைச் சொல்லவே சொல்லாதே... ஏற்கெனவே நாம எல்லா சம்பிரதாயங்களையும் மீறிட்டோம்ங்கற மனக்கசப்பு அவங்களுக்கு. இப்போ வசந்திக்கும் அதைக் கத்துக் குடுத்தோம்னு நினைப்பாங்க..."

"இதுல என்ன சம்பிரதாய மீறல் இருக்கு...? அவங்க இரண்டு பேருக்கும்தான் கல்யாணம் நிச்சயமாயிருச்சே... அப்புறம் பேசிப் பழகறதுல என்ன தப்பு...?"

"அப்படி அப்பா – அம்மா நினைக்கணுமே... அவங்க பயப்படுவாங்க – எனக்குத் தெரியும். அதனால இதை இத்தோட விட்டுடு..."

"சரி... கல்யாணத்துக்கு இன்னும் சரியா இரண்டு மாசந்தானே இருக்கு... பணத்துக்கு என்ன ஏற்பாடு பண்ணப் போறே..."

"அந்தக் கவலையும் நமக்கு இல்லை...."

"என்ன சொல்றே...?"

"அப்பா பணம் வேணாம்னுட்டார்! எல்லாம் அவரே பார்த்துப்பாராம்..."

"ஓ..."

சற்று நேரம் மௌனம் நிலவியது.

"இன்னமும் அவர் உன் பேர்ல வருத்தமும் கோபமும் படறார் இல்ல ஸ்ரீராம்...?"

ஸ்ரீராம் பதில் பேசாமல் அவள் காதோரக் கூந்தலைத் தன் ஆள்காட்டி விரலில் சுற்றி, சுழற்றி இழுத்தான் இலேசாக.

"ஏய்! வலிக்கிறது!..."

"சாரி...! கோபமோ, வருத்தமோ? இல்ல, இவ்வளவு தூரத்துல வைச்சிருந்தா போதும்ங்கற முடிவோ... தெரியலை. 'நீ தனியா இருக்கே, உனக்கே செலவு நிறைய இருக்கும்; பணம் வேண்டாம்னுட்டார்."

"அதென்னவோ உண்மைதான். செலவு நிறையதான் ஆறது. ஆனா, அதுக்காக நீ பணம் ரெடி பண்ணாம இருக்காதே ஸ்ரீராம்.... ஆபீஸ்ல ராஜுகிட்டே சொல்லி 'லோன்' எடுத்துக்கோ... ஷார்ட் டெர்ம் டெபாஸிட்டா போட்டு வைக்கலாம்... எனக்கென்னவோ நம்ம பணம் கண்டிப்பா தேவைப்படும்னு தோணுது..."

"சரி, பண்ணிடுவோம் மந்திரியம்மா...! வேற என்ன தோணுது...? நமக்குப் பிறக்கப் போறது பொண்ணுன்னு தோணுதா, பையன்னு தோணுதா...?"

"ரொம்ப அவசரப்படாதேன்னா கேட்கவே மாட்டேங்கறியே... ஸ்ரீராம்!"

"அப்படித்தான் அவசரப்படுவேன்.. அப்பா அம்மாகிட்டேயெல்லாம் சொல்ல வேண்டாமா...? கல்கத்தாவுக்கு லெட்டர் போட வேண்டாமா...?"

"முதல்ல டாக்டர்கிட்டே போவோம். நாளைக்கு நீ ஆபீஸ்லேருந்து கீதா நர்ஸிங் ஹோம் போன் பண்ணி கைனகாலஜிஸ்ட் கிட்டே அபாயின்ட்மென்ட் வாங்கு..."

"நான் ஏற்கெனவே பண்ணிட்டேன். அடுத்த திங்கள்கிழமை சாயந்திரம் ஏழு மணிக்கு வரச் சொல்லிருக்காங்க..."

"ஸ்ரீராம், ரியலி...? நான் ஒண்ணுமே சொல்லாம நீயேவா பண்ணினே...?"

"ஆமாம். நானேதான் பண்ணினேன். நீ மட்டும் என் வாயைக் கட்டிப் போடலைன்னா இந்நேரம் உலகம் பூரா தம்பட்டமும் அடிச்சிருப்பேன்..."

"அடிச்சுடுவோம்... இன்னும் ஒரு வாரம் தானே? கொஞ்சம் பொறுத்துக்கோ..." என்றாள் சுகன்யா.

ஆனால் கீதா நர்ஸிங்ஹோமில் நல்ல செய்தியை உறுதிப்படுத்திக் கொண்ட பிறகு அவள் மனம் மாறிப்போனது.

(தொடரும்)

"ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் கொடுத்துட்டால் போதும். கமுக்கமாய் முடிச்சுடலாம்" என்றார் கார்ப்பரேஷன் வரி வசூலிப்பவர்.

யோசனையாய் அவரைப் பார்த்தேன். நல்ல பருத்த தேகம் அவருக்கு. ஊரான் காசிலேயே உடம்பை வளர்த்திருப்பார் போலும்.

"என்ன சார், இப்படி யோசிக்கறீங்க?



வீட்டு வரிங்கறது இந்த வீடு இருக்கறவரைக்கும் கட்டியே ஆகணும். ரெக்கரிங் டைப் பணம். நான் கேட்டதைக் கொடுத்துட்டா அட்ஜஸ்ட் பண்ணி போட்டுடலாம்"

லஞ்சம் கேட்பதை இவ்வளவு தெளிவாக, எந்தவித உறுத்தலும் இல்லாமல்கூட கேட்க முடியுமா? சித்திரமும் கைப்பழக்கம் போல, இதுவும் பழகிப் போய்விட்டது போலும்.

ஆனால் நான் அப்படியில்லை. காந்திஜி அளவுக்கு இல்லாவிட்டாலும் ஓரளவுக்கு நியாயஸ்தன். 'பிளாக்'கில் டிக்கெட் வாங்கி சினிமா பார்க்க மாட்டேன். கோவில் காவல்காரனிடம் பைசா தள்ளி வரிசையில் முந்தி சாமி பார்க்க மாட்டேன். ஆபீசில் டீ டைம், லஞ்ச் டைம் என்று வெட்டியாய் எப்போதும் பொழுதை ஓட்ட மாட்டேன. ஓரளவுக்கு மனச்சாட்சிக்கு பயந்தவன்

லஞ்சம் வாங்குவது எவ்வளவு தவறோ, அது போலக் கொடுப்பதும் குற்றம்தானே!

நான் லஞ்சத் தொகையை தருகிறேன் என்றும் சொல்லாமல், தொகையை குறைக்கச் சொல்லி பேரமும் பேசாமல் ஜடம் போல அமர்ந்திருப்பது அவரை வெறுப்[illegible] வேண்டும்.

கிருஷ்ணா

"என்ன சார் சொல்றீங்க? எனக்கு நேர மாகுது?" என்றார்.

"யோசனை பண்ணி நாளைக்கு சொல் றேன்" என்றேன்.

உடனடியாய் மறுக்கவும் பயம். என் கொள் கைகளால் வீட்டில் ஏற்கனவே கோபமாய் உள்ளனர்.

நினைத்தது போலவே மனைவி பாய்ந்தாள்.

"ஆயிரத்து ஐநூறுதானே கேட்கறாங்க. கொடுத்துத் தொலைங்க. வீட்டு வரியிலே முன் னூறு, நானூறு குறைச்சுடலாம். எதிர்வீட்டுல அப்படித்தான் செஞ்சிருக்காங்க. அஞ்சே தடவையிலே கொடுத்த பணம் நேராயிடும்" என்றாள்.

காலேஜ் படிக்கும் மகன் வேறு அவளுக்கு ஆதரவு.

"லஞ்சம் எப்படி நேராயிடும்?" என்று நினைத்துக் கொண்டேன்.

அடுத்தநாள் மாநகராட்சி ஆளைப் போய்ப் பார்க்கவில்லை.

பத்தாவது நாளே பலன் தெரிந்தது. ஆயி ரத்து இருநூறு ரூபாய் வீட்டு வரி என்று நோட்டீஸ் வந்தது.

"ஐயோ, ஐயோ" என்று தலையில் அடித் துக் கொண்டாள் மனைவி.

"நாம ஏழு சதுரம்தான் கட்டியிருக்கோம். எதிர்வீடு பதினோரு சதுரம். வாடகைக்கு வேற விட்டிருக்காங்க. தொள்ளாயிரம் ரூபாய் தான் அவங்களுக்கு வரியே. இப்படி ஒரு மனு ஷனோட குடும்பம் நடத்தணும்னு என் தலை யெழுத்து!"

அவள் புலம்பலைக் கையாலாகாதவனாய் வேடிக்கை பார்த்தேன்.

"அதிகாரிக்கு மனு கொடுங்க சார். ஒரே ஏரியா. எதிர் வீடு. உங்க வீட்டை விடப் பெரிசு. அதை சுட்டிக்காட்டியே கேளுங்க. அதோட நான வீட்டை, கடன் வாங்கி கட்டியிருக்கேன். லோன கொடுத்தவங்களுக்கு பணத்தை மாசாமாசம் திருப்பித் தர வேண்டியிருக்கு. கஷ்ட ஜீவனமாயிருக்கு. அதனாலே வரியைக் குறைக்கணும்னு ஒரு விண்ணப்பம் எழுதுங்க"

ஆபீஸ் நண்பர்கள் தூண்டி விட்டனர். கஷ்ட ஜீவனம் என்பதும் உண்மைதான். மாசம் ஆயிரத்து நானூறு ரூபாய் போல எல்.ஐ.சிக்குக் கட்டுகிறேன். சொந்த வீட்டுக் கனவுக்காக செய்யும் தியாகங்களில் இதுவும் ஒன்று.

மனு எழுதி மாநகராட்சி அதிகாரியிடம் சமர்ப்பித்தேன்.

இருபது நாளில் பதில் வந்தது.

"தங்களது மனு சம்பந்தமான விளக்கத்தை நேரிடையாக வந்து சொல்லுங்கள்" என்றது வாசகங்கள். சாணித்தாள் பேப்பர் ஓரளவு நம் பிக்கை தர, அவர்கள் குறிப்பிட்டிருந்த தேதியில் அங்கு ஆஜரானேன்.

அதிகாரிதான் வரவில்லை. ஏதோ டிரெ யினிங்காம். நேற்றிலிருந்து சென்னை போய் விட்டாராம். பத்துநாள் கழித்து வரச் சொன் னார்கள். அரைநாள் லீவு அம்பேல்.

மீண்டும் பத்தாவது நாளில் படை யெடுத்தேன்.

"மந்திரி வரார் இன்னிக்கு. சர்ப்ரைஸ் விசிட்(!) மாநகராட்சிக்கு. இன்னிக்கு யாரையும் பார்க்க முடியாது"

இப்படியாக அலைந்ததில் நாலு நாள் விடுப்பு குறைந்ததுதான் பலன்.

பழைய பருத்த ஆள் எதிரே வந்தான். பில் கலெக்டராம் அவன் பதவி அங்கே.

"என்ன சார் நீங்க. சுத்த பைத்தியக்காரராய் இருப்பீங்க போலிருக்கே" என்று சிரித்தான். கிண்டல் அதில்.

"எதுக்கு அலையறீங்க இப்படி?" என்று வயதான அட்டெண்டர் கேட்டான். அதிகாரி யின் கீழ் நேரடியாய் வேலை செய்பவன்.

சொன்னேன். அழுதேன் என்பதுதான் சரி.

"உங்களைப் பார்க்க பாவமாயிருக்கு. பெரு

போட்டிக்கதை — 9



எங்கள் 'அக்ஷய பாத்திரம்' சீட்டு விழாவில் சேர்ந்து
நம்பிக்கையுடன் வாழ்க்கையை எதிர்கொள்வீர்.
Super Bonanza Gifts
அக்ஷய பாத்திரம் சீட்டு விழா
18th to 31st October '96
1 வது பரிசு - ஒன்று
சிங்கப்பூர் சென்றுவர இருவருக்கான டிக்கட்
2 வது பரிசு
அல்ட்ரா வெட் கிரைண்டர் - 5 பரிசுகள்
3 வது பரிசு
மிக்ஸர் கிரைண்டர் - 10 பரிசுகள்
4 வது பரிசு
டிராவல் பேக் - 100 பரிசுகள்

ஒன்று கூடி வளமோடு வாழ்வோம். ராம் காஷ்யப். உங்களது தேவைகளை புரிந்து கொள்கிறது. அத்துடன் அவற்றை நிறைவேற்றும் வழிமுறைகளைத் தனது பல்வேறு சீட்டுத் திட்டங்கள் மூலம் அளிக்கிறது. ராம் காஷ்யப் வாடிக்கையாளருடன் வலுவான உறவை வளர்த்துக்கொள்ள முக்கியத்துவம் கொடுக்கிறது. ஒழுக்கம், நேர்மை, நம்பிக்கை, இவற்றால் வலுப்பெறும் உறவு. ஆயிரக்கணக்கானவர்களை ஒருங்கே அரவணைத்துக்கொண்டு விரைவாக வளரும் உறவு. 'அக்ஷய பாத்திரம்' மூலமாக நாம் மீண்டும் ஒன்று கூடி வளமடைவோம்.

அறிமுகப்படுத்துவோருக்கான பரிசு :

உங்கள் நண்பர்களும் வாழ்க்கையை தலை நிமிர்ந்து நம்பிக்கையுடன் எதிர்நோக்கிட ராம் காஷ்யப் வகுக்கும் வழியை அறிந்து கொள்ள எங்களுடைய அலுவலகத்திற்கு அழைத்து வாருங்கள். இணையற்ற நன்மைகள் உடைய எங்களுடைய சீட்டு திட்டத்தில் சேர்த்திடுங்கள். கவர்ச்சிகரமான பரிசுகளை எடுத்து செல்லுங்கள்.

சூப்பர் பொனான்ஸா பரிசு :

நீங்கள் அறிமுகப்படுத்தும் சீட்டின் மதிப்பு ரூ.50,000/- இருக்குமாயின், உங்களுக்கு சிறப்பு பரிசு மற்றும் சூப்பர் பொனான்ஸா கூப்பன் கிடைக்கும். ரூ.50,000/- என்பது ஒரே 50,000/- ரூபாய் சீட்டு அல்லது இரண்டு 25,000/- அல்லது ஐந்து 10,000/- சீட்டாக இருக்கலாம்.

மேலும் விவரங்களுக்கு எங்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்க.

வரிசை எண்	சிட் மதிப்பு ரூ. மாதங்கள் ரூ.	சந்தாதாரருக்கான பரிசு	அறிமுகப்படுத்துவோருக்கான பரிசு
1	250 X 40 = 10,000	வியு 1500 ஜக்கு	S.S.பௌல்
2	400 X 25 = 10,000	வியு 1500 ஜக்கு	S.S.பௌல்
3	500 X 30 = 15,000	கிச்சன் ஃபிரஷ் A.T.C. - 3 நெம்பர்	S.S.பிளேட்
4	1000 x 25 = 25,000	ஸ்டோரேஜ் டிரம் - 25 லிட்டர்	S.S.டிஷ்
5	625 X 40 = 25,000	ஸ்டோரேஜ் டிரம் - 25 லிட்டர்	S.S.டிஷ்
6	750 X 40 = 30,000	டைட்டன் - 2 லிட்டர் வாட்டர் பாட்டில்	C.B.பருப்பு சட்டி
7	1250 X 40 = 50,000	கீப் ஃப்ரஷ் - 5, 7, 10 லிட்டர்கள்	C.B.டோபி
8	2000 X 25 = 50,000	கீப் ஃப்ரஷ் - 5, 7, 10 லிட்டர்கள்	C.B.டோபி
9	4000 X 25 = 1,00,000	ஒட்டோ - 4.5 லிட்டர் டிராவல் கெக்	C.B.கடாய்
10	5000 X 30 = 1,50,000	டிசைனர் III லஞ்ச் பேக்	C.B.சாஸ் பேன்

• நுழைவுக் கட்டணம் தனி • முன்னனுமதி பெறப்பட்டது

MORE THAN 10000 GIFTS

Ram Kaashyap
Chits Private Limited
Member Ram Kaashyap Group

ஈடில்லா சேமிப்பு. இணையற்ற தேர்வு

நிர்வாக அலுவலகம் : 1/1, சர் தேசிகா ரோடு, (ஆழ்வார்பேட்டை சிக்னல் அருகில்), மைலாப்பூர், சென்னை 600 004. போன் : 4970205, 4998325.

கிளைகள் : சென்னை : • மேற்கு மாம்பலம் போன்: 4896638 • **அண்ணா நகர்** போன்: 610979 • அடையாறு போன்: 418081 • தி.நகர் போன்: 4341513 • **கோயம்புத்தூர்** போன்: 231886 • **கும்பகோணம்** போன்: 24221 • **மதுரை** போன்: 741802 • **தஞ்சாவூர்** போன்: 25871 • **திருச்சி** போன்: 704752 • **ஈரோடு** போன்: 79822 • **சேலம்** : 61, செர்ரி ரோடு, சேலம் – 637 007 • **திருவாரூர்**: 80-A, தெற்கு வீதி, திருவாரூர் – 610 002 • **திருநெல்வேலி** * போன்: 23808 • **காரைக்குடி** * : நெ.1, T.T.நகர், முதல் தெரு, காரைக்குடி 630 001 • **திண்டுக்கல்** * : 24, புது அக்ரஹாரம், திண்டுக்கல் – 624 007.

Insight-449

அருள்வாக்கு



ஒவ்வொரு மந்திரமும் ஒரு தேவதையைக் குறித்தது. ஆகையால் மந்திரம் ஒவ்வொன்றுக்கும் ஒரு தேவதை உண்டு; அதன் மீட்டரான சந்தஸ் (காலப்பிரமாணம்)உண்டு; அதை லோகத்துக்குத் தந்த ரிஷியும் உண்டு. எந்த ரிஷியின் மூலமாக ஒரு மந்திரம் லோகத்திற்கு வந்ததோ அந்த ரிஷி அந்த மந்திரத்தின் ரிஷியாவார். அவர் பெயரைச் சொல்லித் தலையில் கையை வைத்துக் கொள்ளுவது அவருடைய பாதங்களை சிரஸில் வைத்துக் கொள்ளுவதற்கு அறிகுறி. ரிஷிகளால் தான் அந்த மந்திரங்கள் நமக்குக் கிடைத்தன; ஆகையால் அவர்களுக்கு முதலில் வணக்கம் செலுத்த வேண்டும்.

சந்தஸைச் சொல்லி மூக்கில் கை வைக்கிறோம். மந்திரத்தின் சப்தத்தை ரக்ஷிப்பது சந்தஸ். அது அதற்குப் பிராணன் போன்றது. அதனால் பிராண ஸ்தானமாகிய மூக்கில் கையை வைக்கிறோம். மூச்சு இல்லாவிட்டால் பிராணன் இல்லையல்லவா ? அதைப்போல. மந்திரங்களுக்கு மூச்சாக இருப்பது சந்தஸ். வேதம் என்ற மொத்த ரூபத்துக்கு. சிக்ஷை மூக்கு; சந்தஸ் பாதம் என்றால், வேதத்திலுள்ள மந்திரங்கள் என்பதன் ரூபத்துக்குச் சந்தஸே மூக்கு, அதாவது ஜீவாதாரமான சுவாஸ அவயவம்.

அந்த மந்திரத்தின் அதி தேவதையைத் தியானம் செய்ய வேண்டும். தேவதையின் ஸ்வரூபத்தை ஹிருதயத்தில் தியானம் செய்து மந்திர ஜபம் ஆரம்பிக்க வேண்டும். அதற்காகத்தான் தேவதையைச் சொல்லி ஹ்ருதயத்தைத் தொடுகிறோம்.

சந்தஸ் மந்திரங்களுக்கு ஆதாரம், கால் என்ற ஆதாரத்தின் மேல் நாம் நிற்பதுபோல், வேதபுருஷன் சந்தஸாலேயே நிற்கிறார்.

சந்த் : பாதோ வேதஸ்ய ॥

என்று சொல்லியிருக்கிறது. காலில்லாமல் நிற்க முடியாது. வேதமந்திரங்களை சந்தஸின் அமைப்பே நிற்க வைக்கின்றது.

-ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்)

மையாகவும் இருக்கு. நான் அந்தக்காலத்து ஆளு. எனக்கும் இதெல்லாம் பிடிக்காது. அதனாலேயே என்னை இங்கே ஒதுக்கிடுவாங்க" என்றான்.

அட, என்னைப் போல் ஒருவன்!

சந்தோஷமாய்ப் பார்த்தேன்.

ஆனாலும், என் அலைச்சலும் வீட்டின் கிண்டலும் அடிக்கடி லீவு போடுவதால் ஆபீசில் மானேஜரின் சிடுசிடுப்பும் என்னைக் குழப்ப ஆரம்பித்தன.

ஒரு பலவீன தருணத்தில் மீண்டும் அந்த குண்டு பில் கலெக்டரை நேருக்கு நேர் சந்தித்தேன். அதுவும் வீட்டுக்கு அருகிலேயே.

நான் மட்டும் யோக்கியமாய் வாழ்ந்து என்ன பயன்? விரக்தி மேலிட்டது.

அழைத்தேன் வீட்டுக்கு. எடுத்தேன் பணத்தை. கொடுத்துவிட்டேன்.

"இதை முன்னாடியே செஞ்சிருந்தா இவ்வளவு அலைச்சலும், கஷ்டமும் கிடையாதுல்ல. கவலைப்படாதீங்க சார். நாளை மறுநாள் ஆபீஸ் வாங்க."

அவன் சொன்னது போலவே மாநகராட்சி கட்டடத்துக்குள் நுழைந்தேன். நடையில் துள்ளல.

எதிரே அந்த அட்டெண்டர் வந்தான். அவனைப் பார்க்கவே கூச்சமாயிருந்தது.


"கை கொடுங்க சார்" என்றான் வலிய வந்து.

புரியாமல் பார்த்தேன்.

"புது கமிஷனர் நாலு நாள் முன்னாடி பதவியேத்திருக்காரு. இளம் வயசு. கறாரான ஆள். உங்க மனுவைப் பார்த்துட்டு, வரியை குறைக்கச் சொல்லி உத்தரவு போட்டிருக்கார் எழுநூறு ரூபாய்னு அதுல எழுதியிருந்தது தர்மம்தான் என்னிக்கும் ஜெயிக்கும் சார்" என்றான் உற்சாகமாய்.

நான் பேச்சற்றுப் போனேன்.

சுஜாதா பக்கம்



மிஸ் வோர்ல்ட் போட்டி பெங்களூரில் நடத்தப் போவதாக அமிதாப்பச்சன் சொன்னதும் சில பெண்ணுரிமை சங்கத்தினர், நஞ்சுண்டசாமி, முஸ்லிம் மாதர்கள் சங்கம் எதிர்த்திருக்கிறார்கள். சில பெண்கள் அந்தப் போட்டி மட்டும் நடந்தால் தம்மை எரித்துக் கொள்வோம் என்று சவால் விட்டிருக்கிறார்கள். பெட்ரோல் விற்கும் விலையில் அதெல்லாம் தேவையில்லை. கர்நாடக முதல்வர் மிஸ் வோர்ல்ட் போட்டியை அவசரப்பட்டு வரவேற்றிருக்க வேண்டாம் என்று தோன்றுகிறது. உணர்ச்சி வசப்படாமல் இந்தப் போட்டியைப் பார்த்தால் இதனால் நம் இந்திய தேசத்துக்கு என்ன நன்மைகள் என்பதை யோசிக்கலாம்.

ஏபிஸி என்னும் அமிதாப்பச்சன் கார்ப்பரேஷனுக்கு சில்லரை நிறைய புரளும். நிறைய ரூபாய் செலவழித்து நிறைய டாலர் வரும். வெளிநாட்டவர் வருகையால் சுற்றுலா வருமானம் அதிகரிக்கும். இதனால் நமக்கு ஒரு கோடி டாலர் கிடைக்கும் என்று அவர்கள் மிகையாகச் சொல்லட்டும். இந்தியாவின் பாலன்ஸ் ஆஃப் பேமெண்டுக்கு தேவைப்படுவது நாற்பத்தைந்து பிலியன்– அதாவது நாலாயிரத்து ஐநூறு கோடி டாலர் சம்பாதித்தால் தான் நம் கடன் தீரும் என்று உலக வங்கி சொல்கிறது. உலக அழகிகளால் நம் அன்னிய செலாவணி நிலை ஆரோக்கியமாகும் என்று யாராவது சொன்னால் 'ஹ' என்று சிக்கனமாகச் சிரிக்கவும்.

ஏறக்குறைய எல்லா உலக நாடுகளிலிருந்தும் இளம்பெண்கள் வந்து பல்வேறு அழகான உடைகளிலும் நீச்சல் உடையிலும் டாக் டாக் என்று நடந்து, நீதிபதிகள் கேட்கும் முட்டாள்தனமான கேள்விகளுக்கு பதில் அளிப்பார்கள்.

சில ஸ்டாக் கேள்வி – பதில்கள் : 'மீண்டும் பிறந்தால் யாராகப் பிறக்க விரும்புவீர்கள்?'

பதில் – அன்னை தெரஸாவாக

"மிஸ் வோர்ல்டு பதவி கிடைத்தால் உலகத்துக்கு என்ன செய்வீர்கள்?"

ஆப்ரிக்காவில் ஏழைக் குழந்தைகளுடன் ஒரு நிமிஷம் போஸ் கொடுப்பேன்"– இவ்வாறு.

தேசத்தின் பணக்காரர்கள் தரைமட்டத்தில் உட்கார்ந்திருக்க, அழகிகள் உயரத்தில் நடந்து செல்வதை சிகரெட் பிடித்துக் கொண்டோ ஸ்காட்ச், ஷாம்பேன் வகையறாக்களுடனோ ரசிப்பார்கள். 'வாயரிஸம் (voyeurism) என்று ஒரு வார்த்தை ஆங்கிலத்தில் உள்ளது. அதற்கு சரியான அர்த்தம் 'ஜொள்ளு'தான். 'பணக்கார ஜொள்ளு' உபத்திரவமில்லாமல் எட்டிப் பார்ப்பது.

பெண்களை அலங்காரப் பொருள்களாகப் பார்க்கும் பழக்கத்தை பெண்கள் இப்போது மிகவும் எதிர்க்கிறார்கள். இவர்களுடைய பயாலாஜிக்கல் கடமைகளையும் மறுக்கிறார்கள். இந்த சூழ்நிலையில் மிஸ் வோர்ல்ட், மிஸ் யுனிவர்ஸ் எல்லாம் மேம்போக்கான சந்தோஷங்கள். அது நடைபெறும் சின்னசாமி ஸ்டேடியத்துக்கு வெளியே அந்த தி[illegible] பெண் குழந்தைகள் பிச்சை எடுக்காமல் கர்நாடக அரசு பார்த்துக் கொள்ளும். இது ஒன்றுதான் நிகர லாபம்.

புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள்தாம் இப்போது நிஜமான கவிதைகள் எழுதுகிறார்கள் என்று நான் அடிக்கடி சொல்லி வருகிறேன். அதை நிலையுறுத்தும் வகையில் நவம் அரவிந்தன் அவர்களின் 'காத்திருத்தல்' என்கிற கவிதைத் தொகுப்பு வந்திருக்கிறது. (இளம் பிறை பதிப்பகம், 375 ஆர்க்காடு சாலை, சென்னை - 24)

அரவிந்தன் ஜெர்மனியில் இருக்கிறார். அவர் தந்தையும் (நவம்) சிறுகதை எழுத்தாளர், ஆசிரியர். பெற்றோர் சென்னையில் இருக்கிறார்கள். மட்டக்களப்பை அடுத்த ஆரைப்பற்றையில் வாழ்ந்த தினங்களின் நினைவுகளின் கதகதப்பில்தான் நிஜ நாட்களின் வசதிகளையும் அவதிகளையும் சமாளிக்கிறார்கள். நவம் அரவிந்தன் கேட்கும் சில கேள்விகள் சங்கடப்படுத்துகின்றன.

என் அப்பா
தாத்தா
தாத்தாவுக்குத் தாத்தா
என்ன செய்துபோனீர்கள்?
நதிகளும் குளங்களும்
எங்கே இப்போது?
நாங்கள் யாது
குற்றம் செய்தோம்?

பல கவிதைகளில் 'ஹைக்கூ'வின் காட்சிச் சிக்கனம் தெரிகிறது :

"நீயும் நானும்
கடைசியாகப் பார்த்த
சினிமா டிக்கெட்
குளியலறையில்
பாதி கஸ்தூரி மஞ்சள்
கொடியில்
உன் கடைசி நேரக் களைவுகள்.

தற்காலத் தமிழ்க் கவிதை ஐரோப்பாவிலும் பாரிசிலும் கனடாவிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறது.


கடலோரக் கொலைகள்
போலீஸ் ஸ்டேஷனில்...
ஆ! தங்க பிஸ்கெட்டுகள்!
உண்மையைச் சொல்லிடறேன். அடிச்சு கிடிச்சு பண்ணாதீங்க. தாங்காது. பிரதீப் ஒரு கள்ளக் கடத்தல் மன்னனோட கையாள். 1985ல்....
...தூத்துக்குடி துறைமுகத்தில் கஸ்டம்ஸ் சோதனை....
ஓகே! நெக்ஸ்ட்!
...ஆனா, நகர எல்லை தாண்டறதுக்குள்ள மோப்பம் பிடிச்சு....
அதோ போறான்; சேஸ் பண்ணு; விடாதே!
...டிமிக்கி கொடுத்துட்டு இந்த உவரி கிராமத்துல ஏகாந்த கடற்கரைப் பகுதில...
என் ஆடைகள் பிஸ்கட் கடத்துவதற்காகவே ஏராளமான சின்னச் சின்ன பாக்கெட்டு களுடன் உருவான வையாச்சே!
...தங்க பிஸ்கெட்டுகளால் பெட்டியை நிரப்பி குழிதோண்டிப் புதைச்சான். உள்ளாடைகளில் பாக்கி ஒருசில பிஸ்கெட்டுகளுடன்...
சரணடையறேன்!


கொஞ்ச காலம் கம்பி எண்ணிய பிறகு, பம்பாய் சென்று முதலாளியிடம்...
எல்லா தங்கத்தையும் கைப்பற்றிட்டாங்க, பாஸ்! ஸாரி.
கெட்அவுட்!
சில வருஷங்கள் சென்று கடத்தல் மன்னன் இறந்து விட...
நாகராஜ்! இனிமே பயமில்லை. புதையல் தேடலாம். உதவிக்குத் தமிழ் பேசற நீ தேவை.
ஆல் ரைட்.
ஆராய்ச்சின்னு பொய் சொல்லி பேனா நண்பன் நந்துவின் உதவி கேட்டே, சரி. அந்தப் பொண்ணு...?
என் பெண்டாட்டி மாதிரி நடிக்கணும்; சமைச்சுப் போடணும்...
...ஆராய்ச்சி குறிப்பு எடுக்கிறதா காட்டிக்கணும்; தேவைப்பட்டா கண்சிமிட்டி சொக்குப் பொடி போடணும். அதுக்காக அழைச்சு வந்தோம்.
வேற வழியில்லே ஸார். அவங்களை விலைக்கு வாங்க முடியலே. போலீஸுக்குப் போறதா பயமுறுத் தினாங்க.
ஆனா பெட்டியைப் புதைச்ச இடம் மண் மேடிட்டுப் போக, பல நாள் தேடும்படி ஆகிவிட்டது.
பாவிங்களா! உங்க திட்டம் நல்லா நிறைவேறியிருக்கும். ரெண்டு கொலைங்களைச் செய்ததுதான் சந்தேகத்தைக் கிளப்பி டுச்சு!


நாகராஜும் பிரதீப்பும் கைதாக, பண்ணை வீட்டில்...
உனக்கு எப்படி நன்றி சொல்வேன் நந்து? பாட்டரி லைட்ல கல் வீசி உடைச்சுட்டு, நாகராஜனைக் குழியில் தள்ளிட்டு என்னை மீட்டு வந்தே!
'சமைச்சுப் போடவும் ஆராய்ச்சி குறிப்பெடுக்கவும்தான் வந்தேன்; ராத்திரில அவங்க போனது, வந்தது எதுவும் எனக்குத் தெரியாது'ன்னு சொல்லி தப்பிச்சுக்கோ!
எதுக்கு என்னை காப்பாத்தறே?
நீதான் என்னோட முதல் காதலி ஆஷா! ஐ லவ் யூ!
உனக்கு ஏத்தவ நான் இல்லே. என்னிக்காவது ஒரு நல்ல ஆஷாவை சந்திப்பே!
விடியற்காலை ஆஷாவைத் தேடி மதிவாணன் வர...
பாவம் ஸார், நரிக்கூட்டத்துக்கு மத்தில சிக்கின ஆட்டுக்குட்டி மாதிரி...
நீ பெரிய ஆளுடா, நல்லா டியூஷன் நடத்தியிருக்கே!
சில தினங்கள் சென்று...
டியர் நந்து, உன்னைப் போல நண்பனாகப் பெற்றதில் மகிழ்ச்சி. நேரில் சந்திப்போமா? அன்புடன், அனுஷா
அடக் கடவுளே! ஆஷா போய் அனுஷாவா! இதென்ன புதுக் கதையோ!

(முற்றும்)

இரண்டு முறை சிறந்த நடிகைக்கான தேசிய விருது வாங்கிய நடிகை அர்ச்சனா இப்போது எப்படி இருக்கிறார்? எங்கே இருக்கிறார்? சினிமாவில் நடித்துக் கொண்டுதான் இருக்கிறாரா? அவரையே சந்தித்துக் கேட்டபோது....

"தமிழில் நான் நடிக்கவில்லை என்பது வாஸ்தவம்தான். ஆனாலும் தெலுங்கு, கன்னடம், மலையாளப்படங்களில் நடிக்க வாய்ப்புகள் வந்து கொண்டுதான் இருக்கின்றன. நானும் நடித்துக் கொண்டுதான் இருக்கிறேன். அண்மையில் 'கன்ஹூரே' என்ற ஒரிய மொழிப்படத்தில் கூட நடித்திருக்கிறேன். அம்மா சென்டிமென்ட் படம். அந்த கதாபாத்திரம் ரொம்பவும் பிடித்திருந்தது. நடித்தேன்."

"அப்படியெனில் உங்களுக்கு இருந்த ஆர்ட் பிலிம் அர்ச்சனா என்ற இமேஜ் போய்விட்டதா?"

சிரிக்கிறார். பெரிய கண்கள் மேலும் மேலும் விரிகின்றன. "அந்த இமேஜ் நான் விரும்பாமலேயே வந்து ஒட்டிக் கொண்டு விட்டது. அதனாலேயே நிறைய சினிமாக்காரர்கள் என்னிடம் வருவதில்லை. ஆனாலும் சில பேர் வந்து என்னை நடிக்க அழைத்துக் கதை சொல்கிறார்கள். அப்படிச் சொல்லப்படுகிற பல கதைகளோ, கேரக்டர்களோ எனக்கு ஆப்பீலிங்காக இருப்பதில்லை. பணம் வருகிறது என்பதற்காக அவற்றில் நடிக்க எனக்கு மனமில்லை. அதனாலேயே வருடத்துக்கு இரண்டு மூன்று படங்களில்தான் நடிக்கிறேன். அதிலேயே திருப்தி கிடைக்கிறது. அதுபோதும் எனக்கு."

"உங்களுக்கு எந்தமாதிரியான கேரக்டர்கள் அப்பீல் ஆகும்?"

'ஹூலியா' என்ற கன்னடப் படத்தில் நடித்தேன். அதில் நான் ஒரு ஜமீன் குடும்பத்துப் பெண். வேறு ஒரு ஜமீன் வீட்டில் என்னை சம்பந்தம் செய்ய விரும்புகிறார்கள். ஆனால், எங்கள் ஜமீனில் வேலை செய்கிற ஒருவரை நான் காதலித்துத் திருமணம் செய்து கொண்டு விடுகிறேன். எங்களுக்கு வரும் பிரச்னைதான் கதை!

"ஊரில் கடும் பஞ்சம் நிலவுகிறது. அரசாங்கத்தின் பஞ்ச நிவாரணத் திட்டம் என்று சொல்லி, சாதாரண மக்களை, ஆண்கள், பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என்று பிரித்து லாரிகளில் கூட்டிச் செல்கிறார்கள். இதைப் பயன்படுத்தி, குழந்தைகளை அங்கஹீனப்படுத்தி, பிச்சை எடுக்க வைக்கிறது ஒரு கும்பல். முதியவர்களைக் கொன்று விடுகிறது; ஆண்களை கொத்தடிமைகளாக விற்கிறது; பெண்களை விபசாரத்தில் ஈடுபடுத்துகிறது.

"நான், என் கணவர், இரண்டு குழந்தைகள் ஆகிய நாலு பேரும் மூலைக்கு ஒருவராகப் பிரிந்து கஷ்டப்படுகிறோம். வழக்கமான சினிமா பாணியில், கிளைமாக்ஸில் ஒன்று சேராமல், பிரிந்த சோகத்திலேயே படம் முடியும். இந்தப் படத்தில் சமுதாயப் பார்வை இருப்பதால் எனக்குப் பிடித்தது. ஒப்புக் கொண்டேன்.

"அதே போல், சம்மோசனம் என்று ஒரு மலையாளப்படம். முந்நூறு குடும்பங்கள் கொண்ட ஒரு யதார்த்தமான கிராமத்தில், ஓர் அழகான பெண்ணின் வருகை எத்தகைய பாதிப்புகளை ஏற்படுத்துகிறது என்பதுதான் கதை. ரொம்ப அற்புதமான படம். கறுப்பான, பெரிய கண்கள் கொண்ட அந்த பெண்ணின் கேரக்டரில் ரொம்ப இன்வால்வ் ஆகி நடித்தேன்."

"பிலிம் இன்ஸ்டிடியூட்டில் படித்தவர் நீங்கள் என்பதால்தான் உங்களது எண்ணங்கள், எதிர்பார்ப்புகள் எல்லாம் வழக்கமான சினிமாத்தனங்களிலிருந்து சற்று மாறுபட்டிருக்கிறதா?"

"எனது பிலிம் இன்ஸ்டிடியூட் படிப்புக்கும், நடிப்புக்கும் சம்பந்தம் இல்லை. அங்கே தியரிடிகலாய் சொல்லித்தருகிற விஷயங்களை வைத்துக் கொண்டு, சினிமாக்களில் நடிக்க முடியாது என்பதே என் அபிப்பிராயம். ஆரம்பம் முதலே எனது சிந்தனையும் ஆர்வமும் சினிமாவில்தான் இருந்து வந்தன."

"அப்படியென்றால், ஃபிலிம் இன்ஸ்டிடியூட்டில் ஏன் சேர்ந்தீர்கள்?"

"சிறு வயது முதலே எனக்கு நடிப்பிலும், நாட்டியத்திலும் இருந்த ஆர்வத்தைப் பார்த்துவிட்டு, என் பெற்றோர்கள் என்னை இன்ஸ்டிடியூட்டில் சேரச் சொன்னார்கள். சேர்ந்தேன். வேறு பிரத்யேக காரணம் ஏதுமில்லை."

"அடுத்த தமிழ்ப்படம் எப்போது?"

"எனக்கே தெரியாது!"

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

ரெய்டு

என்.சி. மோகன்தாஸ்

"முன்னாள் அமைச்சர் வேலப்பனை எப்போ கைது பண்ணப் போறீங்க?"

பத்திரிகை நிருபர்கள் துளைத்தெடுக்க, கணேசமூர்த்திக்குப் பதில் சொல்ல முடிய வில்லை. அவர் சிறப்புப் புலனாய்வுத்துறை அதிகாரி. சங்கடமான கேள்வி.


இதே கேள்வியை கடந்த மூன்று மாதங் களாக எல்லோரும் கேட்டுக் கொண்டிருக் கிறார்கள். ஓர் அரசியல் தலைவரைக் கைது என்னும் போது எதிர்ப்புக் கிளம்புவதற்குப் பதில் -- 'எப்போ... எப்போ' என்று கேட்கு மளவிற்கு ஜனங்களிடம் ஒரு விழிப்புணர்வு எழுந்திருக்கிறது.

அது குறித்து அவருக்கு சந்தோஷம்தான். ஆனால் மாஜியை கைது பண்ண ஆதாரம் வேண்டாமா?

வேலப்பன் ஊழல் பேர்வழி என்பதில் யாருக்கும் எந்தவித சந்தேகமுமில்லை. சரித்தி ரம் காணாத அளவில் பணம் சேர்த்திருக்கிறார். தமிழ்நாடு முழுக்க அவருக்கு சொத்துக்கள்!

ஆனால் எல்லாமே பினாமி பெயர்களில்.

வேலப்பனின் கடந்த காலத்தைப் பார்க்கும் போது, அதிகாரிகளுக்கு வியப்பு. ஏதோ ஒரு கிராமத்தில் வெறும் கூலித் தொழிலாளியாகவும், பனை மரங்களில் பதநீர் கட்டுபவராகவும் இருந் திருக்கிறார். ஏதோ ஒரு திருட்டு கேஸில் ஊரை விட்டு விரட்டப்பட்டு, டவுனுக்கு ஓடி, அங்கே கட்சியில் சேர்ந்து வளர்ந்து, தேர்தலில் நின்று, ஜெயித்து, யம்மாடி! இன்று பல கோடிகளுக்கு அதிபதி!



எல்லாம் ஊரை அடித்த காசு. அதுவும் பச்சையாக– வெளிப்படையாக– உன்னால் முடிந்ததைப்பார் என்கிற திமிரில் சேர்த்தது.

ஆட்சி போயும் கூட இன்னும் எதுவும் செய்ய முடியவில்லை. ஆட்சியாளர்களும் அதி காரிகளும் ஆதாரத்திற்கு வேண்டி ஆளாய் அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

கணேசமூர்த்தியைப் பத்திரிகையாளர்கள் தாளித்துக் கொண்டிருக்கும் போது போன்!

எடுத்துப் பேசினவரின் முகத்தில் பிரகாசம்!

"அப்படியா... சந்தோஷம். இன்னும் நான்கு மணி நேரத்தில் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு வருகிறேன்!"

"என்ன சார் விஷயம்."

அவர் போனை வைத்துவிட்டு, "மாஜியின் பினாமி வீடு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டி ருக்கிறது... அங்கே உடனே ரெய்டு நடத்தப் போகிறோம்!"

"நாங்களும் வரலாமா....?" நிருபர்களுக்கும் குஷி பிறந்தது. தினசரி அவர்களுக்கும் ஏதாவது பரபரப்புச் செய்திகள் வேண்டுமே!"

"ஓ.... தாராளமாய் வாருங்கள்!"

ரெய்டு என்கிற விஷயம் மாஜிக்கு எப்படி தெரிந்ததோ தெரிய வில்லை. அந்த பங் களாவில் அப்போது அவர் ஆஜர்!

வீடு இன்னமும் சிமெண்ட் வாசம் மாறாமல் பொலிவுடன் இருந்தது. புது வர்ணம். புதுகேட். பின் பக்கம் தோட்டம். அதில் பழ மரங்களும் தென்னை யும் ஓங்கி உயர்ந்திருந் தன.

சுற்றிலும் கம்பிவேலி. எங்கு பார்த்தாலும் பசுமை. நிழல். ஜில் காற்று. யாருடைய வயிற்றில் அடித்து அந்த இடத்தை வாங்கினாரோ தெரியவில்லை. காவிரியின் செழுமை அங்கே பளிச்சிட்டது.

வேலைப்பனின் முகத்தில் அதிர்ச்சி இல்லை. மாறாக புன்னகை! அவர் கொஞ் சங்கூட கலங்கினதாய்த் தெரியவில்லை.

"உங்கள் வீட்டைச் சோதனையிடணும்!" என்றதும், "ஓ... பேஷா!" என்று ஒதுங்கி வழி விட்டார். எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்க வில்லை. மாறாக, "காப்பி பலகாரம் சாப்

பிடுங்க!'' என்று வரவழைத்துக் கொடுத்தார்.

அதிகாரிகள் மறுக்க, ''பயப்படாமல் சாப்பிடுங்க. உடுப்பி ஹோட்டல் டிபன்தான்!''

நான்கு மணி நேரம் வீடு, பரண், டாய்லட், தோட்டம், படுக்கை என்று ஒரு இஞ்ச் விடாமல் அலசியும் கூட எதுவும் சிக்கவில்லை. கணேசமூர்த்திக்கு ஏமாற்றம்.

ரெய்ட் விவரமறிந்து மாஜி முன்பே எச்சரிக்கையாய் அப்புறப்படுத்தியிருக்க வேண்டும். தோல்வியை மறைத்துக் கொண்டு, ''உங்களுக்கு இது மட்டுந்தானா இல்லை... வேறு....''

''இன்னும் இரண்டு சின்ன வீடுகள் உண்டு!''

''என்ன?''

''நிஜமாத்தான் சொல்கிறேன். எனது இளம் வயதில் இரண்டு பெண்களுடன் தொடர்பு வைத்திருந்தேன். இப்போதும் அவர்கள் என்னை நம்பி இருக்கிறார்கள். அவர்களுக்கும் தனித் தனியாய் வீடு!'' என்று அட்ரஸ்கள் கொடுத்தார்.

கணேசமூர்த்திக்கு அவரைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

மாஜியின் சின்ன வீடுகள், பஸ் ஆபீஸ், தொழிற்சாலை, ரைஸ்மில், வைக்கோல் போர் என்று அலசாத இடமே பாக்கியில்லை. மாஜியின் ஒத்துழைப்பு அதிகாரிகளுக்கு ஆச்சர்யத்தை ஏற்படுத்தியது.

மறுவாரத்தில் அவருக்கு ஊர் எல்லையில் மாந்தோப்பு உள்ள தகவல் கிடைத்தது. உடன் ரெய்டு. ம்ஹூம். பலனில்லை. அப்புறம் தென்னந்தோப்பு; கேரளத்தில் ரப்பர் தோட்டம்!

எல்லா இடங்களிலும் தோல்வி!

கணேசமூர்த்தி தலையை பிய்த்துக் கொண்டிருந்த போது, டெல்லியிலிருந்து ஏதோ ஒரு வெளிநாட்டுத் தொழிலதிபரின் மோசடி வழக்கில் வேலப்பனுக்கும் பங்கு இருப்பதாகச் சொல்லி கைது பண்ண உத்தரவு பறந்து வந்தது.

எந்த வழக்கென்றால் என்ன, கைதுதான் இப்போது முக்கியம். ஜனங்களின் வாயை எப்படியாவது அடைத்தாக வேண்டும்.

ராத்திரியோடு ராத்திரியாக ஏற்பாடுகளைச் செய்து, விடியற்காலையில் மாஜியின் வீட்டிற்கு பயணப்படும் போது தனியார் மருத்துவ மனையிலிருந்து அவருக்கு போன்.

''சார்! மாஜி மாடியிலிருந்து விழுந்து கால் உடைஞ்சு படுக்கையில் கிடக்கார்!''



அவரால் அதை நம்ப முடியவில்லை. கைது என்றவுடன் நெஞ்சுவலி வருவது அரசியலில் வாடிக்கையாகி விட்டது. எல்லாம் ஒரு நாடகம். தற்காப்பு!

இதுவும் அப்படித்தான் இருக்கும் என்று ஆஸ்பத்திரிக்குப்போய் விசாரித்த போது, அதிர்ச்சி. நிஜமாலுமே மாஜியின் கால் உடைந்திருந்தது. எதற்கும் இருக்கட்டுமே என்று



ஒரு மலரின் புத்துணர்ச்சியோடு நீங்கள் இருக்க வேண்டுமா?

காதலனின் வாய் துர்நாற்றம் சகியாமல் முகம் சுளிக்கும் பெண்ணைக் காட்டி, பற்பசை விளம்பரம் செய்யப்படுவதைப் பார்த்திருக்கிறோம். 'காரணம்? கிருமிகள்' என்று மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டு, உணவுத் துகள்கள் பல்லிடுக்குகளில் தங்கக் கூடாது; அவ்வாறு தங்கினால் கிருமிகளின் உறைவிடமாகிவிடும் என்பதும் நமக்குப் புரிந்து போயிருக்கிறது.

உடல் துர்நாற்றத்துக்கும் இந்தக் கிருமிகள்தான் காரணம்! பொதுவாக, வெயில் காலத்தில் அனைவருக்கும் ஏற்படுகிற பிரச்னை இது. வியர்த்துக் கொட்டுவதால்தான் துர்நாற்றம் எழுகிறது என்பது ஓரளவுக்குத்தான் உண்மை.

நமது சருமப் பரப்பில் மூன்றுவித சுரப்பிகள் உள்ளன. அவற்றுள் எக்ரீன் சுரப்பி என்பது வியர்வையைச் சுரக்கிறது. மன அழுத்தமும் உஷ்ணமும் இந்தச் சுரப்பிகளைத் தூண்டுகின்றன. உடல் முழுவதிலும் உள்ள தோல் பரப்பில் சுமார் இரண்டு மில்லியன் எக்ரீன் சுரப்பிகள் இருக்கின்றன. அவற்றுள் ஐம்பது சதவிகிதம் சுரப்பிகள் அக்குள் பகுதியிலேயே அடங்கியிருக்கின்றன! இவை இயல்பாக வியர்வையைச் சுரக்கும் போது துர்நாற்றம் ஏற்படுவதில்லை. அந்த வியர்வை உடலில் தேங்கி, தங்கும்போது குடியேறும் கிருமிகள்தான் துர்நாற்றப் பிரச்னைக்குக் காரணம். அப்பகுதிகளில் உள்ள ஈரமும் கதகதப்பும் கிருமிகள் பல்கிப் பெருக உதவுகிறது!

உடலின் மிக இயல்பான செயல்பாடு இது என்பதால், துர்நாற்றத்தைக் கண்டு கவலையோ, அவமானமோ படத் தேவையில்லை.

சோப்பு உபயோகித்துக் குளிப்பதாலும், பவுடர் உபயோகிப்பதாலும் இந்த துர்நாற்றத்தை ஓரளவு கட்டுப்படுத்த முடியும்.

'டியோடோரன்ட்' எனப்படும் சாதனத்தைப் பயன்படுத்தினால், சருமத்தில் தொற்றி வளரும் பாக்டீரியா கிருமிகள் அழிக்கப்படுகின்றன.

குளித்த பின், ஈரமில்லாத உடலில் டியோடோரன்டை நேரடியாக சருமத்தின் மேல் தடவ வேண்டும். ஆனால் புண்ணான, அடிபட்ட சருமப் பகுதிகளில் அவற்றை உபயோகிக்காமல் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

நம் நாட்டின் வெப்பநிலை மிக அதிகமாயிருந்தாலும் டியோடரன்ட் உபயோகிக்கும் பழக்கம் இன்னும் பிரபலமாகவில்லை. அவை இங்கு சமீபத்தில்தான் பெரிய அளவில் உற்பத்தி செய்யப்பட ஆரம்பித்தன என்பது ஒரு காரணம். (உதாரணம்: ரெக்ஸோனா)

டியோஸ்டெரால் என்கிற சாதனத்தை உள்ளடக்கிய டியோடோரன்டுகள் நாள் முழுவதும் உடலை துர்நாற்றமின்றி புத்துணர்ச்சியுடன் வைத்திருக்கும்.

நம்பிக்கையான டாக்டர்களை வைத்தும் பரிசோதித்தாயிற்று.

எக்ஸ்ரேயும் அதை உறுதிப்படுத்தியது. மாஜி, வலி தாங்காமல் முனகிக் கொண்டிருந்தார். "கால் உடைந்தால் என்ன, கைது பண்ணி சிகிச்சை தரலாமே!" என்று பத்திரிகைகள் விமர்சித்தன.

என்ன செய்வது என்று கணேசமூர்த்தி யோசித்துக் கொண்டிருந்த போது, மாஜியை பரிசோதித்த டாக்டர் அவசரமாய் அவரைப் பார்க்க வந்தார்.

"சார்! மாஜி விழுந்ததும், அடிபட்டதும் உண்மை. ஆனால் மாடியிலிருந்துதான் விழுந்தாரா... என்பதில் தான் சந்தேகம்."

"சந்தேகிக்கக் காரணம்?"

"மாஜியின் நெஞ்சு, வயிறு பகுதிகளில் சிராய்ப்புக்கள் உள்ளன. அவர் விழுந்ததோ வீட்டில். அங்கே வீடு முழுக்க பளிங்குத்தரை! பளிங்கில் விழுந்திருந்தால் சிராய்ப்பு எப்படி....?"

டாக்டர் கேட்க, கணேசமூர்த்தியின் மூளையில் உடன் ஒரு மின்னல்! "டாக்டர்! யு ஆர் கரெக்ட்! ஐ காட் த பாயிண்ட்!"

அவர் சற்றும் தாமதிக்கவில்லை.

கடைவீதிக்குப் போய் அங்கே இளநீர் வெட்டிக் கொண்டிருந்தவனை அள்ளி ஜீப்பில் போட்டுக் கொண்டார். அவன் மிரண்டு போனான். "சார்! நான் எந்தத் தப்பும் பண்ணலே!"

அவர் பதில் ஒன்றும் சொல்லவில்லை. நேராய் மாஜியின் பனந்தோப்பிற்கு வண்டியை விட்டு, "உனக்கு மரம் ஏறத் தெரியுமில்லே?"

"தெரியும் சாமி!"

"அப்போ ஏறு!"

ரூ. பத்து லட்சம்!

மான நஷ்ட வழக்கு!

அம்பத்தூர் நகராட்சியில் ஊழல்கள் மலிந்திருப்பதாக திருமதி விஜயா முதல்வரிடம் புகார் செய்ய, முதல்வர் உடனடியாக நடவடிக்கை எடுத்தார். இதையொட்டி கல்கி 6.10.96 இதழில் திருமதி விஜயாவின் பேட்டி இடம் பெற்றது. அந்தப் பேட்டியில் திருமதி விஜயா சொன்ன இரு கருத்துக்களை ஆட்சேபித்து அவர் மீது பத்து லட்சம் ரூபாய் நஷ்டஈடு கோரி மான நஷ்ட வழக்கு தொடரப் போவதாக வக்கீல் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. அதன் சுருக்கம்:

எனது கட்சிக்காரர் ஏ.ஆர். நாதன் தி.மு.கழகத்தின் விசுவாச ஊழியர். அம்பத்தூர் நகரின் தி.மு.க. செயலராக தற்போது இருந்து வருகிறார். பொது மக்களின் மதிப்புக்குப் பாத்திரராகி, கட்சித் தேர்தல்களில் வெற்றி பெற்று வந்திருக்கிறார். அண்மையில் நடந்த உள்ளாட்சித் தேர்தலில் ஒன்பதாவது வார்டில் தி.மு.க. சின்னத்தில் வேட்பாளராக நின்றார்.

கல்கி 6.10.96 இதழில் திருமதி விஜயா ஒரு பேட்டி தந்திருக்கிறார். அதில் தமது வீடு நோக்கி நாதன் கற்களை வீசியதாகவும் அம்பத்தூர் நகராட்சியில் நடந்த ஊழல்களில் நாதனும் கமிஷன் பெற்று வந்ததாகவும் கூறியுள்ளார்.

இதனால் எனது கட்சிக்காரர் நாதனுடைய கௌரவம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அம்பத்தூர் நகராட்சி அறிவித்த எந்த டெண்டரிலும் எனது கட்சிக்காரர் நாதன் பங்கேற்கவில்லை. அதனால் அவர் கமிஷன் பெற வாய்ப்பு இல்லை.

விஜயாவின் பேட்டி பொது மக்களிடம் காண்பிக்கப்பட்டதன் காரணமாக எனது கட்சிக்காரர் நாதன் தேர்தலில் தோற்றுப் போனார். இதனால் அவர் மனக் கஷ்டமும் பொருள் நஷ்டமும் அடைந்திருக்கிறார். எனவே பத்து நாட்களுக்குள் திருமதி விஜயா ரூபாய் பத்து லட்சம் தந்தாலொழிய, அவர் மீது இத்தொகைக்கு மானநஷ்ட வழக்கு தொடரப்படவிருக்கிறது.

கல்கி பத்திரிகைக்கு மக்களிடையே மதிப்பும் கௌரவமும் உள்ளது. திருமதி விஜயா கூறிய விஷயத்தை உண்மைதானா என்று ஆராய்ந்து பாராமல் பிரசுரித்ததால் எனது கட்சிக்காரர் பாதிக்கப்பட்டுள்ளார். எனவே கல்கி பத்திரிகை வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்று இந்த நோட்டீஸ் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

சென்னை - 78. ஜி. ரவிசங்கர்,
5.11.96 அட்வொகேட்,

(திருமதி விஜயா, கல்கி பேட்டியில் திரு. நாதன் பற்றி கூறியுள்ள கருத்துக்கள், முதல்வருக்கு திருமதி விஜயா 29.8.96ல் அனுப்பியுள்ள ஃபாக்ஸ் கடிதத்திலும் இடம் பெற்றுள்ளன. அக்கடிதத்தில் காவல் துறை மூலம் தமக்குப் பாதுகாப்புத் தர வேண்டும் என்றும் திருமதி விஜயா கோரியுள்ளார்.

–ஆசிரியர், கல்கி.)

அவரது யூகம் பொய்க்கவில்லை. நான் காவது மரத்தில் கட்டப்பட்டிருந்த 'பதநீர்' பானையில் தங்க பிஸ்கட்கள்! பண நோட்டுக்கள், அதன் பின் மரத்தில் தங்கப் புதையல்! வீடியோ காமிரா அவற்றையெல்லாம் படம் பிடித்து கோர்ட்டில் சமர்பிக்க, இம்முறை மாஜி தப்பிக்க முடியவில்லை. அவருக்கு ஜெயில்!

"பனை உச்சியில் மாஜி தங்கத்தைப் பதுக்கி வைத்திருப்பதை எப்படி ஊகித்தீர்கள்?"

நிருபர்கள் கேட்க, கணேசமூர்த்தி பெருமிதத்துடன் —

"ஆஸ்பத்திரியில் அடிபட்டுக் கிடந்த மாஜியின் மார்பில் சிராய்ப்பு என்றதும் உடன் அவரது கடந்த காலம் என் மனதில் ஓட ஆரம்பித்தது. இயல்பில் அவர் மரமேறிப் பதநீர் கட்டும் ஒரு தொழிலாளி! ரெய்டு என்றதும் தமது சம்பாத்யத்தையெல்லாம் யார் கண்ணிலும் படாமல் மர உச்சியில் ஒளித்து வைக்க ஆரம்பித்திருக்கிறார். அன்றும் அப்படி பனை மரம் ஏறி இறங்கும் போது கால் தவறி விழுந்திருக்கிறார். அதனால்தான் கால் உடைந்திருக்கிறது. அதை மறைக்க வேண்டி மாடியிலிருந்து விழுந்து விட்டதாய் அவர் நாடகம்! ஆனாலும் கூட அந்த சிராய்ப்பு காட்டிக் கொடுத்து விட்டது!"



நண்பர்களால் 'வி.கே.எஸ்' என்று செல்லமாக அழைக்கப்படும் வி.கே. சுப்பிரமணியன், வாஷிங்டனில் இந்தியத் தூதரகத்தில் 'டைரக்டர் ஆஃப் ஆடிட்' பதவி வகித்தவர். நாகாலாந்தில் பொருளாதார ஆணையராக இருந்தவர். அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் நிறுவனத்தில் பொருளாதார சேவைப் பிரிவில் உயர் அதிகாரியாகப் பணியாற்றியவர். ஆங்கிலத்தில் நல்ல எழுத்தாளர். ஜோதிடக் கலையில் வல்லுநர். பல 'தனி நபர் கண்காட்சி'களை நடத்தியிருக்கும் தேர்ந்த ஓவியர். அமெரிக்காவில் வசிக்கிறார். இப்போது முகாம் சென்னையில். 'அமெரிக்கா தமக்கு ஏன் பிடிக்கிறது' என்று சின்னச் சின்னதாய் பல பெரிய விஷயங்களை அவர் சொன்னார்.

■ அறுபது வயதுக்கு மேற்பட்ட 'சீனியர் சிடிஸன்ஸ்' மீது அமெரிக்க அரசு காட்டுகிற அக்கறை. குறிப்பாக அவர்களின் உடல்நலத்தின் மீது. ரத்த அழுத்தத்தைச் சோதிக்கிற கருவி, சர்க்கரையின் அளவை துல்லியமாய் அளந்து காட்டும் எலக்ட்ரானிக் கருவி, இலவசமாய்த் தருகிறார்கள். (இதோ பாருங்கள் என்று காட்டுகிறார்.) கண்களைச் சோதித்து கண்ணாடி இலவசம். மருத்துவமனைக்குப் போய்வர கார் வசதி செய்து தருகிறார்கள். ஆறுமாதத்துக்கு ஒருமுறை இலவசமாய் பற்களைச் சுத்தம் செய்து கொள்ளலாம்.

■ வாக்கிங் போக சாலைகளின் இரண்டு புறமும் மேடு பள்ளமில்லாத பாதைகள். எங்களைப் போன்ற 'மூத்த குடிமகன்கள்' அமெரிக்காவில் வாக்கிங் போவது என்பது ரொம்ப ஜாலியான அனுபவம்.

■ எனக்கு மிகவும் பிடித்த விஷயம் அந்த ஊர் 'கராஜ் சேல்ஸ்'. (Garage sales). திடீரென சில பேருக்குத் தங்கள் வீட்டிலுள்ள அழகிய பயனுள்ள பொருட்கள் போரடித்துவிடும். வேறு புதிதாக வாங்கலாமே என்று தோன்றும். வீட்டிலிருப்பதை கொள்ளை மலிவாக விற்று விடுவார்கள். இந்த இடத்தில் சேல்ஸ் என்று சாலை ஓரத்திலேயே விளம்பரம் எழுதி ஒட்டி விடுவார்கள். இங்கே என் மேசையின் மீது இருக்கும்

அப்பாக்கள் மேல்

பல கலைப் பொருட்கள் அப்படி வாங்கியவைதான். வியாழக்கிழமைகளில் எனக்கு இருப்புக் கொள்ளாது. போய்விடுவேன். கடையில் இருநூறு டாலருக்கு மேல் இருக்கும் பொருட்கள் சில சமயங்களில், நம்ப மாட்டீர்கள் ஒரு டாலருக்கு கிடைக்கும். அவர்களுக்குப் பிடிக்காமல் போவது நமக்குப்பிடிக்கும்.

■ சாலை போக்குவரத்து சிக்னல்களின் அமைப்பு நெடுஞ்சாலைகள் பற்றிய விளம்பரப் பலகைகள் நாடு முழுவதும் ஒரே மாதிரி சீராக இருக்கும். இது எந்த அளவுக்கு வாகனப் பயணிகளுக்கு உறுதுணையாக இருக்கிறது என்பது அனுபவித்துப் பார்த்தால்தான் புரியும். அமெரிக்காவின் மிகப் பெரிய சாதனை இது!

■ சினிமா வேண்டாம் என்றால் முழுக்க முழுக்க அறிவுபூர்வமான விஷயங்களுக்காகவே அங்கே பல டீ.வி சேனல்கள் இயங்குகின்றன. இங்கே?

■ பெண்களுக்கு



தேவதைகளும் பாகத்தை வாங்கிக் கொள்வதற்காக வந்திருக்கிறார்கள். எல்லா தேவதைகளும் நிற்கிற இடத்திலே பகவான் கருடாரூடனாக, சங்கு சக்ரதாரியாக ஆச்சர்யமாய்த் தோன்றினான்.

இதை வேதம் எப்படிச் சொல்கிறது என்றால், 'எல்லா தேவதைகளையும் அங்கங்களாக உடைய பரமாத்மா, அவர்களின் இடையிலேயே தோன்றினான்' என்கிறது.

தோன்றியவன் என்ன பேசினான்? "சமஸ்த தேவதைகளும் எம் திருவடியிலே சரணாகதி பண்ணினார்கள். அவர்களை ரக்ஷிப்பதற்காக நான் இந்த பூலோகத்திலே வாசம் பண்ணப் போகிறேன். பதினோராயிரம் வருஷ காலம் பூலோகத்திலே இருக்கப் போகிறேன். நீங்கள் துக்கத்தை விடுங்கள். ராவணனை ஹதம் பண்ணப் போகிறேன்...." என்று அபயம் சொல்லி, தசரதனைத் தந்தையாய் வரித்து ராமனாக வந்து பிறந்தான்.

இந்த விஷயம் ராமாயணத்திலே ஒளிவு மறைவு இன்றி ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருப்பதினாலே, நாராயணன்தான் ராமனாகப் பிறந்தான் என்பது சந்தேகமற்ற உண்மை. இதை விச்வாமித்திரர் மேலும் ஸ்பஷ்டப்படுத்துகிறார். தசரதனிடம் சொல்லும்போது: "புருஷ சுக்த தேவதை உன் பிள்ளை; அதை நான் உணர்ந்திருக்கிறேன். ஆனால் நீ உணரவில்லை" என்று எடுத்துச் சொல்கிறார்.

அதற்குப் பிற்பாடு, விசேஷமாக, பரசுராமரின் கர்வ பங்கத்தின்போது, நாராயணனே ஸ்ரீராமனாக அவதரித்தான் என்பது இன்னும் ஸ்பஷ்டமாகிறது.

பாலகாண்டம் முடிந்து, பரசுராம கர்வ பங்கம் ஆனதுமே... ராமாயணம் முடிந்து போய் விடுகிறது! அதற்கு மேலே சொல்லப்பட்டதெல்லாம், பகவான் 'பதினோராயிரம் வருஷம் இருப்பேன்' என்று சொன்னான் அல்லவா... அவனுடைய அந்த வாக்குக்காக நடத்தப்பட்ட நிகழ்ச்சிகளேயொழிய வேறில்லை.

பரசுராம கர்வ பங்கத்திலேயே ராமாயணம் முடிந்து போவது எப்படி....?

தக்ஷ யக்ஞத்தை துவம்சம் பண்ணியவர் பரமசிவன். அந்த ஈச்வரனிடத்திலே அத்யந்த பக்தி கொண்ட ராவணன் என்ன பண்ணினான்? அந்த ஈசுவரன் எழுந்தருளியிருக்கிறபோதே அந்த கைலாச பர்வதத்தைத் தூக்கி ஒரு ஆட்டு ஆட்டினான்! ராவணனுடைய பலம் அத்தனை பலம்! அஷ்ட திக்கணங்களின் தந்தங்களைத் தன் மார்பிலே தாங்கியவன் அவன். குபேரனை ஜெயித்து, அவனுடைய புஷ்பக விமானத்திலே வந்து கொண்டிருக்கிறான்.

வாஹிஷ்பதி என்கிற பட்டணத்துக்கு அதிபதியான கார்த்தவிர்யார்ஜுனன் அந்த



''நல்லா யோசிச்சு நம்ம தலைவர் ஒரு முடிவு எடுத்துட்டார்.''

''என்ன?''

''நீங்களா வந்து கைது பண்ணப் போறீங்களா, இல்லை நானா வந்து ஜெயிலுக்குள்ள புகுந்துடவான்னு சி.பி.ஐ.கிட்ட கேக்கப் போறாராம்!''

– டி. பசுபதி

சமயத்திலே நர்மதை நதியிலே ஸ்நானம் செய்து கொண்டிருக்கிறான். தன் எல்லையில் ஒருவன் வருதைப் பார்த்து ஒரு எகிறு எகிறி புஷ்பக விமானத்தில் குதிக்கிறான். குதித்து விட்டுப் பார்த்தால் பத்துத் தலை ராவணன்!

இந்த கார்த்தவீர்யார்ஜுனன் என்ன பண்ணினான்? கட்டை விரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் இடையிலே அந்தப் பத்துத் தலைகளையும் அப்படியே ஒரு பிடி பிடித்தான். குழந்தைகள் தும்பியைப் பிடிப்பது போல, பிடித்த வாக்கில் அப்படியே தூக்கிப் போய் தன் ஊரில் சிறைவைத்து விட்டான்! அப்படியும் கொஞ்சம் நாள் கழித்து 'பிழைத்துப் போ!' என்று ராவணனை வெளியே விட்டு விட்டான் கார்த்தவீர்யார்ஜுனன். இல்லாவிட்டால் ராவணன் வெளியே வந்திருக்க முடியுமா?

அஷ்ட திக்கணங்களை வென்றவன், கைலாச பர்வதத்தை அசைத்தவன் ராவணன் என்றால் அவன் பலத்தை என்ன சொல்வது. அத்தகைய ராவணனையே விரல் நுனியில் பிடித்துப் போனான் கார்த்தவீர்யார்ஜுனன் என்றால் அவன் பலம்தான் எத்தகையதாய் இருக்க வேண்டும்! அந்த கார்த்தவீர்யார்ஜுனனின் இருப்பிடம் என்று தெரியாமல் பரசுராமர் அடித்து நொறுக்கினார். அப்படியானால் அவருடைய பலம் முதல் இருவர் பலத்தைக் காட்டிலும் அதிகமில்லையா...?

அப்படிப்பட்ட பரசுராமரை பன்னிரண்டு வயதேயான பாலகன் ராமன் அடக்கி ஆள்கிறான் என்றால்.... ராவணனை ஜெயித்தவனை, ஜெயித்தவனை, ஜெயித்து நிற்கிறான் என்றால்... அப்போதே- அந்தக் கணத்திலேயே அவதார பலன் கிடைத்து விடுகிறதல்லவா? ராவண வதத்துக்காகத்தான் ராமாவதாரம் என்று யாராவது சொன்னால் அது இந்தக் கட்டத்திலேயே முடிந்து போகிறதல்லவா!

(தொடரும்)



இத்தனை நேரமாக ஆளைக் காணவில்லை. எங்கிருந்து வந்தானோ. கையில் படக் கதைப் புத்தகம். வெளியிலிருந்து ஓட்டமாக வந்த வேகத்திலேயே படிகள் ஏறி உள்ளே நுழைந்துவிட்டான். வேகத்தைச் சற்றே குறைத்து நெடுஞ்சாண்கிடையாக முன்னறையில் விழுந்தான். சிமெண்டுத் தரையின் வழுவழுப்பில் உடல் சறுக்கி, முன் நகர்ந்தது. அதே இடத்தில் அப்படியே கவிழ்ந்து கொண்டு புத்தகத்தை விரித்துப் படிக்கலானான்.

“டே மணி, ஏதுடா புஸ்தகம்? புதுசா?”

“பழசுதான். ஹரீஷ்கிட்டப் போயி வாங்கிட்டு வந்தேன்.”

“வெளையாட வாடா.”

“போடா... நான் இதப் படிக்கணும்.”

மணியரசு அண்ணனைப் புத்தகத்திலிருந்து பிரித்தெடுக்க முடியாது. நன்றாகப் படிக்கவும் செய்வான அவன். பாடமானாலும் கதைகளானாலும். எனக்கு எழுத்துக்கூட்டியே படிக்க வரும். அதனால் ஜேம்ஸ்பாண்ட் 007, டைகர், இரும்புக் கை மாயாவி, ஸ்பைடர்மேன், ஆர்ச்சி என்று படித்த கதைகளை, கையில் புத்தகத்தை வைத்து ஞாபகப்படுத்திக் கொண்டே சொல்வான் அண்ணன். சௌதாமினியும் நானும் கேட்போம்.

மணியரசு அண்ணன் கதை சொல்வது ஜோராக இருக்கும். குச்சிக் கைகளையும் பின்பாகம் பெரிதாக உள்ளதான ரெட்டைத் தலையையும் ஆட்டிக் கொண்டே விவரணையாகச் சொல்வான். சண்டைகளை மோனோ ஆக்டிங்கில் நடித்துக் காட்டுவான்.

நிஜமாக சண்டை போட அவனுக்கு வராது. பயந்தாங்கொள்ளி. என்னிடமே நிறைய வாங்கியிருக்கிறான். தோற்றுவிட்டு வந்தாலும் இங்கே படுத்துக் கொண்டுதான்

அழுவது.

அப்போது மல்லாந்து படுத்திருப்பான். சுவரை ஒட்டின மாதிரி. பாதங்களைத் தூக்கி சுவரிலும் வைத்துக் கொள்வான். செந்நிறமாக மேல்நோக்கி அறை முழுதும் அவன் கால் சுவடுகள், சுவரின் கீழ்ப்பகுதிகளில்.

அழுதுகொண்டே, "சௌதா... ஜீவா என்னை அடிச்சுட்டான் சௌதா." புகார் சொல்வான். தேம்பிப் புலம்புவான். அவள் அங்கே இல்லாவிட்டாலும் கூட, அவளுடன் பேசுவதாகவே தனிமையில் பேசிக் கொண் டிருப்பான் அவன்.

"அண்ணா... அழாத. சின்ன அண்ணா பையனை அடிச்சறலாம்." சௌதாமினி அங் கிருந்தால், அவன் கண்களைத் துடைத்து ஆறு தல் அளிப்பாள். என்னையாவது அவர்கள் பதிலடி கொடுப்பதாவது?

"ஏய்... என்ன புள்ள சொன்னே?"

"மணி அண்ணா பையா, இங்க பாரு இவன!" ஆறுதலளிக்க வந்தவள் மிரள, மணி யரசு அண்ணன் எழுவான். அவனது முது குக்குப் பின் ஒளிவாள் சௌதாமினி.

"இருடா... இரு. அம்மாகிட்ட சொல்லித் தர்றேன்." எட்டிப் பார்த்து உதடுகளைப் பிதுக் குவாள். அவள் சிரித்தால் வலக் கன்னத்தில் விழுகிற குழிவு அப்போதும் லேசாகத் தென் படும். தாடையில் சுருக்கம் போலவும் ஏற்படும்.

அம்மா என்றால் பிறகு நிற்பேனா அங்கே. அடுத்த நிமிடம் கனரா பேங்க் பக்கம் மூணாம் வகுப்பில் என்னோடு படிக்கிற சங்கரநாரா யணனுடன் கோலியாடிக் கொண்டோ, கில்லியடித்துக் கொண்டோ இருப்பேன்.

எங்களை மிரட்டுவது, தேவைப்பட்டால் அடிப்பது யாவும் அம்மாவே. அப்பாவிடம் பய மில்லை. அவருக்கு முன்னாலேயே நாங்கள் குறும்பு செய்தாலும், "சரசா... இவனுகளை வந்து மெரட்டு" என்று அம்மாவைத்தான் கூப் பிடுவார். அம்மாவுக்குக் கோபம் வந்தால் விற குச் சுள்ளல் முறிந்துவிடும். கரண்டிக் காம்பு அடுப்புக்குப் போகும். இதுவரை சூடு போட் டதில்லை. பழுத்துச் சிவந்து ஆவி அலைகிற கரண்டிக் காம்பே எங் களை பயமுறுத்தப் போது மாயிருந்தது.

எங்களை என்ன எங்களை? என்னைத் தான். குறும்பு செய்வது நான்தானே? இல்லாவிட் டாலும் கூட கடைசியில் பழியாவது நானே. இந்த மணியரசு அண்ணன் சாது வாம். நான் முரடனாம்.

அவனைப் பற்றி எனக் கல்லவா தெரியும்? ஊஞ்.

ஷாராஜ்

சலாடலாம் வாடா என்று கூட்டிப் போவான். மரம் ஏற வராது அவனுக்கு. ஆகவே ஊஞ்சல் கட்ட என்னை மரத்தில் ஏற்றி விடுவான். விழுந்து சிராய்த்துக் கொள்வேன்.

புளியங்காய் அடிக்க ஆசை மூட்டுவது அவன். முதலியார் பார்த்துவிட்டு சத்தம் போடு வது என்னை.

"நான் அப்பவே வேண்டாம்னு சொன் னனில்லடா?" என்று தப்பித்துக் கொள்வான் மணியரசு அண்ணன். அவனைச் சொன்னால் யார் நம்புவார்கள்? அவன் சாது; நான் முர டன். இப்படிப்பட்ட காரியங்களை நான்தான் செய்வேன் என்பது எல்லோருடையதுமான நம்பிக்கை.


"செய்யறதயும் செஞ்சுட்டுப் பொய்யா சொல்ற?" காது திருகப்படும்போது பல்லைக் கடித்துக் கொண்டு முறைப்பேன்.

'கண்ணுல சொட்டுத் தண்ணி வருதா பாரு.' 'என்னடா மொறைக்கற? கண்ண நோண்டீரு வன் ராஸ்கல்.' 'முணுக்கு முணுக்குன்னு இருந் துட்டே முந்நூரு வீட்டுக்குத் தீ வெச்சுருவான்.'

இவ்வாறு ஏரியாவிலேயே நல்ல பெயர் எனக்கு வாய்த்திருந்தது. அம்மா எதற்கும் அப் பாவைக் குறைசொல்கிறவளாயிற்றே? ,இதில் மட்டும் மாறவா போகிறது?

"என்னதான் பொம்பளை அடிச்சு மெரட்டு னாலும் கொழந்தைகளுக்கு ஆம்பள பயம் இருந்தாத்தான ஆகும்?"

அப்பா புத்தகக் கோழி. அம்மா அவரைப் பற்றிப் பேசத் துவங்கினால் மனையடி சாஸ் திரத்தையோ, ஜோதிடக் கலையையோ, சித்த மருத்துவத்தையோ எடுத்துக் கொண்டு அதன் பக்கங்களுக்குள்



தமது பார்வையைப் புதைத்துக் கொள்கிற பழக்கம் அப்போதே இருந்தது.

பயப்படுத்துகிற, கண்டிக்கிற செயல்களை மட்டுமல்ல; எங்களுக்கு நேரடியாக அவர் எதையுமே செய்ததில்லை. எனது ஞாபகத்தில் அவர் என்னையோ மணியரசு அண்ணனையோ 'படிங்கடா' என்று சொன்னதாகவோ, 'ஒழுங்காப் பரீட்சை எழுதினீங்களா?' என விசாரித்ததாகவோ பதிவு இல்லை. அவரிடம் அதிகமாகப் பேசவே மாட்டோம்.

சௌதாமினியை மட்டும் வேலை முடிந்து வந்ததுமே தேடுவார். அவளும் அவரது மடியில் 'ஜம்'மென்று அமர்ந்துகொண்டு வாயாடிக் கொண்டிருப்பாள். அப்பா சம்பள நாளில் வாங்கி வருகிற தின்பண்டங்களின் பாக்கெட்டும் முதலில் அவளையே சேரும். அப்புறம்தான் எங்களுக்குப் பங்கு.

படிப்பு, மற்ற விஷயங்கள் யாவிலும் அம்மாவே பொறுப்பை கவனித்துக் கொள்வாள். சம்பாதித்துக் கொடுப்பதோடு அப்பாவின் கடமை முடிந்தது. என்னையும் மணியரசு அண்ணனையும் அவர் ஏன் சௌதாமினியைப் போல நடத்துவதில்லை? என்னதான் அடித்தாலும் அம்மா அம்மாதான்.

அவள் இன்னும் எனக்கு தலை சீவி, பவுடர் போட்டு விடுவாள். வீட்டுப் பாடம் சொல்லித் தருவாள். சௌதாமினி அவள் மடியில் படுத்துக் கொண்டிருக்கையில் நானும் படுத்துக் கொள்ள அனுமதிப்பாள். சௌதாமினி அப்போது தூங்கியிருக்க வேண்டும். இல்லாதிருந்தால் ரகளைதான்.

"அவன எந்திரிக்கச் சொல்லும்மா."

"நான் எதுக்கு புள்ள எந்திரிக்கணும்? எனக்கும் அம்மாதான?"

"போடா. இது எங்கம்மா."

"நான்தான் பெரியவன். அதனால உனக்கு மொதல்லயே, எனக்கு அம்மா."

அம்மா இடைப்பட்டு இருவரையும் சமரசப்படுத்த முனைவாள். பலிக்காது.

"அப்ப பெரிய அண்ணாப் பையனுக்குத்தான மொத மொதல்ல அம்மா. ஏம்மா?"

"ஆமா."

"அப்படின்னா அவன் வேண்ணா படுத்துக்கட்டும். நீ வேண்டாம் போ."

அம்மா மடியில் படுத்துக் கொள்ள மணியரசு அண்ணன் விரும்ப மாட்டான். அவனைத்தான் சௌதாமினிக்குப் பிடிக்கும். என்னோடு சேரவே மாட்டாள். இந்த மாதிரி அவள் எனக்கெதிராக கறுப்புக் கொடி உயர்த்துகிற வேளைகளில் அவளைக் கிள்ளி வைத்துவிட்டு ஓடி விடுவேன்.

இப்போது அவள் தூங்கிக் கொண்டிருந்தாள். இனியும் தொட்டில் பழக்கத்தை விடவில்லை. வாய் மட்டும் காது வரைக்கும் நீள்கிறது.

சங்கரநாராயணன் வீட்டுக்குப் போகலாம் என்றால் அவன் பாட்டி ஊருக்குப் போயிருக்கிறான். மற்ற பையன்களும் அவன் இல்லாத போது என்னை விளையாட்டில் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள்.

திண்ணைக்கு வந்தேன். தனியே அமர்ந்து பூவா தலையா போட்டுக் கொண்டிருந்தேன். நானே கேட்டு, நானே காசு சுண்டி, நானே என்னை ஜெயித்து, அல்லது என்னிடம் நான் தோற்று...

"ஜீவா, நானும் வர்றன்டா" மணியரசு அண்ணன். கதை முடிந்துவிட்டது போலும்.

"காசுக்கு. சரியா?"

என்னிடம் கையில் வைத்திருந்தது அந்த ஐம்பது பைசா மட்டுமே. அவன் நிறைய வைத்திருப்பான். ஜெயித்தால் பால்கோவா, சோன் பப்டி எதாவது வாங்க ஆகும்.

"சரி. ஒரு தடவைக்கு அஞ்சு பைசா."

"பத்து."

"அஞ்சு."

"பத்துதான்."

"அப்படீன்னா நான் வர்ல."

"சரி, அஞ்சு பைசான்னே வெச்சுக்கலாம். உங்கிட்ட எவ்வளவு இருக்கு?"

உள்ளே சென்று அவன் ஸ்கூல் பேக்கின் ஜாமென்ட்ரி பாக்ஸிலிருந்து சில்லறைகளைப் பொறுக்கிக் கொண்டு வந்தான். ஒரு ரூபாய் முப்பது காசு தேறியிருந்தது. எப்படியும் எனக்கு பால்கோவா உறுதி.

விளையாட்டின் போது அப்பா வந்தார். செருப்பை வாயிற்படிகளில் கழற்றிவிட்டு வீட்டுக்குள் போய் விட்டார்.

முதலில் நான் தோற்றேன். ஐந்து தடவை. அப்புறம் கடன் கழிந்து, ஜெயிக்க ஆரம்பித்தேன். வெற்றி தோல்விகள் மாறி மாறி வந்து ஆசைப்பட்டது போன்றே ஒரு ரூபாய்க்கு ஜெயித்ததும் அவனிடமிருந்த நாணயத்தை வாங்கிக் கொண்டேன்.

"இன்னும் முப்பது காசு இருக்குதுடா."

எனக்குப் பொறுமையில்லை. "நீயே வெச்சுக்க"ச் சொல்லிவிட்டு ஐம்பது காசை வாயில் போட்டேன்.

"பாத்தயா நீ ஜெயிச்சதும் போதும்ங்கறயே."

"பின்ன... உனக்கு விட்டுத் தருவன்னு நெனச்சயா. போடா டபுள் மண்டை."

"டபுள் மண்டைன்னா அடிச்சுருவன்டா."

சற்று முன் படித்து வந்த 007 நினைப்பில் பேசுவானாக இருக்கும். எனக்கு ஒரு ரூபாயை ஜெயித்த களிப்பும் வேறு. திண்ணையில் எழுந்து நின்று ப்ரூஸ்லி போஸ் கொடுத்தது. "வாடா பாக்கலாம். யா... ஊ... ஆ...." எனும்

உங்கள் கண்மணிகளின் பொன்னான எதிர்காலம்

பூத்துக்குலுங்க முதலீடு செய்வீர்!

பவர்ஃபின்

முறையான வட்டி வழங்கும் திட்டம்
திட்டம் 'அ' (RIPS)

காலம்	குறைந்த அளவு வைப்பு நிதி ரூ.	வழங்கப்படவுள்ள ஆண்டு வட்டிவீதம்	
		மாதத்திற்கு	காலாண்டுக்கு
12 மாதங்கள் & 1 நாள் 25 மாதங்கள் 36 மாதங்கள் 48 மாதங்கள் 60 மாதங்கள்	**5,000**	**15%**	**15.19%**

திரள்வட்டி வழங்கும் திட்டம்
திட்டம் 'ஆ' (CIPS-I)

காலம்	குறைந்த அளவு வைப்பு நிதி ரூ.	முதிர்வுத் தொகை ரூ.	ஒரு ஆண்டிற்குப் பெறக் கூடிய வருவாய் விகிதம்
12 மாதங்கள் & 1 நாள்	**3,000**	3,483/-	16.06%
25 மாதங்கள்		4,092/-	17.47%
36 மாதங்கள்		4,692/-	18.80%
48 மாதங்கள்		5,445/-	20.38%
60 மாதங்கள்		6,321/-	22.14%

பவர்ஃபின் நிறைவேறாத வாக்குறிதிகளை வழங்குவதில்லை.

- வசதிக்கேற்ற பல வைப்பு நிதித் திட்டங்கள்.

- இது ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனமாக இருப்பதால், உங்கள் முதலீட்டிற்கு முழுப் பாதுகாப்பு தருவதுடன் அதிக வருவாயும் தருகிறது.

வருமான வரிச் சட்டப்பிரிவு 80L-ன் கீழ் வரிச் சலுகை உண்டு.

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (பவர்ஃபின்)

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

பதிவு அலுவலகம் : எண்.84, டி.டி.கே.சாலை,ஆழ்வார்ப்பேட்டை,
சென்னை 600 018. தொலைபேசி எண் : 499 7689, 4995648.

இந்தியன் எக்ஸ்பிரசில் 23.9.96 அன்று ஏற்கெனவே வெளியான எமது விளம்பரத்தைத் தொடர்ந்து வெளியிடப்படுகிறது

DIPR.531/DIS/96

போது மறந்திருந்த ஐம்பது பைசா நாணயம் வாயிலிருந்து தொண்டைக்குள் இறங்கி விட்டது.

விக்கலுடன் திணறினேன். கண்களில் நீர் முட்டியது.

“என்னடா ஆச்சு?”

“க்ளாஸூ...” என்றதை அவனால் புரிய இயலவில்லை. குழப்பமாய்ப் பார்த்தான். குனிந்து இருமி வாசலில் துப்பியும் காசு வரவில்லை. “காசு... காசு...” என்று வார்த்தை மட்டும் சுத்தமாக வந்தது.

“காச முழுங்கிட்டயா. நான் அப்பவே வேண்டாம்னு சொன்னனில்ல?”

தொண்டைக்குள் விரல் விட்டு எடுக்க முயற்சித்தேன். உள்ளே சிக்கியிருக்கும் போல. விரலுக்குத் தட்டுப்படவில்லை. ஓங்கரித்துக் கொண்டு வந்தது.

“அம்மா... ஜீவா காசை முழுங்கிட்டான்.”

மணியரசு அண்ணன் கத்தினதும் அப்பா பனியனோடு முதலில் ஓடி வந்தார். பின்னாலேயே அம்மாவும். மணியரசு அண்ணன், அவர்களுக்கு “பூவா தலையா ஆடிட்டிருந்தமா...” எனத் துவங்கி நடந்ததைச் சொல்லி முடிக்கிற வரை குனிந்த எனது நிலையை மாற்றவில்லை. நிமிர்ந்தால் நாணயம் வயிற்றுக்குள் போய் விடுமோ என்ற பயம்.

“இவ்வளவு பெரிய பையனாயாச்சு! காசை வாயில போடக் கூடாதுங்கற அறிவில்லையாடா?” அம்மா கோபத்தை என் கால்களிலும் முதுகிலும் அடித்துத் தீர்த்தாள். வயிற்றுக்குள் இறங்கும் பயத்தில் நான் அப்போதும் நிமிரவில்லை. சத்தம் கேட்டு பக்கத்து வீட்டுப் பெண்கள், ஆண்கள் சிலரும் வந்து விட்டனர். இந்த களேபரத்தில் சௌதாமினியின் உறக்கம் கலைந்து அழுகை. அண்ணன் போய் இடுப்பில் அவளை எடுத்து வந்து அவளது கனத்துக்குச் சாய்ந்து நின்றான்.

“பையனுக்கு என்ன ஆச்சு? இப்படி நிக்கறான்?”

“டாக்டர் வீட்டுக்கு கூட்டிட்டுப் போங்க.”

“இன்னேரம் விஸ்வநாதன் இருப்பாரா?”

முகங்களைக் காணாமலும் குரல்கள் யார் யார் என்று காட்டின. அப்பா “சட்டைய எடு” என்பதும் தெரிந்தது.

சட்டையுடன் திண்ணைக்குக் கீழே வந்து நின்று என்னைக் குனிந்த வசத்திலிருந்து, கவிழ்ந்த நிலையிலேயே கைகளில் ஏந்தி நடந்தார்.

அவசரத்தில் அவர் செருப்பு அணியாததை, அந்தப் பித்தவெடிப்புப் பாதங்களின் விரைவை, அவரது நடையின் அசைவோடு கவனித்தேன். என் மார்பில் இடது கையும், முட்டிக் கால் பக்கம் வலக் கையுமாக இருந்த அவரது கைகளில் ஒரு நடுக்கத்தையும் உணர முடிந்தது.

பின்னால் மணியரசு அண்ணன், இடுப்பில் சௌதாமினியோடு அம்மா, அமுதாக்கா, ராமமூர்த்தி அண்ணன், பாண்டு அங்கிள், ஷப்னா அம்மா....

டாக்டர் விஸ்வநாதன் அவரது வீட்டில் இல்லை. இப்பத்தான் அரைமணி முன்னதாக நர்ஸிங்ஹோம் போனாராம். டாக்டர் மனைவி சொன்னாள்.

“அய்யோ... பையனுக்கு ஏதாவது ஆயிடப் போகுது. மூர்த்தி ஸார்... ஒரு ஆட்டோ புடிச்சிட்டு வாங்களேன். எம் பையனுக்கு...” அப்பாவின் குரலும் கைகளுடன் மேலதிகமாக நடுங்கியது.

“ஒண்ணும் ஆகாதுங்க, பையனை தலை கீழாப் புடிச்சு பொடனில தட்டுனாப் போதும். காசு தொண்டைல சிக்கிட்டிருந்தா வெளிய வந்துடும்.” டாக்டர் மனைவி குரல் நெருங்கி வந்தது.

“இல்லீங்க. வேண்டாம். ஏதாவது ஆயிடுச்சுன்னா... நாம டாக்டர்கிட்டயே எடுத்துட்டுப் போலாம்.”

“ஏங்க வீணா பதர்றீங்க. உங்க மகனுக்கு ஒண்ணும் ஆகாது. ஆஸ்பத்திரிக்குப் போனாலும் அவங்க இதத்தான் செய்வாங்க.”


“இவங்க சொல்றதத்தான் செஞ்சு பாருங்

சிக்கனம் சரி; கஞ்சத்தனம் ஏன்?

● கடந்த சில வருடங்களாக, பல்லவன் போக்குவரத்துக் கழக நிர்வாகம், தீபாவளி சமயத்தில் அழகான பெட்டியில் திருப்பதி லட்டுக்களை வைத்து முக்கியப் பிரமுகர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் அன்பளிப்பாக வழங்கி வந்தது. இந்த முறை அன்பளிப்பு கொடுக்க 144 போடப்பட்டு விட்டது. காரணம்? கலைஞர் அரசின் சிக்கனம். இது சம்பந்தமாக பணம் அனுமதிக்க வேண்டி கோப்பு கோட்டைக்குச் சென்ற போது ‘தேவையில்லை’ என்று சொல்லப்பட்டு விட்டதாம். அதே போல் போலீஸ் கமிஷனர் அலுவலகமும் வருடத்திற்கு ஒருமுறை நிருபர்களை வெளியூர்களுக்கு கூட்டிக் கொண்டு போய் ‘குளிப்பாட்டி’ விட்டு வரும். அதற்கும் உள்துறை அதிகாரிகள் ஆட்சேபணை தெரிவித்துள்ளார்கள்!

● சென்னை அடையாறில், போலீஸுக்கும்

ரவுடி கபிலனுக்கும் இடையில் நடந்த துப்பாக்கி மோதலில், கபிலன் இறந்து போனது ஞாபகம் இருக்கும். அந்த துப்பாக்கிச் சண்டையின் போது எதிர்பாராத விதமாக, குறுக்கே வந்த பொதுஜனம் ஒருவரும் குண்டு பாய்ந்து மரணம் அடைய நேரிட்டது. இறந்து போனவர் குடும்பத்துக்கு முதல்வர் நிவாரண நிதியாக இரண்டே முக்கால் லட்சம் ரூபாய் சிபாரிசு செய்து போலீஸ் கமிஷனரிடமிருந்து கோட்டைக்கு கோப்பு சென்றது. ஆனால் முதல்வர் அலுவலகம் 50 ஆயிரம் ரூபாய்தான் அனுமதித்திருக்கிறது. "இறந்து போனவருக்கு கல்யாணமாகாத தங்கைகளும், உடல்நலமில்லாத பெற்றோரும் இருக்கிறார்கள். இதுபோன்ற விஷயங்களில் கலைஞர் அரசு சற்று தாராளமாக இருக்கலாம்!" என்று சொன்னார் கோட்டை அதிகாரி ஒருவர்.



• குரூரமான முறையில் கொலை செய்யப்பட்ட நாவரசுவுக்கு, நுழைவுத் தேர்வின் மூலம் பொறியியல் கல்லூரியில் இடம்கிடைத்தது. ஆனால் தம்முடைய குடும்பத்தில் இதுவரை டாக்டர்கள் யாரும் இல்லாததால் தந்தை பொன்னுசாமி, நாவரசுவை மருத்துவக் கல்லூரியில் சேர்த்தாராம்!

— **கௌசல்யா**

களேன்!" அம்மாவின் குரல்.

"பையனை தலைகீழாப் புடிங்க சொல்றேன். ஸார்... நீங்க கொஞ்சம் ஹெல்ப் பண்ணுங்க அவருக்கு."

ராமமூர்த்தி அண்ணனும் அப்பாவும் தலைகீழாகப் பிடித்தனர்.

"வாயத் தெறந்துக்கப்பா."

டாக்டர் மனைவி சொல்லவும் வாய் திறந்தேன். பிடரியில் அவள் சில தடவை மெதுவாகவும் பின் வலுவாகவும் தட்டினாள். நாணயம் வெளியே தெறித்து விழுந்தது.

"டாக்டரம்மா. இன்னும் ரெண்டு மூணு தட்டு தட்டுங்க. காசு நெறய வந்தாலும் வரும்!" சிரிப்புகளுடன் நிமிர்த்தப்பட்டேன்.

அப்பா தனது சட்டைப் பையில் கை வைத்தபோது, "அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்" என்றாள் டாக்டர் மனைவி. அம்மா சற்று நேரம் அவளுடன், "இவனோட இதே தொல்லையாப் போச்சுங்க. ஏதாவது வம்பு பண்ணிட்டே இருப்பான்" என்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

மற்றவர்களுக்கும் என்னைப் பற்றியோ தங்கள் பிள்ளைகள் பற்றியோ புகார்கள் இருந்தன. என்னைக் கண்டித்து அறிவுரைக்கவும் செய்தனர். நல்ல பிள்ளை மாதிரி கேட்டுக் கொண்டேன்.

உப்பு மூட்டையாக சௌதாமினியை சுமந்து வந்து கொண்டிருந்தான் மணியரசு அண்ணன். நான் விழுங்கி, எடுக்கப்பட்டுவிட்ட ஐம்பது பைசா நாணயம் அவனிடம் இருந்தது. ட்ரௌசர் பாக்கெட்டிலிருந்து எடுத்துக் கொடுத்தான். அதில் எச்சில் இல்லாவிட்டாலும் இருபுறங்களையும் சட்டையில் துடைத்து பத்திரப்படுத்திக் கொண்டேன்.

"அப்பா உன்னை எப்படித் தூக்கிட்டு வந்தாரு?" கேட்டுவிட்டுச் சிரித்தான் மணியரசு அண்ணன்.

உடன் வந்து கொண்டிருந்த அமுதாக்காவும் சிரித்தாள். "காத்துலயே நீச்சல் பழக்கிவிட்டாருடா உங்கப்பா இவனுக்கு."

எனக்கு சிரிப்பு வரவில்லை. அப்பா அப்படித் தூக்கிக் கொண்டு வரும்போது அவரது கைகளில் இருந்த நடுக்கம்.... டாக்டர் மனைவியிடம் அவர் பேசினது, அப்போது அவர் அதிகமாகவே பதற்றம் கொண்டிருந்தது யாவையும் நினைத்துக் கொண்டிருந்தேன்.

அப்பா இதற்கு முன்பு எப்போதும் இப்படி இருந்தவரல்லர். இப்போது அவர் எனக்கு புதிதாகத் தெரிந்தார். அவரை, அவரது முகத்தை உடனே பார்க்க வேண்டும்.

"அப்பா எங்கடா மணி?"

"அவரு அப்பவே போயிட்டாரே."

எல்லோருக்கும் முன்பாக ஓடிப் போய் தெருமுனை தாண்டிப் பார்த்தேன். திருப்பத்தில் அப்பா விறுவிறுவென நடந்து தனியே போய்க் கொண்டிருந்தார்.

பார்வைக்கு வந்தவை...

• ஞானியர் வரலாறு/சுவாமி சிவானந்தா/ தெய்வீக வாழ்க்கைச் சங்கம், சிவானந்தா ஆஸ்ரமம், சுவாமி சிவானந்தா சாலை, ராசிபுரம், சேலம் மாவட்டம்/ரூ.35.

ஐம்பத்தொரு ஞானிகளின் வாழ்க்கைத் தொகுப்பு. நமக்குத் தெரிந்த சங்கரர், ராமானுஜர் முதல் தெரியாத மன்சூர், விம்சு டெபர்ஸ் போன்ற அயல்நாட்டு ஞானியர் வரை.

• உறவு காக்கும் வணிகம்/நல்லி குப்புசாமி செட்டியார்/ பிரெயின் பாங்க், 56, இரண்டாவது குறுக்குத் தெரு, சாய்நகர், சின்மயா நகர், சென்னை-111/ ரூ.50.00

வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளோருக்கு உதவும் நூல். விற்பனை உத்திகள், விற்பனையாளர் - வாடிக்கையாளர் உறவு பற்றி விவரமாகச் சொல்கிற ஆசிரியரின் மொழி நடை வியக்க வைக்கிறது.

• கம்ப நாடகம்/டாக்டர் தமிழண்ணல்/வானதி பதிப்பகம், சென்னை-17/ ரூ.25.00

ஏவி.எம். நினைவுச் சொற்பொழிவு அறக்கட்டளை சார்பில் ஆசிரியர் ஆற்றிய கம்பன் உரையின் நூல் வடிவம். கம்பனில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டோருக்கு விருந்து.

• குரு அஞ்சலி/வா.மு.சேதுராமன்/கவி அரசன் பதிப்பகம், 12.சாயி நகர் இணைப்பு, ஐயப்பா நகர், சென்னை- 111/ ரூ.36.00

கவிஞர் தம் குரு 'சாது குரு' என்பவரைப் பற்றி எழுதியுள்ள கவிதாஞ்சலி.

• கேள்விக்கு என்ன பதில்?/எஸ்.பி.சுப்பிரமணியன்/ திருமகள் நிலையம், சென்னை- 17/ ரூ.29.00.

மேல் நாடுகளில் புழக்கத்தில் உள்ள சோதிட முறை விளக்கம்.

• இன்று/விஜயராமன்/குலமாந்தர் காப்புக் கழகம், கல்யாண மண்டபத் தெரு, காமய கவுண்டன்பட்டி/ ரூ.16.00

அன்றாட நிகழ்ச்சிகளை, ஆன்மிகத்துடன் தொடர்புபடுத்தி, நெறியோடு இயைந்த வாழ்வுக்கு அறைகூவல் விடுக்கிற நூல்.

• மனித உரிமைகள் என்றால் என்ன?/ கே.எஸ். ராதா கிருஷ்ணன்/புத்தகப்பண்ணை, 11, 5-வது தெரு, சென்னை- 600 018.

ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் மனித உரிமைகள் எப்படியெல்லாம் மீறப்பட்டன என்பதை சுவாரஸ்யமாக எடுத்துக் காட்டுகிறார் ஆசிரியர்.

• வாரம் ஒரு தகவல்/தென்கச்சி கோ.சுவாமிநாதன்/ வானதி பதிப்பகம், சென்னை-17/ ரூ.60.00

இவை வானொலித் தகவல்களல்ல. ஒரு வார இதழில் வெளியான கட்டுரைகளின் தொகுப்பு. எளிய நடை, ஈர்க்கிறது.

நோபல் பரிசு பெற்ற ஏழு எழுத்தாளர்களின் ஏழு கதைகளைத் தேர்ந்தெடுத்து மொழிபெயர்ப்புச் செய்திருக்கிறார் திலகவதி.

சம்பந்தப்பட்ட எழுத்தாளர்களின் வாழ்க்கைச் சுருக்கங்களையும் தந்திருப்பது மொழிபெயர்ப்பாளரின் அக்கறையைக் காட்டுகிறது.

'மழையில் பூனை' கதையை எழுதிய எர்னஸ்ட் ஹெமிங்வே, தாம் சிறுகதை மன்னன் என்பதை நிரூபித்திருக்கிறார். ஓட்டலில் தங்கும் ஒரு தம்பதி; மனைவி, ஒரு மழை நாளில் ஓட்டலின் வெளியே மழையில் நனையும் பூனையைக் காப்பாற்ற நினைக்கிறாள். அதற்குள் அது எங்கோ ஓடிப் போய்விடுகிறது. தன்னுடைய சின்னச் சின்ன ஆசைப் பட்டியலில், தன் பூனை ஆசையையும் சொல்கிறாள். கணவனின் அலட்சியப்போக்கு நம்மையும் தாக்கும்போது, அறைக் கதவு தட்டப்படும் ஓசை. வாசலில் ஓட்டல் பணிப்பெண். கையில் பூனை. 'முதலாளி அளித்த பரிசு' என்கிறாள். நடையழகு கதையை உயரே உயரே தூக்குகிறது.

அசத்தலான இன்னொரு கதை - நதீன் கோ(ர்)டிமரின் 'தந்தையின் கடிதம்'. செத்துப் போன மகனுக்கு, செத்துப் போன தந்தை எழுதிய கடிதமாகக் கதையுக்தி. விஷயம்? ஒருவரையொருவர் எவ்வளவு வெறுத்திருக்கிறார்கள் என்பதே. 'நீயும் நானும் உன் அம்மாவும் இப்போது ஒன்றாக ஒரே கல்லறையில் கிடக்கிறோம்... அமைதியாக உறங்கும் மகனே! எனக்கும்

'அபயப்ரதான ஸாரம்' என்பதாக ஒன்றை சுவாமி தேசிகன் எழுதியிருக்கிறார். அதிலே சரணாகதி என்றால் என்ன என்று பூரணமாய் நாம் தெரிந்து கொள்ளலாம். அதிலே அவர் எழுதுகிறார் :

'ராமாயணத்திலே சரணாகதி என்பது அச்சுறு ஆணியாகக் கோக்கப் பெற்றது.'

ராமாயணம் என்பது பெரிய ரதம். ரதம் நிற்க வேணுமானால் சக்கரம் அவசியம்; சக்கரத்தில் கடையாணி ரொம்பவும் முக்கியம். தவிர, ரதத்தில் பல மரச் சட்டங்கள் ஒன்றோடொன்று கோக்கப்பட்டிருக்கும். கடை ஆணியைக் கொண்டு அவை கோத்து பொருத்தப்பட்டிருக்கும். ஆணியை எடுத்து விட்டால் ரதம் கீழே விழுந்து விடும். அதைப் போல ராமாயணத்திற்குக் கடையாணியாக அதைக் கோத்து நிறுத்துவது சரணாகதி!

பூர்வகாலத்தில், ஒரு சபையிலே பல வித்வான்கள் கூடியிருந்தனர். தர்க்க வித்வான், வியாகரண வித்வான், மீமாம்ஸ சாஸ்திர வித்வான்கள் என்று இப்படிப் பல வகையினர். அவர்களிடையே புதுசாக ஒருத்தர் வந்து உட்கார்ந்தார். மற்றவர்களுக்கு அவரைத் தெரியவில்லை.

"எந்த சாஸ்திர நிபுணர் நீங்கள்...?" என்று மெள்ளக் கேட்டார்கள்.

"சரணாகதி சாஸ்திரம்தான்" என்றார் அவர்.

தர்க்க, வியாகரணம் படித்தவர்களெல்லாம் வியப்போடு பார்த்தார்கள்.... 'இதுவரைக்கும் கேட்டதில்லையே... அது என்ன சாஸ்திரம்...? கேள்விப்பட்டதில்லையே...?' என்றார்கள்.

"அந்த சரணாகதி சாஸ்திரம் ராமாயணத்திலே சொல்லப்பட்டிருக்கிறது" என்றார் அவர்.

இப்படிப்பட்ட ராமாயணமும் மகாபாரதமும் தெரியாத புராண ஞானம் இல்லாத ஒருத்தருக்கு மற்ற சாஸ்திரங்கள் தெரிந்திருப்பதெல்லாம் வீண்தான்! சரணாகதி சாஸ்திரத்தை உணர்த்தும் ராமாயணம்தான் முதலில் தெரிந்திருக்க வேண்டும்.

ராமாயணத்தின் பால காண்டத்தில் பார்த்தால் பகவானிடத்தில் தேவதைகள் பண்ணின சரணாகதி. அதே பால காண்டத்திலே தசரதர் பரசுராமரிடத்திலே பண்ணிய சரணாகதி. அயோத்யா காண்டத்திலோ ராமரிடத்தில் லக்ஷ்மணர் பண்ணிய சரணாகதி. பரதன் சக்ரவர்த்தித் திருமகனிடம் பண்ணிய சரணாகதி. ஆரண்ய காண்டத்தில் மகரிஷிகளெல்லாம் பகவானிடத்தில் பண்ணிய சரணாகதி. உயர்ந்த கிஷ்கிந்தா காண்டத்தில் சுக்ரீவன் பகவானிடத்திலே பண்ணின சரணாகதி. சுந்தர காண்டத்தில் திரிஜடையானவள் சீதா பிராட்டியிடம் பண்ணிய சரணாகதி. யுத்த காண்டத்திலே விபீஷணன் பகவானிடத்தில் பண்ணிய சரணாகதி; பகவான் சமுத்திர ராஜனிடம் பண்ணிய சரணாகதி. உத்தர ராமாயணத்தில் எல்லா தேவதைகளும் பகவானிடத்திலே பண்ணிய சரணாகதி... இப்படி, சரணாகதியானது அச்சுறு ஆணியாக ராமாயணத்தில் கோக்கப்பட்டுள்ளது. இத்தனைக்கும் பலனிருந்தது. பகவான் பூலோகத்தில் வந்து அவதாரம் பண்ணினதாலே பலன் இருந்தது.



"கடிதத்தை மிகவும் நீட்டி விட்டேன். காரணம் இதைவிடச் சுருக்கமாக எழுதுவதற்கு எனக்கு போதிய நேரம் இல்லாததுதான்."

— பிளேய்ஸி பாஸ்கல்

"மேதைகள் தமாஷ்" என்ற நூலிலிருந்து: சுகந்தி ராஜ்

ஆனால், அதே சரணாகதியை தசரதன் பரசுராமனிடத்திலே பண்ணியபோது பலனிருக்கவில்லை.

இந்த பரசுராமர் இருக்கிறாரே... ஏறிட்டுப் பார்க்க முடியாத வீரியம் அவருக்கு. கோபத்துடன் இருக்கிறார். சுவாமி தேசிகன் தமது தசாவதார ஸ்தோத்திரத்திலே, எல்லா அவதாரங்களுக்கும் ஒரு விசேஷமான அடைமொழி கொடுக்கிறார் : ரோச ராம : என்கிறார் பரசுராமரை! அத்தனை ரோசம் – கோபம் உடையவர் அவர்!

பரசுராமன் வந்தவுடனேயே, 'என் குழந்தைகள் சின்னவர்கள். இப்போதுதான் கல்யாணம் பண்ணி அழைத்துக் கொண்டு போகிறேன்... அவர்களை விட்டு விடுங்கள். என்னை எது வேண்டுமானாலும் செய்யுங்கள்...' என்று கெஞ்சுகிறான் தசரதன். ஆனால் பரசுராமர் கோபத்துடன்தான் நிற்கிறார். இந்த சரணாகதி பலிக்கவில்லையே... ஏன் பலிக்கவில்லை? முறை தவறி பிரார்த்தித்தோமானால் பலிக்காது!

யாரிடத்திலே சரணாகதி பண்ணுகிறோமோ அவரிடத்திலே இரண்டு விஷயங்கள் இருக்க வேண்டும். ஒன்று சக்தி, இன்னொன்று காருண்யம். இவை இரண்டும் இல்லாவிட்டால் சரணாகதி பலிக்காது. சக்தி இருந்து காருண்யம் இல்லாவிட்டாலும் பயனில்லை. காருண்யம் இருந்து சக்தியில்லாவிட்டாலும் பலனில்லை.

முதலாவதுக்கான உதாரணமாக பரசுராமரைச் சொன்னேன். கருணை இருந்தும் சக்தி இல்லாததால் சரணாகதி தோற்ற கதையை அடுத்த வாரம் சொல்கிறேன்.

(தொடரும்)

"புவனாவுடன் சண்டை போட்டியா?" என்றான மணிவண்ணன்.

"ஆமாம்."

"அதான். காலையிலிருந்து தலைகீழாகக் காரியங்கள் பண்ணிக் கொண்டிருக்கிறாய். மானேஜர் இரண்டு முறை கூப்பிட்டு அனுப்பினார் போலிருக்கிறது?"

"ம். கூட்டல் குளறுபடி."

"ஒரு டிபிகல் மிடில்கிளாஸ் ஆபீஸ் கோயரின் சாதாரண பிரச்னைகள்தான் உனக்கும் இருக்கிறது. உன் எதிர்பார்ப்புகளின் எல்லைகள்தான் உன் சந்தோஷத்தை நிர்ணயிக்கிற விஷயங்கள். இதை முதலில் புரிந்து கொள்!" என்றான் மணிவண்ணன். அலுவலகத்தில் அவன் ஒருத்தனிடம் மட்டும்தான் மனசு விட்டுப் பேச முடிகிறது.

"கவனி. வாழ்க்கையை நின்று, உற்றுப் பார்க்காதே. அது ஒரு பூதம். பல்லைக்காட்டி பயமுறுத்தும். கடந்து போய்க் கொண்டே இரு. பிரச்னை வராது."

அது தன்னால் முடியாது என்று அவனுக்குத் தோன்றியது. கொஞ்சம் மென்மை. கொஞ்சம் வருடல். இங்கே சீண்டல். அங்கே சிணுங்கல். கொஞ்சம் தென்



ஒன் டே மேட்ச்

றல். கொஞ்சம் தெய்வீகம். துளி பனிப் புன்னகை. தூரத்தில் வயலின் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். பிருந்தாவன ஸாரங்கா. அதில் நிஷாதத்தை அழுத்தக் கூடாது. ஒற்றி எடுக்க வேண்டும். கடற்கரை மணலில் கால் புதைப்பது போல ஒரு சுகம் இருந்து கொண்டே இருக்க வேண்டும்.

"நீ சினிமா பார்த்துக் கெட்டு விட்டாய்'' என்றான் மணிவண்ணன்.

"இருக்கலாம். ஆனால் அது தப்பில்லையே? வாழ்க்கைக்கும் சினிமாவுக்கும் மயிரிழை வித்தியாசம்தான். அந்த மயிரிழையை பூதக் கண்ணாடி வைத்துப் பார்க்கிறபோது கிடைக்கிற சுகம் இந்தக் கூட்டல், கழித்தல் வாழ்க்கையில் கிடைப்பதில்லையே?''

"பார்! உனக்கு என்ன வேண்டும் என்பதில் தெளிவாக இரு, முதலில். கனவுகளுக்கு எல்லை இல்லை. ஆனால் யதார்த்தத்துக்கு வரம்பு உண்டு. உன் பிரச்னைதான் என்ன?'' என்று மணிவண்ணன் கேட்டான்.

என்ன என்று சொல்வது? காலையில் பரபரப்பாக அலுவலகம் கிளம்பும்போதே சண்டை வந்து விட்டது. இஸ்திரி போடக் கொடுத்திருந்த சட்டை இன்னும் வந்திருக்கவில்லை. குக்கரில் கூடுதல் தண்ணீர் காரணமாக, சாதம் குழைந்து விட்டது. எட்டு மணி ஆகியும் பால் வரவில்லை. வயிற்றுக்குக் காப்பி ஊற்றாததன் எதிரொலி தலையில் கேட்டது. கூடுதலாக ஊரிலிருந்து அம்மா கடிதம் எழுதியிருந்தாள். இரண்டு வரியில் நலம் விசாரித்துவிட்டு, கார்டு முழுக்கக் காசு கேட்டு. அப்பாவுக்கு உடம்பு சரியில்லை. வீட்டுக்கு வெள்ளையடிக்க வேண்டும். தங்கைக்கு இந்த வரன் அமைந்து விடும்போல் இருக்கிறது.

எல்லாமே எதிர்கொள்ளக்கூடிய சின்னச் சின்ன விஷயங்கள்தாம். அத்தனையும் ஒரு சேரத் தாக்கும்போது தான் தோல்வி பயம் வந்து விடுகிறது. விளைவாக குக்கர் சாதம் குழைந்ததற்காக புவனா மீது பாய வேண்டியதாகி விட்டது. அவளும் வேலைக்குப் போகிறவள். அசடுவழிகிற மேலதிகாரியை வைத்துக் கொண்டு அல்லல்படுகிறவள். தெரியாததில்லை. ஆனாலும் எதிர்ப்பையோ, இயலாமையையோ, கோபத்தையோ, சந்தோஷத்தையோ வெளிக்காட்டிவிட அவர்கள் இருவருக்கும் வேறு வழி இல்லை. ஒருத்தருக்கு ஒருத்தர். நேருக்கு நேர். சொற்களின் துல்லியமான மோதல். உரசலில் தெறிக்கிற தீப்பொறி. அதன் தகிப்பில் குளிர்காய்கிற மனத்தின் குதூகலம். குத்திக் கிளறிப் பார்த்து சந்தோஷப்படுகிற குரூரம்.

புவனாவும் சளைக்கவில்லை. வார்த்தைக்கு வார்த்தை. வசைக்கு வசை. ஆணாதிக்க உலகின் பிரத்யட்சப் பிரதிநிதியாக அவனை நிற்க வைத்து சொற்களால் சுட்டுத் தீர்த்து விட்டாள். எல்லாமே தவிர்த்திருக்கக் கூடியவைதான். ஆனால் தருணங்கள், உணர்வை உரசிப் பார்க்கிறபோது கனன்று எழும் தீயை அணைக்க முடிகிறதில்லை.

"அவன் ஸீட்டுக்குப் போய் உட்கார்ந்ததும், ஹல்லோ, யூ லுக் ஸோ ஸ்மார்ட் டுடே!'' என்றாள் அனுபமா.

ஏதாவது பேச வேண்டும். கசங்கிய சட்டையும் ஷேவ் கூடப் பண்ணாத இன்றைய முகத்தையும் பார்த்து ஸ்மார்ட் என்று கூசாமல் சொல்வதற்கு எத்தனை பொய் பழகியிருக்க வேண்டும்?

உலகில் பிரச்னைகளே இல்லாதவர்கள் டைப்பிஸ்ட் ஜாதிக்காரர்கள்தான் என்று அவனுக்குத் தோன்றியது. வாரப் பத்திரிகைத் தொடர்களுக்கு நடுவே அவ்வப்போது வேலை பார்த்துக் கொண்டு, கனமான மேக்-அப்புடன் ஆண்களை வசீகரித்துக் கொண்டு, வாங்குகிற சம்பளத்தைப் புடைவைகளில் பாவு நூலாக்கி, நுனி நாக்கு ஓட்டை இங்கிலீஷில் உலகைப் புரட்டிப் போடுகிறவர்கள்.

பா. ராகவன்

''ரொம்ப நாளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். என்னை உங்கள் வீட்டுக்குக் கூப்பிட மாட்டீர்களா? உங்கள் மனைவி உங்களைப் போலவே வெகு அழகா? அல்லது-''

இவள் எப்படி இப்படியெல்லாம் பேசுகிறாள் என்று அவனுக்கு ஆச்சர்யமாக இருந்தது. அனுபமாவுக்குத் திருமணம் ஆகிவிட்டது. புருஷன்

ஏதோ எக்ஸ்போர்ட் பிஸினஸ் செய்து கொண்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறாள். வீட்டில் போரடிக்கிறது என்பதற்காக வேலைக்கு வருகிறாள்.

"தெரியுமா? இந்தச் சம்பளம் என் ஒப்பனை திரவியங்களுக்குக் கூடக் காணுவதில்லை. என்ன செய்வது? வேலையை விட்டு விட்டால் உங்களையெல்லாம் எப்படிப் பார்த்துக் கொண்டிருப்பது?"

"எதற்கு எங்களைப் பார்க்க வேண்டும்?"

"ஜஸ்ட், ஒரு ப்ளெஷருக்காக. அனுமதியுடன் ஸைட் அடிக்கிற சௌகர்யத்துக்காக."

அவனுக்கு முகத்தில் அறைந்தாற்போல இருந்தது. இப்படி ஒரு பெண் – அதுவும் திருமணமானவள் – என்னுடன் பணிபுரிகிறாள் என்று புவனாவிடம் சொன்னால் அவள் என்ன சொல்லுவாள்? கொழுப்பெடுத்தவள் என்று தொடங்கி நீளமாக ஒரு பிரசங்கம் நடத்துவாள்.

'உன் ஆபீஸில் ஒரு மானேஜர். என் ஆபீஸில் ஒரு டைப்பிஸ்ட்' என்று சீண்டலாம். மேற்கொண்டு உரையாடல் திசைமாறி, அபாயகரமான எல்லைகளுக்குப் போய்விட வாய்ப்பு இருக்கிறது. ஆண்களின் மனக் கட்டுப்பாடு பற்றி புவனா வைத்திருக்கிற மதிப்பீடு மிக மோசமானது. அவள் பார்வையில் புருஷனும் கோடானுகோடி ஸோ கால்ட் ஆண் வர்க்கத்தில் ஒரு புள்ளிதான்.

அவனுக்கு எரிச்சலாக இருந்தது. இந்த புவனா, அனுபமா எல்லாருமே ஒரே கனியின் விதைகள்தான் என்று தோன்றியது. விளைச்சல் வேறுவேறாயினும் விரும்பத்தகாத சுவை தருவதில் ஒரே ரகம்.

"ஹல்லோ, இன்று ரிலீஸாகி இருக்கும் படத்துக்கு ஈவினிங் ஷோவுக்கு இரண்டு டிக்கெட்டுகள் இருக்கின்றன. வருகிறீர்களா?"

அனுபமாதான் கேட்டாள். உள்ளர்த்தம் ஏதுமில்லையாம். நட்பு ரீதியில்தான் அழைக்கிறாளாம். ஒரு ஆணும் பெண்ணும் சினிமா போவதில் என்ன தவறு?

"ஏன், உங்கள் ஹஸ்பெண்ட் இருக்கிறார், இல்லையா?"

"அவர் இருக்கிறார். நான் உங்களைத்தான் கூப்பிட்டேன்."

"ஸாரி. வருவதற்கில்லை."

"ஏன், உங்கள் மனைவி கோபித்துக் கொள்வாளோ?"

அவன் அதற்கு மேல் பேச்சை வளர்க்க விரும்பவில்லை. பிறகு ஒழுக்க விதிகள் பற்றி அவள் லெக்சர் அடிக்கத் தொடங்கி விட்டால் சகிக்காது. மனிதர்களால் ஆன உலகில் மனிதர்களால்தான் சிக்கலும் உண்டாகிறது. சிக்கலால் சினம். சினத்தால் புத்தி நாசம். ஹே, அர்ஜுனா என்று கூப்பிட்டு, எந்தப் பரமாத்மாவும் இப்போது நல்லுபதேசத்துக்கு வரப் போவதில்லை.

அவனுக்குத் தலை பிளந்து விடும்போல வலித்தது. வீட்டிலும் வெளியிலும் மனத்திலும் சொல்லிலும் செயலிலும் அமைதியற்று உலவுகிற நிலையின் அழுத்தம் தன்னை மிக அதிகமாகவே தாக்குவது போல உணர்ந்தான்.

மாலை வீடு திரும்பும் போது, வழியில் ஒரு விபத்தைப் பார்த்தான். லாரியில் அடிபட்ட ஸ்கூட்டர். தார்ச்சாலையில் சிதறிய கண்ணாடி மொட்டுக்கள். சாலையோரத்தில் மொத்தமாக ஒரு பொருளை வெள்ளைத் துணி போர்த்தி வைத்திருந்தார்கள். ஒரு போலீஸ்காரரும் நாலைந்து பார்வையாளர்களும் அருகே நின்று கொண்டிருக்க, அவனுக்கு இறந்தவனைப் பற்றிக் கொஞ்சம் நினைக்கத் தோன்றியது. எத்தனை பிரச்னைகள் இருந்தனவோ? கடன் இருக்கலாம். வேலை இல்லாதவனாக இருக்கலாம். தன்னைப் போல் எல்லாம் சரியாக இருந்தும் எதையோ இழந்தது போலப் பரிதவிப்பவனாக இருக்கலாம். எதுவானால் என்ன? இனி அவனுக்குக் கவலை இல்லை.

– இப்படி நினைத்ததுமே அவனுக்கு இறந்தவன் மேல் கொஞ்சம் பொறாமை

இறால் பண்ணை போட்டார். அது பற்றிய விவரங்களை எல்லாம் சேகரித்து, புஷ்பகிரியிலேயே ஒரு பண்ணையைத் தொடங்கினார் சமரசம்.

மழை பெய்யும்போது உப்பு நீரும் நல்ல ஆற்று நீரும் கலக்கும் இடங்களில்தான் இறால் நன்கு பொரியும் என்பது தெரிந்தது. அதனால் அந்த நீர் கூடும் இடங்களில் போய் வலை போட்டுப் பிடித்துக் கொண்டு வந்த குஞ்சுகளை புஷ்பகிரியில் வளர்த்ததில் நஷ்டமே ஏற்பட்டது!



வரை...

எனவே அங்கேயுள்ள நல்ல நீரோடு சேர்க்க வேண்டும் என்பதற்காகப் பெரிய பெரிய பீப்பாய்களில் கடல்நீரை வேனில் ஏற்றிக் கொண்டு வந்தார்.

ஒரே ஒரு இறால் குஞ்சையாவது பிழைக்க வைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். கண்டது தோல்விதான்! நாற்பத்தைந்து நாட்களிலேயே குஞ்சுகள் செத்துப் போய் விடும்!

எதிர்நீச்சல்:

ஜி.எஸ்.சமரசம்

மனம் தளராமல் ஒவ்வொரு கட்டத்தையும் பற்றி ரிப்போர்ட் எழுதி வைத்துக் கொண்டு தேவையான உரம், தீவனம் எல்லாம் போட்டுப் பாடுபட்டதில் கடைசியாக வெற்றி கிடைத்தது! தேறியவை எண்ணூறு இறால் குஞ்சுகள். இதுதான் சமரசத்துக்குத் தைரியம் ஊட்டியது.

அடுத்த சோதனையில் இன்னும் நிறைய உற்பத்தியானது. கடற்கரையை ஒட்டியதாக நல்ல இடம் தேடியதில் பாலவாக்கத்தில் இடம் கிடைத்தது, ஃபைபர் கிளாஸில் தொட்டிகளை வடிவமைத்தார். ஒன்றரை டன் கொள்ளளவுள்ள இருபது தொட்டிகள். இவற்றில் மீன்குஞ்சு உற்பத்தி. இன்னும் இதை விரிவுபடுத்த எண்ணியதில் கானத்தூரில் கடலோரமாக ஒரு பண்ணை அமைந்தது. 'ஆக்வா ஹாட்ச்சரீஸ்' என்கிற பெயரில் உயர்தரமான நன்னீர் இறால் குஞ்சுகளின் உற்பத்தியில் வெற்றி கிடைத்தது.

சுற்றுப்புறச் சூழல் கெடுகிறது என்றெல்லாம் சொல்லி இறால் பண்ணைகளுக்கு எதிர்ப்பு இருந்து வருகிறது. அண்மையில்கூட இந்தப் பண்ணைகளை வரும் மார்ச் மாதத்தோடு அழித்து விட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் ஆணையிட்டிருக்கிறது.

இதனால் மனம் மிகவும் நொந்து போயிருக்கிறார் சமரசம். பதினைந்து ஆண்டுகளாக எந்தவிதமான பட்டப் படிப்பும் இல்லாமல் தாமே முன் வந்து கற்றுக் கொண்ட தொழிலின் எதிர்காலம் என்ன ஆகும்?

"தமிழ்நாட்டில் நிலம் நிறையவே இருக்கிறது. விவசாய நிலங்களைத் தொடவே வேண்டாம். ஒன்றுக்குமே உதவாமல் கிடக்கும் கட்டாந் தரைகளைச் செம்மைப்படுத்தி இந்த இறால் பண்ணைகளை உருவாக்கலாம்!'' என்கிறார்.

— சுப்ர.பாலன்,
படம் : யோகா

தீ நாக்கு

ராஜ்கோகுல்

முனீஸ்வரி முகத்திலும் மார்பிலும் மாறி மாறி அடித்துக் கொண்டு ஓங்காரமாக ஓல மிட்டுக் கதறினாள். புலம்பினாள்.

"பாவிச் சிறுக்கி, இன்னிக்குப் பாத்து டீ.வி. முன்னாடி ஒக்காந்து தொலைச்சுட்டேனே..."

கண்ணுக்கெட்டியவரை கரும்புகை மண் டலம் வானை நிறைந்திருந்தது. தீயின் நெடிய 'சுவாலை நாக்கு' தனக்கெட்டிய பொருளை யெல்லாம் சுருட்டி இழுத்து விழுங்கி ஏப்பம் விட்டுக் கொண்டிருந்தது. அப்பிரதேசமே வெப்பக் காடாகியிருந்தது.

தீயில் விழுந்து தன்னையும் மாய்த்துக் கொள்ள ஓடியவளை யாரோ நாலைந்து பேர் பின்னால் இழுத்துக் கொண்டு போய் தூரத் தள்ளி உட்கார வைத்தனர். மூச்சிரைக்கக் கத்தி யவள் சில விநாடிகளில் மயங்கிச் சாய்ந்து விட் டாள்.

முனீஸ்வரிக்கு யதேச்சையாகத்தான் அன்றைக்கு அந்த ஐடியா தோன்றியது. உடனே செயலில் இறங்கி விட்டாள்.

ஐந்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த பெரியவள் ஸ்ரீதேவியை அழைத்து ஒரு கரித் துண்டை கையில் திணித்தாள். அடித்த சுண் ணாம்பு பாதி மறைந்து பழுப்பாகியிருந்த குடிசைச் சுவரில் 'சைக்கிள் ஸ்டாண்ட்' என்று எழுதச் சொன்னாள்.

மாடர்ன் ஆர்ட் போல அச்சிறுமி 'சைக்கில் சாண்ட்' என்று சுவரில் எழுத, அன்று தான் அக்குடிசையின் சுற்றுப்புறம், சைக்கிள் பாதுகாக்கு மிடமாக மாறியது.

அது நகரத்தின் புறநகர்ப் பகுதி. நான்கு சாலைகள் சந்திக்குமிடம். தஞ்சை நெடுஞ்சாலைக்குத் தெற்குப் புறம் கிடந்த பத்து ஏக்கர் புறம்போக்கு நிலத்தை ஆக்ரமித்து இருநூற்றுக்கு மேற்பட்ட குடி சைகள். ரிக்ஷா ஓட்டுபவர்கள், தினக் கூலிகள், பக்கத்து பங்களாக் களில் வீட்டு வேலை செய்பவர்கள், ரேஷன் கடை கியூவில் நிற்பதையே தொழிலாகக் கொண்டவர்கள் என்று ஒரு அடித்தட்டு மக்கள் கூட்டம். 'உங்கள் குடிசைகளை உங்களுக்கே பட்டா போட்டு குடுக்க அண்ணன் ஏற்பாடு பண்ணிக்கிட்டிருக்கார்' என்று கூறிக் கொண்டு இதுவரை நான்கைந்து பெருச் சாளிகள் 'செலவுக்குப்' பணம் வசூல் செய்து ஏப்பம் விட்டு விட, ஏமாந்து போயிருந்த ஏழை ஜாதியில் ஒரு குடும்பம்தான் அய் யப்பன்-முனீஸ்வரியுடையது.

இரண்டாவதாக சரிதா பிறந்த போதே, தர்ம ஆஸ்பத்திரியில் பிரசவம் பார்த்த டாக் டர் 'போதும்மா... ஆபரேஷன் பண்ணிக் கோ'ன்னு தான் சொன்னார். அவளும் அதைத் தான் முடிவெடுத்திருந்தாள். ஆனால் அய்யப் பன் ஒத்துக் கொள்ளவில்லை!- ஆண் வாரிசு வேண்டுமாம்- ஊருக்கு ஊர் வாங்கிக் குவித் திருக்கும் பொல்லாத சொத்தையெல்லாம் அனுபவிக்க!

அவனுடைய ஆசையும் நிறைவேறத்தான் செய்தது. குலதெய்வத்தை நினைத்து 'கரளி ராஜ்' என்று பெயர் சூட்டி பொத்திப் பொத்தி வளர்த்தார்கள். இரண்டு பேரும் பாசத்தைப் பொழிந்தார்கள். ஒன்றரை வயதாகியும் அவளிடம் தான் பால் குடித்தான். சேலையில் தொட்டில் கட்டி மணிக்கணக்கில் தாலாட்டுப் பாடுவாள்.

அய்யப்பன் ஒரு சினிமாப் பித்து. (அவளும் தான்) ரிக்ஷா ஓட்டிக் கிடைக்கிற காசில் ஓன ருக்கு வாடகை கொடுத்தது போக மீதியில் பாதியை சினிமாவுக்கும் மறுபாதியை சாரா யத்துக்கும் கொடுத்து விட்டால் குடும் பத்துக்கு?...

அவளும் இரண்டு பர்லாங் தள்ளியிருந்த 'கவர்மெண்ட் குவாட்டர்ஸ்' வீடுகளுக்கு வீட்டுவேலை செய்யப் போனாள். தெரு பைப் பிலிருந்து வீடுகளுக்குக் காவேரித் தண்ணீர் எடுத்துக் கொடுத்தாள். அதில் கிடைத்த பண மெல்லாம் எந்த மூலைக்கு?- ஐந்தாவது படித்த பெரியவளுக்கும், மூன்றாவது படித்த சின்னவளுக்கும் நோட்டுப்



புத்தகமும், துணிகளும் வாங்கவே ஏகமாகச் செலவானது.

– அந்த நேரத்தில் தான் 'சைக்கில் சாண்ட்' உருவெடுத்தது.

'நாலு ரோட்'டுக்குத்தெற்கே நீண்ட தூரத்திற்கு முளைத்திருந்த விஸ்தரிப்புப் பகுதிகளுக்குப் போதிய பஸ் வசதி கிடையாது. அங்கிருந்து நகரத்திற்கு வேலைக்குச் செல்பவர்கள் சைக்கிளில் அல்லது டூவீலரில் நாலு ரோட்டிற்கு வந்து விட்டால், இங்கிருந்து பஸ் பிடித்து ஆபீஸ் போக வசதியாக இருக்கும்.

இச்சூழ்நிலையில்தான் அவர்களது 'சைக்கில் சாண்ட்' பிசினஸ் சூடுபிடிக்க ஆரம்பித்தது. ஐந்து சைக்கிள், பத்து சைக்கிள் என்று வளர்ந்து, வாடிக்கையாளர் கூட்டம் பெருகியது. ஸ்கூட்டர், மொபெட்டுகளையும் நிறுத்த வந்தனர். மொட்டை வெயிலில் நிறுத்த முடியுமா?

– வேறு வழியில்லை! சுந்து வட்டிக் கடைக்காரர் அருணகிரியிடம் ஐயாயிரம் ரூபாய் கடன் வாங்கி, குடிசைக்குத் தெற்கிலும், மேற்கிலும் கிடந்த காலியிடத்தில் கொட்டகை போட, கூட்டம் பெருகியது. அருணகிரிக்கு தினமும் இருபது ரூபாயாக இரண்டு வருடத்துக்குக் கொடுத்து கடனை அடைக்க வேண்டும். அது பெரிய விஷயமாகத் தெரியவில்லை– தினமும் முப்பது நாற்பது சைக்கிளும், இருபது இருபத்தைந்து டூ வீலர்களும் வந்து நிற்க ஆரம்பித்து விட்டனவே!

ஆறுமாதங்கள் ஓடிவிட்டன. அவள் வீட்டு வேலைக்குப் போன நேரங்களில், அய்யப்பன் ஸ்டாண்டைப் பார்த்துக் கொள்வான். இருவரும் இல்லாத நேரத்தில் பக்கத்து குடிசையில் பூக்கடை வைத்திருந்த சம்பத் ஒத்தாசை செய்வான்.

தொழிலில் அவ்வப்போது பிரச்னைகள் எழத்தான் செய்தன.

குழந்தைகளுக்கு உடம்புக்கு வந்து மருந்து மாயமென்று செலவு வந்து விட்டாலோ, அய்யப்பனுக்கு கிறுக்கு வந்து வசூல் பணம் முழுவதையும் தண்ணி அடித்து விட்டாலோ அருணகிரிக்குப் பதில் சொல்வதற்குள் திண்டாட்டமாகி விடும். மனுஷன் பணத்தில் கறார். கத்தி ஊரைக் கூட்டி மானத்தை வாங்கி விடுவார்– மனுஷனுக்கு 'தீ-நாக்கு'! ஒவ்வொரு வார்த்தையும் நெருப்புதான்.

சைக்கிளும், வண்டியும் நிறுத்தும் மனிதர்களில் தான் எத்தனை தினுசு!

நிறுத்திய சைக்கிளில் காற்று இறங்கி விட்டால் கூட தாட்பூட்டென்று குதிக்கும் தாலுகா ஆபீஸ் பியூன்– "ஒரே முள்ளாக் கிடக்கும்மா. வேலிக்குப் போட்டிருக்கிற முள்ளை நல்லாக் கூட்டி வுடு. பஞ்சர் ஒட்டச் செலவு பண்ணி மாளலை சனியன்..."

எங்கோ திருட்டுக் கொடுத்த சைக்கிள் பெல்லை. 'இங்கே தான் போச்சு'ன்னு சாதிக்கும் பள்ளி ஆசிரியர்; "புது ஸ்கூட்டர்ம்மா. இப்படி எவனோ ரசி பெயின்டை சுரண்டுறதைப் பார்த்துககிட்டு இருந்திருக்கியேம்மா" என்று சத்தம் போடும் 'பெல்' அதிகாரி.

"இங்கே பெட்ரோல் திருட்டுப் போவுதுய்யா. நேத்துத் தான் ரெண்டு லிட்டர் போட்டுட்டு வந்து நிறுத்தினேன்" என்று அபாண்டமாக திருட்டுப் பட்டம் கட்டும் தொப்பிக்கார இளைஞர்; புது ஹீரோ ஹோண்டாவை நிறுத்தும் போதும் எடுக்கும் போதும் துடைத்துத் துடைத்து அழகு காக்கும் பாங்க் அதிகாரி என்று எத்தனையோ ரக மனிதர்கள்!

என்றைக்கும் போலத்தான் சம்பவத்தன்றும் 'குவாட்டர்ஸுக்கு' தண்ணீர் எடுத்துக் கொடுக்கப் போனாள் முனீஸ்வரி. குழந்தைக்கு வயிறு முட்ட பால் புகட்டித் தொட்டிலில் தூங்க வைத்து விட்டு, சம்பத் அண்ணனிடம் சொல்லி விட்டுப் புறப்பட்டாள். ரேஷனில் கெரசின் வாங்க 'கேனை'யும் எடுத்துக் கொண்டாள்..

தண்ணீர் எடுக்கும் வேலை முடிந்து ரேஷனுக்குப் போன போது மூணு மணிக்குத்தான் லோடு வருதுன்னு சொன்னதால 'கேனை' கியூவில் நிறுத்திவிட்டு நாலாவது பிளாக்கில் தாசில்தார் வீட்டுக்குள் போய்ப் புகுந்து கொண்டாள்!- அரை மணி நேரமிருக்கே- டி.வி. பார்க்கலாம் என்று.

பழைய படத்தில் லயித்து விட்டாள். யாரோ பலமாக கதவை இடித்தார்கள். 'கெரசின் லோடு வந்துடுச்சா? ஐய்யோ மூணரை ஆச்சே'...

"டீ... முனீஸ்வரி!.. நம்ம குடிசையெல்லாம் தீப்புடிச்சு எரியுதாம்டு..."- திறந்த கதவுகளுள் அவசரமாக முகத்தைக் காட்டி [illegible] சொல்லி விட்டு ஓடினாள் மல்லிகா. மாடியில் வேலை செய்பவள்.

அவளும் ஓடினாள். அவ்வளவு வேகமாக அவள் அதற்கு முன் [illegible] யில்லை. வெறி பிடித்தது போல ஓடியவளை எல்லோரும் [illegible] தார்கள்.

மதியம் சமாரி முடிந்து வீட்டுக்கு வந்து, இருக்கதைச் சாப்பிட்ட [illegible]



அருள்வாக்கு

மனுஷாள் மாதிரி இருந்து அவர்களோடு கலந்து பழகி அவர்களுக்கு வழிகாட்டி உத்ஸாஹப்படுத்த வேண்டுமென்று அவன் (பரமாத்மா) அவதாரமாக வருகிறபோது வேஷம் நன்றாகப் பொருந்துவதற்காகவே கொஞ்சங் கூடத் தயங்காமல், பயப்படாமல் மனஸின் நானாவிதமான உணர்ச்சிகளையும், 'அலவ்' பண்ணுகிறான். அதனால் ஒரு அவதார புருஷனுக்கும் கோபம் வரும், பயம் வரும், அழுகை வரும், ச்ருங்காரம் வரும். ஒரு ஞானி, சரீரம் எப்படி வேண்டுமானால் ஆடிவிட்டுப் போகட்டுமே என்று இருக்கிற மாதிரியே அவதார புருஷன் போகட்டுமே என்று விட்டு விடுவதால்தான் இப்படியெல்லாம் நடப்பது! அப்போதைக்கு மேல்மனஸிலேதான் அவதாரத்துக்கு இந்த உணர்ச்சிகளால் பாதிப்பு இருக்கிற மாதிரியே இருக்குமே தவிர, நம் மாதிரி அந்த உணர்ச்சிகளே அவனை அடித்துக் கொண்டு போய் விடுவதென்பது ஒருபோதுமில்லை. எத்தனை ஆசை, கோபம், அழுகை இருந்தாலும் அது அவனுடைய பரமாத்ம நிலையை பாதிக்க முடியாது; லோகத்தில் அவன் முடிவாகப் பண்ண வேண்டிய தர்மஸம்ஸ்தாபனத்தைப் பண்ணி முடிப்பதற்கும் குந்தகம் ஏற்படுத்த முடியாது. கொஞ்சம் ஃபெயிலாகிறதுபோல அவன் சாய்ந்தாலும் அப்புறம் நிமிர்ந்து நின்றுபாஸ் பண்ணி விடுவான். சாய்ந்தும் நிமிர்ந்தும் ஆடுவது அவனுக்கு விளையாட்டு!

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

முனீஸ்வரி வரும் நேரம் தானே என்று நினைத்து அரை நாளோடு கடை மூடிய சம் பத்தையும் இழுத்துக் கொண்டு முல்லை தியேட்டரில் மலையாளப் படம் பார்க்கப் போயிருக்கிறான்.

இரண்டரை மணி வெயிலில் தீ பரவி யிருக்கிறது. அரைமணிக்குள் ஒன்று பாக்கியில் லாமல் எல்லாக் குடிசைகளுமே தீயின் பிடிக்குள் சிக்கி விட்டன. டூ வீலர்களின் பெட் ரோலும் சேர்ந்து கொள்ள 'ஸ்டாண்டில்' நெருப்பு ஆக்ரோஷமாக எரிந்திருக்கிறது.

தீயணைக்கும் படையினர் போராடித் தீயைக் கட்டுப்படுத்தி குடிசைக்குள் புகுந்து கரிக்கட்டை போல் வெந்து விறைத்த குழந் தையின் உடலைக் கொண்டு வந்து சாக்கில் கிடத்தினார்கள். மயக்கம் தெளிந்து பார்த்த முனீஸ்வரி அலறியபடி மீண்டும் மயக்க மானாள். திரும்பி வந்த அய்யப்பன் முதலில் வாயடைத்து நின்றான். பின்னர் அரற்றிப் புலம்பி அழுதான். பள்ளியில் இருந்து வந்து விட்ட பிள்ளைகளும் சேர்ந்து அழுதனர்.

தீயின் வெம்மை இன்னும் பூமியில் மிச் சிருந்தது. தாமதமாக வந்த தீயணைப்புப் படை யால் சாம்பலை மட்டுமே மிச்சமாக்க முடிந் திருந்தது.

தீ பலி கொண்ட ஆண் வாரிசை மண் ணுக்கு இரையாக்கி விட்டு, கரிபூசிக் கொண்ட திண்ணையில் குடும்பத்தோடு உட்கார்ந்து காலைச் சூரியனை வெறித்துக் கொண்டிருந் தனர்.

அரைகுறையாகத் தப்பித்த பொருட்களை மீட்பதில் குடிசை வாசிகள் அங்குமிங்கும் திரிந்து கொண்டிருந்தனர். தாசில்தார், கலெக் டரெல்லாம் பார்க்க வருவாரென்றும், சாப் பாட்டுப் பொட்டலம் வருமென்றும் குடி சைக்கு ஐநூறு ரூபாய் என்றும் பேசிக் கொண் டார்கள்.

அவள் ஸ்டாண்டின் கதியைப் பார்த்தாள். சுடுகாட்டில் வெந்து உடைந்து சாம்பலில் அமிழ்ந்து கிடக்கும் எலும்புகள் போல- சைக் கிள், ஸ்கூட்டர், மொபெட், பைக் எல்லாம் எரிந்து கருகி எஞ்சிய இரும்புப் பாகங்கள் மட் டும் மண்டியிட்டுக் கொண்டிருந்தன. வரிசை வரிசையாக பரிதாபமாக, எரிந்த ரப்பர் வாடை இன்னும் அடங்கவில்லை.

அய்யப்பனுக்கும், முனீஸ்வரிக்கும் குழந்தை துக்கத்தை விட இந்தக் காட்சியின் வெறுமை அதிக சோகத்தைத் தந்தது.

'எப்படி சமாளிக்கப் போகிறோம்? என்ன பதில் சொல்லப் போகிறோம்? இருபதாயிரம் முப்பதாயிரம் மதிப்புள்ள வண்டிகள். என்ன திட்டுவார்களோ? வட்டிக்கடை அருணகிரி எப்படிக் கத்துவாரோ? என்ன சமாதானம் சொல்வது!'

எல்லோரும் வந்தார்கள்- ஒருவர் பின் ஒருவராகப் பார்த்தார்கள். செத்துச் சவமாகி யிருந்த தங்கள் வாகனத்தை அடையாளம் காண முயற்சி மேற்கொண்டார்கள். பின் உதட்டைப் பிதுக்கி விட்டு இவர்களைப் பார்த் தார்கள். அதிகம் பேச முற்படவில்லை. "ஏம்மா, கைக்குழந்தையை விட்டுட்டுப் போக லாமா? கையோட தூக்கிட்டு போக வேண் டியதுதானே..."- அவ்வளவுதான் கேட்டார் கள். அவள் அழுதாள். கை குவித்துக் கும் பிட்டபடி அழுதாள்.

வட்டிக்கடை அருணகிரி வந்தார். அவர் கண்களில் கூடவா கண்ணீர் சுரப்பி இருக் கிறது?- கலங்கினார்.

"இன்னொரு ரெண்டாயிரம் தரேன் அய் யப்பா. குடிக்கிறத வுடு. சிக்கனமா இரு. திரும் பவும் ஸ்டாண்ட் போடு. இல்லேன்னா பொட் டிக் கடை போடு... பழைய பாக்கியையும் சேர்த்து படிப்படியா அடைச்சுடலாம்..."

'இத்தனை இயந்திர கதியிலும் மனி தருக்குள் இப்படிக் கொஞ்சம் ஈரம் இருப்ப தால் தான் உலகம் இன்னமும் பொசுங்கி அழியாமல் பத்திரமாக இருக்கிறதோ?'- என்று நினைத்துக் கொண்டாள் முனீஸ்வரி.



"அந்த போலீஸ்காரர் ரொம்ப நேர் மையானவர்..."

"எப்படிச் சொல்ற?"

"நேத்து அவர்கிட்டயே பிக்பாக்கெட் அடித்து மாட்டிக்கிட்டேன்!"

"ஐயய்யோ! அப்புறம் என்னாச்சு?"

"அதில் இருந்த பணத்தில் அவர் மாமூலை மட்டும் எடுத்துக்கிட்டு மீதியை என்கிட்டயே கொடுத்திட்டார்!

— எஸ். சிவகாமி

துணையொன்றுமில்லை

மகாபாரத ஆரம்பத்தில் இந்தக் கதை இருக்கிறது. பரீக்ஷித்தை தக்ஷகன் என்கிற பாம்பு கடித்துவிட, அவன் இறந்து போகிறான். அதனால் பரீக்ஷித் மகன் ஜனமேஜயன் சர்ப்ப யாகம் என ஒன்றைப் பண்ணினான்.

அந்த யாகத்துக்குப் பயந்து கொண்டு தக்ஷகன், இந்திரனிடத்திலே போய் சரணாகதி பண்ணினான். இந்திரன் அபயம் அளித்துச் சொன்னான்: ''நான் உன்னை ரக்ஷிக்கிறேன்; இங்கேயே இரு...'' என்று.

ஜனமேஜயனின் ஹோமம் நடக்கிறது. எங்கெங்கோ இருந்த பாம்புகள் எல்லாம் அக்னி குண்டத்திலே வந்து விழுந்தன. யாகம் நடத்தியவரிடம் ஜனமேஜயன் கேட்டான், ''என் அப்பாவைக் கடித்த பாம்பு மட்டும் இன்னும் வரவில்லையே...?''

தேடிப் பார்த்தால், இந்திர லோகத்திலே இருந்தது அந்தப் பாம்பு! இந்திரனுடைய சிம்மாசனத்தின் காலைச் சுற்றி வளைத்துக் கொண்டு சுருண்டு கிடந்தது. உடனே எல்லாரும் இந்திரனை அழைக்க ஆரம்பித்தார்கள். 'இந்த்ராய தக்ஷகாயஸ்வா:' என்று ஹோமம் பண்ணினார்கள். இந்திரன் தக்ஷகனோடு வந்து இதிலே விழவேண்டும்...' என்பது வேண்டுகோள்!

இந்திர லோகத்திலிருந்து சிம்மாசனம் கிளம்பி விட்டது. இந்திரனும் அக்னியில் விழுவதற்காக வந்து கொண்டிருக்கிறான். அந்த சமயத்திலே தக்ஷகன் அவனை விட்டு ஓடியே போயிடுத்து...! பிற்காலத்திலே அந்த தக்ஷகன் ரக்ஷிக்கப்பட்டான்.

ஆனால் பாருங்கள், இந்திரன் தக்ஷகனை ரக்ஷிக்கிறேன் என்று சொன்னபோதும் அவனால் அதைச் செய்ய முடியவில்லை! அவனிடத்திலே காருண்யம் இருந்தது; சக்தி இல்லையே! அதனாலேதான் ரக்ஷிக்க முடியவில்லை.

பரசுராமரிடத்திலே சக்தி இருந்தும் காருண்யம் இருக்கவில்லை என்பதைப் பார்த்தோம்.

காருண்யம்-சக்தி ஆகிய இரண்டையும் உடைய பகவானிடத்திலேதான் நாம் சரணாகதி பண்ணணும்.

பரமார்த்த ஸ்துதி என ஒன்றை சுவாமி தேசிகன் பண்ணியிருக்கிறார்– திருப்புட்குழி (காஞ்சீபுரம் அருகே) என்கிற க்ஷேத்ரத்தில் இருக்கும் எம்பெருமான் பேரிலான பத்து சுலோகங்கள். அதை நித்திய பாராயணம் பண்ணணும் என்பது தேசிகரின் திருவுள்ளம்.

அந்த பரமார்த்த ஸ்துதியில் அவர் அழகாகச் சொல்கிறார்.

நாம் எத்தனையோ யக்ஞம் பண்ணுகிறோம். ஆனால், பகவான் ஒரு யக்ஞம் பண்ணுகிறான்... அது அவனைத் தவிர வேறொருத்தரால் பண்ண முடியாத யக்ஞம்! அதுதான் சரணாகத ரக்ஷணம் என்னும் யக்ஞம்.

யக்ஞம் பண்ணணும் என்றால் தர்மபத்தினி பக்கத்திலே இருக்க வேண்டாமா...? அந்த ஸ்ரீயோடு கூட சேர்ந்தே விளங்கி சரணாகத ரக்ஷணம் என்கிற யக்ஞத்தை நடத்துகிறான் பரமாத்மா. அந்த சரணாகத ரக்ஷண யக்ஞத்திலே ரித்விக்குகள் யார் என்று கேட்டால், எம்பெருமானிடத்திலே இருக்கும் படியான அவனுடைய கல்யாண குணங்கள். அவற்றுள் தயைதான் முக்கியமான ரித்விக். மற்றவை துணையானவை.

எந்த யக்ஞமும் தக்ஷிணையில் முடிய வேண்டும். தக்ஷிணை இல்லாவிட்டால் அதற்குப் பூர்த்தி கிடையாது. பகவான் பண்ணுகிற சரணாகத



இதுவரை....

ஸ்ரீராம், மிகவும் ஆசாரமான குடும்பத்து மூத்த மகன். ஸாஃப்ட் வேர் நிறுவனத்தில் மதிப்பான வேலை. உடன் பணிபுரியும் சுகன்யாவுக்கும் அவனுக்கும் காதல். தங்கை வசந்தியின் கல்யாணம் முடிந்த பின் தன் காதலைப் பெற்றோரிடம் தெரியப்படுத்தி, திருமணம் செய்து கொள்ள வேண்டும், என்பது திட்டம். ஆனால் இவர்களின் காதல் விஷயம் பெற்றோருக்குத் தெரிந்துபோக, உடனடியாக அவர்கள் கல்யாணத்தை நடத்தி வைக்கிறார், அப்பா ராமநாதன்.

வங்காள அம்மாவுக்கும் தமிழ் அப்பாவுக்கும் பிறந்த சுகன்யா, மிக நவீனமானவள். பெற்றோர் சீக்கிரமே இறந்து விட்டதால் குடும்ப வாழ்க்கைக்கு எங்குபவள். அவள் எவ்வளவோ முயன்று தன்னை மாற்றிக் கொண்டபோதிலும் ராமநாதன் குடும்பத்தால் அவளை ஏற்க முடியவில்லை. அந்நியமாய் வெளியே நிறுத்தப்படுவதால் புண்பட்டுப் போகிறாள். எனவே தனிக்குடித்தனம் வைக்கிறார்கள், ஸ்ரீராம் - சுகன்யா. இந்த நேரத்தில், ஸ்ரீராமின் தங்கை வசந்திக்குத் திருமணம் நிச்சயமாகிறது. திருமணப் பொறுப்புகள் எதுவும் இவர்களுக்குத் தரப்படவில்லை. பண உதவியும் வேண்டாம் என்கிறார் ராமநாதன். ஸ்ரீராம், தானும் விலக்கப்பட்டிருப்பது உணர்ந்து மருகிப் போகிறான்.



வயிற்றுக்குள்ளிருந்து பந்து பந்தாகக் கிளம்பித் தொந்தரவு செய்தது. வாஷ்பேசினுக்கு நேராக நின்று அதனுள் தலையைக் கவிழ்த்தபடி தவித்துக் கொண்டிருந்தாள் சுகன்யா.

'இந்தக் குட்டிப் பிசாசு வெளியே வர்றதுக்கு முன்னாலேயே இந்தப் பாடுபடுத்துதே...' என்று ப்ரியத்துடன் நொந்துகொண்டாள்.

தினமும் காலையில் எழுந்தவுடன், இப்படி வாஷ்பேசின் முன் பத்து நிமிடம் நிற்பதும், 'அப்பாடி' என்று மீண்டும் வந்து படுத்துக் கொள்வதும்...

"கொஞ்ச நாள் அப்படித்தான் இருக்கும்..." என்று டாக்டர் சொல்லிவிட்டார்.

ஸ்ரீராம் உடனடியாகப் பிள்ளைப்பேறு பற்றி மூன்று புத்தகங்களை வாங்கிப் படித்தான் : "இதெல்லாம் சகஜம்... கவலைப்படாதே" என்று தன் கவலையை மறைக்க முடியாமல் தோற்றான். காலைச் சடங்காக வாஷ்பேசின் நோக்கி அவள் நடக்க, நாய்க் குட்டியைப் போல அவனும் எழுந்து பின்னோடு போனான். சுகன்யாவின் முதுகை நீவி, தலையைப் பிடித்தபடி கூடவே நின்றான்.


இன்றைக்கு அப்படி இதம் தரவும், பிற்பாடு காப்பி தயாரித்துக் கொண்டு வந்து தரவும் ஆளில்லை. ஸ்ரீராம் பம்பாயிலிருந்து திரும்ப இன்னும் நான்கு நாட்கள் இருக்கிறது என்று கணக்குப் போட்டபடி மீண்டும் படுத்துக் கொண்டாள் சுகன்யா.

வாசல் மணி அழுத்தமாய் ஒலித்தது. 'யார் இந்த அதிகாலை நேரத்தில்...?' அலுப்புடன் உடலை இழுத்துக் கொண்டு வாசல் பக்கம் வந்தாள். ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள்.... "குமார்."

கதவைத் திறந்து "வா, வா, குமார்! என்ன அதிசயம்! இவ்வளவு தூரம் வந்திருக்கே...?"

"குட்மார்னிங் மன்னி.. எழுப்பி விட்டுட்டேனா..." - கேட்டவன் குளித்துவிட்டு கச்சிதமாக உடுத்தியிருந்தான் நெற்றியில் திருநீறு பளிச்சிட்டது.

"இல்ல குமார்... எழுந்து



ரமணி சந்திரன் ?

உன்னை வெல்வேனா? 14

கொஞ்ச நேரம் ஆயிடுத்து. உட்காரு... காப்பி எடுத்துட்டு வரேன்...''

''ஐயோ, சாரி மன்னி! அதெல்லாம் வேண்டாம். என் ஃப்ரெண்டோட மோட் டார் பைக்கைக் கடன் வாங்கிட்டு வந்திருக்கேன். எட்டு மணிக்கெல்லாம் அவன் ஆபீஸ் கிளம்பிடு வான். அதுக்குள்ளே அதைத் திருப்பித் தரணும்... அப்பா இதை உங்ககிட்டே குடுக்கச் சொன்னார்...''

ஒரு பிளாஸ்டிக் கவரை ட்டினான். அதனுள் ஒரு ற்றை வெள்ளை உறைகள்.

"என்ன குமார் இது...?"

''வசந்தி கல்யாணப் த்திரிகை. உங்களுக்கு வேண் டியவங்க, சொந்தக்காரங்க யாருக்காவது அனுப்பணும்னா அட்ரெஸ் எழுதிப் போஸ்ட் பண்ணிடுங்க. ஸ்டாம்பெல்லாம் ஒட்டித் தயாராய் இருக்கு... நான் வரட்டுமா? நேரமாச்சு. இன்னும் பந்தல்காரரை வேற பார்த்துட்டுப் போகணும்..."

"ஒரே ஒரு நிமிஷம் குமார்... இதோ காப்பி தயார்..."

"வேண்டாம்... இன்னொரு நாளைக்கு! இப்ப ஓடறேன்..."

அவன் கிளம்பிப் போன பிறகு கல்யாணப் பத்திரிகையை எடுத்துப் பிரித்துப் பார்த்தாள் சுகன்யா. வெள்ளை அட்டையில் வெளிர் நீல எழுத்துக்கள். வசந்தி – சந்திரசேகர் பெயர்கள் மட்டும் மற்ற வார்த்தைகளை விட நான்கு மடங்கு பெரியதாக இருந்தன.

'இன்னும் கொஞ்சம் கவனமாக, அழகாக அச்சிட்டிருக்க லாம்... 'க்ரீம்' கலர் அட்டையில் அரக்கு நிறத்தில் எழுத்துக்கள் வந்திருக்கலாம். ஏன்... சேகரின் ஏஜென்ஸி பணியாளர்கள் உதவியுடன் வடிவமைத்திருக்கலாமே...'

பத்திரிகையை மீண்டும் உறையிலிட்ட போது அதன் மீது ஒட்டியிருந்த ஒரு ரூபாய் ஸ்டாம்பு அவளைப் பார்த்துச் சிரித்தது. 'இந்தச் செலவு கூட உங்களுக்கு வைக்கலை பார்...'

செலவு கிடக்கட்டும். எந்த உதவியையும் ஸ்ரீராமின் பெற் றோர் இதுவரை கேட்கவில்லை. நிச்சயதாம்பூலத்துக்குப் பிறகு இரண்டு முறை அங்கே போய் வந்தாகிவிட்டது. ஒவ்வொரு முறையும் 'இப்ப ஒண்ணும் வேலை இல்லை...' என்று சம்பிரதாயமாகச் சொல்லியனுப்பிவிட்டார்கள். இங்கு குடித்தனம் வந்த நான்கு மாதங்களில் நாற்பது முறை அவர்களை வரச் சொல்லி அழைத்தாகிவிட்டது. பால் காய்ச்சிய தினத்தில் வந்ததோடு சரி... ஒவ்வொரு முறையும் ஒரு காரணம் சொல்லி ஒதுங்குகிறார்கள்.... ஒதுக்குகிறார்கள்.

இந்த எண்ணம் வலிமைப்படவேதான் சுகன்யா ஸ்ரீராமிடம் சத்தியம் வாங்கிக் கொண்டாள். கீதா நர்ஸிங்ஹோமில், டாக்டர் ஷியாமளா பரிசோதனைகளை முடித்து, கையுறைகளைக் கழற்றியபடியே "கங்கிராஜுலேஷன்ஸ்" என்று ஸ்ரீராமை உள்ளே அழைத்துச் சொன்னபோது, அவன் கண்கள், கலங்காத குறையாக இளகிப் போயின.

பாம்பே ஹல்வா ஸ்டாலில் பால்கோவா வாங்கிக் கொண்டு காரில் திரும்பியபோது, பீச் ரோடில் சிறிது நேரம் நிறுத்தி விட்டான் ஸ்ரீராம். "சுகி, சுகி, சுகி!" அவள் கையைப் பிடித்துக் கொண்டு உணர்ச்சிவசப் பட்டான்.

தங்க நகை பரிசு!

இந்த இருபத்தாறு வாரத் தொடர், ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு கதாசிரியர் பெயரில் வெளியாகி வருகிறது. ஆனால் அவர்களுள் ஒரே ஒரு நபர்தான் இதை எழுதி வருகிறார். தொடரை எழுதியவர் யார் என்பதைக் கண்டுபிடிப்பது உங்கள் சாமர்த்தியம். கடைசி வாரம் வரை காத்திருந்து, அந்த இதழில் வெளியாகும் கூப்பனில் விடை எழுதி அனுப்புங்கள். சரியான விடைக்கு, தங்க நகை பரிசு! பலர் சரியாக எழுதினால் குலுக்கலில் ஒருவரே பரிசு பெறுவார். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

''என்ன? என்ன? என்ன?''

''ஐம் ஸோ ஹாப்பி, ஹாப்பி, ஹாப்பி.''

''சரி... எனக்கு ஒரு பிராமிஸ் பண்ணித் தருவியா...?''

''உனக்கில்லாததா...?''

''இப்போ இதைப் பற்றி உன் அப்பா, அம்மாகிட்டே எதுவும் சொல்ல வேண்டாம். வேற யார்கிட்டேயும் சொல்ல வேண்டாம். நான் கல்கத்தாவுக்கும் முகர்ஜி அங்கிளுக்கும் லெட்டர் போடப் போறதில்ல...''

''ஏன்...?''

''வேண்டாம்னா வேண்டாம்! இந்த விஷயம் நமக்கு மட்டுமே சொந்தமா இன்னும் கொஞ்ச நாளைக்கு இருக்கட்டுமே... திருட்டுத் தனமா 'லவ்' பண்ணின மாதிரி... திருட்டுத் தனமா இதையும் ரெண்டு மாசம் அனுபவிப் போம்... அப்புறம் தானே எல்லோருக்கும் தெரிஞ்சு போயிடும்!''

''உனக்குப் பைத்தியம்தான் பிடிச்சிருக்கு சுகன்யா....''

''ஆமாம்! பைத்தியம்தான் உன் மேல...'' கடற்கரை காற்று கலைத்துவிட்ட அவன் தலைமுடியை நெற்றியிலிருந்து விலக்கிவிட்டு முத்தமிட்டு விட்டாள். தெருவிளக்கு வெளிச் சத்தில் அந்தக் காட்சியைப் பார்த்த பக்கத்துக் கார் தம்பதி சிரித்துக் கொண்டனர்.

''சரி... பிராமிஸ் பண்ணு...'' கையை நீட்டினாள்.

''முடியாது...''

''ப்ளீஸ்... ஸ்ரீராம்.''

''சின்னக் குழந்தை மாதிரி பிடிவாதம் பிடிக்காதே!''

''இந்த மாதிரி சமயத்துல பெண்கள் சின்னக் குழந்தையா மாறிடறது உண்டு...''

''பிடிவாதத்துலதான் நீ சின்னக் குழந்தையா இருக்கே சுகி... ஆனா உள்மனசுல நீ ரொம்பப் பெரிய ஆளு...''

''என்ன சொல்றே...?''

''எனக்கு உன்னைத் தெரியாதா...? எங்க அப்பா அம்மா நம்ம பேர்ல விட்டேத்தியா இருக்காங்கன்ற கோபத்துலதானே நீ இப்படி ஒரு பிராமிஸ் கேட்கறே...?''

சுகன்யா மௌனமானாள். அவளே ஆராய்ந்திராத அவள் அடி மனத்தின் ஆழத் தில், வட்டமிட்டுக் கொண்டிருந்த சின்ன வன்மத்தை மிகச் சுலபமாக தொட்டுக் காட்டி விட்டான் ஸ்ரீராம்.

ஒரு நிமிடம் முழுவதுமாகக் கடந்தபின் அவள் மீண்டும் பேசினாள்.

''நீ சொல்லுறதுதான் சரின்னு நினைக் கிறேன் ஸ்ரீராம்... பட் ஐ ஸ்டில் வான்ட் தட் பிராமிஸ். இந்தச் சந்தோஷத்தைப் பகிர்ந்துக்கற பக்குவம் எனக்கு வரவரைக்கும் இப்படியே நமக்குள்ளேயே அது இருக்கட்டும்.''

''சரி சுகி, ஐ பிராமிஸ்...'' அவனாகவே அவள் கைகளைப் பிடித்து அழுத்திய போது தெம்பாக இருந்தது.

''எனக்கும் ஒரு பிராமிஸ் வேணுமே...''

''என்ன?'' என்பது போல் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''நீ இப்படி மனசைப் போட்டு உழப்பி மோர்க்குழம்பு பண்ணக் கூடாது...''

அவள் சிரித்து விட்டாள். ''அது என்ன மோர்க் குழம்பு உதாரணம்...? கார்ன் சூப்னு சொல்லு... இல்லை மைதா கஞ்சின்னு சொல்லு... இன்னும் பொருத்தமா இருக்கும்...'' இயல்புக்கு வந்தவளாய்ப் பேசினாள்.

''ஓ.கே... ஐ பிராமிஸ்...''

''இந்த நேரத்துல நீ ரொம்ப சந்தோஷமா இருக்கணும் சுகன்யா...''

''ரொம்ப சந்தோஷமாத்தான் இருக்கேன். எனக்கென்ன குறைவு...'' என்றாள் மீண்டும் தழுதழுத்த குரலில். அந்தத் தழுதழுப்புக்குக் காரணம் நெகிழ்ச்சியா, வருத்தமா என்று புரியாமல் ஸ்ரீராம் குழம்ப ஆரம்பித்தான்.

இது முடிந்து பதினைந்து நாட்களுக்கு எந்த வித்தியாசமும் தெரியாமல் எப்போதும் போலவே உடம்பு இருந்தது.

கணவன்: ஆனாலும் மாப்பிள்ளை மகா அல்பம்.
மனைவி: ஏங்க?
கணவன்: தீபாவளி இனாம் வாங்க வந்த கூட்டத்தோட, முண்டாசைக் கட்டிக்கிட்டு நைஸா இவரும் சேர்ந்து வந்து கியூவில் நிற்கிறாரே!
—ஆலத்தம்பாடி ராஜகோபால்



''எனக்குள்ளே இப்படி ஒண்ணு இருக்குன்னு நம்பிக்கையே வரலை ஸ்ரீராம்...'' என்று சொன்ன தினத்திலிருந்து வயிற்றைப் புரட்ட ஆரம்பித்ததுதான்... தினமும் காலையில் அந்த இரண்டு மணி நேரத்தை ஓட்டுவதற்குள் இரண்டு யுகம் கடப்பது போலிருக்கிறது. அப்புறம் எல்லாம் முன்னைப் போல் சரியாகி விடுகிறது. ஏதோ கொலத்து வேலை செய்து விட்டு வந்தது போல பசியெடுக்கிறது. ஸ்ரீராம் சமைக்கப் பழகிக் கொண்டு, உப்பு கூடவும், குறையவும் செய்து தரும் உணவைக் காணாதது கண்டது போல் சாப்பிடுகிறாள்.

இப்போது அவன் இல்லாதது கையுடைந்தாற்போலிருந்தது.

"திரும்பி வர ஒரு வாரம் கூட ஆயிடும். அம்மாவோட வேணா போய் இரு சுகி."

"வேண்டாம். இங்க பக்கத்துல எல்லாரும் நல்ல மனுஷங்களாத்தானே இருக்காங்க! ஏதாவது உதவி வேணும்னா கேட்டுக்கறேன். நீ தைரியமா போயிட்டு வா. ஒண்ணு விட்டு ஒருநாள் பக்கத்து வீட்டு நம்பருக்கு போன் பண்ணு. மத்தியானம் இரண்டு மணிக்கு உன் போனுக்காகக் காத்திருப்பேன்."

அவன் போனுக்காகத்தான் காத்திருந்தாள். ஒருமுறை அடித்து, எடுப்பதற்குள் ஓய்ந்து போனது. ஸ்ரீராமாகத்தான் இருக்க வேண்டும். எஸ்.டி.டி. தொடர்பு தகராறு செய்கிறது. மீண்டும் போன் அடிக்கவில்லை. பதினைந்து நிமிடங்கள் கடந்து விட்டன. இன்னும் ஐந்து நிமிடம் பார்த்து விட்டுக் கிளம்பலாம் என்று முடிவு செய்த நேரத்தில் தன் வீட்டு இரும்பு கேட் திறக்கப்படும் பஞ்சம ஸ்வர ஓசை கேட்டது.

வாசலுக்கு விரைந்து எட்டிப் பார்த்தாள். வசந்தி!

"சரோஜா! நான் வரேன். ஸ்ரீராம் போன் பண்ணினா, நான் காத்துண்டிருந்துட்டு, இப்பத்தான் போறேன்னு சொல்லிடறீங்களா? திரும்பவும் கூப்பிடறதாயிருந்தால் ராத்திரி எட்டு மணிக்குக் கூப்பிடச் சொல்லுங்க..." பக்கத்து வீட்டுப் பெண்ணிடம் விடைபெற்றுக் கொண்டு வாசலை அடைந்தபோது, வசந்தி 'காலிங்பெல்லை' இரண்டாவது முறையாக அழுத்திக் கொண்டிருந்தாள்.

"மன்னி, வெளியில போயிருந்தேளா...?"

''இங்க பக்கத்து வீட்டுக்குத்தான் போயிருந்தேன். அண்ணா பாம்பே போயிருக்காரில்லே? மத்தியானமா அங்க போன் பண்ணுவார். பேசறதுக்காகப் போனேன்...''

"பேசிட்டேளா...?"

''இல்லை வசந்தி, அவருக்கு லைன் கிடைக்கல்லை போலிருக்கு... பரவாயில்லை. நீ வா உள்ளே...''

வாசல் கதவுப் பூட்டுத் திறந்து, உள்ளே போய் ஃபேன் சுவிட்சைப் போட்டாள் சுகன்யா.

"என்ன அதிசயம்; நீ மட்டும் தனியா வந்திருக்கே...? எப்படி வந்தே வசந்தி?"

"ஆட்டோவில் வந்தேன் மன்னி. ரொம்ப பயமாத்தான் இருந்தது. வழியும் சரியாத் தெரியலை. சுத்தி சுத்தி தேடி வர்றதுக்குள்ளே ஆட்டோ டிரைவருக்கு ரொம்ப கோபம் வந்துடுத்து..."

''ஒரு போன் பண்ணியிருந்தா நான் அழைச்சுண்டு வந்திருப்பேனே...''

''யாருக்கும் தெரியாம வரணும்னு வந்திருக்கேனே மன்னி... என் ஃப்ரெண்ட் பிரபா வீட்டுக்குப் போகணும்னு சொல்லித்தான் கிளம்பினேன். அப்பாதான் அவ வீட்டு வாசல் வரைக்கும் துணைக்கு வந்தார். திரும்பவும் நாலு மணிக்கு வந்து அழைச்சுண்டு போறேன்னு சொல்லியிருக்கார். அதுக்குள்ளே நான் அங்கே திரும்பிப் போகணும்...''

''ஏன் வசந்தி? இங்கே வரணும்னு சொன்னா அப்பா அழைச்சுண்டு வர மாட்டாரா...?''

"மன்னி, நீங்க விஷயம் புரியாம பேசிண்டிருக்கேள்...''

வசந்தியின் முகத்தைக் கூர்ந்து கவனித்தாள் சுகன்யா. கண்களில் மருட்சியுடன் சோகமும் ததும்பி, கண்ணீராக வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. உதடுகள் லேசாகத் துடிக்க ஆரம்பித்தன. சுகன்யாவின் பார்வையை நேருக்கு நேராகச் சந்திக்காமல் தலையைக் குனிந்து கொண்டாள்.

அவள் பக்கத்தில் நெருங்கி அமர்ந்து



"உங்ககிட்ட ஏகப்பட்ட அரசியல்வாதிங்க கன்சல்ட் பண்ணவர்றது வாஸ்தவம்தான். அதுக்காக 'சம்மன் ஸ்பெசலிஷ்ட்'னு நீங்க போர்டு எழுதி தொங்க விட்டுருப்பதெல்லாம் நல்லாயில்லை சார்!"

— குடந்தை எல். ராம்பிரபு



"என் அன்புக்கும், மதிப்பிற்கும், பாசத்திற்கும், ஆசிக்கும் உரிய உயிருக்கு உயிரான, உடன்பிறப்பான சீட கோடிகளே..."

"என்ன, சாமி புதுமாதிரியா பேசறார்?"

"சாமி, ஆறு மாதமா ஜெயில்ல ஒரு அரசியல் தலைவருடன் ஒரே அறையில் இருந்தாராம். அதான்...!"

— எஸ். சாந்தி



"தன்னை தாக்கி எழுதின பத்திரிகைக்கு தலைவர் எழுதின மறுப்புக் கடிதத்தை அதுல வெளியிட்டும் ஏன் தலைவர் சோகமா இருக்கார்?"

"அதை நகைச்சுவை கட்டுரைங்கிற தலைப்புல வெளியிட்டுட்டாங்களாம்; அதான்."

— பா. ஜெயக்குமார்

கேட்டாள் சுகன்யா...

"வசந்தி, என்னாச்சு...? ஏதாவது பிரச்னையா...? எங்கிட்டே சொல்லலாம்னா சொல்லு..."

இந்தப் பரிவான வருடலுக்காகவே காத்திருந்தது போல் உடைந்து தேம்பினாள் வசந்தி...

"ஷ்... அழக்கூடாது. நான் இருக்கேன் இல்ல... என்னவானாலும் எங்கிட்டே சொல்லு. அண்ணாவும் நானும் இருக்கிற வரைக்கும் என்ன கவலை...? கல்யாணப் பொண்ணு இப்படி அழலாமா...?"

"எனக்கு இந்தக் கல்யாணமே வேண்டாம் மன்னி... ப்ளீஸ், என்னைக் காப்பாத்துங்க இதுலேருந்து..."

– சொல்லி விட்டு மேலும் பலமாக அழ ஆரம்பித்தாள் வசந்தி.

அவளை அப்படியே தன் தோளில் சாய்த்துக் கொண்டு முதுகில் தடவிக் கொடுத்தபடி, "வசந்தி, அமைதியாய் இரு... இதைப் பாரு, அழக்கூடாது. எதுவானாலும் தைரியமாய் இருக்கணும்..." என்று ஆறுதல் சொல்லும் போதே சுகன்யாவைக் கவலை அரிக்க ஆரம்பித்தது.

'பாக்கு – வெற்றிலை மாற்றி, பத்திரிகை அடித்த நிலையில் இப்படியொரு பிரச்னையா? என்னதான் நடந்திருக்கும்? ஸ்ரீராம் இந்த நேரம் பார்த்தா டூர் போய்த் தொலைக்க வேண்டும்...' அலுப்புடன் சோர்வும் சூழ்ந்து கொண்டது.

தோளைக் கட்டிக் கொண்டு விம்மிய பெண்ணை மெள்ள விடுவித்து அமைதிப் படுத்தினாள்.

"இதோ பாரு... இப்படி ஒரேயடியா அழுது, கல்யாணம் வேண்டாம்னா என்ன அர்த்தம்...? என்ன காரணம்னு சொல்லு.... அப்பா அம்மாகிட்டே சொன்னியா...?"

"நான் சொல்ற எதையும் அவா காது குடுத்துக் கேக்க மாட்டேங்கறாளே?"

மீண்டும் அழுகை பொங்கியது வசந்திக்கு...

"சரி. ஏன் கல்யாணம் வேண்டாங்கறே...? சேகரைப் பிடிக்கலையா...?"

சேகரும் வசந்தியும் அவ்வப்போது சேர்ந்து வெளியே போய் வருவது தெரிந்திருக்க, அந்த சந்தர்ப்பங்களில்தான் வசந்தியின் மனம் மாறிப் போயிருக்க வேண்டும் என்பதை சுகன்யாவால் யூகிக்க முடிந்தது.

'ஒருவேளை அவனுக்கு சிகரெட் பழக்கம்...? இல்லை மது அருந்துவது...? அது பிடிக்காமல் இந்தப் பெண் அரண்டு போய் விட்டாளோ...?'

காரணத்தை வசந்தியே சொல்லட்டும் என்று காத்திருந்தாள். ஒருவாறு கண்ணீர் அடங்கி, வசந்தி பேசியபோது சுகன்யாவுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

(தொடரும்)

பா. ராகவன்

?

15

"இப்போ நீ ஏதாவது வித்தியாசமா உணர்றியா வசந்தி...? இல்லையே...?"

சுகன்யா அவள் இரு கைகளையும் பற்றியபடி கேட்டாள். இல்லையென்பது போல் தலையசைத்தாள், வசந்தி.

"ஆங்! இப்படித்தான் – ஒரு நட்புனாலயும், சில சமயம் வெறும் சடங்காகவும்தான் சேகர் பார்க்கறவங்க கையையெல்லாம் பிடிச்சிக் குலுக்குறான். இதை இயல்பா ஏத்துக்கணும்."

"என்னமோ அவர் மனசுக்குள்ளே பூந்து பார்த்த மாதிரி பேசறேளே மன்னி!"

"உன்னைச் சொல்லித் தப்பில்லை... அப்பா அம்மா உன்னை நகை மாதிரி பூட்டிப் பூட்டி வளர்த்துட்டாங்க. வெளி உலகத்தையே நீ பார்க்கலை. சரி... என்கிட்டே உனக்கு நம்பிக்கை இருக்கா?"

"இருக்கிறதுனாலேதானே இங்க வந்திருக்கேன்...?"

"அப்ப கேளு... இங்க மெட்ராஸ் வந்த புதுசுல ஆபீஸ்ல எல்லார் கிட்டேயும் என்னை அறிமுகப்படுத்தி வைச்சார் ராஜு. நான் அத்தனை பேரோடவும் கைகுலுக்கித்தான் அறிமுகப்படுத்திக்கிட்டேன். முதல்ல சில பேருக்கு இலேசா அதிர்ச்சி. அப்படியும் பழகிண்டுட்டாங்க. இப்பக்கூட உன் நிச்சயதாம்பூல ஃபங்ஷனுக்குப் போனோமே... முதல்ல சேகர், 'யூ மஸ்ட் பி மிஸஸ் ஸ்ரீராம்'னு கைகொடுக்கத்தான் வந்தான். அப்பா, அம்மாவெல்லாம் கூடவே இருந்தாங்க. அவங்களுக்கு அது பிடிக்காதுன்றதாலே நான் கை குலுக்காம வணக்கம் சொல்லி அறிமுகப்படுத்திக்கிட்டேன்."

வசந்தி, வாயே திறக்காமல் இறுக்கமாய்க் கேட்டுக் கொண்டிருந்தாள். சென்னையின் முக்கிய ஹோட்டல்களுக்கு அவளைச் சாப்பிட அழைத்துப் போனபோதெல்லாம் சேகரிடம் வந்து பேசிய பெண்கள். அவன் மீது விழாத குறையாக முதுகில் தட்டி, கைகுலுக்கி வாழ்த்துத் தெரிவித்த குட்டை முடி, லிப்ஸ்டிக் மூஞ்சிகள், சிகரெட்டுக்கு 'லைட்' கேட்டுவிட்டு ஓ! நான் மறந்துட்டேன். யூ டோன்ட் 'ஸ்மோக்' என்று சிரித்துக் கொண்ட ஜீன்ஸ் மாமி... என்று ஒவ்வொருத்தராய் மீண்டும் அவள் மனத்திரையில் தோன்றி தொந்தரவு செய்து கொண்டிருந்தார்கள்.

"போகிற இடத்துல எல்லாம் பிடாறி பிடாறியா பெண்கள் வந்து அவர் மேல விழறதை நான் எதுக்காகப் பொறுத்துக்கணும்...? அவர் என்னைத்தானே கல்யாணம் பண்ணிக்கப் போறார்...?"

– கோபமும் துக்கமும் உச்சத்தை எட்ட, குரல் பூவரசமிலையாக நடுங்கியது வசந்திக்கு.

அத்தனை உச்சத்திலும் அவள் ஜிமிக்கிகள் ஆடாமலே இருந்ததை மனத்துக்குள் வியந்தபடி சுகன்யா யோசித்தாள். இந்தப் பெண்ணை எப்படி சமாதானப்படுத்துவது? கைகுலுக்குவதால் கற்பு பறிபோய் விடவில்லை என்பதை எப்படி உணர்த்துவது? விளம்பர ஏஜென்ஸி வட்டாரங்களில் இப்போதெல்லாம் நிறைய பெண்கள் புழங்குகிறார்கள். போதாக்குறைக்கு தொழில்முறை மாடல்களுடனும் தொடர்பு இருக்கும். இதனால்தான் சேகர் போகுமிடத்திலெல்லாம் அவனை வந்து சந்திக்கும் பெண்களின் விகிதாசாரம் அதிகமாயிருக்கிறது.

– இதைச் சுருக்கமாக வசந்திக்கு விளக்கிவிட்டுச் சொன்னாள்...

"சரி, நான் ஒண்ணு கேக்கறேன்... சேகரோட கைகுலுக்கிப் பேசறது பெண்கள் மட்டும்தானா...? ஆண்களெல்லாம் என்ன பண்றாங்க...? அவங்களும் அவனைப் பார்த்தா முதுகுல தட்டி, தோள்ல கை போட்டுத்தானே பேசறாங்க...?"

"ஆமாம்...."

"பெண்கள் அப்படிப் பேசறதும் அந்த நட்பு உணர்

சிலதான். அவங்களைப் பொறுத்தவரைக்கும் அதுல தப்பு எதுவும் இல்லை. அப்படியெல்லாம் நட்பா இருக்கறது தப்புன்னு உனக்குச் சொல்லித் தந்திருக்காங்க. அதனால அது உனக்குக் குற்றமா தெரியுது... அருவருப்பா இருக்கு...."

"அப்ப அவங்க செய்யறதெல்லாம் சரி... நான் நினைக்கிறதுதான் தப்புங்கறேளா...?"

"உன்னோட நிலைமைல இருந்தா, நானும் அப்படித்தான் நினைச்சிருப்பேனாயிருக்கும். ஆனா உனக்குள்ள ஒரு தெளிவு பிறக்கணும். அப்பத்தான் உன்னால சந்தோஷமா இருக்க முடியும். சேகர் உன் பேர்ல அன்பும் காதலும் வைச்சிருக்காங்கறதைப் பார்த்தவுடனே என்னால புரிஞ்சுக்க முடிஞ்சுது. அது உனக்கு ஏன் புரியலைன்றதுதான் ஆச்சரியம்..."

வசந்தி மீண்டும் அழ ஆரம்பித்து விட்டாள். விசும்பல்களிடையே அவன் பேசியதை சுகன்யா மிகவும் பிரயத்தனத்துடன் புரிந்து கொள்ள வேண்டியதாயிருந்தது.

"அப்பா அம்மாகிட்டே சொன்னா, 'நீதான் அட்ஜஸ்ட்



பண்ணிப் போகணும்'ங்கறாங்க... நீங்களானா, நான் அவரோட அன்பைப் புரிஞ்சுக்கலேங்கறேள். எல்லாரும் சேர்ந்து என்னைக் குற்றவாளியாக்கிட்டேள். ஆனா அது நிஜமில்லே... அவர் பேர்ல நான் உயிரையே வைச்சுட்டேன்... இந்த மாதிரி மத்த பெண்கள்கிட்டேயெல்லாம் அவருக்குத் தொடர்பு இருக்கும்னு நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கலை.."

"வசந்தி! தயவுசெய்து அழறதை நிறுத்தறியா? நீ இவ்வளவு தூரம் மனசு உடைஞ்சு போறதுனால நான் ரொம்ப அந்தரங்கமான ஒரு விஷயத்தைச் சொல்றேன்."

வசந்தி கொஞ்சம் அழுகை அடங்கி நிமிர்ந்தாள்.

"உங்க அண்ணாவை முதன் முதலா நான் சந்திச்சப்போ எல்லார்கிட்டேயும் கைகுலுக்கற மாதிரிதான் குலுக்கினேன். அவனும்... சாரி, அவரும் சகஜமாத்தான் அதை ஒத்துக்கிட்டார். அப்படியும் ஒருத்தரை ஒருத்தர் விரும்பறோம். கல்யாணம் பண்ணிக்க நினைக்கறோம் என்கிறது எங்களுக்கே மெள்ள புரிஞ்சு, தெளிவான பிறகு... முதல் முறையா எங்களுக்குத் தனிமையில இந்த உண்மை உறைச்சுது பாரு... அன்னிக்கு... அண்ணா ரொம்ப தயக்கமா 'மே ஐ ஹோல்ட் யுவர் ஹாண்ட்' அப்படின்னு அனுமதி கேட்டார். இத்தனை நாளா இல்லாத ஒரு புது மனுஷரைப் பார்க்கற மாதிரி எனக்கே இலேசா வெட்கம் வந்தது. அப்புறம்... அந்த முதல் ஸ்பரிசம்... இப்போ அந்த ஸ்பரிசத்தை நினைச்சாக்கூட எனக்கு சிரிப்பு வரும்..." உணர்ச்சி மேலீட்டால் சற்று இடைவெளி விட்டுத் தொடர்ந்தாள்.

"வெறும் கைகுலுக்கல்... அது நாம டிராயிங் ரூம்ல வைக்கற பிளாஸ்டிக் பூ மாதிரி... சும்மா அலங்காரம்... நிபந்தனைகளில்லாத உள்ளன்போட ஒரு ஆணும், பெண்ணும் என்னன்னு சொல்லலாம்... தொட்டுப் பழகறபோது... அது நீ, பூத்தொடுத்து ராமர் படத்துக்கு மாலை போடறேயே... அந்த மாதிரி... அதுக்கு சமமான ஒரு காரியம். ஓர்அர்ப்பணிப்பு..."

– இத்தனையும் வசந்திக்குப் புரியக்கூடிய தமிழில் சொல்வது சுகன்யாவுக்கு ரொம்ப கஷ்டமாக இருந்தது.

"நான் சொல்றது புரியுதா...?" என்று வசந்தியை ஏறிட்டபோது, அவள் கண்கள் ஆச்சரியத்தில் அகல விரிந்திருப்பதைப் பார்த்தாள் சுகி.

"ஒரு அதிசயம் தெரியுமா மன்னி...? அண்ணா உங்ககிட்டே கேட்ட மாதிரியேதான் அவரும் என்கிட்டே கேட்டார். 'மே ஐ ஹோல்ட் யுவர் ஹாண்ட்...?' அதே வார்த்தை... எனக்கு அப்படியே கண்கலங்கிப் போச்சு. அப்புறம்...." முகம் சிவந்து போய் நிறுத்தி விட்டாள் வசந்தி.

தன் தரப்புக்கு ஒரு மாபெரும் ஆதாரம் கிடைத்துவிட்ட தைரியத்தில், அதைப் பற்றிக் கொண்டு பேசினாள் சுகி.

"அப்படியுமென்ன வசந்தி! அதுலேருந்தே ரொம்பத் தெளிவா தெரியலையா... உன்னையும் அந்த மத்த பெண்களையும் சேகர் ஒரே 'லெவல்'ல வைக்கலை... நீ அவருக்கு ரொம்ப ஸ்பெஷல்..."

"நீங்க சொல்றச்சே கேட்க நன்னாயிருக்கு மன்னி... ஆனா நாலு இடம் போறச்சே இப்படிப் பொண்கள் வந்து இழையறது பிடிக்கலையே..."

"வசந்தி! ஒண்ணு, நீ இந்த நிலைமைக்குப் பழகிக்கணும்; இல்லை.. சேகர்கிட்டே இதைப் பத்திப் பேசி இது உனக்குப் பிடிக்கலைன்னு சொல்லிடணும்... அப்படியே நீ சொன்னாலும் அவனால இனிமே மாற முடியுமாங்கறது ரொம்ப சந்தேகம்... அதுக்காக இந்தக் கல்யாணமே வேண்டாம்னு நீ சொல்றது அபத்தம். முதல்ல இந்த எண்ணத்தைத் துடைச்சிப் போடு... உனக்கோ சேகரைப் பார்த்தவுடனேயே பிடிச்சுப் போயிருக்கு. இந்த மாதிரி அப்பா – அம்மா தேர்ந்தெடுக்கற ஒருத்தர் கிட்டே மனசை சுலபமா அர்ப்பணிக்க முடியறதே இந்தக் காலத்துல ரொம்ப அபூர்வம். அதை உன்னால செய்ய முடிஞ்சிருக்கு. சேகரும் அப்படித்தான். உன் பேரைச் சொன்னால் மயங்கி மயங்கி நிற்கிறான். அதனால, தைரியமா இரு. நம்பிக்கையை அஸ்திவாரமாக்கி வாழ்க்கையை ஆரம்பி...."

"சரி மன்னி..." என்றாள் வசந்தி, குழந்தையைப் போல...

"பிரபா வீட்டுக்கு நீங்க போக வேண்டாம்பா. வசந்தி இங்க வந்திருக்கா. அவளை அழைச்சிக்கிட்டு இன்னும் அரை மணி நேரத்துல நான் அங்க வந்து சேர்றேன்..." – பக்கத்து வீட்டிலிருந்து போன் செய்து மாமனாரிடம் பேசினாள் சுகன்யா.

"அங்க வந்தாளா வசந்தி...? தனியாவா? எதுக்கு...?" அவசரமாகக் கேட்ட ராமநாதன், படபடப்பதையும் சரஸ்வதி பக்கத்தில் நின்று பதறுவதையும் கற்பனை செய்து பார்ப்பது சுகன்யாவுக்குக் கஷ்டமாக இருக்கவில்லை.

"அமைதியா இருங்க அப்பா! பிரச்னை எதுவும் இல்லை. நான் நேர்ல வந்து எல்லாம் சொல்றேன்..."

"சீக்கிரம் வந்து சேருங்க. நான் வேணா வந்து அழைச்சுண்டு வரவா...?"

"வேண்டாம்பா.. நானே பத்திரமா ஆட்டோவில கொண்டு வந்து விடறேன்..."

போனை வைத்த வேகத்தில் அவர் கோபம் ஒளிவுமறைவின்றித் தெரிந்தது.

ஆட்டோவை விட்டு இறங்கியபோது சரஸ்வதியும், ராமநாதனும் வாசலிலேயே காத்திருந்தார்கள். மூச்சைப் பிடித்தபடி இரு

வரும் வசந்தியின் முகத்தையே உற்றுப் பார்த்துத் தவிப்பதைக் கண்ட சுகன்யாவுக்குப் பரிதாபமாய் இருந்தது. காலத்தோடு மாற மறுப்பதால் எத்தனை வீண் சிரமங்கள், கவலை, உளைச்சல்கள்...?

அவர்களை ஏறிட்டுப் பார்க்காமல் வசந்தி விறு விறு வென்று உள்ளே போய் விட்டாள்.

''சௌக்கியமா அப்பா? கல்யாண வேலையெல்லாம் சுறுசுறுப்பா நடந்துக் கிட்டிருக்கு போலிருக்கே.... காலைல குமார் பத்திரிகை கொண்டு வந்து கொடுத்தான்....''

சுகன்யா அவர்களை இயல்புக்குக் கொண்டு வர முயன்றாள்.

அவளை வீட்டுக்குள்ளே கூட அழைக்கத் தோன்றாமல் மாமனாரும் மாமியாரும் ஏற இறங்கப் பார்த்தார்கள்.

"என்ன சொன்னா வசந்தி...?"

"ரொம்ப பயந்து போய்ட்டா... சேகருக்கு நிறைய பெண்களைத் தெரிஞ்சிருக்கு. அங்க இங்க அவங்களைப் பார்த்து அவர் பேசறது அவளுக்குப் பிடிக்கலை...."

''அதுதான் தெரியுமே... அதுக்காக கல்யாணம் வேண்டாம்னுடறதா..? போகப் போக மாறிடுவார்னு சமாதானப்படுத்தினா கேட்டாத்தானே..."

"இப்போ சமாதானமாயிட்டா... பயப்படாதீங்க... எல்லாம் சரியாப் போயிடுத்து...."

"எப்படி சமாதானமானா...? நாங்க எவ்வளவு சொன்னாலும் கேட்காம மாலை மாலையா கண்ணீர் விட்டா..! சித்தே மனது மாறட்டும்னுதான் பிரபா வீட்டுக்கு போய்ட்டு வரச் சொன்னேன..."

- மாமியார் அவநம்பிக்கையுடன் கேட்டார்...

"நான் எடுத்துச் சொன்னேன். ஓரளவுக்கு சமாதானமாயி அப்புறம் தன்னைத் தானே தேத்திண்டுட்டா..."

"அப்படி என்ன சொன்ன, அவ மனசைத் தேத்திக்கிற மாதிரி....?"

"நட்பு வேற, சும்மா அலுவலக ரீதியா பேசறது வேற, ஒருத்தர் மேல வைக்கற நம்பிக்கை கலந்த அன்பு வேற.... கொஞ்சம் விரிவா சொன்னேன்...."

"ஏத்துண்டாளா...?"

"ஆமாம். இப்ப தைரியமாயிருக்கா."

தங்க நகை பரிசு!

இந்த இருபத்தாறு வாரத் தொடர், ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு கதாசிரியர் பெயரில் வெளியாகி வருகிறது. ஆனால் அவர்களுள் ஒரே ஒரு நபர்தான் இதை எழுதி வருகிறார். தொடரை எழுதியவர் யார் என்பதைக் கண்டுபிடிப்பது உங்கள் சாமர்த்தியம். கடைசி வாரம் வரை காத்திருந்து, அந்த இதழில் வெளியாகும் கூப்பனில் விடை எழுதி அனுப்புங்கள். சரியான விடைக்கு, தங்க நகை பரிசு! பலர் சரியாக எழுதினால் குலுக்கலில் ஒருவரே பரிசு பெறுவார். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

ராமநாதன் சற்று ஆடிப் போய் வாசல்படியிலேயே உட்கார்ந்து விட்டார். சரஸ்வதி கண்கலங்கிய படி பக்கத்தில் நின்றாள்.

''அம்மா சுகன்யா! எங்களாலேயே ஒத்துக்க முடியாத விஷயமா அது இருந்தது.... அவளை எப்படி சமாதானப்படுத்தி எப்படி இந்தக் கல்யாணத்தை நடத்தப் போறேன்னு ரொம்ப பயமாயிருந்தது.... இப்போ உனக்குத்தான் நான் நன்றி சொல்லணும்..."

நெகிழ்ச்சியுடன் மாமனார் பேசுவதைக் கேட்டு அவருக்குக் கீழ்ப்படியில் தானும் உட்கார்ந்தாள் சுகன்யா.

''இப்படியெல்லாம் உணர்ச்சிவசப் படாதீங்கப்பா..."

"இல்லை.... நான் ரொம்ப தப்பா எடை போட்டுட்டேன். நீ போன் பண்ணினப்ப.. அவகிட்டே பேசியிருப்பேன்னு புரிந்தது. ஆனா... நீ அவ கட்சிதான் பேசியிருப்பேன்னு நினைச்சேன். உன் மனசுக்குப் பிடிக்காம இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துக்காதேன்னு அவளுக்கு ஆதரவா பேசி, விஷயத்தை இன்னும் குழப்பிடப் போறியேன்னு ரொம்பப் ரொம்ப பயந்துட்டேன்...."

"எப்படிப்பா அந்த மாதிரி ஒரு எண்ணம் உங்களுக்கு வந்தது...?"

''மனுஷாளைப் புரிஞ்சுக்காததுனால தான்மா... உன் இஷ்டப்படி நீயும் ஸ்ரீராமும் கல்யாணம் பண்ணிண்டதால வசந்திக்கும் அவ இஷ்டப்படி இந்தக் கல்யாணத்தை மறுக்கற சுதந்தரத்தை நீ தூண்டி விட்டுடுவேன்னு ஒரு தீர்மானம் எனக்குள்ள..."

"கல்யாணம்ங்கறது அவங்கவங்க நிலையில இருந்து முடிவு பண்ற விஷயமில்லையாப்பா...? ஒரே மாதிரி அளவுகோல் உதவாது... வசந்திக்கு சேகரைப் பிடிச்சிருக்கு.... சேகருக்கும் அவளைப் பிடிச்சிருக்கு.... இந்த அடிப்படை சரியாயிருக்கும்போது மத்ததெல்லாம் சுலபமா அமைஞ்சு போயிடாதா...?"

"உள்ளே வாம்மா சுகன்யா..."

- மாமியாரின் வாஞ்சையான அழைப்பை ஏற்று எழுந்தபோது, சுகன்யாவுக்கு அடி வயிற்றில் மின்னல் போல் ஒரு வலி கிளம்பி கீழ்நோக்கிப் பாய்ந்தது.

(தொடரும்)



வெளியே

பாண்டிபஜாரின் விழிபிதுங்கல் சட்டென்று விடுபட்ட இடத்தில் இருந்தது, அந்தக் கடை!

வஞ்சனையில்லாமல் படர்ந்திருந்த தூங்குமூஞ்சி மரத்து நிழலில் ஒரு டேபிள். அதன் மேல் வரிசை வரிசையாக லாட்டரி சீட்டுகள். கட்டுக் கட்டாக, கவர்ச்சிகரமான நிறங்களில், படங்களில்... நாகாலாந்து, பூடான், ஸ்ரீகணபதி.

"இதெல்லாம் என்னங்க?"

கடைக்காரர் அந்தச் சிறுவனை சற்று கவனித்தார். ஈர்க்குச்சி உடல், ஒண்ணரைக் கண், கார்ப்பரேஷன் பள்ளிச் சீருடை.

"பரிசுச் சீட்டு!"

"பரிசுன்னா...?"

"அதிர்ஷ்டம். இப்ப நீ என்கிட்டே ஒரு சீட்டு வாங்கறே, உனக்கு அதிர்ஷ்டம் இருந்தா, அதைப் பொறுத்து, இந்த ஒத்தை சீட்டுக்கு ஒரு லட்சம் கிடைக்கலாம். நாற்பது லட்சம் கூட விழலாம். பார்த்தியா இதை... எத்தனை பேரு இப்படி 'லக்' அடிச்சு பணக்காரனா ஆயிருக்காங்கன்னு...!"

"குலுக்கல்னா? எப்ப..?"

"தினம் தினம். வாராந்தர லாட்டரி. இதைப் பார்த்தியா... குமரன், சில்க், டிஸ்கோ. ம்... உன் பேரு என்ன?

"தங்கவேலு...!"

ஜி. நாராயணன்

கொஞ்சம் வெளிச்சம்

"ஏ அப்பா...! 'பேர்'லியே தங்கம் இருக்கே!' அப்புறம் என்ன யோசனை? சுவர்ணலட்சுமி ஒண்ணு வாங்கிடறது. நீ வேணா பாரு, விழுந்தா... ஒரே தூக்கா தூக்கிடாதா! அப்படியே உச்சாணிக் கிளைக்குக் கொண்டு போயிடும். ஒரு பய பிடிக்க முடியாது. கார் என்ன... பங்களா என்னன்னு... சக்கைப் போடுதான். அமர்க்களமா இருக்க மாட்டியா...!"

இந்த தேன் தடவல் பேச்சு சிறுவனுக்குப் புதிது. பையில் தனியாக இருந்த அந்த நாணயத்தை விரல்களால் நெருடிப் பார்த்தான். யோசனையாக இருந்தது. அம்மாவுக்குத் தெரியாமல் எடுத்த பணம். ரப்பர் வாங்க காசு தர மாட்டேன் என்கிறாள். வாங்கலாம் என்று எடுத்து வந்தால்... இரண்டும்கெட்டானாக மனம் தவிக்க, கடைசியில் ஆசை வெல்ல...

இவனிடம் கொடுப்பதற்கு முன், அந்த லாட்டரி சீட்டை கடைக்காரர் மீண்டும் பார்த்தார்... ஏதோ எண்ணினார்! ம்... "ரெண்டும் மூணும்... அஞ்சு... பதினாறு... இருவத்தேழு... கூட்டினா... அம்மாடி ஒம்போது வருது. 'லக்கி' நம்பர். யோகம்தான். வெளுத்துக் கட்டு."

குடிசை முழுவதும் தேடியாயிற்று. தலைகீழப் புரட்டலாகப் பார்த்தாயிற்று. கிடைக்கவில்லை.

எங்கே வைத்தோம்? கற்பகம் யோசனை செய்தாள். மண்டையைக் குடைந்து கொண்டாள். அத்தனை குடைந்தும், அந்த ஐந்து ரூபாய் போன இடம் தெரியவில்லை!

'முந்தாநாள் மாவுமில் போனதற்கு, ரேஷன் வாங்கி வந்ததற்கு என்று வேலை செய்கிற வீட்டில் கொடுத்தார்கள்! புடைவையில் முடிந்து கொண்டு வந்தேன். கதவைத் திறந்து, உள்ளே வந்ததும் என்ன செய்தேன்... முடிச்சை அவிழ்த்து நேரே இந்த டப்பாவில்தான் போட்டேன். போட்டு... பாத்திரங்களுடன் சேர்த்து வைத்தேன். ஓர் அவசரத்திற்கு இருக்கட்டும் என்று வைத்த பணம்.

'எப்படிப் போயிற்று? யார் எடுத்திருப்பார்கள்?'

'இந்த மனுஷன்தான்... வேறு யாருக்கு இப்படி ஒரு புத்தி போகும்? இவருக்குத்தான் தேவைகள் அதிகம்.'

'ரேஸ் பைத்தியம். மங்காட்டம். இன்னும் தெருமுனையில் நாடா வைத்து இழுத்துப் பார்ப்பது முதல், ஊரில் இருக்கிற எல்லாவற்றிலும் ஒன்று விடாமல் சூதாடி, சூதாடி.... ம்... பணத்தைப் பார்த்தவுடன் கையில் நமைச்சல் எடுத்திருக்கும்... 'வை... ராஜா வை..'ன்னு எங்கேயாவது, எதிலேயாவது கொண்டு வைச்சு, தொலைச்சு...'

சே என்று வந்தது. 'ஒருநாளைப் பிடித்துத் தள்ளுவது ஒரு யுகம் போல் இருக்கிறது எனக்கு. இவர் என்னடாவென்றால்... வரட்டும் இன்றைக்கு, ரெண்டிலே ஒண்ணு பார்க்காமல்... கேட்டால் என்ன ஆகும்? சண்டை தான் மிஞ்சும். பணம் போனதுதான்.'

'நமக்குத்தான் ஜாக்கிரதை போறாது. வழக்கம் போல் வீட்டுக்கார அம்மாளிடமே கொடுத்து வைத்திருக்க வேண்டும்.'

கற்பகத்திற்கு, ஏனோ தன் மகன் தங்கவேலுவின் மேல் சிறிது கூட சந்தேகம் எழவில்லை.

அந்தக் கனவு அரைகுறையாக முடிந்து விட்டது.

செல்வராசு உட்கார்ந்திருக்கிறான்.

மேல் கூரை மெல்லப் பிரிகிறது. பிரிந்து, அந்தப் பொத்தல் வழியாக 'கல்' என்ற ஒலியுடன் ஏதோ ஒன்று விழுந்து, உருண்டு ஓட... இவன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே தொடர்ச்சியாக, அதே போல் நீர்வீழ்ச்சி மாதிரி விடாமல்... கொட்டோ கொட்டு என்று கொட்டுகிறது. இவனையே மூடுகிற மாதிரி விழுந்து கொண்டேயிருக்க, கொடுக்கிற தெய்வம்...! என்னவெல்லாம் நமக்குக் கொடுத்திருக்கிறது என்று பார்ப்பதற்குள்...

வாசல் கேட்டு வேகமாக உலுக்கப்பட்டது. ஓசை எழுப்பிவிட விழித்தான்...!

கேட்டுக்கு வெளியே அந்த யமாஹா தெரிந்தது. மூன்றாவது மாடியில் குடி இருக்கிற இளை

ஞன்.

எழுந்து ஓடினான். கதவை விரியத் திறந்துவிட..

"என்னய்யா வாட்ச்மேன் நீ? இந்தத் தூக்கம் தூங்கறே...?"

உட்கார்ந்தான். வயிறு இரைந்தது. பசி இரைச்சல். இன்று கற்பகத்துடன் சண்டை. ஐந்து ரூபாய் காணாமல் போய் விட்டதாம். 'நீதான் எடுத்தே... நீதான் திருடிட்டே...!' என்று நேரடி குற்றச்சாட்டு, அழுகை, கூப்பாடு. 'அட...! சீ!' என்று இடுப்பில் ஒரு உதை விட்டு சாப்பி டாமலேயே கிளம்பி விட்டான். கையிலும் காசு இல்லை. என்றுமே இருந்ததில்லை. தங்கிய தில்லை. இல்லாக் கொடுமை. வறுமை. வறுமை. இந்த வறுமை இளமையில் இருக்கவில்லை. அது சுகமாக இருந்தது. இதைப் போன்று சில் லாப்பாக இருக்கிற விடியலில், அப்பாவின் கையைப் பிடித்தபடி வரப்புகளில் ஏறி இறங்கி, வயல்வெளியில் சுற்றி, வாய்க்காலில் 'தொப் தொப்'பென்று குதித்து, ச்சு...

'நம் அதிர்ஷ்டம்தான். சமயத்தில் கட்டையாகி விடுகிறது. கூடவே வந்து, 'சட்'டென்று திரும்பி விடுகிறது. சொல்லாமல் கொள்ளாமல் போய் விடுகிறது, இந்தக் கனவைப் போல்! ஆனால்..

'ஒருநாள் கண்டிப்பாக அடிக்கத்தான் போகிறது. வாசல்லைத் தட்டப் போகிறது. இப்பொழுது சிரிப்பவர்கள் வாயை மூடப் போகிறது. எப்பொழுது? அதுதான் தெரியவில்லை. அப்படி அடிக்கும் வரை, தட்டும் வரை, நம்பிக்கை இழக்கக்கூடாது. விடக் கூடாது. விட்டதையெல்லாம் பிடிக்க வேண்டும். பிடிக்க வேண்டும்...!'

"ஹாலிவுட் சினிமாக்காரங்க பயங்கர அட்வான்டேஜ்ஜா இருக்காங்க!"

"எப்படிச் சொல்றீங்க?"

"நேத்தி ஒரு இங்கிலீஷ்படம் பார்த்தேன். அது என்னோட அடுத்த படத்தோட கதை மாதிரியே இருக்கு!"

— குடந்தை எல். ராம்பிரபு



மீண்டும் தேடல்...

எப்படி விட முடியும்? ரேஷன் கடையில் கால் கடுக்க நின்றதற்கு, மிளகாய் நெடியேறி, சேர்ந்தாற்போல் பத்துத் தும்மல் போட்டதற்குக் கிடைத்த கூலி.

செல்வராசு எடுக்கவில்லை என்று திரும்பத் திரும்பச் சொல்கிறான். ஆலை அம்மன் மேல் சத்தியம் செய்கிறான். அவனுக்குக் கோபம் வருமே தவிர பொய் வராது.

தேடலில்.. எப்பொழுதோ தொலைந்து போன அழிப்பான், துணுக்குப் பென்சில்கள்... அப்புறம் இது என்ன சீட்டு?

வெளிச்சத்திற்கு வந்து பார்த்தாள். இன்ன தென்று விளங்கவில்லை. தூக்கியெறிந்து விடலாம் என்று வெளியே வீசப் போனவள், சற்று நிதானித்தாள். இந்த மனுஷன் எதையாவது வாங்கி வைத்திருப்பாரோ? காணாமல் போய் விட்டால், குடியே மூழ்கி விட்டது போல் சத்தம் போடுவார். வந்ததும், கேட்க வேண்டும். அதுவரை பத்திரமாக எங்கே வைக்கலாம்? சட்டென்று புடைவைத் தலைப்பு ஞாபகம் வர முடிந்தாள்.

நாகேஷ் தியேட்டரை சுற்றி வரும்போது பிளாட்பாரத்தில் அந்தக் கடை கண்ணில் பட்டது. மர டேபிள். டேபிள் மேல் பலவித நிறங்களில் சீட்டுகள் பரப்பியிருந்தன. சுற்றிலும் கூட்டம்.

"யோவ், இது விழுந்திருக்கா...? பாருய்யா."

"இல்லை."

"இதற்கு?"

"ச்சு..."

பேப்பரில் இருந்த எண்களை நோட்டம் விட்டபடியே அவர் பதில் சொல்ல, ஏமாற்ற முகங்கள் விலக, விலகி, மீண்டும் வந்து சீட்டுகள் வாங்க...

இதே போன்று ஒரு சீட்டு தன்னிடமும் இருப்பதை கற்பகம் உணர்ந்தாள். இவரிடம் கேட்கலாமா? காட்டலாமா? சிறிது தயக்கத்திற்குப் பின் முடிச்சைத் தளர்த்தி...

சீட்டை கடைக்காரர் வாங்கிப் பார்த்தார். கையில் இருந்த பேப்பரில் எதையோ தேடினார். எண்கள், எண்கள், எண்கள் ஒரு விநாடி. இரண்டு விநாடி சந்தேகத்திற்கு ஒருமுறை பார்த்து...

"ஆயிரம் ரூபாய் விழுந்திருக்கு...!"

அருள்வாக்கு



ரூபாய் என்று ஒன்று ஏற்பட்ட நாளாக சொந்தத்துக்கு ஜாஸ்தி சேர்த்து மூட்டை கட்டி வைத்துக் கொள்வது, தன்னுடைய துராசைகளுக்கே கன்னா பின்னா என்று செலவழிப்பது– இதெல்லாம் அதிகமாகி, தானதர்மங்கள் பண்ணுவதற்கும், அபரிக்ரஹ தர்மத்துக்கும் ஹானி உண்டாகி வந்திருக்கிறது. ரூபாய் என்று ஒன்று இல்லாத நாள் உண்டா என்று தோன்றலாம். அப்படி ஒரு நாள் இருந்திருக்கிறது. ஆதியில் எல்லா இடத்திலும் barter என்று ஒரு பொருளுக்குப் பதில் இன்னொரு பொருளை 'எக்ஸ்சேஞ்ஜ்' (பரிவர்த்தனை) பண்ணிக் கொள்வதுதான் இருந்ததே தவிர ரூபாயோ ஸ்டெர்லிங்கோ டாலரோ இல்லை. அப்புறந்தான் ஒவ்வொரு சீமையிலும் ஸமுதாயங்கள் ஒரு அமைப்பாகக் கெட்டிப்பட்டு, அங்கங்கே ராஜாங்கம் தோன்றி ஒரு ஆட்சி முறையின் கீழே வந்த பிற்பாடு நாணயம், கரென்ஸி என்பது தோன்றிற்று. எந்தப் பொருளானாலும் இதைக் கொண்டு மதிப்பை நிர்ணயம் பண்ணுவது ஸுலபமாயிருந்து, கையடக்கமாக எடுத்துப் போகும் படியாகவும், வைத்துக் காக்கும்படியாகவும் இப்படி ஒன்றை ஏற்படுத்திக் கொண்டார்கள். ஆனாலும் ஈஸ்ட் இண்டியா கம்பெனி ஆட்சி வருகிறவரைகூட நம் நாட்டில் எல்லா ஜனங்களிடையேயும் விசேஷமாக நாணயப் புழக்கம் இருந்துவிடவில்லை. மேல் மட்டங்களில் சில கார்யங்களுக்கு மட்டுந்தான் நாணய மாற்றத்தில் கொடுக்கல் வாங்கல் நடந்தது. நாணயத்துக்கு நிஜமாகவே அதன் மதிப்பு இருக்கும்படியாகத் தங்கம், வெள்ளி இவற்றிலேயே இருந்ததால், அதிகமாகக் கிடைக்காத இந்த லோஹங்களில் அளவாகவே நாணயம் போடுவார்கள். அப்புறந்தான் நாணயத்துக்கும் அதன் மதிப்புக்கும் ஸம்பந்தமேயில்லாமல், நிக்கல், செம்பு, வெறும் காகிதம் என்று ஏற்பட்டபின் இஷ்டத்துக்கு அச்சடித்து எல்லோருக்கும், எல்லாவற்றுக்கும் விநியோகிப்பதாக ஆகிவிட்டது.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

"அப்படின்னா...?"

"ஆமாம்... ம்... இதை நீ வாங்கின மாதிரி தெரியல்லியே? யாரோட சீட்டு இது? உன் கிட்டே எப்படி வந்தது?"

"வீட்டிலே கிடந்தது. வீட்டுக்காரருக்கு இந்தப் பயித்தியம் நிறைய உண்டு. அவருதான் வாங்கியிருக்கணும்."

இவள் பேச்சில் நம்பிக்கைஇல்லாமல், அந்த சீட்டை மீண்டும் பரிசோதித்தார். திரும்பத் திரும்பப் பார்த்து...

"இதோட கூட்டுத் தொகை ஒம்போது வருது. நேத்து காலையிலே ஒரு பய வந்து வாங்கிட்டுப் போனான். பொடிப்பய... ஒல்லியா... ஒரு கண்ணு கொஞ்சம் ஒண்ணரைக் கண்ணு. ஸ்கூல் யூனிபார்ம் மாட்டியிருந்தான். பேரு கூட... ம்.. வந்து!

"தங்கவேலு...?"

"ஆமாம், அப்படித்தான் ஏதோ..."

"என் மவனுங்க, அவன்."

"சீட்டை பத்திரமா வைச்சிரு. காலையிலே கொண்டா, பணம் கிடைக்கும்."

வீட்டில் நுழையும்போதே செல்வராசு அந்த மாறுதலை உணர்ந்தான்.

வழக்கமான மூஞ்சித் துக்கல் இல்லை. இடக்குப் பேச்சு இல்லை. சுடுகிற பார்வை இல்லை. கற்பகத்தின் முகத்தில் கலகலப்பு இருந்தது. சொல்லத் தெரியாத பூரிப்பு தெரிந்தது. இவனைப் பார்த்துச் சிரித்தாள்.

இந்தச் சிரிப்பின் அர்த்தம் தெரியாமல் அவன் குழம்ப...

"ஏங்க...! நம்ப பையன் 'யோகக்காரன்'னு அவன் பொறந்த அன்னிக்கே எங்க அய்யா சொன்னாரே, உங்களுக்கு நினைவு இருக்கா? 'ஒண்ணரைக் கண்ணே அதிர்ஷ்டம்'னு. 'தங்கவேலு'ன்னு பெயர் வை. அவன் தொட்டதெல்லாம் தங்கம் ஆகும்ன்னு... அப்படியே ஆயிடுச்சுங்க!"

"எப்படி....?"

"லாட்டரி சீட்டிலே ஆயிரம் ரூபாய் விழுந்திருக்கு, அவனுக்கு...!"

"என்னது? சீட்டா! யார் வாங்கினா?"

"அந்த அஞ்சு ரூபாயைக் காணோம்னு தேடிண்டு இருந்தேனா..." பேச்சு அறுபட்டது.



“நேத்து மேடையிலே பேசினப்ப ஏன்யா கலர் கொண்டு வந்துதரலை?”
“அப்பத்தான் கடுப்புல எதிர்க் கட்சித் தலைவரைத் தாக்கி இன்னும் ரெண்டு வார்த்தை கூடா பேசுவீங் கன்ற நல்லெண்ணம்தான் தலைவரே!”
– ஜி. செல்லத்துரை

கற்பகம் திக்கித் திணறினாள். ‘நீதான் திருடிட்டே...’ என்று இவன் மேல் பழி சொல்லியது மனதில் நிரட... “வந்து... ம்... அதை நம்ப தங்கவேலு எடுத்திருக்கணும்... எடுத்து சீட்டு வாங்கி...”

“பரிசு விழுந்திருக்குன்னு அவனுக்குத் தெரியுமா?”

“தெரியாது. சொல்லலல்லே. அவன் இன்னும் வரல்லே. விளையாடிட்டு வருவேன்’னு...”

செல்வராசு அந்த லாட்டரி சீட்டை எடுத்து, ஒருமுறை முழுமையாகப் பார்த்தான்... ஒரு வேதனைச் சிரிப்பு அவன் முகத்தில் தோன்றி மறைய...

ஒரு விநாடி, ஒரே விநாடிதான்...!

அந்தச் சீட்டை இரண்டாக மடித்தான். நாலாக்கினான். எட்டாக்கினான். ஆட்காட்டி விரலுக்கும் கட்டை விரலுக்கும் இடையில் பிடித்து, ‘சர்’ரென்று கிழித்தான். சுக்கு நூறாக்கினான். விட்டெறிந்தான்!

“என்னங்க... உங்களுக்குப் பயித்தியம் பிடிச்சிடுத்தா...? ஒரு ரூபாய்க்கும் அரை ரூபாய்க்கும் நாம ஆலாப் பறக்கிறோம். அல்லாடறோம். சுளையா ஆயிரம் ரூபாய்! ஜென்மத்திலே பார்க்க முடியுமா? ஊரைச் சுத்தி கடன் இருக்கு. எத்தனை செலவு இருக்கு? வலிய வந்த பணம். நம்ப பஞ்சம் விடியணும்னு கடவுளாப் பார்த்து கொடுத்திருக்காரு. பாவி மனுஷா... அதைப் போய்...!”

“கடவுளா கொடுத்திருக்காரு...?” செல்வராசு விரக்தியுடன் சிரித்தான். “அவரு, நல்லது கெட்டது தெரிஞ்சுக்க, அறிவைக் கொடுத்திருக்காரு...!”

அடக்க முடியாமல் கற்பகம் அழுதாள். எழுந்து, ஆத்திரத்துடன் அவன் சட்டையைப் பிடித்து உலுக்கினாள்.

“ஏன்யா... நீயும் எத்தனை வருஷமா இப்படி பறக்கிறே? ஏதாவது அதிர்ஷ்டம் அடிக்காதா, அடிக்காதான்னு அலையறே... உனக்கு ஒண்ணும் விழலல்லே! உன் ஜாதகம் அப்படி. அந்தக் குழந்தை... சொந்தப் புள்ளே. அவனுக்கு விழுந்திருக்கிறதை உன்னாலே தாங்க முடியல்லியே! ஆத்திரம் வந்துடுத்தே. அவனுக்குத் தெரியுமான்னு கேட்டு, பித்துக் கொள்ளித்தனமா கிழிச்சு...”

“அவன் நல்லதுக்குத்தான் செஞ்சேன்...!” செல்வராசு அவளை மெதுவாக விலக்கினான்.

“கற்பகம். என்னை நம்பு. சின்ன வயசிலே இவனை மாதிரியே எனக்கும் ஒரு குருட்டு அதிர்ஷ்டம் அடிச்சுது. குறுக்கு எழுத்துப் போட்டியிலே...! ‘அதிர்ஷ்டக்காரண்டா நீ...’ன்னு எல்லோரும் தூண்டி விட்டாங்க. தட்டிக் கொடுத்தாங்க. மனசிலே ஆசையை விதைச்சாங்க. அப்புறம்; தினமும் சாப்பிடற மாதிரி, தூங்குகிற மாதிரி... பொழுதுவிடிஞ்சா, ‘அதிர்ஷ்டம் அதிர்ஷ்டம்’னு அதைத் தேடறதே பிழைப்பா போச்சு. சொத்து போச்சு, சுகம் போச்சு... ஓட்டாண்டி ஆகி...! கெடுதல்னு தெரிஞ்சும் இப்பவும் இதை விட முடியல்லே. எத்தனை வருஷத்துப் பழக்கம்! தொட்டில் பழக்கம். போகல்லே. போகாது. சாகிறவரை விடாது! இது ஒரு வெறி மாதிரி. பிசாசு மாதிரி என்னைப் பிடிச்சிருக்கு. அந்தப் பிசாசு என் மகனையும் பிடிக்கணுமா? என்னை மாதிரியே அவனும் அதிர்ஷ்டத்தைத் தேடி அலையணுமா? சொல்லு. இந்த ரூபாய் போனால் போகட்டும்... இதற்கு சபலப்பட்டு அனுமதிச்சா... நஷ்டம் அவனுக்குத்தான்! பின்னாடி நாசமாப் போயிடுவான். கூடாது. அப்படி விடக்கூடாது. இந்த எண்ணமே அவனுக்கு வரக்கூடாது. அவன் வந்தால் கண்டிச்சு வை. இனிமேல் இந்த மாதிரி பண்ணினால்... வேண்டாம், இப்ப அவன் செஞ்ச காரியத்துக்கே கையிலே சூடு போடு, அடையாளம் தெரிகிற மாதிரி நல்லா விளாசு...!”

தூங்குகிறவனை மெனக்கெட்டு எழுப்பி, “சக்கரைப் பொங்கல் ஆயிடுத்து...! உன் வரைக்கிலும் வரல்லே, ச்சு...!” என்று கேட்ட ஏமாற்றம் அவளுள் படர்ந்தது.

இருந்தும் கொஞ்சம் நம்பிக்கை...

இருளுக்கு அப்பால்... வெளியே, தொலை தூரத்தில் ஓர் ஒளிக்கீற்று. அது, அடுத்த தலைமுறைக்காவது வழிகாட்டும்...!



* ஸ்வப்னா

"சேவை பேசுகிற அழகிகள் சினிமா சான்ஸுக்குத்தானே அலைகிறார்கள்?"

ஸ்வப்னா திவாரி. ஒரிஸ்ஸா மாநிலம் கட்டாக் நகரின் கூடுதல் போலீஸ் சூப்ரின்டென்டென்ட். தைரியத்துக்கும், நேர்மைக்கும் பெயர் போன இந்த இளம் பெண் அதிகாரியை உள்ளூர்க்காரர்கள் 'ஒரிஸாவின் கிரண்பேடி' என்று குறிப்பிடுகிறார்கள். ஆனால் ஸ்வப்னா திவாரியோ, "நான் பெண் என்பதால் எனக்குப் பப்ளிசிடி கிடைக்கிறது; என்னுடைய சக ஆண் அதிகாரிகளும் என்னைப் போலவே கடமையுணர்வுடன் பணியாற்றினாலும், பத்திரிகைகளின் கண்ணில் படுவதில்லை" என்று கூறுகிறார். இவர் ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்தவர்.

பி.ஏ. (பொலிடிகல் சயின்ஸ்) முடித்து விட்டு, எம்.பி.ஏ படித்தவர் ஸ்வப்னா. அதன்பின் தனியார் கம்பெனியொன்றில் எக்ஸிக்யூடிவாகச் சேர்ந்தார். அடுத்து தம் நெடுநாளைய நண்பரான சச்சின் வியாஸைத் திருமணம் செய்து கொண்டார்.

தனியார் துறையில் பணிபுரிந்து கொண்டிருந்த மனைவியை, சிவில் சர்வீஸ் தேர்வு எழுதும்படித் தூண்டியதே சச்சின்தான். அவர் அளித்த ஊக்குவிப்பில் ஸ்வப்னா, ஐ.பி.எஸ்.தேறி விட்டார்.

"ஐ.பி.எஸ். அனுபவம் எப்படி இருக்கிறது?"

"தண்ணியில்லாத காட்டுக்கு மாற்றி விடுவார்களோ என்ற பயத்தை மட்டும் விட்டு ஒழித்து விட்டால், ஒரு ஐ.பி.எஸ். அதிகாரி, யாருக்கும் பயப்படாமல், நேர்மையாகப் பணியாற்ற முடியும். நாம் வளைந்து கொடுக்க மாட்டோம் என்பதை புரிந்து கொண்டு விட்டால் அரசியல்வாதிகள், நம் விஷயத்தில் மூக்கை நுழைக்கத் தயங்குவார்கள். லஞ்சம் தான், லஞ்சம் பெருக வழிகோலுகிறது. போலீஸ் துறையிலும், லஞ்சம் புரையோடி விட்ட ஒரு விஷயம் என்பதை முதலில் ஒப்புக் கொள்ள தைரியம் வேண்டும். அதன்பின்தான் அதை ஒழிக்கச் சாத்தியமுண்டு. காவல்துறை உயர் பதவிகளுக்குப் பணி நியமனங்கள், ஒரு செலக்ஷன் கமிட்டி மூலம் நடைபெற வேண்டும் என்ற போலீஸ் கமிஷன் சிபாரிசு உடனடியாய்ச் செயல்படுத்தப்பட வேண்டும்" என்கிறார்.

பணியில் மறக்க முடியாத அனுபவங்களாக ஸ்வப்னா சொல்பவை: "ஜாலேஸ்வர் காவல் நிலையத்தில், காவல் நிலைய அதிகாரிகள் இரண்டு பேரும் குடித்துக் கொண்டிருப்பதைப் பிடித்து, நடவடிக்கை எடுத்தபோதுதான் அரசியல் தரப்பிலிருந்தும், மேலதிகாரிகள் தரப்பிலிருந்தும் எவ்வளவு முட்டுக்கட்டை! ஆனால், அனைத்தையும் மீறி அவர்கள் இருவரையும் சஸ்பெண்டு செய்தேன்.

"இன்னொரு சமயம். ஒரு ஹரிஜன பெண் கற்பழிப்பு சம்பந்தமான வழக்கை ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டரும், இன்னொரு அதிகாரியும் அமுக்கிவிட முயன்றபோது, அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்தேன்"

ஸ்வப்னா திவாரியின் கருத்துக்கள் முற்போக்கானவை. "ஒரு வி.ஐ.பி. வந்தால், ஏன் ஒரு பெண் அலங்காரமாய், பூங்கொத்து கொடுத்து வரவேற்க வேண்டும்? ஆண்கூட அதைச் செய்யலாமே? பொது இடங்களில் மட்டுமில்லை; போலீஸ் அகாடமியில்கூட இதே கதைதான்" என்று கேள்வி எழுப்புகிறார்.

"அழகுப் போட்டிகளில் வென்றதும் அனாதை ஆசிரம சேவை என்றெல்லாம் பேசுகிற அழகிகள் இறுதியில் சினிமா சான்ஸுக்குத்தானே அலைகிறார்கள்?" என்று கோபமும் படுகிறார்.

— கௌதம் ராம்



ஹ [illegible]
யும் கலந்த மெல்லிய வாசனை சுகன்யாவை எழுப்பியது. டாக்டர் ஷ்யாமளா வெள்ளையில் சிறு பூக்கள் போட்டு, மொட மொடத்த வாயில் சேலையும், உடலை இறுக்காத சௌகரியமான ரவிக்கையுமாகப் பார்க்கும் போதே தெம்பூட்டினார்.

"ஹவ் ஆர் யூ?" ஜில்லென்று டாக்டரின் கை நெற்றியில் பதிந்த போது ஏற்பட்ட இலேசான அசௌகரியத்தைப் பொறுத்துக் கொண்டு பதில் சொன்னாள் சுகன்யா.

"ஐ'ம் ஓகே. எப்போ வீட்டுக்குப் போகலாம் டாக்டர்...?"

"எப்போ வேணா போகலாம் சுகன்யா- பயப்படற மாதிரி எதுவும் இல்லை. டெம்ப்ரசர் நார்மலாயிருக்கு. ப்ளீடிங் அதிகப்படியாக இல்லை... இப்பவே வேணாலும் கிளம்பலாம்... மிஸ்டர் ராமநாதன், நீங்க ரொம்ப அதிர்ஷ்டக்காரர். உங்கள் மருமகளைப் போல தைரியமான பெண்கள் இருக்கறது அபூர்வம். இந்த [illegible] எழுந்து ரகளை பண்ணிடுவாங்க. அவங்களை சமாதானம் பண்றதுக்குள்ளேயே போதும் போதும்னு ஆயிடும். சுகன்யாவை டிஸ்சார்ஜ் பண்ணிடறேன். எதுக்கும் ஒரு மாசம் கொஞ்சம் ஓய்வா இருக்கட்டும். உங்கள் மகன் எப்போ திரும்பி வரார்?"

"எப்படியும் இன்னைக்கு இல்லைன்னா நாளைக்குக் கட்டாயம் வந்துடுவான்... தகவல் கொடுத்திருக்கோம்..."

"அவர் வந்த பிறகும் தொடர்ந்து ஓய்வா இருக்கணும் சுகன்யா. இன்னும் இரண்டு மாசத்துக்குக் கர்ப்பமாகாம இருக்கறது நல்லது. சில பரிசோதனைகள் பண்ணணும்... ஒரு வாரம் கழிச்சு திரும்பவும் அழைச்சுக் கிட்டு வாங்க..."

டிஸ்சார்ஜ் ஸ்லிப் எழுதிக் கொடுத்து விட்டார் டாக்டர் ஷ்யாமளா.

அவர் அடுத்த பேஷன்ட் நோக்கிப் போனதும், சுகன்யா எழ முற்பட்டாள்

"எங்கம்மா இப்ப எழுந்துக்கறே...?" நால

போய் ரிசப்ஷன்ல பில்லை செட்டில் பண்ணிட்டு வரேன்... அது வரைக்கும் படுத்துண்டிரு..."

"இல்லைப்பா... இந்த சாமானெல்லாம் எடுத்து வைக்கறேன்..."

"நீ பேசாம படு..." அவள் தோள்களைக் கண்டிப்புடன் அழுத்தி, படுக்க வைத்து விட்டார் ராமநாதன்.

அடுத்திருந்த பாத்ரூமில் நர்ஸ் அடுக்கி வைத்திருந்த டூத் பிரஷ், சோப், முதலான டாய்லெட் சாதனங்கள் தொடங்கி அவள் மாற்றுடை, மருந்துகள், ஹார்லிக்ஸ் பாட்டில் என ஒவ்வொன்றாக, தாமே எடுத்துக் கூடையில் அடுக்கினார்.

பில் பணம் கொடுத்துவிட்டு அவர் அழைத்து வந்த டாக்ஸியில் ஏறி அமர்ந்த போது, "மெதுவா மெதுவா... அவசரப் படாதே..." என்று பதறினார்.

"ஒரு தலையணை வேணும்னா வைக்கட்டுமா...? பின்னால் படுத்துண்டே வரலாம் நீ... நான் முன் சீட்லதானே உட்காரப் போறேன்...?"

"அவ்வளவ் மோசமில்லைப்பா... உட்

அசோகமித்திரன்

யிருந்தாலும் இரண்டு நாள்ல் சுமங்கலி பிரார்த்தனை வேற வருது... அதெல்லாம் முடிஞ்சு நிதானமா போய்க்கலாம்..."

– மாமியாரின் உரிமையுடன் கூடிய வற்புறுத்தல்.

சுகன்யா அந்த அழைப்பை ஏற்க மிகவும் தயங்கினாள். விடிந்தால் வாட்டியெடுக்கப் போகும் மசக்கையை இவர்களிடமிருந்து மறைக்க முடியாது.

'இவ்வளவு நல்ல செய்தியை ஏன் சொல்லவில்லை? எப்படிச் சொல்லாமலிருக்கலாம் என்று மீண்டும் கோபித்துக் கொள்வார்களோ? வசந்திக்கு வழிகாட்டியதற்காக ஏறிய 'பிளஸ்' மதிப்பெண்கள் மீண்டும் மைனஸுக்குப் போய்விடுமோ...?'

"துணியெல்லாம் எதுவும் கொண்டு வரல்லையேம்மா... டூத் பிரஷ் கூட இல்லை... நான் வீட்டுக்கே போய்டறேன்..."

"அதனாலென்ன மன்னி... இப்பவே

உள்ளே வரலாமா?

கார்ந்து வர முடியும்.." சுகன்யா புன்னகையுடன் உத்தரவாதம் தர, ராமநாதனையும் ஏற்றிக் கொண்டு டாக்ஸி புறப்பட்டது.

கடந்த இரண்டு நாட்களில் தான் எத்தனை ரகளை!

வசந்தியை சமாதானம் செய்து அழைத்துக் கொண்டு போனபோது, மாமியார் மாமனாரிடமிருந்து வெளிப்பட்ட சந்தேகப் பார்வையும் அடிப்படையற்ற கோபமும் உண்மை வெளிப்பட்ட ஒரு சில கணங்களுக்குள் அசைக்க முடியாத நம்பிக்கையாக உருமாறிப் போன விந்தை.

தொடர்ந்து, "ஸ்ரீராம் தான் ஊர்ல இல்லையே. அவன் வர்றவரைக்கும் இங்கேயே இருந்துடு... அங்க தனியா சமைச்சு சாப்பிட்டுண்டு திண்டாடுவானேன்.... எப்படி வாங்கோ... என் ஃப்ரெண்டோட பைக் இருக்கு... பத்து நிமிஷத்துல போய் என்னென்ன வேணுமோ எடுத்துண்டு வந்துடலாம்...." குமார் உடனடியாக பதில் சொன்னான்.

"இல்ல குமார்! ராத்திரி அண்ணா வேற பக்கத்து வீட்டுக்கு போன் பண்ணுவார். நான் இல்லைன்னா பயந்து போய் கவலைப்படுவார்..."

"என்ன பிரமாதம்! பக்கத்து வீட்ல சொல்விட்டு வந்துடலாம். கல்யாண வேலையா இங்க வந்திருக்கேள்... இங்க போன் பண்ணிப் பேசிக்கலாம்னு..."

சுகன்யா சொன்ன பலவீனமான காரணங்களை ஒதுக்கித் தள்ளிய குமார், அவளை பைக்கில் ஏற்றி ஜவஹர்புரம்

அழைத்துப் போனான். சின்ன பையில் மாற்றுடைகளும் டாய்லெட் கிட்டும் அவள் எடுத்து வைத்துக் கொள்வதற்குள் அவனே பக்கத்து வீட்டில் போய் தகவல் சொல்லி விட்டு வந்தான். ஜன்னல்களைப் பொறுப்பாக மூடி தாள்போட்டான். கொல்லைப்புறக் கத வின் பூட்டை இழுத்து, மொட்டை மாடியில் துணிகள் இல்லை என்று உறுதி செய்து, 'எல் லாம் எடுத்துண்டுட்டேளா...?' என அவன் கேட்ட பொறுப்புணர்வு சுகன்யாவுக்கு இலே சாக ஆச்சர்யமூட்டியது.

"போகலாம் குமார்..."

அவளிடம் சாவி வாங்கி வாசல் கதவைப் பூட்டினான். "பையை இப்படிக் கொடுங்கோ..." என்று அதை வாங்கி, பைக்கின் சைட் காரி யரில் வைத்து மூடினான்.

வண்டியை ஸ்டார்ட் செய்வதற்கு முன் "போகலாமா...?" என்று ஒருமுறை கேட்டுக் கொண்டான்.

"போகலாம்" என்றபடி, அவள் தோளைப் பிடித்துக் கொண்டு சுகன்யா எச்சரித்தாள்: "இந்த ரோடு முனைல இடது பக்கமா பெரிய பள்ளம் இருக்கு குமார். இருட்டுல சரியா தெரியாது. பார்த்து மெல்ல போ. வசந்தி யோட ஆட்டோவில் வரும் போது டிரைவர் அதை கவனிக்காம வேகமாக போய்ட்டார். ஒரேடியா தூக்கிப் போட்டு உலுக்கிடுச்சு... வண்டி குடை சாயாம இருந்ததே பெரிசு..."

அந்த உலுக்கல் தான் காரணமோ, அல்லது வேறு காரணமோ... மறுநாள் காலைப் பொழுது மசக்கையில்லாமல் விபரீதமாய் விடிந்தது சுகன்யாவுக்கு.

டாக்டருக்கு போன் செய்யவோ வர வழைக்கவோ அவகாசம் அனுமதிக்காமல் மிக அவசரமாய்க் கலைந்துவிட்டது கரு.

சுகன்யா கர்ப்பமாயிருக்கிறாள் என்ப தையே அறிந்திராத குடும்பம், இரட்டிப்பு அதிர்ச்சியில் சில நிமிடங்கள் செய்வதறியாது ஸ்தம்பித்துப்போனது.

கீதா நர்ஸிங் ஹோமின் பெயரும் விலாசமும் சுகன்யாவே சொல்ல, அங்கு போய்ச் சேர்ந்தபோது டாக்டர் சியாமளா உடனே கவனித்து மலைபோல் தைரியமூட்டினார்.

"பயப்படாதீங்க... சில சமயம் இப் படி திடீர்னு காரணமில்லாம நடக்கறதுண்டு... ஓய்வா இருக்கணும்– மனசை தைரியமா வைச்சுக் கணும்... நீங்களே இப்படி பேயறைஞ்ச மாதிரி இருந்தா பேஷண்டுக்கு எப்படியிருக்கும்... அவங்களுக்கு இன்னும் வயசிருக்கு. ஆரோக் கியம் இருக்கு. நிச்சயமா நல்லது நடக்கும்."

சுகன்யா ஸ்பெஷல் ரூமில் படுக்க வைக் கப்பட்டாள்.

"உங்க பையனுக்குத் தகவல் சொல்லுங்க. இரண்டு நாள் இங்க நர்ஸிங் ஹோம்ல இருக் கட்டும்– ஒரு முன்னெச்சரிக்கையாத்தான்...."

சரஸ்வதி சுகன்யாவுடன் துணைக்கு இருக்க முன்வந்தபோது ராமநாதன் மறுத் தார். "வேண்டாம்... நான் இருக்கேன். நீ தனியா இருந்தா ஏதாவது அவசரம், உதவி வேணும்னா பதறிப் போய்டுவே.... மேலும் அங்கே வீட்ல கல்யாணக் காரியமெல்லாம் கவனிச்சாகணும்... நான் இருக்கேன் சுகன்யா வோட...."

உடம்பும் உள்ளமும் பிழிந்தெடுத்த ஈரத் துணியைப்போல் சோர்ந்து கிடந்த நிலையில் சுகன்யா இந்த உரையாடல்களில் கவனம் செலுத்தவில்லை. மூடிய அவள் கண்களின் ஓரங்களிலிருந்து கண்ணீர் இடைவிடாது அனிச்சையாய் சுரந்தது. சூன்யமாகிப்போன உணர்வுகளினிடையே ஸ்ரீராமின் நினைவு மட்டும் மீண்டும் மீண்டும் அலையாக வந்து மோதியது.

விடைபெற வந்த சரஸ்வதி, சுகன்யாவின் காதருகே வழிந்தோடிய கண்ணீரைக் கவனித் தாள். அரும்பிய தாய்மை பறித்துச் சிதைக் கப்பட்ட கொடுமை தாளாமல் அவளும் உடைந்து போய் அழ ஆரம்பிக்க, மனைவியை அவசரமாக அப்புறப்படுத்தி வீட்டுக்கு அனுப் பினார் ராமநாதன்.

இமைகளின் ஓரங்கள் துணியினால் மென் மையாக ஒற்றப்படுவதை உணர்ந்து கண் திறந் தாள் சுகன்யா. கர்ச்சீப்புடன் நின்ற மாமனா ரைப் பார்த்து பலவீனமாகப் புன்னகை செய்தாள்.

"அவருக்குத் தகவல் சொல்லிட் டீங்களாப்பா..?"

"சொல்றேன்மா.. என்ன நடக் கறதுன்னு புரிஞ்சு உன்னை இங்க கொண்டு வந்து சேர்க்கறதுக்குள்ளேயே பெரும்பாடாப் போச்சு. இங்க ரிசப்ஷன்

தங்க நகை பரிசு!

இந்த இருபத்தாறு வாரத் தொடர், ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு கதாசிரியர் பெயரில் வெளியாகி வருகிறது. ஆனால் அவர்களுள் ஒரே ஒரு நபர்தான் இதை எழுதி வருகிறார். தொடரை எழுதியவர் யார் என் பதைக் கண்டுபிடிப்பது உங்கள் சாமர்த்தியம். கடைசி வாரம் வரை காத்திருந்து, அந்த இதழில் வெளியாகும் கூப்பனில் விடை எழுதி அனுப்புங் கள். சரியான விடைக்கு, தங்க நகை பரிசு! பலர் சரியாக எழுதினால் குலுக்கலில் ஒருவரே பரிசு பெறுவார். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

"நம் காதல் ரொம்ப ஆழமானதா இருக்கும்னு எதை வெச்சி சொல்றே சித்ரா?"

– ஜக்கு

லேருந்து ஆபீஸுக்கு போன் பண்ணி ராஜுகிட்டே விஷயத்தைச் சொல்றேன். அவரே ஸ்ரீராமைத் தொடர்பு கொண்டு சொல்லிடுவார்..."

"ரொம்ப பயந்துடப்போறார்பா... நான் சரியாயிருக்கேன்னு மறக்காம சொல்லச் சொல்லுங்க..."

"ஆகட்டும்மா... இப்ப கண்ணை மூடி தூங்க முயற்சி பண்ணு..."

நர்ஸ் ஒருத்தி வந்து "சார்! கொஞ்சம் வெளிய இருக்கீங்களா....? பேஷன்டைப் பார்க்க டாக்டர் வந்துட்டிருக்காங்க..." என்று ராமநாதனை வெளியேற்ற,

"நான் போன் பண்ணிட்டு வந்துடறேன்மா..." அவள் கையில் கர்சீப்பைக் கொடுத்துவிட்டு அகன்றார்.

நேற்றுதான் இவ்வளவும் நடந்தன என்றாலும் ஒரு யுகமாகிவிட்டது போலிருந்தது சுகன்யாவுக்கு.

வசந்தியும் குமாரும் எடுத்து வந்த உணவைத் தட்டில் போட்டுக் கொடுத்து, கைய லம்ப தண்ணீர் தந்து, அவள் சாப்பிட்டதும் தட்டை வாங்கி அலம்பி வைத்து – பொதுவாகப் பெண்களுக்கேயுரிய நேர்த்தியுடனும் கூர்மையுடனும் மாமனார் இயங்கியது அவளுக்கு ஆச்சரியமாயிருந்தது.

பகல் முழுவதும் தூங்கி, மாலை கண் விழித்தபோது நினைவாய் மாமனாரிடம் கேட்டாள்.

"எப்படிப்பா இவ்வளவு சுச்சிதமா வேலைகளைப் பண்ணக் கத்துக்கிட்டீங்க..."

"எல்லாம் எங்கம்மாவோட ட்ரெய்னிங் தான் சுகன்யா. எல்லா வேலையும் தெரிஞ்சிருக்கணும்னு பண்ண வைச்சுடுவா... கிணற்றிலே தண்ணி சேந்தரதுல ஆரம்பிச்சு குமிட்டி அடுப்பு பத்த வைக்கறது வரை எல்லாம் பண்ணுவேன். அப்புறம்... சரஸ்வதி வந்தப்புறம் எல்லாத்தையும் அவளே இழுத்துப் போட்டுண்டுட்டா..."

"உங்களுக்கு கல்யாணமாகி எத்தனை வருஷமாச்சுப்பா..."

"முப்பது வருஷமாச்சு..." அவர் இலேசாக வெட்கப்பட்டுக் கொண்டிருக்கையிலேயே அறைக் கதவு தட்டப்பட்டது.

ராஜு!



"சுகன்யா? என்னம்மா இது...? இப்படி விஷயம்னு நீ சொல்ல வேயில்லையே... அந்த தடியன் ஸ்ரீராமும் ஒரு வார்த்தை கூட சொல்லலை...?"

"அவங்க எங்களுக்கே விஷயத்தைச் சொல்லலை மிஸ்டர் ராஜு... இப்படி ஒரு அதிர்ச்சி மூலமாதான் எங்களுக்கு உண்மை தெரிந்தது."

ராமநாதன் சுகன்யாவை நோக்கி அடிபட்ட பார்வை பார்த்தபோது, அவள் குற்ற உணர்வால் தலை தாழ்த்த வேண்டியிருந்தது.

"ஸ்ரீராமுக்குத் தகவல் அனுப்பியிருக்கேன்மா. அவன் பம்பாயிலே இல்லையாம். எப்படியும் இன்னிக்கு மெஸேஜ் போய்விடும்... நாளைக்கு வந்துடுவான்... ஏதாவது உதவி வேணும்னா கேட்கத் தயங்காதீங்க..."

"தாங்க்யூ மிஸ்டர் ராஜு..." என்று அவரை வழியனுப்பப் போன மாமனார், வந்ததுமே தன்னைக் கேள்விகளால் துளைப்பார் என எதிர்பார்த்தாள் சுகன்யா...

'ஏன் சொல்லவில்லை? எப்படிச் சொல்லாமல் இருக்கலாம்? இந்தச் செய்தி தெரிய வேண்டிய உரிமை உங்களுக்கு இல்லையா...'

ஆனால் கற்பனை பதில்களைத் தேடவோ, உண்மையைச் சொல்லவோ அவசியமின்றி ராமநாதன் மௌனமாயிருந்துவிட்டார்.

இப்போதும் டாக்ஸியில் முன் இருக்கையில் மௌனமாக வருகிறார்.

நன்றாகச் சாய்ந்து உட்கார்ந்த நிலையில் சுகன்யா கண்களை மூடிக் கொண்டிருந்தாள். அப்படியே அயர்ந்து தூங்கியும் போனாள்.

"இறங்கறியாம்மா... வீட்டுக்கு வந்தாச்சு" என்ற குரல் கேட்டுக் கண் திறந்தவளுக்கு மேலும் அதிர்ச்சி.

டாக்ஸி நின்றிருந்தது ராமநாதனின் வீட்டு வாசல் இல்லை.... அவளது ஜவஹர் நகர் தனிக் குடித்தன வீட்டின் கேட்டருகே.....

மாமனார் தன்னை இங்கே இறக்கிவிட்டு விட்டுத் திரும்பிப் போய்விடும் திட்டத்தில் இருக்கிறாரா...?

தனியாக இந்த வீட்டில் என்ன செய்வது? ஸ்ரீராம் எப்போது வருவான்? அந்தக் கணமே ஸ்ரீராமைப் பார்க்க வேண்டும்போல் ஏக்கம் வந்தது. அவன் தோளில் சரிந்து மனம் விட்டு அழ வேண்டும்.

(தொடரும்)

சென்ற வாரம் தபால் ஊழியர்கள் ஸ்டிரைக்கெல்லாம் முடிந்த இரண்டாவது நாள் எனக்கு வார்ஸாவிலிருந்து ஓர் ஏர்-மெயில் வந்தது. வடக்கே திருப்பதி வெங்கடாசலபதியைத் தாண்டி எனக்கு சொந்தபந்தம் யாரும் கிடையாது. சொல்லிக் கொள்கிற மாதிரி நண்பர்களும் இல்லை. போலந்து தேசத்திலிருந்து யார் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்?

'இக்கடிதம் கண்ட இரண்டு நாட்களுக்குள் இதை நானூறு பிரதி எடுத்து, தெரிந்தவர்களுக்கெல்லாம் அனுப்பினால் சர்வ மங்களமும் உண்டாகும்; இப்படித்தான் கண்ணம்மாப் பேட்டை சுப்பிரமணி என்பவர்...' - என்பதாக இருக்குமோ என்று நினைத்தேன். ஜோசப் ஒலேஸ்கியின் ஆட்சியில் மக்களுக்கு இதற்கெல்லாம் அவகாசமிருக்காது; எல்லாரும் பணத்தைத் துரத்திக் கொண்டு, பார்ட்டிகளில் ஒயின் அருந்திக் கொண்டிருக்கவே பொழுது சரியாக இருக்கும் என்பதாக, சம்பந்தமில்லாமல் என்னென்னவோ நினைத்துக் கொண்டு உறையைப் பிரித்தேன்.

அன்புள்ள ராகவ்,

நலமா? ஒரு நல்ல செய்தி. இப்பவும் கடந்த செப்டெம்பர் பதினேழாம் தேதி, பிரடரிக் குவாஸ் நீவ்ஸ்கியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு விட்டேன். இரண்டு வருஷமாக நாங்கள் காதலித்து வருவதை உங்களிடம் சொல்லியிருக்கிறேன்தானே? பழைய நினைவுகளையெல்லாம் அடுப்பெரிக்கப் போட்டுவிட்டு, இப்போது சந்தோஷமாக இருக்கிறேன். ஜனவரியில் மறுபடி இந்தியா வருகிறேன். இந்த முறை திருவனந்தபுரமாமே? திரைப்பட விழாவில் மறுபடி சந்திப்போம். பேச எத்தனையோ இருக்கிறது. அன்புடன், ஜூலியா.

கடிதத்தைப் படித்ததும் முதலில் குழம்பினேன். யார் இத்தனை உரிமையுடன் என் பெயரைச் சுருக்கி, இத்தனை செல்லமாய் விளிப்பது? கடைசியில் பெயரைப் பார்த்ததும் தான் பிடரியில் பேய் அடித்தது. ஜூலியா, ஜூலியா,



ஜூலியா

பா. ராகவன்

சென்ற வருடம் புதுதில்லியில் நடந்த திரைப்பட விழாவுக்கு வந்திருந்தாள் ஜூலியா. என்னமோ, ஞாபகம் வைத்துக் கொள்ளச் சிரம மான ஒரு பத்திரிகையின் பெயரைச் சொல்லி, அதில் திரைப்பட விமர்சகியாகப் பணிபார்ப்ப தாகச் சொல்லி, ஐடென்டிடி கார்டெல்லாம் காட்டினாள்.

எனக்கு ஒரே ஆச்சர்யம். அவளை விமர்சக வித்தகியாக எங்ஙனம் ஏற்பது? ஜீன்ஸெல்லாம் போட்டுக்கொண்டு, சூயிங்கம் மென்று கொண்டு, தேன் நிற, குட்டைத் தலைமுடியை இடதுகையால் கோதிக் கோதி விட்டுக் கொண்டு – பார்த்தால் இருபத்தைந்து வயதுக்கு மேல் சொல்ல முடியாது. கையில் ஒரு மைக்கைக் கொடுத்து, எம்டீவி பாடகி என்று சொன்னால் சுலபமாக நம்பி விட முடியும்.

சிரிஃபோர்ட்டின் பிரதான திரையரங்கில் ஷக்குரு என்கிற ஜப்பானிய மொழிப் படம் ஓடிக் கொண்டிருந்த ஒரு காலைக் காட்சியில்தான் நான் அவளை முதலில் சந்தித்தேன். எனக்குப் பக்கத்து சீட்டில் அவள்.

என் கேள்விக்கு அவள் பதில் சொல்ல வில்லை. மாறாக, "நீங்கள் வந்து பாருங்களேன்!" என்றாள்.

திரையில் உணர்ச்சிமயமாக ஜப்பானிய ஓவியன் தற்கொலைக்கு முயன்று கொண்டிருக்க, நான் அரை மனத்துடன் எழுந்து, அவளைப் பின் தொடர்ந்தேன்.

தில்லிக் குளிரில் நாக்கு ஒட்டிக் கொள்ள, சூடாக ஒரு பானை காப்பி அல்லது தேநீர் கிடைக்குமா என்று நான் அக்கம்பக்கம் பார்த்துக் கொண்டே நடந்தேன்.

"மிஸ்டர் ராக்வான், எனக்காகச் சற்று சீக்கி ரம் வருகிறீர்களா? உங்களுக்குக் காப்பி வேணு மென்றால், நான் பையில் – ஃபிளாஸ்கில் வைத் திருக்கிறேன். உள்ளே போனதும் தருகிறேன்"

அடிக்கடி கைக்கடிகாரத்தைப் பார்த்து, உதட்டைக் கடித்துக் கொண்டிருந்தாள். அவளது இந்தச் செய்கை என்னை மிகவும் தொந்தரவு செய்தது. படம் பார்க்கவென்றே வந்துவிட்டு, எதற்காக நேரம் பார்த்துப் பார்த்துப் பதைக் கிறாள்? விஸா கேன்ஸல் ஆகி, ஊருக்கு மூட்டை கட்டு என்று சாணக்கியபுரி சாந்திபாத்திலுள்ள தூதரகத்திலிருந்து தகவல் வந்து விட்டதா?

இல்லை. பதினொன்றரைக்கு உபஹாரில் வேறொரு படம் தொடங்கவிருக்கிறது. அவர் களின் போலந்து நாட்டுப்படம். விட்டுவிட விருப்பமில்லை என்று ஜூலியா சொன்னாள்.

"உங்கள் நாட்டுப்படம்; நீங்கள் ஏற்கெனவே பார்த்திருப்பீர்களே?"

"எழுபத்தி ஒன்பது தடவை" என்றாள் ஜூலியா.

எனக்கு ஆச்சர்யமாக இருந்தது.

"அத்தனை நல்ல படமா?"

"என்னளவில்" என்று நிறுத்திக் கொண் டாள். ஒரு நிமிட இடைவெளியில் அவளே தொடர்ந்து, "என்னிடம் அந்தப் படத்தின் நல்ல வீடியோ பிரதி ஒன்று கூட இருக்கிறது" என்றாள்.

"அப்புறம் ஏன் இப்படித் துடிக்கிறீர்கள்?" என்றாள் ஜூலியா.

இது ஏதடா ரோதனை என்று நினைத்துக் கொண்டேன். நல்ல ஜப்பானியப் படம் பார்த்துக் கொண்டிருந்தவன், எதற்காக இவள் கூப்பிட்டதும் எழுந்து நாய்க்குட்டி போலப் பின்னால் வருகிறேன் என்று யோசித்துப் பார்த்தேன். 'எக்ஸிஸ்டென்ஷியல் ரீஸன்... அழகான ஒரு பெண் விரும்பிக் கூப்பிட, எழுந்து போவதற்கு என்ன யோசனை வேண்டிக்கிடக்கிறது' என்றது மனம். ஆனால், அத்தகைய சலனங்களுக்கெல்லாம் நான் அப்பாற்பட்டவன் என்று எனக்குள் நானே சொல்லிக் கொண்டேன். அது நிஜம்தானா என்று பின்னால் யோசித்துத் தெளியவும் முடிவு செய்து கொண்டேன்.

உபஹார் தியேட்டரை அடைந்து, இரண்டாம் தளத்தில் எங்கள் அடையாள அட்டைகளைக் காட்டி, உள்ளே போய் உட்காரவும் படம் தொடங்கவும் சரியாக இருந்தது.

கண்கள் இருட்டுக்குப் பழகியவுடன் ஜூலியா, சொன்ன சொல் தவறாமல்

● சிறைச்சாலைகளை மாமியார் வீடு என்று செல்லமாகச் சொல்லுவோம். மகாராஷ்டிராவில் உள்ள ஜெயில்களுக்கு இந்தப் பெயர் மிகப் பொருத்தம். இங்குள்ள அனைத்து சிறைகளிலும் மருமகள்களைக் கொன்ற மாமியார்கள் நூறு பேர்களுக்கு மேல் இருக்கிறார்கள்!

● இனிமேல் லண்டனுக்குப் போகிறவர்கள் நகரை சைக்கிளிலேயே சுற்றிப் பார்க்கலாம். விமான நிலையத்திலிருந்தே நகரம் முழுவதற்கும் சைக்கிள் பாதை தனியாகப் போடப்பட்டு, டூரிஸ்ட்களின் வசதிக்கு வாடகை சைக்கிள்களையும் அரசே தரப் போகிறது. வாகனப்புகையால் சுற்றுச்சூழல் கெடாமலிருக்க இப்படியொரு ஐடியா, அங்கே.



● த.நா-01-எ-10. என்ன இது? செந்தமிழ் விரும்பி, அமைச்சர் தமிழ்க்குடிமகனின் கார் நம்பர்! ஸாரி-சொகுசு உந்து எண்!

● பழைய சினிமா ஸ்டூடியோக்கள் அரிசி மற்றும் உர கொடோன்களாக மாறும் விஷயம் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஒரு மாறுதல். அடையாறு சத்யா ஸ்டூடியோவில் தற்சமயம் ஒரு கல்லூரி இயங்கி வருகிறது. 'எம்.ஜி.ஆர்-ஜானகி மகளிர் கல்லூரி' என்பது பெயர்.

● குறித்த காலத்தில் டெலிபோன் பில் கட்டாவிட்டால் தொலைபேசி இலாகா நம்மை உண்டு, இல்லை என்று ஆக்கி விடுகிறது. ஆனால் வி.ஐ.பி.க்கள் விஷயத்தில்? மூச்! மும்பையில் 'மகாநகர் டெலிபோன் நிகாம்' நிறுவனத்துக்கு அமைச்சர்கள், எம்.பி.க்களிடமிருந்து மொத்தமாக வர வேண்டிய பாக்கித்தொகை எட்டரை

ஃபிளாஸ்கிலிருந்து ஒரு கப் கடுங்காப்பி ஊற்றி, என்னிடம் தந்தாள். ஒரே மூச்சில் குடித்து விட்டு, நன்றி சொன்னேன். அவள் அழகாகப் புன்சிரித்தாள். சற்றே முகத்தைப் பக்க வாட்டில் சாய்த்து, இடதுகையால் தலையைக் கோதியபடி, "லெட்'ஸ் வாட்ச் தி மூவி" என்றாள்.

இத்தனை சின்ன வயதில் எத்தனை தீவிர சினிமா ரசனை!

அது உண்மைதான். ஆனால் இந்தப் படத்தைப் பொறுத்தவரை தன் அதீத ஈடுபாட்டிற்குப் பிறிதொரு காரணம் உள்ளதாக ஜூலியா சொன்னாள்.

"தெரியுமா? பிரடரிக் குவாஸ் நீவ்ஸ்கி. இந்தப் படத்தின் இயக்குநர், என் காதலர்."

நான், ஜூலியாவுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்களைச் சொன்னேன். பின், வெளிச்சம் அதிகம் இல்லாத சினிமா வில் விழிகளைப் பொருத்திக் கொண்டேன்.

வாழைப்பழம், கொய்யா, கேரட், தக்காளி எல்லாவற் றையும் சேர்த்து, மிக்ஸியில் ஒரு சுழற்று சுழற்றி, வாயில் ஊற்றிக் கொண்டு பேசுவது போல ஒரே குழகுழப்பாக இருந்தது போலிஷ் மொழி. பனிச்சறுக்கு மாதிரி வாக் கியங்கள், ஆங்கில சப்-டைட்டிலில் வேகவேகமாக ஓடிக் கொண்டிருக்க, ஒரு மாதிரியாக நான் புரிந்து கொண்ட அளவில், கதை என்னை மிகவும் அதிர்ச்சியுறச் செய்தது.

தெரியாத்தனமாக ஒரு சாடிஸ்டைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டு விடுகிற ஒரு பெண்ணுக்கு எத்தகைய அனுபவங்கள் வாய்க்கும்? அவன் கொடூரத்தின் வேரைத் தேடிக்கொண்டு போனால், அவள் மீதுள்ள எல்லையில்லாக் காதலில் போய் முடிகிறது.

உறங்கும் மனைவியின் மேல் ஊர்ந்து போகிற ஒரு ஈ கூட உயிரோடு இருக்கக் கூடாது என்று நினைக்கிற வெறி. ஒரு விருந்தில் அவள் கையைப் பற்றிக் குலுக்குகிற நண் பனின் விரல்களை முறிக்கிற ஆக்ரோஷம்.

என் இயல்பு நிலை பறிபோய் நெஞ்சு வரண்டு, ஜூலி யாவிடம் இன்னொரு காப்பி கேட்கலாமா என்று யோசித்துக் கொண்டிருந்தபோது, திரையில் ஒரு டீவி நிருபர் எதற்கோ அவளை பேட்டிகாண வந்தான்.

கேமராவில் வைத்தகண் வாங்காமல் அவளைப் பார்த்துக் கொண்டே இயக்கிக் கொண்டிருந்தவன், அவளது ஓர் அசாத்தியப் புன்னகைக்கு உடனடி ரியாக்ஷனாக 'ப்யூட்டி ஃபுல்' என்று சொல்லிவிட, அவனைப் போட்டுப் புரட்டி எடுத்துவிட்டு, கையோடு மன்னிப்பும் கேட்டு விடுகிறவனின் குணம் எனக்கு வெகு குழப்பம் தந்தது.

"சே, பயங்கரம்!" என்றேன் நான்.

ஜூலியா என்னைத் திரும்பிப் பார்த்தாள். இதழ்களில் ஒரு வரட்டுப் புன்னகை தெரிய, "கஷ்டமாக இருக்கிறதா?" என்றாள்.

இல்லையென்று எப்படிச் சொல்வேன்? "ரியலிஸத்தின் பெயரில் இனி திரையில் காட்ட அருவருப்பான விஷயங் கள் ஏதும் மிச்சமில்லாமல் பண்ணிவிட்டார் உங்கள் பிரடரிக்" என்றேன்.

"மிச்சமில்லையா? இன்னும் அரைமணி நேரப் படம் பாக்கி இருக்கிறதே? முழுக்கப் பார்த்துவிட்டுச் சொல் லுங்கள்."

"மன்னிக்க வேண்டும் ஜூலியா. எனக்குத் தாங்க வில்லை. நான் வெளியே உங்களுக்காகக் காத்திருப்பேன். நீங்கள் நிதானமாக முழுப்படமும் பார்த்துவிட்டு வந்து மிச்சக் கதையைச் சொல்லுங்கள்" என்று எழுந்து வெளியே

வந்து விட்டேன்.

படம் முடிந்து, ஜூலியா வந்தாள். தியேட்டர் வாசலில் ஒரு தாபாவில் நின்று கொண்டு, ரொட்டி கடித்துக் கொண்டிருந்த என்னைக் கண்டுபிடித்து, அருகே வந்து, "போகலாமா?" என்றாள்.

"எங்கே போவது? இன்றைக்கு இன்னொரு படம் பார்க்கிற மனநிலை எனக்கில்லை. அறைக்குப் போய், சுலோகம் சொல்லிவிட்டு, இழுத்து போர்த்திக்கொண்டு படுத்து விட உத்தேசம்."

"நல்லது. நான் உங்கள் ஹோட்டல் அறை வரைக்கும் உடன் வரலாமல்லவா? மிச்சக் கதையைக் கேட்கிற விருப்பம் உண்டா?"

கேட்காமல் விடமாட்டாள் போலிருக்கிறது. விழாவிற்கு வந்திருந்த நூற்றுக்கணக்கான இந்தியப் பத்திரிகையாளர்களுள் என்னைத் தவிர வேறு யாரும் ஏன் இவளுக்குப் பேச்சுத் துணைக்குக் கிடைக்கவில்லை? என் முகத்தில் அப்படியென்ன எழுதி ஒட்டியிருக்கிறது?

"தெரியுமா! உங்கள் மென்மையான சுபாவம்தான் உங்களின்பால் என்னைக் கட்டி இழுக்கிறது. அந்த ஜப்பானியப் படத்தில், காட்சிகளுக்கேற்ப உங்கள் முகபாவம் மாறிக் கொண்டே வந்ததை நான் கவனமாக கவனித்துக் கொண்டே ரசித்தேன்!"

சுத்தம். போலந்து வாழ் பெருங்குடி மக்களுக்கு ஒரு மதராஸியின் முகபாவ மாற்றம் பற்றி ஒரு வியாசம் தனியாக எழுதுவாளாயிருக்கும் என்று நினைத்துக் கொண்டேன்.

"போகட்டும். அந்த ராஸ்கலிடம் மாட்டிக் கொண்ட பெண், என்னதான் ஆகிறாள் இறுதியில்? பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டியதாயிருந்திருக்குமே? சே. காதலிக்க நல்ல ஆளைத் தேர்ந்தெடுத்தாளே?"

ஜூலியா சிரித்தாள்.

"மிகவும் சிரமப்பட்டு அவனைச் சம்மதிக்க வைத்து; ஒரு சைக்கோதெரபி ட்ரீட்மென்ட்டுக்குக் கூட்டிப் போகிறாள். அங்கே அவன் டாக்டரைத் தாக்கிவிட, போலீஸ் கேஸ் ஆகி, அவன் சிறைக்குப் போய் விடுகிறான்."

"பிறகு?"

"இவள் தினமும் அவனைப் பார்க்க ஜெயிலுக்குப் போக, பிற கைதிகள் அவளை – அவள் அழகைப் பார்த்து வழிய, அங்கும் அவன் கைகலப்பில் இறங்கி விடுகிறான்."

"போச்சுடா!"

"ஒருவழியாக அவன் ரிலீஸாகி வந்ததும் அவள் வேறு கோணத்தில் யோசிக்கத் தொடங்குகிறாள். அவன் குணத்தை மாற்ற முடியாது; அவன் அத்தனை முரட்டுத்தனங்கள் காட்டக் காரணமாயிருப்பது அவளுடைய அழகு தானே? அதைப் பிறர் ரசிப்பதைத்தானே அவனால் பொறுத்துக் கொள்ள முடியாமல் போகிறது...?"

"அதனால்.?"

"அவள் தன் முகத்தில் தானே ஆஸிட் ஊற்றிக் கொண்டு, அவனுக்கு அதிர்ச்சி வைத்தியம் பண்ணி, சரி பண்ணி விடுகிறாள்."


"கடவுளே! இதுதான் கதையா? எழுபத்தொன்பது தரம் பார்க்கும்படி என்ன இருக்கிறது இதில்? எங்கள் ஊரில் இப்படியொரு படம் எடுத்தால், கல்லால் அடிப்பார்கள்."

ஜூலியா பேசவில்லை. ஆட்டோ, கோவிந்த்புரிக்கு –

கோடி ரூபாய்! ''எங்களால் வசூலிக்க முடியவில்லை'' என்று தொலைபேசித் துறையினர் கைவிரித்து விட்டார்களாம்! பாக்கி வைத்துள்ளோர் பட்டியலில் சில மிக முக்கியஸ்தர்கள் : வெங்கட கிருஷ்ணா ரெட்டி (11 லட்சம்), சிந்தாமோகன் (9.5 லட்சம்), ராம்சுந்தர் தாஸ் (11 லட்சம்) அர்ஜுன்சிங் (7 லட்சம்) சுனில் தத் (2 லட்சம்) பட்டியலில் உள்ள முன்னாள் எம்.பி.க்களில் சிலர் இறந்தே விட்டார்கள்!



● 'இப்போதைக்குப் பேசாமல் இருங்கள்; பிறகு பார்த்துக் கொள்ளலாம்' என்று தம் வக்கீல்கள் சொன்னதால் செய்ய நினைத்த காரியத்தைத் தள்ளிப் போட்டிருக்கிறார் ஹர்ஷத் மேத்தா.
என்ன செய்ய நினைத்தார்? பெரிசாக ஒன்றுமில்லை. ஒரு வாழ்க்கை வரலாறு!



● இங்கிலாந்தில் வசிக்கும் இந்தியரான ஸ்வராஜ் பால் (வயது 65) இனி ஸ்வராஜ் பால் பிரபு (Lord) என்று அழைக்கப்படுவார். காரணம், அவ்ரை இங்கிலாந்து அரசி இரண்டாம் எலிசபெத், பாராளுமன்றத்தின் 'பிரபுக்கள்' அவை உறுப்பினராய் நியமித்திருக்கிறார். இங்கிலாந்தின் பெரும் பணக்காரர்கள் பட்டியலில், ஸ்வராஜ் பாலுக்குப் பின்னால்தான் எலிசபெத் ராணியே இருக்கிறார்!

தொகுப்பு : மௌஷ்மி

"ஆனாலும் இந்த டீ.வி.க்காரர்களுக்கு இவ்வளவு கிண்டல் கூடாது."

"ஏன்? என்ன செய்தாங்க?"

"ஊழல் வழக்குகள் பற்றிய செய்திகளை அறிவிக்க தற்பொழுதுள்ள செய்தி அறிவிப்பு நேரம் போதவில்லையாம். அதனால், "ஊழல் சிறப்புச் செய்திகள்" அறிவிக்கப் போகிறார்களாம்."

- பா. முத்துலிங்கம்



என் ஹோட்டல் அறையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. பனிக் காற்றில் நான் ஏகதேசம் ஐஸ்கட்டி மனிதனாகவே ஆகியிருக்க, குளிரை மறக்கும் பொருட்டு, அவளுடன் மேலும் பேச்சுக் கொடுத்தேன்.

"ஜூலியா, ஏன் அமைதியாகி விட்டீர்கள்?"

"ஒன்றுமில்லை. உங்களுக்குப் படத்தின் அடிநாதம் புரிகிறதா?"

"நாதமாவது, வேதமாவது? கிறுக்கனைக் காதலித்த பாவத்துக்கு, அவள் ஆஸிட் ஊற்றிக் கொண்டதில் தப்பே இல்லை!"

"நீங்கள் கிண்டலாகப் பேசுகிறீர்கள். மனசில் எத்தனை ரணம் இருந்தால் அவள் அப்படியொரு முடிவுக்கு வந்திருப்பாள்? கூடவே, அவளுக்கு அவன் மேல் எத்தனை காதலும் இருந்திருக்க வேண்டும்?"

"காதல் நாசமாய்ப் போக. ஜூலியா, நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்? அவளுக்காக அனுதாபப்படச் சொல்கிறீர்களா? ஸாரி. என்னால் முடியாது."

"அவள் வேறென்ன செய்திருக்க முடியும்?"

"சிம்பிள். டைவர்ஸ் வாங்கிக் கொண்டு சந்தோஷமாகப் போயிருக்கலாம். முடிந்தால் அவன் மேல் ஒரு கேஸ் கூடப் போடலாம். இந்த அமரக் காதல், தெய்வீகக் காதல் எல்லாம் எங்கள் ஊர் சினிமாவில் மட்டும்தான் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். இது விஷயத்தில் உலகம் முழுக்க ஒரே ரகம்தான் போலிருக்கிறது."

ஹோட்டல் வாசலில் ஆட்டோவை விட்டு இறங்கி, அறைக்குப் போய் ஒரு காப்பி சாப்பிட்டு ஆனதும் ஜூலியா சொன்னாள் : "தெரியுமா? இது நிஜமாக நடந்த கதை."

"அப்படியா? அந்தப் பெண்ணுக்கு என் ஆழ்ந்த அனுதாபங்கள்."

"அவசரப்படாதீர்கள். கதை என்னவோ நடந்த விஷயம்தான். கிளைமாக்ஸைத்தான் மாற்றி விட்டார்கள்."

"நல்லது. நிஜத்தில் நடந்த கிளைமாக்ஸ் தான் என்ன?"

"அந்தப் பெண்ணின் தங்கைக்கு, சர்ச்சில் திருமணம் நடந்து கொண்டிருந்தது. மான் குட்டி மாதிரி அவள் சந்தோஷத்தில் துள்ளிக் கொண்டிருந்தாள். திருமணச் சடங்குகள் முடிந்து, தங்கையும் அவள் கணவனும் இவளுக்குக் கைகுலுக்க வர, அவள் எல்லையற்ற மகிழ்ச்சியின் வெளிப்பாடாக அந்தப் பையனின் நெற்றியில் ஒரு முத்தம் வைத்தாள்..."

"சரிதான். நமது ஹீரோ பொங்கி எழுந்திருப்பாரே?"

"ஆமாம். அவளைத் தரதரவென்று வீட்டுக்கு இழுத்துப் போய் ஓர் அறையில் கட்டிவைத்து, ஒரு பிளேடால் உடம்பு முழுவதும்..."

நான் அதிர்ந்து விட்டேன். ஒருமாதிரி சமாளித்துக் கொண்டு, "அப்புறம்?"

"அவனே அவளை ஹாஸ்பிடலுக்கும் கூட்டிப் போய் வந்தான். அன்றிரவு அவள் ஒரு முடிவுக்கு வந்தாள்."

"அதென்ன?"

"ஒரு கிளாஸ் ஒயின். இரண்டு தூக்க மாத்திரைகள். ஒரு பிளாஸ்டிக் கவர்."

"என்னது?"

"ஒயினில் தூக்க மாத்திரைகளைப் போட்டு அவனுக்குக் கொடுத்து விட்டு, அவன் உறங்கியதும் ஒரு பிளாஸ்டிக் கவரால் முகத்தை மூடி, இறுகக் கட்டி விட்டாள். மூச்சு விட முடியாமல் அவன்..."

"ஐயோ!"

ஜூலியா எழுந்து போய் ஒரு குவளை தண்ணீர் குடித்து விட்டு வந்து என் எதிரே அமர்ந்தாள். அதே மாறாத புன்னகை.

"என்ன, பயந்து விட்டீர்களா?"

என்னால், இல்லை என்று சொல்ல முடியவில்லை.

"இந்தச் செய்தி உங்கள் நாட்டுப் பத்திரிகையில் வந்ததா?"

"இல்லை. இது ஒரு செய்தி ஆகவே இல்லை. தூக்கத்தில் இறந்தான் என்று அவன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து விட்டு, நல்லடக்கமு செய்து விட்டார்கள்."


"எனில், அந்தப் பெண்ணை நீங்கள் அறிவீர்களா?"

"மிகவும்" என்றவள், சட்டென்று தன் ஓவர் கோட்டை விலக்கி, சட்டையைத் தளர்த்தி, தோளைக் காண்பித்தாள்.

வரிவரியாகக் கீறல் தழும்புகள்.

பணத்திற்கு பாசமும், நேசமும் இல்லை. ஆனால் அதுவே உங்களை கவனிக்கச் செய்ய எங்களால் முடியும்.

நீங்கள் கடுமையாக உழைத்து சம்பாதித்த ஒவ்வொரு காசையும் உங்களுக்காக, உங்களது வளமான எதிர் காலத்திற்காக உழைக்க வைப்பதையே தனது குறிக்கோளாகக் கொண்டது 'ஷாஸன் ஃபைனான்ஸ்'. 20 வருட அனுபவமும், ரூ.100 கோடிக்கு மேல் வியாபாரமும் உடைய 'ஷாஸன் குரூப்' பின் ஒரு அங்கமான 'ஷாஸன் ஃபைனான்ஸ்'ஸில் முதலீடு செய்வதன் மூலம் உங்கள் பணம் நம்பகமான, பாதுகாப்பான கைகளைச் சென்றடைகிறது. ஏனெனில் அனுபவச் செறிவும், இளமையின் துறுதுறுப்பும் உடைய எங்களால் பணத்தைப் பெருக்குவதற்கான வாய்ப்புகளையும், பாதுகாப்பையும் அளிக்க முடியும். இதனை உறுதி செய்யும் வகையில், அசலைத் திருப்பிக் கொடுப்பதிலும், உரிய நேரத்தில் வட்டி வழங்குவதிலும் போதிய பாதுகாப்பிற்கு CARE நிறுவனத்தாரின் மதிப்பீடு BBB பெற்றுள்ளது 'ஷாஸன் ஃபைனான்ஸ்'. சேவையிலாகட்டும், உத்திரவாதத்தை உறுதி செய்வதிலாகட்டும் தனது வாடிக்கையாளர்கள் எப்போதும் சிறந்தவற்றையே பெறுதல் வேண்டும் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டது 'ஷாஸன் ஃபைனான்ஸ்'.



Member Shasun Group

ஷாஸன் ஃபைனான்ஸ் லிமிடெட்

நிர்வாக அலுவலகம் : 21, கோபால கிருஷ்ணா ரோடு, தி.நகர், சென்னை - 600 017.
போன் : 8281138, 8250503

டெபாசிட் மையம் : 2, துரைசாமி ரோடு, தி.நகர், சென்னை - 600 017. போன் : 4347128, 4348930, 4348931. **கோயம்புத்தூர்** : சேரன் டவர்ஸ், 80/27, முதல் மாடி, அரசு கலைக் கல்லூரி ரோடு, கோயம்புத்தூர் - 641 018. போன் : 201256. **பாண்டிச்சேரி** : 2வது மாடி, 80, காமராஜ் சாலை, பாண்டிச்சேரி - 605 011 போன்: 46347 **திருச்சி** : 5வது மாடி, கணேஷ் காம்ப்ளெக்ஸ், நெ.6-A, லாசன்ஸ் ரோடு, கண்ட்டோன்மெண்ட், திருச்சி - 620 001. போன்: 465168. **மதுரை** : ஜுலைஹா டவர், 67 மேற்கு டவர் தெரு, மதுரை - 625 001. **சேலம்** : 5/271B, ஜங்ஷன் மெயின் ரோடு, முதல் மாடி, ஐந்து ரோடு, சேலம் - 636 004. போன்: 443012 **கொச்சி** : பிஸினஸ் கம்யூனிகேஷன் சென்டர், சிராமல் சேம்பர்ஸ், குரிஷிபள்ளி ரோடு, ரவிபுரம், கொச்சி -682 015. போன் : 365492, 369627. **பெங்களூர்** : பிரனெவ் காம்ப்ளெக்ஸ், நெ.3, 5வது கிராஸ், மல்லேஸ்வரம், பெங்களூர் -560 003.

வாடிக்கையாளரின் திருப்தியே எமது முயற்சியின் குறிக்கோள்

சட்டபூர்வமான ஃபிக்ஸட் டெபாசிட் விளம்பரம் 8.7.96 தேதியிட்ட "நியூஸ் டுடே" மற்றும் "மாலைச் சுடர்" நாளிதழ்களில் வெளியிடப்பட்டுள்ளது.

"ஏண்டா சொல்லலை ஸ்ரீராமா...? முதல்லயே தெரிஞ்சிருந்தா இப்படி ஆகாம தடுத்திருக்கலாமோல்லியோ...?"

ஸ்ரீராமிடம் பதில் இல்லை. சரஸ்வதி அவனைச் சாப்பிட விடாமல் துளைத்தெடுத்துக் கொண்டிருந்தாள். சுகன்யாவுக்கு அவனைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

"அவரைக் கோவிச்சுக்காதீங்கம்மா.... நான்தான் இப்போதைக்குச் சொல்ல வேண்டாம்னுட்டேன்... ஏதோவொரு வேகத்துல, வருத்தத்துல சொல்லிட்டேன்.... தப்புதான். ஆனா விஷயம் முன்கூட்டியே தெரிஞ்சிருந்தா மட்டும் இந்த இழப்பைத் தடுத்திருக்க முடியுமா என்ன.... இப்படி நடக்கணும்னு இருந்தா நடந்துதானே தீரும்..."

ஸ்ரீராம் கையை உதறிவிட்டு எழுந்தான்.

"முழுக்க சாப்பிடாம.... ஸ்ரீராமா! வா உட்காரு...."

"வேண்டாம்மா. கொஞ்ச நேரம் பொறுத்து வேணா சாப்பிடறேன்..."

படுக்கையறைக்குள் போய் கதவைச் சாத்திக் கொண்டான். அவனைத் தொடர்ந்து போக வேண்டும் என்று எழுந்த அவசர உணர்வை அடக்கினாள் சுகன்யா. மாமியாரைச் சமாதானம் செய்தாள். "விடுங்கம்மா. இரண்டு நாள்ல, தானே சரியாயிடுவார்."

சரஸ்வதி சாப்பாட்டு மேஜை மேலிருந்த டிபன் காரியர் பாத்திரங்களை அடுக்கி மூடினாள். சுமங்கலி பிரார்த்தனைக்கென்று செய்த வகை வகையான கறிகளும் பட்சணங்களும் அப்படியப்படியே இருந்தன.

"ஏதோ பெரியத்தை சொன்னதைத் தட்ட முடியாமதான் இன்னிக்குப் பூஜை பண்ணி முடிச்சேன்.... எனக்கு மனசே இதுல இல்லை, சுகன்யா.... ஒத்தி வைக்கலாம்னாலும் நாளில்லை...."

சுகன்யா மௌனமாய் இருந்தாள். இந்தப் பூஜையின் போது 'ஆஸ்பத்திரி தீட்டு'டன் போய் இறங்க பயந்துதான் மாமனார் அவளை ஜவஹர்புரத்துக்குக் கூட்டி வந்திருந்தார். வீட்டுக்குள் நுழைந்த அரைமணி நேரத்துக்குள் ஸ்ரீராம் டாக்ஸியில் வந்து இறங்கினான்.

"சுகி....!" என்று ஆதுரத்துடன் அழைத்தபடி வந்தவன் அப்பாவைப் பார்த்ததும் தயங்கி நின்றான். அவர் குறிப் பறிந்து வெளியேறுவதற்குள் சரஸ்வதியும் டிபன் காரியருடன் வந்து சேர்ந்தாள். உடன் குமார்.

முட்டி மோதிய உணர்வுகளை மறைத்துக் கொண்டாள் சுகன்யா. ஸ்ரீராம் அவள் கண்களை நேராகச் சந்திப்பதைத் தவிர்ப்பது புரிந்தது.

"நீ போய் கொஞ்ச நேரம் படுத்துக்கோ சுகன்யா. ஸ்ரீராமுக்குச் சாப்பாட்டை எடுத்து வைச்சுட்டு உனக்கு கொண்டு வந்து தரேன்..."

"இல்லைம்மா! இங்கேயே இருக்கேன்" என்று ஸ்ரீராமுக்கு எதிர்ப்புறம் உட்கார்ந்து, மாமியார் தனியாகத் தயாரித்து வந்திருந்த ரசம் சாதத்தைச் சாப்பிட ஆரம்பித்தாள். அவன் எழுந்து போன பிறகும் தொடர்ந்து சாப்பிட்டு முடித்தாள். பசி அடங்கியதுமே உலகத்தை எதிர்கொண்டு ஜெயிக்கும் பழைய உற்சாகத்தில் பாதியளவு திரும்பி விட்டது போலிருந்தது.

17

"சாப்பாடு ரொம்ப ருசியாயிருந்ததும்மா..."

"அங்க வந்துடு சுகன்யா... தினமும் கொஞ்சம் கவனமா சமைச்சுத் தரேன்... ஒரு வாரத்துல பழைய சுகன்யாவா ஆயிடுவே பாரு... அப்படியே வசந்தி கல்யாணம் முடியற வரைக்கும் இருந்துட்டு அப்புறமா இங்க வர்றதைப் பத்தி யோசிக்கலாம்..."

'மீண்டும் கூட்டுக் குடும்பமாக வந்து இருக்க விடுக்கப்படும் அழைப்பா இது...?' சுகி சற்று சந்தேகத்துடன் மாமியாரை ஏறிட்டாள். அவர் பார்வையிலிருந்து விசேஷமாக எதையும் உணர முடியவில்லை.

"அதான் உங்க பிள்ளை ஊரிலிருந்து வந்துட்டாரே. அதுனால இனிமே இங்க இருக்கறது பிரச்னை எதுவும்



...ல்லை... அவசியமானா பாாத்துக்கலாம்..."

"அவசியம்தான் சுகன்யா. இன்னைக்கில்லைன்னாலும் நாளைக்காவது நீயும் ஸ்ரீராமும் அங்க வந்துருங்கோ. பகல் பொழுது முழுக்க நீ இங்க தனியா இருந்தியானா அனாவசியமா மனசு உளைச்சலா இருக்கும். அங்க கல்யாண வீடு.. உட்கார்ந்த வண்ணத்துல ஏதாவது காரியம் செஞ்சு மனசைத் தேத்திக்கலாம். ஸ்ரீராமும் அங்கேயே இருக்கட்டும்."

"கேட்டுப் பார்க்கறேன் அம்மா, அவர்கிட்டே."

இரு கைகளையும் தலைக்குப் பின்னால் கட்டிக் கொண்டு தலையணையில் சாய்ந்திருந்தான். கண்கள் மூடிக் கிடந்தாலும் நெற்றிச் சுருக்கம் நிம்மதியின்மையை அறிவித்தது.

"ராம்" – மெதுவாக அழைத்தபடி அவனருகில் அவள் உட்கார்ந்தபோது கண்களைத் திறக்காமலே கைகளைப் பிடித்துக் கொண்டான்.

"ஐம்' ஸோ சாரி.. ஸோ சாரி சுகி..." சொல்வதற்குள் கண்ணீர் வந்துவிட்டது அவனுக்கு.

"ச்சசூ! நோ... வேண்டாம் ஸ்ரீராம். எதுக்கு இப்படி எமோஷனல் ஆகறே...?"

"உன்னை தனியா விட்டுட்டு நான் போயிருக்கவே கூடாது..."

"அப்படியெல்லாம் நினைக்காதே... உலகத்துல எத்தனை பெண்கள் தனியாவே சுமந்து, பிரசவிச்சு, குழந்தை வளர்த்து... எல்லாத்தையும் பண்ணலையா...?"

"அப்படி ஆகியிருந்தாதான் பரவாயில்லையே? விபரீதமான்னா விஷயம் நடந்திருக்கு..."

"நோ ஸ்ரீராம்! டாக்டர் ஷியாமளா சொன்னாங்க, பெரும்பாலும் இந்த மாதிரி மிஸ்காரேஜ் ஆகறது நன்மைக்குத்தானாம். இதனால நம்ம எதிர்கால

ஆர்னிகா நாசர் **?**

வாய்ப்புகள்லாம் குறைஞ்சுட்டதா நினைக்கவே வேண்டாம்னு சொல்லியிருக்காங்க. ஆனா, இன்னும் இரண்டு மாசம் எச்சரிக்கையா இருக்கணும். திரும்பவும் உண்டாயிடக் கூடாது."

"இரண்டு வருஷம் வேணாலும் நான் காத்திருக்கேன் சுகி. நீ நல்லபடியா ஆரோக்கியமாயிருக்கணும்."

"பயப்படாதே ஸ்ரீராம். எனக்கு ஒண்ணும் இல்லை. ஒரு வாரத்துல பழையபடி பம்பரமா சுத்திக்கிட்டிருப்பேன் பாரேன்."

அவன் எழுந்து உட்கார்ந்து விட்டான்.

"சரி, இப்போ நீ படுத்துக்கோ கொஞ்ச நேரம்..." அவளைத் தலையணையில் சாய வைத்து. நெற்றியில் வருடிய கைகளைப் பிடித்து நெஞ்சில் வைத்துக் கொண்டாள். மனம் நிச்சலனமாகி பாதுகாப்பு உணர்வு போர்வையாக வந்து கவிந்து கொண்டது.

"திருஷ்டி பட்டுடுமோன்னு பயமாயிருக்கு சச்சு..." கூடத்தில் உட்கார்ந்து நீள நீள பட்டியல்களைச் சரிபார்த்துக் கொண்டிருந்த மகனையும் மருமகளையும் பார்த்தபடி சொன்னார் ராமநாதன்.

"ஒண்ணும் படாது! உங்க கண்ணேவா பட்டுடும்?" சரஸ்வதி சிரித்தபடி சொன்னாள்.

அவள் இப்படிச் சிரித்துப் பார்த்தே ரொம்ப காலமாகி விட்டதாகத் தோன்றியது ராமநாதனுக்கு.

"அப்பா! இங்க வாங்கோ..." – ஸ்ரீராம் கூப்பிட்டதும் போய் நின்றார்.

"இங்க பாருங்க... இந்த ஐம்பது பேருக்கு இரண்டு முறை பத்திரிகை அனுப்பிட்டிருக்கீங்க. இரண்டு லிஸ்டுல இந்த ஐம்பது பேரு அச்சா அப்படியேயிருக்கு.... அதனால சமையல் காண்ட்ராக்டர்கிட்டே ஐம்பது சாப்பாடு குறைக்கச் சொல்லணும்..." சுகன்யா கூட்டிக் காட்டியபோது ஸ்ரீராம் மறுத்தான்.

"இப்ப போய் குறைச்சி, கூட்டி குழப்பமெல்லாம் வேண்டாம். ஐம்பது எக்ஸ்ட்ரா சாப்பாடு இருந்தா இருந்துட்டுப் போகட்டும். குறைஞ்சு போகறதை விட கூடுதலா இருந்தா நல்லது."

"இல்லை ஸ்ரீ..." என்று ஆரம்பித்தவள், அவன் பெயரை முழுக்க உச்சரிக்காமல் விழுங்கிக் கொண்டு தொடர்ந்தபோது மாமனார் அதைக் கவனித்துச் சிரித்துக் கொண்டார்.

"ஏற்கெனவே ஐம்பது இலை அதிகமாகத்தான் கணக்குப் போட்டிருக்கோம். அதோட இந்த ஐம்பதும் சேர்ந்தா நூறுன்னா எக்ஸ்ட்ரா வாகும்... அது ரொம்ப அதிகம்..." சுகன்யா ஆதரவுக்காக மாமனார் பக்கம் திரும்பினாள்.

அவர் காகிதப் பட்டியல்களை வாங்கிப் பார்த்துவிட்டு, "இது குமார் பண்ணின வேலை.. குழப்பறதுல மன்னன் அவன். அவனையே போய் சமையல்காரனைப் பார்த்து ஐம்பது இலை குறைக்கச் சொல்றேன்."

"பாவம்பா! திட்டாம சொல்லுங்க. இத்தனை நாளா அவன்தானே எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக்கிட்டுப் பண்ணிட்டிருக்கான்? இப்போதான் இரண்டு நாளாதானே நாங்க வந்து சேர்ந்திருக்கோம்."

சுகன்யா சொல்லிக் கொண்டிருந்தபோது டெலிபோன் அடித்தது.

எடுத்துப் பேசிய ராமநாதன் "சொல்லுங்கோ மாப்பிள்ளை" என்றபோது குரலில் சூரிய ஒளியின் பிரகாசம்!

"ஓ இருக்காளே... கூப்பிடறேன். இதோ கூப்பிடறேன்."

அப்பாவுடைய குரலின் உற்சாகமே டெலிபோனின் மறுமுனையில் இருப்பது யார் என்பதை உணர்த்திவிட, உள் அறையில் இஸ்திரி போட்டுக் கொண்டிருந்த வசந்தி வேகமாக எழுந்து வந்தாள்.

"சுகன்யா! மாப்பிள்ளை உங்கிட்டே பேசணுமாம்! கூப்பிடறார்..."

காகிதக் கற்றைகளை ஸ்ரீராமிடம் கொடுத்துவிட்டு முகம் நிறையச் சிரிப்புடன் எழுந்து போனருகே வந்தாள் சுகன்யா.

உள்ளறை வாசல் கதவருகே நின்ற வசந்தியின் முகம் ஏமாற்றத்தில் உறைந்துபோனது.

"ஹலோ சேகர்! நான் நல்லாயிருக்கேன். ஆமாம். நாங்க இரண்டு நாளா இங்கதானிருக்கோம். ஹெல்த் இஸ் ஆல்ரைட். இப்ப ஒண்ணுமில்லை..."

"......................"

"நோ! நோ! கவலைப்படாதே! நீ எப்படி இருக்கே.... கவுன்ட் டவுன் ஆரம்பிச்சுடுத்து

தங்க நகை பரிசு!

இந்த இருபத்தாறு வாரத் தொடர், ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு கதாசிரியர் பெயரில் வெளியாகி வருகிறது. ஆனால் அவர்களுள் ஒரே ஒரு நபர்தான் இதை எழுதி வருகிறார். தொடரை எழுதியவர் யார் என்பதைக் கண்டுபிடிப்பது உங்கள் சாமர்த்தியம். கடைசி வாரம் வரை காத்திருந்து, அந்த இதழில் வெளியாகும் கூப்பனில் விடை எழுதி அனுப்புங்கள். சரியான விடைக்கு, தங்க நகை பரிசு! பலர் சரியாக எழுதினால் குலுக்கலில் ஒருவரே பரிசு பெறுவார். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

இல்லையா...?"

மறுமுனையில் அவன் என்ன சொன்னானோ, சுகன்யா பெரிதாக விழுந்து விழுந்து சிரித்தாள்.

உரையாடல் தொடரத் தொடர, பார்த்துக் கொண்டேயிருந்த வசந்தியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன.

"வா! வசந்தி... சேகர்தான் போன்ல..." ரிசீவரின் வாய்ப் பகுதியை மூடியபடி சுகன்யா வசந்தியை அழைக்க, இரண்டு நிமிடங்களாயிற்று.

"இதோ, வசந்தி உங்கிட்டே பேசணும்னு காத்திருக்கா."

ரிசீவரை சுகன்யாவின் கையிலிருந்து பிடுங்காத குறையாக வாங்கிக் கொண்டவள், "ஹலோ" என்றபோது அந்தக் குரலில் இருந்த கடுமையும் சலிப்பும் அனைவரையும் அதிரச் செய்தது.

ராமநாதன் வாசல் பக்கமாக நகர்ந்தார். "ஒரு கப் காப்பி கிடைக்குமா" என்றபடி ஸ்ரீராம் சமையலறை நோக்கிப் போனான்.

சற்று திகைத்து செய்வதறியாது நின்ற சுகன்யா, ஏதோ கருகும் வாடை வருவதை உணர்ந்து உள் அறை நோக்கி விரைந்தாள். அங்கே வசந்தியின் புத்தம் புது சந்தன கலர் டிஷ்யூ ரவிக்கை மேல் வைக்கப்பட்ட இஸ்திரி பெட்டி...

சட்டென்று பிளக் செருகியிருந்த ஸ்விட்சை அணைத்தாள் சுகன்யா. பெட்டியை நிமிர்த்தி எடுத்தபோது கறுப்பாகக் கையகலத்துக்கு ரவிக்கை தீய்ந்து ஓட்டையாகியிருந்தது! துணித் துகள்கள் இஸ்திரி பெட்டியில் ஒட்டிக் கொண்டிருந்தன.

வசந்தியுடைய ரிசப்ஷன் புடைவைக்கென்று அலைந்து தேடி பொருத்தம் பார்த்து வாங்கிய ரவிக்கை. திரும்பவும் வாங்கித் தைக்க... நல்ல வேளையாக இன்னும் அவகாசம் இருக்கிறது... சுகன்யா மனசுக்குள் கணக்குப் போடுவதற்குள் வசந்தி வந்து விட்டாள்.

"போச்சு! தீய்ச்சுட்டேளா என் பிளவுஸை... நாசம்! நாசம்!" – படபடவென்று தலையிலடித்துக் கொண்டவளைக் கண்டு ஒவ்வொருத்தராக வந்து சூழ்ந்து நின்றனர்.

"மறந்து போய் வைச்சுட்டு போன் பேச வந்துட்டே வசந்தி... போனால் போறது.. வேற வாங்கி தைக்கக் கொடுத்துடலாம்..." சுகன்யா சமாதானமாகச் சொன்னாள்.

"நான் எங்க பேசினேன் போன்ல? அதான் நீங்களே ஆசை தீர முதல்ல பேசி முடிச்சுட்டேங்களே. அப்புறம் நான் பேசிட்டு வர்றதுக்குள்ள இப்படித் தீஞ்சு போய் அமர்க்களம்..."

வசந்தி தேம்பித் தேம்பி அழுதது ரவிக்கை பாழாய்ப் போனதற்கு மட்டுமல்ல என்பது சுகன்யாவுக்குப் பளிச்சென்று புரிந்தது.

(தொடரும்)



"இவர் இதுக்கு முன்னால பிளைட்ல போயிருக்க மாட்டாரு போல இருக்குது"

"எப்படிச் சொல்றே?"

"பணிப்பெண் வந்து மிட்டாய் கொடுத்த உடன் உங்களுக்கு 'பர்த்டே'வான்னு கேட்கிறார்!"

– ராஜாதிருவேங்கடம்



"அந்த டைரக்டர் 'லோ-பட்ஜெட்'டில் படம் எடுப்பதில் கில்லாடி!"

"எப்படி?"

"சோகக் காட்சிகளில் கூட கிளிசரின் வாங்காமல், இரண்டு வெங்காயத்தைக் கொடுத்து உரிக்கச் சொல்லி விடுவார்."

– என். பாஸ்கர்



"இருந்தாலும் உங்க பையனுக்கு இந்த அளவுக்கு சினிமா மோகம் இருக்கக் கூடாது."

"அப்படியா....? என்னாச்சு?"

"பின்ன, 'ஆத்திசூடி' யார் எழுதினதுன்னு கேட்டா, 'அவ்வைசண்முகி'னுல்ல பதில் சொல்றான்."

- சொக்கம்பட்டி தேவதாசன்.

போட்டிக்கதை - 13

ராமலிங்கம் தவிப்பாய் இருந்தார். வேலையே ஓடவில்லை. கையில் வாட்சையும் டேபிளில் டெலிபோனையும் மாற்றி மாற்றி பார்த்துக்கொண்டேயிருந்தார். மனம் ராஜேஷையும் அவன் போயிருக்கும் இண்டர்வியூவையுமே நினைத்துக் கொண்டிருந்தது.

"ராஜேஷ்! இது நல்ல இடம், உனக்கேத்த வேலை. கிடைச்சா உனக்கு அதிர்ஷ்டம்! சர்டிபிகேட்ஸ், இண்டர்வியூ கார்ட் எல்லாம் எடுத்துக்கிட்டியா?"

"ம். ஆச்சுப்பா! படிப்பு, டைப்ரைட்டிங், ஸ்போர்ட்ஸ் எல்லா சான்றிதழும் இருக்கு!"

"ஜாதி சர்டிபிகேட் எடுத்து வைச்சிருக்கியா? முதல்ல அதை அங்கே காட்டு!" என்ற அப்பாவை அசுவாரஸ்யமாய் நிமிர்ந்து பார்த்த ராஜேஷ்,

"அதுவும் இருக்குப்பா" என்றதும் "வெரி குட்! இண்டர்வியூ நல்லா பண்ணு! ஆல் தி பெஸ்ட்" என்றார்.

தன் பையன் ராஜேஷிடம் நடத்திய உரையாடலை மனத்திற்குள் அசைபோட்டார்.

"என்ன ராமலிங்கம்! என்னப்பா காலைலேர்ந்து எதையோ எதிர்பார்த்துக்கிட்டு இருக்கிற மாதிரி பரபரப்பா இருக்கே?" என்ன விஷயம்?"

ராமலிங்கம் நிமிர்ந்தார். பக்கத்து செக்ஷன் சூபர்வைஸர் செல்வகணபதி. அவரைப் பார்த்துப் புன்னகைத்து, "உட்கார்யா! நம்ம பையன் ராஜேஷில்ல, அவன் ஒரு இண்டர்வியூக்கு போயிருக்கான். நல்ல வேலை. பையனோட தகுதிக்கு நிச்சயம் கிடைக்கணும். அதுவுமில்லாம அந்த போஸ்டுக்கு பிற்பட்ட பிரிவைச் சேர்ந்த ஒருத்தரைத்தான் தேர்ந்தெடுக்கறதுன்னு முடிவாயிருக்கு."

"சந்தோஷம். அப்ப உன் பையனுக்கு இந்த வேலை கிடைச்சுடும்... வாய்யா அந்த சந்தோஷத்தைக் கொண்டாடணும்" செல்வகணபதி கேண்டீனுக்கு இழுத்துப் போனார். ராமலிங்கம் கவலையாகவே இருந்தார்.

"என்னய்யா ராமலிங்கம்? நல்ல சேதி வரும். எதுக்காக ஒரேயடியா இப்படிக் கவலைப்புட்டுக்கிட்டு இருக்கே?"

"அதுக்கில்லப்பா! நானும் அடுத்த வருஷம் ரிடையர் ஆகப் போறேன்! பையன் அதுக்குள்ள செட்டில் ஆகணும்னு ஆசைப்படறது தப்பா?"

"ஆசைப்படறது தப்பில்ல! ஆனா அதுக்காக கவலைப்படாதேன்னுதான் சொல்றேன்! உன் பையனுக்கு திறமை இருக்கு! அரசாங்க சலுகையும் இருக்கு! ஏன் வீணா அலட்டிக்கிறே! இந்தா ஸ்வீட்டை சாப்பிடு" என்று பிளேட்டை அவர் பக்கம் நகர்த்தினார்.

செல்வகணபதி அப்படி உறுதியாகச் சொன்னதும், ராஜேஷுக்கு வேலை கிடைத்து விட்டது என்ற சேதியே வந்த மாதிரி உற்சாகமானார் ராமலிங்கம்.

இருவரும் சீட்டிற்குத் திரும்ப வந்தனர். நேரம் நொண்டியது. மதிய உணவு வேளை நெருங்கும் சமயத்தில் டெலிபோன் மணி சிணுங்கியது.

ஓடிச் சென்று ரிஸீவரை அள்ளினார் ராமலிங்கம்.

"ஹலோ யார் வேணும்?"

"சார், அங்க ராமலிங்கம் இருக்கிறாரா?" எதிர்முனை குரல் ஒலித்தது.

"நான்தான் ராமலிங்கம் பேசறேன். யாரு கோதண்டமா?" – பரபரப்பானார் ராமலிங்கம்.

"ஆமா ராமு! இண்டர்வியூ இப்பத்தான் முடிஞ்சுது. பதினாலு பேர் வந்தாங்க!"

"அது கிடக்கட்டும் கோதண்டம்! முடிவு என்னாச்சு! அதச் சொல்லு முதல்ல" டென்ஷன் ஆனார்.

"அது வந்து..." இழுத்தார் கோதண்டம்.

"இதுல என்னய்யா சஸ்பென்ஸ்? – நம்ம பையன் கேஸ் என்னாச்சு?"

"அதுதாங்க பிரச்னை ஆயிடுச்சு!

ஒரு விடியலின் வெளிச்சம்

இண்டர்வியூ முடிஞ்ச உடனே நான் உள்ளே போனேன். நம்ம பையன் கேள்விக்கெல்லாம் சரியா பதில் சொல்லித்தான் இருக்கான். ஆனா...”

“இழுக்காதேய்யா... விஷயத்தை போட்டு உடை.”

“வேற ஒரு பையன் செலக்ட் ஆயிட்டான். பேரு ரகு. விசாரிச்சப்போ, நம்ம ராஜேஷ் சாதி சர்டிபிகேட்டை காட்டவேயில்லைன்னு தெரியுது. இல்லாட்டா ராஜேஷுக்குத்தான் கிடைச்சிருக்கும்.”

ராமலிங்கம் திடுக்கிட்டார். அவர் முகம் கலவரமானது. எதுவும் பேசவில்லை.


“என்ன ராமு? லைன்லே இருக்கியா?”

“ம்... ம்...” என்றார் ராமலிங்கம் சுரத்தில்லாமல்.

“சரி விடு. இந்த இடம் இல்லாட்டா வேற ஒண்ணு” என்றார் கோதண்டம்.

“இல்ல கோதண்டம்! வேற ஒருத்தன் அந்த வேலையில் சேர்ந்ததில் எனக்கு வருத்தம் இல்லை! ஆனா இவன் ஏன் இப்படி பண்ணணும்? சரி... நான் சாயங்காலம் உன்னை வீட்டில் வந்து பார்க்கிறேன்” என்று சொல்லி ரிசீவரை சாத்தினார்.

மனசு எதிலும் லயிக்கவில்லை. மேனேஜரிடம் அரை நாள் விடுப்பு கொடுத்துவிட்டு வீடு திரும்பினார்.



“ராஜேஷ்! ராஜேஷ்!” வாசலில் செருப்பைக் கழற்றும் முன்பே குரல் கொடுத்தார்.

“வாங்க! என்ன ஆபீஸிலிருந்து இப்பவே வந்திட்டீங்க? உடம்புக்கு ஏதும் முடியல்லையா?” பதட்டமாய்க் கேட்ட மனைவியை ஏறிட்டார்.

“உடம்புக்கு ஒண்ணுமில்லை. ராஜேஷ் எங்கே?”

“இப்பத்தான் வந்தான். இன்னும் சாப்பிடக்கூட இல்லை. ஏன்? என்ன விஷயம்?” கேட்ட மனைவிக்கு பதில் ஏதும் கூறாமல் உள்ளே சென்றார் ராமலிங்கம்.

படுத்திருந்த ராஜேஷ் எழுந்து உட்கார்ந்த பின், “வாங்கப்பா! என்ன இந்த நேரத்திலேயே வந்துட்டீங்க?”

அவன் கேள்விக்கு பதில் சொல்லாமல், “நீ போயிட்டு வந்த இண்டர்வியூ என்ன ஆச்சு?” என்றார்.

“அதெப்படிப்பா அதுக்குள்ள தெரியும்? ரிசல்ட் தபாலில்தானே வரும்?” என்றான் அவர் கேள்வி புரியாதவனாய்.

“வரும் வரும்! எதிர்பார்த்திட்டே இரு! பொருமிய அவர், “எனக்கு எல்லாம் தெரியுண்டா! அந்த போஸ்டுக்கு ரகுன்னு ஒரு பையன் செலக்ட் ஆயிட்டான் தெரியுமா?” என்றார்.

பொன்மலை ஆர். பிரகாஷ்

அதைக் கேட்ட ராஜேஷ் முகம் மலர்ந்தது. "அப்படியா?" என்றான் சந்தோஷமான குரலில்.

அவன் குரலில் இருந்த சந்தோஷம் ராம லிங்கத்தை மேலும் வெறுப்பேற்றியது.

"உனக்குக் கிடைக்க வேண்டிய வேலையை வேறொருத்தன் கொத்திக்கிட்டு போயிட்டான். அதைக் கேட்டு வருத்தப்படாம... உனக்கு பொறுப்பே கிடையாதா?"

"இருக்குப்பா! பொறுப்பு இருக்கிறதால வந்த சந்தோஷம் இது! விட்டுக் கொடுக்கறதாலே கிடைச்ச சுகம் இது! சமூகப் பிரக்ஞையோட நான் நடந்துக்கிட்டேன்ற பெருமை சேர்க்கிற விஷயம் இது!"

"நிறுத்துடா! என் ப்ரண்ட் கோதண்டம் போன் பண்ணினான். நீ கடைசி வரை ஜாதி சர்டிபிகேட்டைக் காட்டவேயில்லையாமே! அதனாலதான் உனக்கு இந்த வேலை கிடைக்கலைன்னும் சொன்னான்!"

"உண்மைதான்! ஆனா...."

"என்னடா ஆனா? உன்னை வளர்க்க, படிக்க வைக்க எவ்வளவு கஷ்டப்பட்டிருப் பேன்? ஏன் நீயும் கஷ்டப்பட்டு உழைச்சுதான் இந்த டிகிரி வாங்கின? அதை மறந்திட்டு..."

"மறக்கலைப்பா! அதனால்தான் நான் இப்படி செஞ்சேன்!"

"எதை மறக்கலை? நீ டிகிரி முடிச்சு இரண்டு வருஷம் ஆச்சுங்கறதையா? அடுத்த வருஷம் நான் ரிடையர் ஆகப் போறேங் கறதையா? எதை மறக்கலை?"

ராஜேஷ் தீர்க்கமாக அவரைப் பார்த்தான். "அப்பா உங்க தாத்தா என்னவாயிருந்தார்?"

"அது எதுக்குடா இப்ப! அதுக்கும் நீ நடந்துகிட்டதுக்கும் என்ன சம்பந்தம்?"

"இருக்குப்பா! சொல்லுங்க!"

"நம்ம கிராமத்துல பண்ணையார்கிட்ட கூலியாளா இருந்தாரு! அதுக்கென்ன?"

"சரிப்பா! என் தாத்தா, அதான் உங்க அப்பா என்ன படிச்சாரு?"

ஏன் பி.யு.சி. வரைக்கும் படிச்சாரு. அப்புறம் முனிஸிபாலிட்டி ஆபீஸ்ல கிளார்க்கா வேலையில் சேர்ந்தாரு!"

"உங்க தாத்தாவோ கூலியாளு. அப்ப நம்ம கிராமத்துலேயோ ஆரம்பப் பள்ளி கூட கிடையாது. அப்படி இருக்கறச்சே உங்க அப்பா எப்படி படிச்சாரு!"

"இதென்ன கேள்வி! பண்ணையாருதான் வேண்டப்பட்டவங்கள பார்த்து, நம்ம சாதிக்கு அரசாங்கம் தந்த சலுகையைத் தெரிஞ்சுகிட்டு என் அப்பாவை சல்லிக்காசு செலவு இல்லாம பக்கத்து டவுன்ல ஹாஸ்டல்ல தங்க வச்சு இலவசமா படிக்க வச்சாரு!"


"சரி! நீங்க எப்படி எம்.ஏ. வரை படிச்சீங்க?"

"இதென்ன கேள்வி? உன் தாத்தாதான் நல்ல வேலைல இருந்தாருல்ல? அரசாங்க சம்பளம்! அது தவிர கிராமத்தில் வேற கொஞ்சம் நிலம் வாங்க முடிஞ்சது. இரண்டும் இருக்கறச்ச நான் படிக்க என்ன கஷ்டம்? அதான் எம்.ஏ. வரை

ஒரு கை பார்ப்போமா?

யாருடைய கரம் தாழ்ந்து மேஜையைத் தொடும்? தோல்வியைத் தழுவும்? இந்த கை-ஸுமோ யுத்தத்தை சில திரைப்படங்களில் பார்த்திருக்கலாம். படத்தில் வலதுபுறம் இருக்கும் யமமோடோ கை-ஸுமோ யுத்தத்தில் ஜப்பானில் நெ.1. வயது என்ன தெரியுமோ? 96! "கை-ஸுமோ என்பது கை மட்டும் சார்ந்த வீர விளையாட்டு அல்ல; உச்சந்தலையிலிருந்து உள்ளங் கால் வரை உடல் தசைகள் அனைத்துக்கும் இதில் வேலை உண்டு" என்கிறார்.

நன்றி : பஸிஃபிக் ஃப்ரெண்ட்



படிச்சேன். இதோ கைநிறைய சம்பாதிச்சுக்கிட்டும் இருக்கேன்!''

"நீங்க படிச்சது... வேலைல சேர்ந்தது எல்லாம் உங்க சுய முயற்சியாலேதான்னு நினைக்கறீங்களா?''

''முழுசா அதான் உண்மைன்னு சொல்ல முடியாது. ஏன்னா, சொந்த முயற்சியும், அரசாங்க சலுகையும் சேர்ந்துதான் என்னை பெரியவனா ஆக்கினது!'' என்றார்.

''கரெக்ட்! அதைத்தான் நான் சொல்ல வரேம்பா! நாம பரம் பரை பரம்பரையா பண்ணையார்கிட்டே கூலி வேலை செஞ்சே பிழைச்சிருக்க வேண்டியவங்க! இப்ப எல்லாருக்கும் சமமா படிச்சு உயர்ந்த வேலை பார்த்து, கைநிறைய காசு பார்க் கிறோம்னா அதுக்கு பின்னால இருக்கற அரசாங்கத்தையும் நினைக்கணும். நம்மைப் போன்றவர்களுக்கு அது அளிக்கிற சலு கையைப் புரிஞ்சு பயன்படுத்தணும்!''

''யாரு இல்லேன்னா? அரசாங்கத்தோட சலுகையையோ, அதை நம்மளுக்கு வாங்கித் தந்த பெரியவங்களையோ நாம மறக் கலையே!''

''நான் அதைச் சொல்லலைப்பா! அரசாங்க சலுகைகள் சேர வேண்டியவங்களுக்கு சேர்ந்தால் அது எதிர்பார்த்த பலனைக் கொடுக்கும். உங்க தாத்தா இருந்த நிலைமையில் உங்களுக்கு அரசாங்க சலுகை தேவைப்பட்டு இருந்தது. பின்னாடி உங்க அப்பா தலையெடுத்து, நாம சொந்தக் கால்ல நிக்க ஆரம்பிச்ச பிறகும் சலுகை ஊன்றுகோலை தேடக் கூடாதுப்பா! குழந்தை நடைபயிலற வரைக்கும்தான் நடை வண்டி தேவைப்படணும். பின்னாடியும் அது கைல வலுக்கட்டாயமா திணிக்கக் கூடாது. நடக்க, ஓட அது படிப்படியா தெரிஞ்சிக்கணும்.''

"நீ என்ன சொல்ல வரே? எல்லாரும் முன்னேறியாச்சு. அரசாங்க சலுகை தேவையே இல்லைங்கறயா?''

"இல்லப்பா! சலுகை தேவைதான். ஆனா அது நம் குடும் பத்துக்கு தேவை இல்லைங்கறேன். நாம குறுக்க நிக்காம விலகி வழி விடணும்னு சொல்றேன். அப்பத்தான் அது நெசமாகவே தேவைப்படற ஒரு நபருக்குப் போய்ச் சேரும். சுதந்தரம் வாங்கி இத்தனை வருஷமாகியும் நம்ம இன மக்கள் முன்னேறலைன்னு சொன்னா அதுக்கு என்ன காரணம்? எங்கேயோ ஓட்டை இருக்கு! அதை சரி பண்ணணும். சலுகையை அனுபவிச்சு பலன் அடைஞ்சவங்க, தாங்களாகவே முன் வந்து இனி சலுகை தேவையில்லைன்னு சொல்லணும். சொல்ல வைக்கணும்.''

"அதுக்கு?''

"அதுக்காகத்தாம்பா நான் சாதி சர்டிபிகேட்டை காட்டல. இந்த போஸ்டுக்கு செலக்ட் ஆனானே ரகு, அவன் எம்.காம் படிச்சிருக்கான். அவன் அப்பா ஒரு செருப்பு தைக்கற தொழி லாளிப்பா! குடும்பத்திலே அவன்தான் முதல் பட்டதாரி. இப்ப அவன் தன் வாழ்க்கையில செட்டிலாயிட்டா தன் பிள்ளையை அவன் படிக்க வச்சிப்பான். சலுகை அடுத்தவனுக்குப் போகும்!''

"அதுக்கென்ன உத்திரவாதம்?'' இடக்காக கேட்டார் ராம லிங்கம்.

"நம்பிக்கைதாம்பா! சலுகையைத் தவறா பயன்படுத்த மாட் டோம்கற நம்பிக்கை. சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க! மூணு தலைமுறைக்கு அப்புறமும் நாம சலுகை நிழலைத் தேறடது சரியா? எனக்குத் தப்புன்னு தோணுதுப்பா! என் குழந்தைங் ககிட்ட நான் முன்னேறி பெரியாளா இருக்கறது என் சொந்த முயற்சியாலேன்னு சொல்லி பெருமைப் படணும்னு ஆசையா இருக்குப்பா!''

ராமலிங்கத்துக்கு ஏதோ கதவு திறந்தாற் போல இருந்தது. மகனைப் பெருமை பொங்கப் பார்த்தார். அவர் கண்கள் லேசாக நனைந்திருந்தன.



"பொதுமக்களிடம் கை தட்டல் வாங்கறதுக்காக தலைவர் இப்படியெல்லாமா பேசறது?"

"என்ன பேசினார்?"

''ஊழல் பண்றதுக்கு தமிழ்நாட்ல- ஏன் இந்தியா வுல, அட விடுய்யா உலகத் துலே என்னை அடிச்சுக்க ஒரு பயல் உண்டா?'னு பேசி யிருக்கிறாரே..."

—எஸ்.எஸ்.பூங்கதிர்



''ஏழேழு ஜென்மத்து ஞாபகங்களும் தொடர்ச் சியா வருது டாக்டர்! பயமா இருக்கு!''

''சரியாப் போச்சு! செஸ் ஆனந்த் சொன் னார்னு மெமரி பிளஸ் அளவுக்கு அதிகமா சாப்பிட்டீங்க போல!''

—அ.சு.கிருஷ்ணன்

அலெக்ஸாண்டர்

சமீபகாலத்தில் எந்தப் படத்திலாவது முழுக்க முழுக்கப் புடைவை மட்டுமே கட்டிய ஹீரோயினைப் பார்த்திருக்கிறீர்களா? ஆபாச அசைவுகள் காட்டாத ஹீரோயின்?

இதற்காக முதலில் இயக்குநர் கேயாரைப் பாராட்டி விட்டுத் தொடரலாம்.

விஜயகாந்த் ஒரு நேர்மையான சி.பி.ஐ. ஆபீசர் என்று முதல் வரியைச் சொல்லிவிட்டால் மேற்கொண்டு கதை தேவையில்லை. சமீப கால அரசியல் ஹவாலா விஷயங்கள், நடந்தது நடந்தபடியே படத்துக்குத் திரைக்கதையாகி விட, – அங்கே ஜெயின் டைரி; இங்கே ஒரு ஃபைல் என்கிற ஒரே வித்தியாசம் தான் – விறுவிறுப்புக்குக் கேட்க வேண்டுமா?

ஒன்று சொல்ல வேண்டும். பத்தோடு பதினொன்றாகி இருக்க வேண்டிய கதைதான். தூக்கி நிறுத்தியிருப்பது, கேயாரின் திரைக்கதை.

சங்கீதா ஏன் அந்தப் பையனைக் கொலை செய்தார்? விஜயகாந்த் எப்படி அதைக் கண்டு பிடித்தார்? அந்த அழகிய தாடிக்காரர் எதற்காக இவர்கள் போகிற இடமெல்லாம் போர்வையைப் போர்த்திக் கொண்டு பின்தொடர்கிறார்? (வியர்க்காதோ?) அடுக்கடுக்காகக் கேள்விகள் எழும்பிக் கொண்டே இருப்பதால், அடுத்தடுத்த அதிர்ச்சி சம்பவங்களில் ஆர்வம் கூடுகிறது. அத்தனைக்கும் கிளைமாக்ஸில் நேர்த்தியாக சஸ்பென்ஸ் விடுவிக்கப்படுகிறபோது நிஜமாகவே கைதட்டத் தோன்றுகிறது.

படத்தின் பெரிய பலம், வில்லன் பிரகாஷ் ராஜ். இந்தப் படத்தில் அவருக்குக் கொஞ்சம் வசனம் அதிகம் என்று தோன்றுகிறது. அவரது பிரத்யேக ஸ்டைலைக் காட்ட அதிக வாய்ப்பின்றி, பெரும்பாலும் பேசிக் கொண்டே இருந்தாலும் மொழியை அவர் வசதிக்கேற்ப வளைத்தும் நெளித்தும் உபயோகிக்கிற விதம் புதுவிதமானது.

ரீ-ரெக்கார்டிங்கில் விட்ட கோட்டையைப் பாடல்களில் பிடித்து விட்டார் கார்த்திக் ராஜா. அதிக இரைச்சலில்லாத – பெரும்பாலும் அத்தனை கருவிகளையும் கீழ்ஸ்தாயியிலேயே மீட்டி – நவீனமாக ஒரு இசை முறையைக் காட்டியிருக்கிறார்.

படத்தின் ஒரே குறை அந்த மலையோர நடனப் பாடல்.

குலதெய்வத்துக்குப் பூஜை போடப் போகிறவருக்கு என்னத்துக்கு அந்தக் குலுக்குப் பாடல்?

முழுப்படமும் கட்டிக் காக்கிற கண்ணியம் அங்கே கொஞ்சம் கரைகிறது.

மற்றபடி, ஒரு மாறுபட்ட மசாலா.

– ஆர்.பி.ஆர்.







* சுக்ரோ கோட்டை

வெளியில் தெரியாத வேலூர்க் கோட்டைகள்!

வேலூர்க் கோட்டை என்றதுமே டவுனுக்குள் இருக்கிற அகழி சூழ்ந்த கோட்டைதான் அனைவருடைய நினைவுக்கும் வரும். ஆனால் வேலூரை ஒட்டிய குன்றுகளில்இருக்கும் மற்ற மூன்று கோட்டைகள் பற்றி, பலருக்கும் தெரியாது. அழிந்து வரும் அவற்றைப் பாதுகாத்துப் பராமரித்தால், உல்லாசப் பயணிகளை ஈர்க்கும்; முக்கிய இடங்களில் வேலூரும் ஒன்றாக இருக்கும்...

"சுக்ரோ, கஜ்ரோ, முர்த்தஜ்- இந்த மூன்றுமே கவனிப்பார் யாருமின்றிப் பாழடைந்து கிடக்கின்றன. சாராயம் காய்ச்சுபவர்களுக்குத் தோதான இடமாக இருந்தது சார்!'' என்கிறார் சீனிவாசன். அவர் குறிப்பிடுவது 16-17ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கோட்டைகளை!

முதல் கோட்டையான சுக்ரோவுக்கு அதிகம் சிரமம் இல்லாமல் ஏறிவிடலாம். காலை இடறும் கற்களும், கொஞ்சம் புதர்களும் வழியில் இருக்கின்றன.

கோட்டைக்குள்ளே இருக்கும் சிற்ப மண்டபத்தில் இப்போது மாடுகள் படுத்து ஒய்வு எடுத்துச் சாணம் குவித்திருக்கின்றன! 1518அடி உயரத்தில் பாலாஜி மலை மீது அமைந்திருக்கும் சுக்ரோ கோட்டைதான் மற்ற இரண்டு கோட்டைகளையும் விடப் பெரியது. தெற்குப் பார்த்த வாயில். "எதிரிகளை எளிதில் கண்காணிக்க வசமான இடம். பீரங்கிகளை வசதியாக வைக்க ஏற்ற இடம் என்று சொல்லுகிறார்கள்!"

ஊர்ஹீஸ் கல்லூரியில் பட்டம் வாங்கிய இந்த இளைஞரின் இப்போதைய உயிர் மூச்சே வேலூர் கோட்டைகளை உலகின் கவனத்துக்குக் கொண்டு வருவதுதான்!

உள்ளேயிருக்கும் மண்டபத்தில் உள்ள சிற்பங்கள் பலபல. ஆதிசேஷன், ஐராவதம், நடராஜர், ஆஞ்சநேயர் என்று தூண்களிலும், சுவர்களிலும் ஏராளம்.

இரண்டாவது கோட்டை கஜ்ரோவை அடையக் கொஞ்சம் உறுதியான கால்கள் வேண்டும். பாதை சற்றுக் கடினமானது தான். வழி நெடுக பெரும் கற்களும், புதர்க் கற்றைகளும்!

"1635அடி உயரத்தில் இருக்கிறது இது!" என்கிறார் சீனிவாசன். இரண்டு வாயில்களில் ஒன்று கிழக்குப் பார்த்தது. மற்றொன்று வடக்குப் பார்த்தது. இதற்குள்ளே இருக்கும் இன்னோர் அற்புதம் சதுரவடிவக் கிணறு. பிரமாண்டமானது! 32 படிகள். சுவர்களில் எல்லாம் கூட விநாயகர், நடராஜர், கண்ணப்ப நாயனார் சிற்பங்கள்.

ஒற்றைப் பெரும் பாறையில் கட்டப்பட்டிருக்கும் மூன்றாவது கோட்டை முர்த்தஜ். முக்கால்வாசி கோட்டையும் சீரழிந்து, சிதிலமடைந்து விட்டது. இரண்டாவது கோட்டை



* கஜ்ரா கோட்டை.

யிலிருந்து மூன்றாவது கோட்டை ஒரு கிலோ மீட்டர் தூரம்தான். இந்தக் கோட்டையிலும் ஓர் அழகான குளம். "குதிரைகளுக்குத் தண்ணீர் காட்ட!" என்கிறார் சீனிவாசன். இயற்கையான குளம். சூரிய ஒளியே படாத குளம். பச்சைத் தவளைகளும், குஞ்சு மீன்களும் நீந்திக் களிக்கின்றன.

''இங்கே மரமே வளராது என்று சொல்லுகிறார்கள். அது உண்மை என்றால் வெட்டிச் சாய்த்து, எடுத்துக் கொண்டு போகும் மரங்கள் எப்படி இங்கே வளர்ந்தனவாம்?'' என்று கேட்கிறார் சீனிவாசன்.

எங்கிருந்தோ திடீர் என்று பாயும் சிறு நீர்வீழ்ச்சி. அது கீழே வரவர, அதன் நுனிப் பகுதிக்குப் போனால் இளைஞர்கள் சிலர் ஆனந்தமாகக் குளிக்கிறார்கள்!

500 அடி கீழே, சுமார் மூன்று ஏக்கருக்கு சமதரை. தண்ணீரும் இருக்கிறது. "பூங்காவாக மாற்ற வேறு என்ன வேண்டும்?" என்று கேட்கிறார் சீனிவாசன்.

கீழே 16 லட்சம் லிட்டர் தண்ணீர் சேர்த்து வைக்கக்கூடிய குளம். அப்படியே பாழாகிக் கிடக்கிறது.

குடியாத்தம் அருகே மேல் ஆலத்தூரில் உள்ள மண் ஆய்வு மையத்தில் இந்த மண் பற்றிய பரிசோதனைகளை நடத்தி முடித்து விட்டுத் திரும்பிய சீனிவாசனுக்கு ஒரே உற்சாகம்.


பழ மரங்கள் வைத்தாலும் வளரும் என்பது பரிசோதனை முடிவு!

தண்ணீர்? உப்பு கிடையாது!

மலையிலிருந்து ஒருபுறம் அருவியாய்க் கொட்டிக் குட்டையாய்த் தேங்கிக் கிடக்கிற இடத்தில், ஏராளமான துணிகளைத் துவைத்துக் கொண்டிருந்தார்கள். "தாத்தா காலத்திலிருந்து இங்க துணி துவைக்கறமுங்க" என்றவர்கள், ''தண்ணீர் எங்கிருந்து உற்பத்தி ஆகி வருகிறது'' என்று தெரியவில்லை என்கிறார்கள்.

மாவட்ட கலெக்டர் தேவிதார், காவல் துறை அதிகாரி, மாவட்ட வனத்துறை அதிகாரிகள் எல்லோருமே சீனிவாசனின் முயற்சிக்கு வெகுவாக ஒத்துழைப்புத் தருகிறார்கள். தாம் கனவு காணும் சுற்றுலாத் தலமாக, இந்தக் கோட்டைகளும், மலைகளும் எப்படி இருக்கும் என்று ஒரு டாக்குமென்டரி தயாரித்திருக்கிறார் சீனிவாசன். சென்னை எக்ஸ்நோரா இவருக்கு உதவ முன்வந்திருக்கிறது.

"நிறைய மரங்களை



* சீனிவாசன்
(படம்-ஸ்ரீஹரி)

நடுவதன்மூலம் பசுமை கொழிக்கும் வளமான மலையாக இந்தப் பகுதியை மாற்றி விட்டால், வேலூரின் அதிகபட்ச உஷ்ணமான 44 டிகிரி செல்ஷியஸ் சரேலென்று குறைந்து விடும். கோட்டைகள் அழியாமல் பாதுகாத்தால் ஏராளமான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கலாம். மழை அதிகரிக்கும். எனவே, வெப்பம் குறையும். பறவைகள் தேடி வரும் சரணாலயம் ஆகும். கல்லூரியில் பாட்டனி, ஜுவாலஜி மாணவர்களின் நேரடிப் பயிற்சிக்குச் சுற்றுலாக்கள் உதவும். மண் வளம் பாதுகாக்கப்படும். எனவே உருண்டு விழுந்து ஆட்களைக் கொல்லும் பாறைகள் சரிவது நிற்கும். நீர் அருவியிலிருந்து தண்ணீர் சேமித்து மக்களுக்கு உதவலாம். மரங்களைத் தாறு மாறாக வெட்டிப் போவது நிற்கும்!" என்று அடுக்கும் சீனிவாசன், "அரசாங்கத்துக்குச் சுற்றுலா மூலம் நிறைய வருமானம் வருமே? அது எத்தனை பெரிய பயன்!" என்று கேட்கிறார். அவர் கேட்பது சுற்றுலாத்துறை அமைச்சருக்கும் கேட்கிறதா..?

— சாருகேசி

? சீதா ரவி

"ரொம்ப பயமாயிருக்கு ஸ்ரீராம்...."

"இப்ப என்ன பண்ண முடியும்ங்கறே... நாம செய்யக்கூடியது எதுவுமில்லை. கடவுள் இருக்கார். பார்த்துப் பார்..."

சுகன்யாவுக்குக் கோபம் வந்தது. "நீ விஷயத்தை ரொம்ப எளிமையாக்கப் பார்க்கறே... அது சரியில்லை. வசந்தி வினோதமா நடந்துக்கறா. அவளோட கோபத்துக்கும் எரிச்சலுக்கும் பின்னால வேற ஏதோ இருக்கு..."

- பெட்டியில் பட்டுப் புடைவைகளை அடுக்கியபடி பேசிக் கொண்டிருந்தாள் சுகன்யா. அடுக்கிய புடைவைகளிலிருந்து ஒன்றை உருவி எடுத்துப் பிரித்துப் போட்டான் ஸ்ரீராம்.

"இந்தப் புடைவை ஞாபகமிருக்கா...?"

"ஊஹூம்! மறந்தே போச்சு..." சுகன்யா கோபம் மறந்து சீண்டினாள். ஸ்ரீராம் அவளுக்குத் திருட்டுத்தனமாகக் கொடுத்த முதல் பரிசு. மஞ்சளும் சிவப்பும் கலந்த அந்திவான அழகு.

"ஞாபகப்படுத்தட்டுமா...?" என்று அவள் காதைத் திருகினான்.

கல்யாணத்துக்குத் தேவையான உடைகளையும் சில பெரிய பாத்திரங்களையும் எடுத்துப் போக ஜவஹர்புரம் வந்திருந்தார்கள். கிட்டத்தட்ட இரண்டு வார கூட்டுக் குடும்ப சந்தடிக்குப் பிறகு, மழை பெய்து ஓய்ந்தது போன்ற தனிமையில் ஸ்ரீராம் கிரங்கிக் கொண்டிருந்தான்.

சுகன்யா அவனை உறுதியாக விடுவித்து, கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

"இதோ பாரு! நான் சீரியஸா பேசிக்கிட்டிருக்கேன். வசந்திக்கு வர்ற கோபம் ரொம்ப அதீதமா இருக்கு. அன்னைக்கு சேகர் என்னை போன்ல கூப்பிட்டு பேசிட்டான்னு பொங்கிப் போன மாதிரி, நாலஞ்சு முறை ஆயிடுத்து. அவ இப்படி இருந்து நான் பார்த்ததேயில்லை..."

ஸ்ரீராம் பெருமூச்சுடன் கைகளை விலக்கிக் கொண்டான். "நீ பார்த்ததில்லைன்னா...? அவ எப்பவும் தன்னோட best sideஐ மட்டும் உங்கிட்டே காட்டணும்னு ஜாக்கிரதையா இருந்திருக்கா.... மஹாபலிபுரம் பிக்னிக் போய்ட்டு வர்றப்ப, நம்ம இரண்டு பேரையும் கார்ல பார்த்தாளே.... அன்னிக்கு என்ன நடந்ததுன்னு உனக்குத் தெரியாது!"

"ஏன் தெரியாது? நீதான் எங்கிட்டே ஒண்ணு விடாம சொன்னியே.... ஆனா இது வேற... இந்தக் கோபம் வேற... எனக்கு, குறிப்பா என்ன வித்தியாசம்னு சொல்லத் தெரியலை."

"அவ எப்பவுமே கொஞ்சம் 'பொஸஸிவ்' - கொஞ்சமில்லை... ரொம்ப 'பொஸஸிவ்'. கல்யாணமாகி அவங்க வீட்டுக்குப் போயிட்டா, சேகர் கூடவே இருக்க இருக்க, பாதுகாப்பு உணர்வு வந்து சேர்ந்துடும்..."

"அப்படியா நினைக்கறே...?"

"அப்படித்தான் ஆகப் போறது பாரேன்..."

"சரி..." என்றாள் சுகன்யா, அவன் நம்பிக்கையைக் குலைக்க மனமின்றி.

சட்டைப் பாக்கெட்டிலிருந்து சின்ன காகிதத் துண்டத்தை எடுத்த ஸ்ரீராம், "எல்லாத்தையும் எடுத்து வைச்சுட்டோமா பார்த்துக்கோ..." என்று படிக்க ஆரம்பித்தான்.

முகத்தை அலம்பிக் கொண்டு வருவதற்குள் மூச்சுத் திணறியது!

'ஆயிரமாயிரம் வாடகை வாங்கிக்



கொள்கிறவர்கள் குறைந்தபட்சம் பாத்ரூம்களைச் சுத்தமாக வைத்தால் என்ன...' மனத்துக்குள் அங்கலாய்த்தபடி வெளியே வந்த சுகன்யாவை அவசரமாக அழைத்தான் குமார்.

"மன்னி! சீக்கிரமா வாங்களேன் வசந்தி உடனே கூப்பிடறா..."

விட்டு வந்து இரண்டு நிமிடம் கூட ஆகவில்லை. அதற்குள் அவசர அழைப்பு! தோளில் போட்டிருந்த துண்டால் முகத்தைத் துடைத்தபடி 'மணப்பெண்' அறை நோக்கி வேகமாய் நடந்தாள்.

"எங்கே போய்ட்டேள், சரியான சமயம் போனது.

"கல்யாணப் பொண்ணு நான் இன்னமும் தயாராகல்லை.... அதுக்குள்ள உங்களுக்கு அவசரமா? இங்கே பெட்டிய திறக்கலாம்னா கூட வழியில்லை. சாவிய கழுத்துச் செயின்ல போட்டுண்டு போய்ட்டேள். எங்கம்மாவானா, ஏதோ அடுத்த மாசம் கல்யாணம்ங்கிற மாதிரி வாசல்ல இப்பத்தான் கோலத்துக்குக் காவி இடறா..."

"ஷ்... வசந்தி! அமைதியாயிரு. இப்பத்தானே மணி மூணு ஆகறது? அஞ்சரை மணிக்குத்தான் சேகர் வீட்டுக்காரங்கள்லாம் வந்து இறங்கப் போறாங்க. நிதானமா டிரெஸ் பண்ணிக்கலாம்! இன்னும் முழுசா இரண்டரை மணி நேரமிருக்கு."

"அந்த அரித்மெடிக்

உள்ளே வரலாமா?

பார்த்து?" அறைக்குள் நுழையும்போது அதட்டலாக வசந்தியின் குரல்.

சோப்பு வாசனையும் துடைத்த முகமாக உள்ளே வந்தவளைப் பார்த்து அது மேலும் உச்சத்துக்குப்



எனக்கும் தெரியும். இப்ப முதல்ல பெட்டியைத் திறங்கோ. இப்ப உடுத்திக்க வேண்டிய புடைவையை எடுத்து வையுங்கோ. சீப்பை எங்கே வைச்சிருக்கேள்? தேங்காயெண்ணெய் பாட்டிலை கடைசில மறந்துட்டேள். நான்தான் எடுத்து பையிலே போட்டுண்டு வந்திருக்கேன்..."

"நான் மறக்கலைம்மா தேங்காயெண்ணையை..." சுகன்யா கோபத்தை அடக்கிக் கொண்டு மிகப் பொறுமையாகப் பேசினாள். "வீட்லயிருந்து கிளம்பும் போது ஞாபகமாகத் தேடினேன். அதுக்குள்ளே அதை நீ எடுத்து வைச்சிருந்தே போலிருக்கு. அது எனக்குத் தெரியாதே... அதனால் வழியில வேற ஒரு பாட்டில் புதுசா வாங்கிட்டு வந்திருக்கேன்."

ஹாண்ட் பேக்கைத் திறந்து, பாட்டிலை எடுத்தபோது இருபத்திரண்டு ரூபாய் ஐம்பது பைசாவுக்கான பில் கீழே பறந்தது.

காத்திருந்தவள் போல் அதைக் 'கொத்தி'யெடுத்தாள் வசந்தி.

"வேஸ்ட்! இதுக்குத் திருப்பி தண்டச்செலவு. ஏற்கெனவே எங்கப் பாவுக்கு இருக்கற செலவு போறாதுன்னு..."

தங்க நகை பரிசு!

இந்த இருபத்தாறு வாரத் தொடர், ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு கதாசிரியர் பெயரில் வெளியாகி வருகிறது. ஆனால் அவர்களுள் ஒரே ஒரு நபர்தான் இதை எழுதி வருகிறார். தொடரை எழுதியவர் யார் என்பதைக் கண்டுபிடிப்பது உங்கள் சாமர்த்தியம். கடைசி வாரம் வரை காத்திருந்து, அந்த இதழில் வெளியாகும் கூப்பனில் விடை எழுதி அனுப்புங்கள். சரியான விடைக்கு, தங்க நகை பரிசு! பலர் சரியாக எழுதினால் குலுக்கலில் ஒருவரே பரிசு பெறுவார். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

"இந்த இருபத்திரண்டு ரூபாய் அம்பது பைசாவை நான் கல்யா ணக் கணக்குல எழுதலே... போதுமா... இப்ப கொஞ் சம் வாயை மூடு!" – நெஞ்சு வரையில் வந்த வார்த்தைகளை சுகி வெளிப்படுத்திவிடாமல் காப்பாற்றியது புடை வைத் தலைப்பை உதறிச் செருகியபடி வந்த பெரியத்தைதான்.

"ஏய் வசந்தி! இப்படி துடுக்கா பேசப் படாது. என்னருந்தாலும் அவ உனக்கு மன்னி. அம்மா ஸ்தானம் தெரியுமா...? தலைப் பின்னலைச் சீக்கிரமா அவிழ்த்துடு! தலை ஜோடனைக்கு ஒரு மணி நேரம். அப்புறம் உன் இஷ்டத்துக்கு 'மேக் அப்'போ என்னவோ போட்டுக்கோ, புடைவையைக் கட்டிக்கோ... ஏண்டி சுகன்யா! இப்படி நாளும் கிழமையுமா நெத்தில பொட்டில்லாம நிக்கறே... முதல்ல நெத்திக்கிட்டுக்கோ! தலையை நான் பின்னி விடட்டுமா...? நீ முன்னாடி தயாராயிட்டா வசந்திக்கு ஒத்தாசை பண்ணிட்டு அப்படியே வாசப் பக்கம் போய்டலாம். புள்ளையாத்துக்காரா வந்தா பளிச்சுன்னு 'வாங்கோ'ன்னு சொல்ல வாசல்ல இரண்டு பேர் வேண்டாமா...?"

"வேண்டாம். மன்னி இங்கேயே என் கூடவே இருக்கட்டும். குமாரை வேண்ணா வாசல்ல நிக்கச் சொல்லுங்கோ அத்தை. நீங்களும் போய் நில்லுங்கோ... மன்னி எனக்குத் துணையா இருக்கட்டும்."

பொங்கிய பால் அடுப்பணைத்ததும் தணிந்து அடங்குவது போல், திடீரென்று அமைதியாகப் போய் பேசிய வசந்தியை அதிசயத்துடன் பார்த்தாள் சுகன்யா.

"முதல்ல மன்னிக்குப் பின்னி விடுங்கோ அத்தை. அதுக்குள்ளே நான் என் புடைவை நகையெல்லாம் பார்த்து 'செட்'டா எடுத்து வைச்சுக்கறேன்..."

பெரியத்தை அழுத்தித் தலையை வாரிய போது இதமாக இருந்தது. கண்களைச் சுழற்றிக் கொண்டு தூக்கம் கூட வந்தது.

ஸ்ரீராம்தான் அவளைப் பார்த்ததும் சிரித்து விட்டான்.

"ஏய்! என்ன இது வேஷம்...?"

"'என்ன....?"

"தலைமுடியை கோந்து போட்டு நெத்தியில ஒட்ட வைச்ச மாதிரி....."

"அப்படியாயிருக்கு...? பெரியத்தைதான் தலை பின்னி விட்டாங்க..."

"நீ கண்ணாடியிலே கூட பார்த்துக் கலையா?"

"இல்லையே... கொஞ்சம் இறுக்கமா பின்னியிருக்காங்க, அவ்வளவுதான்...."

"சரியாப் போச்சு! முகமே மாறிப் போச்சு...? ஏதோ புதுப் பொண்ணுன்னு நினைச்சு, வர்ற மாமிகளெல்லாம் உன் ஜாதகத்தைக் கேக்கப் போறாங்க..."

"ஒரிஜினல் தரேன்... நாலு ஜெராக்ஸ் எடுத்து வைச்சுடறியா...?"

"உதை...!"

"கிண்டல் போதும்! வசந்திக்கு அங்க ரூமுக்கு டிபன் கொண்டு போய்க் கொடுக்க ஏற்பாடு பண்ணுங்க. அவ காப்பி குடிக்க மாட்டா. ஞாபகமா பால் ஒரு தம்ளர் அனுப்பி வைக்கச் சொல்லுங்க..."

மாமியாரைத் தேடி வாசல் பக்கம் போனவளைப் பெருமிதத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான் ஸ்ரீராம். பின் தலையில் மல்லிகைப் பூ மின்னியது. இழுத்துப் பின்னிய கூந்தல் வழக்கத்திலும் நீளமாய்த் தெரிந்தது. உடல் இளைத்ததில் ரவிக்கை சற்று தளர்ந்து போயிருந்தது. 'நடையில் கூட கொஞ்சம் வாட்டமோ...?' யோசிக்கையிலேயே அவளுக்காக மனம் கனிந்து நெகிழ்ந்தது.

'எவ்வளவுதான் கூட நின்று உதவினாலும் இந்தக் கல்யாணத்தில் பெரும் பொறுப்பு சுகன்யாவின் தோள்களில்தான் வந்து இறங்கியிருந்தது. அப்பாவும், அம்மாவும் அந்த ஒப்படைப்பில் ஒரு பெரிய பாதுகாப்பைக் காண்கிறார்கள். எல்லோரும் தலைக்குத் தலை உணர்ச்சிவசப்பட்டு கண் கசக்கி, குரல் உயர்த்தி, ஒருத்தரையொருத்தர் காயப்படுத்திக் கொண்டிருந்த ஒரு கட்டத்தில், சுகன்யா சாம்பிராணிப் புகை போல் தன் இனிமையை, வலிமையைப் பரவ விட்டிருக்கிறாள். அவ்வளவு பேரும் சமனமாகி விட்டார்கள். புகைக்குப் பின்னால் தணலைப் போல் கனன்று கொண்டிருக்கும் அவளுடைய தீர்க்கமான, தூய்மையான மனத்தை எத்தனை தூரம் அவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள்...?'

"ஸ்ரீராமா!" அப்பா மெதுவாகத் தோளைத் தட்டிக் கூப்பிட்டுச் சிரித்தார்.

"என்ன பார்த்துண்டே நிக்கறே... கண்ணை மூடித் திறக்கறத்துக்குள்ள நாழியாயிடும்... போ... போய் டிஃபனெல்லாம் தயாராயிடுத்தா பாரு... நாதஸ்வர பார்ட்டிக்கு வண்டியனுப்பறதாச் சொல்லியிருக்கோம். - ஞாபகமிருக்கா...?"

"ஞாபகமிருக்குப்பா... ஏற்பாடு பண்ணிட்டேன்..."

மங்கல இசையிலும், மாக்கோலத்திலும், சிரத்தையாக உச்சரித்த மந்திரத்திலும், நல்ல நெய் மணத்த சமையலிலும் எந்தக் குறைவுமிருக்கவில்லை. மணமகன் வீட்டாரின் ஆவலான பங்கேற்புடன் மூன்று வேளை கல்யாணம் அழகாக நடந்து முடிந்திருந்தது.

"வசந்தி! எப்பவும் சிரிச்சுண்டு சந்தோஷமா இருக்கணும்...'' கும்பகோணத்திலிருந்து வந்திருந்த மாமி இரவு பஸ்ஸிற்கு மூட்டை கட்டிக் கொண்டு புறப்படத் தயாராகிச் சொன்னபோது...

அந்த வார்த்தைகளுக்காகவே காத்திருந்தது போல் வசமிழந்து அவள் தோளில் சாய்ந்து கேவி அழுதாள் வசந்தி. சேகர் குழப்பத்துடன் நிற்பதைப் பார்த்து, "பயப்படாதீங்க! இது ரொம்ப நார்மல்" என்று அவனை அமைதிப் படுத்தி, வேறுபுறம் அழைத்துப் போனாள் சுகன்யா.

"சுகி...!"

ஸ்ரீராம் தனியாக அழைத்தான்.

"இன்னைக்கு ராத்திரி மட்டும் உன்னை சேகர் வீட்ல படுத்துக்கச் சொல்றா அம்மா. வசந்திக்குக் காலைல எழுந்ததும் கொஞ்சம் துணையா இருக்கும் இல்லையா... அதற்குத் தான்."

சுகன்யா அவனை ஏறிட்டாள். மனத்தில் முளை விட்ட ஏமாற்றத்தைப் படுவேகமாய் அவள் கிள்ளிப் போட்டதைப் பார்த்து அதிசயித்தான். இன்னும் நான்கு நாட்களில் அவன் அமெரிக்கா, யூரோப் என்று நீண்ட பயணம் புறப்பட்டாக வேண்டும். வசந்தியின் கல்யாணம் முடிந்த இந்த இரவை பெரிய பொறுப்பொன்று தீர்ந்த இரவாகக் கொண்டாடும் அவர்களின் திட்டம்...

"ஓ.கே. ஸ்ரீராம்... அப்படின்னா நாளைக்குப் பார்ப்போம். நம்ம வீட்டுல... சரியா...?"

"ஊம்... இப்ப சேகர் வீட்டு வரைக்கும் அப்பாவும் அம்மாவும் உன் கூட வருவாங்க. வசந்தியையும் உன்னையும் மட்டும் அங்க விட்டுட்டுத் திரும்பிடுவாங்க."

"சரி! நான் பார்த்துக்கறேன்... குட் நைட்!"


"குட் நைட் சுகி" என்றான்.

ஆனால் சுகன்யாவுக்கு அந்த இரவு நல்லிரவாக இருக்கவில்லை.

(தொடரும்)

அருள்வாக்கு

எல்லாருக்கும் மனசு மிகவும் நன்றாக இருக்க முடியாது. இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டாலும் முடியவில்லை. வீட்டிலே இருக்கிற குழந்தை சதா ஏதோ விஷமம் பண்ணிக் கொண்டிருக்கிறது. கத்திரிக்கோலை எடுத்து நல்ல துணிகளை, முக்கியமான காகிதங்களை நறுக்கி விடுகிறது. செடிகளை வெட்டி விடுகிறது. இப்படித் துஷ்டத் தனம் பண்ணுகிறது. அதையே பள்ளிக் கூடத்துக்கு அனுப்பி விட்டால், 'இத்தனை மணிக்குப் போக வேண்டும், இன்ன இன்ன பாடங்களை அதற்குள் எழுதி விடவேண்டும், திரும்ப இத்தனை மணிக்குத்தான் வர முடியும், வந்தால் இதைச் செய்ய வேண்டும்' என்று அதற்கு ஒரு கட்டுப்பாடு வந்து விடுகிறது. முன்பு காணப்பட்ட விஷம குணங்கள் எங்கோ போய்விடுகின்றன. பள்ளிக்கூடம் இல்லை, லீவுநாள் என்றால் மறுபடியும் விஷம குணங்கள் தலைகாட்டுகின்றன. அதேபோல் நாம் கெட்ட எண்ணத்திலும் காரியத்திலும் ஈடுபட அவகாசம் இன்றி, நல்ல காரியங்களை ஒரு விதிப் பிரகாரம், ஒழுங்கு தப்பாமல் செய்வதுதான் முக்கியம். இதற்குத்தான் சாஸ்திரங்கள் நமக்கு விதிகள் போட்டிருக்கின்றன.




நல்ல சீலங்கள் உண்டாக வேண்டுமென்றால் துர்க் குணங்கள் நிவிருத்தியாக வேண்டும். 'துர்க்குணங்கள் நிவிருத்தியாக நல்ல கர்மாநுஷ்டானங்களைச் செய், பூஜை பண்ணு, (சகல ஜீவராசிகளுக்கும் ஆகாரம் கொடுப்பதான) வைச்வதேவம் பண்ணு, அதிதிகள் வந்தால் ஸத்காரம் (விருந்தோம்பல்) பண்ணு, என்று பல விஷயங்களைச் செய்யச் சொல்கிறது சாஸ்திரம். இதன்படி செய்து வந்தால் கெட்ட காரியங்களுக்கு நேரமே இல்லாமல் போய்விடும். கர்மாநுஷ்டானங்களைப் பண்ணுகிற போதும் 'நாம் பண்ணுகிறோம்' என்ற அகம்பாவத்தோடு பண்ணக் கூடாது. பண்ணக்கூடிய சக்தியை நமக்கு ஈசுவரன் கொடுத்தான், பண்ண வேண்டும் என்ற புத்தியைக் கொடுத்தான், அதற்கு வசதியும் கொடுத்தான் என்று நினைத்து, ஈசுவரார்ப்பணமாகப் பண்ணு என்று நமது வைதிக மதாசாரியர்கள் விதித்து வழி காட்டினார்கள்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.



தமிழில் வாய்ப்பில்லாதது ஏன்?



நோபல் பரிசு பெற்றவர்களின் சிறுகதைகள்...

நீ அந்த அமைதியைத் தந்திருக்கலாம்' என்று கடிதம் (கதை!?)" முடியும்போது மனதில் தைக்கிறது. முப்பது பக்கக் கதை! (ஹம்மா!)

விறுவிறுப்பு, சுவாரசியம், சரளம், இயல்பான திருப்பங்கள், கதைக்கரு, நேர்மையை அடிக்கோடிடும் அழகு, மனத்தைத் தொடும் முடிவு - எல்லாம் ஒரு கதையில் முடியுமா? ஓ! அதுதான் 'முட்டாள் கிம்பெல்' என்ற சிறுகதை. ஐஸக் பாஷெவில் ஸிங்கர் எழுதியது.

நம் இந்திய மண்ணின் ஈர்ப்போடும், பலத்த எதிர்பார்ப்போடும் ஆவலுடன் படிக்கத் துவங்கிய கதை 'விடுமுறைக் காலம்'. ஏக ஏமாற்றம் தந்திருக்கிறார் தாகூர்.

வெயிலின் வெம்மையை முப்பது பக்கங்களில் விவரிக்க இயலுமா? முடியும் என்று நிரூபித்திருக்கிறார் 'மதத் துரோகி'யின் கதாசிரியர் ஆல்பெர்காம்யு. கொடுமை -வெயிலை விட!

'உங்கள் டெலிபோனைப் பயன்படுத்தலாமா?' என்று யாராவது இளம்பெண் கேட்டால், தயவு செய்து உடனே கொடுத்துவிடுங்கள்! இல்லையென்றால் 'தொலைபேசியை உபயோகிக்க மட்டுமே வந்தேன்' கதையில் நடப்பதுபோல் ஆகிவிடும்! வெளியில் சென்ற மனைவி, தான் வீடு திரும்ப நேரம் ஆகிவிடும் போலிருக்கிறது என்று தன் கணவனுக்கு, (மாஜிக் நிபுணர்) தெரியப்படுத்த, ஒரு டெலிபோனைத் தேடிச் செல்லும்போது, கார் பழுதாகி, வேறு ஒரு வேனில் ஏறும் நிர்ப்பந்தம். மனநோய் விடுதிக்குச் செல்லும் வேன் அது! அவளையும் அங்கு கொண்டு தள்ளி விடுகிறது...! அவள் நிஜமான மனநோயாளி என்று கருதி, வாழ்நாள் முழுவதுமே அதே விடுதியில் கழிக்க நேரிடுகிறது!

இத் தொகுப்பிலிருந்து தெளிவாய் தெரியும் விஷயங்கள்:

1. திலகவதி சிறந்த மொழி பெயர்ப்பாளரும்கூட.

2. மாபெரும் எழுத்தாளர்களின் கதைகள் எல்லாமே சுவாரசியமாய் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை! எளிதாகப் புரிய வேண்டும் என்பதுமில்லை!

— பாமா கோபாலன்

எட்டுத் திக்கிலிருந்து ஏழு கதைகள்/ தமிழாக்கம்: திலகவதி/ நர்மதா பதிப்பகம், சென்னை-17/ விலை ரூ.55.

''அந்த பைனான்ஸ் கம்பெனி கொடுத்த செக் திரும்பி வந்திடுச்சுங்க...''

''ஏன்? பாங்கில் பணம் இல்லையாமா?''

''அந்தப் பெயரில் பாங்க்கே இல்லையாம்!''

- பொள்ளாச்சி கே. சித்ரா



19

உன்னை வரலாமா?

"இதுவும் நார்மலான விஷயம்தானா சுகன்யா...?" அடிபட்ட பார்வையுடன் கேட்ட சேகருக்கு என்ன பதில் சொல்வது?

கட்டில் ஓரத்தில் உட்கார்ந்து முழங்காலுக்குள் தலை கவிழ்த்துக் கொண்டிருந்தாள் வசந்தி. கடந்த ஒரு மணி நேரத்தில் தனக்கு ஒரேயடியாகப் பத்து வயது கூடி விட்டது போல் உணர்ந்தாள் சுகன்யா.

மண்டபத்தை விட்டுக் கிளம்புகிற நேரத்தில் "வசந்தி, டூத் பிரஷ், டாய்லெட் கிட்டெல்லாம் எடுத்து வைச்சுக்கிட்டேயில்லே...?" என்று ஞாபகப்படுத்த,

"அதெல்லாம் எதுக்கு மன்னி? எல்லாம் அவர் வாங்கித் தருவார்!" - வசந்தியின் இயல்பு மாறிய பதில் பயமுறுத்தியது.

கட்டாயப்படுத்தி அவற்றை எடுத்து ஒரு பையில் திணித்து, மாற்றுடைகளுடன் பெட்டி அடுக்கித் தந்து புறப்படச் செய்தாள்.

சேகரின் வீட்டில், வாசலில் நிறுத்தி ஆரத்தி எடுக்க, "பாக்யத லக்ஷ்மி பாரம்மா..." என்று வசந்தியும் கூடவே இலேசாகப் பாடியது விபரீதமாய் ஒலித்தது. மஞ்சள் நீருடன் பித்தளைத் தட்டைச் சுழற்றிக் கொண்டிருந்த மாமியாரின் புருவம் இலேசாக உயர்ந்தது.

சுகன்யா வசந்தியின் தோளை அழுத்தி அடக்கினாள்.

உள்ளே அழைத்துப் போய் மணையில் அமர்த்தி, பாலும் பழமும் கொடுத்தபோது எல்லாம் சரியாகி விட்டது. சுகன்யாவிடம் கர்சீப் கேட்டு வாங்கி, கை துடைத்துக் கொண்ட வசந்தி, இயல்புக்குத் திரும்பி விட்டதாகவே தோன்றியது. சில நிமிடங்களில் ராமநாதனும் சரஸ்வதியும் விடைபெற்றபோது கூட, தைரியமாக துக்கத்தை விழுங்கிக் கொண்டு சிரித்தாள் வசந்தி.

சேகருக்கும் அவளுக்கும் ஒதுக்கப்பட்ட அறையில் சரம்சரமாக மல்லிகை தொங்கவில்லை. வசந்தியின் பெட்டியை உள்ளே வைக்கப் போன சுகன்யா அதைக் கவனித்துச் சிரித்துக் கொண்டாள். ஒரு மாபெரும் மலர்ச் செண்டு, டிரெஸ்ஸிங் டேபிள் மீது இருந்தது. அதனருகே வாழ்த்து அட்டை. 'வெல்கம், வசந்தி' என்று எழுதி சேகர் குடும்பமே கையெழுத்துப் போட்டிருந்தது. பார்வை, படுக்கை பக்கம் திரும்புவதைத் தவிர்க்க முடியவில்லை. ரம்மியமான வெளிர் நீல விரிப்புகளால் மூடப்பட்டு, ஓர் ஓரத்தில் மட்டும் இரண்டே இரண்டு சிவப்பு ரோஜாக்கள். அறையின் மறுகோடியில், கனமான ஸ்டூலின் மேல் தஞ்சாவூர் கிருஷ்ணர் ஓவியம். சின்ன வெள்ளி ஸ்டாண்டில் பொருத்திய இரண்டு ஊதுபத்திகள் சந்தன மணத்தைத் தவழவிட்டுக் கொண்டிருந்தன.

"அமானுஷ்யமா டூயட் கேட்கப் போறது...!" - முதலிரவில் ஸ்ரீராமிடம் தான் சொன்னதும் பின்னர் தூங்கிப் போனதும்... நடந்து முடிந்து ஒரு யுகமாகி விட்டது போல் தோன்றினாலும் இன்னும் ஓராண்டு கூட முடிந்திருக்கவில்லை.

"குட் நைட் சேகர்! வசந்தி, புது இடம்னு நினைக்காதே. இது உன் வீடு. உரிமையோடு இரு. காலைல மெள்ள எழுந்தா போதும்..."

நெற்றியை வருடி உச்சி மோந்த சேகரின் அம்மா,



மகனைப் பார்த்து ஓரக்கண்ணால் சிரித்தாள். பளிச்சென்று அனைவருமே அவரவர் அறைகளுக்குள் போய்க் கதவடைத்துக் கொண்டார்கள். சுகன்யாவுக்கு வரவேற்பறை சோபாவில் தலையணை பெட்ஷீட் போட்டு வசதி செய்யப்பட்டிருந்தது.

"காலையில் பார்க்கலாம்..." சேகர் ரொம்ப இயல்பாக சுகன்யாவிடம் விடைபெற்றுக் கொண்டு, வசந்தியின் தோளைச் சுற்றி அணைத்து அழைத்துப் போனான்.

விளக்கு சுவிட்சைத் தேடி அணைத்துவிட்டு வந்து படுத்துக் கொண்டாள் சுகன்யா. தலைமாட்டில் டார்ச் லைட்டும், ஜாடியில் தண்ணீரும் வைத்திருந்த சம்பந்தியம்மாளின் முன்னேற்பாடும் கவனமும் பிடித்திருந்தது. கண்களை மூடிக் கொண்டபோது, ஸ்ரீராமின் முகம் விழித்திரைகளை நிறைத்தது. அவனிருந்தால், சுருட்டிக்கொண்டு வலித்த கணுக்கால்களை அழுத்தி, நீவி விடுவான். வலியில் தூக்கம் வர மறுக்கிறது. படுத்தவாக்கில் கால் விரல்களை மெள்ள விரித்து, நீட்டி மடக்கி பாதங்களுக்கும் கணுக்காலுக்கும் இதம் அளிக்க முயன்றாள் சுகன்யா.

நான்கு முறை அப்படிச் செய்ததும் வலி சற்று குறைந்ததாகத் தோன்றியது. ஐந்தாவது முறை விரல்களை நீட்டியபோது, கதவு திறக்கும் 'கிளிக்' ஒலி... நீட்டிய விரல்களை மடக்க மறந்து கவனித்தாள் சுகி. ஒலி, சேகர் – வசந்தி அறையிருந்த திசையிலிருந்து வந்தது. தொடர்ந்து, "வசந்தி இரு! வெயிட்..." என்று சேகரின் மெலிதான குரல்.

பதறி எழுந்தாள் சுகன்யா.

"மன்னி....!" ரகசியக் குரலில் அழைத்தபடி வந்து பற்றிக் கொண்ட வசந்தியின் கைகள் வெடவெடவென்று நடுங்கின.

"என்னாச்சு வசந்தி?" சுகன்யா மனத்திலிருந்த கலவரத்தை வெளிப்படுத்திக் கொள்ளாமல் உறுதியான தாழ்ந்த குரலில் பேசினாள்.

"எனக்கிது வேண்டாம்! ப்ளீஸ்... எனக்குப் பிடிக்கலை..." அத்தனை பயத்திலும் குரல் உயர்த்தாமல் பேச வேண்டும் என்பதை மட்டும் வசந்தி மறக்கவில்லை.



"இதோ பாரு! வசந்தி, நீ சின்னக் குழந்தையில்லே, என்னாச்சு இப்போ...?"

வசந்தியின் பிடி இறுக, சுகிக்கு உடம்பை வலித்தது.

"ஏய்! விடு... உனக்கு ஒண்ணும் ஆகாது. முதல்ல அழறதை நிறுத்து. ஷ்..."

பிடி தளர்வதாக இல்லை. அவள் பயம் நிஜமானது; தன் ஒருத்தியால் போக்க முடியாதது என்பது புரிய சுகன்யாவுக்கு அதிக நேரமாகவில்லை.

அவள் அடங்கட்டும் என இரண்டு நிமிடங்கள் பொறுத்திருந்தாள். விளக்கைப் போடவோ, டார்ச் லைட்டை ஆன் செய்யவோ தயக்கமாயிருந்தது. தூங்கிப் போன சேகரின் உறவினர்கள் யாராவது வந்துவிட்டால் கேவலமாகிவிடும். இந்தப் பெண்ணை எப்படியாவது சமாதானப் படுத்தி பெட்ரூமுக்குள் அனுப்பியாக வேண்டும்.

"வசந்தி! இங்க பாரு. நான் சேகர்கிட்ட வந்து பேசறேன். பயப்படக்கூடாது. எல்லாம்

கி. ராஜ்நாராயணன் ?

தங்க நகை பரிசு!

இந்த இருபத்தாறு வாரத் தொடர், ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு கதாசிரியர் பெயரில் வெளியாகி வருகிறது. ஆனால் அவர்களுள் ஒரே ஒரு நபர்தான் இதை எழுதி வருகிறார். தொடரை எழுதியவர் யார் என்பதைக் கண்டுபிடிப்பது உங்கள் சாமர்த்தியம். கடைசி வாரம் வரை காத்திருந்து, அந்த இதழில் வெளியாகும் கூப்பனில் விடை எழுதி அனுப்புங்கள். சரியான விடைக்கு, தங்க நகை பரிசு! பலர் சரியாக எழுதினால் குலுக்கலில் ஒருவரே பரிசு பெறுவார். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

தானா சரியாயிடும், கண்ணைத் துடைச்சுக்கோ.''

மாலை மாலையாய் வழிந்த கண்ணீரே பதிலாக, சுகன்யா குரலைக் கடுமையாக்கிக் கிசுகிசுத்தாள்.

“நோ! இனிமே அழுதா எனக்குக் கோபம் வரும்... எழுந்திரு... நான்தான் சேகர்கிட்டே பேசறேன்னு சொல்றேன்னில்ல...?''

அவளைத் தூக்கி நிறுத்தி, ஏறத்தாழ தள்ளியபடிதான் பெட்ரூமுக்குப் போக வேண்டியிருந்தது. அங்கே போனதுமே பிடுங்கியெடுத்த அல்லித் தண்டாகத் துவண்டு கட்டிலின் விளிம்பில் சுருண்டமர்ந்தாள்.

அப்போதுதான் அடிபட்ட பார்வையுடன் கேட்டான் சேகர் :

“இதுவும் நார்மலான விஷயம்தானா சுகன்யா?''

மிக கௌரவமாக மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள் சுகன்யா.

“ஸாரி சேகர்! கல்யாண மண்டபத்துல வசந்தி அழுதது நார்மல்தான். இது நார்மல் இல்லை. நான் ஒத்துக்கறேன். எங்க பேர்ல தப்பு. நாங்க அவளை இதுக்கு சரியா தயார் பண்ணலைன்னு நினைக்கறேன்... சில விஷயங்கள்ல ரொம்பப் பெரியவளா இருக்கா. வேற சில விஷயங்கள்ல பச்சைக் குழந்தை...''

வசந்தி இந்த உரையாடலை கவனிக்கும் நிலையில் இல்லாமல் முகத்தைக் கைகளில் கவிழ்ந்து அழுது கொண்டிருந்தாள்.

சுகன்யா குரலை மேலும் தாழ்த்திச் சொன்னாள். “சுபாவமாவே பயம் அதிகம். அழுதா....''

“என்ன சுகன்யா? She doesn't like me?"

“ஐயோ! அப்படியில்ல... ரொம்ப பொஸஸிவ். அவளுக்கு மட்டுமே நீங்க உரிமையாயிருக்கணும்னு நினைக்கற ரகம். ரிசப்ஷன்ல என்னாச்சு? கொஞ்சம் ஞாபகப்படுத்திப் பாருங்க...''

“ஓ! ஓ!...'' என்று ஏதோ பேராச்சர்ய உண்மை வெளிப்பட்டது போல் திகைத்தான் சேகர். ஒரு பெண்கள் படையே வந்து அவனைத் தோளில் தட்டி வாழ்த்திவிட்டுப் போயிருந்தது.

ஒரு நிமிடம் மௌனமாய் இருந்தான். பிறகு, “அவ்வளவுதானே! நான் அதை ரொம்ப சுலபமா பேசி சமாளிச்சுடுவேன்...'' என்று வசந்தியை நோக்கி நகர இருந்தவனைக் கைகூப்பித் தடுக்க வேண்டியதாயிற்று.

“பொறுமை! பொறுமை! சேகர். நீங்க நினைக்கிற மாதிரி அவ்வளவு எளிமையா காரியம் முடியும்னு எனக்குத் தோணலை...''

“சரி, நான் என்ன பண்ணணும்ங்கறீங்க? நீங்க வேணா இங்க உள்ள படுத்துக்கோங்க. நான் போய் அங்க ஹால்ல தூங்கறேன்...''

– விரக்தியின் உச்சத்திலிருந்து அவன் பேசியபோது சுகன்யாவுககு வேதனையாய் இருந்தது.

உண்மையைப் பளிச்சென்று உடைத்துப் பேச முடிவு செய்தாள். அறையை ஒட்டியிருந்த வராண்டா கதவைத் திறக்கச் செய்து, அங்கே அழைத்துப் போய்ச் சொன்னாள்.

“அவளுக்கு ஒரு மனோதத்துவ டாக்டர் உதவி தேவைன்னு நினைக்கறேன்...''

“ஓ காட்!''

“பயப்படாதீங்க, சேகர். சில பெண்களுக்கு இந்த மாதிரி பிரச்னை ஏற்படறதுண்டு. வசந்தி விஷயத்துல, வளர்ப்பு முறை, இயல்பான பயந்த சுபாவம், திடீர்னு, பழக்கமில்லாத நவீன சூழ்நிலைக்குத் தள்ளப்பட்ட அனுபவம் எல்லாமா சேர்ந்து பாதிச்சிருக்கு. கொஞ்ச நாளாவே திடீர் திடீர்னு இயல்பு மீறி நடந்துக்கறதும் கோபப்படறதும்... அப்பவே எனக்கு இந்தப் பிரச்னை முழுமையா புரிஞ்சிருந்தா இன்னிக்கு உங்களுக்கு இந்த ஏமாற்றம் ஏற்படாம தவிர்த்திருக்கலாம்.''

“நோ சுகன்யா! நீங்க என்னைத் தப்பா எடை போட்டுட்டீங்க... எனக்கு ஏமாற்றமேயில்லை! வருத்தம்தான். உங்களை ஒரு சகோதரியா நினைச்சுச் சொல்றேன். இன்னைக்கே வசந்தியை முழுமையா என்னுடையவளாக்கிக்கணும்ங்கற வெறியெல்லாம் எனக்குக் கிடையாது. நான் காத்திருப்பேன். அவளை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு... என் வாழ்க்கை அவளோடதான்கிற தீர்மானத்துக்கு வர்றதுல எனக்கு எந்தச் சிரமமும் இருக்கல்லை... ஆனா...''

சுகன்யாவின் கண்கள் குபுக்கென்று கண்ணீரால் நிறைந்து விட்டன. 'ஸ்ரீராம் மட்டும் கூட இருந்திருந்தால்... இந்த நிலைமையை

இன்னும் கொஞ்சம் சீராக சமாளித்திருக்கலாமோ...?' என்கிற எண்ணம் எழுந்தது.

"ஸாரி! வெரி ஸாரி, சேகர்..." என்பதைத் தவிர வேறெதுவும் சொல்லத் தோன்றவில்லை.

"எந்தப் பிரச்னையானாலும் அதை வசந்தி எங்கிட்டயே சொல்லி, பேசித் தீர்த்துக்கலாமே. உங்ககிட்டே அவ ஓடி வருவானேன்...?"

"பயம்! பயம்தான் காரணம். அதைப் போக்கறதுக்கு உங்களால தான் முடியும்..."

"அதுக்கு அவ என்னை அனுமதிக்கணுமே. இப்படி விலகி ஓடிப் போனா நான் என்ன பண்ணுவேன்?"

சுகன்யா, வசந்தியிடம் போய் உட்கார்ந்தாள். சேகர் அவளைப் பின்தொடர்ந்து போனான்.

"வசந்தி!" சுகன்யா அழைத்தாள்.

மிக மெதுவாக நிமிர்ந்த முகத்திலிருந்த பீதி வேதனைப் படுத்தியது.

"பயப்படாதே வசந்தி..." என்றான் சேகர். "உன் அனுமதியோ, விருப்பமோ இல்லாம எதுவும் நடக்காது. பிராமிஸ்...!" அவள் கையை மெள்ளப் பிடித்துத் தூக்கி, அவன் சத்தியம் செய்தபோது மருதாணி விரல்கள் நடுங்கிக் கொண்டிருந்தன.

"மன்னி...! அப்பா அம்மாகிட்டே சொல்லிட மாட்டேள் இல்ல... அவா அப்புறம் என்னை மன்னிக்கவே மாட்டா..."

"இல்லை, சொல்லலை... நீ இப்ப மனசை இலேசாக்கி, பிரார்த்தனை பண்ணிண்டு தூங்கு... நானும் போய்ப் படுத்துக் கறேன்."

"எங்க அப்பா அம்மாவுக்கும் கூட இந்த விஷயம் போய்ச் சேராது, போதுமா...?" சேகர் சொன்னது கேட்டு நிமிர்ந்து பார்த்த வசந்தியின் கண்களில் நன்றியோடு இலேசான குற்ற உணர்வும் கலந்திருப்பதைக் கண்டாள் சுகன்யா.

இந்தப் பிரச்னை தீர்க்கக்கூடியதுதான் என்கிற நம்பிக்கை முளைவிட, சற்றே இலேசான மனத்துடன் படுக்கப் போனாள்.

சேகரின் மன அறையில் விடிய விடிய விளக்கெரிந்தது.

ஐந்தரை மணிக்கு விழிப்புத் தட்டியது. சுகன்யா எழுந்த போது ஃபில்டர் காப்பி மணத்தது. சமையலறையிலிருந்து வெளிப் பட்ட சேகரின் அம்மா கேட்டார்!

"நன்னா தூங்கினேயா சுகன்யா...?"

"ஓ, நிம்மதியா தூங்கினேன். தாங்க்ஸ்..."

பல்துலக்கி வந்தவளுக்குச் சூடாக காப்பி தந்தபோது கொஞ்சம் தயங்கிப் பேசினார் மாமி.

"ராத்திரி ஏதோ பேச்சுக்குரல் கேட்டாப்பல இருந்தது?"

சுகன்யா ஒருகணம் திணறினாள். உண்மையைச் சொல்வதா? மறைப்பதா?

"ஒண்ணுமில்ல மாமி... வசந்திக்கு திடீர்னு சந்தேகம். ரிசப்ஷனுக்குப் போட்டுக்கிட்டிருந்த நகையையெல்லாம் அவிழ்த்து அவசரத்துல யார்கிட்டே கொடுத்தோம்னு மறந்து போச்சாம். அதைத்தான் எங்கிட்டே கேட்க வந்தா.... நான் பெரியத்தைகிட்டயிருந்து வாங்கி பத்திரமா வைச்சிருக்கேன்னு சொன்னப்புறம் தான் நிம்மதியாச்சு."

தன்னால் கூட இப்படிக் கூசாமல் பொய் சொல்ல முடிகிறதே என்று ஆச்சர்யப்பட்டுக் கொண்டாள் சுகன்யா.

"அப்படியா?" என்ற மாமியின் குரலில் அவநம்பிக்கை தொனித்தது.

(தொடரும்)



"கணித ஆசிரியரா இருந்தவனெல்லாம் கதை எழுத வந்து ரொம்பக் கஷ்டப்படுத்தரானுங்கப்பா..."

"எப்படி?"

"முக்கோணக் காதல் கதை எழுதச் சொன்னா, சம பக்க முக்கோணமா, சேங்கோண முக்கோணமான்னு கேட்கறான்!"

— வெ. ராஜாராமன்



• ராசன் பேக்

பெங்களூர் சிவாஜி நகர் தொகுதியில் ஒரு பிள்ளையார் கோயில் உள்ளது. ஒரு நூற்றாண்டுக்கு முந்தையது. தோல் தொழிலாளர்களின் வழி பாட்டுத் தலமான இது, சிதிலமடைந்தது. அந்தக் கோயிலை கர்நாடக அமைச்சர் செப்பனிட்டுள்ளார். இதில் என்ன விசேஷமென்றால், 1)அவர் காவல்துறை அமைச்சர்; 2) சொந்தச் செலவில் செப்பனிட்டார்; 3) மூன்றரை லட்சம் செலவு செய்தார்; 4) இத்தனைக்கும் இவர் ஹிந்து அல்ல; பெயர் ரோசன் பேக்.


— ப. மூர்த்தி.

பிரபலங்களின் குடும்பம் -
சுதா ரகுநாதன்

சுதா இரண்டாவது குழந்தையை வயிற்றில் சுமந்து கொண்டிருந்தார் – ஆறாவது மாதம். சுதாவின் அம்மா வீட்டில் தங்கி, படித்துக் கொண்டிருந்தான் கௌஷிக்.

"இங்கேதான் கீழே விளையாடிக் கொண்டிருந்தான் கௌஷிக். திடீரென்று காணோம். அக்கம்பக்கமெல்லாம் தேடிப் பார்த்தோம். பலன் இல்லை" என்று அம்மாவிடமிருந்து தகவல் வர, சுதா இடிந்து போய் விட்டார். உடனடியாக கச்சேரி ஒன்றுக்குக் கிளம்ப வேண்டிய அவசரம். அதேசமயம் எமோஷனலாக அப்செட் ஆனாலும் உடல்நிலை பாதிக்கப் படலாம்.

ரகுநாதன் அமைதியாக, "இப்போது நம்மால் முடிந்தது மகனைத் தேடுவது ஒன்றுதான். அதை நான் செய்கிறேன். நீ கச்சேரிக்குப் போகாமல் ரசிகர்களை ஏமாற்ற வேண்டாம். புறப்படு" என்றார். மனமில்லாமல் புறப்பட்ட சுதா, கச்சேரிக்கு நடுநடுவே வீட்டை தொலைபேசியில் தொடர்பு கொண்டிருக்கிறார். ரகுநாதன் தெருத் தெருவாக தேடிப் பார்க்க. அட்லாண்டிக் ஒட்டலிலிருந்து "உள்ளே நிறைய





ரூம்ஸ் இல்லே?" என்று தன் நண்பனிடம் பேசியபடி வெளியே வந்துகொண்டிருந்தானாம் கௌஷிக்!

"அந்த ஒரு கலவரமான சூழ்நிலையிலும் என் கணவர் பதற்றப்படவில்லை என்பதால், இந்த நிகழ்ச்சி என் மனத்தில் ஆழ்ச்சென்று பதிந்து விட்டது" என்றார் சுதா.

இப்போது முதல் வகுப்பில் படிக்கும் மாளவிகாவுக்கு, அந்தப் பெயரை இவர்கள் வைத்ததற்குக் காரணம் M, L, V ஆகிய எழுத்துக்கள் அந்தப் பெயரில் இருப்பதும், கூப்பிடும் போது "எம்.எல்.வி அக்கா" என்றே தொனிப்பதும்தானாம்! கண்டிப்பில்லாத ஆசிரியையாக வருங்காலத்தில் வருவதுதான் தம் லட்சியம் என்றாள் மாளவிகா! தபால் தலைகள் சேகரிப்பதைப் பொழுதுபோக்காகக் கொண்டிருக்கும் கௌஷிக், பொது அறிவை வளர்க்கும் விதத்தில் உருவாக்கப்பட்ட "Quest" என்ற காலனி இதழ் ஒன்றுக்கு ஆசிரியராக இருந்திருக்கிறான்!

— குல்லூ

படங்கள் : யோகா

"இன்னும் ஒரு கரண்டி பாயசம்...?"

"போதும்! போதும்!" இலை மீது கவிழ்ந்து மறுத்தாள் சுகன்யா.

"எனக்காக மன்னீ..." இனிமையில் முக்கி யெடுத்து வசந்தி கேட்டபோது நேராக அவள் கண்களுக்குள் பார்க்கத் தோன்றியது.

'முந்தைய இரவின் நிகழ்வுகள் எல்லாம் வெறும் துர்க் கனவுதானா...?' நம்ப முடியாமல் பாயசத்தைக் கிண்ணத்தில் வாங்கிக் கொண் டாள்.

வசந்தி சிரித்துவிட்டு அடுத்த இலையை கவனிக்கப் போனாள்.

உள்ளே வரலாமா? 20



சம்பந்தி விருந்தின் இரண்டாவது பந்தி சேகர் வீட்டில். முதல் பந்தியில் சாப்பிட்டு முடித்த வசந்தி ஏதோ ஏழெட்டு வருடமாக அங்கு புழங்கிய சுவாதீனத்துடன் சமை யலறைக்குள் போனாள். வாளியைத் தூக்கி வந்து பரிமாறினாள். உண்டு முடித்தவர் களுக்கு வெந்நீர், வெற்றிலை என்று தேவை கேட்டு உபசரித்து உச்சி குளிரச் செய்தாள்.

பார்க்கப் பார்க்க சுகன் யாவுக்கு வியப்பு கொள்ள வில்லை. நாம்தான் ஏமாந்து போய்விட் டோமோ...? நினைத்தது போல் நேற்றிரவு தூக்கத் திலும் பயத்திலும் நகரவில் லையா.... விடியும்வரை முழுசாக ஆறு மணி நேரம் இருந்ததே? எந்த கணத் திலும் வசந்தியின் பயம் விலகியிருக்கலாம்; சேக ரின் ஏமாற்றம் கரைந் திருக்கலாம். அப் படித்தான் ஆகி யிருக்க வேண்டும்... இல்லை, அப் படித்தான் நேர்ந்திருக்கிறது. அதில் என்ன சந்தேகம்...?

-'வசந்தியிடம் கேட்டு உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். வேண்டாம்... ஏதாவது கேட்கப் போய் இந்த இயல்பு நிலை குலைந்து விட்டால்....? சேகர்! சேகரிடம் கேட்கலாம். அது இன்னும் சுலபம்' என்று தோன்றியது சுகன்யாவுக்கு.

"என்ன சுகி... சாப்பிட்டு முடிக்கற ஐடியாவே இல்லையா...? வீட்டுக்குப் போகணும். பாக் பண்ணணும். பாம்பேல இரண்டு நாள் வேலை இருக்கு. இன் னைக்கு ராத்திரியே கிளம் பணும்னு சொன்னேனே... மறந் துட்டியா...?" பக்கத்திலிருந்த ஸ்ரீராம் இலேசாக முழங்கையால் இடித்து ஞாபகப்படுத்தினான்.

"மறக்கலை..." அவசர மாகத் தலையாட்டி விட்டு, பாயசத்தை

விழுங்கினாள். "கிளம்பலாம்..."

தாம்பூலம் பெற்றுக் கொண்ட போது, வசந்தி, நாத்தனார் குழந்தையை இடுப்பில் இறுத்தியபடி வழியனுப்பினாள்.

"ஆன்டிக்கு 'டாட்டா' சொல்லும்மா மது..." என்று அதன் பிஞ்சுக் கையைப் பிடித்து அசைத்துக் காட்டினாள்.

'இப்பத்தான் நிம்மதியாயிருக்கு...' வசந்தியிடம் சொல்லிவிடலாம் என்று எழுந்த வார்த்தைகளை அடக்கி, சேகரைத் தேடினாள்

சுகன்யா.

"ரொம்ப தாங்க்ஸ்!" என்றபடி வந்தவனுடன் இரண்டு நண்பர்கள்.

"எதுக்கு...?" ஸ்ரீராம் அவன் தோளைப் பற்றிக் கொண்டு கேட்டான்.

"எல்லாத்துக்கும்தான்! குறிப்பா இதுக்கு..." வசந்தியைப் பிடித்திழுத்துப் பக்கத்தில் நிறுத்திச் சொன்னான். அவள் கூச்சத்துடன் நெளிய, சுகன்யாவின் அத்தனை சந்தேகங்களும் பயங்களும் ஆவியாகிப் போயின.



"**இ**தைத் தவிர வேற டை கிடையாதா உன்கிட்டே...?" கருநீலப் பின்னணியில் சிவப்பு மாங்காய் வடிவங்களுடனிருந்த கழுத்து டையைக் காட்டிக் கேட்டாள் சுகி.

"இன்னும் இரண்டு இருந்தது... அதை குமார் ஏதோ காலேஜ் டிராமாவுக்கு வேணும்னு கொண்டு போனான். அப்புறம் திருப்பித் தரலை...."

"ஒரு டையை வைச்சுக்கிட்டு எப்படி ஆறு வாரம் ஓட்டுவே...?"

"நான் என்ன ஃபாஷன் ஷோவுக்கா போறேன்...? சாஃப்ட்வேர் விக்கணும்! அவ்வளவுதானே? அது விக்கும்..."

"இதோ பாரு! இந்தப் பேச்செல்லாம் உன் பாஸ் ராஜுகிட்டே வைச்சுக்கோ... என் புருஷன் ஸ்மார்ட்டா இருந்தாதான் எனக்குப் பிடிக்கும்.... உனக்கு இன்னும் இரண்டு டையாவது தேவை. இப்ப போய் வாங்கலாம்."

இரண்டு சூட்கேஸ்களில் ஸ்ரீராமின் உடைகளையும் அலுவலகக் காகிதங்களையும் அடுக்கி முடித்தவள் எழுந்தாள்.

"வா, போகலாம்..."

"எங்க...?"

"டை வாங்க..."

"சுகி ப்ளீஸ்! உனக்கு கருணையே இல்லையா? இன்னும் ஆறு மணி நேரத்துல நான் ஏர்போர்ட்டுக்குக் கிளம்பணும்! போனா திரும்பி வர ஆறு வாரம் ஆகும். நீயானா ஆறு நிமிஷம்கூட என் பக்கத்துல உட்கார மாட்டேங்கற..."

"டை...?"

"பாம்பே ஆபிஸ்ல வனிதா, ரேணுன்னு இரண்டு அழகான மார்கெடிங் எக்ஸிகியூடிவ்ஸ் இருக்காங்க... அங்க இருக்கிற இரண்டு நாள்ல அவங்களைக் கூட்டிட்டுப் போய் அரை டஜன் டை வாங்கிக்கிறேன்... ஓ...கே...?"

"ஸ்ரீராம் எனக்குப் பொறாமை ஏற்படுத்தணும்னு பார்க்கறியா...? ஸ்டுப்பிட்! யூ ஆர் கிரேஸி..."

"யூ ஆர் ஜெலஸ்...! இல்லைன்னு சொல்லேன் பார்க்கலாம்..."

"அமெரிக்கா போறதுனாலே பெரிய கொம்பு முளைச்சதா நினைப்போ... சும்மா உளறாதே..." - உச்ச ஸ்தாயியில் கத்திவிட்டு விசித்து விசித்து அழுதாள் சுகன்யா.

பதறிப் போய் அவளருகே உட்கார்ந்தான் ஸ்ரீராம். அவன் மடியில் முகம் புதைத்துக் கொண்டு சுடச் சுட கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள் சுகி.

சிதைந்து போன குழந்தைக் கனவு. மீண்டும் உடனே கருவுறக் கூடாது என்ற டாக்டரின் எச்சரிக்கை. வசந்தியின் கல்யாணப் பொறுப்பு. அதன் காரணமாக விழுந்த ஸ்பரிச இடைவெளி... இப்போது இருவரையுமே எதிர்நோக்கியிருக்கும் ஆறு வாரப் பிரிவின் பயமுறுத்தல்...

பிறர் சுமைகளையும் பிரச்னைகளையும் சேர்த்துத் தாங்கித் தளர்ந்த தோள்கள் துவண்டே போயின. உறுதியும் உத்வேகமும் படைத்த இளம் மனங்கள் இளகி வசமிழந்த நிலையில் வார்த்தைகள் விகாரமாய் வெளிப்பட்டன. நிகழப்போகும் பிரிவுக்கு யாரையும் குற்றம் சொல்ல முடியாத நிலையில் ஒருத்தரை ஒருத்தர் குழந்தைத்தனமாய்க் காயப்படுத்திக் கொண்டு தவித்தார்கள். பின்னர் அதற்குக் களிம்பும் தேடிக் கொண்டார்கள்.

"சுகி சுகி... ப்ளீஸ் என்னைப் பாரு..." கெஞ்சிக் கெஞ்சி அவள் முகத்தை நிமிர்த்தினான். ஈர இமைகளை முத்தமிட்டு அவளை அணைத்தபோது புடைவைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டாள்.

"என்னாச்சு... புதுப்பொண்ணு மாதிரி... வெட்கப்படறே..."

"இல்ல, டாக்டர்... வேண்டாம் ஸ்ரீராம்" என்று குரல் நடுங்க அவனிடம் ஒண்டிக் கொண்டாள்.

"டு ஹெல் வித் எவ்ரிதிங்..." அவன் பதிலுக்காக அவள் காத்திருக்கவில்லை.

பௌர்ணமி அலையாகப் பொங்கிய மோகம் தணிந்து அடங்கிய பின்னும் சந்தோஷச் சிற்றலைகளால் அந்த அறையே ஆக்கிரமிக்கப்பட்டுக் கிடந்தது.

சுகன்யாவின் ஒவ்வொரு விரலாக நீட்டி மடக்கியபடி கணக்கு போட்டான் ஸ்ரீராம்.

"முதல் வாரம் கஷ்டமா இருக்கும். இரண்டாவது வாரம் அதைவிட கஷ்டமா இருக்கும், மூன்றாவது வாரம் அதைவிட கஷ்டமா இருக்கும்; நாலாவது வாரம்..."

"பழகிப் போயிடும்..." அவன் வெற்று மார்பில் ஒரு முட்டு முட்டி அவள் சொல்ல.

"என்ன சொன்னே...?" பொய்க் கோபத்துடன் அவள் கூந்தலைப் பற்றி அவன் உலுக்க...

வாசல் மணி பெரிதாக அடித்தது.

அவசரமாக புடைவையை சரி செய்து கொண்டு போனாள் சுகன்யா.

பக்கத்து வீட்டு சரோஜா... "உங்களுக்குப் போன் வந்திருக்கு சுகன்யா! சேகர்னு ஒருத்தர் பேசறார்..."

"இதோ வரேன்... ஒரு நிமிஷம் லைன்ல இருக்கச் சொல்லுங்க..."

ஸ்ரீராமிடம் சொல்லிவிட்டு, செருப்பை மாட்டிக் கொண்டு ஓடினாள்.

"ஸாரி சுகன்யா! தொந்தரவு பண்றேனா...?" என்றான் சேகர்.

"நோ நோ! அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை..." அடுத்து என்ன சொல்வது என்று புரியாமல் அவன் பேசக் காத்திருந்தாள்.

"நான் வெளில போன் பூத்லேயிருந்து பேசறேன், சுகன்யா... வந்து... வசந்தி விஷயம்தான்..."

"உம்..." என்பதற்கு மேலாக எதுவும் சொல்ல முடியாமல் காத்திருந்தாள் சுகன்யா.

"நேத்து ராத்திரி அவ தூங்கவேயில்லை... நானும் தூங்கலை. ஆனா ஒரு வார்த்தைகூட பேசிக்கலை. காலைல எழுந்தப்பறம் வேற வசந்தியா மாறிட்டா. எல்லார் முன்னாலயும் ரொம்ப இயல்பா சாதாரணமா இருக்கா. எனக்கு ஒண்ணுமே புரியலையே சுகன்யா...?"

"கவலைப்படாதே சேகர்..." காலையில் உதித்த புதிய நம்பிக்கைகள் தகர்ந்துபோன ஏமாற்றத்தை வெளிக்காட்டாமல் சொன்னாள் சுகன்யா.

"நான் என்ன செய்யணும்னே தெரியலையே... உடனே ஏதாவது டாக்டர் உதவி கேட்கணுமா? பேசாம விட்டுப் பிடிக்கணுமா...?"

"சேகர்! இது பக்கத்து வீட்டு நம்பர்..."

"எனக்குத் தெரியும் சுகன்யா. அங்கேயிருந்து நீங்க பதில் பேச முடியாதுன்னு தெரியும். ஆனா யார்கிட்டேயாவது பேசலைன்னா பயமாக இருக்கு... உங்களைத் தவிர வேறு யார்கிட்டே நான் இதைப் பத்திப் பேசறது... ஸ்ரீராம்கிட்டே சொல்லலாம்... ஆனா அவர் வெளிநாடு போற மும்முரத்துல இருப்பார்... இந்த நேரத்துல அவருக்குக் கவலை தரக்

தங்க நகை பரிசு!

இந்த இருபத்தாறு வாரத் தொடர், ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு கதாசிரியர் பெயரில் வெளியாகி வருகிறது. ஆனால் அவர்களுள் ஒரே ஒரு நபர்தான் இதை எழுதி வருகிறார். தொடரை எழுதியவர்

யார் என்பதைக் கண்டுபிடிப்பது உங்கள் சாமர்த்தியம். கடைசி வாரம் வரை காத்திருந்து, அந்த இதழில் வெளியாகும் கூப்பனில் விடை எழுதி அனுப்புங்கள். சரியான விடைக்கு, தங்க நகை பரிசு! பலர் சரியாக எழுதினால் குலுக்கலில் ஒருவரே பரிசு பெறுவார். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

கூடாது...''

"ரொம்ப தாங்க்ஸ் சேகர். உன் முடிவு சரியானது...''

"நீங்க ஸ்ரீராமை வழியனுப்ப ஏர்போர்ட்டுக்குப் போகலை...?''

''இல்லை. டாக்ஸி ஏற்பாடு பண்ணியிருக்கு...''

"எத்தனை மணிக்கு வரும்...?''

"சாயந்திரம் ஆறு மணிக்கு...''

"அதை கான்ஸல் பண்ணிடலாம். நான் வந்து உங்க இரண்டு பேரையும் ஏர்போர்ட்டுக்கு அழைச்சுட்டுப் போறேன்.''

"உனக்கெதுக்கு சிரமம் சேகர்... மேலும் இனிமே டாக்ஸியை கான்ஸல் பண்றதுன்னா நேரம் இல்லையே...''

"கவலைப்படாதீங்க! அதை நான் பார்த்துக்கறேன். ஏர்போர்ட்லேயிருந்து திரும்பி வரும்போது உங்ககூட பேச எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்...''

"சரி....''

சரோஜாவுக்கு நன்றி சொல்லிவிட்டுத் திரும்பியபோது ஸ்ரீராம் கேட்டான்.

"யார் போன் பண்ணது...?''

"சேகர்...'' என்றதும் ஒரு கேள்விக்குறியுடன் அவளைப் பார்த்தான்.

"உன்னை ஏர்போர்ட்டுக்கு அழைச்சுட்டுப் போக அவனே வரானாம்...''

"ஓ! டாக்ஸி...?''

"பரவாயில்லை. கான்ஸல் பண்ணிடலாம்ங்கறான். இங்க வந்த பிறகு காசு கொடுத்துதான் அனுப்பணும்! வேற வழியில்லை...''

"ஒரு விதத்துல நல்லதாப் போச்சு...'' என்றான் ஸ்ரீராம்.

"கல்யாணம் ஆனப்புறம் நான் வசந்திகிட்டே சரியாவே பேசலை. அவளைப் பார்த்துப் பேசி, கொஞ்சம் பொழுது அவளோட இருந்த மாதிரியும் இருக்கும்...''

"வசந்தி வரப்போறதில்லை...'' என்று சொல்லும் தைரியம் சுகன்யாவுக்கு எழவில்லை.

சேகர் மட்டுமே காரில் வந்து இறங்கும்போது என்ன விளக்கம் கொடுக்கப் போகிறான்? புதுப் பொண்டாட்டியை வீட்டில் விட்டுவிட்டு, கல்யாணமான மறுநாள் மாலையே ஒரு மாப்பிள்ளை என்ன தலை போகிற காரியத்துக்குத் தனியாகப் போகிறான் என்கிற கேள்வி அவன் வீட்டில் எழாதா... வசந்தியிடம் என்ன பொய் சொல்லிவிட்டு வரப் போகிறான்?

எல்லா பொய்களும் முன் கூட்டியே தெரிந்திருந்தால் சமாளிப்பது எவ்வளவு செளகரியம்...!

ஸ்ரீராமின் பெட்டிகளைப் பூட்டி, சாவிக் கொத்தை அவன் பர்ஸ் அருகே வைத்து விட்டு சமையலறைக்குப் போனபோது மீண்டும் வாசல் மணி அடித்தது.

"அப்பா வந்திருக்கார்.'' கதவைத் திறந்த ஸ்ரீராம் அறிவித்தான்.

கல்யாணக் களைப்பில் இருப்பார்கள் என்பதால் காலையிலேயே அனைவரிடமும் விடைபெற்று வந்து விட்டான் ஸ்ரீராம். ஆனாலும் மனசு கேட்காமல் அவனை வழியனுப்ப வந்திருக்கிறார்.

சேகர் வருவதற்கு முன்பாக இவரை இங்கேயிருந்து ஏறக்கட்டியாக வேண்டும். எப்படி...? ஆனால் ராமநாதன் சாவகாசமாய் இருந்தார்.

''ஸ்ரீராமா! பாக்கிங் எல்லாம் முடிச்சிருப்பேன்னு தெரியும். உங்கிட்டே கொஞ்சம் தனியா பேசணும்னுதான் வந்தேன்.''

காப்பியைக் கொண்டு வந்த சுகன்யாவுக்குத் தலை சுற்றியது!

'கடவுளே! இது என்ன தனியாகப் பேசும் சிறப்பு தினமாக விடிந்ததா... இன்னும் என்ன புதுக் குழப்பமோ...'

இங்கிதமாக அகன்று போக இருந்தவளைத் தடுத்து நிறுத்தினார் மாமனார். ''நீயும் இரும்மா... ஒண்ணும் பெரிய ரகசியமில்ல...''

"ஏதோ ஒரு வேகத்துல பணம் வேண்டாம்னு சொல்லிவிட்டேன், ஸ்ரீராம்! இப்ப அது தேவையா இருக்கு... ஊருக்குக் கிளம்பற நேரத்துல தொந்தரவு பண்றேன்னு கஷ்டமா இருக்கு... ஆனா நான் வேற யாரைப் போய்க் கேட்பேன்?''

"நீங்க யாரையும் கேட்க வேணாம்பா... நானே தயாரா வைச்சிருக்கேன். அதுவும் சுகிதான் முன் யோசனையா சொல்லிக் கொடுத்தா... எதுக்கும் லோன் அப்ளை பண்ணி ஷார்ட்டெர்ம் டெபாஸிட்ல போட்டு வைக்கலாம்னு... ஜாயின்ட் அகவுன்ட்தான். நாளைக்கு அவளே கையெழுத்துப் போட்டுக் கொடுத்துடுவா... நீங்க டிரா பண்ணிக்குங்க... அம்பதாயிரம் வரைக்கும் எடுத்துக்கலாம்...''

"எனக்கு முப்பதாயிரம் போதும்பா... நான் உனக்கு நன்றி சொன்னா நல்லாயிருக்காது... ஆனா இப்படி ஒரு புத்திசாலி மருமகளை எனக்கு அனுப்பி வைச்ச ஆண்டவனுக்கு நன்றி சொல்றேன்...'' என்றார் ராமநாதன்.

பிரமிக்கவோ, நெகிழவோ சுகன்யாவுக்கு அவகாசம் தராமல் சேகரின் கார் வாசல் கேட் அருகே வந்து நின்றது.

(தொடரும்)


"எஃப்.ஐ.ஆர். பதிவு பண்ணணுமா...? முதல்வர், பிரதமர், மத்திய அமைச்சர்னு யாராவது சிபாரிசு பண்ணியிருந்தா வாங்க..."





"என் பிரச்னையை இவர் தீர்த்து வைப்பாருங்கறீங்க...? என் கஷ்டங்களைச் சொல்லி முடிக்கிறதுக்குள்ளேயே தூங்கிட்டாரே...!"

"என் சொத்துக்கள் பட்டியலை நான் கொடுக்கத் தயார். என் மனைவி, மகன்கள், பெண்கள், மாமியார் மாமனார், வேலைக் காரர்கள், என் நாய்.... இவங்க சொத்து விவரத்தை மட்டும் கேட்காதீங்க..."





"ஏன் பயப்படறீங்க? ஆவணங்களை எரிக்கவும், ஃப்ளாப்பியெல்லாம் கலைக் கவும், தடயங்களை அழிக்கவும் போதுமான அவகாசம் கொடுத்துட்டுத்தானே நாங்க வந்திருக்கோம்...."

– இந்தியன் ஃபீச்சர்ஸ்

பேரே வெளியே தெரியல்லியே... படு டல்லான உடன்பிறந்த சகோதரர்கள் போல இருக்கு...''

அச்வின் அடுத்து வெள்ளை மாளிகை நூல் நிலையத்துக்குள் நுழைந்தான். பழைய சரித்திர ஆவணங்களும் அரிய புத்தகங்களும் சேகரித்து வைக்கப்பட்ட இடம் அது.

''இதான்ப்பா அமெரிக்க சுதந்திரப் பிரகடனம்...''

அவன் காட்டிய சரித்திர ஆவணம் இரு நூற்று இருபது வருடம் முந்தியது. பொடி எழுத்தில், 'இங்கிலாந்து காலனியாதிக்கத்திலிருந்து விடுதலை... விடுதலை...' என்று எழுதி அமெரிக்க முதல் ஜனாதிபதி தாமஸ் ஜெபர்சான் 1776ம் ஆண்டு ஜூன் 11ந்தேதி கையெழுத்துப் போட்டிருக்கிறார்! அருமையான ஸ்கேன் செய்து போட்டு வைத்த படம்.

நான் 'குழந்தைகளுக்கு வெள்ளமாளிகை' என்ற பகுதிக்குள் புகுந்தேன். 'வாங்க குழந்தைகளே... உங்களுக்கு கொள்ளுத்தாத்தா ஆபிரகாம் லிங்கன், தாத்தா கென்னடி பற்றி எல்லாம் சொல்றோம்' என்று போட்டு வைத்துவிட்டு கிளிண்டன் மாமா பற்றித்தான் நிறையச் சொல்கிறார்கள்!

'அமெரிக்கார்ப்ஸ்' என்ற பெயரில் கிளிண்டன் ஆரம்பித்திருக்கும் சேவைப் படையில் சேர்ந்து, தெருக்களை சுத்தமாக வைத்திருப்பது, புயல், வெள்ள நிவாரணப் பணிகள் போன்ற சமூகத் தொண்டில் ஈடுபடும் இளைஞர்களுக்குப் படிப்பிலும், தொழிற் கல்வியிலும் சில சலுகைகள் வழங்கப்படுமாம்.

'வெள்ளை மாளிகையில் இது புதுசு' என்ற பகுதி. இரண்டு நாள் முன்னால் கிளிண்டன் செய்த சொற்பொழிவு அது. தியாகிகளுக்கு வீர வணக்கம்... உங்கள் சேவையே என் குறிக்கோள்... சாதனைப் பட்டியல் பாரீர்... பாரீர்... இத்யாதி.

''இந்த விஷயத்திலே அமெரிக்காவும் நம்ம நாடும் ஒண்ணுதான்'' என்றேன்.

''அரசியலும் காதலும் எங்கேயும் ஒரே மாதிரித்தான்... அரசியலைப் பாத்தாச்சு... அடுத்தது காதல்...''

விசிலடித்துக் கொண்டே அவன் கொடுத்த இன்டர்நெட் விலாசம்- http://www.cs.cmu.edu/afs'. கார்னகி மெல்லன் பல்கலைக் கழகத்தின் தகவல் வீடு அது.



'காதலிப்பது எப்படி' என்று படுசீரியஸாக கிளாஸ் எடுத்திருக்கிறார்கள். காதலியை இம்ப்ரெஸ் செய்ய அவர்கள் கொடுத்திருக்கும் யோசனைகள் எல்லாம் அமெரிக்க சுதந்திரப் பிரகடனத்தை விடப் புராதனமானவை.

உதாரணமாக, ''புட்பால், பேஸ்பால் மாதிரி ஏதாவது விளையாட்டு பத்தி விலாவாரியாப் படிச்சு கடம் அடிச்சுட்டு, அதிலே சாம்பியன் போல அப்பப்ப பீலா விடுங்க... நீங்க வெள்ளையாடறதைப் பார்க்கணு மேன்னு பொண்ணு தொந்தரவு கொடுத்தா, நைசா ஜகா வாங்கிடுங்க...''

''கார்னகி மெல்லன் யூனிவர்சிட்டி புள்ளைங்களுக்கு வெவரம் பத்தாது... இங்கே நம்ம கல்லூரி வாசல்லே ஒரு மாசம் டிரெயினிங் எடுத்தாத் தேறிடுவாங்க... அனுப்பச் சொல்லி கிளிண்டனுக்கு ஈ-மெயில் அனுப்பறேன்...''

அச்வின் ஆரம்பிக்க, தொலைபேசி இணைப்பு போயே போச்சு.

— இரா.முருகன்

இன்டர்நெட் கம்ப்யூட்டர் உதவி:
SAP Computers (P) Ltd,
Chennai-17



“எக்ஸ்கியூஸ் மீ, மிஸஸ் சுகன்யா... எனக்கு ஒரு விஷயம் தெரிஞ்சாகணும் இப்ப... நீங்க டாக்டரா? இல்லை நான் டாக்டரா...”

மனநல மருத்துவர் மகேஷ் கேட்டபோது சுகன்யா சிரித்து விட்டாள். அவள் சிரிப்பில் அவரும் சேர்ந்து கொண்டார்.

“ஸாரி டாக்டர்! நானே ரொம்ப பேசிக்கிட்டிருந்துட்டேன்.”

“இருக்கட்டும்... நீங்க பேசறதோட... நிறுத்தலை... பிரச்னைக்கான காரணம் என்னன்னு ஆராய்ஞ்சு டயக்னோஸ் பண்ணி... ட்ரீட்மெண்ட்தான் இன்னும் சொல்லலை...”

“அதை நீங்கதானே டாக்டர் சொல்லணும்...”

“முதல்ல அந்த தம்பதியைப் பார்க்கணும்மா. அப்புறம் அவங்ககிட்ட பேசணும். உங்கிட்டே பேசினதை வச்சு நான் எந்த முடிவுக்கும் வர முடியாது”

“எப்ப அழைச்சுட்டு வரட்டும் டாக்டர்...”

“அதை நீங்கதான் அவங்க சௌகரியம் கேட்டு முடிவு பண்ணிச் சொல்லணும் சைக்யாட்ரிஸ்ட்கிட்டே போகணும்...

ளாலே கோபப்படுவாங்க... 'எங்களுக்கென்ன பைத்தியமா?'ன்னுவாங்க. குடும்பத்துல உன்னைத் தவிர வேற யாருக்கும் விஷயம் தெரியாதுன்றே. ரகசியமா அழைச்சிட்டு வரப் போறியா...? எப்படி சமாளிப்பே...?''

கடந்த பதினைந்து நிமிடங்களாகப் பொறிந்து தள்ளியவள் மௌனமானாள்.

''ஸாரி டாக்டர்! உங்க நேரத்தை இனி மேலும் வீண்டிக்கலை... அவங்களை முதல்ல இங்க வர்றதுக்குத் தயார்ப் பண்ணிட்டு அப்புறம் அபாயின்ட்மெண்ட் கேட்கறேன்.''

''உங்களுக்காவது இப்படி வந்து ஆலோசனை கேட்கணும்னு தோணிச்சேம்மா... அதுவே பெரிய விஷயம்தான். ஆல் தி பெஸ்ட்...''

சுகி எழுந்து விடைபெற, டாக்டர் இன்டர்காமில் ''யெஸ்'' என்றார்.

ரிசப்ஷனைக் கடந்தபோது அங்கு உட்கார்ந்திருந்த நபர்களின் முகங்களைக் கூர்ந்து பார்க்கத் தோன்றியது. தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு வெளியேறினாள். 'சேகரும் வசந்தியும் இங்கு வந்து காத்திருந்தால் இதே கூர்மையுடன் தானே பிறர் அவர்களைப் பார்ப்பார்கள்...!' சேகரின் தயக்கத்துக்கான காரணம், அவன் உணர்வுகளின் வலைப் பின்னல் எல்லாமே அந்த வினாடியில் புலனாகின. மனபாரம் கூடிப்போய் நடை தளர்ந்தது.

ஆட்டோ பிடித்து ஏறிக்கொண்டபோது எங்கே போவதென்று முடிவு செய்திருக்கவில்லை. 'மீண்டும் சசியைப் போய்ப் பார்த்தால் என்ன...?'

என்ன வேணுமோ?

''எக்மோர்ல பி.எம்.ஸி. லேடீஸ் ஹாஸ்பிடல் போகணும்...'' என்றாள் சுகன்யா.

டாக்டர் மகேஷிடம் வழிகாட்டி, அனுப்பியவள் சசிதான். லேடீஸ் ஹாஸ்டல் நாட்களில் சுகியிடம் நெருங்கி வரத் துணிந்த வெகு சிலரில் ஒருத்தி.

அவளை அணுகி, இந்தச் சின்ன உதவி பெறுவதற்குள் எத்தனை பொய்கள் சொல்ல வேண்டியிருந்தது! ஸ்ரீராம் கிளம்பிய அந்த மாலைப் பொழுதில் ஆரம்பித்தது நாடகம்.

சேகர் வந்து இறங்கியதுமே எதிர்பார்த்தபடி ராமநாதன், ''வசந்தி வரலையா மாப்பிள்ளை...?'' என்று தான் ஆரம்பித்தார்.

''அவளுக்குத் தலைவலி, ரொம்ப சோர்வா இருக்கா...''

''அப்படியா...?'' - ராமநாதனைக் காட்டிலும் அதிகம் பதறினான் ஸ்ரீராம். ''கொஞ்சம் முன்னால கிளம்பி அவளைப் பார்த்துட்டு வேணா போலாமா... இஃப் யூ டோண்ட் மைண்ட்...?''

''அடடா! மாப்பிள்ளைதான் ஏர்போர்ட்டுக்கு அழைச்சுண்டு போறாரே...? நீயும் போறியாம்மா சுகன்யா...?''

''ஆமாம்பா...''

''அப்ப நானும் வந்துடறேன். ஏனா மூணு பேரா போக வேண்டாம். இருந்திருந்து முதல் முறையா ஸ்ரீராமன் வெளிநாடு போறான். வசந்தியையும் பார்த்தாப்பல இருக்கும்.''

''ஓ, தாராளமா வாங்க...'' சேகர் ஏமாற்றத்தை மறைத்துச் சொல்கிறானா? இல்லை நிஜமான உற்சாகத்துடன் பேசுகிறானா?

''சுகன்யா, நீங்க ரொம்ப நல்லா ரவை உப்புமா செய்வீங்களாமே? வசந்தி சொல்லியிருக்கா... இப்ப எனக்கு செமை பசி... செஞ்சு கொடுத்தீங்கன்னா மூணு பேருமே சாப்பிடுவோம். அப்புறம் கிளம்பலாம்.'' துளிக்கூட நடிப்பின்றி சேகர் தொடர்ந்தபோது நிலைக்கு வந்து இயங்க ஆரம்பித்தாள்.

அவளைப் பின்தொடர்ந்து சமையலறைக்கு வந்த மாமனார், அக்கறையுடன் விசாரித்தார். ''ஏன்மா, திடுதிப்புன்னு இப்படி உப்புமா கேட்கறாரே! வீட்டில ரவை, நெய் எல்லாம் இருக்கா... ஏதாவது போய் வாங்கிண்டு வரவா...?''

''அதையெல்லாம் வீணாக்கக் கூடாதுன்னு ஃப்ரிஜ்ல வைச்சிருந்தேன்பா... பச்சை மிளகாயும் கொத்துமல்லியும் தான் இல்லே...''

தயக்கமாய் அவள் சொன்னபோது, ''இதோ வாங்கிட்டு வந்துடறேன்.''

ராமநாதன் அகன்றிருந்த அந்த ஐந்து நிமிடங்களில் ரவையைச் சலித்துக் கொண்

டிருந்த சுகன்யாவிடம் வந்தான் சேகர்.

"ரவை உப்புமா செய்ய எத்தனை நேரம் ஆகும்...?"

"பதினைந்து – இருபது நிமிடம்...?"

"இன்னிக்கு நீங்க ஒரு மணி நேரம் ரவை உப்புமா செய்யறீங்க..."

"என்ன...?"

"அப்பதான் எங்க வீட்ல போய் வசந்தியைப் பார்க்க நேரமில்லைன்னு சொல்லி, நேர ஏர்போர்ட் போக முடியும்...?"

புரியாமல் பார்த்த ஸ்ரீராமின் தோள் மீது கை போட்டு, "இப்ப நாம அங்கே போனோம்னா வசந்தி திரும்பவும் அப்செட் ஆனாலும் ஆயிடுவா... மத்தியானம் நீங்க கிளம்பின பிறகு ஒரு ஹோம் சிக் ஆகி... தூங்கி எழுந்த பிறகு அவ ஃப்ரெண்ட்ஸ் இரண்டு பேர் வந்தாங்க... கொஞ்சம் சரியாயிருக்கா. இந்த நேரத்தில போய்த் திரும்பவும் எல்லாத்தையும் கிளர்ற மாதிரி ஆயிடாது...? மாமா இருக்கும்போது சொன்னா அவர் மனசு கஷ்டப்படுவார்னுதான் சொல்லலை..." — இப்படிச் சுலபமாக சிக்கல் தீர்த்தான்.

சுகன்யாவுக்குக் கைச் [illegible]யுடன் சேர்ந்து தலையும் சுற்றியது!

ரவா உப்புமாவை மாய்ந்து மாய்ந்து முக்கால் மணி நேரத்துக்கு இழுக்கடித்தாள். ஒரு வழியாக ஸ்ரீராமை பாம்பே ஃப்ளைட்டில் ஏற்றிவிட்டு மாமனாரை அவர் வீட்டில் இறக்கி விட்டுக் கிளம்பியபோது,

"முதல்ல அவர் வசந்திக்கு போன் பண்ணி தலைவலி எப்படியிருக்குன்னு கேட்கப் போறார்... என்ன நீ இப்படி அனாயாசமா பொய் உதிர்க்கறே...?"

"வசந்திக்கு நிஜமாவே தலைவலிதான்..."

"ஐயோ! ப்ளீஸ் சேகர்... எது நிஜம், எது பொய்னு எனக்கு முதல்ல சொல்லிடு. இல்லைன்னா தலைமுடியெல்லாம் கொட்டி-

ஸ்ரீராம் திரும்பி வர்றதுக்குள்ளே [illegible] தெரியாம மாத்திடுவேன்!"

"ஐ எம் ஸாரி சுகன்யா... உங்களுக்கு [illegible] ஆனா எனக்கு வேற வழியே தெரியலை. என்னவோ உங்களைப் பார்த்தா எதை வேணா தைரியமா பேசலாம்ங்கற நம்பிக்கை வருது – வேற யார் கிட்டேயும் ஏற்படாத ஒரு நம்பிக்கை. இதை வெறும் புகழ்ச்சிக்காகச் சொல்லலை..."

"தாங்க்யூ சேகர். ஆனா இப்ப நீங்க விஷயத்துக்கு வாங்க ப்ளீஸ்..."

"வசந்திக்குத் தலைவலி [illegible] உண்மை. அவளுக்கு [illegible] ஸ்ரீராமை ஏர்போர்ட்டில் [illegible] தெரியும்கிறது [illegible] உங்களுக்கு [illegible] [illegible] [illegible] ஆனா [illegible] செனட் ஆக [illegible] ஏதாவது சொல்லி சமாளிக்க [illegible] ஸ்ரீராம் கிட்டே பொய் சொல்லி சமாளிச்ச மாதிரி..."

"கம்ப்யூட்டர் வேகத்துல பொய் சொல்றியே! 'ஆட்' ஏஜென்ஸிக்கு ஏற்ற மூளைதான்..."

சுகன்யாவின் கிண்டல் சேகருக்கு ரசிக்கவில்லை.

"என்ன பெரிய மூளை. போங்க! எனக்குன்னு ஒரு பிரச்னை வரும்போது சமாளிக்க முடியாம உங்க உதவியைத்தானே கேட்க வேண்டியிருக்கு?"

ஜவஹர்புரம் வீட்டை அடைந்திருந்தார்கள். "இதோ பார் சேகர்! இந்த மாதிரி குற்ற உணர்வோட பேசறதானா நீ எங்கிட்டே பேசவே வேண்டாம். ஒரு நட்புரிமையோட பேச முடியும்னா இங்கே உள்ளே வா."

"ஸாரி... நீங்க போங்க சுகன்யா. நான் காரைப் பூட்டிட்டு உள்ளே வர்றேன்..."

சுமார் ஒரு மணி நேரம் பேசினான்.

"வசந்தி மதியம் கிடைத்த தனிமையில் சற்று இளகியிருந்தாலும் இன்னமும் அவ னிடம் முழுசாக் மனம் திறக்கவில்லை. இதை இப்படியே விட்டு விடுவதற்கில்லை. இரவில் பார்த்த பயந்த பெண்ணை விட பகலில் பார்த்த பாந்தமான மனைவி பயமுறுத்தினாள். இது எப்படி சாத்தியம்? ஒரே பெண் என்று நம்பவே முடியவில்லை. மனநல உதவி வேறு தேவை என்று சொல்லி விட்டார்கள்... ஸ்ப்ளிட் பெர்ஸனாலிடி என்கிறார்களே, அது மாதிரி ஏதாவது கோளாறா...? அப்பா அம்மாவிடம் சொல்லவா...? சொல்வதால் விஷயம் [illegible]

தங்க நகை பரிசு!

இந்த இருபத்தாறு வாரத் தொடர், ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு கதாசிரியர் பெயரில் வெளியாகி வருகிறது. ஆனால் அவர்களுள் ஒரே ஒரு நபர்தான் இதை எழுதி வருகிறார். தொடரை எழுதியவர் யார் என்பதைக் கண்டுபிடிப்பது உங்கள் சாமர்த்தியம். கடைசி வாரம் வரை காத்திருந்தது, அந்த இதழில் வெளியாகும் கூப்பனில் விடை எழுதி அனுப்புங்கள். சரியான விடைக்கு, தங்க நகை பரிசு! பலர் சரியாக எழுதினால் குலுக்கலில் ஒருவரே பரிசு பெறுவார். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

சிடுக்காகிவிடாதா...? சொல்லிவிட்டால்... பிரச்னை மேலும் பெரிதானால்? முன்னமே சொல்லியிருந்தால் முளையிலேயே சரி பண்ணியிருக்கலாமே என்று குற்றம்சாட்டுவார்களோ? எதுவும் சொல்லாமல் யாரிடமும் பேசாமல் சும்மா இருந்து விட்டால் ஆயுள் முழுவதும் இப்படியே ஓட்ட வேண்டுமோ...?'

அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த சுகன்யா சொன்னாள்: "நீ ரொம்ப அரண்டுப்டே சேகர்... ஐ திங்க் யூ டு நீட் சைக்கியாட்ரிக் ஹெல்ப்!"

"அதைத்தான் கொஞ்சம் உடனடியாக ஏற்பாடு பண்ணுங்களேன் சுகன்யா. ஆனா வேற யாருக்கும் தெரிய வேண்டாம்..."

"வசந்திக்குத் தெரியாம பண்ண முடியாதே..."

"அவகிட்டே சொல்லிட்டே செய்வோம்... யூ நோ சம்திங்...? தன்னோட பயம் பத்தின குற்ற உணர்வு அவளுக்கு இலேசா இருக்கு. மத்தியானம் தூங்கிட்டிருந்தவளை எழுப்பி டீ கொடுத்தேன்... 'ஸாரி'ன்னா... 'அதனாலென்ன...! நான் உனக்கு டீ கொண்டு வந்து தரக்கூடாதா என்ன...?'ன்னு கேட்டேன். 'அதில்லை... நேத்து ராத்திரிக்கு... ஐ'ம் ஸாரி'ன்னா..."

"மூணு நாள் பொறுத்துப் பாரு சேகர்... அப்புறமா முடிவெடுக்கலாம்..." என்றாள் சுகன்யா.

நான்காம் நாள் போன் வந்தது சேகரிடமிருந்து. 'எதுவும் மாறவில்லை... எப்போது வசந்தியை சைக்யாட்ரிஸ்டிடம் அழைத்துப் போகப் போகிறீர்கள்?'

"அபாயிண்ட்மென்ட் ஃபிக்ஸ் பண்ணிட்டுச் சொல்றேன் சேகர்..." போனை வைத்துவிட்டு சரோஜா வீட்டு டெலிபோன் டைரக்டரியின் யெல்லோ பேஜஸைப் புரட்டியபோது... "என்ன பார்க்கறீங்க? யாருக்கு டாக்டர்...?" என்றபடி பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள் சரோஜா.

"ஒண்ணுமில்லை சரோஜா... நான் அப்புறமா வரேன்..." சமாளித்து கிளம்பி, வீடு திரும்பி யோசித்தபோது சசி நினைவு வந்தது.

சோஷல் சர்வீஸ் லீக் உறுப்பினர் என்கிற முறையில் பல உபயோகமான அறிமுகங்கள் அவளுக்கு உண்டு. நல்ல மருத்துவரை அவள் குறிப்பிடக்கூடும். மணி ஆறாகியிருந்தது. அவள் ஹாஸ்டல் திரும்பும் நேரம்தான்.

நீண்ட நாட்கள் கழித்து ஒரு நல்ல தோழியைப் பார்க்கப் போகும் உற்சாகம் இன்பமாயிருந்தது.

'சைக்யாட்ரிஸ்ட்' என்றதும் சசி முதலில் கேலி செய்தாள். "ஏன் சுகி! ஸ்ரீராம் மேல ரொம்ப பைத்தியமாயிட்டியா...? வேப்பிலை அடிச்சுடலாமா...?" என்று முதலில் கேலி செய்தாள் சசி.

விஷயத்தைச் சொன்னதும் யோசனையானாள். "டாக்டர் மகேஷ்கிட்டே அழைச்சுட்டுப் போ... நிச்சயமா அவரால உதவ முடியும்..." அவள் சொன்னதன் பேரில்தான் டாக்டர் மகேஷைப் பார்த்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தாள்.

வசந்தியையும் சேகரையும் சேர்த்து அழைத்துப் போக வேண்டும். அது அவசியம் என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். எப்படி?.... எப்படி....?

சசியுடன் பேசினால் கொஞ்சம் டானிக் சாப்பிட்ட மாதிரியிருக்கும்....

ஷார்ட்ஸும் டீ ஷர்டும் அணிந்து தலைவிரிகோலமாக வரவேற்றாள் சசி. சுகன்யாவுக்கு அவள் சுதந்தரத்தைக் கண்டு இலேசான பொறாமை வந்தது.

(தொடரும்)



''தனிமலர்' பத்திரிகையிலே நீங்க நடிகர் சாரநாதனைக் காதலிக்கறதா சொல்லியிருக்கீங்க. 'விபூதி' பத்திரிகையிலே நாகவேலனைக் காதலிக்கறதா சொல்லியிருக்கீங்களே?''


''அந்தப் பத்திரிகை முதல் வார வெளியீடு. இந்தப் பத்திரிகை அடுத்த வார வெளியீடு, அதைக் கவனிக்கலையா நீங்க!''





''ஏண்டா உனக்குக் கல்யாணம் ஆயிடுச்சு. மனைவி இருக்கா. வேறொரு பெண்ணோட பழகி அவ வாழ்க்கையையும் ஏன்டா பாழாக்கறே?"

''கவலைப்படாதே. அவளுக்கும் கல்யாணம் ஆயிடுச்சு. கணவன் இருக்கான்!"

—வெ.ராஜாராமன்







புள்ளிகளாய் ஒரு வானவில்

தமயந்தி

ராஜசேகர் இருட்டினுள் வந்து நின்றான். லேசாகத் தூறல் வேறு போட்டது. நூல் கோத்த ஊசியாய் உள்ளங்கையில் சாரல் இறங்கிற்று. சாப்பிட்ட சாப்பாடு இன்னும் செரிக்கவில்லை. வெறும் பருப்பு தாளிதமும் தேங்காய்த்துவையலும் தான். ஆனாலும் அமிர்தம். ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்களில் கண்டுபிடிக்க முடியாத நயம். மனசு ஒரு சிகரெட்டுக்காக ஏங்கிற்று.

"இப்படி நீங்க சிகரெட் குடிக்கப்போய்தான் புள்ளயில்லை?'' சரஸ்வதி சொல்வாள். அதை நினைத்து சிரிப்பு வரும். அப்படியானால் உலகில் பாதி பேருக்கு குழந்தை இருக்காது.

"என்ன சிரிப்பு?''

"சிகரெட் குடிக்கறது நல்லது இல்லனு சொல்லு. ஒத்துக்கறேன். ஆனா பிள்ளை பிறக்காதுனு சொல்லாத. விட்டுடுனு சொல்லு சரஸ்வதி. விட்டுடறேன்.''

சரஸ்வதி உடனே அழுதாள். குழந்தையில்லை என்கிற வடு அவளை அடிக்கடி அரிக்கும். காயப்படுத்தும். நடு இரவில் ராஜசேகருக்கு இப்போதெல்லாம் கனவு வருகிறது. மறுபடி மறுபடி அதே கனவுதான். ஒரு குழந்தையின் முகம். அதற்கப்புறம் இரண்டு குதிரைகள் விரைந்து ஓடும். இடையிலே நதி, சுழற்றி சுழற்றிச் சுழி வீசும். சரஸ்வதி சுழிக்குள் தெரிவாள். ராஜசேகர் குதிரை காலில் கட்டப்பட்டிருப்பான்.

"காப்பாத்துங்க. அடிச்சிட்டுப் போகுது'' சரஸ்வதி கதறுவாள். அந்தக் குழந்தை முகம் சிரிக்கும். ராஜசேகரனால் எதுவும் செய்ய இயலாது. மனசுக்குள் கவிதை குதிரையாய் ஓடும். நதியாய் அடிக்கும். குழந்தைச் சிரிப்பாய் சிரிக்கும்.

நதிமூலம் ரிஷிமூலம் எல்லாம்
கண்டும் வெட்டிவிழும் விறகென்ன
கேட்கும் உன் குரல.
நடு இரவு
முத்தங்கள்
நினைவாய் சில சேலைகள்
நீ வளர்த்த செடி
வீடெங்கும் உன் நினைவு
விரிந்து கிடக்கும் உலகம்.
அதற்குள் நான்
எனக்குள் நீ.

அந்தக் கவிதை கேட்டு முகம் சுருங்குது - கண் மறையும், நாசி, பிறகு உதடு. கடைசியாகத் தேடுகையில குழந்தையே இருக்காது.

அதற்குப் பிறகு முழிப்பு வந்து விடும். வந்து விட்டால் பிறகு உறக்கம் வராது. மறுபடியும் சிகரெட்டுக்காய் ஏங்கும். சரஸ்வதி ஒருக்களித்துப் படுத்திருப்பாள் [illegible]

பாலியிருக்கும். இப்போது சிகரெட் குடித்தாலென்ன? எழும்பவா போகிறாள்? பாதகி எழும்பினாலும் எழும்புவாள். அவள் கேசத்தை நீவி விட்டான்.

அவளுக்கு ஒரு குழந்தை இருந்திருந்தால் நன்றாய் இருந்திருக்கும். அவளே ஒரு குழந்தையாய் மாறியிருக்க வேண்டிய அவசியம் வந்திருக்காது. வீடு நிறைய பொம்மைகளும் விளையாட்டு சாமான்களுமாய் வாங்கிப் போட்டிருந்தாள். ஆனால் ஒரு குழந்தைதானில்லை. அம்மா இவளை விடக் கொஞ்ச வயதில் நாலு குழந்தைகளைப் பெற்றிருந்தாள். இந்தக் கல்யாணமே வயதான பிறகு செய்து கொண்டது தான். அவள் முப்பதின் ஆரம்பத்திலிருந்தாள். இவன் முப்பதுகளின் நடுவில். இரண்டு வருடம் கவலைப்படவில்லை என்பது நிஜம். பிறகு சரஸ்வதியை 'பிறன் மனை'கள் நோக்கின.

"என்ன சரஸ்வதி விசேஷம் ஏதும் உண்டா?"

"என்ன மாப்ளே பயங்கர ப்ளானிங்கா?"

பின் மண்டையில் சுரீரென உறைத்தது. சரஸ்வதி தலைகுனிந்து நின்றாள். வீட்டுக்கு வந்து கண்கலங்கி படுத்துக் கொண்டாள். அன்று ஆரம்பித்தது. வாழ்க்கையில் எல்லாம் இருக்கிறது. பணம், வசதி, தேவையான அளவு பக்தி... ஆனால் குழந்தை இல்லை.

"சரஸ்வதி..."


"இன்னிக்கு ஹாஸ்பிட்டல் போணும். பீரியட்ஸ் தள்ளிப் போயிருக்கு." கண் மின்ன சொன்னாள். ராஜசேகருக்குக் கூட சந்தோஷம் அலை அடித்தது. எல்லாம் டாக்டரைப் பார்க்கும் வரைதான்.

"ஸி சரஸ்வதி. நிறைய குழப்பிக்கற. அதனாலேயே பீரியட்ஸ் லேட்டாகும். திஸ் இஸ் ஜஸ்ட் லேட் பீரியட்ஸ் மிஸ்டர் ராஜசேகர்."

அங்கேயே சரஸ்வதி விம்மினாள். ராத்திரி திடீரென் முழித்துப் பார்க்கும் போது பக்கத்தில் இல்லை. சமையலறை நடுவில் கிடந்தாள். பக்கத்தில் தூக்க மாத்திரை புட்டி. கடவுளே! அவசரமாய்

ஆஸ்பத்திரியில் சேர்த்தான் எனிமா, ட்ரிப், டெட்டால் பினாயில், டெட்ராஸைக்ளின் அமாக்ஸலின்... மீண்டும் சரஸ் வதி.

"இனிமே இத மாதிரி பண் ணாத சரஸ்வதி. உனக்கு குழந்தை வேணுமா? வா



தத்தெடுப்போம்."

வெறித்தபடி உட்கார்ந்திருந்தாள். "திருப்பதிக்குப் போய் காணிக்கை போடுங்க. என் வயத்துல உங்க பிள்ளை வேணும்னு வேண்டுங்க..."

"சரஸ்வதி..."

நகையைக் கழற்றி கையில் தந்தாள். "வித்துருங்க. வித்துட்டு அவ்ளோவும் உண்டியல்ல போடுங்க."

"சரஸ்வதி..." அள்ளிக் கோதிக் கொண்டான் ராஜசேகர். மனசுக்குள் ஒரு குரல். எனக்குள் நான். உனக்குள் நீ. நமக்குள் அது.

திருப்பதியில் இறங்கினதும் வெங்கடேசன் நின்றிருந்தான். ஐந்து வருடங்களுக்கு முன்பு பார்த்தது. மெலிந்திருந்தான். பையை ஸ்நேகமாய் வாங்கிக் கொண்டான். தோளைத் தழுவினபடி அணைத்து ஆட்டோவில் ஏற்றினான். ராஜசேகர் பையில் பணத்தை ஒரு முறை தொட்டுப் பார்த்துக் கொண்டான். வெங்கடேசன் இந்தப் பணத்தின் கதையைக் கேட்டு சிரிக்கக்கூடும். நகையை காணிக்கையாக்கினால் எல்லாம் சரியாகி விடுமா? தெரியவில்லை. தற்கொலை வரை சென்ற சரஸ்வதியின் நம்பிக்கையை ஏமாற்ற முடியவில்லை.

"எத்தனை குழந்தைங்க சேகர்?"

"இல்லை."

எல்லோரும் பார்த்ததுமே கேட்கிற கேள்விதான். ஆனால் பதில் வந்ததும் கவலைப்படுவார்கள். வெங்கடேசன் அவனை ஆதரவாய் பற்றினான்.


"எனக்கு ஒண்ணு. ஆறு மாசமாச்சு."

"லதா எப்படிருக்கா?"

"என்னது டூ-இன்-ஒன் காப்பியா?"

"ஆமாம் சார். இந்தக் காப்பியை நீங்க வெந்நீராவும் பயன்படுத்திக்கலாம்!"

- பா. ஜெயக்குமார்



"இருக்கா. அப்பா அம்மா கல்யாணத்துக்கு சம்மதிக்கலை சேகர். லதா வேலைக்குப் போறதயும் நா விரும்பல. சின்ன வீடு. இரண்டு ரூம்தான். ஒரு குழந்தை. சந்தோஷம்தானே?"

ஏனோ சந்தோஷமில்லாமல் அவன் சொன்ன மாதிரி இருந்தது. லதாவைக் கிட்டத்தட்ட ஆறேழு வருடங்களாய் வெங்கடேசன் காதலித்தது தெரியும். வெங்கடேசன் பணத்தில் புரண்டவன். இரண்டு ரூம் அவனை நிச்சயம் கஷ்டப்படுத்தும். அந்த முகச்சுளிப்பு பேச்சில் தெரிந்திருக்கும்.

வீடு என்று கூட அதைச் சொல்ல முடியாதென்பதை அதைப் பார்த்த பிறகுதான் ராஜசேகர் தெரிந்து கொண்டான். தட்டி போட்ட தாழ்வாரம் ஒன்றும் சமையலறை ஒன்றும். லதா முன்னை பார்த்ததற்கு ஏகத்துக் கறுத்திருந்தாள். உள்ளறையிலேயே தொட்டில் ஒன்று இருந்தது. உள்ளே வெங்கடேசன் ஜாடையில் குழந்தை. சரஸ்வதி ஞாபகம் சட்டென வந்தது.

"வாங்க," லதா கை கூப்பினாள்.

"நல்லாயிருக்கீங்களா?"

"ம். முதல்ல குளிக்கறீங்களா? காப்பி தரட்டுமா?"

"தாங்க. மெள்ள குளிக்கேன்."

"காமன் பாத்ரூம்தான். ஒன்பது மணிக்குள்ள குளிச்சிரணும்."

ராஜசேகர் காப்பி குடித்துவிட்டு உடனே குளித்தான். சளபுளவென ஒரு பாத்ரூம். வெங்கடேசனுக்கா இந்த நிலைமை? மனசில் ஏதோ ஒரு முள் உறுத்தியது. ஒருநாள் யமஹா ஒருநாள் சியலோ என்று வந்த வெங்கடேசன் எங்கே? ஒண்டுக்குடித்தன அழுக்கு பாத்ரூமில் குளிக்கும் இவன் எங்கே?

"சுடச்சுட இட்லியும் சட்னியும் செஞ்சிடறேன்."

"எதுக்கு சிரமம்? ஹோட்டல்ல பாத்துப்பேனே."

"சாப்பிடுங்க. நம்ம வீட்ல இருந்துட்டு அதென்ன வெளிய சாப்புடறது."

குழந்தை அழுதது. லதா தூக்கி வந்தாள். "மாமா பாரு" அது இவனைப் பார்த்து கை போட்டது.

"சாப்பிட்டுட்டு வர்றேன். இரு. பேரு என்ன?"

"பிரசவமெல்லாம் இங்கதானா?"

"ம். லதாவுக்கு ஜன்னி வந்து பிழைக்க முடியாம போயிடுவாளோன்னு தோணிச்சு சேகர். கொஞ்சம் கஷ்டப்பட்டுட்டா."

அந்தக் குழந்தை இன்னும் இவனையே பார்த்துக் கொண்டிருந்தது. இதையே தத்தெடுத்துக் கொண்டால் என்ன? மனசில் பொறி தட்டியது. இந்த கஷ்டத்தில் வெங்க

டேசன் சம்மதிக்காமல் இருப்பானா? மனசு கணக்குப் போட ஆரம்பித்தது. ஊருக்குப் போய் சரஸ்வதியையும் கூட்டி வரலாம்.

"கோவிலுக்குப் போணும்னு லெட்டர்ல எழுதிருந்தியே. நேர்த்தியா?"

"சரஸ்வதிக்கு வேண்டுதல்."

"நல்லாருக்காங்களா?"

"ம். குழந்தை இல்லைன்னு குறை தவிர."

"கூட்டிட்டு வந்திருக்கக் கூடாதா?" லதா கேட்டாள்.

"வரணும். கட்டாயம் வரவேண்டியிருக்கும்னு நினைக்கிறேன்."

ராத்திரி வெங்கடேசனிடம் தனியாய் பேசி விட வேண்டுமென நினைத்துக் கொண்டான்.

ராஜசேகர் இருட்டினுள் வந்து நின்றான். லேசாகத் தூறல் வேறு போட்டது. நூல் கோத்த ஊசியாய் உள்ளங்கையில் சாரல் இறங்கிற்று. சாப்பிட்ட சாப்பாடு செரிக்க வில்லை. சரஸ்வதி இல்லாத சுதந்தரத்தில் சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டான்.

வெங்கடேசன் நாற்காலி கொணர்ந்து போட்டான். க்றீச் என்று அது மடங்கி உட்கார்ந்தது.

"சேகர்..."

திரும்பினவனை வெங்கடேசன் அழுந்தப் பிடித்துக் கொண்டான்.

"எவ்ளோ நாளாச்சு பேசி."

"குழந்தை தூங்கிருச்சா வெங்கி?"

"ம். அது பிறந்திருக்கவே கூடாதானு இருக்கு சேகர்." அநேகமாக தான் நினைத்ததைத்தான் அவன் சொல்வான் போலும். காரியம் இத்தனை லேசாக முடியுமானால் திருப்தி. ஆண்டவனே, நன்றி.

"என்ன சொல்ற?"

"அதுக்கு ஹார்ட்ல-ஹோல்டா. ரொம்ப நேரம் அழுதுச்சுனா ப்ளுவாயிடும். என்னன்னு செக் பண்ணா டாக்டர் இப்படி சொல்றாங்கடா. ஆபரேஷனுக்கு ஒரு லட்சம் செலவாகும்னு சொல்றாங்க, ப்ரைவட் நர்சிங் ஹோம்ல. கவர்மெண்ட் ஹாஸ்பிட்டல்னாலும் சில ஆயிரம் ஆகும். லதா அது மேல உயிரையே வச்சிருக்கா. வெங்கடேசன் குரல் கம்மிற்று. இது போனா தாங்க மாட்டா சேகர். அன்னன்னைக்கு பாட்ட ஓட்டவே பெரிய கஷ்டமாருக்கு சேகர். இன்னைக்கு நீ வந்தியேன்னுதான் மூணு வேளை டிபனும், சாப்பாடும். மத்தப்படி கஞ்சி, கோதுமை, ராகி, அரிசி கஞ்சி... வறுமை கூட பரவால்ல சேகர், குழந்தை..."

"நா ஏதாவது செய்ய முடியுமா வெங்கி?"

"முடியாதுடா. மனசு திறந்து கேட்டுக்க. அது போறும். ஆறுதலாருக்கும். லதா போயிருவானு பிரசவத்தோட சொன்னப்ப கொஞ்சம் பணம் வேற தேவைப்பட்டது. யார்ட்ட கேட்டும் இல்ல சேகர். ஜி.ஹெச்ல கூப்பிட்டாங்க. குடும்பக் கட்டுப்பாடு, ரூவா தந்தாங்க. ஹார்லிக்ஸ் தந்தாங்க. லதாவுக்குத் தெரியாது... தெரியாது..." மொட்டை மாடி சுவரில் மடிந்து உட்கார்ந்து சரிந்தான்.

இவனிடம்.. இவனிடம் போயா குழந்தையைத் தத்தெடுக்கக் கேட்க நினைத்தேன்? மனசு கசிந்தது. ராஜசேகர் கீழிறங்கிப் போய் பணத்தை எடுத்து வந்தான். சுவரோரமாய் மடிந்து கிடந்த வெங்கடேசன் கையில் திணித்தான்.

"வச்சிக்கோடா. குழந்தைக்கு ஆபரேஷன் பண்ணு. ஒன்றரை லட்சம் இருக்கு."

"வேணாம் சேகர். நா பணம் கேக்கல. என் துக்கத்தை..."

"வச்சுக்கோ. வட்டி இல்லை. கடன் இல்லை. நேர்த்தி. உன் குழந்தை நல்லாகணும் வெங்கி. நல்லாயிரும்."

அன்று கனவிலும் குழந்தை வந்தது. குதிரை வந்தது. விரைந்து ஓடிற்று. இடையிலே நதி. சுழற்றி வீசும் சுழி. உள்ளிறங்கும் சரஸ்வதி. குதிரை காலில் கட்டப்பட்ட ராஜசேகர். காப்பாற்றக் கதறும் சரஸ்வதி. மனதில் குதிரையாய் ஓடும் கவிதை. சிரிப்பாய் சிரிக்கும் குழந்தை.


ஆனால் இன்றேனோ குழந்தை மறைய வில்லை. கரையில் முழுசாய் நின்றிருந்தது. அதன் கையைப் பிடித்தபடி யாரது?

சரஸ்வதி.

எறும்பார் கடிக்கிறார்!

"தொடர்ச்சியான அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளால் கருணாநிதியும் ப. சிதம்பரமும் ஒரு தூங்கும் அரக்கனை உசுப்பி விட்டிருக்கிறார்கள்..."

- ஜெயலலிதாவின் செயலர் பாஸ்கரன் விடுத்துள்ள அறிக்கை.



தேரையொன்று

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சாரியார்

பகவானுடைய சுவாஸமாகவும் நிஸ்சுவாஸமாகவும் - அதாவது உள்ளிழுக்கும் படியான காற்றாகவும் வெளியே விடும்படியான காற்றாகவும் விளங்குவது வேதம். பகவானுக்கும் சுவாஸம் உண்டு என்கிறது வேதம் இங்கே.... நமது சரீரம் மூச்சுக் காற்றினாலே பெருமை அடைவது போலே பகவானுக்கும் வேதமாகிற மூச்சுக் காற்றினாலே பெருமை உண்டாகிறது. பகவானுக்கே பெருமை உண்டாக்குகிறது என்றால் அந்த வேதம் எப்பேர்ப்பட்டதாக இருக்க வேண்டும்! அதில் சொல்லப்பட்ட விஷயத்தை எல்லாரும் சுலபமாகத் தெரிந்து கொள்வதற்காகவும் புரிந்து கொள்வதற்காகவும் புராண இதிகாசமாக மாற்றிக் கொடுத்தார்கள்.

இப்படிச் சொன்னால், வேதத்தில் சொன்ன விஷயங்கள் முன்பாக நிகழ்ந்தனவா? புராண இதிஹாஸங்கள் முன்பாக் நடந்தனவா என்று கேள்வி வரும்.

புராண இதிஹாஸங்களில் சொல்லப்பட்டிருக்கும் ஒவ்வொரு அவதாரத்தையும் வேதம் சொல்கிறது. அப்படியென்றால் அவதாரங்களுக்குப் பின்பாகத்தான் வேதம் உண்டானதா...?

நன்கு கவனிக்க வேண்டும். வேதத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ அதைத்தான் பகவான் நடத்திக் காட்டினான். 'பகவான் வராஹ அவதாரம் பண்ணி பூமியை உய்வித்தான்' என்று வேதத்தில் வருகிறது. அதையே பகவான் நடத்திக் காட்டினான். வேதத்தைப் பூரணமாய் அனுஷ்டித்தான் பரமாத்மா. அதை அனுஷ்டானம் பண்ணுவதற்கென்றே இந்த லீலா விபூதிகள்!

வேதம் சொல்படி நடந்தான் பரமாத்மா என்பதை நாம் ஸ்பஷ்டமாக உணர வேண்டும். வேதத்தில் வரும் ஒரு வாக்கியம் - தேவதைகளெல்லாம் யக்ஞம் பண்ணினார்கள் என்கிறது.

நாம் யக்ஞம் பண்ணினால் இந்திராதி தேவர்களைப் பார்த்துப் பண்ணுகிறோம். பகவான் அவர்கள் ரூபத்தில் இருந்து நமக்கு அனுக்கிரகம் பண்ணுகிறான்.

ஆனால் தேவதைகள் யக்ஞம் பண்ணினால்...'

தேவதைகள் யக்ஞம் செய்தால் தேவலோகத்தில் பண்ண முடியாது. பூலோகத்துக்கு வந்துதான் பண்ண வேண்டும்!

'வையத்து வாழ்வீர்காள்...' என்று ஆண்டாள் அழைப்பதைப் பார்க்கிறோம். வையத்தில் வாழ்வதற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று பொருள்.

எல்லா கர்மாவும் விலகும்

படியான, உயர் பலனைக் கொடுக்கும்படியான, சாஸ்திரங்களை அனுஷ்டிக்கும் உத்தமமான பூமி இது. அதிலும் பாரத தேசம் ரொம்ப விசேஷம் என்று சாஸ்திரமே கொண்டாடுகிறது.

இப்படிப்பட்ட பூமிக்கு வந்துதான் தேவர்கள் யக்ஞம் பண்ண வேண்டும். அவர்களும் வந்து நாராயணனைக் குறித்து யக்ஞம் பண்ணினார்கள்.

அந்த தேவர்களுக்குள்ளே துவஷ்டா என்கிற ஒருவன். அவனுக்குப் புரோடாசத்தின் பேரிலே ரொம்பவும் ஆசை.

புரோடாசம்...? அப்படியென்றால்...?

அப்படியென்றால் என்னவென்று வேதமே சொல்கிறது. அதைத் தயாரிக்கும் முறையை விளக்குகிறது.

யக்ஞம் பண்ணக்கூடியவருடைய தர்ம பத்தினி, ரொம்ப சுத்தமாக, மடியாக இருந்து. உலக்கையைக் கையில் எடுத்து, உரலுக்கும் உலக்கைக்கும் பூஜை பண்ணி விட்டு, மந்திரம் சொல்லிக் கொண்டே நெல்லைக் குத்த வேண்டும். அதிலே கிடைக்கிற அரிசியை மாவாக அரைத்து, அதை அடையாக்த் தட்ட வேண்டும். அதற்குப் பெயர்தான் புரோடாசம். அப்படித் தட்டி அதன் மேலே நெய்யைத் தடவி வைத்தார்களானால் ரொம்ப வாசனையாக இருக்கும். அதிலே 'நமக்கொண்ணு கொடுத்தால் நன்றாயிருக்குமே' என்று எல்லாருக்குமே தோன்றும்!

ரொம்ப பக்குவமாக அதைத் தயார் பண்ணி ஹோம சமயத்திலே கொண்டு வர வேண்டும். கோவில்களில் கூட நாம் கிறோம். பகவானுக்கு அமுது செய்விக்கிறவர் அதை நன்றாக மூடி யார் கண்ணிலும் படாமல் எடுத்து வந்து செய்விப்பார். அவரே கூட அதைப் பார்த்து, 'இவ்வளவு பருப்பா? இத்தனை நெய்யா...?' என்றெல்லாம்



பின்னணியில் ஒரு பெருமூச்சு

மரபுகளும் புதுமைகளும் மோதும் அவசர யுகத்தில் உதித்திருக்கிறது 'அகிலா நியூஸ் சர்வீஸ்' என்ற சிறு தகவல் தொடர்பு நிறுவனம்.

அவர்கள் தேடிப் பிடித்துச் சேகரித்த 14 கட்டுரைகளின் தொகுதி இந்தப் புத்தகம். கடந்த ஐந்து ஆண்டுகளில் பல்வேறு பத்திரிகைகளில் வெளியானவை.

கரகாட்டக் கலை, பொய்க்கால் குதிரை, தப்பாட்டம், தோற்பாவைக் கூத்து, நாடகக் கலை பாய்ஸ் கம்பெனிக்காலம், சிலம்பாட்டக் கலை கிராமியப் பாடல்கள், பத்மநாபபுரத்து மர அரண்மனை, சிதைந்து போன புதுக்கோட்டை மன்னர் குடும்பம்.

இப்படிச் சில விஷயங்கள்.

பற்பல தகவல்கள்.

நுனிப்புல் மேயாமல் விஷயங்களின் வேர் தரிசனம் காண, அலைந்து திரிந்து ஆழ்ந்து தேடிய உழைப்பு.

'சீரியஸ் ரீடர்ஷிப்' என்ற தமிழில் மகா பஞ்சமாகி விட்ட அம்சத்துக்கு ஒரு விடிவு நாடி ஓடும் தனியோட்டம்.

புரியும் படியான சுவையான எழுத்து வடிவம். நிறையப் படங்கள்.

ஆனால் புத்தகம் முடியும் போது புலப்படுவது ஒரு நெடிய பெருமூச்சின் பின்னணி.

வரலாறு, பண்பாடு, கலை இவற்றில் தமது பெருமையை உணராத, உள்ள பெருமையைப் போற்றிக் காக்காத தமிழர் மனோபாவத்திற்காக விடப்பட்ட பெரு மூச்சுத்தான் அது.

'விதியே விதியே தமிழச் சாதியை என் செயக் கருதி இருக்கின்றாயடா?'

மகாகவி கேட்ட கேள்வி மனசில் மறு ஒலிபரப்பு ஆகிறது.

என்ன பதில்?

முன்னுரையில் சின்னக் குத்தூசியின் ஆதங்கமும், அணிந்துரையில் ஜே.பால் பாஸ்கரின் வேதனையும், தன்னுரையில் அகிலா நியூஸ் எஸ்.டி.லக்ஷ்மணனின் தன்னடக்கமும் பல அலைகளை எழுப்புகின்றன.

இந்தக் கட்டுரைகள் அகிலா நியூஸ் நிறுவனம் சொல்லிக் கொள்வது போல் வெறும் நுரைக்குமிழிகளா?

இல்லை. தமிழர்கள் எதையும் இனி சுலபத்தில் மறக்க மாட்டார்கள். இந்தப் புத்தகத்தின் உத்தியே அதற்குச் சான்று.

— வையவன்

–'தமிழர்கள் மறந்ததும் மறக்காததும்'
வெளியீடு: நியூ எட் பப்ளிகேஷன்ஸ் அண்டு கம்யூனிகேஷன்ஸ் (பி) லிமிடெட்.
124, என்.ஜி.ஓ. காலனி,
திண்டுக்கல்– 624 009.
விலை ரூ.50. பக்கங்கள் 124.

“சுகி! என்ன விளையாடறே...! உனக்கு என்னைக் கண்டு பொறாமையா...? கமான்!”

– சுகன்யா தன் உணர்வுகளை மறைக்காமல் வெளிப்படுத்தியபோது பாய்ந்தாள் சசி.

“பின்னே.... இப்படி அரை நிஜாரோட ஜாலியா.... புருஷன் பக்கத்துல இல்லையேன்னு ஏங்காம, நாத்தனாரோட தாம்பத்திய சிக்கல் பத்தின கவலை இல்லாம.... உன்னைப் போல இருக்க முடியுதா.... ‘வா ஒரு ட்ரிப் சந்திரனுக்குப் போய்ட்டு வரலாம்’னு யாராவது கூப்ட்டா கூட உடனே ரப்பர் செருப்பை மாட்டிக்கிட்டுக் கிளம்பற நிலைமைல இருக்கே நீ...”

“நீயும் அப்படித்தான் இருந்தே... ஸ்ரீராமைக் காதலிக்கற வரைக்கும்...”

“ஹூம்...!”

“என்ன இவ்வளவு அலுப்பு? ஸ்ரீராம் இல்லைங்கற ஏக்கத்தை எப்படிக் கட்டுப்படுத்தறது, மறக்கறதுன்னு தெரியாம... ஏதேதோ பேசி திண்டாடற நீ... சரி டாக்டர் மகேஷ் என்ன சொன்னார்...?”

“அவங்களை அழைச்சுட்டு வரச் சொல்லியிருக்கார்.”

“அப்பவே எதிர்பார்த்தேன். எப்ப அப்பாயிண்ட்மெண்ட் ஃபிக்ஸ் பண்ணியிருக்கே...?”

22 உன்னே வேணுமா?

“இப்ப அதான் ரொம்ப யோசனையா இருக்கு சசி.... அவங்க இரண்டு பேருக்கும் உண்மையைச் சொல்லி அழைச்சுட்டுப் போறதா? சொன்னா, வர ஒத்துப்பாங்களா? வீட்டுல மத்தவங்களுக்குத் தெரியாம எப்படி அழைச்சுட்டுப் போறது....?”

“உங்க வீட்டுக்கு வரவழைச்சு இரண்டு பேர்கிட்டேயும் உடைச்சுச் சொல்லிடு...”

“சொல்லிடலாம். ஆனா டாக்டர் என்ன ட்ரீட்மெண்ட் குடுப்பார்னு வேற இப்ப கவலையா இருக்கு...”

“அனேகமா இதுக்கு மருந்து ட்ரீட்மெண்டெல்லாம் எதுவும் தேவைப்படாது சுகி. கவுன்சிலிங்லேயே சரி பண்ணிடுவாங்க. பிரச்னையை இரண்டு பேர்கிட்டேயும் தனித் தனியா பேசணும்னு டாக்டர் சொல்லுவார். இதைப் போல ஒண்ணு, இரண்டு கேஸ் நான் பார்த்திருக்கேன். ஒரு கைனகாலஜிஸ்டை உதவிக்கு வைச்சுக்கிட்டு அவங்களை விட்டு லேடி பேஷண்ட்கிட்டே பேசச் சொல்லுவாங்க. சேகர்கிட்டே டாக்டர் மகேஷ் தனியா பேசிடுவார். அப்புறம் இரண்டு பேரையும் சேர்த்து வைச்சு அறிவுரை சொல்லுவார்...”

“அறிவுரை!”

“அப்படிச் சொன்னா சிரிப்பாத்தான் இருக்கும் சுகி. ஆனா மனுஷங்களுக்கு அறியாமைனால எவ்வளவு பிரச்னை பாரு....! ரொம்ப இயல்பா பூ மலர்ற மாதிரி நடக்கறதையெல்லாம் தப்பு, அருவருப்புன்னு சொல்லிக் குடுத்து... ரம்மியமான எண்ணங்களுக்குக் கூட ‘அசிங்கம்’னு முத்திரை குத்தி கடிவாளம் போட்டு.. இனி அந்தக் கடிவாளம் தேவையில்லைன்னும் போது கூட அதை உதறிட்டு வர அவங்களால முடியலை... அதையெல்லாம் எப்படி தூக்கியெறிஞ்சுட்டு இயல்பா ஆகறதுன்றதைத்தான் டாக்டர் அறிவுரையா சொல்லுவார்...”

“எனக்கு இந்த மனோதத்துவ ட்ரீட்மெண்ட்ல நம்பிக்கை இல்லாம போயிடலை சசி. ஆனா, இந்த விஷயத்துல நாம உணராததை மூணாவது மனுஷர் எப்படி வந்து உணர்த்த முடியும்ங்கறே...?”

“நடந்திருக்கே...! அறிவுரை தர்றவர் மூணாவது மனுஷர் என்கிறதே ஒருவிதத்துல உதவுது. அவர் பேஷண்டுக்கு ரொம்ப நெருங்கினவர் இல்லை; ஆனா அதே சமயத்துல விஷயம் தெரிஞ்சவர். எப்படி பேசினா அவங்க மனசைத் திறப்பாங்க, ரிலாக்ஸ் ஆவாங்க என்கிறதெல்லாம் ஒரு மனோதத்துவ டாக்டருக்குத் தெரியாதா... அந்தரங்கமான விஷயங்களைக் கூட கூச்சமில்லாம பேசி வரவழைச்சுடுவாங்க...”

“உனக்கெப்படி சசி, இவ்வளவு தூரம் தெரிஞ்சிருக்கு...?”

“எங்க சோஷல் சர்வீஸ் பயிற்சில சைக்கியாட்ரியும் கொஞ்சம் உண்டு. அதுல ஓரளவு சொல்லித் தருவாங்க, அப்புறம் நானா நிறைய புத்தகம் படிச்சுத் தெரிஞ்சுக்கிட்டேன்... இந்த மாதிரி பயந்துக்கறவங்க, அருவருப்புப் படறவங்களுக்கு டாக்டர் முக்கியமா சொல்ற அறிவுரை என்ன தெரியுமா...?”

“என்ன....?”

“ஐயோ! மத்தவங்களை மாதிரி நம்ம



வாழ்க்கை தொடங்கலையேன்னு நினைக்கவே நினைக்காதீங்க... இதை ஒரு தோல்வியா பாராட்டாதீங்க..."

"இன்ட்ரஸ்டிங்"

"தனிமைல இருக்கும்போது, பெட்ரூமை மட்டும் பகிர்ந்துக்கறதுக்காக கல்யாணம் பண்ணிக்கலை... வாழ்க்கையையே பகிர்ந்துக்கப் போறோம்னு ஒருத்தருக்கொருத்தர் உணர்த்திக்க முயற்சி பண்ணுங்க. நிறைய பேசுங்க. மெள்ள மெள்ள ஸ்பரிசப் பரிமாற்றங்களை அறிமுகப்படுத்திக்குங்க... ஒருநாள் கண் விழிச்சுப் பார்த்தா, உங்க தாம்பத்யம் முழுமையடைஞ்சிருக்கறதை உணர்ந்து நீங்களே 'அட'!ன்னு ஆச்சர்யப்படுவீங்க... இதுதான் சுருக்கமா டாக்டர் சொல்லக்கூடிய சமாசாரம்."

மௌனத்தில் மூழ்கினாள் சுகன்யா.

"ஓய்! என்ன அப்படியே அடங்கிப் போயிட்டே?"

"இல்ல சசி... திடீர்னு யோசனை வந்துடுத்து. இப்பத்தானே இந்த மாதிரி பிரச்னைக்கெல்லாம் டாக்டர் உதவி கேட்கலாம்ங்கற வழக்கமே வந்திருக்கு... டாக்டர்களும் இதுலெல்லாம் ஸ்பெஷலைஸ் பண்ண ஆரம்பிச்சிருக்காங்க. ஒரு அம்பது வருஷத்துக்கு முந்தி இப்படிப்பட்ட பிரச்னை ஒரு பொண்ணுக்கு ஏற்பட்டிருந்தா...?"

"என்ன ஆகியிருக்கும்....? அவ புருஷன் பலவந்தப்படுத்தியிருப்பான்; இல்ல மாமியார்கிட்டே சொல்லியிருப்பான். பயத்துல அந்தப் பொண்ணுக்கு மனப் பிராந்தி புடிச்சிருக்கும். எல்லாருமா சேர்ந்து வேப்பலை அடிக்கறேன்னு அவளை ஒரு வழி பண்ணியிருப்பாங்க..."

சுகன்யாவுக்குள் ஒரு சிறு நடுக்கம் ஓடியது.

"யூ நோ சசி...? ஸ்ரீராமோட அப்பா அவசரப்பட்டு வசந்தி கல்யாணத்துக்கு முன்னாடியே எங்களுக்குப் பண்ணி வைச்சாரேன்னு இப்ப நான் ரொம்ப சந்தோஷப்படறேன்.. அதனாலதானே இந்த விஷயத்துல என்னால

வாஸந்தி ?

வசந்திக்கு உதவ முடிஞ்சிருக்கு. மத்தவங்க இந்தப் பிரச்னையை உணர்ச்சிவசப் படாம பார்த்திருப்பாங்களான்றது சந்தேகம்தான்."

"ஏன்... ஸ்ரீராம் கூடவா அப்படி பார்த்திருக்க மாட்டார்...?"

"ஸ்ரீராமை விடு... ஹி இஸ் எ ரேர் ஜெம். ஆனா வசந்தியால ஸ்ரீராம்கிட்டே மனசு திறந்து பேச முடியுமா...? அவன் வெளிநாடு போற நேரத்துல இதையெல்லாம் சொல்லி டென்ஷனாக்க வேண்டாம்னு நானும் மறைச்சுட்டேன்."

"உன் ஸ்ரீராம் நிஜமாகவே ரொம்ப அதிர்ஷ்டசாலி சுகன்யா!" என்றபடி திடீரென்று கட்டிப் பிடித்துத் தோள்களிலிருந்து தொங்கி ஊசலாடினாள் சசி.

"ஏய்! வலிக்கறது..." விடுவித்துக் கொண்டு கேட்டாள் : "சரி... நீ எப்போ கல்யாணம் பண்ணிக்கப் போறே?"

"ஐயோ! வேண்டாம்பா... அப்புறம் ரப்பர் செருப்போட சந்திரமண்டலத்துக்குப் போக முடியுமா...? இப்படி அரை நிஜாரோட திரிய முடியுமா? இல்லை, என்னைப் பார்த்துப் பொறாமைப்படத்தான் உன்னை மாதிரி ஒரு அசடு இருக்குமா...?"

"விளையாடாதே! நான் சீரியஸா கேட்கறேன்."

"பண்ணிக்கலாம். ஆனா...." விழிகளை உருட்டி, புருவங்களை உயர்த்திச் சொன்னாள் சசி. "ஸ்ரீராம் மாதிரி ஒரு ஜெம் ஆஃப் எ மான் கிடைக்கணுமே..."

"நான் எதுக்கு?" என்றான் சேகர், விஷயத்தைச் சொன்னதுமே. வசந்தி ஓசையின்றி அழுது கொண்டிருந்தாள்.

கோப்பைகளில் டீ அப்படியே ஆடை படிந்து ஆறிக் கிடந்தது. 'அதைக் குடித்து முடித்த பிறகு சொல்லியிருக்கலாமோ?'

"இல்லை சேகர்... டாக்டர் இரண்டு பேரையும் வரச் சொல்லியிருக்கார்..."

"எனக்கொரு பிரச்னையுமில்லே..." குரலுடன் சேகரின் கண்களிலும் கோபம் மின்வெட்டியது.

தங்க நகை பரிசு!

இந்த இருபத்தாறு வாரத் தொடர், ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு கதாசிரியர் பெயரில் வெளியாகி வருகிறது. ஆனால் அவர்களுள் ஒரே ஒரு நபர்தான் இதை எழுதி வருகிறார். தொடரை எழுதியவர் யார் என்பதைக் கண்டுபிடிப்பது உங்கள் சாமர்த்தியம். கடைசி வாரம் வரை காத்திருந்து, அந்த இதழில் வெளியாகும் கூப்பனில் விடை எழுதி அனுப்புங்கள். சரியான விடைக்கு, தங்க நகை பரிசு! பலர் சரியாக எழுதினால் குலுக்கலில் ஒருவரே பரிசு பெறுவார். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

"இப்ப யாருக்கும் எந்தப் பிரச்னையும் இல்ல... கொஞ்சம் மனோதத்துவ உதவி தேவைப்படுது; அவ்வளவுதான். அதைப் பெரிய சிகிச்சையா நினைச்சுக் குழப்ப வேண்டாம். சின்ன வழிகாட்டல்..."

"எனக்கது அவசியமில்லே..."

"சரி, வசந்திக்கு அவசியம்னு ஒத்துக்கறீங்களா?"

"ஊம்..."

"அப்ப அவளுக்குத் துணையா வர்றதா நினைச்சு வாங்க.... ப்ளீஸ். அவ டாக்டரைப் பார்க்கும்போது கூட இருக்கறதுக்காக..."

"எங்கேயிருக்கு அவர் கிளினிக்?"

"மந்தைவெளில..." – முகவரியைச் சொன்னாள்.

"ஐயோ! வேண்டவே வேண்டாம். அந்த ஏரியா பூரா எங்க கிளையன்ட்ஸ் இருக்காங்க. யாராவது ஒருத்தர் பார்த்துட்டாங்கன்னா நான் ஒழிஞ்சேன்..."

"ப்ளீஸ் சேகர், அப்படி நினைக்காதீங்க. ஒரு நிமிஷம்தான் ஆகும், காரை விட்டு இறங்கி கிளினிக் உள்ளே போகறதுக்கு, அதுக்குள்ளே எத்தனை பேர் பார்த்துடப் போறாங்க...?"

"சுகன்யா! உங்களுக்குத் தெரியாது. என் கார் ஒரு இடத்துல நிக்கறதுன்னாலே நாலு பேர் அதை அடையாளம் தெரிஞ்சுக்கிட்டு என்னைப் பார்க்கணும்னு வந்துடுவாங்க. அவ்வளவு நண்பர்கள் எனக்கு... நான் இந்த மாதிரி ரிஸ்க்கெல்லாம் எடுக்கறதா இல்லை... நீங்க வசந்தியோட ஆட்டோல போய்ட்டு வாங்க..."

அலுப்புடன் கோபமும் வந்தது. 'டாக்டரை சந்திக்க வராமலிருக்க சாக்கு போக்குச் சொல்கிறான். ஈகோ பிரச்னை... இல்லாவிட்டால் இவனுக்கும் வசந்தியைப் போல் இவ்விஷயத்தில் ஏதேனும் அசாதாரண உணர்வு இருக்குமோ...?'

'தேவையில்லாத சந்தேகம்' என்று அதை அப்புறப்படுத்திவிட்டு, பொறுமையை வலிய அழைத்து தனக்குள் இறுத்திக் கொண்டாள் சுகன்யா.

"ஏன் சேகர் இவ்வளவு பயப்படறீங்க...? அப்படியே யாராவது பார்த்துட்டாத்தான் என்ன...? சைக்கியாட்ரிஸ்ட்கிட்டே போகறது, திருட்டுத்தனமா செய்ய வேண்டிய தப்புக்

காரியமில்லையே... நமக்கு உதவி தேவை, நாம போறோம்... வேற ஏதோ ஜுரம், வலி வந்தா பிசிஷியன்கிட்டே போகிற மாதிரி..."

"உதவியே தேவைப்படாதவங்களுக்கு, இப்படி உதவின்னு போய்க் கேக்கறதுல உள்ள சிறுமையும் கொடுமையும் எங்கே புரியப் போகுது..." – சேகரின் அடிபட்ட பார்வை சங்கடப்படுத்தியது.

"வேண்டாம்னா விட்டுட வேண்டியது தானே மன்னி..." ஜன்னல் அருகே நின்று வெளியே வெறித்துக் கொண்டிருந்த வசந்தி, முதல் முறையாக வாய்திறந்து பேசினாள்.

இருவரும் சின்னக் குழந்தைகளைப் போல் அடம்பிடிக்கிறார்கள். 'ஊட்டி விடு' என்று கெஞ்சிவிட்டு பிறகு சோற்றைப் புறங்கையால் தள்ளும் குழந்தைகள்! விட்டுத்தான் பிடிக்க வேண்டும்.

"சரி" என்றாள் சுகன்யா. "இன்னும் இரண்டு நாள் டயம் எடுத்துக் குங்க... யோசிச்சுப் பார்த்து பதில் சொல்லுங்க. நான் திரும்பவும் புதன் கிழமை போன் பண்றேன்.

"இதுல யோசிக்க என்ன இருக்கு...? கொட்டிவாக்கம், சோழிங்கநல் லூர்னு ஏதாவது கண்காணாத இடத்துல டாக்டர் இருந்தா சொல் லுங்க.... வந்து பார்க்கறோம். மந்தைவெளியில போய் கன்ஸல்ட் பண்றது தலைல மண்ணை அள்ளிப் போட்டுக்கறா மாதிரி..."

'இப்படியே எல்லாரும் நினைச்சாங்கன்னா சைக்ரியாட்ரிஸ்ட்க ளெல்லாருமே புறநகர் பக்கம்தான் இடம்பெயரணும்...' வார்த்தைகளை வெளிப்படுத்தாமல் எண்ணத்துக்கு அணைபோட்டாள் சுகன்யா.

"டாக்டர் மகேஷ்....?"

"ஸ்பீக்கிங்..."

"நான் சுகன்யா. நேத்து வந்திருந்தேன். ஒரு தம்பதியோட பிரச்னை சம்பந்தமா..."

"யெஸ் சுகன்யா. ஞாபகமிருக்கு. அப்பாயிண்ட்மெண்ட் வேணுமா? ஒரு நிமிஷம்..."

"இல்ல டாக்டர், ஸாரி... உங்களுக்குத் தொந்தரவு கொடுத்துட்டேன். சம்பந்தப்பட்டவங்களை என்னால கன்வின்ஸ் பண்ண முடியலை. உங்க க்ளினிக் வரவே பயப்படறார் அவர்... அந்த ஏரியா முழுக்க கிளை யன்ட்ஸ் இருக்காங்களாம் அவருக்கு. யாராவது பார்த்துட்டா என் கதி அதோகதிங்கறார்."

"அவர் என்ன வேலைல இருக்கார்மா?"

"விளம்பர ஏஜென்ஸி வைச்சிருக்கார் டாக்டர். சேகர் அஸோஸி யேட்ஸ்"

"ஓ! தெரியுமே. காஜல் சோப், முல்லை பட்டு சென்டர், விளம்பர மெல்லாம் அவங்களுதுதானே.... கவனிச்சிருக்கேன். அவர் பயம் நியாய மானதுதான்மா. இந்த ஏரியாவுல அவருக்கு வேண்டியவங்க எக்கச் சக்கமா இருக்காங்க."

"கொட்டிவாக்கம், சோழிங்கநல்லூர்ல யாராவது டாக்டர் இருந்தா சொல்லுங்க, வரேன்ங்கறார்... இப்ப நான் வேற டாக்டரைத் தேடணும்..."

"வேண்டாம் சுகன்யா...!"


"டாக்டர்...?"

"என் வீடு சோழிங்கநல்லூர்லதான் இருக்கு. விலாசம் தர்றேன். அங்க கூட்டிட்டு வாங்க. அந்த இடத்துல அவர் பயப்படற மாதிரி யார் கண்ணுலையும் பட்டுட மாட்டார்."

"தாங்க்யூ டாக்டர். நான் அவங்க சௌகரியம் கேட்டுட்டுத் திரும்ப வும் கூப்பிடறேன்."

நேரம் குறித்து, வசந்தியையும் சேகரையும் சோழிங்கநல்லூர் அழைத் துப் போனபோது டாக்டர் மகேஷின் வார்த்தையும் சேகரின் எதிர் பார்ப்பும் ஒருசேரப் பொய்யாகிப் போயின!

(தொடரும்)



தனக்குக் கிட் டும் ஊதியத்தின் மதிப்பை விட தனது உழைப்பின் மதிப்பை உயர்த்திக் காட்டும் மனிதனே சமூகத்தில் முன் னேற முடியும்.

– ஆபிரகாம் லிங்கன்

தகவல் : குணாபார்த்திபன்

- மனிதர்களுடைய மனச்சாட்சி அவர்கள் நிலையை நிர்ணயிப் பதில்லை. அவர்கள் நிலைதான் மனச்சாட் சியை நிர்ணயிக்கிறது.
  – காரல் மார்க்ஸ்

- எதிரிகள் இல்லா மல் முன்னேற்றம் இல்லை.
  - வில்லியம் பிளேக்

- கொள்ளைக்காரர் கள் பணத்தைக் கொடு, இல்லை யேல் உயிரைக் கொடு என்று சொல்லி வருகிறார் கள். பெண்களோ இவை இரண்டை யுமே கொள்ளை கொள்கிறார்கள்.

- சாமுவேல் பட்லர்
தகவல் : வெ. ஆனந்தி



GOKULAM

The monthly magazine for children

JANUARY '97 ISSUE

GOKULAM
47, JAWAHARLAL NEHRU ROAD,
EKKADUTHANGAL,
CHENNAI - 600 097.

மேலும் ஒரு மனிதர்

பதினையாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பளித்துள்ள அந்தப் பெரிய தொழிற்சாலையிலிருந்து வேலைக்கான நியமன ஆணை நேற்றே வருமென்று காத்திருந்தான். நாவரசு. இன்றைக்குத்தான் வந்தது. பெயர், பிறந்த நாள், படிப்பு, சாதி - மதம் என்று பதினைந்து கேள்விகள் கேட்டு, அதைப் பூர்த்தி செய்து வட்டாட்சியர் ஒப்பத்துடன் வியாழக்கிழமைக்கு முன்னதாக வந்து சேர வேண்டும் என்று கண்டிருந்தது.

காலண்டரைப் பார்த்தான்.

அடுக்கடுக்காய 'சிவப்புத் தேதிகள்...'

கோபத்தின் உச்சம்.

'வந்திருக்கிற பேப்பரில் தாசில்தார் கையெழுத்து வாங்கி வர்ற வியாழக்கிழமைக்குள் தொழிற்சாலைக்குப் போய்ச் சேரணும்.''


"சேர்த்துட வேண்டியதுதானே?'' என்று கேட்டார் அப்பா.

''சாத்தியமில்லை.''

''ஏன்?''

"நாளைக்கு சனி - ஞாயிறு விடுமுறை. திங்கள் உள்ளூர் தர்கா கந்தூரிக்கு லோக்கல் விடுமுறை. தொடர்ந்து மூணு நாள் பொங்கலுக்கு... இனி தாசில்தார் தரிசனம் வெள்ளிக்கிழமைதான்.''

"அப்ப ஃபேக்டரியும் லீவாத்



தானே இருக்கும்?''

"ஊஹூம்! ஞாயிறு விட்டால் பொங்கல் விடுமுறை ரெண்டு நாள்தான் அவுங்களுக்கு." வேதனைப் பெருமூச்சு வெளிப்பட்டது.

"இப்ப என்னங்க பண்றது?''

– அம்மாவின் குரலும் ஜீவனற்றுப் போனது. ஆற்றாமை, அவசர கதியில் சிந்திக்க வைத்தது...

"இந்தப் பேப்பரில் தாசில்தார் கையெழுத்து வாங்கிட்டா தம்பிக்கு வேலை நிச்சயம்தானேம்மா?'' என்றான், அண்ணன் பூவரசு.

'ஆமா' என்கிற மாதிரி தலையை அசைத்து, ''ஆனா இன்னும் ஆறு நாளைக்கு ஆபீஸ் திறக்காதாமே...''

என்றாள் வேதம்.

"அதை நான் பார்த்துக்கறேன்" என்று அவசரமாக ஆர்டரைப் பிடுங்கிக் கொண்டு வெளியே ஓடினான் பூவரசு.

அலுவலக வளாகம். வெறிச்சோடிக் கிடந்தது.

சற்றே தயங்கி உள்ளே நுழைந்தான்.

'துணை வட்டாட்சியர்' என்ற பதவிக்குப் போடப்பட்டிருந்த நீண்ட தேக்கு மேஜையில் ஒரு பெரியவர் சுருண்டு படுத்திருந்தார்.

"சார்..."

"யார்?" என்ற பெரியவரின் 'எழுச்சி', படுத்துக் கிடந்த தோற்றத்துக்கு முற்றிலும் மாறுபட்டிருந்தது.

வார்த்தைகளை சமைக்கத் தெரியாமல் எடுத்த எடுப்பிலேயே பேப்பரை பெரியவரிடம் நீட்டினான் பூவரசு.

மற்றதை, 'அவர் பார்த்துச் சொல்லட்டும்' என்ற நினைப்பில், கொண்டு வந்த 'இருநூறு' பாகெட்டில் இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டான். பால் விற்றுச் சேமித்த பணம் பத்திரமாக இருந்தது.

"என்ன இது?" என்றார் பெரியவர், பூவரசு கொடுத்த பேப்பரைப் பார்த்து விட்டு. குரலில் லேசான அதட்டல் தொனித்தது.

"தம்பிக்கு வேலை... தாசில்தார் கையெழுத்து வேணும்."

"சுலபமாச் சொல்லிட்டே?" - அதட்டல் அதிகரித்தது.

"எப்படிச் சொல்லணும்?" என்றான் பூவரசு.

- அவன் சொன்னவிதம்; குரலின் தாழ்ச்சி. எது சொன்னாலும் செய்யச் சித்தமாயிருக்கிறேன்' என்று பதுங்கிய உடல்... 'எனக்கு அவ்வளவாகப் புரியாது' என்று பிரகடனப்படுத்தும்



"அந்தப் பத்திரிகை செஞ்சது ரொம்ப அநியாயங்க."

"ஏன்? என்ன ஆச்சு?"

"பின்னே என்னங்க? நட்சத்திரக் குறியிட்ட கேள்விக்கு பரிசு தருவதாக அறிவிச்சிருந்தாங்க. நான் என் கேள்விக்கு நட்சத்திரக் குறியிட்டுத்தான் அனுப்பினேன். ஆனா, பரிசு கிடைக்கலை."

– எஸ். பாலாஜி

சங்கடமான முகபாவம் - இத்தனையும் உள்ளடக்கிய கேள்வி பெரியவரைப் புரட்டிப் போட்டது.

காகிதத்தில் எழுதி இருப்பதைப் படிக்கத் தெரியாவிட்டாலும், வந்திருப்பவனை உலுக்கி உலுக்கியே விசயத்தைக் கறந்து விடுகிற அனுபவ உத்தி தூரப் போய் விழுந்தது.

"உன் தம்பி எங்கே?" என்றார்.

"லீவ் நாள்ல வேலை ஆகாதுன்னு..."

"ம்.. வெவரமானவன் வீட்ல இருக்கான். நீ வந்து நிக்கிறே பாவம்..."

- பெரியவர் பூவரசுவை கூர்ந்து பார்த்தார்; படித்தார் எனச் சொல்லலாம்.

தன்னை ஆழமாகப் பார்க்கிற, அனுபவம் பழுத்த கண்ணில் தெரிந்த கனிவு, 'தான் வந்த காரியம் நடந்து விடும்' என்ற நம்பிக்கையை நொடியில் தோற்றுவிக்க -

சட்டென்று அவரது கையைக் கோத்து கண்ணில் ஒற்றிக் கொண்டான் பூவரசு.

'கடவுள் உங்க மூலமாத்தான் என் தம்பிக்கு நல்ல வழிகாட்டணும்' என்கிற மாதிரி எதுவோ சொல்ல வந்தவன், வார்த்தை வக்கணையாகப் படாமல் வாயால் சொல்ல வந்ததைக் கண்ணால் பூர்த்தி செய்தான்.

அவனாகக் கையை விடுவிக்கக் காத்திருந்து, "இப்படி உட்கார்"என்ற பெரியவரின் குரலில் ஒரு தீர்மானம் தெரிந்தது...

- நிமிட நேரம் வளாக வெளியை வெறித்தார்.

நாற்பத்தைந்து வருசமாய் வளையவரும் வளாகம். ஆங்கிலேயர் காலத்தியதும் அதற்குப் பிந்தியதுமான கட்டடங்கள்... பங்கா இழுக்கிற வேலைக்கு இருபது வயதில் காம்பவுண்டுக்குள் நுழைந்த நாள் 'பளிச்'சென்று ஞாபகம் வந்தது... யாரோ - எப்பவோ தன் பிறந்த தேதியை எழுதுவதில் செய்த தவறு காரணமாக ஐந்து வருடத்துக்கு முன்பே ஓய்வு பெற்றிருக்க வேண்டிய தனக்கு இன்னமும் கிடைக்கிற சம்பளம் இனித்தது.... அதுவும் இந்த மாதத்தோடு முடிந்து விடும் என்ற ஞாபகம் வந்து நினைவை நெறித்தது...

"இதோ பார்! ஒம்பது மணிக்கு என் ஜோடிதார் வந்துடுவார். அவர போன்ல உக்கார வச்சுட்டு நாம வங்கவனம் போறோம்" என்றார்.

"எதுக்கு?" என்றான் பூவரசு.

"தாசில்தார் அங்கதான் கேம்ப்."

உற்சாகமாகிப் போனான்.

அடுத்த வினாடியே வந்து விட்டார், 'ஜோடிதார்'.

"இதைப் புடி" என்று ஒரு நீள ரிஜிஸ்தரை கொடுத்து, வந்தவரிடம் பொறுப்பை ஒப்ப

டைத்து விட்டு, "பொறப்படுப்பா" என்று பெரியவர் பூவரசுவைக் கிளப்பவும் –

"தச்சங்கொல்லையில் தகாராறாம். தாசில்தார் போயிருக்கார்" என்று தகவல் பொடியைத் தூவினார் பொறுப்பேற்றுக் கொண்டவர்.

பெரியவர் ஸ்தம்பித்துப் போனார்.

"ஏன் நின்னுட்டீங்க?"

"காலைல ஆறு மணிக்கு விட்டா சாயுங்காலம் ஆறுக்குத்தானே அடுத்த பஸ் – தச்சங்கொல்லைக்கு."

"சைக்கிள் எதுக்கு இருக்கு?" என்றான் பூவரசு.

"பதிமூணு கிலோ மீட்டர்ப்பா."

"ஒலகமே சுத்தலாம் உக்காருங்க" என்று மிதிக்க ஆரம்பித்தான்.

தச்சங்கொல்லை பிரச்னை சுமுகமாக முடிந்திருக்க வேண்டும். தெளிவாக இருந்தது – பஞ்சாயத்து அலுவலகத்தில் இருந்த தாசில்தார் முகம்.

'அருமையான தருணம்' என்ற மகிழ்வில் பெரியவர் நமஸ்கரிக்க, "வாங்க பெரியசாமி" என்றார், தாசில்தார்.

பூவரசு அவரது பெயரைத் தெரிந்து கொண்டவனாய் ஒதுங்கி நிற்க, படியேறிப் போய் தாசில்தாரிடம் 'பேப்பரை' சமர்ப்பித்தார், பெரியசாமி.

"என்ன இது?"

– பெரியசாமி பூவரசுவைக் கேட்ட அதே கேள்வி. இப்போது தாசில்தார் முறை.

"வேண்டிய பையனுக்கு வேலை உத்தரவு. ஐயா கையெழுத்து வேணும்."

"மொட்டையா இருக்கே" என்றார், பார்த்து விட்டு.

"வி.ஏ.ஓ-வைத் தேட அவகாசமில்லே. ஆர்.ஐ... ஐயாவோட வங்கவனம் கேம்ப்ல இருப்பார்னு பொறப்புட்டேன்."

"நம்ம ஆளுங்க கையெழுத்து கிடக்கட்டும் பெரியசாமி... மனுதாரர் கையெழுத்து?" என்று கேள்விக்குறியைப் பெரிதாக்கினார், தாசில்தார்.

பேப்பரை உற்றுப் பார்த்த பெரியசாமிக்கு மொத்த முயற்சியும் செத்துப் போனது மாதிரி இருந்தது.

• தாசில்தார் நீட்டிய பேப்பரைத் தாழ்மையுடன் திரும்பப் பெற்றுக் கொண்டு படி இறங்கினார்.

'மனுதாரர் கையெழுத்து கூடப் பார்க்காமல் எப்படி ஏமாந்தோம்?' என்ற வெட்க உணர்வு தாக்க –

"ஏம்பா! உனக்கு வி.ஏ.ஓவைத் தெரியாது... ஆர்ஐன்னா வெளங்காது... சரி.. வீட்ல இருக்கிற பையன்ட்ட கூடவா கையெழுத்து வாங்கிட்டு வரத் தோணலை?" என்று நெடுமரமாய் நின்றவனிடம் நொந்து கொண்டிருந்த பெரியசாமியை, மேலே வரச் சொல்லி சைகை காட்டினார், தாசில்தார்.

ஓடிப் போனார்.

'இந்த மாதத்தோடு ஓய்வுபெறப் போகும் பெரியசாமியின் கடைசி விண்ணப்பம் இது என்ற கதியில் பேப்பரை வாங்கி கையெழுத்திட்டு சாவி ஒன்றையும் கொடுத்தனுப்பினார் தாசில்தார்.

பார்த்துக் கொண்டிருந்த பூவரசுக்கு கண்ணில் ஆனந்தப் பெருக்கு.

நன்றி சொல்லி, நமஸ்கரித்து இறங்கி வந்தவரை ஏற்றிக் கொண்டு வந்த வேகத்தை விஞ்சி சைக்கிளை மிதித்தான்...

கையெழுத்து வாங்கின பேப்பரை தன்னிடம் தராமல் தானே வைத்துக் கொண்ட பெரியவரின் செயல் குழப்பியது...

கொண்டு வந்த பணத்தை முன்னமேயே கொடுத்திருக்கணுமோ என்ற தவிப்பு...

அலுவலகம் வந்து விட்டது.

சைக்கிளை விட்டு பெரியசாமி இறங்கியதும், சட்டைப் பையிலிருந்த பணத்தை எடுத்து மரியாதையுடன் அவரது கைகளில் வைத்தான்.

துடித்துப் போனார்.

"என்னப்பா இப்படிப் பண்ணிட்டே... என்னப் பார்த்தா பிடுங்கித் திங்கிறவனாவா தெரியுது?" என்றவரின் கண்கள் லேசாய்க் கசிந்து விட்டன.

குற்ற உணர்வு சற்றுமின்றி, "பெரியய்யா மன்னிக்கணும்... கையெழுத்து வாங்கின பேப்பரை தரலேன்னதும் பணத்தைக் கொடுத்தேன்" என்றான் பூவரசு, வெகு இயல்பாக.

இந்த வெள்ளையான – வெளிப்படையான பதில் போதுமானதாக இருந்தது பெரியசாமிக்கு.

அழைத்துக் கொண்டு அலுவலகத்துக்குள் போனார். தாசில்தாரிடமிருந்து, வாங்கி வந்த சாவியைத் துழாவி எடுத்து 'வட்டாட்சியர்' என்று பொறிக்கப்பட்ட அறையைத் திறந்தார்.

மேஜை மேல் இருந்தது முத்திரை. எடுத்து பூவரசுவின் பேப்பரில் – தாசில்தார் கையெழுத்துக்கு கீழ் பதிக்கவும் கோபுர முத்திரை சிரித்தது...

சிலிர்த்துப் போனான், பூவரசு.

பேப்பரை தராமல் தக்கவைத்துக் கொண்ட பெரியசாமியின் செயலுக்குக் காரணம் புரிந்து காலைத் தொட எத்தனித்தான்.

தடுத்து, முத்திரையிட்ட பேப்பரைக் கொடுத்து போயிட்டு வா என்றார், அவர்.

23

''லஞ்சுக்கு வெளியே போவோம்னு வீட்டுல சொல்லிட்டு வந்திருக்கேன்... நீங்களும் எங்ககூட வர்றதா நினைச்சுட்டிருக்காங்க...''

-வசந்தியுடன் வந்து நுழைந்ததும், நுழையாததுமாகச் சொன்னான் சேகர்.

''ஆயிரத்தெட்டு கேள்வி கேட்டாங்க. 'திடீர்னு என்ன லஞ்சு? ஆபீஸ்ல வேலை இல்லியா? அப்பாயிண்ட்மென்டெல்லாம் கான்ஸல் பண்ணிட்டியா?'ன்னு அப்பா துளைச்சாரு. அம்மாவானா 'ஏண்டா எங்க போறே லஞ்சுக்கு...? சுகன்யா பர்த்டேயா இன்னைக்கு? டேபிள் புக் பண்ணியிருக்கியா? நான் வேணா போன் பண்ணி புக் பண்ணட்டுமாங்கறாங்க...''

''எப்படி சமாளிச்சே...?''

''எப்படியோ, எல்லார் கண்ணுலயும் மண்ணைத் தூவிட்டு வந்தாச்சு சுகன்யா. அதெல்லாம்கூடப் பரவாயில்லை... இந்தப் பொண்ணுக்கு தைரியம் சொல்றதுக்குள்ள போதும் போதும்னு ஆயிடுச்சு...''

வசந்தியைப் பார்த்துச் சொன்னபோது அவள் எதுவும் நடக்காதது போல் சுலபமாகச் சிரித்தாள். ''போகலாமா....? டாக்டர் சொன்ன நேரத்துக்குப் போய்ச் சேர வேண்டாமா...?''

ஹாண்ட்பாகை எடுத்துக் கொண்டு கதவைப் பூட்டும் நேரம் 'ஒரு நிமிஷம்' என்று மீண்டும் உள்ளே போனாள் சுகன்யா. டெலிபோன் எண்கள் அடங்கிய சிறிய நோட்புக்கை எடுத்துக் கொண்டு திரும்பினாள்.

''எதுக்கு மன்னி உள்ளே போனேள்...?''

''போன் புக் எடுத்துக்க மறந்துட்டேன் வசந்தி.''

''ஏதாவது அவசரம்னா யாருக்காவது போன் பண்ண நம்பர் தேட வேண்டாமில்லையா...''

''என்ன எமர்ஜன்ஸி வரும்னு நினைக்கறேள் மன்னி... அட்மிட் ஆகணும்னு சொல்வாரா...?''

''சே சே! அப்படியெல்லாம் விபரீதமா கற்பனைப் பண்ணிக்காதே வசந்தி. மனசை இலேசா வைச்சுக்கோ....''

சொன்ன நேரத்தில் சோழிங்கநல்லூரில் போய் இறங்கியபோது சுகன்யாவுக்கே சற்று படபடப்பாகத்தான் இருந்தது. பிரச்னைகள் அப்படியே கரைந்து ஆவியாகிப் போய் விடக் கூடாதா...? உதடுகள் பிரார்த்தனைகளை முணுமுணுத்தன.

''வாங்க... சேகர்...? நீங்க வசந்தி இல்லையா...? இப்படி வாங்க... சுகன்யா நீங்க இங்க உட்கார்ந்திருங்க'' என்று ஹால் நாற்காலியைக் காட்டிவிட்டு அவர்கள் இருவரையும் மட்டும் ஒதுக்குப்புறமாய் இருந்த தனி அறைக்குள் அழைத்துப் போனார் டாக்டர் மகேஷ். அதன் அகன்ற கதவு மூடப்பட்டு ஏ.ஸி. இயந்திரம் ஆன் செய்யப்படும் ஓசை மட்டும் வெளியே கேட்டது.

தன்னையறியாது நெடிய பெருமூச்சு வெளிப்பட்டதை உணர்ந்து சிரித்துக் கொண்டாள் சுகன்யா... 'ஒரு கல்யாணம் எப்போது நிறைவடைகிறது...? மண்டைக்குள் கேள்வி குடைய ஆரம்பித்தது. ஓர் ஆணும் பெண்ணும் வாழ்க்கையை இணைத்துக் கொள்ள முடிவெடுக்கும் கனத்திலா? மோதிரமோ மாலையோ தாலியோ அடையாளச் சின்னமாகும் அந்த அரை நிமிஷ நேரத்திலா...? இல்லை, இருட்டின் சௌகரியத்தில் நிகழும் வேட்கைத் தணிப்பிலா...? அல்லது வெளிச்சம் ஒரு பொருட்டல்ல என்றாகிப் போகும் அந்த ரங்க அரங்கேற்றங்களின்போதா...? உயிர்ப் பரிமாற்றம் நிகழ்ந்துள்ளது உறுதியாகும் உன்னதமான நிலையிலா? இல்லையென்றால்.... எந்தப் பொக்கிஷத்தையாவது இழந்து துடிக்கும் கால கட்டத்தின் துயரப் பகிர்தலிலா...?



பூரணத்துவம் என்பதை இவற்றுள் எந்த ஒரு கட்டத்திலும் அடையலாம்... அல்லது எதிலுமே அடையாமலும் போகலாம். ஒவ்வொரு கட்டத்திலும்கூட அனுபவிக்கலாம்...

ஸ்ரீராமுடனான தன் வாழ்க்கையை விலகி நின்று எடை போட்டால் எங்கெங்கு முழுமையைத் தொட்டுக் காட்ட முடியும்...? வேண்



டாப! கூறு போட்டுக் கொச்சைப் படுத் தும் விஷயம் அன்று அது... அப்படியே இருக்கட்டும். பறிக்காத பூவாக...

டாக்டர் மகேஷ் வீட்டு வரவேற்பறையின் ஃபிரெஞ்சு ஜன்னல்கள் அகலத் திறந்திருந்தன. தோட்டத்தில் பறிக்காத பூக்கள் வெயிலில் சிரித்தன. புன்னகையுடன் எழுந்து புல் தரைக்குப் போனாள் சுகன்யா.

கருத்துடனும் ரசனையுடனும் பராமரிக்கப் பட்டிருந்தன, பூச்செடி பாத்திகள். சிவப்பு இறகுகளைச் செருகி வைத்தது போல் ரெட் சால்வியா மலர்கள் பூத்திருந்தன. அடுத்து அமைந்த பாத்தியில் பச்சைப் பசேலென்று கொத்துமல்லிக்கு அண்ணன்போல் அலங்கார குரோட்டன்ஸ்; அதையும் அடுத்து வெள்ளை பிடூனியா மலர்கள். வண்ணங்களின் வேறுபாடும் வடிவங்களின் மாறுதல்களும் நயம் படத் தெரியும்படி அமைக்கப்பட்டிருந்தது.

குனிந்து ஒரு விரலால் இலேசாகத் தொட்டுப் பார்த்தாள். ஒரு குரோட்டன்ஸ் செடியை...

''இலையை பறிச்சிடாதீங்கம்மா...''

இந்துமதி ?

தலையில் முண்டாசும் காதில் பீடியுமாக மேல் சட்டையின்றி நின்றார் தோட்டக்காரர்.

''நீங்கதான் தோட்டம் பார்த்துக்கறீங்களா....?''

''ஆமாங்கம்மா... டெய்லி வருவேன்... ஐநூறு ரூபாய் சம்பளம். அம்மா மதியச் சாப்பாடு போட்டுருவாங்க...; சனிக்கிழமையில பிரியாணி... பொங்கல், தீபாவளிக்குப் புதுத்துணி....

''இந்தந்த இடத்துல இன்னின்ன செடி வைக்கணும்னு யார் சொல்லுவாங்க...? அம்மாவா, ஐயாவா...?

சுற்றும், முற்றும் பார்த்துவிட்டு திருட்டு முழியுடன் சொன்னார் தோட்டக்காரர். ''அதாங்கம்மா ரொம்ப டமாஷு; டாக்டர் ஐயா இருக்காரே... அவரு வந்து, 'கோயிந்தசாமி, இங்க பிடூனியா போட்டுரு; அதும் பக்கத்துல ரெட் சால்வியா வையு'ன்னுவாரு... நம்ம அம்மா இருக்காங்க பாருங்க... பின்னாலயே வந்து மல்லுக்கு நிப்பாங்க... கிடையவே கிடையாது. இந்த சைடு பூரா ரெட்டு; அந்தப் பக்கம் மூச்சூடும் வெள்ளைப் பூ போடுன்னுவாங்க...''

''அப்புறம்...?''

''அப்புறமேலே இரண்டு பேத்துக்குப் பெரிசா சண்டை வந்துடும்...''

பொத்திக்கொண்டு வந்த சிரிப்பை

தங்க நகை பரிசு!

இந்த இருபத்தாறு வாரத் தொடர், ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு கதாசிரியர் பெயரில் வெளியாகி வருகிறது. ஆனால் அவர்களுள் ஒரே ஒரு நபர்தான் இதை எழுதி வருகிறார். தொடரை எழுதியவர் யார் என்பதைக் கண்டுபிடிப்பது உங்கள் சாமர்த்தியம். கடைசி வாரம் வரை காத்திருந்து, அந்த இதழில் வெளியாகும் கூப்பனில் விடை எழுதி அனுப்புங்கள். சரியான விடைக்கு, தங்க நகை பரிசு! பலர் சரியாக எழுதினால் குலுக்கலில் ஒருவரே பரிசு பெறுவார். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

அடக்கியபடி சுகன்யா கேட்டாள். "சண்டையில் யாரு ஜெயிப்பாங்க...?"

"யாரு ஜெயிச்சா என்ன, தோத்துப்புட்டா என்ன... என் பாட்டுல இஸ்டத்துக்கு நான் பாத்தி போட்டு ஊனிடுவேன் விதையை... அவங்க ஒரு வாரம் போல சண்டை போட்டுக்கினிருப்பாங்களா... அதுக்குள்ள முளை விட்டிருக்கும்... அப்புறம் இரண்டு பேருமா 'பாத்து தண்ணி ஊத்தினியா? இங்க புல்லு முளைச்சுருக்கு பாரு... அங்க பூண்டு முளைச்சுருக்கு பாருன்னு என் முழிய நோண்ட ஆரம்பிச்சிருவாங்க....' இவங்களா சண்டை போட்டாங்க?'ன்னு நான் தாடியை சொரிஞ்சுக்கிட்டு நிப்பேன்..."

இம்முறை சுகன்யாவால் சிரிப்பை அடக்க முடியவில்லை...

"என்ன கோயிந்தசாமி! அம்மா கைல உன் சந்திரபாபு ஆக்டெல்லாம் குடுக்க ஆரம்பிச்சுட்டியா...?"

"இல்லிங்க ஐயா" காது பீடியை அவசரமாகக் கழற்றினான் கோவிந்தசாமி.

"டாக்டர் மகேஷ்! ஒரு சைக்கியாட்ரிஸ்டும் அவர் மனைவியும் சண்டை போட்டா யார் மதியஸ்தம் பண்ணுவாங்க...?

சுகன்யாவின் கேள்வி டாக்டருக்குப் பிடித்திருந்தது. "உன்னை மாதிரி யாராவது பட்டம் வாங்காத சைக்கியாட்ரிஸ்ட்கிட்டே போக வேண்டியதுதான்!"

டாக்டரின் கன்ஸல்டிங் அறைக்குள் நுழைந்தபோது வசந்தியும், சேகரும் உரையாடலில் ஆழ்ந்து கிடந்தார்கள்.

"எல்லாம் சரியாயிடும். நோ ப்ராப்ளம்..." என்றார் டாக்டர் தம் இருக்கைக்கு வந்தபடி.

"சுகன்யா கேள்விக்குறியுடனும் அவரையும் அவர் பேஷண்ட்களையும் மாறி மாறிப் பார்க்க...

நீங்க வெளில இருங்க. சுகன்யாவை அஞ்சு நிமிஷத்துல அனுப்பிடறேன்..."

அவர்கள் வெளியேறி கதவு சாத்தப்பட்டதும் பேசினார். "நிஜமாவே பிரச்னை ரொம்ப சிம்பிள். நீ சொன்ன மாதிரி பொண்ணு பயந்து போயிருக்கு... வீட்ல பண்ணின கெடுபிடியும் உலகம் தெரியாம வளர்ந்ததும்தான் காரணம். இரண்டு பேர்கிட்டேயும் தனித்தனியா பேசியிருக்கேன். என்ன செய்யணும்னு சொல்லியிருக்கேன். அவங்களுக்கு நினைச்ச நேரத்துல தனியா இருக்கற மாதிரி சூழல் அமைஞ்சா கொஞ்சம் உதவியா இருக்கலாம். இப்போ இருக்கறது ஜாயிண்ட் ஃபாமிலி போலிருக்கே...? எங்காவது ஒரு மாசம் தேனிலவுக்கு அனுப்பி வையேன்..."

"ஒரு மாசமா!"

"சரி, இரண்டு வாரம்...".

"பார்க்கறேன். சேகர் படு பிஸியான ஆசாமி. கல்யாணத்தன்னிக்குகூட செல்லுலார்ல பேசிக்கிட்டிருந்த மாப்பிள்ளை..."

"எத்தனை நாள் முடியுமோ போகச் சொல்லுங்க..."

"தாங்க்யூ டாக்டர்..." எழுந்தாள் சுகன்யா.

"எங்க எழுந்துட்டீங்க...?"

"ஏன் டாக்டர்?"

"என் ஃபீஸ் இருநூறு ரூபாய்..."

ஹாண்ட்பேகில் இருந்து பணத்தை எடுத்துக் கொடுத்துவிட்டு வெளியே வந்தபோது; ரேஸ் குதிரையின் அவசரத்துடன் புறப்படத் தயாராய் இருந்தான் சேகர்.

தோட்டத்தைக் கடந்து, கேட்டைவிட்டு வெளியேறி, காரில் ஏறப்போன சமயம் 'டாக்டர் மகேஷ் - சைக்கியாட்ரிஸ்ட்' என்று பித்தளையில் பளபளத்த போர்டு தூணில் தொங்கி கண்ணைப் பறித்தது.

சேகர் பாக்கெட் பிரித்து சாவியை எடுத்து காரைத் திறக்கும் நேரம்,

"ஏன்டா பழி! நீ இங்க என்ன பண்றே..." நேர் எதிர்வீட்டு கேட்டிலிருந்து வெளிப்பட்டான் ஒரு இளைஞன்.

அவனுக்கு முதுகைக் காட்டி நின்ற சேகரின் முகம் சுருங்கிக் கருத்தது, ஒருகணம், ஒரேயொரு கணம்.

அடுத்தவினாடி அவன் காருக்குள் ஏறியிருந்தான். சிடக் சிடக்கென்று கதவுகளைத் திறந்து சுகன்யாவையும் வசந்தியையும் "ஏறுங்க" என்று உறுமினான். கூடவே காரும் உறுமலுடன் புறப்பட்டது.

"டேய் சேகர்! என்னடா கூப்பிட கூப்பிட காதுல வாங்கிக்காம போயிட்டேயிருக்கே...?"

எதிர்வீட்டு இளைஞன் போட்ட கூச்சலில் பாதிதான் அவர்களுடைய செவிகளை எட்டியது.

அவன் ஓட்டிய வேகத்தில் திரும்பவும் ஏதாவதொரு கிளினிக்கில் போய்த்தான் நிறுக

வேண்டியிருக்குமோ என்று கலங்கிப் போனாள் சுகன்யா.

வசந்தி பயந்து கதவின் கைப்பிடியை இறுகப் பற்றிக் கொண்டாள்.

"சேகர் அமைதியாயிரு...ப்ளீஸ்"

"சொல்லமாட்டீங்க...? அமைதியாம் மண்ணாங்கட்டி....! எது நடக்கக்கூடாதுன்னு நினைச்சனோ அதுதான் கரெக்டா நடந்திருக்கு..." ரியர்வியூ மிர்ரர் வழியே பல்லைக் கடித்தான்.

"ஒண்ணுமே நடக்கலை. ரொம்ப சாதாரணமா டாக்டர் வீட்டுத் தோட்டத்தைப் பார்க்க வந்தோம்னு சொல்லி சமாளிச்சிருக்கலாம். அவசர ஆத்திரத்திலே காரியத்தைக் கெடுத்துட்டியே... இனிமே அந்த ஆளுக்கு விளக்கம் தர்றதுதான் கஷ்டம்... ஏன் கண்டுக்காம ஓடினேன்னு அவனுக்குச் சந்தேகம் வருமா இல்லையா...?"

"எல்லோரும் சேர்ந்து என்னைப் பைத்தியமா அடிச்சிடுறீங்க..."கத்திவிட்டு காரை ஓரம் கட்டி மூச்சு வாங்கினான்.

"சேகர், இது ரொமப அதிகம்! இப்படி வார்த்தைகளை அள்ளி விடக்கூடாது."

"ஐ-ம் சாரி... ரொம்ப சாரி...?" இரண்டு நிமிடங்களுக்கு ஸ்டீயரிங் வீல் மீது தலை கவிழ்ந்து கிடந்தான்.

பிறகு, "ஓ,கே. போகலாம்..." என்று மீண்டும் வண்டியைக் கிளப்பி அமைதியாய் ஓட்டிப் போய் சவேராவில் நுழைந்தான்.

ஏ.ஸி. குளுமையில் இளைப்பாறி, தக்காளி சூப்பையும், வெஜிட்டபிள் புலாவையும் ருசி பார்த்தபோது மூவருமே நிலைக்குத் திரும்பியிருந்தனர். ஐஸ்கிரீம் வந்தபோது வசந்தியின் வெனிலாவில் ஒரு ஸ்பூனை அவன் எடுத்துக் கொள்ள, அவன் அவளுடைய சாக்லேட்டில் கொஞ்சம் நக்கிப் பார்க்க... கண்டும் காணாததுபோல் இருந்த சுகன்யாவுக்கு அப்பாடி என்றிருந்தது.

"ஹனிமுன் போயிட்டு வாங்களேன். இரண்டு பேரும்..."


"எல்லா மூனையும் இங்கேயே கொண்டாடிடுவோம்... இல்ல...?" வசந்தியைப் பார்த்துக் கேட்க அவள் வெட்கத்துக்கும் பெருமைக்குமிடையே தகித்துச் சிவந்தாள்.

"சீரியஸா சொல்றேன் சேகர்... நான் வேணா ஏற்பாடு பண்ணட்டுமா...?"

"இல்ல சுகன்யா... அவசரப்பட்டாதீங்க. முதல்ல இன்னிக்கி ஆபீஸ் போறேன். அங்க நிலவரம் எப்படின்னு பார்த்து, எத்தனை நாள் வெட்டிக்க முடியும்னு கணக்குப் போடறேன். அப்புறமா எந்த இடம், எப்போ கிளம்பறதுன்னு முடிவு பண்ணறோம்..."

சொன்னபோது, உடுத்திய துணியோடு 'தேன்நிலவு' புறப்பட வேண்டியிருக்கும் என்று அவன் நிச்சயமாய் எதிர்பார்க்கவில்லை.

(தொடரும்)



● வாழ்வில் வெகு முக்கியமாய் கற்றுக் கொள்ள வேண்டியது எப்படி வாழ்வது என்பதே.

— ஆவ்பரி

● திறமை வாய்ந்தவனுக்குப் பின் பல திறமையானவர்கள் இருக்கிறார்கள். - சீனப் பழமொழி.

— பா.குணா

● ஒவ்வொரு மனிதனுக்கும் தன் அபிப்ராயத்தைக் கூற உரிமை இருக்கிறது. ஆனால் எம்மனிதனும் தன் அபிப்ராயம் பிறரை ஆட்சி புரிய வேண்டும் என்று எதிர்பார்க்க உரிமை கிடையாது.


— தாமஸ் பெயின்/
அவ்வை கே. சஞ்சீவிபாரதி

● கடவுள் இந்த பூமியை எப்படி ஆள்கிறார் என்று விளங்கிக் கொள்வதற்காகவே நான் பத்திரிகைகளைப் படிக்கிறேன்.

—ஜான் நியூட்டன்/
போத்தனூர் ஏ.செந்தில்

பாத்திமா அக்காள் புறப்படுகிற நேரம் வந்து விட்டது. மாப்பிள்ளையை அவளோடு நிறுத்தி பாலும் பழமும் கொடுத்துக் கொண் டிருந்தார்கள். "மடிப்பணம் போடறவங்க போடலாம்...." என யாரோ சொல்ல, காதர் மாமு சம்சாரம் அக்காவின் முந்தானையை விரித்துப் பிடித்துக் கொண்டாள். பெண்ணின் உறவுக்காரர்கள் ஐந்தும் பத்தும் போட ஆரம் பித்தார்கள். சடங்குகள் அனேகமாக முடிந்து விட்டன. குடும்பத்தின் பெரிய தலைக்கட்டு, "ம்... ம்... புறப்படலாம்" என்று குரல் கொடுத் ததும் கண்களில் நீர்மல்க பிறந்த வீட்டையும் மனிதர்களையும் வெறிக்கப் பார்த்துவிட்டு அவள் கிளம்ப வேண்டியதுதான்.

ஜமால் துக்கத்தில் இறுகி இருந்தான். தவிர்க்க நினைத்தாலும் மாப் பிள்ளையின்



முகத்தையே கண்கள் அடிக்கடி வெறித்தன. அக்காளின் அருகில் அவன் மேலும் கருப்பாகத் தெரிந்தான். அகலமுகம். அம்மைத் தழும்பு, தடித்த உதடுகள், சிரிக்கும்போது மேல் வரிசைப் பற்களின் விகாரம், அழுந்த வாரியும் படியாத கேசம். சுருக்கம் விழுந்த வேஷ்டிக் கட்டு....

தலைக்குத் தொப்பியும், இரு பக்கமும் அதி லிருந்து தொங்கிய மலர் 'சேரா'வும், கழுத்தில் மாலையும் இல்லாவிட்டால் மாப்பிள்ளை என்று சொல்ல முடியாது போலிருந்தது.

பெரியப்பாவின் மீது கோபமாக வந்தது. அக்காளுக்கு இப்படி ஒரு ஆளைக் கட்டி வைக்க எப்படித்தான் மனம் வந்தது?

"என்னடா வேடிக்கை பார்த்துக்கிட்டு.... போயி சாமான்லாம் எடுத்து வைய்யி..." சின்ன மாமு கத்தினார். தாங்கிக் கொண்டிருந்த பழத் தட்டை ,அவனிடத்தில் நீட்டினார். பின்னா லேயே பணியாரக் குடம், புது ஜமுக்காளம், வண்ணப்பாய், உருட்டுத் தலையணை, கல்யாண விசிறி என 'கரவழி'ச் சீர் வந்து கொண்டிருந்தது.

அவர்களது தெருவிற்குள் பெரிய வாகனங் கள் நுழைய முடியாது. அகலம் போதாது. மாமு முன்னே செல்ல, அவனும் மற்றவர் களும் வரிசையாக நடந்தார்கள். யாரும் பேசிக் கொள்ளவில்லை. தெரு முனையில் கார் நின்றி ருந்தது. மாமு ஒவ்வொரு சாமானாக வாங்கி உள்ளே பத்திரமாக அடுக்கினார்.

"இங்கியே இருக்கணும். பொண்ணை வழி அனுப்பிட்டுத்தான் போகணும்... என்ன..." இன்னாரிடத்தில் என்றில்லாமல் பொதுவாகச் சொன்னார்.

மாமு காரைத் தொட்டுப் பார்த்தார். அவ ரது கல்யாணத்திலும் கார் வைத்துத்தான் கூட் டிப் போனார்கள். அதன் பிறகு அப்படி யொரு சவாரி இன்னும் வாய்க்க வில்லை.

இடம்பிடிக்கிற அவ சரத்துடன் இரண்டு பெண்கள் ஓடி வந்தார் கள். "ஏம்மா... பொறப் பட்டாகளா?" என்றார் மாமு. சட்டென்று தங்களது முகத்தை மறைத்துக் கொள்ள அவசரப்பட்டார்கள் அவர்கள் இருவரும். பெண் வீட்டுக்காரர் களுக்கு, அன்னிய பெண்களிடத்தில் பேசக் கூடாது என்ற இங்கிதம் தெரிய வில்லை என கருதியிருக்கக்கூடும்.

மாமுவுக்கும் இது தப்பு என்று தோன்றி யதோ, என்னவோ, அவரும் வேறு திசையில் பார்க்க ஆரம்பித்தார்.

"த்தா... வந்தாச்சு..." சாகுல் மாமுவின் மகன் சத்தமாகச் சொன்னான்.

கும்பலாக வந்து கொண்டிருந்தார்கள். பாத் திமா அக்காளின் உடம்பு சுத்தமாக புர்க்காத் துணியால் மூடப்பட்டிருந்தது. சேலைகளின் மொடமொடப்பும், மல்லிகைப் பூ மணமும் காற்றில் மிதந்து வந்தன.

"வர்றேன்... ஜமால்..." என விடைபெறும் போது, தன்னால் பதில் சொல்ல முடியாது போலிருந்தது. "டேய்... டேய்..." என்று மாமு கூப்பிடுவதைத் திரும்பிப் பார்க்காமல், விலகி நடக்க ஆரம்பித்தான்.

வீடு அமைதியாக இருந்தது. சற்று முன்பு வரை சிரிப்பையும், கலகலப்பையும், மனிதப் புழக்கத்தையும் கண்டு பூரித்த வெள்ளைச் சுவர்கள், வெறுமையுடன் நெடுநெடுவென்று நிற்பதைப் போலிருந்தது. பெரியம்மா வெறும் தரையில் ஒருக்களித்துப் படுத்திருந்தாள். அம்மாவும் பேச ஏதுமற்றவள் போல நிலைப் படியில் கால் நீட்டிச் சாய்ந்திருக்க, சின்ன


மாமு சம்சாரமும், அவளது தங்கையும் வீட்டை ஒழுங்கு பண்ணிக் கொண்டிருந்தார்கள். பூ மாலையுடன் அக்காவை அமர வைத்திருந்த மேற்கு மூலையில் இன்னும் வாசனை இருந்தது. மாமு வாடகைச் சாமான்களைத் திருப்பி அனுப்ப கைவண்டிக்காரனைக் கூப்பிடப் போயிருந்தார்.

ஜமால் வாசலுக்கு வந்தான். பந்தல் இடுக்கு வழியாக இறங்கு வெய்யில் திட்டுத் திட்டாக இறைந்து கிடந்தது. காதர்சா தன்னத்தா, வர்ழைக் குலையை நோட்டமிட்டுத் திரிந்த சிறுவர்களை "போங்கடாலே... காலிப்பய புள்ளைகளா..." என விரட்டிக் கொண்டிருந்தார்.

இனி இந்த வீடு அக்காள் இல்லாத வீடு என்ற உணர்வே குபீர் குபீரென்று நெஞ்சில் அறைந்தது.

அக்காள் அழுத்தக்காரி. இந்தக் கல்யாணத்தில் தனக்கு இஷ்டம்தானா என்பதை கடைசி வரைக்கும் அவனிடத்தில் சொல்லவே இல்லை. சொல்லாத விஷயங்கள் எத்தனையோ சொன்னதற்குச் சமம். ஏன் அப்படி இருக்க வேண்டும்? தான் என்ன அன்னியமா? அசலா?

சொந்த சின்னத்தா மகன். தம்பி. சேர்ந்து விளையாடியவன். சண்டை போட்டவன். தாதிம்மாவின் மடியில் ஒன்றாகப் படுத்து, கதை கேட்டு, தனிமைக்குப் பயந்து கைகோத்து



மும்தாஜ்யாசீன்

நடந்து, இருவரும் ஒன்றாகவே ஸ்கூலுக்குப் போய், திரும்பியதும் சேர்ந்து படித்து....

படிப்பில் புலி. சம்முகம் சாரின் கேள்வி களுக்கு. 'டக்டக்'கென்று பதில் சொல்கிறவள் அவள்தான். சாருக்குப் பெருமை. "பொட்டப் புள்ள என்ன போடு போடுது..."

எட்டாம் வகுப்பு வரைக்கும்தான் படித் தாள். அரைப் பரீட்சை லீவில் தாவணி போட, படிப்பு நின்று விட்டது. சம்முகம் சார் வீட் டிற்கே வந்து கெஞ்சினார். "புள்ளைக்கு இருக் கிற அறிவுக்கு எங்கியோ போகணும். நிறுத் தாதீங்க..."

பெரியப்பா பெருமூச்சு விட்டார். உலக நடப்புக்கும், குடும்பப் பழக்க வழக்கத்திற்கும் உள்ள இடைவெளியை பொறுமையாக எடுத் துச் சொன்னார். வெகுநேரம் பேசினார்கள். கடைசியில், வந்ததற்கு ஒரு தம்ளர் காப்பித் தண்ணியையும், "பொட்டப்புள்ளைக்கு ரெண்டு எழுத்து எழுதப் படிக்கத் தெரிஞ்சாப் போதும்ங்க சார்..." என்ற பதிலையும்தான் சாரால் பெற முடிந்தது.

உலகம் வீட்டு எல்லைக்குள் சுருங்கிப் போனால் என்ன? தனக்கு எங்கிருந்தாலும் ஒன்றுதான் என்கிற மாதிரிதான் அக்காள் இருந்தாள்.

ஸ்கூல் முடிந்து வருகிற ஜமாலிடம், "இன் னைக்கு என்ன பாடம்?" என்று விசாரிப்பாள். பக்கங்களில் பார்வையை ஓட விட்டு புத் தகத்தை மூடி, "இதான் பதில்... சரியா?" என்று கேட்பாள். தனது சின்ன உலகத்திலும் அவனிடத்தில் சொல்ல எத்தனையோ இருக்கும்.

–வந்து பாருடா... ரோஜாப்பூ மொட்டு விட் டிருக்கு.

– அப்பப்பா.... எவ்ளோ நட்சத்திரம். எண்ணுவியா நீ?

– நிலாவைப் பார்த்துக்கிட்டே நடக்கணும். நம்ம கூடவே அதும் வருமாக்கும்.

– இது நானே சமைச்சது... தின்னு பாரு....

அவளுக்குத் தெரியாத விஷயங்களே கிடை யாது என்று ஜமாலுக்குத் தோன்றும். அம்மா வுக்கு இன்னது பிடிக்கும். அத்தா இப்படித் தான் யோசிப்பார். சித்தப்பாவின் குணம் இது. மாமுவிடம் எதைச் சொன்னால் கேட்பார். அவளிடத்தில் பேச உட்கார்ந்தால் நேரம் போவதே தெரியாது.

ஒருநாள் சொன்னாள்.

"கல்யாணம் பண்ணிருவாக போல. யார் யாரோ வர்றாங்க. பயமா இருக்குடா..."

ஜமால் சற்று திடுக்கிட்டாலும் "கல்யாணம் நல்லதுதானே... பாத்திமாக்கா..." என்றான்.

"போடா..."

"எப்படியும் பண்ணித்தானே ஆகணும்?"

"ப்த்ஸ..."

"ஏன்?"

"ஆளு கருப்பாம். படிப்பும் அதிகம் இல்லை. காப்பிக் கடை...."

"படிச்சவன் வந்தாத்தான் கட்டிப்பியா?"

"பின்ன... கல்விதான் மனுஷனுக்கு அழகு."

"ஆமாக்கா... படிச்ச மாப்ளைதான் உனக் கும் பொருத்தமா இருக்கும்."

அவனைப் பிரகாசமாகப் பார்த்தாள். அபூர் வமாக அவளிடமிருந்து வெளிப்படும் ஒளி அதிலிருந்தது.

இன்னொரு நாள். சாயங்காலம்.

ப்ளஸ் டூ அரைப் பரீட்சையில் அதிசய மாக எழுபது மார்க் வாங்கியிருந்ததை சொல்ல வென்று ஓடி வந்தான். முன் வாசலில் மீன் உரசிக் கொண்டிருந்த பெரியம்மா, "புழக் கடையில் இருக்கா... போ...." என்றாள்.

ஆனால் அக்காள் அங்கு இல்லை. உள் அறை ஜன்னலில் நின்றிருந்தாள். அங்கிருந்து சுலையா குப்பிம்மா (அத்தை) வீடு தெரியும். அத்தாவுக்கு ஒன்று விட்ட மூத்த சகோதரி வீடு. எப்போதோ நிகழ்ந்த சொத்துச் சண்டையில் பேச்சு வார்த்தை கிடையாது.

"அங்க என்னக்கா பண்றே?"

"ஒண்ணுமில்லை..." முகத்தில் திடுக்கிட்ட தன் சாயல். அவனைக் கண்டதும் இறங்கி வந் தாள். பரீட்சைத் தாளை வாங்கி புரட்டி விட் டுக் கொடுத்தாள். "எழுவது மார்க்கு... பரவா யில்லையா?"

"ம்..." பாராட்டை எதிர்பார்த்த ஜமாலுக்கு ஏமாற்றமாக இருந்தது.

சுலையா குப்பிம்மா வீட்டிலிருந்து ஆண் குரல் கேட்டது.

"யார்க்கா அது?"

"அவுங்க மகன் வந்திருக்காரு..."

"தொப்பையைக் குறைக்க வழி இருக்கா டாக்டர்?"

"நீங்க வேணா 'தொப்'னு சுருக்கிச் சொல்லுங்க!"

— அம்பை தேவா



 கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை
அமரர் கல்கி நினைவு நாள்

அமரர் கல்கி நினைவு தினத்தையொட்டி, அவரது எழுத்தையும் பணியையும் நினைவு கூரும் வகையில் சிறப்புக் கூட்டம் நடைபெறவுள்ளது.

நாள்: **7.1.97**

இடம்: **ஸ்ரீநிவாஸ சாஸ்திரி அரங்கம், லஸ், மயிலாப்பூர், சென்னை -4.**

நேரம்: **மாலை ஆறு மணி.**

தலைமை: **மாண்புமிகு கல்வியமைச்சர், பேராசிரியர் திரு. க.அன்பழகன்**

சிறப்புரைகள்: **திரு. அவ்வை நடராஜன் – அமரர் கல்கியின் நகைச்சுவை; திருமதி சுமதி– அமரர் கல்கியின் பெண் விடுதலைச் சிந்தனைகள்.**

வில்லுப்பாட்டு: **திரு. சுப்பு ஆறுமுகம் குழுவினரின் 'பாரதி வந்தார்!'**

கல்கி அன்பர்களையும் ரசிகர்களையும் அன்புடன் அழைக்கிறோம்.

"பஷீர் மச்சானா?"

"ம்...."

பஷீர் மச்சான் படித்து விட்டு எங்கோ தொலைவில் வேலையில் இருந்தார். அம்மாவைப் போலவே சிவந்த நிறம். சுருள் முடி. படித்த பிள்ளை என்ற பெருமை. ஆறு மாதம், ஒரு வருஷத்திற்கு ஒரு தடவைதான் ஊருக்கு வருவார். பெண் கொடுக்க "நான் நீ..." என்று எத்தனையோ பேர் துப்பு கொண்டு வந்தார்கள்.

என்ன நினைத்தாளோ. "பகையே கூடாது. குடும்பம் ராசியா இருந்தா இப்ப எவ்ளோ நல்லா இருக்கும்?" என்றாள் பாத்திமாக்கா.

ஜமால் சும்மா தலையாட்டினான். எதுவும் சொல்லாமல் அவள் எத்தனையோ புரிய வைத்த மாதிரி இருந்தது. ஏக்கம், துக்கம், ஆசை எல்லாவற்றையும் உள் வாங்கி, பெருமூச்சால் தன்னைக் கரைத்துக் கொண்ட ஒருத்தியின் குரல்தான் அவை.

ஜமால் பதில் பேசாமல் புறப்பட்டான். ஏதாவது அற்புதம் நிகழ்ந்து குடும்பப் பகை மறையக்கூடாதா என மனத்தில் ஒரு மூலையில் ஆசை இருந்தது. இரண்டாம் மாதமே பஷீர் மச்சானுக்கு நிக்காஹ் நடந்து முடிந்து விட்டது.

அதன் பிறகு தனது கல்யாணத்தைப் பற்றி அவள் எதுவும் பேசியது இல்லை. அவனாகவே ஆரம்பித்தாலும், "வேற பேசுடா..." என்று சொல்லி விடுவாள். அவளது சிரிப்பு, துள்ளல், அபூர்வமாக முகத்தில் ஒளிரும் பிரகாசம் எல்லாம் எங்கோ போய் விட்டன.

இதனிடையே அவளையும் எத்தனையோ பேர் வந்து பார்ப்பதும், போவதுமாக இருந்தார்கள். எல்லாம் ஒரேயடியாக ஏறிய கையாகவோ அல்லது பெரருந்தாத இடமாகவோ இருந்தது. ஹாஜியார் – ஏதோ ஒரு விசேஷத்திற்கு வந்தவர் – எல்லோரையும் கூப்பிட்டு சத்தம் போட்டார். "என்னப்பா... பொட்டப்புள்ளையை வீட்ல வச்சுக்கிட்டு வெளையாடறீகளா.... வர்றவனையெல்லாம் வேணாம்னா என்ன அர்த்தம்.... முத்தலிபு மவன் காப்பிக்கடைன்னு தட்டாரிச்சு அனுப்பினீகளாம்.... அவனுக்கு என்ன வருமானம்னு தெரியுமாடா உங்களுக்கு. நான் சொல்றேன். பாத்திமா அந்தப் பையனுக்குத்தான். பின்னப் பெறகு ஏதாச்சும் பிரச்னைன்னா நான் பொறுப்பு, தைரியமா செய்யுங்க..."

குடும்பத்துக்கு ரொம்பவும் வேண்டப்பட்டவர். அவரது வார்த்தைக்கு மறுவார்த்தை பேசி யாருக்கும் பழக்கமில்லை. பாத்திமாக்காவின் எதிர்காலம் சில நொடிகளுக்குள் முடிவாகி விட்டது.

நிச்சயதார்த்தம் முடிந்து மறுநாள் தனியாகப் பார்த்தபோது, "அக்கா... உனக்கு இஷ்டம்தானே..." என்று கேட்டான் ஜமால்.



''உங்க ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்யறேன்...''
''ஏங்க...?''
''இத்தனை ஊழலையும் நான் செய்யல, பணத்தாசை பிடித்த என் மனசாட்சிதான் செஞ்சதுன்னு மனுவுல குறிப்பிட்டிருக்கிறதை ஏற்க முடியாது...!''

– ஜி. செல்லத்துரை

"ஏன் இப்படிக் கேக்கிறவன்?"

"இல்லே... மாப்பிள்ளை படிக்கலை. கருப்புன்னு நீதானே அன்னிக்கு..."

"அப்பத்தி நிலைமை வேற..." என்ற பாத்திமா அக்காள், அவன் எதிரிலிருப்பதை மறந்தவள் போல, "பாய் ஏவாரி மகளுக்கு சாயாக்கடை மாப்பிள்ளைதான் கெடைக்கும். அதிகமாக எதிர்பார்க்கக் கூடாது" என முணுமுணுத்தாள்.

அவளது சம்மதத்தைப் பற்றி அவனுள் பதிவாகி இருந்த தகவல் இவ்வளவுதான். இஷ்டம் இல்லை என்றுதானே இதற்கு அர்த்தம்?

அக்காவை போய்ப் பார்த்துவிட்டு வந்தால் தேவலாம் போல இருந்தது ஜமாலுக்கு.

புகுந்த வீட்டு மனிதர்களைப் பற்றி இந்நேரம் தெரிந்து கொண்டிருப்பாள். அந்தரங்கமாகப் பேச எவ்வளவோ இருக்கும். மன பாரத்தை இப்படிக் குறைத்தால்தான் ஆயிற்று.

ஹாஜியாராம். இப்படிப்பட்ட பெண்ணிற்கு, தான் சொல்லும் பையன் பொறுத்தமானவன்தானா என்று யோசிக்க வேண்டாம்? "சாதா தோசை ஒண்ணேய்..." என்று குரல் கொடுக்கிறவனுக்கு, ரோஜாச் செடி மொட்டு விடுவதைப் பற்றி என்ன அக்கறை? "போடீ... போ" என சிரிக்கக்கூடும். "மசால்வடைக்கு நேரமாச்சு. சீக்கிரம் ஆட்டித் தொலை" என கல்லுரலைக் காட்டுவானோ. என்னவோ.

அம்மா சொல்லச் சொல்ல அத்தா ஏதோ லிஸ்ட் எழுதிக் கொண்டிருந்தார்.

ஜமால் அருகில் வந்து நின்றதும், முகம் நிமிர்த்திப் பார்த்தார்.

''அக்காவைப் பார்த்துட்டு வரலாம்னு நினைக்கிறேன்...'' என்றான் ஜமால்.

''எந்த அக்காவை?'' அம்மா இளக்காரமாகச் சிரித்தாள். "பாருங்க கூத்தை... பொறந்தவன் சீர் கொண்டு போகப் போறானாம் உங்க பிள்ளை..." இதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது என்று ஜமாலுக்குப் புரியவில்லை.

''ரெண்டும் ரெட்டைப் பிறவி மாதிரி வளர்ந்ததுங்க... அப்படித்தான் இருக்கும்'' என்றார் அத்தா.

"பிடிக்கலைன்னா நான் போகலை..." என்றான் ஜமால்.

"அதுக்கில்லை.... கொண்டான் குடுத்தான் வீட்டுக்கு சீர் குடுக்கிறதுக்கு முன்னாடி போயி கைநனைக்கக் கூடாதுப்பா..."

"எப்ப சீர் தர்றதாம்?"

"நாளை மறுநாள்..."

"ரெண்டே நாள்தான் இருக்கு..."

"ம்... பாரு. அதுக்குப் பலகாரம் பண்ணத்தான் லிஸ்ட் எழுதிக்கிட்டு இருக்கேன்..."

"மறு வீடுதானே இது?"

"ம்..."

"அப்ப அக்காவும் வரும் இல்லே?"

"ம்...ம்..."

"எத்தனை நாளைக்கு இருக்குமாம்:?"

"அது அவ புருஷன்ல சொல்லணும்..."

புருஷன்... ஹே!

ஜமால் சட்டையை எடுத்துப் போட்டுக் கொண்டு வெளியே புறப்பட்டான்.

"ஹேய்... பொண்ணு மாப்பிள்ளை வந்தாச்சு...'' புழுதியைக் கிளப்பிக் கொண்டு, வாசலில் வந்து நின்ற ஆட்டோவின் பின்னாலேயே குழந்தைகள் பட்டாளம்.

பாத்திமா அக்காள், புருஷனுடன் இறங்கினாள். கைப்பெட்டியை வாங்கிக் கொள்ள ஜமால் முன்னேற, "இதான் என் தம்பி..." என்றாள்.

"தெரியும். உன்னை அழைச்சுட்டு கிளம்பறப்ப என்னை முறைச்ச ஆளாச்சே" மாப்பிள்ளை பல் கறை தெரிய அகலமாகச் சிரித்தான்.

"ஏன்... ஜமால் அப்படியா?" பாத்திமாவும் சிரித்தாள். உள் மனதிலிருந்து பூரணமாக வெளிப்பட்ட சிரிப்பு, சொந்த மனதை மிதித்த சந்தோஷம் முகத்தில் பளிச்சிட்டது.

அக்கம்பக்கம் கூடி விட்டது.

"வாடி... வாங்க மாப்ளே..."

அக்காவைச் சுற்றிலும் கேலியும், சிரிப்பும்...

சூழ்நிலை ரம்யமாக மாறி விட்டது. சீனியம்மாளைக் கண்டதும் "போச்சு... நான் அம்புட்டுத்தான்..." அக்காள் கைகளை உதறினாள். வயசுப் பொண்டுகளை கேலி – கிண்டலில் உண்டு இல்லை என்று பண்ணி விடுகிறவள் அவள்.

ஒவ்வொரு தடவை அவள் சிரிக்கும் போதும் காது ஜிமிக்கியும், குஞ்சலம் வைத்துக் கட்டிய பின்னலும் அசைந்தாடின. விசேஷ நாளில் நல்ல புடைவையும், நகையும் நட்டு

மாகப் பார்த்தது உண்டு. ஆனால் முன் எப்போதுமில்லாத சோபிதமாக இப்போது தெரிந்தாள்.

ஜமால் வெளி ஜன்னலிலிருந்து உள்ளே எட்டிப் பார்த்தான். அக்காளைச் சுற்றிய கூட்டம் இன்னும் போகவில்லை. மாப்பிள்ளை மட்டும் தனியாக முன் ஹாலில் சப்பணமிட்டு அமர்ந்து, முகட்டுக்கூரை, மாத காலண்டர், மக்கா மதீனா படம், கொடியில் தொங்கிய பெரியத்தாவின் பனியன் – துண்டு, சுவர் வெடிப்பு என் பார்த்துக் கொண்டிருந்தார்.

திடீரென பாத்திமா அக்காள் ஜன்னலை நோக்கி வந்தாள். "இங்க என்ன பண்ணிக்கிட்டு இருக்கே?"

"உன்னைத்தான் பார்த்துக்கிட்டிருக்கேன்..." என்றான் ஜமால். ஏதோ வேடிக்கையாகப் பேசுவதாக நினைத்துக் கொண்டு.

"நான் என்ன அதிசயப் பொருளா... போடா... போய் மச்சான்கிட்ட பேசிக்கிட்டு இரு.. தனியா உக்காந்திருக்கார் பாவம்..." குரலில் தொனித்த கோபம் அவனைச் சுள்ளென்று குத்தியது.

"மச்சானா... நல்லா இருக்கு...."

"பாருங்க அக்கிரமத்தை. நாளைக்குப் போறேன்னு நிக்கிறாளாம் பாத்திமா..." அம்மா புலம்பிக் கொண்டே வந்தாள்.

"வந்து ரெண்டு நாள் ஆகலை அதுக்குள்ளியா?" அத்தாவும் ஆச்சரியப்பட்டார்.

"அதான் நானும் கேட்டேன். அவரு சோறு தண்ணிக்குக் கஷ்டப்படுவாரு சின்னம்மாங்கிறா... என்னத்தச் சொல்ல?"

ஜமால் அமர்ந்த இடத்திலிருந்து அம்மாவின் முகத்தைப் பார்க்க முடியாது. குத்தலாகவோ, நமுட்டுச் சிரிப்புடனோதான் அவள் இதைச் சொல்லி இருக்க வேண்டும்.

"பொட்டப் புள்ளைக சொந்தம் நிக்காஹ் வரைக்கும்தான்..." அத்தா அவளை ஆமோதித்தார்.

"அதென்ன மாயமோ... கழுத்துல கருகுமணி ஏறுகிற வரைக்கும் மன ஊசலாட்டம்... ஏறின பிறகு அவன்தான் எல்லாம்னு ஆயிருது. பொம்பளைப் பொறப்பே ஒரு விசித்திரம்..."

"ஆம்பளைக மட்டும் என்னவாம்?" என்றார் அத்தா.

"ஆமா... நீங்களும்..." அம்மா என்னவோ சொல்ல வாய் எடுத்தவள் ஜமாலைப் பார்த்துவிட்டாள். "என்னடா... இருட்ல கெடக்கிறவன்? அவ... அங்க உன்னைக் காணம்னு தேடிக்கிட்டிருக்கா... போ..."

"எனக்கு வேற வேலை இருக்கு..." யார் முகத்தையும் பார்க்காமல் ஜமால் வெளியே புறப்பட்டான்.

நீங்கள் கேட்டவை — தராசு

● சூர்யநிலா, சேலம்.

? *சோதனையிலிருந்து சொக்கத் தங்கமாக 'ஜெ' மீண்டு வருவார் என்கிறாரே காளி முத்து?*

! அப்போதும் தங்கமா! அடக் கடவுளே!

● ஆ. அழகேஷ், பூதப்பாண்டி.

? *தற்போது எல்லா கவிஞர்களும் 'கவியரசு' என பட்டப் பெயர் போட்டுக் கொள்வது குறித்து...?*

! லேட்டஸ்டாக 'கவிச்சக்கரவர்த்தி' ஒருவர் கிளம்பியிருக்கிறார் தெரியுமா...? தம் கவிதைகளை மெட்டமைத்துப் பாடி கச்சேரி செய்து சந்தோஷமும் அடைகிறார்!

● எஸ். டீ. ராஜா, கோபாலசமுத்திரம்.

? *நான் சட்டத்தை நன்கு கரைத்துக் குடித்தவன். அதைப் பயன்படுத்தி ஜெயலலிதாவின் மீதான வழக்குகளை உடைத்துத் தூள் தூளாக்குவேன் என்று பி.எச். பாண்டியன் கூறியிருக்கிறாரே...?*

! ஜெயிப்பதற்கு சட்டம் மாத்திரம் போதாது. நியாயமும் நம் பக்கம் இருக்க வேண்டும்!.

● எஸ்.ஏ.என். செந்தில்குமார், சூலூர்.


? *தேவேகௌடா சென்ற வாரம் ஹரியானா போன போது, பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கென முந்நூறு மரங்கள் வெட்டப்பட்டுள்ளனவே!*

! அருகாமையில் இருந்த கல்லூரி விளையாட்டுத் திடலில் ஹெலிகாப்டர் இறங்கியிருக்கலாம்; மரங்கள் தேவையின்றி வெட்டப்பட்டன என்பதுதான் உச்சகட்ட சோகம். வி.வி.ஐ.பி. பாதுகாப்பு என்று வரும்போது சில அதிகாரிகளுக்கு புத்தி தடுமாறி விடுகிறது.

● மல்லிகை மன்னன், மதுரை – 14.

? *ஊழல் செய்த புரட்சித் தலைவிக்கு போலீஸ் வேனில் அழைப்பு; ஆனால் கண்ணப்பனுக்கு மட்டும் சொகுசு கார்! கருணாநிதி ஆட்சியில் தர்மம் எப்படியெல்லாம் தடுமாறுகிறது!*

! ஒரு தடுமாற்றமும் இல்லை. 'காரில் ஏற மாட்டேன்; போலீஸ் வேன் கொண்டு வாங்க' என்று கூறியவர் ஜெயலலிதாதான். பிறகு அதில் ஏறுவது கஷ்டமாயிருக்கிறது என்று ஸ்டூல் கொண்டு வரச் சொன்னார். தேவையான உயரத்தில் ஸ்டூல் கிடைக்காது போகவே, 'காரிலேயே போகிறேன்' என்று மனத்தை மாற்றிக் கொண்டார். கண்ணப்பன் விஷயம் வேறு. வீட்டில் நீதிபதி காத்திருக்கிறார் என்பதால் அவசரத்துக்கு காரில் அழைத்துப் போகப்பட்டார். பிறகு சிறைக்கு போலீஸ் வேனில்தான் பயணம். செய்திகளைச் சரியாகப் படிக்காவிட்டால் நாம்தான் நமது மதிப்பீடுகளில் தடுமாறிப் போவோம்.



• வழ்வில்
மாங்கள்

● மு. கருணாநிதி, தேவராயனேரி.

? *பணத்தின் மதிப்பு குறைந்து கொண்டே வருகிறதே... இதனால், பாதிக்கப்படுவது ஏற்கெனவே வறுமையில் வாழ்ந்து கொண்டிருக்கும் கீழ்த்தட்டு மக்கள்தானே?*

! நடுத்தர வர்க்கத்தையும் சேர்த்துக் கொள்ளுங்கள். சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் தவிப்பவர்கள்... இந்த லட்சணத்தில் விலைவாசி உயர்வு அப்படியொன்றும் அதிகமில்லை என்று மத்திய அரசு அபத்த அறிக்கை விடுகிறது! எங்கே போய் முட்டிக் கொள்ள...!

● சு. கார்த்திகேயன், திருப்பூர்.

? *ஒருவேளை ஜெ சொல்கிற மாதிரி, அவர் கவனத்துக்கு வராமலேதான் இத்தனை ஊழல்களும் நடந்திருக்குமோ...?*

! ஊழல் என்று அதிகாரிகள் எடுத்துக் காட்டிய பிறகும் கையெழுத்துப் போட்டிருக்கிறாரே சார்...! (நிலக்கரி இறக்குமதி வழக்கு)

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி.

? *ராகுல் காந்தி கொலம்பியா நாட்டு அழகியைக் காதலிக்கிறாராமே...?*

! காதலிக்கட்டுமே! என்ன தப்பு! அரசியல் பாரம்பரியம் மட்டுமல்ல... காதல் பாரம்பரியமும் நேரு குடும்பத்துக்கு உண்டு!

● ஷோபனாதாசன், நாட்டரசன்கோட்டை.

? *'என்னைக் கைது செய்துள்ளார்கள் என்பதற்காகப் போராட்டம் நடத்த வேண்டாம்' என கட்சித் தொண்டர்களுக்கு ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்துள்ளாரே?*

! அப்படியாவது, தம்மைக் கைது செய்ததற்காக எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டார்களா என்ற ஏக்கமாயிருக்கலாம்...!

● எம். அசோக்ராஜா,

ஆவக்குறிச்சிப்பட்டி. ❑


? *பாகிஸ்தானை வென்ற வெள்ளி விழாவை நாம் கொண்டாடுவது. தோற்றுப் போன பாகிஸ்தானைச் சீண்டி விடுவது போல் ஆகாதா?*

! நாம் கொண்டாடுவது பாகிஸ்தானின் தோல்வியை அல்ல; வங்க தேசத்தின் விடு



• தொடரும் பாரம்பரியம்!

ராகுல் காந்தி




• லொள்ளொய்...?



• ...சுண்ணாம்பு...?



• புகழ்ச்சியும் நெகிழ்ச்சியும்



• வர்ணனை வீரர்!



• கரைத்துக் குடித்தவர்!

தலையையும் அதற்கு உதவிய இந்திய ராணுவத்தின் வெற்றியையும் தான். இதில் பாகிஸ்தான் மனம் நோகாதபடி நடந்து கொள்ள வேண்டியதும் அவசியமாகும். இரண்டாம் உலக மகா யுத்தத்தின் வெற்றிப் பொன் விழாவைக் கொண்டாடியபோது, நேச நாட்டுத் தலைவர்கள், யுத்தத்தில் உயிரிழந்த ஜெர்மானிய வீரர்களுக்கும் சேர்த்து அஞ்சலி செலுத்தினார்கள் என்பது கவனத்துக்குரியது.

● எம். ஆர். சுகந்தி, திருத்துறைப்பூண்டி.

? ஒரு பெண்ணின் தலைமையில் நடந்த மிகவும் மோசமான ஆட்சியின் கீழ் ஐந்தாண்டு காலம் தமிழகம் சீரழிந்தது என்பது பெண் இனத்திற்கே இழுக்கு அல்லவா...?

! அப்படியானால், மோசமான ஆண் பிள்ளையின் ஆட்சியில் நாடே சீரழிந்து போனது ஆண் குலத்துக்கும் இழுக்குத்தானே!

● அ. பானுமதி, ஆம்பலாப்பட்டு (தெற்கு).

? இப்போதைய அரசியல் சாணக்கியன் யார்...?

! கருணாநிதிதான்! உ.பி.யில் 356 பிரயோகிக்கப்பட்டபோது அதை வரவேற்று, 'மத்திய அரசுக்கு வேறு வழி இல்லை...' என்று கூறினார். இப்போது உ.பி. உயர்நீதி மன்றம் அரசின் 356 பிரயோகத்தைத் தவறென்று தீர்ப்பு வழங்கியிருக்கும் நிலையில், அந்தத் தீர்ப்பையும் வரவேற்று, 'அதற்காகத்தான் 356 நீக்கப்பட வேண்டும் என்று சொல்கிறோம்...' என அறிக்கை விட்டிருக்கிறார். இது சாணக்கியம்தானே!

● டி. பசுபதி, ஊஞ்சவேலாம்பட்டி.

? ஜெ. புதிதாகப் பத்திரிகைகள் தொடங்கி நடத்தப் போகிறாராமே...?

! மோசமான முதல்வராக இருந்து நாட்டைச் சுரண்டுவதை விட, மோசமான பத்திரிகையாசிரியராக இருந்து தமது வாசகர்களை மட்டும் மூளைச் சலவை செய்ய முற்படுவது எவ்வளவோ மேல்...!

● ஜான்ஸி ராணி, மதுரை – 10.

? லஞ்சம், ஊழல், மோசடி, பதுக்கல்.. இதற்குத்தானா அன்று அரும்பாடுபட்டு சுதந்தரம் வாங்கினது...?

! இல்லை; இவற்றையெல்லாம் எடுத்துக் காட்டி வழக்குத் தொடுக்கவும், இவற்றை முன்னிட்டு தேர்தலில் ஊழல்காரர்களுக்கும் தகுதியற்றவர்களுக்கும் தோல்வி ஏற்படுத்தவும் முடிகிறதல்லவா... அதற்காக வாங்கியதுதான் சுதந்தரம்!

● வி. அர்ஜுன் குமார், கோவை – 42.

? ஜெயலலிதா காளி உபாசகரா?

! தம்மையே ஆதிபராசக்தியாகக் கருதி தொழுவோரை ஏற்பதைக் காட்டிலும் காளி உபாஸகராக மாறியிருப்பது முன்னேற்றம் தான்!

● பா. அச்சுதன், சேத்துப்பட்டு.

? மனத்தில் நெகிழ்வை ஏற்படுத்திய நிகழ்ச்சி...?

! 'ஏரி, குளங்களைச் சீராக மராமத்து செய்து வைத்திருந்தால், வெள்ளத்தால் இத்தனை பாதிப்பு ஏற்பட்டிராது' என்று பேசிய முதல்வர், இனி இந்த அரசு அப்பணிகளை மும்முரமாகச் செய்யும் என்று உறுதியளித்தார். அத்தோடு நிறுத்திக் கொள்ளாமல் முன்பு பக்தவத்சலம் மராமத்துத் துறை அமைச்சராக இருந்து ஆற்றிய அரும்பணிகளையும் நினைவு கூர்ந்த போது உண்மையில் நெகிழ்ச்சியாகத் தான் இருந்தது.

● ஆர்.கே.எஸ். சம்சுகனி, டி. மாரியூர்.

? 'எஸ்.டி.எஸ். – ஓட்டை வாளி! ஆர்.எம்.வீ. – அறுந்த கயிறு' என்ற காளிமுத்துவின் வர்ணனை எப்படி...?

! காளிமுத்து – நமுத்த பட்டாசு!

☐ ரூ. 25 பரிசு பெறுபவர் :
எம். அசோக்ராஜா,
ஸ்ரீ கணபதி ஏஜென்சீஸ்,
பெல்நகர், திருச்சி - 620 015.

காதலிக்கிறாராமே..?

அந்தர- சுந்தரன்!

ரிஷபன்

அந்த வினோதக் காட்சியை முதலில் என் மகள் தீபாதான் கவனித்தாள்.

"அய்யோ. அப்பா கீழே இறங்கு."

ஞாயிற்றுக்கிழமை என்பதால் சற்றே காரியங்களில் நிதானம். அதாவது காலை கண் விழிப்பதில் தொடங்கி.

எட்டு மணி, கண் விழித்தபோது.

சூரிய வெளிச்சம் கட்டிலுக்கே வந்து விட்டது. இன்னமும் தொக்கி நிற்கிற சோம்பல்.

"அப்புறம் மத்தியானம் தூங்க முடியாது. எழுந்துக்கறீங்களா?"

புவனாவின் கிண்டல் வேறு. இனியும் படுப்பதில்லை. எழு, தம்பீ என்று எழுந்தேன். நின்றேன்.

இந்த நிமிடம்தான் தீபாவின் அலறல்.

"அய்யோ, அப்பா, கீழே இறங்கு."

"என்னடி உளர்றே?"

"கீழே வாப்பா."

கட்டிலை விட்டு எழுந்து நிற்பவனிடம் என்ன பேச்சு இது.

நடந்து அவள் அருகில் போனேன்.

"என்ன தீபு..."

"அம்மா."

தீபா அலறிக் கொண்டு சமையலறைக்குள் ஓடியது. புவனாவும் அவளுமாக அடுத்த நிமிடம் வெளியே வந்தார்கள்.

"என்னங்க. உங்களுக்கு என்ன ஆச்சு?"

எனக்குத் தலை சுற்றியது. ஞாயிறும் அதுவுமாய் அரைத் தூக்கத்தில் எழுந்த பிரமையில் இருப்பவனிடம் மேலும் என்ன சோதனை.

"கீழே பாருங்க" – புவனாதான் சொன்னது.

கைலி கட்ட மறந்து விட்டேனா. அவசரமாய்க் குனிந்தால்... கைலி.

"நல்லாக் குனிஞ்சு பாருங்க. கைலியைத் தூக்குங்க."

கைலியைத் தூக்குவதா. புரியாமல் லேசாக உயர்த்தி, கீழே பார்த்தேன்.

ஹா!

மூச்சு ஒருகணம் நின்று விட்டது.

பூமிக்கு – அதாவது தரையிலிருந்து அரை அடி உயரத்தில் நின்று கொண்டிருந்தேன்.

அவ்வளவுதான். இதயம் வேகமாய்ப் படபடக்க 'ஹாஜ்மூலா' தாத்தா போலக் குதித்து கீழே இறங்க முயற்சித்தேன். மஹூம். என்ன குதித்தாலும் அதே அரை அடி உயரத்தில்தான்.

''புவனா, என்னடி இது"

"என்னங்க... எப்படியாவது கீழே வாங்க."

''எனக்கு மட்டும் அந்த ஆசை இல்லையா? வர முடியலைடி."

லேசாய்க் கண் தளும்பி விட்டது.


தீபாவும் புவனாவும் பாதுகாப்பான தூரத்தில் நின்று கொண்டு பத்துப் பதினைந்து கட்டளைகளைச் சொல்லிக் கொண்டிருக்க, என்னால் முடிந்த அளவு – ஊஹூம், முடியவே முடியாத அளவு – முயற்சித்து அந்தரத்திலேயே நின்றேன்.

"ஏய், வயித்தைக் கலக்கறது."

பரிதாபமாய்ப் புலம்பினேன்.

"நேத்து ராத்திரி என்ன சாப்பிட்டீங்க"

"எல்லாம் நீ சமைச்சுப் போட்டதுதான்."



என் மேல் எரிஞ்சு விழத் தெரியும்..."

"அய்யோ அம்மா. இப்பவும் ஏன் அப்பா கூட சண்டை போடறே. பாவம் அப்பா, எப்படியாவது கீழே இறக்கி விடு."

புவனா விரலைச் சொடுக்கினாள்.

ஐடியா.

"வா, தீபா. நாம ரெண்டு பேரும் ரெண்டு கையையும் புடிச்சுத் தொங்கலாம்."

தொங்கினார்கள். பலன், என் கை வலி தான்.

புவனா பெருமூச்சு விட்டாள்.

தீபா அந்தரக் கால்களின் கீழ் தன் கை விரல்களை ஓட விட்டுப் பார்த்தாள். சுலபமாய் இந்தப் பக்கமிருந்து அந்தப் பக்கம் தடங்கலின்றிச் சஞ்சரித்தன.

"நெஜம்மாவே சப்போர்ட் இல்லாம நிக்கிறீங்க அப்பா."

"போதும், உன் சர்டிபிகேட். நாளைக்கு ஆபீஸ் எப்படிப் போவீங்க."

மீண்டும் கிலியைக் கிளப்பினாள்.

"நம்ம டாக்டரைப்



பார்ப்போமா?" என்றேன் தீனமாக.

"இதுக்கு அவர் என்ன பண்ண முடியும். ஜுரமா, தலைவலியா, மாத்திரை தந்து குணப் படுத்த."

"இப்படியே எடக்கு மடக்காப் பேசுங்க. இப்ப என்ன செஞ்சா நீங்க கீழே வருவீங்க."

"அதே கேள்வியை எத்தனை விதமா நீ கேட்டாலும் எனக்குப் பதில் தெரியலியே!" பழைய சிவாஜி படக் காட்சி போலப் புலம் பினேன்.

"டேய் சிவா... என்னடா பண்றே"

நாணுவின் குரல் கேட்டது.

"அய்யோ, நாணு வந்துட்டான். நாங்க ரெண்டு பேரும் இன்னிக்கு கே.கே. நகர் வரை போகிறதாப் பிளான்."

பதறி எழுந்து அந்தரத்தில் நின்றவனைப் பிடித்து அமர்த்தினாள்.

"பேசாம படுங்க. உடம்பு சரியில்லைன்னு சொல்லிடலாம்."

நாணு உள்ளே வந்து விட்டான்.

"என்ன, கிளம்பலியா இன்னும்?"

"சொல்லேண்டி நீயே" என்பது போல புவனாவைப் பார்த்தேன்.

"அப்பாக்கு உடம்பு சரியில்லே..." என்றாள் தீபா அவசரமாய்.

"என்ன உடம்பு. ஜொரமா?"

நெற்றியில் கை வைத்துப் பார்த்தான்.

"சுடலியே..."

"இல்லே.. ஸ்டமக் பிராப்ளம்."

"அப்படியா. நேத்து நல்லாத்தானே இருந் தான்."

"இன்னிக்குக் காலையிலதான்..."

நாணு என்னையே சந்தேகமாய் முறைத்துப் பார்த்தான்.

"சரி. அந்தக் கவரைக் கொண்டா. நானே கொண்டு போய்க் கொடுக்கறேன்."

சட்டென்று எழுந்து கொள்ள முயன்ற வனை தீபா அடக்கிப் படுக்க வைத்தாள். நாணு கவனித்து விட்டான்.

"என்ன தீபா..."

"ஹிஹி.. ஒண்ணுமில்லே. சும்மா."

"எங்கே வச்சிருக்கீங்க" என்றாள் புவனா.

"மேஜை மேல பாரு..."

அங்கே இல்லை. 'என் கைப்பையில் பாரு'. ஊஹூம். 'கிச்சன்ல வச்சேனா' இல்லை. அட, எங்கே போய்த் தொலைந்தது? என்னையும் மீறி டென்ஷனில் எழுந்து அலமாரியின் உச்சியில் இருந்த கவரை எடுத்து விட்டேன்.

"இந்தா" என்று நாணுவிடம் நீட்டினேன்.

அதற்குள் புவனாவும் தீபாவும் கோவில் சன்னிதியில் திரை போடுகிற மாதிரி போர் வையின் இருபுறமும் பிடித்துக் கொண்டு ஓடி வந்து என் முன்புறம் மறைத்தார்கள்.

"என்னடா இது.."

"இது ஒரு மாதிரி. தொத்திக்கிற பிராப்ள மாம்... யாரு நம்கிட்ட போகக் கூடாது!!

டிவி சீரியல் பார்க்கிற ஜோரில தீபாவுக்கு கற்பனை பிய்த்துக் கொண்டது.

நாணு தலையைப் பிய்த்துக் கொண்டான்.

"எனக்கு ஒண்ணுமே புரியலே"

"எனக்கே புரியலே" என்றேன் அழாத குறையாய்.

திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டு வெளியேறினான்.

"ஸ்ஸ்... ஹப்பா... தப்பிச்சேன்" என்றேன்.

போர்வையை எடு...

தீபா மீண்டும் என் கால்களைப் பார்த்தாள்.

"எப்படிப்பா முடிஞ்சுது. கால் வலிக்கலே?"

"கேள்வியைப் பாரு. ஏன் வலிக்கப் போவுது. உங்கப்பா இனிமேல் செருப்பே வாங்க வேண்டாம். பேட்டாக்கு அழற பேட்டா மிச்சம்."

இப்போது என் 'பிரச்னை' எனக்கு ஒரு மாதிரி பழகிப் போய்விட்டது. குறுக்கும நெடுக்குமாய் நடந்து பார்த்தேன்.

"ஹை... ஜாலியா இருக்கு. இப்படியே உட்கார்ந்தா என்ன ஆகும்?"

"ஆமா. பெரிய ஆராய்ச்சி."

உட்கார்ந்தேன். புவனா கிடக்கிறாள். அபூர்வமாய் வாய்த்த திறனை என வீண் அடிப்பானேன்.

அந்தரத்தில் சம்மணமிட்டு உட்கார்ந்த கோலம்!

"புவனா... அம்மா புவனா"

என் அத்தையின் குரல். கூடவே அப்பாவும். ஊருக்குப் போனவர்கள் திரும்பி விட் டார்களா?

"ஓடுங்க.. கட்டிலுக்கு"

"எதுக்கு. நம்ம அப்பாதானே."

வந்து விட்டார்கள். அப்பா கேஷுவலாய் அறைக்குள் பையை வைக்கப் போக அத்தை பெருமூச்சுடன் சோபாவில் அமர்ந்தாள்.

"என்ன பஸ்ஸோ... ஓவர்டேக் பண் ணணும்னு அந்தரத்துல பறக்கற மாதிரி ஓட்டறான். உயிரைக் கையில பிடிச்சுண்டு சீட்டுக்கு மேல வித்தைக்காரன் மாதிரி உட்கார்ந்திருந்தோம்."

அத்தை பேசிக் கொண்டே போனாள்.

"அத்தே. இவரைப் பாருங்களேன்."

புவனாதான் கேவியது.

"என்னடி ஏன் என்னவோ போல பேசறே?"

அப்பாவும் ஹாலுக்கு வந்து விட்டார்.

"அப்பா..."

"அத்தை"

இருவருமாய்ப் புலம்ப, அப்பா பின் அத் தையின் பார்வைகள் என் பக்கம் திரும்பின

"என்னடா?" ஜோடி நாயனம் போல கத்தினார்கள்.

"தெரியலைப்பா. கார்த்தால எழுந்தா இந்த மாதிரி..."

"நம்ம ஃபாமிலில இந்த மாதிரி முன்னால யாருக்காவது வந்திருக்கா?" என்றாள் அத்தை.

"இது என்ன ஆஸ்த்துமா, டிபி மாதிரி வியாதியா."

"ஏண்டா... ஏதாவது ரோட்டுல மிதிச் சுட்டியா மந்திரிச்சுப் போட்டதை."

"இனிமேல மிதிக்கவே முடியாதுப்பா..." என்றேன் பலவீனமாக.

"இருங்கோ. உங்க ரெண்டு பேருக்கும் காப்பி கொண்டு வரேன்."

புவனா இந்த இடத்திலிருந்து தப்பித்தால் போதும் என்று உள்ளே ஓடி விட்டாள்.

தீபாவுக்கு பாடப் புத்தகத்தில் மனதே பதிய வில்லை. என் மீது ஒரு பார்வை, பாடத்தின் மீது ஒரு பார்வை என்று அல்லாடினாள்.

"திருஷ்டி சுத்திப் போடட்டுமாடா?" என்றாள் அத்தை.

"அய்யோ அத்தை.. பேசாம இரு."

"ஏண்டா... பாரதத்துல தர்மரோட தேர் அந் தரத்துல நிக்கும்னு படிச்சிருக்கேன். பொய்யே சொல்லாதவராம். அப்புறம் அஸ்வத்தாமன் செத்ததா பொய் சொல்லப் போக தேர் கீழே வந்துரும். அது மாதிரி."

அப்பா தவறாமல் டீவி மஹாபாரதம் பார்த் தவர். கையிலே 'வியாசரை' வைத்து ஒப்பிட்டு பார்த்துக் கொண்டு புராணம் பேசினார்.

"அப்பா...."

சுரீலென்று உறைத்தது. பொய்யே சொல் லாதவர். நேற்றிரவு நடந்தது நினைவில் வந்தது.

"என்னங்க.. என்னை உங்களுக்கு ஏங்க ரொம்பப் பிடிக்குது..."

தீபாவுக்கு போர்த்திவிட்டு விடிவிளக்கை ஒளிரவைத்த புவனா என்னருகில் நெருங்கி படுத்துக் கொண்டாள்.

"யார் சொன்னது..."

"குறும்பு..." செல்லமாய்க் கன்னத்தில் இடிக்க கடவாய்ப் பல் ஆடிவிட்டு அமர்ந்தது.

"அம்மா.. தாயே.. கொஞ்சம் மெதுவா..."

"நெஜத்தைச் சொல்லுங்க. எம்மேல உசுருதானே."

மேலே சரிந்ததும் என் 'உசுரு' ஒரு வினாடி நின்று இயங்கியது.

"சேச்சே... அதெல்லாம் ஒண்ணுமில்லே.."

"மனசைத் தொட்டுச் சொல்லுங்க."

தொட்டுச் சொன்னேன்.

"பிடிக்கும். அவ்வளவுதான்."

"எப்பவும் விளையாட்டு. உங்களுக்கு..."

"எனக்கு இப்ப தீபாவைத்தான் ரொம்ப பிடிக்கிறது..." என்றேன்.

"போங்க. ஆனாலும் மோசம்.."

"இல்லம்மா. உன்மேல எனக்கு நிறைய விமர்சனம் இருக்கு. நிறைய கேள்விகள், பதில் கள். உன்னை உனக்காகவே பிடிக்கணும்னா, இன்னும் கொஞ்சம் வருஷம் ஆகும். நமக்குள்ளே இந்த சச்சரவுகள் மீறிய அழுத்த மான அடி மனசு நேசம் புலப்பட... புரிஞ்சுக்க.."

ஏன் இப்படி டீவி பேட்டியில் குறிப்பிட்ட நடிகர் பேசுகிற தொனியில் பேசினேன் என்று புரியவில்லை.

ஆனால் சொன்னபோது எனக்கே நேர்மை என்று தொனிக்கிற பதிலைச் சொன்னேன். புவனா அதைக் கேலியாக எடுத்துக் கொண்டு தனக்கே இயல்பான இன்னொசன்ஸுடன் என் கையைப் பற்றிக் கொண்டு தூங்கிப் போனாள்.

கடவுளே.. என்னையும் மீறி மனத்தில் பட்டதைச் சொல்லி விட்டேன். முகமூடியற்று நான்!

அடக் கடவுளே. பொய் சொன்னதால் கீழிறங்கிய காலம் போய் நிஜம் சொன்னதால் மேலே ஏறி விட்டேனா. இப்படியும் நடக்குமா?

"புவனா..."

மூளைக்குள் 'கிளிக்' கேட்டது.

சமையலறைக்குள் சஞ்சரித்தேன்.

"என்ன இது... ஹால்ல அப்பா, அத்தை இருக்காங்க."

"புவா.. புவிக்குட்டி.. என் கண்ணே... என் செல்லமே..."

"என்னங்க இது... ச்சே அசிங்கம்."


"உம்மேல உசுரு. நீதான் இந்த உலகத் துலேயே படு அழகு. பெங்களூர் போட்டி எல்லாம் குப்பை. அவ உன் கால் தூசு பெற மாட்டா. எலிசபெத் டெய்லர், ரியாஸ் டெய்லர், ஜூஹிசாவ்லா.. எல்லாம் பாவ்லா...." ரிதமிக்காய்ப் பேசப் பேச...

அப்படியே கீழிறங்கித் தரையைத் தொட்டு நின்றேன்.

முதுகெலும்பு

கிராமம்
நாட்டின்
முதுகெலும்பாம்!
அதனால்தான்
கிராமத்தை
அரசாங்கத்தால்
திரும்பிப் பார்க்க
முடியவில்லையோ...

— டி.எல்.சிவகுமார்
எழுதிய
முகத்துக்குத் தெரியாத
முதுகெலும்புகள்
நூலிலிருந்து
- வயலூர் பா.குணா.



♦ தலைவரின் (ரஜினி) பிறந்த நாள் நேரடி ரிப்போர்ட்டை ஒரு ரன்னிங் காமெண்டரியைப் போலத் தந்த கல்கிக்கு சாம்பியன்ஸ் டிராபியை தாராளமாகத் தரலாம்.
சென்னை -1, கே.ஆர். உதயகுமார்.

♦ 'தேன் நிலவு ஒரு திகட்டாத பயணம்!' அட்டைப் படம் கண்டு 'கல்கியில் கிளுகிளுப்பூட்டும் சமாசாரமா?' என்ற வியப்பில், கட்டுரையைத் தேடிப் பிடித்துப் படித்துப் பார்த்தேன். ஹனிமூனுக்கு அனர்த்தம் கொண்டிருந்த என்னைப் போன்றவர்களுக்கு, மணவாழ்க்கை என்கிற புத்தம் புது அனுபவ உலகில் உதிர்க்கப்படுகிற ஓர் ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் முற்றிலும் புரிந்து கொள்வதற்காக மேற்கொள்ளப்படுகிற இனிய பயணம் தான் தேனிலவு என்ற கல்கியின் பாதை தவறாத வரிகள் மூலம் மணவாழ்க்கையின் புனிதத்தைப் புரிந்துக் கொள்ள முடிந்தது.
பெங்களூர் - 47, மு. புஷ்பராசன்.

♦ 'ஜெயில்லலிதா!' தலையங்கத்தின் தலைப்பு சூப்பர். கடைசிவரி சிந்திக்க வைத்தது. அனுதாபம் மிக்கவர்கள் தமிழக வாக்காளர்கள். அதனாலேயே ஊழல் தடுப்பு அதிகாரிகள் விரைந்து செயல்பட்டு, நீதி விரைவாக வழங்கப் படம் வேண்டும் என்ற தங்களது யோசனை வரவேற்கப்பட வேண்டியது மட்டுமல்ல, விரைவாகச் செய்ய வேண்டியதும்தான்.
தூத்துக்குடி - 1,எஸ். ராமசுப்பிரமணியன்.

♦ சென்னையின் மழைக்காட்சிகளைப் படம் பிடித்துப் போட்டது பெரிதில்லை. 'சென்னையில் மழை' தலைப்பை 'மழையில் சென்னை' என்று மாற்றி எழுதியதில்தான் எத்தனை ஆழமான சிந்தனை!
சென்னை - 14, அய்யாறு வாசுதேன்.

♦ 'ரேவதி மாறிவிட்டாள்' என்று நடிகை ரேவதி அளித்த பேட்டி எல்லோரும் 'சமூக சேவை' செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தை வளர்க்கும்படி இருந்தது.
திருச்சி - 17, உ.ஷாமுத்துராமன்.

♦ நேதாஜி விமர்சனத்தில், படத்தில் வருகிற வில்லனுக்கு நீர் சொன்ன அந்த வார்த்தைகளைப் படித்து விட்டு, சிரிப்புன்னா, சிரிப்பு... தாங்க முடியாத சிரிப்பு!
சென்னை - 73, க.கலைச்செல்வன்.

♦ கடைசியில் எங்களை பாதரட்சைகளை எண்ணும்படி வைத்து விட்டீரே, இது நியாயமா?
வேலூர் -4, சுதாமணிமேகலை.

♦ தம் சொத்தைத் தம்மக்களுக்கு எழுதி வைப்பதற்குக் கட்ட வேண்டிய வரியைத் தாம் செலுத்துவதற்கு இராஜாஜி அவர்கள் குறிப்பிட்ட காரணம், கண்களில் நீரை வரவழைத்தது. நீண்ட நேரம் இன்றைய அரசியல்வாதிகளைப் பற்றிய சிந்தனைகளில் ஆழ்த்தி, தொடர்ந்து கட்டுரையைப் படிக்கவிடாமலும் செய்து விட்டது. எத்தகைய மேன்மையான மனிதர்கள் ஆண்ட நாடு இது!
சேலம் - 7, கி. இளங்கோ,
மாநிலப் பொருளாளர், தமிழ்நாடு கூட்டுறவுத் துறை நடுநிலை அலுவலர் சங்கம்.

♦ காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகம் 27.5.96 அன்று "என்னைப் பாதித்த சிறுகதை" என்னும் தலைப்பில் ஓர் கட்டுரைப் போட்டியை நடத்தியது. அதில் கலந்து கொண்ட மேல்நிலைப் பள்ளி மாணவியான எனக்கு முதற்பரிசும், பாராட்டிதழும் வழங்கப்பட்டது! அதில் நான் சென்ற ஆண்டு அமரர் கல்கி நினைவுச் சிறுதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற சிறுகதையான "சமூக நலக் காடுகளும் சாம்பல் பூத்த குழந்தைகளும்" என்ற கதையை மையமாகக் கொண்டு எழுதியே வெற்றி பெற்றேன்! சமூக விழிப்புணர்வுக்கு, 'கல்கி' இளைய சமுதாயத்தின் வழிகாட்டியாகவே உள்ளது.
கோட்டையூர், ச.கோமதி.


♦ கல்கி 15.12.96 இதழ் தலையங்கம் கண்டேன். தமிழ்நாட்டு அரசு அலுவலகத்தில் தமிழை வலுக்கட்டாயமாகத் தமிழ்க்குடிமகன் திணிக்கிறார் என்று எழுதியுள்ளீர்கள். எந்த நாட்டிலும் அந்த நாட்டு மொழியை யாராவது திணிக்க முடியுமா? 1956-க்குப் பிறகு பணியில் சேர்ந்தவர்கள் தமிழ் ஆட்சிமொழி என்று தெரிந்துதான் சேர்ந்திருக்கிறார்கள். ஆகவே அவர்கள் தமிழில் எழுத உடனடியாகப் பயிற்சி பெற்று இருக்க வேண்டும்.

விஞ்ஞான, மருத்துவக் கல்விக்குத் தேவைப்படும் அடிப்படையான ஆங்கிலச் சொற்கள் அப்படியே தமிழ் வடிவாக்கப்பட்டு கற்றுத் தரப்பட்டால் ஒருவர் சராசரி ஆங்கில அறிவைக் கொண்டு வெளிநாடுகளில் சமாளித்துவிட முடியும் என்று எழுதியிருக்கிறீர்கள். இதுவும் ஒப்புக் கொள்ளும் வகையில் இல்லை. ஆங்கில பெயர்ச் சொற்களைப் பயன்படுத்துவது தமிழ்வழி படிப்பதினால் வரும் நற்பயன்களைக் குறைக்கும். எந்தத் துறையைச் சார்ந்த ஆங்கிலம் வேண்டும் என்றாலும் அதை தேவைப்படுவோர் கற்றுக் கொள்ள முடியும்; ஆங்கிலச் சொற்கள் வழி, துறை அறிவு பெற வேண்டிய அவசியம் இல்லை.
சென்னை -5, ச.முத்துக்குமரன்,
உறுப்பினர், செயலர், தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம்

இவ்வாறாக...

அன்றைக்குப் போலவே
இன்றைக்கும்
ஆதரவாயிருக்கும் அம்மாவை
ஐயோ பாவம்
தாய்ப்பாசமென்று விட்டுவிடலாம்

ஆயிரத்தொரு சண்டைகளுக்கு
அப்புறமும்
அப்பா காட்டும் அக்கறையை
அன்புக்கு நேர்வதெல்லாம்
துன்பம்தானென்று விட்டுவிடலாம்





மார்பில்
முகம்புதைத்து
மனைவி கேட்கும் கேள்விகளுக்கு
மறுமொழியாக
மௌனத்தை விட்டுவிடலாம்

காலைக்கட்டி மயக்கும்
குழந்தைகளை
கடவுளின் அற்புதங்களை நம்பி
சும்மா
விட்டுவிடலாம்

முதுகுக்குப் பின்
புறம்பேசித் திரிகிற
நண்பர்களின் குணத்தை
மன்னித்து
மறந்து விட்டுவிடலாம்

வேண்டியவர்களின் யோசனைகள்
வேண்டாதவர்களின் கேவலப்படுத்தல்கள் இரண்டுமே

விதியின் முன்புக்கு
வீணென்று
விட்டுவிடலாம்

எனில்
எல்லாவற்றிற்கும் மேல்
இயல்பிலேயே உறுத்திக்கொண்டிருக்கும்
என் மனசாட்சிக்கு
என்ன பதில் சொல்ல?

- விக்ரமாதித்யன்



போட்டி போடும் சலுகை விற்பனை எதற்காக?

சென்னை நகரத்து நகைக்கடைகள் திமிலோகப்படுகின்றன. 'கூலி இல்லை; சேதாரம் இல்லை; கற்களுக்குக் கட்டணமில்லை' என்று எல்லா நகைக்கடைகளும், போட்டி போட்டுக் கொண்டு விற்பனை செய்ய கடைகளில் திருவிழாக் கூட்டம்.

சென்ற ஆண்டு, இதுபோன்ற சலுகை விற்பனையால், சிறு நகை வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்படுவதாய் சலசலப்பு எழ, 'இந்த ஆண்டு... கூலி இல்லை, சேதாரம் இல்லை.. வியாபாரம் நடத்துவதில்லை' என்று. சிறு நகை வியாபாரிகள் நலன் கருதி, அனைவரும் தீர்மானித்தார்கள் (ஆனால், நகை வாங்க வந்தவர்கள், அந்த சலுகைகளை, நகைக் கடைக்காரர்களிடமிருந்து, கேட்டுப் பெற்றுப் பயனடைந்தது பகிரங்க ரகசியம்)

சென்ற ஆண்டு, நகை வியாபாரிகள் எடுத்த [illegible] ந்து இவ்வாண்டு ஏன் வழுக்கல்? "இத்தனை வருடம் புத்தாண்டையொட்டி, சலுகையில் நகை வாங்கிய வாடிக்கையாளர்களுக்கு, சலுகை ரத்தானதில் ஏமாற்றம். வெளியூர்களிலிருந்து, 'பணத்துடன், நகை வாங்க வந்து விட்டோம். சலுகை கொடுங்கள்' என்று கேட்டார்கள் பலர். அதுவுமின்றி பொதுவாகவே, இன்று அனைத்துப் பொருட்கள் விற்பனையிலும் கடும் போட்டி காரணமாய் தள்ளுபடி, இலவசப் பரிசு, அதிர்ஷ்டப் பரிசு என்று கொடுக்கிறார்கள். நாங்கள் மட்டும் சும்மா இருக்க முடியுமா?' என்று கேட்கிறார் லலிதா ஜுவல்லரியின் சுகுமாரன்.

"வருஷத்தில் 364 நாள் நமக்கு; ஒருநாள் - ஜனவரி முதல் தேதி - கஸ்டமர்களுக்கு நன்றி கூறும்விதமாய் மறைந்த என் தகப்பனார் ஆரம்பித்து வைத்தார். அதை இவ்வாண்டும் பின்பற்றுகிறோம்" என்கிறார் பாலு ஜுவல்லர்ஸ் ஐயப்பன்.

"சென்ற வருடம் பண மார்க்கெட் ரொம்ப டைட். வியாபாரத்தில் அதன் பாதிப்பை உணர முடிந்தது. மோசடி நிதி நிறுவனங்களின் குட்டு வெளிப்பட்டு விட, மறுபடி மக்களுக்கு தங்கத்தில் முதலீடு செய்ய ஆர்வம் அதிகரித்து உள்ளது. முதலீடு செய்கிற பணத்துக்கு ஈடான தங்கத்தை அவர்களிடமே பாதுகாப்பாய் வைத்துக் கொள்ள முடிகிறதே! இது பிக்ஸட் டெபாஸிட் ரசீது போன்ற காகிதம் இல்லையே!" என்று தொடர்ந்த ஐயப்பனிடம், "சலுகை வியாபார சமயத்தில், விற்கப்படும்

நகைகள் தரத்தில் குறைந்தவையாய் இருக்குமோ என்ற பயம் நிலவுகிறதே?" என்றோம்.

"வழக்கமான தரம் குறையும் சாத்தியமில்லை. இந்தச் சலுகை விற்பனை நாட்களுக்காக, எந்த வியாபாரியும் தரம் தாழ்ந்த நகைகளை பிரத்யேகமாய் தயாரித்து விற்பாரென நான் நம்பவில்லை."

"ஓரிரு நாட்கள் சலுகை என்றால் சரி! பத்து நாட்கள் எதற்காக?" இதை லலிதா ஜுவல்லரி சுகுமாரனிடம் கேட்டோம்.

"இரண்டு மூன்று நாட்கள் என்றால் கூட்டம் சமாளிக்க முடியவில்லை. நிறைய பணத்தை எடுத்துக் கொண்டு வந்து, சாவகாசமாய் டிஸைன் பார்த்து வாங்க, கஸ்டமர்களால் முடியாது போகிறது. அந்த சிரமத்தைக் குறைக்கவே இந்த ஏற்பாடு. ரெண்டு நாளானாலும், பத்து நாளானாலும் மொத்த விற்பனையில் பெரிய வித்தியாசமிருக்காது!"


"சில நகைக் கடைகளுடன் இணைந்த ஃபைனான்ஸ் கம்பெனிகள் மூடப்பட்டு விட்டதால், தங்களின் நிதி நிலைமையின் ஸ்திரத் தன்மையை மக்களுக்கு எடுத்துக்காட்டத்தான் இந்தச் சலுகை விற்பனை உதவும் என்று சொல்லலாமா?"

"எங்களைப் பொறுத்தவரை எங்கள் வாடிக்கையாளர்களில் மெஜாரிடி ரெகுலர் கஸ்டமர்கள். அவர்களுக்கு எங்கள் பேரில் ஆழமான நம்பிக்கை எப்போதும் உண்டு என்பதால் நாங்கள் அப்படியெல்லாம் செய்ய வேண்டியதில்லை!"

— கௌதம்ராம்

அரசு கெஜட்டில் ஆபாச வார்த்தைகளா?

அண்மையில் கோழிக்கோட்டுக்கு விஜயம் செய்த பிரதமர் தேவேகௌடாவை வரவேற்க முதல்வர் நாயனார் போகவில்லை. இது கேரள அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. "இது கேரள பண்பாட்டுக்கே இழுக்கு. பிரதமரை வரவேற்க முதல்வர் போகாததால், கேரளாவின் பிரச்னைகளைப் பிரதமரிடம் எடுத்துக் கூறுகிற ஒரு மாபெரும் வாய்ப்பை நாயனார் தவற விட்டு விட்டார். பிரதமரிடம் ஏதாவது தனிப்பட்ட முறையில் வருத்தம் இருந்தாலும் அதை இப்படியா அநாகரிகமாக வெளிக்காட்டுவது?" என்று காரசாரமாக அறிக்கை விட்டார் கேரள மாநில காங்கிரஸ் தலைவர் வயலார் ரவி.



இதற்கு நாயனாரும் சளைத்துப் போய் விடவில்லை. "ஏதாவதொரு மத்திய அமைச்சர் வந்தாலே அவர்கள் பின்னாலேயே சுற்றிக் கொண்டிருக்கும் வயலார் ரவிக்கு வேண்டுமானால் இதுவொரு பெரிய பிரச்னையாகத் தெரியலாம். நான் வரவேற்கப் போகாவிட்டால் என்ன? அமைச்சர்கள் சென்றார்களே! அவர்கள் கேரள பிரச்னைகளை எடுத்துக் கூறவில்லையா என்ன? அதோடு மரபுப்படி கேரள தலைநகரான திருவனந்தபுரத்துக்கு பிரதமர் வரும்போதுதான் முதல்வர் சென்று வரவேற்க வேண்டும். மற்றபடி நான் போய்த்தான் வரவேற்க வேண்டும் என்பதில்லை!" என்று சூடாகப் பதிலடி கொடுத்து விட்டார் நாயனார்.

● கேரளாவில் ஏற்பட்டுள்ள இன்னொரு பரபரப்பு, கேரள கெஜட்டில் வெளியாகியுள்ள ஒரு விஷயம். கேரள தொழிலதிபர் ஒருவருக்கும் அவரது தொழிலாளி ஒருவருக்கும் இடையிலான வாய்த் தகராறில் வெளிப்பட்ட கெட்ட வார்த்தைகள். லேபர் கோர்ட்டில் வெளிப்பட்ட இந்த விஷயத்தை அப்படியே அரசு தனது கெஜட்டில் பிரசுரித்துப் பரபரப்பை ஏற்படுத்தி விட்டது!

திருவனந்தபுரத்திலிருந்து : **எஸ்.எஸ். மணி**

மைத்ரேயி

ஒரு கொடி தேவைப்பட்டது. தேசியக் கொடி. மைத்ரேயியை மதுசூதன் சந்தித்ததற்கு அதுதான் காரணம்.

ராமநாய்க்கன் பேட்டையிலும் டைலர்கள் இருந்தார்கள். மதுசூதனனுக்கு அவர்கள் மீது நம்பிக்கையில்லை.

கொடியின் அளவு பெரியது. நாலடிக்கு ஆறடி. பழைய கொடி கிழிந்து விட்டதால் உள்ளூர்ப்பள்ளியில் நன்கொடையாக ஒரு கொடி தைத்துத்தரும்படி கேட்டிருந்தார்கள்.

அது அவன் படித்த பள்ளி. கேட்ட நன்கொடையோ தேசியக் கொடி. ஏதோ ஒன்று என்று ஒப்பேற்றிவிட மனசு வரவில்லை.

வளைந்து நெளிந்து உயர்ந்து தாழ்ந்து குலுக்கிக் கலக்கிய மண் சாலையில் அவன் அரைமணி நேரம் மொபெட்டில் பாடுபட்டு விட்டு வாணியம்பாடி வந்தான்.

காதர் பேட்டையில் ஒரு முகவரி சொன்னார்கள். தேடினான்.

கண்டுபிடித்தபோது மத்தியானம்.

மாடியேறிய முதல் தளத்தில் ஒரு பெரிய ஹால். பதினைந்து தையல் மெஷின்கள் ஏதோ எக்ஸ்போர்ட் துணி தைக்கிற யூனிட்.

பதினான்கு மெஷின்கள் காலியாயிருந்தன. சாப்பாட்டிற்குப் போயிருக்க வேண்டும்.

ஒரு மெஷின் மீது ஒரு செய்தித் தாளைப் பரப்பி விட்டு அதன் மேல் எவர்சில்வர் டப்பா ஒன்றை மூடி திறந்து கொண்டிருந்தாள் மைத்ரேயி.

காலடியோசை கேட்டு அவள் முகம் திரும்பிற்று. அவள் கண்கள் அவனை ஏறிட்டுப் பார்த்தன.

மதுசூதன் எதற்கு வந்தோம் என்று மறந்து போனான். சில கணங்கள்.

மைத்ரேயி கூட மறந்து போனாள். சில கணங்கள்.

வெகுநாட்கள் கழித்து வாணியம்பாடி ரயில்வே ஸ்டேஷன் கோடியில் ஒரு சிமெண்ட் பெஞ்சில் அவர்கள் இருவரும் அந்த மறதியை நினைவு கூர்ந்தார்கள்.

"அது ஏன் மைத்ரேயி? அந்த மறதி ஏன்?"

மைத்ரேயி நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

"அது என்ன மைத்ரேயி?"

புதிர்களை விடுத்தது போன்ற ஒரு புன்னகை அவள் உதட்டில் ஊர்ந்தது.

"ஒரு வசனம் தோணுது. சொல்லட்டுமா?"

"சொல்லுங்க."

"ரொம்ப வருஷமா தேடிய பொருள் திடீர்னு எதிர்க்க நின்னாப்பிலே ஒரு திக்பிரமை" என்றான்.

"ஜன்ம ஜன்மாந்தரமா..." என்று திருத்தினாள் மைத்ரேயி.

அவள் பொங்கி வருகிற சிரிப்பை அடக்கிக் கொண்டு சொல்கிறாள் என்று அவனுக்குப் பட்டது.

அவனுக்கு முதலில் ஒரு வருத்தம்

கிண்டலுக்குரிய பொருளாகி விட்டதில் ஒரு சின்ன ரோஷம்.

மைத்ரேயியின் செக்கச் சிவந்த முகமும் கறுத்த கண்ணும் அந்தச் சிரிப்பில் திணறுவதைப் பார்த்ததும் மதுசூதன் சிரித்தான். அவள் வாய்விட்டு உடம்பு குலுங்கச் சிரித்தாள்.

ஒருவர் மாற்றி ஒருவராக இருவரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

வாயும் வயிறும் வலித்தன.

அவன் தான் முதலில் நிறுத்தினான்.

"ஏன் சிரித்தோம்?"

"சிரிப்பு வந்தது."

"இது சிரிக்கிற விஷயமா?"

"உருகலாம், கரையலாம், பைத்தியம் பிடிச்சு அலையலாம். இதெல்லாம் 'ஓல்ட் ஃபேஷன்.'"

"சிரிக்கிறது நியூ ஃபேஷனா?" அவன் குறுக்கிட்டான்.

"இன்னும் சிலதை விட்டுட்டேன்."

"சொல்லு..."

"பீச், ஹோட்டல், பார்க், சினிமா, லாட்ஜ்! சினிமாங்கள்ளே வர்ற மாதிரி கட்டிப் பிடிச்சுக்கறது. உருண்டு பொரள்றது. கடைசியிலே கண்ணீர்! கதறியழறது"..... கண் இமைக்காமல் அவனைப் பார்த்தவாறே சொன்னாள்.

"நீ ஒரு நியூரோ சர்ஜனாயிருக்கணும் மைத்ரேயி!" அவன் குறுக்கிட்டான்.

"அறுக்கறேங்கிறீங்க?"

"இரக்கமில்லாமே..." மதுசூதன் கூட்டிச் சொன்னான்.

மைத்ரேயி நிதானமாகச் சொன்னாள்.

"காதல் செத்துக்கிட்டிருக்கு மது. அதுல யாருக்கும் நம்பிக்கையில்லே. மதிப்பில்லே இப்ப யாரும் காதலிக்கிறதில்லே."

"அப்போ நம்மது?" மதுசூதன் கேட்டான்.

"பொழுது போக்கிண்டிருக்கோம்."

‘நெஜமா?”

“நெஜம்மா.”

அவள் ஊர்ஜிதம் செய்வது போல் தலையாட்டினாள். பிறகு தொடர்ந்தாள்.

‘‘எந்தப் பொழுது போக்கிற்கும் சில விதிகள். சில வரம்புகள் சில நாகரிகங்கள் உண்டு. இப்படி நாமும் வகுத்திட்டிருக்கோம் யூ லைக் மீ. ஐ லைக் யூ. இப்ப! தாற்காலிகமா. அவ்ளோதான். இப்ப மகிழ்ச்சியா இருக்கோம். இதுக்கு முடிவு உண்டு. அது துக்கமா. சோகமா மாறக் கூடாது. முடிவு வரும் போது நீங்க சந்தோஷமா குட்டை சொல்லணும். நானும் சந்தோஷமா குட்பை சொல்லணும்.”



அப்படி மைத்ரேயி சொன்னாள் என்பதை விரிஞ்சிபுரம் ரயில்வே ஸ்டேஷனுக்குப் பக்கத்திலிருந்த மைத்ரேயி வீட்டு நடைத் திண்ணையில் அமர்ந்து எதிர்த் திண்ணையில் உட்கார்ந்திருந்த பிரபாகர வர்மாவிடம் தெரிவித்தான் மதுசூதன்.

பிரபாகர வர்மா ஓய்வு பெற்ற ஃபாரஸ்டர். மைத்ரேயியின் அப்பா.

வாசல் நிலையைப் பிடித்து நின்றிருந்த கார்த்தியாயினி– மைத்ரேயியின் அம்மா– அதைக் கேட்டு விட்டு வெடித்துச் சிரித்தாள்.

பிரபாகர வர்மா புன்னகை செய்தார். தலை திரும்பி கார்த்தியாயினிக்கும் அந்தப் புன்னகையை நீட்டித்தார். கோளாறு பிடித்த குடும்பமோ என்று ஒரு கணம் குழம்பினான் மதுசூதன்.

அவனுக்கு டீ போட்டுத் தர தேயிலை வாங்கிவர மைத்ரேயி கடைக்குப் போயிருந்தாள்.

அவள் தான் தன் பெற்றோரைப் பார்க்க விரும்பிய மதுசூதனைக் கூட அழைத்து வந்திருந்தாள்.

வையவன்

தினசரி அவள் வரும் அதே ரயிலில்.

அவர்கள் பாலக்காட்டிலிருந்து குடி பெயர்ந்து விரிஞ்சிபுரத்தில் நிலையூன்றிய குடும்பம். துபாய்க்குப் போன அண்ணன். ஓய்வு பெற்ற அப்பா. அம்மா. ஓட்டு வீடு. பளிச்சென்று ஒரு தூய்மை. அதது இருக்க வேண்டிய இடத்தில் அடுக்கிச் சீராக்கிய ஒரு நேர்த்தி.

“என் உத்தேசம்...” என்று ஏதோ சொல்லப்

போனான் மதுசூதன்.

"உஸ்ஸ்..." என்று ஆசீர்வதிப்பது போல் கை உயர்த்தித் தடுத்து நிறுத்தினார் பிரபாகர வர்மா.

"அதான் மைத்ரேயி..." என்று கார்த்தியாயினி இடைமறித்தாள்.

"அவ்வளவுதான் மைத்ரேயி" என்று பிரபாகர வர்மா மேலே சொன்னார்.

அவனுக்கு நாக்கு வறண்டது.

"கொஞ்சம் தண்ணீர் குடுங்கோ" என்று கார்த்தியாயினியைப் பார்த்துக் கேட்டான்.

அவள் உள்ளே போனாள்.

வர்மா மெதுவான குரலில் சொன்னார்.



"அந்தச் சிறையிலே ஏதோ ஒரு பெரிய ஊழல் நடந்திருக்குதாமே?!"

"இருக்காதா பின்னே! எங்க தலைவர் ஆறு மாசமா அங்கேதானே இருக்கிறார்!"

— வி. ரெங்கநாதன்

"மிஸ்டர் மதுசூதன்! எங்க ரெண்டு பேர் கல்யாணமும் காதல் கல்யாணம்தான்."

அவன் இது தேவையா என்பது போல் அவரை ஏறிட்டுப் பார்த்தான்.

"ஒங்களை எனக்குப் புரியறது! என்னை எங்க வீட்டுக்காரிக்குப் புரிஞ்சது. மைத்ரேயி?" என்று கையைத் தூக்கி வானத்தைக் காட்டி முகம் இறக்கி உதடு பிதுக்கித் தலையசைத்தார்.

"மைத்ரேயியை ஒங்களுக்குப் புரியலியா?" என்று மதுசூதன் விளக்கம் கோரினான்.

"காலம் அப்படியிருக்கு! ட்ரை யுவர் பெஸ்ட். நீங்க நல்லவர். புத்திசாலி. பொம்பளையை வலுக்கட்டாயப்படுத்த முடியாது. பூ மலர்ச்சிக்குச் செயற்கை முறை கண்டுபிடிக்கலே. முடியாது. முயற்சி பண்ணினா நாம எங்கியாவது முட்டாளாயிடுவோம்."

தண்ணீர் கொண்டு வந்த கார்த்தியாயினி, அவன் குடித்து முடித்து காலித் தம்ளரை வாங்கியபின் சொன்னாள்.

"ஒங்களை சந்திச்சப்புறம் அவகிட்டே ஒரு மாறுதல் இருக்கு. எல்லாம் நல்லபடி அமையறதிலே எங்களுக்குப் பரம திருப்தி. ஆனா அதுக்கு நாங்க ஒண்ணும் செய்யறதுக்கில்லே."

"புரியலே" என்று மதுசூதன் குறுக்கிட்டான். அவனுக்கு நிஜமாகவே புரியவில்லை.

"மைத்ரேயி மனசு வக்கணும்."

"என்னை அழைச்சுட்டு வர்றதா சொன்னாளா?"

"சொன்னா. எப்போன்னு சொல்லலே."

"என்ன சொன்னா?"

"ஒரு ஃப்ரெண்ட். எம்மேலே ரொம்பப் பிரியமா இருக்கார்னு சொன்னா" என்று கார்த்தியாயினி பதிலளித்தாள். அவனுக்கு சிறு ஏமாற்றம்.

"நீங்க ஒண்ணுமே நெனக்கலியா?" என்று இருவரையும் மாறி மாறிப் பார்த்தான்.

மதுசூதன் ஆழம் தெரியாமல் காலை விடுகிறோமே என்று முதல் முறையாகப் பயந்தான்.

அவனுடைய பயத்தின் எக்ஸ்ரே படத்தைப் பார்ப்பது போல் வர்மா அவனைக் கூர்ந்து நோக்கினார்.

மனிதருக்குத் துளைக்கிற கண்.

"என்ன இருக்கு நெனைக்க? மைத்ரேயி எங்க குழந்தை. ஒண்ணு மட்டும் தீர்க்கம். அவளுக்கும் எங்களுக்கும்..."

அவர் நிறுத்தினார்.

கார்த்தியாயினி தொடர்ந்தாள்.

"அவள் புத்திசாலி. குடும்ப கௌரவத்தைக் காப்பாத்தணும்னு நெனைக்கிறவ... அதுலே உறுதியானவ."

விரிஞ்சிபுரத்திலிருந்து வாணியம்பாடிக்கு ஆயிரம் ரூபாய் சம்பளத்திற்காக அன்றாடம் ரயிலில் வந்து போகிற அந்த அபூர்வமான அழகு மகள் மீது அவர்கள் வைத்திருக்கிற நம்பிக்கை அவனை அயர்த்திற்று.

இந்த அன்றாடப் பயணத்தில் எத்தனை ஆயிரம் கண்கள். எவ்வளவு விகார மனோபாவங்கள். எப்படிக் கடக்கிறாள்?

துபாயிலிருந்து அண்ணன் அனுப்புகிற பணம். அப்பாவின் பென்ஷன். அவள் வேலை செய்யாமல் அந்தக் குடித்தனம் முழுகி விடாது. எதற்கு இவ்வளவு பாடுபடுகிறாள்?

மைத்ரேயியிடம் அதைக் கேட்கலாம். பதில் வராது. அவளிடம் அபூர்வமான பாஷை ஒன்று இருந்தது. மௌனம். பார்வை. இந்த இரண்டு எழுத்துக்கள் மட்டும் உள்ள மொழி.

என்ன சிக்கலான பிரச்னைக்கும் அவளால் அதில் பதில் தர முடியும். பேச முடியும். நிற்கிற எல்லையில் நில் என்று கட்டளை இட முடியும்.

எனக்கும் கூடவா என்று அவள் பாஷையிலேயே கேட்டான்.

'உனக்கும்தான்' என்று பதில் வந்தது.

பிரபாகர வர்மா வானத்துக்குக் கை உயர்த்தி உதடு பிதுக்கியது சரிதான்.

மைத்ரேயி புரிந்து கொள்ள முடியாதவள்.

அவளை ஒரு ஞாயிற்றுக்கிழமையில் ராம நாய்க்கன்பேட்டைக்கு அழைத்துப் போவதற்கு அவர்களிடம் அனுமதி கோரினான்.

"தாராளமா! அவ வரத் தயார்னா கூட்டிட்டுப் போங்களேன்" என்றார் பிரபாகர வர்மா.

"ஆட்சேபணையே இல்லே. ஆனா ராத்திரி ரயில்லே அவளை வீட்டுக்கு அனுப்பிச்சிடணும். இல்லேன்னா நாங்க கவலைப்பட்டுண்டு இருப்போம்."

என்ன தைரியம்! எவ்வளவு நம்பிக்கை!

அரைமணி நேரம் அவளை மொபெட்டில் உலுக்கிக் குலுக்கி தன் வீட்டிற்கு அழைத்து வந்தான். ஊர் முழுதும் வேடிக்கை பார்த்தது.

பத்து ஹார்ஸ் பவர் பாயும் ஐந்து ஏக்கர் தென்னந்தோப்பின் நடுவில் அவன் வீடு. காங்கிரீட் கட்டுமானம்.

முப்பதில் விதவையான அம்மா. இப்போது நாற்பத்தி ஐந்து. நெற்றி விபூதியிலும் நீண்ட இமைகளிலும் உதடு மடிப்பிலும் ஒரு துயரம்.

கருணை கசியும் சோகம்.

மைத்ரேயி மொபெட்டிலிருந்து இறங்கியதுமே அவள் வேகமாக நடந்து வந்தாள்.

மைத்ரேயியைப் பார்த்துச் சிரித்தாள்.

அடுத்து அவள் தோள் மீது கை வைத்தாள். வலது கையால் மைத்ரேயியின் கையை ஆதுரமாகப் பற்றினாள்.

ஒரு பெண் மற்றொரு பெண்ணுக்கு உணர்த்துகிற அற்புதமான பரிவு அந்தக் கையிலிருந்து வெளிப்பட்டது. மைத்ரேயி புரிந்து கொண்டாள்.

'விளக்கு ஏற்றி வைத்த மாதிரி இருக்கிறது' என்று அம்மா சொன்னதை மதுசூதனிடம் மறுநாள் ஸ்டேஷன் சந்திப்பில் மைத்ரேயி தெரிவித்தாள்.

"அப்புறம் என்ன சொன்னாங்க?"

"நெறைய... நெறைய."

"இதெல்லாம் எப்போ நடந்தது? எப்போ பேசினீங்க?"

"நீங்க இளநீர் வெட்டி வர ஒரு தரம், மோட்டார் பம்ப்பை ஆன் பண்ண ஒரு தரம்னு போய்ட்டீங்க இல்லே?"

"என்னென்ன சொன்னாங்கன்னு ஒண்ணு விடாமே சொல்லு."

மைத்ரேயி மௌன மொழியில் பதில் தந்தாள். சொல்ல முடிவது கொஞ்சம். முடியாதது நிறைய.

"ஒங்க ஒடம்புலேயே ஒரு பத்து ஹார்ஸ் பவர் கூடியிருக்காமே. நீங்க இப்ப விவசாயத்



''ஊழல் செஞ்சிட்டு ஜெயிலுக்குள்ள இருக்கற அரசியல்வாதிகளைப் பார்த்து ஒரு பாடம் கத்துக்கிட்டோம்!''

''என்ன பாடம்? ஊழல் செய்யக் கூடாதுன்னா...?''

''ஊகும், ஊழல் செய்து அவங்களை, மாதிரி மாட்டிக்கக் கூடாதுன்னு.....!''

— நீடா.சி. இளஞ்செழியன்

தைப் பிரமாதமா கவனிக்கிறீங்களாம். வாழைத் தாருக்கும் தேங்காய்க்கும் நல்ல வெலை படிய வச்சீங்களாம். பொழைப்பு மேலேயே இப்பத்தான் ஒரு கருத்து வந்திருக்குன்னாங்க."

அவள் சிரித்தாள்.

ஆழமாக அவனைப் பார்த்தாள்.

'உன் ரகசியங்கள் எல்லாம் எனக்குத் தெரியும். நீ மதுவருந்தியவன். சீட்டாடியவன். தத்தாரியாகத் தறிகெட்டுத் திரிந்தவன்.'

'உனக்கு நான் நங்கூரம் பாய்ச்சியிருக்கிறேன். நான் நினைக்கவில்லை. அப்படி அம்மா நினைக்கிறாள்.'

'உனக்குள் தீபம் ஏற்றி வைத்திருக்கிறேனாம். நான்தான் ஒன்னைக் கரை சேர்க்கணுமாம். நடக்குமா இதெல்லாம். எனக்கு நம்பிக்கையில்லை.'

அவள் நெடுநேரம் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் அதைக் கவனிக்கவில்லை. அம்மா என்னென்ன சொல்லி இருப்பாள் என்று ஊகிக்க முயன்றான்.

இரண்டு மாதங்கள் இடைவிடாது மதுசூதன் மொபெட்டில் வாணியம்பாடி வந்தான்.

காதர்பேட்டையிலிருந்து ஒவ்வொரு இரவின் உதயத்தின் போது வரும் ரயிலுக்காக வண்டியைத் தள்ளிக் கொண்டே வழியெல்லாம் பேசி, மீதியை ரயில்வே ஸ்டேஷனில் பேசி, மறுநாளைக்கும் மிச்சம் வைத்தான்.

எந்தத் தரப்பிலும் பிரச்னையில்லை.

முடிவு சுபமாக, மங்களமாக இருக்குமென்று மனசு நம்பியது பரிபூரணமாக.

ஒருமாதிரி அவளைப் புரிந்து புரிய வைத்துவிட்ட தெம்பு கூடியது.

அவன் பஞ்சாங்கத்தில் முகூர்த்தத் தேதிகளை எல்லாம் தேடத் தொடங்கினான்.



''தலைவர் ஏன் கோபமா இருக்கார்?''

''யாரோ 'ஹேப்பி ஜெயில் இயர்'னு புத்தாண்டு வாழ்த்து அனுப்பியிருக்காங்களாம்!''

— என். பாஸ்கர்

ஆனால் அவளிடம் வாய் திறந்து கேட்க வில்லை.

ஒரு சனிக்கிழமை மைத்ரேயி அதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்தாள்.

"நீங்க என்னைப் பத்தி என்ன நெனைக்கிறீங்கன்னு தெரியும். வெரி சாரி மது!"

அவன் பேச்சின்றி நிசப்தமானான்.

"சாரதான்னு எனக்கு ஒரு பள்ளித் தோழி. ப்ளஸ் டூ வரையிலே கூட வந்தா. இதே ரயில். இதே பயணம். இதே ஊர். இங்கே இங்கே" என்று அவள் கைநீட்டி பிளாட்பாரம் கடந்த தண்டவாளப் பின்னலைக் காட்டினாள்.

"சட்டுனு கால் தவறி கீழே விழுந்தா! என் கண் முன்னாடி. அவ ஒடம்பு சின்னாபின்னமாச்சு. எல்லாம் கண் முன்னாடி."

இருவரையும் மௌனமாக்கி ஒரு நீண்ட கூட்ஸ் வண்டி கடந்து சென்றது.

அது போன பிறகும் அவள் மௌனமாகவே இருந்தாள். அவன் காத்திருந்தான்.

"உயிருக்குயிரா நேசிக்கறது எப்படீன்னு சாரதாதான் எனக்குக் கத்துக் கொடுத்தா. ஜஸ்ட் இதுக்குதான் இதுக்காக மட்டும்தான் அவ பொறந்தான்னு நான் அடிக்கடி நெனச்சுப்பேன்."

மைத்ரேயி கண்கலங்குகிறாளா என்று திரும்பிப் பார்த்தான். அதைப் புரிந்து கொண்டு அவள் மெலிதாகச் சிரித்தாள்.

"எந்தத் துக்கத்தையும் சமாளிச்சுக்கக் கூட அவகிட்டே இருந்து நான் கத்துக்கிட்டேன்."

அந்தச் சமயம் அவளுக்கு வெகு அருகில் நெருங்கி மைத்ரேயியின் கழுத்தை அணைத்து அவள் நெற்றியில் முத்தமிட ஓர் உந்துதல் எழுந்தது.

தவிர்த்தான்.

"மரணம் என்றால் என்னன்னு கூட அவ தான் சொல்லிக் கொடுத்தா. மறக்க முடியலே மது. வாழ்நாள் முழுதும் முடியாது."

"சில விஷயங்களை மறந்துதான் தீரணும்" என்று குறுக்கிட்டான் மதுசூதன்.

"முடிஞ்சாத்தானே?"

அதற்கு பதிலளிக்க முடியவில்லை.

"அவ்வளவு ஆழமா ஓங்களை நேசிக்க எனக்குப் பயமா இருக்கு! அதுக்கு என்ன ஆகுமோ? அது மிதித்துத் துவைக்கப்படுமோ. அர்த்தமில்லாமே போயிடுமோன்னு கவலை வருது. ஸோ, குட்பை."

கனமான ஒரு சம்மட்டியடி எங்கோ அவனுள் விழுந்தது.

"மைத்ரேயி" என்றான்.

"குட்பை மது குட்பை."

இனி எதுவும் மிச்சமில்லை என்று அவள் பார்வை அவனுக்கு உணர்த்தியது.

"இவ்வளவு ஏன் பழகினே?"

"ஓங்களைப் பிடிச்சது. இன்னமும் பிடிக்குது. நீங்க ஒரு சந்தர்ப்பத்திலே கூட எங்கிட்டே தப்பா நடந்துக்கலே. அதுக்கு இம்மியளவு கூட முயற்சி பண்ணலே. அதான்... அதான்."

மைத்ரேயி மீண்டும் சிரித்தாள்.

மதுசூதன் ஊர் திரும்பும்போது பௌர்ணமி நிலவு வழியெல்லாம் பால் பொழிந்தது.

கோபம், ஏமாற்றம், வருத்தம் என்று எல்லா நுரைகளும் பொங்கி அடங்கி மனசு சாந்தமாயிற்று.

அம்மாவிடம் போய்ச் சொன்னால் அவளுக்குத் தாங்காது. சாதி சனம், அந்தஸ்து அன்னியம் என்று பல சங்கிலிகளை அறுத்து விட்டு அவளும் மைத்ரேயியை விரும்பினாள்.

விளக்கு ஏத்தி வச்ச மாதிரி இருக்கு என்று சொன்னவள் அல்லவா?

அவன் மொபட்டில் ஊர்ந்தவாறே யோசித்தான்.

தீபம் அணையக் கூடாது.

சாரதாவின் மரணம் மைத்ரேயிக்குள் எதையும் அணைத்து விடவில்லை.

மைத்ரேயி மீது கொண்ட காதல்?

அதற்குப் பின் அவன் வாணியம்பாடி வந்தான். வெவ்வேறு வேலையாய். காதர்பேட்டைக்கும் போனான். எக்ஸ்போர்ட் யூனிட்டைப் பார்ப்பதில்லை. சில நெறிமுறைகளை மௌனமாகத் தன் பாணியில் மைத்ரேயி கற்றுக் கொடுத்திருந்தாள்.

ராமநாய்க்கன்பேட்டையில் பள்ளியில் எப்போதாவது கொடியேற்றுகிற சமயம் மதுசூதன் கடக்க நேர்ந்தால் கொடி உயரும் வரை நிற்பான்.

அது மைத்ரேயி தைத்துக் கொடுத்த கொடி. அது அலை வீசிப் பறக்கிறதைப் பார்ப்பதில் ஒரு பெருமிதம் தெரியும்.

மதுசூதன் அதை விரும்பினான். மகிழ்ச்சியடைந்தான.

தில்தான் நான் காமிராவை உடனே இயக்கினேன்!"

என் மருமகள் ஒருநாள், "சஞ்சய் சுப்பிரமணியத்தின் கச்சேரிக்குப் போகிறோம். வாருங்கள்!" என்று கூப்பிட்டாள். அப்போது தான் முதன் முதலாக சஞ்சய்யின் குரலைக் கேட்டேன். அந்தப் பாணியும் எனக்குப் பிடித்திருந்தது. அப்புறம் பெங்களூரில் ஒரு ஆர்ட் காலரியில் சஞ்சய் க்ரியேடிவிடி பற்றிப் பேசினார். பாடியும் காண்பித்தார். அப்போது படம் எடுத்தேன்.


செம்மங்குடியைப் படம் எடுக்கப் போன போது எனக்கு அதிக நேரம் இருக்க வில்லை. அவர் அப்போதுதான் பூஜையை முடித்துவிட்டு, தியானம் செய்ய ஈஸிசேரில் வந்து உட்கார்ந்து கொண்டார். அந்தத் தருணம், அவர் அமர்ந்திருந்த விதம், அந்த வெளிச்சம் எல்லாம் சேர்ந்து ஒரு திருப்தியான புகைப்படமாக உருவாயிற்று.

- சாருகேசி



* சஞ்சய் சுப்ரமணியன்

அருள்வாக்கு



முதலில் தேவதா உபாஸனை வேண்டத்தான் வேண்டும். ஆனாலும், உபாஸிக்கப்படும் தேவதையும் உபாஸ கனான தானும் வேறில்லை என்று ஆகிற தற்கு ஆரம்ப ஸாதனமாகவே உபாஸிக் கிறோம் என்று புரிந்து கொள்ள வேண்டும். முதலில் வித்யாஸங்கள் பார்க்கத்தான் வேண்டும். லோக வியாபாரம் ஒழுங்காக நடக்க வேண்டுமானால், நமக்குள் காரி யங்களைப் பல தினுசாகப் பிரித்துக் கொண்டு, அந்தந்தக் காரியத்தையும் சுத்த மாகப் பண்ணுவதற்கு என்ன தனிப்பட்ட ஆசார அநுஷ்டானாதிகள் உதவி செய் யுமோ, அப்படிப் பிரித்துதான் அவரவருக் கான தர்மங்களைக் கடைப்பிடிக்க வேண் டும். ஆனாலும் இதுவும், கடைசியில் ஸகல வித்யாஸமும் போய், எல்லாமும் எல்லாரும் "தானே" என்று தெரிந்து கொள்வதற்குத் தான் என்ற அடிப்படை உணர்ச்சி இருக்க வேண்டும். வேத அத்யயனம், வேத கர்மாநுஷ்டானம் எல்லாம், அந்த வேதமே அவசியமில்லாமல் போய் விடுகிற அகண்ட மான மஹா அநுபவத்துக்கு வழிதான் என்று வைத்துக் கொண்டு, அவற்றை அப்பியாஸம் பண்ண வேண்டும். புஷ்பம் இருந்தால்தான் பிறகு பழம் உண்டாகும். புஷ்பம் பார்க்க ரொம்ப அழகாக இருந்தாலும், அது காய்ந்து போய் விழுந்தால்தான் பழம் உண்டாகும். பூவே இல்லாமல் காய்க்க வேண்டும் என்று நினைத்தால் ஆகுமா? இந்த நாளில், வைதிகாநுஷ்டானமே இல்லாமல் வேதாந் தத்துக்குப் போகிறவர்கள் நினைத்தால், அது யதார்த்தத்துக்குச் சரியாக வராது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச் சார்ய சுவாமிகள்.

சில வருடங்கள் முன் நடுத்தர வர்க்கத்தினரைப் பிரதானமாக வைத்து, கல்கியில் சுஜாதா எழுதிய மத்யமர்– தொடர் சிறுகதைகள் அத்தனை சீக்கிரம் மறந்துவிடக் கூடியவை அல்ல... உலகம் தான் எத்தனை வேகமாக மாறிக் கொண்டிருக்கிறது? மாறாத ஒரே விஷயம்– மத்யமர்களும் அவர்களின் பிரச்னைகளும்தான். ஆழ்ந்த நோக்குடன் மீண்டும் சுஜாதா தொடங்கும்

மீண்டும் மத்யமர் கதைகள்

இசை

அமெரிக்க ஐக்கிய நாட்டில் கலிபோர்னியா என்னும் மாநிலத்தில், சாண்டா கிளாரா என்கிற இடத்தில் வசதிகள் நிறைந்த ஓர் அப்பார்ட்மெண்ட் வீட்டில் இருந்த சுமித்ராவுக்கு நவம்பர் மாத இறுதியில் சென்னை மைலாப்பூரிலிருந்து ஒரு கடிதம் வந்து உவகை தந்தது.

– அன்புள்ள திருமதி சுமித்ரா ரஞ்சன். சென்னை ஏசிஎம் (அகாடமி ஆஃப் கர்னாட்டிக் ம்யூசிஷ்யன்ஸ்) சார்பில் *1996* இசை விழாவில் பாட உங்களை அழைப்பதில் பெரு மகிழ்ச்சி கொள்கிறோம். இந்த வாய்ப்பு அரிதானது என்பதைத் தாங்கள் அறிவீர்கள். டிசம்பர் *24*ம் தேதி தங்கள் கச்சேரிக்காக ஒதுக்கப் பட்டிருக்கிறது. மற்ற விவரங்களைக் கடிதம், ஃபாக்ஸ் அல்லது போன் மூலமாக மேற்குறித்த விலாசத்தில் பெறலாம். உங்கள் சம்மதத்தை ஊர்ஜிதப்படுத்தவும். ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். இப்படிக்கு உங்கள் உண்மையுள்ள சாகேதராமன், காரியதரிசி.

கடிதம் கண்டதும் சுமித்ராவுக்குப் படபடப்பாக இருந்தது. ஒரு ஸ்ப்ரைட் எடுத்துக் குடித்து ஆசுவாசப்படுத்திக் கொண்டு சான் ஹோசேயில் லேசர்-டெக் நிறுவனத்தில் கணவனுக்கு போன் செய்தாள். கம்பெனியின் வாய்ஸ் மெய்ல் தான் பதில் சொன்னது. "ஹாய்! நீங்கள் ரஞ்சனின் மேசையை அடைந்திருக்கிறீர்கள். நான் தற்போது சீட்டில் இல்லை. பீப் ஒலி கேட்டவுடன் உங்கள் செய்தியை விட்டு வைக்கவும்" என்று பேசி விட்டு இயந்திரம் பீப்பியது.

"ரஞ்சன் யு ராஸ்கல், நீ சீட்டில் இருப்பது எனக்குத் தெரியும்! கமான் பிக் இட்அப்" என்றாள்.

கொஞ்ச நேரத்தில் ரஞ்சன் போனில் வந்து "ஹூ இஸ் இட்?" என்றான்.

"சுமித்ரா-உன் மனைவி. ஞாபகம் இருக்கிறதா?"

"சுமி, ஆபீசில் தொந்தரவு செய்யும்படியாக என்ன தலை போகிற விஷயம்?"

"ரஞ்சி பாபா க்ரேட் ந்யூஸ்! எனக்கு ஏஸிஎம் லருந்து அழைப்பு வந்திருக்கு! டிசம்பர் 24ம் தேதி கச்சேரி."

"லுக் சுமி, நான் ஒரு மீட்டிங்ல இருக்கேன். கம்பெனில பெரிய காஷ் க்ரஞ்ச். சுருக்கமா சொல்லு. வாட் இஸ் திஸ் ஏஸிஎம்? எனக்குத் தெரிஞ்ச ஒரே ஒரு ஏஸிஎம், அஸோசியேஷன் ஆஃப் கம்ப்யூட்டிங் மெஷினரி."

"ஏஸிஎம் என்கிறது சென்னைலயே மிக பெருமைக்குரிய கர்நாடக சங்கீத நிறுவனம்."

"ஓ வாய்ப்பாட்டு, மௌத் சாங்! சொல்லு."

"உன் பாமர மண்மைக்குப் புரியும் படியா சொன்னா நான் டிசம்பர் 24ம் தேதி மெட்ராஸ்ல இருக்கணும்."

"இருந்துக்க, முதல்ல ஏர்லைன்ஸ்க்கு போன் பண்ணி ரிசர்வேஷன் இருக்கா பாரு."

"இருந்தாகணும்!"

"இல்லைன்னா எப்படிப் போக முடியும்? நடந்தா?"

"நாட் ஃபன்னி. எப்படியோ நான் போயாகணும்."

"சாயங்காலம் பேசலாமே? பப்லுவை இன்னிக்கு ஸ்கூல்லருந்து நீதான் பிக் அப் பண்ணிக்கணும். அவளுக்கு ஸ்விம்மிங் க்ளாஸ்

இருக்கு. முதல்ல டிக்கெட் இருக்கா பாரு."

"உனக்கு சந்தோஷமா இல்லையா."

"சந்தோஷம்! ரொம்ப சந்தோஷம்! ஹா ஹா ஹா."

"குரல்ல தெரியலையே."

"என்ன பண்ணணும்? மேஜைமேல ஏறிக் குதிக்கணுமா? சுமி யு ஆர் வேஸ்டிங் மை டைம். தேர் இஸ் எ கான்ஃபரன்ஸ் கால் வெய்ட்டிங்."

சுமித்ரா போனை வைத்து, ட்ராவல் ஏஜெண்டை ஒத்தினாள்.

"வெரி சாரி மிஸஸ் சுமித்ரா. இந்தியா செல்லும் டெல்ட்டா, யுனைட்டட், ஏர் இண்டியா, லுப்தான்சா எல்லா ஃப்ளைட்டுகளும் புக் ஆகிவிட்டன. ப்ரிட்டிஷ் ஏர்வேசில் வெய்ட் லிஸ்ட் 52 போடவா?"

"எப்படியோ சாப் என்னை இந்தியா அனுப்ப வேண்டியது உன் பொறுப்பு. நான் போய்த்தான் ஆக வேண்டும்."

"கல்யாணமா?"

"இல்லை! என்னை ஒரு மிகப் பெருமை வாய்ந்த சபையில் அழைத்திருக்கிறார்கள். பாடப் போகிறேன்."

"கூல்... என்னால் முடிந்ததைப் பார்க்கிறேன்."

"அப்படிச் சொல்லாதே! என்னை அனுப்பியே ஆக வேண்டும். இல்லையெனில் உன் ஆபீசுக்கு வந்து உட்கார்ந்து ஸ்ட்ரைக் பண்ணுவேன்."

"யு ஆர் வெல்கம்."

ராத்திரி ரஞ்சன் அலுவலகத்திலிருந்து திரும்பி வந்த உடன் சாப்பிட்டுவிட்டு, என்பிசி நியூஸ் பார்த்து விட்டு கம்ப்யூட்டரில் உட்கார்ந்துவிட்டான். காலைக்குள் ஒரு ஸ்ப்ரெட்ஷீட் தயாரித்தே ஆக வேண்டும்.

கண் முன்னால் கடிதத்தைத் திணித்தாள்.

"என்ன விஷயம்? சொல்லு கண்ணு" என்று அவளை வாசனை பார்த்தான்.

"அழைப்பு. ஏசிஎம்லிருந்து... யு நோ? ஏசிஎம்.ங்கறது மெட்ராஸ்லயே- இந்தியாவிலேயே..."

"டிக்கெட் என்ன ஆச்சு?"

"எந்த ஏர்லைனிலும் டிக்கெட் இல்லை. இடம் இல்லை."

"பின் எப்படிப் போவாய்? ப்ராப்ளம் சால்வ்டு."

"நான் போயாகணும்."

"எப்படி?"



"எப்படியோ."

"நானே ஒரு ஏர்லைன் ஆரம்பிச்சாத்தான் உண்டு. அப்படி கிடைச்சாலும் பப்லு? அவளை தனியா விட்டுட்டுப் போவியா?"

"அம்மாவை வரச் சொல்லேன்."

"கனடாவிலிருந்தா? டிக்கெட் நானூறு டாலர் ஆகும்!"

"அவள் சந்தியாவுக்குப் பிரசவம் பார்க்க வந்திருக்கிறாள்."

"அதுக்கு இன்னும் டயம் இருக்கே? ஜனவரிலதானே உங்க தங்கைக்கு ட்யு?"

"இருந்தாலும் சந்தியா தனியா இருக்க பயப்படுவா."

"என்ன பயம். நான் பப்லுவை பெத்துக் கறப்ப யார் வந்தா?"

"பப்லுவைப் பத்தி அப்புறம் கவலைப் படலாம். அது நீ இல்லாமயே பிறந்திருக்கும். தனியா சமாளிக்கும்! எனக்கு காப்பி கூடப் போட்டுக் கொடுக்கும். பாரு, முதல்ல டிக்கெட் கெடைக்கட்டும். சாம் என்ன சொன்னான்?"

"எல்லாம் புக் ஆயிருக்கு... ஆனா கிடைச் சுரும்னான்."

"பின்ன என்னை ஏன் உரசறே. டிக்கெட் கிடைக்கட்டும்; அதுக்கப்புறம் யோசிக்கலாம்."

காலை சாம் போன் பண்ணி, "சுமித்ரா ஒரே ஒரு க்ளப் க்ளாஸ் சீட் இருக்கிறது. டிசம்பர் 21ம் தேதி. உடனே ப்ளாக் செய்து வைத்தால்தான் உண்டு. இல்லை அதுவும் போய்விடும்."

"விலை என்ன ஆகும்?"

"இக்கனாமி கிளாசைப் போல ஒண்ணரை மடங்கு. எதற்கும் ரஞ்சனை ஒரு வார்த்தை கேட்டுவிட்டு புக் பண்ணட்டுமா?"

"இல்லை சாம்! நான் ரஞ்சனிடம் பேசிக் கொள்கிறேன். அதை மடக்கிப் போட்டுவிடு."

"அப்ப க்ரெடிட் கார்டு நம்பர் சொல்லு."

ரஞ்சனுக்கு போன் செய்தபோது, அவன் கொதித்தான். "நோ வே! அம்மாவுக்கு டிக் கெட் ஐநூறு டாலர். உனக்கு ஆயிரத்தைநூறு. இரண்டாயிரம் டாலர். நம்மால்...."

"அம்மா வர வேண்டாம்! பப்லுவை நீயே சமாளிப்பியே."

● மாம்பழத்தை உண்ணும் பொழுது பலாப்பழத்தை நினைத்துக் கொண் டிருப்பவன் இரண்டின் சுவையையும் இழந்து விடுகிறான்.

—குணாபார்த்திபன்

"இருந்தாலும்... இரண்டாயிரம் டாலர்ங் கறது பிக் சம்..."

"கதை!.... ஃப்ளாரிடாவுக்குப் போய் கால்ஃப் ஆட எத்தனை டாலர் ஆச்சு?"

"மைகாட்! ஆறு வருஷத்துக்கு முன்னால் நான் வாழ்வில் செய்த ஒரே ஒரு தண்ட செலவும்மா. அதைச் சொல்லிச் சொல்லிக் காட்டாதே."

"பேட்டண்ட் லெதர்ல பை வாங்கினியே அது எதோட சேர்த்தி?"

"அய்யோம்மா, ஆளைவிடு. இப்ப போயே ஆகணுமா? அடுத்த வருஷம் கொஞ்சம் நிதானமா ப்ளான் பண்ணி ஜூலை மாதமே டிக்கெட் புக் பண்ணிட்டு, ரெண்டு பேரும் போகலாமே?"

"அடுத்த வருஷமும் போகலாம்! இனிமே ஒவ்வொரு வருஷமும் கூப்பிடுவா."

"அப்ப சொல்றதைக்கேளு. இந்த வருஷம் வேண்டாம்! ரொம்ப செலவு."

"அப்ப ஏசிஎம்ல இவங்க அழைப்பு கொடுத்திருக்காங்களே, என்ன சொல்றது?"

"டியர் சார். சாரி, என்னால் இந்த வருஷம் முடியாது. அடுத்த வருஷம் நிச்சயமா வந்து கலந்துக்கறேன்னு எழுதிரு."

"இந்த வருஷம் வரலைன்னா அடுத்த வருஷம் கூப்பிட மாட்டாங்க."

"ஸோ வாட்? ஏசிஎம் இல்லைன்னா பிசிஎம். யாராவது குடுமி இருப்பானே? ஸோ வாட்!"

"ஸோ வாட்! ரெண்டு வார்த்தையில என் வாழ்க்கைல மிகப் பெரிய ஆசையையே நசுக்கறே ரஞ்சன்!"

"சுமி கேளு, என் காரியர் இருக்கற இந்த நிலையில் நம்மால் இதை அஃபோர்ட் பண்ண முடியுமா சுமித்ரா?"

அன்றிரவு வீட்டுக்கு வந்த போது பப்லு "டாட், ஒய் இஸ் ஷி ஸோ க்ராங்க்கி டுடே?" என்று கேட்டாள். அவள் கண்களில் கண்ணீர் தெரிந்தது.

"என்ன செஞ்சா உங்கம்மா?"

பத்மினியிடம் தமிழில்தான் பேசுவான். அவளுக்குத் தமிழ் புரியும். பேச வராது.

"ஷி கேவ்மி எ க்ரம்மி டோஸ்ட் அண் பீனட் பட்டர் ஃபார் ஸப்பர். தட் இஸ் மீன்."

கோபம் அவள் உதடுகளில் துடித்தது.

"சுமித்ரா எம்மேல கோபம்னா ஏன் குழந்தைகிட்ட காட்டறே."

"அவ குழந்தை இல்லை. இப்பவே பாய் ஃப்ரெண்டு தடியன் தடியனா வரான்."

"மம்மி ஸ்டாப் இட்!"

"என்னை அதட்டு. எனக்கு யார் மேலயும் கோபிக்க உரிமை இருக்கா என்ன? உங்க ரெண்டு பேருக்கும் சமைச்சு போடறதுதான்

வாழ்க்கையா?"

"டாட் லெக் ஹர் கோ டாட். ஷி வில் ஸல்க் ஃபர் த்ரீ மன்த்ஸ்."

"எப்படி தூக்கி எறிஞ்சு பேசறா பாரு. இப்படி செல்லம் கொடுத்து வச்சிருக்கே. ஒண்ணுலயும் இண்ட்ரஸ்ட் இல்லை. பரத நாட்டியம், பாட்டு... இருபத்து நாலு மணி நேரமும் பாப் மியூசிக் சானல் தான்!"

"தட்ஸ் நாட் ட்ரூ."

"கமான், ஸ்வீட் ஹார்ட். ஐல் கெட்யு என் ஐஸ்க்ரீம்."

"நீ வரலையா சுமி."

"நான் துணி தோய்க்க வேண்டாமா? அயர்ன் பண்ண வேண்டாமா? எத்தனை.."

"இப்ப என்ன? இண்டியாவுக்குப் போகணும்; அவ்வளவுதானே?

"எல்லாம் அடுத்த வருஷம் போகலாம். ஒண்ணும் அவசரமில்லை. நான் கச்சேரி பண்ணாட்டா என்ன தட்ட கெட்டுப் போறது?"

"தட்ஸ் தி ஸ்பிரிட்" என்று அவளைத் தோளைத் தொட்டு திருப்ப...

"தொடாதிங்கோ" என்று நெருப்பாய்ப் பொறிந்தாள் அவள். கன்னங்களில் நீர் கோடிட்டிருந்தது.

மாலில் ஐஸ்க்ரீம் பார்லரில் ஒரு சாக்லேட் சண்டேயும் தனக்கு ஸ்விட் அண் லோ போட்ட வானில்லாவும் வாங்கிக் கொண்டு வட்ட மேசையில் உட்கார்ந்தார்கள்.

"டாட்! லெட் ஹர் கோ! ஷி ஹஸ் பீன் ப்ராக்டிஸிங் தி ஹோல் இயர்!"

"நீயும் போய்ட்டு வாயேன்."

"மீ? டு இண்டியா? ஆர்யு ஜோக்கிங்? நோ வே!"

"ஹாய் பாப்ஸ்" என்று ஒரு இளைஞன் ஒரு காதில் கடுக்கணும் தொப்பிகிராப்பும் கையில் பச்சை குத்தி, முழங்கால் கிழிந்த பாண்ட்டுமாக அவளருகில் வந்து உட்கார்ந்து, கன்னத்தில் முத்தமிட்டான். "யு ஆர் டேக்கிங் ஐஸ்க்ரீம்?" என்றான் ஆச்சரியத்துடன். ஐஸ்க்ரீம் சாப்பிடுவது, மஹா பாவம் போல.

பத்மினி சங்கடத்துடன் "டாட், திஸ் இஸ் ப்ரையன்; ப்ரையன் திஸ் இஸ் மை டாட்."

"கூல்!"

"இவன் எப்பவுமே முத்தம் கொடுப்பானா கண்ணு? எனக்கு ஏன் கொடுக்கலை?"

"டேக் இட் ஈஸி டாட்."

இரவு மனைவியை எழுப்பி, முத்தமிட்டு சமாதானம் செய்ய முற்பட்டான். முரட்டுத் தனமாகத் தள்ளினாள்.

பக்கவாட்டில் படுத்துக்கொண்டு மௌன மாக அழுதாள். கொஞ்ச நேரம் கழித்து அவன்



''என்ன அந்த் ஆளு வீட்டுக்கு வெளியில நின்னுக்கிட்டு காசு வாங்கிக் கிட்டு எல்லாத்தையும் உள்ளே போக விடறாரு...?''

''மாமியார் மருமகள் சண்டை நடக்குதாம்!''

– பொன். குமார்

பேசினான்:

"ஆல்ரைட் சுமி! நான் உன் கோணத்தி லிருந்து இதை யோசித்துப் பார்க்காத மடையன். உனக்கு இது பெரிய வாய்ப்பு. அவ்வளவு பெரிய சபையில் போய், அவ்வளவு பேர் நம்ம மனுஷா முன்னால பாட வாய்ப்புன்னா அது, அது நனவான கனவுதான். எல்லாருக்கும் வராது! நீ இங்க அமெரிக்கா வந்து என்னை யும் குடும்பத்தையும் பார்த்துண்டு, உன்னுடைய ஆசைகளையெல்லாம் தியாகம் பண்ணிட்டு அல்லது ஒத்திப் போட்டுட்டு பொண்ணை ஸ்கூல்ல கொண்டு விட்டு எனக்கு சமைச்சு போட்டு டிஷ், வாஷிங், லாண்டரின்னு உழல்ற வாழ்க்கையிலருந்து உனக்கு ஒரு தற்காலிக விடுதலை மாதிரி. உனக்கும் ஊருக்குப் போய் உங்க மனுஷாளை நாலு பேரை பார்த்துட்டு நல்ல தமிழ்ல பேசி நிறைய கச்சேரி கேட்டு, ஒரு வருஷத்துக்கு தாங்கும்படியா பாட்டரியை சார்ஜ் பண்ணிண்டு வர சந்தர்ப்பம். இதை நான் புரிஞ்சிக்காம கேவலம் ரெண்டாயிரம் டாலர் பெரிசா போயிட்டுது எனக்கு. உனக்கு கிடைக்கப் போகும் சந்தோஷம் தான் எவ்வளவு பெரிசு!" என்றான். சுமித்ரா மௌனமாகத் திரும்பி அவனை இறுக்க அணைத்துக் கொண்டு "என் நகையை வித்தாவது..."

"போடி பைத்தியம்! உன் நகையை வித்தா உங்கப்பா சுளுக்கு எடுத்துருவார்."

ராத்திரி இரண்டு மணிக்கு ப்ரிட்டிஷ் ஏர்வேஸ் ப்ளேன் சென்னைக்கு வந்தது. நீண்ட வரிசையில் நின்று கஸ்டம்ஸ் இமிக்ரேஷன் எல்லாம் முடிந்து வெளிவர மூன்று மணியாகி விட்டது. அவள் தம்பி ஏர்போர்ட் வந்திருந் தான்.

"ஏசிஎம் ப்ரொக்ராம் ஹிந்துல போட்டிருந்தானே? உன் பேரையே காணமே சுமி?"

திபெத்தியரின் ஒரு வருடத்திய பன்னிரெண்டு மாதங்களின் பெயர்கள் என்ன தெரியுமா? தாவா டாம்பா, தாவா நிப்பா, தாவா ஷும்பா, தாவா சிப்பா, தாவா நாபா, தாவா டுப்பா, தாவா டிங்பா, தாவா கேபா, தாவா கூபா, தாவா சூபா, தாவா சுக்திபா, தாவா சுனிப்பா.

- வயலூர் ஆர். பார்த்திபன்

"லெட்டர் எழுதிருக்கா மூர்த்தி."

"காலைல விசாரிச்சுரலாம். நான் சரியா பார்க்கலை. ஒவ்வொரு சபாவிலயும் நூறு கச்சேரி நடக்கறது இந்த சீஸன்ல. பக்க வாத்தியக்காராளை ஏற்பாடு பண்ணணுமா?"

"ஆமாம் மூர்த்தி."

"அவாளையே கேட்டுப் பார்க்கலாம். நீ மட்டும் தான் வந்தியா? அத்திம்பேர், குழந்தை வரலையா?"

"அவருக்கு ஆபீஸ்ல நெக்குவாங்கறது. புது வேலையா? எம் பொண்ணு இந்தியாவே வரமாட்டா. இங்க வந்த உடனே டயரியா வந்துரும்."

"பத்மினி உசந்துட்டான்னு கேள்விப்பட்டேன்."

"அதான் ப்ராப்ளம்! இப்பவே பதினெட்டு வயசு மாதிரி இருக்கா."

"வயசுக்கு வந்துட்டாளா?"

"அமெரிக்காவில அதெல்லாம் சீக்கிர மாவே ஆய்டும்."

"ஃபுட்ல என்னவோ இருக்கு."

"ஏசிஎம் சான்ஸ்னா பெரிய விஷயம் இல்லையா மூர்த்தி?"

"ஆமாமா" என்றான் மூர்த்தி. "புதுசு புதுசா ரொம்ப பேர் பாடறா. மைலாப்பூர் மாமி எல்லாம் சபாவுக்கு சபா அலையறா. தப்பு தப்பா தாளம் போட்டுண்டு."

ஆழ்வார்பேட்டையில் டிடிகே ரோடிலிருந்து விலகின தெருவில் இருந்தது ஹால். இசைவிழா என்று பெரிசாகத் திரை, காற்றில் ஆடியது. சமீபத்திய மழையால் ரோடு பொளிந்து வைத்திருந்தது. க்ரானைட் வேய்ந்த நவீன கட்டடத்தருகே ஒரு தெருப்பிள்ளை வெளிக்கிருந்து கொண்டிருந்தது. பரீட்சை ரிசல்ட் போலப் பாடும் வித்வான்களின் பட்டியல் எழுதியிருந்தது. காண்டீனில் பலர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

"ருத்ரபட்ணம் பிரதர்ஸ்னு ரொம்ப நன்னா பாடறா" என்று மாமி, மாமியிடம் பேசிக் கொண்டே வெளியே வந்த இருவரிடமும் ஒரே மாதிரி கைப்பை. சாகேதராமன் வருவதற்காக அந்த சிறிய அறையில் ஃபைபர் நாற்காலியில் காத்துக் கொண்டிருந்தார்கள், சுமித்ராவும் அவள் சகோதரனும். மேசை நிறைய காஸட் அடுக்கியிருந்தது.

'எப்படி மிஸ் ஆகும்? சாகேதராமன் வந்ததும் கண்ணாடியணிந்து கொண்டு ஃபைலைப் பார்த்து, "அ! இப்ப புரியறது! உங்ககிட்டருந்து கன்பர்மேஷனே வரலை. அதனால் அந்த ஸ்லாட்ல கிருஷ்ண ப்ரேமிக்கு குடுத்துட்டம். சேஷகோபாலன் சிஷ்யன்."

"என்ன சார், அமெரிக்காவிலிருந்து அடிச்சு புடைச்சுண்டு வந்திருக்கா என் சிஸ்டர்."

"ஏம்மா! ஒரு சின்ன கர்ட்டசிக்காக ஒரு பதில் போடக் கூடாதோ?"

சுமித்ரா, "சார் ஐம் வெரி ஸாரி. நான் டிக்கெட் புக் பண்ற அவசரத்தில கன்பர்மேஷன் லெட்டர் அனுப்ப மறந்துட்டேன்."

"இப்ப வேற அரேஞ்மெண்ட் பண்ணிட்டமே."

"ப்ளீஸ் சார், பத்தாயிரம் மைல் வந்திருக்கேன்."

சுமித்ராவின் கண்களில் நீர் தயாரானது.

"கொஞ்சம் இருங்கோ! ப்ரெசிடெண்ட்டை கேட்டுர்றேன்."

அவர் தடுப்புக்கு அந்தப் பக்கம் போய் போனை எடுத்து தாழ்ந்த குரலில் பேசினது கேட்டது.

"அந்தம்மா அமெரிக்காலருந்து வந்தாச்சு! இப்ப அதே ஸ்லாட் வேணும்னு லொள்ளு பண்றாங்க."

"வாட்ஸ் லொள்ளு?" என்றாள் சுமித்ரா.

"கிருஷ்ணப்ரேமி சுளுக்கு எடுத்துருவார் கான்சல் பண்ணா."

சுமித்ரா அமெரிக்காவிலிருந்து கொண்டு வந்திருந்த டவ் க்ரீம், ஹெட் அண் ஷோல்டர் ஷாம்பு, பர்ஃப்யும் போன்றவற்றை மேசை மேல் எடுத்து வைத்தாள்.

சாகேதராமன் வந்ததும், "காம்ப்ளிமெண்ட்ஸ் ஃப்ரம் அமெரிக்கா" என்றாள்.

"இருக்கட்டும். அதெல்லாம் இண்டியாலயே கிடைக்கறது மிஸஸ் ராகவன்."

"ரஞ்சன்... என்பேர் சுமித்ரா ரஞ்சன்!"

"ஸாரி. ரஞ்சன். நீங்க அனெக்ஸ் பாடறீங்களா?"

"அனெக்ஸ்னா?"

"அதும் பெரிய ஹால்தான்!"

"எப்ப?"

"டயம், டேட் அதேதான். நல்ல ஆடியன்ஸ். கனாய்சியர்ஸ்தான் வருவா. தேர்ந்த ரசிகாள்."

"சரி ஸார்! தாங்ஸ். உங்களுக்கு ரொம்ப

சிரமம் கொடுத்துட்டேன்."

"யு ஆர் வெல்கம். பத்தரைக்கு வந்துருங்கோ. பக்கவாத்தியம் யாராரு?"

"நீங்கதான் ஏற்பாடு பண்ணணும்."

"அது வேறயா. சரி நம்ம வைதேகி, "ரவிஷங்கர் ரெண்டு பேரையும் ஏற்பாடு பண்றேன். ஸார் தம்புரா மீட்டுவாரோல்லியோ? அவங்களுக்கு ஆளுக்கு ஒரு அண்டரட் அண்ட்ரட் கொடுத்துருங்க இஃப்யு டோண்ட் மைண்ட். கடைசி நிமிஷ ஏற்பாடு பாருங்க."

"இல்லை ஸார்! ஐ ரியலி அப்ரிஷியேட் யுர் எஃபர்ட்" என்றாள் சுமி. "நான் கன்பர்ம் பண்ணிருக்கணும்" என்று அவர் கையைக் குலுக்கினாள். அவர் சற்றே ஆச்சரியப்பட்டார்.

"அடுத்த வருஷம் நல்ல ப்ளான் பண்ணி மெய்ன் ஹால்லயே வச்சுக்கலாம்" என்று பரிசுப் பொருள்களை டிராயரில் செலுத்தினார்.

ஜெட் லாக் விளைவால் அகாலமாக கண்ணைச் சுழற்றியது. சிரமப்பட்டு தூக்கத்தை தள்ளிப் போட்டுவிட்டு குருஜியின் காஸட்டுகளை அத்தனையும் போட்டு உடன்பாடினாள். சிட்டை சுவரங்களை மீண்டும் மீண்டும் பழகிக் கொண்டாள். "நன்னாத்தான் பாடறே" என்றான் மூர்த்தி. "அமெரிக்கால போய் எல்லாம் வேஸ்ட்"

என்ன வரிசையில் என்ன என்ன பாடுவது என்று காகிதத்தில் எழுதிக் கொண்டாள். ரஞ்சனுக்கு ஒருமுறை போன் செய்தாள். அங்கே ராத்திரியாக இருக்கும். ரஞ்சன் ஆபீசிலிருந்து வந்திருக்க வேண்டும்.

"அலாவ்" என்று ஆண்குரல் கேட்டது.

"ஐம் சுமித்ரா. ஹூ இஸ்திஸ்?"

"ப்ரையன்."

"ப்ரையன், கால் பப்லு."

"பாப்ஸ் யுர்மாம்!"

"ஹாய் மாம்மி."

"பப்லு அந்த ப்ரையன் அங்க என்ன பண்றான்?"

"டுயின் பாட்டனி ஹோம்ஒர்க் மம்மி."

"அப்பாவைக் கூப்பிடு."

"ஹி இஸ் நாட் ஹோம் யெட்."

"அப்பா இல்லை. நீ அந்தப் பையனோட தனியா இருக்கியா? அப்பாவுக்குத் தெரியுமா?"

"கூல் இட் மாம்! டோண்ட் ஒர்ரி மாம். யுர் கான்ஸர்ட்- ஹௌ டிட் இட் கோ?"

"நாளைக்குத்தான் கான்ஸர்ட். முதல்ல அந்தப் பையனை வீட்டுக்குப் போகச் சொல்லு."

"டோ' ஒர்ரி மாம்!"

"அப்பா வந்த உடனே என்ன டயமா இருந்தாலும் போன் பண்ணச் சொல்லு."

"பை மாம். ஐ லவ் யு! ஸே ஹலோ டு பட்மா பாட்டி."

வியாழக்கிழமை பத்து மணிக்கே போய் விட்டாள். பக்கவாத்தியக்காரர்கள் ஐந்து நிமிஷம் முன்னால்தான் வந்தார்கள். சரியா ஒண்ணரை மணில கச்சேரி முடிச்சுரலாம். இந்த வர்ணத்தில சுர ராகமாலிகா வரும். கொஞ்சம் சிக்கலா இருக்குமே."

"பாடிருவேன்."

ஸ்டேஜுக்கு வந்து உட்கார்ந்து ச்ருதி சேர்த்து, திரை திறக்குமுன் மனசில் வெங்கடாசலபதியை எண்ணிப் பார்க்கும் தியான வேளையில் ஒரு முள் உறுத்தியது. பப்லுவைப் பற்றிக் கவலை. கணவன் ஏன் போன் செய்யவில்லை? திரை திறந்தபோது திடுக்கிட்டாள். ஹாலில் மொத்தம் மூர்த்தியையும் அம்மாவையும் சேர்த்து பதினைந்து பேர் இருந்தார்கள். அதில் ஒருவர் தூங்கிக் கொண்டிருந்தார்.

கச்சேரி முடிந்து வீட்டுக்குப் போகும் போது ஆட்டோ ரிக்ஷாவில் மூணு பேரும் நெருக்கமாக உட்கார்ந்து கொள்ள, மூர்த்தி கேட்டு விட்டான். "கேக்கறேன்னு கோவிச்சுக்காதே சுமி. என்ன சாதிக்கணும்னு இங்க வந்தே? இவ்வளவு பணம் காசு செலவழிச்சு. ஒரு லட்சம் ஆயிருக்குமா? பத்தாயிரம் மைல் கடந்து ஒரு மத்யான வேளையில் பத்து பேருக்கு வகுளாபரணம், தோடின்னு பாடிக் காட்றதில என்ன சாதிக்கறே சுமி? எனக்குத் தெரியலை."

"எனக்கும் தெரியலை மூர்த்தி."

"அடுத்த வருஷம் வருவியா?"

"வருவேன்." என்றாள்.

- காக்கையின் பிடியிலிருந்து
  நழுவிய கோழிக்குஞ்சு
  கிணற்றில்!


- கூடவே வந்தன
  பூக்கள்
  தோட்டக்காரனின் இறுதி ஊர்வலம்!

- மீன்களெல்லாம் சேர்ந்து
  கடித்ததில் மிச்சமோ...
  குளத்தில் பிறைநிலா.

\- ஜெயந்திகுமார்

காலேஜ் ஸ்டார் - புதிய பகுதி

• கல்லூரி முதல்வருடன்



மேனகா காந்தியின் மாணவப் பதிப்பு!

ஜெமினி அருகே எம்.ஓ.பி. மகளிர் வைணவக் கல்லூரி வாசலில் போய் 'வனஜா' என்ற பெயரைச் சொன்னால் வினாடிகளில் அந்தப் பெயர் வேகமாக ஒலிபரப்பாகி நிமிடத்தில் வனஜா வந்து நம் முன் நிற்பார். சக மாணவிகளிடையே வனஜா அவ்வளவு பாப்புலர்.

கல்லூரி மாணவியர் பேரவையின் தலைவியும் கூட.

முதல் வருட மாணவியாகச் சேர்ந்ததிலிருந்தே திறமையுள்ள மாணவிகளை சீனியர்களும், ஆசிரியைகள் குழுவில் சிலரும் தீவிரமாகக் கண்காணிப்பார்கள். பிறகு அந்த மாணவிகளில் சிலரைத் தேர்ந்தெடுத்து அவர்களை மற்ற மாணவிகள் முன்பாக நிறகவைத்து பேசச் சொல்வார்கள். அதில் வடிகட்டி இறுதியில் இரண்டு மூன்று பேரை மீண்டும் பேச வைத்து அவர்களில் யாரை மற்ற மாணவிகள் அங்கீகரிக்கிறார்களோ அவரே கல்லூரிப் பேரவையின் தலைவர். இப்படி ஒரு வித்தியாசமான 'தேர்தல் முறை' எம்.ஓ.பி. கல்லூரியில். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்தான் வனஜா. (எம்.ஓ.பி = எம். ஓ. பார்த்தசாரதி).

பி.எஸ்ஸி. கம்ப்யூட்டர் சயன்ஸ் இறுதியாண்டு படிக்கிறார், வனஜா. ஆர்வம் இல்லாத கலை இல்லை. கபடி தவிர மற்ற அனைத்து விளையாட்டுகளிலும் நாட்டம். பேச்சு, எழுத்து, நாடகம் என்றால் போட்டியாளர்களில் முன் வரிசை. வாங்கித் தந்த கோப்பைகள் கல்லூரிக்குப் பெருமை.

முதல்வர் டாக்டர். ஏ. திருவேங்கடத்தான் மகிழ்ந்து போகிறார். "வனஜா எல்லா பாராட்டுகளுக்கும் மிகவும் தகுதியானவள். வி ஆர் ப்ரவுட் ஆஃப் ஹர்."

செல்லப் பிராணிகள் மேல் கொள்ளை ஆசை. ... இரண்டு நாய்கள், புறாக்களும் வளர்க்கிறார்.

"மிருக வதையை நான் தீவிரமாக எதிர்க்கிறேன். தாங்க முடியாத அளவுகு சுமையை வண்டியில் ஏற்றி நுரைதள்ளும் மாட்டை அடிக்கும் காட்சியை பார்க்கும்போது ரத்தம் கொதிக்கிறது..."

வனஜா இதுபற்றிப் பேசும்போது மேனகா காந்தியின்

வைத்துக் கொண்டிருந்தார் என் தாத்தா. அப்போது அஹோபில மடத்து நாற்பத்து நாலாவது பீடாதிபதியானவர், பூர்வாசிரம வாசியாய் அங்கு இருந்தார்.

அக்கம்பக்கத்து ஊர்களிலிருந்தெல்லாம் வேத வித்துக்கள் வந்திருந்தார்கள். அவர்களுள் ஒருவராக மந்த்ரமே தெரியாத ஒருத்தர்! மற்ற வர்கள் கூட்டமாக வேதம் சொன்னபோது இவர் மட்டும் 'ஜிகுபுகு' 'ஜிகுபுகு' என்று சொல் லிக் கொண்டிருந்தார்!

கடைசியில் 'ஹரி : ஓம்' என்று முடித்த பிறகும் 'ஜிகுபுகு ஜிகுபுகு...' என்று சொல்லிக் கொண்டேயிருந்தார்! சபையிலே உட்கார்ந் திருந்த அத்தனை பேரும் சிரித்து விட்டார்கள்.

பீடாதிபதி சுவாமி மட்டும் சிரிக்கவில்லை. மற்றவர்களைப் பார்த்துச் சொன்னார் : "இதில் சிரிப்பதற்கு ஒன்றுமில்லை! பதினைந்து வருஷம் அத்யயானம் பண்ணியவர்கள் எந்த இடத்தில் என்ன மந்திரம் சொல்வதென்று உணர்ந்து சொல்வதில் ஆச்சரியமில்லை... இப்படி ஜிகுபுகு சொல்வதுதான் கஷ்டம்! ஒரு இடத்திலே உட்கார்ந்து இரண்டு மணி நேரம் சொல்லியிருக்கிறாரே! ஆகையினாலே, மற்ற வர்களுக்கெல்லாம் என்ன சம்பாவனையோ அதைவிட இரண்டு பங்கு இவருக்குக் கொடுக்க வேண்டும்..." என்று இரண்டு மடங் காக சம்பாவனை வாங்கிக் கொடுத்து விட் டார்!


கொடுத்துவிட்டு, அவரைத் தனியே அழைத்துப் போய்ச் சொன்னார் : "இப்படி ஒவ்வொரு இடத்துக்கும் நான் வந்து சம்பா வனை வாங்கித்தர முடியுமா? அதனால் ஜாக் கிரதையாய் இரும். உரிய மந்திரங்களை நெட்ரு பண்ணி வையும்..."

பிற்பாடு, அவர் பீடாதிபதியானபோது, அவரை சேவிக்க இந்த ஜிகுபுகுக்காரர் போயிருந்தார். "உதக சாந்தி வந்து விட்டதோ யில்லையோ! இப்போது நான் சன்னியாஸா சிரமத்திலே இருப்பதனாலே முன் போல் வந்து காப்பாற்ற முடியாதே!" என்று வேடிக்கை யாகச் சொன்னார்!

இதனால் என்ன தெரிகிறது? பல பேர் உரக்கச சொல்லும்போது ஒருத்தர் தனியாகச் சொல்லும் மந்திரம் காதில் விழாது! அத னால்தான் காட்டில் இரு நண்பர்களும் தனித் தனியே மந்திர சக்தியைச் சோதிக்க முடிவு செய்தார்கள்.

முதலில் த்ருமேதர் கைகூப்பி மந்த்ரத்தை ஒதினார். கட்டையிலிருந்து வெறும் புகைதான் வந்தது!

பரிக்ஷேபர் ஓங்கி, கச்சிதமாக மந்த்ரத்தை உச்சாரணம் பண்ணி அக்னியை உண்டு பண்ணிவிட்டார்.



"உன் பையன் படிச்சி முடிச்சிட்டு இப்ப என்ன செய்துகிட்டிருக்கான்?"

"ஒரு ரூபாய் சம்பளத்துல ஏதாவது வேலை கெடைக்குமான்னு தேடிக்கிட் டிருக்கான்."

– பென்னை சி. முருகன்.

'ரிஷி' என்று பரிக்ஷேபரை அப்போது அழைத்தார் த்ருமேதர்! ரிஷி என்கிற வார்த்தையே அப்போதுதான் உண்டானது!

மந்திரத்தை வாயால் சொன்னால் போதாது. அதன் உள்ளீடான தேவதையை மனத்தால் நினைக்க வேண்டும். மந்திரத்தை உபதேசித்த ஆசார்யனை முதலில் ஆராதிக்க வேண்டும் – இவ்வாறு, மந்திரத்தினிடத்திலும் அதை உபதேசித்த ஆசார்யனிடத்திலும், தேவ தையிடத்திலும் சமானமான பக்தி யாருக்கு இருக்கிறதோ... அவருக்குத்தான் மந்திரம் சித் திக்கும். அப்பேர்ப்பட்ட சித்தி பெற்றவர்கள் மந்த்ரம் சொல்லி ஆசீர்வாதம் பண்ணிவிட் டால் அந்த ஆசீர்வாதத்துக்கு மறுப்பு உண்டோ!

இவ்வாறு வேதோச்சாரணம் என்பதி லேயே பெரிய தபஸ் இருக்கிறது! இந்த வேதம் ஓதும் காரியத்தை அத்தனை தர்மம் என்று சொல்வது.

தர்மம் என்றால் என்ன என்று ஒரு கேள்வி ஆரம்பத்தில் வந்தது. இவ்வாறு, ஆற்ற வேண்டிய நியமங்களை, கடமைகளை அர்ப் பணத்துடன் ஆற்றுவது தர்மம் என்பது ஒரு பொருள்.

எல்லாவற்றுக்கும் மேலான தர்மம் என்ன என்று கேட்டால்... பரமாத்மாதான்!

'தர்மத்துக்கே கை, கால் முளைத்து பூமியில் சஞ்சாரம் பண்ணினால், அதுதான் ராமன்' என்று விவரித்தார்கள். அப்படிப்பட்ட சக் வர்த்தி திருமகனுடைய பரிபூரண அனுக் ஹம் எல்லோருக்கும் இருக்க வேண்டும்.

(தொடரு

உள்ளே வரலாமா?

14

"இந்தா, உனக்கு 'மீடா பான்' பிடிக்குமே..." அம்மாவிடம் பொட்டலத்தை நீட்டினான் சேகர்.

"எங்கடா சாப்பிடப் போனீங்க...?"

"சவேரா..."

"அதுக்கா இவ்வளவு நேரம்...?"

வசந்தி உடை மாற்றும் சாக்கில் உள்ளறைக்குள் போய் விட்டாள். "உட்காரு சுகன்யா" சோபா குஷனை சரி செய்து போட்டுவிட்டுத் தொடர்ந்தாள் ராஜேஸ்வரி.

"இங்கயிருக்கற சவேராவுக்குப் போயிட்டு வர மூணு மணி நேரமா... அப்படி என்ன சாப்டீங்க...?"-சாதாரண தொனியுடன்தான் கேள்வி வந்தது.

"அதைக் கூடச் சொல்லியாகணுமா! உங்க கேள்விக்கெல்லாம் அளவே இல்லாம போயிடுச்சு..." வழக்கத்துக்கு மாறாக கோபப்பட்டவனை வியப்புடன் பார்த்தாள் ராஜேஸ்வரி.

சுகன்யா சங்கடத்துடன் எழுந்த கணத்தில் "ஏன்டா கத்தறே?... என்னாயிடுத்து இப்போ...?"

தூங்கிக் கொண்டிருந்த வைத்தியநாதன் எழுந்து வந்துவிட்டார்.

"விடுங்க அவனை-என்னவோ 'மூட்' சரியில்லை..."

"நான் கிளம்பட்டுமா...?" சுகன்யா ஹான்ட் பேகைத் தோளில் மாட்டிக் கொண்டாள்.

"இரும்மா... காப்பி கலந்து தரேன். வெயில் தாழ்ந்ததும் போலாம்... நானே 'டிராப்' பண்ணிடறேன். சேகருக்குத்தான் திரும்பவும் ஆபீஸ் போகணும் - அவசரம்..." வைத்தியநாதன் வற்புறுத்திய போது போன் அடித்தது.

சோபா மேல் கிடந்த கார்ட்லெஸ்ஸை ராஜேஸ்வரி எடுக்க, அவர் கை வைர மோதிரம் பளீரென்று மின் வெட்டியது.

"ஹலோ..."

எதிர்முனைக் குரலின் கோபம் தெளிவாகவே கேட்டது.

"இல்ல ஆனந்த்... இரு. இங்க இருக்கான் சேகர்... அவங்கிட்டப் பேசு..." சமாதானப்படுத்த முயன்று தோற்றுக் கொண்டிருந்த ராஜேஸ்வரியின் முக பாவனைகள் மாறுவதைக் கூர்ந்து கவனித்தாள் சுகன்யா.

எதிர்முனை ஆனந்த், டாக்டர் மகேஷ் வீட்டை விட்டுப் புறப்படும் போது முட்டிக் கொண்ட இளைஞன் என்பதை யூகிப்பது கஷ்டமாக இருக்கவில்லை.

இறுதியான கூச்சலுடன் 'லைன்' துண்டிக்கப்பட்டது.

"உண்மையைச் சொல்லுடா சேகர்... எங்க போயிருந்தே...? என்ன ஆச்சு...?"

வீட்டு உடைக்கு மாறியிருந்த வசந்தி பயத்தில் கண்கலங்கி நின்றாள்.

"ஒண்ணுமில்லைம்மா விடேன்..." பார்வையால் மனைவியைச் சமாதானப்படுத்த முயன்றான் சேகர்.

"ஒண்ணுமில்லாத்துக்கு ஏன்டா சோளிங்கநல்லூர் வரைக்கும் போணும்....? எதுக்காக டாக்டர் மகேஷ்?"

"என்னாச்சு ராஜி...?" வைத்தியநாதன் தம் பங்குக்குக் கேள்விச் சுமையேற்றி அந்த அறையின் அழுத்தம் கூட்டினார்.

"எல்லாருமா சேர்ந்து



?

கி. கஸ்தூரிரங்கன்

ஸைகியாட்ரிஸ்ட் டாக்டர் மகேஷைப் பார்க்கப் போயிருக்காங்க... சவேராவுல சாப்பிடப் போறேன்னு சொல்லிட்டு..."

"ஏண்டா சேகர்...?"

"அவர் வீட்டுத் தோட்டம் அழகாயிருக்கும். பார்க்கணும்னு சுகன்யா ஆசைப்பட்டாங்க... அதான் சாப்பிடப் போறதுக்கு முன்னாடி பார்க்கலாம்னு போனோம்..."

தனது பொய் தாமதமாய்ச் சொல்லப்பட்டதால், பலமிழந்து சோகையாய் ஒலிப்பதை தானே உணர்ந்தான்.

"சொல்லு... வசந்திக்கு என்ன பிரச்னை...?"

"அது எங்களுக்குள்ள இருக்கட்டும். விட்டுடு..."

"அதெப்படி...?"

"எங்களுக்கும் உரிமை இருக்கு தெரிஞ்சுக்க..."

"ஏதாவது பிராப்ளம்னா கல்யாணத்துக்கு முந்தியே சொல்லியிருக்கலாமே...?"

"மூத்த பையன் தன் இஷ்டத்துக்குக் கல்யாணம் பண்ணிண்டான்றதை மட்டும் ரொம்ப யோக்கியமாய் சொன்னாரே...?"

- கணவனும் மனைவியும் மாறி மாறி குற்றச்சாட்டுகளில் சுருதி உயர்த்த, சுகன்யாவுக்குள் கவலையுடன் பயமும் திரண்டது.

வெண்ணெய் திரளும் நேரத்தில் தாழி உடையும் கதையாக வசந்தியை ஒருவாறு தெளிவித்து வழிக்குக் கொண்டு வரும் சமயத்தில் இப்படியொரு சிக்கல். இந்தத் தாக்குதலில் அவள் மீண்டும் சுருண்டு வாடி விடுவாள். அந்த வாட்டத்தைப் போக்கி, திரும்பவும் தன்னம்பிக்கை தந்து தயார்ப்படுத்தி... முடியுமா...?

"கல்யாணத்தன்னிக்கு ராத்திரியே ஏதோ கசமுசான்னு ரகளை... அப்பவே நான் சரியாத்தான் சந்தேகப்பட்டுக் கேட்டேன்..."

வசந்தி விசித்து விசித்து அழ ஆரம்பித்திருந்தாள். அவள் முகத்தில் தெரிந்த மெய்யான வேதனையும் பயமும் குற்ற உணர்வும் சுகன்யாவின் பலத்தை விசிறி விட்டுப் புதிய வேகம் தந்தன.



சோபாவை விட்டு எழுந்து கைகட்டி நின்ற சேகரிடம் போனாள்.

"சேகர்! வித் யுவர் பர்மிஷன்... ஐ வில் ஹான்டில் திஸ்..."

அவன் பதிலுக்குக் காத்திராமல் "வசந்தி இங்கே வா..." உறுதியாக அவளைப் பற்றியிழுத்து இருவரையும் பெட்ரூமுக்குள் அனுப்பி கதவைச் சாத்தி வெளிப் பக்கம் தாழிட்டாள்.

"என்னம்மா! பொண்ணு மாப்பிள்ளையைப் பூட்டி வைச்சுட்டா பிரச்னையெல்லாம் தீர்ந்து போயிடுமா...?"

"ஷு! அனாகரிகமா பேசாதீங்க..."

"வார்த்தைய அளந்து பேசுமா...நீங்க செஞ்சது தான் அனாகரிகம். மனநிலை சரியில்லாத பொண்ணை..."

"ஐயோ! அவசரப்ப... நீங்களே. வசந்திக்கு ஒ... ணும் இல்ல... ஒண்ணுமே இல்ல..."

"ஒண்ணுமில்லைன்..."

எதுக்கு சைக்யாட்ரிஸ்ட்...?"

"அது... அவளுக்கு ரொம்ப பயந்த சுபாவம். கோழிக்குஞ்சு மாதிரி பொத்திப் பொத்தி வளர்த்துட்டாங்க... உலகம் தெரியலை. இயற்கை புரியலை... தாம்பத்யத்தை அருவருப்பில்லாம ஏத்துக்கற மனசு இல்லை... அதைச் சரி பண்ணத்தான் டாக்டர் உதவி தேவைப்பட்டது. அதுக்குத்தான் டாக்டர் மகேஷ்கிட்டே போனோம்... வெறும் கவுன்சலிங்தான்..."

அவநம்பிக்கையுடன் பார்த்த தம்பதியை நோக்கிக் கை குவித்தாள் சுகன்யா.

"ப்ளீஸ்... இந்த விஷயத்தைப் பெரிசு பண்ணாதீங்க... பிரச்னை ரொம்ப சிக்கலாப் போயிடும். எதுவுமே நடக்காதது போல பேசாம விட்டுட்டா தானா சரியாயிடும்..."

"ஆஹா! எவ்வளவு சுலபமா சொல்லிட்டே... இருந்திருந்து பையனுக்குக் கல்யாணம் பண்ணியிருக்கோம். அவன் சந்தோஷம் எங்களுக்கு முக்கியமில்லையா... எங்களுக்கும் பேரன் பேத்தி எடுத்துக் கொஞ்சணும்னு ஆசையிருக்காதா...'' ராஜேஸ்வரி அழுது விடுவார் போலிருந்தது.

"எல்லாம் நடக்கும் மாமி! கொஞ்சம் பொறுமையா இருங்க... நீங்க நினைக்கிற மாதிரி இது தீர்க்க முடியாத சிக்கல் இல்லே... டாக்டரே என்னைக் கூப்பிட்டுச் சொன்னார்."

"அதெப்படி, எங்களுக்குத் தெரியாம நீ அவங்களை ட்ரீட்மெண்டுக்கு அழைச்சுட்டுப் போகலாம்...? என் பையனுக்கு எந்தப் பிரச்னையுமில்லே... அவனை வேற கட்டியிழுத்திருக்கே."

"அம்மா... உங்களுக்குக் கல்யாணமாகி முப்பது வருஷமாவது இருக்கும்னு நினைக்கறேன்... ஆனாலும் சில விஷயங்கள்ல நீங்க ரொம்ப பின் தங்கியே இருக்கீங்க... புருஷனோட உதவி இல்லாம இந்த மாதிரி ஒரு சிடுக்கை விடுவிக்க முடியுமா...?"

பொறுமையிழந்த சுகன்யாவின் குரலில் நியாயமுணர்த்தும் உத்வேகத்துடன் நக்கலும் சேர்ந்து கொண்டது.

முகம் சிவந்து உதடு துடிக்க குரல் உயர்த்தினார், ராஜேஸ்வரி... "போதும்மா உங்கிட்டே பாடம் கேட்டது. நான் நேரடியா டாக்டர்கிட்டே பேசிக்கறேன்... நம்பர் கொடு..."

"தரேன்... கொஞ்சம் அமைதிப்படுத்திக்குங்க..."

"அவ குடுக்காட்டா போறா! நீங்க யெல்லோ பேஜஸ்ல நம்பர் பாருங்கோ... டாக்டர் மகேஷ் - சோளிங்கநல்லூர்..." டைரக்டரியைக் கணவனிடம் நீட்ட, அவர் பக்கங்களைப் புரட்டியபடியே சொன்னார். முதல்ல சம்பந்திக்கு போன் போட்டு அவரை வரச் சொல்லலாமே..."

பாய்ந்து எழுந்து டெலிபோன் ரிசீவரை எடுத்து எண்களை அழுத்திக் கொண்டிருந்தாள் சுகன்யா.

பெங்களூர் எஸ்.டி.டி. இணைப்பு அதிர்ஷ்டவசமாக உடனே கிடைத்தது.

"ஹலோ! மே ஐ ஸ்பீக் டு கிரிஷ்... கிரிஷ் சக்ரவர்த்தி... யெஸ்."

சென்னையிலிருந்து எஸ்.டி.டி. அவசரம் என உணர்த்தியதும் கிரிஷிடம் தொடர்பு கொடுத்தார்கள்.

"கிரிஷ்! நான் சுகன்யா... நல்லாயிருக்கேன்... அவசரமா ஒரு உதவி. இன்னிக்கு ஈவினிங் ஃபிளைட்ல மிஸ்டர் அண்ட் மிஸஸ் சந்திரசேகர் வர்றாங்க... ஹனிமூன் தம்பதி. மனுஷ வாசனையே இல்லாத இடமா பார்த்து அவங்களுக்கு ஏற்பாடு பண்ணணும்... ஐயோ! எம்.ஜி.ரோடெல்லாம் வேண்டாம்..."

"........."

- கிரிஷ் ஒரு புறநகர் ரிசார்ட்டின் பெயரைச் சொல்ல "வெரிகுட்.... பார்த்துக்கோ... அதுக்காகப் போய் போய் நின்னு தொந்தரவு பண்ணாதே... ஏர்போர்ட்டுக்கு நீயே போறியா...? 'ஃபார் சேகர்'னு நினைவா கார்டு எடுத்துட்டுப் போ..."

டாக்டர் மகேஷிடம் பேசத்தான் சுகன்யா முற்படுகிறாள் என சில கணங்கள் ஏமாந்த வைத்தியநாதன் அதிர்ந்தார்.

"என்ன நினைச்சுக்கிட்டிருக்கே நீ... இந்த நிலைமைல அவங்களை எப்படித் தனியா அனுப்பறது...?"

"உன் இஷ்டத்துக்கு என்னென்னவோ செய்யறியே, அவங்களைக் கேக்க வேண்டாமா? அந்தப் பெண்ணோட அப்பா அம்மா

தங்க நகை பரிசு!

இந்த இருபத்தாறு வாரத் தொடர், ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு கதாசிரியர் பெயரில் வெளியாகி வருகிறது. ஆனால் அவர்களுள் ஒரே ஒரு நபர்தான் இதை எழுதி வருகிறார். தொடரை எழுதியவர் யார் என்பதைக் கண்டுபிடிப்பது உங்கள் சாமர்த்தியம். கடைசி வாரம் வரை காத்திருந்து, அந்த இதழில் வெளியாகும் கூப்பனில் விடை எழுதி அனுப்புங்கள். சரியான விடைக்கு, தங்க நகை பரிசு! பலர் சரியாக எழுதினால் குலுக்கலில் ஒருவரே பரிசு பெறுவார். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

வுக்குச் சொல்லியாகணும்...''

சுகன்யா தனது போன் புக்கைப் பார்த்து மீண்டும் டயல் செய்து கொண்டிருந்தாள்.

''அம்மு...! நான் சுகி பேசறேன்... எனக்கு ஒரு உதவி... எப்படியாவது இன்னிக்கு பெங்களூர் ஃப்ளைட்ல இரண்டு பாசஞ்சர்ஸ்- மிஸ்டர் அண்ட் மிஸஸ் சந்திரசேகர் - அனுப்பியா கணும்...''

''...''

''அந்த ஃபிளைட் நாலரை மணிக்கு இல்லே...? இப்பவே மூணேமுக்கால் ஆயிடுத்து... அவங்க நாலேகாலுக்குத்தான் செக்இன் பண்ணுவாங்க. கவுன்டர்ல சொல்லிடறயா... ப்ளீஸ்... அப்புறம் பில்லை எனக்கு அனுப்பிடு...''

அத்தனை அமர்க்களத்திலும் ராஜேஸ்வரி, வைத்தியநாதனுக்கு ஆச்சர்யம் உண்டானது. தங்கள் கேள்விகள் மட்டும் பதிலின்றி அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்க... எந்தக் கேள்வியும் கேட்காமல் பளிச் பளிச்சென்று இந்தப் பெண்ணுக்கு உதவ ஒரு தனியுலகம் காத்திருக்கிறது...

சுகன்யா, சேகருடைய அறைக் கதவைத் திறந்து ''கிளம்புங்க...'' என்றாள்.

''எங்க...?''

''சேகர்! ப்ளீஸ் கேள்வி எதுவும் கேட்காதே. உடனே ஆட்டோ பிடிச்சு ஏர்போர்ட் போ. ஸ்வான் ஏர்வேஸ் கவுண்டர்ல உங்க இரண்டு பேருக்கும் டிக்கெட் காத்திருக்கும். நாலரை மணிக்கு ஃப்ளைட். நீங்க நாலேகாலுக்கு செக் இன் பண்ணுவீங்கன்னு சொல்லியிருக்கேன். பெங்களூர் ஏர்போர்ட்ல கிரீஷ் சக்ரவர்த்தி - தாடிக்காரன் உனக்காகக் காத்திருப்பான். அவனோட போ. இரண்டு வாரத்துக்குத் திரும்பி வராதே.''

''சுகன்யா, என்ன இது? ஆபீஸுக்கு நான் தகவல் சொல்லணும். அப்பாயின்ட்மென்ஸெல்லாம் கான்ஸல் பண்ணணும்.''

''எல்லாத்தையும் நான் பார்த்துக்கறேன். தயவு செஞ்சு கிளம்பு.''

''மன்னி, துணி எதுவும் எடுத்துக்க வேண்டாமா?''

டிரெஸ்ஸிங் டேபிள் மேலிருந்த சேகரின் பர்ஸை எடுத்து அவன் கையில் கொடுத்து, தரதரவென்னு வாசலுக்குத் தள்ளினாள்.

''பர்ஸுல கிரெடிட் கார்டு இருக்கில்லே... எதுனாலும் அங்க போய் வாங்கிக்கங்க.''

''ஹலோ! சம்பந்தியா? நீங்க இங்க உடனே வந்தா தேவலையே? கொஞ்சம் பிரச்னை. உங்க மாட்டுப் பொண்ணு...''

வைத்தியநாதன் போனில் இரைந்து கொண்டிருந்தார்.

''போகாதேடா! சேகர், சொன்னா கேளு. இந்தப் பொண்ணு ஏதோ அதிகப் பிரசங்கித்தனமா காரியம் பண்றதுன்னா, உனக்கு மூளை வேணாம்?''

> பெருமைக்காரன் கடவுளை இழக்கிறான்.
> பொறாமைக்காரன் நண்பனை இழக்கிறான்.
> கோபக்காரனோ தன்னையே இழக்கிறான்.
> — மாக்த்ஸஸோ
>
> தகவல் : குணா பார்த்திபன்

ராஜேஸ்வரியின் இடிக்குரல் அக்கம் பக்கத்து வீடுகளிலிருந்து தலைகளை எட்டிப் பார்க்கச் செய்தது.

''சத்தாதேம்மா. எல்லாரும் வேடிக்கை பார்க்கறாங்க.''

''ஐயோ! இப்படி நாலு பேர் பார்த்துச் சிரிக்கறாமாதிரி ஆயிடுத்தேடா...''

''சேகர், இனியும் இங்கே இருந்திங்கன்னா பெரிய ரகளை ஆயிடும்...'' கெஞ்சிய சுகன்யாவைக் குழப்பத்துடன் பார்த்தான்.

''என்கிட்டே நம்பிக்கை இருக்கா இல்லையா...?''

வசந்தியையும் சேகரையும் ஒருசேர நோக்கி வீசப்பட்ட கேள்வியின் தொனியும் உடன் செலுத்திய பார்வையின் தீவிரமும் சாவி கொடுத்ததுபோல் அவர்களை இயக்கின. யதேச்சையாய் விரைந்த காலி ஆட்டோவை நிறுத்தி, இருவரையும் உள்ளே தள்ளி, ''சீக்கிரம்... ஏர்போர்ட் போங்க. டொமஸ்டிக் டெர்மினல்,'' என்று உத்தரவிட்டு, கையசைத்து விடை கொடுத்தாள் சுகன்யா. வசந்தியின் கண்களில் நன்றியைப் பார்க்க முடிந்தது. தனக்காக ஒரு முடிவெடுக்கப்பட்டு விட்ட நிம்மதியில் சேகர்கூட முழுமையாய் புன்னகை செய்தான்,

போனை வைத்துவிட்டு வாசலுக்கு வந்திருந்த வைத்தியநாதன், ஆங்கிலத்தில் திட்டிக் கொண்டிருந்தார்.

''ஏய் வசந்தி! உங்கப்பா வரார். இறங்கு...''

குழப்பத்துடன் பார்த்த ஆட்டோ டிரைவரை முதுகில் அடித்து, ''கிளம்புங்க'' என்று சுகன்யா கத்தியபோது பக்கத்து, எதிர் வீட்டுக்காரர்கள் தெருவுக்கு வந்திருந்தார்கள்.

''You are the most impertinent upstart I have seen! '' இடுப்பில் இரு கைகள் இறுத்தி நாடகப் பாணியில் கத்தினார் வைத்தியநாதன்.

''தேங்க் யூ!''

ஹேண்ட்பேகைக்கூட எடுத்துக் கொள்ள மறந்து, அப்படியே தெருவில் நடந்தாள் சுகன்யா.

(தொடரும்)



'டெர்ரிகல்' என்றாள் அவர் மகள். அந்தக் கடற்கரையின் பெயர். சிட்னியில்.

'இயற்கை அளிக்கும் செல்வத்தை நாச மாக்கவும் முடியும், நாம் சென்னையில் 'மெரினா'வைச் செய்திருப்பது போல்' என்று அவர் தமக்குள் சொல்லிக் கொண்டார்.

இங்கு அழகுக்கு அழகு சேர்த்திருந் தார்கள் வெள்ளைக்காரர்கள். ஒவ்வொரு கணத்தையும் வாழத் துடிக்கும் ஆர்வத்தில், இயற்கையைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். மனிதனின் கைவண்ணத்தில் – இயற்கையின் இயல்பான சீற்றம் தணிந்து, மனத்துக்கு இதம் தருகிறது.

அவர் சுற்றுமுற்றும் பார்த்தார்.

நேற்று சூரியனுக்கு ஓய்வு. சாம்பல் பூசிய நாளாய் இருந்தது. இன்று, நேற்று பெற்ற ஓய்வில் களைப்பு நீங்கி புதுப்பொலிவுடன் வானத்தில் பவனி வந்தான் சூரியன். அவனை வாரி உடம்பில் பூசிக் கொள்ள மணலில் மல்லாந்து கிடந்தன பல வெள்ளை உடல்கள். இளைஞர்கள், வயதானவர்கள், பால் வேறுபாடின்றி, கண்களில் மட்டும் கறுப்புக் கண்ணாடி திரையிட்டு உடம்பின் மற்றைய பகுதிகளை சூரியனின் அரவணைப்புக்குச் சமர்ப்பித்திருந்தனர்.

அவரால் இப்படிப் படுத்துக் கொள்ள முடியுமா? 'நமக்குத்தான் எத்தனை மனத் தடைகள்?' என்று நினைத்தார் அவர். இந்த 'மனத்தடைகளு'க்குத்தாம் கலாசாரம் என்ற

இந்திரா பார்த்தசாரதி

பெயரா?

'இவர்களுக்கு மறுபிறவியில் நம்பிக்கை யில்லை; ஒரே பிறவி, அநுபவிக்க வேண்டு மென்ற அவசரம். நமக்கு ஒரு பிறவிதான் என்ற 'ஃபீலிங்' இல்லை... இப்பிறவியில் நம்மை வருத்திக் கொண்டால், அடுத்த பிறவி சொர்க் கம் என்ற நம்பிக்கை... விரும்பியதைச் செய்யக் கூடாது என்று உணர்ச்சிகளுக்குத் தடையிட் டால் அது 'வருத்துவதை'த் தவிர வேறென்ன? அடுத்த பிறவியிலும் இதைத்தான் செய்வோம். சொர்க்கம் என்பது தொடுவானம்... அல்லது தொட முடியாத வானம்...

அப்பொழுது அந்தக் குன்று அவர் கண் களில் பட்டது. அதன் மீது ஏறி, பலர் கடற் காட்சிகளை ரசித்துக் கொண்டிருந்தனர்.

அவருக்கும் அங்கு போக வேண்டும் போலிருந்தது. அவர், தம் மகளும் மருமகனும் எங்கிருக்கிறார்கள் என்றறிய திரும்பிப் பார்த் தார்.

கடல் பறவைகளுடன் கொஞ்சிக் கொண் டிருந்தனர். அவர் தம் மகளைச் சற்று உரத்த குரலில் கூப்பிட்டார். திரும்பிப் பார்த்த அவள் முகத்தில் சிறிது எதிர்ப்பு தெரிந்தது. உரக்கக் கூப்பிட்டிருக்கக்கூடாது. மல்லாந்து கிடந் தவர்களின் நிச்சலனமான அமைதி நீரோட் டத்தில் கல்லெறிவது போல்.

பக்கத்திலிருந்த ஒரு வயோதிகத் தம்பதிகள், கண்ணாடியை விலக்கி அவரைப்

குன்று

பார்த்ததினின்றும், இது அவருக்குத் தெரிந்தது.

"ஐ ஆம் ஸாரி" என்றார் அவர், அவர் களிடம். கண்ணாடி யதாஸ்தானத்துக்குச் சென் றது.

அவர் தம் கைக் குறிப்பு மூலம் குன்றின் மீது ஏறப் போவதாக மகளுக்குத் தெரிவித்தார். குன்றையும், அவரையும் மாறி மாறிப் பார்த்த அவள் தோள்களைக் குலுக்கிக் கொண்டாள். அவரால் ஏற முடியுமா என்ற அவநம்பிக்கை அவளுக்கிருக்கலாமென்று அவருக்குத் தோன்றிற்று. இந்தச் சவாலை ஏற்க வேண்டு மென்ற உந்துதல் அவருக்கேற்பட்டது.

அவர் வாழ்க்கையில் எதையும் சவாலாக ஏற்று, செய்து முடித்த கதாநாயகரல்லர். சாலை விதிகளை என்றும் மீறாத, நேர்வழிக் குடிமகன், ஆசாரநெறிகள் தவறாத அப்பாவும், அப்பா வால் தவறு செய்ய முடியாது என்று தீவிரமாக நம்பிய அம்மாவும் அவரை வளர்த்த விதத்தில், அவருடைய 'அடி'மனம் இறுகப் பூட்டப்பட் டிருந்தது.

அடிமனம் என்று ஒன்றிருக்கிறதென்று, அவருக்கு சம்பத்தோடு பழகிய போதுதான் தெரிந்தது. சம்பத், கும்பகோணத்தில், அவரு டைய நெருங்கிய பள்ளி, கல்லூரி நண்பன். குணத்தில் இவருக்கு நேர்மாறானவன். இருவரும் எப்படி நெருங்கிய நண்பர்களாக இருக்க முடிந்தது என்பது, பலருக்கு மட்டு மின்றி, அவர்களுக்கே பல சமயங்களில் ஆச்சர் யமாகவிருந்தது.

சம்பத் நல்ல வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவன். அவன் தாத்தா ஆதீனங்கள், மடங் கள்; ஜமீன்கள் போன்ற பெரிய பெரிய இடங் களுக்கு ஆஸ்தான வக்கீல். கொள்ளை வரு மானம். அந்தக் காலத்தில், தஞ்சாவூர் ஜில் லாவில் முதன் முதல் 'பான்டியாக்' கார் வாங்கி யது அவன் தாத்தாதான் என்று சொல்வார்கள்.

சம்பத்தின் அப்பாவும் வக்கீல். தாத்தாவின் ஒரே வாரிசு. கட்சிக்காரர்களும், அவன் தாத்தா தொழிலிலிருந்து ஓய்வு அடைந்ததும், கட்சி மாறவில்லை. பரம்பரை வருமானத்துக்குப் பழுது இல்லாமலிருந்தது.

சம்பத்தின் தாத்தா கும்பகோணம் 'எக்ஸ் டென்ஷனில்' ஒரு பெரிய பங்களாவில் தனியாக இருந்தார். சம்பத் மேட் டுத் தெருவில் ஒரு பெரிய வீட்டில் அப்பா, அம் மாவுடன் இருந்தான். பூமா என்ற ஒரு தங்கை. சின்னக் குடும்பம். வீட் டில் வேலைக்காரர்கள் தாம் அதிகமிருந்தனர்.

சம்பத்தின் தாத்தா 'தனியாக' இருந்தார் என்றால், சம்பத்தின் பாட்டி உயிருடன் இல்லை என்றுதான் அர்த்தம். அவன் தாத்தாவை 'எல்லாவிதங்களிலும்' கவனித்துக் கொள்ள ஓர் அழகான துணை இருந்தது. சேர நன்னாட்டு இளம்மங்கை. முப்பது வயதிருக் கும். சம்பத் தாத்தாவின் வயது எழுபத் தைந்து.

பார்த்தால் நிச்சயமாய் அந்த வயது தெரி யாது. நெடிய கம்பீரமான தோற்றம். செக்கச் செவேலென்று பழம் போலிருப்பார்.

ஒருசமயம் சம்பத்துடன், அவன் தாத் தாவின் பங்களாவுக்குப் போனது அவர் நினைவுக்கு வந்தது.

பெரிய தோட்டம். 'தோப்பும் துரவும் தொங்கலிட்ட மாம்பழமும்' என்பார்களே அந்த மாதிரி. விஸ்தாரமான பங்களா வாசலில் ஒரு பெரிய ஊஞ்சல்.

அவரும் சம்பத்தும் போனபோது, அந்தப் பெண் ஊஞ்சலாடிக் கொண்டிருந்தாள்.

சம்பத்தைக் கண்டதும் முகம் மலர்ந்து, 'வாடா என் கண்ணா' என்று கூறிக் கொண்டே அவனை இறுகக் கட்டி முத்தம் கொடுத்தாள்.

அவருக்கு ஆச்சர்யமாக இருந்தது. சம்பத்துக்கு அப்பொழுது பதினெட்டு வயதிருக்கும். நல்ல வாட்டசாட்டமான உடல். சம்பத்தும் 'பாட்டி' என்று சொல்லிக் கொண்டே அவளுக்கு முத்தம் கொடுத்தான்.

'பாட்டியா?' என்று அவர் சற்றுத் திடுக்கிட்டார்.

இளமையின் தலைவாசலில் நிற்கும் அவள்.

'பாட்டியா?' பிறகுதான் அவருக்குத் தெரிந்தது.

அவளை அவன் அப்படித்தான் கூப்பிட வேண்டுமென்று அவள் கட்டளை.

அப்பொழுதுதான் அவனுக்கு அடிமனம் இருப்பது அவருக்குத் தெரிந்தது. அடி மனம் கேட்டது: 'இது சரியா?'

இதற்குப் பிறகு இந்த, 'சரி, தப்பு'ப் பற்றிய விவாதங்கள் அவர்களுக்கிடையே அடிக்கடி ஏற்படும். சம்பத்தின் கருத்துப்படி குற்ற உணர்வு இல்லாமல் செய்யும் காரியம் எதுவுமே சரிதான். அப்பொழுதெல்லாம், இவனுடன் நட்பை முறித்துக் கொள்வதே தமக்குச் சரி என்று அவருக்குத் தோன்றும். இரண்டு மூன்று நாட்கள் அவனுடன் பேச மாட்டார். அவன் அவரைத் தேடிக் கொண்டு அவர் வீட்டுக்கு வந்து விடுவான். அவனை அவரால் ஒதுக்கி விட முடியவில்லை.

"எக்ஸ்கியூஸ் மீ..."

தம் சிந்தனையில், படகு ஒன்றை எடுத்துச் சென்ற ஓர் இளம் தம்பதியின் வழிக்குத் தடையாக நின்று கொண்டிருப்பதை அவர் உணர்ந்தார்.

"ஐ ஆம் ஸாரி..." என்று கூறிக்கொண்டே அவர் ஒதுங்கினார். அவர் 'வருத்தத்தை' அவர்கள் புன்னகையுடன் ஏற்றுக் கொண்டனர்.

நடந்து கொண்டிருந்தவர் எதற்காக நின்றார்? அவருக்கே தெரியாது. களைப்போ? இருக்கலாம். தன்னிச்சையாக நின்றிருக்க வேண்டும்.

அவர் குன்றை நோக்கி மீண்டும் நடக்கத் தொடங்கினார்.

சம்பத், கல்லூரிப் படிப்பு முடித்த, இரண்டு, மூன்று வருஷங்களுக்குப் பிறகு, அவர் வாழ்க்கையிலிருந்து திடீரென்று மறைந்து போனான். எங்கே போனான் என்று யாருக்கும் தெரியாது. அவன் தாத்தா அவன் கல்லூரியில் படிக்கும்போதே போய் விட்டார். கல்லூரிப் படிப்பு முடித்த அடுத்த வருஷம் அவனுக்கு ஒரு பெரிய அதிர்ச்சி. அம்மா 'கான்சரி'ல் போனாள். அவனுக்கு அம்மாவின் மீது அசாத்திய பிரியம்.

சம்பத், அவர் வாழ்க்கையினின்றும் மறைந்து போனான் என்று சொல்வது சரியா? அவருக்குள் எப்பொழுதும் அவன் ஒளிந்து கொண்டிருந்தான் என்றே அவருக்குத் தோன்றிற்று. சரி, தப்பு பிரச்னை வரும்போதெல்லாம், அவருக்கு சம்பத் குரல் கேட்கும்.

அவன் எங்கே போயிருப்பான்? வெளிநாடு போய் விட்டதாகச் சொன்னார்களே தவிர, அவனைப் பற்றிய சரியான தகவல் எதுவும் அவருக்குக் கிடைக்கவில்லை.

அவனுடைய அப்பா, அவன் அம்மா போன பிறகு 'அவளை'த் தம் வீட்டிலேயே கூட்டி வைத்துக் கொண்டார்.

யார் 'அவள்'?... அதுவும் அவருக்கேற்பட்ட சுவாரஸ்யமான அனுபவம்.

அவர் சம்பத் வீட்டில் பாதி சமயங்களில் இரவு உறங்கி விடுவதுண்டு. சம்பத் அம்மாவுக்கு அவரை மிகவும் பிடிக்கும்.

ஒரு சமயம், நள்ளிரவில், சம்பத்தின் அம்மா அவனை எழுப்பினாள். அவரும் எழுந்து விட்டார்.

'அப்பா அந்தாத்திலேருக்கார்... பூமாவுக்கு 10.5 டிகிரி. எனக்கு பயமாருக்கு... அப்பாவைக் கூட்டிண்டு வா...'

அந்த 'அகம்' என்பது இந்தக் காலத்திய 'சின்ன வீடு...' அவருக்கு அதைப் பற்றியும் நன்றாகத் தெரியும், சம்பத் சொன்ன தகவல். அந்தப் பெண் திருமணமானவள். அவளை அவர் பார்த்ததில்லை. அவள் கணவரைப் பார்த்திருக்கிறார். நாட்டு வைத்தியர்.

"அந்த ஆளுக்கு ரொம்ப ஞாபகமறதி..."

"எப்படிச் சொல்றே?"

"உங்களுக்குக் கல்யாணம் ஆகி எத்தனை வருஷம் ஆகுதுன்னு கேட்டேன். தன் குழந்தைகளை எல்லாம் கூப்பிட்டு எண்ணிப்பார்த்துட்டு பதினாலுன்னு சொல்றார்!"

— வெ. ராஜாராமன்



வயதானவர். சம்பத்தின் அப்பாதான் அவருக்கு இளம்பெண்ணைக் கல்யாணம் செய்வித்ததாகச் சம்பத் அவரிடம் சொல்லியிருக்கிறான்.

"வாடா போகலாம்..." என்றான் சம்பத் அவரிடம்.

"அவன் எதுக்குடா?" என்றாள் அவன் அம்மா.

"போனா அவனோட போவேன், இல்லாட்டா போக மாட்டேன். டாக்டரை நான் கூட்டிண்டு வரேன்."

"டாக்டர் ஊரிலில்லே... அதான் எனக்கு பயமாருக்கு... ஆஸ்பத்திரிக்கு போகணும்னா..."

"வாடா போகலாம்" என்று இரண்டாம் தடவையாக உறுதியான குரலில் சொன்னான் சம்பத் அவரிடம்.

அவர்கள் வீடு, காமாட்சி ஜோஸ்யர் தெருவிலிருந்தது. 'சைலன்ஸர்' இல்லாத மோட்டார் சைக்கிளில் அவரையும் பின்னால் ஏற்றிக் கொண்டு, மிக ஆர்ப்பாட்டமாய் அந்த வீட்டெதிரே 'பைக்'கை நிறுத்தினான் சம்பத்.

சிறிதும் பெரிதுமில்லாத நடுத்தரமான வீடு. வாசல் மரக்கதவைப் பலமாகத் தட்டினான் சம்பத்.

"யாரு?" என்ற குரல், ஆண்குரல், உள் பக்கத்திலிருந்து மிகச் சன்னமாக ஒலித்தது.

சம்பத் பதில் சொல்லவில்லை. அதிக வேகமாகக் கதவைத் தட்டினான் இரண்டாவது தடவையாக.

சில விநாடிகளுக்குப் பிறகு கதவு திறக்கப்பட்டது. 'அரிக்கேன்' விளக்கைக் கையிலேந்தியவாறு, கண்களை இடுக்கிப் பார்த்தார் வைத்தியர். அந்த மங்கலான வெளிச்சத்தில் அவர் நாமம் 'பளிச்'சென்று தெரிந்தது.

"யாரு? சம்பத்தா... வாடா வா."

"அப்பாவைக் கூப்பிடுங்க..."

"யா...ரு? அ....ப்...பாவா? இங்கேயா...?"

"ஆமாம்... இங்கேதான். கூப்பிடுங்க...."

"அவர் வந்து...." அவர் தயங்கித் தயங்கிச் சொல்லி முடிப்பதற்குள் அவரைத் தாண்டி உள்ளே சென்றான் சம்பத்.

"அப்பா...." வீடு எதிரொலிக்கும்படியான குரலில் உரக்கக் கூப்பிட்டான் சம்பத்.

கூடத்தை ஒட்டியிருந்த அறையிலிருந்து கண்களைக் கசக்கிக் கொண்டு வெளியே வந்தார் சம்பத்தின் அப்பா.

"எங்கே வந்தே?" என்றார் அவன் அப்பா. குரலில் எரிச்சல் தெரிந்தது.

"பூமாவுக்கு நல்ல ஜுரம். 10.5 டிகிரி. அம்மா கூட்டிண்டு வரச் சொன்னா உங்களை. டாக்டர் ஊரிலில்லே."

"என்னடா ஆச்சு குழந்தைக்கு?" என்று கேட்டுக் கொண்டே வெளியே வந்தார் வைத்தியரின் மனைவி.



"நம்ம மகன் கணக்குல கெட்டிக்காரனா இருக்கலாம்; ஆனா பொது அறிவிலே பூஜ்யமா இருக்கான்."

"ஏன், என்ன ஆச்சு?"

"400/2 சுரேஷ்நகர், கோவைன்னு விலாசம் எழுதச் சொன்னா, 200 சுரேஷ் நகர்னு எழுதித் தொலைச்சிருக்கான். கடிதம் திரும்பி வந்துடுச்சு!"

– ஓ. என். சதாசிவன்

அவள் குரலில் கண்ட பரிவு, பாசாங்கு இல்லை என்று அவருக்குப் பட்டது.

"நீ போ உள்ளே..." என்று அதட்டல் போட்டார் சம்பத்தின் அப்பா.

"நல்ல ஜுரம், சித்தி..." என்றான் சம்பத். அவன் அவளைச் 'சித்தி' என்று கூப்பிடுவான் என்பதை அவன் அப்பா எதிர்பார்க்கவில்லை என்று தோன்றிற்று.

அவர் அவனை எரித்து விடுபவர் போல் பார்த்தார். பிறகு மிகக் கோபமாகக் கேட்டார். 'உன் சிநேகிதனையும் கூட்டிண்டு வரணுமா?"

"வொய் நாட்? அவன் என் பாட்டியைப் பார்த்திருக்கான் எக்ஸ்டென்ஷன்லே, சித்தியைப் பார்க்கக் கூடாதோ?"

சம்பத்தின் அப்பா அளவற்ற சினத்துடன் அவன் அருகில் வந்து அவனை அடிக்கக் கையை ஓங்கினார்.

சம்பத் அவர் கையை அப்படியே இறுகப் பற்றிக் கொண்டான்.

"செய்யறதைத் துணிஞ்சு செய்யணும்... வேஷம் கூடாது. ஒரு அடி என் மேலே விழுந்தது, அப்புறம்.... என்ன ஆகும்னு எனக்கே தெரியாது," என்றான் சம்பத்.

அந்த ஒருகணம் உலகம் ஸ்தம்பித்து நின்றது போல இருந்தது அவருக்கு. அவன் அப்பாவுக்கும் அப்படித்தான் இருந்திருக்க வேண்டும்.

கை தானாகவே கீழே இறங்கியது. அவர் கண்களில் பயம் தெரிந்தது.

சம்பத் வெளியே வந்தான். அவரும் அவனைத் தொடர்ந்தார்.

அவர் சொன்னார், வெளியே வந்தவுடன்: "அப்பாகிட்டே நீ இப்படிப் பேசியிருக்க வேணாம்..."

"என் தாத்தா தைரியமா செஞ்சார். இதென்ன, கோழைத்தனம், இன்னொருத்தனுக்குக் கல்யாணம் பண்ணி வச்சு, ராத்திரி வேளையிலே முட்டாக்குப் போட்டுண்டு நுழையறது? அவளை வச்சிண்டிருக்கார், ஆனா அவரோட சொந்த வீட்டு விஷயம் பத்தி அவ

விசாரிக்கக் கூடாது. அவர் சொந்த வீடு 'ஒரு புனிதமான விஷயம்'. அவ வப்பாட்டிதானே, அவளுக்குக் கேக்க உரிமையில்லே... அவ நல்ல மனுஷியாத்தான் எனக்குப் படறது. பாவம், காசில்லாத கொடுமை..."

"உங்கம்மாவுக்கு அவர் துரோகம் பண்றாரே, அது 'இஷ்ஷியு'வே இல்லியா?" என்றார் அவர்.

"எங்கம்மாவை எனக்கு நன்னா தெரியும். வீட்டுக்குக் கூட்டிண்டு வராத வரைக்கும் அவளுக்கு இது 'இஷ்ஷியு'வேயில்லே... அவளுக்கும் வீடு 'ஒரு புனிதமான விஷயம்' டாமிட். நம்ம 'கல்சர்'லே, ஆட்களுக்கு முக்கியத்துவமே கிடையாது... 'அப்ஸ்டராக்ட்' விஷயங்கள், கற்பு, கிற்பு, தாலி பாக்கியம்... சச் ஸ்டஃப் அன்ட் நான்ஸென்ஸ்' இதுக்குத்தான் முக்கியத்துவம்..."

சம்பத் அம்மா போன பிறகு அவனுடைய அப்பா அவளைத் தம்முடைய வீட்டிலேயே அழைத்து வைத்துக் கொண்டார். வைத்தியர் என்ன ஆனார் என்ற விவரம் யாருக்கும் தெரியாது.

அன்று அந்தச் சம்பவத்துக்குப் பிறகு சம்பத் அவர் உள் மனத்தை ஊடுருவி நின்றான் என்று அவரால் உணர முடிந்தது.

குன்று ஏறுவது கொஞ்சம் சிரமமாகத் தானிருந்தது. செங்குத்தாக இருந்ததினால் கொஞ்சம் மூச்சு வாங்கிற்று.

உச்சிக்குச் சென்று, சுற்றிப் பார்த்ததும், குன்றேறிய பலன் அவருக்குக் கிடைத்தாற் போலிருந்தது. அற்புதமான காட்சி!

மேலிருந்து சரிந்த நீலமும், கீழே விரிந்து கிடந்த நீலமும் ஒன்றோடு ஒன்று இணைந்து, ஒரு ராட்சச நீல வாய் திறந்து, அவரை விழுங்க வருவது போல் அவருக்குத் தோன்றிற்று. அலைகள் எச்சில்களாக வழிந்தன.

அவர் கண்களை மூடிக் கொண்டார். எத்தனை நேரம் அப்படியே நின்றார் என்று அவருக்குத் தெரியாது.

கண்களைத் திறந்து, பக்கவாட்டத்தில் பார்த்தபோது...

"வாட் எ கோய்ன்ஸ்டன்ஸ்!"

பக்கத்தில் நின்றவர் சம்பத் போலவே இருந்தார். சம்பத்தாக இருக்க முடியாது. இருபத்தைந்து வயது இளைஞன். அவனருகில் ஓர் இளம்பெண். வெள்ளைக்காரப் பெண். தென் அமெரிக்கப் பெண் போல் தோன்றினாள்.

ஏன் சம்பத்தின் மகனாக இருக்கக்கூடாது என்று அவருக்குத் தோன்றிற்று. அதே நீண்ட நாசி, கூர்மையான கண்கள், சுருள்முடி... நாற்பது வருஷங்கள் கரைந்து அவருக்கும் இளமை வந்து விட்டாற்போல், அவர் உற்சாகத்தின் கொடுமுடியில் நின்றார்.

"இந்த ஆபரேஷன்லே நான் பிழைப்பேனா டாக்டர்?"

"அட, உங்களுக்கும் அதே சந்தேகம்தானா?"

– வெ. ராஜாராமன்

அவர் அவனருகே சென்றார். "எக்ஸ் கியுஸ் மீ..." என்று அவர் சொன்னதும், அவன் அவரைத் திரும்பிப் பார்த்தான்.

"எஸ்...?" என்றான் அவன்.

"என்னுடைய நெருங்கிய நண்பன் சம்பத் மாதிரி நீங்கள் இருக்கிறீர்கள்..." இதற்கு மேல் என்ன சொல்வதென்று அவருக்குத் தெரியவில்லை. அவனையே பார்த்துக் கொண்டு அவர் நின்றார்.

அவன் அவரை உற்றுநோக்கினான். உடனே அவன் பதிலேதும் சொல்லவில்லை. அவர் முகத்தில் அவன் ஏதோ தேடுவது போலிருந்தது.

சில விநாடிகள் கழிந்து, அவர் பெயரைச் சொல்லி அவரைக் கட்டிக் கொண்டான்.

"நம்பவே முடியலே... நீ சம்பத்தா? அன்னிக்குப் பார்த்த அதே மாதிரி... நோ... நோ..."

"இப்பொ நீ எனக்கு அன்னிக்கு எப்படி இருந்தியோ அப்படியேதான் இருக்கே. ஒரே யொரு வித்தியாசம், நம்ம ரெண்டு பேருக்கும் அன்னிக்கும் சரி, இன்னிக்கும் சரி, நான் இளைஞன்தான்... உனக்கு அப்பவே வயசாயிடுத்து... ஓ.கே.. இது என் மனைவி, வில்மா... இவன் என் பால்ய சிநேகிதன்..." அவன் அவருடைய பெயரையும் சொன்னான்.

"மைகாட்! அதெப்படி அவளும் இவ்வளவு இளமையா இருக்காளே?" என்றார் அவர்.

"எனக்கு 'புரு'ன்னு ஒரு பிள்ளை. அவன்கிட்டேயிருந்து நான் இளமையை வாங்கிண்டேன், இவ, அவன் வொய்ஃப் கிட்டேயிருந்து வாங்கிண்டா... போறுமா?" என்று கூறிவிட்டு, உரக்கச் சிரித்தான் சம்பத்.

"நிஜமா சொல்றேன். இன்க்ரெடிபில்... நீ இப்போ எங்கே, ஆஸ்த்ரேலியாவிலேதான இருக்கியா?" என்றார் அவர்.

"எஸ்... இப்பொ.. ஆறு மாசமா இங்கே. எத்தனை நாள் இங்கே இருப்பேன்னு எனக்குத் தெரியாது. வட அமெரிக்காவிலே அஞ்சு வருஷம், தென் அமெரிக்காவிலே பத்து வருஷம், யு.கேவிலே அஞ்சு வருஷம். நைஜிரியாவிலே அஞ்சு வருஷம்... ஐ ஆம் எ க்ளோப் ட்ராட்டர்... நாப்பது வருஷத்துக்கு முன்னாலே கால்லே ஏறின சக்கரம் ஓடிண்டேயிருக்கு என்ன செய்யறேன்னு கேக்காதே... எல்லாவிதமான வேலையும் செய்யத் தெரியும். 'ப்ரொஃபஸர்,' 'ப்ரொஃபஷனல்'.... எல்லாம். நீ என்ன செய்யறே... 'தி ஸேம் ஓல்ட் வீபிங் ஃபிலா



ஸபர்?' வாழ்க்கையிலே அழறதை நிறுத்தியாச்சா, இல்லே, இன்னும், 'மாரல்', கீரல்னு சொல்லிண்டு அழுதுண்டிருக்கியா?'' என்று சொன்னவன், மனைவி பக்கம் திரும்பி, "மன்னித்துக் கொள்... நாங்கள் எங்கள் மொழியில் பேசுவதை..." என்றான் ஆங்கிலத்தில்.

அவள் புன்னகை செய்தாள்.

"ஆர் யு ஹாப்பி?" என்றார் அவர்.

''குட்... இது நல்ல கேள்வி. இந்தக் கேள்வியைக் கேட்டுண்டேயிருந்து, 'ஆமாம்'னு நாம 'ஃபீல்' பண்ணா... அது போறும். உனக்கு இப்பொ கேள்வி கேட்க தெரிஞ்சுருக்கு... நல்ல ஆரம்பம்... 'வால்யு ஜட்ஜ்மென்ட்' அது இதுன்னு சொல்றதெல்லாம் காலாவதியாயிடுத்து... பழசைப் பத்தி என்னை ஒண்ணும் கேக்காதே, நானும் உன்னைக் கேக்க மாட்டேன். ஓ.கே...?"

அவன் மறுபடியும் என்னைக் கட்டிக் கொண்டான்.

''சரி... வா... அதோ இருக்கு. எங்க மோட்டார் - போட்... ஒரு 'ரைட்' போயிட்டு வருவோம்.

அவர் அவர்களை மாறி மாறிப் பார்த்தார். காயகல்பம் சாப்பிட்டவர்கள் போல... இல்லை, அமுதத்தை விழுங்கியவர்கள் போல இருந்தார்கள்.

"என்ன வரயா, சொல்லு" என்றான் சம்பத்.

"எங்கே?"

''ஜஸ்ட் எ ஜாலி ரைட்... அந்தத் தொடுவானம் மட்டும், அதைத் தொட்டுட்டுத் திரும்பி வந்துடலாம்..."

"தொடுவானத்தைத் தொட முடியாது," என்றார் அவர்.

"தொடணும்னு அவசியமில்லே... பயணந்தான் முக்கியம். அதுதான் சந்தோஷமான அநுபவம். மைகாட், இது கூடவா உனக்குத் தெரியாது...?"

"டு யு ஆர் ஆன் காட், நான் ஒண்ணு உன்னைக் கேக்கலாமா?"

"அப்ப ஒரு கேள்வி கேட்டியே, 'ஆர் யு ஹாப்பி?'ன்னு அந்தக் கேள்வியிலே, எல்லாம் அடங்கிடுத்து. என்ன கேள்வி கேட்டாலும், அந்தக் கேள்வியோட துணைக்கேள்விதான்..."

"உனக்குக் கடவுள் நம்பிக்கை இருக்கா?" என்றார் அவர்.

அவன் பலமாகச் சிரித்தான்.

அவர் பயந்து விட்டார்.

பிறகு சொன்னான் : "வாட் எ கொச்சின்? நான் பிரபஞ்சத்தை நம்பறவன். நான்தான் பிரபஞ்சம்னு நம்பறவன். கடவுள் பிரபஞ்சம்னா, கடவுள் பிரபஞ்சத்துக்குள்ளே ஊடுருவி இருக்கார்னா, நான் கடவுளையும் நம்பித்தான் ஆகணும். அப்படி நம்பலேன்னா, எனக்கு பிரபஞ்சத்துப் பேரிலே நம்பிக்கையில்லே, என் பேரிலேயே நம்பிக்கையில்லேன்னு அர்த்தம். அப்படி எனக்குக் கடவுள் நம்பிக்கை இருக்கான்னு நான் என்னை நானே மீண்டும் மீண்டும் கேட்டுண்டேருக்கணும்னு ஒரு கடவுள் விரும்பினார்னா, அவர் கடவுளே இல்லே... அவர் ஒரு போகஸ் கடவுள் 'பொய்த் தேவு'. இதுதான் 'ஸர்மன் ஆன் தி மௌன்ட்' ஸாங் ஆஃப் குருக்ஷேத்திரா...! சரி... ஓ.கே. போகலாம் வரயா...?"

''இப்பொ வர முடியும்னு எனக்குத் தோணலே. என் 'டாட்டரும்' மாப்பிள்ளையும் என்கூட வந்திருக்கா. நான் திரும்பிப் போயாகணும். இன்னொரு நாளைக்கு..."

அவன் இடைமறித்தான்.... ''சரி... என் டெலிஃபோன் நம்பரைத் தரேன்... கான்டாக்ட் பண்ணு, ஓ.கே...?"

அவன் அவர் பையிலிருந்து ஒரு துண்டுக் காகிதத்தையும் 'பால் பாய்ன்ட்' பேனாவையும் எடுத்து அவசர அவசரமாக அவன் டெலிஃபோன் நம்பரை எழுதி, அத் துண்டுக் காகிதத்தை அவர் பையில் போட்டான்.

அவர் குன்றிலிருந்து கீழே இறங்கியதும், அங்கு அவர் மகளும், மருமகனும் அவருக்காகக் காத்துக் கொண்டிருந்தனர்.

"என்ன யோசிச்சிண்டிருந்தீங்க, ரொம்ப நேரமா, தனியா நின்னுண்டு?" என்றாள் அவர் மகள்.

"தனியாவா?"

"ஆமாம்... நாங்க அப்பவே வந்துட்டோம். நீங்க இறங்கி வருவீங்கன்னு காத்திண்டிருந்தோம்..." என்றாள் அவர் மகள்.

அவர் தனியாக இல்லை என்று அவர்களுக்குச் சொல்வதற்காகத் தம் பையிலிருந்த துண்டுக் காகிதத்தை எடுத்து அவர் மகளிடம் நீட்டினார்.

அவள் அதைப் பார்த்துவிட்டு, "இது நம்ம வீட்டு டெலிஃபோன் நம்பர். உங்களுக்கு ஞாபகம் இருக்கே, அதுவே ஆச்சர்யந்தான்" என்றாள்.

அவர் குன்றைத் திரும்பிப் பார்த்தார்.

விசைப்படகுச் சவாரிக்கு ஒத்துக் கொண்டிருக்கலாமென்று அவருக்குத் தோன்றிற்று. ஆனால் விசைப்படகு கண்ணுக்குத் தெரியவில்லை. குன்றின் மீது ஏறிப் பார்த்தால் அது தெரியக்கூடுமென்று அவருக்குப்பட்டது.


"ஹலோ மைக் டெஸ்டிங் ஒன் டூ த்ரீ.... எல்லா குளறுபடிக்கும் பி.ஜே.பி.தான் காரணம்... மைக் டெஸ்டிங்... ஒன் டூ...."
பிரிந்து போனவர்கள் கட்சிக்குத் திரும்பினர்!
"சொன்னா நம்ப மாட்டீங்க... ஆனா கட்சியில தொடர்ந்து இருக்கிறவங்களை விட, கட்சி விரோத நடவடிக்கைக்காக வெளியே அனுப்பினவங்கதான் ரொம்ப விச்வாசமா இருக்காங்க..."
இந்தியன் ஃபீச்சர்ஸ் சிண்டிகேட்
ஆஹ்ஹாஹ்ஹா...
"யாருக்கு பெயில் யாருக்கு ரிமாண்ட் என்கிற இரண்டு விஷயம் தவிர வேற எதையும் தீர்மானிக்கறதில்லைன்னு நீதி மன்றங்கள் முடிவு செய்திருக்கோ....!"
612-3
நீதிமன்றங்கள்
NEW YEAR SALES
SUPER STORES
"இந்த வருஷம் பிஸினஸ் ரொம்ப 'டல்' சும்மா சுட்டுட்டுப் போகறதுக்காக வர்றவங் களைக் கூட காணும்..."

கடிதங்கள் சிலவும் உண்டு.

வ.வே.சு. ஐயரின் கவிதைக்கான டெஃபனிஷன் நம்மைப் புல்லரிக்க வைக்கிறது. 'மகோன்னதமான கவிதையின் லக்ஷணத்தைச் சுருக்கமாகச் சொல்லுவதானால் அது மனிதனுடைய அறிவை விவகார உலகத்தினின்று தட்டி எழுப்பி அதற்கு அகண்ட உணர்ச்சியை உண்டாக்க வேண்டியது என்பதே.'

கம்பனின் சிறப்பை ஐயர் வர்ணிப்பதே மேற்சொன்ன அவரின் இலக்கணத்திற்கு பொருந்தும் ஒரு கவிதைதான்!

'மற்ற கவிஞர்களை படத்திலும் அரண்மனை மண்டபச் சுவர்களிலும் சித்திரம் எழுதுபவர்களாகப் பாவித்தால், கம்பனை வானமாகிற முகட்டையே தன் ஓவியத் தொழிலுக்கு இடமாகக் கொண்டு ஆஜானுபாகுவான சித்திரங்களை வரைகிறவனாகக் கொள்ள வேண்டும். கம்பனின் கவிதையானது பல்லவச் சிற்பிகளின் பெரிய வீச்சையும், சாளுக்கியச் சிற்பிகளின் சிற்றுளி வேலையையும், மொகலாயர் காலத்துச் சின்னஞ்சிறு சித்திரம் வரைபவர்களின் கை நயத்தையும் ஒருங்கே ஞாபகத்துக்குக் கொண்டு வரக்கூடியதாக இருக்கிறது. நினைத்துப் பார்த்தால் வேறு ஒரு கவியினிடத்திலும் இத்தனை வேறுபட்ட அருங்குணங்கள் இந்த அளவுக்கு அகப்படாது என்று தோன்றுகிறது!'

வ.வே.சு. ஐயரின் multi dimensional personalityயை வெளிக்கொண்டு வரும் முயற்சியில் பெரும் வெற்றி பெற்றிருக்கிறது இந்தப் புத்தகம். தேடித் தேடி கம்பனில் ஆழ்ந்து 'கவிதையின் வரம்பைக் காட்டும் மகா வாக்கியங்கள்' என்று கம்பனை ஏத்திய இந்த விசித்திர மனிதரை கிட்டத்தட்ட தமிழகம் மறந்து போய் விட்டது. நினைவுபடுத்திய பெ.சு. மணிக்கு நன்றி சொல்ல வேண்டும்.

- பாரதி பாஸ்கர்

வ.வே.சு. ஐயரின் கம்பராமாயணக் கட்டுரைகள்/, பெ.சு. மணி/பூங்கொடி பதிப்பகம், 14, சித்திரக்குளம் மேற்கு வீதி, சென்னை – 4/ ரூ.60.00

பார்வைக்கு வந்தவை

● *இந்துதர்மம்/சோ/அல்லயன்ஸ் கம்பெனி, 244, ராமகிருஷ்ணா மடம் சாலை, சென்னை – 4/ரூ. 40.00*

காஞ்சிப் பெரியவர் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளின் அருளுரைகளிலிருந்து திரட்டிய முத்துக்கள்.

● *அரும்புகளுக்கு ஒரு அரசரின் கதை/அ.வெற்றிவேலன்/கங்கை புத்தக நிலையம், சென்னை – 17/ ரூ. 25.00*

பதிப்பகத்துறையில் சாதனைகள் படைத்த வானதி திருநாவுக்கரசின் வாழ்க்கை வரலாறு. குழந்தைகளுக்காக எழுதப்பட்டுள்ளது.

● *இசைமேதை இளையராஜா/பரணன் ஜெயராமன்/ கங்கை பதிப்பகம், சென்னை – 17/ ரூ. 20.00*

இசையமைப்பாளர் இளையராஜாவைப் பாடல்களில் பாராட்டுகிறார் ஆசிரியர்.

● *கறுப்பு மொழி/அறிவழகன்/நஞ்சை வெளிப் பதிப்பகம், தே. பழவங்குடி, ஓட்டிமேடு – அ.நி., விருத்தாசலம் – 606 103/ரூ. 20.00*

மாப்பிள்ளைக்கு
தாலி தோஷம்
அறுபட்டது
வாழைக்குருத்து.
– தலித் கவிதைகள்.

● *பெருமைமிகு பெண்மை/டாக்டர். ஆர். எ. சுப்பிரமணியன்/ஸ்ரீ செந்தில் பதிப்பகம், 78-எ. காங்கிரஸ் ஹவுஸ் ரோடு, புதுப்பேட்டை, குடியாத்தம் – 632 602./ரூ. 24.00.*

பெண்மையின் சிறப்புகளை உயர்த்திக் கூறும் கட்டுரைகள்.

● *உரிமைக்குக் குரல் கொடுப்போம்/கே. எஸ். ராதாகிருஷ்ணன்/நக்கீரன் பதிப்பகம், 11, 5-வது தெரு, ஆழ்வார் பேட்டை, சென்னை – 18/ரூ. 50.*

சிந்திக்கத் தூண்டும் சமூக, அரசியல் விமர்சனப் பார்வை கொண்ட கட்டுரைகள்.

● *சித்தர்கள் பரிபாஷை அகராதி/டாக்டர் இரா. மாணிக்கவாசகம்/திருமகள் நிலையம், 55, வெங்கட்நாராயணா சாலை, சென்னை – 17/ரூ. 60.00*

பதினெண் சித்தர்கள் தம் பாடல்களில், மறைமுகமாகக் கருத்துக்களை உணர்த்தக் கையாண்ட பல சொற்களும் அவற்றின் அர்த்தங்களும். (கடல் – பிறவி; ரத்தவீசம் – மாதுளை; இரத்தம் – குங்குமப்பூ; மீனாட்சிமைந்தன் – வீரம்.)

● *இந்த நாளில் அன்று/என். ஸ்ரீனிவாசன்/அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை – 4./ரூ. 150.00*

ஜனவரி முதல் ஜூன் வரை ஒவ்வொரு தினமும், உலகம் முழுதும் நடந்த முக்கியமான சம்பவங்களின் தொகுப்பு. குவிஸ் மாஸ்டர்களுக்கு மிக உபயோகமான நூல். புதிய விஷயங்கள் தெரிந்து கொள்வதில் ஆர்வமுள்ள எனையோருக்கும்.

பன்னீர்ப் பூக்களின் மிருதுவான வாசனை தவழ்ந்து வந்து கொண்டிருந்தது. பால் நிலவோடு போட்டி போட்டுக் கொண்டு நட்சத்திரங்கள் மின்னிச் சிரித்தன. மல்லாந்து மொட்டை மாடியில் படுத்துக் கொண்டிருந்த சுகன்யா, வானத்தை ரசித்தாள். நீண்ட புடைவைத் தலைப்பை சும்மாடு போல் சுருட்டி தலைக்குசரமாக்கியிருந்தாள். கட்டாந்தரை முதுகுக்கும் இடுப்புக்கும் இதமாக இருந்தது. கூந்தல் வழியே சிலுசிலுவென்று காற்று புகுந்து கழுத்தை வருடியது. உள்ளுக்குள் பாட்டு கிளம்பி உதடு வரை வந்தது. ஹாஸ்டலில் இருக்கும்போது சசி கற்றுத் தந்த தமிழ்ப் பாட்டு.

"அன்பு நிறைந்த நெஞ்சம் தனிலே, அறிவு நிறைந்திருக்கும்..."

ஒரு வரி பாடிவிட்டு நிறுத்திக் கொண்டாள் சுகன்யா. 'நிலவால் குளிர்ந்த இரவே சங்கீதமாய் கவிந்திருக்க, தனியே பாட்டு எதற்கு...?'

ஸ்ரீராமுக்கும் அவளுக்கும் எப்போதும் சண்டை வருவது இந்த விஷயத்தில்தான். இதைப் போன்ற அரிய இரவுகளில் இந்த மொட்டை மாடி சுகம் கிடைக்கப்பெற்றால், மௌனமாகி விடுவான் அவன். கேள்விகளுக்கும் பரிமாற்றங்களுக்குமான கனிந்த நேரமாக அது அவளுக்குத் தோன்ற, வளவளவென்று வாய் நிறையப் பேசுவாள்.

"கொஞ்சம் நேரம் சும்மா இரேன்..." என்

?

ராஜேஷ்குமார்

25




உள்ளே வரலாமா?

பான். வீம்புக்காகவே பேசிப் பேசி அவனைத் தூண்டினாலும் சிரித்துவிட்டு மௌனமாகி விடுவாள்.

இப்போது, அவனில்லாத இந்தத் தனியிரவில், ஒரு வரி பாடிய கணத்தில்தான் அவனுடைய மௌனத்துக்கும், அமைதி வேட்கைக்கும் அர்த்தம் புரிந்தது.

இயற்கைக்கும் இரவின் அழகுக்கும் செலுத்தும் மரியாதை அந்த மௌனம். பிரபஞ்சப் பேரழகின் முன் வணங்கி நிற்கும் உயர்நிலை.

'ஹாண்ட் பேகை மறந்து வைத்தியநாதன் வீட்டிலேயே வைத்துவிட்டு வந்தது எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று! வீட்டுக்குள் நுழைய சாவி இல்லாமல் போனதால்தானே இந்த அனுபவம்!' சுகன்யா பன்னீர் மணம் ஏந்திய காற்றை நெஞ்சு நிரம்ப உள்ளிழுத்தாள் மெதுவாக.



வாசல் கேட் ஒலி நாராசமாய் எழுந்து அமைதி குலைத்தது. மெள்ள ஒருக்களித்து எழுந்து மாடிச் சுவரருகே போய் எட்டிப் பார்த்தாள்.

ராமநாதன் உள்ளே வருவது தெருவிளக்கு வெளிச்சத்தில் தெளிவாகத் தெரிந்தது. கையில் அவளுடைய ஹாண்ட் பேகை வைத்திருந்தார்.

வீட்டின் வெளியே பக்கவாட்டிலிருந்த மாடிப்படியிறங்கிப் போனாள் சுகன்யா.

இருண்டு கிடந்த வீட்டின் முன் நின்று கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தார் ராமநாதன்.

"அப்பா....!"

"இருக்கியா...?" அவள் குரல் கேட்டதும் கவலை கலைந்துவிட்டாலும் இறுக்கமாகவே தொடர்ந்தார். "என்ன பண்ற அங்க - மேல இருட்டுலே...?"

"வீட்டுக்குள்ள போகச் சாவி இல்லை... ஹேண்ட் பேகை மறந்து சேகர் வீட்டுல விட்டுட்டு வந்துட்டேன்."

"இந்தா..." கைப்பையை அவர் நீட்ட, அதிலிருந்து சாவி எடுத்து வாசல் கதவைத் திறந்து விளக்குகளைப் போட்டாள்.

"வாங்கப்பா..."

உள்ளே வந்தவர், நேருக்கு நேராக அவளைப் பார்த்துப் பேசினார்.

"என்னதான் நினைச்சுண்டிருக்கே நீ உன் மனசுல...?"

சுகன்யா பதில் பேசாமல் அவரைப் பார்த்தாள்.

"உன் பாட்டுக்கு வசந்தியையும் சேகரையும் பிளேன்ல ஏத்தி பெங்களூருக்கு அனுப்பிச்சுட்டியாம்.... சம்பந்தியானா இந்த க்ஷணம் அங்கே போய் அவங்களைத் தேடிக் கண்டு பிடிங்கறார்..."

"அவர் 'காணவில்லை'ன்னு விளம்பரம் கொடுத்தா கூட அவங்களைக் கண்டுபிடிக்க முடியாது... போய்ச் சொல்லுங்க!"

"போதும் உன் துடுக்கு! என்ன பிரச்னையானாலும் எங்கிட்டேயோ, அம்மாகிட்டேயோ சொல்லித் தொலைச்சிருக்கலாமில்லையா...? ஏன் இப்படி எங்க குடும்ப மானத்தைக் கப்பலேத்தறே..."

சட்டென்று அந்நியப்படுத்தி விட்டார். 'எங்க குடும்பம்' என்ற சொல்லில் அப்படியே வெளியே நிறுத்தி வைத்து விட்டார்.

துவண்டு உட்கார்ந்தாள் சுகன்யா. ராமநாதன் இன்னமும் நின்று கொண்டேயிருந்தார்.

தங்க நகை பரிசு!

இந்த இருபத்தாறு வாரத் தொடர், ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு கதாசிரியர் பெயரில் வெளியாகி வருகிறது. ஆனால் அவர்களுள் ஒரே ஒரு நபர்தான் இதை எழுதி வருகிறார். தொடரை எழுதியவர் யார் என்பதைக் கண்டுபிடிப்பது உங்கள்

"இதோ பாருங்க அப்பா... உங்களை அப்பான்னு இனிமேலும் கூப்பிடறதா வேண்டாமான்னு சந்தேகம் வரது... பயம் வரது..."

அவர் பதில் பேசவில்லை.

"சரி... ஸ்ரீராம் அப்பா... அப்படிச் சொல்றதுதான் பொருத்தம். வசந்தியோட பிரச்னை என்னங்கறது உங்களுக்குத் தெரிஞ்சிருக்க நியாயமில்லை..."

"சைக்கியாட்ரிஸ்ட்கிட்டே வேற கூட்டிண்டு போனியாமே...?"

"அது ரொம்ப நாசூக்காகக் கையாள வேண்டிய விஷயம். நாலு பேருக்குத் தெரிஞ்சு தலைக்குத் தலை அறிவுரை சொல்லி, ஆத்திரப்பட்டு வசந்திக்கு உதவி பண்ணியிருக்க முடியாது..."

"அப்படியொரு முடிவுக்கு நீயா எப்படி வரலாம்...? பெத்தவா நாங்க இருக்கோம். எங்களை விட அக்கறையா யாரு கவனிப்பா....?"

"அப்படி உங்க பொண்ணு நினைச்சிருந்தா தன்னோட பிரச்னையை உங்ககிட்டேயோ, அவ அம்மாகிட்டேயோதானே எடுத்துச் சொல்லியிருப்பா...? எங்கிட்டே வந்து கல்யாணத்தன்னிக்கு ராத்திரி 'எனக்கு பயமாயிருக்கு மன்னி... இது வேண்டாம்...'னு அழுதிருப்பாளா...?"

ராமநாதன் அதிர்ந்து போனார்.

"நீ சொல்லவேயில்லையே..."

"சொல்ல வேண்டாம்னு தீர்மானிச்சதுனாலதான் சொல்லலை..."

"ஸ்ரீராம் கூட ஒண்ணும் சொல்லலையே..."

"அவருக்குத் தெரியாது...."

அவர் மேலும் அதிர்ச்சியுற்றார்.

"உங்ககிட்டே சொல்ல வேண்டாம்னு வசந்தியே கேட்டுண்டா. சேகரும் தன்னோட அப்பா அம்மாகிட்டே சொல்லலைன்னு உறுதி கொடுத்தான்.... கடைசியில எல்லாம் கண்ணாடிப் பாத்திரம் மாதிரி உடைஞ்சு போச்சு."

ராமநாதன் எதுவும் பேசாமல் கவலையுடன் பார்த்தார்.

"ரொம்ப கஷ்டப்பட்டு இரண்டு பேரையும் சம்மதிக்க வைச்சு டாக்டர் மகேஷ்கிட்டே அழைச்சுட்டுப் போயி, அவரோட கவுன்சலிங்னாலே அவங்களுக்குக் கொஞ்சம் பளு குறைஞ்சு வர சமயத்துல திரும்பவும் பிரச்னை... டாக்டர் வீட்டு வாசல்ல சேகரோட ஃப்ரெண்ட் ஒருத்தன் பார்த்துட்டான்."

"எல்லாத்தையும் சம்பந்தி சொன்னார்.... எதுக்கு உண்மையை மறைச்சீங்கன்னு சண்டைக்கு வந்தார்..."

"என்னையும் ரொம்ப திட்டினார் உங்க சம்பந்தி - இங்கிலீஷ்ல...! என்னவோ சொன்னாரே... ஆங்! 'impertinent upstart' அப்படின்னார். அந்தக் கோபத்துலதான் ஹாண்ட் பேகை எடுக்காம வந்துட்டேன். கொஞ்ச நேரம் லோகல் லைப்ரரியில போய் உட்கார்ந்துட்டு, வீடு வந்தப்புறம்தான் சாவி ஞாபகம் வந்தது. சரி, இருட்டிப் போச்சு; காலையில குமார்கிட்டே சொல்லி எடுத்துட்டு வரச் சொல்லலாம்னு மொட்டை மாடியிலே படுத்திருந்தேன். நீங்களே எடுத்துட்டு வந்துட்டீங்க ஹாண்ட் பேகை..."

"ஏன்மா இருட்டுல தனியா இருந்தே. அங்கே வந்திருக்கலாமில்லையா நீ..." - மாமனார் சொல்லவில்லை. சிறிது நேரம் யோசித்துவிட்டுப் பேசினார். "சம்பந்தி இடத்துல நான் இருந்திருந்தாலும் அப்படித்தான் திட்டியிருப்பேன்.... சரி இப்பவாவது சொல்லு, அவங்க எங்க போயிருக்காங்க...?"

"உண்மையிலே எனக்கே தெரியாது. பெங்களூர்லே ஃப்ரெண்ட்ஸ்கிட்டே சொல்லி தங்கற ஏற்பாடெல்லாம் செய்திருக்கேன்..."

"பெங்களூர் போன் பண்ணிக் கேட்டுச் சொல்லு..."

"வேண்டாம்..."

"இல்லை, எனக்குத் தெரியணும். நான் வசந்திகிட்டே பேசணும். சம்பந்திக்குப் பதில் சொல்லணும்.... கேட்டுச் சொல்லு..."

"அது மட்டும் என்னால முடியாது."

"என்ன...?"

"எனக்கு சேகர்-வசந்தி தங்கற இடம் தெரியவந்தாலும் உங்ககிட்டே சொல்ல மாட்டேன்.... சொல்ல மாட்டேன்...!" சுகன்யா கோபமாகப் பேசினாள்.

"சுகன்யா, என்னை அனாவசியமா ரொம்ப பேச வைக்கற நீ! வசந்தி, நாங்க பார்த்து வளர்த்த பொண்ணு. அவளை எங்களுக்குத் தெரியாதா...? நேத்து வந்த உனக்குத்தான் அவ மனசு புரியும்ங்கற மாதிரி நீ நடந்துக்கிட்டதை ஒத்துக்கவே முடியாது."

"ரொம்ப நல்லது. சினிமா டயலாக் மாதிரி பேசி நீங்க என்னை வெட்டி விட்டது ரொம்ப சௌகரியமாய்ப் போச்சு. எப்போ நான் உங்கள்ள ஒருத்தியில்லைன்னு ஆயிடுச்சோ, அப்பவே உங்களுக்கு நான் சிறப்பு மரியாதை தரவேண்டியது அவசியமில்லைன்னும் ஆயிடுது! அதனால நானும் உங்க மனசு புண்படுமோன்ற கவலையில்லாமல் பேசலாம்..."

"ஐயோ! இனிமேல்தான் என் மனசு புண்படணுமாக்கும்..." ராமநாதன் அழுதுவிட

சாமர்த்தியம். அடுத்த வாரம் வரை காத்திருந்து, அந்த இதழில் வெளியாகும் கூப்பனில் விடை எழுதி அனுப்புங்கள். சரியான விடைக்கு, தங்க நகை பரிசு! பலர் சரியாக எழுதினால் குலுக்கலில் ஒருவரே பரிசு பெறுவார். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

வார் போலிருந்தது.

அவருடைய உச்சகட்ட உணர்ச்சி வசப்பட்ட நிலை சுகன்யாவின் ஆத்திரத் தையே மேலும் தூண்டியது.

"ஒண்ணு தெரிஞ்சுக்கங்க ஸார்..." அப் போதும் மிஸ்டர் ராமநாதன் என்று அழைக்கும் துணிவு வரவில்லை.

குரலை உயர்த்தாமல் உறுதியாகத் தொடர்ந் தாள் : "உங்ககிட்டே வந்து இதுமாதிரி பிரச் னைன்னு சொல்லியிருந்தா உடனே அந்தப் பொண்ணை கூப்பிட்டுத் திட்டியிருப்பீங்க. ஸ்ரீராம் அம்மாவும் ஏகமா கோபிச்சுக்கிட்டு 'அனுசரணையா நடந்துக்கத் தெரியாத பொண்ணு ஒரு பொண்ணா!'ன்னு வசந்தி யோட குற்றஉணர்வை இன்னும் அதிக மாக்கியிருப்பாங்க... எல்லாருமா சேர்ந்து ஒரு அரும்பைப் பூக்க விடாம கசக்கற மாதிரி அந் தப் பெண்ணோட மனசைக் கசக்கிப் போட் டிருப்பீங்க..."

பேச்சற்றுப் போனார் ராமநாதன். அது சுகன்யாவுக்கு வசதியாய் அமைந்தது.

"வசந்தி உங்களுக்குப் பெண்ணாய் இருக் கலாம். சேகர் வைத்தியநாதனுடைய பையன் தான்... ஆனா அதனாலேயே எனக்கும் அவங் களுக்கும் தனியா பந்தம் இருக்கக்கூடாதுன்னு நீங்க சட்டம் போட முடியாது! வசந்தி உங் களுக்குப் பொண்ணுன்னா எனக்கு நாத்தனார். உங்க உறவுல இருக்கற அத்தனை உரிமைகளும் எங்க உறவுலயும் உண்டு. அந்த உறவுலயும் உரி மைலயும் நீங்க தலையிட முடியாது. அட சே! உறவையே விட்டுத் தள்ளுங்க.... ஒரு பொண் ணுக்கு இன்னொரு பொண்ணு காட்ட வேண் டிய ப்ரியம் இது. இதுல குறுக்கிடறதுக்கு நீங்க யாருன்னு நான் கேட்கறேன், இப்போ...?"

ராமநாதன் எழுந்தார். அவர் கண்களில் நீர் பளபளத்தது. சுவரில் தொங்கிய ஸ்ரீராமின் கல் யாண போட்டோவை நெருங்கி உற்றுப் பார்த்தார்.

'அவன் மட்டும் இருந்திருந்தால் இப்படி யெல்லாம் கந்திரகோளமாகியிருக்காதோ...?'

அவர் எண்ணத்தை உணர்ந்தது போல் சுகி கோபப்பட்டாள்.

"ஸ்ரீராம் இருந்திருந்தாலும் அவர்கிட்டே இதைப் பத்தி நான் பேசியிருக்க மாட்டேன். எப்ப வசந்திக்கும் சேகருக்கும் வாக்கு குடுத்துட் டேனோ, அவங்களா விரும்பினாலொழிய அதை நான் மீற மாட்டேன். அவங்களா சொல்லியிருந்தா அது வேற விஷயம்."

சுகன்யாவின் தீவிரமும் நல்லெண்ணமும் புரியாமல் இல்லை ராமநாதனுக்கு. போட் டோவைத் தொடர்ந்து முறைத்துக் கொண்டு இருந்தார். மாலையும் கழுத்துமாக அமைதி யான கண்களுடன் ஸ்ரீராம்... அவனருகே நின்ற அந்தக் கணத்தை வெளிப்படையாய் ரசித்தபடி சுகன்யா. அனாவசிய கூச்சமோ போலி பவ் யமோ அற்ற அந்தத் தோற்றத்தில் ஒரு புதிய கம்பீரம் இப்போது அவருக்குத் தெரிந்தது. நிழலிலிருந்து பார்வையை அகற்றி நிஜத்தைப் பார்த்தபோதும் அதே கம்பீரம் பிரகாசித்தது.

காலையில் எழுந்தபோதே பசித்தது. வீட்டில் எந்தக் காயும் இல்லை. ரொட்டி கூட இல்லை. குளித்துவிட்டுப் போய் வாங்கி வர வேண்டும்.

நேற்றிரவு குரலுயர்த்தாமல் நியாயம் உணர்த்தியதில் மாமனார் அடங்கி ஆசுவாசமானார். கிளம்பும்போது அவளையும் உடன் வரச் சொல்லி அழைத்தார்.

"ஸ்ரீராம் வரவரைக்கும் அங்கே வந்து இரேன்..."

"வேண்டாம்..."

"ஏன்மா? ரொம்ப கோபிச்சுண்டுட் டேனா...? மனசுல வைச்சுக்காதே... ரொம்ப படபடப்பாயிடுத்து... சம்பந்தி கடுமையா பேசிட்டாரில்லையா...? அதான்..."

"இல்லைப்பா, நான் இங்கயே இருக்கேன்... வீடெல்லாம் சுத்தம் செய்யணும். நிறைய வேலை இருக்கு..."

"எப்ப வேணா வாம்மா..." அழைப்புச் சொல்லிவிட்டுப் போனவரை அனுப்பி வைத்த பிறகு தான் இலேசாக கிலி பிடித்துக் கொண் டது.

இவ்வளவு தன்னம்பிக்கையோடு அடித்துப் பேசி இரண்டு அப்பாக்களையும் சமாளித்தாகி விட்டது. பெங்களூரில் என்ன நடந்திருக்கும்? பத்திரமாய்ப் போய்ச் சேர்ந்திருப்பார்களா? சேகரின் பொறுமை தொடருமா? வசந்தியின் பயம் அகலுமா...?

வலுக்கட்டாயமாய்க் கேள்விகளை மூட்டை கட்டி வைத்துவிட்டு, சமைப்பதற்குச் சோம்பல் கொண்டு, வெறும் மோர் குடித்து விட்டுத் தூங்கினாள்.

அதுதான் காலையில் எழும் நேரத்திலேயே இப்படிப் பசிக்கிறது. கூடவே நேற்றிரவின் கேள்விகளும் மெள்ளச் சுற்றிவர ஆரம்பித்தன.

'இப்படியே பயந்தால் ஆகாது' என மனத்தைத் தேற்றிக் கொண்ட நேரத்தில் பக்கத்து வீட்டு சரோஜா ஜன்னல் வழியே அழைத்தாள் : "சுகி உனக்கு போன் வந்திருக்கு... பெங் களூர் எஸ்.டி.டி.யாம்..."

(அடுத்த இதழில் முடியு





தர்ம சப்தத்தினாலே சொல்லப்படக்கூடியவன் பரமாத்மா. அவன் நடத்திக் காட்டினதெல்லாம் தர்மம் தான். மனிதனாய்ப் பிறந்த நாம் பின்பற்ற வேண்டிய கடமை என்ன என்பதை பரமாத்மா ராமாவதாரத்திலே காட்டியருளினான்.

ஸ்ரீமத் பாகவதத்தில், சுகப்ரும்ம மஹரிஷி இதை விளக்கிச் சொல்லியிருக்கிறார். பரீக்ஷித்தைப் பார்த்து அவர் இதைப் பேசியிருக்கிறார்.

மனிதனாக ராமன் பிறந்தான் என்று கதை கேட்கும்போது, ராக்ஷஸ வதைக்காகத்தான் அப்படி அவதரித்தான், ராவணனை வதைக்கவே அந்த அவதாரம் என்று எண்ணிக் கொள்கிறோம்.

அது மாத்திரமே காரணம் இல்லை. ராக்ஷஸ வதை என்பது ஒரு வியாஜம். முக்கிய குறிக்கோள்



விஷயத்தில் பல பேருக்கு, பல சந்தர்ப்பங்களில், விஞ்ஞான ரீதியாக எழுதப்பட்ட புத்தகங்கள் உதவியிருக்கின்றன. ஆனால், இன்று புத்தகங்களின் இடத்தை டீ.வி. பிடித்துள்ளது. அதனால், விரசமோ, ஆபாசமோ இல்லாவிட்டாலும் இயல்பான கூச்சம் இந்த நிகழ்ச்சியைப் பார்க்கையில் ஏற்படவே செய்யும் – தர்ம சங்கடமும் கூட... Private experience, public message ஆகிவிடுவதால்!

●சூர்யநிலா, சேலம் – 2.

? 'பெருந்தன்மையான பேச்சுக்களால் 'ஜெ' அறிஞர் அண்ணாவாகக் காட்சி அளிக்கிறார்' என்கிறாரே சேடப்பட்டி முத்தையா?

! இன்னும் ஒரு படி மேலே போய், 'அண்ணா எனக்கு ஜெயலலிதாவாகத் தோற்றமளிக்கிறார் என்று சொல்லாததற்காக நன்றி செலுத்த வேண்டியதுதான்!

●கே. சங்கர், திருச்சி – 8.

? விஜய்காந்தின் தண்கள்தான் அதிகபட்ச பெண்களால் விரும்பப்படுகிறது என்று பாண்டிச்சேரி பல்கலைக்கழகம் கூறியிருப்பது பற்றி...?

! ஒரு பல்கலைக் கழகம் மேற்கொள்ள வேண்டிய அதிமுக்கியமான, விஞ்ஞானரீதியான, உலகையே பரபரப்பில் ஆழ்த்தப் போகிற ஆராய்ச்சிதான், பலே! நமது பல்கலைக் கழகங்களின் தரம் எந்த அளவுக்குத் தாழ்ந்து போய்க் கொண்டிருக்கிறது என்பதற்கு ஒரு சான்று.

●ஜி. ஜி. கிருஷ்ணன், விசலூர் – 1.

? பள்ளிகளில் கர்நாடக சங்கீதத்தைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும் என்கிறாரே வலையப்பட்டி...?

! எதையுமே கட்டாயமாக்கினால் வெறுப்புதான் வளரும். வாய்ப்புத் தந்தால் போதும். பலரும் ஆசையோடு பயில வருவார்கள்.


●டி. வரதன், மன்னார்குடி.

? 'பம்பாய்' போல இருவர் படமும் ஒரு கலக்கு கலக்குமா?

! ஒரு கலக்கு கலக்க வேண்டும் என்பதற்காகவே முன்கூட்டியே பேசப்படும் படமாக எடுப்பதில் மணிரத்னம் கில்லாடி ஆயிற்றே. அவர் எதிர்பார்க்கிறபடி கலக்குகிறதோ இல்லையோ, அவர் வரைக்கும் வசூலாகி விட்டது.

* இவர்கள் சந்தித்தால்...





* பாதுகாப்புக் கவலை...

●ஆ. விச்சு, திருப்பத்தூர்.

? ஜெயலலிதா, பூலன் தேவி, சசிகலா, பேனசீர், இந்திரகுமாரி இவர்கள் ஒன்று சேர்ந்தால் என்ன பேசிக் கொள்வார்கள்?

! . சிறைவைக்கப்பட்ட அனுபவங்களை!

●கே. ஆர். உதயகுமார், சென்னை – 1.

? சென்னையில் மாடி பஸ் சர்வீஸ் மீண்டும் துவங்கி விட்டதே?

! ஜாலியாகத்தான் இருக்கு. ஆனால், அதற்காக மரங்கள் வெட்டப்படுவது 'வெரி ஸ்ாரி யாக'வும் இருக்கு!

●அ. ஷண்முகசுந்தரம், சிட்லபாக்கம்.

? 'சி.பி.ஐ. அதிகாரி பிஸ்வாஸை மாற்றுங்கள்' என்கிறாரே லல்லு...?

> ❑ ரூ. 25 பரிசு பெறுபவர் :
> ஜீவியன்,
> 20, வேப்பந்தோப்புத் தெரு,
> திண்டுக்கல் – 1

! லல்லு பரவாயில்லை... தமது தனிப்பட்ட பாதுகாப்பு உணர்வு காரணமாகப் பேசுகிறார். ஆனால் பிரதமரோ தம் அனுமதி இன்றி ஸி.பி.ஐ. எந்த அமைச்சர், எம்.பி. பேரிலும் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று கட்டுப்படுத்த நினைக்கிறார். இந்த அக்கிரமத்துக்கு நாடு உடன்பட்டால், அந்த அதிகாரம் பிரதமர் கையில் ஒரு மகத்தான பிளாக்மெய்ல் ஆயுதமாக மாறிவிடும்!

●எஸ். மதியழகன், நாகூர்.

? உண்மைக்குப் புறம்பாக ஜெ. விடும் அறிக்கைகள் அவரது அரசியல் அறிவின்மையா? ஆணவமா?

! இரண்டும்தான்! தீயணைப்புக் கருவிகள் வாங்கியதில் ஊழல் புரிந்த இன்ஸ்பெக்டர் கைதாகவும், 'இந்த ஊழல் கருணாநிதி காலத்தில் நடந்ததாயிற்றே...' என்று ஜெயலலிதா சுட்டிக்காட்ட முன்வந்தது அறியாமை. ஏனெனில் தமது ஆட்சியில் இந்த ஊழல் மீது நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்பதை மறைக்கவும் மறக்கடிக்கவும் முற்படுகிறார். 'இவ்வழக்கில் கருணாநிதியை ஏன் கைது செய்யவில்லை?' என்று கேட்பதோ ஆணவம் – ஊழலுக்குத் துணைபோன ஒருவர், ஊழலைத் தட்டிக் கேட்பவரை நோக்கி இவ்வாறு பேசுவது ஆணவமின்றி வேறென்ன...!

உன்னை வரலாமா?

"கொஞ்சம் தள்ளுங்க, அம்மா உட்காரட்டும்..." ஸ்டூலைக் கொண்டு வந்து போட்டு உபசரித்துக் கொண்டிருந்தார் கடைக்காரர். பசுமாடு படுத்துக்கொள்வது போல் அசைந்து மெதுவாக உட்கார்ந்த பெண்ணுக்கு எத்தனை மாதமாகியிருக்கும் என்று யூகமாய்க் கணக்கிட்டாள் சுகன்யா.

"முதல்ல அம்பாளுக்கு ஒரு டஜன் சேப்பு வளை கொடுத்துடுங்கோ... அப்புறம் அம்மா கை அளவு பார்த்து டிசைன் பார்த்துப் பொறுக்கி எடுத்துக்கறோம்..." உடன் வந்த மாமி கடைக்காரரிடம் சொல்லி விட்டு சுகன்யாவைப் பார்த்து சினேகமாய்ச் சிரித்தார்.

ஏழு மாதமிருக்கும்... முகத்தில் அலாதியான திருப்தியுடன் இலேசான களைப்பும் இழைந்து கிடந்தது. கைகளில் மருதாணிச் சிவப்பும் தலையில் மல்லிகைப்பூவுமாக கல்யாணக் களையுடன் இருந்தாள்.

"ஏய் சுகி! என்ன அப்படியே மயங்கி நின்னுட்டே..... போலாமா....?" சசி ஆங்கிலத்தில் அதட்டியதும் நகர ஆரம்பித்தாள் சுகன்யா.

ஒரு கையில் பச்சை ஒரு கையில் சிவப்பு என்று இரண்டு டஜன் கண்ணாடி வளையல்கள் கைகளில் குலுங்கின.

"எனக்கு கறுப்புதான் பிடிக்கும்"- சசி இரண்டு கைகளிலும் கறுப்பு வளையல்களை அடுக்கியிருந்தாள். இன்று அவள் பிறந்தநாள். அதற்காக கபாலீசுவரர் கோவிலில் அர்ச்சனை. மரியாதையாக சல்வார் கமீஸ் அணிந்து வந்திருந்தாள். துப்பட்டாவைத் தலையைச் சுற்றி கழுத்தை வளைத்துப் போட்டுக் கொண்டு கேட்டாள்.

"என்ன சுகி! அந்தப் பொண்ணை அப்படியே முழுங்கிடற மாதிரி பார்த்தே...?"

"ஏழு மாசம் இருக்காது....?"

"இருக்கும் - எட்டு மாசம் கூட இருக்கலாம். இப்ப திரும்பப் பார்த்தா நல்லாயிருக்காது..."

"ம்..."

கம்மிய அவள் குரலைக் கேட்டு சசி குழம்பினாள்.

"என்னாச்சு... சுகன்யா...?"

ஓ!... அவ்வளவு ஆசையா இருந்தா சீக்கிரமே ஒண்ணு பெத்துக்கறதுதானே.... ஏன் ஸ்ரீராம் வேண்டாம்ங்கறானா....?"

"இல்லை சசி..."

"பின்னே..."

"ஒரு மிஸ்கேரேஜ் ஆயிடுத்து..."

"ஓ! ஐ'ம் ஸோ ஸாரி... எப்போ...?"

"வசந்தி கல்யாணத்துக்குக் கொஞ்சம் முன்னாடி. சரி இப்போ ஏன் அதைப் பத்திப் பேசணும் விடு..."

"உனக்கு வேண்டாம்னா பேசலை... வசந்தி வந்துட்டாளா...?"

"இன்னும் வரலை. போய் இரண்டு வாரம் ஆயிடுத்து... போய்ச் சேர்ந்த மறுநாள் போன் வந்தது. பக்கத்து வீட்டு சரோஜா ஜன்னல் வழியா 'எஸ்.டி.டி. பெங்களூர் கால்'ன்னு கத்தினப்போ எனக்கு பயங்கர டென்ஷனாயிடுச்சி... 'பத்திரமா வந்து சேர்ந்துட்டோம்; எவ்ரிதிங் இஸ் ஓ.கே'ன்னு சேகர் பேசினான். இனிமே போனே பண்ணாதீங்க... வரும்போது நல்ல செய்தியோட வாங்கன்னு சொல்லி வைச்சுட்டேன்..."

"உன் மாமனார் உன்னை இதோட விட்டாரேன்னு ஆச்சரியமாயிருக்கு சுகி..."

"வேற வழி...? ஆனா கொஞ்சம் ஆடித்தான் போய்ட்டார். கடைசியில ரொம்ப உணர்ச்சி வசப்பட்டுட்டார். அங்க வந்து இரேம்மான்னார்..."

"போக வேண்டியதுதானே... நிம்மதியா மாமியார் சமையலைச் சாப்பிட்டுக்கிட்டு ஒரு வாரம் இருந்திருக்கலாமில்ல..."

"அது சரிப்படாது சசி... நான் ஒரு எல்லையக் கடந்து அங்க உள்ளே போக முடியாது..."

"முன்னுக்கு பின் முரணா பேசறே... குழம்பிப் போயிருக்கே நீ..."

"நான் ஒண்ணும் குழம்பிப் போகல்ல... இப்பதான் ரொம்பத் தெளிவா இருக்

அனுராதா ரமணன் ?

கேன்... அவங்கதான் இன்னும் குழப்பத்துல இருக்காங்க.." பேசியபடி நடந்து கொண்டே மயிலாப்பூர் பஸ் ஸ்டாண்ட் வந்திருந்தார்கள். ஒரு ஆட்டோவை நிறுத்தி "நாகேஸ்வர ராவ் பார்க்" என்றாள் சசி. முறைத்துவிட்டு கோபமாய்ப் போய் விட்டார் ஆட்டோக்காரர்.

"பேசிக்கிட்டே நடந்துடலாமா...?" சின்னக் குழந்தையைப் போல் சசி கையைப் பிடித்துக் கொண்டாள். "சொல்லு என்ன குழப்பம் அவங்களுக்கு...?"

"என்னை ஏத்துக்கறதா வேண்டாமான்னு ஆரம்பத்துலேருந்து குழப்பம். பிள்ளை இப்படி குலம் கோத்ரமில்லாத ஒருத்தியைக் காதலிச்சுட்டானேன்னு கோபம். ஆனா ஒரு பெண்ணுக்கு மனசுல ஆசை வளர்த்திட்டான். அதனால உடனே அதை நிறைவேத்தணும்னு



க்டமையுணர்வு. வேற வழியில்லாம ஏத்துக்கிட்டாங்க... அப்புறம் அவங்க பழக்க வழக்கத்தோட ஒத்துப்போக முடியலைன்னு திரும்பவும் கசப்பு... வசந்தி கல்யாணத்துக்கு முன்னாடி நடந்த கலாட்டாதான் உனக்குத் தெரியுமே... அவளைச் சமாதானப்படுத்தி அவங்களால சமாளிக்க முடியலை. அதையே என்னால செய்ய முடிஞ்சப்ப ரொம்ப நெருங்கி வந்துட்டாங்க... அபார்ஷன் ஆகிப் படுத்தப்போ இரண்டு நாள் மாமனார் என் கூடவே ஆஸ்பத்திரியில இருந்தார்.

"ஹௌவ் ஸ்வீட்...!"

"எப்ப ஸ்வீட் எப்ப காரம்னுதான் சொல்லவே முடியாது! இப்போ இவங்கள பெங்களூர் அனுப்பிட்டேங்கற கோபத்துல 'எங்க குடும்ப மானத்தைக் கப்பலேத்திட்டியே'ன்னு... ஒரேடியா கழுத்தப் புடிச்சுத் தள்ற மாதிரி பேசிட்டார்... அப்புறம் அவரே நிலைக்கு வந்து சகஜமானார்... நாம எவ்வளவுதான் முழு மனசோட அவங்களை ஏத்துக்கிட்டாலும் நம்மை மாத்திக்கிட்டாலும் ஒரு ஓரத்துல, அடி மனசுல அந்த அந்நிய உணர்வை ஒட்டவச்சுக்கிட்டுத்தான் அவங்க பார்க்கறாங்க.... அதை ஒண்ணுமே பண்ண முடியாது..."

"விரக்தியா பேசாதே சுகி... எனக்கே கஷ்டமா இருக்கு கேட்கறதுக்கு..."

"இல்ல சசி... விரக்தி இல்லை இது... தெளிவு. நம்மை எங்கே நிக்க வைச்சிருக்காங்கறதுல நாம ரொம்ப தெளிவா இருக்கணும். என்னைப் பொறுத்த வரைக்கும் நிலைப்படியிலதான் வைச்சுருக்காங்க... உள்ளேவான்னு கூப்டா போகணும். வெளியில இருன்னு சொன்னா இருக்கணும்... அவங்களுக்கு உபயோகமாயிருக்கற வரைக்கும் வரச் சொல்லி ஏத்துக்குவாங்க. உபத்திரவமா தோணினா போகச்சொல்லிடுவாங்க..."

"இப்படிப் பேசினா விரக்தி இல்லாம என்னவாம் - வேப்பெண்ணெய் கசப்பு இது..."

"கசப்பேயில்ல... ஏன்னா நான் 'உள்ளே வரலாமா?'ன்னு இனிமே கேட்கப் போறதில்ல... அவங்களை சொந்தமா, பந்தமா, உறவா நினைச்சாத்தானே உள்ளே போகறதும் வெளில வரதும் வேதனையான விஷயமாகுது... அப்படி நினைக்காம மனிதர்களா - just people- நினைச்சுக்கிட்டா எந்த உணர்வுச் சிக்கலும் இல்ல..."

"கொஞ்ச நாள் ஆனா அவங்களை வெறுக்க ஆரம்பிச்சுடுவே...!"

"ஐயோ இல்ல... உனக்கேன் புரியலை...? உறவு சொந்தம்னு இல்லாதவங்களை நம்மால நேசிக்க முடியலையா என்ன...? அந்த மாதிரி அன்பா இருந்துட்டுப் போறோம், எதிர்பார்ப்புகள் இருக்காதுன்னு சொல்ல வரேன்..."

"கல்யாணமானா ஒவ்வொருத்தருக்கும் என்னென்னவோ வரும்... உனக்கு விவேகம் வந்திருக்கு!" பற்றியிருந்த கையை அழுத்தினாள் சசி.

"ஸ்ரீராமுக்குப் பெண்டாட்டியாயிருந்து அது வரலைன்னாதான் ஆச்சர்யம்."

"உபயோகமா, உபத்திரவமான்னெல்லாம் பார்க்காம 'எங்க சுகன்யா'ன்னு அவங்க மாற ஆரம்பிச்சா என்ன பண்ணுவே...?" - தோளில் கைபோட்டபடி நாகேஸ்வர ராவ் பார்க்குக்குள் நுழைந்தார்கள்.

"அப்போ பார்த்துக்கலாம்..."

ஒரு மணி நேரம் வீசி நடந்து, வேர்க்கடலை வாங்கித் தின்று... 'லேட்டாச்சு. இப்ப போகலைன்னா வார்டன் எந்த பாய் பிரண்ட் வீட்லயிருந்து வரேங்கற மாதிரி பார்க்கும்' - சசியை ஆட்டோவுக்குள் தள்ளி அனுப்பி விட்டு வீடு வந்து சேர்ந்தபோது போஸ்ட் பாக்ஸில் நான்கு கடிதங்கள். ரீடர்ஸ் டைஜஸ்ட் ஸ்பெஷல் ஆஃபர், டைம் ஷேர் வாங்க கவர்ச்சிகரமான அழைப்பு, ஸ்ரீராமின் எல்.ஐ.சி. ப்ரீமியம் நினைவூட்டல். அப்புறம்... 'சுகன்யா ஸ்ரீராம்' என்று அழகாக வலப்புறம் சாய்ந்த கையெழுத்தில் விலாசம் எழுதி, ஸ்ரீராமின் விமானத் தபால் கத்தையாக இருந்தது.

அதைப் பார்த்ததும் எழுந்த சந்தோஷத்தில் சாவி துவாரத்தைத் துழாவி, கதவு திறந்து...

ஹால் விளக்கை எரியவிட்டு சோபாவில் உட்கார்ந்து மிக மெதுவாக உறையைப் பிரித்தாள் சுகன்யா.

'என் ப்ரியமான சுகன்யா...' எழுத்துக்கள் கண்ணீரில் குழம்ப, மெதுவாக மிக மெதுவாகப் படித்தாள். முன்னும் பின்னுமாய்க் காகிதத்தில் ஆறு பக்கங்கள் எழுதியிருந்தான்.

பணியின் சவால், பயணக் களைப்பு, சுற்றுலா அனுபவம் என்று அடுக்கடுக்காய்த் தகவல்களின் ஊடே, சரடு போல காதல் ஓடியது; பிரிவாற்றாமை தொக்கி நின்று வேதனைப்படுத்தியது.

கண்களை அழுந்தத் துடைத்துக் கொண்டு மீண்டும் ஒருமுறை ஆறு பக்கங்களையும் ஊன்றிப் படித்தாள். 'இருபத்தேழாம் தேதி இந்திய நேரப்படி இரவு ஒன்பது மணிக்கு சரோஜா வீட்டுக்கு போன் செய்கிறேன். அங்கே போய்க் காத்திரு...'

இருபத்தேழு.... இன்றைக்குத்தான்! இன்னும் இரண்டு மணி நேரம் காத்திருக்க வேண்டும். என்ன பேசலாம்...? 'வசந்தியும் சேகரும் பெங்களூர் போயிருக்காங்க... எப்போ வருவாங்கன்னு தெரியாது. நீ எப்போ வருவே ஸ்ரீராம்...? ஒருநாள் ராத்திரி மொட்டை மாடியில நிலாவோட சேர்ந்து காய்ஞ்சேன்... ஊஹூம்... சரோஜா வீட்டில் இருந்து [illegible]

எழுதியவர் யார்?

தங்க நகைப் பரிசுக் கூப்பன்

இந்த இதழுடன் நிறைவடைகிற 'உள்ளே வரலாமா?' தொடரை கவனமாகப் படித்து விட்டீர்களா? தொடரை எழுதியவர் யார் என்பதைக் கண்டுபிடித்திருப்பீர்களே? பின் வரும் 26 எழுத்தாளர்களில், தொடரை எழுதியவராக நீங்கள் கருதுபவரின் பெயரை கூப்பனில் எழுதி 3.2.97க்குள் அனுப்பி விடுங்கள். சரியான விடை எழுதும் ஒரு வாசகருக்குத் தங்க நகை பரிசு. பலர் சரியாக எழுதி விட்டால் குலுக்கலில் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

1. சுஜாதா, 2. பாலகுமாரன், 3. தேவி பாலா, 4. இந்திரா சௌந்தர்ராஜன், 5. சிவசங்கரி, 6. இந்துமதி, 7. அனுராதா ரமணன், 8. இரா. முருகன், 9. சீதா ரவி, 10. கி. ராஜநாராயணன், 11. பா. ராகவன், 12. வாஸந்தி, 13. ம.வே. சிவகுமார், 14. வைரமுத்து, 15. ஆர்னிகா நாசர், 16. கி. ராஜேந்திரன், 17. பிரபஞ்சன், 18. மஞ்சுளா ரமேஷ், 19. பட்டுக்கோட்டை பிரபாகர், 20. அசோகமித்ரன், 21. வையவன், 22. ரா.கி. ரங்கராஜன், 23. ரமணி சந்திரன், 24. கி. கஸ்தூரி ரங்கன், 25. இந்திரா பார்த்தசாரதி, 26. ராஜேஷ்குமார்.

'உள்ளே வரலாமா?'
தொடரை
எழுதிய எழுத்தாளர்:

....

பெயர்:..

முகவரி:..

....

....

இதெல்லாம் பேச முடியாது!'

கடிதத்தை அப்படியே சோபாவில் வைத்துவிட்டு, உடை மாற்றி சமையலறைக்குள் போனாள் சுகன்யா. டூ-இன்-ஒன்னில் டேப்பைப் போட்டுவிட்டு, சப்பாத்திக்கு மாவு பிசைந்த நேரத்தில் வாசலில் ஹாரன் சப்தம். மாவுப் பாத்திரத்துடன் போய் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள். கேட்டைத் திறந்து உள்ளே நுழைந்து கொண்டிருந்தது...? இருட்டிலும் உயரம் அடையாளம் சொல்லிற்று - சேகர்! பின்னால் வசந்தி.

மாவுக் கை மறந்து கதவைத் திறந்தாள் சுகன்யா.

"ஹலோ சுகன்யா! திடீர்னு இன்னிக்கு மத்தியானம் கிளம்பி வந்துடலாம்னு முடிவு பண்ணினோம். டாக்ஸி பிடிச்சு நேர இங்கதான் வரோம்..."

"நைஸ் டு ஹாவ் யூ பேக்..." அடுத்தபடி என்ன பேசுவது என்று புரியாமல் சுகன்யா அவர்கள் பேசக் காத்திருந்தாள்.

"மன்னி..." என்று ஆரம்பித்த வசந்தியின் கண்களில் ஸ்ரீராமின் கையெழுத்தைத் தாங்கிய கடிதம் பட்டுவிட...

"ஹையா! அண்ணாகிட்டேயிருந்து இன்னிக்குத்தான் லெட்டர் வந்ததா மன்னி..? அதான் முகமே தனி களையா இருக்கு... என்ன எழுதியிருக்கான் அண்ணா...? நான் சொல்லட்டுமா...?"

கண்களின் குறும்பிலும் உரிமையுடன் வம்புக்கிழுத்த கேலிப் பேச்சிலும் வசந்தி பளிச்சென்று வித்தியாசமாய்த் தெரிந்தாள்.

"இங்க வா உன்னை நல்லா பார்க்கறேன்..." புறங்கையால் தள்ளிக் கொண்டு சமையலறைக்குப் போனாள் சுகன்யா.

"எத்தனை அழகாயிருக்கு உனக்கு இந்தப் புடைவை..."

"சேகர்தான் செலக்ட் பண்ணினார்..."

"அட! பேரெல்லாம் சொல்ல ஆரம்பிச்சுட்டீங்களோ...?"


"ம்..." என்றாள் வசந்தி இலேசாக வெட்கப்பட்டு! ஒருகணம் தயங்கியவள், வேகமாய் முன்னேறி சுகன்யாவின் தோளைச் சுற்றி அணைத்து, தலையைச் சாய்த்துக் கொண்டு சொன்னாள். "தாங்க் யூ மன்னி... ஃபர் எவ்ரி திங்."

"சந்தோஷமா இருக்கியா...?"

"இருக்கோம்..." அதே மூச்சில் வசந்தியின் இதழ்கள் சுகன்யாவின் கன்னத்தில் பெரிய முத்தமாய்ப் பதித்தன. அனுபவித்துச் சிரித்தாள் சுகன்யா.

"சேகர். இந்த டீயை சமர்த்தா குடிச்சுட்டு உடனே மாமனாரைப் பார்க்கப் போவீங்களாம். அப்புறம் அதே வேகத்துல வீடு போய்ச் சேருவீங்களாம். வாசல்ல டாக்ஸி இருக்கில்லியா...?"

பிரிட்டனை வதைக்கும் பிரச்னை!



பிரிட்டனை இன்று ஒரு பிரச்னை வாட்டி வதைத்துக் கொண்டு இருக்கிறது.

சின்னச் சின்ன எறும்புகள், பூதக் கண்ணாடியில் பார்த்தால்தான் தெரியும். அத்தனை சிறிய எறும்புகள். நியூசைன்டிஸ்ட் என்ற விஞ்ஞானப் பத்திரிகை இந்த எறும்புகளை 'பேய்கள்' என்று பெயர் சூட்டி இருக்கிறது!

இந்த எறும்புகளின் கால்களும், கறுப்பான தலையும் தான் கண்களுக்குத் தெரியும். வயிற்றுப் பகுதி தெரியாது. இந்த எறும்புகள் வெளிச்சமான பகுதிகளில் சென்றால் தான், இப்படியாவது தெரிகின்றன.

இந்தப் 'பேய்கள்' மிகவேகமாக, அதுவும் வட்ட வடிவமாக ஓடி மறைகின்றன. ஏதாவது தொல்லை நேரும்போது.

இந்த எறும்புகள் யாரையும் கடிப்பதில்லை. ஆனால் அருவருப்பை உண்டாக்கி விடும். அவற்றைப் பார்த்தால் கூட மனம் தடுமாறத் தொடங்குகிறது.

இந்தப் பேய் எறும்புகள் மருத்துவமனைகளில் நுழைந்து விட்டால், நோய்க்கிருமிகளைப் பரப்ப வாய்ப்பு இருக்கிறது என்று மருத்துவர்கள் நினைக்கின்றனர்.

அமெரிக்காவிலுள்ள வடக்கு ஃப்ளாரிடாவிலிருந்து இந்த எறும்புகள் பிரிட்டனுக்குள் நுழைந்து இருக்கின்றன.

எப்படி இந்தச் சின்னஞ்சிறு எறும்பைக் கண்டு பிடிப்பது?

இவைகளை யாராவது தொல்லை தந்தால் அல்லது கொன்று விட்டால் அழுகிப் போன தேங்காய் நாற்றம் அடிக்கிறது.

– சேலம் சக்திக் கொடி

"யெஸ் காப்டன்!" என்றான் சேகர் பவ்யமாக தலை தாழ்த்தி.

"இன்னிக்கு ஸ்ரீராம் போன் பண்ணுவான் ஒன்பது மணிக்கு... உங்க சார்புல என்ன சொல்லட்டும் அவனுக்கு...?"

"சாஃப்ட் வேர் வித்த வரைக்கும் போதும்... இங்க சுகன்யா காத்துக்கிட்டிருக்காங்க. அதனால சீக்கிரம் வரச் சொன்னேன்னு சொல்லுங்க..."

"இது மட்டும் முதலாளி ராஜு காதுல விழட்டும்... நம்மளை உண்டு இல்லைன்னு பண்ணிடுவார்..."

"வரட்டும்! நான் சமாளிக்கிறேன் அவரை ஒண்டிக்கு ஒண்டி..."

அர்த்தமில்லாத கிண்டலும் சிரிப்புமாக வீடு இலகுவாகி கலகலத்தது.

"கிளம்புங்க" என்று அவர்களை மூட்டை கட்டி வெளியேற்றினாள் சுகன்யா.

டெலிபோன் கனவில் ஒலிப்பதுபோல் இருந்தது. பக்கத்திலிருந்த சுகன்யா பாய்ந்து எடுத்தாள்.

"ஹலோ...."

"சுகி...?"

"ஊம்... நான்தான்..."

சரோஜா அவசரமாக டீ.வியை அணைத்து விட்டு பக்கத்து அறைக்குப் போனாள்.

"எப்படியிருக்கே...?"

"உன் குரலைக் கேட்கவே சந்தோஷமாயிருக்கு ஸ்ரீராம்..."

"இன்னும் பதினஞ்சு நாள் பொறுத்துக்கோ. அப்புறம் தினமும் காதுக்குள்ளேயே பேசுவேன்..."

"என்ன பேசுவே...?"

"இப்ப சொல்லிடுவேனா...?"

"நீ எப்படியிருக்கே ஸ்ரீராம்...?"

"ஓ.கே... அங்க எல்லாரும் சௌக்கியம் தானே...? அப்பாவுக்கு அடுத்த வாரம் இதே நேரம் போன் பண்றேன்னு சொல்லு... அன்னிக்கு நீ அங்கே வரியா...?"

"..........."

"என்ன...? சுகி... ஆர் யூ தேர்...?

"இருக்கேன் ஸ்ரீராம். வரேன். கட்டாயமா நீ போன் பண்றப்போ அங்க இருப்பேன்."

"உனக்கு இங்கேருந்து ஏதாவது வேணுமா...?"

"ஒண்ணும் வேண்டாம்... நீ சீக்கிரமா வா... ரொம்ப சீக்கிரம்..."

குரலிலிருந்த கெஞ்சலையும் உணர்ச்சி மிகுதியையும் வடிகட்டி கிரஹித்துக் கொண்ட ஸ்ரீராம் மென்மையாய்க் கேட்டான்.

"என்னம்மா சுகி... என்ன ஆச்சு...?"

"ஒண்ணுமில்ல..." என்றாள் சுகன்யா. "வசந்தி அம்மாவாகறத்துக்கு முன்னாடி நாம் அவளை அத்தையாக்க வேண்டாமா...?"

(முற்றும்)

‘சுட்ட’ பழம்


‘விமர்சனம் செய்வதைக் கைவிட்டு ஐக்கிய முன்னணி அரசு மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் ஊக்கப்படுத்த வேண்டும்.”

– தேவே கௌடா

கனிந்த சிந்தனை!

அடடா! ஐக்கிய முன்னணிக்கு மட்டுமா இந்த அறிவுரை...! நாடே பின்பற்ற வேண்டிய முன்னு தாரணம் அல்லவா இது என்று சிலிர்ப்பு ஏற்படுகிறது.

உதாரணமாக நம் குடும்பங்களையே எடுத்துக் கொள்வோம்... மனைவி, சாம்பாரில் உப்புப் போட மறந்தால், ‘சாம்பாரா இது? கழுநீர்!’ என்று கடுமையாக விமர்சிப்பானேன்!



‘‘ஆஹா! கமலா, என்ன சிக்கனமா குடும்பம் நடத்துறே... இன்னைக்கு உப்பை மிச்சம் பிடிச்ச மாதிரி, நாளைக்கு புளி - மிளகாயும் நாளன்னைக்கு வெங்காயம் தேங்காயும் மிச்சம் பிடித்துக் காட்டு பார்க்கலாம்...’’ என்று மனைவியைக் கணவன் ஊக்குவிக்கலாம்.

இப்படி தினம் தினம் ஒரு மாதத்துக்கு மிச்சம் பிடித்த நூற்றியாறு ரூபாயில், கமலா ஒரு பிளவுஸ் துணி வாங்கிவிட்டு, அதைத் தைத்துக் கொள்ள ஐம்பது ரூபாய் தையல் கூலி கேட்டால் தேவே கௌடாவா பொறுப்பாக முடியும்!

‘‘ஐயோ! பெரிய வித்வானாயிற்றே, காட்டமாய் விமர்சிக்க முடியாதே’’ என்று இனி சங்கீத விமர்சகர்கள் பயப்படவே வேண்டாம். தேவே கௌடாவே சொல்லி விட்டாரே... என்று தைரியமாய் எழுதலாம். ‘பாடகரின் உச்சரிப்பு எப்படி இருந்தால் என்ன...? அவருக்கு சுருதியே சேராவிட்டால்தான் என்ன... பின்னாலிருந்த தஞ்சாவூர் தம்பூரா என்ன அற்புதமாய் சுருதி சேர்ந்து இருந்தது... இதைப் போல் ஒரு தம்பூரா நாதத்தை என் அறுபத்தைந்து வருட சர்வீஸில் கேட்டதேயில்லை’ என்று ஊக்குவித்துத் தூக்கிவிடலாம்.

சினிமா விமர்சகர் இன்னும் ஒரு படி மேலே போகலாம். ‘கதை கதை என்று ஏன்தான் சில அசடுகள் ஆலாய்ப் பறக்கிறார்களோ தெரியவில்லை... கதையேயில்லாமல் படம் எடுத்துள்ள கானாதானா டைரக்டரைப் பாராட்டி தேசிய விருது சிபாரிசு செய்கிறேன்’ என்று எழுதலாம்.

பெட்ரோல் விலை ஏறட்டும், பட்ஜெட் வரட்டும், என்று பேனாவைத் தீட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கும் அரசியல், பொருளாதார விமர்சகர்கள் கூட பொறுமை கொள்ள வேண்டும்.

‘என்ன விலைவாசி ஏறினால் என்ன... பிரதமர் சளைக்கிறாரா...? மூப்பனார் வீட்டுக் கல்யாணமானாலும் சிதம்பரம் வீட்டுக் கல்யாணமானாலும் செலவைப் பார்க்காமல் பறந்து வந்து மொய்யெழுதலையா..? ஒரு சாதாரண விவசாயக் குடிமகனால் முடியும் போது, உங்களால் முடியாதா என்ன...!’ என்று மக்களை ஊக்குவிக்காமல், காரசாரமான வார்த்தைகளால் விளாசுவானேன்...!

– சில்மிஷா

‘மானென அவளைச் சொன்னால்
மருளுதல் அவளுக் கில்லை
மீன்விழி உடையா ளென்றால்
மீனிலே கருமை யில்லை
தேன்மொழிக் குவமை சொன்னால்
தெவிட்டுதல் தேனுக் குண்டு
கூன்பிறை நெற்றி என்றால்
குறைமுகம் இருண்டு போகும்!’

– இப்படி நாமக்கல் கவிஞர் உவமைகளைத் தேடித் தேடி கிடைக்காமல் தவித்தாரே.... அது ஒருவேளை இந்தப் பேரழகியைப் பார்த்துத் தானோ என்று வியந்தார்கள் கவிதை மனம் படைத்த இளைஞர்கள்.

இப்படியொரு பேரழகைக் கட்டிக் காக்கிற வசதி நமக்கல்லவோ இருக்கிறது. போயும் போயும் இந்த ஏழைக்கு மனைவியாகி விட்டாளே என்று ஏக்கப் பெருமூச்சு விட்டார்கள் பணக்காரர்கள்.

அவளோ தான் ஒரு பேரழகி என்கிற உணர்வே இல்லாமல் இருந்தாள். ஏழைக் கணவனோடு இதயம் நிறைந்து வாழ்ந்தாள்.

ஆனாலும் பணக்காரர்களின் ஏக்கப் பெருமூச்சுகள் அடங்கிப் போனபாடில்லை. ஏக்கம் பொறாமையாகி, மூச்சுகளில் உஷ்ணமேறின. ஏழைக்கு ஒரு விலையில்லாமலா போய்விடும் என்று முயன்று பார்த்தனர். அவள் நெருப்பாகச் சுடவே முடியாமல் குமுறினர்!

“நீதான் உன் மனைவியைக் கொலை செய்து விட்டாய்!” – போலீஸ்காரர்கள் அந்த ஏழைக் கணவனை ஒருநாள் கைது செய்தனர்.

“ஐயா எனக்கு ஒன்றுமே தெரியாது. என் மனைவியை – என் பொக்கிஷத்தை நானே கொலை செய்வேனா... எனக்கு ஒன்றுமே தெரியாது!” – கதறிக் கதறி அழுதான் கணவன்.

அவன் கதறல் எடுபடவில்லை. சாட்சியங்கள் அவனுக்கு எதிராகவே இருந்தன. மிரட்டலுக்குப் பயந்து கொண்டு கேட்ட இடத்தில் கையெழுத்துப் போட்டு விட்டான் அந்த ஏழைக் கணவன். அதாவது தானே தன் மனைவியைக் கொலை செய்ததாக வாக்கு மூலத்தில் கையெழுத்துப் போட்டு விட்டான். விளைவு? தூக்குத் தண்டனை!

மாஜிஸ்திரேட் கோர்ட்டில் கொடுத்த தூக்குத் தண்டனையை உறுதிப்படுத்துவதற்காக சட்டப்படி வழக்கு செசன்ஸ் கோர்ட்டுக்கு வந்தாக வேண்டும். வந்தது.

அவனுக்காக வாதாட வந்த வக்கீல் அவனைச் சென்று பார்த்தார். பேசினார்.

நடந்த எல்லாவற்றையும் அவன் விளக்கமாகச் சொன்னான். தனக்கு எதுவுமே தெரியாது என்று சொன்னான்.

காலம்

கனகராஜன்



புறப்படும்போது அம்மா இரண்டு நாட்களாகச் சொல்லிக் கொண்டிருந்ததைச் சொன்னாள்.

"மறக்காம லட்சுமியக்கா வீட்டுக்குப் போயிட்டு வந்துரு."

அவனுக்குக் கல்யாண வீட்டை விட லட்சுமியக்கா வீட்டின் நினைவுக் காட்சிகள்தான் மனசில் ஓடின.

முதலில் சுகுமாரன் முகம் தோன்றியது.

சுகுமாரன் தத்துவம் பேசினான். சிரித்தான். பாடினான். ஆடினான். கத்தினான். நடந்தான். கோபமாகப் பார்த்தான். கல்லை எடுத்து வீசினான். யார்மண்டையிலோ பட்டது.

சுகுமாரனின் தங்கை மாதவி ஒரு வாரம் தலையில் கட்டுப் போட்டுக் கொண்டு வேலைக்குப் போனாள்.

சுகுமாரனின் அப்பா பெரியசாமி தினமும் குடித்துக் கொண்டுதான் வருவார். மகன் பைத்தியமாகிப் போய் விட்ட கவலை. சில நேரங்களில் ரோட்டில் படுத்துக் கொண்டிருப்பார். யாராவது பார்த்துவிட்டு வந்து சொல்வார்கள். லட்சுமியக்கா பதறியடித்துக் கொண்டு ஓடுவாள்.

சுகுமாரனின் அம்மா லட்சுமியக்காவிற்கு அடிக்கடி பதறியடித்துக் கொண்டு ஓடுகிற வாழ்க்கை.

சுகுமாரன் திடீரென்று இரண்டு நாட்கள் காணாமல் போய் விட்டான். லட்சுமியக்கா அலைஅலையென்று அலைந்தாள். வாய்க்கால்மேட்டில் யாரோ பிணம் மிதந்து கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். அலறியடித்துக் கொண்டு ஓடினாள். சுகுமாரன் இலலை.

மருதமலை அடிவாரத்தில் சுகுமாரன் சுற்றிக் கொண்டிருப்பதாகத் தகவல் வந்தது. தயாளனையும் சண்முகத்தையும் கூட்டிக் கொண்டு ஓடினாள். படிக்கட்டில் உட்கார்ந்து கொண்டு போவோர் வருவோரிடம் பிச்சை கேட்டுக் கொண்டிருந்தான்.


"அடப்பாவி மகனே..." என்று அவனருகே போய் அமர்ந்து அழுது புலம்பினாள்.

சுகுமாரனிடம் தயாளன் ஏதேதோ பேசி ஆசை காட்டினான். அவனை அடிவாரத்திலிருந்து இழுத்து வருவதற்குள் படாதபாடு பட்டு விட்டார்கள்.

"போலீஸ்காரர் நிக்கறார்... வந்துரு... போயிடலாம்..." என்று பஸ் டிரைவர் ஒருத்தரைக் காட்டிச் சொன்னதும் மிரண்டு போய் கூட வந்தான்.

வாடகைக் கார் பிடித்து அவனை துடியலூருக்கு அழைத்து வந்தார்கள்.

சுகுமாரனுக்கு பதினேழாவது வயதில் பைத்தியம். கடுமையானதாக இல்லாவிட்டாலும் ஒருவிதக் கிறுக்குத்தனம் பிடித்துக்



கொண்டதாகச் சொல்வார்கள்.

தயாளனின் குடும்பம் லட்சுமியக்காவின் வீட்டிற்குக் குடிவந்த போது சுகுமாரனுக்கு இருபத்தி நான்கு வயது.

லட்சுமியக்கா மூன்று அறைகளை வாடகைக்கு விட்டிருந்தாள்.

முதல் நாள் பார்த்தபோது சுகுமாரன் திண்ணையில் அமைதியாய் உட்கார்ந்து கொண்டிருந்தான். இரண்டாவது நாளும் அப்படியே. மூன்றாவது நாள்தான் அவனது நோய் தெரிந்தது. பஸ் ஸ்டாப்பில் துண்டு பீடி, சிகரெட்டுகளை பொறுக்கிக் கொண்டிருந்தான். கீழே கிடந்த பழைய லாட்டரிச் சீட்டுகளைப் பொறுக்கிச் சட்டைப் பையில் திணித்துக் கொண்டிருந்தான். பஸ் நிற்கிற போதெல்லாம் ஓடிப் போய் 'போலாம் ரைட்... போலாம் ரைட்...' என்று கத்திக் கொண்டிருந்தான்.

தயாளனுக்கு சந்தேகம் வந்தது. பக்கத்து அறையில் குடியிருந்த சண்முகத்திடம் கேட்டான்.

சுகுமாரனுக்குப் 'பைத்தியம்'. அவன் பைத்தியமாகி விட்ட கவலையில் பெரியசாமி பெரிய குடிகாரர் ஆகிவிட்டார். வேலைக்குப் போவதில்லை. கல்யாண வயசில் மாதவி. செயற்கை வைரம் தீட்டும் கம்பெனிக்கு வேலைக்குப் போகிறாள். லட்சுமியக்காவிற்கு புருசனையும் மகனையும் பார்த்துக் கொள்கிற வேலை. வீட்டு வாடகைப் பணமும் மகளின் சம்பளப் பணமும் குடும்பத்தை ஓட்டுகிறது.

பெரியசாமி குடிக்கப் பணம் கேட்டு ரகளை செய்வார். பணம் தராவிட்டால் ஏதாவது ஒரு பொருளைத் தூக்கிக் கொண்டு போய் விடுவார். மாதவியின் வாட்சை ஒரு தடவை தூக்கிக் கொண்டு போய் விற்று – குடித்துத் தீர்த்தார்.

மாதவியின் முகத்தில் புன்னகையையே பார்க்க முடியாது. யார் கூடவும் பேசவும் மாட்டாள். அவள் அதிகமாகப் பேசிய வார்த்தைகள் இதுவாகத்தான் இருக்கும். "அம்மா... நான் போயிட்டு வர்றேன்..." வேலைக்குப் போகும்போது சொல்வது.

நாலைந்து தடவை மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் வந்து அவளைப் பெண் பார்தது விட்டுப் போனார்கள். அப்பா குடிகாரர், அண்ணன் பைத்தியம் என்பதைக் காரணம் காட்டி அதிகமாக நகை கேட்டார்கள். வீடு முழுக்க மாதவியின் பேரில் இருக்க வேண்டும் என்றார்கள்.

மாதவியின் கல்யாணம் தள்ளிக் கொண்டே போனது.

லட்சுமியக்கா புருசனைப் பற்றிக் கவலைப்பட்டாள். மகன் பைத்தியம் தெளிய வேண்டுமே என்று ஏங்கினாள். மகள் கல்யாணம் தள்ளித் தள்ளிப் போகிறதே என்று வேதனைப்பட்டாள்.

லட்சுமியக்கா எல்லோருடனும் பிரியமாகப் பழகினாள். பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு ஓடி ஓடி உதவி செய்கிறவளாக இருந்தாள்.

சுகுமாரனை அடிக்கடி பக்கத்து ஊர்க் கோவில்களுக்கு கூட்டிப் போவாள். தூரத்தில் ஏதாவதொரு கோவிலின் பெருமை பற்றிக் கேள்விப்பட்டால் சுகுமாரனை அழைத்துப் போய் இரண்டு நாட்கள் இருந்துவிட்டு வருவாள். துணைக்கு சண்முகமோ, தயாளனோ கூடப் போய் வருவார்கள்.

ஆஸ்பத்திரி ஆஸ்பத்திரியாக ஏறுவதும் தொடர்ந்தது. பூரண குணமாவதற்கான வாய்ப்புகளே அதிகம் இருப்பதாக டாக்டர்கள் சொன்னதால் மருந்து, மாத்திரை என்று மாதவியின் சம்பளப் பணமும் கரைந்தது.

சுகுமாரனுக்கு மருந்து, மாத்திரைகள் தருவதற்குள் லட்சுமியக்கா படாதபாடுபட்டு விடுவாள்.

"அய்யோ... என்னை வெஷம் குடுத்துக் கொல்ல வர்றா..." சுகுமாரன் கத்துவான். அவனை இரண்டு பேர் பிடித்துக் கொண்டு மருந்துகளை விழுங்க வைக்க வேண்டும். அவனுக்கு வெறி அதிகமாகி விடும். வயிற்றுக்குள் போன மருந்தை வெளியே வரவழைக்கக் கண்டபடி துப்புவான். கோபத்தில் லட்சுமியக்காவைப் போட்டு அடித்து விடுவான். அத்தனை அடிகளையும் அவள் தாங்கிக் கொள்வாள். ஒரு தடவை அவனிடம் உதைபட்டு இரண்டு நாட்கள் நடக்க முடியாமல் அவதிப்பட்டாள்.

பெரியசாமி குடித்து விட்டு வந்து சுகுமாரனைப் போட்டு அடிப்பார்.

"செத்துப் போடா... செத்துப் போடா..." என்று...

பெரியசாமியை தயாளனும் சண்முகமும் இழுத்துக் கொண்டு போவார்கள்.

"விடுங்கடா... விடுங்கடா... அவனைக் கொல்லணும்..." என்று கதறுவார்.

அந்தக் காட்சியைப் பார்த்துவிட்டு லட்சுமியக்கா சுவரோடு சாய்ந்து கொண்டு அழுவதைப் பார்க்க மனசுக்குக் கஷ்டமாக இருக்கும்.

தயாளனின் அப்பாவிற்கு பொள்ளாச்சிப் பக்கம் வேலை மாற்றம் வந்தது.

"தயாளா... கோயமுத்தூர் வந்தா எங்க வீட்டுக்கு வா... அடிக்கடி வந்திட்டுப் போங்க. மறந்திடாதீங்கப்பா..." லட்சுமியக்கா கண் கலங்க வழியனுப்பி வைத்தாள்.

ஆறேழு வருடங்கள் ஆகிவிட்டன.

துடியலூர் போகிற சந்தர்ப்பமோ, லட்சுமியக்காவைப் பார்க்கிற வாய்ப்போ ஏற்படவில்லை.

அம்மாவின் பெரியப்பா வீட்டுக் கல்யாணம். பெண் வீட்டார் துடியலூரைச் சேர்ந்தவர்கள். கல்யாணப் பத்திரிகையைப் பார்த்ததில் இருந்து லட்சுமியக்காவைப் பற்றி அம்மா பேசிக் கொண்டே இருந்தாள்.

கல்யாணத்துக்குச் சென்றபோது, தயாளன் கல்யாண மண்டபத்தை விட்டு வெளியே வந்தான். பாரதிநகரில் லட்சுமியக்காவின் வீடு.

நடந்தான்.

எதிரே வந்து கொண்டிருந்த ஒரு ஆள் சட்டென்று நின்றான்.

"ஹலோ... நீங்க தயாளன்தானே?" என்று கேட்டான்.

"அட... சண்முகம்..."

"எங்க திடீர்னு இந்தப் பக்கம்? உன்னைப் பார்த்து எத்தனை வருசமாச்சு...? எப்படி இருக்கே? எங்க இருக்கே?"

சொன்னான்.

"லட்சுமியக்கா எப்படி இருக்கறாங்க சண்முகம்? அவங்களைப் பார்க்கணும்."

"அது பெரிய கதை தயாளா?"

"என்ன? சொல்லு சண்முகம்."

"பெரியசாமி செத்துப் போயிட்டாரு... அவர் செத்து அஞ்சு வருசமாச்சு..."

"அடக்கடவுளே...!"

"சுகுமாரனுக்கு பைத்தியம் தெளிஞ்சு குணமாயிட்டான்."

"அப்படியா? பரவாயில்லையே?"

"என்ன பரவாயில்லை... மாதவிக்குக் கல்யாணம் ஏற்பாடாச்சு. இந்த சுகுமாரன் பணம் நகையெல்லாம் தூக்கிட்டு எங்கயோ ஓடிப் போயிட்டான். மாதவி கொஞ்சம் கொஞ்சமா சேர்த்து வெச்ச பணம். அவன் ஓடிப் போயி மூணு வருசமாச்சு... லட்சுமியக்கா என்ன செய்யும்? இவனுக்கு ஆஸ்பத்திரி செலவுக்குன்னு வாங்கின கடன்... நகை வாங்கின கடன் எல்லாத்தையும் அடைக்க வீட்டை வித்துட்டாங்க..."

"அப்புறம்...?"

"மாதவி கல்யாணம் அநியாயமா நின்னு போச்சே... அதை நெனைச்சு நெனைச்சே லட்சுமியக்காவுக்கு கிறுக்குப் புடிச்சுப் போச்சு."

"இப்ப அவங்க எங்க இருக்கறாங்க?"

"கவுண்டம்பாளையத்தில... மாதவி இன்னும் அதே கம்பெனிக்கு வேலைக்குப் போகுது. லட்சுமியக்காவைப் பார்த்துக்கணும்... வேலைக்குப் போகணும்... பாவம் அது..."

"சண்முகம்... அவங்களை நான் பார்க்கணுமே? அட்ரஸ் இருக்கா?"

"வேண்டாம்பா... லட்சுமியக்கா யாரைப் பார்த்தாலும் 'சுகுமாரா... சுகுமாரா'ன்னு அழுகுது. மாதவிக்கு நம்மளைப் பார்த்தா விசனம் அதிகமாயிடுது. அவங்க சித்தி வீட்டில இருக்கறாங்க..."

தயாளன் பேசாமல் நின்றான்.

"வா டீ சாப்பிடலாம்..."

"இல்ல... சண்முகம் கல்யாண வீட்டில சாப்பிட்டேன். உனக்குக் கம்பெனிக்கு நேரமாச்சு... நீ கிளம்பு... இன்னொரு நாளைக்குப் பார்ப்போம். நான் புறப்படறேன்..." விடைபெற்றுக் கொண்டு பஸ் ஸ்டாப்பை நோக்கி நடந்தான்.

'அம்மா... போயிட்டு வர்றேன்...' மாதவியின் குரல் மனசுக்குள் ஒலித்தது.

தயாளன் அம்மாவிடம் பொய் சொல்வது என்று முடிவு செய்தான். கல்யாண வீட்டில் ரொம்ப நேரமாகி விட்டதால் லட்சுமியக்கா வீட்டிற்குப் போக முடியவில்லையென்று. அம்மா இவன் மேல் ரொம்ப சங்கடப்படுவாள். வேதனையை விட சங்கடம் பரவாயில்லை.

குறையொன்றுமி

போன வாரம் ராமனை யோசனையிலே விட்டு விட்டு வந்தோம்! இப்படிக்கூட யோசித்தானாம் ஸ்ரீராமன்: 'சீதை பத்து மாதம் சிறையில் இருந்தாளே... அதனால்தான் வால்மீகி இதை (ராமாயணத்தை) அவள் சரித்திரம் என்று கொண்டாடினானோ...? சிறையிருந்ததால் ஏற்பட்ட ஏற்றமோ இது...? சிறையிருந்ததால் ஏற்பட்ட ஏற்றம்தான் என்பது சத்தியமானால், அடுத்த அவதாரத்தில் நாம் சிறையிலேயே பிறக்க வேண்டியதுதான்...'

இதையொட்டியே பகவான், கிருஷ்ணாவதாரத்திலே சிறைச்சாலையிலேயே பிறந்தான். அந்த அவதாரத்தின் பெருமையெல்லாம் யாருக்கு...? அவனுக்குத்தான்!

ராமாயணத்தில், சிறையிருந்தவளுடைய ஏற்றம் சொல்லப்படுகிறது. மஹாபாரதத்தில் தூது போனவனின் ஏற்றம் சொல்லப்படுகிறது. அந்த அவதாரத்தில் (பாரதம்) பரமாத்மா ஈடில்லாத தூதுவனாய் விளங்கினான்.

இப்படி இரண்டு அவதாரங்களில் பகவான் நமக்கு தர்மத்தைக் காட்டி



துவம் மாயையால் வேறுவிதமாக மாறித் தெரிகிறபோதுதான் வர்ணங்கள் உண்டாகின்றன. இருப்பதைப் பொய்யாக மாற்றிச் சொல்வதை இங்கிலீஷில் coloured version என்றே சொல்கிறார்கள் அல்லவா? கலர் வந்து விட்டால் பொய்க்கு வந்து விட்டோம் என்று அர்த்தம். கலர் இல்லாத கறுப்பு விஷ்ணுவிடமும் வெள்ளைச் சிவனிடமும் மனத்தை வைக்கிற வரையில் சத்தியத்தோடேயே ஒட்டிக் கொண்டிருக்கிறோம்.



இறுதியான வெண்மைக்கு அடையாளமாகவே கரியையும் எரித்தபின் கிடைக்கிற விபூதிச் சாம்பலைச் சைவர்கள் தரிக்கிறார்கள். என்றும் நிற்பது எதுவோ அதுவே நீறு; திருநீறு. மாயை தீண்டாத உலகத்துக்கு அடையாளம் மண். மரம், செடி, கொடி எல்லாம் மண்ணிலே பிறந்து, மண்ணிலே வளர்ந்து முடிவில் மட்கி மடிகிறபோது மண்ணே ஆகின்றன. எனவே மண்ணும் முடிவான நிலைக்கு அடையாளமாக இருக்கிறது. இதனால்தான் வைஷ்ணவர்கள் திருமண் இட்டுக் கொள்கிறார்கள். திருநீறும் திருமண்ணும் ஒரே தத்துவத்தைத்தான் காட்டுகின்றன. ஹரி-ஹர பேதம் இல்லாதது போல், அவர்களுக்குரிய சின்னங்களிலும் பேதமில்லை. ஜகத்தில் இருந்து கொண்டே மேல் நோக்கி உயர வேண்டும் என்பதற்காகத் திருமண்ணை மேல் நோக்கிப் போட்டுக் கொள்கிறார்கள். எல்லாம் சமமாகி விட்ட சிவயோக நிலையில் விபூதியை உயர வாட்டில் போடாமல் நெற்றியில் குறுக்கே தரித்துக் கொள்கிறார்கள்.

சிவனுக்கும் திருமாலுக்குமிடையே பேதம் கற்பிப்பது கொஞ்சம்கூடச் சரியில்லை. வைஷ்ணவ ஆழ்வார்களும், சைவ நாயன்மார்களும் உயர்ந்த பக்தி நிலையில் இரண்டையும் ஒரே ஸ்வரூபமாகக் கண்டு பாடியிருக்கிறார்கள்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

பாகவத பிரபாவத்தைத்தான் சத்ருக்னன் காட்டினான். அவன் காட்டிய பரமநெறிதான் மதுரகவியாழ்வாருக்கு மூலமாக அமைந்தது.

சதுர்வித புருஷார்த்தங்கள் (தர்ம, அர்த்த, காம, மோக்ஷம்) ராமாயணத்தில் நான்கு திவ்ய புருஷர்கள் மூலமாகத் தெரிகிறது என்று சொன்னேன். பகவானே நான்கு வித புருஷார்த்தங்களுக்கும் உறைவிடமானவன். பகவான், ஆதிசேஷன், சுதர்ஸனம் (சக்ரம்), பாஞ்சஜன்யம் (சங்கு) என நான்கும் இந்த நான்குவித அர்த்தம் காட்டுபவை.

ராமாயணத்திலே தர்மத்தை பகவான் உணர்த்தியதாகச் சொன்னேன். மூன்று வித தர்மங்கள் உண்டு என்கின்றனர் பெரியோர்.

சேஷத்வம், பாரதந்த்ரியம், பாரதந்த்ரிய காஷ்ட என்று மூன்று விதமாக இந்த தர்மங்களைச் சொல்வர்.

சேஷத்வம் என்றால் 'கட்டிப் பொன் போலே...' என்று பொருள்.

இளையபெருமாள் லக்ஷ்மணன் செய்த கைங்கர்யம் சேஷத்வம் போன்றது - அப்படியே கடினம்! இரவு பகல் கண்விழித்து, கூட இருந்தபடியே கைங்கர்யம் செய்வதென்பது ரொம்ப கஷ்டமான காரியம். அதை லக்ஷ்மணன் செய்தான். எல்லோராலேயும் செய்யக்கூடியது அன்று அது!

'இமைத்திலன் நயனம் என்றான்...' என்று லக்ஷ்மணன் குறித்துச் சொல்லப்படுகிறது. எம்பெருமானும் சீதாபிராட்டியும் வனவாசத்தின் போது கண் துயில்கிறார்கள். அப்போது வெளியிலே நின்று இமைக்காமல் காவல் காத்தானே... ராத்திரி பகல் வித்தியாசமில்லாமல் நின்று கண்ணை இரப்பை காப்பதுபோல் காத்தானே! கூடவே இருந்தானே...!

இந்த வனவாசத்தின்போதுதான் தசரதன் மாண்ட செய்தி பரதன் மூலமாக ராமனுக்கு எட்டுகிறது. அப்போது அச்செய்தியை ராமபிரான் லக்ஷ்மணனுக்கு எப்படி எடுத்துச் சொன்னான் என்பதைப் பார்க்கணும். அந்த வார்த்தைகளை நன்றாகக் கவனிக்க வேண்டும்.

"ஹே லக்ஷ்மணா! நீ உன் தந்தையை இழந்தாயடா!" என்றான்.

அடியேனுக்கு ஒரு கோணலான புத்தி! ராமன் பேரிலேயும் தோஷம் சொல்ல வேண்டும் என்கிற ஆசை! அதனாலே இந்த இடத்தில் கோணலாக வியாக்யானம் பண்ணிக் காட்டுகிறேன்.

'லக்ஷ்மணா! உன் தந்தையை நீ இழந்தாயடா!' என்று ராமன் சொன்னதிலிருந்து என்ன தெரிகிறது...? அப்பா தன்னைக் காட்டுக்குப் போகச் சொன்னது குறித்து ராமனுக்கு ரொம்ப வருத்தம். வெறுப்பே வந்து விட்டது. அதனால் தசரதனைத் தந்தையாக ராமன் பாவிக்கவில்லை. 'லக்ஷ்மணா! உங்க அப்பா போய்ட்டார்' என்று சொன்ன வார்த்தை...'

- இப்படி அடியேனுடைய புத்தி நினைக்கிறது!

ஆனால், ஆசார்யர்களும் மகான்களும் தங்கள் வியாக்யானத்தில் எம்பெருமானுடைய புஷ்பம் போன்ற திருவுள்ளத்தை நமக்குக் காட்டுகிறார்கள்.

என்ன வியாக்யானம் அது...? எதை உ தேசித்து ஸ்ரீராமன் அப்படிப் பேசினான்... ஒ வாரம் காத்திருந்து படியுங்களேன்!

(தொடரு

கம

மூன்று மாதங்களுக்கு முன்பு வரை தாமோதரனின் மனைவி கமலா சாதாரணமாகத்தானிருந்தாள். தாமோதரனுக்கும் எனக்கும் ஒரே வங்கியில் தான் வேலை. இருபத்தைந்து வருஷத்துப் பழக்கம். நான் தாமுவின் கல்யாணத்துக்குக்கூடப் போயிருக்கிறேன். அப்போதெல்லாம் கமலா பூஞ்சையாக, கருப்பாயிருப்பாள். அப்புறம், இரண்டு குழந்தைகள் பெற்ற பிறகு ஆள் கொஞ்சம் வெளுத்துக் கொண்டு, ஆகிருதியாகிவிட்டாள். ரொம்பச் சிக்கனமாகக் குடித்தனம் செய்பவள் என்று என் மனைவி சொல்லக் கேட்டிருக்கிறேன். இதற்கு மேல் அவளைப் பற்றி எனக்கு எந்த வித அபிப்பிராயமுமிருந்ததில்லை. தாமு என்னிடம் வந்து, "வா, உன்னோடு கொஞ்சம் பேசணும். வீட்டுக்கு நடந்துண்டே பேசலாம்," என்று பொடி வைக்கும் வரை.

வீட்டுக்குப் போகும் வழியில்தான் நாகேசுவரராவ் பூங்கா. உள்ளே நுழைந்து பெஞ்சில் உட்கார்ந்ததும், "என்ன விஷயம்?" என்றேன்.

தாமு சில நிமிடங்கள் மௌனமாயிருந்தான். முகத்தைப் பார்த்தால் அழுது விடுவான் போலிருந்தது.

"என்னடா, ஏதோ பேசணும்னியே?"

"எப்படிச் சொல்றதுன்னு தெரியலே மணி. கமலாவைப் பற்றி ரொம்பக் கவலையாயிருக்கு."

"என்னாச்சு? ஏதாவது உடம்புக்கு...?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லே. சரி, இரண்டு மாசம் முன்னாடி, ஒரு நாள் சாயந்திரம் நான் ஆபீசிலேருந்து வீட்டுக்குப் போனப்போ, டிபனைக் குடுத்துட்டு, காபியை அனுபவிச்சு நான் குடிக்கிற சமயமாப் பாத்து, 'தெருக்கோடி அம்புஜம்மாள் வீட்டிலே பஜனை க்ளாஸ் ஆரம்பிச்சிருக்கா. நானும் போ



லாவைத் தேடி.

துக்கவா? மாசம் பத்து ரூபா தான்'ன்னா. நானும் உடனே சரின்னேன். அவளுக்கும் மத்தி யான நேரம் போது போகணு மோல்லியோ? பொண்ணு, பிள்ளை ரெண்டு பேரும் காலேஜ், ஸ்கூல்னு போயிடறா. நாள் பூரா ஆத்திலே தனியாத் தானேயிருக்கா, போயிட்டு வரட்டுமேன்னு, ஒரு இரக்க உணர்ச்சியிலே சரின்னேன். அதுவே என் தலையிலே மண்ணை வாரிப் போட்டுண்டதா ஆயிடுத்து."

"என்ன சொல்ற நீ?"

"பூரா விஷயத்தையும் கேளு இப்பத்தான் தெருவுக்குப் பத்து மாமியா சேந்துண்டு மத்தியான நேரத்திலே சௌந்தர்யலஹரி, லலிதா சஹஸ்ரநாமம்னு கோஷ்டியா, பாடத் தெரிய றதோ இல்லியோ, கத்திட்டாவது வராளே? அது மாதிரியாக்கும்னு நெனச்சிண்டிருந்துட்டேன். இது அப்படியில்லே."

"பிறகெப்படி?"

தாமு என்னைக் கேட்டான், "உனக்கு ஆத்மானந்தா சுவாமியைத் தெரியுமோ?"

"எனக்கெப்படித் தெரியும்? பிரேமானந்தாவைப் பற்றித்தான் பேப்பர்ல படிச்சிருக்கேன்."

"இந்த அம்புஜம்மாள் அவருடைய பரம பக்தை. வீட்டில் அவரோட போட்டோவை வச்சு அதுக்கு பூஜையெல்லாம் செய்யறாளாம். பஜனை கிளாஸ்லயும் ஸ்லோகங்கள் தவிர அவரைப் பத்தி பிரத்யேகமா ஸ்தோத்ரம் பண்ற பாட்டையும் சொல்லித் தரா. குருவாரத்தில், படத்திலேருந்து விபூதி குங்குமமெல்லாம் கொட்டறதாம். எங்காத்து பூஜை ரூம்ல கூட அவரோட போட்டோ ஒண்ணு வந்து உக்காந்திண்டிருக்கு."


"சரி, அதுக்கென்ன?"

"அதுக்கு ஒண்ணுமில்லே, இதெல்லாம் என் பெண் டாட்டிய பாதிக்க ஆரம்பிக்கிற வரையில்... ஒரு மாசம் முன்னாடின்னு

வெ.ஜானகி

நெனக்கறேன். ஒரு நா ராத்திரி நடுநிசில திடுக்கினு முழிப்பு வந்துது. எழுந்து பாத்தா பக்கத்திலே கமலாவைக் காணோம். பூஜை 'ரூம்ல லைட் எரியறது. எழுந்து போய் பார்த்தா, இவ நடு ராத்திரிலெ தலைக்குக் குளிச்சுட்டு வடம் வடமா ஈரத் தலைமயிர் முதுகிலெ தொங்க, நெத்தி முழுக்க குங்குமத்தையும் வீபூதியையும் அப்பிண்டு, சாமி வந்த வளாட்டம், 'நந்த லாலா, நந்தலாலா'ன்னு என்னமோ பாடி ஆடிண்டிருக்கா. நான் பயந்து போயிட்டேன். 'கமலா, கமலா'ன்னு உரக்கக் கூப்பிட்டப்போ, கண்ணைத் திறந்து பாக்கறா. ஆனா கண்ணுலெ என்னைத் தெரிஞ்சுண்ட பாவனையேயில்ல.

"பகவானுடைய அற்புதத்தைப் பாருங்கோ. இந்த ஏழையோட குடிசைல எழுந்தருளியிருக்கார். சுவாமி, சுவாமி!'ன்னு சொல்லிண்டே விழுந்து விழுந்து நமஸ்காரம் பண்றா. அப்புறம்தான் பாத்தேன். ஆத்மானந்தாவோட போட்டோ மேலேயும், அதுக்கு கீழே தரையிலேயும் ஒரே குங்குமமா சிதறியிருக்கு. எனக்கு என்ன பண்றதுன்னே புரியலே. இவளானா குதிகுதின்னு குதிக்கறா, இரைஞ்சு பாடறா, அந்தக் குங்குமத்தை அள்ளி அள்ளிப் பூசிக்கிறா. இதுக்குள்ளே குழந்தைகளும் எழுந்து வந்துட்டா. ரொம்ப பயந்து போயிடுத்து அதுகள். பொண்ணு 'அம்மா, அம்மா'ன்னு அழவே ஆரம்பிச்சுட்டா. இந்தக் கூத்தெல்லாம்



ஒரு பதினஞ்சு நிமிஷம் நடந்திருக்கும். பிறகு மரம் சாயறா மாதிரி கமலா தடக்குனு கீழே விழுந்துட்டா. பேச்சு மூச்சில்லே. கைகாலெல்லாம் அட்டை மாதிரி விரைச்சுண்டுடுத்து. அப்புறம் மூஞ்சிலெ தண்ணி தெளிச்சு எழுப்பி உக்கார வச்சோம். ஒண்ணுமே நடக்காதது மாதிரி எழுந்து வந்தா. குழந்தைகளைப் போய் படுக்கச் சொன்னா. தானும் ஹாலிலே ஒரு பாயை விரிச்சுப் படுத்துண்டுட்டா.. நான்தான் பைத்தியக்காரன் மாதிரி ராத்திரி பூரா முழிச்சுண்டு கவலைப் பட்டுண்டிருந்தேன்."

சில வினாடிகள் எங்களிடையே மௌனம் நிலவியது. பிறகு தாமு, "அன்னியிலேருந்து தனித்தனி படுக்கைதான். அவ ஹாலிலே, நான் பெட்ரூம்லெ," என்றான்.

"அப்படி வா, வழிக்கு," என்றேன் நான். "இதானே உன்னை பாடாப்படுத்தறது?"

"இல்லடா," என்றான் தாமு சீரியஸாக. "அதை நான் மிஸ்ஸே பண்ணலே. சொல்லப் போனா, விரிச்ச தலையும் நெத்தி நிறையக் குங்குமமும் விபூதியும், வெறிச்ச பார்வையுமா கமலாவைப் பாக்கறச்சே, பக்திப் பட ஹீரோயின் மாதிரிதானிருக்கே தவிர என் பொண்டாட்டி மாதிரியில்லே. இப்ப அவளே வந்து என் ரூம்லே படுத்தாக் கூட நான் எழுந்து வெளியே போயிடுவேன்."

"சரிடா, அப்ப என்ன பிரச்னை?"

"என்ன இப்படி கேக்கற? எனக்கு என்னோட பழைய, சாதுவான கமலா வேணும். கல்யாணத்துக்கு ஒரு பொண்ணு இருக்காடா எனக்கு! இவ இப்படி தையா தக்கான்னு குதிச்சுண்டு, நடு நிசியிலே பஜனை பண்ணிண்டிருந்தான்னா, யாருடா என் வீட்டிலெ சம்பந்தம் வச்சுப்பா?"

பாவமாயிருந்தது தாமுவைப் பார்க்க. முடிந்த அளவு சமாதானம் சொல்லி, வீடு வரை கொண்டு விட்டு வந்தேன். வீட்டில் கமலா இருந்தாள். தாமு சொன்னதைப் போல, பெரிய சைஸில் குங்குமப் பொட்டு, அதன் மேல் ஒரு விபூதிப் பட்டை, அதன் கீழ் ஒரு சந்தனப் பட்டை என்று, நெற்றியில் ஒரு அங்குலம் விடாமல் அலங்கரித்திருந்தாள். நான் "சௌக்கியமா?" என்று விசாரித்ததற்கு, அமர்த்தலாகப் புன்னகைத்தாள். தாமுவின் 'பழைய, சாதுவான பெண்டாட்டி' காணாமல் போய் விட்டாள் என்றே தோன்றியது.

இது நடந்து ஒரு வாரத்தில் என்னை வங்கியின் மாம்பலம் கிளைக்கு மாற்றி விட்டார்கள். தாமுவிடமிருந்து பிரியாவிடை பெற்றுச் சென்றேன். ஓரிரு மாதங்களுக்கு அவனை வந்து பார்க்க முடியாத அளவுக்கு வேலை. பிறகொரு நாள் மயிலாப்பூர் கிளைக்கு ஒரு வேலையாய் வந்தபோதுதான் சந்திக்க முடிந்தது. "உன் ஒய்ஃப் எப்படியிருக்கா?" என்றேன்.

"இன்னும் மோசமாகிவிட்டது, மணி."

"என்ன பண்றா?"


"இப்பல்லாம் நானே கமலாவைப் பாக்கணும்னா அப்பாயின்மென்ட் வாங்கணும். அவ்வளவு பிஸி."

"என்ன பண்றா?"

"என்ன பண்றாளா? உனக்கு விஷயமே தெரியாதா? அவதாம்ப்பா சீஃப் பஜனைப் பாடகி! அம்புஜம்மாளையெல்லாம் ஓவர்டேக் பண்ணியாச்சு. இப்ப எல்லோரும் இவளைத்தான் பாடக் கூப்பிடறா. சாயந்திரமானா, திருவல்லிக்கேணி, மாம்பலம், அண்ணாநகர்னு சென்னை மாநகர்ல சிதறிக்கிடக்கிற ஆத்மானந்தா ஸ்வாமிகளின் பக்த கோடிகளின் வீடுகளில் சப்ளாக்கட்டை, ஜால்ரா, ஆர்மோனியம் சகிதம் போய் ஒரு கலக்கு கலக்கிக் கொண்டிருக்கா?"

"நிஜமாவா?"

"பின்னே? ஒரு வாரமாச்சு, ரெண்டு வாரமாச்சு. தினம் சாயந்திரம் வீட்டுக்குப் போனா இவ வீட்டிலே இருக்கறதில்லே. கேட்டாக்க, 'மாமி இங்கே பஜனை பாடப் போயிருக்கா, அங்கே ஜட்ஜ் ஆத்திலே கூப்பிட்டிருக்கா'ன்னு எதுத்தாத்துலே, பக்காத்தாத்திலேருந்து தகவல். ஒரு நாளைப் போல ராத்திரி உப்புமாவோ, தயிர் சாதமோ சாப்பிட்டு, எனக்கும் குழந்தைகளுக்கும் சலிச்சுடுத்து. இவளானா ராத்திரி பத்து மணிக்கு யார் கார்லயாவது தன் சிஷ்ய கோடிகள் புடைசூழவந்து இறங்குவா. 'மாமி, இன்னிக்கு பஜன் அற்புதம், கண்ணுலெ தண்ணியே வந்துடுத்து'ன்னு ஏதாவது பேத்திக்கிட்டு அதுக சிளம்பிப் போகும். இவ சம்பிரதாயமா 'சாப்பிட்டேளா'ன்னு கேட்



எந்தப் பேச்சாளரும் ஒரு நிகழ்ச்சியில் நாலு சொற்பொழிவு நிகழ்த்துகிறார்கள். சொல்ல வேண்டுமென்று குறிப்பு எழுதி வைத்திருந்தது; உண்மையில் சொன்னது; சொல்லியிருந்திருக்கலாமே என்று நினைத்துக் கொண்டது; சொன்னதாக மறுநாள் செய்தி வெளியானது.

– டான் டெட்ரா

தகவல்: ஜெயப்பிரகாஷ்


தள்ளுபடி — ஒரு ரூபாய் — தள்ளுபடி — ஒரு ரூபாய் — தள்ளுபடி — ஒரு ரூபாய் —
ஒரு ரூபாய் தள்ளுபடி
ஒவ்வொரு காலி அகர்பத்தி பாக்கெட்டிற்கும்
ஒரு ரூபாய் தள்ளுபடி
அம்பிகா
சுபலக்னம்
வார்தா
VAARTHA
8.00
மேற்கண்ட அகர்பத்தி பாக்கெட் ஒன்று வாங்கும்போது,
வேறு எந்த அகர்பத்தியின் ஒரு காலி பாக்கெட்டை கொடுத்தாலும்
ஒரு ரூபாய் தள்ளுபடி
அன்பார்ந்த டீலர்களே, உங்கள் வாடிக்கையாளர்கள் மேற்கண்ட அம்பிகா பிராண்ட் அகர்பத்தி பாக்கேட் ஒன்று வாங்கும் போது வேறு எந்த பிராண்ட் அகர்பத்தி காலிபாக்கட் ஒன்று பெற்றுக்கொண்டு ரூ.1/- தள்ளுபடி கொடுக்கவும். தள்ளுபடி தொகையை ஸ்டாக்கிஸ்ட்டிடம் உங்கள் சர்வீஸ்சார்ஜ் 0.25 சேர்த்து ஒரு பாக்கெட்டிற்கு ரூ.1.25 பெற்றுக்கொள்ளவும்.
QUALITY PRODUCTS FROM THE MAKERS OF — AMBICA HEAVEN

டுட்டுப் போய் படுத்துண்டுடுவா.'' தாமு உணர்ச்சிவசப்பட்டு நிறுத்தினான்.

"ஏண்டா, நீ ஏன் இப்படி நடந்துக்கறேன்னு அவளை நீ கேக்கலியா?"

"கேட்டேனே?"

"என்ன சொன்னா?"

'சொல்றேன். அதுக்கு முன்னாடி நடந்ததைக் கேளு. நடுவிலே நாலு நாள் காளஹஸ்தி கிட்ட ஒரு கிராமத்திலேருக்கிற ஆத்மானந்தாவோட ஆசிரமத்துக்கு வேற போயிட்டா. எல்லாம் அவ புது சிநேகிதிகளோடத்தான். சுவாமிகள் இவளோட பஜனையையெல்லாம் ரொம்ப ரசிச்சுக் கேட்டுட்டு, ஒரு சால்வையைப் பரிசாக் கொடுத்தார்னு கொண்டு வந்து பூஜை ரூம்லெ வெச்சிருக்கா. இந்த ட்ரிப்புக்கு அவ போனதிலே நான் ரொம்ப டென்ஷனாயிட்டேன். போனாப் போறதுன்னு விட்டா ரொம்ப ஜாஸ்தியாயிண்டிருக்குன்னு தோணிப் போச்சு.

"மறுநாள் இவ பாடப்போன பஜனைக்கு அவளுக்குத் தெரியாம நானும் போயிருந்தேன். யாரோ தொழிலதிபர் வீடு அது. மந்தைவெளில பெரிய பங்களா. கண்டபடிக்கு எல்லாரும் வீட்டுக்குள் பஜனை கேட்கப் போயிண்டிருந்தா. என்னைக் கூட யாரு என்னன்னு கேக்காம உள்ளே விட்டுட்டா. ஹால்லே பெரிய ஜமுக்காளம் விரிச்சு, பெரிய சைஸ் குத்து விளக்கு ஏத்தி வச்சிருந்தா. பிள்ளையார், ராமர் பாட்டாபிஷேகப் படங்களோட, ஆத்மானந்தாவோட லாமினேடட் ப்ளோ அப், மந்தகாசமா சிரிச்சுண்டு, நடு நாயகமா வச்சிருந்தா. நான் கூட்டத்தோட கூட்டமா போய் உக்காந்த கொஞ்ச நாழிக்கெல்லாம் வாசல்ல கார் வந்து நின்னு, கமலாவும், கூட நாலஞ்சு பொம்மனாட்டிகளுமா உள்ளே வந்தா. பயங்கர வரவேற்பு. நெஜமா, ஒரு நிமிஷம் அவளை எனக்கு அடையாளம் கூடத் தெரியலே. அகலமா, ஏக ஜரிகை போட்ட ஒரு புடைவை கட்டிண்டிருந்தா. சத்தியமா அது நான் வாங்கிக் கொடுத்ததில்லே. தகதகன்னு... ஐயாயிரமாவது இருக்கும். யார் வீட்டிலே கொடுத்தாளோ? அது போறாதுன்னு தலைலே ஒரு வண்டி கனகாம்பரம். கண்ணிலே மை. மணி, நீ எப்பவாவது நம்மாத்து பொம்மனாட்டிகள் இப்படி வழிய வழிய மையிட்டுண்டு, நரைச்ச தலையிலே கனகாம்பரத்தை வச்சுண்டு பாத்திருக்கியா?''

நான் யோசித்துப் பார்த்தேன். இல்லை யென்றுதான் தோன்றியது.

"மூஞ்சுரு மாதிரி சாதுவா இருப்பாடா கமலா. அந்த பஜனையிலே அவளை நீ பாத்திருக்கணுமே? அதென்ன பாட்டு, கணீர்னு தூக்கிப்போட வக்கற மாதிரி குரல்லே!

கண்ணைச் செருகிண்டு, அதென்ன உருகி யுருகி நாம சங்கீர்த்தனம்? பஜனை முடிஞ் சோன்ன, கற்பூர ஆரத்தி. கண்டவாளும் அவ கால்லே விழுந்து, கிட்டப் போய் குறை யெல்லாம் சொல்லிண்டா. இவளும் கண்ணை மூடி பிரார்த்தனை பண்ணிண்டு அவாளுக்கு விபூதியும் குங்குமமும் கொடுத்தா. இவ என் னடா, சந்நியாசினியா, மகானா- மகானுக்கு பெண் பால் கூடத் தெரியலியேடா! ஏண்டா, என் நிலைமைலே ஒரு புருஷன் என்ன செய்வான்?"

"தெரியலே. எனக்கு இதுலே அனுபவம் போறாது."

"நான் சொல்றேன். இழுத்து வச்சு ரெண்டு சாத்து சாத்தி, என்னடியிதுன்னு கேட்பான். நானும் அதைத்தான் செஞ்சேன். அதாவது... அடிச்சுக்கிடிச்சு ஒண்ணும் பண்ணலே. ஆனா ரொம்பக் கறாரா கேட்டுப்பிட்டேன், 'ஏண்டி, உனக்கே இது நன்னாருக்கா? குடும்ப ஸ்திரீ நீ. இந்த மாதிரி பளபளன்னு ட்ரெஸ் பண்ணின்டு வீடு வீடாப் போய் பஜனை பண் ணிண்டு, குடும்பத்தை கவனிக்காமயிருக்கிறது தான் பக்தியா?'ன்னு. ஆனா அவ அதுக் கெல்லாம் ஒண்ணும் மசியலே. கொஞ்சம் கூட பதறாம, என்னை நேருக்கு நேர் பார்த்துச் சொல்றா, 'இதப் பாருங்கோ, இருபது வருஷம் உங்களோட பொண்டாட்டியா, குழந்தை களுக்கு அம்மாவா வாழ்ந்தாச்சு. இப்பத்தான் எனக்கு வாழ்க்கையிலே உண்மையாவே எது முக்கியம்னு புரிஞ்சிருக்கு. என் ஆத்ம திருப் திக்கு இதச் செய்யறேன். உங்களுக்கு இது கஷ்டமாயிருந்தாச் சொல்லுங்கோ, நான் சுவாமியோட ஆசிரமத்திலேயே போய் இருந் துக்கறேன்' அப்படீன்னு. இதுக்கு மேல என்ன சொல்ல? எப்படியோ தொலையட் டும்னு விட்டுட்டேன். இப்பல்லாம் அவ வழிலே குறுக்கிடறதேயில்லை."

ஒரு வாரம் போலச் சென்றிருக்கும். அன்றைய தினசரியில் மூன்றாம் பக்கம் ஒரு செய்தி. "ஆத்மானந்தா சுவாமி கைது!" ஆர்வத்துடன் படித்தேன். "ராம்பள்ளி: ஜூலை 8: ராம்பள்ளியிலுள்ள சுவாமி ஆத் மானந்தாவின் ஆசிரமத்தில் நேற்று போலீசார் சோதனை நடத்தினர். அப்போது போதை மருந்துக் கடத்தலில் ஈடுபட்ட கும்பலுக்கு ஆசிரமத்தில் அடைக்கலம் கொடுத்திருப்பது தெரிய வந்தது. இது தொடர்பாக சுவாமி ஆத்மானந்தாவையும் அவரது பிரதம சிஷ்யர் நரேந்திராவையும், சதீஷ்குமார், கந்தசாமி, பிரேம் மற்றும் கோவிந்து என்ற கடத்தல் காரர்களையும் போலீசார் கைது செய் தனர். ராம்பள்ளி கோர்ட்டில் இவர்கள் அனைவரும் ஆஜர் படுத்தப்பட்டனர்.



"யாருப்பா... நீ.. இது வரை உன்னைப் பார்த்ததே இல்ல... என் வகுப்புல ஏன் வந்து உக்காந்துருக்க?"

"நா ராமசாமிதான் சார்.. கமல் ரசிகனா இருக்கறதால மூணு மணி நேரம் மேக்கப் போட்டு முகத்தை மாத்தியிருக்கேன்!"

– அம்பை தேவா

தலைமை மாஜிஸ்திரேட் ஆர். கோபல்லா அவர்கள் அனைவரையும் பதினைந்து நாட் கள் போலீஸ் காவலில் வைக்கும்படி உத் தரவிட்டார்." மேலும் விரிவாக எழுதப்பட் டிருந்தது. ஆனால் நான் படிக்கவில்லை. ஆத்மானந்தா கோர்ட்டுக்குள் கொண்டு செல்லப்படும் போட்டோவை நோட்டம் விட்டுவிட்டு, தாமுவுக்கு போன் செய்தேன்.

"பாத்தியா பேப்பர்லே?" என்றான் எடுத்தவுடன்.

"அதுக்காகத்தானே போன் பண்ணினேன். ஆத்மானந்தா சாயம்தான் வெளுத்துடுத்தே? கமலா என்ன சொல்றா?"

"செய்தியப் பாத்தோண்ண முகம் மாறிடுத்து. பேசாம பூஜை ரூம்ல போய் உக் காந்துட்டா. அப்புறம் கிளம்பி அம்புஜம்மாள் வீட்டுக்குப் போயிருக்கா. அங்கே இந்த ஏரியால இருக்கிற ஆத்மானந்தா பக்தர் களெல்லாம் மீட்டிங் போடறா போலிருக்கு. எப்படியோ, கமலாவோட பித்தம் இதோட தெளிஞ்சுடும்னு நெனைக்கிறேன்," என்றான் தாமு உற்சாகமாக.

கொஞ்சநாள் கழித்து, தாமுவைப் பார்க்க அவன் வீட்டுக்குப் போயிருந்தேன்.

தாமுவின் வீடு மயிலாப்பூரில் நடுத் தெரு தாண்டி ஒரு சந்தில் இருந்தது. சந்துக்குள் நுழையும் போதே தாமுவின் வீட்டுக்கு நிறையப் பேர் வருவதும் போவதுமா யிருப்பது தெரிந்தது. என்ன விசேஷமா யிருக்கும் என்று யோசித்தபடி வீட்டை யடைந்தேன். வாசலில் கல்யாண வீடு மாதிரி செருப்புகள் குவிந்து கிடந்தன. கேட்டுக்கு மேலே மாவிலைத் தோரணம். வீட்டுக்குள் ளிருந்து பஜனைப் பாட்டு பாடப்படும் ஓசை கேட்டது. கேட்டுக்கு அருகில் புதிதாக ஒரு போர்டு- "மா கமலா தேவி ஆஸ்ரம், மயிலை,



நாட்டிலே மழையே இல்லாதபோது நபிகள்நாயகத்திற்கு அல்லாவின் குரல் அசரீரியாகக் கேட்டது.

'இந்த நாட்டில் கோள் பேசுபவர்கள் நிறையப் பேர் இருப்பதே மழை பெய்யாததற்குக் காரணம்' என்றது அல்லாவின் குரல்.

'இறைவா! கோள் பேசுகிறவன் யார் யார் என்று சொல்லுங்கள். நான் அவர்களைத் திருத்த முயலுகிறேன்' என்றார் நபிகள்.

'நான் அப்படி யாரையாவது குறிப்பிட்டுச் சொன்னால் நானும் கோள் பேசியவனாக ஆகிவிடுவேனே' என்றார் அல்லா.

-'பல்சுவைத் துணுக்குகள்' நூலிலிருந்து:
வயலூரரான்

சென்னை" என்று.

"அடப்பாவி!" என்றேன் என்னையும் மீறி. இடத்தைப் பிடுங்கி, மடத்தைப் பிடுங்கி, கடைசியிலே வீட்டையே ஆசிரமமாக்கி விட்டாளா கமலா? என் நண்பன் என்ன வானான்? நான் குழம்பிக் கொண்டிருக்கையிலே வீட்டுக்குள்ளிருந்து தாமு வெளிப்பட்டான். காவிக் கலரில் வேஷ்டியும் ஜிப்பாவும் அணிந்திருந்தான். கழுத்தில் ருத்ராட்ச மாலை, நெற்றியில் பட்டைபட்டையாக விபூதி, அதன் நடுவில் நீண்ட திலகமாகக் குங்குமம். வடக்கத்திய பக்திப் பழம் போல் காட்சியளித்த தாமு, என்னைக் கண்டதும் விரைந்து வந்து, "வா, மணி. எல்.டி.ஸியில வடக்கே போயிருந்தியே, காசிப் பயணமெல்லாம் எப்படியிருந்தது?" என்றான்.

"என்னடாது வேஷம்?" என்றேன் நான் பதிலுக்கு.

"எது, இதுவா?" என்று தன்னையே சுட்டிக் காட்டிக் கொண்டவன், ஒரு கணம் என்னைக் குறுகுறுவென்று பார்த்தான். பிறகு, "இது வேஷமில்லைடா மணி, சீருடை. மா கமலா தேவியின் கணவனுக்குப் பொருத்தமான சீருடை" என்றான்.

என்கையிலிருந்து கங்கை தீர்த்தத்தையும், அன்னபூரணி சிலையையும் வாங்கிக் கண்ணில் ஒத்திக் கொண்டு உள்ளே கொண்டு போய் வைத்து விட்டு வந்தவன், "பஜனை முடிய இன்னும் ஒரு மணி நேரமாகும். வா, நடந்ததையெல்லாம் சொல்றேன்," என்றபடி வெளியே வந்தான்.

"சுவாமி ஆத்மானந்தா கைது ஆன பிறகு, நானும் உன்னைப் போல, கமலாவோட பித்தம் தெளிஞ்சுரும்னுதான் நினைச்சேன். ஆனா நடந்தது வேறு. கமலாவோட பாப்புலாரிடியை நான் குறைவா எடை போட்டுட்டேன். விரக்தியடைஞ்ச ஆத்மானந்தாவோட பக்தர்களெல்லாம் இவளைத் தேடி வர ஆரம்பிச்சுட்டா. ஓவர்நைட், கமலா, மா கமலாதேவி ஆயிட்டா. என் வீடு ஆசிரமமாயிடுத்து. எனக்கு என்ன தோணறதுன்னா, பக்தர்களுக்கு பக்தி செலுத்த ஒரு உருவம் வேணும், அது ஆத்மானந்தாவாயிருந்தாலும் சரி, கமலா தேவியாயிருந்தாலும் சரி. என்ன நான் சொல்றது?"

"அதெல்லாம் சரிடா. ஆனா நீ எப்படி இப்படி....?"

"'மாறினேன்'ங்கிறியா? காலத்தின் கட்டாயம்தான். என்ன செய்யச் சொல்றே? வீட்டுக்கு வர்ற கூட்டத்த கட்டுப் படுத்த முடியலே. இவ பாடறதையோ, அவா இவ கால்லே விழறதையோ தடுக்க முடியலே. அப்பத்தான் தோணித்து, எதுக்கு இதையெல்லாம் எதிர்க்கணும்னு. பேசாம நானும் அவளோட சேர்ந்துண்டுட்டா? இப்ப அவளுக்குக் கிடைக்கிற மரியாதைல பாதியாவது எனக்கும் கிடைக்கிறது. நிறைய பணக்காரா, அந்தஸ்துடைய வாளோட பழக்கம் கிடைக்கிறது. அவாவா செலுத்தற காணிக்கையிலேயே ஆசிரமம், குடும்பம் ரெண்டும் அமோகமா நடக்கிறது. திடீர்னு வாழ்க்கை ரொம்ப சுவாரஸ்யமாயிடுத்துடா மணி! என்ன ஒண்ணு, குழந்தைகளுக்கு இதெல்லாம் ரொம்பக் குழப்பமாயிருக்கிறதாலே அவாளெ இந்த வருஷத்திலேருந்து ஹாஸ்டல்லே சேத்துடலாம்னிருக்கேன். சரிடா, நான் கௌம்பறேன். ஆரத்தியெடுக்கறதுக்கு நேரமாச்சு. ஒரு நாள் உன் ஒஃபையும் அழைச்சிண்டு பஜனைக்கு வாயேன்?"

"வேலைக்குப் போயிண்டிருக்கியோ இல்லியோ?"

"அது எதுக்கு இனிமே? உப்பு சப்பில்லாத வேலை! போன வாரமே ராஜினாமா பண்ணிட்டேன்! சரிடா, வரேன். அப்புறம் பாக்கலாம். ஜெய் ஸ்ரீராம்!" என்று விடைபெற்றுச் சென்ற தாமுவைக் குறித்து வெகு நேரம் சிந்தித்தேன். கமலாவோடு கூட என் நண்பனும் காணாமல் போய்விட்டான என்றுதான் தோன்றியது.

என்கிற உறவிலே அந்த வினைப் பயனை அனுபவிப்பதற்காக, அந்த கர்மாவை அனுபவிப்பதற்காக சேர்த்து வைக்கப்படுகிறது. ஒருநாள், காலம் என்கிற அலை, ம்ருத்யு – வந்து இரண்டையும் பிரிக்கிறது. யாருக்கு யார் மனைவி? யார் பர்த்தா?! யார் தந்தை? யார் பிள்ளை?... உத்தமமான அவனல்லவோ சர்வ லோகப் பிதா. அவனல்லவோ சர்வ லோக பர்த்தா! கர்மாதீனமாக ஏற்பட்டிருக்கிற இந்த விஷயத்தை நாம் சாஸ்வதமாக நினைக்கலாமா...? எனவே சஞ்சலப்படாதே. தர்மத்துக்கு நாம் தலைவணங்குவோம். நீ சொல்கிறபடி நான் வந்து விட்டால் தர்மத்தையெல்லாம் குலைத்தவனாகி விடுவேன்'' என்றான் பரமாத்மா.

ஜாபாலி என்றொரு மஹரிஷி. அவர் கோணலாக, அதர்மமாகப் பேசினார். என்ன பேசினார் என்றால், பூர்வ காலத்திலிருந்த ஒரு மதம் குறித்து. அதற்கு லோகாயதிக மதம் என்று பெயர் – சார்வாக் மதம் என்றும் சொல்வார்கள்.

பேச்சு ரொம்ப நன்றாக இருக்கும் அந்த மதத்தில். அதன்படி பிரத்யக்ஷம் ஒன்றுதான் பிரமாணம்; கண்ணுக்குத் தெரியாததெல்லாம் பிரமாணம் கிடையாது.

வேதாந்த மதமோ இதற்கு நேர் எதிர். அதன்படி பிரத்யக்ஷமெல்லாம் அனுமானம் தான். சப்தம் எல்லாம் பிரமாணம். சப்தம் என்பது வேதம்.

ஆனால் சார்வாக மதத்தில் பிரத்யக்ஷம் ஒன்றே பிரமாணம். கண்டதே காட்சி; கொண்டதே கோலம் என்கிற ரீதியில் பேசினார்கள்.

'உயிர் இருக்கிற வரைக்கும் சௌக்கியமாய், சந்தோஷமாய் இருங்கள்' என்றார்கள். இதை யாராவது வேண்டாமென்பார்களா என்ன...?! சௌக்கியத்தைத்தானே எல்லோரும் விரும்புவார்கள்!

'சௌக்யமாய் இருக்க வேண்டுமானால் நன்றாகச் சாப்பிட வேண்டும். உபவாஸம் வேண்டாம். ஏன் அந்த சிரமமெல்லாம் பட வேண்டும்? யக்ஞம், யாகாதி கர்மங்கள் வேண்டாம். நன்றாக உடம்பை 'கொழுக் மொழுக்' கென்று தேற்றிக் கொள்ளுங்கள்...' என்றார்கள்.

'உடம்பைக் கொழுக் மொழுக்கென்று தேற்றிக் கொள்ள வேணுமானால் நன்றாகச் சாப்பிட வேண்டும். நிறைய நெய் சேர்த்துக் கொள்ள வேண்டும். நெய் வாங்கவோ பொருள் வேண்டுமே...' என்று விசாரம் வந்தது.

'கவலை வேண்டாம்! கடன் வாங்கு!' என்றார்கள்! 'கடனை வாங்கியாவது நெய்யைக் குடியுங்கள். தீர்த்தத்தைப் பருகுகிற மாதிரி நெய்யைப் பருகுங்கள். அதற்குத் தேவையான கடனை வாங்குங்கள்...' – இப்படியொரு வழிகாட்டல்!

எதை 'கூடாது' என்று சாஸ்திரம் சொல்கிறதோ, அதையே பண்ணச் சொல்கிறார்கள் இவர்கள். கடனே வாங்கக் கூடாது. கடன் வாங்குவது பரம பாவத்துக்கு வழிகோலும். அடுத்த ஜன்மத்திலே விபரீதமான கஷ்டங்களெல்லாம் ஏற்படும் என்கிறது சாஸ்திரம்.

இவர்களோ கடனை வாங்கு; நெய்யைக் குடி என்கிறார்கள்! ஏன்...? எப்படியானாலும் சரீரம் பஸ்மமாகத்தானே போகிறது என்கிற எண்ணம்! சரீரத்துக்குள்ளே, சரீரத்தைக் காட்டிலும் உத்தமமான ஆத்ம வஸ்து இருப்பதையே அவர்கள் கவனிக்கவில்லை. ஏனெனில் பரோக்ஷம்! – கண்ணுக்குத் தெரியாததை கவனிக்காமல் இருக்கச் செய்கிறது. கண்ணுக்குத் தெரியாததைத்தான் கவனிக்கவில்லை.. வேதம் சொல்கிறதே அதையாவது கவனிக்கக் கூடாதா... அதையும் ஏற்கவில்லை.

ஆதிசங்கர பகவத்பாதாள் ஜாபாலியைப் பார்த்துக் கேட்டார் – இவ்வளவு தூரம் பேசுகிறாயே... சொர்க்கம்– நரகம் என்பதை உங்கள் மதம் ஏற்கவில்லையா?

அதிர்ச்சி தரும் பதில்தான் கிடைத்தது!

(தொடரும்)

"தலைவரை கிரிக்கெட் மாட்ச் பார்க்க கூட்டிட்டுப் போனது தப்பாப் போச்சு."

"ஏன்?"

''இவ்வளவு இடம் இருக்கிறது இவ்வளவு நாளா தெரியாம போச்சே. உடனே வளைச்சுப் போட ஏற்பாடு பண்ணுங்க'னு சொல்லிட்டாரு!''

– பா. ஜெயக்குமார்



இருள் எத்தனை அழகாக இருக்கிறது? மாசே இல்லாத என்ன ஒரு பூரணத்துவம்? மென்மையும் வழவழப்பும் செல்லக் ' குரூரமுமாக அது மேலே கவிந்து கரைகிறபோது எப்படியெல்லாம் மனம் சிறகடிக்கிறது? உடலையே காணாமல் பண்ணி விடுகிற ரசாயனம் மாதிரி என்ன ஒரு ஜாலம் இது?

எர்ணாகுளம் ஜங்ஷனிலிருந்து புறப்பட்டு, வேகம் கொண்ட ரயில் அந்த குகையில் நுழைந்தபோது கண்களை இறுக மூடிக் கொண்டாள் அவள். இருளின் பரிபூரண ஆசியை அப்படியே எடுத்து விழுங்கி விடுகிறவள் போல. ரயிலின் பேரிரைச்சலும் கவிந்த இருளின் அமானுஷ்யமும் அவளைக் கிரக்கத்தில் கொண்டுபோக, அப்போதுதான் அது நடந்தது.

ஒரே வினாடி. சரேலென்று கிட்டே நெருங்கி, உதட்டில் அழுத்தமும் அவசரமுமாக ஒற்றி விலகிய உருவம் அவளுக்குத் தெரியவில்லை. ராட்சஸன் மாதிரி, ரயிலையே விழுங்கி இருந்த இருள்.

நடந்தது இன்னதென்று உணருமுன், ரயில் குகையை விட்டு வெளியே வந்திருந்தது. சாயங்கால வெளிச்சம். ஜன்னலுக்கு வெளியே ஓட்டமெடுக்கும் ரப்பர் மரங்கள். காட்டுச் செடிகள். கருநீலப் பூக்கள். ரயிலின் சீரான தடக் தடக்.

அவளுக்கு மூச்சு எகிறி, இதயம் நசுங்கி விடும் போலிருந்தது. காற்று தோற்றுப் போய், உடல் பிசு பிசுத்து நடுங்கத் தொடங்கியது. வெட்கமும் வேதனையும் படபடப்பும் இயலாமையும் நெருக்கித் தள்ள, சட்டென்று தலை கவிழ்ந்தாள். யார்? யாருடைய வெறியின் வெளிப்பாடு அது? நிமிர முடியவில்லை. தனக்கு முன் அமர்ந்திருந்தவர்களின் முகங்களை மனசுக்குள் கொண்டுவந்து பார்த்தாள்.

மூன்று பேர். மூவருக்கும் முப்பது வயதுக்கு மேல் இருக்க முடியாது. நிச்சயம் மலையாளிகளோ, தமிழர்களோ இல்லை. அந்த உயரமும் ஆகிருதியும் மீசையற்ற முகங்களில் தெரிந்த ரொட்டிச் செழுமையும் அவர்களை வடநாட்டவராகச் சொல்லின. ஸே, தில்லி. அல்லது அதற்கும் மேலே. சின்னக் கண்கள். தோசைத் துடுப்பு மாதிரி வழித்தெடுத்த முகவாய். சிவந்த கன்னங்களில் சவர வழுக்கல். மிலிட்டரியாக இருக்கலாம் என்று அவளுக்குத் தோன்றியது.

ராணுவ வீரர்கள். எல்லைகளில் எதிரியுடன் மோதிவிட்டு, குடியரசு தினத்தன்று கஞ்சி மொடமொடப்புடன் நெஞ்சில் மெடல் குத்திக் கொள்கிறவர்கள். விரைத்த சல்யூட்டும்



வீறு கொண்ட தோள்களும். வாகான இருளில் தனியாக ஒரு பெண் கிடைத்தால் முத்தமிடக் கூடாது என்று ராணுவச் சட்டத்தில் ஏதும் கூறியிருக்க மாட்டார்களா?

அவளுக்கு அழுகையும் துக்கமும் பொங்கி வந்தன. என்ன ஒரு கையாலாகாத்தனம்? என்ன செய்ய வேண்டும், இப்போது? உரக்கக் கத்தி, கூச்சல் போட்டு, கற்பில் கால் சதவீதம் காணாமல் போய்விட்டதாக முறையிடுவதா? யாரிடம்? அல்லது எதிரே இருக்கிறவர்களைக் கழுத்தைப் பிடித்து இழுத்துப் போய் ஓடும் ரயிலிலிருந்து தள்ளி...

உதட்டைக் கடித்துக் கொண்டு அவள் நிமிர்ந்து பார்த்தாள்.

மூன்று பேர். எவ்வித சலனமும் இல்லாத முகங்கள். ஒருவருக்கொருவர் நண்பர்களாகத்தான் இருக்க வேண்டும். ஆனால், அவள் ஏறிய இடத்திலிருந்து அவர்கள் பேசிப் பார்க்கவில்லை.

சன்னல் ஓரம் உட்கார்ந்திருந்தவன், முகத்தைத் திருப்பவேயில்லை. அவன் பார்வை ஆகாயத்தில். மாலை வெயிலின் வெளிர் வெள்ள ரேகைகள் அவன் கன்னங்களில் இறங்கிப் பளபளத்தன.

நடுவில் இருந்தவன் ஒரே தினசரியை இரண்டாவது முறையாகப் படித்துக் கொண்டிருந்தான். அடுத்தவன் அரை உறக்கத்தில்.

யார்? யார் அதைச் செய்தது? திட்டமிட்ட செயலா? திடீரென்று எழுந்த உணர்வா? அத்தனை துணிச்சலாக இயங்கிவிட்டு, ஒரு பதற்றம் இல்லாமல் இப்படி வானம் பார்த்துக் கொண்டு, பேப்பர் படித்துக் கொண்டு, தூங்கிக் கொண்டு இருக்க முடியுமா? பாசாங்குதானா? இத்தனை துல்லியமான பாசாங்கு சாத்தியமா என்று அவளுக்குச் சந்தேகம் வந்தது. ஒரு குறுகுறுப்பினால்கூட அவளைப் பிறிதொரு தரம் ஏறிட்டுப் பார்க்காதது அவளுக்கு வியப்பாக இருந்தது.

எத்தனை நெஞ்சுரம், தீர்மானம்! யார் அல்லது எது கொடுத்த துணிச்சல்? ஒரு வினாடி. அத்தனை நேரம்கூட இருக்காது. ஒரு சீறல். ஓர் அழுத்தம். சரேலென்று விலகல். வாசனைகூடத் தெரியவில்லை. அது கடந்துபோன காற்றின் பழிவாங்கல்.

ரயிலின் சீரான ஓட்டம் அவளுக்கு அலுப்பைத் தந்தது. ஒரே ஓட்டமாக ஓடி எதிலாவது மோதி, உடல் சின்னாபின்னமாகி விடவேணும் போல் இருந்தது.

எவனோ ஒருத்தன் முத்தம் கொடுத்து விட்டது அவளுக்கு இப்போது பெரிய விஷயமாகப்படவில்லை. அது யாரென்று தெரியாத தோல்விதான் பூதாகாரமாக இருந்தது. தோல்வியின் முகம் எப்போதுமே அழகானதாக இருப்பதில்லை. விரித்த சடையும் ரத்தம் தெரிக்கிற விழிகளும் ஏளனத்தில் விரிகிற உதடுகளின் ஓரங்களில் வழிகிற எச்சிலும் கூர்நகங்களின் பிடியில் சிக்கிச் சிதறுகிற பூவிதழ்களும்...

அதன் பிடிகளிலிருந்து தன்னை

மூவர்

பா. ராகவன்

விடுவித்துக் கொள்ளப் பார்த்தாள் அவள். 'ஹெஹ்ஹெஹ்ஹே' என்று பிடியை மேலும் இறுக்கியது அது.

"விடு. விட்டுடு. நான் போயிடறேன். வேற கம்பார்ட்மென்ட்டுக்கு."

அது சிரித்தது. தோளைப் பிடித்து இருக்கையில் அழுத்தியது. "எழுந்து போனால் தோற்றது உறுதி ஆயிடறது. பரவாயில்லையா?"

அவள் குமுறிக் கொண்டிருந்தாள். தோல்வி! அவமானம்? அதன் உருவம் இதுதானா? இப்படித்தான் பல்லைக் காட்டிக் கொண்டு கெக்கெக்கே என்று இளிக்குமா?

நகைப்பும் ஏளனமும் வெளிச்சத்துக்குத்தான் என்று அவளுக்குத் தோன்றியது. இருளுக்கு ஏது கேலிச் சிரிப்பும் கேடு கெட்ட குணங்களும்? சூரியன் உடைந்து தூளாகி, உலகம் முழுவதும் இருளைத் தழுவி விட வேண்டும் என்று நினைத்தாள்.

குகையை விட்டு ரயில் வெளி வராதிருந்தால் இத்தனை அவஸ்தை இருந்திருக்காது. குத்திக் கிளறும் துக்கமும் அவமானமும் பொங்கும் விழிகளிலிருந்து உதிரும்

உள்ளே வரலாமா?

எங்களுக்கு வேண்டாம் தங்க நகை!

❖ இருபத்தாறு வாரங்கள் உள்ளே வரத் தயங்கிய 'சுகி'யை தொடர் தொடங்கும்போதே மனதிற்குள்ளே இடம் பிடிக்க வைத்தது ஸ்யாமின் கை வண்ணம்.

சேலம், சக்தி அருளானந்தம்.

❖ 'உள்ளே வரலாமா?' தொடர் எங்கள் உள்ளங்களின், உள்ளே குடி புகுந்து கொண்டது. ஸ்ரீராம்-சுகன்யா பாத்திரப் படைப்பு மிக அருமை. கதையின் முடிவு மனத்தில் வசந்தத்தைப் பரப்பியது. கதாசிரியருக்கு மில்லியன் டாலர் பாராட்டுகள்!

ஆவணத்தாங்கோட்டை, ப. ராமகிருஷ்ணன்.

❖ தங்க நகைப் பரிசு எங்களுக்கா? வேண்டாங்க. கதை எழுதினவங்களுக்கும் ஸ்யாமுக்கும் குடுங்க. கதையை முடிக்கிறேன் பேர்வழின்னு எங்களுக்கும் ஸ்ரீராம் குடும்பத்துக்கும் இருந்த நெருக்கமான தொடர்பை வெட்டிட்டீங்களே. ஓ.கே. மிஸஸ்.சுகன்யா ஸ்ரீராமோட அட்ரஸ் கொடுக்க முடியுமா, ப்ளீஸ்?

திருவெண்ணெய்நல்லூர், பா. சித்ரா.

❖ வசந்தியின் பிரச்னை மிகவும் சாதாரணமானது. அதற்கு அவளை சைக்கியாட்ரிஸ்ட்டிடம் அழைத்து சென்றும், புதுமணத் தம்பதிகளை அவசர அவசரமாக தேனிலவுக்கு அனுப்பியும் சுகன்யா எடுக்கும் அதிரடி நடவடிக்கைகள் தேவைதானா? பெண்ணின் பெற்றோரிடத்தில் உண்மையைச் சொல்லி, அவர்கள்மூலம் பிரச்னையை தீர்ப்பதுதான் சிறந்த வழி!

தஞ்சாவூர், வெ. முருகானந்தம்.

❖ முதல் காதலையும், முதல் அபிப்பிராயத்தையும் மறக்க, மாற்ற முடியாது. சுகன்யாவின் முடிவு தெளிவானது. கதை முழுதும் அந்த கேரக்டரையே சுற்றி வந்தது சிறப்பு!

பொன்மலை, ஆர். பிரகாஷ்.

சுடுநீரும் துடிக்கும் நரம்புகளும் பீறிட்டெழக் காத்திருக்கும் ஓலக் குரலும் இருளின் பாதுகாப்பான வருடலில் ஆறுதல் பெறக் கூடும் என்று நினைத்தாள்.

எல்லாம் நினைப்புத்தான். நிஜத்தின் கோர முகத்துக்கு முகமூடியே கிடையாது.

ரயிலின் வேகம் குறைந்தாற்போல இருந்தது. அவள் வெளியே பார்த்தாள். ஏதோ ஸ்டேஷன் வருகிறது. காப்பி, காப்பி என்று கத்திக்கொண்டு ஒரு கூட்டம் வரும். புதிதாக ஏறும் பயணிகளில் ஓரிருவர் அவளுக்கு அருகே காலியாக இருக்கும் இரண்டு இருக்கைகளை நிரப்பலாம். அப்போது படபடப்பு அடங்கிச் சற்றுப் பாதுகாப்பாக உணர முடியும்.

ஆனால் யாருக்கு யார் பாதுகாப்பு? எதற்குப் பாதுகாப்பு? வெற்றி வீரனாக, நினைத்ததைச் சாதித்து விட்ட பெருமிதத்துடன் எதிரே அவன் உட்கார்ந்திருக்கிறான். ஒரே ஆள்தான். மூன்று வடிவங்கள். மூன்றில் எந்த வடிவத்தில் அந்த வக்கிரம் ஒளிந்து கொண்டிருக்கிறது என்பதுதான் கேள்வி. கண்டு பிடிப்பதில்தான் சவால். ஆனால் கண்டு பிடித்து என்ன ஆகப் போகிறது? 'நீயே என்னைக் கட்டிக் கொள்' என்று மன்றாடுவதா? மறுபடியும் அந்த பூதம் கெக்கெக்கே என்று இளிக்க ஆரம்பித்தது.

மற்றொரு தோல்வியை அவள் அந்த ஸ்டேஷனில் சந்திக்க வேண்டி வந்தது. அவள் எதிர்பார்த்ததுபோல அவள் பக்கத்து இருக்கைகளுக்கு யாரும் வரவில்லை. எழுந்து, இறங்கிவிடலாமா என்று தீர்மானிப்பதற்குள் ரயில் கிளம்பி விட்டது.

பொங்கிய துக்கத்தை விழுங்க முடியாமல் பல்லைக் கடித்துக் கொண்டு வெற்றிடத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சட்டென்று கண் முன்னே பேப்பர் நீண்டது.

"வான்ட் டு ஹாவ் எ லுக்?"

மூவரில் ஒருவன். இவனா? இவன்தானா? கேட்டு விடலாமா?

அவள், அவனை உற்றுப் பார்த்தாள். முகத்தில் குறும்பு இல்லை. கேலி இல்லை. சாதாரண - மிகச் சாதாரண முகம். ஒரு சக பயணியிடம் காட்டக்கூடிய கண்ணியம் குலையாத பார்வை. அவள் மற்ற இருவரைப் பார்த்தாள். அவர்கள் முகத்திலும் திருட்டுத்தனமில்லை. குறுகுறுப்பு இல்லை. பயணக் களைப்பும் வீடு போய்ச் சேரும் வேட்கையும்தான்.

திடீரென்று அவளுக்கு ஓர் எண்ணம்


நம்பூதிரி (படும்) பாடு!

கேரள இடது கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஈ.எம்.எஸ். நம்பூதிரி பாடு அங்கு மனிதவள மேம்பாட்டுத் துறையின் தலைவராக இருக்கிறார். இந்தத் துறையின் மெம்பர் செகரட்ரி ஸ்ரீதரன். ஈ.எம்.எஸ்ஸின் புதல்வர். இவருக்கு சம்பளம் என்ன தெரியுமா? 12,500 ரூபாய் – மாதத்துக்கு. நம்பூதிரி பாடின் மற்றொரு மகன் சசிதரன், மருமகள், மகள் எல்லோரும் இ. கம்யூனிஸ்ட் கட்சிக்குச் சொந்தமான சிந்தா பப்ளிகேஷன்ஸிலும் ஏ.கே.ஜி. டிரஸ்டிலும் தேசாபிமானி என்கிற கட்சிப் பத்திரிகையிலும் வேலை பார்க்கிறார்கள். தலா 7,500 ரூபாய் சம்பளம்.

நம்பூதிரிபாடின் மருமகன் தாமோதரன், மத்திய அரசுப் பணியிலிருந்து ஓய்வுபெற இன்னும் இரண்டு மாதங்கள்தான் உள்ளன. அதற்குள் கேரள அரசு அவரை அறிவியல், தொழில்நுட்பத் துறையின் நிர்வாக இயக்குநர் மற்றும் சேர்மனாக நியமித்து, அறிவித்து விட்டது.

மாநிலத்தில் பல இளைஞர்கள் வேலை வாய்ப்புக்காகக் காத்திருக்கிறார்கள் என்பது ஒருபுறமிருக்க, இ.கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களான பல இளைஞர்களே வேலையற்று இருப்பது அரசுக்கும் கட்சிக்கும் தெரியாததல்ல.

''இந்த வரையில் நம்பூதிரிபாடு குடும்பத்தில் மட்டுமாவது வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கியிருக்கிறதே அரசும் கட்சியும்!'' என்று கிண்டலடித்திருக்கிறது கேரள JYF.


* நம்பூதிரிபாடு

அரசியல் நேர்மைக்குப் பெயர் போன நம்பூதிரி பாடு இப்போது என்ன செய்வதென்று புரியாமல் திணறிக் கொண்டிருக்கிறார்.

திருவனந்தபுரத்திலிருந்து : **எஸ்.எஸ். மணி**

தோன்றியது. ஒருவேளை அது ஒரு பிரமையோ? உடனே இல்லை என்று தீர்மானமாகச் சொல்லிக் கொண்டாள்.

ஒரு கணத்துக்கும் குறைவான நேரம்தான். ஆனாலும் அந்த திடீர் ஸ்பரிசமும் உரசலும் அழுத்தமும் வெப்பமும் அந்நிய சுவாசமும் மறுபடி எண்ணிப் பார்த்தால் உருவமற்ற நிகழ்வாக ஞாபகம் வரத்தான் செய்கிறது. அது மறந்து விடக் கூடியதல்ல. புனிதமான விஷயங்கள் மட்டுமல்ல; இதுவும் ஆயுசுக்கும் நினைவை இடறிக் கொண்டுதான் இருக்கும் என்று தோன்றியது. கல்யாணம் ஆன பிறகு. குழந்தை பிறந்த பிறகு. பேரன் பிறந்த பிறகு. விறகுப் படுக்கையில் விழுகிற விநாடி வரை.

எதிர்பாராவிதமாக செய்தித்தாள் நீட்டியவனுக்கு அவள் மனசுக்குள் நன்றி சொன்னாள். இருள் அளவுக்கு இல்லாவிட்டாலும் ஓரளவுக்கு இது ஒரு திரையாக உபயோகமாகவே செய்கிறது. எழுத்துக்கள் அவள் கண்களில் உதிர்ந்து கொண்டிருந்தன. தாளைக் கிழித்துக்கொண்டு அவள் கவனம் அந்த மூவரின் மேலேதான் இருந்தது.

மனசுக்குள் அவன் சிரிப்பான். இது அவன் வாழ்க்கையில் ஓர் அபார வெற்றியாக இருக்கும். தன் துணிச்சலுக்கும் தீரத்துக்கும் தோள் தட்டி மாலை போட யார் இருக்கிறார்கள் என்று எக்காளமிட்டுக் கொண்டிருப்பான். வாழ்க்கைக் கடலில் விளையாடி ஓய்ந்து, கரையோரம் கால் துவள உட்காருகிற நேரம் அவன் தன் மனைவியிடம் இதைச் சொல்வானா?

'அன்றொரு நாள் சென்னையிலிருந்து கேரளா போகிற ரயிலில் என் எதிரே ஒரு பெண் இருந்தாள். சின்னப் பெண். தனியாக வந்திருந்தாள். எர்ணாகுளத்துக்கு முன்னாலா, பின்னாலா, ஞாபகமில்லை. இருட்டாக ஒரு குகையை ரயில் கடக்கிறபோது...'

அப்போது தலை நரைத்திருக்கும் அவன் மனைவி என்ன சொல்வாள்? கேவிக் கேவி அழுவாளா?


அந்த அழுகைகூடத் தனக்காக இரக்கப்பட்டு அழுததாக இருக்காது. தனக்காக யார் இரக்கப்படுவார்கள்? இரக்கப்பட வேண்டிய விஷயம்தானா? கேலியும் எள்ளலும் குத்திக் கிளறிப் பார்க்கிற வெறியும் மேலோங்கி நிற்கிற உலகில் இரக்கமெல்லாம் அகராதிச் சொல்தான் என்று அவளுக்குத் தோன்றியது.

இப்போது என்ன செய்ய வேண்டும்? மௌனத் திரை போட்டு, மனதுக்குள் குமுறிக் கொண்டிருப்பது பைசா பிரயோஜனமில்லை என்று தெரிந்தே இருந்தாள். ஆயினும் வார்த்தைகளை விட மௌனம் பாதுகாப்பானது என்று அவளுக்குத் தோன்றியது. மௌனமும் இருள் மாதிரிதான். எதையும் மூடி மறைத்து விடுகிற வித்தகம் அதனுள் ஒளிந்திருக்கிறது. வழவழப்பும் குரூரமும் கலந்த அதே வித்தகம்.

அவள் இறங்க வேண்டிய ஸ்டேஷன் வந்ததும் பேப்பரை மடித்து எதிரில் வைத்தாள். யாரையும் பார்க்கவில்லை. தன் பெட்டிகளை எடுத்துக் கொண்டாள். கதவருகே போய் நின்று கொண்டாள். ஏதோ ஒரு வகையில் இந்தப் பயணம் மறக்க முடியாததாகி விட்டது. தோல்வி, அவமானமெல்லாம் இரண்டாவது நபர் எதிரில்தான் என்று அவளுக்குத் தோன்றியது. கண்ணை மூடிக் கொண்டு, இருளில் அமிழ்ந்து விட்டால் சுகம்தான்.

சிலீரென்று தூறல் முகத்தில் விழ, அவள் ரயிலிலிருந்து இறங்கினாள். வண்டி மீண்டும் கிளம்பும் வரை அங்கேயே நின்றிருந்தாள். ரயில் புறப்பட்டபோது, சன்னல் வழியே உள்ளே பார்த்தாள்.

மூவரில் ஒருவன் வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். ஒருவன் பேப்பர் படித்துக் கொண்டிருந்தான். ஒருவன் உறக்கத்திலிருந்தான். அதே அரை உறக்கம்.



"ஒரு வாரத்துக்குள் தொகையைச் செலுத்தவில்லையெனில் தங்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கும் ஃப்ளாட்டை மற்ற வாடிக்கையாளர்களுக்குக் கொடுத்து விடத் தயங்க மாட்டோம். நம்முடைய ஒப்பந்தத்தின் 18 வது ஷரத்தை நோக்கவும்."

"எவ்வளவு கொடுக்கணுமாம்?" என்றாள் ராஜேஸ்வரி மிகுந்த கவலையுடன். வீடு வாங்கத் தீர்மானித்ததிலிருந்து அவளுக்கு நரை தெரிய ஆரம்பித்திருக்கிறது. உடம்பில் ஒரு தளர்ச்சி.

"ஒண்ணரை லட்சம்" என்றான் சிவராமன்.

"எல்லாம் கொடுத்தாச்சுன்னு போன தடவை சொன்னானே?"

"அது .என்னவோ 'எஸ்கலேஷன் க்ளாஸாம்.' சிமெண்ட் வெலவாசி உசந்ததுக்காக..."

"ஏந்தான் இப்படி வீட்டில போய் எல்லாப் பணத்தையும் போட்டு மாட்டிண்டமோ!"

"ஒரு வருஷமா இதோ இப்ப ஆறது, அப்ப முடியறதுன்னு சொல்லிண்டே இருக்கானே தவிர முடிக்கிற வழியா இல்லை."

"காண்ட்ராக்ட்ல ஒரு வருஷத்தில் கட்டி முடிக்கப்படும்னு சொல்லிருக்கானே அதைப் பத்திப் பேச்சே இல்லை."

"இவங்கிட்ட மாட்டிண்டுட்டோம்."

"எவ்வளவோ பேர் சொன்ன தேதிக்குக் கட்டி முடிக்கிறா. நமக்குன்னு ஒருத்தன் ஆப்ட்டான். விதி!"

"இப்ப கட்டாட்டி என்ன ஆகும்?"

"ஃப்ளாட்டை மத்த பேருக்கு அலாட் பண்ணிடுவானாம்."

"கட்டின பணம் எல்லாம்?"

"குடுத்துருவான். அசல் மட்டும் வரும். அதான் கண்டிஷன்."

"மத்தளத்துக்கு ரெண்டு பக்கமும் இடின்னு, கட்டினாலும் கஷ்டம்; கட்டாட்டாலும் கஷ்டம். ஒண்ணரை லட்சத்துக்கு எங்க போவேள்?"

சிவராமன் அவளை ஏற இறங்கப் பார்த்தான்.

"என்ன பார்க்கறேள்? என் நகையெல்லாம் வித்தாச்சு."

"உன் நகையை யார்றி கேட்டா? நீ ஒண்ணு!"

"இப்ப என்ன செய்யறது?"

"ஏதாவது உருப்படியா யோசனை சொல்லேன். அப்பாவைக் கேட்டு, அண்ணாவைக் கேட்டு வாங்கித் தரேன்னு..."

"அவாகிட்டல்லாம் இத்தனை பணம் எங்க இருக்கும்? லோன் கின்னு வாங்கிக்கலாமே?"

"எல்லா லோனும் வாங்கியாச்சு – எச்.டி எஃப்.சி., எல்.ஐ.சி."

"சீட்டு ஏதாவது புடிக்கலாமா?"

"பார்க்கலாம். முதல்ல வக்கீலைப் புடிக்கணும். இவன் மேல கேஸ் போடணும். என்னமா ஏமாத்திருக்கான் தெரியுமா!"

மேற்குறித்த உரையாடல் சிவராமனுக்கும் ராஜேஸ்வரிக்கும் சென்னை 33-ல், அனுக்ரஹா என்கிற ஃப்ளாட்டில் நடைபெற்றது. அதன் சொந்தக்காரர் ஆள்வார்பேட்டையில் ஒயின் ஸ்டோர் வைத்திருக்கிறார். தண்ணி லாரி ஓட்டுகிறார். வருஷா வருஷம் வாடகையை உயர்த்திக் கொண்டே போகிறார். எதிர்த்து வாதாட முடியவில்லை. "அவன்லாம் முரடன். அவங்கிட்ட வம்பு வெச்சுக்காதீங்கோ அத்திம்பேரே. சாமான்லாம் இழுத்து வீதில எறிஞ்சுருவான்" என்று மச்சினன் எச்சரித்ததால் ஆயிரத்து ஐந்நூறில் ஆரம்பித்து இப்போது மூவாயிரம் ரூபாயில் நிற்கிறது வாடகை! அதனால்தான் 'பிரமிட் பில்டர்ஸ்' விளம்பரத்தைப் பார்த்ததும் தீர்மானித்து விட்டார்கள். சொந்தமாக ஃப்ளாட் வாங்கிவிடுவது என்று. 'கஷ்டமோ நஷ்டமோ, நமக்குன்னு ஒரு நிழல் இருந்தா இந்த வீட்டுக்காரன் பிடுங்கல் இல்லை பாரு. வருஷா வருஷம் வாடகையை ஏத்திண்டு...

விளம்பரம் தேன் தடவி எழுதியிருந்தது. ஒரு வருஷத்துக்குள் கட்டி முடிக்கப்படும் அவர்களுடைய 'அருள்' அபார்ட்மெண்ட்ஸ். இருபத்து நாலு மணி நேரமும் காவல். லிப்ட் வசதிகள். ஷாப்பிங் சென்டர். கல்கண்டு மாதிரி போர்வெல் தண்ணீர். கேளிக்கைக்கான பொது இடம். ஸ்டாண்ட்பை ஜெனரேட்டர். டிஷ் ஆண்டென்னா, எல்லாம் 'நம்ப முடியாத' விலையில். பத்து லட்சம், ரிஜிஸ்ட்ரேஷனையும் சேர்த்து. ரொம்ப



சுஜாதா

சல்லிசு என்று பி.எஃப். லோன் எடுத்து முன் பணம் கட்டி விட்டான்.

ஆரம்பித்தது வம்பு. மூணு மாசத்துக்கு ஒருமுறை லட்சம் லட்சமாகக் கேட்டுக் கொண்டே இருந்தார்கள். அங்கே இங்கே பாய்ந்து எல்லாக் கடன் சாத்தியங்களையும் பயன்படுத்தி தகிடுதத்தம் பண்ணி, இது வரைக்கும் கூட்டிப் பார்த்ததில் பதினோரு லட்சம் கட்டியாகி விட்டது.

இப்போது இன்னும் ஒண்ணரை லட்சம் கேட்கிறார்கள்.

''கட்ட ஆரம்பிச்சானாங்கறதே சந்தேகமா இருக்கு.''

"அதெல்லாம் ஆரம்பிச்சுட்டான்" என்றான்.

"இதுவரைக்கும் இடத்தைக் கூட பார்க்கலை."

"சாயங்காலம் அழைச்சுண்டு போய்க் காட்டறேன். இப்ப போய் முதல்ல பில்டரைப் பார்த்து நாக்கைப் புடிங்கிக்கறாப்பல நாலு கேள்வி கேட்டுட்டுத்தான் வரப் போறேன். படவா ராஸ்கல் 'சூட்'டை போடறேன் வான்னு."

எல்டாம்ஸ்ரோடு கார்ப்பரேஷன் பள்ளிக்கு எதிரே இருந்த சந்தில் பில்டரின் அலுவலக முன் அறையில் ஒரு பெண் உட்கார்ந்து தன் நகப்பூச்சில் கவனத்துடன் போன் பேசிக் கொண்டிருந்தாள். சிவா வந்ததை கவனிக்கவில்லை. "ஆயிரம் திருப்தியடைந்த வாடிக்கையாளர்கள்" என்று போஸ்டரில் சிவராமனையும் ராஜேஸ்வரியையும் போல ஒரு தம்பதி வாய் நிறைய சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

"செல்வராஜ் வேணுங்களே."

"பெங்களூர் போயிருக்காரே."

"எப்ப வருவார்?"

"சொல்ல முடியாது. ஒரு ப்ராஜெக்ட் முடியற ஸ்டேஜ்ல இருக்கு."

"நம்ம ப்ராஜெக்டை எப்ப முடிப்பீங்க?"

"எது ஸார்? மெட்ராஸ்ல எட்டு சைட்டு இருக்கு."

"அருள்."

''அதை தாமோதர் பார்த்துக்கறாரு. சந்திக்கிறீங்களா?"

தாமோதர் என்பவர் அறை முழுதும் சிகரெட் குடித்துவிட்டு புகையை விரட்டிக் கொண்டிருந்தார்.

"திடீர்னு ஒண்ணரை லட்சம் கொண்டான்னு கேக்கறீங்க. என்மாதிரி மிடில் க்ளாஸ் ஆசாமியெல்லாம் என்ன பண்ணுவோம்? பேமெண்ட்டே வேண்டாம்னீங்க போன தடவை?"

> "அந்த ஆள் குடும்பக் கட்டுப்பாடுங்கறதை தப்பாப் புரிஞ்சுக்கிட்டிருக்கார்னு நினைக்கறேன்."
>
> "எப்படி சொல்றே?"
>
> "இரண்டு குடும்பத்தோட நிறுத்திட்டேன்னு சொல்றாரே!"
>
> \- வெ. ராஜாராமன்

தாமோதர் காலை ஆட்டிக் கொண்டே லெட்டரைப் படித்தார்.

"பணத்தைக் கட்டிடுங்க. கைல சாவி கொடுத்துருவோம். மார்கழி மாசம் போகட்டும்னு காத்திருக்கோம். அவ்வளவ்தான். பவர், வாட்டர் எல்லாம் ஆயிடுத்து. கட்டடம் முடிஞ்சிருச்சு."

"பத்து லட்சத்தில் ஆரம்பிச்சு பதினாலு ஆயிருச்சே!"

"ஸோ?"

"இது நியாயமா?"

"காண்ட்ராக்டைப் படிச்சிங்க இல்லை."

"பொறுப்பில்லாம பேசறீங்க"

தாமோதரின் முகம் இறுகியது.

"பாருங்க, ஃப்ளாட் வேண்டாம்னா சொல்லிடுங்க. அந்த லொக்கேஷனுக்குச் சதுர அடிக்கு இப்ப மதிப்பு ரெண்டாயிரம் கொடுக்க நாலு பார்ட்டி முழுப் பணத்தோட தயாரா இருக்குது. நீங்க குடுத்த பணத்தைத் திருப்பிக் கொடுத்துருவோம். என்ன சம்மதமா? ரேணு, அந்த பி ஃபோர் பாரம் ஒண்ணு கொண்டு வாம்மா. சார்க்கு வீடு வேண்டாமாம்."

சிவராமன் திடுக்கிட்டு, "வேண்டாம்னா சொன்னேன்?"

"பின்ன? போங்க சார்! உங்க டயமும் எங்க டயமும் வேஸ்ட் ஆறது. நான் இந்தக் கம்பெனியில் எம்ப்ளாயி. நீங்க மிஸ்டர் செல்வாவை கேக்க வேண்டிய கேள்வியெல்லாம் என்னைக் கேக்கறீங்க."

வக்கீல், ஒப்பந்தத்தைப் படித்துவிட்டு, "இந்த மாதிரி ஓரவஞ்சனை காண்ட்ராக்டை நான் இந்த இருபத்தஞ்சு வருஷ அனுபவத்தில் பார்த்ததே இல்லைப்பா. எப்படி நீ இதில எல்லாம் சைன் போடுவ? இவன் இப்ப வீடு கொடுக்காமலே நாமம் போட்டாலும் உன்னால ஒண்ணும் செய்ய முடியாதபடி எஸ்கலேஷன், போர்ஸ் மெஜூர் எத்தனை போட்டிருக்கான்! அவனை ஒண்ணும் பண்ண முடியாது."

"ஒரு வருஷத்தில் முடிச்சுக் கொடுப்பேன்னு எழுதிக் கொடுத்திருக்கானே கிருஷ்ணமாச்சாரி, அது ப்ரீச் இல்லையா?"

"எழுதிக் கொடுத்து எத்தனை வருஷமாச்சு?"

"ஏறத்தாழ ரெண்டு வருஷம்."

"கேஸ் போடலாம். ஆனா இழுத்தடிக்கும். ஒண்ணு பண்ணு. ஒரு வக்கீல் நோட்டீஸ் ட்ராஃப்ட் பண்ணிக் கொடுக்கறேன். 'இனிமே ஒரு காசு பெயராது. ப்ளாகாட் வீட்டை ஒப்படைக்கப் போறியா இல்லையா'ன்னு கடுமையா கேட்டு. அவனால மத்த பேருக்கு விக்க முடியாது. சும்மா பூசசி காட்டறான். பணத்தைக் கட்டறதுக்கு முன்னால கன்ஸ்ட்ரக்ஷன் சைட்டுக்கு போய், 'அருள்'னு கட்டடம் இருக்கா, இல்லை அது வெறும் மேப்பா, எந்த ஸ்திதில இருக்குன்னு பார்த்துட்டு எங்கிட்ட வா."

"அப்புறம்?"

"அப்புறம் என்ன? பணம் கட்டிட்டு விரல் சப்பிண்டு உக்கார்றது. இப்ப கட்டாத, அவ்வளவுதான்" என்று சிரித்தார்.

"இவங்கள்ளாம் வக்கீல் நோட்டீசுக்கு பயப்பட மாட்டாங்க."

"**இ**தான் கடைசி. ஸ்கூட்டர்ல."

"ஏன்?" என்றாள் ராஜேஸ்வரி.

"வித்துறப் போறேன்."

சீதம்மாள் காலனி முடிந்து குடிசைகள் ஆரம்பிக்கும் விளிம்பில் இருந்தது, 'அருள்'. ரோடில் பாதியை அடைத்து சரளையும் மண்ணும் கொட்டியிருக்க, முதல் மாடி வரை முடிந்திருந்தது. இரண்டாவது மாடியில் மர வாசல்களும் சன்னல் சட்டங்களும் பதித்திருந்தன. இடித்த பழைய வீட்டின் தேக்கு மரக் கதவுகளும் சன்னல்களும் விற்பனைக்கு சாய்ந்திருந்தன.

"என்ன பொய் சொல்றான் பாரு. மார்கழி மாசம் முடிய காத்திருக்கானாம். இது முடிய இன்னும் ஒரு வருஷம் ஆகும்."

ஓரத்தில் தூளி கட்டி குழந்தை தூங்கிக் கொண்டிருந்தது. ஒரு பெண் மணலில் காலை நீட்டிக் கொண்டு, எண்ணெய் தடவிக் கையகலக் கண்ணாடியில் தலைவாரிக் கொண்டிருந்தாள்.

"ஏம்மா கட்டடம் கட்டறவங்கள்ளாம் எங்க?"

"பத்து மணிக்குத்தான் வாராங்க. காண்ட்ரக்ட்டுகாரவங்க."

"நீ யாரு?"

சித்தாளுங்க. வூட்டுக்காரரு கொள்த்து வேலை செய்றாரு."

"இந்த கட்டடம் எப்ப முடியும்?"

"தெரியாதுங்களே."

"சிமெண்ட்டெல்லாம் இருக்கா?"

"தெரியாதுங்களே."

"கனெக்சன கொடுத்துட்டாங்களா?"



"தெரியாதுங்களே."

"இவளைப் போய்க் கேட்டா" என்றாள் ராஜேஸ்வரி.

'வீட்டின் பேரில் கடன் கொடுக்கப்படும்' என்று அந்த பெனிபிட் பண்டு பெயர்ப் பலகையிலேயே எழுதியிருந்தது. உள்ளே கிரானைட் இழைத்து மயன் மாளிகை போல இருந்தது. உயரமான உத்தரங்களில் அரை வட்டம் பதித்த கண்ணாடி. சன்னல்களிலிருந்து பொன்னிற வெளிச்சம் கசிய, 'டை' கட்டிய இளைஞர்கள் கம்ப்யூட்டரில் கொத்திக் கொண்டிருந்தார்கள்.

"எனக்கு ஒண்ணரை லட்சம் ரூபாய் கடன் வேணும்" என்றான்.

"கோலாட்டரல் என்ன வெச்சிருக்கீங்க?"

"ஒரு ஃப்ளாட்டு கைக்கு வரப் போறது."

"டாக்குமெண்ட்ஸ் பில்டர் கொடுத்துட்டானா?"

"இல்லை."

"டாக்குமெண்ட் இல்லாம நாங்க எந்த உத்தரவாதத்தில் கொடுக்க முடியும்? வேணும்னா மேனேஜரைப் பாருங்க, கோல்டு ஏதாவது இருக்கா? இப்ப சத்தியத்துக்கு?"

"எல்லாத்தையும் வித்தாச்சு."

"பில்டர் யாரு?"

"பிரமிட்."

"அவங்களுக்கும் நாங்க அட்வான்ஸ் கொடுத்திருக்கோம். இன்னும் முடிக்கலையா? அட ராமா!"

"ஏங்க?" என்றான் சிவராமன் கவலையுடன்.

"நீங்க எங்க மேனேஜரைப் பார்த்துருங்க."

ராஜேஸ்வரி அறைக்கு வெளியே காத்திருக்க, மேனேஜரின் ஏசி அறைக்குள் பணக் கஷ்டத்தைச் சொன்னான்.

மேனேஜர் குறுக்கிடாமல் கேட்டுவிட்டு, "சார், வீட்டுப் பத்திரம் உங்க கைக்கு வராம கடன் கொடுக்க முடியாது."

"ஏதாவது ஒருவழி சொல்லுங்களேன். இந்த சிக்கலிலிருந்து மீள."

"பில்டிங் மூணு மாசத்தில் கம்ப்ளீட் ஆகுமா?"

"ஆகணும்."

அந்த இளைஞன் யோசித்து, "அப்படின்னா உங்களுக்கு ஒரே வழி. ஷார்ட் டர்ம் அதிக வட்டிக்கு ப்ரைவேட் பினான்சியர்ஸ் கிட்ட லோன் எடுங்க. வீடு எப்படியும் மார்ச்ல கிடைச்சுரும். என்ன ரெண்டு மாசம்தானே? கந்து வட்டில விகிதம் கொஞ்சம் அதிகம்தான். அஞ்சு வட்டிம்பாங்க. அதாவது ஒரு மாசத்துக்கு அஞ்சு பர்சண்ட். இப்ப ஒண்ணரை லட்சம் எடுத்தா மாசத்துக்கு ஏழாயிரத்து ஐநூறு ரூபாய் வட்டி கட்ட வேண்டி வரும். ரெண்டு மாசம்தானே? பத்திரம் கைக்கு வந்ததும் எங்க கிட்ட வாங்க. அதை கோலாட்டரலா வெச்சு பதினெட்டு பர்சண்ட் லோன் கொடுக்கறோம். மாசா மாசம் கட்டித் தீர்த்துறலாம். வக்கீல் என்ன சொன்னார்?"

"வக்கீல் பணம் கட்டாதேங்கறாரு."

"அப்படியெல்லாம் பைத்தியக்கார காரியம் செய்யாதீங்க. வித்துருவான். இப்ப ரியல் எஸ்டேட்ல பூம்."

"யாருகிட்ட போகணும்?"

"சிமன்லால்னுட்டு சினிமாக்காரங்களுக்குக் கடன் கொடுப்பார். இந்த அட்ரஸ்ல போய்ப் பாருங்க. வீட்டுக்கு வாடகை கொடுக்கற மாதிரி தீர்த்துறலாம். இதுதான் வழி" என்று கார்டு கொடுத்தார்.

"எல்.ஐ.சி. எச்.டி.எப்சி.ன்னு அது வேற ரீபேமெண்ட் இருக்கு சார். சம்பளத்தில கழிப்பாங்க."

"என்ன ரெண்டு மூணு வருஷத்துக்குத் தானே? அப்புறம் வீடு உங்களுது."

"சமாளிக்க முடியும்ங்கறீங்க?"

"ப்ராப்ளமே இல்லை. எல்லாரும் இப்படித் தான் வீடு வாங்கறாங்க. நாமெல்லாம் மிடில் கிளாஸ் சார்."

"உங்களைப் பார்த்தா அப்படித் தெரியலையே தம்பி."

சாயங்காலம் வக்கீல் போன் பண்ணியிருந்தார். "சிவராமன் நோட்டீசை டைப் அடிச்சு வெச்சிருக்கேன். ஒரு கையெழுத்து போட்டா பில்டருக்கு ரிஜிஸ்டர் போஸ்ட்ல அனுப்ச்சுரலாம்."

"தேவையில்லை மிஸ்டர் சாரி."

"ஏன்?"

"கடைசி இன்ஸ்டால்மெண்டை கொடுக்கறதா தீர்மானிச்சுட்டோம். இதுக்கு மேல பணம் கேட்டா நோட்டீஸ் விட்டுரலாம்."

"பணம் எப்படி புரட்டறதா உத்தேசம்? இஃப் ஐம் நாட் க்யூரியஸ்."

"ஷார்ட் டெர்ம்... பினான்சியர்கிட்ட வாங்கி, அப்புறம் வீட்டுப் பத்திரத்தை வெச்சு பெனிபிட் பண்ட்ல வாங்கறேன்."

"அப்படியா? சரி செய். இட்ஸ் யுவர் ஃப்யுனரல்" என்றார்.

"என்ன சொன்னார் வக்கீல்?"

"என்ன சொன்னா என்ன? கடன் வாங்கறதா தீர்மானிச்சாச்சு."

"எனக்கென்னவோ அவா வித்துக்கட்டும்; போட்ட பணத்தைத் திருப்பிக் கொடுத்துறட்டும். ஏதோ பொறியில மாட்டிக்கறமோன்னு பயமாக இருக்கு."

"சேச்சே!"

"எதுக்காக இந்த வீட்டை வாங்கறோம் இப்ப?"

"சரியாப் போச்சு. அடியைப் புடிடா பாரத பட்டான்னு. நீதான் வருஷா வருஷம் வாடகை ஏத்தறான்; நமக்குன்னு ஒரு வீடு இருந்தா தொல்லையில்லன்னு ஆரம்பிச்சே."

"சொன்னேன். இப்படி தலைக்கு மேல கடன் வாங்கித்தான் வீடு வாங்கணும்னு தெரிஞ்சிருந்தா...."

"இப்ப அதைப் பத்திப் பேசறது டூலேட்."

மார்ச் மாதம் வீடு கைக்கு வரவில்லை. மே மாசம்தான் வந்தது. சிமன்லாலுக்கு அதிகப்படியாக பதினைந்தாயிரம் வட்டி கொடுக்க வேண்டியிருந்தது. வீடு கைக்கு வந்து பத்திரத்தைப் பெற்று சிமன்லால் அசலைத் திருப்பிய போது, "எதுக்கு ஐயரே அவசரம்? அப்படியே இருக்கட்டுமே" என்றான்.

"அய்யோ வேணாம் சேட்டு. இப்பவே வீட்டில கேஸ் இல்லை. கறிகாய் வாங்க முடியலை. அப்பளத்தை காச்சி தின்னுக்கிட்டு இருக்கோம். டெலிபோன் பில் கட்டலை. இன்சூரன்ஸ் ப்ரிமீயம் கட்டலை. இன்கம்டாக்ஸ் கட்டலை. ஸ்கூட்டரை வித்தாச்சு. எக்கிப் புடிச்சுண்டு இருக்கோம்."

பிரமிட் தன் விளம்பரத்தில் சொன்ன சத்தியங்களில் பலவற்றை நிறைவேற்றவில்லை. ஆயிரம் சதுர அடி என்பது மாடிப்படியையும் சேர்த்து என்றார்கள். லிப்ட் வரவில்லை. ஆர்டர் கொடுத்திருக்கிறதாகச் சொன்னார்கள். ஸ்டாண்பை ஜெனரேட்டருக்கு பவுண்டேஷன் போல்ட் மட்டும் பதித்து இருந்தது. ஷாப்பிங் செண்டருக்குப் பதில் வாடலாக காய்கறிகள் விற்கும் ஒரு அங்காடி இருந்தது. ஒரு பக்கம் காம்பவுண்ட் கட்டவில்லை. 'ரிக்ரியேஷன் ஏரியா எங்கே என்று கேட்டால் பேஸ்மெண்ட்டில் சிறிய அறையைக் காட்டினார்கள். அதில் கூர்க்கா கெரசின் ஸ்டவ்வில் சப்பாத்தி சுட்டுக் கொண்டிருந்தான். கபோர்டுகள் எல்லாம் கான்க்ரீட்டில் இருந்தன. "மரத்தில் இருக்கும் என்று நாங்கள் சொல்லவில்லையே, மரத்தில் வேண்டுமென்றால், தனியாக ஆர்டர் செய்து பொருத்திக் கொள்ள வேண்டும் என்றுதானே சொன்னோம்."

கடைசியாக கிரகப்பிரவேசம் செய்துவிட்டு அந்த வீட்டுக்குக் குடிபுகுந்த போது, நண்பர்கள் பலர் பாராட்டினார்கள். கொஞ்சம் தெம்பாக இருந்தது. காப்பி பலகாரம் சாப்பிட்டு விட்டு, "நல்ல காத்தோட்டமாக இருக்கு" என்று வீட்டை சாஸ்திரத்துக்குப் புகழ்ந்து விட்டுச் சென்றார்கள்.

இராஜேஸ்வரி, "என்ன இருந்தாலும் நமக்குன்னு ஒரு வீடு இருக்க வேண்டாமா மாமி நம்முதுன்னு."

"வாஸ்தவந்தாம்மா. பிற்காலத்தில் பொண்ணுக்கு ஜாதகம் பார்க்கறபோது, 'ஃபாதர் ஓன்ஸ் ஒன் ஹவுஸ்'னு சொன்னா பெருமையா இருக்குமே."

"அது மட்டும் இல்லை. மே மாசம் கொடுத்தான். இப்பவே விலை ஏறிப் போச்சாம்."

சம்பத் சொன்னான் : "இன்னைய தேதிக்கு இருவது லட்சம் கொடுக்கத் தயாரா இருக்கா சிவா. அப்படி ஏறிப் போச்சு ரியல் எஸ்டேட் வால்யு."

"அப்படியெல்லாம் விக்கறதா இல்லைப்பா" என்றான் சிவராமன்.

உள்ளங்கையைப் பார்த்துக் கொண்டு... "நம்முதுன்னு ஒரு வீடு வேணாமா? எங்க அப்பாவால முடியலை. என்னால முடிஞ்சிருக்கு."

"சிவராமன் நீ ரொம்ப கெட்டிக்காரன்பா. எப்படியோ சமாளிச்சுட்டே. ஆபீஸ்ல லஞ்சம் வாங்காம ஒரு வீடு கட்ட முடியும்னு நிரூபிச்சுட்டே. எப்படிப்பா முடிஞ்சுது?"

"எல்லாம் அவர்தான்" என்று அலமாரியிலிருந்த சாமியார் படத்தைக் காட்டினான்.

அந்த வீட்டுக்குக் குடிவந்த முதல்நாள் இரவு வெளியே இரைச்சல் கேட்டு, தூக்கமில்லாமல் - ஒரு சாராயக்கடை இருப்பதாகத் தெரிந்தது.

"தமிழ்ல புதுசு புதுசா வார்த்தையெல்லாம் கேக்கறது" எனறாள் ராஜேஸ்வரி. சிவராமன் தன் ப்ரீப்கேசிலிருந்து அந்த மாத சம்பளச் சீட்டை உன்னிப்பாகப் பார்த்தான்.

கடன் தவணைகளையெல்லாம் கணக்கிட்டு ஆபீசில் சட்டப்படி உச்ச வரம்புவரை வெட்டி மிச்ச சம்பளம் அவன் ப்யூனுக்கு கிடைப்பதை விடக் குறைவாக இருந்தது. பெனிபிட் பண்டுக்குத் தனியாகக் கொடுக்க வேண்டும். சிரித்துக் கொண்டே சன்னலுக்கு வந்தான். "இந்த சன்னலை ஏன் மூடிட்டே?"

"நீங்களே திறந்து பாருங்கோ"

தயங்கித் திறந்தான். வேலியோரத்தில் ஒரு சிறார் பட்டாளமே வெளிக்கிருந்து கொண்டிருந்தது.

"எப்படி தரிசனம்?"

"கார்ப்பரேஷன்காராளுக்கு எழுதிப் போட்டா க்ளியர் பண்ணிடுவா" என்று திறந்த சன்னலை அவசரமாகச் சாத்தினான்.

திருக்கிறார். 'லேட்டஸ்ட்டாக' பெண் போராளிகளை 'தகனம் செய்ய உதவும் மரக்கட்டைகள்' என்றிருக்கிறார்! "சிறு பொறி போதும், எரித்து விட; நான் 'இம்'மென்றால் உடனே பற்றிக் கொள்வர்" என்றிருக்கிறார். விடுவாரா மிருணாள் கோரே (ஜனதா தள தலைவி)? மஹாராஷ்ட்ரா முழுவதிலுமுள்ள மகளிர் இயக்கங்களின் பிரதிநிதிகளைக் கூட்டி, ஒரு போராட்டத்தையே நடத்தி விட்டார்! "மாவீரன் சிவாஜி, பெண்களை மரியாதையாக நடத்திய வன்; அவன் பெயரில் கட்சி நடத்திக் கொண்டு பெண்களை இப்படிக் கேவலப்படுத்துவதா?" என முழங்கினார்.

71 வயதில் சிலருக்கு விவேகம் வரும்! தாக்கரே போன்ற சிலருக்கு வேகம் வரும் போலிருக்கிறது!

மாடியிலிருந்து

கூப்சூரத் மும்பை!

● சூரத் அடிச்சுவட்டில் இப்போது 'கூப்சூரத் (அழகிய) மும்பை' பிரசாரம் சூடுபிடித்திருக்கிறது. பொது இடங்களைக் கழிப்பிடங்களாக உபயோகித்தால் ஐந்நூறு ரூபாய் அபராதம்! மாட்டு வண்டியில் கிரிணிப் பழம் வியாபாரம் செய்து கொண்டிருந்த மனிதரை 'லபக்'கென்று பிடித்தார் ஒரு சுறுசுறுப்பான பம்பாய் முனிசிபல் கார்பரேஷன் அதிகாரி! காரணம்? அவரது மாடு நடுரோட்டை அசுத்தப்படுத்தி விட்டது! வியாபாரி மறுக்க, இவர் குரல் உயர்த்த, பெரிய கூட்டமே கூடிவிட்டது!

இருவர்

● கேனோஸா கான்வெண்ட் (அந்தேரி) மாணவியான ஷ்மிதா குப்தா, திடீரென்று தான் கிறிஸ்துவ மதத்தைத் தழுவப் போவதாகவும், நாலு வருடங்களாக தனது சரித்திர ஆசிரியை, தன்னை அதில் ஈடுபடுத்தி வருவதாகவும் அறிவித்தாள். ஆசாரமான மார்வாரி பெற்றோர் கொடுத்த புகாரின் பேரில், சிவசேனைக்காரர்கள் அவள் கான்வெண்டுக்குள் சென்று, சம்பந்தப்பட்ட டீச்சரை டிஸ்மிஸ் செய்யக் கோரி ரகளை செய்ய, அவர்கள் மறுக்க, ஒரே கலாட்டாவாகி, மிஷினரிப் பள்ளிகள் அனைத்தும் ஆட்டம் கண்டன!

இறுதியில் 'நான் மதம் மாறப் போவதில்லை! ஆனால் மாதா வழிபாட்டை விடப்போவதுமில்லை' என ஸ்மிதா இறங்கி வர, விஷயம் அமுங்கியிருக்கிறது!


• பால்தாக்கரே

செம்பூர், ஸெயிண்ட் ஆண்டனீஸ் ஸ்கூல் மாணவியான தீப்தி ஜெயின் (14), மராத்தி டெஸ்ட்டில் காப்பியடித்ததற்காகப் பிடிபட்டு, விஷயம் 'இண்டர்காம்' மூலம் ஸ்கூல் முழுவதுமாக ஒலிபரப்பப்பட்டது. பெற்றோர் கண்டனத்துக்குள்ளானார்கள்; அவமானம் தாளாமல், தீப்தி உள்ளங்கையில் 'டாட்டா' என எழுதிக் கொண்டு நாலாவது மாடியிலிருந்து குதித்து விட்டாள். உயிருக்கு அவள் போராடி வரும் நிலையில், பள்ளிகளில் மாணவர்களுக்கும் டீச்சர்களுக்குமிடையே பாலமாக இருந்து அறிவுரை வழங்கக்கூடிய "Counsellor" நியமிக்கப்படுவது அவசியமா என்பது காரசாரமாக விவாதிக்கப்படுகிறது!


நோ என்ட்ரி!

● பிரபலங்களின் வீட்டு விருந்துகளில் 'கேட்-கிராஷ்' பண்ணுவது, அழைப்பிதழ் இல்லாமலேயே போய் கலந்து கொள்வதுதான் இப்போதெல்லாம் மும்பையில் ஃபாஷன்! அதாவது ஆஹா ஓஹோ எனப் பீற்றுவது. இந்த வகையில் அமிதாப் மகள் ஷ்வேதா திருமணத்தை ஒரு கை பார்க்கலாம் என நினைத்தவர்களுக்குப் பெருத்த ஏமாற்றம்! எண்ணி இருநூறு பேரைத்தான் அழைத்திருந்தனராம்! அதனால் கேட்பாரின்றி நுழைய முடியவில்லை. பிரியங்கா திருமணமும் இதே ஸ்டைலில் நடக்குமாம். தமிழ்நாட்டிற்குக் கிடைத்த 'அதிர்ஷ்டம்' மும்பைக்கும் தில்லிக்கும் இல்லை!

தொடரும்!

- ஜெயஸ்ரீ ராஜ்

விளையாட்டு போல் கம்பெனியை இழுத்து மூடி ஐந்து ஆண்டு காலம் ஓடி விட்டது. ஃபோர்மேன் சீதாராமய்யர் என்ற அடையாளம் மறந்து, இப்போதெல்லாம் மிருதங்க வாத்தியார் என்றால்தான் அவரைத் தெரிகிறது. நெடுஞ்சாலையில் வாகனங்களின் கூடவே ஓடும் பேக்டரி காம்பவுண்ட் சுவரின் எழுத்துக்களில் தார் ஒழுகியது. அறிவிப்பின்றி மூடிய கதவுகளைப் பார்த்து கொஞ்சம் நாள் எல்லோரும் கும்பலாய் செயலற்று நின்றார்கள். பந்தலில் சில காலம் தொடர் உண்ணாவிரதம் நடந்தது. கோட்டைக்கு முன்பாக ஊர்வலம் தடுக்கப்பட்டு பிரதிநிதிகள் இருவரிடம் முதல்வர் சிரித்துக் கொண்டே மனுவைப் பெற்றுக் கொண்டார். வெவ்வேறு மட்டங்களில் பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டேயிருந்தன. கம்பத்தில் சிவப்புக் கொடி மக்கிப் போனது. பொதுவில் அன்றாடம் கஷ்டம் என் றாலும் வருடங்கள் என்னவோ ஓடிக் கொண்டேதான் இருக்கின்றன.



கொஞ்ச காலம் சீதாராமன் தின மும் காலையில் பச்சை நிற ரெக் ஸின் பையை எடுத்துக் கொள் வார். அவ்வப்போது வைதீக காரி யங்களுக்கு அவருக்கு அழைப்பு வந்தது. மந்திரமெல்லாம் ஒன்றும் தெரியாது. ஆள் விட்டு கனபாடி கள் சொல்லியனுப்புவார். கூட்டமாய் அமர்ந்து 'ததாஸ்து' சொல்ல வேண்டும். ஹோமப் புகையில் கண் எரியும். தட்சிணை யும் வேட்டியும் கிடைக்கும். அகாலமாய் இரண்டு வேளைகளுக்கிடையே சாப்பாடு போடுவார்கள். அன்றைய ஒருநாள் கழியும். ஆனால் இதெல்லாம் எப்போதோ ஒரு சமயம்தான். கனபாடிகளின் வழக்கமான ஜமாவில் ஆள் குறைகிறபோது அவருக்கு அழைப்பு வரும். நல்லவேளையாய் குழந்தைகள் இல்லை. வீட்டில் சீதாராமனுக்கு மனைவி மட்டும்தான். அவள் சொல்லித்தான் தெரிந்த மிருதங்க வித்தையை சாயங்காலங்களில் நாலு வீடுகளில் காசாக்க ஆரம்பித்தது. இத்தனை வயதுக்கு மேல் பக்க வாத்தியம் வாசிக்க முயற்சிப்பதில் அர்த்தம் இல்லை. தவிரவும் ஒரு கனபாடிகள் போல வித்வான்கள் யாரையும் அவருக்குத் தெரியாது. இது கம்ப்யூட்டர் காலம். பையன்களுக்கு லலித கலைகளெல்லாம் படிக்க வைக்கிற அளவுக்கு நேரம் இருப்பதில்லை. ஆசையில் பெற்றோர்கள் ஏற்பாடு செய்தாலும் தண்ணீரை குதிரையே குடித்தால்தான் உண்டு. வெறுமனே டைப்ரைட்டர் அடிக்கிற மாதிரி கற்றுக் கொள்கிறார்களேயொழிய ஒரு ஆர்வம் கிடையாது. கச்சேரியென்றால் என்னவென்றே தெரியாது. ஒரு டீவி கச்சேரியில் உட்கார்ந்திருக்கிற மிருதங்கக்காரர் என்ன செய்கிறார் என்று கூட நின்று பார்க்காத பையன்களே அவருக்கு சிஷ்யர்களாய் வாய்த்தனர்.

வாரத்துக்கு ரெண்டு கிளாஸ். சீதாராமன் வெறும் காலுடன் பெருங்களத்தூரிலிருந்து புறப்பட்டு விடுவார். இத்தனை வருட அனுபவங்களில் அவருக்குத் தன்னைப் பற்றிய விசேஷ கவனம் குறைந்து விட்டது. துவைத்த வேட்டி, பளிச்சென்று ஒரு சட்டை, நெற்றியில் சிறிய விபூதிக்கீற்று. ஒரு வீட்டுக்கு நூறு ரூபாய். நான்கு வீட்டிற்கும் மொத்தம் நாநூறு ரூபாய். கட்டுப்படியாகாத பஸ் கட்டணம். பொதுவில் எங்கும் நடைதான். சைக்கிள் ஒன்று இருந்தது. அதை

ம.வே. சிவகுமார்

செக்யூரிட்டி


இப்போது மார்வாடியே ஓட்டிக் கொண்டிருக்கிறான். பழகிய பாதையில் மேய்ச்சல் மாடு போல் சேலையூர் வந்தது.

“வாங்கோ.”

வரவேற்பறை பாயில் அமரச் செய்து, வீட்டு மாமி வெளியே போகிறாள்.

“டேய் தீபக்... சார் வந்திருக்கார்”

“போல்ட்!”



வெளியே கிரிக்கெட் நடுவே பையன் குரல் தனியே ஒலிக்கிறது. அடுத்த அழைப்பில் பையன் வருகிறான். மொண மொணவென்று வாக்கு வாதம் நடக்கிற சப்தம். பேட்டில் பட்ட பந்துபோல் வீட்டு மாமி சலிப்புடன் உள்ளே வருகிறாள்.

“ஸாரி சார். இன்னிக்கு கிளாஸ் வேணாம். தீபக் வரமாட்டேங்கறான். அவனுக்கு இன்னிக்கு மூடு இல்லையாம்.”

சீதாராமனுக்கு ஒருகணம் வேகமாய் தெருவுக்குப் போய் அந்தப் பையன் முதுகில் நான்கு சாத்து சாத்தி தரதரவென்று உள்ளே அழைத்து வரத் தோன்றியது.

“பாவம், நீங்க அவ்வளவு தூரம் வந்திருக்கேள்.”

“அதனாலென்ன?”

மிருதங்கம் முடிச்சு அவிழாமல் மூலைக்குத் திரும்பியது.

“ஒரு வாய் காப்பி சாப்பிட்டுப் போங்கோ.”

“இல்லே... வேணாம்.”

அவசரமாய் மறுத்துவிட்டு சீதாராமன் வெளியே வந்தார். கதவோரம் சங்கடமாய் வீட்டு மாமி நின்றாள். சட்டென்று ஒரு மணி நேரத்தை என்ன செய்வதென்று தெரியவில்லை. ஆறு மணிக்கு சானடோரியத்தில் அடுத்த கிளாஸ். அங்கே போன வாரமே ஊருக்குப் போயிருந்தார்கள். வந்து விட்டார்களா என்பது தெரியவில்லை. ஏகலைவன் மாதிரி அவருடைய சிஷ்யர்கள் அவரைப் பார்க்காமலிருக்கக் கற்றுக் கொண்டு விட்டார்கள். ஒவ்வொரு சமயம் சம்பளம் வாங்கும்போதும் சீதாராமனுக்குக் கூசியது. வெறும் காலில் தார் ரோட்டில் சானடோரியம் புறப்பட்டார். பையன்களின் கிரிக்கெட் சப்தம் ரொம்ப தூரத்துக்கு கேட்டுக் கொண்டிருந்தது.

“போதும். நீங்க வாத்தியம் சொல்லி வைச்சது. நான் சொல்றதைக் கேளுங்கோ”

குடும்பத்தின் பொருளாதாரத் தேக்க நிலையில் அதிருப்தி தெரிவித்து சீதாராமன் மனைவி நடப்பு ஆண்டுக்கான புதிய திட்டத்தை வெளியிட்டாள். தெரிந்த இடத்தில் ஒரு விலாசம் கிடைத்தது. வருடம் பூராவும் அங்கே வேலைக்கு ஆட்கள் எடுத்துக் கொண்டேயிருக்கிறார்கள். பெரிய பங்களாக்களில் காவல் நிற்கிற செக்யூரிட்டி வேலை. மாதம் முழுசாய் ஆயிரம் ரூபாய் வரும். ஒரு காக்கிச் சீருடை தயார் செய்து கொள்ள வேண்டும். ஷிப்ட் முறையில் ஒரு நாளைக்கு எட்டே மணி நேர வேலை. பங்களாக்களில் வேலையென்பதால் அநேகம் பெரிய மனிதர்களின் தொடர்பு கிடைக்கும். அப்புறம் நம் சமர்த்து. எல்லாம் வாய் வார்த்தையிலும், நடந்து கொள்கிறதிலும் இருக்கிறது. உலக வாழ்க்கையின் சாராம்சத்தை உட்கார்ந்த இடத்திலேயே உணர்ந்தவள் போல சீதாராமனின் மனைவி அடுக்கலானாள். சீருடை வாங்குவதற்கான முன்னூறு ரூபாயை யாரிடம் கேட்பது என்று சீதாராமன் தீவிரமாய் யோசிக்கலானார்.

சேலையூர் வீட்டு மாமி, கேட்டதுமே பீரோ திறந்து ரூபாயைக் கொடுத்தாள். தீபக் சோபாவில் கையில் காமிக் வைத்தபடி பார்த்துக் கொண்டிருந்தான். பெருங்களத்தூர் டெய்லர் நாலு முழ வேட்டியில் நிற்கிற சீதாராமனுக்கு பேண்ட், சட்டை தைக்க அளவெடுத்தான். வீட்டின் ரசம் பெயர்ந்த கண்ணாடி முன் புதிய காக்கி உடையில் சீதாராமன் அழகு பார்த்தார். விரல் பதிந்த பழைய ஹவாய் சப்பலில் கால் நுழைந்தது. கவாத்து நடையில் செக்யூரிட்டி சீதாராமன் புறப்பட்டபோது

பின்னணியில் ராணுவ இசை பலமாய் ஒலித்தது.

தாம்பரம் பஸ் ஸ்டாண்ட். சீதாராமன் ஜன்னல் ஓர இருக்கையில் அமர்ந்து கொண் டார். வாயில் தெம்பாய் ஒரு பன்னீர் புகை யிலை அதக்கிக் கொண்டால் சொர்க்கம் தெரி யும். முதல் சம்பளம் வரட்டும். இதுபோல் ஒரு பஸ்ஸில் ஏறி எவ்வளவு வருடங்கள் ஆகி விட்டன? கிராப் தலையின் சுண்டு விரல் நீள சிறிய குடுமியை விரல்களில் சுற்றிக் கொண்டே சீதாராமன் யோசிக்கிறார். அவரையறியாமல் வாயில் புறப்பட்ட கர்நாடக இசைக்கு பஸ்ஸில் ஓரிருவர் திரும்பிப் பார்த்தார்கள்.

நந்தனம் சிக்னலில் சீதாராமன் இறங்கிக் கொண்டார். அடையார் போட் கிளப் பங்களாவில் வாட்ச்மேன் வேலை. பளீரென்ற பளிங்குப் படிக்கட்டில் கால் வைக்கவே கூச்ச மாய் இருந்தது. கண் மறைவில் அல்சேஷன் கத்தியது. ரொம்ப நேரத்துக்கு யாரும் வெளியே வரவில்லை. அப்புறம் எதேச்சையாய் செக் ரட்டரி வெளியே வந்தார். முதலாளியின் அனைத்து சொந்த வேலைகளையும் அவர் தான் பார்த்துக் கொள்கிறார். சீதாராமன் நீட்டிய கடிதத்தைப் படித்ததும் செக்ரட்டரி அவரை ஏற இறங்கப் பார்த்தார்.

"இதுக்கு முன்னாடி எங்கேயாவது வேலை பண்ணியிருக்கீங்களா?"

"பண்ணியிருக்கேன் சார்"

"எங்கே?"

"ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ்லே"

"ஓ"

அநேகம் விஷயங்கள் புரிந்ததுபோல் செக் ரட்டரி ஒரு தரம் தலையை ஆட்டிக் கொண்டார்.

"கரெக்டா இருக்கணும்.!"

"சரி சார்."

"அநாவசியமா வெளிய வம்பு, கிம்பு பேசக் கூடாது."

"சரி சார்"


"சிபாரிசு, டொனேஷன்னு ஆயிரம் பேர் வருவாங்க. விசாரிக்காம யாரையும் உள்ளே விடக் கூடாது."

"சரி சார்."

முடிந்த அளவு விரைப்பாய் ஒரு சல்யூட் வைத்து சீதாராமன் திரும்பினார். டிரைவர்கள், தோட்டக்காரர்கள் என்று பங்களாவில் நிறைய வேலையாட்கள் இருந்தார்கள். அழகிய பெரிய தோட்டம். வெளியே கதவருகே ஸ்டூல் இருந் தது. பச்சை மரங்கள் அடர்ந்த போட் கிளப் சாலையில் ஒருபோதும் நிழலுக்குப் பஞ்சமில்லை. சில்லென்று காற்று வீசியது. மனதிற்கு ரம்மியமான சூழ்நிலை. ஸ்டூலில் சீதாராமன் தவளைபோல் பின்னுக்கு நகர்ந்து கொண்டார். கிடைத்த கையகல இடத்தில் பழகிய கைகள் மிருதங்கம் வாசிக்கத் தொடங் கின. கண்களை மூடிக் கொண்டு பாயும் விரல்களில் தனியே ஒரு ஆவர்த்தனம். காது சப்தத்தை மட்டுமே உணர்கிற தியானத்தில், நேரம் போனதே தெரியவில்லை.

"**கீ**ய்ங், கீய்ங்"

எரிச்சலில் வாசிப்பு நின்றது. முதலாளியின் கார் பூனைபோல் புறப்பட்டு வந்து காத்து நின் றது. சீதாராமன் பதறிப் போய் கதவுக்கு ஓடி னார். அவசரத்தில் விரல் நசுங்கி கதவைத் திறந்து விட்டார். கண்ணாடி ஏற்றிய முத லாளியின் கார் அவரைக் கடந்து போனது. காலையில் செக்ரட்டரி அவரைக் கூப்பிட்டு அனுப்பினார். சீதாராமன் ஓட்டமாய் ஓடி வந்து சல்யூட் வைத்து நின்றார். வந்த வேகத் தில் விசாரணை தொடங்கியது.



அடுத்த நூற்றாண்டு ரயில்!

ஜெர்மனியில் டிரான்ஸ்ரேபிட் என்று ஒரு ரயிலை உருவாக்கியுள்ளனர். இது மணிக்கு 500 கி.மீ வேகத்தில் செல்கிறது. டிரைவர் தேவை இல்லை.

இந்த ரயிலை மின்காந்தத்தால் இயக்கு கிறார்கள். தண்டவாளத்தின் மேல் பத்து மில்லி மீட்டர் உயரத்தில் ரயில் மிதந்து செல் கிறது. சக்கரங்கங்கள் கிடையாது! அலங்கல், நலுங்கல் கிடையாது. ஒற்றை தண்டவாளத் திலிருந்து விலகி விடாதிருக்கும் வகையில் ரயிலின் அடிவாரம் அமைக்கப்பட்டுள்ளது.

ஜெர்மன் நியூசிலிருந்து :
சேலம் சக்திக்கொடி

"பூட்ஸ் இல்லையாய்யா?"

"சார்?"

"கம்பெனியிலே யூனிபார்மோட பூட்ஸ் தரல்லியா?"

"இல்லே சார்."

"அட்வான்ஸ் நூறு ரூபா தர்ரேன். கேன் வாஸ்லே பூட்ஸ் வாங்கிக்கங்க. முதலாளி எங் கிட்ட கத்தறார். இனிமே ஹவாய் செருப் போடெல்லாம் டூட்டிக்கு வரக் கூடாது."

சீதாராமன் எச்சிலை விழுங்கினார். நீட்டப்பட்ட ஒற்றை நோட்டை வாங்கிக் கொண்டார். வவுச்சரில் கோணலாய் கையெ ழுத்து முளைத்தது. கால்களை சேர்த்து வைத்து பணிவாய் மீண்டும் ஒருமுறை செக்ரட்டரிக்கு சலாம் வைத்தார்.

"இதெல்லாம் வேணாம்யா. டூட்டியிலே மிருதங்கம் வாசிக்காம ஒழுங்கா வேலையைப் பாரு. அது போதும்."

ஸ்டூலில் சப்தநாடியும் ஒடுங்கி சீதா ராமன் உட்கார்ந்து கொண்டார். பதினைந்து நாட்களாக அப்படித்தான். வாழ்வில் பாது காப்பு வேண்டுமென்றால் ஒரு அடிப்படை ஒழுங்கு அவசியம். கிடைத்த வேலை நிலைக்க வேண்டும். சீதாராமன் ப்ரவுன் நிறத்தில் கேன்வாஸ் பூட்ஸ் வாங்கிக் கொண்டார். வேலை செய்கிற இடத்தில் வாய் மூடி இருத்தல் அவசியம். இப்போதெல்லாம் வேலை நேரத்தில் அவர் மிருதங்கம் வாசிக்கிறதில்லை. மாறாக கிராப் தலையின் சுண்டு விரல் நீளக் குடுமியில் விரல் சுற்றி விளையாடிக் கொண் டிருந்தார். சதா சர்வ நேரமும் கண்ணாடி ஏற்றிய முதலாளியின் காருக்கு கதவு திறந்து விடத் தயார் நிலையில் இருந்தார். செக்ரட்டரி சொற்படியே தெருவின் மற்ற வாட்ச் மேன்களுடன் அவர் வம்பு பேசுவதில்லை. தவிரவும் அவசியமில்லாதவர்கள் யாரும் அவரை மீறி பங்களாவில் நுழைந்து விட முடியாது. 'ஆரியக் கூத்தாடினாலும் தாண் டவக் கோனே. கொண்ட காரியத்தில் கண் வையடா தாண்டவக் கோனே'. தேவைப் பட்டால் நாய் வேடம் ஏற்கத் தயங்காதே. ஆனால் மறக்காமல் குரைத்து விடு. சீதாராமன் மனைவி இப்போதெல்லாம் எப்போதும் உபதேசிக்கிற வரிகள் அவர் மனதில் ஒருமுறை ஓடியது. அப்புறம் கடவுள் விட்ட வழி. எல்லாம் நல்லபடியாய் நடக்க வேண்டும்.

ததாஸ்து.

செகரட்டரி அறையில் டெலிபோன் அடித்தது. கேட்டில் செல்லுலர் போனில் முதலாளி பேசுகிறார். தெருமுனையில் கார் ரிப்பேராகிவிட்டது. அவர் இறங்கி வீட்டுக்கு நடந்து வந்திருக்கிறார். மொத்தம் நான்கு விளக்குக் கம்பங்கள் தூரம். இத்தனை தொலைவு சமீப காலத்தில் அவர் நடந்த வரேயில்லை. புஸு புஸு என்று மூச்சு விட்டு வேர்க்க, விறுவிறுக்க கையில் மிகவும் கனக்கிற சூட்கேஸுடன் வந்து கொண்டிருந்த அவரைக் கதவில் அந்த முட்டாள் வாட்ச்மேன் தடுத்து நிறுத்தியிருக்கிறான். விசிட்டிங் கார்ட், செக்ரட் டரி கையெழுத்துப் போட்ட சீட்டு இரண்டில் ஏதாவது ஒன்றைக் கேட்டிருக்கிறான். முதலாளி கொங்கணி பேசுகிறவர். அந்த மடையனுக்கு ஆங்கிலம் புரியவில்லை.

"அறிவு இருக்காய்யா உனக்கு?"

கதவருகே சீதாராமன் வெலவெலத்து நின் றார். செக்ரட்டரி ஓட்டமாய் ஓடிப் போய் கதவு திறக்கிறார். சிவந்த முகத்தில் உறுமிக் கொண்டு இத்தனை நேரம் அவர் ரொம்பவும் சாமார்த்தியமாய் தடுத்து நிறுத்தியிருந்த அந்த கடுகடுத்த மனிதன் கோபமாய் ஒருதடவை முறைத்து உள்ளே போகிறார். அதுவே சீதா ராமனை அவர் அங்கே பார்க்கிற கடைசி தடவையாய் இருக்க வேண்டும்.

"அறிவு இருக்காய்யா உனக்கு?"

சந்தேகத்தில் செக்ரட்டரி மீண்டும் கேட் டார். கொஞ்ச நேரம் சீதாராமன் அசையாமல் நின்றார். எச்சில் விழுங்கி தொண்டை எலும்பு ஏறி இறங்கியது. உடைந்த குரலில் செக்யூரிட்டி சீதாராமன் மிகவும் தாழ்மையுடன் விண் ணப்பித்தார்.

"இந்த ஒரு தரம் மன்னிச்சுடுங்க சார். தெரி யாமப் பண்ணிட்டேன். முதலாளியோட கார் எப்பவும் கண்ணாடி ஏத்தி வருது. போகுது. உத்தேசமா கும்பிடு வைப்பேன். ஆனா முத லாளியை ஒருதடவைகூட பார்த்ததில்லே. இனிமே தப்பு வராது. தயவு செஞ்சு இந்த ஒருதரம் மன்னிச்சுடுங்க."



"மருந்துச் சீட்டைத் தமிழிலே எழுதித் தரணும்கிற அரசாங்க உத்தரவை நினைச்சா பயமாயிருக்கு. கடைக்காரர் எதையாவது மாற்றிக் கொடுத்துட்டா என்ன பண்ணுறது?"


"கவலையே படாதீங்க டாக்டர், உங்களோட இங்கிலீஷ் கையெழுத்தைப் புரிஞ்சுக்கிட்டு மருந்தை மாற்றிக் கொடுத்த கடைக்காரருக்கு தமிழ் கையெழுத்து பெரிய பிரச்னையா இருக்காது!"

— கே. பாஸ்கரன்

40

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்





ACROSS THE UNIVERSE!
Puzzles
Stories
Rs. 5/-
Fact file
Comics
And More!
March 97 Issue
GOKULAM
The monthly magazine for children
GOKULAM - EKKADUTHANGAL - CHENNAI - 97
Lal

ஓசையில் ஓர் கடிதம்!

கை நிறைய சாமான்களுடன் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தான் ஸ்ரீதர். நாளை வெள்ளிக் கிழமை. விடுமுறைதான். நிதானமாக எழுந்து ஆற அமர சமைத்துச் சாப்பிடலாம். பிரகாஷ் இவனுக்கு முன்பாகவே வந்திருந்தான். விசிஆரில் தமிழ்ப் படம் ஓட விட்டு, விஸ்கியும், உருளைக்கிழங்கு வறுவலும் உள்ளே தள்ளிக் கொண்டிருந்தான்.

"ஏண்டா பாவி சமையல் பண்ணலையா?" ஸ்ரீதர் கேட்டான். இன்று பிரகாஷ் சமைக்கும் முறை.

"எல்லாம் செஞ்சாச்சு. அப்புறமா சுட வச்சு சாப்பிடலாம். இப்போ படம் பார்க்கலாம் வா." டீவியிலிருந்து கண்ணை எடுக்காமல் கூப்பிட்டான்.

ஸ்ரீதர் சாமான்களை டேபிள்மேல் வைத்து விட்டு சமையலறையை நோட்டம் விட்டான். சப்பாத்தி, பக்கத்தில் இவன் போனமுறை இந்தியாவிலிருந்து கொண்டுவந்த மாங்காய் ஊறுகாய், கருவடாம் பொரித்து, ரெடிமேட் ரசப் பொடி ரசம், ரைஸ்குக்கரில் சாதம், கடையில் வாங்கி வந்த தயிர்.

"சோம்பேறி..." ஸ்ரீதர் முணுமுணுத்துக் கொண்டான். பெண்டாட்டியானால் கத்தலாம், பிரகாஷ் உயிர் நண்பன். "உனக்கும் ஒரு கிளாஸ் ஊத்தவா?" பிரகாஷ் கேட்டான்.

"வேண்டாம். குடி குடியைக் கெடுக்கும்."

"போடா, பொண்டாட்டி பிள்ளை குட்டிங்களையெல்லாம் ஊர்ல விட்டுட்டு, இந்த பாலைவனத்துல காயறோம். உபதேசம் பண்றியா? படம் நல்லாயிருக்கு. பார்க்கறதானா பக்கத்துல உட்காரு. ஏதாவது சொல்றதானா கிட்டக்கவே வராதே."

ஸ்ரீதர் சிரித்துக்கொண்டே கையில் காபியுடன் பிரகாஷ் பக்கத்தில் உட்கார்ந்தான்.

"டேய் மறந்துட்டேனே, உனக்கு ஊரிலேர்ந்து லெட்டர் வந்திருக்கு!"


உள்ளே போய் எடுத்து வந்தான். ஸ்ரீதர் ஆசையாக அந்த வெளிர்நீல கடிதாசியைப் பிரித்துப் படித்தான். ரேகாதான் எழுதியிருந்தாள். ஆச்சரியம்! அவளுக்குக் கடிதம் எழுதும் பழக்கமெல்லாம் கிடையாது.

அரபு நாட்டிலுள்ள அன்புக் கணவனுக்கு,

நீ வியாழனன்று வருகிறாய் என்றதும், வீடு சுறுசுறுப்படைந்து விட்டது. எண்ணெய், சர்க்கரை, நெய் எல்லாம் வாங்கி நிரப்பினோம். கடலை மாவு, அரிசி மாவு, கோதுமை மாவு, இன்னபிற மாவுகள் அரைத்து வைத்து, வீடெல்லாம் தூசு தட்டி, திரைச்சீலை மாற்றி, படுக்கைகளுக்குப் புது உறை போட்டு, கார் அலம்பி.... எல்லாமே உனக்காகச் செய்யப்பட்டன. பிள்ளைகளுக்குப் பள்ளியில் விடுமுறை சொல்லி விட்டேன். உன் அம்மா நீ வரும் நாளையும், நேரத்தையும் நூறுமுறை கேட்டு விட்டாள். இத்தனைக்கும் இடையில் நான் புருவம் திருத்தி, நகப்பூச்சு தடவி, முடிக்கு மருதாணியிட்டு (ஒன்றிரண்டு வெள்ளி முடிகளை பொன் நிறமாக்கும் தந்திரம்) உனக்காகக் காத்திருந்தேன். விமான நிலையத்திற்குக் குழந்தைகளும் வருவேன் என்றார்கள். ஆவல்தான். உன்னைப் பார்த்து இரண்டரை வருடங்கள் ஆகிவிட்டன. இப்போது நீ எப்படியிருப்பாய், எண்ணிப் பார்த்தேன். பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை உன் குரல் மட்டும் தொலைபேசியில் ஒலிக்கும். உன் குழந்தைகள் உன்னுடன் பேசி, உன் அம்மாவும் பேசிய பின் எஞ்சிய சில நிமிடங்களில் நம் வார்த்தைகள் வெறும் வங்கிக் கணக்குகளும், வரவு செலவும்தான்! வர்த்தகத்துக்கு இடையில் உன் குரலில் காதலைத் தேடும் நான் முட்டாள். இருந்தாலும், அடுத்தமுறையும் தொலைபேசியில் அதையே எதிர்பார்ப்பேன். நீ ஒருமுறை சொன்னாய் 'எதிர்பார்ப்புகள் இருந்தால்தான் ஏமாற்றங்கள் ஏற்படும்... அதனால் வாழ்க்கையை அப்படியே ஏற்றுக் கொள்' என்று. என்னால் முடியவில்லை. எனக்கு நீ வேண்டும். இது ஒன்றுதான் என் எதிர்பார்ப்பு. இந்த எதிர்பார்ப்பு கூடாது என்றால் நான் உன் மனைவியாக இருப்பதில் அர்த்தமேயில்லை.



நம்முடைய கல்யாணத்திற்கே ஏதேனும் அர்த்தம் இருக்கிறதா என்று தூக்கம் வராத நாட்களில் நான் எண்ணிப் பார்த்ததுண்டு. என்னைப் பொறுத்தவரை நம் கல்யாணமும் அரு... மையான வர்த்தக ஏற்... பாடு. என் அப்பா இருபத்தி... ஐந்து வருடங்களாக உழைத்துச் சம்... பாதித்ததை எல்லாம் இரண்டே நாளில் கரைத்து உன்னை மாப்பிள்ளையாகச் சம்பாதித்தார். உனக்கு அரபு நாட்டு மாப்பிள்ளை என்று அமோக வரவேற்பு. எனக்கு நீ தங்கக் கவசம் போடுவாய் என்று உத்தரவாதமாய் நம்பி உன்னிடம் ஒப்படைத்தார்கள். அவர்கள் வரையில் மிகவும் திருப்திதான். தங்கக் கவசத்திற்குள் வியர்த்துப் புழுங்குவது நான்தானே. அவர்களால் என் வியர்வையின் நாற்றத்தை அறிய முடியாது. தங்கக் கவசம் கூடத்...



விடும்.

நீ ஒவ்வொரு முறையும் வாங்கி வரும் வெளிநாட்டுச் சாமான்களுக்காகவே காத்து நிற்கும் கூட்டம் ஒன்று இங்குண்டு. நீ வரும் தேதியில் எனக்கும் முன்னால் அவர்கள், உன்னை வரவேற்கக் காத்திருப்பார்கள். உன்னுடன் நான் சேர்ந்திருக்கப் போகும் பதினைந்து நாட்களைப் பற்றி நான் பதினைந்து மாதங்களாய்த் திட்டம் போட்டது எல்லாம் வீணாகும். உன் உறவினர்களும், நண்பர்களும், இன்னபிறரும் உன்னை உறிஞ்சிய பிறகு, எஞ்சியுள்ள எலும்புக் கூட்டுடன் நான் என்ன காதல் செய்வது? உன் கண்களில் முன்பெல்லாம் காமம் கலந்த காதல் இருந்தது. இப்போது நீ மிகவும் சோர்ந்து போய் இருக்கிறாய். ஏன்? காதல் மறந்து விட்டதா? உன்னைத் திருமணம் செய்து கொண்டு, உன் பணத்துடன் குடித்தனம் நடத்தி எனக்கு அலுத்து விட்டது. இநத அவலத்தைப் பார்த்து, சிலருக்கு பொறாமை வேறு. ‘ஆங், அவளுக்கென்ன ஆம்படையான் கனக விருட்சம்’ என்கிறார்கள்.

ஒருவேளை நீ விருட்சம்தானோ? ஆசா பாசங்கள் எதுவுமில்லையோ?

நம் குழந்தையின் முதல் அழுகுரல், முதல் காலடி, முதல் வார்த்தை போன்ற நிகழ்வுகளின் சந்தோஷம் உனக்குத் தெரியுமா? அவர்களுக்குக் காய்ச்சல் வரும்போதும், மருத்துவமனைக்குச் செல்லும்போதும், நான் படும் வேதனை உனக்கு எட்டுமா? திடீரென்று மூன்று நாட்கள் மூத்திரம் போகாமல் குழந்தை அழ, தூக்கிக் கொண்டு போய் அவசர அறுவைச் சிகிச்சை செய்து பிழைக்க வைத்த அந்த துக்க நிமிடங்களின் தவிப்பும், துடிப்பும் உனக்குத் தெரியுமா? இப்படி எதிலுமே கலந்து கொள்ளாமல் ஒதுங்கி வாழ்கிறாயே, உன் மனமும் என்னிடமிருந்து ஒதுங்கி விட்டதா?

‘இளமையில் வறுமை’ மிகவும் கொடிது. நீ அனுபவித்திருக்கிறாய். அதனால் இன்று பணத்தைத் துரத்துகிறாய். இளமையில் தனிமையை நான் அனுபவிக்கிறேனே, நான் எதைத் துரத்த? உங்கள் ஊரிலிருந்து நீ வாங்கி வந்த தொலைக் காட்சிப் பெட்டியில் காலையும் மாலையும் காதலர்கள் பாடிக் கொண்டேயிருக்க, நான் மட்டும் உன் நினைவுகளுடன், உன் தாயுடனும், உன் குழந்தைகளுடனும் எப்படி குடித்தனம் நடத்துவது? எனக்கு கேப்பங்கஞ்சி போதும். நீ உடனே எல்லாவற்றையும் உதறி விட்டு வா. நீ முன்பு ஒருமுறை சொன்னாய். ‘இருட்டில் அழுவதைவிட ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றி வைப்பது மேல்’ என்று. என்னிடம் உள்ள மெழுகுவர்த்தியில் திரியில்லையே! நீ கொண்டு வா விளக்கேற்றுவோம்.

உன் பிரிய (?) மனைவி,
ரேகா.

“டேய் காபி ஆறி, ஏடு புடைத்து விட்டது. என்ன காதலா?” டபாய்த்தான் பிரகாஷ்.

“பரவாயில்லை. வடிகட்டி சுடவைத்துக் குடிக்கிறேன்” என்றபடி எழுந்த ஸ்ரீதர், சுட வைத்த காப்பியுடன் டெலிபோனுக்குப் போனான்.

41 முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

அர்த்த பஞ்சகம் — இது ராமாயணம் உணர்த்தும் இன்னொரு தர்மம். வேத, சாஸ்திர புராணங்கள் எல்லாமே அதன் மேல்தான் நிற்கின்றன.

நாம் அடைய வேண்டிய பரப்ரும்மத்தினுடைய ரூபம், வடிவழகு என்ன என்பது நமக்கு நன்றாகத் தெரிய வேண்டும். அதன் ஸ்வரூப, ரூப, குண விசேஷங்களைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அந்த பரப்ரும்மத்தை அடைய வேண்டிய ஆத்ம ஸ்வரூபத்தையும் – அதாவது நாம் யார் என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

அவனை அடைய வேண்டிய வழி எது என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

அவ்வாறு அடைந்த பிறகு ஏற்படக்கூடிய பலன் என்ன என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

அவனை அடையவிடாமல் தடுக்கும் தடை எது என்றும் தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்த ஐந்து விஷயங்களின் (அர்த்த பஞ்சகம்) மேல்தான் வேதமே நிற்கிறது.

இந்த உலகம் இருக்கிறதே... ப்ரக்ருதி – இது பகவானைத் தெரிய விடாமல் கண்ணை மறைக்கிறது.

கோயிலில் திரை போடுவதற்குக் காரணம் என்ன...? அவனுக்கும் நமக்கும் நடுவிலே இந்த ப்ரக்ருதி தடையாக இருக்கிறது – திரையாக இருக்கிறது என்பதைக் காட்டத்தான்.

அதனால்தான் ‘தெரதீயகராதா’ என்று அந்த ஏழுமலையான் சன்னதியிலே நின்று பாடினார் தியாக ப்ரும்மம். அந்தத் திருவேங்கடமுடையான் உருவத்தை மறைத்த திரையைச் சொல்லலை அவர்... அவனுக்கும் நமக்கும் இடையிலே இருக்கிற ப்ரக்ருதியாகிய திரையைச் சொல்கிறார். ‘அந்தத் திரையைத் தீ கொள்ளக் கூடாதா? உன்னை நான் என்னுள்ளே பார்க்கும் காலம் வருமா’ என்று கேட்கிறார்.

ஆகவே, நாம் எம்பெருமானைப் பார்ப்பதற்குப் பெரிய தடையாக இருக்கிறது இந்த ப்ரக்ருதி சம்பந்தம்.


அவனை அடைவதற்கான உபாயம் பக்தி, சரணாகதி. அவனை அடைந்த பிற்பாடு அவன் திருவடியிலேயே நித்ய கைங்கர்யம் பண்ணும் தன்மை உண்டாகும்.



விட்டுவிட்டு ஓவியர்களின் வீட்டுக்குப் போய் விடுவேன். அவர்களின் கான்வாஸ்களில் உருவாகும் ஓவியங்களை அலுக்காமல் சலிக்காமல் பார்த்துக் கொண்டே இருப்பேன்!'' என்கிறார் உமாசங்கர் சர்மா.

அந்தக் காலத்து முத்திரைத் தாள்களில் இவர் வரைந்திருக்கும் ரஜபுத்திர ஓவியங்களும் செபியா வண்ணத்தில், கையினால் தயாரிக்கப்பட்ட காகிதத்தில் வரைந்திருக்கும் பாம்பு - கீரிச் சண்டையை வேடிக்கை காண்பிக்கும் லம்பாடி ஓவியமும், இவரைப் பரம்பரை ஓவியரோ என்று நினைக்கத் தோன்றும். ஆனால் குரு என்று யாருமே இல்லாமல் உருவானவர் உமாசங்கர் சர்மா.

ஆயில் பெயின்டிங்குகளிலும் அசர வைக்கிறார். பாலைவனக் காட்சிகள், வெயிலின் வீச்சோடு தத்ரூபமாக உயிர் பெற்று நம் கண் முன்னே காட்சி தருகின்றன.



"இது மறைந்து கொண்டிருக்கும் கலை. நான் எட்டுப் பேருக்கு இப்போது இந்த வகை ஓவியங்களைக் கற்றுத் தருகிறேன்!"

இவரது ஆர்வத்தையும் திறமையையும் பார்த்த பஜாஜ் நிறுவனம், பம்பாய்க்கு இவரை அழைத்து, ஓவிய ஆர்வம் உள்ளவர்களுக்கு ஒரு வார பயிற்சி அளிக்கச் செய்தது.

பிரான்ஸ் நாட்டின் புகழ்பெற்ற அவிக்னான் விழாவுக்கு இந்தியன் எக்ஸ்பிரஸ் தனது செலவில் இவரை அனுப்பி வைத்தது.

திருப்புமுனையாக அமைந்தது -

''தொழிலதிபர் சி.ஜி. மெர்க்சன்ட் பம்பாயில் என்னைப் பார்க்க வந்தார். அவர் வீட்டில் இருந்த முப்பது மினியேச்சர் பெயின்டிங்குகளை மறுபடி புதிது மாதிரியே வரைந்து தர முடியுமா என்று கேட்டார். அவர் பல பேரை முயன்று பார்த்துத் தோற்றிருக்கிறார். நான் வரைந்து கொடுத்தவுடன் மிகவும் சந்தோஷப்பட்டார். அவர் குடும்பத்தைச் சேர்ந்த பத்து உறவினர்களுக்கும் அந்த முப்பது ஓவியங்களையும் வரைந்து கொடுக்கச் சொன்னார். அவர் போன வருடம் காலமானார். ஆனால் அந்தக் குடும்பம் என் மீது இன்றும் அக்கறையும், அன்பும் காட்டி வருகிறது!"

மனைவி மதா சர்மா. கூடவே இருந்து ஒத்துழைப்பதோடு மட்டுமின்றி, தாமும் வரைய ஆரம்பித்திருக்கிறார்! அழகாக விளக்கங்களும் தருகிறார்.

"மகாபலிபுரம் சிற்பங்களைப் போய்ப் பார்த்தோம். அவற்றைக்கூட, அவற்றின் நுணுக்கங்களோடு மினியேச்சர் பெயின்டிங் பாணியில் வரைய முடியும்!" என்கிறார் உமா சங்கர் சர்மா.

சந்திப்பு: **சாருகேசி**

* பாலைவனம்....

சுஜாதாவின் நாவலை திருப்பிக் கொடுத்து விட்டு வந்து விடலாம் என்றவளை இந்துதான் கட்டாயப்படுத்தி, தன் அண்ணனின் கல்யாண வீடியோவைப் பார்த்துவிட்டுப் போகச் சொன்னாள்.

"இன்னொரு தடவை பார்த்துக்கறேனே இந்து."

"அப்புறம் சந்தர்ப்பம் அமையாது ரேவதி."

"நான்தான் மேரேஜ் அட்டெண்ட் பண்ணினேனே..."

"இது... மேரேஜ் வீடியோ மாதிரி இல்லாம, ஒரு படம் பார்க்கிற மாதிரி இருக்கு பாரேன். ஃப்ளவர்ஸ், மழை, கோபுரம், மணிக்கதவு, பறவைன்னு பல ஷாட்ஸை சேர்த்து, ம்யூசிக் வேற ரம்யமா மிக்ஸ் பண்ணி... சூப்பரா வந்திருக்கு..."

பிறகு ரேவதியால் தட்ட முடியவில்லை.

பெரிய ஹாலில் நிறையப் பேர் உட்கார்ந்து இருக்க.... ரேவதியும் அமர்ந்தாள்.

இந்து சொன்னது நிஜம்தான்.


சினிமா பாணியில் நட்சத்திரம் நடுவே பெண், மாப்பிள்ளை முகம் சுற்றியது.

திறக்கும் மணிக்கதவு. வாசல் கோலம்.

நீலவானம்... கோபுரம் நிழல் படம் போல.

பெண்ணின் தலை அலங்காரம் இன்ச் இன்ச்சாக... புடைவை அழகு தனியாக நடுநடுவே க்ளோஸப்பில் ரேவதியின் முகம் தெரிய.

நா. நாகராஜன்



இந்துவின் அம்மா திரும்பிச் சிரித்தாள்.

ஊஞ்சல் ஆடும் போது கேமராவும் ஆடி அசைந்து படமாக்கி இருக்கிறது.

பாதங்களை மட்டும் டைட் க்ளோசப்பில் காட்டி அசத்தி.

இடையிடையே ரேவதியின் முகம் ஃப்ரீஸ் ஆகி இருக்கிறது.

விளம்பரப்படம் போல் –

சிரிக்கும் ரேவதி...

பேசும் ரேவதி...

திரும்பும் ரேவதி...

முகம் சுளிக்கும் ரேவதி.

ஒரு கண் மாதிரி அவளை கவனமா[...] ரசித்துப் பதிவாக்கி இருக்கிறது.

மற்றவர்களுக்கு யதார்த்தமாக இருக்கலா[...] அவளுக்கு அநியாயமாகத் தோன்றியது[...]

அப்பாவிடமே நியாயத்தைப் பட்டென[...] சொல்லும் ரேவதி.

ஆண் என்பதால் அண்ணன் சொல்வதற்[...] அடங்கிப் போக வேண்டும் என்று எதிர்பார்[...]க்க் கூடாது என்று வாதாடும் ரேவதி.

அம்மாவிடம் 'சமையல் சாதார[...] விஷயம், அதுவே பெண்ணின் முழு வேலை[...]யன்று' என்று வாதாடுகிற ரேவதி...

நிச்சயம் இந்த வீடியோகிராபருக்கு[...] தெரியாது.

"என்ன ரேவதி?" இந்து உலுக்கினாள்.

"என்ன...." சமாளித்தாள்.

''நீயே அசந்

துட்டே பார்த்தியா!"

"ஆமாம்..."

"இந்த வீடியோகிராபர் அட்ரஸ் தர முடியுமா..."

"அட அதுக்குள்ளே உன் கல்யாணத்துக்கு அட்வான்ஸ் புக்கிங்கா..."

"ப்ளீஸ். விளையாடாதே இந்து. ஐ'ம் சீரியஸ்."

"சாரிம்மா. இது அண்ணன் ஃப்ரெண்ட் சிவா எடுத்தது. பெருமாள் கோவில் தெரு, ஏழாம் நம்பர் வீடு. வாசல்ல போஸ்ட் பாக்ஸ் இருக்கும்."

தன் வீட்டை அடைந்ததும்



வாசலில் அம்மா நின்று கொண்டிருந்தாள்.

"ஏன் ரேவதி லேட்?"

"நான் என்னம்மா சின்னக் குழந்தையா இப்படிப் பதர்றே..."

"சின்னக் குழந்தையா இருந்தா பிரச்னையே இல்லையே. வயசுப் பொண்ணு."

"அம்மா... இன்னிக்கு இந்து வீட்ல அவங்க அண்ணன் மேரேஜ் கேசட் பார்த்தேன்."

"அதான் லேட்டா..."

"ம்..."

மேற்கொண்டு அம்மாவிடம் தன்னை அதிகம் காட்டி இருப்பதைச் சொல்லவில்லை.

எப்படி இருப்பான் அந்த வீடியோகிராபர்...

தனியே ஸ்டுடியோவிற்கு போகலாமா? ஏன் என்னை அதிகம் எடுத்தாய் என்று கேட்க முடியுமா....

அண்ணனையோ, அப்பாவையோ துணைக்கு அழைக்கலாமா...

இது சாதாரண விஷயம் என்று சொல்லி விடுவார்களா...

இந்துவைக் கூப்பிடலாமா...

"நீ அழகா இருக்கே. அதனால கவர் பண்ணி இருக்கலாம்..." என்று ஈஸியாக சொல்லி விடுவாளா...

சே... என்னெல்லாம் பிரச்னைகள்.

வீடியோ பார்க்கிற ஒவ்வொருத்தரும் அவள் யாரென்று விசாரிக்கப் போகிறார்கள்.

பையன் இருந்தால் தங்கள் பையனுக்குப் பெண் கேட்டு வரப் போகிறார்கள்.

அப்பா, அம்மாவை அடிக்கடி நச்சரித்து, அவளையும் அக்கா மாதிரி குடும்பக் கூண்டில் பூட்டிவிடப் போகிறார்கள்...

எத்தனை நாள் எதிர்த்துக் கொண்டே இருக்க முடியும்...

ரொம்பவும் யோசித்துப் பார்த்ததில் அவனைப் பார்த்துப் பேசி விடுவதுதான் சரி என்று தோன்றியது.

இனியாவது வேறு எந்த கல்யாணத்திலும் தன்னை அதிகம் காட்டாமல் இருப்பான்.

மறுநாள் அம்மாவிடம் எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸ் போவதாகப் பொய் சொல்லி விட்டு சீக்கிரம் கிளம்பினாள்.

அருள்வாக்கு

பத்மபாதருக்கு ஒரு பெரியவர் நரஸிம்ஹ மந்த்ரோபதேசம் பண்ணினார். நன்றாக ஜபம் பண்ணி ஸித்தி பெற்று நரஸிம்ஹமூர்த்தியை தரிசிக்கணுமென்று அவருக்கு ஆசை உண்டாயிற்று. ஏகாந்தமாக ஒரு மலையின் உச்சியிலிருந்த காட்டுக்குப் போய்த் தபஸ் பண்ண உட்கார்ந்தார்.

ஒரு வேடன் அவரிடம் வந்து, "எங்கள் மாதிரி பலசாலியான வேடர்கள் இங்கே வேட்டையாடிப் பிழைப்போம். பூஞ்சை ப்ராமணன், உனக்கு இங்கே எதுவும் கிடைக்காமல் கஷ்டப்படுவாய். எதுக்கு வந்தே?" என்று கேட்டான்.

நரஸிம்ஹர், தபஸ் என்றெல்லாம் சொன்னால் அவனுக்குப் புரியாதென்று அவர், "இடுப்புக்குக் கீழே மநுஷ்யன் மாதிரியும் மேலே சிங்கம் மாதிரியும் ஒரு ப்ராணி உண்டு. எனக்கு அது தேவைப்படுகிறது. இந்தக் காட்டில் அது இருக்கிறதென்று கேள்வி. அதற்காகத்தான் வந்தேன்" என்றார்.

"இந்தக் காட்டிலே நான் பார்க்காத இடமோ, எனக்குத் தெரியாத மிருகமோ ஒண்ணும் கிடையாது. ஆனால் நீ சொன்ன மாதிரி மிருகம் என் கண்ணில் பட்டதே இல்லை. நீ சொல்வது மட்டும் நிஜமென்பாயானால் அதை நான் பார்க்காமல் விடுவதில்லை. நானே அதைப் பிடித்துக் கொண்டு வந்து கொடுக்கிறேன். நீ கஷ்டப்பட வேண்டாம். ஆனால் நிஜமாகவே அப்படி உண்டா, சொல்லு" என்றான்.

"நிஜமாக அது இங்கே இருக்கிறது. ஆனால் உன்னால் பார்க்க முடியாது. உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ" என்றார்.

"அப்படியா சொன்னே? நாளைக்கு ஸாயங்காலத்துக்குள் அதை நான் பிடித்துக்கொண்டு வருகிறேனா, இல்லையா, பாரு! அது மட்டும் முடியாவிட்டால் இந்த உயிரை விட்டுவிடுவேன். இந்தக் காட்டுக்கே பெரிய வேடன் என்று இருந்து கொண்டு, உன் மாதிரி ஐயர் கஷ்டம் பார்க்காமல் எங்கள் இடத்துக்கு வந்திருக்கும்போது உதவி பண்ண லாயக்கில்லையென்றால் நான் உசிரை வைத்துக் கொண்டு என்ன ப்ரயோஜனம்?" என்று வேடன் நரஸிம்மத்தைத் தேடிக்கொண்டு புறப்பட்டான். காடு பூரா தேடு தேடு என்று தேடினான். ஆஹார நினைவே இல்லாமல், களைப்பு பார்க்காமல் ஒரே குறியாய்த் தேடினான். அன்றைக்கு முழுதும் போய் விட்டது. மிருகம் அகப்படவில்லை. அவனும் விடவில்லை. மறுநாளும் தேடினான். ஸாயங்கால வேளையும் வந்து விட்டது.

வழியெல்லாம் சிந்தனை.

வயதானவராக இருந்தால்....

இல்லை விளையாட்டுப் பிள்ளையாக இருந்து கிண்டலடித்தால்....

ரெண்டில் ஒன்று பார்த்து விடுவது என்று தீர்மானித்தாள்.

வீட்டு வாசலில் யமாஹா நின்று கொண்டிருந்தது. யமஹாதகன்.

வாசல் கதவைத் தட்டிய போது ஒரு நடுத்தர வயது அம்மாள் கதவைத் திறந்து இவளைப் பார்த்துச் சிரித்து,

"வாம்மா ரேவதி..." என்று நெடுநாள் பழகியவர்களைப் போல வரவேற்றது ஆச்சரியப்படுத்தியது.

"என் பேரு..."

"உள்ளே வா. விவரமா பேசலாம்." கதவை விரியத் திறந்தார்கள்.

கிராம வீடு. நீளமான வீடு. கனமான வேலைப்பாடு நிறைந்த தேக்குக் கதவுகள்.

மணிரத்னம் படம் மாதிரி கொஞ்சம் இருட்டு.

மரநாற்காலிகள்.

கூடத்தின் நடுவே ஊஞ்சல்.

சின்னச் சின்ன ரூம்கள்.

ஓரத்தில் பெரிய டீ.வி டெக். துணி போட்டு மூடி வீடியோ கேமரா.

"சிவா..."

சிவா சட்டையில்லாமல் வெளிப்பட்டான்.

"என்னம்மா..."

"ரேவதி..."

"ஹலோ... சாரி... ஒரு நிமிஷம். அம்மா காப்பி தயார் பண்ணு..."

"இல்லே... நான் காப்பி சாப்பிட வரலை. சண்டை போட வந்தேன்..." சொல்ல முடியவில்லை.

மனிதர்கள் அத்தனை உயர்வானவர்களாகத் தெரிந்தார்கள்.

ஒரு வொயிட் ஷர்ட்டில் வந்த சிவாவிற்கு முப்பதிற்குள் வயதிருக்கும்.

நாசர் மாதிரி சுருள்முடி.

சாந்தமான பார்வை.

சிரிக்கும் கண்கள்.

"சொல்லுங்கோ ரேவதி..."

"நான் இந்து அண்ணன் கல்யாண வீடியோ பார்த்தேன்..."

"சரி..."

பிறகு எப்படி ஆரம்பிக்க என்று தெரியவில்லை.

'ஸரி, ஐயரிடம் சொன்னதை
ம்மால் செய்ய முடியவில்லை.
அவர் பொய் சொல்லியிருக்க
மாட்டார். நாம்தான்
கையாலாகாதவனாகிவிட்டோம்.
உயிரை விட்டுவிட
வேண்டியதுதான்' என்று
தீர்மானம் பண்ணினான்.


அங்கே படர்ந்திருந்த கொடிகளை அறுத்தான்! தூக்குப் போட்டுக் கொள்வதற்காகக் கிளையில் கட்டினான்.

அந்த ஸமயத்தில் எதிரே ஒரு மிருகம் நின்றது.

ஐயர் சொன்ன வர்ணனைப்படியே மிருகம் இருந்ததைப் பார்த்து அவனுக்கு ஒரே ஸந்தோஷமாயிற்று. 'பாழும் மிருகமே! நீ அகப்படுவதற்கு இத்தனை பாடாபடுத்தினாய்?'' என்று சொல்லி, தூக்காகப் போட்ட கொடியை அவிழ்த்து அதனால் நரஸிம்ஹத்தைக் கட்டினான். ஸ்வாமியும் அவனுக்குக் கட்டுப்பட்டு நின்றார்.

கரகரவென்று நரஸிம்மத்தை இழுத்துக் கொண்டு அவன் ப்ராமணரிடம் வந்தான். ''ஓய், பாரும்! இதுதானே நீர் சொன்ன மிருகம்?'' என்று கேட்டான்.

இவன் காட்டினானே தவிர, அவரால் பார்க்கமுடியவில்லை! அதாவது நரஸிம்ஹ



ஸ்வாமி அவருக்குக் காட்சி கொடுக்கவில்லை!

அவனானால், ''இந்தா புடிச்சிக்கோ. உனக்காகத்தான் கொண்டு வந்தேன். ஓட்டிக் கொண்டு சுகமாக ஊருக்குப் போ'' என்றான்.

அவருக்கு துக்கம் துக்கமாக வந்தது. ''ஹீனனான வேடனுக்குத் தெரிகிறாய், எனக்குத் தெரிய மாட்டேன் என்கிறாயே!'' என்று ஸ்வாமியிடம் நொந்து கொண்டார்.

அப்போது அசரீரி வாக்கு உண்டாயிற்று. ''கோடி வருஷம் ஸ்வரூப த்யானம் பண்ணினாலே ஏற்படக்கூடிய சித்த ஐகாக்ரியம் (ஒரு முனைப்பாடு) இவனுக்கு ஒரே நாளில் உண்டாயிற்று. பசி, நித்ரை இல்லாமல், எங்கே சுற்றினாலும் ஒரே த்யானமாக, இப்படி ப்ராணனைப் பந்தயம் வைத்து ஸாதனை பண்ணினவராக எந்த ரிஷியும் இல்லை. இந்த மஹா பக்தனின் ஸங்கம் உனக்கு ஏற்பட்டதால் தான், தர்சனம் கிடைக்காவிட்டாலும் கர்ஜனையும் இப்போது இந்த வாக்கும் கேட்கிற பாக்யமாவது கிடைத்தது.''

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

மேஜை நிறையப் புத்தகங்களாக இருந்தன.

அசோகமித்திரன், ஜெயகாந்தன், தி.ஜா., கல்கி...

ஓ புத்தகப் பித்தனோ....

அது போக ஸ்டாண்டில் கர்நாடக இசை கேசட்டுகள்.

பாலமுரளி, பிஸ்மில்லாகான், மஹாராஜா புரம், உன்னி கிருஷ்ணன்...

எந்த நேரத்திலும் அவன் அம்மா காப்பி தம்ளருடன் உள்ளே நுழைந்து விட முடியும் என்பதால் சண்டையைத் தவிர்த்து, சாதாரண குரலில் பேசிவிட முடிவு செய்தாள்.

"எஸ் ரேவதி...."

"சாரி... நான் என். ரேவதி..."

"குட் ஜோக். சொல்லுங்க. எனக்கு ஆபீசிற்கு டயம் ஆகுது..."

"ஆபீசா..."

"ஆமாம். நான் ஒரு சென்ட்ரல் கவர்ன் மெண்ட் எம்ப்ளாயி. வீடியோ பார்ட் டைம் ஒர்க். ஆபீஸ்ல பெர்மிஷன் வாங்கி தெரிஞ்சவங்களுக்கு மட்டும் இப்படி வீடியோ எடுத்துக் கொடுக்கறேன். ஒரு ஆத்ம திருப்திக்கு..."

''நோக்கம் எல்லாம் உயர்வாத்தான் இருக்கு. செயல்தான் சரியில்லை..."

"புரியலை..."

"நிஜமாவே புரியலையா..."

''சரி. கம் அவுட். வெளிப்படையா பேசுங்க..."

"கல்யாணம்னா பொண்ணு, மாப்பிள்ளை, வாத்தியார், சடங்குன்னு எடுக்கறதை விட்டுட்டு பர்டிகுலரா ஒரு நபரை அதிகம் காட்டி இருக்கீங்களே... நியாயமா..."

"ஸாரி..."

''வெறுமனே ஸாரி சொன்னா ஆச்சா? வீடியோவை எத்தனை பேர் பார்ப்பாங்க. எல்லாரும் விசாரிப்பாங்க. என்னை வழில பார்த்தா கேட்பாங்க. ஒதுங்கி அமைதியாய்ப் போயிட்டிருக்கற எனக்கு எதுக்கு பாப்புலாரிட்டி. வேண்டாம்... என்னை அதிகம் காமிச்சது எதுக்குன்னு வம்பா யோசிக்க மாட்டாங்களா..."

மெள்ள மெள்ள ரேவதிக்குக் கோபம் வந்தது.

தான் சொல்ல வந்ததை முழுமையாகச் சொல்லி விட வேண்டும் என்ற ஆவேசம்.

"ரேவதி. நான் அந்தக் கோணத்தில் பார்க்க



''பையனை துபாய்க்கு அனுப்பினது தப்பா போச்சி!''

''ஏன்?''

''இந்தியாவுல மாடு மேய்க்கறதை விட துபாய்ல ஒட்டகம் மேய்க்கறது பரவாயில் லேனு சொல்றான்!''

– பென்னை சி. முருகன்



''நாட்டுல சில்லறைத் தட்டுப்பாடு ஹெவியா இருக்குங்க.''

''அதுக்காக பாக்கி பத்து ரூபாய்க்குப் பதிலா இன்னொரு ஊசி போட்டுக்கச் சொல்றது நல்லா இல்லே டாக்டர்!''

– சீர்காழி வி.ரேவதி



''அந்த தனியார் டீ.வி.காரங்க ஏமாற்றுப் பேர்வழிங்கனு எப்படி சொல்றீங்க?''

''போட்டிக்கான விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 31.12.2005ன்னு அறிவிக்கறாங்க!''

– பா.ஜெயக்குமார்

வில்லை. கல்யாண வீடியோன்னு ஆடாம அசையாம பொண்ணு மாப்பிள்ளைன்னு தொலைக்காட்சி வயலும் வாழ்வும் பேட்டி மாதிரி இருக்கணும்னு நான் நினைக்கலை. அன்னிக்கு கூட்டத்துல உங்க முகம் என்னை இம்ப்ரஸ் பண்ணிச்சு. அதை ஒரு மூணு நிமிஷம் எடுத்து அங்கங்கே பிரிச்சு காமிச் சேன். நீங்க மட்டும் இல்லே ரேவதி, ஒரு குழந்தை, ஒரு பாட்டி, ஒரு லைட் தூக்கிற கிழவனோட கொட்டாவி, சம்பந்தி அம்மா வோட திருப்திப் புன்னகை, மாப்பிள்ளை ஒரு பொண்ணுகிட்டே தனியா நின்னு பேசினது இவ்வளவும் அந்த வீடியோ கேசட்ல ரகசியா பதிவாயிருக்கு. பட்... உங்களைத் தவிர யாரும் அதை சீரியஸா எடுத்துக்கிட்டு சண்டைக்கு வரலை. இந்து ஃப்ரெண்ட் ரேவதின்னு கேசட் போடும்போது என் அம்மாவுக்கு அறிமுகப் படுத்தினேன்." அவனும் பதிலுக்கு நீளமாகப் பேசினான்.

அவன் அம்மா காப்பியைக் கொண்டு வந்து வைத்துவிட்டு உடனே வெளியேறி னார்கள்.

"காப்பி சாப்பிடுங்க ரேவதி..."

"வேண்டாம்..."

"ப்ளீஸ். வீடு தேடி வந்திருக்கீங்க. உங்க ஃபேமிலி பத்தி நான் தெரிஞ்சுக்கலாமா?"

"ஏன் பெண் எடுக்கப் போறீங்களா?"

"கோபமா இருக்கீங்களா ரேவதி. சாரி. வெரி சாரி. ரொம்ப ரொம்ப சாதாரணமான ஒரு நிகழ்ச்சியா நான் அதை நினைச்சேன். சிலருக்குத் தன் முகத்தைப் பார்த்தா சந்தோ ஷம் வரும். அப்படிப் பாராட்ட வந்திருக்கீங் கன்னு நினைச்சேன். இது நாணயத்தின் இரண்டாவது பக்கம். ஓ.கே. பர்கெட் இட். சாரி இனி நாம நண்பர்கள். பரவாயில்லையா? காப்பி சாப்பிடலாமா..."

இவன் விளையாட்டுப் பிள்ளையா என்று யோசித்தாள்.

"உங்கள் கல்யாணத்திலாவது உங்களை அதிகம் காட்டலாமா ரேவதி..."

"சிவா..." சிரிப்பு வந்தது.

"ஓ...கே... தேங்க்யூ. இந்த சிரிப்புக்குத்தான் காத்திருந்தேன். காப்பி சாப்பிடுங்கள்."

அவள் கோபம் தணிந்து சமாதானமாகி காப்பி சாப்பிடுவதை ரசித்துக் கொண்டிருந் தான்.

"உங்கள் கல்யாணத்திற்கு நான் உண்டு ரேவதி. மாப்பிள்ளையாகவோ அல்லது வீடியோகிராபராகவோ..."

வாய் வரை வந்து விட்ட வார்த்தைகளை உள்ளே தள்ளினான், மீண்டும் கோபப்பட்டு சீரியஸாகி விடுவாளோ என்கிற பயத்தில்!

மீண்டும் மத்யமர் கதைகள் 8

உலகத்தோடு கோபித்துக் கொண்டு விட்டதுபோல தன்னந்தனியாக தரிசு நில மத்தியில் ஒரே ஒரு தைரிய முன்னோடியாக நின்றது அந்த வீடு எனும் கான்க்ரீட் பெட்டி. யாரோ ஒரு சாமர்த்தியசாலி மஞ்சள் கற்கள் பதித்து, மைசூர்பாகு போல் ப்ளாட் கீறி விற்றுவிட்டுப் போய் விட்டான். ரயில் பாதைக்கும் நெடுஞ்சாலைக்கும் இடையே அபத்திரமான 'நேரு நகர்'.

இரவில் மின்சார ரயிலில் போகும்போது, இந்த வீட்டின் ஹாலில் உள்ள டெலிவிஷன் கண் ஒளிர்வதைப் பார்க்கலாம். பகலில் ஒரு கணவன் மனைவியின் துவைத்த துணிகள் காற்றில் ஆடுவதைப் பார்க்கலாம்.


ஜெயராமனும் சுசீலாவும் அங்கு குடிபுகுந்த போது அத்துவானமாக இருந்தது. இப்பவும் விஸ்தாரம் இல்லை. அடுத்த வீடு அரை கி.மீ. போன் பேச ரயில் நிலையத்தைச் சுற்றிப் படர்ந்துள்ள மார்க்கெட்டில் உள்ள இரும்பு 'ஜாமான்' கடைக்குப் போக வேண்டும். இருமல் மருந்து கூட நாலு கிலோ மீட்டர்.

ஜெயராமன் தினம் தினம் ஏறக்குறைய குழந்தை சைக்கிள் போல இருக்கும் மோப்பெடு வண்டியில் ரயில் நிலையத்துக்குச் சென்று, 7:40 பாசஞ்சர் பிடித்து, மாம்பலத்தில் இறங்கி 11-ம் நம்பர் பிடித்து, அண்ணாசாலை காங்கிரஸ் கட்டடத்தருகில் இறங்கி, பைத்தியம் பிடித்த வாகனங்களின் ஊடே நடந்து பார்சன் காம்ப்ளெக்ஸ் வந்து, அதன் முதல் மாடியில் ஒரு கூரியர் கம்பெனியில் அசிஸ்டெண்ட் மானேஜராக உட்கார்கிறான்.

முதலாளி முஸ்லிம். 'காட்டாங்குளத்தூரில் கிளை ஆரம்பித்து, அதில் உன்னை மானேஜராகப் போடுகிறேன்' என்று சத்தியம் பண்ணிக் கொடுத்திருப்பதால், நாட்களை எண்ணிக் கொண்டு தினம் தினம் இந்த சிந்துபாத் பயணம்.

மனைவி சுசீலா அவன் புறப்பட்டதும் ஒரு செட்டு பாத்திரம் தேய்த்துக் கொள்வாள், டீ.வி.யில் 'விழுதுகள்' பார்த்துக் கொண்டே வீட்டைப் பெருக்கித் துடைத்து, துணி துவைத்து வெயிலில் உலர்த்துவாள்.

இதைப் பற்றித்தான் அடிக்கடி வாக்குவாதம்: ''எந்தப் பக்கத்



கொள்ளை



தில் உலர்த்தி னாலும் தினம் ஆயிரம் ஜனங்கள் என் உள்பாவாடையையும் உங்க பட்டா - பட்டி அண்டர்வேரையும் தரிசனம் பண்ணியாறது. என்ன மாதிரி வீட்டைக் கட்டிருக்கீங்க?''

"ஒரு வருஷம் கழிச்சுப் பாரு, ப்ளாட் வாங்கினவா எல்லாரும் வரப் போறா!''

"போன வருஷமும் இதையேதான் சொன்னீங்க,''

"இங்க ஒரு கார் பாக்டரி வரப் போறதா பேச்சு. அப்புறம் லேண்ட் வால்யு எகிறிப் போய்டும்.''

''ஒரு வருஷத்துக்குள்ள எனக்கு எகிறாம இருந்தா சரி. என்ன ஒரு அத்துவானம், தனிமை: எனக்குச் சில வேளையில 'சுயமரியாதை'யில வர்றவ மாதிரி முடியைப் பிச்சுக்கலாமான்னு தோண்றது.

"கொஞ்சம் சமாளிச்சுக்கோ. பாரு சுசி, இது நம்ம வீடு. இப்ப வித்தா விலை போகாது: ஏரியா டெவலப் ஆற வரைக்குமாவது காத்திருக்கணும்.''

"பேசாம வாடகைக்கு விட்டுட்டு, பழைய மாம்பலத்தில் எங்க சித்தி பொண்ணு பாத்துக் கொடுக்கறேன்னிருக்கா....''

"கொஞ்சம் பொறுமையா இரும்மா.''

"சேப்ட்டி வேற குறைச்சல். ஒரு நாயையாவது கொண்டு வாங்கோ. அதுக்கு பேன் பார்த்துண்டு பொழுது போகும்.''

"கேலி பண்றயா?'' என்று அவளை முறைத்தான்.

"இல்லை. நிஜமாவே சீரியசாவே சொல்றேன்'' என்று சிரித்தாள் சுசீலா.

"இல்லை, கேலி பண்றே!''

''புருஷனை மனைவி கேலி பண்ணுவாளோ! மனுதர்மம் என்ன சொல்லியிருக்கு?'' சுசீலா வசீகரமான பெண். எப்போதுமே

சுஜாதா

இது சரியா?

குர்ஆனின் குரல் ஜனவரி '97 இதழில் வந்த கேள்வி-பதிலில் –

எங்களூரில் கட்டும் பள்ளிவாசல் கட்டுமானப் பணிகளுக்காக மாற்று மதத்தினர்கள் பணமாகவும் சிமிண்ட் மூட்டைகளாகவும் தருகின்றனர். இவர்கள் கொடுக்கும் பணத்தையும், சிமிண்ட்டையும் பள்ளிவாசல் கட்டுமானப் பணிகளுக்காகப் பயன்படுத்தலாமா?

திருச்சி 17, ஆர். அப்துல் கஃபார்

மாற்றார்கள் பணத்தையும், சிமிண்ட்டையும் பெற்று பள்ளிவாசலில் கக்கூஸ் கட்டுவதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

– மதவெறிக்கு தினமொரு உயிர் பலியாகிற இந்நாளில் துவேஷங்களை வளர்க்கும் இது போன்ற கருத்துக்களைப் பரப்புவது சரியா?

– அண்ணா அன்பழகன்.

கொஞ்சம் வேடிக்கையாகப் பேசுவாள். பஸ்ஸில் ஆண்களை 'ஏம்பா இத்தனை இடம் இருக்கே... இடிச்சுண்டே நிக்கறியே, உங்களுக்கெல்லாம் கூடப் பொறந்த அக்கா, தங்கை இல்லையா?' போன்ற கேள்விகளையெல்லாம் கேட்டுத் திகைக்க வைப்பாள்.

ஜெயராமன் குன்றிப் போய், 'சுசி சும்மாரு. அவங்கள்ளாம் ரௌடிப் பசங்க. எங்கயாவது கழுத்தில கைல இருக்கறதை உருவிடுவான்.'

'உருவிப்புடுவானோ பார்க்கலாமே. போலீஸ் எதுக்கு இருக்கு?' என்பாள்.

மூன்று வருடக் கல்யாணம் அவள் பொலிவைப் போக்கவில்லை. கல்யாண ஆல்பத்தில் போலவே இப்பவும் இருக்கிறாள். வசதியுள்ள குடும்பத்தில் பிறந்திருந்தால் அமெரிக்க மாப்பிள்ளை கிடைத்து, இன்னேரம் கலிபோர்னியாவில் கார் ஓட்டி அங்கே யாரையாவது அதட்டிக் கொண்டிருப்பாள். நான்கு பெண்கள் உள்ள ஒரு ஆசிரியர் குடும்பம். ஜெயராமன் சம்பளத்தை அவர்கள் மிகைப்படுத்தி 'பெரிய ப்ரைவேட் கம்பெனியில மானேஜரா இருக்கார். எட்டாயிரம் ரூபாய் சம்பளம்' என்றெல்லாம் புளுகித்தான் கல்யாணம் நடந்திருக்கிறது.

இதெல்லாம் சுசீலாவுக்கு பொருட்டில்லை. கணவனைப் பேணுவதில் சந்தோஷி. காலையில் இரண்டு ரவா இட்லி வைத்து, டிபன் பாக்ஸின் தலையில் கைதுடைக்க துணியும் காய்ச்சின தண்ணீரும் கூடையில் வைப்பதில் அலாதி ஆனந்தி. வீட்டு வாசலுக்கு அழகழகாகக் கோலம் போடுவாள். விதம்விதமாக பூ வேலை செய்து தலையணை உறை மாற்றுவாள். பொழுதைத் தள்ள வேண்டுமே!

வீடுதான் சரிப்படவில்லை. எப்பவோ இருநூறு ரூபாய்க்கு என்று ப்ளாட் வாங்கிப் போட்டு, லோன் எடுத்து, செங்கல் செங்கல்லாகக் கட்டின வீடு. அதன் மேல் ஜெயராமனுக்கு ப்ரேமை!

"என்ன ஒரு காத்தோட்டம்! கார்த்தால எழுந்தா பட்சிகள் கேக்கலை?"

"எனக்கென்னவோ லாரிகள்தான் கேக்கறது."

"இன்னும் ஒரு வருஷம் கழிச்சுப் பாரு, இந்த நேரு நகர்ங்கறது மாம்பலம் ரங்கநாதன் தெரு மாதிரி டெவலப் ஆய்டும்" என்றான்.

அந்தப் பொன்னாள் வரத்தான் இருவருக்குமே ஏக்கம்.

நிற்க.

ஊருக்கு வெளியே இருக்கும் தனியான வீடுகளில் திருடவென்றே ஒரு 'ஸ்பெஷலிஸ்ட்' கொள்ளைக் கூட்டம் உண்டு. இதுவரை முப்பத்து நாலு கொள்ளைகளை நிறைவேற்றியவர்கள். அதன் தலைவன் பெயர் அனந்தா. அவனுக்கு சகா பீட்டர், பக்கிரி, முஸ்தாக் என்று எல்லா மதத்துக்கும் உதாரண புருஷர்கள்.

குறிக்கோள் இந்த மாதிரி தனியான வீடுகள்தான். முதலில் பழைய பேப்பர்காரன் போல வந்து விசாரிப்பார்கள். ஒருநாள் தேர்ந்தெடுப்பார்கள். வீட்டில் உள்ளவர்களை முடிந்தால் அறையில் அடைத்து விட்டு தலையணைக்கு அடியில், சாமி படத்தருகில், அரிசிப் பானைக்குள் சாவி இருக்கிறதா என்று துழாவிப் பார்த்துவிட்டு, சாவி கிடைத்தால் சரி, இல்லை ஒரு ஜமக்காளத்தை விரித்து, இரும்பு அலமாரியைக் குப்புறப்படுக்கப் போட்டு (பின் பக்கத்தில் எப்பவுமே தகடு பத்தலா இருக்கும்) நெம்புவான். திறக்காத அலமாரிகள் இல்லை. நகைகளை மட்டும் எடுத்துக் கொள்வார்கள். ரூபாய் இருந்தால் ரூபாய். டீவி, பிரிட்ஜ் வி.சி.ஆர். எல்லாம் தொட மாட்டார்கள். வீடு காலியாக இருந்தால் குளித்து விட்டுப் போவார்கள். டீ போட்டுக் கொள்வார்கள். அவசரப்படாமல் திருடுவார்கள், பல்லுக்கு நடுவில் பழைய எம்.ஜி.ஆர். பாடல்களை விசிலடித்துக் கொண்டு. பெரிய சாமான்கள் எடுத்துப் போக தொந்தரவு. டெம்போ வேண்டும். நகை, நோட்டு வெள்ளிப் பாத்திரம் என்றால் ஒரு சைக்கிள் போதும். அல்லது நெடுஞ்சாலை வரை நடந்து போய் லாரி ஏறி அடுத்த அச்சரப்பாக்கமோ, மறைமலை நகரோ சென்று அ


“பரிசை மாமியாருக்குத் தரப் போகிறேன்!”

பன்னிரண்டாயிரம்; அதுவும் நகை! இத்தனை பெரிய அதிர்ஷ்டம் தம் வீட்டுக் கதவைத் தட்டி, “உள்ளே வரலாமா” என்று கேட்டதும், திருமதி ராஜீவி நரசிம்மன் ஏகமாக சந்தோஷித்தார். கணவர் மகாராஷ்டிராவின் போஸ்ட் மாஸ்டர் ஜெனரல்.

இந்தப் பரிசை இவர் என்ன செய்யப் போகிறார் தெரியுமா? சாதாரணமாக எல்லோரும் தமக்கென்றோ, அல்லது மகளுக்கோ, தாய்க்கோ, மிஞ்சிப் போனால் மருமகளுக்கோ தானே கொடுப்பார்கள்? ஆனால் இவர், மாமியாருக்குக் கொடுக்கப் போகிறாராம்!

“என் மாமனார் – மாமியாருக்கு வருகின்ற ஜூலையில் சதாபிஷேகம் நடக்க இருக்கிறது. என் மீது தாயைப் போல் அன்பு செலுத்தும் மாமியாருக்கே இந்தப் பரிசை அன்புக் காணிக்கையாக்க விரும்புகிறேன். கூப்பன் முறையில் பரிசு வழங்கப்பட்டால், சிறு தொகையை திருப்பதி சுவாமிக்குக் காணிக்கையாக்கிவிட்டு, மீதத்தில் மாமியாருக்கு வளையல்கள் வாங்க விருப்பம்; இறையருளால் எண்ணம் ஈடேற வேண்டும்!'' என்கிறார் உணர்ச்சிப்பெருக்குடன்.

முன்னொரு காலத்தில் மதுரை காலேஜில் லெக்சரராக இருந்த ராஜீவியின் எம்.ஏ. சைக்காலஜி படிப்பு, போட்டியில் வெற்றி பெற உதவியிருக்கிறது. ‘‘ஒரு பெண்ணின் மனதை இவ்வளவு தத்ரூபமாக படம்பிடித்துக் காட்ட ஒரு பெண்ணால் தான் முடியும் என்பதை நானும் என் மாமியாரும்



* ராஜீவி நரசிம்மன்

ஊகித்து விட்டோம். கதையுடன் அப்படியே ஒன்றி விட்டோம். அனுராதா ரமணனை என் மாமியார் கரைத்துக் குடித்திருக்கிறார். சிவசங்கரி, வாஸந்தி போன்றோரின் எழுத்துக்களும் எங்களுக்கு நிரம்பப் பரிச்சயமானவை; இவர்கள் யாருடைய நடையையும் ஒத்துவராத புதுமையான நடைதான் சீதா ரவியை அடையாளம் காட்டியது” என்கிறார்.

மும்பையிலிருந்து : ஜெயஸ்ரீ ராஜ்

கிருந்து ஆவியாகி விடலாம். அடுத்த கொள்ளை வரை.

“ரெண்டு பேர் போதும் குரு. பகல்லயே முட்சுரலாமா? சின்ன வூடுதான்.”

“முஸ்தாக் எப்பனாச்சியும் பகல்ல திருடியிருக்கானா, புச்சா சொல்றியே?”

“ராத்திரிலன்னா அவுங்க தனி ரூம்ல தூங்கிட்டுருப்பாங்கடா. அப்படியே கதவு சாத்திரலாம். சத்தம் போட மாட்டாங்க. ரத்த சேதம் வேண்டாம்.”

“சரி சரி வூடு எப்படி?”

‘‘சரியா...ன முளுக்கோளிம்மா. புருசம் பெஞ்சாதி இரண்டு பேர்தான்.”

‘‘தினம் மொபெட் குதிச்சுக் குதிச்சு போறான். போன் எதும் கெடையாது. வேலைக்காரங்க கெடையாது. ராத்திரி பூரா துணி தொங்குது. பத்தரை மணிக்கு வெளக்கு அணைச்சுர்றாங்க. என்ன இன்னி ராத்ரி முட்ச்சுரலாமா?”

“ஆளு எப்படி இருக்குறான்?”

‘‘பாத்தேன். வத்தக் குச்சி மாதிரி இருக்குறான்.”

“நாய்?”

“பூச்சி நாய் ஒண்ணு சுத்துது. எதும் ப்ராப்ளம் இல்லை. ஒரு லேக்கா உருண்டை போதும்.”

“பொண்ணு?”

“சிவப்பா இருக்குது.”

“சிவப்பா, அழகாவா?”

‘‘இதான வாணாங்கறது. திருட்டையும் மத்த சமாசாரத்தையும் ஜாயின் பண்ணாதேன்னு குருநாதர் சொல்லிருக்காரு. அதுக்கி தெண்டனை தனியா குடுப்பாங்க.”

“ராத்திரி டீக்கடையாண்டை வா.”

‘‘இன்னிக்கு பேப்பர் போடறீங்களான்னு ஒருத்தன் வந்து விசாரிச்சுட்டு போனான். ரொம்ப நாளைக்கப்புறம் ஒரு வேத்து மனுசன். ஆனா அவனைப் பாத்தா பேப்பர்காரனா தோணலை. எதுக்கும் ஞாயிற்றுகிழமை வான்னு சொன்னேன்.”

“நான் இல்லாத போது யாராவது வந்தா, கதவைத் திறக்கவே திறக்காதே சுசி.”

இங்க யாரும் வரதே இல்லை. கடவுளே மறந்து போன இடம் இது.”

‘‘சும்மா சும்மா அதையே சொல்லிண்டு

இருக்காதே. ஒரு வருஷத்தில இம்ப்ரூவ் ஆய்டும்னு சொன்னா நம்பு. எல்லா காலனியும் இப்படித்தான் ஆரம்பிச்சுது. வெள்ளைக்காரன் காலத்தில சிந்தாதிரிப்பேட்டையில நரி ஓடுமாம்."

"நரி இல்லை, எலி ஓடறது."

"போலீஸ் அவுட்போஸ்ட் கூட வந்திருக்கு."

"அங்கதான் சாராயம் காச்சறாளாம், பத்திரமா."

"எதாவது சொல்லாதே."

அன்று இரவு வழக்கம் போல் ந்யூஸ் பார்த்துவிட்டு விளக்கணைத்துப் படுத்தார்கள். நெடுஞ்சாலை லாரிகள் இரவுப் பயண உறுமல்களைத் தொடங்கியிருந்தன. லாரி சப்தம் பழகிப் போன ஜெயராமன் ஓரிருமுறை சுசீலாவை சீண்ட முயற்சித்து விட்டு ("இன்னிக்கு வேண்டாமே. ரதசப்தமி") படுத்த பத்தாவது நிமிஷம் முழு நித்திரையில் ஆழ்ந்தான். சுசீலாவும் திரும்பிப் படுத்துக் கொண்டு விட்டாள்.

அவர்கள் உறங்கிய பெட்ரும் என்று சொல்லப்பட்ட பத்துக்குப் பன்னிரெண்டு அறையின் ஒரு பகுதியை இடைஞ்சலாக அலமாரி அடைத்துக் கொண்டிருந்தது. அருகே சுவருடன் பதிந்த அலமாரியில் சுவாமி படம், இயற்கை மருந்து புத்தகங்கள், சுருட்டி வைக்கப்பட்ட தையல் கிளாஸ் சான்றிதழ் போன்றவை இருந்தன.

சுசீலாவுக்கு அந்தச் சப்தம் தெளிவாகக் கேட்டது. காலடி சப்தம். வெளியே சரளைக் கற்களில் செருப்பு உரசும் சப்தம்.

மெல்ல தன் கணவனை எழுப்பினாள்.

"என்ன சுசி?"

"ஷ்ஷ், கேக்கறதோ உங்களுக்கு?"



"முட்டை போடும் உயிரினங்கள் மூன்று கூறு?"

"கோழி, வாத்து, வாத்தியார்."

- நீடா. சி. இளஞ்செழியன்

"என்ன?"

மெதுவா பேசுங்கோ. யாரோ வீட்டுக்கு வெளில நடக்கறா."

இப்பொழுது கதவை மெல்ல முயற்சிக்கும் சப்தம் கேட்டது.

"போய்ப் பாருங்கோ."

"இருடி."

"யாரு? யார்றாது" என்று அதட்டலாகக் கேட்டாள்.

ஜெயராமன் மருண்டான். "சும்மாரு. கத்தி கவடா வெச்சிருப்பான்."

"என் பேரு பீட்டர்! கதவைத் திறங்க."

"என்ன வேணும்?"

"குடிக்கத் தண்ணி."

இவர்கள் பேசிக் கொண்டிருக்க, கதவு இன்னும் தீவிரமாக அசைக்கப்படுவது கேட்டது.

"திறக்காதீங்கோ."

"இப்ப கதவைத் திறக்கப் போறியா உடைக்கட்டுமா?"

"போலீசுக்கு போன் பண்ணிருக்கேன் வந்து சுட்டுருவா" என்றான் ஜெயராமன்.

"போனும் இல்லை ஒரு.... ம் இல்லை. தெரியும்."

"கெட்ட வார்த்தை பேசறான்" என்று கணவனை பீதியுடன் பார்த்தாள். "இவன் குரல் கேட்ட மாதிரி இருக்கு."

அருகே இருந்த கிரிக்கெட் மட்டையை எடுத்து அவனிடம் கொடுத்தாள்.

"இது எதுக்கு?"

"உள்ள வந்ததும் மடேல்னு ஒண்ணு போடறதுக்கு. இருங்கோ. உள்ள போய் இலுப்பகரண்டியை எடுத்துக் கொண்டு வருகிறேன்."

"பைத்தியம் மாதிரி ஏதாவது பண்ணாதே. செவிட்டுல அறைஞ்சான்னா நமக்கெல்லாம் தாங்காது. முரட்டுப் பசங்க."

"பாரும்மா, உங்கய்யா பேர் என்ன?"

"ஜெயராமன்."

"பேர் சொல்லாதரி முண்டம்!"

"செயராமா, மண்டையில எதாவது மசாலா இருந்தா திற! நொச்சுட்டுன்னு விழுந்தா பத்து மணி நேரம் ஆகும். முழு நெனைப்பு வர. இப்படி அடி வாங்க இஷ்டமா, தொறக்க இஷ்டமா?"

"சுசி நீ போய் அந்த ரூம்ல கதவைச் சாத்திக்கோ, இல்லை கொல்லைப்புறமா ஓடிப் போய்டு. எங்கயாவது எக்குத்தக்கா வீசிடுவான்!"

"எதுக்கு?"

"திறக்கப் போறேன்!"

"திறங்கோ. யாருன்னு பார்க்கலாம்!"

அவர்கள் திறப்பதற்குத் தேவையின்றி கதவு உடைந்து தாழ்ப்பாள் பிய்த்துக்கொண்டு விழுந்தது.

உள்ளே முதலில் நுழைந்தவன் தன்

சகாவை அனுமதித்துவிட்டு கதவைச் சாத்தினான்.

"நீ பேப்பர்காரன் இல்லையோ?"

"இல்லை" என்று சிரித்தான் அவன். 'மான் ஹாட்டன்' என்று எழுதியிருந்த பனியன் அணிந்திருந்தான். தலையில் கர்ச்சிப் கட்டியிருந்தான். மொசமொசவென்று ரோமங்கள், கரடி மாதிரி சகல இடங்களிலும். தோள் பட்டையில் கூட ரோமங்கள்.

"அடப்பாவி, பேப்பர்காரன்னு சொல்லி... நாசமாப் போறவனே..."

"ஏய் அவனோட என்னடி பேச்சு! என்னப்பா, என்ன வேணும்? வாட் டு யூ வாண்ட்?"

பின்னால் வந்தவன் ஆகிருதியாக இருந்தான். பெல்ட்டிலிருந்து அரை கட்டப்பாரை போன்ற வஸ்துவை எடுத்தான்.



க

னடாவில் ஓர் ஏரியில் தூண்டிலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தார் ஒருவர். மிகப் பெரிய மீன் அகப்பட்டது. தூண்டிலை கஷ்டப்பட்டு வெளியே இழுத்து, மீனைக் கரையில் போட்டார். அதன் அருகிலேயே அவருடைய துப்பாக்கி இருந்தது.

மீன் முற்றும் சாகாததால் இப்படியும் அப்படியும் துள்ள, அதன் வால் துப்பாக்கி விசையைத் தட்டி விட்டது. தோட்டா நேரே அந்த மனிதரின் மீது பாய்ந்து அவரை எமலோகத்துக்கு அனுப்பி விட்டது!

தகவல் : நெல்லை. வி. சிவா

சுசீலா கூக்குரலிட்டாள்.

"கூவாத கண்ணு. எதும் செய்ய மாட்டோம். பீரோ சாவி எடுத்துக் கொடுத்துரு."

"பீரோ சாவி எங்கருக்கு? எடுத்துக் கொடுத்துரு" என்றான், இரண்டாமவன்.

மார்முடியன் கிச்சன் பக்கம் சென்று உருட்டினான். வெளியே வந்தான். "உங்க அம்மா வெள்ளியில எதும் செய்து போடலையா கண்ணு?"

"ஒரே ஒரு தம்ளர்தான் இருக்கு" என்றான் ஜெயராமன்.

"இந்த வீட்டில உங்களுக்குத் திருடறதுக்கு எதுமே இல்லைப்பா."

"அதான வேணாங்கறது. பீரோல என்ன வச்சிருக்கே?"

"ஒண்ணு ரெண்டு டாக்குமெண்ட்ஸ்."

"துணி, புடைவை" என்றாள் சுசீலா.

"தெறந்து காட்டிரேன்."

"எதுக்காகத் திறக்கணும். நாங்க கஷ்டப்பட்டு சம்பாதிச்ச பொருள்கள் இது. உனக்கு எதுக்காகக் கொடுக்கணும்?"

"சுசி சும்மாரு. அவனோட பேச்சே வேண்டாம். எல்லாரும் பாதகங்க."

"நீங்க சும்மாருங்க."

"அசட்டு தைரியமா எதாவது பேசாதே. சாவியைக் கொடுத்துரு."

"கொடுக்க மாட்டேன்" என்றாள்.

"ஏம்மா லொள்ளு பண்ற? அடி வாங்கணுமா?"

"கொடுக்காட்டா என்ன, தெறக்கத் தெரியாதுன்னு நெனைச்சியா? என்ன கொஞ்சம் பத்து நிமிஷம் அதிகமாகும்."

"நீங்க பண்றது அநியாயம். பகவானுக்கே பொறுக்காது."

"இத பார்றா டைலாகு. இந்தாம்மா, ரத்தம் சிந்தாம திருட வந்திருக்கோம். எதுக்கு டென்ஷன் பண்றீங்க எங்களை?"

"சுசீ" என்று அவளைக் கடுமையாக அதட்டினான். "இத பாருப்பா... நீங்க என்ன வேணா எதை வேணா எடுத்துக்கங்க. எங்க ரெண்டு பேரையும் சேதப்படுத்தாம!"

"அதான் உத்தமம். பாருங்க ரெண்டு பேரும், அது என்ன ரூம் சமையக்கட்டா. உள்ள போய்க் கதவைச் சாத்திக்கங்க. உள் பக்கத்தால சாத்திக்கங்க. எதையும் கண்டுக்காதீங்க. பதினஞ்சு நிமிஷத்தில வேலையை முடிச்சுட்றோம்."

"தலைவலி மாத்திரை இருக்குதாம்மா, பொளக்குது."

"உன் தலை" என்றாள்.

அவன் அவளை முறைத்தான்.

"சுசீ அவன் கூட ஆர்க்யூ பண்ணாதே. தே ஆர் ரூத்லஸ். எதாவது செஞ்சா உயிருக்கு ஆபத்து வந்துரும். அலமாரிலயே அனாசின் இருக்குப்பா. எடுத்துக்கங்க."

"இந்தாளுதாம்பா கரிகிடானவரு. நெல்லவரு. புத்திசாலி!"

அவனை விரோதமாகப் பார்த்தாள்.

"உள்ள போங்கறேன், சும்மா சும்மா முறைச்சுக்கிட்டு" என்று அவள் தலையில் லேசாக தன்னிடம் இருந்த ஸ்க்ரூ ட்ரைவரால் தட்டினான்.

"பாவி" என்று தலையைப் பிடித்துக் கொண்டாள்.

"சொன்னேன் பாத்தியா. முரட்டுப்பசங்க, கொலைபாதகங்க. அவங்களோட போய் பைத்தியம் மாதிரி வாக்குவாதம் பண்ணிண்டு.

நீ பண்றதே ரொம்ப ரொம்ப ரிஸ்க்கு. நீ வான்னா."

சமையல் அறைக் கதவைத் திறந்து, அவளுடன் உள்ளே சென்று, கதவை சாத்திக் கொண்டான். சுசி தலையைப் பிடித்துக் கொண்டாள்.

"அசட்டு தைரியத்தில் எதாவது செஞ்சா அடிச்சு நொறுக்கிடுவான். எதை வேணா எடுத்துண்டு போகட்டும் சனியன் நம்ம ரெண்டு பேரையும் உயிரோட விட்டா சரி. பெருமாளை வேண்டிக்கோ."

"பொட்டக் காட்டில கொண்டு வீட்டைக் கட்டினா இப்படித்தான்."

"அலமாரில என்ன இருக்கு?" என்றான் ரகசியமாக.

"என் நகை எதும் இல்லை" என்றாள் இன்னும் மெல்ல.

"எங்க வெச்சிருக்கே?" என்றான் இன்னும் ரகசியமாக. அவன் சகல பாகங்களும் தனித் தனியே நடுங்கின.

"இருக்கறதெல்லாம் பச்சைக் கல் செட் ஒண்ணுதான். அதும் டெம்பிள் ஜொல்ரி."

"மத்ததெல்லாம்?"

"எல்லாம் அரிசிப் பானைக்குள்ளயும் மொளகா டப்பிக்குள்ளயும். கொஞ்சம் கொஞ்சம் அழுக்குக் கூடைல வெச்சிருக்கேன். இந்த மாதிரி ஏதாவது திருட்டு வரும்னு எனக்குத் தெரியும்."

வெளியே பீரோ கதவைத் திறக்கும் சப்தம் கேட்டது.

"ஏன் பிரதர், இவ்வளவுதான் நகைங்களா?" என்று இரைந்து கேட்டான்.

"ஆமாம்பா. மத்ததெல்லாம் லாக்கர்ல வெச்சிருக்கோம்.

"இந்த ஜுஜ்பி நகைங்களுக்காகவா பஸ்ஸைப் பிடிச்சு, ரயில புடிச்சு வந்தோம்... ஒரு லிட்டர் சாராயம் கூட வாங்க முடியாது போலிருக்கு!"

"பாரு பீட்டர், ஐயருங்கல்லாம் சாமர்த்தியக்காரவங்க. இப்பலாம் அலமாரில நகைங்களை வெக்கறதில்லை. அரிசிப் பானை, அளுக்கு கூடை, இப்படித்தான் வெப்பாங்களாம். பத்திரிகைல போட்டிருந்தது!"

அவர்கள் அரிசி டிரம்மை உருட்டும் சப்தம் கேட்டது. சுசீலாவின் முகம் சுருங்கியது. "கண்டுபிடிச்சுருவா. என் கல்யாணத்துக்குப் போட்ட அத்தனை நகையும்... வைரத்தோடு எட்டுக்கல் பேசரி, மூக்குத்தி..."

"போனாப் போறதுரி முண்டம்! புலம்பாம இரு. புதுசா வாங்கி கொடுத்துர்றேன்."

"கிழிச்சேள்" என்று கண்ணீர் விட்டாள்.

"லாக்கர் வாங்குங்கோன்னு அடிச்சுண்டேன்."

"பேசாம இரு. இப்ப நகை முக்கியமில்லை. உயிர்தான் முக்கியம்."

அப்போதுதான் அவள் அதைப் பார்த்தாள்.

மிளகாய்ப் பொடி இடிப்பதற்காக உரலும் இரும்பு உலக்கையும் இருந்தது.

மொத்தமாக வலுவாக இருந்தது.

"என்னடி பார்க்கறே?" என்றான் ஜெயராமன் பதற்றத்துடன்.

அவன் 'ஏய்ஏய்' என்று தடுத்ததைப் பொருட்படுத்தாமல் அவள் அந்த உலக்கையை எடுத்துக் கொண்டு கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்றாள்.

"பைத்தியம் சுசீ! சுசீ பைத்தியம்!"

ஜெயராமன் அந்தக் காட்சியைப் பார்க்க விரும்பவில்லை. அவள் அறைக்கு வெளியே என்ன செய்தாள் என்று பார்க்க தைரியமில்லாமல், "போச்சு போச்சு, ரெண்டு பேரையும் வெட்டி சாய்க்கப் போறான்!" என கட்டிலடியில் ஒளிந்து கொண்டான்.

மௌனம்... மிக மிக நீண்ட மௌனம். ஒரு வாரம் போல் இருந்தது.

பாதி திறந்த கதவு வழியே திடும் திடும் என்று சப்தம் கேட்டது. மேசை உருளும் சப்தம் கேட்டது. கண்ணாடி உடையும் சப்தம். பாத்திரம், தட்டு விழும் சப்தம்.

மறுபடி மௌனம். ஜெயராமன் சர்வநாடியும் அடங்கிப் போய், கட்டிலுக்கடியில் மார்பைப் பிடித்துக் கொண்டு மூச்சு விடக் கூட தயங்கிக் காத்திருந்தான்.

மெல்ல மெல்ல காலடி கீழே இருந்து தெரிந்தது. சுசீலாவின் அழுகுரல் கேட்டது.

"எங்க ஒளிஞ்சுண்டிருக்கீங்க! வெளில வாங்கோ!"

"என்னடி?"

"என்னது, இப்படி போய்ப் பயந்துண்டு!" என்றாள் விசும்பல்களுக்கு இடையே. அவன் மார்பு படபடத்து வேர்வையில் குளித்திருந்தான்.


அவள் தலை கலைந்திருந்தது. கையில் உலக்கை இன்னும் பாக்கியிருந்தது. அதன் முனையில் ரத்தக்கறை தெரிந்தது.

"ப்ளாஸ்டிக் வாளில கோதுமையை ரொப்பியிருந்தேன். ரெண்டு பேரும் மும்முரமா அதைத் துழாவிண்டிருந்தா. பின்னால போய் இவன் மண்டைல ஒண்ணு, அவன் மண்டைல ஒண்ணு. அப்படியே சப்தநாடியும் ஒடுங்கிப் போய் கீழே விழுந்துட்டான்! அவன் நான் அடிப்பேன்னு எதிர்பார்க்கவே இல்லை. என்னைப் பார்த்துச் சிரிச்சான்!"

ஜெயராமன் வெளியே வந்தான்.

"அய்யய்யோ செத்துப் போய்ட்டானா?"

"மயக்கமா இருக்கான். புஸ்ஸுன்னு மூச்சு கேக்கறது பாம்புக்குட்டியாட்டம். நீங்க என்ன பண்றீங்க, வேகமா மொபெட்டை எடுத்துண்டு பக்கத்தில் இருக்காளே, அவாத்தில முரளின்னு



ஓடாத கடிகாரம்!

ரஷியப் பிரதமராக இருந்த குருசேவ் கோபம் வரும்போதெல்லாம் தம் கைக் கடிகாரத்தைக் கழற்றி மேஜை மீது ஓங்கி அடித்துக் கூச்சலிடுவாராம். அதிகாரிகள் வெலவெலத்துப் போவார்களாம்.

ஒருமுறை பிரெஞ்சு அதிகாரி ஒருவர் குருசேவுடன் உரையாடிக் கொண்டிருக்கும் போது, அந்தக் கைக்கடிகாரத்தை வாங்கிப் பார்த்தார். அடடா, என்ன வியப்பு! இயந்திரமே பொருத்தப்படாத – ஓடாத கடிகாரமே அது! குருசேவ் தம் ஆத்திரத்தின் கடுமையைக் காட்டுவதற்காகத் தந்திரமாய் அதைப் பயன்படுத்திக் கொண்டிருந்தார்.

– உவகையூட்டும் உலக நிகழ்ச்சிகள் நூலிலிருந்து : கே. ஏ. காளிமுத்து

ஒரு காலேஜ் பையன் இருக்கான். அவன்கிட்ட சொல்லி, போலீஸ் அவுட் போஸ்டுக்கு தகவல் சொல்ல ஏற்பாடு பண்ணிட்டு வாங்கோ!"

"அதுக்குள்ள எழுந்துட்டாளா?"

"பாத்துண்டே இருக்கேன். இன்னொண்ணு போடறேன்" என்றாள்.

காலை பத்து மணிக்கு அந்த வீட்டில் கூட்டமாக நிருபர்கள் நிரம்பியிருந்தார்கள். நடுவே தகர நாற்காலிகள் போட்டு இன்ஸ்பெக்டரும் ஜெயராமனும் உட்கார்ந்திருக்க, சுசீலா நிலைப்படியருகில் நின்று கொண்டிருந்தாள். தனியார் டீவிகாரர்கள் விளக்குக்குக் கனெக்ஷன் தேடிக் கொண்டிருக்க, புகைப்படர்கள் வீட்டை வெளியேயும் உள்ளேயும் அத்தனை கோணத்திலும் படம்பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

"முப்பத்து நாலு கொள்ளை செஞ்சவங்களை பிடிச்சுட்டமா, டிஜிபியே போன் பண்ணி எங்களுக்கு வாழ்த்துக்கள், சொன்னாருங்க."

"நல்ல அடியாமே அவங்களுக்கு?"

"ஆமாம்! தாலுக்கா ஆஸ்பத்திரில சேர்த்திருக்கோம். உயிருக்கு ஆபத்தில்லை. குணமானதும் நாலு... இன்டராகேஷன் பண்ணாகாங்ல மத்த பேரையும் புடிச்சுருவோம். எத்தனை தண்ணி காட்டிருக்காங்க தெரியுமா, இந்த ஆனந்தன் காங்கு?"

"எப்படிங்க அகப்பட்டாங்க?"

"எல்லாம் இவங்க சமயோசிதமா நடந்துக்கிட்டதால!"

அனைவரும் ஜெயராமனைப் பார்த்தார்கள். "மிஸ்டர் ஜெயராம் என்ன நடந்ததுன்னு உங்க கோணத்திலருந்து சொல்ல முடியுமா?"

ஜெயராமன் இரண்டு முழங்காலிலும் இரண்டு கை பதித்து நிதானமாகப் பேசினான்.

"ராத்திரி பத்து மணிக்கு விளக்கணைச்சுப் படுத்துட்டோம். பத்துப் பதினஞ்சு நிமிஷத்துல சரளைல நடக்கற மாதிரி சப்தம் கேட்குது. கதவைத் தட்டினாங்க. யாருன்னு கேட்டா குடிக்க தண்ணி வேணுங்கறான். அப்புறம் அதட்டலா கதவைத் திற. இல்லாட்டி உடைப்பேன்னாங்க."

"உடச்சிருக்காங்க" என்றார் இன்ஸ்பெக்டர். "இதோ பாருங்க!"

"உள்ளே வந்ததும் பீரோ சாவி கேட்டான். நான் எதும் ஆர்க்யூ பண்ணாம கொடுக்கச் சொல்லிட்டேன். ஆயுதம் வெச்சிருந்தாங்க பாருங்க! ரெண்டு பேத்தையும் சமையலறையில் தள்ளி உள்ள கதவைச் சாத்திக்கச் சொன்னாங்க."

"அதான் அவங்க பண்ண ஒரே தப்பு."

"அவங்க பீரோவை திறந்து தேடிப் பார்த்திருக்காங்க. அதிகம் நகை கிடைக்கலை. அப்புறம் ப்ளாஸ்டிக் பக்கெட்ல 'தனியா' கொட்டிருந்தோம். அதைத் துழாவினாங்க.

"அப்பதான், இவ வந்து மிளகா, இடிக்க உரலும் உலக்கையும் கிச்சன்ல வெச்சிருந்ததைப் பார்த்தா. உடனே என்ன பண்ணா..."

சுசீலா அவசரமாகக் குறுக்கிட்டு, "உடனே இவர் என்ன பண்ணார், உலக்கையை எடுத்துண்டார். ஏதோ சூரசம்ஹாரம் மாதிரி, நான் வேண்டாம் வேண்டாம்... கிட்ட போகாதீங்கோ. அவாள்ளாம் முரடான்னு சொல்லச் சொல்ல கேக்காம, கதவைப் படேர்னு திறந்துண்டு மடேர்னு அவா ரெண்டு பேரும் திரும்பிப் பார்க்கறதுக்குள்ளேயே இவன் தலைல ஒண்ணு, அவன் தலைல ஒண்ணுன்னு போட்டார் பாருங்கோ, ரெண்டு பேரும் ஸ்தம்பிச்சுப் போய் அப்படியே சுருண்டு விழுந்துட்டா!"

"அவன் இந்த மாதிரி மிடில் கிளாஸ் ஆசாமி எதிர்ப்புத் தெரிவிப்பான்னு எதிர்பார்க்கவே இல்லைங்க. அதான் அசால்ட்டா இருந்துட்டான். இருந்தாலும் உயிரைத் துச்சமா மதிச்சுச் செஞ்சது மிக தைரியமான காரியம்" என்றார் இன்ஸ்பெக்டர்.

"ரிமார்க்கபிள். கை குடுங்க!"

அந்த நிருபர்கள் அனைவரும் ஜெயராமனைக் கைகுலுக்க, அவன் இடுப்பு வேஷ்டியைச் சரிபண்ணிக் கொண்டு, சுசீலாவைப் பார்த்த பார்வையை எந்த எழுத்தாளனாலும் வருணிக்க முடியாது.

1 2 3 4 5 6 7 8 9 10 11 12 13 14 15 16 17 18 19 20 21 22 23 24 25 26 27 28 29 30 31 32 33 34 35 36 37

குறையொன்றுமில்லை

சீதா பிராட்டி ராமனைப் பார்த்து ஒரு வார்த்தை சொன்னாள்:

"என்னைக் காட்டுக்கு அழைத்துக் கொண்டு போக மாட்டேன் என்கிறீர்களே... காட்டிலே சிங்கம் இருக்கும், புலி இருக்கும் - வேண்டாம் என்கிறீர்களே? சிங்கத்திடமிருந்தும் புலியிடமிருந்தும் என்னைக் காப்பாற்ற முடியாத அல்ப வீரியரா நீங்கள்...? சரி. போகட்டும்! அதனால் நானொன்றும் உங்களைத் தவறாக எண்ண மாட்டேன். என் தந்தைதான் உங்களைத் தப்பாகப் புரிந்து கொள்வார்..."

மாமனார் எதிரில் கௌரவமாக, பிரகாசமாக இருக்க வேண்டும் என்கிற எண்ணம் மாப்பிள்ளைக்கும் இருக்காதா! மாப்பிள்ளை உயர்வாய் இருக்க வேணும் என்கிற எதிர்



டும் பகவான் ஜகன்னாத பெருமாள், சிலா ரூபமாக இல்லாமல் ஒரு கட்டை வடிவத்திலே இருக்கிறார். இதற்கு ஒரு கதை:

பகவானுக்கு முதலில் பூமாதாவோடுதான் கல்யாணம் ஆயிற்று. பரமசிவன் பார்வதியோடு வந்து தம்பதியை விருந்துக்கு அழைத்தாராம்.

கல்யாணமானவுடன் விருந்துக்கு அழைக்கும் பழக்கம் அப்போது ஆரம்பித்ததுதான்!

பூமாதேவியைப் பார்த்து, "போகலாமா?" என்கிறார் பகவான். அவள் சொல்கிறாள்: "நீங்கள் போகும் இடத்துக்கெல்லாம் என்னால் கூடவே வர முடியாது! அசலா (அசையாதவள்) என்று பெயர் அல்லவா எனக்கு! உங்களோடு நான் வந்தால் இந்த சராசரங்கள் அத்தனையும் என்னாவது! நீங்கள் போய் வாருங்கள். என்னால் வர முடியாது!"

பரமாத்மா எல்லா இடங்களுக்கும் தனியாகவே போய் வருகிறான். அவனுக்கு அது ரொம்பவும் வெட்கத்தை அளித்ததாம். போகும் இடத்திலெல்லாம் 'பத்னி எங்கே?' என்று கேட்டால் பதில் சொல்ல முடியவில்லை.

அதனால் சமுத்திர ராஜனின் மகளான லக்ஷ்மியை இரண்டாம் கல்யாணம் செய்து கொண்டான் பரமாத்மா.

என்ன ஆயிற்று...? மஹாலக்ஷ்மி ஓர் இடத்தில் தங்காமல் ஓடிக்கொண்டேயிருந்தாள். பகவானால் அவளோடு சேர்ந்து ஓடமுடியவில்லை. மூச்சு வாங்கியதாம்.

'போதும் கல்யாணம்' என்று தீர்மானத்துக்கு வந்து, பிள்ளையினிடத்திலே சில நாள் போய் இருக்கலாம் என்று கிளம்பினானாம். பிள்ளை என்றால் மன்மதன்.

மன்மதனிடத்திலே போகும்போது எதிரே ஒருத்தர் வந்தாராம். 'இப்போதுதான் மன்மதன் பரமசிவனிடத்திலே அபசாரப்பட்டு, அவனுடைய நெற்றிக்கண்ணுக்கு ஆளாகி பஸ்மமாகிப் போனான்!' என்று செய்தி சொன்னாராம்.

பகவானுக்குப் புத்ர சோகம் தாள முடியாமல் போய் விட்டதாம். மாமனார் கிரஹத்தில் போய் ஆறுதல் தேடலாம் என்று பார்த்தாராம். மாமனார் கிரஹத்துக்குப் பத்தினியை அழைத்துக் கொண்டு போனால் கௌரவம்... ஆனால் இவன் நிலை வேறாக இருந்தது. இருந்தாலும் பரவாயில்லை என்று புறப்பட்டுப் போனானாம்.

சமுத்திர ராஜனிடம் போனால், பெரிய அலை ஒன்று அடித்து பகவானைத் தூக்கித் தள்ளி விட்டதாம். 'உள்ளே நுழையும் முன்பே இந்த மரியாதை! இன்னும் உள்ளே போனால் என்ன நடக்கும்' என்று வருத்தப்பட்டுப் பின் வாங்கினான் பகவான்.

சற்று படுத்து ஓய்வெடுக்கலாம் என்று



''தலைவரே, உங்களுக்கு டாக்டர் பட்டம் தருவாங்கன்னு எதிர்பார்த்தீங்களா...?''

''முட்டாள்! என்னடா கேள்வி கேட்கற?.. ஆயிரக்கணக்குல இதுக்குன்னு பணம் கொடுத்துட்டு எதிர்பாக்காம இருக்க முடியுமா?''

— எஸ்.எஸ். பூங்கதிர்

முடிவு பண்ணி, ஆதிசேஷனைப் படுக்கையாக்கி சயனித்தான். படுத்தால்... ஆதிசேஷன் 'புஸ்! புஸ்!' என்று விஷத்தைக் கக்குகிறான்.

பார்த்தான் பகவான். 'சரி நமக்கு இனி உதவுவார் ஒருத்தரும் இல்லை. காசிக்குப் போக வேண்டியதுதான்' என்று புறப்பட்டான். கருடாழ்வாரின் மேல் ஏறிப் போய்க் கொண்டிருந்தபோதே, பூரி என்கிற ஊரின் மேல் பறக்கையில் கீழே பூமியில் ஒரு பாம்பு ஊர்வது தெரிந்ததாம். அதைப் பார்த்த கருடன் "நாராயணா! கீழே என் ஆகாரம் போகிறது... அதைச் சாப்பிட நான் போகிறேன்... உன்னை இங்கே இறக்கி விடுகிறேன். நீ நடந்து போய்க் கொண்டேயிரு, நான் சாப்பிட்டு முடித்துவிட்டு வருகிறேன்..." என்று பகவானை அப்படியே கைவிட்டு விட்டுப் போய்விட்டான்!

பகவானும் கருடாழ்வாரின் அந்த வார்த்தையைக் கேட்டு 'நம் நிலை இப்படி ஆகி விட்டதே!' என்று தலையில் கை வைத்துக்கொண்டு கஷ்டப்பட்டானாம்.


அப்படியே தன் வீட்டுக் கஷ்டத்தை நினைத்து நினைத்து பகவான் கட்டையாகவே போய்விட்டானாம்!

- இதுதான் பூரியிலே அவன் அப்படிக் காட்சியளிப்பதன் பின்னணிக் கதை.

இப்படியொரு கதை உருவானதே, வியஸனம் என்பது யாரையும் விட்டு வைக்காது என்பதை நமக்கு உணர்த்தி சமாதானம் செய்யத்தான். பகவத் சரித்திரங்களும் இதிகாசங்களும் 'வியஸனம் வந்தால் சிரமப்படாதே' என்று சொல்கின்றன. இந்த தர்மத்தையும் ராமாயணம் சொல்கிறது. அதற்கும் மேலே, அறுபத்து நான்கு வகைக் கலைகளையும் அது சொல்கிறது!

இவை அத்தனையையும் பெரிய திருமலை நம்பிகள் திருமலை க்ஷேத்திரத்தில் வைத்து ராமானுஜருக்கு உபதேசம் பண்ணினார். விச்வமூர்த்தியாகிய - விச்வ சப்தத்தை உணர்த்துகிற - ரகுநந்தன் காட்டியவைதான் ராமாயணத்திலே சொல்லப்பட்ட தர்மங்கள்.

(தொடரும்)



அப்பா

"அம்மா, ஹேமமாலினி படம்மா இன்னிக்கு. இங்கே வாயேன்!"

ப்ரியா ஆரம்பித்து விட்டாள். சதீஷுக்கு எரிச்சலாக இருந்தது. அக்கா வெராண்டாவுக்கு வர, இரண்டு பேரும் இந்தியில் பேசிக் கொண்டார்கள். எதுவும் நடக்காதவர் மாதிரி அப்பா, தமிழ் பேப்பரில் மூழ்கியிருந்தார்.

இந்த சனியன் இங்கே வந்ததிலிருந்தே ஒரே கும்மாளம்தான். காலை எழுந்தவுடன் பேப்பருக்குப் போட்டி வந்து விடுகிறது. சதீஷுக்கு பேப்பர் அத்தனையையும் ஒன்றாக வைத்துப் படிக்க வேண்டும். ப்ரியா வந்ததிலிருந்து நடுநடுவே ஷீட்டை உருவி விடுகிறாள்.

எல்லாம் எத்தனை நாளைக்கு? இன்னும் ஒரு மாசமோ என்னவோ? லீவு முடியட்டும். திரும்பிப் பார்க்காமல் ஓடு நாயே பாம்பேக்கு என்று துரத்தி விட வேண்டியதுதான்.

ப்ரியாவையே முறைத்தான். அது ஏதோ இந்திப் பாடலை ஹம்மிங் பண்ணிக் காட்டிக் கொண்டிருந்தது. பெரிய லதா மங்கேஷ்கர் என்று நினைப்பு. அக்காவைத்தான் சொல்ல வேண்டும். ஒரே சினிமா பைத்தியமாய் வளர்ந்திருக்கிறாள்.

அதுவும் பெரிய ஹேமமாலினி விசிறி. மூஞ்சியைப் பாரு. வெள்ளைப் பன்னி.

"அந்தப் பேப்பர் குடுக்கறாயா?"

ப்ரியா சட்டை பண்ணவேயில்லை. சதீஷ் பொறுமை காத்தான். இல்லையென்றால் அம்மாவிடம் சொல்லி விடுவாள். அக்காவும், ப்ரியாவும் மெட்ராஸ் வருகிறேன் என்று லெட்டர் வந்தவுடனே அம்மா, அவனைக் கண்டித்து விட்டாள்.

சதீஷுக்குக் கோபமாக இருந்தது. என்னத்துக்குக் கண்டிப்பானேன்? நானென்ன குழந்தையா? பத்தாம் கிளாஸ் போகப் போகிறேன். எனக்குத் தெரியாது. எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று?

ஆனால் அம்மாவுக்கும் புரியவில்லை, அப்பாவுக்கு அதற்கு மேல் புரியவில்லை. இன்னும் எல்லோர் எதிரிலும் மிரட்டுகிறார். அவமானம் போல் என்னவோ ஒன்று சதீஷுக்குத் தோன்றியது. அப்பாவுக்கு இங்கிதமே தெரியவில்லை.

இன்னும் சொல்லப் போனால், ஊரிலிருந்து வந்த பெரியப்பாதான், அவனுக்கு நான்கு முழம் வேஷ்டிகள் வாங்கித் தந்தது. அதுவரை நிஜார்தான்.

''நெடுநெடுனு வளர்ந்திருக்கான். இன்னும் வேஷ்டி வாங்கித் தராம இருக்கேளே?'' என்று அப்பாவைக் கடிந்து கொண்டபோதும், அப்பா லேசாய் நிமிர்ந்து பார்த்துக் கொண்டார், அவ்வளவுதான்.

"அம்மா நான் டீ.வி. பார்க்கப் போறேன்மா. நல்ல படம்மா? ப்ரியா கெஞ்ச, பரிதாபத் தோற்றம். கள்ளி.

"எங்கடி டீ.வி. இருக்கு? அதெல்லாம் ஊருக்குப் போய்ப் பார்த்துக்கலாம்."

"சதீஷுக்குத் தெரியும்மா. அவன் ப்ரெண்டாத்துல இருக்கும்மா, ப்ளீஸ்மா."

"அதெல்லாம் நீ போகக் கூடாது. பெரியவளானதுக்கு லட்சணமா நடந்துக்கோ."

"ப்ளீஸ்மா. சதீஷே வரட்டும்மா. நான் அவனோட போயிட்டு வந்துர்றேன். போலாமாடா?"


காதில் விழாதது போல், சதீஷ் பேப்பரில் குனிந்திருக்க, மீண்டும் அவனைக் குலுக்கியபடி.

''உன் ப்ரெண்டாத்துல டீ.வி. இருக்குன்ன இல்ல. இன்னிக்கு சாயங்காலம் அழைச்சுண்டு போடா. ப்ளீஸ்.''

"நான் லைப்ரரி போகணும். என்னால் முடியாது."

''ப்ளீஸ்டா. ப்ரியா கேக்கறன்டா."

இவ பெரிய லாட்டு' ப்ரியா கேக்கறாளாம். உடனே ஓடு



சுடணுமா? முடியாது. என்ன பண்ணுவே?

''அதெல்லாம் முடியாது. நான் புக்க ரிட்டர்ன் பண்ணியாகணும்."

"அவனுக்கு வேலை இருக்குன்றான்னில்ல. ஏண்டி, தொந்தரவு பண்றே?"

ப்ரியாவுக்கு முகம் விழுந்து விட்டது. ஆதரவு வேண்டுவது போல் சதீஷைப் பார்க்க, அவன் மீண்டும் பேப்பரில் மூழ்கியிருந்தான்.

"பாலாஜி வீட்டுல டீ.வி. இருக்காடா?'' ஹாலிலிருந்து அம்மா கேட்டாள். பக்கத்தில் ப்ரியா.

"எனக்குத் தெரியாது?" சதீஷ்.

''என்ன தெரியாது? வாரா வாரம்தான் ஞாயித்துக் கெழமையானா படம் பாக்கப் போறியே. எங்க போறே?"

"எங்கியோ போறேன்."

"அடி செருப்பால. எங்கியோ போறானாம். வராத வந்த கொழந்த வந்திருக்கு. படத்துக்கு அழைச்சுண்டு போடான்னா, ரொம்ப அலட்டிக்கறே."

கோள் மூட்டி விட்டாள். தான் நினைத்ததைச் சாதித்துக் கொள்ள வேண்டும். இவள் ஹேமமாலினியைப் பார்க்கவில்லையென்றால், சாதமே இறங்காதோ?

"என்னடா, சாயங்காலம் அழைச்சுண்டு போறியா?"

சதீஷுக்கு வெறுப்பாய் இருந்தது. சொன்னால் இவர்களுக்கு ஏன் புரிய மாட்டேன் என்கிறது?

"ஏம்மா சும்மா தொல்ல பண்றே? அங்கே எங்க ஸ்கூல் பசங்க எல்லாம் வருவாங்க. தடிதடியா நிப்பாங்க. எடமே இருக்காதும்மா. அது நடுவுல, இவள எங்க கூட்டிண்டு போறது?"

''முன்னாடியே போயி ஓரமா எடம் புடிச்சுண்டு ஒக்காந்துக்கலாம்டா. அப்புறம் படம்

ஆர். வெங்கடேஷ்

அருள்வாக்கு

எந்தக் காரியம் செய்தால் நல்லதோ அது தர்மம். தமிழில் 'அறம் செய விரும்பு' என்று முதலில் சொன்னார்கள். நல்லதாகச் செய்வதெல்லாமே தர்மம் என்றாலும், பொதுவிலே தர்மம் என்பது ஈகைக்கே வார்த்தையாக இருக்கிறது. 'தர்மம் போடப்பா, தர்மத் தாயே' என்றுதான் பிச்சைக்காரர்கள் சொல்கிறார்கள். தான-தர்மம் என்று சேர்த்தே சொல்கிறோம். தமிழிலும் தான சாஸனங்களை அறக்கட்டளை என்றே சொல்கிறார்கள். இப்படிப் பார்த்தால் நம் 'பொருளை' 'அர்த்தத்தை' இன்னொருத்தருக்குக் கொடுப்பது தர்மம். ஆனால் இப்படிக் கொடுப்பதற்கு நமக்கு எப்படிப் பொருள் கிடைக்கும்? முன் ஜன்மத்தில் நாம் அர்த்தத்தை (பொருளை) மற்றவருக்குக் கொடுத்து தர்மம் செய்தால்தான் அது மறு ஜன்மத்தில் குட்டி போட்டுக் கொண்டு நமக்குக் கிடைக்கும். தர்மத்தினுடைய பிரயோஜனமே பொருள். இன்பத்துக்குப் பொருள் சாதனமாக இருப்பது போல் பொருளுக்குத் தர்மம் சாதனமாக இருக்கிறது. ஈகை மட்டுமல்ல; எவ்விதமான தர்மம் செய்தாலும் பலனாகப் பொருள் கிடைக்கும்.

நாம் செய்யும் தர்மத்தை 'இதனால் எனக்குப் பொருள் வேண்டாம்; ஈசுவரன் நினைத்ததைக் கொடுக்கட்டும்' என்று பலனை எதிர்பாராமல் அர்ப்பணம் பண்ணி விட்டால் அப்போது நம்மிடத்தில் உள்ள அழுக்கு போய்ப் பேரின்பம் கிடைக்கும். பொருளைத் தரும் தர்மமே அப்பொழுது பரம்பொருளைத் தரும் வீட்டுக்கு ஸாதனமாகி விடும். இப்படி தர்மமானது பொருளுக்கு ஸாதனமாகவும், அதன் மூலம் இன்பத்துக்கு ஸாதனமாகவும், பற்றின்றி நிஷ்காமியமாகச் செய்யப்பட்டால் வீட்டுக்கு ஸாதனமாகவும் ஆகின்றது; தர்மம் செய்தால் பிரதியாகப்

முடிஞ்சபுறம் வரலாம்" – ப்ரியா.

"ம். அப்டி பண்ணேன்டா." அம்மாவும் சேர்த்திசைக்க, சதீஷுக்கு இன்னும் வெறுப்பாய் இருந்தது.

அம்மாவுக்கு விவஸ்தையே இல்லை. அது யாரோ மூன்றாவது வீடு. அதில் சதீஷே அதிகப்படி. இதில் இவளையும் கூட்டிப் போனால், என்ன நினைப்பார்கள்? கூட பசங்களெல்லாம் வேறு வருவார்கள். நாளை மறுநாள் பார்த்துக் கொண்டால், முதல் காரியமாய் இந்தச் சனியனைப் பற்றித்தான் கேட்பார்கள், கிண்டலடிப்பார்கள். அவமானமாய் இருக்கும்.

ரெண்டு பேருக்குமே புரிய மாட்டேனென்கிறது. சொந்தமாவும் தெரியவில்லை. சொன்னாலும் உறைக்க மாட்டேனென்கிறது. வழக்கப்படி, அப்பா முறைக்கிறார். தான் சொல்வதைச் செய்ய வேண்டும். மிலிட்டரி உத்தரவு.

இதெல்லாம்தான் பிடிக்காமல் போய்க் கொண்டிருக்கிறது. அடுத்தவன் என்ன நினைக்கிறான், சொல்கிறான் என்று கேட்க வேண்டாமோ? எனக்கும் வயசாகிறது. குழந்தையில்லை. ஆனால், இன்னும் இவர்களுக்கு நான் சின்னப் பையன். எதைச் சொன்னாலும் தலையில் தட்டுகிறார்கள்.

ப்ரியா வந்த பின்னால், இன்னும் அதிகமாகி விட்டது. அந்தச் சனியன் பாட்டுப் பாடுகிறது. ஓவியம் வரைகிறது. எம்பிராய்டரி பண்ணுகிறது. போதாதற்கு படிப்பில் சூடிகை. சமையலில் கெட்டி. அம்மாவுக்கு வாய் ஓயவில்லை.

சதீஷுக்குக் கவிதை எழுத வரும். இரண்டு கவிதைகள் மேகஸினில் கூட வந்திருக்கிறது. இதெல்லாம் அம்மா சொல்ல மாட்டாள். அப்பா அதற்கு மேல் ஒரு படி. 'எழுத்தால எவனும் வாழ்ந்ததில்ல. ஒழுங்கா படிக்கற வேலையப் பாரு.'

இவர்களையெல்லாம் வெட்டிப் போட்டால் என்ன?

நினைத்ததைச் சாதித்து விட்டது சனியன். வலது கையை கழுத்துக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டு பார்ப்பதைப் பார். என்னமோ இந்த சினிமாதான், ஜென்ம சாபல்யமே தரப் போவது போல் வாயைப் பிளந்து கொண்டு பார்ப்பதைப் பார்.


இதற்கு நாலரை மணியிலிருந்தே அலங்காரம் வேறு. கூடவே அப்பாவின் கண்டிப்பு வேறு. போகும்போது, எத்தனை ஜாக்கிரதை. நான் என்ன கடத்திக் கொண்டா போய் விடுவேன்?

பாலாஜி வீட்டுக்கு வந்தபோது, படத்தைப் போட்டு விட்டான். அதற்கு ஒரு 'அச்சச்சோ' பெரிய காவியம். முதல்லேர்ந்து பாக்கலன்னா பூமியே பிளந்துடும்.

டியூப் லைட்டை அணைத்து விட்டார்கள். கொசு பறக்கிறது. டீ.வி.யில் ஆன்னாவூன்னா ஹேமமாலினி பாடுகிறாள். ஆடுகிறாள் இல்லை கண்கலங்க நிற்கிறாள். வேகமே இல்லை. இதையெல்லாம் ஒரு படம் என்று எப்படித்தான் எடுத்தார்களோ? யாரோ காமெடியன் வந்தால், எல்லோரும் விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள். சதீஷுக்கு ஒன்றும் புரியவில்லை.

ஏழு மணிக்குச் செய்திகள் வரும். கிளம்பி விட வேண்டியதுதான். ரோடில் யாரும் இருக்க மாட்டார்கள். சுறுசுறுப்பாய் போய் விட வேண்டும். இருட்டில், சுவரில் தொங்கிய

பொருள் கிடைக்கிறது. அந்தப் பொருளைக் கொண்டே மறுபடி தர்மம் செய்யலாம். இப்போது அர்த்தமே தர்மம் செய்ய ஸாதனமாக இருக்கிறது. இன்பம் ஒன்றுதான் தன்னாலும் நிறைவுபடுவதில்லை; பிறவற்றுக்கும் சாதனமாக இருப்பதில்லை. கொதிக்கிற மணலில் விட்ட ஜலம் உடனே காணாமல் போவது போல் 'இன்பம்' என்பது, தன்னாலும் நிறைவின்றி வேறெதுக்கும் சாதனமாகவும் இன்றி தர்ம சிந்தனை பொருள், மோக்ஷம் எல்லாவற்றையும் நாசம் பண்ணி விட்டுத் தானும் நசித்துப் போகிறது.



ஆனாலும் இந்த இன்பத்தை இப்போதே விட்டுவிடு என்றால் முடிய மாட்டேன் என்கிறது. அதை அடியோடு விடாமல் கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டுப்படுத்தித் தரவும் பிறகு படிப்படியாக இந்தச் சிற்றின்பத்திலிருந்து பேரின்பத்துக்கு அழைத்துச் செல்லவுமே மதம் என்பது ஏற்பட்டிருக்கிறது. முதலில் இதுதான் அறம் என்று சொல்லி, அதை செய்வதற்காகவே எப்படிப் பொருள் ஈட்டவேண்டுமோ அந்த நியாயமான முறையைச் சொல்லி, அதனால் இன்னின்ன இன்பங்களைப் பூர்த்தி செய்து கொள்ளலாம் என்று பக்குவம் வருகிற வரையில் கிரமப்படுத்திக் கொடுத்து, அப்புறம் இந்தச் சின்ன இன்பங்களை எல்லாம் தொலைத்து நிரந்தர இன்பமான வீடு என்கிற மோக்ஷத்தைக் காட்டுவதே மதம்.

பந்தத்திலிருந்து விடுதலை பெற்று, ஆத்மா பூரண சுதந்திரத்துடன் எந்நாளும் ஆனந்தமாக இருக்கிற நிலையே மோக்ஷம். இதை நமக்குக் கிட்டச் செய்வதற்கே மதம் என்பது ஏற்பட்டிருக்கிறது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

கடிகாரத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். அது நகருவேனா என்றது.

ஒருவழியாய் செய்திகள் வந்தபோது, ப்ரியாவிடம் மெல்ல சதீஷ்,

"போலாமா?" என்றான்.

"ப்ளீஸ்டா. இன்னும் ஹாபனவர்தான்டா. பார்த்துட்டுப் போயிரலாம்."

"அம்மா தேடப் போறாம்மா."

"நான் சொல்லிக்கறேன்."

அரைமணி என்பது ஒரு மணியாயிற்று. இறுதியில் வில்லனை, ஹீரோ காடு, மலை, மேடு எல்லாம் துரத்தித் துரத்தி சண்டை போட்டு விட்டு, மலை மேலிருந்து விழுந்து விடும் ஹேமமாலினியை நெஞ்சையள்ளும் பின்னணி இசையோடு மேலே இழுத்தபின், மீண்டும் அவர்கள் காதல் பாடல் பாட, படம் முடிந்தது. ப்ரியா முகத்தில் பெரிய ஆசுவாசம். கண்ணீர் வேறு உகுத்திருக்கிறாள்.

தெருவில் ஈ, காக்கையில்லை. என்னதான் சிட்டியென்றாலும், ஞாயிறு ஆனால் எல்லோரும் டீ.வி. முன்பே சமைந்து விடுகின்றனர். சதீஷுக்குப் பயமாக இருந்தது. பரபரவென்று நடந்தான். சத்தமாய் கேட்கும் எந்தக் குரலும் பயம் தந்தது.

தேவையில்லாத புதுப் பயங்களெல்லாம் கூட வந்தன. பின்னால் கேட்ட செருப்புச் சத்தம், வண்டியொலி கூட அச்சம் தந்தது. இந்தச் சனியனை நல்லபடியாய் வீடு சேர்க்க வேண்டும்.

எதிர்ப்படுபவர்கள் எல்லாம் ஒருமுறை அவளைப் பார்ப்பது போன்றிருந்தது சதீஷுக்கு. கூடவே அவனைப் பார்த்து ஒரு மர்மப் புன்னகையை உதிர்ப்பது போன்றும் தோன்றியது. நல்ல பேண்டாய் போட்டு வந்திருக்கலாம்.

தெருமுனை திரும்பிய போதுதான் சதீஷுக்கு மூச்சு வந்தது. இன்னும் வாய் ஓயாமல் ப்ரியா படத்தைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தாள். தூரத்தில், வீட்டு வாசல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. வாசல் கதவை வேறு திறந்து வைத்திருக்கிறார்கள்.

அம்மா எட்டிப் பார்ப்பது தெரிந்தது. தொடர்ந்து அக்காவும் வெளியே வந்து நின்றுவிட்டாள். வீட்டை நெருங்க, அக்கா -

"ஏண்டா, இவ்ளோ லேட்டு?"

"படம் முடிய வேண்டாமா?" ப்ரியா பதிலளிக்க அம்மா -

"ஏழு மணிக்கே கூட்டிண்டு வந்துட வேண்டியதுதானேடா?"

"இவதான் வரமாட்டேனுட்டா."

"என்ன மாட்டேங்கறது. வயசுக்கு வந்த பொண்ணு. வயத்துல நெருப்பக் கட்டிண்டு, அப்போ புடிச்சு வாசலுக்கும் உள்ளுக்குமா நடந்திண்டிருக்கா தெரியுமா உங்கம்மா?"

அம்மா சொல்ல, அக்கா, யாருக்கும் தெரியாமல் ப்ரியா தலையில் நறுக்கென குட்டு வைத்தாள். உள்ளேயிருந்து எட்டிப் பார்த்த அப்பா,

"அதான் சொன்னேனே. அவன் கூட போயிருக்கான், பத்திரமா அழைச்சுண்டு வந்துடுவான்னு. எதுக்குப் பயப்படணும்? அவனுக்குத் தெரியாதா?" என்றார்.

சதீஷுக்கு ஒருமுறை சந்தேகம் வந்தது. மெல்லமாய்த் தன்னைக் கிள்ளிப் பார்த்துக் கொண்டான்.

சொன்னது அப்பாதான்.

சிறுமை கண்டு பொங்குகிறார்; வறுமை கண்டு உருகுகிறார்!

காலேஜ் பெண் ஒருத்தியை 'கவர்' செய்ய மூன்று மாணவர்கள் அலைவது அல்லது ஒரு மாணவனை வசப்படுத்துவதே வாழ்க்கை லட்சியம் என்பது போல நான்கைந்து மாணவிகள் போட்டி போட்டுக் கொண்டு காதல் போதையில் கொட்டமடிப்பது... இதுதான் கல்லூரி மாணவ சமுதாயம் என்ற ரீதியில் படம்பிடித்துக் காட்டும் சினிமாக் காரர்களை எதிர்த்து, வேலூரில் இருந்து போர்க்குரல் எழுப்புகிறார் பிரியதர்சினி.

ஆக்ஸிலியம் கல்லூரியில் பி.எஸ்சி., இரண்டாம் ஆண்டு மாணவி யான இவருடைய சிந்தனை, சொல் எல்லாமே புதுமையானவை.

"சினிமாவில் வருவதுதான் ரியல் லைஃப் என்று கொஞ்சம் கொஞ்ச மாக ட்ராக் மாறி, எனது ஐந்தாவது தலைமுறை டோட்டலா நாசமாகிப் போகும். எங்களை இப்படி இழிவுபடுத்துவதை எதிர்த்துப் போராட ணும்!"

ஐந்தாவது தலைமுறையைப் பற்றியெல்லாம் யோசிக்கும் பிரிய தர்சினியின் லட்சியம் ஐ.ஏ.எஸ்.ஸில் வெற்றி பெறுவது.

"ஒரு கலெக்டராகப் பொறுப்பேற்கிற போது மக்கள் பிரச்னையின் ஆணிவேரை அறிந்து கொள்ள முடியும். திட்டவட்டமான செயல் திட் டங்களை வகுத்து, நேர்மையாகச் செயல்பட்டால் நிச்சயமாக நல்லது செய்ய முடியும். குழந்தைத் தொழிலாளர் பிரச்னையைப் பாருங்கள் அம்மா, அப்பா சரியாக இருந்தால் இந்த அவலம் ஏற்பட்டிருக்குமா இந்தக் கோணத்தில் அலச வேண்டும். நாலு வருடம் நான் கலெக்டராக இருந்தால் போதும். அந்தப் பகுதியில் நான் சாதித்துக் காட்டுவேன்."

கிரண்பேடியை ரோல் மாடலாக நினைத்திருக்கும் பிரியதர்சினிக்கு நர்சரியில் படிக்கும்போதே கலெக்டர் லட்சியத்தை விதைத்தவர் ஆரம் பப் பள்ளி தலைமையாசிரியரான அப்பா சிவசங்கரன். இதற்கு நீரூற்றி உரம் போட்டு வளர்த்தவர் ஆசிரியையான அம்மா விஜயலட்சுமி.

"ஒண்ணாங்கிளாஸ் படிக்கும்போதே ஏகப்பட்ட மெடல்களுடன் பள்ளிக்குப் போவாள்" என்று பெருமைப்படுகிறார் இவரது தாயார். "ஒருமுறை குவைத்தில் குடிக்கத் தண்ணீர் கிடைக்கவில்லை என்ற நியூஸை படித்து விட்டு அன்னக்கி எல்லாம் அழுதுகிட்டே இருந்தாள்

• பிரியதர்சினி





என்று அவர் சொன்னது, மனிதர்கள் பிரச்னையில் இந்த மாணவி காட்டும் அக்கறைக்கு ஒரு உதாரணம்.

படிப்பிலும் கெட்டியான இந்த நம்பிக்கை நட்சத்திரம், என்.எஸ்.எஸ்., பேச்சுப் போட்டி, நாடகம் என எதுவாக இருந்தாலும் வெளுத்துக் கட்டுகிறார். மாணவிகளே ஆசிரியராக அவதாரம் எடுத்து வகுப்பு நடத்தும் செமினார் செஷனில் பிரியதர்சினி பாடம் நடத்தும் பாங்கை போட்டி போட்டுக் கொண்டு பாராட்டுகிறார்கள் சக மாணவிகள்.

"எனக்கு ஆங்கிலத்தில் பேசக் கூச்சம். திரும்பத் திரும்ப ரிகர்சல் நடத்தி என்னை மேடையில் பேச வைத்தாள்" என்கிறார் ஷர்மிளா.

"ஓட்டப்பந்தயத்தில் என்னை பங்கேற்கச் செய்து மெடல் வாங்க வைத்தாள்" என்று தன் ஆருயிர்த் தோழி பற்றி பெருமைப்படுகிறார் சிவலட்சுமி.

பாடத்தைப் புரிந்து கொள்ள சிரமப்படும் மாணவிகளுக்கு வலியச் சென்று விளக்கமளிப்பதையும், கல்லூரி முடிந்த பிறகும் கூட அவர்களுக்குப் பாடம் சொல்லித் தருவதையும் பொறாமைப்படாமல் புகழ்கிறார்கள் மற்ற மாணவிகள்.

"இவ்வளவு திறமைக்கு வேறு ஒருத்தியானா ரொம்ப பந்தா பண்ணுவாள். எல்லாரிடமும் பழக மாட்டாள். இவ அலட்டல் இல்லாமல் எல்லார்கிட்டேயும் சகஜமாப் பழகுவாள்" என்று புகழ் மாலை சூட்டுகிறார்கள்.

மாணவிகளுக்கு மட்டுமல்லாமல், கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள் என அனைவருக்கும் பிரியமானவர் இந்த பிரியதர்சினி. "வெரி ரெஸ்பான்ஸிபிள் கேர்ல். எந்த வேலையையும் பர்ஃபெக்டா செய்து முடிப்பாள்" என சொல்லி வைத்தாற்போல் ஒரே மாதிரி பாராட்டுகிறார்கள்.

"எல்லோரையும் தன்பால் ஈர்த்து, தன்னை மதிக்க வைக்கும் இவளின் அரிய பண்பு என்னையும் கவர்ந்தது" என்று சான்றிதழ் தருகிறார் கல்லூரி முதல்வர் சிஸ்டர் அல்ஃபோன்ஸா மேரி.

"எல்லாத் துறைகளிலும் சரிக்குச் சமமாகப் பெண்கள் வந்து விட்டதைப் பல ஆண்களால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. நானே ரொம்ப மெதுவாத்தான் டி.வி.எஸ். 50 யிலே போவேன். சைக்களில் போகும் ஆண்கள் எப்படிப் பார்க்கிறார்கள் தெரியுமா? ஒரு பொட்டச்சி ஓவர்டேக் பண்றாளே என்று மூச்சு வாங்க வேகவேகமா சைக்கிளை மிதிக்கிறாங்க. இது தேவையா...? இது என்ன மனோநிலை?" என்று கேட்கும் பிரியதர்சினியிடம் இன்னொரு நெடு நோக்குத் திட்டமும் இருக்கிறது.

அதுதான், தமது தோழிகள் அன்பரசி, சிவலட்சுமி உதவியுடன் ஆதரவற்றவர்களுக்காக ஒரு கருணை இல்லம் அமைக்க வேண்டும் என்பது.

- ஆதித் கம்யூனிகேஷன்ஸ்

வண்ணப்படங்கள் **மோகன் ஸ்டுடியோ**


மும்பைச் செய்திகள்:

அரசியலில் "Criminalisation" என்பது பூர்ணத்துவம் பெற்று வருகிறது. 'உள்ளே - வெளியே' ஸ்டைலில் இயங்கிக் கொண்டிருக்கும் அண்டர்வால்ட் 'டான்' அருண் காவ்லி, இப்போது பைஜாமா - குர்தா- காந்தி குல்லாய் சகிதம் அரசியல்வாதியாகி, 'நான் உங்கள் வீட்டுப்பிள்ளை' என டீ:வி.யில் பேட்டி கொடுக்கிறார். சிவசேனையிலிருந்து பிரிந்து வந்த 'அகில பாரதிய சேனா'வின் ஐம்பது வேட்பாளர்களுக்கு இவரது பரிபூரண 'ஆசீர்வாதத்தை' வழங்கியிருப்பதாகச் சொல்லி, சிவசேனைக்காரர்களை கதிகலங்க அடித்திருக்கிறார். தாவூத் இப்ராஹீம் வேறு 'சமாஜ்வாதி" கட்சிக்கு தன் "ஒத்துழைப்பை"த் தரப் போகிறாராம்! 'சோட்டா ராஜன்' குழுவைச் சேர்ந்த அவதூத் போந்தே, தன் மனைவியைக் களத்தில் இறக்கி, எல்லோரையும் ஒரு கை பார்க்க நினைக்கிறார்! வழக்கம்போல், 'கிரிமினல் ரிகார்டு' உள்ள வேட்பாளர்கள் எக்கச்சக்கம்!

● சிவசேனைத் தலைமைக்கு, தன் மகன் மருமகனுக்குச் சமமாக - யாருமறியாத 'விஜய் லோகே'வை பால்தாக்கரே உயர்த்தி இருப்பது, மற்றவர்களுக்கு மட்டுமல்லாமல், 'விஜய்'க்கே அதிர்ச்சியளித்திருக்கிறது. ராஜ் தாக்கரேயின் தோழரான இவர், நேற்றுவரை கினி வழக்கில் அடிபட்டவர்; சமீபம் வரை காங்கிரஸ் கட்சியில் இருந்தவர் (மேயர் எலெக்ஷனில், 'க்ராஸ் வோட்டிங்' செய்ததற்காக காங்கிரசால் வெளியேற்றப்பட்டவர்); இன்றும், இவர் தந்தை காங்கிரஸ்காரர்தான்! 'நாளை'ய சிவசேனை இவர் கையிலா என புருவங்கள் உயர்ந்தன! விஷயம் என்னவென்றால், முன்னாள் சிவசேனைக்காரரும், இந்நாள் காங்கிரஸ்காரருமான சகன் புஜ்பலின் தீக்கும் நாக்கை அடக்க, இந்த முன்னாள் காங்கிரஸ்காரர் இந்நாளில் சிவசேனைக்குப் பயன்படுவார் என்கிற "முள்ளுக்கு முள்" கணக்குத்தான்!

● "ரிடையரான பிறகு எல்லோரும் கோயிலுக்குப் போவார்கள், 'அருள் பெற! ஆனால் நரசிம்மராவ் கோர்ட்டுக்குப் போகிறார் 'பெயில் பெற!" என கிண்டலடிக்கிறார்

பிரியங்காவுக்கு ஒரு கடிதம்!



சுற்றல் போன்ற உபாதைகளெல்லாம் வரும். வைத்திய சாஸ்திரப்படி சீரகத்தையும் வெல்லத்தையும் அறைத்து உச்சந்தலையில் வைத்தால் உஷ்ண சமனம் ஏற்படுகிறது.

இன்றைக்கும் பெருமாளுக்கு வேங்கடத்திலே கல்யாண உத்ஸவம் நடத்தும்போது இந்த சீரக - வெல்ல சடங்கு நடக்கிறது.

இன்னொரு வழக்கம் - சோபனாக்ஷதை சேர்ப்பது. ஒருத்தருக்கொருத்தர் தலையிலே அக்ஷதை சேர்த்துக் கொள்ள வேண்டும். வெள்ளை வெளேரென்ற அக்ஷதையை எடுத்து பத்மாவதி சிரஸிலே சேர்க்கிறான் பெருமான். அது கீழே விழும்போது அப்படியே தங்கக் கட்டியைப் போல் விழுகிறதாம்.

ஏன்...? பத்மாவதி பொன்னிறத் திருமேனியுடையவளானதாலே அக்ஷதை அவள் நிறத்தைப் பெற்று அப்படி ஒளிர்கிறதாம்.

ஸ்ரீநிவாஸன் சிரஸிலேயிருந்து விழுகிற அக்ஷதை நீலமணிகளாகக் காட்சி அளிக்கிறதாம். அவன் நீலமேக ஷ்யாமள வண்ணனல்லவா...? அதனாலே.

நாடக அரங்கத்திலே வண்ண விளக்குகளைப் போட்டு மாற்றி மாற்றி சிவப்பு, பச்சை, நீலம் என்று காட்சி சித்திரிக்கிறார்களே அதைப் போல, விளக்குகளுக்கு அவசியமே இல்லாமல் ஒரு வர்ண ஜாலம் நடக்கிறது அங்கே. நீலம், பொன்னிறம், வெண்மை என்று மாறி மாறி விழுகிறபோது, பார்க்கிறவர்களெல்லாம் 'இன்னும் கொஞ்சம் நேரம் பார்த்துக் கொண்டேயிருக்க மாட்டோமா?' என்று ஆசைப்படுகிற அளவுக்கு இருக்கிறதாம் அந்தக் காட்சி.

சரி, இந்தக் காட்சியைப் பார்க்க முடியாவிட்டாலும் இதை வர்ணிக்கக் கேட்க முடிகிறதல்லவா நமக்கு... அதனால் நமக்குப் பலன் என்ன...?

அந்த ஸ்ரீநிவாஸனுடைய திருக்கரத்தை நாமும் பிடித்து, பத்மாவதிக்கு சமானமாக அவன் திருவடியிலே கைங்கர்யம் பண்ணும் படியான பாக்கியம் அருள்வான்.

இந்த உலகத்திலே இதனால் நமக்குப் பலன் என்ன.... வாழ்க்கையிலே நடக்க வேண்டிய சமஸ்த மங்கள காரியங்களையும் அது நடத்தி வைக்கும். வயதான காலத்திலே, நமக்கு அந்த ஸ்ரீநிவாஸனுடனேயே கல்யாணத்தை நடத்தி வைக்கும். அதாவது மோக்ஷ பதவியை அளிக்கும்.

(ஆஸ்திக சமாஜம், சென்னை - 18-ல் முக்கூர் ஆற்றிய உரைகளின் தொகுப்பு இது. - இரண்டாம் பகுதி அடுத்த இதழில் ஆரம்பம்)



மறியல்


"எங்கள் கிராமத்துக்கு சாலை வசதியும் பஸ்சும் கண்டிப்பா வேண்டும், தலைவரே!"

"அதென்னய்யா அத்தனை கண்டிஷனா பேசறே?"

"அப்பத்தானே சாலையில் அமர்ந்து பஸ்ஸை மறியல் செய்ய முடியும்!"

- எஸ். மோஹன்

குலுக்கல்



"உங்க கட்சியில ஒரே மாசத்தில் ரெண்டு லட்சம் உறுப்பினர்கள் சேர்ந்துட்டாங்களாமே, எப்படி?"

"உறுப்பினர்களுக்கு மாருதி கார், ப்ரிட்ஜ், டீவின்னு குலுக்கல் முறையில் பரிசு தர்றதா அறிவிச்சோம், அதுதான்."

- நந்தன் குமார்


மீதி?

"எப்பவும் பையனை 'படி படி'ன்னு நச்சரிக்காதே. 'பிடிச்ச டீவி நிகழ்ச்சிகளைப் பாரு. அப்புறம் படி'ன்னு சொல்லு."

"அப்படிச் சொன்னால்?"

" 'நாம சொன்னதிலே பாதியையாவது பையன் கேட்டு நடக்கிறான்'ற திருப்தி கிடைக்கும்."

- குல்லூ



காதலியை முத்தமிட ஆசைப்படுவது இயல்பான ஒன்றுதானே?

நீங்கள் 'சுலபமாக எடுத்துக் கொள்ளும்' பிரிவு என்றால் "இதெல்லாம் கொசு ஆசை. மைக்ரோ லெவல் விஷயம்" என்று ஏளனப் படுத்தலாம். மரபு மாறாத பழமைவாதி என்றால் கூட, அப்படி 'ஆசைப்படுவதில்' தப்பு இல்லை என்று ஒத்துக் கொள்வீர்கள்.

ஆனால் இப்படி ஒரு இயற்கையான எண்ணம் வந்ததற்கே தன்னை வெறுத்துக் கொண்டான் பரசு.

'நேரடியாக ஊர்மியிடமே தன் ஆசையை வெளியிட்டாலென்ன?' என்று மின்னலாக யோசனை தோன்ற, அப்படி நினைத்ததற்காகத் தன் தலையில் ஓர் இடியை (குட்டு) இறக்கிக் கொண்டான்.

இருதலைக் காதல்தான். என்றாலும் ஊர்மியின் ரேஞ்ஜே தனி. அவள் பொத்திக் காக்கப்பட வேண்டியவள். வெள்ளை உள்ளக்காரி.

"உங்களை ரொம்ப உயர்வாக நினைச்சிருந்தேன் பரசு. கடைசியிலே நீங்களும் சராசரிதானா?" என்று அவள் கேட்டு விட்டால்? அப்படிக் கேட்டுத் தொலைத்து விட்டால் கூடப் பரவாயில்லை. கண்ணீர் பெருகும் கண்களோடு தன்னைக் குற்றம்சாட்டுவது போல் பார்த்து விட்டால்?

பரசுவின் எண்ண ஓட்டங்களுக்குக் காரணம் இருந்தது.

அழகு, அறிவு, பணம், பண்பு - இப்படி ஒருத்தியைக் காதலிக்க ஆயிரம் காரணங்கள் இருக்கலாம். ஆனால் பரசு ஊர்மிளாவைக் காதலிக்கத் தொடங்கியது ஆயிரத்தோராவது காரணத்துக்காக - அவளது அப்பாவித்தனத்துக்காக.

"அப்படி என்னென்ன விதங்களில் ஊர்மிளா அப்பாவித்தனமாக நடந்து கொண்டு அவன் மனத்தில் இடம்பிடித்தாள்?" என்று கேட்டால் பரசுவால் ஒரு பட்டியலைக் கொடுக்க முடியாதுதான். ஆனால் முதல் சந்திப்பிலேயே அப்படி ஒரு இமேஜ் அவள் மீது விழுந்து விட்டது.

நவீன அபார்ட்மெண்ட்கள் போல் அமைந்த பெசண்ட் நகர் கோவில். அதன் உச்சியில் உள்ள தனலட்சுமி சன்னதியில் மற்றவர்கள் மனமுருகி வேண்டிக் கொண்டிருக்க (பணத் தாசை!), "ஹை, கடற் காத்து எவ்வளவு சுகமா இருக்குது?" என்று உற்சாகக் குரல் கேட்டு பரசு திரும்பினான். பறந்து கொண்டிருந்த முடியையும், புடைவையையும் தன் இரு கைகளால் அழுத்திக் கொண்டபடி ஊர்மிளா. அப்பாவிப் பெண் என்று பசக்கென்று மனத்தில் பதிந்து விட்டது.

கடற்கரைக் காற்றை ரசித்தால் அது அப்பாவித்தனமா என்ன? அப்படியல்ல. என்றாலும் ஊர்மிளா ஓர் அப்பாவி என்ற இமேஜ் ஏனோ அவன் மனத்தில் பதிந்து விட்டது.

வட்டமுகம். அலைபாயும் பெரிய கண்கள். முக்கியமாக, கீழுதட்டில் சிறிய மச்சம்.

பரசுவின் அலுவலகத்திலேயே அதற்கு அடுத்த வாரம் ஊர்மிளா வேலைக்குச் சேர்ந்தவுடன் "ஐயோ, எங்கள் இணைப்பு தெய்வ சங்கல்பம்" என்று புல்லரித்துப் போனான்.

சந்திப்புக்களையும், பேச்சுக்களையும் தற்செயலாக நிகழ்வது போல் வேண்டுமென்றே உருவாக்கினான். நாளடைவில் தன்னிடமும் அவளுக்கு ஈடுபாடு இருப்பது போல் தோன்றியவுடன், அந்தப் 'பிரபலமான மூன்று ஆங்கில வார்த்தைகளை' உதிர்த்தான்.

"உங்க அப்பா அம்மா நம்ம கல்யாணத்துக்கு மனசு கோணாம ஒத்துக்குவாங்களா?" இதுதான் அவளது உடனடி பதில் (கேள்வி?). 'ஐயோ ஊர்மி. உனக்குப் பளிங்கு மனம். அப்பாவி' அவளை மேலும் நேசிக்கத் தொடங்கினான்.

"உனக்கு என்னை ஏன் பிடிச்சுப் போனது ஊர்மி?"

"குறிப்பா தெரியல்லே. மொத்தமாப் பிடிக்குது. எங்க அப்பா கேட்டப்பவும் இதைத்தான் சொன்னேன்."

"உங்க வீட்டிலே நம்ம காதலைப் பற்றி சொல்லிட்டியா?"

"ஓ! 'உன் முடிவுதான் எங்க முடிவும்'னுட்டாங்க. அது சரி பரசு. உங்களுக்கு என்கிட்டே பிடிச்சது என்ன?"

எப்படிச் சொல்வது - 'உன் அப்பாவித்தனத்தை அப்படியே வெளிப்படுத்தும் கண்களும், உதடுகளும்' என்பதை? 'சுற்றிச் சுற்றி என் உருவ அழகில்தான் உங்களுக்கு மயக்கமா?' என்று அவள் புண்பட்டால் இதுவரை அவள் தன

தேனை ஒரு முத்தம்

அருண் சரண்யா



கைகளைக் கூடப் பற்றிக்கொண்டு நடந்த தில்லை. இன்னும் மூன்று மாதங்களில் திரு மணம் செய்து கொள்ளும் உத்தேசம். பிறகு கண்ணைப் போல் இவளைக் கண்ணிமையாகக் காக்க வேண்டும்.'

என்றாலும் ஊர்மியைப் பார்க்கும்போ தெல்லாம் அவள் உதடுகள் அவனை அலைக்கழித் தன. குறைந்தபட்சம் கன்னத்திலாவது முத்தமிட்டால்? நினைவே கள்வெறி தந்தது.

''இரண்டு பூக்கள் ஒன்றையொன்று தொடுவது போல் சினிமாவில் காண்பித்தால் என்ன அர்த்தம் ஊர்மி?'' என்றான் ஒரு நாள்.

"சாரி. நான் அதிகம் சினிமா பார்த்ததில்லை. என்ன அர்த்தம்?''

'இதையெல்லாம் விளக்கி உன் அழகான அறியாமையைக் கலைப்பேனா? உன்



முதற் கனவு

கண்ணீர் இல்லாமல் கதறினாய் நீ
உலக வாசலில் வரவேற்கப்பட்டதும்
மண்ணைப் பிளந்த பயிரேபோல்
மாதாவின் மடியில் உதித்த புத்துயிரே!
பழகிய வீட்டுச் சூழல் போகவே,
புது உலகக் காற்றும் ஒளியும்
உன்னை வீணை நரம்புபோல் நடுக்கின;
உதறலும் கதறலும் பெரிய உழைப்பு உனக்கு.
ஒரு நாழிகைக்குள் உறங்கிப் போனாய்.

பாராட்ட, சீராட்ட வந்த நாங்கள்
உன் விழிகள் அசைவில் வியந்து நிற்கிறோம்.
என்ன கனவு காண்கிறாய்?
புதுமை எப்போதும் இனிக்குமே!
முதல் உழைப்பில் அயர்ந்து முதன்முதலாக
உறங்கும் நீ,
எதற்கென இதழ்களை முறுவலிக்கிறாய்?
உன் முதற்கனவின் இனிமையை
எங்களிடம் பகிர மாட்டாயோ?

உன்னைச் சூழ்ந்துள்ள நாங்களும்
உன்னைப் பற்றி முதற்கனவு காணகிறோம்,
மனித குலத்துக்கே நீ மாமருந்தாக,
மாமணியாக விளங்க வேண்டும் என்று.
எங்கள் முதற்கனவு மெய்ப்படட்டும்!

— ஆர். கோபாலகிருஷ்ண

களங்கமில்லா மனசு அப்படியே இருக்கட்டும்.'

என்றாலும் முத்த ஆசையை மொத்தமாக மறந்துவிட முடியவில்லை.

இருள்கவிந்த மாலை நேரத்தில், பல காதலர்கள் வரம்பு தாண்டிக் கொண்டிருந்த அந்தக் கடற்கரைச் சூழலில், மீண்டும் ஒரு சினிமாத்தனமான யோசனை தோன்றியது பரசுவுக்கு.

"ஊர்மி. நான் ஒண்ணு கேட்பேன்."

"கேளுங்களேன்."

"மாட்டேன்னு சொல்லக் கூடாது."

"ஓக்கே. சொல்லுங்க பரசு."


'ஊர்மியின் குரலில் 'எனக்குத் தெரியாத உன் சாகசம்' என்ற எள்ளல் இல்லை. கடை தெடுத்த அப்பாவித்தனம். வேறுவழியில்லை வெளிப்படையாகக் கேட்டு விடத்தான் வேண்டும். அதிர்ந்து போவாள். 'குறைந்தபட்சம் என் கையில் உன் இதழ்களைப் பதி. உன் கையில் நான் முத்தமிடுகிறேன்' என்று சொல் விடலாம். காம்ப்ரமைஸ்!

"என்ன பரசு, இன்னும் யோசிக்கிறீங்க?"

"ஒரு முத்தம்.... கொடுக்கணும்னு ஆசை ஊர்மி."

"அவ்வளவுதானே." டக்கென்று அவனைத் தன்புறம் இழுத்து வேகமாக அவன் [illegible] களைக் கௌவினாள். சில நொடிகளுக்குப் பின் விலகினாள்.

"திருப்தியா பரசு?" அவள் பரவசத்துடன் கேட்க, சட்டென்று ஒரு வெறுமை [illegible] அவனை.



இவர்தான்
அவரது
அப்பா!